மதுரைத் தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

நூல் அன்பளிப்பு

தமிழக வேளாண்மைத் துறை

அமைச்சர் மாண்புமிகு

கா. காளிமுத்து, எம்.ஏ.,

411

உ

கணபதி துணை.

வில்லிபுத்தூராழ்வார்

இயற்றியருளிய

மகாபாரதம்.

இது

திருவாவடுதுறையாதீனவித்வானும்
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சேற்றூர். ரா. சுப்பிரமணியக்கவிராயரால்

பலபிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்து
[ஷையார் எழுதிய அரும்பதவுரையுடன்]
வெளியிடப்பெற்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—கூ.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்பதிப்பு.

சகாப்தம்—கூஅஉக.

விலை ரூபா மூன்று.

1907.

[Copy Right Registered]

நூல் அன்பளிப்பு
தமிழக வேளாண்மைத் துறை
அமைச்சர் மாண்புமிகு
கா. காளிமுத்து, எம்.ஏ.

4114

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

இப்புத்தகத்திலடங்கியவை.

௧. முகவுரை.

௨. மகாபாரத மூலம்.

௩. அரும்பதவுரை.

௪. விஷயசூசிகை.

௫. அபிதான அகராதி.

௬. தொகையகராதி.

௭. சூசீபத்திரம்.

௮. பிழை திருத்தம்.

௯. செய்யுளகராதி.

உ

கணபதிதுணை.

முகவுரை.

மேருமால் வரையின் மேதினி யுய்யப்
பாரதம் வரைந்த பண்ணவன்
சீரடிக் கமலஞ் சிரத்தணி வோமே.

பாரதம் என்னுஞ் சொற்குப் பரதவம்சவரசர்கள் சரித்திரங் கூறுநூல் என்பது பொருளாகக்கொள்க. இது முதனூலாற் பெற்ற பெயர். ஈண்டுக்கூறிய பரத னென்பவன் சந்திரகுலவரசரிலே துஷ்யந்தமகாராஜன் புத்திரன். இவன் சகல கலைகளினும் வல்லவனாகி உலகத்தைத் தன்னடிப்படுத்துச் செங்கோல் செலுத்திக்காக்குங் காலையிலே தேவாசுரயுத்தத்தில் இந்திரன் அஞ்சிப் புறங்கொடுத்தபோது அசுரர்களைச் செயித்துத் தேவலோகத்தைக் காத்துதவி மிகப்பிரசித்திபெற்று நூறுயாகமுஞ்செய்தவன்; குருகுலச்சருக்கம்-உகூ, உஎ-ஆங் கவிகளிற் காண்க. இவன் வம்சத்துற்பவித்தவர் பாரதர்; அவர் மிகப்பலராயினும், அவர்களின் மிகப்பிரசித்தி பெற்றிருந்தவர் தேவர் முதலோரம்சங்களாற் பிறந்த பாண்டவர் துரியோதனாதியரென்க. அவர் சரித்திரங்கூறு நூல் பாரதமெனப்பட்டது. இது * தத்திதாந்த நாமம். கிரியையு ஞானமுமாகிய விபாகங்களையும், பதிமுதலிய பொருளினிலக்கணங்களையும், புருஷார்த்த நான்கினையும், எல்லாக்கலைகளின் சாரங்களையும், ஒவ்வொருமந்திரங்களுக்குரிய தேவர் முனிவர்களையும், வருணாச்சிரம தருமங்களையும், அரசநீதிமுதலியவைகளையுங் கூறுதலானும், வேதத்தை இருக்கு முதலாகப் பகுத்த வியாசமுனிவர் கூற, உலகமுய்யுமாறு விநாயகமூர்த்தி யெழுதியுள்ளமையானும் இப்பாரதத்தை வேதங்களுடன் சேர்த்து ஐந்தாம்வேதமென்பர்: (பாரத: பஞ்சமோவேதஃ) என்றும், "நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்று நிலைநிற்கவே—வாடாததவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்ன நாள்" என்றுங்கூறியிருத்தல் காண்க. ஐந்தாம் வேதமாகி மேம்பாடுடைமையால், இதற்கு மகாபாரதம்என விசேடணங்கொடுத்துக்கூறினரென்பர். இதனை இதிகாசமென்றுங் கூறுவர். (இதிகாசம் - தர்மார்த்த முதலிய பயனைத்தரும் பழைய சரித்திரவரலாற்றைக்கூறுநூலென்க.) இதிகாசமும், புராணமும் வேதத்தின் கருத்தை நியாயப்பிரமாணங்களால் விளக்குதலால் இவ்விரண்டினையும் வேதத்திற்கு உபப்பிரஹ்மணங்களென்பர். (உபப்பிரஹ்மணம் என்பதற்கு விளங்கச் செய்வது என்பது பொருள்.)

---

* தத்திதாந்தமாவது:— ஒரு வடசொல் சிறிது வேறுபட்டுத் தன்பொருளையாயினுந் தன்னோடியைபுடைய பொருளையாயினு முணர்த்துவது.

புராணமாவது:— மணித்திரள் படுகடன் மாநிலவரைப்பிற்—றணிப்பில்பல்
லுலகமுந்தத்துவ நிலையு—மன்னமுன்னாள் வகுத்தவிர்த்தாந்தமு—மன்னவையொ
டுங்குறு மடைவுமநவந்தரத்—தியற்கையும் புலவரிருடியர் மரபு—மயக்கறு மிவ்வி
ருவகையினர் சரிதமு—மென்னு மைவகையிலக்கண முடையது" என்பர்; இங்ஙன
ம் ஐந்தாம் வேதமென்றும், இதிகாசமென்றுங் கூறப்படு மகத்துவமுடைய இம்ம
காபாரதகதையை ஆதியிற்கூறிய வியாசமுனிவர் வரலாறு:—

பிரமபுத்திரராகிய வசிஷ்டமுனிவர் புத்திரர் சத்திமுனிவரானவர் பெற்ற
பராசரமுனிவர் துவாபர யுகத்திறுதியிலே உலக முய்யும்படி நன்மை செய்யு மொ
ருபுத்திரனைப் பெறவேண்டுமென்று கருதி, அதற்குரியகாலம் வருமளவுந் தவத்
திலிருந்தார்; அக்காலஞ் சமீபித்தலும் ஒரு பெண்ணைக்கூடவேண்டுமென்று தவ
நிலைவிட்டெழுந்து யமுனாநதியிலோடத்திலேறிச் செல்லும்போது ஆகாயத்திலே
தாங்குறித்த நக்ஷத்திர முச்சமாயிருத்தல் கண்டு அவ்வோடத்தை நடத்துகின்ற
கன்னியாகிய மச்சகந்தி யிசையுமாறு தன் கருத்தினைத் தெரிவித்து அவளை மங்
கைப் பருவமும் பரிமளகந்தமுமுடையவளாக்கி விபூதியைத் தூவிப் பனியினாலே
சூரியனை மறைத்துப் பகலை யிரவுபோலாக்கி யொருதிடருமுண்டாக்கி அவ்வி
டத்திலே அவளைக்கூடி ஒரு புத்திரரைப் பெற்றார். நதியின் கண்ணுண்டாகிய
தீவிலே பிறந்தமையால் துவைபாயனர் எனப் பெயர் பெற்றார். பின்வேதங்களை
வகுத்தகாரணத்தால் வேதவியாசரெனப் பெயர் பெற்றார். பின் அம்முனிவர் த
ந்தையார் உணர்த்துவனவுணர்ந்து திருநந்திதேவர் மாணாக்கராகிய சனற்குமார
முனிவரையடைந்து அவர்பாற் கற்கவேண்டுவனயாவுங் கற்றுயர்ந்து தவத்தினுமி
க்கோராய் விளங்கினர். உலகிற்காலகதியால் ஒன்றாகக் கலந்திருந்த வேதங்களைச்
சிக்கறுத்து முறைப்படுத்தி இருக்கு, எசுர், சாமம், அதர்வணமென நான்காகப்
பகுத்தும், நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையுட்கொண்ட ஐஞ்ஞூற்றைம்பத்தை
ந்து சூத்திரங்களை யுடையதென்று சொல்லப்படும் வேதாந்த சூத்திரமியற்றியும்,
புராணத்தைப் பதினெண்புராணங்களாக வகுத்தும், சூதமுனிவர் முதலாகிய பல
முனிவர்கட்குக் கற்பித்தும் விளங்கியிருந்தார்; இவர் திருவவதாரத்தைச் சம்பவச்
சருக்கத்திற்காண்க.

புராணம் வகுத்த வரலாறாவது:—கிருத யுகத்திலே நூறுகோடி கிரந்த
ங்களாலே பிரமனாற் செய்யப்பட்டுப் பிராமம் என்னும் பெயரினையுடைத்தாய்
ஒன்றாயிருந்தது. பின் திரேதாயுகத்திலே கோடிகிரந்தங்களால் நூற்றுப்பதினெ
ட்டுச் சங்கிதைகளையுடைய பதினெட்டுப்பாகங்களாக மகாமுனிவர்களால் வகுக்க
ப்பட்டிருந்தது:—அதனைத்துவாபரயுக விறுதியிலே வியாசமுனிவர் நான்கிலக்ஷ
ம் கிரந்தங்களாற் பதினெண்புராணமாக்கினர் என்பர்.

இவரிங்ஙன மிருக்குநாளில் ஒரு நாள் பராசரமுனிவர் வியாசமுனிவருடன்
திருக்கைலாயத்திற்குச்சென்று சிவபிரானைக்கண்டு வணங்கிச் சுவாமீ இனி நடக்

கும் பாரத கதையை உலகிற்குபகாரமாக இக்குமாரனாற் செய்விக்கக் கிருபைகூர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். சிவபிரான் றிருவுள மகிழ்ந்தருளி விநாயகக் கடவுளை நோக்கி வியாசமுனிவர் கூறும் பாரதகதையை யெழுதும்படி கட்டளையிட்டருளினார். பின்பு வியாசமுனிவர் விநாயகக்கடவுளை வணங்கி அடியேன் கூறுஞ்சொல்வழுமுதலிய வழுக்களைத்திருத்தஞ்செய்து வரைந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டு கூறத்தொடங்கினார்; விநாயகக்கடவுளும் மேருமலை ஏடாகத்தமதுகொம்பெழுத்தாணியாக வைத்தெழுதும் போது அவர்திருத்தி யெழுதுவதற்குமுன் வியாசமுனிவர் சுலோகத்தைப் பூர்த்தியாக்கிக் கூறுவார். இவ்வாறே பதினெட்டுப் பருவமாக்கிச்*சபாத லக்ஷம் கிரந்தமாகக்கூறிச்சம்பூர்ணம் பண்ணினார்.

பின்பு வியாசமுனிவர் அதனை அநேகமுனிவர்கட்குக் கற்பித்துச்சுவர்க்கலோகத்திற்கு நாரதமுனிவரையும், யக்ஷகருக்குச் † சுகமுனிவரையும், பிதிர்தேவதைகட்குத் தேவலமுனிவரையும், பூலோகத்திற்கு ‡ வைசம்பாயன முனிவரையும், பாதாளலோகத்திற்குச் சுமந்தமுனிவரையும், கூறுமாறு நியமித்தாரென்பர். சுவர்க்கலோகத்திற்குப் பைலமுனிவரையும், பிதிர்லோகத்திற்குச்சுமந்தமுனிவரையும், பாதாளலோகத்திற்கு ஜயமுனிவரையுங் கூறுமாறு நியமித்தார் என்றுங் கூறுவர்.

பின் இதனைக் கடைச்சங்கப் புலவருளொருவராகிய பெருந்தேவனார் என்பவர்தமிழில் உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாக வெண்பாவாலியற்றினார். அவ்வெண்பாவின் றொகை அறுபதினாயிரமென்பர். பன்னீராயிரமென்று தொண்டைமண்டல சதகத்திற் கூறியிருக்கிறது. அதற்குப் பாரத வெண்பாவென்றும் அவருக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனாரென்றும் பெயர் வழங்கின. இவர் தொண்டைநாட்டு வேளாளர் என்பர். அவருக்குப் பின் மகா கவிசிரேஷ்டராகிய வில்லிபுத்தூரர் விருத்தப்பாவாலியற்றினார். இதற்கு ¶ வில்லிபாரதமென்பர்; இது மிகச்சுருக்கமாயிருக்கிறதென்று அதனுடன் தொண்டைநாட்டு மாதலம்பேட்டையிலிருந்தவேளாளர் நல்லாபிள்ளை என்பவர் இடையிடையேகதைகளை விரித்துப் பதினையாயிரத்து முந்நூறு கவிகளாற் செய்தார்.

இனி வில்லிபுத்தூரர் வரலாறு:—

அவர் திருக்குமாரர் வரந்தருவார் கூறிய சிறப்புப்பாயிரத்தாலுங் கர்ணபரம்பரையாலுந் தெரியத் தக்கதாயிருக்கின்றது. பெண்ணைநதி பரவுகின்ற நடுநாடெ

---

* சபாத லக்ஷம்—லக்ஷத்திருபத்தையாயிரம்.

† சுகமுனிவர்—வியாசர்புத்திரர்.

‡ வைசம்பாயனர்—விசம்பமுனிவர்புத்திரர். வியாசமுனிவர்கட்டளையால் ஜெனமேஜெய மகாராசனுக்குப் பாரதத்தைக்கூறினவருமிவரே.

¶ இந்நூலில் இப்பொழுதில்லாத பருவம் எட்டு.—அவையாவன:—ஸ்ரீபருவம், சாந்திபருவம், அநுசாசநிக பருவம்; அசுவமேதபருவம், ஆசிரமவாச பருவம், மௌசலபருவம், மகப்பிரதானிக்பருவம், சொர்க்கா ரோகண பருவம்.

ன்று கூறப்படுவதாகிய திருமுனைப்பாடி நாட்டிற் சனியூரிற் பிராமணகுலத்தில் * வீரராகவாசாரியர் திருக்குமாரராயவதரித்து † வில்லிபுத்தூரார் என்னுந்திருநாமம்பெற்று வளர்ந்து நல்லாசிரியர் பால் வடமொழிதென்மொழிகளைக் கற்றுத்தேர்ச்சியடைந்தவராய், ஒழுக்கமுதலியவற்றிற் சிறந்தவராய், ஆசு மதுரஞ் சித்திரம்வித்தாரமென்னு நால்வகைப் பாக்களையும் படிப்பவர் கேட்பவர்க்கு அமிழ்தினுமினியவாய் விளங்கச் செய்பவராய்த், தமிழ் நாட்டு மூவேந்தருந் தக்க வரிசை செய்யப்பெற்றவராய்த், திருமாலுக்குப் பலகவித்துறைகளையும் பாடித்தமிழ் நாடெங்கும் புகழ்பரவச்செய்து வாழ்வாராயினர்; இவரிங்ஙனமிருத்தலை மேற்கூறிய திருமுனைப்பாடிநாட்டில் வக்கபாகை யென்னு நகரத்திலே கொங்கர் குலாதிபதியாயரசுசெய்து, கல்வி செல்வங் கொடை வீரமுதலியவற்றிற் சிறந்து, புலவர் குழாத்தைச் சேர்த்து, முச்சங்கத்தமிழ் நூல்களையும் அபிவிர்த்தி செய்து, கண்டனென்னுஞ் சோழ மகாராசனுக்குத் திருமுடிசூட்டி, நாற்றிசையினுஞ் சென்று அவன் பகைவரைச் செயித்து, அவன் புலிக்கொடியை எங்கு நிலைநாட்டிப், பலவறங்களையுமேலோங்க வளர்த்து வாழ்ந்திருந்த ஆட்கொண்டானென்றும், வரபதியாட்கொண்டானென்றும், கொங்கராயனென்றும் கூறப்படும் பெயரினையுடைய பெருந்தகையோன் அறிந்து மிக வியந்து தக்கவரிசைகளைச் செய்து இவருடன் அளவளாவியிருக்குங்காலையில், ஒருநாள் வில்லிபுத்தூரரை நோக்கி, நாமிருவரும் பிறந்ததிசையிற் கீர்த்தி நிற்கவும், இத்தமிழ்நாட்டுக் குபகாரமாகவும் மகாபாரத கதையைச் சங்கிரகமாகத் தமிழிற்பாடவேண்டுமென்றான். அதற்கிசைந்து வில்லிபுத்தூராரும் அவ்வாறே பாடிநிறைவேற்றி, அவனவைக் களத்தரங்கேற்றினர். இங்ஙனங் கூறிய வரலாறு வரந்தருவார் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும்.

இனி இந்நூலாசிரியர் சகோதரருக்குந் தமக்கு நேரிட்டதாயபாக விவாதந் தீர்த்தற்பொருட்டு அவ்வாட்கொண்டானென்னுங் கொங்கராயனிடந்தெரிவிக்க, அவன் பாரதகதையைச் சங்கிரகமாகப் பாடிக் கொண்டு வந்தாற்பின்பு விவாதந் தீர்த்துவிடுகின்றேன் எனக்கூறியதாகவும், இந்நூலாசிரியர் பாடி முடித்தபின் பாண்டவர் துரியோதனாதியர் தாயபாகத்தின் பொருட்டுப் பொருதமையுணர்ந்து தம்பாகமுந்தாமே சகோதரருக்குக் கொடுத்து விட்டாரென்றுங் கூறுவர்.

இவ்வாறன்றி இந்நூலாசிரியர் சந்தக்கவிகள் செய்வதிலே தம்மோடுவாதிட்டு வந்த நாவலர்களிலே தோல்வியடைந்தவரை அவ்வாட்கொண்டானென்னும் பெருந்தகையோன் கொடுத்தஆயுதத்தாற் காதினையறுத்துவிடுகிறதென்றும், அனந்தனென்னுமோர்பாவலன்செவியறுக்கத்தொடங்கும்போது அப்பாவலன் என்பெயரையுடைய சேடனுக்குங்காதில்லை எனக்கு மவ்வாறில்லாமற் செய்யவேண்டு

---

* வீரராகவாசாரியரை வில்லிபுத்தூராருக்குக் கற்பித்தகுருவென்றுங்கூறுவர்.

† பெரியாழ்வார் பெயராகிய வில்லிபுத்தூரார் என்னும் பெயரைத்தமக்கிட்டமைக்கப்பெற்றாரென்றும், பாண்டி நாட்டுள்ள வில்லிபுத்தூரிற் சென்றுவசித் திருந்தமையால் வில்லிபுத்தூரார் எனப் பெயர் கூறப்பெற்றாரென்றுங்கூறுவர்.

வதுதான் இதற்கு மனந்தளர மாட்டேனென்று கூறக்கேட்டு மகிழ்ச்சியடைந்து விடுத்துபசரித்தாரென்றும், இவ்வாறிருக்குநாளிலே திருவண்ணுமலையிலே திருப்புகழ்பாடிய அருணகிரிநாதரைச் சந்தித்தகாலத்து அவர் இந்நூலாசிரியர் செருக்கையடக்கக் கருதி, யாமிப்பொழுது கூறுங்கவிகட்குப்பொருள்கூறுவீராயின்உமது கல்வித்திற மதிக்கத்தக்கதென்று கூற, அதற்கிந்நூலாசிரியருமிசைந்து அவர்கூறுங் கந்தரந்தாதிக்குப்பொருள் கூறிவரும்பொழுது, "திதத்சத்தத்" என்னுமுதற்குறிப்புடைய செய்யுளுக்குப் பொருள் கூறமுடியாமற் செவியறுக்கின்ற அவ்வாயுதத்தை யெறிந்து விட்டுப்போம் வழியிற்சிவாலயமொன்றெதிர்ப்பட அது கண்ணுக்குத் தோன்றாதபடி திரையிட்டுமறைத்துச்செல்ல அது தெரிந்த அருணகிரிநாதர் கண்ணிழக்கும்படி சபிக்க அதனாற் கண்ணிழந்து பின்அவர் சாபநீங்கும்படிகூற இம்மகாபாரத கதையைப் பாடினரென்றுங்கூறுவர். இவ்விரண்டுங் கர்ணபரம்பரையாகக் கேட்டுக்கூறுவார்கூற்றேயன்றி வேறுபிரமாணமில்லை. இந்நூலாசிரியர் தோற்றவரைக்காதை யறுப்பவர் என்பதற்கு மாத்திரம் "குட்டுதற்கோபிள்ளைப்பாண்டியனிங்கில்லைக்குறும்பியளவாக் காதைக்குடைந்து தோண்டி—யெட்டினமட்டறுப்பதற்கோவில்லிபில்லை." எனத்தனிப்பாடற்றிரட்டி லோர்கவியுளது.

இந்நூலாசிரியர்காலமிவ்வளவினதெனத் துணிந்து கூறுதற்குத்தக்கவாதாரமில்லை; ஆயினும் இரட்டைப்புலவர்காலமும் இவர்காலமுமொன்றென்பதுமாத்திரம் விளங்குகின்றது. அவ்விரட்டைப்புலவர் திருவக்கபாகைநகராதிபதிஅசனமளித்தபோது,

"சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்ட நாயன் றமிழ்க்கொங்கர் கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதிபக்கத்திலே
யூணுக்கு வாராதிருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்றுகை மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே"

எனக்கூறியஇக்கவியாற்காண்க. சாணர்-சதுரர். சிலர்சற்றேறக்குறையநானூறு அல்லது ஐஞ்ஞூறு வருஷமிருக்கலாமென்று கூறுவார்.

இந்நூலைப் "பெருங்காப்பியநிலைபேசுங்காலை" என்னுஞ்சூத்திரத்திற் கூறிய விதிப்படி காப்பிய நடையிலே சொல்லணி பொருளணிகளும் பலவகைச்சந்தங்களும் படிப்பவர்கட்குங் கேட்பவர்கட்கு மேன்மேலற்புதமகிழ்ச்சி விளையுமாறு செய்திருக்கின்றனர். இந்நூலில் வடமொழிகளை மிகுதியாக வெடுத்துக்கூறியதுபோல இதற்கு முன்னுள்ளநூல்களிற் கூறவில்லை. இந்நூலை வியாசமுனிவர் கூறியவாறேதென்மொழியாற் சங்கிரகமாகக்கூறினரென்பது தற்சிறப்புப்பாயிரஞ், சிறப்புப் பாயிரங்களாற்றெளிவாக விளங்குகின்றது. ஆயினும், வடமொழிப்பால பாரதநடையைப் போலச்சிற்சிலவிடங்களிலெடுத்துக் கூறியிருக்கின்றாரென்பர்.

இந்நூலிற் சிறப்புப் பாயிரத்திறுதியிற் கூறியிருக்கின்ற கவியையும் இந்நூலினிறுதியிற் கூறிய கவியின் பாடபேதத்தையு நோக்கும் போது இந்நூன் முழுவதும் பாடினரென்பதற்கையமில்லை. ஆயினும், இப்பொழுது ஆதி பருவமுதற்

பத்துப்பருவமே இருக்கின்றன. ஆதலால், ஏனைய பருவங்கள் அக்காலத்துள்ளனபோலும். கம்பராமாயணத்தில் ஆக்குவித்தோனைச் சிறப்பித்துக்கூறி நன்றிபாராட்டுவதுபோல, இந்நூலினும் ஆக்குவித்தோனைச் சிறப்பித்து நன்றிபாராட்டிக் காண்டவதகனச்சருக்கம் ௫௰-ஆங்கவியினும், நிரைமீட்சிச்சருக்கம் ௱௪-ஆங் கவியினும், பதினாறாம் போர்ச்சருக்கம் ௯௰-ஆங்கவியினும், பதினேழாம் போர்ச்சருக்கம் ௩௩-ஆங் கவியினுங் கூறியிருக்கின்றனர். அணிவகுப்பு முதலிய சில கதைகளை முதனூலிற்கூறியவாறு கூறாது பாலபாரத முதலியவற்றை நோக்கிச் சிறிது வேறுபடக்கூறினர் என்பர். தமிழ்நாட்டு மூவேந்தரிடத்துந் தமிழ்மொழியினிடத்தும் மிக்க வேட்கையுடையாரென்பது விளங்கச்சிற்சில விடங்களில் அம்மூவேந்தரைச் சிறப்பித்துந்தமிழைச் சிறப்பித்துங் கூறியிருக்கின்றனர். இவர் வைணவசமயத்தவரென்பது சிறப்புப்பாயிரத்தாலும், இந்நூலிலுள்ள சருக்கங்களின்முகத்திற் கூறியசெய்யுட்களாலுந், தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலையில், "அறஞ்சுவராகிநின்ற வரங்கனார்க்காட்செய்யாதே—புறஞ்சுவர் கோலஞ்செய்து புட்கவ்வக்கிடக்கின்றீரே" என்றாற்போலக் கன்னனைக் கூறும்போது "புறஞ்சுவர்கோலஞ்செய்வான் பூபதிக்குரைக்கலுற்றான்" என்றும், இன்னும் அவ்வாழ்வார் திவ்வியப்பிரபந்தத்தில், "மருவிய பெரிய கோவின்மதிட்டிருவரங்க மென்னாக்—கருவிலே திருவிலாதீர் காலத்தைக்கழிக்கின்றீரே" என்பதன் கருத்தைத்தழுவி "கரியபைம்புயலைக்கைதொழுமவரேகருவிலேதிருவுடையவரே" என்றும் இவ்வாறு ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய சிலதிருப்பாடல்களின்கருத்தைத்தழுவிக் கூறியதனால் ஆழ்வார்களிடத்தி லீடுபட்டுள்ளாரென்பது விளங்குதலாலுங் காண்க.

இந்நூலுட் சைவசம்பந்தமாய் வரும்பல்வேறிடங்கடோறும் உள்ளபடியே உயர்த்திக்கூறியமை கொண்டு இவர் மதவிஷயங்களிற் பொதுநோக்குடையாரென்பது தெளிவாகவிளங்கும்.

இந்நூலைக் கற்போரிடர்ப் படாது கற்கும்படி, இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கிடைத்த ஏட்டுப்பிரதிகளைக் கொண்டுபரிசோதித்து, அரும்பதவுரையுமெழுதியச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்று, "முச்சங்கத்தண்டமிழ் நூல் கலங்காமற்றலைகண்டானாகிய அவ்வாட்கொண்டானே அவதரித்தானென்று அறிஞர்கள்கூறத்தக்க செல்வங் கல்விகொடை புகழ் முதலியவைகளிற்சிறந்த பாலவனத்தம்ஜமீந்தாருந் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய ஸ்ரீ மாந்- பொ. **பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள்** நியமித்தவாறே இயன்றமட்டு மூலத்தைப்பரிசோதித்து, அதற்கரும்பதவுரையுந் திருவாவடுதுறையாதீனத்தில்இரண்டாவது குருமூர்த்தமாயெழுந்தருளியிருந்த-ஸ்ரீ.நமசிவாய **தேசிகசுவாமிகண்** முகமாகக்கற்றதும், பிறர்முகமாகக்கேள்வியுற்றதும், அறிவானுணரப்பெற்றதும், மறப்பெனும் பகைவன் வாரிக்கொள்ளாமற் கற்போர்க்கு உபகாரமாக வரைந்து வெளியிடலாயிற்று.

பரிசோதிக்குங்காலையிற் கண்டபாடபேதங்களிற்சில "செந்தமிழ்"ப்பத்திரிகைவாயிலாக வெளியிடப்பட்டன. சுவமதக்கொள்கைபரமதத்துவேஷம் என்பன

வற்றையுட்கொண்டு பாடங்களைச் சிதையாமற் பிரதிகளிலுள்ளவற்றையுள்ளவாறே ஆராய்ந்து பிறழாமலவைகள் வெளியிடப்பட்டன; இங்ஙனமுண்மையேயாமென்பது, அருச்சுனன்றவநிலைச்சருக்கம் ௱௭-ஆங்கவியையும், கிருட்டிணன்றூதுச்சருக்கம் ௰௫-ஆங்கவியையும், பதின்மூன்றாம்போர்ச்சருக்கம் ௨௱௫-ஆங்கவிமுதலாகிய சிலகவிகளையு நோக்குவோர்க்கு வெள்ளிடைமலைபோல நன்குவிளங்கும்.

இத்தமிழ்ச்சங்கத்திற்குக்கிடைத்த பிரதிகளின்விவரம்.

மகா்மகோபாத்தியாயர். உ. வே. சாமிநாத ஐயரவர்களாற் கிடைத்தபிரதி ௧.
சேதுசமஸ்தான வித்துவான், இராகவையங்காரவர்கள் பிரதி ௧.
சேற்றூர்ச்சமஸ்தானபதி, சுந்தரதாசுத்துரைத்தேவரவர்கள்பிரதி ௧.
மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி பொ-பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள்பிரதி ௫.
பரங்கிப் பேட்டைஓவரஸியர், இலக்குமணபிள்ளையவர்கள்பிரதி ௪.
யாழ்ப்பாணத்துச்சுன்னாகம், அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்பிரதி ௧.
துறையூர்க் கோவிந்தபிள்ளையவர்கள்பிரதி ௧.
நாகபட்டினம், வடக்காலத்தூர், வாஸுமுதலியாரவர்கள்பிரதி ௧.
உத்தமபாளையம், அனுமந்தனகர், கிருட்டிணஐயங்காரவர்கள்பிரதி. ௧.

ஆகப் பிரதி ௰௪.

இங்ஙனம்,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

கணபதிதுணை.

சிறப்புப்பாயிரம்.

[நூலாசிரியர் குமாரர் வரந்தருவார் செய்தது.]

பொருப்பிலேபிறந்துதென்னன்புகழிலேகிடந்துசங்கத்
திருப்பிலேயிருந்துவைகையேட்டிலேதவழ்ந்தபேதை
நெருப்பிலேநின்றுகற்றோர்நினைவிலேநடந்தோரேன
மருப்பிலே*பயின்றபாவைமருங்கிலேவளருகின்றாள். (௧)

அகத்தியன்பயந்தசெஞ்சொலாரணங்கம்புசாதன்
முகத்தினில்வாழுமந்தமொய்குழலருளினாலே
பகைத்தெதிர்பொருததெய்வப்பாரதகதையிம்முந்நீர்ச்
செகத்தினில்விருத்தயாப்பாற்செய்கெனச்செய்ததன்றே. (௨)

தேடினாரியாவரேகொலெழுவகையானுஞ்சீர்த்தி
நீடினாரவரோவென்பர்நீணிலத்துயர்ந்தமாந்தர்
பாடினாரியாவர்யாவர்பாடுவித்தார்கொலென்று
நாடினார்தெளியும்வண்ணநவையறநவிலலுற்றேன். (௩)

வேறு.

நாணிரைத்தநேகதாரகாகணமா†நவமணியுடனவிதங்கொள்
கோணிரைத்தீரேழ்புவனமும்வலஞ்செய்கொற்றநேமியின்வருகொண்டல்
வாணிரைத்திரவிவிதிர்ப்பபோன்மின்னிவான்முகடுறநெடும்பளிக்குத்
தூணிரைப்பனபோனந்திமால்வரைபின்சூழலிற்றுரைகொண்டதுவே. (௪)

வம்பறுமலருஞ்செம்பொனுமணியுமருங்கெலாநெருங்குமக்குன்றி
‡னும்பரார்ப்பெழப்பாரளவுநின்றோங்கியுள்ளுறத்துள்ளிவீழருவி
யம்புராசியைமான்மந்தரஞ்சுழற்றியமுதெழக்கடைந்தநாளதற்குத்
தம்பமாமதியையதனுடன்பெயர்த்துச்சார்த்திவைத்தெனலாந்தகைத்தே. (௫)

வெண்ணெயேகமழும்பவளவாய்விமலன்மெய்யெனக்கருகிமெல்லியலார்
கண்ணையேயனையநெடுங்கடன்முகந்துககனமுந்திசைகளும்விழுங்கிப்
பண்ணைசூழ்ந்திலகுந்திருமுனைப்பாடிப்பழையநாடனைத்தையுமொருதன்
பெண்ணையேகொண்டுபோகமுய்த்திடுமாற்புயலெனும்பெயருடைப்பெரியோன்.()

தொடுத்தநாண்மலர்வேய்ந்தகிலளைந்துந்திச்சுழிவயினிலங்கமெய்த்தனங்க
ளெடுத்துமேல்வீசிமணிமருங்கலையவினங்கொள்வண்டொடுசிலம்பிரங்க
வடுத்தநீள்சுரதமகளிரிற்றடங்கணிறஞ்சிவப்புறக்கரையழிந்து
படுத்தபேரணைப்போர்புரிந்ததாலந்தப்பண்ணையங்கானல்சூழ்பெண்ணை. (௭)

---

*பயின்றமாதென்மருங்கிலேவளர்கின்றாளே என்றும்பாடம்.

†நவமணியெனவுறைநவின்றஎன்றும் பாடம்.

‡உம்பருடெழ என்றும்பாடம்.

அவ்வைபாடலுக்குநறுநெய்பால்பெருகியருந்தமிழறிவினூற்சிறந்து
பௌவநீராடைத்தரணிமான்மார்பிற்பயிலுமுத்தரியமும்போன்று
மொய்வரால்கெண்டைவாளைசேன்மலங்குமுதலியசனமெதிர்கொள்ளத்
தெய்வமாநதிநீர்பரக்குநாடந்தத்திருமுனைப்பாடிநன்னாடு. (௮)

பாவருந்தமிழாற்பேர்பெறுபனுவற்பாவலர்பாதிநாளிரவின்
மூவருநெருக்கிமொழிவிளக்கேற்றிமுகுந்தனைத்தொழுதநன்னாடு
தேவருமறையுமின்னமுங்காணாச்செஞ்சடைக்கடவுளைப்பாடி
யாவருமதித்தோர்மூவரிலிருவர்பிறந்தநாடிந்தநன்னாடு. (௯)

வேறு.

அந்தத்திருநாட்டந்தநதியமுதம்பெருகியிருகரையுஞ்
சந்தத்துடன்காரகில்கமழத்தடங்காவகஞ்சூழ்தடநிறைப்பக்
கந்தக்குவளைமேய்பகட்டின்காலானெரிந்துகதிர்முத்தஞ்
சிந்தச்சிந்தக்கொழுமுனைக்குமுன்னே *ருழுவசெய்ச்சங்கம். (௧௦)

கொழுநீர்மதுவுண்கடைசியர்தங்குழைமேதோய்விழியினெழுநிழலைக்
கழுநீர்மலரென்றொருபகலுங்காலான்மயக்கிக்களைதுவைப்பார்
முழுநீருடுதமதுநிழன்முழுதுங்கண்டுதொழுதிறைஞ்சிச்
செழுநீரமங்கையரென்றுதிகைப்பார்நகைப்பார்செறுவெல்லாம். (௧௧)

கரும்புங்கமுகுந்தலைதெரியாக்கழனிச்செந்நெற்களையாகி
யரும்புங்குவளைநறுமலர்த்தேனூற்றெங்குஞ்சேறாக
விரும்புஞ்சுருதியிசைகேட்டுவேலைக்கழிக்கானலங்கைதை
சுரும்புந்தும்பிகளுமருந்தயாறுதேனுஞ்சோறிடுமால். (௧௨)

வேறு.

கம்பலைக்கழனிச்சேனைக்காவலர்கரங்கணிக்கிப்
பைம்புலத்துழுநர்தங்கள்பலவகைவிளைவுமீட்டி
யைம்புலத்தவர்க்குமீந்தாங்கறத்தினைவளர்த்தலாலே
செம்புலக்கிழத்திக்காவியன்னதச்செல்வநாடே. (௧௩)

வேறு.

என்னுடையாகடலைமுமன்றிருகடலாக
பெண்ணைமடநதிநறுநெய்பால்பெருகுமப்பழனப்
பண்ணைநீள்வளம்பல்குசீர்ப்பழையநன்னாட்டில்
வண்ணநான்கினுமுயர்ந்துளோரொருமுனிவந்தான். (௧௪)

ஐந்துபாவுடைநால்வகைக்கவிக்கதிபதியாய்
வந்துவட்டபாமணியினன்மணிமுடிபுனைந்து
பைந்துழாய்முடிப்பரமனைப்பலகவித்துறையுஞ்
சிந்தையான்மொழிந்தன்பர்தந்திருவுளம்பெற்றோன். (௧௫)

தென்னர்சேரல்செம்பியரெனப்பெயர்சிறந்த
மன்னர்மூவரும்வழங்கியவரிசையாலுயர்ந்தோன்
முன்னரெண்ணியமுத்தமிழ்ப்பாவலரெவரும்
பின்னர்வந்தொருவடிவுகொண்டனரெனப்பிறந்தோன். (௧௬)

---

* உழவு செயுஞ் சங்கம் என்றும் பாடம்.

* தாரகாயணவண்டலைதண்டலைச்சணியூர்
வீரராகவனருள்பெறுவில்லிபுத்தூர
னாராமுடிமண்மிசையுயர்புகழ்நிறுத்தித்
தீரகாகளம்பெறுதலின்யாரினுஞ்சிறந்தோன். (௧௭)

வேறு.

எங்குமிவனிசைபரப்பிவருநாளில்யாமுரைத்தவிந்தநாட்டிற்
கொங்கர்குலவரபதியாட்கொண்டானென்றொருவண்மைக்குரிசிறோன்றி
வெங்கலியின்மூழ்காமற்கருநடப்போர்வெள்ளத்துவிழாமனான்காஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே. (௧௮)

மற்றவனிப்புவியாளும்வளவனுக்குமுடிகவித்துவழுதித்தெவ்வைச்
செற்றவனுக்கவனியெல்லாஞ்செங்கோன்மைநிலையிட்டுச்செல்வமெல்லாங்
கற்றவருக்கிருகையுடைக்கற்பகம்போலினிதளித்துக்கமலமாதுங்
கொற்றவையுமனங்களிப்பத்தன்னைமேருவினுங்கோட்டினானே. (௧௯)

தென்னாட்டில்வடநாட்டிற்குடநாட்டிற்குணநாட்டிற்றெவ்வரோடக்
கன்னாட்டியமர்பொருதுகங்கைநீரூட்டுவித்துக்கண்டன்வேங்கை
யெந்நாட்டுமெழுதியவன்றிருமரபோர்பெற்றபுகழ்யாவர்பெற்றா
ரந்நாட்டுக்கொற்றமெல்லாமக்குரிசில்புகழொடவதரித்ததன்றே. (௨௰)

ஆற்றியமெய்ச்செல்வத்தாலளகையைவென்றிருங்கவினாலமரரூரை
மாற்றியபொற்றடமதில்சூழ்வக்கபாகையினறத்தின்வடிவம்போலத்
தோற்றியவக்கொங்கர்பிரான்சூழ்தமிழானாட்கொண்டான்சுற்றத்தோடு
போற்றியவிப்புவிமுழுதுந்தன்றிருப்பேர்மொழிகொண்டேபுரந்தானம்மா. (௨௧)

பிறந்துய்யக்கொண்டவனிப்பேருலகம்பெறுவாழ்வுகூருநாளி
னிறைந்தபுகழ்ச்சனிநகர்வாழ்வில்லிபுத்தூரானைநோக்கிநீயுநாளும்
பிறந்ததிசைக்கிசைநிற்பப்பாரதமாம்பெருங்கதையைப்பெரியோர்தங்கள்
சிறந்தசெவிக்கமுதமெனத்தமிழ்மொழியின்விருத்தத்தாற்செய்கவென்றான். ()

இருக்காதிமறைமொழிந்தோனியம்பியவிப்பெருங்கதையையாருங்கேட்பச்
சுருக்காகப்புராணமுறைசொல்லுகவென்றலினவனுஞ்சொல்லலுற்றான்
பெருக்காளர்முதலாயபெருங்குலத்தோரிக்கதைபின்பெற்றிகேட்டார்
செருக்காகவவன்மைந்தன்வரந்தருவாணிப்பதிகஞ்செப்பினானே. (௨௩)

வேறு.

†கலியுகவியாதன்சொல்லக்கணபதியெழுதுபாடல்
பொலிவுறுதமிழினூற்பிரமென விருத்தம்போற்றிச்
சலிவறுவில்லிபுத்தூரிறைவனுஞ்சார்வழூம
னொலிகெழுமறையோர்கோமானுயர்ந்தவருவப்பச்சொன்னான். (௨௪)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

* தாரகாகண என்றும் பாடம்.

† இச்செய்யுள் பலபிரதிகளிலுங்காணப்படுதலாற் பாரதமுழுவதும் இவராற் பாடப்பட்டிருந்தன போலும்.

உ

கணபதிதுணை.

மகாபாரதம்.

தற்சிறப்புப்பாயிரம்.

நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநா
ளேடாக *வடமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ. (க)

†முருகார்மலர்த்தாமமுடியோனையடியார்முயற்சித்திறந்
திருகாமல்விளைவிக்குமதயானைவதனச்செழுங்குன்றினைப்
புருகூதன்முதலாயமுப்பத்துமுக்கோடிபுத்தேளிரு
மொருகோடிபூதேவருங்கைதொழுங்கோவைபுறவுன்னுவாம். (உ)

வேறு.

ஆக்குமாறயனாமுதலாக்கியவுலகங்
காக்குமாறுசெங்கண்ணிறைகருணையங்கடலாம்
வீக்குமாறரனாமவைவீந்தநாண்மீளப்
பூக்குமாமுதலெவனவன்பொன்னடிபோற்றி. (ங)

எழ்பெருங்கடன்மாநிலமெங்குநல்லறமே
சூழ்கவண்டமிழோங்குகதேங்குகசுருதி
வீழ்கபைம்புயல்விளங்குகவளங்கெழுமனுநூல்
வாழ்கவன்புடையடியவர்மன்னுமாதவமே. (ச)

கன்னபாகமெய்களிப்பதோரளப்பிறொல்கதைமுன்
சொன்னபாவலன்றுகளறுசுகன்றிருத்தாதை
யன்னபாரதந்தன்னையோரறிவிலேனுரைப்ப
தென்னபாவமற்றென்னையின்றென்சொலாதுலகே. (ரு)

மண்ணிலாரணநிகரெனவியாதனார்வகுத்த
வெண்ணிலாநெடுங்காதையையானறிந்தியம்பல்
விண்ணிலாதவன்விளங்குநீடெல்லையையூமன்
கண்ணிலாதவன்கேட்டலுங்காண்டலுங்கடக்கும். (சா)

முன்சொலாகியசொல்லெலாமுழுதுணர்முனிவன்
றன்சொலாகியமாப்பெருங்காப்பியந்தன்னைத்
தென்சொலாலுரைசெய்தலிற்செழுஞ்சுவையில்லாப்
புன்சொலாயினும்பொறுத்தருள்புரிவரேபுலவோர். (எ)

முன்னுமாமறைமுனிவருந்தேவரும்பிறரும்
பன்னுமாமொழிப்பாரதப்பெருமையும்பாரேன்
மன்னுமாதவன்சரிதமுமிடையிடைவழங்கு
மென்னுமாசையால்யானுமீதியம்புதற்கிசைந்தேன். (அ)

---

* மாமேரு என்றும்பாடம். †இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

உ

முதலாவது

ஆதிபருவம்.

குருகுலச்சருக்கம்.

எங்கண்மாதவனிதயாமலர்வருமுதயத்
திங்கண்மாமரபினிற்பிறந்திசையுடன்சிறந்தோ
ரங்கண்மாநிலத்தரசர்பல்கோடியவ்வரசர்
தங்கண்மாக்கதையானறியளவையிற்சமைக்கேன். (க)

பொருந்தவானுரைநாள்களைநாடொறும்புணர்வோ
னருந்தவானவர்க்காரமுதன்புடனளிப்போன்
றிருந்தவானவர்க்கரியவன்செஞ்சடைமுடிமே
லிருந்தவானவன்பெருமையையார்கொலோவிசைப்பார். (உ)

மண்டலம்பயிலுரகர்பேருயிர்ப்பினான்மயங்கி
மண்டலப்பொறாவருந்தியபெருந்துயர்மாற
மண்டலந்தனைநிழலெனுமரபினுற்றனது
மண்டலம்பொழியமிழ்தின்மெய்த்துளிரவேவைத்தோன். (ங)

பைம்பொன்மால்வரைமத்தினிற்பணிவடம்பிணித்திட்
டும்பரானவர்தானவருடன்கடைந்திடவே
தம்பமானதுமன்றியத்தழல்விடந்தணிய
வம்புராசியினமுதுடனவதரித்தோன். (ச)

பத்திரட்டியிலீரிரண்டொழிந்தபல்கலையோன்
மித்திரற்கவைகொடுத்துமுன்மீளவுங்கவர்வோ
னத்திரிப்பெயரந்தணனம்பகந்தனிலுஞ்
சித்திரக்கனன்முகத்தினும்பிறந்தொளிசிறந்தோன். (ரு)

அந்தியாரணமந்திரத்தன்புடனிவனை
வந்தியாதவர்மண்ணினும்வானினுமில்லை
புந்தியாலுயர்புதனெனும்புதல்வனைமகிழ்வாற்
றந்தியாவருங்களிப்புறவிருக்குநாடன்னில். (சா)

வளைநெடுஞ்சிலைக்கரத்தினன்மநுவருண்மைந்த
னுளையெழும்பரித்தேரினனுறுவதொன்றுணரான்
விளைபருந்தவவிபினமுற்றம்பிகைவிதியா
விளையெனும்பெயர்மடவரலாயினனென்ப. (எ)

மாரகாகளமெழுவதோர்மதுமலர்க்காவிற்
றாரகாபதிபுதல்வனைத்தையலைக்காணூ
விரகாமபாணங்களின்மெலிவுறமயங்கித்
திரகாமமுஞ்செவ்வியுமிகும்படிதிளைத்தான். (௮)

புதனுமந்தமென்பூவையும்புரூரவாவினைத்தஞ்
சுதமினனும்படிதோற்றுவித்தனரவன்றோன்றி
யிதநலம்பெறுமழகினுந்திறலினுமிலங்கி
மதனனுங்கலைமுருகனுமெனும்படிவளர்ந்தான். (௯)

பொருப்பினைச்சிறகரிந்தவன்புரத்துமங்கையரு
ளுருப்பசிப்பெயரொண்டொடியுருவினிற்சிறந்தா
டருப்பொழிற்பயில்காலைபிற்றுனைவர்காணூ
விருப்புறக்கவர்ந்தேகினரவளுடன்விசும்பில். (௧௦)

கொண்டுபோதலுமபயமென்றுருப்பசிகூவ
வண்டர்யாவருமஞ்சினரவருடனடுபோர்
வென்றிசூழ்குழலணங்கையிம்மதிமகன்மகனுங்
கண்டுதேர் * நனிகடவினனசுரர்மெய்கலங்க. (௧௧)

நிறந்தருங்குழலிவையைநிறுத்திவாளவுணர்
புறந்தரும்படிபுரிந்தபின்புரந்தரன்றாதான்
மறந்தருங்கழன்மன்னவன்மண்மிசையணைந்து
சிறந்தவன்பொடத்தெரிவையைநலம்பெறச்சேர்ந்தான். (௧௨)

பாயனூருவின்வந்தருளந்தமான்வயிற்றி
லாயுவென்றொருசெம்மலையம்மகனளித்தான்
றேயுவும்பலதேவருமகிழமற்றிவனே
மேயவண்புகழ்வேந்தரில்வேள்வியான்மிக்கோன். (௧௩)

முகுடமும்பெருஞ்சேனையுந்தரணியுமுற்றுஞ்
சகுடநீரொனச்சதமகம்புரியருந்தவத்தோ
னகுடனைமவேனராதிபனைகருக்கரசாய்
மகுடமேந்தியகுரிசிலாயுவின்றிருமைந்தன். (௧௪)

புரந்தரன்பதம்பெற்றபின்புலோமசையுயக்கிற்
கிரந்துமற்றவளேவலின்யானமுற்றேறி
வரந்தருங்குறுமுனிமுனிவாய்மையான்மருண்டு
நிரந்தரம்பெரும்புயங்கமானவனுமந்நிருபன். (௧௫)

மற்றவன்றிருமைந்தன் † வின்மைந்தினுயர்ந்த
கொற்றவன்றிறற்கொற்றவைக்கிருபுயங்கொடுத்தோன்
முற்றவன்பகைமுகங்கெடமுகந்தொறுந்திசையிற்
செற்றவன்பெருஞ்செற்றமில்குணங்களிற்சிறந்தோன். (௧௬)

---

* தனிகடவினன் என்றும் பாடம்.

† வேன்மைந்தனிலுயர்ந்த என்றும் பாடம்.

யயாதியென்றுகொண்டிவனையேயெவரினுஞ்சிறக்க
வியாதனும்புகழ்ந்துரைத்ததுமற்றிவன்மேனாட்
புயாசலங்களுக்கிசையவேபுகரவன்புதல்வி
குயாசலந்தழீஇயிருவர்வெங்குமரரையளித்தான். (கஎ)

அன்னகாலையிலிவடனதாருயிர்த்துணையாய்
முன்னிசைந்தபேரிசைவினாலேவலின்முயல்வா
ணன்னலந்திகழ்கவிதனக்குரைகெழுநண்பா
மன்னவன்றருமடவரலிவனுழைவந்தாள். (கஅ)

ஆழிமன்னனவ்வணங்கினையணங்கெனக்கண்டு
பாழிவன்புயம்வலந்துடித்திடவுறப்பரிந்து
வாழிதன்மனைமடவரலறிவுறாவண்ணம்
யாழினோர்பெரும்புணர்ச்சியினிதயமொத்திசைந்தான். (ககூ)

சாருமன்பினிற்கற்பினிற்சிறந்தசன்மிட்டை
சேருமைந்தினுமுயர்வினுந்தேசினுஞ்சிறந்து
மேருவென்றிடமேதினியாவையுந்தரிப்பான்
பூருவென்றொருபுண்ணியப்புதல்வனைப்பயந்தாள். (உ0)

மருவிளங்கொடியனையமென்மருங்குலாள்பின்னு
மிருவர்மைந்தரைப்பயந்தனளிறைமனைகாணு
வுருவிளங்கியவுலகுடைகிருபனுக்கிவண்மேற்
றிருவுளங்கொலென்றழன்றுதன்றாதைபிற்சென்றாள். (உக)

சென்றுதாதையைப்பணிந்திதுசெப்பவுஞ்சினமேல்
வென்றிமன்னனைவிருத்தனும்வகைபவன்விதித்தா
னன்றுதொட்டிவனைம்முதற்பிணியினாலழுங்கி
யின்றுநூறெனநரைமுதிர்யாக்கையோடிருந்தான். (உஉ)

அந்தமன்னவன்மைந்தரையழைத்தெனக்குசனார்
தந்தமூப்பைநீர்கொண்டிளமைதந்திடுமென்ன
மைந்தர்யாவருமறுத்திடப்பூருமற்றவன்ற
னிந்தமூப்பினைக்கவர்ந்துதன்னிளமையுமீந்தான். (உங)

விந்தைபூமகண்முதலியமடந்தையர்விரும்ப
முந்தைமாமணம்யாவையும்பலபகன்முற்றிச்
சிந்தையாதரந்தணிந்தபின்சிந்தனையின்றித்
தந்தைமீளவுமிளமைதன்றனயனுக்களித்தான். (உச)

இடிபுமாறுகொணெடுமொழியயாதியன்றிவற்கே
முடியுமாலையுமுத்தவெண்கவிகையுமுரசும்
படியும்பாவையும்வழங்கியெம்பணிமதிபரபிற்
கடியுநீயினியெனமகிழ்ந்தளியுடனளித்தான். (உரு)

விரதமிஞ்சியவேள்வியாற்கேள்வியான்மிக்கான்
சுரதமங்கையர்முலைக்குவடணைவரைத்தோளான்

பரதனென்றொருபார்த்திவன்பரதமுமிசையுஞ்
சரதமின்புறவக்குலந்தனிலவதரித்தான்.

சுரசமூகமுஞ்சுராரிகள்சமூகமுஞ்சூழ
விரசுபூசலின்வாசவனடுங்கிவெந்நிடுநா
ளரசர்யாவருமறுமுகக்கடவுளென்றயிர்ப்பப்
புரசைநாகமுன்கடவினானகமும்புரந்தோன்.

முக்குலத்தினுபதிக்குலமுதன்மைபெற்றதுவென்
றெக்குலத்தினிலரசும்வந்திணையடியிறைஞ்ச
மைக்குலத்தினிற்புட்கலாவர்த்தமாமெனவே
யக்குலத்தினிலத்தியென்பவனவதரித்தான்.

கொண்டல்வாகனுங்குபேரனுநிகரெனக்குறித்துப்
புண்டரீகன்முன்படைத்தவப்புரவலனமைத்த
தெண்டிசாமுகத்தெழுதுசீரியக்கர்மாநகரு
மண்டர்தானமுமுவமைகூரத்தினாபுரியே.

மீனமாகியவிண்ணவன்விநதைமுன்பயந்த
யானமீதெழுந்தருளிவந்திருபதம்வழங்கக்
கானநாண்மலர்க்கயத்திடைக்கயமும்வெங்கராமு
மானமானவரிருவருமக்குலத்தவரே.

பொருபெரும்படைத்தொழில்வயப்புரவிதேர்மதமா
மருவருந்தொழின்மன்னர்நீதியின்றொழில்வளங்கூர்
சுருதியின்றொழின்முதலியதொழிலனைத்தினுக்குங்
குருவெனும்புகழ்க்குருவுமக்குலத்திலங்குரித்தான்.

வருகுலத்தவரெவரையும்வரிசையாலின்றுங்
குருகுலத்தவரெனும்படிபேரிசைகொண்டா
னிருகுலத்தினுமாசறுதேசினானிவனுக்
கொருகுலத்தினுமுரைப்பதற்குவமைவேறுண்டோ.

வேறு.

அந்தணன்மரபினிலமுதவெண்டிரைச்
சிந்துவின்மிசைவருதிங்களாமெனச்
சந்தனுவெனும்பெயர்த்தரணிகாவலன்
வந்தனனவன்செயல்வகுத்துக்கூறுவாம்.

வேனிலானிவனெனவிளங்குகாலையிற்
கானகவேட்டைபோயிளைத்தகாவல
னா*மென்குளிர்புனலாசையான்மணித்
தூநிறக்கங்கையாள்சூழலெய்தினான்.

* மெய்குளிர் என்னும் பாடம்.

மருவருங்குழல்விழிவதனம்வார்குழை
யிருதனங்தோள்கழுத்திதழொடின்னகை
புருவம்வண்புறவடிபொற்பப்பாவைய
ருருவுகொண்டனடனதுடைமைதோன்றவே. (ஙரு)

கங்கையின்வெள்ளமேற்கருத்துமாறியிம்
மங்கைதன்பேரொளிவனப்பின்வெள்ளமே
தங்கியசோகமுந்தாபமுங்கெடப்
பங்கயவிழிகளாற்பருகினனரோ. (ஙசா)

வையகமடந்தைகொல்வரைமடந்தைகொல்
செய்யபங்கயமலர்த்திருமடந்தைகொ
லுய்யவண்கலைவிதச்சொன்மடந்தைகொ
லையமுற்றனனிவளார்கொலென்னவே. (ஙஎ)

கண்ணிமைத்திருநிலங்காலுந்தோய்தலாற்
பெண்ணிவண்மானுடப்பிறப்பினளென
வெண்ணமுற்றவளருகெய்தியாவர்செய்
புண்ணியநீயெனப்புகழ்ந்துபோற்றினன். (ஙஅ)

போற்றியகுரிசின் *மெய்புளகமெய்தவே
யேற்றியவிழியினளிளகுநெஞ்சினள்
சாற்றியமலரயன்சாபமிவ்வழித்
தோற்றியதெனவுறுதுயரநீங்கினள். (ஙகூ)

பொங்கியமதர்விழிப்புரிவுமாதரந்
தங்கியமுகிண்முலைத்தடமுநோக்கியே
யிங்கிதமுறைமைநன்றென்றுவேந்தனு
மங்கிதமுடனவட்கன்புகூரவே. (ச0)

கன்னியேயாமெனிற்கடிகொள்பான்மையை
யென்னின்மற்றுயர்ந்தவரில்லைமண்ணின்மே
லுன்னினைவுளாயெனவுசாவினனிகன்
மின்னிலைவடிகொள்வேல்வேந்தர்வேந்தனே. (சக)

† நாணினளாமெனநதிமடந்தையும்
பூணுறுமுலைமுகம்பொருந்தநோக்கினள்
சேணுறுதனதுமெய்த்தேசுபோனகை
வாணிலவெழச்சிலவாய்மைகூறுவாள். (சஉ)

இரிந்துமெய்ந்நடுங்கிடயாதியாதுநான்
புரிந்ததுபொறுத்தியேற்புணர்வலுன்புயம்
பரிந்தெனைமறுத்தியேற்பரிவொடன்றுனைப்
பிரிந்தகன்றிடுவனிப்பிறப்புமாற்றியே. (சங)

---

* மேற்புளகம் என்றும் பாடம்.
† நாணினளொதுங்கினள் என்றும் பாடம்.

மெய்தருவிதியினேன்விரதமற்றிவை
யெய்தரிதொருவராலெய்தவல்லையேற்
கைதருகெனப்பெருங்காதலாளனு
முய்வரிதெனவிசைந்துடன்படுத்தினான். (௪௪)

எனதுயிரரசுவாழ்வென்பயாவையு
நினதுநின்னேவலினிற்பன்யானென
வனிதையைமருட்டினான்மன்றலெண்ணியே
தனதனுநிகரிலாத்தனமகீபனே. (௪௫)

அருமறைமுறையினாலங்கிசான்றெனத்
திருமணம்புரிந்துளந்திகழவைகினா
னிரதியுமதனனுமல்லதில்லைமற்
றொருவருமுவமையென்றுலகுகூறவே. (௪௬)

மருவுறச்சிலபகன்மணந்துமான்விழி
கருவுயிர்த்தனளெனக்களிகொள்காலையிற்
பருவமுற்றன்புடன்பயந்தமைந்தனைப்
பொருபுனற்புதைத்தனள்புவனங்காணவே. (௪௭)

கண்டுளம்வெருவிமுன்கதித்தவாசகங்
கொண்டுரையெடுத்திலன் கொண்ட காதலா
னொண்டொடியுடன்மணந்துருகிவைகினன்
பண்டையினெழுமடிபரிவுகூரவே. (௪௮)

பின்னருமறுவரைப்பெற்றதாய்மன
முன்னரின்மும்மடிமுரண்டுமாய்க்கவே
மன்னவனவற்றினும்வாய்திறந்தில
னன்னகர்ச்சனமெலாநடுநடுங்கவே. (௪௯)

வழுவறுகுருகுலமன்னன்மைந்தரோ
ரெழுவரைமுருக்கினளீன்றதாயெனப்
பழுதறுமகப்பலபயந்தமங்கைய
ரழுதனர்கட்புனலாறுபாயவே. (௫௦)

கங்கையென்றுலகெலாங்கைதொழத்தகு
மங்கையங்கனந்தரம்வயிறுவாய்த்துழி
வெங்கயகடகரிவேந்தன்மாமனப்
பங்கயந்துறந்ததுபழையவின்பமே. (௫௧)

மதலையைப்பயந்தனண்மடந்தையென்றலுங்
கதுமெனச்சென்றுதாய்கைப்படாவகை
யிதமுறப்பரிவுடனெடுத்துமற்றவள்
பதயுகத்தாமரைபணிந்துபேசுவான். (௫௨)

நிறுத்துகமரபினைநிலைபெறும்படி
வெறுத்தெனைமுனியினும்வேண்டுமாலிது
மறுத்தனன்யானெனமனஞ்செயாதினிப்
பொறுத்தருள்புரிகவிப்புதல்வன்றன்னையே. (௫௩)

என்றுபற்பலமொழியிவனியம்பவே
நன்றுநன்றவனிபநவின்றவாசக
மின்றுநின்றிரங்கினையெழுவர்மைந்தரைக்
கொன்றவன்றென்செய்தாய்கொடியையென்னவே. (௫௪)

அரசனுமுணர்ந்துநீயார்கொல்பாலரைத்
திரைசெறிபுனலிடைச்செற்றதென்கொலா
முறைசெயவேண்டுமென்றுரைப்பவஞ்சியும்
வரிசையினுயர்ந்ததன்வரவுகூறுவாள். (௫௫)

வான்முகமதியமும்புதியமாலிகைக்
கான்முகவிதழியுங்கமழுங்கங்கையா
டேன்முகம்பொழிதருசெய்யதாமரை
நான்முகன்பேரவைநண்ணினளரோ. (௫௬)

இருங்கலையிமையவரெதிரிறைஞ்சுவாண்
மருங்கலை * மதியினைமதிக்குமாறுபோ
லருங்கலையயனுறவதிர்ந்துவீசினான்
பொருங்கலையெனுமிகற்புரவிவீரனே. (௫௭)

திருத்தகுமவயவங்கிகழ்ந்துதோன்றவே
கருத்துடனவைக்கணோர்கண்புதைக்கவு
மருத்தினைமனனுறமகிழ்ந்துகாதல்கூ
ருருத்தகுமரிமையோடொருவனோக்கினான். (௫௮)

நோக்கியவருணைநவனுநான்மறை
யாக்கியமுனியுருத்தழன்றுபார்மகள்
பாக்கியமென்னவுற்பவிக்கநீயெனத்
தாக்கியவுருமெனச்சபித்தகாலையே. (௫௯)

கோனிடநினைவொடுகுறுகிநீயுநன்
மானிடமடந்தையாய்மணந்துமீள்கென
வானிடைநதியையும்வழுவினாலவ
டானிடருறும்வகைதந்தையேவினான். (௬௦)

பாரினுநமக்கொருபதமுண்டென்றவ
ளீரமுற்றிழிதருமெல்லைவானகத்
தோரிடையுடன்விழுமுற்கைபோன்முக
வாரொளிமழுங்கினர்வசுக்கடோன்றினார். (௬௧)

* அலையினை மறிக்குமாறு என்றும் பாடம்.

என்னையிங்கிழிந்தவாறெங்கண்மாநதி
யன்னையென்றவளடியவர்வணங்கலுந்
தன்னையங்கயனிடுசாபங்கூறினாள்
பின்னையங்கவருந்தம்பெற்றிபேசுவார்.

உற்றுறையெங்களுளொருவன்றன்மனைப்
பொற்றொடிக்கழிந்தவள்புன்மைவாய்மையாற்
சற்றுமெய்யுணர்வறத்தகாதொன்றெண்ணினான்
மற்றெழுவருமவன்வயத்தராயினேம்.

தூநகைமொழிப்படிசோரராகியே
வானவர்வணங்குதாள்வசிட்டன்வாழ்மனைத்
தேனுவையிரவினிற்சென்றுகைக்கொளா
மீனெறி *கரந்தெனமீளவேகினோம்.

பசுக்கவர்ந்தனரெனப்பயினுமாதவ
முசுக்குலமனையமெய்ம்முனிவர்கூறலுஞ்
சிசுக்களினறிவிலாச்சிந்தைசெய்தவர்
வசுக்களென்றருந்ததிமகிழ்நனெண்ணினான்.

உம்பதமிழந்துநீருததிமண்ணுளோர்
தம்பதம்பெறுகெனச்சாபங்கூறலு
மெம்பதம்பெறுவதென்றினியெனாவவன்
செம்பதமெமதுபூஞ்சென்னியேந்தினேம்.

அன்புடைமுனிமுனிவாறிமானுடப்
புன்பிறப்பெழுவரும்புரிந்துமீளுதிர்
மின்புரைதெரிவைசொல்விழைந்தநீயவ
ணின்பமற்றநேகநாளிருந்தியென்னவே.

விண்வருசெல்வமும்விழைவுமேன்மையு
மெண்மருமிழந்தனமென்செய்வேமென
மண்வருதையலைவணங்கத்தையலும்
பண்வருமொழிசிலபகர்ந்துதேற்றினாள்.

வலத்துயர்தடம்புயவருணனுங்குரு
குலத்தினில்யன்வரங்கொண்டுதோன்றுமா
னலத்துடனவன்மனைநண்ணுமெல்லையி
னிலத்திடையென்வயினீருந்தோன்றுவீர்.

அஞ்சன்மினும்மைநானவனிதோயுமு
னெஞ்சவிட்டிடுவனிவ்விறைவன்றன்னையு
நெஞ்சுறத்தந்தைபானிறுத்திநானுமவ்
வஞ்சகப்பிறப்பினைமாற்றுவேனென்றாள்.

---

* கவர்ந்தென என்றும் பாடம்.

நாலிருவசுக்களுநதிமடந்தைசொற்
பாலிருசெவிப்படப் *படாதநற்றவஞ்
சாலிருநிலத்திழிதாயையன்புடன்
காலிருகரத்தினற்கசிந்துபோற்றினர். (எக)

சன.தயமீன்கடவுளுஞ்சசிகுலத்துநல்
விதையெனமேதினிமீதுதோன்றினன்
றுதையளிசெறிகுழற்றோகையாயினு
ளிதையமுற்றுயர்நதியென்னுமின்னுமே. (எஉ)

தவமுறக்குடதிசைத்தலைவன்றோரமா
மவள்வயிற்றுதித்தனரந்தவெண்மரு
முவகையிற்பெருமநீயுணர்ந்துகொள்கென
விவடிருக்கணவனுமின்னகூறுவான். (எங)

அறப்பயனென்னுமாறறிவிலாவெமைப்
பிறப்புணர்த்தினைமகப்பேறுசெய்துநீ
யிறப்பவரெழுவரோடேகலாவுயர்
சிறப்புடையினையவன்செய்வதென்னென்றான். (எச)

முக்குலத்தரசினுமுதன்மையானுய
ரிக்குலத்திவனலாதில்லைமாமகா
ரக்குலத்தவமுனியருளினலிவன்
மெய்க்குலத் †தந்தையாம்விழைவுமில்லென்றாள். (எரு)

மன்னவர்தொழுகழன்மன்னன்மைந்தனோ
டின்னமுமொருவனையினிதளித்துநாம்
பன்னகநெடுமுடிப்பார்களிக்கவே
பொன்னகரிருவரும்போதுமென்னவே. (எசு)

போயிருந்தென்பயன்போகம்பல்வகை
யாயிருந்தனவெலாமருந்தியின்னமு
மாயிருந்தரணியின்மன்னுசில்பக
னீயிருந்தரசியனிறுத்திமீளுவாய். (எஎ)

இப்புதல்வனுமினியென்னொடேகியே
மெய்ப்படுகாளையாம்பதத்துமீளநின்
கைப்படுத்துவலெனக்கணவனைத்தழீஇ
யப்பெரும்புதல்வனோடவளுமேகினாள். (எஅ)

வேறு.

றுதொட்டிவனுமகன்றபூங்கொடியையபழகுறவெழுதிமுன்வைத்து
ன்றுபட்டுவமைப்பொருள்களாற்கண்டுமுரைத்தவையெடுத்தெடுத்துரைத்து
றலிற்றலைநாள்விழைவொடுமணந்தமடந்தையர்வதனமுநோக்கா
ன்றினிக்கிடைப்பதென்றுளம்வருந்தியெண்ணுநாளெல்லையாண்டிருந்தான். ()

* படர்ந்த நல்லறம் என்றும் பாடம்.

† தந்தையால் என்றும் பாடம்.

பின்னொருதினத்திலமைச்சரும்பிறரும்பெரும்படைத்தலைவருஞ்சூழ
முன்னொருதினத்தின்வனத்துமாவேட்டைமுன்னினன்முயன்றுபோய்முற்றி
மின்னொருவடிவுகொண்டெனச்சிறந்தமெல்லியன்மீண்டுறைமறையுந்
தன்னொருமதலையாக்கமுங்கருதிச்சானவித்தடங்கரையடைந்தான். (௮௰)

பண்டுதானவளையெதிர்ப்படுங்கனகப்பைங்கொடிப்பந்தர்வானிழலும்
வண்டறாநறைப்பூஞ்சோலையுந்தடமுமருங்கலைமலயமாருதமும்
புண்டரீகமுஞ்செங்காவியுங்கமழும்புளினமும்புளினமென்றுறையுங்
கண்டுகாரிகையையிம்மையிலினுங்காண்குமோவெனமனங்கசிந்தான். (௮௧)

பிரிந்தநாளெண்ணிப் *பகீரதிப்பெருக்கைப்பேதுறுங்குறிப்பொடுநோக்கிக்
கரிந்தபாதவம்போனின்றவப்பொழுதிற்கால்பொரக்குனித்தகார்முகமுந்
தெரிந்துமேன்மேலுந்தொடுத்தசாயகமுஞ்சிலம்பெனத்திரண்டதோளிணையும்
விரிந்தநூன்மார்புமாகிமுன்னடந்தான்விழிகளித்திடவொருவீரன். (௮௨)

வியந்திடவருமக்குரிசிலையிவனேவிடையவன்குமரனென்றயிர்க்கும்
வயந்தனிலுலவுமதன்கொலோவென்னும்வாசவன்மதலையென்றெண்ணு
முயர்ந்தவரிவனின்வின்மையினில்லையொருவருமுலகின்மேலென்னும்
பயந்ததன்வடிவின்படியெனத்திகழும்பான்மையைநினைந்திலன்பயந்தோன். (௮௩)

தந்தையென்றிவனையுணர்கிலாமதியாற்சராசனந்தழுவுறவளைத்து
மைந்தனுமொருபோர்மோஹனக்கணையான்மறையுடன்மார்புறவெழுதி
யிந்திரதனுவோடிந்திரனெழிலியிடைமறைந்தனனெனப்புடையே
சிந்தியதிவலைச்சிந்துவின்மறைந்தானரசனுமகிதலஞ்சேர்ந்தான். (௮௪)

காதலனயர்வுந்திருமகன்புனலிற்கரந்ததுங்கண்டுளமுருகி
மேதகுவடிவுகொண்டுமற்றந்தவெஞ்சிலைவிஜயதனுந்தானு
மோதவெண்டிரையின்மதியுடனுதித்தவொண்மலர்க்கொடியெனவோடித்
தூதுளங்கனிவாய்மலர்ந்தினிதழைத்துச்சூடகச்செங்கையாலெடுத்தாள். (௮௫)

வாடியதருவின்மழைபொழிவதுபோன்மடவரல்கருணைநீர்பொழியக்
கூடியவுணர்வோடெழுந்த †காவலனைக்கொங்கைமார்புறத்தழீஇக்கொண்டு
நாடியகருமம்வாய்த்ததென்றுவகைநலம்பெறத்தந்தைபைங்கழற்கால்
சூடியமகவைக்கைக்கொடுத்திவளுந்தோன்றலோடிவையிவைசொன்னாள். (௮௬)

வேந்தகேளிவனுன்மதலையேதேவவிரதனென்றிவன்பெயர்பல்லோ
ராய்ந்தநூல்வெள்ளங்கடந்தனன்கரைகண்டருந்ததிபதிதிருவருளாற்
பூந்துழாய்மாலைப்போர்மழுப்படையோன்பொன்னடிபொலிவுறவணங்கி
யேந்துநீள்சிலையும்பலகணைமறையுமேனையபடைகளும்பயின்றான். (௮௭)

மகப்பெறுமவரிலொருவரும்பெறாதமகிழ்ச்சியும்வாழ்வுமெய்வலியு
மிகப்பெறுந்தவநீபுரிந்தனைநின்னைவேறினிவெல்லவல்லவரா
ருகப்புறவிவனோடவனியாளுகவென்றோரடிக்கோரடிபுரிந்து
தகப்பெறுமயிலுந்தலைவன்மேலுள்ளந்தகைவுறத்தடம்புனல்புகுந்தாள். (௮௮)

---

* பகீரதி நோக்கிப் பெருந்தகை பெருந்திகைப்பெய்தி என்றும் பாடம்.
† காதலனை என்றும் பாடம்.

மனைவியைக்கண்டுமீள்வும்பிரிந்தவருத்தமெய்த்திருத்தகுகேள்வித்
தனையனைக்கண்டமகிழ்ச்சியாலருக்கன்றன்னெதிருளெனத்தனைப்ப
நினைவினிற்சிறந்ததேர்மிசைப்புதனுநிறைகலைமதியுமேநிகர்ப்பப்
புனைமணிக்கழலானவனெடுந்தனதுபுரமெதிர்கைதொழப்புகுந்தான். (அகூ)

தானுமம்மகனுந்தரியலர்வணங்கத்தங்குநன்னாளிலங்கொருநாட்
டேனுறுந்தொடையலிளவரசனைத்தன்றிகழரியாசனத்திருத்திக்
கானுறுவிலங்கினுயிர்கவர்நசையாற்காற்றெனக்கூற்றெனநடந்து
பானுவின்மகளாங்காளிந்திநதியின்பாரமெய்தினன்விறற்படையோன். (கூ0)

பாசறைமுழுதுமொருபெருங்கடவுட்பரிமளமொல்லெனப்பரப்ப
யோசனையளவுங்கரையிருமருங்குமுயிர்க்குமெல்லுயிர்ப்பெதிரோடித்
தாசர்தங்குலத்துக்கதிபதியளித்ததையலைத்தரணிபர்க்கெல்லா
மீசனுமுருகிக்கண்டிளங்கிளியாவிலங்கிழைபார்கொனீயென்றான். (கூக)

நிருபனதுரைகேட்டஞ்சினளொதுங்கிநின்றுகைநினைவுறக்குவியா
விருதுறைநெறியில்வருநரைநாவாயேற்றுவலெந்தையேவலினென்
றுரைசெயுமளவில்வேட்கையாலுள்ளமுருகிமெய்ம்மெலிந்தொளிகருகி
யரிவையையளித்தோன்பக்கமதடைந்தானவனும்வந்தடிமலர்பணிந்தான். (கூஉ)

பாகனையரசன்குறிப்பினாலேவப்பாகனும்பரதவர்பதியை
யோகையோடிருத்திநின்னுழைவதுவைபுலகுடைநாயகனயந்தான்
றோகைசெய்தவமோநின்பெருந்தவமோதொல்குலத்தவர்புரிதவமோ
வாகுமிவ்வாழ்வென்றுரைத்தனனவனுமாகுமாறவனுடனுரைப்பான். (கூங)

பூருவின்மரபிற்பிறந்தகோமகனென்புன்குலமகள்குயம்பொருந்தன்
மேருவுமணுவுநிறுக்குமாறொக்குமேலினியிவைபுகன்றென்கொல்
பாருவகையினாலாளுதற்கிருந்தான்பகீரதிமகனிவள்பயந்த
சீருடைமகன்மற்றென்செய்வானிசைமின்செய்கைதான்றிருவுளங்குறித்தே. (கூச)

என்னமுன்னிறைஞ்சியிவன்மொழிகொடுஞ்சொலிறையவன்கேட்டலுமிரண்டு
கன்னமுமழற்கோல்வைத்ததொத்தியங்கருகிவேறொன்றையுங்கழறான்
முன்னமுன்மதத்தான்முனியிடுசாபமுடிந்ததென்றுகுலமுற்றி
யன்னமுங்குயிலும்பயிலுநீள்படப்பையத்தினபுரியைமீண்டடைந்தான். (கூரு)

கங்கையாளிடத்திலாதரமெலிந்த *காலையிற்களிந்தவெற்பளித்த
மங்கையாமென்னநின்றபூங்கொடிமேல்வைத்தபேராதரமலியப்
பங்கயானனந்தான்முறைமுறைகுறையும்பான்மதியெனவழகழிந்த
சங்கையான்மைந்தன்வினவலுநிகழ்ந்ததன்மையைச்சாரதிபுகன்றான். (கூசா)

கேட்டவக்கணத்திற்கடற்புறத்தரசைக்கேண்மையோடடைந்திளவரசும்
பாட்டனீயெனக்குப்பெற்றதாய்தானும்பகீரதியல்லணின்மகளே
நாட்டமின்றுனக்கியாததுநிலையிக்ஞாலமுமெம்பியர்ஞால
நீட்டமற்றின்றேதிருமணநேர்வாய்நீதிகூர்நிருபனுக்கென்றான். (கூஎ)

* காலையில் வேலையிற்பிறந்த என்றும் பாடம்.

விரதமுற்றியவாறனைவருங்கேண்மின்மெய்யுயிர்வீடுமன்றளவுஞ்
சரதமுற்றியமெய்த்தாதுவுமூலத்தழலுடன்மீதெழுந்தகைத்தே
யிரதமுற்றியசொன்மகப்பெறாதவருக்கில்லையென்றியம்புநற்கதியுஞ்
சுரதமுற்றியவென்றந்தைதன்பொருட்டாற்பெறுவலென்றின்னதுஞ்சொன்

இவன்மொழிநயந்துகேட்டுழியவையினிருந்ததொன்மனிதரேயன்றித்
தவமுனிவரருந்தேவருங்ககனந்தங்குமாமங்கையர்பலரு
முவகையோடிவனுக்கேற்றபேருரைசெய்தொளிசெழும்பூமழைபொழிந்தா
ரவனிபினிருபர்வெருவருந்திறலானரியசொற்பொருணிலையறிந்தே. (

மெய்ம்மகிழ்கடவுட்பூமழையுடனேவீடுமனெனும்பெயரெய்திக்
கைம்மகிழ்வரிவிற்றாசபூபதியுங்கன்னிகைகாளியுந்தானு
* மொய்ம்மணங்கமழுமன்றல்வேனிலின்வாய்முனிவருங்கிளைஞருஞ்சூழச்
செய்ம்மகிழ்பழனக்குருநிலமுடையான்றிருமணம்விரைவுடன்சேர்ந்தான். (௧௦௦)

பரிமளவடிவப்பாவையையரசன்பாலளென்றொருபுடைநிறுத்தி
யிருபதந்தொழுதுநின்றமாமகனையிதயமோடிறுகுறத்தழுவித்
தருமணங்கமழுஞ்சென்னிமேல்வதனந்தாழ்ந்துமோந்துருகிமுன்றந்தைக்
† குரியபேரிளமைகொடுத்தகோமனுமுனக்கெதி ‡ ரல்லனென்றுரைத்தான். (௧௦௧)

தந்தையர்க்குதவுமுதவியினெனக்குச்சதமடங்குதவினையுனக்கு
மைந்தருக்குதவுமுதவியிற்சிறிதுமாதவஞ்செய்திலேனுதவச்
சிந்தையிற்றுறக்கம்வேண்டுமென்றெண்ணிச்செல்லுமன்றல்லதுன்னுயிர்மேன்
முந்துறக்காலன்வரப்பெறானென்றேமுடிவிலாவொருவரமொழிந்தான். (௧௦௨)

அம்புவியரசன்மாமனுமரசனடிபணிந்தவயவத்தழகா
லும்பரும்வியக்குங்கிளியைமுன்னிறுத்தியொடுங்கினன்வாய்புதைத்துரைத்தா
னெம்பெருமானீகேட்டருளுனக்கேயிசைந்தமெய்த்தவப்புரியிவளை
வம்பவிழ்மலர்மாதென்பதேயன்றிவலைஞர்மாமகளெனக்கருதேல். (௧௦௩)

வாசவனளித்தவிமானமீதொருவன்வசுவெனுஞ்சேதிமாமரபோன்
கேசரனெனப்போம்விசும்பிடை $மனையாள்கிரிகையைநினைந்துடல்கெழுமி
நேசமோடிதயமுருகுமக்கணத்தினினைவறவிழுந்தவீரியமெய்த்
தேசவனளித்தநதியிடைத்தரளத்திரளெனச்சிந்தியதொருபால். (௧௦௪)

ஒருமுனிமுனிவாலரமகளொருத்திமீனமாயுற்பவித்துழல்வா
ளிரையெனவதனைவிழுங்குமுன்கருக்கொண்டுடன்முதிர்காலையிலதனைப்
பரதவர்வலையினகப்படுத்தரியபாலகனொருவனுமிவளு
மிருவருமிந்தமீன்வயிற்றிருந்தார்யமுனைபுரப்பமனுநேரெனவே. (௧௦௫)

மானவர்பதியாம்வசுவினுக்கிவரைமகிழ்வுறக்காட்டலுமகனை
மீனவனெனப்பேர்கொடுத்தனன்கொண்டுமெல்லியலிவளைமீண்டளித்தான்
யானுமின்றளவுமென்மகளென்னுமியற்கையாலினிமையின்வளர்த்தேன்
கானமென்குயில்போல்வந்துமீளவுந்தன்காவலர்குலத்திடைகலந்தாள். (௧௦௬)

---

* மொய்ம்மகிழ்கமழும் என்றும்பாடம்.

† உரிய தன்னிளமை என்றும், ‡ அல்லவென்றுவந்தான் என்றும் பாடம்.

$ மனையாள் கரீடையை நினைந்து என்றும் பாடம்.

வேறு.

என்றுகூறிவிடுத்தனனேந்தலு
மன்றவைக்கணவன்மொழிகேட்டுவந்
தின்றுநற்றினமென்றிளந்தோகையை
மன்றலெய்தி[illegible]லம்வாழ்த்தவே. (௧௦௭)

காளிவந்துகலந்தனள்கங்கைவேய்த்
தோளியும்புயந்தோய்ந்தனன்முன்னமே
வாளிவெம்பரிமாநெடுந்தேருடை
மீளிதானும்விடையவனுதலால். (௧௦௮)

கங்கையின்கரைக்கண்ணுறுகாரிகை
கொங்கையின்பங்குலைந்தபின்மற்றவ
ளெங்கையென்னயமுனைபின்பால்வரு
மங்கையின்பமகிழ்ந்தனன்மன்னனே. (௧௦௯)

வீடுமன்கழல்வேந்தர்வணங்கிட
நாடுநன்னெறிநாளுநடத்திட
நீடுமன்னனுநேரிழைமேன்மலர்த்
தோடுமன்னுசுரும்பெனவீழவே. (௧௧௦)

அன்னநாளிலருக்கனுந்திங்களு
மென்னமைந்தரிருவரையின்றனன்
மன்னனுவிவடிவுகொண்டன்னமெய்க்
கன்னபூரங்கலந்தசெங்கண்ணியே. (௧௧௧)

*சித்திராங்கதன்செப்புநலனுடை
மெய்த்தசீர்த்திவிசித்திரவீரிய
னித்திறத்தரிருவருந்தம்முனு
லொத்தகல்வியராயினருண்மையே. (௧௧௨)

மதிநெடுங்குலமன்னனைநண்பினால்
விதியனந்தரம்விண்ணுலகேற்றினு
னதிபின்மைந்தனுநம்புவிக்கெம்பியே
யதிபனென்றரியாசனத்தேற்றினான். (௧௧௩)

எங்கணுமமிவன்கவர்ந்தானெனக்
கங்குல்வந்தொருகந்தருவாதிபன்
றெங்கன்மாமுடிசூடியவேந்தனை
யங்கையான்மலைந்தாருயிர்கொள்ளவே. (௧௧௪)

---

* ஏடுகளில் ௧௧௨-வது செய்யுள் "சித்திராங்கதன் சித்திர வீரனென், றித்தராதிபன் மைந்த ரிருவருந், தத்த மன்பொடு தம்முன் பதந்தழீஇ, யொத்த கல்விய ராயின ருண்மையால்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

எம்முனன்றியிறந்தனனென்றுதாய்
விம்முநெஞ்சின்மிகுதுனிமாறவே
*தெம்முன்வல்லவிசித்திரவீரனைத்
தம்முன்மீளத்தனிமுடிசூட்டினான். (ககரு)

சிற்பொருட்பரமானபொருட்கெதி
ருற்பவிக்குமுபாயமதென்னவே
விற்படைத்திறல்வீடுமன்வாய்மையாற்
பொற்புறப்புவிபூபதியாளுநாள். (ககசு)

காசிமன்னவன்கன்னியர்மூவருந்
தேசின்மிக்கவர்ச்சேர்வரென்றுள்விட
மாசிறுல்குலமன்னவரீண்டினார்
மூசிவண்டினமொய்ப்பதுபோலவே. (ககஎ)

வரித்தமன்னர்மறங்கெடவன்பினாற்
றிரித்துமெம்பியைச்சேர்த்துவல்யானைநு
தரித்தவில்லொடுந்தன்னிளவேந்தொடும்
விரித்தவெண்குடைவீடுமனேகினான். (ககஅ)

அரவமாநதியன்னையுந்தன்மகன்
வரவறிந்துவழியினைப்பாற்றினாள்
பரவிவந்துபனிமலர்த்†தென்றலை
விரவுநுண்டுளிமீதெறியூதையால். (ககககூ)

கஞ்சவாவிகலைமதிகண்டென
நெஞ்சழிந்துநிருபர்குழாந்தொழ
வெஞ்சராசனவீரனுந்தம்பியு
மஞ்சமேறிமணித்தவிசேறினார். (கஉ0)

குருத்தலந்தனிற்கூறியவஞ்சின
மொருத்தரன்றறிவாருலகோர்பலர்
விருத்தன்வந்தனன்மேலினியேதிவன்
கருத்தெனுமனங்காளையர்கன்றினார். (கஉக)

இருந்தமன்னரிவரிவனொன்றுளம்
பொருந்தமற்றவர்பொற்புடைத்தேசெலாந்
திருந்தநின்றுசெவிலியர்கூறவே
முருந்தவாணகைமூவருந்தோன்றினார். (கஉஉ)

---

* இவ்வடி "தெம்முன்வென்றநற்சித்திரவீரனை" என்று ககஉ-வது செய்யுளின் பாடபேதத்துக்கியைய ஏடுகளிற் காணப்படுகின்றது.

† தென்றலாய் என்றும் பாடம்.

கையின்மாலையிவற்கெனக்கன்னியர்
வெய்யநெஞ்சொடுமின்னெனவந்தவர்
வையமன்னன்வயநிலைநோக்கியே
யையமுற்றனரன்புறுகாதலார். (௧௨௩)

ஏனைவேந்தரெதிரிவரைப்பெருந்
தானைசூழ்மணிச்சந்தனத்தேற்றியே
சோனைமாமதஞ்சோருங்கடதட
யானைபென்னவிளவலொடேகினான். (௧௨௪)

முறையினாலன்றிமொய்ம்பிற்கவர்வதைக்
குறையினாலெனக்கோக்குலங்கூடிவந்
திறைவனோடெதி*ரேற்றவில்வீரரைப்
பிறைமுகக்கணையாற்பிளந்தோட்டினான். (௧௨௫)

முந்துறப்பெறுமூவரொடாடமர்
விந்தைதன்னையும்வேந்தர்கொடுத்தலாற்
சந்தனுப்பெயர்த்தார்முடிமன்னவன்
மைந்தர்தங்கள்வளநகர்மன்னினார். (௧௨௬)

சமரின்முந்தியசாலுவன்மேன்மன
மமரநின்றதறிந்துழியம்பையை
யெமர்களுக்கிஃதியற்கையன்றென்னவே
யமரழிந்தவவனுழைப்போக்கினான். (௧௨௭)

அம்பிகைக்குமம்பாலிகைக்கும்பதி
யெம்பியேயெழிலாலென்றிசைவுறத்
தம்பிதன்னைத்தனஞ்சயன்றன்னெதிர்
வம்பினான்மிகுமாமணஞ்சேர்த்தினான். (௧௨௮)

சென்றவம்பையைத்தீமதிச்சாலுவன்
வென்றுதெவ்வர்கவர்ந்தநின்மெய்த்தொடே
னென்றிகப்பவிவனுழைமீளவு
மன்றல்வேண்டினண்மன்றலங்கோதையாள். (௧௨௯)

கங்கைமைந்தன்கடிமணங்காதல்கூர்
மங்கைதன்னைமறுத்தபின்மங்கையுஞ்
செங்கணீரெழச்சிந்தைசெந்தீயெழச்
சங்கையோடுதன்றாதையைநண்ணினாள். (௧௩0)

வேறு.

தாதைதாளினில்விழுந்துசந்தனுவின்மைந்தனின்னலுரைதந்ததுங்
கோதையாலுறவுகொண்டுகைதரல்குறித்தகோமகன்மறுத்ததும்
பேதைகூறமனநொந்திரங்கியவன்மிக்கநண்பினொடுபின்னையுந்
தூதைபேவிமணமுற்றிரந்தனன்விசும்புலாவுநதிசுதனையே. (௧௩௧)

---

* எற்றவவ்வீரரை என்றும் பாடம்.

போனதூதுவர்வணங்கியிம்மொழிபுகன்றபோதுமொழிபொய்யுறு
மீனகேதனனையென்றுதன்கொடியவிரதமேபுரியும்வீடுமன்
மானவேனிருபன்மகள்குறித்ததிருமன்றல்வன்பொடுமறுத்தலா
னானவாதரவொடாகுலம்பெருகவம்பைதந்தைதனதருளினால். (கசுஉ.)

வரிசையாலுயரநேகமண்டலமகிபர்சொன்னசொன்மறுக்கினும்
பரசுராமனருண்மொழிமறானவனதிருபதத்திடைபணிந்துநீ
யுரைசெய்தாலவனுரைத்தசொல்லின்வழியொழுகிவந்துநின்னையுவகையால்
விரைசெய்மாலைபுனையாதுவீடுமன்மறுத்துமீளவும்விளம்புமேல். (கசுங)

பின்னையெண்ணியபெருந்தவம்புரிதியென்றுகூறியபிதாவையு
மன்னைதன்னையும்வணங்கிநீடுசதுரந்தயானமிசையம்புயப்
பொன்னைவென்றொளிகொள்சாயலாளிருபுறத்துமாதர்பலர்பொலிவுடன்
றன்னைவந்துபுடைசூழவேகியமதங்கிமைந்தனகர்சாரவே. (கசுச)

காசிராசன்மகளென்றுவந்தனளொர்கன்னியென்றுகடைகாவலோர்
வாசநாறுதுளவோனுடன்புகலவருகவென்றபின்மடந்தைபோ
யாசினானுரை* வகுத்துமுற்செயலனைத்துமண்ணலடிதொழுதபின்
பேசினாளவனுமியாமுடிக்குவமிதென்றுமெய்ம்மையொடுபேசினான். (கசுரு)

வரதன்விரமழுவாலநேககுலமன்னர்வேரறமலைந்தகோ
னிரதமீதவளுடன்கணப்பொழுதினேறியையிருதினத்தினில்
விரதமாபரணமெனவணிந்ததிறல்வீடுமன்பதியின்மேவலுஞ்
சரதமாகவெதிர்கொண்டவன்சிரமிவன்பதத்தினிடைசாத்தினான். (கசுசு)

தனக்குவின்மைநிலைபிட்டகோவையொருதமனியத்தவிசில்வைத்துநீ
யெனக்குநன்மைதரவந்தநற்றவமிருந்தவாவெனவிருந்தபின்
கனக்கும்வெண்டரளவடமுலைப்பெரியகரியகண்ணியிவள்காதலா
லுனக்குமன்றல்பெறவுரியளாகுகெனவுவகையோடவனுரைக்கவே. (கசுஎ)

இன்சொலாலவனிகொண்டவெந்தைமுதலின்பமன்றலினிசெய்தநான்
வன்சொலாவிரதமணமுறேனெனமனத்தினால்விரதமன்னினே
னின்சொல்யாவருமறாரெனக்கருதிநீயுரைப்பினுநிகழ்ந்தவிப்
புன்சொலானதினியாதவத்தின்மிகுபுனிதவென்செவிபொறுக்குமோ. (கசுஅ)

களம்புகுந்தவரைமீளவேகுதல்கொடாதகார்முகவினோதமே
ளுளம்புகுந்தினிதிருக்குநற்கடவுளென்னையன்றியிலையுண்மையே
வளம்புனைந்தவநராகபோகமிகுமாதர்மங்கையர்பொருட்டினால்
விளம்புமிந்தமொழியொழிகவென்றனுயிர்வேண்டுமென்னினும்வழங்குவேன். ()

மறுத்திவன்புகல்வீரியன்புயமொராயிரந்துணிசெய்மழுவினான்
வெறுத்தனந்தரமெழுந்திருந்துகரையழியும்வேலைநிகர்வெகுளியன்
கறுத்தநெஞ்சினன்வெளுத்தமேனியனுறச்சிவந்தவிருகண்ணினன்
பொறுத்தவில்லினன்விரைந்துதேர்மிசைபுகுந்தனன்பெரிதுபோர்செய்வான். ()

* தொகுத்து என்றும் பாடம்.

வெருவுடன்றெழுதுகங்கைமைந்தனடிவிழவுஞ்சினமிகுத்தலா
லுருவுடன்றனியிருக்குநீள்விரதம்வழுவிநானரகமுறுவதிற்
குருவுடன்பொருதுமடிதனன்றெனநினைந்துதாலமுயர்கொடியினன்
செருவுடன்றிடுதலுன்னியேறினனமைந்துநின்றதொருதேரின்மேல். (கசக)

அவ்விராமனுமறுத்தமன்னவனுமைபிரண்டுதினமிகலுடன்
வெவ்விராவுமொழியாதுவெஞ்சமர்விளைத்தகாலையடல்வீடுமன்
கைவிராயசிலையோடுமெய்வலிகவர்ந்துமுன்றளர்வுகண்டபோ
ரவ்விராமனிகரென்னுமாறிவனையஞ்சிநின்றெதிரடர்க்கவே. (கசஉ)

ஓடிமீளமழுமேவுபாணிதனதூர்புகுந்தனனுவந்துபல்
கோடிபேரரசர்துதியெடுக்கநதிகுமரனுந்தனகர்குறுகினு
ஞ்டிமாலைபிடவந்தகாசிபதிநல்குமொல்குமிடைநவ்வியும்
வாடிவாடியினியமையுமென்றுதவவனமடைந்தனண்மடங்கியே. (கசங)

வெம்பையாடரவமாயவென்றிடுவிகங்கராசனெனவீடுமன்
றம்பையாடமரின்மாயவெல்லவலகூரனுகுவனியானெனு
வம்பைமோதுமுலைவம்பைவீசுகுழல்வம்பைமன்னுமெழில்வரிகொள்கூ
ரம்பைமானும்விழியம்பையென்பவளருமரியமாதவமியற்றினள். (கசச)

தாளிரண்டினிலொர்தாண்மடக்கியொருதாளில்வைத்தமைசமைத்தபொற்
றோளிரண்டினையுமீதெடுத்துநனிதொழுதியக்கிதுணையடியிலே
வாளிரண்டனையவிழிமலர்த்திநிறைவாவிநீரினிடைவானுளோர்
நாளிரண்டதனொடைபிரண்டுமொருநாளெனும்படிநடக்கவே. (கசரு)

முயலிலாமதிமுகத்தினளொருவர்முயலருந்தவமுயன்றபின்
புயலிலாதமினலொத்தமெய்பிலொளிபுரியியக்கிதன தருளினன்
*மயிலனுடனதுவடிவகற்றியிகல்பாகசேனனதுவயினிடைச்
செயலிலாறுமுகனிகரெனத்தகுசிகண்டியாயினள்சிறக்கவே. (கசசு)

மணிமுடிக்குரியநிருபனுங்கடிகொண்மாதர்தங்களைமகிழ்ச்சியா
லணிபெறத்தழுவியின்பவேலையினழுந்திநாள்பலகழிந்தபின்
பிணிகளுக்கரசெனும்பெரும்பிணிபிணித்துவாழ்வினிநணித்தெனப்
பணிமுடிப்புவிபிரங்கவைகியொருபற்றிலாதநெறிபற்றினன். (கசஎ)

குருகுலச்சருக்க முற்றிற்று.
ஆகச் செய்யுள் கருகு.

சம்பவச்சருக்கம்.

—:o:—

அரியகங்குலினன்னைதன்வடிவுகொண்டகைகையாகியநங்கை
பரிவுபொங்கவந்தெடுத்தணைத்துவந்துளம்பரிந்துடன்பாராட்ட
வருகுமாமுலைப்பாலுடனவளுபிருண்டமுமுருகார்மெய்
கரியகோவலன்செய்யதாண்மலர்களென்கருத்தைவிட்டகலாவே. (க)

* மயலிலாடனது என்றும் பாடம்.

இறந்தமைந்தனுக்குரியதென்புலத்தவர்யாவருங்களிகூரச்
சிறந்தநான்மறைவிதியினுலகியல்செய்தபின்செழுந்திங்கண்
மறைந்தயாமினிநிகரெனக்குருகுலமன்மயக்குறுமெல்லை
யறந்தவாவகை* துறந்தவாளரசனுக்கன்னைமற்றிதுசொன்னாள். (௨)

மைந்தகேட்டிநின்றுணைவன்வானடைந்தபின்மதிமுதலெனத்தக்க
விந்தமா†மரபரும்பனிப்பகைச்சிரத்தெழிலியொத்ததுமன்னோ
முந்தைநான்மறைமுதலியநூல்களின்முறைமைநீயுணர்கிற்றி
யெந்தநீர்மையினுய்வதென்றறிகிலேனிடரினுக்கிருப்பானேன். (௩)

ஈண்டுதேவரநீதியிற்கொழுந்தியரெழின்மகப்பெறநின்னால்
வேண்டுமாலிதுதாயர்சொற்புரிதலின்விரதமுங்கெடாதென்ன
மூண்டுவானுருமெறிந்தபேரரவெனமுரிந்திருசெவிபொத்தி
மீண்டுமாநதிவயின்மிசைப்புரியினென்விரதமுந்தபுமென்றான். (௪)

மழுவெனும்படையிராமனான்மனுகுலமடிந்தழியவர்தத்தம்
பழுதின்மங்கையர்முனிவரரருளினாற்பயந்தனர்மகவென்ப
ரெழுதுநன்னெறிமுறைமையின்விளைப்பதேயியற்கையென்றிருகையாற்
றொழுதுசொன்னபின்மனந்தெளிந்தன்னையுந்தோன்றலுக்குரைசெய்வாள். (௫)

பருதிதந்தமாநதிமருங்கொருபகற்பராசரன்மகப்பேறு
கருதிவந்துகண்டென்னையுமெனதுமெய்க்கமழ்புலவையுமாற்றிச்
சுருதிவாய்மையின்யோசனைப்பரப்பெழுசுகந்தமுமெனக்கீந்து
வருதிநீயெனப்பணியினான்மறைத்தொருவண்டுறைக்குறைசேர்ந்தான். (௬)

முரணிறைந்தமெய்க்கேள்வியோனருளினான்முஞ்சியும்புரிநூலு
மிரணியஞ்செழுங்கொழுந்துவிட்டனவெனவிலங்குவேணியுந்தானுந்
தரணியெங்கணும்வியாதனென்றுரைகெழுதபோதனமுனியப்போ
தரணிபின்புறத்தனலெனவென்வயினவதரித்தனனம்மா. (௭)

சென்னியாலென்னைவணங்கியாதொருபகற்சிந்திநீசிந்திக்கு
முன்னியானருகுறுவலென்றுரைசெயமுனிமகன்முனிமீளக்
கன்னியாகெனவிதித்துடன்கரந்தனன்கைபறுகணிட்டன்றன்
பன்னியானவரிடத்தினிலவன்வரிற்பலித்திடுநினைவன்றே. (௮)

எனக்குமைந்தகேணினைவிதுன்றுணைவனென்னேவலுமருனிவ்வா
றுனக்குநெஞ்சுறவருங்கொலோவறிகிலேனுண்மைநீயுரையென்ன
மனக்கிசைந்ததென்றவன்வியந்தேகலும்வழுவறமனஞ்செய்யக்
கனக்கருங்குழன்மகிழ்வுறமுதற்பெறுகாதன்மைந்தனும்வந்தான். (௯)

தொழுதுநெற்றியில்விபூதியாலன்னைதன்றுணையடித்துகணீக்கி
விழுதுடைத்தனியாலெனவிருந்ததொல்வியாதனைமுகநோக்கிப்
பழுதுபட்டதிக்குருகுலமீளநின்பார்வையாற்கடன்ஞால
முழுதுமுய்த்திடுமகவருளெனப்பெருமுனியுமக்குறைநேர்ந்தான். (௧0)

---

* துறந்துவாழரசனுக்கு என்றும் பாடம்.
† மரபரும்பனியச்சிரத்து என்றும் பாடம்.

அழைத்தமாமகனப்பொழுதவருழையனுகுவமெனப்போகத்
தழைத்தநெஞ்சினளனந்தரமிழந்தபொற்றாலிமாதரைத்தேற்றி
யுழைத்ததன்பழமுன்னுளோர்பலருலகியற்கையுமுறக்காட்டி
யிழைத்தபாவையினிருந்தவர்க்கந்நினைவிசையுமாறிசைவித்தாள். (௧௧)

கனையுநீடிருளணைமிசையிருவருங்கணவனைமறவாது
நினையுநெஞ்சினர்பயின்றுழிப்புன்மணநிறைந்தொளிகுறைந்தொல்கப்
புனையுமெய்பொடும்பொழுதொடும்புரிதவன்போதலுமிகவஞ்சி
யனையகாலையிலம்பிகைமலர்ந்திலளப்பகமொருக்காலும். (௧௨)

பராசரன்றருமுனிநினைவொடுகருப்பதித்துமீளவுஞ்சென்று
நிராசைநெஞ்சினனவசரத்தவளிடைநிகழ்ந்தமெய்க்குறிதன்னாற்
கராசலம்பதினாயிரம்பெறுவலிக்காயமொன்றினிற்*பெற்றோ
ரிராசகுஞ்சரம்பிறந்திடும்விழிப்புலனில்லைமற்றதற்கென்றான். (௧௩)

மீளவுந்தலைப்புதல்வனைநோக்கியேமிகமகிழ்வுறுவன்னை
தூளவண்சடைத்தோன்றலம்பாலிகைசுதனொருவனைநல்க
நாளபங்கயப்பதியெனமதியெனநலந்திகழ்கவிகைக்கீ
ழாளவம்புவியவனெனநினைந்தினியளிக்கவென்றருள்செய்தாள். (௧௪)

கிளைத்திடுந்துகிர்க்கொடிநிகர்சடையவன்கேட்டுநண்ணிடையேபோ
லிளைத்திடுங்கவின்மெய்யுடையவண்மனையெய்தலுமிவனைக்கண்
டுளைத்திடுங்கருத்துடன்வெரீஇவருபயனொன்றையுநினையாது
விளைத்திடுங்கருவிளையுமுன்மடவரன்மெய்யெலாம்விளர்த்திட்டாள். (௧௫)

அருந்தபோநிதியவளிடத்தினுங்கருவருளியக்கணத்தேகி
யிருந்தவாறுதன்னன்னையோடினிதுரைத்திமையவனெனச்சென்றான்
பெருந்தராதலந்திறலினாலொருதனிபெறுமுறையவன்பெற்ற
முருந்தவாணகைமருட்சியால்விளர்த்திடுமுழுவதுமுடலென்றே. (௧௬)

வேதபுங்கவனகன்றுழிவலியுடைவிழியின்மைந்தனும்யாரும்
பாதபங்கயந்தொழத்தகுந்திறலுடைப்பாண்டுவென்பவன்றானும்
பூதலம்பெருங்களிப்புறக்குருகுலம்பொற்புறப்போழுதுற்றுச்
சாதராயினரவ்விருமகவையுஞ்சத்தியவதிகண்டாள். (௧௭)

காணலும்பெரிதுவகையற்றின்னமுங்கருதுதுமெனவெண்ணச்
சேணடைந்தமாமுனிவரன்வருதலுஞ்சிந்தனையுறச்சொல்ல
நாணலந்திகழம்பிகையிடத்திவனண்ணலுமவளஞ்சிப்
பூணலம்பெறுதோழிமற்றொருத்தியைப்பூவணையணைவித்தாள். (௧௮)

வந்தகாலையின்மனங்கலந்தநங்கநூன்மரபின்மெய்யுறத்தோய்ந்து
சந்தனாகருப்பரிமளத்தனதடந்தயங்குமார்பினின்மூழ்க
விந்திராதிபர்போகமுற்றிசைதலுமின்பமுற்றியபின்ன
ரந்தணாளனவ்விரவிடைமீளவந்தன்னையோடுரைசெய்வான். (௧௯)

*பொற்றோளிராசகுஞ்சரம் என்றும் பாடம்.

அம்பிகைக்கொடிதோழியைவிடுத்தனளவள்புரிதவந்தன்னா
னும்பரிற்பெறுவரத்தினாற்றருமன்வந்துதித்திடும்பதம்பெற்றாள்
வெம்படைத்தொழில்விதுரனென்றவன்பெயர்மேலினிமகவாசை
யெம்புணர்ப்பினாலொழிகெனவனநெறியேகினன்விடைகொண்டே. (௨௦)

மருவருங்குழற்றாசிபெற்றெடுத்தவிம்மைந்தனுமுதற்பெற்ற
விருவருங்குருகுலப்பெருங்கிரிமிசையிலங்குமுக்குவடென்னப்
பொருவருந்திறற்படைகளுங்களிறுதேர்புரவியும்புவிவேந்தர்
வெருவரும்படிபலகலைவிதங்களும்வீடுமனிடங்கற்றார். (௨௧)

ஆனதிக்கிருநாலும்வந்தடிதொழவம்பிகைமகன்றன்னை
வானதித்திருமகனொருதினத்தினின்மங்கலமுடிசூட்டிப்
பானிறத்திறற்பாண்டுவேசேனைபின்பதிமுழுமதிமிக்க
கானிறத்தொடைவிதுரனேயமைச்சனிக்காவலற்கெனவைத்தான். (௨௨)

நதியளித்தவனேவலிற்றாதர்போய்நயந்துடன்காந்தார
பதியளித்தமெய்க்கன்னியைத்தருகபூபதிக்கெனமணநேர்ந்தார்
மதியளித்ததொல்குலத்தவன்விழியிலாமகனெனத்தமர்சொல்ல
விதியளித்ததென்றுளமகிழ்ந்தனள்வடமீனெனத்தகுங்கற்பாள். (௨௩)

இமைத்தகண்ணிணைமலர்ந்தினிநோக்கிலேன்யாரொருவரையென்று
சமைத்தபட்டமொன்றினிற்பொதிபெதும்பையைத்தந்தையுந்தனையோரு
மமைத்தருங்குலமுனிவருமறைமுறையருங்கடிவிளைத்திட்டார்
சுமைத்தராபதிமதியிவளுரோகிணியென்னவேதொழத்தக்காள். (௨௪)

புந்தியாலருங்கலைமகள்பொற்பினாற்பூந்திருப்புனைகற்பா
லந்திவாயருந்ததிபெரும்பொறையினாலவனிமானிகரென்னக்
குந்திபோசரிற்சூரனென்பவன்மகள்குருகுலந்தழைத்தோங்க
வந்தியாவரும்பிரதையென்றடிதொழமதியெனவளர்கின்றாள். (௨௫)

அந்தமாதிளமடமயிலெனவிளையாடுமெல்லையிலென்று
முந்தமாதவம்புரிதுருவாசமாமுனியுமவ்வழிவந்தான்
வந்தமாதவனடிபணிந்திவனைநீவழிபடுகெனத்தந்தை
யிந்தமாதவன்மொழிப்படிபுரிந்துகுற்றேவலின்வழிநின்றாள். (௨௬)

கழங்குகந்துகமம்மனையாடலுங்கனகமென்கொடியூசல்
வழங்குதண்புனலாடலுந்துறைவரிவண்டலாடலுமாறி
முழங்குசங்கினந்தவழ்தருபனிநிலாமுன்றிலுஞ்செய்குன்றுந்
தழங்குசெஞ்சுரும்பெழுமலர்ச்சோலையுந்தனித்தனிமறந்திட்டாள். (௨௭)

தொழுதுதாளிணைச்செய்யபஞ்செழுதினுந்தோளிணைச்செழுந்தொய்யி
லெழுதினும்பொறாவிளமையண்முதுக்குறைந்தியாதியாதுரைசெய்தான்
முழுதுநெஞ்சுறுகோபமேமிகமிகுமுனிவரன்மகிழ்வெய்தப்
பழுதிலன்புடனியற்றினளொன்றுபோற்பன்னிருமதிசேர. (௨௮)

பிரதைதன்னையத்தபோநிதிவருகெனப்பெரிதுவந்தெனதேவ
லரிதெனுதுநீயியற்றினைநெடுங்கடலவனிமேல்யார்வல்லார்
தெரிவைகேளெனச்செவிப்படுத்தொருமறைதேவரில்யார்யாரைக்
கருதிநீவரவழைத்தனையவரவர்கணத்துநின்கரஞ்சேர்வார். (உகூ)

தம்மையொப்பதோர்மகவையுந்தருகுவர்தவப்பயனெனப்பெற்ற
விம்மறைப்பயனிம்மையினுனக்குவந்தெய்தியதெனக்கூறி
யம்முனிப்பெருங்கடவுளுந்தபோவனமடைந்தனனவளுந்தன்
செம்மனத்தொடுபயின்றரமகளெனச்செல்வமாமனைசேர்ந்தாள். (௩௦)

ததையும்வண்டிமிர்கருங்குழற்கன்னியத்தனிமறைப்பயன்காண்பான்
சுதைநிலாவெழுமாளிகைத்தலத்திடைதூநிலாவெழுமுன்றி
லிதையபாமலர்களிக்கநின்றன்பினோடியம்பனுமெதிரோடி
யுதையபானுவுமலர்மிசையளியெனவொருகணந்தனில்வந்தான். (௩௧)

செம்பொனுடையுங்கவசகுண்டலங்களுந்திகழ்மணிமுடியாரம்
பைம்பொனங்கதம்புனையவயவங்களும்பவளமேனியுமாகி
வம்பறுதமெய்ப்பதுமினியெனச்செழுமறைநுவன்மடப்பாவை
யம்புயானனமலர்வுறக்கரங்களாலணைத்தனனழகெய்த. (௩௨)

கன்னிகன்னியென்கைதொடேன்மடந்தையர்கற்புநீயறிகிற்றி
யென்னமெய்குலைந்தலமரநாணினுளிதயமும்வேருகி
யன்னமென்னடையஞ்சினளரற்றலுமருதுரன்விடப்போய்நின்
றுன்னியென்னைநீயழைத்ததென்பெறவெனவருத்தனனுரைசெய்வான். (௩௩)

உருக்கொள்சாயையுமுழையுமங்கறிவுறுதொளித்துநான்வரவேநீ
வெருக்கொளாவெனைமறுத்தனையுனக்குமுன்மெய்ம்மறையுரைசெய்த
குருக்களென்படானென்படாதரிவைநின்குலமெனக்கொடித்திண்டே
ரருக்கன்மெய்யினுமனமிக்கொதித்தனனுயிரமடங்காக. (௩௪)

உனையளித்தவன்முனியுமென்றஞ்சனியுடன்படுமுணர்வானல்
வினையளித்ததென்றனைதியேலின்பமும்விழைவுறும்படிதுய்த்தி
யெனையளித்ததொல்லதிதியினுனக்கிசையெய்துமாறிகன்மைந்தன்
றனையளித்திமற்றென்னினுமிருநிலந்தாடொழத்தக்கோனே. (௩௫)

ஆயிரங்கரத்ததிபதிபுகழ்ந்துநாறுயிரமுகமாகப்
போயிரந்திவையுரைத்தபின்மதர்விழிப்புரிவுமரனுநல்கி
வேயிருந்தடந்தோளிடந்துடித்திடமெல்லியன்மதன்வேதப்
பாயிரங்கொலென்றையுறவவனொடும்பனிமலரணைசேர்ந்தாள். (௩௬)

தினகரன்சுடர்வடிவமுமமிர்தெழுதிங்களின்வடிவாகத்
தனதடந்திருமார்புறத்தழீஇயபின்றையறன்னினைவெய்த
மனமகிழ்ந்ததும்வந்ததுமணந்ததும்வரங்கொடுத்ததுமெல்லாங்
கனவெனும்படிகரந்தனன்பெருந்தகைக்கன்னியுங்கருக்கொண்டாள். (௩௭)

அந்தியாரழலெனப்பரிதியினொளியடைந்தபி*னணிமாடக்
குந்திபோசன்மாமடமகளெழினலங்கொண்டகொள்கையளாகி
யிந்திராதிபரவரவர்முகமலர்ந்திரந்தனதரத்தக்க
மைந்தனைவனொருவனைப்பயந்தனண்மாசிலாமணியென்ன. (௩௮)

சூரன்மாமகள்சூரனதருளினாற்றுலங்குசன்னிகையாகி
வாரமாமணிக்கவசகுண்டலத்துடன்வருபகன்முகநோக்கிப்
பாரமாமரபினிற்பிறந்தவர்மொழிப்பழுதினுக்கழுதஞ்சிப்
பூரமாநதிப்பேடகத்திடைநனிபொதிந்தொழுக்கினண்மன்னே. (௩௯)

குஞ்சரத்திளங்கன்றெனச்சாபவெங்கோளரியெனப்பைம்பொற்
பஞ்சரத்திடைவருதிருமதலையைப்பகிரதியெனுமன்னை
§யஞ்சரத்திரைக்கரங்களாலெடுத்தெடுத்தசையவேதாலாட்டி
வெஞ்சரச்சிலைச்சூதநாயகன்பதிமேவுவித்தனளன்றே. (௪0)

கோடகப்படவரும்புனல்விழைவினாற்குளிர்துறைமருங்குற்றோர்
பேடகத்திடையொழுகியதினபதிபெருங்குமரனைக்கண்டு
சூடகக்கையம்புயமலரிராதைபுஞ்சூதபுங்கவன்றானு
மாடகக்குலமடைந்ததொத்தரும்பெறலாதரத்தொடுகொண்டார். (௪௧)

அதிரதன்றிருமனையினில்விழைவுடனரும்பியபணிக்கற்றை
மதியெனும்படிவளர்ந்துதிண்டிறல்புனைமழுவுடைவராமன்
பதயுகந்தொழூஉவரிசிலைமுதலியபலபடைகளுங்கற்றுக்
கதிரவன்றருகன்னனென்றுலகெலாங்கைதொழுங்கவின்பெற்றான். (௪௨)

வேறு.

கன்னற்பயந்தகதிர்வெம்முலைக்கன்னிதன்னை
முன்னர்ப்பயந்தோன்முகவோலையுவகையோடு
மன்னர்க்கெழுதமடப்பாவைவரிக்குமென்று
‡சென்னற்படைவேன்முடிமன்னவர்சென்றுசேர்ந்தார். (௪௩)

உருவஞ்சிறந்துபலகோளுமுதிக்குமேனு
மருவுங்குமுதமதிகண்டுமலருமாபோற்
பருவஞ்செய்பைம்பொற்கொடியன்னவள்பாண்டுவென்னு
நிருபன்றனக்கேமணங்கூர்பெருநேயமுற்றாள். (௪௪)

தானேயுவந்துதனித்தார்புனைதையல்வென்றி
யானேறனையானுயிர்க்காரமிர்தானபின்னர்
யானேதருவனெனமத்திரராசன்ல்க
பானேயனையவிழியாளைவதுவைசெய்தான். (௪௫)

---

* அமருண்கட் என்றும்பாடம்.

§ சஞ்சரத்திரை என்றும்பாடம்.

‡ சென்னற்படிவேல் என்றும்பாடம்.

எண்ணுற்றசூரனிகன்மத்திராசனென்ன
மண்ணுற்றசீர்த்திவயமன்னர்மகளிரோடுங்
கண்ணுற்றகானில்விளையாடல்கருதியம்பொன்
விண்ணுற்றசாரலிமையப்புறமேவினனே. (சசு)

கானத்திலுள்ளகலைமானினங்*காட்சியாமா
வேனத்திரள்வெம்புலியெண்குடன்யாளிசிங்கந்
தானப்பகடுமுதலாயசனங்களெல்லா
மானச்சரத்தாற்கொலைசெய்தனன்வாகைவில்லான். (சஎ)

மெய்ப்பிற்றெறித்தகுருதித்துளிமேருவில்வி
சையத்தலர்ந்தகமழ்குங்குமத்தாதுமானக்
கையிற்சிலையோடுலவுங்கழற்காளைகேதம்
பையத்தணித்தானிமநாகபவனனென்பான். (சஅ)

பொன்னங்கழலானெதிரவ்விடைப்போகம்வேட்டு
மன்னுங்கலையும்பிணைமானுமகிழ்ச்சிகூர
மின்னுங்கணையாலிவனெய்திடவீழ்ந்தபோதின்
முன்னின்றதந்தவுயிர்வந்தொர்முனிவனாகி. (சகூ)

நாரிக்கொருகூறரனார்முதனல்கவெய்த
வேரிக்கணையான்மிகநொந்துழிவேடமாறிப்
பூரித்தகாமநலமெய்துபொழுதுநின்கைச்
சோரிக்கணையாலறையுண்டுயிர்சோர்ந்துவீழ்ந்தேன். (ருo)

என்போலவின்பத்திடைநீயுமிறத்தியென்று
வன்போடிறந்தான்முதற்கிந்தமனானபேரோன்
றன்போன்மகிழ்நனுடனேசெந்தழலினெய்திப்
பின்போயினன்மென்பிணையானவப்பேதைதானும். (ருக)

நினைவற்றசாபநிலைபெற்றபினெஞ்சின்வேறோ
ரினைவுற்றுநன்மையிதுவேயினியென்றுதேறி
†மனைவைத்தகாதன்மடவாருடன்மன்றல்வேந்தன்
||முனைவைத்தவாய்மைமுனிக்கானமுயன்றுசேர்ந்தான். (ருஉ)

காண்டற்கரியமணிப்பைம்பொற்கலனொடாடை
வேண்டற்கரியவிடயங்களின்வேடமாற்றித்
தீண்டற்கரியதிருமேனியன்றேவராலும்
பூண்டற்கரியபெருமாதவம்பூண்டுகொண்டான். (ருங)

உற்றுப்புறத்துப்பகையாடியுடன்றவெல்லாஞ்
செற்றுப்புவியிற்றனியாழிசெலுத்துநீரான்
பற்றற்றயோகப்படையாலுட்பகைகளாறு
முற்றத்துறந்துபெருஞானமுதல்வனானான். (ருச)

---

* கற்கியாமா வென்றும்பாடம்.

† வனைவற்றகாதல் என்றும்பாடம்.

|| முனைவற்றவாய்என்றும்பாடம்.

ஆரக்குழம்பிலளைந்தாரமணிந்துவிம்மும்
பாரக்குசங்கள்பலதைவரும்பான்மைநீங்கி
நாரக்கமலகரசோதிநகங்கண்மீள
வீரக்குசங்கள்கிளிக்குந்தொழிற்கேற்றவாலோ. (ருரு)

நாமக்கலவிநலங்கூரநயந்துநாளுங்
காமக்கனலைவளர்க்கின்றகருத்துமாற்றித்
தாமக்குழலாரிருவோரொடுதானுமொன்றி
யோமக்கனலேவளர்த்தானுணர்வுண்மைகண்டான். (ருசு)

இவ்வாறரியதவநாடொறுமேறுமெல்லைக்
கைவாளொழிந்துசமித்தேந்தியகாவன்மன்னன்
மைவாணெடுங்கண்வரசூரன்மகளைநோக்கிச்
செவ்வாய்மலர்வான்புவிமேலுறைதெய்வமன்னான். (ருஎ)

பூந்தார்வியாதமுனிதாளிணைபோற்றியன்பு
கூர்ந்தார்வமுற்றியவன்பால்வரங்கோடலெய்திக்
காந்தாரிநூறுமகவானகருப்பமொன்று
வேந்தாதரிக்கத்தரித்தாள்வடமீனையொப்பாள். (ருஅ)

கல்லாமழலைக்கனியூறல்கலந்துகொஞ்சுஞ்
சொல்லாலுருக்கியழுதோடித்தொடர்ந்துபற்றி
மல்லார்புயத்தில்விளையாடுமகிழ்ச்சிமைந்த
ரில்லாதவர்க்குமனைவாழ்வினினிமையென்னும். (ருகூ)

மெய்தானம்வண்ணமவிரதந்தழல்வேள்விநாளுஞ்
செய்தாலுஞாலத்தவர்நற்கதிசென்றுசேரார்
மைதாழ்தடங்கண்மகவின்முகமன்னுபார்வை
யெய்தாதொழியிற்பெறுமின்பமிவணுமில்லை. (சூ0)

மென்பாலகரைப்பயவாதவர்மெய்ம்மையாகத்
தென்பாலவர்தம்பசித்தீநனிதீர்க்கமாட்டா
ரென்பானிகழ்ந்தவினையாலிடரெய்திநின்றே
னின்பாலருளுண்டெனினுய்வனெடுங்கணல்லாய். (சூக)

இல்வாழ்பவர்க்குமடவாரலதியாவரின்ப
நல்வாழ்வுதேசுபுகழ்யாவுநடத்துகிற்பார்
தொல்வானவரின்மறையோரிற்றுறக்கபூமி
செல்வார்பெறும்பேறினிநீயருள்செய்தியென்றான். (சூஉ)

பொற்பாவைகேள்வன்மொழிகேட்டலும்பொன்றநாணிச்
சொற்பாலவல்லாப்பழிகூருரைசொல்வதென்னே
வெற்பார்நதிகள்சிறுபுன்குழிமேவினன்றோ
விற்பாலவர்க்குப்பிறர்மேன்மனமேற்பதென்றாள். (சூங)

பின்னும்பலகால்*வருட்டிப்பிறர்பெற்றிகாட்டி
மன்னன்புகலமடமாதுமறுக்கமாட்டாள்
கன்னன்பிறந்ததொழியச்செழுங்கன்னியாகி
முன்னம்பெறுமாமறைமேன்மைமொழிந்திட்டாளே. (சூச)

மருமாலைவல்லியுரைகேட்டுமகிழ்ச்சிகூரும்
பெருமாதவத்தோன்பணித்தேவியபின்னர்முன்னர்த்
தருமாதிபனைக்கருத்தான்மடத்தையலுன்னி
யருமாமறையாலழைத்தாண்மற்றவனும்வந்தான். (சூரு)

வந்தித்ததெய்வமெதிர்வந்துழிமன்னுகேள்வற்
சிந்தித்தசிந்தையினளாய்மலர்ச்சேக்கைசேர்ந்து
குந்தித்தெரிவைநிறைமாமதிக்கூட்டமுற்ற
வந்தித்தெரிவைநிகரென்னவழகின்மிக்காள். (சூசா)

வேறு.

சிவமுறமுகூர்த்தம்வாரந்தினந்திதிகரணம்யோக
நவமெனவழங்குகோளுநன்னிலைநின்றபோதி
லவனியையொருகோலோச்சியாளுமென்றறிவின்மிக்க
தவநெறிமுனிவர்கூறப்பிறந்தனன்றருமன்மைந்தன். (சூஎ)

உதிட்டிரன்பிறந்தகாலையுலகினிலுயர்ந்தோர்யாரும்
வதிட்டனைமுதலாவெண்ணுமுனிவரும்வானுளோரு
நிதிப்பயன்பெற்றார்போலநேயமோடுவகைகூர்ந்தார்
மதித்தனநிமித்தம்யாவுமங்கலநிகழ்ந்தவன்றே. (சூஅ)

தண்பிறையெழுச்சிகண்டசலநிதியெனவேமைந்தன்
பண்புடைவதனநோக்கிப்பார்த்திவன்பாண்டுவென்பான்
கண்பனிதுளிப்பநெஞ்சங்கனிந்தினிதுருகமேனி
வண்புளகரும்பமேன்மேல்வரம்பிலாமகிழ்ச்சிகூர்ந்தான். (சூகூ)

அற்றனடுபரமெல்லாமருந்தவப்பயனுன்மைந்தற்
பெற்றனள்குந்தியென்னும்பேருரைகேட்டவன்றே
யுற்றனள்பொறாமைகல்லாலுதரமுட்குழம்புமாறு
செற்றனடனதுகேடுமாக்கமுஞ்சிந்தியாதாள். (எ0)

மையறுசுபலன்கன்னிவயினிடைக்கருப்பஞ்சேரப்
பையொடுகுருதிபொங்கப்பார்மிசைவிழுந்ததாகச்
செய்யவன்விழுந்ததிக்கிற்செக்கர்வானென்னச்சென்று
மெய்புடையரியகேள்விவேள்விகூர்வியாதன்கண்டான். (எக)

சஞ்சலமானகோசத்தசையினைத்தாழிதோறு
மெஞ்சலவாகநூறுகூறுசெய்திழுதிலேற்றி
நெஞ்சலர்கருணையாளனின்றவக்குறையுஞ்சேர்த்தி
யஞ்சில்வார்குழலியாகென்றாங்கொருகடத்தில்வைத்தான். (எஉ)

* வருந்தி என்றும் பாடம்.

கருவுறுதாயைநோக்கிக்கையறுமென்றுகன்றி
வெருவுறல்கற்பின்மிக்காய்வேறுசெய்தசைகள்யாவு
முருவுறநிரம்பித்தாமேயுறப்பவிப்பளவுங்கையான்
மருவுறல்வழுவுறாதென்வரமெனவரதன்போனான். (௭௩)

காம்பெனநிறத்ததோளாள்கருவயிற்றிருப்பதொப்பத்
தேம்பயினறுநெய்பெய்தகலங்களைச்சேமமாக
வாம்பரிவுடனேயாற்றியிற்றளையடைந்துவைகும்
பாம்பெனப்பருவநோக்கியிருந்தனள்பழுதிலாதாள். (௭௪)

ஈண்டுறுநிகழ்ச்சிகேட்டேயாதவன்மகளைநோக்கிப்
பாண்டுமனிரந்துபல்காற்பணித்தலும்பவனன்றன்னை
மீண்டுமம்மறையாலுன்னியழைத்தனள்விரைவினோடி
யாண்டுவந்தவனும்பூத்தகொடியனையாகந்தோய்ந்தான். (௭௫)

நெஞ்சுறமணந்துமீளநெடுங்கலைவாகனேகச்
செஞ்சுடருச்சியெய்திச்சிறந்ததோர்முகூர்த்தந்தன்னி
லஞ்சனையளித்தபொற்றோளனுமனேயுவமையென்ன
வெஞ்சினவீமன்றன்னைப்பயந்தனள்விரதமிக்காள். (௭௬)

தண்பரிமளமென்சாயற்றந்தையுந்திசைகடோறு
மெண்பெறுமுயிர்கட்கெல்லாமிதமுறுபொலிவின்வீச
நண்புடையனலன்றானுநலமிகுநண்புதோன்றப்
பண்புறவலம்வந்தோங்கிப்பரிவுடன்விளக்கஞ்செய்தான். (௭௭)

அன்னநாளனிலன்மைந்தன்பிறந்தனனுகவற்றை
முன்னைநாளருக்கன்வேலைமுழுகியமுகூர்த்தந்தன்னி
லின்னநாளுருவமுற்றியெழில்பெறுமென்றுமுன்னோன்
சொன்னநாள்வழுவுறாமற்சுயோதனன்றோன்றினானே. (௭௮)

வாரியினதிர்ந்துவிம்முமங்கலமுழவமேன்மே
லோரியின்குரலாலோதையொடுங்கினவிடங்கடோறும்
பாரியகுலத்தோர்கண்ணினுவகைநீர்பனிக்குமுன்னே
சோரியந்தரத்துநின்றுஞ்சொரிந்ததுசோனைமேகம். (௭௯)

கோள்களினிலையாற்றீமைகொண்டனமுகூர்த்தந்தன்னிற்
றோள்களிற்கொடியமற்றைச்சிறுவருஞ்சேரவோரோர்
நாள்களிற்பிறந்தபின்னர்நங்கையுமொருத்திவந்தா
டோள்களிற்கழையைவென்றதுச்சளையென்னும்பேராள். (௮௦)

பின்னியபுதல்வராலும்பிறந்தமென்புதல்வியாலுந்
துன்னியமகிழ்நனாலுந்துலங்கியசுபலன்பாவை
தன்னிகர்பரிதியாலுஞ்சதவிதழாலுஞ்செம்பொற்
கன்னிகையாலுஞ்சோதிகலந்தசெங்கமலம்போன்றாள். (௮௧)

பான்மொழிக்குந்திமீண்டும்பாண்டுவினைவல்பெற்று
வான்மொழிமறையாலுன்னிவானவர்க்கரசைநோக்க
மேன்மொழிவதுமற்றென்கொல்விடுவனோவிரைவின்வந்தத்
தேன்மொழித்தெரிவைமெய்யுஞ்சிந்தையுங்களிக்கச்சேர்ந்தான். (௮௨)

எங்குநன்னிமித்தஞ்செல்லவிருநிலமகிழ்ச்சிகூரப்
பங்குனிநிறைந்ததிங்களாதபன்பயிலுநாளில்
வெங்குனிவரிவில்வாகைவிசயனும்பிறந்தான்வென்றிப்
பங்குனனென்னுநாமப்பகுதியாற்படைத்திட்டானே. (௮௩)

கற்பகமலர்கள்சிந்திக்கடவுளர்கணங்களாட
வெற்பகமுனிவரீண்டிமங்கலவேதப்பாடப்
பொற்பகமுழவுவிம்மப்புரிவளைமுழங்கியார்ப்ப
நற்பகலிதுவென்றெல்லாவுலகமுநயந்தவன்றே. (௮௪)

இறைவனுமகிழ்ந்துபின்னும்யாதவிக்குரைப்பவந்த
மறையினைமுறையிற்பெற்றமத்திராசன்கன்னி
குறைவறவிருவர்வேண்டுங்குமரரென்றுன்னிநின்று
ணிறையுடையிரவிமைந்தரிருவருநினைவின்வந்தார். (௮௫)

மருவருங்குழலியாயுமறையினால்வரிசைபெற்ற
விருவருமொருவர்போலவின்புறமணந்தபோதிற்
பருவரலியாதுமில்லாப்பாலகரிருவர்சேரக்
கருவிளைந்துதித்தார்யாருங்கண்ணெனக்காணுநீரார். (௮௬)

சசிகுலநகுலனென்றுந்தம்பிசாதேவனென்றும்
விசயனோடெண்ணும்வீமன்மேதகுதருமனென்று
மசைவறுசிங்கசாபமனையவரைவராலும்
வசையறுதவத்தின்மிக்கான்மகிழ்ச்சியால்வாழ்வுபெற்றான். (௮௭)

தாதியர்மருங்குந்தந்தைதடமணிமார்பும்பெற்ற
பேதையர்கரமுநீங்காப்பெற்றியின்வளர்ந்தபின்னர்ப்
போதகமடங்கல்புல்வாய்புலிமுதல்விலங்கொடோடி
வேதியர்முன்றிறோறும்விழைவிளையாடலுற்றார். (௮௮)

செய்தவமுனிவர்தம்மாற்சிகையுடன்புரிநூல்சாத்திக்
கைதவமின்றியெண்ணெண்கலைக்கடற்கரையுங்கண்டு
மெய்தவம்விளங்கவேழவில்லியும்விழைந்துநோக்க
மைதவழ்சிகரியன்னவளர்ச்சியின்வனப்பின்மிக்கார். (௮௯)

மார்பினுமகன்றகல்விவனப்பினுநிறைந்தசிர்த்தி
போர்வருதெரியன்மாலைப்புயத்தினுமுயர்ந்தகோற்றஞ்
சீர்தருவாய்மைமிக்ககண்ணினுஞ்செங்கைவண்மை
பார்வளஞ்சுரக்குஞ்செல்வப்பரப்பினும்பரந்தவன்றே. (௯௦)

ஆரமுமாரச்சேறுமரும்பனிநீரும்பூவு
மீரவெண்மதிநிலாவுமிதம்பெறுதென்றற்காலு
மோருயிரிரண்டுமெய்யாயுருகுவாருருகும்வண்ண
மாரணைமகுடஞ்சூட்டவந்ததுவசந்தகாலம். (௬௧)

விதுநலம்பெறுகாவெங்குமெய்சிவப்பேறவண்டு
புதுமையின்முரன்றுமொய்ப்பப்புதுமணம்பரந்துலாவக்
கதுமெனத்தலைநடுங்கக்காறடுமாறிற்றம்மா
மதுவயர்ந்தவரில்யாவர்மண்ணின்மேன்மயக்குறாதார். (௬௨)

பைந்தடந்தாளான்முன்னம்பருகியபுனலைமீளச்
செந்தழலாக்கியந்தண்சினைதொறுங்காட்டுஞ்சீரான்
முந்தியவசோகுசூதமுதலியதருக்களெல்லா
மிந்திரசாலம்வல்லோரியற்கையினியற்றுமாலோ. (௬௩)

பரந்தெழுசூதபுட்பபராகநல்விராகமிஞ்ச
முரண்படுசிலைவேள்விட்டமோகனச்சுண்ணம்போன்ற
*புரிந்ததொல்யோகமாக்கள்புந்தியின்றுருகத்தொட்ட
வருந்தழற்கணைகள்போலவலர்ந்தனவசோகசாலம். (௬௪)

வேனிலின்விளைவினாலும்வேனிலான்விழவினாலு
மாநலந்திகழுமூரன்மாத்திரிவனப்பினாலுந்
தானலமுறுதலெண்ணிச்சாபமுமறந்துமற்றப்
பானலங்கண்ணாளோடும்பாண்டுவும்பரிவுகூர்ந்தான். (௬௫)

அருந்தளிர்நயந்துநல்கியலகுடனலகுசேரப்
பொருந்துமுன்னவசமாகிப்போகமென்குயிலும்பேடு
மிருந்துமெய்யுருகுங்காவிலிரதியுமதனுமென்ன
வருந்தியகாதலோடுமாதவிப்பந்தர்சேர்ந்தார். (௬௬)

பஞ்சின்மெல்லடியினாளுங்கணவனும்பழங்கணோட்ட
நெஞ்சினைநலியமேன்மேனேயமுற்றுருகியாங்க
ணைஞ்சியகாலமெல்லாமென்செய்தேமென்றென்றெண்ணி
வெஞ்சிலையநங்கவேதமுறைமையான்மேவினாரே. (௬௭)

பூவியலமளிபொங்கப்புணர்முலைபுளகமேற
மேவியகலவியின்பமெய்யுறுமகிழ்ச்சிமுற்றிக்
காவியங்கண்ணிகேள்வன்கமழ்வரைமார்பினன்போ
டோவியமெனவேயுள்ளமுருகினளயர்ந்துவீழ்ந்தாள். (௬௮)

அரும்பியவிழியுந்தொண்டையமுதுறுபவளவாயும்
விரும்பியசுரதபோகமேவருகுறிப்புமாகிப்
பொரும்படைமதனனம்பாற்பொன்றினன்போலமன்றற்
சுரும்பினமிரங்கியார்ப்பத்தோன்றலுஞ்சோர்ந்துவீழ்ந்தான். (௬௯)

---

* புரிந்தநற்போகமாக்கள் என்றும்பாடம்.

வேறு.

கொஞ்சுகிளியன்னமொழிகுமுதவிதழமுதா
லெஞ்சினனராதிபதியீதெனவியப்போ
வஞ்சுதருதீவினையினாரமுதுநஞ்சா
நஞ்சுமமுதாமுரியநல்வினையின்மாதோ. (௧௦௦)

சித்திரைவசந்தன்வருசெவ்வியுடன்மகிழா
மத்திரியெனுங்கொடியவாட்கண்விடமன்னாண்
முத்திரையுணர்ந்திலண்முயக்கமுறுமின்ப
நித்திரைகொலாமெனநினைந்தருகிருந்தாள். (௧௦௧)

செயிர்த்தவரையாவிகவர்தீயுமிழும்வேலா
னுயிர்த்திலன்விழித்திலனுணர்ந்துமிலனென்னா
வயிர்த்தனளழைத்தனளரற்றினளிரங்கா
வயிர்த்தனணிலத்தினுயர்வானமினிதென்பாள். (௧௦௨)

புந்தியிலண்மன்றல்பெறுபூவைகுரல்கேளா
முந்தியகடும்பழிமுடிந்ததுகொலென்னாக்
குந்தியும்விரைந்துதனகுமரரொடுபுக்கா
ளந்தியரவிந்தமெனவணிகுலைமுகத்தாள். (௧௦௩)

உற்றதுமருங்கொழுநனுயிருறுநலத்தா
லிற்றதுமுணர்ந்திவளிரங்கியழுமெல்லைக்
குற்றமகலும்படிகுணங்களைநிறுத்து
நற்றவர்புகுந்தருகிருந்துளநெகிழ்ந்தார். (௧௦௪)

அழுகுரல்விலக்கியபினம்மகவையுங்கொண்
டெழுகடனிலத்தரசையீமவிதிசெய்யப்
புழுகுகமழ்மைக்குழலிபொற்புடைமுகத்தாண்
முழுகினளனற்புனலின்மொய்ம்பனைவிடாதாள். (௧௦௫)

தங்கையவள்வானுலகுதலைவனுடனெய்திக்
கங்கைவனமூழ்கியுயர்கற்பவனம்வைகப்
பங்கயநெடுந்துறைபடிந்துதன்மகாரான்
மங்கையிவளுங்கடன்முடித்தனள்வனத்தே. (௧௦௬)

காசிபன்முதற்கடவுள்வேதியர்கருத்தா
லாசிபெறுமப்புதல்வரைவரொடுமன்றே
யேசில்பிரதைக்கொடியைபிறைநகரினுய்த்தார்
தேசிகரின்முற்றெழுதகுஞ்சதசிருங்கர். (௧௦௭)

இறந்ததுணைவற்குளமிரங்குநிலமன்னன்
சிறந்தசரணத்தில்விழுசிறுவரையெடுத்துப்
புறந்தழுவியப்பொழுதுபுண்ணியநலத்தாற்
பிறந்தபொழுதொத்துமகிழ்பெற்றியினனானன். (௧௦௮)

வியனதிமகன்சிலைவல்விதுரன்முதலுள்ளோர்
பயனுடைவிசுப்புபயில்பாண்டுவைநினைந்துஞ்
சயநிலைபெறுந்தகையதனயரையுகந்து
நயனமிருபைம்புனலுநல்கினர்நயந்தார். (௧0௯)

அனுசநிருபன்புதல்வரைவருமகிபன்
றனயரொருநூற்றுவருமன்பினொடுதழுவிக்
கனகுலமுகந்துபெய்கருங்கயநெருங்கும்
வனசமலருங்குமுதமலருமெனவளர்வார். (௧௧0)

வேறு.

இன்னணம்வளருங்காலைபெறிகடலுடுத்தவல்குன்
மின்னெனுமருங்குற்கொங்கைவெற்புடைவேய்கொண்மென்றோட்
பொன்னெனுநிறத்திறேடும்பொற்பமழியாகுலத்தா
டன்னெணமுடிப்பான்வந்ததலைவனைத்தந்தகோமான். (௧௧௧)

குந்திபோசன்றன்றெய்வக்குலத்துளோர்களுமநேக
விந்திரரவனிதன்னிலெய்தினராகுமென்னக்
கந்தவான்கொன்றைதோயுங்கங்கையாள்குமரன்வைகு
மந்தமில்சுவர்க்கமன்னவத்தினபுரிவந்துற்றார். (௧௧௨)

வெண்ணிறமதியமன்னவிடலையுங்கரியமேக
வண்ணனும்வள்ளறன்னைத்திருவயிற்றுதித்தமாது
மெண்ணிலாவுவகையோடுங்குந்தியையெய்தியெல்லாப்
புண்ணியநலமுமெண்ணிப்பூமியாண்முறைபுங்கோத்தார். (௧௧௩)

எம்பிரானாதிமூலமிந்திரன்முதலோர்க்கெல்லாந்
தம்பிரான்பாண்டுவின்றதருமதேவதையைநோக்கி
யம்புராசிகளுட்படடவவனிகளனைத்துநாமே
*யிம்பர்நோயகற்றியெல்லாவெண்ணமுமுடித்துமென்றான். (௧௧௪)

முகுரவானனனும்வேத்துமுனிவனுமனஞ்சொற்காயம்
பகிர்விலாவிதுரன்றானும்பாந்தளேறுயர்த்தகோவு
நிகரிலாத்துணைவர்தாமு§நீரொடுநீர்சேர்ந்தென்னத்
தகைவிலாவன்பினோடுந்தழுவினர்கெழுமினாரே. (௧௧௫)

தன்பதிவந்தோர்தம்மைத்தாதைதன்றாதையான
முன்புடைக்கங்கைமைந்தன்முதலியமுதல்வரெல்லா
மன்பொடுகண்டுகண்டுகண்களித்தார்வமிஞ்சி
மன்பதைமகிழ்ச்சிகூரவரம்பிலாவிருந்துசெய்தார். (௧௧௬)

நூற்றுவரைவரென்னுநதியுடைச்சமரவைவேற்
கூற்றுவரனையோர்க்கியாருங்கொடுங்கடும்போரிலாற்றா
ராற்றுவரேனுமுங்களுதவிபுண்டருளுமுண்டு
தோற்றமுமுண்டுநுங்கள்சுமையிவர்சுமையுமென்றார். (௧௧௭)

---

* இம்பரேயகற்றி என்றும்பாடம்.

§ நீரொடுபோல்சேர்ந்தென்ன என்றும்பாடம்.

இனிமையிற்பலவுமாற்றம்யாவர்க்குமியாவுஞ்சொல்லித்
தினகரற்றொழுதபின்னர்த்தேர்பரிகரிகடோறு
மனனுறத்தக்கசெல்வம்வகைதொறும்வழங்கியன்றே
தனதனைப்போல்வார்தம்மைத்தம்பதியடைவித்தாரே. (௧௧௮)

வேறு.

எயினலம்புனைகோபுரமாபுரத்தெழுதுமாளிகைதோறும்
வெயினிலாவுமிழ்கனகநீள்வீதியில்விலாசமுற்றிடுநாளிற்
பயினன்மேல்வருகல்லெனச்செறிந்தமெய்ப்பவனன்மைந்தனுமொத்தான்
வயினதேயனைக்காத்திரவேயபரைமன்னன்மைந்தருமொத்தார். (௧௧௯)

சம்பவச்சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள் — ௨௭௪.

—:o:—

வாரணாவதச்சருக்கம்.

—:o:—

அருமறைமுதல்வனையாழிமாயனைக்
கருமுகில்வண்ணனைக்கமலக்கண்ணனைத்
திருமகடலைவனைத்தேவதேவனை
யிருபதமுளரிகளிறைஞ்சியேத்துவாம். (௧)

ஆங்கவரம்முறையபருமாயிடைத்
தீங்கொருவடிவமாந்திறற்சுயோதனன்
பாங்கிவனமக்செனப்பரிதிமைந்தனை
வாங்குபுதழீஇயினன்வலிமைகூரவே. (௨)

ஒருபகனிலமகளுய்யமங்குலின்
வருபகீரதிநதிவாசநீர்படிந்
திருதிறப்புதல்வருமியைந்தகேண்மையாற்
கரையடைந்தனரிளங்கடவுளோரனார். (௩)

தைவருநவமணிச்சயிலமென்னவே
யைவகைநிறங்களுமமைத்தியற்றிய
தெய்வவாடகமனைச்செல்வப்போனகங்
கைவரநுகர்ந்தபின்கண்ணுந்துஞ்சினார். (௪)

கண்படைக்கங்குலிற்கன்னசௌபல
ரெண்படைக்குமரனோடெண்ணிப்பாவக
னண்பன்மெய்ப்புதல்வனைநார்கொள்வல்லியாற்
றிண்பதத்தொடுபுயஞ்சிக்கயாத்தபின். (௫)

அரவினிற்பிணித்தெழுமரவம்பொங்கிட
வரனுடைப்பொருப்பையன்றும்பர்நாயகன்
பரவையிற்செறித்தெனப்பபனில்செய்கையால்
விரவுமப்பெருநதியூடுவிழ்த்தினார். (௬)

வீழ்ந்தவனனந்தரநிமிர்ந்துமெய்புறச்
சூழ்ந்தவப்பிணிகளைத்துணிகளாக்கியே
யாழ்ந்திலனேறிமீண்டவசத்தோடவட்
டாழ்ந்தில*னிராகவன்றம்பிபோன்றுளான். (எ)

வாளிரவியையொளிமறைக்கும்வெஞ்சினக்
கோளரவினையனகொடியநெஞ்சின
னீளரவினங்களானித்திராஆவை
மீளவுங்கொல்லுவான்வீரனேவினன். (அ)

கடித்தனபன்னகங்கங்கொள்கைகளாற்
றுடித்திடமற்குணத்தொகுதிபோற்பிசைந்
திடித்திடுமுகிலெனவெழுந்துமாநகர்
வடித்தவேற்றுணைவரோடெய்திமன்னினன். (கூ)

வேறொருருபகற்கழுநிரைத்துவீமனை
டாறுபாய்ந்திருவருமாடும்வேலையிற்
றேறலான்வஞ்சகந்தேறிவண்டினை
லேறினன்கடந்தரியேறுபோன்றுளான். (க0)

பின்னருமொருபகற்பெற்றம்பெற்றவன்
றன்னையம்மகிபதிதனயனுதரித்
தின்னமுதருத்துவான்போலயாவையுந்
துன்னியவிடங்களாற்றுய்ப்பித்தானரோ. (கக)

விடத்திலேயழிந்தறிவொழிந்தவீமனை
வடத்திலேபிணித்தனன்கங்கைவாரியி
னிடத்திலேயமிழ்த்தினனிதயபொச்சவர்
திடத்திலேமுதிர்ந்தகிங்கரர்திறங்களால். (க௨)

ஓதவான்கடலிடையொளித்தவெற்பெனப்
பாதலந்தனில்விழபவனசூனுவை
வேதனைப்படுத்தினர்விடங்கொள்கூரெயிற்
றுதவப்பணமணியரவினஞ்சிறார். (க௩)

முற்படுகொடுவிடமுனையெயிற்றுகும்
பிற்படுவிடத்தினாற்பெயர்ந்துபோதலின்
மற்படுபுயகிரிவடப்பிணிப்புமற்
றற்படுமிருள்புலரலரியாயினன். (க௪)

வாசுகிதனக்கிவன்வரவுணர்த்தனு
மாசுகன்மதலையென்றறிந்துமற்றவன்
றேசுறுபொற்குடந்தெரிந்துபத்தினை
லேசறுமமுதெலாமினிதினூட்டினன். (க௫)

* இராவணன்றம்பிபோன்றுளான் என்றும்பாடம்.

வெங்கனல்கொளுந்தலின்வெந்தவான்புல
மங்குல்பெய்மாரியால்வயங்குமாறுபோ
லங்கெரிவிடநுகர்ந்தழிந்தபேருட
லிங்கமுதருத்தலாலெழில்புரிந்ததே. (௧௬)

ஆயிரம்பதின்மடங்கரசுவாக்களின்
மாயிருந்திறல்வலிமலிந்தமேனியா
னேயிருந்தவப்பயனென்னவெண்பகன்
மேயிருந்தனன்பணிவேந்தன்கோயிலே. (௧௭)

இவனையந்தியிடையிட்டபாவியுந்
தவனையுததியிற்சாய்த்தமாலைபோ
லவனிபனகரியினரசவெள்வளைத்
துவனிசெந்தழல்விளக்கெடுப்பத்துன்னவே. (௧௮)

கண்டிலனுதிட்டிரன்கனிட்டற்கண்ணுற
வுண்டிலடரித்திலனோரிராவினுங்
கொண்டிலடுயிலிளங்குமரர்தம்மொடும்
விண்டிலனுரையுளம்விம்முகுந்தியே. (௧௯)

வீடினனெனத்துணைவர்வேறுவே
றோடினர்கானதியோடையெங்கணுந்
தேடினர்காண்கிலஞ்செய்வதென்னென
நாடினர்நடுங்கினர்நடுக்கில்சிந்தையார். (௨௦)

கூற்றனசுயோதனகுமரனேயிவ
னாற்றலின்வெரீஇயழுக்கற்றசிந்தையா
னேற்றதையுணர்கிலமென்றுதந்தையாங்
காற்றினுமலமருங்கருத்தராயினார். (௨௧)

ஊதையில்பூதமொத்துள்ளம்வெம்பிய
தாதையில்சிறுவரைத்தாதைதாதைபாற்
கோதையில்குழலினாள்கொண்டுசேறலும்
வாதையின்றவற்கெனவருத்தமாற்றினான். (௨௨)

தருமமன்னனுநகர்ச்சனங்கள்யாவையுந்
தெருமரறேற்றவுந்தெய்வங்கூறவும்
பெருமிதநிமித்தங்கள்பெற்றிபேசவும்
வரும்வருமெனமனமறுகிவைகினாள். (௨௩)

இருந்திளைப்பகன்றபினிவனைமற்றைநா
ளருந்திறற்போகிகளரசனேவலால்
வருந்தியுற்றெடுத்துமுன்வந்தநீர்வழிப்
பொருந்திரைக்கங்கையின்கரையிற்போக்கவே. (௨௪)

பாழியம்புயகிரிப்பாண்டவன்றனைச்
சூழிகற்பணிக்குலஞ்சுமக்கவல்லவோ
வாழியக்குலங்களின்மன்னனல்லனோ
வேழிருபுவனமுமினிதினேந்துவான். (௨௫)

விதியினலொளித்தலினுயங்கிமீளவு
நதியினல்வருதலினலங்கொண்மேனியான்
பதியினல்விளங்குமென்பங்கயங்களு
மதியினற்குளிர்நெடுவானுமாயினன், (௨௬)

வேதியர்குரவர்வில்விதுரன்வீடும
னாதியர்துணைவரந்நகருளார்களென்
றோதியசனங்களுக்குவகைநல்கினன்
ஞாதியர்கிளைக்கெலாநடுக்கநல்கியே. (௨௭)

குந்தியைமகிழுரைகூறிக்கற்பினா
லந்திமீனனையவளருளின்வாழ்த்தவே
செந்திருமகளுறைசெல்வமாநகர்
வந்திவன்முன்புபோல்வளருநாளிலே. (௨௮)

கோதமன்மகன்மகன்குனிவிலாதியா
மேதகுபடைக்கலம்யாவும்வீறுடம்
மாதவன்வயிற்பயில்வரதன்வன்றிறற்
கேதமில்சிந்தையான்கிருபனென்றுளான். (௨௯)

மற்றிவன்சந்தனுமைந்தனேவலாற்
கொற்றவரருள்குருகுலகுமாரரை
வெற்றிகொள்சிலையும்வெவ்வேலும்வாளமும்
பற்றலர்வெருவரும்படிபயிற்றினன். (௩0)

பரிவுடனிவன்படைபயிற்றப்பின்னருங்
குருபதிவேறொருகுருவைத்தேடினா
னிருளறமதிநிலவெறித்ததாயினும்
பரிதியைநயக்குமிப்பரவைஞாலமே. (௩௧)

வேறு.

பரதநாதவேதபரத்துவாசனென்பான்
விரதவேள்விதன்னின்†மேனகையாலான
சுரததாதுவீழ்ந்ததுரோணகும்பந்தன்னில்
வரதனொருவன்வந்தான்வசிட்டமுனியையொப்பான். (௩௨)

ஈரேழ்விஞ்சைத்திறனுமீன்றோன்றன்பாலெய்தி
நீரேழென்னயாவுநிறைந்தகேள்விநெஞ்சன்
பாரேழெண்ணும்படைகள்பரசுராமன்றன்பா
லோரேழ்பகலினுலகுக்கொருவனென்னக்கற்றான். (௩௩)

† மேனகையான்மெலிந்து என்றும்பாடம்.

வெற்பின்வலிய திண்டோள்வேந்தனேவுந்தூதா
லற்பின்மிக்கசிந்தையறஞ்சான்மொழியவ்வாசான்
கற்பின்பன்னியோடுங்கையின்மதலையோடும்
பொற்பினமராவதியேபோலுநகரிபுக்கான். (௩௪)

வந்தான்வரதனென னுமந்தாகினியாண்மைந்தன்
பைந்தாரசைபவெதிர்போய்ப்பணிந்துபூசைபண்ணிச்
சிந்தாசனத்தோடொக்குஞ்சிங்காசனத்தினேற்றி
யெந்தாய்வரநீயடியேனென்னதவத்தேனென்றான். (௩௫)

மூசிவண்டுமொய்க்குழுருகார்செவ்விமாலை
வாசிவான்றேர்வெம்போர்மன்னர்மன்னன்றன்னை
யேசில்கடவுள்வாய்மையிருக்காலெண்ணில்கோடி
யாசியன்பாலோதியருள்செய்திருந்தபின்னர். (௩௬)

வேதமுனிவனிருந்தவேத்துமுனியைநோக்கிப்
பூதந்தன்னினிகழ்ந்தபுன்மைமொழியொன்றுரைப்பா
னேதமெய்பெற்றனையயாகசேனனென்பாஃ
போதமில்லானென்பாற்பூட்டுநண்புபூண்டான். (௩௭)

யானுமவனுமுறையாலிளையோமானவெல்லைப்
பானுநிகர்தொல்லங்கிவேசன்பாதம்பணிந்து
வானுமண்ணும்வியக்க*மறவெம்படைகள்கற்றுத்
தானும்வல்லனாகித்தன்போலென்னைவைத்தான். (௩௮)

பின்னையிரவும்பகலும்பிரியேமாகித்திரியத்
தன்னையடைந்தநண்பின்றகவான்மிகவாதரியா
வென்னைவானமெய்தியானேயிறைவனானா
லுன்னையாளவைப்பேனுலகிற்பாதியென்றான். (௩௯)

நன்றுநன்றுன்வாய்மைநன்றுநண்புக்கினியா
யென்றுபோந்துநானுமியன்றதவத்தினிருந்தேன்
வென்றுகொண்டபுவியைவேந்தன்மகவுக்களித்துச்
சென்றுவானம்புகுந்தான்சிறுவன்றலைவனானான். (௪0)

தனத்திலாசையின்றித்தவமேதனமென்றெண்ணி
வனத்திலுண்டிகொண்டேமகிழ்வுற்றொருசார்வைகிச்
சனத்திலருளாலில்வாழ்தருமந்தவறுவண்ண
மினத்தின்மிக்ககிருபற்கிளையாளிவளைவேட்டேன். (௪௧)

கந்தமகவையின்றகாளகண்டனருளால்
வந்தமகவிம்மகவும்வறுமைவளரவளர்ந்தா
னிந்தமகவுமையாண்‡டிளமையறியாதெனலாற்
றந்தமகவைநோக்கித்தாயும்பெருகத்தளர்ந்தாள். (௪௨)

---

* மறைவெம்படைகள்கற்று என்றும்பாடம்.

‡ இன்மையறியாது என்றும்பாடம்.

மாவின்பாலேயன்றிமரபுக்குரியமைந்த
னாவின்பால்கண்டறியானதனால்வருந்தியந்தக்
கோவின்பாலெய்துதலுங்கோமான்யார்நீயென்ன
நாவின்பாலானடுங்கினானுன்னண்பனென்றேன். (௪௩)

மன்னன்யானீமுனிவன்மரபாலெனக்குமுனக்கு
மென்னநண்புண்டென்னவேசிநகைசெய்திகழ்ந்தா
னன்னதுருபன்றன்னையவைபிலரசர்கேட்பச்
சொன்னவாய்மைநீயேசோர்ந்தாயானோசோரேன். (௪௪)

புகன்றபடிநீயானும்புவியும்பாதிகொள்வே
னிகன்றசமரினுன்னையிரதத்துடனேசுவர்வே
னநன்றமெய்ம்மையுடையாயறிதியென்றேனென்று
சுகன்றன்ஞானம்பெற்றதுரோணன்சொல்லக்கேட்டான். (௪௫)

கேட்டவரசனழைக்கக்கிருபனுடன்வந்திறைஞ்சும்
பூட்டுவரிவிற்றடக்கைப்புதல்வர்புதல்வர்தம்மைக்
காட்டிநீயேயிவரைக்கடிதிற்படைமைக்கல்வி
மூட்டிநின்வஞ்சினமுமுடித்தியென்றுமொழிந்தான். (௪௬)

முனிநீயையாவிதற்குமுன்னமின்றுமுதலா
வினியிவ்வுலகுக்கரசாயெம்மிலொருவனாகிக்
குனிவில்வலியாலமருங்கோடியென்றுகொடுத்தான்
பனிவெண்குடையுநிருபற்குரியவரிசைபலவும். (௪௭)

வேறு.

அன்றுமுதலாகவரிவெஞ்சிலைமுதற்படைகளானவையனைத்துமடைவே
தொன்றுபடுநான்முறையின்மறையினெறிதிட்டிரசுயோதனர்களாதியெவரு
மொன்றியதுரோணரருளாலும்வலியாலுமுயலுணர்வுடைமையாலுமுதலே
நின்றகுறையாலுமொருவர்க்கொருவர்கல்வியினிரம்பினர்வரம்பினிதியோர். (௪௮)

வெஞ்சிலையினாலிவனிராகவனையொக்குமெனவிசயன் ||விசயத்தின்மிகவே
யெஞ்சியகுமாரர்கள்பொறாமையின்மிகுத்தனர்களிரவியெதிர்மின்மினிகள்போ
லஞ்சொன்முனிதானுமிவன்மேலெவரினும்பெருகவன்புடையனாகியகலா
னெஞ்சுறவருங்கலைகள்கற்குமவர்தம்மளவினேயநிகழாதவர்கள்யார். (௪௯)

ஏகலைவனென்றொருகிராதன்முனியைத்தனியிறைஞ்சியிவனேவலின்வழா
தகலையடைந்துமிகுபத்தியொடுநாடொறுமருச்சுனனையொத்துவருவான்
மேகலைநெடுங்கடல்வளைந்ததரணிக்கணொருவில்லியெனவின்மையுடையான்
மாகலைநிறைந்துகுருதக்கிணைவலக்கையினில்வல்விரல்வழங்கியுளனால். (௫0)

அங்குலிகமொன்றுபுனலாழ்தருகிணற்றில்விழவந்தமுனிதேடுமினெனப்
புங்கமொடுபுங்கமுறவெய்திவனெடுத்தமைபுகன்றருகுநின்றவரைநீ
ரிங்கிதனிலைத்தொகைகள்யாவுமுருவப்பகழியேவுமினெனுமுன்விசயன்
றுங்கவில்வளைத்தொருகணத்தினில்வடத்திலைதுளைத்தனனிலக்கிறொடையால். ()

|| வினயத்தின்மிகவே என்றும்பாடம்.

முத்திமுனி தாளிணையைநீர்படி தடந்துறையின்முதலைகவர்வுற்றதெனவுஞ்
சித்திரவில்வீரர்பலருந்தமவெறுங்கையொடுசென்றருகுநின்றுவிடவே
பத்தியின்விரைந்துபொதுவேயிபமழைக்கவொருபறவைமிசைவந்தநெடுமால்
கைத்திகிரிபோல்கணையின்விசயனதனைப்பழையகார்முதலையிற்றுணிசெய்தான். ( )

ஒருதனுவினுலிதயமகிழ்குருவினுக்கிவனுமுயிருதவினனெவரிசிலைக்
குருவுமிவனுக்குநிலையாலுமறையாலும்வலிகூர்பகழியொன்றுதவின
னிருவருநயந்தருளும்விநயமுமிகுந்தனர்களின்னுயிருமனமுமெனமேன்
மருவிவருநல்வினைவயத்தின்வழிவந்தபயன்மற்றொருவருக்குவருமோ. (ருங)

சிலைக்குருவிறற்குருகுலக்குமாருக்குவருசிரமநிலைகாண்மினெனவே
யலைத்தலைநிலாவெழுசரிற்புதல்வனுக்குநல்லறக்கடவுளுக்குமுரையா
நிலைப்படுவிசாலமணிபணிதிகழரங்கின்மிசைநிகழ்பலிகொடுத்தரியுடன்
கலைப்புரவியூர்திருவைபுந்தொழுதுபுக்கனனகத்துணர்வுமிக்ககலையோன். (ருச)

*புரியிலறிவோர்சனபதத்திலறிவோர்புவிபுரக்குமவர்தம்மிலறிவோர்
வரிபடவயங்குகொடிமஞ்சவிதமெங்கணும்வனப்புறவிருந்தபொழுதிற்
றெரிவுறுவிமானமனைதோறுமுறைதேவர்பலர்சித்தர்முதலோர்பரனெடுங்
கரியநெடுமால்பிரமனிந்திரன்முதற்பலர்கலந்தவகல்வானிகருமே. (ருரு)

ஆற்றின்வழுவாமனுமுறைத்தருமன்மைந்தன்முதலாகியகுமாரரடைவே
போற்றியடலாசிரியரிருவரையுமன்பினுயர்பூசைபலசெய்துபுரிநா
ணேற்றியசராசனம்வணக்கிவடிவாளியினிலக்கமவை† நாலுவகையான்
மாற்றினர்பிளந்துபெருவண்மைசிறுநுண்மைசலநிச்சலமெனச்சொல்வகையே. ( )

ஆயுதமநேகவிதமானவையெனப்பலவுமழகுறவியற்றியுமதம்
பாயுமிபமாவிரதம்வாசியொருவர்க்கொருவர்பலகதிவரக்கடவியுஞ்
சேயுயருமாடநிலைதெற்றியினிருந்தவர்தெளிந்துளமகிழ்ந்துநவைதீர்
வாயுகதியல்லதுமனித்தர்கதியல்லவெனவல்லனபுரிந்தனரரோ. (ருஎ)

ஒத்தவலியோர்வலியுமொத்ததிறலோர்திறலுமொத்தவினையோர்வினையும்வன்
சித்தமனன்மூளமுகவம்புயமலர்ந்தரசன்மகனுமனிலன்சிறுவனுங்
கைத்தலமமர்ந்தகதைகொண்டெதிர்நடந்தனர்களிப்புடனிரண்டுதறுகண்
மத்தகயம்வேரொடுமராமரமெடுத்தமர்மலைந்தனையகோலமறவோர். (ருஅ)

தண்டின்முனையொன்றினுடனென்றுருமெறிந்தனையதன்மையொடுடற்றவிலகு
மண்டலவிதங்களும்வியப்புறநடந்தபின்மறத்தொடுசெயிர்த்துவயிரங்
கொண்டிருவரும்பொருதலுன்னுபொழுதத்தவர்குறிப்பினையிமைப்பளவையிற்
கண்டுகுருவின்சிறுவன்வன்பொடுவிலக்கினன்மெய்கல்விகரைகண்டபெரியோன். ()

மீளிமகவான்மதலையாயுதபுரோகிதன்விலோசனமுணர்ந்தவன்மலர்த்
தாளின்முடிவைத்தெதிர்தரித்தனனிடங்கைவரிசாபகவசத்தினனிபம்
யாளியரவங்கருடன்வன்னிசலிலந்திமிரமிரவியிவையேகடவுளாம்
வாளியின்வினோதமுறவெய்தனனிருந்தமுடிமன்னவர்மதிக்கும்வகையே. (சூ0)

* புரிவிலறிவோர் என்றும்பாடம்.

† நாலும் என்றும் பாடம்.

வேறு.

மங்குல்சூழ்விமானமுன்றின்மஞ்சகோடிதிகழவே
யங்கண்வானமீனமென்னவவையிருந்தவரசர்முன்
சிங்கமென்னுமாறெழுந்துசிங்கநாதமுஞ்செய்தான்
பங்கசாதபரிமளங்கொள்பானுராசசூனுவே. (௬௧)

சிந்தையன்புடன்பணிந்துதேசிகேசனருளினால்
வந்துவெஞ்சராசனம்வணக்கிவீரவாளியா
லிந்திரன்குமாரன்முன்னியாதியாதியற்றினா
னந்தவந்தநிலையுமேவுமவனின்விஞ்சலாயினான். (௬௨)

கணைகள்போயிலக்கடைந்தவுறுதிகண்டுகண்களித்
திணையில்வீரனென்றதன்றிருந்தராசமண்டலம்
பிணையன்மாலைவிசயனண்ணல்பெற்றிபற்றிநாணினான்
றுணைவரோடுவரிகழற்சுயோதனன்களிக்கவே. (௬௩)

மருவநின்றருக்கன்மைந்தன்வானநாடன்மகனைநா
மிருவருந்தநுக்கொள்போரியற்றவம்மினென்றலுங்
குருகுலந்தழைக்கவந்தகுமரனன்புகூரவே
யுருகிநன்றெனத்தழீஇயுகந்துளந்தருக்கினான். (௬௪)

அனந்தரம்பொரற்குநீகொலந்தரம்மெனக்கெனாத்
தனஞ்சயன்செயிர்த்தல்கண்டுதபனன்மைந்தன்மீளவு
முனைந்தபோரின்முடிதுணித்துன்முகசரோருகத்தினாற்
சினந்தணிந்தரங்கபூசைசெய்வனென்றுசீறினான். (௬௫)

அதிருகின்றவெழிலிபோலருச்சுனன்றனைக்குறித்
தெதிருகின்ற*வன்மைகண்டியாவருந்திகைக்கவே
முதிருகின்றமெய்யனாகிமுன்னிருந்தகௌதம
னுதிருகின்றவமுதவிந்துவொக்குமென்னவுரைசெய்வான். (௬௬)

சூதன்மைந்தன்வேலையேழுசூழுமேதினிக்கெலா
நாதன்மைந்தனுடன்வெகுண்டுநவிலுதற்குநண்ணுமோ
வேதமுண்டுசாலவென்னராசராசனிகலியக்
கோதமன்றனக்குளங்கொதிக்குமாறுகூறுவான். (௬௭)

கற்றவர்க்குநலநிறைந்தகன்னியர்க்கும்வண்மைகை
யுற்றவர்க்கும்வீரரென்றுயர்ந்தவர்க்கும்வாழ்வுடைக்
கொற்றவர்க்குமுன்மையானகோதின்ஞானசரிதரா
நற்றவர்க்குமொன்றுசாதிநன்மைதீமையில்லையால். (௬௮)

அரிபிறந்ததன்றுதூணிலரனும்வேயிலாயினான்
பரவையுண்டமுனியுமிப்பரத்துவாசன்மைந்தனு
மொருவயின்கண்முன்பிறந்ததொண்சரத்தினல்லவோ
வரியவென்றிமுருகவேளுமடிகளும்பிறந்ததே. (௬௯)

* வின்மை என்றும் பாடம்.

என்றுநல்லவுரையெடுத்தியம்பியேனையிழிவினோ
டொன்றிநின்றவாடகத்தையோடவைக்குமாறுபோ
லன்றுசூதன்மதலைதன்னையங்கராசனாக்கினான்
மின்றயங்குமுடிகவித்துவேந்தெலாம்வியக்கவே. (எ0)

தானிருந்தவரிமுகஞ்செய்தாள்சுமந்ததவிசின்மே
லானிருந்தபடை'பினானையுடனிருத்திவண்டுசூழ்
தேனிருந்தமாலைவாகுசிகரமீதுதெண்டிரைக்
கானிருந்தமண்டலங்கருத்தினாலிருத்தினான். (எக)

தவனன்மைந்தனுஞ்சுயோதனனுமிசைந்துதனதனுஞ்
சிவனுமென்னநண்புகொண்டுதிறலுடன்சிறந்துளார்
பவனனும்பர்நாயகன்பயந்தவீரரஞ்சவே
யவனியெங்குநமதெனக்கொள்பெருமிதத்தராயினார். (எஉ)

ஆனகாலையெண்ணுகின்றவாயுதங்கள்யாவையும்
யானைவாசிபிரதமானயானமுள்ளயாவையுஞ்
சேனையோடுதெவ்வரைச்செருக்கவல்லவீரமு
மானவீரர்வல்லரென்றுமறைவலாளன்மகிழ்வுற. (எங)

வம்மினாதிகுருகுலந்தழைக்கவந்தமைந்தர்கா
டம்மினாளையேயெமக்களிக்கநின்றதக்கிணை
யெம்மினானொருத்தன்வேறியாகசேனனென்றுளா
னும்மினாடியவனையிம்பர்நோதல்செய்துகொணர்மினே. (எச)

என்றுதஞ்சிலைப்புரோகிதன்கனன்றியம்பவே
யன்றவன்பதம்பணிந்தளித்தசொற்றலைக்கொளா
வென்றிநீடுபடைகளோடும்விரவுமங்கநாலொடுஞ்
சென்றுதங்களூடகன்றுதெவ்வுநாடுகுறுகினார். (எரு)

ஆளிமொய்ம்பரம்முனைக்கணனைபோதனீகினித்
தூளிகண்புதைத்தசென்றுசெவிபுதைத்ததுவனிபோ
யொளிகொண்டசெம்பொன்வெற்பினுடல்புதைத்தவெழிலிபோல்
வாளிகொண்டவிருதர்மாமதிற்புறம்புதைக்கவே. (எசு)

வளைத்தசேனையானைவாசிவாயினின்றுகுமுறவே
யுளைத்தெழுந்துமுழையைவிட்டுடன்றசிங்கவேறுபோற்
றிளைத்ததன்பதாதியோடுமோகயாகசேனனு
மிளைத்தநெஞ்சனன்றிநீடுபுரிசைவாயிலெய்தினான். (எஎ)

சோமகர்க்குமுடுகுசேனைசூழவந்தகுருகுலக்
கோமகர்க்கும்வெஞ்சமர்விளைந்ததாண்மைகூரவே
பூமகற்குமிக்கமாமுனிக்குவாய்மைபொய்த்தவம்
மாமகற்கும்விசயனுக்குமன்னுபோர்வயங்கவே. (எஅ)

தூறுகொண்டுகணைபொழிந்துசோமகேசர்பொருதலா
னூறுகொண்டகுமரர்தங்கணகரிமீளநோக்கினார்
மாறுகொண்டுவிசயன்வீசுவண்ணவாளிவலையினால்
வீறுகொண்டெதிர்ந்தமன்விலங்கரீடுபட்டதே. (எசு)

தகப்படுஞ்சராசனத்தனஞ்சயன்கைவாள்வெரீஇ
யகப்படுந்தராதிபன்றனற்றலில்லினாணினான்
மிகப்படுந்தடங்கொடேர்மிசைப்பிணித்துவிசையுட
னகப்படுஞ்செயற்கைசெய்துகுருவின்முன்னர்நணுகினான். (அ0)

முறுவல்கொண்டுகண்டசாபமுனியுநாணவெம்மைநீ
யுறுவதொன்றுமுணர்கலாதுரைத்தபுன்சொலறிதியே
மறுவிலந்தணாளன்யானுமன்னனீயும்வாசவன்
சிறுவன்வென்றுனைப்பிணித்தசிறுமையென்னபெருமையோ. (அக)

அன்றெனக்குநீயிசைந்தவவனிபாதியமையுமற்
றின்றுனக்குநின்றபாதியான்வரைந்துதருகுவன்
குன்றெனக்குவிந்திலங்குகொற்றவாகு*வீரனே
யுன்றனக்குவேண்டுமென்னவுயிரும்வாழ்வுமுதவினான். (அஉ)

வேறு.

புயங்கம்பருகியுமிழ்மதியம்போல்வான்மீண்டும்பூசுரன்றன்
வயங்குஞ்சுருதிவாய்மையினான்மன்னுங்குருக்கள்பதிநீங்கித்
தயங்குஞ்சிலைக்கைவாள்விசயன்சபமும்பிறர்முன்றானகப்பட்
டியங்குஞ்செயலுநினைந்துநினைந்துள்ளஞ்சுடப்போயூர்சேர்ந்தான். (அங)

மறுகிற்பணிலந்தவழ்பழனவளநாடுடையானெதிர்வணங்கி
முறுகிப்புரிவெங்கலைக்கோட்டுமுனியேபோலுமுனிவரரைத்
தறுகட்குருவின்றலைதுணிக்கத்தகவோர்மகவுந்தனஞ்சயன்றா
ளுறுகைக்கொருபூங்கன்னியையும்பெறுவான்வேண்டியுற்றிரந்தான். (அச)

ஆறுமுகனைப்பயந்தநதியலையாற்குளிர்வதொருகானி
லீறிறவத்தோருபயாசன்யாசனெனும்பேரிருவோருங்
கூறுமுறையிற்சடங்கியற்றிக்கோவின்வழக்கப்பெருவேள்வி
நூறுமகத்தோனிகரரசைநோன்மைக்கிசையப்புரிவித்தார். (அரு)

புரிந்தமகப்பேற்றழல்வேள்விப்பொன்றாவோமப்பொருண்மிச்சில்
பரிந்துவிபுதராமுதேய்ப்பப்பைம்பொற்கலத்தினிறைத்தாங்குத்
தெரிந்தமணிப்பூணவன்றேவிக்களிக்கத்தீண்டாளாகியபின்
சொரிந்துகனலினுபயாசனிமைப்பிற்சுதனைத்தோற்றுவித்தான். (அசு)

வலையம்பிறழமுடிதயங்கமணிக்குண்டலம்பேரழகெறிப்பச்
சிலையுங்கையுமெய்யும்வயந்திகழ்போர்வயிரக்கவசமுமாய்க்
கொலைவெஞ்சிங்கக்குருளைபொலங்குன்றின்புறத்துக்குதிப்பதுபோற்
றலைவன்களிக்கத்தடந்தேர்மேற்றனயனொருவன்றலைப்பட்டான். (அஎ)

---

* வீரவே குன்றனக்கு என்றும் பாடம்.

தேரோடருக்கனருணமணிச்சிமயத்துதிப்பச்செவ்வியுட
னீரோடையிற்செந்தாமரைகணிறம்பெற்றலர்ந்துநின்றனபோல்
வீரோதயன்வந்துதிப்பளவின்மேன்மேன்மகிழ்ந்து*மெய்சிலிர்த்துப்
பாரோர்கண்கள்களித்தனவாற்பார்க்குந்தோறும்பரிவுற்றே. (அஅ)

சங்கச்சங்கமிகமுழங்கச்சாந்தும்புழுகுமெறிந்தார்த்துத்
துங்கக்கொடியுந்தோரணமுந்தொடையும்பரப்பிச்சோமகனு
டங்கட்சயந்தனவதரித்தவமராவதிபோலார்வமெழத்
திங்கட்குழவியுற்பவித்ததிசைபோன்றனவெண்டிசையெல்லாம். (அகூ

பின்னுங்கடவுளுபயாசன்பெருந்தீப்புறத்துச்சுருவையினுன்
மன்னுங்கடலாரமுதென்னவழங்குசுருதியவிநலத்தான்
மின்னுங்கொடியுநிகர்மருங்குல்வேய்த்தோண்முல்லைவெண்முறுவற்
பொன்னும்பிறந்தாள்கோகனகப்பூமீதெழுந்தபொன்போல்வாள். (கூ0)

மண்மேலொருத்தியரக்கர்குலமாளப்பிறந்தாள்வாமனுதற்
கண்மேலின்றுமிவள்பிறந்தாள்கழற்காவலர்தங்குலமுடிப்பா
னெண்மேலென்கொலினியென்றங்கெவருங்கேட்பவொருவார்த்தை
விண்மேலெழுந்ததவன்புரிந்தவேள்விக்களத்தினிடையம்மா. (கூக)

முற்றோன்றியதன்குலமுதலான்முரட்போர்முனிக்குமுடிவுமவன்
பிற்றோன்றியவக்கன்னிகையால்விசயன்றனக்குப்பெருநலமு
முற்றோர்ந்துள்ளமிகத்தருக்கியுவந்தாங்கமைந்தானுயர்மகத்தாற்
பெற்றோன்பெற்றபேறுமகப்பெற்றோர்தம்மிற்பெற்றோர்யார். (கூஉ)

கரணமறுவற்றிலங்குதிறற்கலைசொல்பவன்பார்க்கனல்பயந்தோன்
சரணமலர்தன்றலைக்கொண்டுதனுநூலெனக்குத்தருகென்றான்
மரணமிவனுற்றனக்கென்பதுணர்ந்துங்குருவுமருதளித்தா
னரணியிடத்திற்செறிந்தன்றேவதனைச்செகுப்பதழலம்மா. (கூங)

இவ்வாறமைந்தாங்கைவருடனீரைம்பதின்மர்நனிவளர
மைவான்மீனிற்பல்கோடிமன்வந்திறைஞ்சிப்புடைசூழத்
†தெவ்வாறியவெம்பெருஞ்சேனைத்திருதராட்டிரனுந்தம்பியுமற்
றெவ்வாரிவற்கென்றுதிட்டிரனையொழுக்கத்தழகாலுட்கொண்டார். (கூச)

வேறு.

பூதிநலந்திகழ்பூருகுலத்திற்
காதிபனாகியநங்கனைவென்றோ
னீதியினாலுநிறைந்தனனுண்ணா
லோதியகேள்வியுதிட்டிரனென்னா. (கூரு)

---

* மெய்களித்து என்றும் பாடம்.

† தெவ்வாற்றியவெம்பெருஞ்சேனைத்திதராட்டிரனுந்தந்தையும் என்றும் பாடம்.

மைந்தருடன்செயல்வழுவறவெண்ணிக்
குந்திபயந்தருள்குரிசிலையிவனே
யிந்தநிலக்கினியிளவரசென்றாங்
கந்தண்மதிக்குடைமுடியொடளித்தான். (௯௬)

சந்தனுவின்றிருமரபுதயங்கச்
செந்திருமேவருசிறுவனுமப்போ
திந்துவொடாதபனிருவருமன்பால்
வந்துதழீஇமெய்வயங்கினனைத்தான். (௯௭)

துன்மதியானசுயோதனன்மாழ்கித்
தன்மதியாலருடந்தையையெய்திப்
புன்மதியாமுரைசிற்சில்புகன்றான்
மன்மதியாதுமதித்தலிலாதான். (௯௮)

உன்பதம்யாவுமுதிட்டிரனுக்கே
மன்பதையோடுவழங்கினையெந்தா
யன்பதிலாவவனநுசர்மதத்தா
லென்பதமம்மவிறந்ததையின்றே. (௯௯)

என்றனுமைந்தனையிந்துகுலத்தோய்
நின்றிலையான்மனுநீதியிலையா
பொன்றியவெம்பிபதம்புதல்வர்க்கே
யன்றிநமக்கரசாளுதலாமோ. (௧00)

நீதியிலாநெறியெண்ணினைநீயிங்
கோதியவாய்மையினுறுபொருளின்றா
லாதிபராயவரைவருநீரு
மேதினியாளுதல்வேத்தியல்பென்றான். (௧0௧)

இகன்மிகுகன்னனுமென்னிளையோருஞ்
சகுனியுமுண்டுதகுந்துணைநெஞ்சி
னுகவையிலாரொடுறேனினியென்றே
முகமுகுரம்புரைமுதலொடுசொன்னான். (௧0௨)

பாதகனன்றுபகர்ந்தமொழிக்கே
பேதகனானபிதாமருளெய்தா
மேதகவாழ்வுறுவில்விதுரற்கு
நாதகுநல்லுரைநதிமகனுக்கும். (௧0௩)

ஈண்டினியென்செய்வதெண்ணுமினிங்ஙன்
பாண்டவரோடுபயின்றுறையாது
தூண்டுபரித்துரியோதனன்முதலோர்
பூண்டனர்வெம்பகைவாழ்வுபொறாதார். (௧0௪)

ஒருதிறலிங்கருறைதரினென்று
திருதிறன்மைந்தருமிகனுவர்மேன்மே
லருகணுகாவகைபகலவிருந்தான்
மருவுறுநண்புவளர்ந்திடுமென்றே. (கoரு)

இம்மொழிகூறலுமிருவருமெண்ணித்
தெம்முறையாயினர்சிறுபருவத்தே
யெம்முரைகொள்கலரினியவர்மதியே
தம்மதியேமதியாகுவதென்றார். (கoசு)

விதுரனும்வார்கழல்வீடுமனுந்தம்
மிதயநிகழ்ந்ததியம்பியபின்னர்ப்
பொதுமையிலாதபுரோசனனென்னு
மதியுடைமந்திரிவருகெனவந்தான். (கoஎ)

வந்தவமைச்சனுமைந்தனுமற்றத்
தந்தையுமங்கொருதனிவயினெய்திச்
சிந்தனைசெய்தனர்தீமைமனத்தோர்
குந்திமகாருயிர்கோடல்புரிந்தே. (கoஅ)

வேறு.

ஆரணாதிபபாரும்புகழ்வது
நாரணாதியர்நண்ணுஞ்சிறப்பது
தோரணாதிதுலங்குபொற்கோபுர
வாரணாவதமாநகரங்கணே. (கoகூ)

சென்றிருக்கத்திருவாய்மலர்கென
வொன்றுபட்டுமகன்றெழுதோதினா
னன்றுதொட்டுயிரன்னவமைச்சனா
னன்றுபட்டதந்நன்னகரெங்குமே. (ககo)

சிற்பநூலிற்றிருந்தியமாக்களாற்
பொற்பமைந்துபொலிந்ததப்பொன்னகர்
கற்பகாடவியல்லதுகண்டவ
ரற்பமென்னவமராவதியையே. (ககக)

அறத்தின்மைந்தனுக்காங்கொருநாளவைப்
புறத்திருந்துபுகன்றனன்காவலன்
றிறத்துநின்னிளையோரொடுஞ்சென்றுதோண்
மறத்தினாற்றனிவாழுதியென்னவே. (ககஉ)

புகன்றகேள்விப்புரோசனன்றன்னையிம்
மகன்றனக்குநீமந்திரியாகியே
யிகன்றவர்ச்செற்றினியோர்க்கினிமைசெய்
தகன்றஞாலமிவன்வழியாக்குவாய். (ககங)

என்னவாங்கணிறைஞ்சியனந்தரஞ்
சொன்னசொற்படிசூழ்படைவேண்டுவ
வென்னவுங்கொண்டிளவரசோடுமப்
பொன்னகர்க்கொடுபோயினனென்பவே. (ககச)

ஆரமார்புடையைவருங்குந்தியும்
பூரஞானபுரோசனநாமனுஞ்
சேரவெண்பிறைச்செஞ்சடைவானவன்
வாரணாவதஞ்சென்றுவணங்கினர். (ககரு)

அங்கவன்றனருள்*பெற்றமைச்சனங்
கிங்கிதத்தொடியற்றியநீள்கொடி
மங்குறோய்மணிமாளிகையெய்தினர்
சங்கம்விம்மமுரசந்தழங்கவே. (ககசா)

ஆவியன்னவமைச்சன்மொழிப்படி
மேவியத்திசைவேந்தர்குழாந்தொழக்
கோவினாணைநடத்திக்குவலயத்
தேவிமெய்களிக்கச்சிறந்தாரரோ. (ககஎ)

வேறு.

மன்னரைவரும்வாரணாவதந்தனின்மருவித்
துன்னலார்தொழத்தொன்னிலம்புரந்திடுநாளிற்
பின்னநெஞ்சுடைப்புரோசனன்பேதுறுமதியான்
முன்னமே†யினிதமைத்திடுமனைச்செயன்முன்னு. (ககஅ)

மெழுகினானமக்காலயம்வகுத்ததும்விரகே
யொழுகுகின்றதன்னொழுக்கமும்வஞ்சனையொழுக்கே
யெழுகடற்படையாவையுமிவன்வழியனவே
தொழுதகையுளும்படையுளசூழ்ச்சியும்பெரிதால். (ககசூ)

சங்கையுண்டினியுண்டியுஞ்சாந்தமும்பூணும்
பொங்குநுண்ணிழைத்துகிலுமந்தாமமும்பூவும்
மிங்கிவன்பரிந்தியற்றியகோடலமென்றார்
கங்கைநீர்தவழ்கழனிசூழ்பழனநாடுடையார். (க௨0)

ஐயமுற்றிவரிருப்புழிமயனினுமதிகன்
சையமொத்ததோள்வலனுடைத்தபதியனொருவன்
வையமுற்றுடைவீமனையொருதனிவணங்கி
யையபட்டதையறிந்தருளாமுறையென்றான். (க௨க)

நந்தையேவலிற்கம்மியர்நூதனமாக
விந்தமாநகர்த்திருமனையியற்றிடுநாளின்
வந்தமந்திரிவஞ்சனையறிந்தறன்வடிவாந்
தந்தையென்னையுமேவினன்றன்மையினுணர்ந்தே. (க௨௨)

---

* பெற்றழகுற என்றும் பாடம்.

† இனிதமைத்தமன்மனை என்றும் பாடம்.

அடியனேனுமற்றவருடனரக்குமாளிகையிப்
படியினாலியற்றியதொழிற்பயனெலாங்குறித்து
நெடியகானகத்தளவுநீணிலவறைநெறிபோய்
முடியுமாறொருமண்டபங்கோட்டினேன்முழைபோல். (௧௨௩)

வேறொருத்தருமறிவுறாவிரகினாலொருநாண்
மாறுபட்டுநீபறிக்கலாம்வகைவழிவகுத்தேன்
றேறுதற்கிதுதகுமெனத்திருவுளத்தடக்கி
யூறுபட்டபோதெழுந்தருள்கெனப்பணிந்துரைத்தான். (௧௨௪)

தச்சரிற்பெருந்தலைவனுக்குரிமையிற்றனங்கள்
பிச்சரிற்கொடுத்தவன்விடைகொண்டதன்பின்ன
ரச்சமற்றிவனம்மனைக்கம்மனைவழங்கு
நிச்சமின்றுகொலென்றுகொலெனநினைந்திருந்தான். (௧௨௫)

விடவிவன்சினைநெடுங்கொடிதழுவலின்மிடைந்த
வடவியெங்கணும்வேட்டையாற்றங்கள்பேராண்மை
நடவினன்பகலிரவுகண்டுயிலலர்நடந்தார்
புடவிதங்கள்வெண்குடைநிழற்குளிருமாபுரப்போர். (௧௨௬)

பாந்தளோடொருமனைவயிற்பயில்பவர்போல
வேந்தரைவருமந்திரவலியினான்மிக்கோர்
காந்துநெஞ்சுடையமைச்சனைக்கைவிடாரணுகித்
தாந்தமெய்யெனவுயிரெனத்தனித்தனிசார்ந்தார். (௧௨௭)

ஆங்கொர்கங்குலினழைத்துநீடரசியனுசாவி
யீங்குநீதுயில்வைகுதியெம்முடனென்னப்
பாங்கர்மெல்லணைப்பள்ளியும்பரிவுறவழங்கித்
தாங்களும்பொலஞ்சேக்கையிற்றங்கினரன்றே. (௧௨௮)

உணர்வறத்துயிலுற்றபோதற்றமங்குணராத்
துணைவரைத்திருத்தாய்பதந்தொழூகெனச்சொல்லி
யணிகொள்கோயிலைத்தாதைநண்பனுக்கிரையளித்தா
னிணையிலாவமுதரசர்கோனிடைநுகர்ந்திருந்தான். (௧௨௯)

முடியுடைத்தடங்கிரியினைமுளிகழைதொறுமுற்
றடிநிலத்துறச்சூழ்வருமாறுபோலழலோன்
கொடிநிரைத்தபொற்கோபுரப்புரிசைசூழ்கோயி
லிடிபிடித்தெனவெடிபடச்சிரித்தெழுந்தெரித்தான். (௧௩௦)

அக்கணத்திடையன்னையிலணுகியாங்கவரைத்
தொக்கசித்திரத்தூணடித்துவாரமேவழியாப்
பொக்கெனக்கொடுபோயகல்வனத்திடைப்புகுந்தான்
முக்கணற்புதன்முனிந்தவூர்மூவரோடொப்பான். (௧௩௧)

புரிந்ததீயினைக்கண்ணினீரவித்திடப்புகுந்து
பரிந்தநெஞ்சினைமீண்டுமெப்பாவகன்சுடவே
கரிந்தகோயிலிற்காரிருள்புலர்ந்தபின்கண்டோ
ரெரிந்துவீழ்ந்தனரைவரும்யாயுமீண்டென்றார். (௧௩௰௨)

விருந்தராய்விடமிடச்செலேவேடருந்தாயு
மிருந்ததீமதியமைச்சனோடிறந்தமையுணரார்
திருந்துமாமதிப்பாண்டவர்செயலுமற்றறியார்
வருந்தினார்தமதுயிரிழந்தெனப்புவிமன்னர். (௧௩௰௩)

போதுபட்டிருள்புகுந்தொளிபோனவானகப்போன்
மாதுபட்டபார்மடந்தைதன்மதிமுகமழுங்சத்
தீதுபட்டதுகுருகுலச்செல்வமென்றிரங்கி
யேதுபட்டனமுனிவரர்முதலினோரிதயம். (௧௩௰௪)

கொட்பனற்சுடவிறந்தமைகேட்டலுங்குருக்க
ளுட்பதத்துடனழுதிடுஞ்சுயோதனன்முதலோ
ருட்பனித்துமேல்வெயிலுறவெதும்புநீரொத்தார்
பெட்புறப்புவிமுழுவதும்பெறுங்கருத்துடையோர். (௧௩௰௫)

பொன்னலங்கொளமெழுகினாலாலயம்புனைந்து
துன்னுவெங்கதைப்படைமருச்சுதனையேசுடுவா
னென்னவாண்மைகொலெண்ணினானெண்ணினுஞ்சுடுமோ
வன்னிதன்பெயர்மருச்சகனென்பதுமறந்தே. (௧௩௰௬)

வாரணவதச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் — ௪௰.

வேத்திரகீயச் சருக்கம்.

*சீதநாண்மலர்க்கோயின்மேவுசெந்திருவினாயகன்றேவநாயகன்
வேதநாயகன்பூதநாயகன்விரதநாயகன்விபுதநாயகன்
போதகாதிபன்முதலைவாயிடைப்பொறைதளர்ந்துமுன்பொதுவிலேகினோ்
தாதிமூலமேயென்னமுன்வருமாதிநாயகனடிவணங்குவாம். (௧)

தோள்கரம்புறந்†தன்னிலன்னையுந்துணைவர்நால்வருந்தொக்குவைகவே
கோள்கரந்தபஃறலைபராவெனக்குகரநீணெறிக்கொண்டுபோயபின்
றாள்களின்கதித்தாள்பறிந்துவீழ்தருவனத்ததோர்சாரன்மன்னினான்
மூள்கடுங்கொடுஞ்சினவனற்கண்மாழும்மதக்களிறனையமொய்ம்பினான். (௨)

---

* இச்செய்யுள்சிலபிரதிகளிலில்லை.

† தம்மிலென்றும் பாடம்.

அவ்வனத்தில்வாழரமடந்தையென்றையமெய்தவோரடலரக்கிவந்
திவ்வனத்திலிந்நள்ளியாமநீயென்கொல்வந்தவாறிவர்களியாரெனச்
செவ்வனத்திதழ்க்கூரெயிற்றெழுந்தெண்ணிலாவினிற்றிமிரமாறவே
வெவ்வனற்சுடர்க்கொத்தவோதியாள்விடசேனனோடுரைவிளம்பினாள். (௩)

யானும்வந்தவாறுரைசெய்கேனினக்குரைசெய்நீயெனக்கியார்கொலென்னலுந்
தானுமங்கவன்றன்னொடோதுவாடமூவுமாதரந்தங்குசிந்தையா
ளூனுகந்துதின்றிடிமிடிம்பனென்றொருவனிங்கிராவணியையொத்துளான்
மானுடங்கொண்மெய்க்கந்தமூர்தலால்வரவறிந்தனன்வாளரக்கனே. (௪)

எம்முனேவலால்யான்மலைந்திடற்கெய்தினேனினைக்கொன்றுமென்பய
னம்மவெற்பிரண்டனையபொற்புயத்தழகெறிக்குநீடாரமார்பகேள்
கொம்மைவெம்முலைத்தெரிவையர்க்குளங்கூசுமாசைநோய்கூறுகிற்பதென்
றெம்மனோர்களுஞ்சொல்வர்யானுனக்கெங்ஙனேகொலாமிறுதிகூறுகேன். (௫)

பெருஞ்சுழிப்படக்கரைபுரண்டெழப்பெருகும்யாறுபின்பிறழ்கலங்கல்போ
யருஞ்சுவைப்படுந்தெளிவினோடுசென்றாழிவேலைவாயணையுமாறெனப்
பொருஞ்சினத்துடன்கொன்றுதின்றிடப்போதருந்தொழிற்பேதைநான்மெலிந்
திருஞ்சிறைச்சுரும்பிசைகொண்மாலையாயின்பமாலுழந்துன்னையெய்தினேன். (௬)

நீடியிங்குநானிற்கின்மாரனுநிருதனிற்கவந்நிருதன்வெம்மையோ
டோடிவந்தெனைக்கொல்லுமும்மையுமொருகணத்திலேயுயிர்செகுத்திடு
நாடியென்கொன்மற்றுய்ந்துபோகலாநம்பியென்னைநீநலனுறத்தழீஇக்
கோடியம்பரத்திடையெழுந்துனைக்கொண்டுபோவலோர்குன்றிலென்னவே. (௭)

இரக்கமின்றியேதனிவனத்திலேயிளைஞரெம்முன்யாயிவரைவிட்டெமைப்
புரக்கவல்லனென்றொருமடந்தைபின்போவதாடவர்க்காண்மைபோதுமோ
வரைக்கண்வாழ்வுகூர்நும்முனைம்முனேமலையவெண்ணிமேல்வந்தபோதுபா
ரரக்கனாகிலென்னவுணனாகிலென்னவனையோர்கணத்தாவிகொள்வனே. (௮)

இடிம்பைதன்மனங்கொண்டகாளையிங்கிவையியம்பலுநவையிடிம்பனும்
கொடும்பெருஞ்சினங்கதுவுகண்ணினன்குருதிநாறுபுன்கூரெயிற்றின
னுடம்புபெற்றதோரிருண்முகத்திலேயோரிரண்டுவெஞ்சுடருதிக்கவு
நெடும்பிறைக்கொழுந்தோரிரண்டுவானிலவெறிக்கவுநின்றநீர்மையான். (௯)

இடிபடுத்தெழுந்தெழிலிமின்னுமாறென்னநீடுகுன்றெதிரொலிக்கவே
வெடிபடச்சிரித்திருபுறத்துநாமிளிரவுட்புகைந்தொளிரும்வாயின
*னெடில்படுத்தவெங்கானமெங்கணுநிழல்படுத்திவானுறநிமிர்ந்துளான்
கொடிபுடுத்தநுண்ணிடையிடிம்பையைக்கூவியவ்விடைக்குறுகினனரோ. (௧௦)

உணவினாசையாற்கொல்லவந்தநீயுவகையாசையாலுள்ளழிந்திவன்
கணவனாமெனக்காதலிப்பதேதகங்குல்வாணர்தங்கடனிறப்பதே
யணவுவெம்பசிக்கனலவிந்துபோயநங்கவெங்கனற்கொளுமடற்புலிப்
பிணவையன்பினிற்கலைநயப்பதேபேதைமானுடன்பேசுகிற்பதே. (௧௧)

---

* நெடிபடுத்த வென்றும்பாடம்.

வாரடாவுனக்கியாதுதானர்தம்மகளடுக்குமோவானமாதர்தோள்
சேரடாமலைந்துயிரைமெய்யினைத்தின்றுதேவரூர்சேருவிப்பன்யான்
போரடாதுன்னோடாளியேறுபுன்பூனைதன்னுடன்பொரநினைக்குமோ
பாரடாவெனுண்மையையரக்கர்கைப்பட்டபோதில்யார்பாரில்வைகினர். (௧௨)

என்றுசீறிமற்றிவனடுத்தல்கண்டிணையிலாவிற்றுணைவர்நால்வரு
நின்றயாயுமற்றொருபுறத்திலேநிற்கமையல்கூர்நிருதவல்லியும்
வென்றிநல்குமாவந்தவிந்தைபோல்விழிபரப்பமேல்வீமசேனனுஞ்
சென்றுகைகளாற்பற்கணுவுடன்சிதறவாயினிற்சென்றுகுத்தினன். (௧௩)

குத்தினனிவன்குணபவல்சிதன்கூர்நகக்கரங்கொண்டுவீமன்மேன்
மொத்தினன்முனைந்திருவரும்பொருர்முரணுடன்சினமூளமூளவே
தத்தினர்பிடுங்கியமரங்களாற்சாடினர்புயசயிலமொன்றொடொன்
றொத்தினரிபண்டம்புதங்கள்வானுருமெறிந்ததொத்தோசைமிஞ்சவே. (௧௪)

வளர்ந்ததிண்கருங்குன்றுகாந்தளைபலர்வதென்னவேவானகம்படக்
கிளர்ந்தசெம்புணீர்பொசியுமெய்யினன்கேதநெஞ்சினன்கோதவாய்மையன்
றளர்ந்துவீழ்நிசாசரனுமாடகன்றன்னையொத்தனன்பின்னைமுன்னுறப்
பிளந்தகோளரிதன்னையொத்தனன்பிரதையென்னுமின்பெற்றகாளையே. (௧௫)

வேறு.

வன்றிறலிடிம்பனைவயக்கையாலுட
லொன்றிரண்டாகுமாறுடன்றமைந்தனை
யன்றுகண்டனளியாயரியின்பேடுதன்
கன்றுதிண்கரிபொரக்கண்டதென்னவே. (௧௬)

இளைஞருந்தம்முனுமிவனரும்பகை
களைகுவனினியெனக்கண்களித்தனர்
விளைவுறுகாதலான்மெலிந்தபாவையு
முளைவுடனுவகையுமொருங்கினெய்தினள். (௧௭)

பெருந்திறனிசாசரப்பிணத்தையவ்வனத்
திருந்துளபறவைகட்கிருள்செய்கங்குலின்
விருந்திடக்கொளுத்தியவிளக்கெனும்படி
யருந்திசைபொலிவுறவருக்கன்றோன்றினன். (௧௮)

கரங்களானிசாசரவிருளைக்காய்ந்துகொண்
டிரங்கிநீள்வனத்திடையிரவின்மாழ்கிய
வரங்கொடாமரைமுகமலர்த்துநீர்மையா
லுரங்கொள்வீமனுக்கெதிருதயபானுவே. (௧௯)

எண்டருகுகவர்மனத்திடிம்பைமன்மதன்
மண்டெரிசுடுதலின்வாடுமேனியள்
கொண்டவெங்காதலின்குறிப்பையவ்வழிக்
கண்டனன்காணலற்செற்றகாளையே. (௨௦)

மாய்ந்தவன்றுணைவிகேள்வதுவைபின்னமு
மேய்ந்திலனெம்முனும்யாங்கண்மானுட
ராய்ந்துகொண்முறைமையாலரக்கர்பாவைநீ
காய்ந்தமையறிதிமுன்கணையிராமனே. (௨௧)

ஆசைகொளரக்கியோடனிலன்காதலன்
பேசியகட்டுரைகேட்டபெற்றதா
யோசைகொண்மைந்தரோடுசாவிநண்பினு
லேசறவுரைத்தனளினிமைகூரவே. (௨௨)

மறுத்துரைப்பதுகடனன்றுமாந்தருக்
கறத்தியலார்கணுமமைதல்வேண்டுமா
லுறத்தகுமிவளைநீயும்முன்வாய்மையாற்
கறுத்தவருயிர்கவர்காளையென்னவே. (௨௩)

அன்னையுந்தம்முனுமறைந்தவாசக
முன்னையின்மறையெனமுடியிற்சூடினன்
மின்னையுமுடன்கொடுபோந்துமேவுநீர்
தன்னையுங்கண்டதிற்றுளைந்துதங்கினர். (௨௪)

அத்தினத்தவர்வயினவலநீக்குவான்
மெய்த்தவப்பழமறைவியாதன்வந்தனன்
பத்தியிற்சிறுவரும்பணிந்துபோற்றினர்
முத்திபெற்றவரினுமுற்றுஞ்சிந்தையார். (௨௫)

தனிவனமிகந்துநீர்சாலிகோத்திர
முனிவனஞ்சிலபகல்வைகிமுந்துற
மனனுறப்பார்ப்பனமாக்களாகியே
யினிமையின்வேத்திரகீயமெய்துவீர். (௨௬)

எனத்தமபடரொழித்திமையவன்செல
வனத்தைவிட்டவ்வனமருவிவைகினர்
வினைப்படுத்தியாழினோர்முறைபின்வேள்விசெய்
கனக்குழற்கன்னிதன்காதலாளொடே. (௨௭)

குந்தியையிரவுநன்பகலுங்கோதிலா
வந்தனைபுரிதலின்மகிழிடிம்பையும்
வெந்திறல்வீமனும்விழைந்துவள்ளியுங்
கந்தனுமெனப்பெருங்காதல்கூரவே. (௨௮)

மான்மதங்கமழ்கொடிமந்திரந்தொறுங்
கான்மணங்கமழ்தடங்காவகந்தொறுந்
தேன்மிகுசுனைநெடுஞ்சிலம்பகந்தொறு
மேன்மணம்புரிந்தனர்வேட்கைவிஞ்சவே. (௨௯)

நிறந்திகழிருட்பிழம்பெனநீண்டறப்
புறந்தருமுரோமமும்பொருப்புத்தோள்களு
மறந்தருகணைகுரல்வாயுமாகவே
பிறந்தனன்கடோற்கசனெனனும்பேரினன். (௬௦)

காதியதிறனரகாசுரன்றனை
யாதிவெங்கோலமன்றளித்தவாறுபோன்
மேதினிமதித்தபோர்வீமனல்கிய
சோதியம்புதல்வனுந்தொழுதுசொல்லுவான். (௬௧)

நிறையுடைத்தந்தையர்நீர்நினைத்தபோ
துறைவிடத்தெய்தியாங்குரைத்தசெய்குவே
னிறைவவிப்பணிவிடைதருகென்றேகினான்
பிறையெயிற்றியாயொடும்பெற்றபிள்ளையே. (௬௨)

சாத்திரமறைதெரிமுனிவர்தன்மையிற்
காத்திரமாறியக்காவல்வேந்தருங்
கோத்திரஞ்சூத்திரங்குடியுரைத்துளார்
வேத்திரகீயமாநகரின்மேயினார். (௬௩)

அந்தணரைவரும்யாயுமங்கர்
வந்துழியதிதியர்வரவுகாண்டலு
முந்துபுமுந்துபுமுகமன்கூறினார்
செந்தழல்வேள்விகூராதிதேயரே. (௬௪)

நன்மனைவாழ்க்கையினயர்தசிந்தையான்
மன்மனையனையதன்மனையிலோர்முனி
தன்மனையம்மனைதம்பிமாரொடு
மென்மனைவருகெனவெதிர்கொண்டேகினான். (௬௫)

ஒருதினத்தமுதெனவுள்ளநாளெலாம்
வருமுறைப்படிவிருந்தயின்றுவைகினா
ரருநெறிக்கடவுளர்க்கமுதமூட்டுத
லிருபிறப்பாளருக்கென்றுந்தன்மையே. (௬௬)

பொன்னகரணுகினர்போலநெஞ்சுறத்
தங்கரெனும்படிதாயுமைந்தரு
மிந்நகரநேகநாளிருந்தவெல்லையி
லந்நகர்புரிந்ததோராண்மைகூறுவாம். (௬௭)

வேறு.

மறையுமுருவினொடரியகுருகுலமகிபர்நெடுவனசரிதரா
யுறையும்வளமனையுடையமடவரலுருகுபிரதைதனுயிரனாள்
குறைவில்பொலிவினள்விரதநெறியினள்குழுவுகிதியினள்கொடுமையா
லிறையுமொழிவறவிருகணறல்வரவெரிகொள்கொடியெனவினையினாள். (௬௮)

மறுகியழுவதென்மொழிகமுனிவரன்மனைவியெனவிவள்வினவலுங்
குறுகியவளுடனுரைசெய்குவளுறுகுறையையுளநனிகுறையவே
முறுகுசினவனல்பொழியும்விழியினன்முகனில்பகனெனுமுராணுடைத்
தறுகணிசிசரனுளனிவ்வளநகர்தழுவும்வனனுறைதகுதியான். (௩௯)

அருளிலிதயமுநெறியில்சரிதமுமழகிலுருவமுமதிர்குரற்
பொருளிலுரைகளுமுடையன்முழுதுடல்புலவுகமழ்தருபொறியினன்
மருளுநரியொடுகழுகுதொடர்தரவலியபிணநுகர்சுவையரு
திருளின்மிசையிருபிறைகளெனவளையெயிறுநிலவெழுமிதழினன். (௪0)

அந்தகனுமிகவஞ்சிமுதுகிடுமந்தநிசிசரனிந்தவூர்
வந்துகுடியொடுகொன்றுபலரையுமன்றமறுகிடைதின்றநா
ளெந்தைமுதலியவந்தணருமவனிங்குவருதொழிலஞ்சியே
சிந்தைமெலிவுறநொந்துதலைதிசைசென்றுகுவிதருசெங்கையார். (௪௧)

ஒன்றுபடவெதிர்கொன்றுபலருபிருண்பதறநெறியன்றுநீ
யின்றுமுதலினியென்றுமுறைமுறையெங்கண்மனைதொறும்விஞ்சையோர்
குன்றமெனவொருபண்டியறுசுவைகொண்டவடிசிலுநங்குலந்
துன்றுநரபலியொன்றுமிவைதிறைதொண்டுபுரிகுவமென்றலும். (௪௨)

அன்றுமுதலடல்வஞ்சகனுமிறையன்பினொடுபெறுவன்பினு
லென்றுநிலைபெறவுண்டியுடன்மனையெங்குமிடுபலியெஞ்சுறத்
தின்றுதிரிகுவனின்றெண்மனைமுறைசென்றுபணிகவர்திங்கள்போ
னின்றுதளர்வுறுகின்றதெனதுயிர்நெஞ்சமிலதொருதஞ்சமே. (௪௩)

கன்னியிவள்பிறர்பன்னியெனதிருகண்ணின்மணிநிகர்சன்மனு
மன்னுகுலமுதல்பின்னையொருவருமண்ணினுறுதுணையின்மையா
லின்னல்பெரிதுளதென்னபுரிகுவதென்னவறிகிலனன்னைகேண்
முன்னைமனைநிகழ்தன்மமுனிவனைமுன்னிலிடர்நனிதுன்னுமால். (௪௪)

ஏதமறவுறவானமனைமகள்யாவுமுரைசெயயாதவன்
றீதில்குலமகளார்வமுடனவடேறவொருமொழிகூறுவா
ளாதியனுமனொடோதுமுவமையனுடல்வலியுடையாண்மையான்
*மோதிமிகுதிறல்யாமசரிதனைமூளையுகவுடல்கீளுமே. (௪௫)

கொவ்வையிதழ்மடநவ்வியலமரல்குவ்வினனலிலும்வெவ்வியோ
ரைவருளர்சுதர்கைவில்விறலினரவ்வியமுமிலர்செவ்வியோ
ரிவ்விவரிலெமையுய்வுகொளுமவனெவ்வெவ்வுலகையும்வவ்வுதிண்
பௌவமெனநனிதெய்வமுனிவரர்பைதலறநெறிசெய்வனே. (௪௬)

அவனையிடுபலியருளுகெனமொழியளவின்மறலியுமுளைவுறச்
சிவனைவழிபடுமகவையருளியசெனகசெனனியர்நிகரெனத்
தவனின்முதிர்தருமுனியும்வழுவறுதனதிலறனுடைவனிதையும்
துவனிபறமனமகிழ்வொடினிதறுசுவைகொளமுதடுதொழிலராய். (௪௭)

---

* மோதியிடையிருள்யாமசரிதனை என்னும்பாடம்.

தண்டரளமலைவெண்கயிலைமலைசங்கமலையெனநங்கைமார்
மொண்டுசொரிதருகின்றவடிசிலுமுந்துகறிகளும்வெந்தபான்
மண்டுநறுநெயொடந்தவிடலைபுமைந்தரனைவருமுண்டுதம்
பண்டிநிறைவுறுபின்புபிறிதொருபண்டிகொழுமியபண்டமே. (௪௮)

வையமுழுதுடையையனிளவலும்வைகலுடன்மனைவைகுவோ
ருய்ப்பும்வகைபுகலையையுரையினைபொய்யென்விரைவொடுகைகொளா
வெய்யபகனுடல்பெய்தகுருதிபின்மெய்யையெழிலணிசெய்தனன்
செய்யமலர்கொடுசெய்யதுகில்கொடுசெய்பகலவைபின்மொய்கொடே. (௪௯)

துற்றபலகறிசெற்றியமலைசெய்துப்பொரிமகிரியொப்பெனச்
சற்றுமிடனறமொய்த்தசகடிருசக்கிரவுருளைகளுய்க்கவே
யுற்றநிரைநிரைபத்திபடவலியொத்தபகடுகள்கட்டின
னெற்றிமிசையொருகொற்றவடலரிநிற்பதெனவொளிர்பொற்பினன். (௫௦)

வேறு.

மண்டலங்கொள்வடிவுடனடற்பரிதிமண்ணில்வந்ததெனமறுகினிற்
கண்டகண்டமுனிகுலமடங்கவிருகண்களிக்கவருகாட்சியான்
வெண்டரங்கமெனவீசுபேபிரதமிஞ்சுகானநெறிமீதுபோ
யண்டரண்டமுகடுறவளர்ந்தனனரக்கனின்றவுழியறியவே. (௫௧)

களிந்தவெற்புதவுநீலமாநதியடுத்ததுன்றிலொருகழிமுழைத்
தெளிந்தபற்களொடுநாவைமென்றுநனிதின்றுவெம்பசிகொடீயினன்
முளிந்துமுற்றுமனம்வேவவேவநெடுமூச்செறிந்துபுகைமுகனுடன்
விளிந்ததொத்துவழிகுழிபநின்றுசுழல்விழிநிரைத்தபரும்வெகுளியான். (௫௨)

வெற்றெலும்பினுபராசனந்தனில்விகங்கநீழலிடைமேவரச்
சுற்றுநின்றுபலசம்புகங்கடுதிசொல்லவல்லன்மிகுதுன்முக
னுற்றுநின்றநிலைகண்டுகந்திவனையுயிரொழிந்திடவுடற்றின
லிற்றைபுண்டிகெடுமென்றுபண்டியிலெடுத்தவல்சிநுகரிச்சையான். (௫௩)

வன்பினுலுரகபதியளித்தநெடுவாரியாரமுதமுண்டகோ
முன்பினுகவுயர்சகடிருந்தெதிர்முகந்துகொண்டுவரைமுழைபுளே
யன்பினுலடையுமன்னமென்னநிறையன்னமுற்றவுமருந்தினன்
பின்பினுகவிதுகண்டுவெம்பசிகொள்பகனுமெய்தியிவைபேசுவான். (௫௪)

புலிதனக்கிடுவிடக்கைநின்றதொருபூனைதின்னுமதுபோலநீ
பலியனைத்தையும்விழுங்கினுலிதுபலிக்குமோவெளிமைபாரென
வொலிபடக்கிரியிலுருமெறிந்ததெனவோடிவந்துபிடரொடியவே
வலிபடப்பணைவிறற்றடக்கைகொடுமாறிமாறிமுறைவீசினன். (௫௫)

பக்கமும்பிடருமொக்கமுட்டிகள்படப்படக்கவளதாரமாய்
விக்கநின்றனவயிற்றிரண்டருகும்விழவிழமுன்விழுங்கலும்
புக்கபண்டமுடனுன்னுடற்றசைபுசிப்பனெங்ஙனிவைபோவதென்
றக்கடுங்கையுமிளைத்துவெஞ்சினமுமாறிநின்றனனரக்கனே. (௫௬)

அச்சகட்டினிலொரெட்டுணைச்சுவடுமற்றபின்சிறிதுமச்சமற்
றுச்சமுற்றவெயிலர்க்கனைத்தவனொடுத்தரித்துரைசெய்தொட்டினான்
மெச்சமெச்சுமுலகத்தரக்கர்களில்விக்கிரமத்திறலின்மிக்கநீ
கச்சகச்சபலகத்தைவிட்டினதுகட்டுரத்தினொடுங்கட்டுவாய். (௫௭)

சொல்லியென்பயனரக்கனீமணிதன்யானுனக்குரியதொழில்களா
மல்லினும்படைவிதத்தினுஞ்செருவில்வல்லவல்லனபுரிந்துபோர்
வெல்லநெஞ்சமுளதாகில்வந்துபொருவிறலிடிம்பனையும்வென்றானைக்
கொல்லவந்தனனெனப்*புகன்றிருகைகொட்டிவாகுமிசைதட்டினான். (௫௮)

பட்டவர்த்தனர்கள்பொற்சிரத்தின்மலர்பொற்புடைச்சரணபற்பனு
நெட்டிருட்சரனும்வெற்புவெற்பினொடுநிச்சயித்துடலநிற்பபோல்
வட்டம்வட்டம்வரவொட்டியொட்டியுறுமற்றொழிற்செருவின்மட்டியா
முட்டியுத்தநிலைகற்றகற்றவகைமுற்றமுற்றவெதிர்முட்டினார். (௫௯)

கரங்கரத்தொடுபிணங்கவுந்தமதுகால்கள்கால்களொடுகட்டவுஞ்
சிரஞ்சிரத்தினொடுதாக்கவுங்கொடியசிங்கவேறனையதிறலினா
ருரங்களிட்டும்வளர்தோள்களிட்டுமெதிரொத்திமற்சமருடன்றபின்
மரங்களிட்டுமுயர்கற்களிட்டுநெடுவாதினோடிகலிமோதினார். (௬௰)

உலாவருந்தனதுதாதையொத்தவலியுடையகாலைகழலுதையினால்
விலாவொடிந்துதடமார்பொடிந்துமிடல்வெரிநொடிந்துபடுவெம்பிணப்
புலாலலைந்தவிருகவுளொடிந்துபொருபுயமொடிந்துகடையொத்தவாய்
நிலாவெழுங்கொடியவெயிறொடிந்துசெயலின்றிவாணிருதனிற்கவே. (௬௧)

உண்டிபற்றபருப்பாதுதானனடியுண்டுமெய்த்தளர்வொழிந்தபின்
மண்டியிட்டெதிர்விழுத்திமார்பினிபமத்தகத்திடைமடங்கலிற்
றிண்டிறற்பெருமிடற்றைவன்பினொடுதிருகிவீசியொருசெங்கையாற்
பண்டியிற்கடிதினிட்டுமாருதிபுகுந்தனன்பழையபதியிலே. (௬௨)

ஏகசக்கிரவனத்திருந்ததிறல்யாதுதானனையிமைப்பினிற்
சாகமுட்டியினடர்த்துமாமுனிவர்தம்பதிப்புறனடுத்ததோர்
வேகரிக்கடுவனத்திலிட்டுமலரோடைமூழ்கவிறல்வீமனு
மோகரித்தவுணரைத்தடிந்துகடன்முளரிநாயகனுமூழ்கினான். (௬௩)

வாசமாமணிவிளக்கெடுப்பவிவன்வந்துதாமுறையுமனைபுகுந்
தீசனோடுமையெனத்தவம்புரியுமிருவர்தாள்களுமிறைஞ்சியே
நேசமானவருளன்னையைத்தொழுதுதம்முனைத்தொழுதுநெஞ்சுறத்
தேசினோடிளைஞர்தொழமகிழ்ச்சியொடுதழுவினான்முறைமைதிகழவே. (௬௪)

அகமலர்ந்துமுனியாசிசொற்றிடவுமன்னையார்வவுரைகூறவு
முகமலர்ந்துரியதுணைவராண்மைநிலைமொழியவுஞ்சமரமொய்ம்பனைச்
சகமலர்ந்ததிருவுந்திமால்கொலிவனென்றுமற்றுளசனங்களு
மிகமலர்ந்துபுனலோடையிற்குழுமிநனிவியந்திசைவிளம்பினார். (௬௫)

வேத்திரகீயச்சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள்-௪௭௫.

---

* புகுந்திருகைகொட்டிமார்பின்மிசைகுத்தினான் என்றும் பாடம்.

திரௌபதிமாலையிட்ட சருக்கம்.

இங்கிவரிவ்வாறிந்தவிருக்கையிலிருக்குநாளி
லங்கண்மாஞாலமெங்குமரக்குமாளிகையின்விந்தார்
பங்கமில்குணத்தான்மிக்கபாண்டவரென்றுமாழ்கத்
துங்கவேற்றுருபதன்றான்சூழ்ந்ததுசொல்லலுற்றாம். (௧)

வரத்தினாற்பிறந்தவாறும்வான்மொழிபுகன்றவாறுஞ்
சிரத்தினால்வணங்கிக்கேட்பத்தேசிகனுரைத்தவாறு
முரத்தினார்கெடாதவாறுமுணர்ந்துதன்பேதையின்னஞ்
சரத்தினாலுயர்ந்தவின்மைத்தனஞ்சயற்குரியளென்னா. (௨)

தான்வரித்தவற்கேயெய்தவுரியளென்றனையையென்று
கான்வரிச்சுரும்புண்மாலைக்காவலர்க்கோலைபோக்க
மான்வரிக்கண்ணிக்கேற்றவதுவைநாண்மலர்பூவொன்றைத்
தேன்வரித்தென்னவந்துதிரண்டதுகுமரர்சேனை. (௩)

ஆங்கதுநிகழ்ந்தமாற்றமந்தணனொருவன்வந்தோ
னீங்கிவர்க்குரைப்பமைந்தரைவரும்யாயுங்கேட்டுப்
பாங்குடைப்பதியில்வாழும்பார்ப்பனமாக்களோடுந்
தாங்கருங்கொடியகானந்தம்மனத்தேரிற்போனார். (௪)

சாரதந்திரத்தின்மிக்கதபோதனன்சதுர்வேதங்கள்
பாரதந்தன்னோடைந்தாம்படியினாற்பகர்ந்தமூர்த்தி
நாரதமுனியையொப்பானராதிபர்நடந்துசெல்லு
நீரதநெறியில்வாவிநிறைந்தநீரென்னநின்றான். (௫)

வணங்கலும்வாழ்த்திமுந்தவந்துநீர்வாழ்வுசெய்தீ
ரிணங்கிநங்கேண்மைகொள்வானிச்சையால்யாகசேன
னணங்கினையன்றுவேள்வியழலிடையளித்தானந்தச்
சுணங்கணிமுலையாளைச்சூட்டுவடொடையன்மாதோ. (௬)

இப்பகலிரவும்வைகாதேகியாங்கெய்துமங்க
ணப்பகன்மன்றல்பெற்றாற்றோற்றுதலாண்மையென்று
செப்பியேமுனிவன்போகச்சிறுவரும்பெரியகங்குன்
மைப்புறப்பார்த்தன்செங்கைமணிவிளக்காரப்போனார். (௭)

புத்திரன்பேரர்கங்கைப்பூந்துறையடைந்தபோதிற்
குத்திரவிஞ்சைவேந்தன்குறுகிவெங்கொடும்போர்செய்யச்
சித்திரத்தேரோன்றன்னைத்தேவர்கோன்மதலைசெந்தீ
யத்திரத்திருந்தைத்தேரோனாக்கினனிமைப்பினம்பா. (௮)

தோற்றவன்றிரிந்துமீண்டுதோர்முனைவ்விசயற்காக
வாற்றரும்புனலும்பாறுமவன்றுணையாகநீந்திச்
சாற்றுமுற்கசதீரத்துத்தௌமியமுனியைக்கண்டு
போற்றிமற்றவன்றனோடும்*புன்னெறிப்புறம்விட்டாரே. (கூ)

புலர்ந்தனகங்குற்போதும்பொழிதருபனியுஞ்சோர
மலர்ந்தனமனமுங்கண்ணும்வயங்கினதிசையும்பாரு
மலர்ந்தனதடமுங்காவுமார்த்தனபுள்ளுமாவுங்
கலந்தனகுருகும்பேடுங்கலித்தனமுரசுஞ்சங்கும். (க0)

குன்றமுங்கொடியகானுங்கூரிருட்கங்குனீங்கி
நன்றுநன்றுதவவந்தீர்நடந்துநீரிளைத்தீர்போலு
மென்றுகொண்டுவகையோடுமின்மலர்க்கமழுநீர்வாச
மன்றலந்தென்றல்வீசிவழிவிடாய்தணித்ததன்றே. (கக)

வெறிபடுமுளரிமொக்குள்விரிபதநோக்கிச்சுற்றும்
பொறிவரிவண்டினீட்டம்புறத்திருந்திரங்கவண்டொன்
றிறகரால்வீசியுள்புக்கின்மதுநுகர்தல்கண்டு
நெறியினன்னிமித்தமாகநெஞ்சுறநினைந்துசென்றார். (கஉ)

வண்டுறைமருங்கினாங்கோர்மாங்கனிவீழ்தல்கண்டே
தண்டுறைமீன்களெல்லாந்†தத்தமக்கிரையென்றெய்த
விண்டுறைகிழியவோடிவென்றொருவாளைதன்வாய்க்
கொண்டுறைவலிமைநோக்கிக்குறிப்பினாலுவகைகூர்ந்தார். (கங)

மாக்குரலளகவல்லிவதுவையினழகுகாணத்
தாக்குரலடிகொள்யானைத்தரணிபரெவரும்வந்தார்
வீக்குநன்மிளிர்பொற்பூணீர்விரைவுடன்வம்மினென்று
கூக்குரல்விளிப்பபோலுங்கோகிலக்குரலுங்கேட்டார். (கச)

நீடுதலில்லைபின்றேநிருபதிகன்னிமன்றல்
கூடுதலிவர்க்குண்டாகுங்கொற்றவர்குறைபொறாதே
யோடுதலுண்மையென்னத்தோகைகளோகையோடு
மாடுதனோக்கிநோக்கியகமகிழ்ந்தேகினாரே. (கரு)

பூவெலாஞ்சுரும்புமொய்ப்பப்புனலெலாம்புள்ளுவைக
மாவெலாந்துணையின்மேவமரனெலாம்வல்லிபுல்ல
வேவெலாம்பயின்றவிற்கையேற்றிளஞ்சிங்கம்போல்வார்
காவெலாமருங்குதோறுங்கண்டுகண்களித்துப்போனார். (கசு)

வாரணமாயைசூழ்ந்தமாயவன்றோற்றம்போலப்
பேரொளிபம்பியார்க்கும்பேசருஞ்சிறப்பிற்றாகிப்
பூரணகும்பம்பொற்கோபுரங்களாற்பொலிந்துதோன்று
மாரவமிகுந்தபல்புள்ளகழிசூழ்புரிசைகண்டார். (கஎ)

---

* புனநெறி யென்றும் பாடம்.

† தந்தமக்கு என்றும் பாடம்.

மங்கலமுழவம்விம்மமன்னுபல்லியங்களார்ப்பச்
சங்கினமுழங்கவெல்லாத்தானையும்பரந்துசூழ
வெங்கணுநெருங்கிவைகுமிராசமண்டலங்களோடுந்
துங்கவேற்றுருபதன்றன்றொல்லைமாநகரிபுக்கார். (கஅ)

தொடங்கியுந்தொடக்கந்தொட்டுத்துகளறவளர்ந்துமீள
மடங்கியுஞ்செல்லுகின்றமன்னுயிருலகமெல்லா
முடங்கியசார்ங்கச்செங்கைமுகுந்தன்வாய்ப்புகுந்தகாலத்
தடங்கியவுதரம்போன்றதந்தமாநகரியம்மா. (கக)

குழைப்புறங்கடந்தசெங்கட்குறுநகைக்கொவ்வைச்செவ்வா
யிழைப்பொலிமுலையினளுக்கிற்றைநாள்வதுவையென்று
மழைப்புறமாடமேறிவருநரைமலர்க்கைகாட்டி
யழைப்பனபோன்றவீதியணிகொடியாடையெல்லாம். (உo)

விண்டலம்புதைத்தபைம்பொற்றுகிலிடுவிதானநீழன்
மண்டகிற்புகையின்மூழ்கியாவணமறுகிற்செல்வங்
கண்டுகண்டரியேறுனின்கவினுடைநெடுந்தோல்போர்த்துக
கொண்டனசெயலாராங்கோர்குலாலனதிருக்கைசேர்ந்தார். (உக)

ஆங்கணற்றவத்தான்மிக்கவன்னையையிருத்திமைந்தர்
தாங்கண்முற்றுணையாய்வந்ததாபதர்தம்மோடெய்தித்
தூங்கணங்குரீஇயின்மஞ்சத்தலந்தொறுந்தூங்குகின்ற
தேங்கண்மாத்தெரியல்வேந்தர்சேர்ந்தபேரவையிலானர். (உஉ)

ஆதியிற்குந்திமைந்தரைவர்க்குமுரியளாமென்
றோதியவிதியினனெஞ்சலப்புறுவுவகைகூர்வாள்
சோதிடம்பொய்யாதென்றுந்தோன்றுவருரியோரென்றுந்
தாதியர்தேற்றத்தேற்றத்தன்மனத்தளர்வுதீர்வாள். (உங)

சூட்டியதொடையன்மாலைத்தோழியர்வைகறூறுந்
தீட்டியபடங்களுந்தஞ்சிந்தையும்பொலிவுகொள்ளக்
கோட்டியசிலையினேடுங்கொடிமணித்தேரினேடுங்
காட்டியகோலமன்றிப்பிறிதொன்றுங்காண்கிலாதாள். (உச)

ஆண்டெரிப்பிறந்தபோதேயன்பினலெந்தைநேர்ந்த
பூண்டெரிமார்பனின்றிப்பொன்னவைபொலியத்தோன்றி
யீண்டெரிமுன்னர்மன்னரிழிவுறவேட்டிலானேன்
மீண்டெரிபுகுவனென்னுமெண்ணமேவிழையுநீராள். (உரு)

கோண்பிறைநுதலாடன்னைக்கோதையர்பலருங்கூடிச்
சேண்புனல்பலகொண்டாட்டிச்செழுந்துகிறெழுதுசெர்த்திப்
பூண்பனவிசையப்பூட்டிப்புகைகமழ்தாமஞ்சூட்டிக்
காண்பவராண்மைதேயக்காமவேள்கலகஞ்செய்தார்.

வந்தனர்குமரர்யாரும்வருகெனமகிழ்ந்துபோற்றிச்
சந்தணிமுலையினாளைத்தாயினும்பரிவுகூர்ந்தோர்
கந்தனுமுவமையாற்றாக்காவலர்காமத்தீயி
லிந்தனமிடுவதேய்ப்பவேத்தவையேற்றினாரே. (௨எ)

வெங்கழற்படைக்கைவேந்தர்விழிகளால்விளங்குமேனிப்
பொங்கழற்பிறந்தபாவைபொற்பினைப்பொலியநோக்கிப்
பைங்கழைத்தனுவோன்செங்கைப்பகழியாற்பாவமெய்தி
யங்கழற்பட்டநெய்போலனைவருமுருகினாரே. (௨அ)

மங்குலின்மங்குன்மூடிவயங்கொளிமறைந்துதோன்றாச்
செங்கதிர்ச்செல்வன்போலச்சீர்கெழுவடிவமாறி
யங்கவரிருந்ததன்மையறிந்ததோசெறிந்தபொய்கைப்
பங்கயம்போன்றதாலப்பரிவுறுபாவைபார்வை. (௨௯)

மனக்கடுங்காதல்விம்மமாலைதாழ்புயங்கள்வாட
வெனக்கெனக்கென்றென்றேமாந்திருந்தகாவலரைநோக்கிச்
சினக்கடமொழுகுங்கன்னக்*களிற்றினன்றிட்டத்தும
னினைக்கவுமரியதொன்றைநினைவினோடுரைசெய்வானே. (௩௦)

சிலைபிதுசிலீமுகங்களிவைகடுந்திரிகை†வேகத்
திலைமுகத்துழலுகின்றவெந்திரத்திகிரிநாப்ப
ணிலையிலாவிலக்குமஃதேநெஞ்சுறயாவனெய்தான்
கலைவலீரவற்கேயந்தக்கன்னியுமுரியளென்றான். (௩௧)

வேறு.

இச்சொற்பழனப்பாஞ்சாலர்க்கிறைவன்புதல்வனியம்புதல்கேட்
டச்சொற்றதஞ்செவிக்குருமேறாகக்கலங்குமரவன்னார்
கச்சைப்பொருதுபுடைபரந்துகதித்துப்பணைக்குங்கதிராரப்
பச்சைக்குரும்பையிளமுலைமேற்பரிவானுணம்பிரிவுற்றார். (௩௨)

கண்போலம்புநுதல்போலுங்கடுங்கார்முகமுங்காண்டொறுமத்
திண்போர்வேந்தர்மனக்கலக்கஞ்செப்புந்தகைத்தன்றானாலும்
விண்போயுழன்றுசுழலிலக்கைமெய்யேயெய்துவீழ்த்திமலர்ப்
பெண்போல்வாளைக்கைப்பிடிக்கும்பேராசையினாற்பேதுற்றார். (௩௩)

திருந்தார்மன்றற்குழலணங்கின்செவிலித்தாயர்கடல்கடைந்து
வருந்தாவமுதநிகர்வாளைமயில்போற்கொண்டுமன்னவைபுக்
கிருந்தாரிருந்தகாவலரையின்னேரின்னேரிவரென்று
முருந்தார்பவளத்துவரிதழ்வாய்முகிழ்வாணகைக்குமொழிகின்றார். (௩௪)

மாற்றம்பிறிதொன்றுரையானிவ்வன்போர்வில்லின்வலிநோக்கிச்
சீற்றஞ்சிந்தைகொண்டழலைப்பொய்யேமலர்ந்ததிருமுகத்தா
னேற்றந்தன்னில்வேறொருவரிப்பேருலகிலிலரென்னத்
தோற்றம்படைத்தோன்றனைக்காட்டித்துரியோதனன்மற்றிவனென்றார். (௩௫)

---

* களிறனன் என்றும் பாடம்.

† வேகத்திலையமொத்து என்றும் பாடம்.

மணியின்கிரணவெயிலெறிப்பமண்ணேழ்தாங்குநச்செயிற்றுப்
பணியின்முடிநாயகத்தலைபின்பாங்கேநிரைத்தபஃறலைபோற்
றுணிபுங்கொடுமைவகிரன்னதுணைவர்துச்சாதனன்முதலோ
ரணிபுங்கழற்காற்சுயோதனனுக்கருகாசனத்தரிவரென்றார். (௩௬)

உலைவந்தயருஞ்சூன்மந்திக்குருகாநிலங்கீண்டுதவுகுலக்
கலைவன்பலவின்சுளைகீறிக்களிப்போடளிக்குங்காந்தாரத்
தலைவன்சகுனியிவன்கண்டாய்தக்கோராடாச்சூதுக்கு
நிலைவஞ்சனைக்குந்தரணிபரில்யாரேயிவற்குநிகரென்றார். (௩௭)

பேசாதொடுங்கும்பேரறிவாற்பெரும்போர்வலியாற்பிறப்பான்மெய்த்
தேசாலியற்றும்பலபடையாற்றிண்டோள்வலியாற்செஞ்சிலைக்கை
யாசான்மைந்தனிவன்றனக்கிங்காரேயுவமையமரினு
மீசானனைமற்றொருசிறிதொப்பெனலாமல்லதில்லையென்றார். (௩௮)

பெண்மைக்கிரதியெனவந்தபெண்ணாரமுதேபேருலகி
னுண்மைக்கிவனேவலிக்கிவனேயுறவுக்கிவனேயுரைக்கிவனே
திண்மைக்கிவனேநெறிக்கிவனேதேசுக்கிவனேசிலைக்கிவனே
வண்மைக்கிவனேகன்னனெனுமன்னன்கண்டாய்மற்றிவனே. (௩௯)

அலத்தான்முன்னம்பிளந்தபகையடர்ப்பான்கருதிப்பிளப்புண்ட
சலத்தால்யமுனைபிணித்ததெனத்தயங்கும்படிசேர்தானையினான்
குலத்தாலுயர்ந்தவசுதேவன்குமரன்களபக்கொங்கையர்மெய்ந்
நலத்தான்மகிழுஞ்சிந்தையினனறுந்தாரிராமனிவனென்றார். (௪0)

இந்தக்குரிசில்யதுகுலத்துக்கெல்லாந்திலகமெனுமாறு
வந்துற்பவித்துப்பொதுவருடன்வளருங்கள்ளமாமாயன்
முந்தக்கஞ்சமாமனுயிர்முடித்தானிவற்குமுகிலூர்தி
யந்தப்புரத்திலாராமமந்தப்புரத்துக்காராமம். (௪௧)

தண்ணந்துளவோன்றனக்கிளவலிவன்காண்மின்னேசாத்தகியென்
றெண்ணும்போசகுலத்தலைவனெவருஞ்சூழவிருக்கின்றான்
கண்ணன்றன்னையவமதித்துக்கழறும்புன்சொற்கார்முகத்தைத்
திண்ணென்கருத்தானிங்கிவன்காண்சேதிப்பெருமான்சிசுபாலன். (௪௨)

தார்வண்டிமிரத்தேனொழுகுந்தடந்தோள்வீரன்சராசந்தன்
போர்வெஞ்சரத்தால்யாவரையும்புறங்கண்டன்றிப்போகாதான்
சீர்வண்மதுராபுரிவிடுத்துத்துவாரகையினிற்சென்றொதுங்கக்
சார்வண்ணனையுநெடுங்காலம்வென்றானிவன்காணென்றாரே. (௪௩)

பனைக்கைப்பிறைவெண்கோட்டயிராவதமேபோலும்பகட்டிலிவன்
வினைக்கட்புகுந்தாலெதிர்நின்றுவேறாரிவனைவெல்கிற்பார்
முனைக்கட்செங்கட்டீயுமிழ்*முகத்தான்மாதேபகதத்தன்
தனக்குத்தானேநிகரென்னத்தருக்கொடீண்டேயிருக்கின்றான். (௪௪)

---

* முகைத்தார்மார்பப்பகதத்தன் என்றும் பாடம்.

இவன்சல்லியனென்றுரைசான்றவிகல்வேன்மன்னர்க்கேறனையா
னிவன்றன்பகைவர்யாவரையுமிமையோராக்குமெழினில
னிவன்றண்டமிழ்தேரடல்வழுதியிவன்றேரிரவிகுலவளவ
னிவன்செந்தழலோன்மரபாகியிரேழுலகுப்புகழ்சேரன். (௪௫)

வில்லாண்மையினால்வெண்கருப்புவில்லோன்றனக்கேகிகரென்னப்
பல்லார்புகழும்பான்மையினாற்பதினெண்புவிக்கும்பதியாய
வெல்லாவரசுநின்பொருட்டாலீண்டேதிரண்டவின்னமுதச்
சொல்லாய்நல்லாய்மென்பூவாய்தோகாய்பாவாய்திரௌபதியே. (௪௬)

இவரிற்றனதுதோள்வலியாலரியேறென்னவெழுந்திருந்தத்
தவரிற்புரிநாணுறவேற்றித்தழல்கான்மூனைவெஞ்சாயகத்தாற்
பவரிற்செறியநிரைத்துருளும்பல்வாய்த்திகிரிப்பயிலிலக்கைக்
கவரிற்செழுந்தார்புனைந்தவனைக்கைக்கொண்டிடுநீகடிதென்றார். (௪௭)

வேறு.

முத்தநகைப்பவளவிதழ்க்குளிர்வெண்டிங்கண்முகத்தாளைக்கைத்தாயர்மொழிந்தகாலைச், சித்திரமொத்துணர்வழிந்துதத்தம்மைப்பொற்றிகழரியாசனத்திருந்தார்சிற்சில்வேந்த, ரத்தனுவின்பெருமையையுமிலக்கத்துள்ளவருமையையுங்கருதாமலாண்மைகூறி, யெத்தனையெத்தனைவேந்தராசைகூரயான்யானெனறெழுந்திருந்தார்யானைபோல்வார். (௪௮)

தனுவெடுத்துநாண்பிணிப்பான்கிளரானின்றதன்குலத்திலவனிபரைத்தடுத்துவேதப், பனுவலுக்குந்தவத்தினுக்குமுரியவேள்விப் பார்ப்பனமாக்களினிடையேபாண்டுமைந்த, ரனுவுருக்கொண்டுருமாறியிருந்ததன்மை யறிந்தருளியலாயுதனோடருளிச்செய்தான், மனுமுறைக்குவரம்பாகிவருத்தம்வீட பாரிலமீதவதரித்தவாசுதேவன். (௪௯)

பலருமுடனகங்கரித்துமேருசாரப்பாரவரிசிலையினிலைபார்த்துமீண்டார், பலருமொருகையிற்பிடிக்கவடங்காவில்லின் பருமைதனைக் குறித்துமனம்பதைக்கப்போனார், பலருமலர்க்கைப்படுத்திப்பெயர்க்கமாட்டார்பணைத்தோணைந்தமையுமெனப்பயந்துநின்றார், பலருமெடுத்தணிபணிநாண்பூட்டவாராப்பரிசொடுமற்றதன்வலிமைபகர்ந்தேவிட்டார். (௫௰)

வல்லியம்போனடந்துதனுவிருகையாலும்வாரியெடுத்தெதிர்நிறுத்திமல்லல்வாகுச், சல்லியனுநாணேற்றமுடியாதந்தத்தனுவுடனேதன்றனுவுந்தகரவீழ்ந்தான், வில்லியரின்முன்னெண்ணத்தக்கவின்மை வேந்தடுபோர்ச்சராசந்தன்வில்வேதத்திற், சொல்லியவாறெடுத்தூன்றிமற்றைக்கையாற்றொல்வலிநாணியுமெடுத்துத்தோளுஞ்சோர்ந்தான். (௫௧)

பூகதனுகியவன்றேபகைவரெல்லாம் போற்றலளந்துலகாளப்புனைந்தமௌலி, மாகதனும்வில்லெடுத்துவரிநாண்வில்லின்மார்பளவும்போக்கினான்வன்போர்நீலன், சாகதனென்றவைதுதிக்கநெடுநாண்கொற்றத் தனுவொருசாணெனக்கொணர்ந்தான்சாணேயல்ல, வேகதனுநால்விரலென் றுரைக்கநாணி வீக்கினான்வலம்புரித்தார்வேந்தர்வேந்தே. (௫௨)

கலைவருத்தமறக்கற்றகன்னனென்னுங் கழற்காளையரனிருந்தகயிலையென்னு, ம
லைவருத்தமறவெடுத்தநிருதனென்னமன்னவையின்வலியுடனேவந்துதோன்றி, நி
லைவருத்தமறநின்றுபரியகோலநீள்வரிநாண்மயிர்க்கிடைக்கீழ்நின்றதென்னச், சிலை
வருத்தமறவளைத்துவளைந்தவண்ணச்சிலைக்காறன்முடித்தலைமைச்சிந்தவீழ்ந்தான்()

அரவநெடுங்கொடியுயர்த்தோன்முதலாவுள்ள வனைவருமங்கொருதனுவுக்காற்றா
ராகி, யுரவுமெலிந்தெழின்மாழ்கிச்செயல்வேறின்றி யுள்ளமழிந்திருந்ததற்பினுரு
மேறென்னக், கரவுடனந்தணர்நாப்பணிருந்தகொற்றக்கருமுகில்வாகனன்புதல்வன்
கரியமேனி, யிரவிகுலச்சிறுவனைப்போலெழுந்துமன்றலிளங்கொடிதம்முனைநோக்கி
யியம்பினனே. (௫௪)

மன்மரபிற்பிறந்திருதோள்வலியாலிந்தமண்ணுளுமவர்க்கன்றிமறைநூல்வாணர்
தொன்மரபிற்பிறந்தவருமிலக்குவீழ்த்தாற்கூட்டுமோதொடையலிளந்தோகையெ
ன்னத், தன்மரபுக்கணிதிலகமானவீரன் றகவன்றேமன்றலுக்குத்தாழ்வோவென்
றான், வின்மரபிற்சிறந்தநெடுவில்லையீசன்மேருகிரியெடுத்ததெனவிரைவிற்கொண்
டான். (௫௫)

கிளர்மகுடவயவேந்தர்நாண்களெல்லாங் கீழாகத்தனிநெடுநாண்கிளரவேற்றித்,
தளர்வறுசாயகந்தொடுத்துக்கற்றோர்யாருந் தனுநூலுக்காசிரியன்றானேயென்ன,
வுளர்திகிரிச்சுழலிலக்கையவையோர்தங்க ளுக்கமுடன்விழவெய்தானுரவுத்தோ
ளான், வளருமருந்தவவேள்விமுனிவரார்த்தார் வாசநறுமலர்சொரிந்துவானோரார்
த்தார். (௫௬)

தாஞ்சாரற்கரியதனுவளைத்தாமனென்றுதரணிபர்தம்முகங்கருகத்தனுவினோடும்,
பூஞ்சாரன்மணிநீலகிரிபோனின்றபூசுரனையிவனவனேபோன்மென்றெண்ணிப், பா
ஞ்சாலர்பதிகன்னியிருதன்செங்கட்பங்கயத்தாற்பாங்காகப்பரிந்துநோக்கித், தேஞ்
சாரநறுங்கழுநீர்ச்செய்யதாமஞ்செம்மணிகாலருவியெனச்சேர்த்தினளே. (௫௭)

அந்தரதுந்துபிமுழங்கச்சங்கமார்ப்பவானகதுந்துபிமுதல்வனதியாக, வந்திருந்
தபேரவையைமதியானைமாலையிடுபசுஞ்செம்பொன்மாலையோடுஞ், சந்திரனுமுரோ
கிணியுமென்னமுன்னர்த்தான்வளைத்ததடஞ்சிலைகைத்தலத்திலேந்தி, யிந்திரசூனுவு
மெழுந்தாங்கேகலுற்றானிருபுறமுந்துணைவர்வரவிணையிலாதான். (௫௮)

பார்ப்பான்வந்தொருகோடி யரசைச்சேரப் பரிவித்துப்பாஞ்சாலன் பயந்ததெய்
வச், சீர்ப்பாவைதனைவலியாற்கொண்டுபோகச்செயலின்றியிருந்தீரென்செய்தீரென்
று, வேர்ப்பாடு நுதல்சிவந்த விழியனாகிவிழியிலான் மகன்கழறவெகுண்டுமேன்மே,
லார்ப்பாகக்கொதித்தெழுந்ததுகாந்தகாலத்தார்க்குமகராலயம்போலரசரீட்டம். ( )

முருத்துவாணகைத்துவர்வாய்முகத்தினாளைமூத்தோன்பின்னிருத்தியமர்முருக்
குமாறு, மருத்துவான்றிருமகனுமருத்தின்செல்வமைந்தனுமேபுரிந்திட்டார்மறை
யோருள்ளா, ருருத்துவாய்மடித்தெழுந்துகோகுதட்டிட்டேன்றியதண்டெதிரோச்சி
யுடன்றவேந்தர், கருத்துவார்தகவெருக்கொண்டோடவோடக்கையுரங்காட்டினர்
வளர்த்தகனலையன்னார். (௬௦)

மிகைத்தமுனிவரர்முனிந்தவுறுதிநோக்கி வென்றெடுத்தவிற்றடக்கைவிசயன்சற்றே, நகைத்துநகைத்தவரவரைவிலக்கியென்முன்னமன்வரினும்பிளப்பலெனநவிலாநின்றான், புகைத்தகனல்விழிக்கன்னன்றருக்காலெள்ளிப்பூசுரனென்றவமதித்துப் புனைவில்வாங்கி, யுகைத்தபகழியுமுகைத்தானுரனுந்தன்கையொருகணையாலுடன் பிளந்தானுருமேறொப்பான். (௯௧)

குன்றான்மெய் வகுத்தனையவீமன்றன்மேற் கொல்லியல்செய் சல்லியனைக் குத்தி வீழ்த்திக், கன்றான்முன்விளவெறிந்தகண்ணனென்னக் கான்முடியோடுறவளைத்து வான்மேல்வீசி, நின்றான்மற்றவனயலேதெறித்துவீழ்ந்து நெஞ்சொடிந்தானிருவரு முன்னில்லாராகி, வென்றானுந்தோற்றானும்வசையேவெம்போர்வேதியரோடுடற்ற லெனமீண்டுபோனார். (௯௨)

வேறு.

வண்ணநூன்முனிவரல்லர்மருத்துவான்மருத்துநல்கு
மண்ணலங்குமரராமென்றயிர்ப்புறுமரசர்யாருங்
கண்ணால்விலக்கப்பட்டுக்கடிநகர்தோறுந்தங்க
ளெண்ணமும்பயனும்வேறாவெய்தினரென்பமன்னோ. (௯௩)

அன்றிலக்கெய்தகோவுந்துணைவருமானவெம்போர்
வென்றுகொற்றவையோடொக்குமின்னிடைப்பொன்னுந்தாமுஞ்
சென்றுமட்கலஞ்செய்*கும்மிசெழுமனைமுன்றிலெய்தி
யின்றுபெற்றனமோரையமென்செய்வதிதனையென்றார். (௯௪)

உள்ளிருந்தன்னைமைந்தருரைத்தசொற்கேட்டுத்தேவர்
தெள்ளமுதென்னமக்காள்சேரநீரருந்துமென்னாப்
புள்ளினமொடுங்குமாலைப்பொழுதிவள்புறம்பரெய்திக்
கள்ளவிழ்கூந்தலாளைக்கரும்பெனவிரும்பிக்கண்டாள். (௯௫)

என்னினைந்தென்சொன்னேன்மற்றென்செய்தேனென்றுனோரு
மன்னையைவணங்கிநின்சொலாரணப்படியதாகு
நின்னினைவன்றாலெங்கணெஞ்சிலுநினைவுண்டென்றான்
றன்னிகரிலாதகேள்விசான்றசீர்த்தருமனென்பான். (௯௬)

பாரனைத்தினுந்தன்னாமம்பரப்பியபார்த்தனென்னும்
வீரனைப்பயந்தபாவைவிதிவழியிதுவென்றெண்ணி
மாரனுக்கரசுநல்குமங்கையுந்தானுமந்தக்
காரிருட்கங்குன்மைந்தர்கட்டுரைகசிந்துகேட்டாள். (௯௭)

பொற்றொடிக்கனகமாலைப்பொலங்குழைப்பூவைதன்னைப்
பெற்றபூபதியவ்வீரர்பெருமிதவாய்மையெல்லா
மொற்றராலுணர்ந்துநெஞ்சத்துவகையோடையமின்றி
மற்றைநாள்வந்துகொற்றவாண்மனைகொண்டுபுக்கான். (௯௮)

அடுத்தபல்பொருளும்வைக்கவாயுதமன்றிவேறொன்
றெடுத்திலரென்றும்வேதமுனிவரரல்லரென்றுங்
கொடுத்தனசிறப்பினோடுங்குருமணித்தவிசினேற்றித்
தொடுத்ததார்க்குருக்களென்றேதுணிந்தனன்யாகசேனன். (௯௯)

* கன்மி என்றும் பாடம்.

கைவருசிலையின்வென்றுகைப்பிடித்தவனுக்கின்றே
மைவருகண்ணினளைவதுவைசெய்திடுதுமென்ன
நெய்வருமுனைகொள்கூர்வேனிருபனைநோக்கியாங்க
ளைவரும்வேட்டுமென்றானசைவிலாவறத்தின்மைந்தன். (௭0)

தருமன்மாமதலைசொல்லாற்றளர்வுறுகாலைமாலை
நிருபநின்மனத்திலையநீக்குகநீக்குகென்னாத்
துருபதன்முன்னர்வந்துதோன்றினன்சுருதியாவும்
விரைமலர்விதியின்மிஞ்சவிதித்தருள்வியாதனென்பான். (௭௧)

தொழுதுபொற்றவிசினேற்றிச்சூழ்ந்தனரிருந்துகேட்ப
முழுதுணர்கேள்விஞானமுனிகுலத்தரசுபோல்வான்
பழுதறுகன்னிதன்னைப்பாண்டவரைவருக்கு
மெழுதருமறையின்வேள்வியியற்றுதற்கியற்கைகேண்மோ. (௭௨)

வேறு.

மூளாரழலுற்பவித்தாளிவண்முற்பவத்தி
னாளாயனியென்றுரைசால்பெருநாமமிக்காள்
வாளார்தடங்கணவட்காரணவாணர்க்கென்றுங்
கேளானமௌற்கல்லியனென்பவன்கேள்வனானான். (௭௩)

காதிற்கலந்தகடைக்கண்ணிதன்கற்புமன்புஞ்
சோதித்தலுன்னித்தணியாததுவக்குநோயன்
கோதித்தநெஞ்சன்பெருமூப்பினன்கூர்ந்துநாளும்
வாதித்தலன்றிமகிழாமனைவாழ்வுபூண்டான். (௭௪)

கச்சிற்கடங்காமுலையாளக்கணவனுண்ட
மிச்சிற்புறத்துவிரல்விழவும்விழ்தன்மிஞ்சிக்
குச்சித்தலின்றிநுகர்ந்தாள்கொடுங்காமநோய்கொண்
டிச்சித்தவின்பநுகராமலிளைத்தமெய்யாள். (௭௫)

அன்பன்றெரிவைவழிபாடுகண்டார்வமெய்தித்
துன்பம்பயந்தபிணியாலழிதோற்றமாற்றித்
தன்பங்கையீசன்றிறைநல்கமுன்சாபம்வாங்கும்
வன்பன்றனக்குங்கிடையாதவடிவுகொண்டான். (௭௬)

மின்னேயுனக்குமிகுகற்புடைமீனுமொவ்வா
ளின்னேவரம்வேண்டுவவேண்டுகவிண்டையென்ன
நின்னேயமென்றும்பிரியாநலனேர்கவென்றா
டன்னேரிலாதமனைவாழ்விற்றவத்தின்மிக்காள். (௭௭)

குன்றுநதியுமரனும்பைங்கொடியுமாகித்
துன்றுந்துணையாய்ப்பலயோனிகடோறுமெய்தி
நின்றுஞ்சரித்துமரும்போகநெடிதுதுய்த்தா
ரென்றும்பிரியாதிருவோருமிதயமொத்தே. (௭௮)

இந்தப்பிறப்பினலமெய்திபிறந்தபின்னுஞ்
சிந்தித்தவண்ணமிவளிந்திரசேனையாகி
யந்தப்பதியையடைந்தாண்மற்றவனுமஞ்சி
வந்தித்ததொல்லையருமாதவமன்னிநின்றான். (௭௯)

அன்னோனகலவவன்மேலவளாசைமிஞ்சி
யென்னோபுரிவதினியென்றலுமேந்தல்கூற்றாற்
றன்னோர்வடிவினொருகூறொருதையலாளு
முன்னோனைநோக்கித்தவஞ்செய்தனண்மூரல்வாயாள். (௮௦)

ஐந்தானனத்தோனருள்செய்யவழகின்மிக்கா
ளைந்தானசொல்லாற்கணவற்றருகையவென்றா
ளைந்தானசொல்லானளித்தான்மற்றவனுமுன்னா
ளைந்தானபோகமிவளெய்தியவாறறிந்தே. (௮௧)

முன்னின்றதேவன்மொழியின்படிகங்கைமூழ்கித்
தன்னந்தனிநின்றழுகின்றவத்தையல்கண்ணீர்
பொன்னங்கமலவனமானபுதுமைநோக்கி
யென்னென்றிவளையிமையோர்பதியெய்தினானே. (௮௨)

அவனைத்தொடர்பால்வருகென்னவவனுமாங்கட்
சிவனைச்சிறிதுமதியாதெதிர்சென்றகாலை
யிவனுக்கென்மேன்மையெனச்சீறலுமெஞ்சினான்போற்
புவனத்தெவருநகையாடப்புலம்பிவீழ்ந்தான். (௮௩)

வெவ்வாயுதங்களுதவாமல்விபுதநாத
னிவ்வாறுவீழமழுவாளியிமைப்பின்மீண்டு
மவ்வாசவற்குப்பிலமொன்றிலடைந்தவச்சிரக்
கைவாசவர்களொருநால்வரைக்காட்டினானே. (௮௪)

வன்பாதலத்தில்வருநால்வரும்வானின்வந்த
புன்பாகசாதனனுந்தன்னடிபோற்றிநிற்ப
வன்பான்மகிழ்நரிவட்கைவருமாதிரென்று
மென்பாவைபங்கன்விதிக்கப்புவிமீதுவந்தார். (௮௫)

தருமன்பவனன்றினநாதன்றனயர்தம்பால்
வருமிந்தநால்வரவர்நால்வருமாலைமார்பா
தெருமந்தவிந்தச்சிலைவீரனித்தேவர்க்கெல்லாம்
பெருமன்பிறப்பிற்கவனேமுன்பிதாவுமானான். (௮௬)

இம்மாதுதொல்லையருமாதவத்தெல்லைகண்ட
வம்மாதிவள்காதலரைவருமாகவென்று
தெம்மாதர்முற்பூண்கவர்மன்னன்றெளியுமாறு
வெம்மாதவத்தோன்பெருஞானவிழியுமீந்தான். (௮௭)

ஓதாதுணர்ந்துமறைநாலுமுருவுசெய்த
வேதாவுமொவ்வாவியாதன்மொழிவெள்ளநீராற்
கோதானநெஞ்சைக்குளிப்பாட்டினன்கோடிகோடி
தூதானவண்டுதுதைமாலைகொள்சோமகேசன். (௮௮)

வியப்போடுதொல்லைமுனிசொற்றலைமீதுகொண்டு
பயப்போன்மகண்மேற்புரிகின்றபரிவினுக்கும்
வயப்போர்நிருபர்பெருமைக்கும்வலிக்குமீடா
நயப்போடுமன்றலயர்வித்தனனன்கொர்நாளில். (௮௯)

பாடுஞ்சுருதிமறைவாணரும்பாரினுள்ள
சூடுங்கனகமுடிவேந்தருந்தொக்குநிற்ப
நீடுங்கதிர்மாமணித்தூண்கணிரைத்தபத்தி
யாடுங்கொடிமண்டபமெய்தினரண்டர்போல்வார். (௯0)

குறிக்கும்பணிலமுதலாயிரகோடியாகப்
பிறிக்குங்கருவியிடந்தோறும்பிளிறியார்ப்பச்
செறிக்குங்கழற்காலறன்மைந்தனைச்செம்பொன்வேதி
யெறிக்குங்கிரணமணிப்பீடமதேற்றினாரே. (௯௧)

இடத்தோளிவட்கும்வலத்தோளிவ்விறைவனுக்குந்
திடத்தோடுரைத்தகுறியின்பயன்சேர்ந்துதோய
விடத்தோடமுதங்கலந்தென்னமிளிரும்வேற்கண்
வடத்தோடுவிம்முமுலையாளைவலத்தில்வைத்தார். (௯௨)

கேள்விக்கொருவனெனுந்தௌமியன்கீதவேத
வேள்விக்குவேண்டுவனயாவும்விதியினீட்டி
மூள்வித்தசெந்தீக்கரியாகமுரசுயர்த்த
*வாள்வித்தகற்குவரமானசடங்குசெய்தான். (௯௩)

பன்மங்கலமுமுடன்வைகியபண்பினாளை
நன்மங்கலப்பூண்டுகிலோடுநயந்துசாத்தி
தன்மங்கலந்தமனத்தோனையத்தையலோடுந்
தொன்மங்கலச்செஞ்சுடர்த்தீவலஞ்சூழுவித்தார். (௯௪)

கங்குற்பவளவனமீதுசடற்றரங்கம்
பொங்கித்தரளத்திரள்சிந்திப்பொழியுமாபோ
லங்கிப்புறத்துத்திருக்காப்பணியங்கையேந்திச்
செங்கட்கரியகுழலாள்பொரிசிந்தினாளே. (௯௫)

இவ்வாறுமன்றலயர்வித்தபினீன்றகாதல்
வெவ்வாரழலின்முறைமூழ்கினண்மீண்டுதோன்ற
மைவாரளகவடமீனிகர்கற்பினாளை
யவ்வாறுமற்றையொருநால்வருமன்றுவேட்டார். (௯௬)

---

* தாள்வித்தகற்கு என்றும் பாடம்.

மாரன்கரும்புவளரும்படிவார்த்தநீரா
வீரம்புலராக்கரத்தோருக்கியாகசேனன்
றேரும்பரியுங்களிறுந்திரள்சேனையாவும்
பாருந்தனமுழுமதென்றுபலவுமீந்தான். (௯௭)

வேறு.

ஆண்டுமன்றல்பெற்றங்குரித்தாரிகற்
பாண்டுமைந்தரெனுஞ்சொற்பரவலுந்
தாண்டுவெம்பரித்தேர்த்தார்த்தராட்டிரர்
மீண்டும்வந்தவர்மேல்வினைசெய்யவே. (௯௮)

சென்றசேனையுந்திட்டத்துய்மன்னுட
னின்றசேனையுநேருறுபூசலிற்
கொன்றசேனையொழிகுருசேனையை
வென்றசேனைவெகுண்டுவென்கண்டதே. (௯௯)

சாலும்வஞ்சச்சகுனியொடெண்ணிய
நாலுமைந்தருநச்செயிருகவும்
வாலுமெய்யும்*வருக்கங்களாகவு
மாலும்வெம்பகையாடரவானதே. (௧௦௦)

அந்தநாகமழலுமிழ்கண்விடஞ்
சிந்தமேல்விடுசீற்றமுந்தோற்றமு
முந்தவார்சிலைக்கைம்முகில்வாகனன்
மைந்தன்வாளி†மழைகளின்மாய்ந்தவே. (௧௦௧)

சமரவேழமுகாசுரன்சாய்ந்தனன்
குமரனெனக்கோநகுலன்றனு
லமரில்யானையணிமுகத்தோடுமெய்
தமர்படப்புறந்தந்தனன்கன்னனே. (௧௦௨)

முன்னிடச்சமர்மோதுஞ்சகுனியை
மின்னிடைப்புயங்கம்வெருக்கொண்டெனத்
தன்னிடக்கைத்தனுவொடுந்தேரொடும்
பின்னிடப்பொருதானவன்பின்னவன். (௧௦௩)

தண்மதிக்குடைத்தம்முனுந்தம்பியு
மெண்ணுமற்றையிளைஞர்கள்யாவருங்
கண்ணுறக்களங்காணுமுன்றீயினல்
வெண்ணெயொத்துடைந்தார்விறல்வீமனல். (௧௦௪)

விரோசனக்கதிர்மைந்தனும்வேந்தனுஞ்
சரோசனத்திறற்றம்பியுமாமனும்
புரோசனப்பெயர்ப்புன்மதிதன்னொநொந்
தரோசனத்துடனத்தினநண்ணினர். (௧௦௫)

---

* வருதினியாகவுமென்றும் பாடம்.

† மறைகளின் என்றும் பாடம்.

முந்துபோரின்முதுகிடும்வேந்தரால்
விந்தைதன்னையுமேதகவேட்டபி
னந்தமாநகரைவருமாமனும்
வந்தகண்ணனுமன்புடன்வைகினர். (கO௬)

தும்பைசூடியவேற்றுரியோதனன்
வெம்புபோரின்முதுகிட்டுமீண்டபின்
றம்பிகூறுதருமனுக்கியுமா
றம்பிகேயனமைச்சரொடெண்ணினன். (கOஎ)

காதிறைற்பொலிதார்வரைமார்பரைத்
தூதிறைற்றநகடொல்பதிசேர்த்தினன்
காதிறைப்பயனின்றெனக்கண்கள்போற்
கோதிறைற்றெரியாமனக்கோளினன். (கOஅ)

விடுமற்கும்விதுரற்குமேற்கவந்
நாடுமுற்றுநரபதிநல்கவே
யாடுபொற்கொடியங்நகர்வைகினர்
நீடுவிற்றிறலோர்நெடுங்காலமே. (கO௯)

திரௌபதிமாலையிட்டசருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-ருஅ௪.

இந்திரப்பிரத்தச்சருக்கம்.

வேதமும்வேதம்விளம்புமெய்ப்பொருளுமப்பொருள்விதங்களும்பஞ்ச
பூதமும்புலனும்புலன்களின்பயனுமப்பயன்பொலிவுறநுகரு
ஞாதமுமுலகம்படைத்தளித்தழித்துஞானமாயகிலமுநிறைவுற்
ருதியுநடுவுமுடிவுமாய்நின்றவாதியானடியிணைபணிவாம். (க)

அத்தினபுரியிலையிருபதின்மரைவரென்றிரண்டறத்தம்மி
லொத்தனர்மருவத்தெவ்வர்மெய்வெருவவுளமகிழ்நாளின்மற்றொருநாண்
மைத்துனன்முதலாந்தமரையுந்தக்கமந்திரத்தவரையுங்கூட்டி
யித்தினமுயர்ந்ததினமெனமகுடஞ்சூட்டுதற்கெண்ணினனிகலோன். (உ)

செழுமுரசுயர்த்தவேந்தனுக்கின்றுதிருவபிடேகநாளென்று
முழுமுரசறைந்துநகரிகோடித்துமுடிபுனைகடிகொண்மண்டபத்தி
னெழுமுரசதிரப்பகீரதிமுதலாமெத்துறைப்புனல்களுமியற்றித்
தொழுமுரசுடன்வெள்வலம்புரிமுழங்கச்சுருதிமாமுனிவருந்தொக்கார். (௩)

அத்தியின்பலகைநவமணியழுத்தியாடகத்தமைத்தரிமுகத்தாற்
பத்திகொள்பீடத்தழகுறவிருத்திப்பசும்பொனின்றசும்புகணிறைந்த
சுத்தநீர்வியாதன்றௌமியன்முதலோர்சொரிந்தனர்சோமன்வந்துதித்துச்
சித்திரகிரியினெடுநிலாவெள்ளஞ்சிருடன்வழியவார்த்தெனவே. (ச)

உதயமால்வரையினுதயராகத்தோடுதித்ததேருதயனென்றுரைப்பத்
துதையளிததைந்தமாலையான்சென்னிச்சோதிமாமகுடமுஞ்சூட்டிப்
பதயுகமரசர்முடிகளாற்சிவப்பப்பகர்விதிமுடித்தபின்பலரு
மிதயமொத்தமிர்தமொழியவரடைவேயிருகைநீராசனமெடுத்தார். (ரு)

ஒற்றையோடிரட்டைவலம்புரிமிழற்றவொருகுடைமதியெனநிழற்றக்
கொற்றவர்முன்பின்போதரமடவார்குழுப்பொரிசிந்திவாழ்த்தெடுப்ப
விற்றைநாளெவரும்வாய்த்தவாவென்னவேழுயரிராசகுஞ்சரமேன்
மற்றைநால்வருந்தற்சூழ்வரத்தருமன்மைந்தன்மாநகர்வலம்வந்தான். (சு)

மாநகர்வலமாய்வந்துதன்குரவர்மலர்ப்பதமுறைமையால்வணங்கிக்
கோநகரிருக்கையடைந்தனனொருநாட்கொற்றவனேவல்கைக்கொண்டு
பேய்நகரெனுமாறியாவரும்வழங்காப்பிறங்குநீள்கானிடையழிந்த
தூநகர்முன்னோரிருந்ததொன்றந்தத்தொன்னகர்வைகுமாதுணிந்தான். (எ)

அங்கண்மாஞாலமுழுவதுங்கொடுத்தற்காயர்தம்பதியினங்குரித்த
செங்கண்மான்முதலாங்கிளைஞருடம்வயிரத்தேர்மிசைச்சேனையுந்தாமும்
வெங்கண்மாசுணத்தோனெண்ணமெத்திசையும்வெளிப்படவேந்தரைவரும்போய்த்
தங்கண்மாதவத்தாற்காண்டவப்பிரத்தமென்னுமத்தழல்வனமடைந்தார். (அ)

போயவட்புகுந்தபொழுதுபைங்கடலும்பூவையும்புயலுநேர்வடிவின்
மாயவற்கெவ்வாறிவ்வழியிவர்கள்வாழ்வதென்றொருநினைவெய்தி
நாயகக்கடவுடன்னைமுன்னுதலுநாகநாயகனெடுநடுங்கி
மேயகட்புலன்கள்களித்திடத்திருமுன்னின்றனன்விச்சுவகன்மா. (கூ)

நுண்ணிதினுணர்ந்தோருணர்தருஞ்சிற்பநூலறிபுலவனைநோக்கித்
திண்ணிதினமரர்சேகரன்மொழிந்தான்றேவருமனிதரும்வியப்ப
மண்ணினும்புயங்கர்பாதலமுதன்மற்றுளவுலகினுநமதாம்
விண்ணினுமுவமையிலதெனக்கடிதோர்வியனகர்விதித்திநீயெனவே. (க0)

தேவினுந்தேவயோனியிற்பிறந்ததிரளினுஞ்சிறந்தயாவர்க்கும்
பூவினுமெவ்வெவ்வுலகினுமுன்னம்புந்தியாலியற்றியபுரங்கள்
யாவினுமழகும்பெருமையுந்திருவுமின்பமுமெழுமடங்காக
நாவினும்புகலக்கருத்தினுநினைக்கவரியதோர்நலம்பெறச்சமைத்தான். (கக)

மரகதங்கோமேதகந்துகிர்தரளம்வைரம்வைதூரியநீல
மெரிமணிபுருடராகமென்றிவற்றிற்காரமிந்தமாநகரென்
றரிமுதலிமையோரனைவரும்புகழ்ந்தாராடகப்பொருப்பினையழித்துத்
தரணியி*னகரொன்றமைத்தவாவென்றுதபதியர்யாவரும்வியந்தார். (கஉ)

---

* நகரொன்றமைத்தவா என்றும் பாடம்.

என்பதியழகுகுலைந்ததென்றெண்ணியிந்திரன்வெறுக்கவுமியக்கர்
மன்பதிபொலிவுசிதைந்ததென்றிடவுமற்றுளவானவர்பதிகள்
புன்பதியாகிப்போயினவெனவும்புரையறுபுந்தியாற்புவிமே
னன்பதியிதுவொன்றியற்றினனென்றுநாரணுதிகடுதித்திடவும். (கங)

சந்திராபதமுந்தினகராபதமுமிருபொழுதினுமெழச்சமைத்த
மந்திராதிகளுமஞ்சமுமதிலுமகரதோரணமணிமறுகுங்
கொந்திராநின்றசோலையுந்தடமுங்கொற்றவன்கோயிலுநோக்கி
யிந்திராபதியவ்விந்திரன்பெயராலிந்திரப்பிரத்தமென்றிட்டான். (கச)

இமையவர்பதியிலுள்ளனயாவுமிங்குளவிங்குமற்றுள்ள
வமைவுறுபொருள்களங்கிலவெனுமாறமைத்தவான்றொல்பதியழகைச்
சமைவுறவிரித்துப்புகழ்வதற்குன்னிற்சதுர்முகத்தவனுமெய்தளரு
நமர்களானவிலமுடியுமோமுடியாதாயினும்வல்லவாநவில்வாம். (கரு)

*விதிமறைமுறையிற்சாந்திசெய்கடவுள்வேதியராரவமொருசார்
மதிமுறைதவறுவமைச்சர்சொல்விழையுமன்னவராரவமொருசார்
நிதிகெழுசெல்வத்தளகையோர்நெருக்காணிறைந்தபேராரவமொருசார்
பதிதொறுமுழவர்விளைபயனெடுக்கும்பறைகறங்காரவமொருசார். (கசா)

தோரணமஞ்சத்தலந்தொறுநடிக்குந்தோகையர்நாடகமொருசார்
பூரணபைம்பொற்கும்பமுமொளிகூர்புரிமணித்தீபமுமொருசார்
வாரணமிவுளிதேர்முதனிரைத்தவாகமுஞ்சேனையுமொருசார்
நாரணன்வனசபதயுகம்பிரியாநலம்பெறுமாதவரொருசார். (கஎ)

சிற்பவல்லபத்தின்மயன்முதலுள்ளதெய்வவான்றபதியரொருசார்
வெற்பகமருவிவீற்றுவீற்றிருக்கும்விஞ்சையர்கின்னரரொருசா
ரற்புதவடிவினுருப்பசிமுதலாமழகுடையரம்பையரொருசார்
பொற்புடையமரர்புரியுமெய்ம்மகிழ்ந்துபொழிதருபொன்மலரொருசார். (கஅ)

வரையெலாமகிலுஞ்சந்தனத்தருவுமான்மதநாவியின்குலமுந்
திரையெலாமுத்தும்பவளவண்கொடியுஞ்செம்மணிகளுமரகதமுங்
கரையெலாம்புன்னைக்கானமுங்கண்டலடவியுங்கைதையங்காடுந்
தரையெலாம்பொன்னும்வெள்ளியும்பழனவேலிசூழ்சாலியுங்கரும்பும். (ககூ)

ஆலையிற்கரும்பின்கண்களிற்றெறித்தவாரமவ்வயற்புறத்தடுத்த
சோலையிற்பயிலுங்குயிலையுஞ்சுருதிச்சுரும்பையுநிரைநிரைதுரப்ப
வேலையிற்குதித்தவாளையேறும்பர்வியனதிகலக்கிவெண்டிங்கண்
மாலையிற்பயிலும்வானமீன்கொடிபோல்வாவியிற்குளிக்குமாமருதம். (உ0)

புரிசையிற்குடுமிதொறுநிரைதொடுத்தபொற்கொடியாடையினிழலைக்
கிரிமிசைப்பறக்குமன்னமென்றெண்ணிக்கிடங்கில்வாழோதிமக்கிளைகள்
விரி†சிறைப்பறலின்கடுமையாலெய்திமீதெழுமஞ்செனக்கலங்கிப்
பரிசயப்படிதண்சததளப்பொகுட்டுப்பார்ப்புறைபள்ளிவிட்டகலா. (உக)

---

* இப்பாட்டினான்கடியினிறுதியிலும் 'ஆவணமொருசார்' என்றும் பாடம்.

† சிறைப்பரலின் என்றும் பாடம்.

கயற்றடஞ்செங்கட்கன்னியர்க்கிந்துகாந்தவார்சிலையினுலுயரச்
செயற்படுபொருப்பின்சாரலிற்கங்குற்றெண்ணிலாவெறித்தலினுருகி
வியப்பொடுகுதிக்குந்தாரைகொளருவிவிழைவுடன்படிவனசகோர
நயப்புடையன்னச்சேவல்பேடென்றுநண்ணலாவுளமிகநாணும். (உஉ)

அரிமணிச்சிலையின்சலாகைபால்வட்டமாகவேயமைத்தசாலகந்தோ
றெரிமணிக்குழையர்வதனமண்டலத்திலெழிலுடன்மிளிருமைத்தடங்கண்
விரிமணிக்கதிரோனளிக்கமுன்களிந்தவெற்பிடைவிழுமாநதியின்
புரிமணிச்சுழியிற்றுணையொடுமுலாவிப்பொருவனகயல்களேபோலும். (உ௩)

இனத்தினுலுயர்ந்தவிந்திரபுரியுமிந்திரப்பிரத்தமுமிரண்டுந்
தனத்தினுலுணர்வாற்கேள்வியாலழகாற்றக்கதொன்றியாதெனத்துலைகொண்
மனத்தினுனிறுக்கவுயர்ந்ததொன்றென்றுமண்மிசையிருந்ததுமிகவுங்
கனத்தினுலன்றித்தாழுமோயாருங்கண்டதுகேட்டதன்றிதுவே. (உ௪)

நிறக்கவல்லிரும்பைச்செம்பொனும்வண்ணநிகழ்த்தியவிரதமேநிகர்ப்பப்
பிறக்கமும்வனமுமொழித்தவண்மைத்தபெரும்பதிக்குவமையும்பெருமன்
மறக்கடுங்களிற்றுக்குபேரன்வாழளகைவடக்கிருந்ததுநெடுவானிற்
றுறக்கமுமொளித்ததிலங்கையும்வெருவித்தொடுகடற்சுழிப்புகுந்ததுவே. (உ௫)

வாவியும்புறவுஞ்சோலையுமலர்ந்தமலர்களுமணிகளின்குழாமு
மேவியெங்கெங்குமயங்கலிற்றத்தம்வேரியும்வாசமுந்தூதாப்
பூவினஞ்சுரும்பையழைக்கும்வண்பழனப்புதுவளஞ்சுரக்குநாடனைத்து
மோவியங்குறித்துப்பூமகள்வடிவையொப்பனைசெய்தவாறொக்கும். (உ௬)

பரிமளமதுபமுரல்பசுந்தொடையற்பாண்டவரைவருங்கடவு
ளெரிவலம்புரிந்துமுறைமுறைவேட்டவின்னெழிலிளமயிலன்றி
வரிசையினனுகியுரிமையாலவனிமயிலையுமன்றலெய்தினர்போற்
புரிவளைதவழுஞ்சொரிபுனலகழிப்புரிசைசூழ்புரங்குடிபுகுந்தார். (உ௭)

வேறு.

உரங்குடிபுகுந்ததிண்டோளுதிட்டிரன்முதலியோரப்
புரங்குடிபுகுந்துதங்கள்பொன்னெயிற்கோயிலெய்தத்
திரங்குடிபுகுந்தகல்விச்சிற்பவித்தகன்றனெஞ்சாற்
கரங்குடிபுகாமற்செய்தகடிநகர்காட்டலுற்றான். (உ௮)

நாபுரப்பதற்கேயேற்றநவிரறுவாய்மைவேந்தர்
கோபுரத்தும்பர்மஞ்சகோடியினின்றுதங்கண்
மாபுரத்துள்ளவெல்லைவளமனையாவுமாதர்
நூபுரத்தரவவீதியகலமுநோக்கினரே. (உ௯)

அரவின்வெஞ்சுடிகைகொண்டவவிர்மணிச்சோதிமேன்மேல்
விரவிவந்தெறிப்பப்பச்சைமெய்சிவப்பேறிற்றாக
விரவிதன்னிரதம்பூண்டவெழுபெயர்ப்பவனவேகப்
புரவியையையுற்றேகொல்புரிவலம்புரிவதென்பார். (௩௦)

அருளுடையறத்தின்வாழ்வாமங்நகரில்லமெங்கு
மிருளுடையிந்திரநீலத்தியன்றசாளரங்கணோக்கி
யுருளுடையொற்றைநேமியுறுபரித்தேரோன்சீறத்
தெருளுடைத்திமிரம்போனசின்னெறிபோலுமென்பார். (௯௧)

சமர்முகப்பொறிகண்மிக்கதடமதிற்குடுமிதோறுங்
குமருறப்பிணித்தபைம்பொற்கொடித்துகிலசைவுநோக்கி
நமர்புரக்கிழத்தியும்பர்நாயகன்புரத்தினோடு
மயர்பொரப்பற்பல்கையாலழைப்பதுபோலுமென்பார். (௯௨)

தசும்புறுமகிலின்றாபுஞ்சாறடுகரும்பின்றாப
மசும்பறுமடையின்றாபமவிபெறுமழலின்றாப
விசும்புறநான்குதிக்குமிசைமிசையெழுதனோக்கிப்
பசும்புயலேழன்றின்னும்பலவுளவாகுமென்பார். (௯௩)

அடுக்குறநிலஞ்செய்மாடத்தணியுறுபெரும்பதாகை
மிடுக்கினாலனிலனெற்றிவிசையுடனெடுத்துமோத
வுடுக்களுநாளுங்கோளுமுள்ளமுமுடனுஞ்சேர
நடுக்குறுகின்றவிந்தநகர்வழிபோகவென்பார். (௯௪)

துதையளிமுரலும்வாசச்சோலையின்பொங்கர்தோறும்
விதமுறவெழுந்துகாளமேகங்கள்படிதனோக்கிக்
கதிர்மணியகழிமாமேகலையுடைநகரமாதின்
புகைநறுமலர்மென்கூந்தல்போலுமாகாண்மினென்பார். (௯௫)

ஈட்டியமணியும்பொன்னுமெழில்பெறப்புடைகடோறும்
பூட்டியசிகரிசாலப்புரிசையின்புதுமைநோக்கிக்
கோட்டியநகரியென்னுங்குலக்கொடிமன்றலெய்தச்
சூட்டியசூட்டுப்போலத்துலங்குமாகாண்மினென்பார். (௯௬)

பணையினம்பலவுமார்ப்பப்பைங்கொடிநிரைத்தசெல்வத்
துணைமணிமாடமன்னுந்தோரணவீதியாவும்
புணைவனநெருங்கநீடிப்பொழிபுயல்கிழிக்குஞ்சார
லிணைவரைநடுவட்போதும்யாறுபோலிலங்குமென்பார். (௯௭)

கண்ணுறுபொருள்கள்யாவுங்கண்டுகண்டுவகைகூர
வெண்ணுறுகிளைஞரோடும்யாதவகுமரரோடும்
பண்ணுறுவேதவாழ்நர்பலரொடும்வைகியாங்கண்
விண்ணுறுதபதிக்கம்மவிடைகொடுத்தருளினானே. (௯௮)

கேசவன்முதலாவுள்ளகிளைஞருங்கேண்மைதப்பா
வாசவன்முதலினோருமன்னுதம்பதிகள்புக்கா
ரோசவன்றிகிரியோச்சியுதயபானுவுக்குமேலாந்
தேசவன்றானும்வையந்திசைமுறைதிருத்தியாண்டான். (௯௯)

யாய்மொழிதலைமேற்கொண்டுமினையவர்மொழிகள்கேட்டும்
வேய்மொழிவேய்த்தோள்வல்லிமென்மொழிவிரும்பலுற்றும்
வாய்மொழியறத்தின்மைந்தன்மாநகர்வாழுநாளி
லாய்மொழிப்பாடல்யாழோரந்தணனங்கண்வந்தான். (௪௰)

இந்தநாரதனைப்போற்றியிருபதம்விளக்கிவாசச்
சந்தனுகருவின்றாபந்தவழ்மணித்தவிசினேற்றி
வந்தனவிதியிற்சற்றும்வழுவறவழிபாடெய்தி
யந்தநால்வருமவ்வேந்துமாதிவாசவர்களானார். (௪௧)

வரமிகுகற்பினாளுமாமியும்வணங்கிநிற்பச்
சரிகமபதநிப்பாடற்றண்டுதைவருசெங்கையோ
னிருசெவிபடைவீடாகவெம்பிரானளிக்கப்பெற்ற
பெருமுனியவர்க்கோர்வார்த்தைபெட்புறப்பேசுவானே. (௪௨)

முராரியைமுராரிநாபிமுளரிவாழ்முனியைமுக்கட்
புராரியைநோக்கிமுன்னாட்புரிபெருந்தவத்தின்மிக்கார்
சுராரிகடம்மிற்சுந்தோபசுந்தரென்றிருவர்தங்க
டிராரியேவலினால்வந்ததிலோத்தமைதன்னைக்கண்டார். (௪௩)

காண்டலுமவண்மேல்வைத்தகாதலாலுழந்துநெஞ்சி
லீண்டியதுயரத்தோடுமிருவருநயந்தபோழ்தப்
பூண்டகுபொலிவினுடன்பொருட்டமர்தம்மிற்பூண்டு
மாண்டனரென்னும்வார்த்தைமாநிலமறியுமன்றே. (௪௪)

நீவிரும்விதியால்வேட்டநேயமுண்டேனுமன்ற
லோவியமனையாடன்னையோரோராண்டொருவராக
மேவினிர்புரியுமங்ஙன்மேவுநாளேனையோரிக்
காவியங்கண்ணினாளைக்கண்ணுறல்கடனதன்றே. (௪௫)

எண்ணுறக்காணிலோராறிருதுவும்வேடமாறிப்
புண்ணியப்புனல்களாடப்போவதேயுறுதியென்று
வண்ணவிற்றிறலினார்க்குவாய்மலர்ந்தருளிமீண்டு
பண்ணுடைக்கீதநாதபண்டிதன்விசும்பிற்போனான். (௪௬)

சொன்னநாட்டொடங்கியைந்துசூரருந்தேவர்நாளுக்
கின்னநாளவதியென்றேயெண்ணியாங்கிரதிகேள்வ
னன்னநாண்மலர்ப்பைந்தாமத்தறன்மகனாதியாக
மின்னனுடன்னைவேட்டமுறையினான்மேவினாரே. (௪௭)

இந்திரப்பிரத்தச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௬௩௧.

அருச்சுனன்றீர்த்தயாத்திரைச் சருக்கம்.

துன்பம்பயமிடிநோய்பகைசோரங்கொலையெய்தா
தின்பம்பொருளறன்யாவையுமியல்பாதலினெய்தித்
தன்பைங்குடைநிழன்மன்பதைதரியார்முனைமதியா
வன்பன்றனைநிகர்வாழ்வுறவருநாள்களிலொருநாள். (௧)

அறையோதவனஞ்சூழ்புவியரசானவனைத்துந்
திறையோடிடமறநிற்பம்தார்திருவாயின்மருங்கே
பிறையோடுயரிருகையுமெடுத்தெண்ணுறமுறையோ
முறையோவெனவொருவைதிகமுனிவந்துபுகுந்தான். (௨)

கடைகாவலர்துறைகூறலும்விசயன்கடிதிற்றன்
புடைகாவலர்தொழவந்துபுவித்தேவனைமறையின்
றொடைகாவலவிதுவென்னெனவவனுந்தொடுகழலோய்
விடைகாவலர்நிரைகொண்டனர்வில்வேடுவரென்றான். (௩)

அஞ்சாதொழிமுனிநீயுனதானின்கணமின்றே
யெஞ்சாவகைதருவேனெனவேவுக்கொருதிலகன்
வெஞ்சாபமெடுப்பான்வருவிசயன்றருமனுடன்
மஞ்சார்பொழில்விளையாடிடுமயில்சீறடிகண்டான். (௪)

காணுமெய்நடுங்காவொளிகருகாமனமிகவு
நாணுவிரைவொடு*சாயகநாண்வெஞ்சிலைகொள்ளாச்
சேணுநெறிசெல்லாநனிசீறுவமர்வெல்லா
மாணுநிரைமீளாவொரிமைப்போதினில்வந்தான். (௫)

தொறுக்கொண்டவருயிருந்தொறுநிரைபுங்கவர்சூரன்
மறுக்கம்படுமறையோன்மனமகிழும்படிநல்கி
பொறுக்குந்தவமுனிசொற்படிபுனிதப்புனல்படிவா
னிறுக்குந்துலைநிகர்தம்முனைநிகழ்வோடுபணிந்தான். (௬)

ஆடம்பரமன்வேடமகற்றித்தொழுதகுதொல்
வேடம்பெறுமறையோருடன்விசயன்புரவிசயன்
சூடந்தருபாகீரதிதோய்காலையிலவனை
சேடன்றலமடவார்புனலயர்வானெதிர்சென்றார். (௭)

ஓடுங்கயல்விழியாரினுலூபிப்பெயரவளோ
டாடும்புனலிடைநின்றவனநுராகமிகுந்தே
நாடும்பிலவழியேயவள்பின்சென்றுநலத்தா
னீடுங்கொடிமணமெய்தினன்முகில்போலுநிறத்தான். (௮)

* சாலையினுண் என்றும் பாடம்.

இம்மென்றளிமுரல்பாயலிலின்பத்தைவளர்த்தும்
பொம்மென்பரிபுரநாண்மலர்பொற்சென்னியில்வைத்துஞ்
செம்மென்கனியிதழாளொடுசின்னாளலமுற்று
னம்மென்கொடியனையாளுமராவானையளித்தாள். (௯)

நாகாதிபன்மகண்மைந்தனலங்கண்டுமகிழ்ந்து
நாகாதிபன்மகன்மீளவுநதியின்வழிவந்து
நாகாதிபன்வண்சாரலினன்னீர்கள்படிந்து
நாகாதிபன்விடுமும்மதநாறுந்திசைபுக்கான். (௧௦)

நெளிந்தாடரவணையையனிறம்போலநிறக்குங்
களிந்தாநதிமுதலாகியகடவுண்ணதிபலவு
முளிந்தாரழலெழுகானெறிமுக்கோலினராகித்
தெளிந்தாறியபெரியோரொடுசென்றாடினனன்றே. (௧௧)

பத்திக்குவரம்பாகியபார்த்தன்பலதீர்த்த
மத்திக்கினுமெத்திக்கினுமாமென்றவையாடிச்
சித்திக்கொருவிதையாகியதென்னாட்டிணையணுகித்
தத்திச்சொரியருவித்தடவரவக்கிரிசார்ந்தான். (௧௨)

இச்சைப்படிதன்பேரறமெண்ணான்கும்வளர்க்கும்
பச்சைக்கொடிவிடையோனொருபாகந்திறைகொண்டாள்
செச்சைத்தொடைபிள்ளையோனுகர்தீம்பான்மணநாறுங்
கச்சைப்பொருமுலையாளுறைகச்சிப்பதிகண்டான். (௧௩)

அயனார்புரிமகசாலையுமணியத்திகிரிக்கே
மயனார்செய்திருக்கோயிலுமாநீழலின்வைகெண்
புயனாருறைமெய்க்கோலமுமுள்ளன்பொடுபோற்றிப்
பயனார்புனனதியேழுமங்ஙகளூடுபடிந்தான். (௧௪)

பெற்றாள்சகதண்டங்களனைத்தும்மவைபெற்று
முற்றாமுகிழ்முலையாளொடுமுக்கண்ணர்விரும்பும்
புற்றாமெனமிக்கோரிகழ்பற்றின்றினுமுண்மை
கற்றார்தொழுமருணாசலமன்போடுகைதொழுதான். (௧௫)

உருகுங்கமழ்நெய்பாலிருபாலுங்கரையொத்துப்
பெருகுந்துறையேழேழுபிறப்புங்கெடமூழ்கிக்
கருதுங்கருமுகின்மேனியர்கவிஞானியர்கண்ணிற்
பருகுஞ்சுவையமுதானவர்பாதந்தலைவைத்தான். (௧௬)

ஐயானனனியல்வாணனையடிமைக்கொளமெய்யே
பொய்யாவணமெழுதும்பதிபொற்போடுவணங்கா
மெய்யாகமவதிகைத்திருவீரட்டமுநேமிக்
கையாளனகேந்திரபுரமுங்கண்டுகைதொழுதான். (௧௭)

இன்னம்பலபலயோனியிலெய்தாநெறிபெறவே
முன்னம்பலரடிதேடவுமுடிதேடவுமெட்டா
வன்னம்பலபயில்வார்புனலணிதில்லையுளாடும்
பொன்னம்பலநாதன்கழல்பொற்போடுபணிந்தான். (௧௮)

இலங்காபுரிமுன்செற்றவனிருபோதும்வணங்கத்
துலங்காடரவணைமேலறிதுயில்கொண்டவர்பொற்றாள்
பொலங்காவிரியிருபாலும்வரப்பூதலமங்கைக்
கலங்காரமளிக்குந்தென்னரங்கத்திடைதொழுதான். (௧௯)

வளவன்பதிமுதலாகவயங்கும்பதிதோறுந்
துளவங்கமழதிசீதளதோயங்கள்படிந்தே
யிளவண்டமிழெழுதேடுமுன்னெதிரேறியதுறைசூழ்
தளவங்கமழ்புறவஞ்செறிதண்கூடல்புகுந்தான். (௨௦)

வேறு.

குன்றிளவாடைவரும்பொழுதெல்லாமலர்ந்ததிருக்கொன்றைநாறத்
தென்றல்வரும்பொழுதெல்லாஞ்செழுஞ்சாந்தின்மணநாறுஞ்செல்வவீதி
நன்றறிவார்வீற்றிருக்குநான்மாடக்கூடல்வளநகரியாளும்
வென்றிபுனைவடிசுடர்வேன்மீனவனைவானவர்கோன்மதலைகண்டான். (௨௧)

அந்நிலத்தினவரல்லாவந்தணரோடிவனவனுக்காசிகூற
வெந்நிலத்தீரெப்பதியீரெத்திசைக்குப்போகின்றீரென்றுபோற்றிச்
சென்னியர்க்கும்வில்லவர்க்குமணிமுடியாங்கணைகழற்காற்செழியன்கேட்பக
கன்னியைக்கண்ணுற்றுடவந்தனமென்றனன்மெய்ம்மைக்கடவுள்போல்வான். (௨௨)

வெய்தின்மகபதிமுடியில்வளையெறிந்துமீண்டநாள்விண்ணின்மாதர்
கொய்துமலர்தொலையாதகுளிர்தருக்களொருகோடிகொண்டுபோந்து
மைதவழ்தன்றடங்*கோயில்வருதமதனொருமருங்குவைத்தகாவிற்
கைதவர்கோன்மற்றவர்க்குப்போனகஞ்செய்தருந்துமிடங்கற்பித்தானே. (௨௩)

வேதியரோடக்காவிலிளைப்பாறியிருந்தளவின்மின்குழாம்போற்
றூதியருஞ்சேடியருந்தற்சூழச்சிலைமதனன்றனிசேவிக்கச்
சோதியரிச்சிலம்பரற்றத்துணைநெடுங்கண்செவியளப்பத்தொடித்தோள்வீசி
யாதியரவிந்தையெனநிருபன்மகள்விளையாடற்காங்குவந்தாள். (௨௪)

பச்சென்றதிருநிறமுஞ்சேயிதழும்வெண்ணகையும்பார்வையென்னு
நச்சம்புமமுதூறநவிற்றுகின்றமடமொழியுநாணும்பூணுங்
கச்சின்கணடங்காதகனதனமுநுண்ணிடையுங்கண்டுசோர்ந்து
பிச்சன்போலாயினனப்பெண்கொடிமெய்ந்நலமுழுதும்பெறுவானின்றான். (௨௫)

புத்திரர்வேறில்லாதுபுரிவரியதவம்புரிந்துபூழிவேந்தன்
சித்திரவாகனன்பயந்தசித்திராங்கதையென்னுஞ்செஞ்சொல்வஞ்சி
பத்திரமுநறுமலருமவயவம்போல்விளங்குவனபலவுங்கொய்து
மித்திரமாமகளிருடன்விரவியொருசெய்குன்றின்மேவினளே. (௨௬)

* கோயிலவரோதமனைப்படப்பைவைத்த என்றும்பா

முன்னுருவந்தனைமாற்றிமுகில்வாகன்றிருமதலைமோகியாகித்
தன்னுருவந்தனைக்கொண்டுசாமனிலுங்காமனிலுந்தயங்குமெய்யோன்
பொன்னுருவமெனமலர்ந்துபொலிந்ததொருசண்பகத்தின்பூந்தண்ணீழன்
மின்னுருவநுண்ணிடையாள்விழிகளிக்கும்படிநின்றான்வீரரேறே. (௨௭)

வண்டானந்திரிதடத்துவரிவண்டினம்பாடமயில்களாடத்
தண்டார்மெய்க்கிளிக்கூட்டஞ்சான்றோர்களுரைபயிற்றத்தமிழ்கண்மூன்றுங்
கொண்டாடியிளம்பூவைக்குழாந்தலைசாய்த்துளமுருகுங்குன்றிணைகட்
கண்டாளக்குமரனைத்தங்கொடிக்கயலைப்புறங்காணுங்கண்ணினளே. (௨௮)

செந்திருவையனையாளுந்திருமாலையனையானுஞ்சிந்தையொன்றாய்
வந்திருவர்விலோசனமுந்தடையின்றியுறவாடிமகிழ்ச்சிகூர்ந்து
வெந்துருவமிழந்தமதன்மீளவும்வந்திரதியுடன்மேவுமாபோற்
கந்தருவமுறைமையினாற்கடவுளர்க்குங்கிடையாதகாமந்துய்த்தார். (௨௯)

கூடியிருவருமொருவரெனவிதயங்கலந்ததற்பின்குறித்ததூநீ
ராடியவந்ததுந்தன்னையருச்சுனனென்பதுமிளமானறியக்கூறி
நீடியதென்றையுறுவர்நீயினியேகெனவுரைப்பநெடுங்கண்ணாள்போய்ச்
சேடியருக்கஞ்ஞான்றுநிகழ்ந்தவெலாமகிழ்ந்துருகிச்செப்பினளே. (௩௦)

கவுரியர்கோன்றிருமகளைக்கண்ணனையார்கொண்டுபோய்க்கன்னிமாடந்
தவிருமணிப்பரியங்கத்தையமளியேற்றியபின்னநங்கன்போரா
னவிருடைமாமயலுழந்துசயனங்கள்பொருந்தாமனனுறுமற்
றவிர்கெனவுந்தவிராமற்றன்விரகங்கரையழிந்துதளர்ந்தாண்மன்னே. (௩௧)

தங்கண்மலைச்சந்தனத்தைத்தழற்குழம்போவிதுவென்னுந்தாபந்தோன்றத்
தங்கள்கடற்றண்முத்தைக்கண்முத்தானீறாக்குந்தக்கோராய்ந்த
தங்கடமிழ்க்குழலிசையைத்தன்செவிக்குவிடமென்னுந்தபனனேகத்
தங்கள்குலக்கலைமதியைத்தபனனெனுமென்பட்டாடனிபொறாதாள். (௩௨)

அங்குயிர்போலிருமருங்குமாயமடமகளிரிருந்தாற்றவாற்றக்
கங்குலெனும்பெருங்கடலைக்கரைகண்டாள்கடற்புறத்தேகதிருங்கண்டா
ளிங்கிவள்போய்மலர்க்காவினெழில்விசயற்கிடழிந்தவின்னலெல்லாஞ்
சங்கெறியுந்தடம்பொருநைத்துறைவனுக்குச்செவிலியராந்தாயர்சொன்னார். (௩௩)

ஐந்தருவினீழலின்வாழரியுடனேயோரரியாசனத்தில்வைகிப்
புந்தியுறவொருவருமுன்பூணாதமணியாரம்பூண்டகோமா
னந்தவுரைசெவிப்படலுமதிதூரம்விழைவுடன்சென்றாடுதீர்த்தம்
வந்ததுநந்தவப்பயனென்றுட்கொண்டான்மகோததியும்வணங்குந்தாளான். (௩௪)

வழுதிதிருமகள்கொடுத்தமையலினால்வடிவமுந்தன்மனமும்வேறாப்
பொழுதுவிடிவளவுமதன்பூசலிலேகருத்தழிந்துபூவாம்வாளி
புழுதகொடும்புண்வழியேயூசிநுழைந்தெனத்தென்றலூரவூர
விழிதுயிலாவிசயனுமவ்விபுதருடன்றுயிலுணர்ந்துவிதியுஞ்செய்தான். (௩௫)

பஞ்சவரினடுப்பிறந்தோன்பஞ்சவன்பேரவையெய்திப்பஞ்சபாண
வஞ்சகன்செய்வஞ்சனையான்மதிமயங்கியிருந்துழியம்மதுரைவேந்தன்
சஞ்சரிகநறுமலர்த்தார்த்தனஞ்சயனென்றறிந்தெழுந்துதழீஇக்கொண்டாங்க
ணஞ்சலினியுனக்குரியாள்யான்பயந்தகடற்பிறவாவமுதமென்றான். (௩௬)

கேண்மதியோர்மொழிமுன்னங்கேண்மையினங்குலத்தொருவன்கிரீசன்றன்னைத்
தாண்மலரன்புறப்பணிந்துதவம்புரிந்தான்மகப்பொருட்டாற்றரித்தகொன்றை
நாண்மலரோன்வெளிநின்றந்நரபதிக்குநின்குலத்துநரேசர்யார்க்கும்
வாண்மருவுங்கரதலத்தோயோரொருமாமகவென்றுவரமுமீந்தான். (௩௭)

அன்றுரைத்தவரத்தின்வழியநேகரவனிபருட்க*வளித்தாரொன்றொன்
றொன்றுரைக்கமருதொழினீயொருமகவும்பெண்மகவாயுதித்ததென்பா
னன்றுரைக்குமொழியாயென்னவ்விபெறுமகவெனக்கேநல்கவேண்டு
மென்றுரைத்தான்மன்றல்பெறவிருந்தோனுமாமனுரைக்கிசைந்தானன்றே. (௩௮)

தெண்டிரைகைதொழுகழலோன்றிருமகட்குவதுவையெனச்சேரசோழ
ரெண்டிசையின்முடிவேந்தரெல்லோருமுனிகணத்தோரெவருமீண்ட
வண்டர்பிரானளித்தசிலைபாண்டகையையலங்காரமனைத்துஞ்செய்து
மண்டபமொன்றினிலறுகால்வண்ணமணிப்பலகையின்மேல்வைத்தாரன்றே. (௩௯)

கோமடந்தைகளிகூரப்புகழ்மடந்தைகளிகூரக்கொற்றவிந்தை
மாமடந்தைகளிகூரமணவினையொப்பனைக்குரியமடந்தையார்கள்
பூமடந்தையனையாளைப்பூட்டியவெண்டரளமணிப்பூண்களாலே
நாமடந்தைநிகராக்கிநாயகன்றன்வலப்பாகநண்ணுவித்தார். (௪0)

இந்திரனுஞ்சசியுமெனவிறையோனுமுமையுமெனவெம்பிரானுஞ்
செந்திருவுமெனக்காமதேவுமிரதியுமெனவெஞ்சிலைவலோனுஞ்
சந்தணிபூண்முலையாளுஞ்சதுர்மறையோர்சடங்கியற்றத்தழல்சான்றாகத்
துந்துபியின்குலமுழங்கச்சுரிசங்கின்குழாந்தழங்கத்துலங்கவேட்டார். (௪௧)

வேறு.

நோக்கியகண்ணிமையாமனோக்கிநோக்கி நுண்ணியமென்புலவியிலேநொந்து நொந்து, தேக்கியசெங்கனியிதழாரமுதுண்டுண்டுசேர்த்தியகைந்நெகிழாமற்சேர்ந்து சேர்ந்து, தூக்கியபொற்றுலையினநராகமேன்மேற்றொடரவரும்பெரும்போகந்து ய்த்தார்முன்னைப், பாக்கியம்வந்திருவருக்கும்பலித்ததல்லாற்பாயனலத்திப்படியா ர்பயன்பெற்றாரே. (௪௨)

பன்னாளினெடும்போகம்பயின்றபின்னர்ப் பப்புருவாகனனெனும்பைதற்றிங்க
ளன்னானையவள்பயந்தாள்பயந்தபோதேயம்மகவைப்புவகையுடனவனுமீந்தான்
றென்னாவென்றளிமுரலவேம்பின்றண்டார்த்தேப்பரிசில்வழங்குபுயத்தென்னர்கோவு
நின்னாலென்மரபுநிலைபெறறதென்றுநேயமுடன்கவர்ந்துதுயர்நீங்கினானே. (௪௩)

பார்த்தனருச்சுனன் †கரியோன்விசயன்பாகசாதனிசவ்வியசாசிபற்குனன்பா
ரேத்துதனஞ்சயன்கிரீடிசுவேதவாகனனெனுநாமம்படைத்தபிரான்யாழோரின்பம்
வாய்த்தவிதழமுதமொழிப்பேதைதாதைமனையிருக்கத்திருவழுதிவளநாட்டுள்ள
தீர்த்தமுழுவதுமாடியன்பாற்றென்பாற்றிருமலையுங்கைதொழுதுசிந்தித்தானே. ()

* அளித்தார்யானீங்கொன்று என்றும் பாடம்.
† விசயன்கரியோனண்பன்பாகசாதனிவிபற்சுபற்குனன் என்றும் பாடம்.

கன்றியவெங்கரன்முதலோர்களத்தில்வீழக்கவிகுலநாயகனிதயங்கலங்கிவீழ
வொன்றுபடமரமேழுமுததியேழுமூடுருவச்சரந்தொடுத்தவொருவில்வீரன்
றுன்றியெழுபதுவெள்ளங்குரங்கின்சேனைசூழ்போதவாய்ந்ததிருத் துணைவனோடுஞ்
சென்றவழியின்றளவுந்துளவநாறுஞ்சேதுதரிசனஞ்செய்தான்றிறல்வல்லோனே.()

வன்றிரைவெங்களிற்றினங்களிரண்டுபாலுமலையாமலிடுங்கணையமரனேபோலுந்
தன்றலைகளமிழாமலெடுப்பான்மேருத்தாழ்கடலினீட்டியதோர்தடக்கைபோலு
மன்றியிருபூதலமுமிருதட்டாகவகத்தியன்வாழ்குன்றிணையுமணிமுக்கோணக்
குன்றிணையுஞ்சீர்தூக்கிநிறுப்பதாகக்கோகனகனமைத்ததுலைக்கோலும்போலும். ()

[ன்னித்
அண்டர்தமகங்கையினும்வரனுண்டென்றென் றரம்பையரோடவனியில்வந்தாடுங்க
தண்டுறையுந்தண்பொருநைப்பாவநாசத்தடந்துறையும்படிந்துநதித்தடமேபோந்து
பண்டுமழுப்படையோனம்மழுவாற்கொண்டபாக்கியபூமியுஞ்சேரன்பதிகளியாவுங்
கண்டுமனங்களிகூரச்சென்றுமேலைக்கடல்கண்டானுரகதலங்கண்டுமீண்டான்.(௪௭)

அந்தநெடுந்திசைப்புனல்களாடுநாளிலைந்துதடத்தரம்பையரோரைவர்சேர
விந்திரன்வெஞ்சாபத்தாலிடங்கராகிபிடருழந்தோர்பழையவடிவெய்தநல்கிச்
சிந்துதிரைநதிபலவுஞ்சென்றுதோய்ந்துதிங்களுடனரவுறவுசெய்யும்வேணிக்
கொந்தவிழுமலரிதழித்தொடையோன்வைகுங்கொடிமதில்சூழ்கோகன்னங்குறுகி
னானே. (௪௮)

ஆகன்னமுறச்செம்பொன்வரைவில்வாங்கியவுணர்புரங்கட்டழித்தோனடியில்வீழ்ந்து
கோகன்னவளம்பதியிற்றன்பின்வந்தகுலமுனிவர்தமையிருத்திக்கோட்டுக்கோட்டு
நாகன்னப்பெடையுடனேயாடுங்கஞ்சநறைவாவிவண்டுவரைநண்ணியாங்கட்
பாகன்னமொழிக்கனிவாய்முத்தமூரற்பாவைநலம்பெறமுக்கோற்பகவனானான்.(௪௯)

வெங்கதிர்போய்க்குடதிசையில்வீழ்ந்தபின்னர்வீழாமன்மாலையின்வாய்மீண்டுமந்தச்
செங்கதிர்வந்தெழுந்ததெனமீதுபோர்த்தசெய்யவாடையுந்தானுந்தீர்த்தவாரிச்
சங்கதிருமணிவீதிநகரிசூழ்ந்ததடஞ்சாரலிரைவதகசயிலநண்ணிப் [பர்சேர்ந்தான்.
பொங்கதிர்பைம்புயலெழுந்துபொழியுங்கங்குற்போயொருநீள்வடதருவின்பொதும்

இந்திரற்குத்திருமதலைமன்றலெண்ணியாதவர்கோன்வளம்பதியிலெய்தினானென்
றந்தரத்தைநீலத்தால்விதானமாக்கியண்டமுறவிடிமுரசமார்ப்பவார்ப்ப
வந்திரட்டைவரிசிலையாற்பஞ்சவண்ணமகரதோரணநாட்டிவயங்குமின்னான்
முந்துறத்தீபமுமெடுத்துத்தாரைமுத்தான்முழுப்பொரிசிந்தினகாலமுகில்களம்மா.

யாங்கருதிவருங்கருமமுடிப்பானெண்ணியிராமன்முதல்யதுகுலத்தோரிசையாரென்று
பாங்குடனேதனக்குயிராந்துளபமௌலிப்பரந்தாமன்றனைநினைந்தான்பார்த்தனாகப்
பூங்கமலமலரோடையனையான்றானும்பொன்னெடுந்தேர்ப்பாகனுமேயாகப்போந்து
நீங்கரியநண்பினனாய்நெடுநாணீங்குநேயத்தோனினைவின்வழிநேர்பட்டானே.(௫௨)

யதியாகியவணிருந்ததோழன்றன்னையதுகுலநாயகன்பரிவோடிறைஞ்சவன்பா
லதியானநெடுஞ்சுருதியாசிகூறியாகமுறத்தழீஇமகிழ்வுற்றாலநீழன்
மதியார்செஞ்சடைமுடியோனென்னவைகிவந்தவாறுரைப்பநெடுமாலுங்கேட்டுத்
துதியாடிக்காலையிலேவருதுமென்றுசொற்றிமைப்பின்மீளவும்போய்த்துவரைசேர்ந்
தான். (௫௩)

ஆதவன்வந்துதிப்பதன்முன்மற்றைநாளிலணிகொள்வாழ்சனமனைத்துமந்தக்குன்றின்
மாதவனதேவலினான்மழைக்காலத்துவாசவற்குவிழாவயர்வான்வந்தகாலை
யாதவரிற்போசரின்மற்றுள்ளவேந்தரியாவருஞ்சூழ்வரநறுந்தாரிராமன்வந்தான்
சூதடர்பச்சிளங்கொங்கைப்பச்சைமேனிச்சுபத்திரையுந்தோழியர்கள்சூழவந்தாள்.

முக்கோலுங்கமண்டலமுஞ்செங்கற்றாசுமுந்நூலுஞ்சிகையுமாய்முதிர்ந்துதோன்று
மக்கோலமனைவருங்கைதொழுதுநோக்கியருணலம்பெற்றகன்றதற்பினனைத்துலோகத்
தெக்கோலயோனிகட்குமுயிராய்த்தோற்றமீரைந்தாய்ப்பாற்கடலினிடையேவைகு
மைக்கோலமுகில்வண்ணன்றானுமெய்திமனவணக்கம்புரிவோனைவணங்கினானே. ()

துன்னியிருவருமொருப்பட்டிருந்தகாலைச்சுபத்திரையத்தடங்குன்றின்சூழலோர்சார்
மின்னியபைம்புயலினெழிலிரேகைபோலவெளிப்படலுமெய்புளகமேன்மேலேறிக்
கன்னியிளந்தளிர்க்கடம்புமலர்ந்ததென்னக்கண்டவிழியிமையாதகாட்சிகாணா
மன்னியமாதவத்தோனைமந்தமூரன்மாதவன்மைத்துனமையினான்மகிழ்ச்சிகூர்ந்தே.

அடிகடிருவுளத்தெண்ணமெம்மனோர்களறியினிசையலர்பலரிங்கறிவுறுமற்
கடியயர்வுற்றும்பதிகொண்டடைகவென்றுங்காவலர்க்குக்கடனென்றுங்கசியக்கூறிக்
கொடியிடைவெங்களபமுலைக்கன்னிமானைக்கூயணங்கேமெய்ம்மையுறக்கொண்டகோலப்
படிவமுனிக்கிருபருவம்பணித்தவேவல்பரிவுடனீபுரியென்றுபணித்திட்டானே. ()

வேறு.

உள்ளடங்கியகாமவெங்கனல்புறத்தோடிக்
கொள்ளைகொண்டுடன்மறைத்தெனக்கூறையுந்தானு
மெள்ளவந்துதன்கடிமனைமேவியவேடக்
கள்ளவஞ்சனையறிந்திலள்கற்புடைக்கன்னி. (ருஅ)

ஈங்குவந்ததென்றவப்பயனென்றுகொண்டெண்ணி
யாங்குவந்தொருமனையிடையருந்தவன்றுயிலத்
தூங்குகண்ணினள்சுபத்திரைதோழியர்பலரும்
பாங்குவைகமற்றொருமனைபுகுந்துகண்படுத்தாள். (ருகூ)

புடவியெங்கணும்புதையவான்பொழிதருபுனலா
லடவியாரழலவியவுமவிந்திலதையோ
தடவிவாடைமெய்கொளுத்திடத்தனஞ்சயற்கணங்கின்
விடவிலோசனக்கடைதருவிரகவெங்கனலே. (சூ0)

மதனலீலையிற்பழுதறவழிபடும்பாவை
வதனவாண்மதிவந்துமுன்னிற்கவுமருண்டச்
சதனமேவருந்தபோதனன்றனக்குவெம்மோக
விதனவல்லிருள்விடிந்திலதாரிருள்விடிந்தும். (சூக)

அற்றைநாண்முதலநேகநாளகின்மணங்கமழும்
கற்றைவார்குழற்கன்னிகைவழிபடக்கருத்தா
விற்றைமாமதன்பூசலுக்கென்செய்வோமென்றென்
றொற்றையன்றில்போன்மெய்ம்மெலிந்துள்ளமுமுடைந்தான். (சூஉ)

நல்லிலக்கணம்பலவுடையவயவநலத்தால்
வில்லிலக்கணத்தழும்புடைக்கரங்களான்மிகவுந்
தொல்லிலக்கணம்பலவுடைச்சுபத்திரையொருத
னில்லிலக்கணவனையிவன்யார்கொலென்றயிர்த்தாள். (௬௩)

மங்கையங்கொருநாளவன்மலரடிவணங்கி
யெங்கும்வண்புனலாடுதற்கேகினீரெனினுந்
தங்குமாநகர்யாதெனத்தபோதனன்றானு
மெங்கண்மாநகரிந்திரப்பிரத்தமென்றிசைத்தான். (௬௪)

என்றகாலையிலிந்திரன்மதலையையொழிய
நின்றபேரையங்நெடுங்ணாள்வினவலுங்கிருபன்
வென்றிமன்னவர்யாரையும்வினவிலைமின்னே
மன்றலந்தொடைவிசயனைமறந்ததென்னென்றான். (௬௫)

யாழின்மென்மொழியெங்கணையகியிவளவனுக்
கூழினன்புடைமன்றலுக்குரியளாதலினால்
வாழிவெஞ்சிலைவிசயனைமறைத்தனளென்னாத்
தோழிநின்றவளொருத்திகைதொழுதனள்சொன்னாள். (௬௬)

பங்குனன்பெருந்தீர்த்தநீர்படிவதற்காகப்
பொங்குதெண்டிரைப்புவிவலம்போந்தனனென்றே
யங்குநின்றுவந்தவருரைத்தனரவனிப்போ
தெங்குளானெனத்தெரியுமோவடிகளுக்கென்றாள். (௬௭)

பாங்கிநல்லுரைதன்செவிப்படுதலும்விசயன்
றீங்கிலன்பலதிசைகளுஞ்சென்றுநீராடிக்
கோங்கிளங்கொழுமுகைநிகர்கொங்கையாள்பொருட்டா
லீங்குவந்துநும்மில்லிடையிருந்தனனென்றான். (௬௮)

யதியுரைத்தசொற்கேட்டலும்பாதவிநுதல்வாண்
மதிவியர்த்ததுதுடித்ததுகுமுதவாய்மலரும்
புதியகச்சணிகுரும்பைகளரும்பினபுளகம்
பதியிடத்தரிவையர்க்குளமாகுலம்படாதோ. (௬௯)

உகவைமுத்தமென்பவளமுநீலமுமொளிர
வகவுபச்சிளந்தோகைபோனின்றவவ்வணங்கை
மிகவிருப்பநோய்வளர்தலின்மெலிந்ததோள்விசயன்
றகவுடைத்தனதடக்கையால்வளைக்கரந்தகைந்தான். (௭௦)

தகைந்தபோதுயிர்ச்சேடியர்தவிர்கெனச்சிலசொற்
பகர்ந்துபோயொருமாதவிப்பந்தரிற்புகுந்து
புகுந்தநீர்மையைத்தேவகியறியுபாபுகன்று
ரகைந்தபல்பெருங்கிளைஞரிலார்கொலோவறிந்தார். (௭௧)

அறிவுருவகையலாயுதன்முதல்வடமதுரை
செறியும்யாதவர்யாரையுந்தன்னுடன்சேர்த்து
மறிகொள்செங்கையன்விழாவயர்வான்பெருந்தீவி
லுறியில்வெண்டயிருண்டவன்கொண்டுசென்றுற்றான். (௭௨)

உற்றகங்குலில்யாவருந்தணந்தவாறுணர்ந்து
பெற்றதன்பெரும்பிதாவினைமுன்னினன்பெரியோன்
சிற்றிடைப்பெருங்கொங்கையுந்தம்முனைத்தியான
முற்றமுன்னினளிருவருமுன்முன்வந்துற்றார். (௭௩)

இந்திராணியோடெய்தியவிந்திரன்றன்னை
யிந்திராபதியெதிர்கொளத்துவரைமாமூதூர்ச்
சந்திராதவமண்டபத்திடுபொலந்தவிசில்
வந்திராவணங்கியதிருமகனுடன்மகிழ்ந்தான். (௭௪)

பொருவரும்புருகூதனும்புலோமகன்னிகையு
மிருவருந்தமகலன்களாலிவரிருவரையு
மருவரும்படியணிதலினணிகெழுவனப்பா
லொருவரும்பிறரொப்பலரென்னுமாறுயர்ந்தார். (௭௫)

பாலருந்ததிநறுநெய்யாய்ப்பாடியிற்கள்ளத்
தாலருந்ததிவிரகனதருளினால்விரைவிற்
சாலருந்ததிதலைவனுந்தலைபெறும்பலநுண்
ணூலருந்ததியுறப்புகுந்தாசிகணுவன்றார். (௭௬)

தொடங்கினதவெம்முரசுடன்சுரிமுகந்தழங்கச்
சடங்கினாலுயபராகுதித்தழலவன்சான்றா
விடங்கினான்மிகுவிசயனக்கன்னியைவேட்டான்
மடங்கினார்தமபதிதொறுமவ்வுழிவந்தார். (௭௭)

முன்னம்யாவையுமுடித்தருண்மொய்துழாய்முடியோன்
கன்னனாருயிர்கொளவளர்காளையைத்தழீஇக்கொண்
டன்னமென்னடையரிவையர்பொருட்டுநீயின்ன
மென்னவென்னமாதவவுருக்கொள்ளுதியென்றான். (௭௮)

வேறு.

காமற்பயந்தோன்றனதேவலிற்காமபாலன்
வாமப்பதிதன்னினும்வாசவமாபிரத்த
நாமப்பதியேதிசையாகநடக்கலுற்றான்
றாமக்குழலாடனித்தேர்விடச்சாபவீரன். (௭௯)

வென்றித்துவரைநகர்காவலர்தம்மைவென்று
மன்றற்குழலினிளையாளைவலிதினெய்திக்
குன்றச்சிறகரரிந்தோன்மகன்கொண்டுபோனா
னென்றப்பலற்குக்கடல்வண்ணனியம்பினானே. (௮௰)

சேலாம்பிறப்பிற்றிருமாலிதுசெப்புமுன்னே
காலாந்தகனும்வெருவுந்திறற்காளை தன்னை
நீலாம்பரனும்யதுவீரநிருபர்யாரும்
நாலாம்படையோடெதிர்சூழ்ந்தமர்நாடினாரோ. (௮௧)

அஞ்சேலமரினுமர்தம்மையுமாவிகொள்ளேன்
செஞ்சேலனையவிழியாயெனத்தேற்றியந்த
மஞ்சேயனையதடந்தேரவனூரவந்த
வெஞ்சேனைமுற்றும்புறந்தந்திடவென்றுபோனான். (௮௨)

மடைபட்டவாளையகினாறுமருதவேலி
யிடைபட்டதங்கள்வளநாடுசென்றெய்தியாங்குத்
தொடைபட்டதிண்டோளறன்காளைதுணைவரோடு
நடைபட்டுருகியெதிர்கொள்ளநகரிபுக்கான். (௮௩)

முன்போர்விளைத்தமுசலப்படைமொய்ம்பினானுந்
தன்போலுயர்ந்தோரிலனானதடங்கண்மாலும்
பின்போயினியமொழியாயிரம்பேசிமன்றற்
கன்போடுதவுமுபசாரமனைத்துமீந்தார். (௮௪)

ஞாலத்தெரிவைகளிகூரநடாத்துசெங்கோற்
றாலத்துவசன்றுவராபதிதன்னில்வைக
நீலக்கடல்களிரண்டாமெனநெஞ்சொடொத்த
சீலத்தவனோடவண்வைகினன்செங்கண்மாலே. (௮௫)

பன்னாளிவரிப்பதிசேர்ந்தபின்பங்கசாத
மின்னாளுமார்பற்குயிர்போலும்விசயனென்பா
னன்னாளினன்மைதருமோரையினல்கவஞ்சி
யன்னாளிடத்திலபிமன்னுவவதரித்தான். (௮௬)

வேதஞ்சிறக்கமனுநீதிவிளங்கவிப்பா
ராதங்கமாறவருமைவரினைவர்மைந்தர்
பூதங்களைந்திற்குணமைந்தும்பொலிந்தவாபோ
லோதங்கியிலுற்பவித்தாள்வயினுற்பவித்தார். (௮௭)

அம்மாதுலனும்பயந்தோருமழகின்மிக்க
விம்மாமகாருக்கியற்றும்விதியேய்ந்தபின்னர்த்
தெம்மாறுவின்மைமுதலாயசெயல்கள்யாவுங்
கைம்மாறுகொண்டுநனிகைவருபாறுகண்டார். (௮௮)

அரிதிற்பயந்தவறுவோருளுமாண்மைதன்னா
லிருதுக்களின்மேலிளவேனிலின்றோற்றமேய்ப்ப
மருதுக்கிடைபோமதுசூதன்மருகன்வெம்போர்
விருதுக்கொருவனிவனென்னவிளங்கினானே. (௮௯)

உரனுலிழகா லுரையான்மற்றுவமையில்லா
நரநாரணர்க்குநலங்கூர்தருநண்புபோல்வா
னரனுர்விழியாலழிந்தங்கமநங்கமான
மரனுருடனண்பிசைந்தன்றுவசந்தகாலம். (கூ0)

அருச்சுனன்றீர்த்தயாத்திரைச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்—எஉக.

வசந்தகாலச்சருக்கம்.

நனியாடலனற்கடவுள்யமனிருதிநண்ணுதிசைநாள்கடோறு
முனியாமனடந்திளைத்துமுன்னையினும்பரிதாபமுதிர்ந்ததென்று
தனியாழித்தனிநெடுந்தேர்த்தனிப்பச்சைநிறப்பரியைச்சயிலராசன்
பனியாலவ்விடாய்தணிப்பான்பனிப்பகைவன்பனிசெய்வோன்பக்கஞ்சேர்ந்தான்.

கலக்கமுறவிளவேனிற்கலகமெழுந்திடும்பசுந்தண்காவுதோறுஞ்
சிலைக்கணிநாண்முருக்குவபோற்றென்றலின்பின்சுழலளிகள்சேரவோட
வுலைக்கனலிற்கருங்கொல்லன்சிறுகுறட்டாற்றகடுபுரிந்தொதுக்கிமாரன்
கொலைக்கணைகள்சமைப்பனபோற்குபிலலகாற்பல்லவங்கள்கோதுமாலோ. (உ)

செங்காவிசெங்கமலஞ்சேதாம்பறடந்தொறுமுத்திக்களாகப்
பைங்காவினெடுஞ்சினைக்கைமலர்நறுந்தேனுகுதிகள்பலவும்விழ்க்க
வங்காரமதுகரங்களோங்காரச்சுருதிபெடுத்தோதவேள்வி
வெங்காமனிரதியுடன்புரிந்துதனதென்றலந்தேர்மேற்கொண்டானே. (ந)

தேவியருந்திருமாலுஞ்செழுமலர்த்தார்த்தனஞ்சயனுந்தேவிமாரு
மேவியனந்தரம்வேனில்விழவயர்வான்முரசறைந்துவிதிதோறு
மோவியமுமுயிர்ப்பெய்தவுபேந்திரனுமிந்திரனுமுவமைசாலப்
பூவினமுஞ்சுரும்புமெனப்புரமுழுதும்புறப்படவண்பொங்கர்சேர்ந்தார். (ச)

கொண்டலெழுமின்னுடங்கக்கொடுஞ்சாபம்வளைவுறச்செங்கோபந்தோன்ற
வண்டளவுநறுங்குமிழும்வண்டணிகாந்தளுமலரமலைகடோறுந்
தண்டரளவருவிவிழத்தையலார்வடிவுதொறுஞ்சாயற்றோகை
கண்டுமக்கிளவேனில்கார்காலமானதெனக்களிக்குமாலோ. (ரு)

பாராமனகையாமற்பாடாமலாடாமற்பாதஞ்செங்கை
சேராமன்முகராகம்வழங்காமலிகழாமற்செவ்வாயூற
னேராமனிழலதனைநிகழ்த்தாமன்மலர்ந்தழகுநிறைந்தநீழ
லாராமந்தொறுந்தங்களவயவம்போல்வனகொய்தாரணங்குபோல்வார். (சா)

மாற்றுறுதபனிநீரான்மான்மதகுங்குமமலயவாசச்சந்தின்
சேற்றுலச்சோலையெலாஞ்செங்கழுநீர்த்தடம்போன்றசிந்தைத்தாப
மாற்றுதகாதலருக்கமுதானவிளநீராலடர்ந்தபூகத்
தாற்றுலம்மரகதச்செந்துகிராலப்பொழில்பொன்றதடங்களெல்லாம். (எ)

மெய்கொண்டமொழிவிசயன்மெய்யினெழிலிமையாமன்மேன்மேனோக்கு
மைகொண்டகுழலொருத்திமற்றவன்செங்கையிற்சிவிறிமழைகண்டஞ்சிப்
பொய்கொண்டுவகுத்தனையமருங்கசைபத்தனபாரம்புளகமேறக்
கைகொண்டுமுகம்புதைத்துத்தன்விரற்சாளரங்களிலேகண்கள்வைத்தாள். (௮)

நங்கையங்கோர்கொடியனையாள்வதனமதிசலமதியாய்நடுங்குமாறு
பங்குனன்றன்றிருச்செங்கைப்பங்கயத்தின்சிவிறியினாற்பரிவுகூரக்
குங்குமங்கொள்புனல்விடவுமிமையாமற்புனல்வழியேகூர்ந்தபார்வை
செங்கலங்கற்புதுப்புனலுக்கெதிரோடிவிளையாடுஞ்சேல்கள்போலும். (௯)

நறைகமழ்தண்டுழாய்மாலைநாரணற்குநண்பானநரனார்செங்கை
யுறையுமலர்ச்செந்திருவுமொவ்வாதபொற்புடையாளொருபொற்பாவை
நெறிதருபைங்குழலின்மிசைவீசியநீர்பெருக்காற்றினிறைநீர்வற்றி
யறல்படுநுண்கருமணலினரித்தொழுகுஞ்சின்னீரோடமைந்ததம்மா. (௧௦)

விளிந்துமயில்புறங்கொடுக்குமெல்லியலாளொருத்திநெடுவேவும்பாகுஞ்
சுளிந்துவருங்கடகளிற்றுச்சுவேதவாகனன்கடகத்தோளின்மீது
தெளிந்தநறுங்கத்தூரிச்சேறுபடுசிவிறியினீர்சிந்துந்தோற்றங்
களிந்தகிரிமிசைக்கடவுட்காளிந்திபரந்ததெனக்கவினுமாதோ. (௧௧)

பிறையனையதிலகநுதற்பேதையிளம்பிடியொருத்திபிடித்தசெங்கை
நறைகமழும்பொலஞ்சிவிறிநண்ணியசெஞ்சிந்தூரநாரம்வீச
வறைகழல்வெஞ்சிலைத்தடக்கையருச்சுனன்றன்றிருமுகத்திலானபோது
நிறைமதிமேல்வாளிரவிகரங்கணிரைத்தோடுவபோனிறத்தமாதோ. (௧௨)

பாண்டுமதலையுங்காதற்பாவையருந்துழாயோனும்பாவைமாரு
மீண்டுபெருஞ்சனத்துடனேயிவ்வண்ணமிடந்தோறுமினிதினாடி
யாண்டுவரிசிலைமதனுமவன்படையுஞ்சேவிப்பவழகுகூர
மீண்டுதமமனைதோறுநிரைநிரைவாள்விளக்கேந்தமேவினாரே. (௧௩)

நெடுவேனில்புகுதரமேலிளவேனிலகன்றதற்பினிகரில்கஞ்சப்
படுவேய்வெள்வளையமுந்தண்பட்டாலவட்டமுஞ்செம்படீரச்சேறு
முடுவேய்நித்திலத்தொடையுமூடுறுமண்டபத்தடமுமொழுகிநீண்ட
வடுவேய்கண்மடந்தையர்க்குமகிழ்நருக்குமமைந்தனவான்மனைகளெல்லாம். (௧௪)

திலகநுதற்குறுவியர்தஞ்செவிப்பூவிலளியினத்தின்சிறகர்க்காற்றாற்
புலரமதுநுகர்மாதர்புன்முறுவலிதழூறல்புதிதின்மாந்தி
யிலகுபரிமளபுளகவீரமுலைத்தடமூழ்கியிரதிகேள்வன்
கலகமிடும்பரிதாபமகற்றினாரினிமையுடன்கலந்தகேள்வர். (௧௫)

மாரவசந்தனையகன்றுவயங்குறுவெங்கோடையினான்மறுகியாற்றா
தாரமளிமதுமலரிலாரவடங்களிற்பனிநீராரச்சேற்றி
வீரநெடுங்குழலிசையிலியங்கியசாமரக்காற்றிலிளநிலாவிற்
பேரழலும்புகுந்ததெனப்பிணங்கினார்தங்கேள்வர்ப்பிரிந்தமாதர். (௧௬)

கோடைவெயில்சுடச்சுடமெய்கொளுந்தியிறந்தனபோலக்கொண்டல்கோடை
வாடைசிறுதென்றலெனுமாருதங்களெம்மருங்கும்வழக்கமின்றி
யாடையில்வெண்சாமரத்திலாலவட்டத்தினிலுயிர்ப்பிலழகார்நெற்றி
யோடைமுகமதகயத்தின்றழைசெவியிற்பல்விறகிலொளித்தமாதோ. (௧௭)

தாழிநறுங்குவளையந்தார்த்தருமன்மகனருட்புனலுந்தரங்கவேலை
யூழிநெடும்பெரும்புனலுமுடலினுறுவெயர்ப்புனலுமூறியூறிப்
பாழிதொறுமிறைக்கின்றபைம்புனலுமல்லதுவெம்பருவந்தன்னாற்
பூழிபடுகமர்வாயநானிலத்துப்புகலுதற்கோர்புனலுமுண்டோ. (௧௮)

நீகாரமழைபொழியநித்திலவெண்குடைநிழற்றநீலவாட்கட்
பாகாருமொழிமடவார்மணிக்கவரியிருமருங்கும்பயிலவீசக்
கார்காலம்புகுந்துசெழுங்காளமுகிலிரண்டொருபாற்கலந்ததென்ன
வாகாரமழகெறிப்பவிருவருமாங்குடனிருந்தாராவிபோல்வார். (௧௯)

வசந்தகாலச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்—௭௪௦.

காண்டவதகனச்சருக்கம்.

இனியபான்முகந்தொழுக்குமாகுதியெனவிலங்குமுப்புரிநூலுந்
தனதுவெஞ்சிகைக்கொழுந்தெனப்புறத்தினிற்றாழ்ந்தசெஞ்சடைக்காடும்
புனிதவெண்புகைமருங்குசுற்றியதெனப்புனைந்தவாடையுமாகி
மனிதவேதியர்வடிவுகொண்டவரெதிர்வன்னிவானவன்வந்தான். (௧)

வந்தவந்தணன்வரவுகண்டிருவரும்வந்தெதிர்வணங்கித்தஞ்
சிந்தையன்பொடுவேதிகையெனத்திகழ்செம்பொனின்றவிசேற்ற
வந்தணாளனுங்குழிந்தபொற்கண்ணினனவிமணங்கமழ்வாய
னுந்துவெம்பசிபெரிதுவல்லேயெனக்கோதனமிடுகென்றான். (௨)

கரியமேனியரிருவருஞ்செய்யபொற்காயமாமுனியுண்டற்
குரியபோனகமிடுதுமிக்கணத்தெனவுவகையோடுரைசெய்தா
ரரியவாயினும்வழங்குதற்கேற்றனவல்லவாயினுந்தம்மிற்
பெரியவாயினுமதிதிகள்கேட்டனமறுப்பரோபெரியோரே. (௩)

அளித்துமென்றசொற்றன்செவிப்படுதலும்பெற்றனன்போலாகி
யொளித்துவந்தனனிருபிறப்பினனலேனுதாசனனென்னுமங்
களித்துவண்டிமிர்தொடையலீரெனக்குணக்காண்டவமெனுங்கானங்
குளித்தருந்துதற்கிடங்கொடானவ்வனங்கொண்டல்வாகனன்காவல். (௪)

மிடைந்தநால்வகைமகீருகங்களுநெடுவெற்பினங்களுந்துன்றி
யடைந்ததானவரரக்கர்பேருரகருக்காலயங்களுமாகிக்
குடைந்துசோரிகொள்வாளுகிரரிமுதற்கொடுவிலங்கினமிக்குக்
கடைந்தகூரெயிற்றுலதக்ககனும்வாழ்கானனமதுகண்டீர். (௫)

புகுந்தியான்முகம்வைக்கினேழ்புயலையுமேவியப்புருகூதன்
ெறுகுந்தராதலவிறுதிபோனெடும்புனல்சொரிந்தவித்திடுமென்னை
முகுந்தனுனிரைபுரந்தவாறெனவொருமுனைபடவிலக்கிற்பின்
மிகுந்ததாகமுமெண்ணமுமுடிந்திடும்வேண்டுவதிதுவென்றான். (சா)

என்றபோதிலுன்னிச்சையின்படியுணாவீந்தனமிமைப்போழ்திற்
சென்றுகொள்கெனத்தனஞ்சயன்கூறலுஞ்சிந்தைகூர்மகிழ்வெய்தி
மன்றலந்துழாய்மாயவனருளினுல்வடிக்கணைமாளாமற்
றுன்றுதூணியுஞ்சாபமுமிரதமுஞ்சுவேதவாசியுமீந்தான். (எ)

ஈந்தவானரப்பதாகைகட்டிரண்டிவுளியுமுடன்பூட்டி
யாய்ந்தவன்றெழிற்பாகனுமருணனிலழகுறும்படிதூண்டக்
காய்ந்தசாயகநாழிகைகட்டியக்காண்டிவங்கரத்தேந்தி
வேய்ந்தமாமணிக்கவசமுமருக்கனிலழகுறமேற்கொண்டான். (அ)

நெஞ்சின்மேலிடுமூக்கமோடணிதிகழ்நெடும்புயம்பூரித்துச்
சிஞ்சினீமுகந்தெறித்தனன்றெறித்தலுந்தெறித்தபேரொலிகானின்
விஞ்சிவாழ்வனசத்துவமடங்கவுள்வெருவுறவுகாந்தத்து
மஞ்சினீடுருமொலியெனப்பரந்ததுவான்முகடுறமன்னே. (கூ)

ஆழிவாயொருவடவையின்முகத்திடையவதரித்தனனென்ன
வூழிவாயுலகனைத்தையுமுருக்குமாறுடன்றெழுந்தனனென்ன
வாழிவாழியென்றருச்சுனன்கரத்தையும்வார்சிலையையும்வாழ்த்திப்
பாழிமேனியைவளர்த்தனன்பாவகன்பவனனும்பாங்கானன். (க0)

மூளமூளவெம்பசியொடுஞ்சினத்தொடுமுடுகிவெய்துறவோடி
வாளமாகவோர்பவளமால்வரைநெடுவாரியைவளைந்தென்னக்
காளமாமுகிலூர்திநந்தனநிகர்காண்டவந்தனையண்ட
கோளமீதெழவளைந்தனன்வரைபடிகொண்டலுங்குடர்தீய. (கக)

ஆனவாகுலந்தன்னைடுதப்புதற்கணியடப்பறந்தோங்குந்
தூநிறத்தனகபோதமொத்தனவிடையிடையெழுஞ்சுடர்த்தூமங்
கானமேதியுங்கரடியுமேனமுங்கடகரிக்குலந்தாமும்
வானிலேறுவபோன்றனநிரைநிரைவளர்தருகருந்தூமம். (கஉ)

வரைத்தடந்தொறுங்கதுவியகடுங்கனன்மண்டலினகல்வானி
னிரைத்தெழுந்தசெம்மரகதகனகவாணீலவெண்ணிறத்தூமந்
தரைத்தலத்தினின்றண்டகோளகையுறச்சதமகன்றடஞ்சாப
முரைத்ததன்வளைவறநிமிர்ந்தழகுறவோடுகின்றதுபோலும். (கங)

கருதியாயிரகோடிவெம்புயங்கமிக்கானிடையுளவென்று
பருதிசூழ்வரவெருவுபல்குவடுடைப்பருப்பதங்களின்சாரற்
சுருதிவேள்விநூறுடையவன்சிறகறத்துணித்தவாய்தொறும்பொங்கிக்
குருதிபாய்வனபோன்றனகொழுந்தியகொழுந்தழற்கொழுந்தம்மா. (கச)

கோத்திரங்களின்கவானிடைக்கதுமெனக்கொளுந்தியுற்றெரிகின்ற
தீத்திறங்கள்செங்காந்தளுமசோகமுஞ்செங்குறிஞ்சியுஞ்சேரப்
பூத்தவொத்தனவன்றியுங்குலிகநீர்பொழியருவியும்போன்ற
பார்த்தகண்கள்விட்டேகலாவகைநிறம்பரந்ததாதுவும்போன்ற. (கரு)

தளைத்தபாதவத்தலைதொறும்பற்றினசருகுதிர்த்திளவேனிற்
கிளைத்துமீளவும்பொறியெரியெழவளர்கிசலயங்களும்போன்ற
திளைத்தவேர்முதற்சினைபுறவெரிவனதீபசாலமும்போன்ற
வளைத்தகானிடைமெலமெலவுள்புகுவன்னியின்சிகாவர்க்கம். (கசு)

தழைத்தபேரொளித்திவாகரன்கரங்கள்போய்த்தடவியவ்வடவிக்கட்
பிழைத்தகாரிருட்பிழம்பினைவளைந்துடன்பிடித்தெரிப்பனபோலு
முழைத்தவான்புழையொருகரத்திருபணைமும்மதப்பெருநால்வாய்
மழைத்தகுஞ்சரமுகந்தொறும்புக்குடன்மயங்கியபொறிமாலை. (கஎ)

அரியெனும்பெயர்பொருமையிற்போல்விரைந்தழற்கொழுந்துளைபற்றக்
கிரிமுழைஞ்சுகடொறும்பதைத்தோடினகேசரிக்குலமெல்லாம்
விரியுரோமவாலதிகளிற்பற்றலின்*விளிவுடைச்சவரங்க
ளெரிகொள்சோகவெங்கனலினானின்றுநின்றிறந்தனசலியாமல். (கஅ)

எப்புறத்தினும்புகுந்துதீச்சூழ்தலினேகுதற்கிடமின்றித்
தப்புதற்கருத்தழிந்துபேரிரலையோடுழையினந்தடுமாற
மெய்ப்புறத்துவெண்புள்ளிசெம்புள்ளியாய்விடும்படிவிரைந்தோடி
யப்புறத்துவீழ்பொறிகளவ்வவற்றினையலங்கரித்தனவன்றே. (ககூ)

காழுடைப்புறக்கழைகளின்றுளைதொறுங்கால்பரந்திசைக்கின்ற
வேழிசைக்குளமுருகிமெய்புளகெழவிரைகொளுமசுணங்க
டாழழற்சுடர்சுடச்சுடவெடித்தெழூசடலவோசையின்மாய்ந்த
வூழியிற்புயலுருமினான்மடிந்திடுமுரகர்தங்குலம்போன்ற. (உ0)

அனையபோதிலவ்விபினசாலங்களினார்தருக்களினீண்ட
சினைகடோறும்வாழ்சிகாவளகலாபமேற்செறிதருதீச்சோதி
பனையினீளுடற்பணிகளையலகினாற்பற்றலிற்†படர்பந்திப்
புனையுமாமணிநிழல்பரந்தெழுந்தெனப்பொலிந்திலங்கினமாதோ. (உக)

ஆசுகன்றனோடடவியைவளைத்தனனாசுசுக்கணிமேன்மேல்
வீசுகின்றனபுலிங்கசாலமும்புகல்வேறெமக்கிலதென்று
பாசிளங்கிளிபூவைகள்வெருவிமெய்பதைத்துளந்தடுமாறிப்
பேசுகின்றசொற்கேட்டலுநடுங்கினபிறபறவைகளெல்லாம். (உஉ)

நெஞ்சிலீரமுநீதியுங்குடிபுகாநிருதர்சென்னியில்வன்னி
குஞ்சிநீடுறவளர்வபோலசைந்துசெங்கொழுந்துவிட்டனமேன்மேல்
வஞ்சிநேரிடையரக்கியர்நகமுழுமதிசிவப்புறத்தீட்டும்
பஞ்சிபோன்றனவவரவர்பதயுகம்பற்றியசிகைவன்னி. (உ௩)

---

* விழைவுடை என்றும்பாடம்.
† படப்பந்தி என்றும் பாடம்.

முப்புரங்களைமுக்கணன்முனிந்தநாண்மூவரம்முழுத்தீயிற்
றப்பினருளர்காண்டவவடவிவாழ்தானவரியாருய்ந்தார்
பைப்புறத்தணிமணியொளிபரந்தெனப்பஃறலைகளிற்பற்றி
வெப்புறுத்தலினுரகருந்தங்கள்வாய்விடங்கள்கொன்றெனவீழ்ந்தார். (௨௪)

புகைபடப்படக்கரிந்தனபொறியினாற்பொறியெழுந்தனவானின்
மிசைபடைத்தவச்சுரபதியாயிரம்விழிகளுங்கணப்போதிற்
றகைவறக்கழைமுதலியதருக்களின்சடுலவாரவமிஞ்சித்
திகையணைத்தினும்பரத்தலிற்செவிகளுஞ்செவிடுபட்டனசேர. (௨௫)

வேறு.

விரதமேல்கொண்டுசெம்பொன்மால்வரையைவிரிசுடர்சூழ்வருவதுபோ
லிரதமேல்கொண்டவநுசனுஞ்சுதனுமிமைப்பினிற்பன்முறைதேர்ந்து
சரதமேல்கொண்டுசரிப்பதுந்தனதுதாவகம்பாவகன்புகுந்து
பரதமேல்கொண்டுநடிப்பதுங்கருதிப்பார்த்தனன்பாகசாதனனே. (௨௬)

முந்திவார்சிலைக்கைப்பற்குனன்றொடுத்தமுரணுடைமூரிவெங்கணைக
ளுந்திவாளுரகர்சூடிகாமகுடகோடிகளுடைத்தலினுடைந்து
சிந்திமீதெழுந்தமணிகளுமனலின்சிகைகளிற்றெறித்தெழுபொறியும்
இந்திராலயத்திற்கேற்றியதீபமென்னநின்றிலங்கினவெங்கும். (௨௭)

தானவர்புரங்கணீறெழமுனிந்ததமனியச்சிலைக்கைவெள்ளூர்தி
யானவனமதுபுரத்தையுஞ்சுடுவானழன்றனன்போலுமென்றஞ்சி
வானவர்நடுங்கவானவர்க்கரசாம்வலாரியுமனனுறத்தளர்ந்து
கானவருடனேதக்ககனென்னுங்கட்செவிகெடுமெனக்கரைந்தான். (௨௮)

பரந்தெழுபுகையாற்றத்தமவடிவம்பண்டையிற்பதின்மடங்காகச்
சுரந்திடுபுயல்களனைத்தையுநெடுநீர்சொரிந்தவித்திடுகெனச்சொல்லி
நிரந்தரமருகுவிடாதுதன்னிழல்போனின்றவானவரையுமேவிப்
புரந்தரன்றானுமீரிருமருப்புப்பொருப்பின்வெம்பிடர்மிசைபுகுந்தான். (௨௯)

ஏவகவிருத்தச்செவ்வியின்றனுவுக்கேற்றநாண்முறுக்கிவிட்டென்னச்
சேவகவிமையோரெண்டிசாமுகத்துஞ்செஞ்சுடர்வாள்விதிர்த்தென்னப்
பாவகன்பகுவாய்நாவிதிர்த்தென்னப்பரந்தவப்பாவகற்குணவாந்
தாவகமுழுதும்வளைந்துகொண்டெழுந்தசலதரசஞ்சலாசாலம். (௩௰)

ஏறியகளிறுபிளிறுநீடொலியுமெடுத்தவிற்றெறித்தநாணொலியுஞ்
சூறியவிமையோர்பெருநகையொலியுந்துந்துபிக்குழாமதிரொலியுங்
கூறியவனலன்சடுலவல்லொலியுங்குறைபடத்திசைதொறுமிகுந்த
வூறியபுவனபவனவேகத்தோடுருமுடைமுகிலின்வாயொலியே. (௩௧)

தூமமுமெமதுபவனனுமெமதுதோழனத்தோயமுமெமதே
யாமுமிங்கிவற்றோடொன்றுதலொழிதுமீரிருபொருள்களும்பிறிந்தான்
மாமுகிலெனும்பேரெங்குளதடர்த்துவாசவனென்செயுமெம்மை
யாமுறையறிதுமென்றுகொண்டறவுமகங்கரித்தனன்வெகுண்டழலோன். (௩௨)

மூண்டவெங்கனலையுருமின்வெங்கனலான்முருக்கியெங்கால்கையானெருக்கி
யாண்டவன்களிற்றின்கரநிகர்தாரையருவியின்கணங்களாலவித்துப்
பாண்டவன்பகழிதொடுக்கினுங்கண்ணன்பருப்பதமெடுக்கினுமெங்கள்
காண்டவம்புரத்துமென்றுகொண்டிழிந்துபொழிந்தனகணம்படுகனங்கள். (௩௩)

காலைவாயருக்கன்பனிநுகர்ந்தென்னக்*கட்டறக்காண்டவமென்னும்
பாலைவாயுள்ளசராசரமனைத்துநுகர்தலிற்பைம்புனல்வேட்டோன்
வேலையேழையுமொண்டேழுமாமுகிலும்விதம்படப்பொழிந்ததாரைகளாற்
றாலுவேழினையுநனைத்தனனனைத்துந்தணிந்ததோதன்பெருந்தாகம். (௩௪)

எக்கடல்களினுமினிப்பசையிலதென்றேழிருபுவனமுநடுங்கத்
தொக்கடலுருமோடெழுமெழுகொண்டற்சோனையஞ்சுருவையான்முகந்து
மைக்கடல்வெளுக்கக்கறுத்தமெய்ம்மகவான்வழங்கியவாகுதியனைத்து
நெய்க்கடல்சொரிந்ததென்னுமாறருந்திநீடுவான்முகடுறநிமிர்ந்தான். (௩௫)

தொழுதகுவிசயன்றாலுவேழுடையோன்சுடர்முடிநனைந்திடுவதன்மு
னெழுமுகிலினமும்பொழிதருமாரியாவையுமேவினால்விலக்கி
முழுதுலகமுந்தன்னிடத்தடக்கியவான்முகடுறமுறைமுறையடுக்கிக்
குழுமுவெங்கணையாற்கனற்கடவுளுக்குக்கொற்றவான்கவிகையுங்கொடுத்தான். ()

ஆழ்தருபரவையேழும்வற்றிடுமாறழித்தகாருமிழ்ந்திடுநெடுநீர்
தாழ்தருசரத்தான்மேய்ந்ததற்கிடையோர்தனித்திவலையும்பொசியாமல்
வீழ்தருமருவிபாவகன்றனக்குவிசயனன்றளித்தபொற்குடைக்குச்
சூழ்தரநிரைத்துத்தூக்கியமுத்தின்சுடர்மணித்தொடையல்போன்றனவே. (௩௭)

மண்டிமீதெழுந்தவன்னியின்சிகைகளிந்திரன்மதலைவாளிகளாற்
கண்டகூடத்திற்கமைத்தசெம்பவளக்காண்டகுதூண்டிரள்காட்ட
வண்டகூடத்திற்கிந்திரன்பளிங்காலமைத்தபல்லாயிரகோடி
சண்டதூணங்கள்போன்றனபரந்துதனித்தனிமுகில்பொழிதாரை. (௩௮)

தக்ககன்றன்னைக்கூயினர்தேடிச்சாயகமண்டபஞ்சுற்றி
மிக்கவிண்ணவர்கடிரிதரவவன்றன்மெல்லியன்மகவையும்விழுங்கி
பக்கணந்தன்னிலந்தரத்தெழலும்வீழ்த்தினனம்பினாற்றுணித்துச்
†செக்கனலுருவச்சென்னியையுரகர்கன்னியைத்திருமணஞ்செய்தான். (௩௯)

மருவயிற்சதகோடியினிறையைராவதத்தின்மும்மதத்தினானைத்துக்
கருவயிற்றெழிலித்தாரையால்வருணக்கடவுடன்கணைகளாலவித்துச்
செருவயிற்புரளவொதுக்கியத்தோழன்சிறுவனைச்சென்றெடுத்தணைத்தா
னொருவயிற்பிறந்தோனாதலின்மகவானுடனுடன்றிலனுதாசனனே. (௪௦)

அன்னைவாயொடுதன்வாலதிதுணியுண்டலமருமச்சுவசேனன்
றன்னைவாசவன்போய்விடுகண்டுழியத்தனஞ்சயன்றனதுவெங்கணையான்
முன்னைவானவரைமுனைமுகந்தன்னின்முதுகிடமுதுகிடமுருக்கிப்
பின்னைவாரிதங்களேழையும்பொருதுபின்னிடப்பின்னிடப்பிளந்தான். (௪௧)

* கட்டழற்காண்டவமென்றும் பாடம்.
† செக்கர்நீடுவெட்சென்னியை என்றும் பாடம்.

திரமால்பொருதுவிடுகண்டதற்பின்செக்கர்மெய்த்தக்ககன்பயந்த
பாரமாசுணமவ்விசயனுக்கியாவர்பகையெனப்பலரையும்வினவிச்
சூரன்மாமதலைசரணமேயரணநமக்கெனத்தொழுதுபோயெய்தி
வீரமாமுனைவெம்பகழியாகியதெம்மேதினியினும்பெருவார்த்தை. (௪௨)

தோழன்மாமகனைக்கண்டபின்றனதுதோழனையொருவயிற்காணான்
வேழமாமுகத்திற்கைத்தலம்புடைத்தான்விழிகளாயிரங்களுஞ்சிவந்தான்
யாழமாதிரத்தினெதிரொலியெழுமாறெயிற்றிளநிலவெழநகைத்தான்
றாழுமாநிலத்தினின்றமர்விளைக்குந்தன்பெருந்தனயனைமுனிந்தான். (௪௩)

மேகசாலங்களிளைத்ததுந்திளைத்துமேலிடுவிண்ணவரணிந்த
யூகசாலங்களுடைந்ததுங்கண்டானுருத்தெழுந்துள்ளமுங்கொதித்தா
*னேகசாபமுந்தன்னேகசாயகமுமிமைப்பளவையின்விரைந்தெடுத்தான்
பாகசாதனனுமேனையதிசையின்பாலரும்பகடுமேல்கொண்டார். (௪௪)

தேவருங்கோடிதேவருக்கொருவர்சிரங்களாய்நின்றமுப்பத்து
மூவருந்தத்தம்வாகமேல்கொண்டுமுந்துறவந்துவந்தணிந்தார்
யாவரும்புவனத்தின்றுகொலுகத்தினிறுதியென்றிரங்கினர்நடுங்க
மேவருபனிதரிருவரோடநேகவிபுதரும்வெகுண்டுபோர்விளைத்தார். (௪௫)

பச்சைவாசிகளுஞ்செய்யனவாகப்பாகருப்பதங்களேயன்றித்
தச்சவாளிகளாற்கரங்களுமிழந்துதனிப்பெருந்திகிரியுந்தகர
வுச்சமாமகத்திற்பண்டொடிந்தொடியாதொழிந்தனபற்களுமொடிய
வச்சமேதுணையாவருக்கனுமொழிந்தவருக்கர்பன்னொருவருமகன்றார். (௪௬)

மாறுபட்டுழியப்பற்குனன்கணையான்மழுக்களுஞ்சூலமுமுடைய
நீறுபட்டுடலினீற்றுடன்மடியநெடுங்கொடியூர்தியேறுகளு
மேறுபட்டழியச்சடையில்வார்நதியாலேறியதூளிவானெறியுஞ்
சேறுபட்டிடமாறோடினார்மீளப்பதினொருதிறலுருத்திரரும். (௪௭)

எண்ணியவசுக்களெண்மரிற்கங்கையென்னும்யாய்வயிற்றினுற்பவித்த
புண்ணியனொழிந்தோரெழுவருந்தங்கள்புயவலிமையிற்பொருதிடுவார்
நண்ணியவமரின்விசையன்வெங்கணையாணைப்புலர்ந்துள்ளமுநடுங்கி
யுண்ணியநிலயம்புகுந்தனரென்றுனிற்பரோவாயுள்வேதியரே. (௪௮)

அருணவெங்கனலோன்கனலொடுகலந்தானுசகனவற்குநண்பானான்
கருணையில்யமனுங்காணிடைமடியுங்கணத்திலேகவலையுற்றனனால்
வருணனுங்கடல்கள்வறத்தல்கண்டழிந்தான்†மதியுமம்மகிமுடித்தவனு
மிருணிறவரக்கன்றானுமிங்கிவரோடெங்ஙனம்பொருதுமென்றிளைத்தார். (௪௯)

சொன்மழைபொழிந்து‡நாடொறுந்தனதுதோள்வலிதுதிக்குநாவலர்க்குப்
பொன்மழைபொழியுங்கொங்கர்பூபதிதன்பொற்பதம்பொருந்தலர்போலக்
கன்மழைபொழியுங்காளமாமுகிலுங்கடவுளர்த்துரந்தவன்கரத்தில்
வின்மழைபொழியக்கற்களுந்துகளாய்மேனியும்வெளிறிமீண்டனவே. (௫௦)

---

* ஏகசாயகமுமிந்திரதனுவுமென்றும் பாடம்.
† மதியொடுவைச்சிரவணனுமென்பது அச்சுப்பிரதிப்பாடம்.
‡ பாகையுந்தனதுசூரமுந்துதிக்குமென்றும்பாடம்.

மாயவன்றனக்குநேயமைத்துனனுமைந்தனத்தந்தையைமதியான்
றாயவெங்கணையாலவனிடித்துவசந்துணித்தமர்தொடங்குமவ்வளவிற்
காயமெங்கணுநின்றொலியெழப்பரந்துகாயமில்கடவுளக்கடவு
ளாயகன்றனக்குப்பரிவுடனவைதீர்நல்லுரைநவின்றதையன்றே. (ருக)

தமரினுமினியதக்ககன்முதலேதப்பினன்குருநிலஞ்சார்ந்தான்
குமரனுநம்மாலுய்ந்தனன்றாமக்கொடிபனுங்கொண்டலுக்கவியா
னமர்களிலிருவர்நரனுநாரணனுநமக்குமிங்கிவர்சிறிதிளையா
ரமரினைபொழிமினமரிணைபொழிமினமரருமமரர்நாதனுமே. (ருஉ)

என்றுகொண்டுரைத்தமொழிசெவிப்பட்டவெல்லையினிரவிமுன்னிருள்போற்
றுன்றுதன்சேனைச்சுரகணஞ்சூழச்சுரபதிதுறக்கமதடைந்தான்
வென்றுவெங்களங்கொண்டருச்சுனன்றனதுவெற்றிகொள்சங்கமுங்குறித்தா
னன்றுசெந்திருமாலருச்சுனன்பொருதவாண்மைகண்டதிசயித்தனனே. (ருங)

வடமதுரையினுந்தென்மதுரையினுமதிகுலதிருபர்கன்னியரைக்
கடிமணம்புரிந்தோன்வின்மையின்வன்மைகண்ணுறக்கண்டவானவரும்
புடவியிலொருவரொடுமினிப்பூசல்பொரேனெனப்போனவாசவனு
முடிசடைமவுலிநாரதன்முதலாமுனிவருமுடிவறப்புகழ்ந்தார். (ருச)

மாசுணத்தரசன்மந்திரமமைத்தவனத்திடையிருந்தமாமயனை
யாசுசுக்கணிசென்றடர்த்தலும்வெருவியருச்சுனனவபயமென்றரற்றத்
தேசுடைத்திகிரிச்செங்கண்மால்கருணைசெய்தனன்றீவினைபுரினும்
பேசுதற்கரியபெரியவர்நினைக்கின்யார்கொலோபிழைத்திடாதவரே. (ருரு)

அழைத்தடல்விசயன்றனைத்துணைசெய்கென்றுறுபத்தியோசனையாகித்
தழைத்தவவ்வனத்தைக்கனத்தைவென்கண்டுதழலவனுகர்ந்திடுகாலைப்
பிழைத்தவர்மயனுந்தக்ககன்மகவும்பெருந்தவனொருவன்முன்கருப்ப
மிழைத்தநுண்சிறகர்க்கருநிறக்குரீஇயினினங்களுமன்றிவேறிலரால். (ருசா)

என்பிறபுகல்வதீரெழுபுவனமெம்பிரானருந்தியதென்னத்
தன்பசிதணியக்காண்டவவனத்திற்சராசரமுள்ளவையனைத்தும்
வன்புடனருந்தியுதரமுங்குளிர்ந்தான்வன்னிதன்வடிவமுங்குளிர்ந்தா
னன்புடையிருவர்க்காசியும்புகன்றுனசைந்துபோய்த்துறக்கமுமடைந்தான். (ருஎ)

அமரரைமுதுகுகண்டகாவலருமவரவராண்மைகளுரைசெய்
தமரிலன்றெடுத்தபல்பெருங்கொடியாலலங்கரித்தமைத்ததந்தேர்மேற்
றமருடன்றுணைவர்நால்வருநகரச்சனங்களுமகிழ்ந்தெதிர்கொள்ளத்
தமரமுட்முரசுமுழங்கவெண்சங்கந்தழங்கவந்தணிநகர்சார்ந்தார். (ருஅ)

காண்டவதகனச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-எகூஅ.

ஆதிபருவ முற்றுப்பெற்றது.

இரண்டாவது

சபாபருவம்.

இராசசூயச்சருக்கம்.

பாண்டவர்கள்புரிந்ததவப்பயனாகியவதரித்துப்பகைத்துமேன்மேன்
மூண்டவினைமுழுவதுவுமுனைதோறுமுரண்முருக்கிமுகில்புகாமற்
காண்டவமுங்கனல்வயிற்றுக்கனறணியநுகருவித்துக்காக்குமாறே
பூண்டருளெம்பெருமானைப்போற்றுவாரெழுபிறப்புமாற்றுவாரே. (௧)

வியனும்பர்பலகணமுஞ்சுரபதியுஞ்சென்றெழில்கொள்விசும்பின்மேவ
நயனங்கண்முதலானவைம்புலனுமனமும்போனகரியெய்திப்
பயன்மிஞ்சுதொழிலினராய்ப்பாண்டவருந்திருமாலும்பயிலும்வேலை
மயனென்பான்வாய்புதைத்துவளம்படவந்தொருமாற்றம்வழங்கினனே. (௨)

உம்மாலின்றருவினையேனுயிர்பிழைத்தேனீர்தந்தவுயிர்க்குவேறோர்
கைம்மாறுவேறில்லைக்குருகுலம்போலெக்குலமுங்காக்குகிற்பீர்
தெம்மாறவுலகாளுஞ்செங்கோன்மைக்குருபதிக்குச்சிற்பம்வல்லோ
ரம்மாவென்றதிசயிப்பவரியமணிமண்டபமொன்றமைக்கின்றேனே. (௩)

மேனாளிவ்வுலகாண்டவிடபருவனசுரகுலவேந்தர்வேந்தன்
றானாண்மையுடன்பொருதுதரியலரைத்திசைகொணர்ந்ததாராபந்தி
போனாளுமொளிவீசும்பலமணிகள்விந்துவெனும்பொய்கைதன்னி
லானாமற்கிடப்பனவுண்டவையிதற்கேயுபதானமாகுமென்றான். (௪)

என்பதன்முன்முப்பதின்மேலிரட்டிகொணூறாயிரவரெடுத்தபாரம்
வன்புடனேதரித்துவரையசைந்தாலுமசையாதவயிரத்தோளா
ரன்புமிகும்விழிக்கருணையறன்புதல்வனேவலினாலசுரத்தச்சன்
றன்பணியீதெனப்பணிப்பவொருநொடியிற்கொடுவந்தார்தளர்விலாதார். (௫)

மீதடுக்கிப்பசும்பொன்னாற்சுவர்செய்துமரகதத்தூண்வீதிபோக்கி
யோதிடத்திற்சுருங்காமற்செழுந்துகிருத்திரம்பரப்பியுலகோரேழு
மாதிடத்தான்வைகுதற்குவாய்க்குமதோவிதுவென்னவரம்பில்கேள்விச்
சோதிடத்தோர்நாளுரைப்பச்சுதன்மையினுமுதன்மைபெறத்தொடங்கினனே. ( )

மனத்தாலுந்திருத்தகுநூல்வரம்பாலுமுரம்பயிறோள்வலியினாலு
மினத்தாலுந்தெரிந்துதனதெண்ணியவெண்ணினுக்கேற்பவெண்ணில்கோடி
தினத்தாலுஞ்செயற்கரியசெழுமணிமண்டபமீரேழ்திங்கட்செய்தான்
றனத்தான்மிஞ்சியதருமன்றம்பியர்க்குத்தண்டுடன்வெண்சங்குமீந்தான். (௭)

அத்தபதிதன்குறிப்பாலமைத்தபெருமண்டபத்தினளவுநீளம்
வித்தரமோடுயர்ச்சியெனும்வனப்பனைத்துங்கண்டோர்கள்வியந்துகூறக்
கொத்தலர்தார்மணிமுரசக்கொடியுயர்த்தோன்கனற்பிறந்தகொடியுந்தானு
மெத்தபெருமனமகிழக்குடிபுகுந்தானிறைஞ்சலருக்கிடியேறன்னான். (௮)

தம்பியர்களனைவருடன்றண்டுழாய்முடியோனுந்தானுமேனை
யம்புவிமன்னருமுனிவரனைவருஞ்சூழ்தரவிருந்தவமையந்தன்னிற்
றும்புருநாரதனென்னுமிருவரினுநாரதனுந்தோன்றமன்றப்
பைம்பொன்மலர்தூயெதிர்போய்ப்பணிந்திறைஞ்சியென்செய்தான்பாண்டுமைந்தன்.

எற்றினைசனத்திற்றனித்தனியேயுபசாரம்யாவுந்தந்து
மாற்றினன்வழியிளைப்புமலரயன்போலிருந்தோனைமகிழ்ச்சிகூர்ந்து
போற்றினனீவரயான்புரிதவம்யாதெனப்புகழ்ந்தான்பொதியிற்றென்றற்
காற்றினலரும்புநறுஞ்சூதம்போற்புளகரும்புங்காயத்தானே. (௧௦)

யான்புரிந்ததவமுலகில்யார்புரிந்தாரவனிபரிவிசையின்வீணைத்
தேன்புரிந்ததெள்ளமுதாலமுதுண்டோர்செவியிரதந்தெவிட்டுவிப்பாய்
மான்புரிந்ததிருக்கரத்துமதியிருந்தநதிவேணியங்கைபாகன்
றான்புரிந்ததிருக்கூத்துக்கிசையமகிழ்ந்திசைபாடுந்தத்துவஞானி. (௧௧)

எனத்தருமன்மகன்கூறவிளையோர்கடனித்தனிநின்றிறைஞ்சநீல
கனத்தனையதிருமேனிக்கண்ணனுந்தன்மனங்களிப்பக்கண்ணினோக்கி
மனத்தினமூக்கணுகாதமாதவத்தோனுதிட்டிரற்கிம்மாடகூடந்
தனத்தின்மிகுகுபேரனெழிலளகையினுமிலதென்றுசாற்றினானே. (௧௨)

மண்மிசைநால்விரனிற்குமணிமகுடத்தணிபரங்கின்மண்ணுளோரும்
விண்மிசைவாணருநெருங்கவிராயவருமறைச்சடங்கினிராயசூயங்
கண்மிசைபாமணிநிகரென்கான்முளையைப்புரிவியெனக்காலனூரிற்
பண்மிசைவீணையின்கிழவன்பாண்டுமொழிந்தனனெனவும்பகர்வுற்றானே. (௧௩)

தந்தைமொழிதனயருக்குச்சாற்றிமுனியகன்றதற்பின்றம்பியான
விந்திரனுந்தன்மனத்திலெண்ணமுமீண்டாகுமெனவெண்ணிக்கூறு
மந்தரமேதமகமியற்றுதற்கென்றவனிபரையடையவாரிப்
பந்தமுறுபெருஞ்சிறைபிற்படைகெழுவேற்சராசந்தன்படுத்தினானே. (௧௪)

சதகோடிதனக்கொளித்துத்தடங்கடலிற்புகுங்கிரிபோற்றளர்ச்சிகூர்ந்து
சதகோடிமுடிவேந்தர்தங்களுயிர்கொண்டொளித்தார்சமருக்காற்றார்
சதகோடிசுரும்பரற்றுந்தாராயச்சராசந்தன்றன்னையின்னே
சதகோடியிபமதுகைச்சதாகதிசேய்தனையொழியச்சாதிப்பார்யார். (௧௫)

ஆரமணங்கமழசலமநேகமுளவானுமலையின்கூல
வாரிதியைமதிப்பதற்குவல்லதுமந்தரமன்றிமற்றுமுண்டோ
போர்விசயமிவனுடன்முன்பொருதோரில்யார்பெற்றார்போதுமிப்போ
தாரணமாமுனிவரராவெனப்புகன்றானறன்மகனுமஃதேயென்றான். (௧௬)

அரிவிரசுந்துழாய்மகுடத்தரியுமிரண்டரிகளருளாண்மையோரு
மெரிவிரசுநெடுங்காளமிருதினத்தில்விரைந்தேகியெண்ணில்காவற்
கிரிவிரசநகரெய்திக்கிரித்தடந்தோண்மகதேசன்கிளருங்கோயிற்
கரிவிரசுங்கோபுரப்பொற்றிருவாயில்புகுந்துரைத்தார்காவலோர்க்கே. (கள)

வேறு.

வந்தனர்முனிவர்மூவரென்றுரைமின்மன்னவற்கெனவவருரைப்பத்
தந்திடுமெனவும்புகுந்துநீடம்பொற்றவிசிருந்தாசியுஞ்சாற்றக்
கந்தடர்குவவுத்தோளில்விற்குறியுங்காட்சியுங்கருத்துறநோக்கி
யந்தணரல்லீர்யாவர்நீரென்றானவ்வுரைக்கமலனுமுரைப்பான். (கஅ)

யான்விதுகுலத்தில்யாதவனிவரோகுருகுலத்தலைவனுக்கிளையோர்
மான்மதமலர்த்தார்மன்னகேளொருவன்வாயுவின்மதலைமற்றொருவன்
வான்மதிலுடுத்தபொன்னகர்க்கிறைவன்மதலைநின்வளநகர்காண்பான்
கான்மதக்களிற்றாய்முனிவராய்வந்தோங்காவலர்க்கணுகொணாமையினால். (ககூ)

என்றுகொண்டுண்மையாதவனுரைப்பவிருபுயவலியினெண்டிசையுஞ்
சென்றுகொண்டடர்த்துத்தெவ்வர்தம்முயிருந்திறைகளுமுறைமுறைகவர்ந்து
வென்றுகொண்டணிந்தவாகையோன்றினவுமிக்கனவெமதிணிமேருக்
குன்றுகொண்டமைந்ததோள்களெம்முடனீர்குறித்தமர்புரியுமென்றுரையா. (உ0)

நீயெனிலாண்டோரொன்பதிற்றிரட்டிநெடுஞ்சிறைக்*கலுழன்முன்னெறிக்கொ
ளீயெனவோடிமதுரைவிட்டாழியெயிற்றுவாரகைப்பதிபுகுந்தாய்
நோயெனவசுரர்க்குடைந்துபொற்காவினுழைதருநூறுமாமகத்தோன்
சேயெனினிளையன்வீமனைவிசும்பிற்சேர்த்துவனெனவிழிசிவவா. (உக)

மந்திரச்சுற்றத்தவர்களையழைத்துமதலையைமகிதலந்தனக்கோ
ரிந்திரனெனவேமணிமுடிபுனைந்தன்றியாவருந்தேவரும்வியப்ப
மந்தரகிரியும்விந்தமுந்தம்மின்மலைவபோன்மல்லமர்மலைவான்
சந்தணிதடந்தோள்கொட்டியார்த்தெழுந்தான்றழலுமிழ்விழிச்சராசந்தன். (உஉ)

யாளிவெம்பதாகைவீமனுமவனும்யாளியும்யாளியுமெனவே
தாளினுஞ்சமரமண்டலங்களினுந்தாழ்விரற்றடக்கைமுட்டியினுந்
தோளினுஞ்சென்னித்தலத்தினு†மற்போர்சொன்னபோர்விதமெலாந்தொடங்கி
நாளினுந்திங்களொன்றினிற்பாதிநள்ளிரவினுஞ்சமர்நடத்தி. (உந)

பூதலநடுங்கவெழுகிரிநடுங்கப்போதகத்தொடுதிசைநடுங்க
மீதலநடுங்கக்கண்டகண்டவர்தமெய்களுமெய்யுறநடுங்கப்
பாதலநடுங்கவிருவர்மாமனமும்பறையறைந்தயர்வுடனடுங்கச்
சாதலங்கொழிந்தவிடரெலாமுழந்துதங்களிற்றனித்தனிதளர்ந்தார். (உச)

---

* கலுழன்முன்னேறி, யேயெனவோடிமதுரைவிட்டாழியெற்றுநீர்த்துவரையிலிறுத்தாய் என்றும் பாடம்.

† மற்றுஞ்சொன்னபோர் என்றும் பாடம்.

கொல்லவென்றெண்ணுமிருவருமொருவரொருவரைக்கொல்லொணாமையினான்
மல்லமர்வலியுமிருபுயவலியுமிழந்துமாமகிதலத்துறலுங்
கல்லடர்செம்பொன்வரையின்முக்குவடுகாலுடன்பறித்தகால்கண்டு
நல்லதன்மைந்தற்குணர்வுமீண்டெய்தநலத்துடனல்கியதன்றே. (௨௫)

மீளவுமிருகதுவசனுற்றெழுந்துவிதலையின்விழுந்தமேவலனைத்
தாளொடுதாள்கள்வலியுறத்தன்பொற்றடக்கையான்முடக்கறப்பிடித்து
வாளுகிர்வாளாற்கனகனைப்பிளந்தவண்டுழாய்மணங்கமழ்மௌலிக்
கோளரியெனவேபிளந்தெறிந்தண்டகோளமும்பிளக்கநின்றார்த்தான். (௨௬)

பிளந்தெறிபிளவுமீளவும்பொருந்திப்பிளிறுமாமதகரிநிகர்ப்பக்
கிளர்ந்துவெஞ்சமரந்தொடங்கலுந்தனதுகேதனக்கேசரியனையான்
வளர்ந்ததிண்புயத்தின்வலியினான்முன்னைமல்லமரெழுமடங்காக
வுளைந்திடமலைந்துவீழுமாறுதைத்தானோரிரண்டானதாலுடலம். (௨௭)

சிறியக்குரிசில்கீண்டபேருடலைச்சென்னிதாள்செவ்வையினிடாமன்
மாறியிட்டிடுகென்றுயிர்த்துணையாய்வந்தமாமரகதவடிவோன்
கூறியிட்டிடாமற்குறிப்பினாலுரைப்பக்குறிப்பையக்குறிப்பினாற்குறித்து
வேறிடப்புவியின்மிசையெறிந்தனனால்வீமன்வல்லபத்தை*யாருரைப்பார். (௨௮)

வேறு.

சந்தச்சிகரச்சந்தணியுந்தடந்தோளாண்மைச்சராசந்தன்
முந்தப்பொருதமல்லமரின்முரனோடழிந்துமுடிந்ததற்பி
னிந்தப்புதுமைதனைவியவாவேத்தாவிறைஞ்சாயதுகுலமா
மைந்தற்கொருவாசகமுரைப்பான்மணித்தார்ப்புயவாசவன்மைந்தன். (௨௯)

இன்றாரமரினிவன்கையாலிறந்தோனுடலமொன்றியது
மொன்றாதிரண்டுபட்டதும்யாமுணரும்படிநீயுரைத்தருள்வாய்
குன்றாலன்றுமழைதடுத்தகொற்றக்கவிகைக்கோபாலா
வென்றானென்றபொழுதவனுமிறந்தோன்சரிதமினிதுரைப்பான். (௩௰)

வானோர்பனகவர்களிலொருவன்மகதகுலத்துமாரதப்பே
ரானோன்வயிற்றிலவதரித்தானவன்காணிந்தவடல்வேந்தன்
மீனோததிசூழ்மேதினியின்வேந்தர்குலத்தைவேரோடுந்
தானோராழிதனிநடத்தித்தடிந்தானணிந்தசமர்தோறும். (௩௧)

எண்ணற்கரியமுடிவேந்தரெண்ணாயிரவர்பசுவாக
மண்ணித்தனையுந்தன்குடைக்கீழ்வைக்கும்படிமாமகம்புரிவான்
கண்ணிச்சிறையினிடைவைத்தான்கண்ணாயிரத்தோன்முதலாக
விண்ணிற்பயிலுந்தேவர்களுமிவன்பேர்சொல்லவெருவுவரால். (௩௨)

இவனைப்பயந்தோன்மகவொன்றுமின்றிச்சண்டகௌசிகப்பேர்த்
தவனைப்பணிந்துவரம்வேண்டத்தவனுந்தான்வாழ்தடஞ்சூதத்
தவனிக்கரியதீங்கனியொன்றளித்தானளித்தவக்கனியை
நவநித்திலவாணகையிருவரில்வாழ்பவர்க்குநல்கினனால். (௩௩)

---

* யார்வியப்பார் என்றும் பாடம்.

காசித்தலைவன்கன்னியர்தங்கண்போல்வடிமுற்றியகனியை
யாசிற்பிளந்துதங்கொழுநனருளாலமுதொத்தினிதருந்த
மாசற்றிலங்குமகவிருவர்வயினும்பகிர்ந்துவளர்ந்ததற்பின்
பாசத்துடனேயோரொருவர்பயந்தார்வடிவிற்பப்பாதி. (௩௪)

ஒருவனிருவருதரத்துமுடனுற்பவித்தவுற்பாதம்
வெருவிமகதகுலவேந்தன்வியன்மாநகரின்புறத்தெறியப்
புரிசைவாயிற்கண்டவற்றைப்புசிப்பாளெடுத்துப்பொருத்தினளாற்
றருமமுணராமனத்தியொருதசைவாயரக்கிசரையென்பாள். (௩௫)

தன்னாலொன்றுபடுதலுமத்தனயன்றன்னைச்சராசந்த
னென்னாவழைத்தியெனமகதத்திறைவற்களித்தங்கேகினளா
லந்நாண்முதலப்பெயர்படைத்தானதனாலிவ்வாறானதெனச்
சொன்னானதுகேட்டுளமகிழ்ந்தார்சுரர்கோமகனுந்துணைவனுமே. (௩௬)

வினைமுற்றியபின்மூவருநல்வினையேபுரிபோர்மன்னவரை
யினைதற்சிறைவிட்டிகன்மல்லாலிறந்தோன்பகனையெழின்மகுடம்
புனைவித்தந்நகரிசன்பொற்றாள்வணங்கவவனேறுந்
துணைபொற்றடந்தேரூர்ந்தறத்தின்சுதன்வந்தெதிர்கொண்டிடமீண்டார். (௩௭)

கருதற்கரியநிதியனைத்துங்கவர்ந்தோர்காட்டக்கண்டுவந்த
முரசக்கொடியோன்முன்வேதமொழிந்தோன்முதலாமுனிவரரு
மரசக்குழாமுமீண்டியபேரவைபிற்கடவுளரசின்ற
வரிவிற்குமரன்மாதிரங்கள்வெல்வானேகும்வகையுரைத்தான். (௩௮)

சுருதிப்படியேவரராயசூயப்பெயர்மாமகந்தொடங்கக்
கருதிக்குணபாலெம்முன்னும்வடபால்யானுங்காற்றிசைக்கு
நிருதித்திசைக்குநடுவெம்பியவனுஞ்சிலைவேணிரைமணித்தேர்
வருதிக்கினிலிவ்விளையோனுமலைவானெழுகவருகவென்னா. (௩௯)

எண்ணுஞ்சேனையுடன்விரைவினெழுந்தாரிவரீரிருவோரும்
விண்ணுங்கடவுளாலயமுமுதலாவுள்ளமேலுலகு
மண்ணும்புயங்கதலமுதலாமற்றெவ்வுலகுமாதிரமுந்
துண்ணென்றிட்டவைந்துவகைப்பெரும்பேரியத்தின்றுவனியினால். (௪0)

நானங்கமழுஞ்செங்கழுநீர்நறுந்தார்வேந்தர்நால்வரையு
மானம்பெறுதிண்சேனையுடன்வளர்மாதிரத்துவகுத்தேவி
மீனங்கமடமேனரவரியாய்நரராய்மெய்ஞ்ஞான
வானந்தமுமாகியநாதனன்றேதுவராபதியடைந்தான். (௪௧)

வேறு.

வான்மருச்சுதனுமீரிரண்டுகடல்வயவரூதினியின்வர்க்கமு
நான்மருப்பொருகைமும்மதத்துவயநாகமேவிவளர்திசையின்வாழ்
கோன்மதிக்கநெடுவங்கமுந்திகழ்கலிங்கமுந்தெறுகுலிங்கமுந்
தான்மலைத்துமுனைமுரண்மிகுத்துவருதரியலாரைமுனைதள்ளியே. (௪௨)

மற்றுமற்றுமவண்மருவுபாடைகளின்மன்குலத்தொடுதடிந்துமே
லுற்றவுற்றவரையானம்யாவையுமொடிந்திடிந்துபொடியுண்ணவே
யிற்றவிற்றபலதலைகளாலலையெறிந்துமோதிவருகுருதியான்
முற்றமுற்றவரையினமும்வார்குருதிநதியுமாயெழமுருக்கியே. (௪௩)

அந்தவந்தவவனிபரெலாமபயமபயமென்றடிவணங்கவே
வந்தவந்தநிதியாவையுஞ்சிகரவடமகீதரமெனக்குவித்
தெந்தவெந்தநரபாலர்பாரினிகரென்னவென்னவவரிறையெனத்
தந்ததந்தவிததந்திமீதுகொடுதங்கண்மாநகரிசாரவே. (௪௪)

விசையவெம்பகழிவிசயன்வெவ்விசையொடிருநிதிக்கிழவன்மேவிவாழ்
திசையடைந்துகதிரிரவியென்னும்வகைசீறிமாறுபொருதெவ்வரா
நிசையழிந்துவெளியாகநால்வகைநெருங்குசேனையொடுநிலனுநின்
றசையவன்பினுடனேகினனெழுபராகமெண்டிசையடைக்கவே. (௪௫)

பாரதப்பெயர்கொள்வருடமாதிபலபாரினுள்ளநரபாலரைப்
பேரறக்குலமும்வேரறப்பொருதுபிஞ்ஞகன்கிரியுமிமையமுஞ்
சேரமொத்தியவனுள்ளகந்தருவர்கின்னரேசர்பலர்திறையிடப்
போரடர்த்துகமுடிந்தகாலையெழுபுணரியென்னநனிபொங்கியே. (௪௬)

விந்தமால்வரையுமேமகூடமுடனிடதநாமநெடுவெற்புமா
மந்தராசலம்விசாலமாலியமணித்தடஞ்சிகரமலையுடன்
கந்தமாதனமுநீலசைலமுமெனப்புகன்றபலகிரியில்வா
ழுந்தராதிபர்நடுங்கமேருகிரியப்புறத்துநனியணுகியே. (௪௭)

அத்திசைக்கணரசானவுத்தரகுருக்கண்மேன்மையையடக்கிமே
லெத்திசைக்குமிவனன்றிவீரரிலரென்றுதேவருமியம்பவே
மெத்திசைப்பனிநிலாவெழச்சமரவிசயகம்பமுநிறுத்தினன்
முத்திசைக்குமதிவெண்குடைக்கடவுண்முதல்வனானவரிபுதல்வனே. (௪௮)

கரிகள்கோடியிரதங்கள்கோடிபவனத்தினுங்கடுகுகவனவெம்
பரிகள்கோடிநவகோடிமாமணிகள்பல்வகைப்படுபசும்பொனின்
கிரிகள்கோடியெனவேகவர்ந்தெழுகிரிப்புறந்தெறுகிரீடிவந்
தரிகள்கோடிகிளர்சோலைசூழ்தமதுசெல்வமாநகரியணுகினான். (௪௯)

வடாதுசென்றவரிசிலைமகீபனினுமெழுமடங்குமிகுவலியுடன்
குடாதுசென்றிளையவீரமாநகுலனகுலனென்றுகுலைகுலையவே
யடாதமன்னரையடர்த்தடுத்தவரையஞ்சலென்றமருடற்றினா
னிடாதவன்றனமெனக்கரந்தனர்களேனைமன்னவர்கள்யாருமே. (௫0)

மாளவத்தினொடுகர்ப்படம்பொரவகுத்தெதிர்ந்ததிரிகர்த்தமுந்
தூளவன்படையிருட்பிழம்பெழவருக்கனிற்பெரிதுசுடரெழத்
தாளவண்கதியுடைத்துரங்கரதகசபதாதியொடுதகுசின
மூளவந்தெதிர்மலைந்தமன்னவரைமுதுகுகண்டமர்முருக்கியே. (௫௧)

 4114

கூற்றிசைக்குமெனவுடன்வருங்கடியகொடியசேனையொடுகுமரனுங்
காற்றிசைக்குமெனவருணனுந்தனிகருக்குலைந்துளம்வெருக்கொளத்
தோற்றிசைக்கும்வசைகொண்டுமற்றவர்கள்சொரிதருந்திறைகள்வாரியம்
மேற்றிசைக்குமொருமேருவுண்டெனவுயர்த்திஞனிகரில்வீரனே. (௫௨)

அளவிலாததிறையோடுமத்திசையுதித்ததோரிரவியாமெனத்
துளவமாலைகமழ்மௌலிநாதனுறைதுவரையெய்தியுயர்சுருதியின்
கிளவியான்முனிவர்தொழுபதந்தொழுதுகேசரித்துவசவீரனுக்
கிளவன்மீளவுமரிப்பிரத்தநகரெய்திமன்னனையிறைஞ்சினன். (௫௩)

குன்றிசைத்தகசரததுரங்கமபதாதிசூழவிறைகொள்ளவு
நின்றிசைத்துவருபலபணைக்குலமிரைக்கவுங்கொடிநிரைக்கவுந்
துன்றிசைப்பனிநிலாவெழக்கவிகையெண்ணிலாதனதுலங்கவுந்
தென்றிசைப்படர்தன்மேயினனகுலநிருபனுக்கிளையசெம்மலே. (௫௪)

அத்திகைக்கணிருகடலினுக்குநடுவானமண்டலமனைத்தினு
மத்திகைப்புரவிமண்டலேசரும்வயங்குமாடகுடமகிபரும்
புத்திகைக்கவவர்பொருதழிந்துதிறைபொழியவாரிவளர்புயகிரிப்
பித்திகைத்தொடையனீலனென்னுநரபதிபெரும்பதிபுகுந்தபின். (௫௫)

அந்தமாநகரிகாவலானசுடரங்கிசீறியெதிர்பொங்கிமேல்
வந்தவீரன்மிகுசேனையாவையுமயங்கவெம்புகையியங்கவே
கந்துசீறுகளியானைமன்னனதுகண்டுவெங்கனலவிப்பதோ
ரிந்துமாமுகசரங்களேழுநெடுநாவினனழியவேவினன். (௫௬)

அஞ்சியந்தவழலோனுமப்பொழுதொரந்தணாளன்வடிவாகியே
வஞ்சியந்தொடையன்மன்னன்முன்புவரவந்தமாமுனியைமன்னனீ
யெஞ்சினின்றுசுடுகின்றகாரணமிதென்னையென்னலுமியம்பினன்
மஞ்சிவர்ந்தபுகைவானவன்றனதுவரவுநீலன்வழிபாடுமே. (௫௭)

நீலனிட்டதிறையானகோலமணிநீலமாதிநவநிதியமுஞ்
சாலமிக்கதமனியமும்வெளவியுயர்சாரல்விந்தசயிலப்புறத்
தேலநெட்டடவிமுறியபோதிவெளியாகவேழ்கடலையுங்கடைக்
காலமுற்றியெழுகாலெனும்படிகலக்கினனெழுகலிங்கமும். (௫௮)

சென்னிநாடுகுடகொங்கநாடுதிறைகொண்டுதென்னனுறைசெந்தமிழ்க்
கன்னிநாடுறவுடன்புகுந்துமணிநித்திலக்குவைகள்கைக்கொளா
மன்னிநாடுகடல்கொண்டகைம்முனிவன்வைகுமாமலயநண்ணினன்
மின்னிநாடுறவிளங்குவெஞ்சமரவீரவாகைபெறுவேலினன். (௫௯)

செகத்தியங்குதனியாழியைவரினுமிளையகாளையொடுசேனையந்
நகத்தியைந்தபொழுதவனிபவ்வமுறுநவ்வெனத்தலைநடுங்கவே
மிகத்தியங்கிநெடுமேருவெற்பின்மிசைமேவுவானவர்கண்மீளவு
மகத்தியன்றனைவடக்கிருத்தும்வகையுன்னினார்கள்சமமாகவே. (௬௦)

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

கன்னிலங்கொலெனவலியமெய்பெறுகடோற்கசன்றனையழைத்துநீ
தென்னிலங்கைதிறைகொண்டுமீள்கவெனவிளையதாதையுரைசெய்யவே
மின்னிலங்கணியெயிற்றரக்கர்குலவீரனாகியவிபீடணன்
றன்னிலங்கொதிகொளப்புகுந்தொருசழக்கறச்சமருழக்கினான். (௬௧)

யாரையோவுரைசெய்நீயெனத்திறனிசாசராதிபனியம்பலும்
பாரையேழினையுமுழுதுடைக்குருகுலத்துமேன்மைபெறுபாண்டுவின்
பேரன்யான்விறலிடிம்பன்மாமருகனெனவரக்கர்பெருமான்மனத்
தூருமாதரவினோடழைத்தவனையுவகையோடுமிகவுறவுறா. (௬௨)

நீயிலங்கையிடைவந்ததென்கொலெனநீதியாலுயருதிட்டிரன்
ராயசூயமெனுநாமமாமகமுயற்றுவான்விறலொடெண்ணினா
னேயமானவிளையோர்கணால்வருநெடுந்திசாமுகமடங்கவென்
றேயமாநிதிதிரட்டலுற்றனர்கள்யானுநின்னகரியெய்தினேன். (௬௩)

அற்பனைத்துலகுமெண்ணவேயறனளித்தமன்னனழல்வேள்வியின்
கற்பனைக்குதவிதருகெனப்பழையகால்விழுத்தநெடுவேலைவிழ்
வெற்பனைப்புகலவந்தவீடணனளித்தநீடுயர்வியன்றலைப்
பொற்பனைத்தருவொரேழுமேழுமுடனேகவர்ந்துகழல்போற்றியே. (௬௪)

மீளவந்திளையதாதைபாதமுடிமீதுவைத்தொளிவிளங்குபொற்
பாளையம்பனைகள்பற்பராகமுதலானபன்மணிபரப்பினா
னாளிரண்டிலிமையோரொடொத்தபெருஞானபண்டிதனுநல்லறன்
காளைபைங்கழல்வணங்கினன்றனதுபதிபுகுந்துநனிகடுகியே. (௬௫)

வேறு.

ஆல்வரும்புரவித்திண்டேரறன்மகனநுசரான
நால்வருஞ்சென்றுதிக்கோர்நாலிரண்டினுந்தன்செய்ய
கோல்வரும்படியேயாக்கிக்கொணர்ந்தன்திறைகள்கண்டான்
மேல்வருமிராயசூயவேள்விநாம்விளம்பக்கேண்மோ. (௬௬)

இரணியனிரணியாக்கனென்றதானவரைவென்றாங்
கரணியவிலங்கைமூதூரரக்கனையநுசனோடு
மரணமுற்றிடமுன்சீறிமாமனைமலைந்துமற்றை
முரணியபகையுந்தீர்ப்பான்மூர்த்தியாய்ப்பிறந்துளானை. (௬௭)

விரைவினிற்கொணர்தியென்றுவீணைநாரதனைப்போக்கித்
தரணிபர்க்கெல்லாமோலைதனித்தனிதூதிற்போக்கி
வரனுடைச்சுருதிநான்கும்வகுத்தவனாதியான
விருபிறப்பாளர்யார்க்குமுலூகனையேவினானே. (௬௮)

தானவர்தச்சன்வந்துசமைத்ததோர்சிற்பந்தன்னை
வானவர்தச்சன்கண்டுமகிழுமண்டபத்தின்வேந்த
ரானவரெவருமீண்டியந்தணரெவருமீண்டி
மானவரெவருமீண்டிவரம்பறநெருங்கினாரே. (௬௯)

வரவரவந்தவந்தமுனிவரைவணங்கியாசி
திரமுறப்பெற்றுவேந்தர்சிறப்பெலாந்திருக்கணோக்கி
நரபதிதானுமற்றைநால்வருநீலமேனி
யிரவியையனையான்றன்னையுவகையோடெதிர்கொண்டாரே. (௭௦)

கரகதக்களிறுபோலுங்கனிட்டரீரிருவரோடுந்
துரகதத்தடந்தேர்விட்டுத்துழாய்மணங்கமழும்பொற்றாண்
மரகதக்கிரியன்னானைவணங்கினர்தழுவிவெள்ளைத்
திருநிறத்தவன்றன்செம்பொற்றிருப்பதமிறைஞ்சினாரே. (௭௧)

இருபுடைமருங்குந்திக்கோரெட்டையும்வென்றோர்போத
நிருபதிதேரிற்போதநேமியான்களிற்றிற்போதச்
சுரர்பெருந்தச்சன்செய்ததொன்னகர்வீதிபுக்கார்
வருதிருப்பவனிகேட்டார்வளநகர்மாதரெல்லாம். (௭௨)

ஈரடிகளினுஞ்செம்பஞ்செழுதுவாரெழுதுமுன்ன
ரோரடியெழுதிமின்போலொல்கிவந்திறைஞ்சுவாரு
மாரமுதனையகண்ணினஞ்சனமெழுதுகின்ற
சீரியகோலுங்கையுந்திருத்தகத்தோன்றுவாரும். (௭௩)

விரிதுகில்வேறுடாமல்விரைகமழ்தூநீராடிச்
சுரிகுழன்மேகமாரிதுளித்திடவெதிர்கொள்வாருங்
கரதலமலரிற்சங்குங்கலாபமுஞ்சிலம்புமார்ப்பத்
தெருவெலாந்தாமேயாகிச்சிறடிசிவப்பிப்பாரும். (௭௪)

வார்குழைப்பற்பராகமணிவிளக்கேற்றுவாரு
நேரிழைமருங்குல்வாட்டுநிறைகுடம்பூரிப்பாருங்
காரிளங்கமுகும்பச்சைக்கதலியுநிரைத்துத்தோளாந்
தோரணநாட்டுவாருந்தூமலர்சிந்துவாரும். (௭௫)

மாதர்களெவர்க்குமுன்போய்வணங்குதற்குன்னிச்சிந்தை
யாதரவுடனேவந்துமாவணமறுகுறுமற்
சூதடர்கொங்கைபொற்றோள்சுரிகுழல்சுமக்கலாற்றாப்
பேதுறுமருங்குலோடும்பித்துறுபிடியன்னாரும். (௭௬)

இவ்வகைசூழக்கொண்டாங்கணெழுவகைப்பருவமாதர்
செவ்வியுமழகுந்தேசுஞ்செய்யபூந்திருவோடொப்பார்
மெய்வழிகின்றபோகமேகமேயனையான்றன்னை
மைவழிகண்ணினோக்கிமனனுறவணங்கினாரே. (௭௭)

வேறு.

மாடம்பயிலுமணித்தோரணவீதி
நீடஞ்சனக்கணெருங்கித்தடுமாற
வாடம்பரக்கொண்டலன்னானையாபாத
சூடங்கருதித்தொழுதார்சிலமாதர். (௭௮)

கங்கைதருபொற்கழலான்மணிமார்பிற்
கொங்கைமுகுளங்குழையும்படியாகச்
சங்கையறமெய்தழுவுதற்குத்தம்மினுந்தஞ்
செங்கைமலர்பதறச்சென்றார்சிலமாதர். (எகூ)

வண்டுமலர்கரும்பாம்வண்ணப்படையானைக்
கண்டனையகண்ணிறைந்தகாயாமலர்வண்ணன்
செண்டுதரித்தோன்றிருப்பவளத்தாரமுத
முண்டுமனத்தினுய்ந்தார்சிலமாதர். (அ0)

வஞ்சம்பயில்சகடவாளசுரன்மாளவிறற்
கஞ்சன்படவுதைத்தகாலானைக்கண்டுருகி
யஞ்சம்புமெய்யுருவவைம்புலனுஞ்சோகமுற
நெஞ்சந்தடுமாறநின்றார்சிலமாதர். (அக)

தங்கள்குலமுன்றிற்றலையாயமும்மதத்து
வெங்கண்மதமாமிசைவருவோன்மெய்ந்நோக்கி
யங்கண்மிளிரவரும்புருவவின்முரியத்
திங்கணுதல்வேர்வோடநின்றார்சிலமாதர். (அஉ)

காலமுகிலுமலர்க்காயாவுமன்னதிருக்
கோலமுடையோன்குலவுமணிப்பூண்மார்பின்
மாலைநறுந்துளபமன்றலுக்குவாணயன
நீலவரிவண்டாகிநின்றார்சிலமாதர். (அ௩)

வேறு.

மங்கையர்பலருமிங்ஙன்மன்மதபாணநான்கி
னிங்கிதவின்பமெய்தியின்னுயிரோடுநிற்பப்
பங்குறவந்தவந்தப்பாண்டவரைவரோடுங்
கொங்கவிழ்துளபத்தாரான்குந்திவாழ்கோயில்புக்கான். (அச)

கொற்றவரைவர்தம்மைக்குருகுலம்விளங்குமாறு
பெற்றவள்பாதம்போற்றிப்பிறப்பிறப்பறுக்கவல்லோன்
மற்றவள்வாழ்த்தவாழ்த்தமனமகிழ்ந்தழலின்வந்த
பொற்றொடிபணிவுமேனைப்பூவையர்பணிவுங்கொண்டான். (அரு)

அரசவைக்கணிசெய்சிங்கவாசனத்திருத்திவெற்றி
முரசுடைத்துவசவேந்தன்முகமலர்ந்திருந்தகாலை
விரைசெயப்புரவித்திண்டேர்வீமனைமுதலோரெங்கு
முரைசெலக்கவர்ந்தசெல்வங்காட்டிநின்றுரைசெய்தாரே. (அசு)

முன்னரமேதஞ்செய்வான்முடிச்சராசந்தனென்னுங்
கின்னரர்பாடுஞ்சீரான்கிளப்பருஞ்சிறையில்வைத்த
வந்நரபதிகளோடுமவன்மகன்மாகதேச
னெந்நரபதிகளுக்குமிரவியேயென்னவந்தான். (அஎ)

அரும்பணைக்கொடியோனுதியரவுயர்த்தவனீறுகும்
பொரும்படைச்சேனைவெள்ளப்பூருவின்குலத்துளோர்கள்
கரும்பனைத்தடக்கைவெங்கட்கரிமுதற்சேனையோடு
மிரும்பிணைக்குழைக்குநெஞ்சர்யாவருமீண்டிமொய்த்தார். (அஅ)

இந்திரபுரிக்குமிந்தவிந்திரபுரிக்குந்தேவ
ரந்தரமறிவுறுமலதிசயித்துவகைகூரச்
செந்திருமடந்தைக்குள்ளசெல்வங்களனைத்துஞ்சேர
வந்ததுபோலும்வேள்விமாநகர்த்தோற்றமம்மா. (அகூ)

தோரணவீதிதோறுந்தூரியமுழக்கந்தன்னி
னாரணமுழக்கமிஞ்சவந்தணராகியுள்ளோர்
காரணமுணர்ந்தோர்வேள்விக்கனன்முகமாகத்தேவர்
பாரணம்பண்ணவிட்டபைம்பொன்வேதிகையிற்சேர்ந்தார். (கூ0)

சுடுமனற்கனுழனைச்சுருதியின்படியேகோட்டி
நடுவுறத்திசைகணான்குநான்குவெள்ளேறுகோட்டி
வடுவறச்சமைத்தசாலைமண்டபந்தன்னைநோக்கிற
கடவுளர்க்கமைத்தயாகதலமெனக்கவினிற்றம்மா. (கூக)

வேறு.

திருந்தமெய்ஞ்ஞானமுந்தெளிந்ததெய்வத
வருந்தவமுனிவர்பேரவையின்மேன்மையாற்
பெருந்தகைநாபியம்பெருமன்வாழ்வுபோன்
றிருந்ததுகுருபதியாகசாலையே. (கூஉ)

யாதவகுலத்தினுக்கிறைவனாகிய
மாதவனிணையடிவணங்கிமற்றுள
பூதலத்தரசெலாம்பொருந்துபொற்பினு
லோதநீர்வண்ணன்வாழுலகுபோன்றதே. (கூரு)

விதியினுமுயர்ந்ததொல்வியாதன்மேதினி
பதிகளாகியதிறற்பாண்டுமைந்தரை
மதியினிலொருபுடைவருகென்றன்பினுற்
றிதியுறச்சின்மொழிசெவியிற்செப்பினுன். (கூச)

இங்கிதத்திந்திரரென்பர்யாவருஞ்
சங்கரன்விதியினுற்றரணிபாலராய்
வெங்கனற்றோன்றியமின்னையைவரு
மங்கலம்புவிமகள்வழக்கினெய்தினீர். (கூரு)

ஒரொருதலைவராயோரொராண்டுளங்
கூருவகையினெடுங்கொழுநராயினீ
ராரழற்பிறந்தமானறத்தின்மைந்தற்குப்
பேரழல்வளர்த்திடும்பெற்றிபெற்றனள். (கூசா)

மைந்தர்நீர்நால்வருமகஞ்செய்வேந்தனே
தந்தையுந்தாயுமித்தருமவல்லியே
யிந்தவான்பிறப்பினுக்கிற்றைநாண்முதற்
குந்தியும்பாண்டுவுமென்றுகொண்மினே. (௯௭)

கனல்வருமின்னையுங்கணவன்றன்னையு
முனிவரன்மொழிந்திடமுகூர்த்தமானபின்
புனைமுடிதிருக்குழற்புழுகுநானமு
மினிமையிற்சாத்தினாரெண்ணின்மாதரே. (௯௮)

கதியொடுபிறைதவழ்கடுக்கைக்காட்டுநன்
னதிதருபுனல்கொடுநானமாட்டினார்
விதிமுறையறிந்தவர்*வேள்விக்கேற்பன
பதியுடனணிந்தனர்பாவைதன்னையும். (௯௯)

வேறு.

மாலைமுன்வணங்கிக்கங்கைமைந்தனைவணங்கியாக
சாலையைநோக்கும்வேந்தன்றம்பியைநோக்கிமுந்நீர்
வேலையின்மணலிற்சாலுமிகுசனமருந்தத்தேவ
ராலயத்தமுதமன்னவடிசினீயளித்தியென்றான். (௧௦௦)

நாவியின்மதமுஞ்சாந்துநறும்பனிநீருந்தாரும்
வாவியிற்காவிலுள்ளமலர்களுமற்றும்யாவு
மேவியவரிவில்லாண்மைவிசயனைநல்குகென்றான்
றாவிலைபளிதமேனைத்துணைவரைவழங்கச்சொன்னான். (௧௦௧)

தானமுந்தியாகந்தானுந்தபனன்மாமதலையான
மானவன்கொடுக்கவென்றான்வரம்பிலாநிதிகள்யாவுங்
கானலங்கடல்சூழ்வையங்காவலன்காவலென்றா
னேனையோர்பலரும்வேந்தனேவலின்முறைநின்றாரே. (௧௦௨)

தழல்வளரோமகுண்டத்தலத்தினில்வலத்திலாதித்
தழல்வருபாவைவைகத்தருமன்மாமதலையாங்கட்
டழல்புரைவேதவாணர்தாளிணைவணங்கித்தானுந்
தழலெனவிருந்தானெல்லாவினைகளுந்தகனஞ்செய்வான். (௧௦௩)

கடகரியுரிவைபோர்த்தகண்ணுதற்கடவுண்மாறி
யிடம்வலமாகப்பாகத்திறைவியோடிருந்தவாபோ
லுடல்கலையுறுப்புத்தோலினொளித்திடப்போர்த்துவேள்விக்
கடனினுக்குரியவெல்லாங்கவினுறச்சாத்தினானே. (௧௦௪)

பொங்குறுமோமச்செந்தீப்புகையினைப்போர்த்ததென்னப்
பைங்கடல்பருகுமேகம்பரிதியைமறைத்ததென்ன
வங்குறுப்புடனேவெங்கோட்டரிணத்தொக்கருணமேனி
யெங்கணும்புதைப்பவேள்வித்தொழிலிலேயிதயம்வைத்தான். (௧௦௫)

---

* வேள்விக்கொப்பன என்றும் பாடம்.

தருமன்மாமதலையந்தச்சடங்குசொற்படியேதொட்டுப்
புரிவுடைத்திசைகணான்கும்புற்களாற்காவல்செய்து
விரிசுடர்த்தீகண்மூன்றும்விண்ணவர்முகங்களாகச்
சுருவையான்முகந்தநெய்யைச்சுருதியாலோமஞ்செய்தான். (கoசு)

முழுதுணர்வரம்பில்கேள்விமுனிவரர்சூழாமுமென்று
மழிவிலாமலரோனாதியமரர்தஞ்சூழாமுஞ்சூழ
வெழுசுடர்முத்தீப்பொங்கவெழுபகலோமஞ்செய்தான்
பழுதறுபாண்டுசெய்தமாதவம்பலித்ததொப்பான். (கoஎ)

வேறு.

இம்முறையிராயசூயமாமகத்துக்கெழுதொணூனான்மறையுரைத்த
வம்முறையிமையோரானவர்க்கெல்லாமரும்பெறலவியுணவருளி
மும்முறைவலம்வந்திருவருஞ்சுவாகைமுதல்வனைமுடியுறவணங்கித்
தெம்முறையரசரிடுதிறையனைத்துந்தானமுந்தியாகமுஞ்செய்தான். (கoஅ)

ஏழுநாளிவ்வாறிமையவரெவர்க்குமிமகிரிதனிலயன்வேட்ட
வூழிமாமகம்போலியற்றியெண்டிசையினுயர்புனல்யாவையுஞ்சொரிய
வாழிவாய்முகிலுமின்னுமேயென்னவரும்புனலாடியபின்னர்
வாழிபாடினர்கணாரதன்முதலோர்மங்கலம்பாடினர்புலவோர். (கoசு)

பெயர்பெறுமுனிவரெவர்க்குமெண்ணிரண்டாம்பெருபசாரமும்வழங்கி
யுயர்வறவுயர்ந்தவேள்வியினுயர்ந்தோனுயர்குலப்பாவையுந்தானு
மயர்வறுஞானவடிவமாய்நின்றமாயனைமனனுறவணங்கி
யயர்வறுகங்கைமகன்பதம்பணிவுற்றறன்மகன்வினவினனம்மா. (கக0)

பரிதியுமதியும்வன்னியுமுதலாம்பல்வகைக்குலத்துமுற்பவித்த
நரபதிசூழாத்தில்யாவரேபெறுவார்நவிலுமுற்பூசைமற்றென்னக்
கருதியவசுக்களெண்மரிலொருவன்கங்கையின்றிருமகன்றெய்வச்
சுருதிமாமகஞ்செய்புனிதனைநோக்கித்தொன்முனிவரரையுநோக்கி. (ககக)

ஆர்கொலோவக்ரபூசனைக்குரியாரரசரிலந்தணீருரைமின்
பாரெலாந்தத்தங்குடைநிழற்புரக்கும்பார்த்திவர்யாரையுமுணர்வீர்
தாருலாமார்பீரென்றலும்வியாதன்றருமன்மாமதலையைநோக்கிக்
காரின்மாமேனிக்கரியசெந்திகிரிக்கண்ணனுக்குதவெனக்கதித்தான். (ககஉ)

என்றபோதந்தவேத்தவையிருந்தோர்யாவருமிருந்துழியிருந்து
நன்றுநான்மறையோர்சிகாமணியுரைத்தநவிரறுநல்லுரையென்றார்
சென்றபோர்தோறும்வென்றியேபுனையுஞ்சேதிபபதிசிசுபாலன்
கன்றினனிதயங்கருகினன்வதனங்கனலெனச்சிவந்தனன்கண்ணும். (ககங)

வேறு.

* கொச்சையிடையர்மகளிருக்குங்கூத்துக்குனித்துநவநீதப்
பிச்சைநுகருமிவனெமக்குமுன்னேபூசைபெறுவானுஞ்
சச்சைமறையின்முறையென்னுந்தருமன்புரிந்தமகமென்னுஞ்
செச்சைவடிவேன்முடியரசர்செங்கோலென்னுந்திருவென்னும். (ககச)

* இச்செய்யுள்சிலஏட்டுப்பிரதிகளிற்காணப்படுகிறது.

வேறு.

பூபாலரவையத்துமுற்பூசைபெறுவார்புறங்கானில்வாழ்
கோபாலரோவென்றுருத்தங்கதிர்த்துக்கொதித்தோதினன்
காபாலிமுனியாதவெங்காமனிகரானகவினெய்தியேழ்
தீபாலடங்காதபுகழ்வீரகயமன்னசிசுபாலனே. (ககரு)

சூரன்குலத்தோர்குபேரன்குலத்தோர்சுடர்ப்பாவகப்
பேரன்குலத்தோர்கண்முதலோரிருந்தார்கள்பெயர்பெற்றபேர்
வீரங்கொலோவாகுசாரங்கொலோசெல்வமிச்சங்கொலோ
பூரம்புராசிப்புவிக்கென்றுமுதுவோர்கள்பொதுவோர்கொலோ. (ககசு)

வேறு.

பராசரமுனிவன்மதலையாம்படியேபகர்ந்தனைபழுதிலாமாற்ற
மிராசமண்டலத்தின்மரபினுல்வலியாலேற்றமுந்தோற்றமுமுடையோன்
சுராசுரர்வியக்குங்கஞ்சனைமலைவான்சூரன்மாமகன்வயிற்றுதித்தான்
றராதலமிசையேபிறந்திவன்கற்றதெத்தனையிந்திரசாலம். (ககஎ)

சொற்றவானன்றுசுகன்றிருத்தாதைசூதிகைத்தோன்றியபொழுதே
பெற்றதாய்தானும்பிதாவுமுன்வணங்கப்பேசலாவுரையெலாம்பேசிக்
கற்றமாயையினுற்கன்னியங்கிருப்பக்காரிருட்காளிந்திநீந்தி
யற்றைநாளண்டரானவர்க்கெல்லாமரசனுக்கருமகவானுன். (ககஅ)

ஈன்றதாய்வடிவங்கொண்டுளமுருகிப்பிணைமுலைத்தடத்தணைத்தமுதம்
போன்றபால்கொடுப்பப்பொழிமுலைப்பாலோபூதனையுயிர்கொலோநுகர்ந்தான்
சான்றபேருரலாலுறிதொறுமெட்டாத்தயிருடனறுநெய்பாலருந்தி
யான்றதாய்கண்டுவடத்தினிற்பிணிப்பவணியுரலுடனிருந்தழுதான். (ககக)

பாடினன்மறுகுபெருநகைவிளைப்பப்பாவையர்மனைதொறும்வெண்ணெய்க்
காடினனவர்கண்முகந்தொறுமெச்சிலாக்கினன்கன்றுமுன்னுடை
வோடினனுவின்பேரிளங்கன்றைப்புபிருடனெருதனிவிளவிற்
சாடினனாவின்முதுகையும்புள்ளின்றுலுவோடலகையும்பிளந்தான். (க௨0)

பின்னியகுஞ்சிக்கோவலர்பயந்தபேதையர்பலரையுங்களிந்த
கன்னியின்மருங்குமோரையின்மருங்குங் * கலையெலாநாணிடக்கவர்ந்தே
முன்னியவின்பச்செருக்கிலேமயங்கிமூரிவிற்காமனுமானு
னன்னியனல்லன்மற்றிவன்பெருமையரசரிலாரறியாதார். (க௨க)

வேறு.

அண்டர்க்கெல்லாமரசானவாகண்டலனுக்கண்டரினி
துண்டற்கமைத்தபாலடிசிலுண்டானெருநாளொருதானே
கொண்டற்கன்மாரியைமுன்னங்கோவர்த்தனமேகுடையாகச்
சண்டப்பிரசண்டவேகமுடன்றடுத்தானேறுபடுத்தானே. (க௨௨)

---

* கல்கனாடொறுமிடக்கற்முன் என்றும் பாடம்.

*பம்பிப்பரந்தபுன்மெயும்பசுவின்கன்றுங்கோபாலர்
தம்புத்திரருமம்புயத்தோன்றன்மாயையினாலொளித்திடநா
ளெம்புத்திரருமெங்கோவினிளங்கன்றினமுமெனத்தெளிய
வம்பிற்புரிந்தமாயையிவனல்லாலியாவர்வல்லாரே. (௧௨௩)

அதிரப்பொரும்போரஞ்சினனோவஞ்சாமைகொலோதெரியாது
மதுரைப்பதியுந்தன்கிளையும்வாழ்வுந்துறந்துவாரிதிவா
யெதிரொப்பிலாததுவாரகையென்றியற்பேர்படைத்தமாநகரின்
முதிரப்பொரும்போர்த்தம்முனுடனிருந்தான்பன்னாண்முரணறுத்தே. (௧௨௪)

வேறு.

கஞ்சனெனுமாமனொடுகாளையமர்செய்தான்
வஞ்சனையினாலமருமெத்தனைமலைந்தான்
றஞ்சமெனவேமருவுதமரிலொருதானே
மிஞ்சிவிரகாலுரியமேதினிபுரந்தான். (௧௨௫)

வேறு.

அன்னையுந்தாதைதானுமருஞ்சிறையகத்துவைக
முன்னிருமூவர்முன்னோர்தங்களைமுருக்குவித்தான்
பின்னொருதமையன்றன்னைப்பெற்றதாயிருவரென்றென்
றிந்நிலஞ்சொல்லவைத்தானிவனைவேறியாவரொப்பார். (௧௨௬)

என்றுகொண்டெண்ணிநாவுக்கிசைந்தனவுரைகளெல்லா
மொன்றினொன்றுச்சமாகவுயர்ச்சியுந்தாழ்வுந்தோன்றக்
கன்றியமனத்தினோடுங்கட்டுரைசெய்தான்மன்றற்
றென்றலஞ்சோலைசூழுஞ்சேதிநாடுடையகோவே. (௧௨௭)

வேறு.

திண்ணியநெஞ்சினனானசிசுபாலன்றன்னெஞ்சிற்றீங்குதோன்ற
வெண்ணியமன்பேரவையினியம்பியபுன்சொற்களெலாமெண்ணியெண்ணிப்
புண்ணியர்வந்தினிதிறைஞ்சும்பூங்கழலோன்வேறொன்றும்புகலானாகிப்
பண்ணியதன்புரவிநெடும்பருமணித்தேர்மேற்கொண்டான்பரிதிபோல்வான். ()

எந்நாட்டிலவனிபருமீண்டியவித்தொல்லவையினிசைத்தசேதி
நன்னாட்டுக்கதிபதியாநரபாலநின்மாற்றநன்றுநன்று
ஈன்னாட்டும்படியாகவிருவோரும்பொருதறிதுங்கடிதேகென்று
தன்னாட்டமிகச்சிவந்தான்கரியவடிவினிற்புனைந்ததண்டுழாயோன். (௧௨௯)

சேதிகுலநரபதியுஞ்செருப்புரிதற்கஞ்சுவனோதேரிலானான்
மோதிவலம்புரியூதமுகிலினங்கண்முழங்குவபோன்முரசமார்ப்ப
வேதியரோடவையிருந்தவேந்தரெலாமதிசயிப்பவிமானந்தோறுஞ்
சோதிமுடியமரர்வரநகர்ப்புறத்திலமர்புரியத்தொடங்கினாரே. (௧௩0)

---

* இச்செய்யுள் சில ஏட்டுப்பிரதிகளிலில்லை.

ஆதிவருகதிப்பரியுமணிவயிரத்திண்டேருமனிலமென்ன
மோதிவருகடகளிறுங்காலாளும்பொருதரகர்முடிகள்சோர
யாதவனரபதியுமிருங்கிளையும் பெருங்கிளையோடெதிரிலாத
சேதிகுலநரபதியுஞ்செய்தவமர்சுராசுரரிற்செய்தாருண்டோ. (கநக)

வேறு.

யானைமேல்வருநிருபருந்திறல்யானைமேல்வருநிருபருஞ்
சோனைமாமுகிலெழுமேகிகரென்னவம்புதொடுத்தலிற்
றானையாறுநிறைந்துபல்லணியாகிமிஞ்சியசதுர்விதச்
சேனையாவையுமெய்சிவந்தனசிந்தைமாமலர்கருகவே. (கநஉ)

ஓரிரண்டுவருதினிக்குளுமுயர்தடங்கிரியொப்பவே
யீரிரண்டுவிதத்திறனுமியம்பலுற்றனவெண்ணில்பஃ
றேரிரண்டணியுருளினேடுருள்சென்றுமுட்டினதீயிடிக்
காரிரண்டெதிர்மலையுமாறெனவண்டபித்திகலங்கவே. (கநந)

சிங்கமொன்றுடனென்றுசீறுசெருக்கெனும்படிசேனைவாய்
வங்கர்கொங்கணர்துளுவராரியர்மகதரொட்டியர்மாளவர்
கங்கர்கொங்கர்தெலுங்கர்சீனர்கலிங்கர்சிங்களர்கௌசல
ரங்கர்சோனகரானவீரரதிர்ந்துதங்களினமர்செய்தார். (கநச)

வெருவரும்படி*கம்புகொம்புவிதங்கொண்மாமுரசாதியா
யிருவர்தம்படைகளினூழியெழுந்தகாலெனவதிர்தலான்
மருவியெண்டிசைமுகமுநிற்பனமத்தவாரணகன்னமுந்
திருவிரும்புபுயத்துவானவர்செவிகளுஞ்செவிடானவே. (கநரு)

புடைபடக்கிளையாகிவந்தெதிர்பூதுரந்தரர்யாவருந்
தொடைபடப்பரிவுறுமனத்தொடுதொந்தயுத்தமுடற்றினர்
குடையெடுத்தனரிருவரும்பெறுகொடியெடுத்தனர்கொற்றவெம்
படையெடுத்தனர்மாமறைப்பசுபாலனுஞ்சிசுபாலனும். (கநசு)

வேலினல்வடிவாளினல்வரிவில்லினலுரைபெற்றவெங்
கோலினலிருவருமூனந்திருகுன்றமொத்தனதேரினர்
மாலினல்வருமத்தயானைகண்மலைவதொத்துமதித்தபோர்
நூலினல்வழுவறமலைந்தனர்நுண்மையாவினுநுண்ணியார். (கநஎ)

வேறு.

வெஞ்சினமுடுகவொருவருக்கொருவர்வெல்லலுந்தோற்றலுமின்றி
வஞ்சினமுரைசெய்துள்ளமுமெய்யும்வாகுபூதரங்களும்பூரித்
தெஞ்சினர்தமைப்போலினைத்தபினினிவானேற்றுதல்கடனெனக்கருதிக்
கஞ்சனைமுனிந்தோனிவன்முடித்தலைமேற்கதிர்மணித்திகிரியேவினனே. (கநஅ)

ஏவியதிகிரிவீரரைத்துறக்கமேறவிட்டிடுமிரவியைப்போன்
மேவியபகையாமைத்துனன்முடியைவிளங்குகோளகையுறவீசி
யாவிகளனைத்துநிறைந்தொளிசிறந்தவச்சுதனலைகொள்பாற்கடலிற்
றீவியவமுதமமரருக்களித்தோன்றிருக்கரஞ்சென்றுசேர்ந்ததுவே. (கநகூ)

---

* கொம்புகம்புவிதங்கள் என்றும் பாடம்.

சேதிமன்னவன் றன்முடியினைநெடியோன் றிகிரிசென் றரிந்திடவொருபொற்
சோதிமற்றவன் றனுடலினின்றெழுந்துசுடரையும்பிளந்துபோய்மீண்டு
மாதிரமனைத்துமொளியுறவிளக்கிமண்ணளந்தருள்பதமடைய
வேதியர்முதலோர்யாவரும்வேள்விப்பேரவைவேந்தருங்கண்டார். (கசo)

ஈதொருபுதுமையிருந்தவாவென்பாரிந்திரசாலமோவென்பார்
மாதொருபாகனல்லதிக்கண்ணன்மதிகுலத்தவனலனென்பார்
கோதொருவடிவாம்புன்மொழிகிளைஞர்கூறினும்பொறுப்பரோவென்பார்
காதொருகுழையோனிளவலைத்தேர்மேற்கண்டுதங்கண்ணிணைகளிப்பார். (கசக)

அதிசயித்திவ்வாறிருந்துழியிருந்தோரனைவருமாழியான்றன்னைத்
துதிசெயத்தருமன்சுதன்முதலெவருந்தொழுதெதிர்வந்துவந்திறைஞ்ச
விதியெனப்பொருதவெங்களத்திடையவ்வியாதமாமுனியெடுத்துரைப்ப
மதியுடைக்கடவுள்வீடுமன்முதலாமன்னவர்யாவருங்கேட்டார். (கசஉ)

ஐவகைவடிவாயெங்குமாய்நின்றவச்சுதனமலனைநந்தன்
செய்யொளிதிகழும்*பங்கயக்கண்ணன்றிருமகள்கொழுநனைக்காணத்
துய்யசெய்தவத்துத்துருவாசமுனிவன்சேறலுஞ்சுடர்கொள்வைகுண்ட
மெய்யுறுகோயிற்றுவாரபாலகரவ்வேதபண்டிதன்றனைவிலக்க. (கசங)

விலங்கியவிருவர்தம்மையுமந்தவெஞ்சினமுனிவரன்வெகுண்டு
துலங்கியகோயிற்றுவாரம்விட்டவனிதோன்றுமின்போயெனச்சபித்தா
னலங்கலந்துளவமௌலியானதுகேட்டந்தணன்றனையெதிர்கொண்டு
கலங்கியதுவாரபாலர்நின்சாபங்கடப்பதெக்காலமோவென்றான். (கசச)

என்றலுமுனிவன்பரிந்திவரெழுகாலின்புறமன்பராய்வருத
லன்றிமும்மடங்குபகைவராய்வருதலல்லதிங்குன்பதமணுகார்
மன்றலந்துளபமாலையாயென்னமலர்மகண்மகிழ்நனுமவரைக்
கன்றியமறையோன்சாபநீர்கடக்குங்கருத்துமற்றியாதுகொலென்றான். (கசரு)

மற்றவரிறைவன்மலரடிவணங்கிவான்பிறப்பேழுறமாட்டே
முற்றுமுப்பவமுமுனக்குவெம்பகையாயுற்பவித்துன்பதமுறுவேம்
வெற்றிகொண்முதிர்போர்நேமியாயென்றார்விமலனுங்கொடியவெஞ்சாப
மற்றிடும்வகையவ்வரமவர்க்களித்தானசுரராயவரும்வந்துதித்தார். (கசசு)

இரணியனிரணியாக்கனென்றுரைக்குமியற்பெயரிருவருமெய்தி
முரணியகொடுமைபுரிந்துமூவுலகுமொய்ம்புடன்கவர்ந்திடுநாளி
னரணியினழல்போனரவரியுருவாயச்சுதன்றாணிலங்குரித்துத்
தரணியினுகிராற்பிளந்துமுன்னுகத்திற்றன்பகைசெகுத்தனன்பின்னும். (கசஎ)

அரக்கர்தங்குலத்துக்கதிபதியாகியாண்டுபோய்மீண்டுமங்குரித்துத்
தருக்குடனவர்களிருவருமுறையாற்றஃபியுந்தமையனுமானார்
சிரக்குவையுடனேபுயவரைநிரையுஞ்சிந்தவச்சிந்துவினிடையே
சரக்குவைசொரிந்தானமலனவ்வுகத்துத்தசரதன்றன்வயிற்றுதித்தே. (கசஅ)

---

* பங்கயச்சரணஞ்சிந்தனுசிந்தையணுகித், துய்யசெய்தவத்துத்துருவாசமுனிவன்றொழ வருகாலைவைகுந்த என்றும் பாடம்.

இந்தநல்லுகத்திலிறைவனுக்கன்னோரிருவருங்கிளைஞராயெய்தி
வந்தனர்வஞ்சக்கஞ்சமாமனுமிம்மைத்துனன்றானுமாய்மன்னோ
சிந்தையிலுணர்வீரென்றுகொண்டுரைத்தான்சித்தசித்துணர்ந்தருண்முனியு
மந்தமன்னவையினிருந்துளோரெல்லாமமலனைத்துதித்ததிசயித்தார். (கசகூ)

வீடுமன்விதுரன்றுரோணனேமுதலாம்விரகிலாவுணர்வுடைவேந்தர்
நாடினர்மனத்திற்புளகமுற்றுடலநயனநீர்மல்கநாக்குழறிப்
பாடினர்புகழ்ந்துபரவினர்பரவிப்பைந்துழாய்கமழ்மலர்ப்பாதஞ்
சூடினர்சுருதிக்கெட்டொணாதொளிருஞ்சுடர்மணித்துய்யசோதியையே. (கரு0)

அப்பொழுதமலனருஞ்சினமொழிந்தாங்கருளுடையறத்தின்மைந்தனைப்பார்த்
திப்பொழுதரசரானவர்க்கெல்லாமிருஞ்சிறப்புதவுகென்றிசைப்ப
முப்பொழுதுணருமுனிவரன்பணியான்முறைமுறைபூசனைபுரிந்தான்
மைப்பொழுதொளிகூர்வெண்ணிலவுமிழுமதிகுலத்துதித்தருண்மன்னன். (கருக)

அருமறைமுறையாலரசனைமுனிவரனைவருமாசிசொற்றருளித்
தருநிரைப்பிலுந்தத்தமவிபினஞ்சார்ந்தனர்தகவுடன்மீளக்
கருமுகிலனையமேனியங்கருணைக்கண்ணனுங்கிளையுடன்றுவரைத்
திருநகரடைந்தான்சென்றுவன்றிறல்கூர்சேதிபப்பெரும்பகைசெகுத்தே. (கருஉ)

அராவவெங்கொடியோனாதியாவுள்ளவரசருந்தந்நகரடைந்தார்
விராடனும்யாகசேனனுமுதலாம்வேந்தருந்தம்பதிபுகுந்தார்
சராசனத்தடக்கைச்சல்லியன்முதலோர்கிளையுடன்றம்புரஞ்சார்ந்தார்
பராவருமுதன்மைப்பாண்டவர்கடற்பார்பண்புறத்திருத்தியாண்டிருந்தார். ()

முன்குலத்தவர்க்குமுனிகுலத்தவர்க்குமும்மதக்கைம்முகக்களிற்று
மன்குலத்தவர்க்கும்வான்குலத்தவர்க்கும்வரம்பிலாவகைக்கலைதெரியு
நன்குலத்தவர்க்கும்பொருளெலாநல்கிநாடொறும்புகழ்மிகவளர்வான்
றன்குலக்*கதிர்போலேந்தொளிசிறந்தான்றண்ணளித்தருமராசனுமே. (கருச)

இராசசூயச்சருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள்—கருஉ.

சூதுபோர்ச்சருக்கம்.

ஞானமாகியபரம்பரவமிழ்தமாய்நவிரறுமயக்காகி
வானமாயுடன்வாயுவாய்த்தேயுவாய்வனமுமாய்மண்ணாகித்
தானமாமறைமுறைமையிற்பற்பலசராசரங்களுமாகி
யேனமாயிவையனைத்தையுமருப்பினாலேந்தினானெனையாண்டோன். (க)

வேறு.

தாமரையனையசெங்கட்டரணிபனிராயசூய
மாமகமுற்றித்தங்கண்மாநகர்புகுந்தபின்னர்
நாமருபனுவன்மாலைநாகவேறுயர்த்தசெல்வக்
கோமகனிளைஞரோடுங்குறித்ததுகூறலுற்றாம். (உ)

* கதிர்போற்றேய்ந்தொளி என்றும் பாடம்.

கணைவரும்வரிவில்வாழ்க்கைக்கடுங்கனலனையதோற்றத்
துணைவருந்தானுங்கங்காசுதனுமற்றெவருஞ்சூழ
விணைவருமரசரில்லாவிகலரியேறுபோல்வான்
கிணைவருமோதைதழூதூர்க்கிளர்நெடும்புரிசைபுக்கான். (௩)

சென்றுழியெவருந்தத்தஞ்செழுமனையெய்திவாசந்
துன்றியவமளிகஃகுற்றுயில்புரிந்தெழுந்தபின்னை
நின்றவெம்பரிதித்தோற்றந்தொழுதுதந்நியமமுற்றி
வன்றிறலரசன்கோயின்மன்னவைவந்துசேர்ந்தார். (௪)

இறைஞ்சியவேந்தர்க்கெல்லாமிருப்பளித்தெதிர்ந்தவேந்தர்
நிறஞ்செறிகுருதிவேலானினைவினோடிருந்தபோதி
லறஞ்செறிதானம்வண்மையளவிலாதளித்துநாளும்
புறஞ்சுவர்கோலஞ்செய்வான்பூபதிக்குரைக்கலுற்றான். (௫)

தாதவிழ்குவளைமாலைத்தருமன்மாமதலைபெற்ற
மேதகுவேள்விச்செல்வம்வேந்தரில்யாவர்பெற்றா
ரேதளவவன்றன்வாழ்க்கையாரினியெதிருண்டென்று
பாதகநினைவைத்தானும்பகர்ந்தனன்பரிவுகூர. (௬)

விதரணவினோதன்சொன்னவார்த்தையும்வேந்தர்வேந்த
னிதயமுமொன்றாய்நின்றவியற்கையைச்சகுனிகண்டு
புதைநகமடங்கலும்புறஞ்செலாதொடுங்குமானான்
மதகரிவிடுமோவென்றான்வசையிசையாகக்கொள்வான். (௭)

சொல்லிடைநஞ்சுகக்குந்துன்மதியுடையதம்பி
வில்லிடைநின்றுதம்முன்வெம்மனங்களிக்கச்சொன்னா
னல்லிடைநிறைந்ததேனுமமுதவெண்கிரணத்திங்க
ளெல்லிடையிரவிமுன்னரெவ்வுழிநிகர்க்குமென்றே. (௮)

தமையனுந்தம்பிசொன்னதன்மையையுணர்ந்துநீதி
யமைதருதந்தைகேட்பவவன்பெருந்தாதைகேட்பக்
கமைபெறுவிதுரன்கேட்பக்கார்முகக்கன்னன்கேட்ப
விமையவன்றுரோணன்கேட்பயாவருங்கேட்பச்சொல்வான். (௯)

இந்திரன்முதலாவுள்ளவிமையவர்சிறப்புச்செய்யச்
சுந்தரப்பொற்றோள்வேந்தர்தொழில்புரிந்தேவல்செய்ய
மந்திரமுனிவர்வேள்விமறைநெறிமுறையிற்செய்யத்
தந்திரவெள்ளச்சேனைத்தருமனேதலைவனானான். (௰)

இனியவன்சின்னாட்செல்லினெம்மனோர்வாழ்வுங்கொள்ளுந்
துனைவரும்புரவித்திண்டேர்த்துணைவருஞ்சூரரானார்
முனைவருகூர்முள்வேலைமுளையிலேகளையினல்லா
னனிவரவயிர்த்தபோதுநவியமுமடியுமன்றே. (௧௧)

போதுறவிரைந்துமற்றப்புரவலன்செல்வம்யாவும்
பேதுறக்கவர்ந்திலேனேற்பின்னையார்முடிக்கவல்லார்
மோதுறப்பொருதேயாதன்மொழியொணாவஞ்சமொன்று
தீதுறப்புரிந்தேயாதல்கொள்வதேசிந்தையென்றான். (கஉ)

என்னனுமுரியதம்பியெழுவதேகருமமின்றே
செந்நெலின்வாளைபாயுஞ்செல்வநாடுடையகோமா
னென்னலங்கெய்தவிமனைகைத்ததுநேயமான
கன்னலின்மொழியாண்மூரல்விளைத்ததுங்கண்டிலீரோ. (கங)

எத்தனைதரணிவேந்தர்யாகநல்விழாவில்வந்தா
ரத்தனைபேரில்யாமுமொருவராயடங்கிநின்றேங்
கொத்தனையுகளுநன்னீர்க்குருநிலக்கோமானந்த
முத்தனையன்றிப்பின்னையாரையேமுதன்மைசெய்தான். (கச)

நந்தகோமகனுக்கெல்லாநல்கியமுதன்மைகண்டு
வந்தகோவெள்ளஞ்சேரவாய்திறவாமனிற்ப
வெந்தகோவிவனுக்கிந்தமுதன்மையென்றெதிர்ந்துமாற்றந்
தந்தகோமடியுமாறுசமரமும்விளைப்பித்திட்டான். (கரு)

தன்புயவலியுநான்குதம்பியர்வலியுமாயன்
வன்புயவலியுங்கொண்டேமண்ணெலாங்கவரவெண்ணி
யின்புயச்சிகரிமன்னர்யாரையுந்தன்கீழாக்கி
மின்புயலனையான்மேன்மைவிளைக்கவேவேள்விசெய்தான். (கசு)

எல்லியல்பரிதியன்னயதுகுலமன்னன்றானுஞ்
சல்லியமிகுபோர்செய்யச்சல்லியன்றன்மேற்சென்றான்
சொல்லியகருமம்வாய்ப்பச்சூழ்வலைப்படுத்திக்கொண்ட
வல்லியமென்னச்சூழ்ந்துமலைவதேகருமமென்றான். (கஎ)

வேந்தனுமொருப்பட்டந்தவெண்ணெய்வாய்க்கள்வன்மீளப்
போந்திவர்தமக்குமின்றுபொருதுணையாகமாட்டான்
சாந்தணிகுவவுத்தோளான்சல்லியன்வலியனிப்போ
தாந்தகவெண்ணில்வல்லேயைவரையடர்க்கலாமே. (கஅ)

வஞ்சனைகொண்டேயாதல்வாரணமணித்தேர்வாசி
நஞ்சனையவராலாதனுளேயேயழித்தல்வேண்டுங்
கஞ்சனைமலையவெண்ணிக்கரியபேய்முலைப்பாலுண்ட
நெஞ்சினனெய்தாமுன்னநீர்விரைந்தெழுமினென்றான். (ககூ)

வெஞ்சிலைகுனித்தோரம்பியான்விடின்வெகுண்டவேந்த
ரெஞ்சிவிண்புகுவரல்லால்யாவரேயெதிர்க்கவல்லார்
வஞ்சனைகொண்டுவெல்லமதிப்பதுவாளால்வெல்ல
வஞ்சினமாயினன்றேயென்றனனங்கர்கோமான். (உ0)

யாவருமொழிந்தவார்த்தையின்புறக்கேட்டுப்பின்னுந்
தாவருபுரவித்திண்டேர்த்தானையான்சகுனிசொல்வான்
மேவருகன்னனன்றிவிண்ணுளோரெதிர்ந்தபோதுங்
கோவருமுன்றிலானைக்கொடுஞ்சமர்வெல்லலாமோ. (உக)

இடிப்பணைப்பகனைவைவேலிகற்சராசந்தன்றன்னை
நெடும்பணைப்புயத்தால்வென்றநிகரிலாவீமனிற்கக்
கடும்படைப்பெருமையால்வென்காணலாமென்பராயிற்
றொடும்படைத்தடக்கைவீரர்க்குத்தரஞ்சொல்லலாமோ. (உஉ)

*துப்புறழமுதச்செவ்வாய்த்திரௌபதிதுணைத்தோள்வேட்டுக்
கைப்படுசிலையினேடுங்காவலர்கலங்கிவீழ
மெய்ப்படுமுனியாய்வந்துவிசயன்வில்வளைத்தபோது
மிப்பொழுதிருந்தவீரர்யாவருமிருந்திலேமோ. (உ௩)

இப்பிறப்பொழியவின்னுமேழெழுபிறப்பினாலு
மெய்ப்பிறப்பற்றநீதித்தருமனைவெல்லமாட்டோ
மொப்பறப்பணைத்ததோளாயுபாயமெங்கேனுமொன்றுற்
றப்பறச்சூதுகொண்டுசதிப்பதேகருமமென்றான். (உச)

தன்பெருமாமன்சொல்லத்தரணிபன்றம்பிதானும்
வன்பெருஞ்சேனைகொண்டுமலைவதற்கவர்களஞ்சா
ரின்பெருநேயமிக்கவிவன்மொழிப்படியேமாயப்
புன்பெருஞ்சூதுகொண்டுபொருவதேபுந்தியென்றான். (உரு)

கோமகனெஞ்சுநாவுங்குளிர்ந்துபேருவகைகூர்ந்து
மாமனைத்தவிசின்கண்ணேவருதியென்றிருத்திக்கொண்டு
பாமருபனுவன்மாலைப்பாண்டவர்தம்மைநின்கைக்
காமருசூதால்வெல்லுங்கருத்தெனக்குரைத்தியென்றான். (உசா)

மன்னநின்செல்வக்கோயின்மண்டபமொன்றுதேவர்
பொன்னுலகினுக்குமில்லையென்பதோர்பொற்பிற்றுகப்
பன்னுநூற்சிற்பங்குன்றாப்பஃறொழில்வினைஞர்தம்மா
லன்னிலவிரிவுண்டாகநாளையேயியற்றுவிப்பாய். (உஎ)

மண்டபங்காணவெம்முன்வருகவென்றழைத்துவந்தாற்
கண்டுகண்களித்துமற்றக்காவலிருந்தபோதிற்
புண்டரவிசாலநெற்றிப்புரவலபொழுதுபோக
வண்டரும்விரும்பும்வன்சூதாடுதும்வருகவென்பேம். (உஅ)

அதிர்முரசுயர்த்தகோவுமையெனத்துணியும்பின்னை
மதிமருளியற்கைத்தாகுமாயவெஞ்சூதுதன்னால்
விதியெனப்பொருதுவாழ்வுமேதகுமரசுந்தங்கள்
பதிமுதற்பலவுந்தோற்கும்படிசெகுத்திடுவலென்றான். (உகூ)

---

* துப்புறழதரச்செவ்வாய் என்றும் பாடம்.

இன்னதேகருமமென்றென்றிளைஞரும்விழைந்துசொன்னா
ரன்னதேகருமமாகவவர்வழியொழுகுநீரான்
றன்னதேயாகுமிந்தத்தலமெனுங்கருத்தான்மாமன்
சொன்னதேதுணிந்துமார்புந்தோள்களும்பூரித்திட்டான். (௯௦)

வில்லினாலுயர்ந்தவென்றிவிதுரனைநோக்கிக்கொற்ற
மல்லினாலுயர்ந்தபொற்றோள்வலம்புரிமாலைவேந்தன்
வல்லினாலுபாயம்செய்யமாதுலனுரைத்ததெல்லாஞ்
சொல்லினானவனுங்கேட்டுச்சொல்லெதிர்சொல்லலுற்றான். (௯௧)

வையமுமரசும்வாழ்வும்வாங்குகைகருத்தேயாயிற்
பொய்யடர்சூதுகொண்டுபுன்மையிற்கவரவேண்டா
வையநின்றந்தையோலையைவருக்கெழுதிவிட்டான்
மெய்யுறமறுத்துச்சொல்லார்வேண்டினதருவரன்றே. (௯௨)

தந்தைதன்னேவலாலேதருமனுந்தம்பிமாரு
மிந்தமண்ணாடல்கைவிட்டெரிகெழுகானஞ்சேர்வர்
முந்துறநுமதேயாகுமுழுதும்வாழ்வெழுதுஞ்செம்பூட்
பைந்தொடையரசர்கேட்டாற்பாவமும்பழியுமாகா. (௯௩)

தீதினால்வரித்துநெஞ்சந்தீயவராடுமாயச்
சூதினால்வென்றுகொள்கைதோற்றமும்புகழுமன்று
போதினான்முகனுமாலும்புரிசடையவனுங்கேள்வி
யாதினான்மறையுமுள்ளவள்வுமிவ்வசையறாதே. (௯௪)

என்றவனுரைப்பக்கேட்டேயெரியெழுமனத்தனாகி
யொன்றியகேண்மைத்தந்தைக்கொருபுடைவாரமுண்டோ
வன்றிறன்மைந்தர்வாழ்வுவாங்கிபின்றெமக்குத்தந்தாற்
புன்றொழில்வசையேயன்றிப்புகழ்கொலோபுகல்வதம்மா. (௯௫)

நினக்கிதுதொழிலாலென்றுநேயமுமவர்கண்மேலே
யெனக்குயிர்த்தந்தைநீயென்றியானுனைமகிழ்ந்துகாண்ப
னுனக்குமுன்கிளைக்குநாளுமுண்டியும்வாழ்வுமிங்கே
மனக்கருத்தங்கேயென்றான்பாசுணத்துவசன்மாதோ. (௯௬)

மைந்தனங்குரைத்தமாற்றமனத்தினையிரப்பின்னும்
வெந்திறல்விதுரனுற்றுவிளம்புவனென்பமாதோ
புந்தியின்மறுவிலாதோய்புதல்வரிலொருசாரன்பு
தந்தையர்க்கில்லையென்றாயானுமத்தந்தையன்றோ. (௯௭)

நீங்களுமவருநேயநெறிமுறைதவறாதென்றும்
வாங்குநீருததியாடைமண்ணின்மேல்வாழ்தலுற்றாற்
பாங்கலாவரசரெல்லாம்பணிந்துநும்வாயினிற்ப
ரோங்கியபுகழும்வாழ்வுமொருப்படவளருமன்றே. (௯௮)

உங்களினவருநீருமுளம்பிரிந்தெதிர்த்தீராறைற்
றங்களினெதிர்ந்தாரம்மாகுருகுலத்தலைவரென்னுப்
பொங்களிநிகழுங்கஞ்சப்புரவலனெழிவுகண்ட
திங்களினுயர்ச்சிபோலத்தெவ்வருந்திகழ்வரன்றே. (ங௬)

ஆதலானுறுதிசொன்னேனுமுறைதெரிந்துகோடி
யேதிலார்போலயானுமினியுனக்கியாதுஞ்சொல்லேன்
றீதலாதுணராவஞ்சச்சிந்தையார்பரிந்துகூறுங்
கோதலாதுனக்கிங்கேலாதெனச்சிலகூறினனே. (௪௦)

நிறுத்தறம்வளர்ப்போனெஞ்சினீதியுங்*குரவரேவன்
மறுத்தெதிருரைக்குமென்பால்வடுவுநீவரைந்துகண்டாய்
செறுத்தவராவிகொள்வாயடியனேன்செய்ததெல்லாம்
பொறுத்தருளென்னக்கையாற்போற்றினன்முறுவல்செய்தான். (௪௧)

செழுந்திருவிரும்புமார்பன்செப்பியகொடுமைகேட்டு
விழுந்திரண்மாலைத்திண்டோள்விதுரனும்வெகுண்டுமுன்னித்
தொழுந்தகைமௌலிவேந்தன்சூழ்ச்சியிற்கிசைவுறுமெ
லெழுந்துதன்கோயில்புக்கானிகலரியேறுபோல்வான். (௪௨)

புரிவிலாமொழிவிதுரன்போகலும்புரிவிலொன்றுஞ்
சரிவிலாவஞ்சமாயச்சகுனியுந்தம்பிமாரும்
விரிவிலாமனத்தோடெண்ணும்விசாரமேவிசாரமாக
வரிவிலான்விரைவினீண்டோர்மண்டபஞ்சமைக்கவென்றான். (௪௩)

பெருந்தகையேவன்மாற்றம்பிற்படமுற்பட்டோடி
யிருந்ததொல்வேந்தர்தத்தமிருக்கைபினியன்றவெல்லா
மருந்திறன்மள்ளராலுமணிமணித்தேரினாலும்
பொருந்தவேகொணர்வித்தாங்கட்பொற்சுவரியற்றினரே. (௪௪)

சங்கையில்சிற்பநூன்னூற்றபதியர்தகவுகூரச்
செங்கையினமைத்தகோலச்சித்திரத்தூணநாட்டி
யங்கையிலருணரத்நத்தணிகொளுத்திரமுமேற்றிக்
கங்கையினுயர்ந்தமுத்தின்கற்றையான்முற்றும்வேய்ந்தார். (௪௫)

ஓவியஞ்சிறக்கத்தீட்டியொண்கொடிநிரைத்துச்செஞ்சொற்
காவியமாக்கட்கெல்லாங்கருத்துறுகவினிற்றாகி
வாவியபுரவித்திண்டேர்மன்னவனினைவுக்கேற்ப
வேவியவினைஞர்தம்மாலியல்புறச்சமைந்ததன்றே. (௪௬)

மன்னவைக்கானபைம்பொன்மண்டபஞ்சமைந்ததென்று
தன்னவைக்குரியோர்சொல்லச்சகுனியுந்தானுநோக்கிச்
சொன்னவைக்கேற்றதென்றுதொழுதகுதாதைதன்பான்
மின்னவைத்தொளிரும்வேலான்மேவினன்விளம்பலுற்றான். (௪௭)

---

* குரவன் சொல்லை என்றும் பாடம்.

அரும்பெறலையகேட்டியடியனேன்கருத்துமுற்றக்
கரும்புயறவழுஞ்சென்னிக்கதிர்மணிக்கூடமொன்று
பெரும்புகழ்நகரினீண்டுச்சமைத்தனன்பெருமைகாண
வரும்படிதூதொன்றேவுன்மைந்தரைவிரைவினென்றான். (சஅ)

மகன்மொழிநயந்துகேட்டுவாழ்வுறுதந்தைதானு
மிகநயந்துருகிநல்லவிரகினால்வெல்லலுற்றி
* ரகநெடும்போர்செய்தாலுமைவரையடர்க்கொணாது
சகுனியையன்றிவேறார்தரவல்லார்தரணியென்றான். (சகூ)

விழியிலாவென்றிவேந்தன்விதுரனையழைத்துநீபோய்
மொழியிலாருலகின்மற்றுன்மொழியினைமறுக்கவல்லார்
பழியிலாவிசைகொணீதிப்பாண்டவர்வந்துன்மைந்தர்
வழியிலாயொழுகும்வண்ணமருட்டிநீகொணர்தியென்றான். (ரு0)

தம்பியர்விழைவாற்கூடஞ்சமைத்தபேரழகுகாண
விம்பர்வந்தெமையுமெய்தியேகுகவிரைவினென்னப்
பைம்பொனினோலைமீதுபண்புறவெழுதியின்னே
யெம்பியுமேகுகென்றானேவலினவனும்போனான். (ருக)

காரெனக்களிறுசுற்றக்காற்றெனப்புரவியீண்டத்
தேரினுக்கொருவன்றன்னைச்சிலம்பெனத்தேர்கள்சூழ
வீரரிற்பலரும்போற்றவிதுரனுமிரண்டுநாளாற்
பாரினுக்குயிரேபோலும்பாண்டவர்நகரிசேர்ந்தான். (ருஉ)

வேறு.

புரியுமொண்கதிர்கவினுறுபொலிவினாற்பொன்னுலகாமென்ன
வரியபைம்பொனின்மணிகளினிறைந்தசீரளகைமாநகரென்னத்
தெரியுமன்புடனறங்குடியிருப்பதோர்தெய்வவான்பதியென்ன
விரியும்வெண்கொடிப்புரிசைசூழ்வளநகர்விழிகளித்திடக்கண்டான். (ருங)

ஊடெலாநறும்பொய்கைநீள்வாவியினுடம்பெலாமலர்பூவின்
றோடெலாமெழுசுரும்பினமதுகரச்சொல்லெலாஞ்செழுங்கீதம்
பாடெலாமிளஞ்சோலைமென்பொங்கரின்பணையெலாங்குயிலோசை
நாடெலாநெடும்புனல்வயல்கழனியினடுவெலாம்விளைசெந்நெல். (ருச)

அருகெலாமணிமண்டபமவிரொளியரங்கெலாஞ்சிலம்போசை
குருகெலாம்வளர்பழனமப்புள்ளெலாங்கூடலின்புறவூடன்
முருகெலாங்கமழ்துறையெலாந்தரளம்வெண்முத்தெலாநிலாவெள்ளம்
பருகெலாம்புனனதியெலாநீரெலாம்பங்கயப்பசுங்கானம். (ருரு)

ஆனகம்பலமுழங்கவந்தெதிர்பணிந்தாதுலர்க்கமுதன்ன
போனகம்பரிந்திடுநெடுஞ்சாலையேபுகுந்தமாமறுகெல்லாம்
வானகந்தனையமையுமென்றும்பருமண்ணின்மேல்வரவெண்ணு
ஞானகஞ்சுகனகரியையெங்ஙனேநாம்வியப்பதுமன்னோ. (ருசு)

---

* அகனெடும்போர் என்றும் பாடம்.

வந்தனன்சிலைவிதுரனென்றோடிமுன்வந்தவருரையாமுன்
றந்தைதன்றனிவரவறிந்திளைஞருந்தருமனுமெதிர்கொண்டார்
சிந்தையன்புடனெழுமுத்தொழுமைந்தரைச்செங்கையாற்றழீஇக்கொண்டே
யந்தணம்புலிகண்டபைங்கடலெனவவனுமெய்குளிர்ந்திட்டான். (ருஎ)

கொண்டுதந்தையைத்தாமும்வண்கொடிமதிற்கோபுரநெடுவீதி
யண்டராலயமெனத்தகுகோயில்சென்றடைந்தபினடல்வேந்தர்
வண்டுதாமரைமலரெனச்சுழலுமாமலரடிபணிந்தேத்தக்
கண்டுவாழ்வுடனவர்க்கருள்புரிந்துதன்கருத்தினால்விடையீந்தான். (ருஅ)

தானுமைந்தரோரைவருமொருபுடைதனித்திருந்துழிவண்டு
தேனுகர்ந்திசைமுரல்பசுந்தொடையலான்றிருத்தகமொழிகின்றான்
* கோனுவந்துதன்றிருமுகமெழுதிநீகொணர்கமைந்தரையென்ன
யானும்வந்தனனேவலாலழைத்ததற்கேதுவுமுளதன்றே. (ருகூ)

நீபுரிந்தநல்வேள்வியின்கடன்கழித்தியாவருநெடுமாடக்
கோபுரந்திகழ்மூதெயில்வளநகர்க்கோயில்புக்கனமாக
நூபுரந்திகழிணையடியரம்பையர்நோக்கருங்கவின்கொண்ட
மாபுரந்தரனிவனெனவிருந்தனன்வலம்புரிமலர்த்தாரான். (சுO)

தம்பிமாரொடுந்தகையிலாத்துன்மதிச்சகுனிதன்னொடுமெண்ணிக்
கும்பமாமணிநெடுமுடிநிரைத்தவண்கூடமொன்றமைக்கென்ன
வம்புராசிசூழ்மண்டலத்தரசெலாமடங்குபேரவைத்தாக
வும்பராலயங்கரெனச்சமைத்தனரொட்பநூலுணர்வுற்றோர். (சுக)

பெற்றதந்தையோடுள்ளுறுமுணர்வெலாம்பேசிமண்டபந்தன்னிற்
கொற்றவன்குடிபுகும்பொழுதுன்னையுங்கூட்டிமன்னவைமுன்னர்
மற்றமாதுலனெஞ்சமோவஞ்சமோமாயமோவகுத்தாங்குக்
கற்றசூதினினுடன்பொருநினைவினன்கருத்தினித்தெரியாதே. (சுஉ)

திருதராட்டிரன்றிருமுகமிதுவெனச்சென்றிறைஞ்சினன்வாங்கி
விரதமாக்கமென்றறிந்தறம்பேணுவான்விழைஞர்கைக்கொடுத்திட்டா
னிரதமாற்றமங்கெழுதியபடியினாலியம்பலுமதுகேட்டு
வரதனுற்பணிப்புறுதொழில்யாவர்நாமறுக்கவென்றுரைசெய்தான். (சுங)

மூத்ததாதைதன்னோலையுமிளையவன்மொழியுமொத்தமைநோக்கி
வார்த்தைவேறுமற்றொன்றையுமுரைத்திலன்மனுநெறிவழுவாதோன்
சேர்த்தநாகவெங்கொடியவன்கொடியவன்சிந்தையினிலைதோன்றக்
கோத்தகோவைநன்றியினுந்தருவதோகுருகுலந்தனக்கென்றான். (சுச)

அடியுமாண்மையும்வலிமையுஞ்சேனையுமழகும்வென்றியுந்தத்தங்
குடியுமானமுஞ்செல்வமும்பெருமையுங்குலமுமின்பமுந்தேசும்
படியுமாமறையொழுக்கமும்புகழுமுன்பயின்றகல்வியுஞ்சேர
மடியுமான்மதியுணர்ந்தவர்சூதின்மேல்வைப்பரோமனம்வையார். (சுரு)

* கோனுவன்று என்றும் பாடம்.

குழகராயிளமடந்தையர்க்குருகுவோர்குறிப்பிலாமையினாலும்
பழகுவார்மிகச்சிந்தைநோய்தாங்களேபடுக்குமாறுணராம
லழகுபேரறிவாகவேகொண்டவரறத்தொழில்புரியாமற்
கழகமாடவும்பெறுவரோவிதனினுங்கள்ளுணாலினிதன்றே. (சுசு)

மேதகத்தெரிஞானநூற்புலவரும்*வேத்துநூலறிந்தோரும்
பாதகத்திலொன்றென்னவேமுன்னமேபலபடப்பழித்திட்டார்
தீதகப்படுபுன்றொழிலினைஞரிற்சிந்தனைசிறிதின்றித்
தோதகத்துடனென்னையோசகுனிதன்சூதினுக்கெதிரென்றான். (சுஎ)

தன்கருத்தினினிகழ்ந்தவாறிம்முறைதருமன்மைந்தனுங்கூறி
யென்கருத்தினாற்பெறுவதென்விதியினையாவரேயெதிர்வெல்வார்
மன்கருத்தையுமவன்றிருவுளநிகர்மகன்கருத்தையுநோக்கி
நின்கருத்தைநீயுரையெனவிதுரனுநிகழ்ந்தனவுரைக்கின்றான். (சுஅ)

இங்குநீயெனக்கியம்பியயாவையும்யானுமன்னவர்கேட்ப
வங்குநீர்மையின்மொழிந்தனனென்மொழியார்கொலோமதிக்கிற்பார்
பொங்குநீருடைப்பூதலத்தலைவகேள்புனைந்தநின்னிதயத்துத்
தங்குநீர்மையிற்புரிகெனப்புதல்வனைத்தந்தையுந்தகச்சொன்னான். (சுகூ)

அன்றுதாழ்புனற்றுறையினிற்கழுநிரைத்தரியவஞ்சனைசெய்தான்
குன்றுபோலுயர்வாழ்மனைக்கொடுந்தழல்கொளுத்திவன்கொலைசூழ்ந்தான்
வென்றுசூதினில்யாவையுங்கவரவேவிரகினாலமைத்திட்டா
னென்றுதானமக்கன்புடைத்துணைவனாயிருந்ததவ்விகலோனே. (எ0)

முளையிலேயுயிர்கொல்வதோர்கடுவிடமுற்றிவன்காழேறி
விளையிலேதுசெய்யாதுமற்றவருடன்விழையுநண்பினிவேண்டா
வளையிலேதமேபுரிந்துமேன்மலைந்திடும்வன்படைகொடுமோதிக்
களையிலேநமக்கிருப்புளதென்றனன்காற்றருள்கூற்றன்னான். (எக)

தேறலார்தமைத்தேறலுந்தேறினர்த்தேறலாமையுமென்று
மாறலாருடன்மலைதலுமாறுடன்மருவிவாழ்தலுமுன்னே
யாறலாதனவரசருக்கென்றுகொண்டரசநீதியிற்சொன்னார்
கூறலாதனசொல்வதென்செல்வதென்கொடியவனருகென்றான். (எஉ)

விசையனிவ்வகைமொழிந்ததுமுந்துறுவீமன்மாற்றமுங்கேட்டே
யிசைபெறும்பெயர்நகுலனுந்தம்பியுமேகுதறகாதென்றார்
வசையறும்புகழ்த்துணைவரின்றுரைத்ததேவார்த்தையாயினும்பெற்ற
வசைவிலன்புடைத்தந்தைசொன்மறுப்பதோவென்றனனறஞ்செய்வான். (எங)

ஆவியார்நிலைபெறுபவர்நீதிகூறரியவான்புகழன்றிப்
பாவியானதங்கணுகுறுதொழியினும்பலித்திடுநினைவின்றி
மேவியாளுடையையன்வந்திருக்கமேல்வேரிவண்டெழுமன்றற்
காவியார்தொடைக்காவலனேவனாமறுப்பதுகடனன்றே. (எச)

* வேதநூலென்றும் பாடம்.

நாளையேகுதுமெந்தைவாழத்தினகர்க்கெனத்தருமன்றன்
காளையேவலின்முரசறைந்தெங்கணுங்காவலர்குழக்கொண்டார்
வேளையேறியவரும்படைத்தலைவருமேல்வரும்புனலூடு
வாளையேறுதண்பழனநாட்டெறிபடைமன்னரும்வந்துற்றார். (எரு)

மாதுரங்கமமணிநெடுந்தேர்மதவாரணம்வயவீரர்
சாதுரங்கமுந்தந்திரத்தலைவருந்தரணிமன்னருஞ்சூழ
மீதுரங்கவின்கெழுபெருஞ்சேனைசூழ்வேந்தன்மாநகருற்ற
போதுரங்கமுநெளிந்தனபஃறலை* பொறுமையினிருநான்கும். (எசு)

ஐந்துபூதமேநிகரெனப்புலன்களோரைந்துமேயெதிரென்ன
வைந்துகாவுமேபொருவெனப்பணிமுடியைந்துமேநேரென்ன
வைந்துவாளியேயுறழ்வெனவேள்வியோரைந்துமேயொப்பென்ன
வைந்துவாசமேதரமெனவைவருமைந்துதேர்மேல்கொண்டார். (எஎ)

விழியினெஞ்சின்வானெருப்பினீடுதழியின்விதிபடைப்பினிற்றோன்றிப்
பொழியும்வெண்கதிரைவகைமதியுமப்பொழுதுதித்தனவென்ன
மொழியுமைந்துபொற்றனிக்குடைநிழற்றினமுழுமதிவடிவின்க
ணிழியும்வெண்சுடர்க்கற்றையிற்சாமரமிரட்டினவிருபாலும். (எஅ)

மைத்திறத்தினின்றதிர்வனமுதிர்வனவரைத்திறத்தினுமோங்கு
மெய்த்திறத்தனவெழுதிறத்தினுமிகவிடுவனமததாரை
யெத்திறத்தினும்பொருதொழில்புரிவனவேழுறப்புறத்தாழ்ந்த
முத்திறத்தனவெண்ணலப்பிறப்பினமூரிவெங்களியானை. (எகூ)

வன்றபோதனரினுமிகுபொறையனவலனுயர்வனவெண்கோ
வென்றபோதகத்தானையின்பெருமையையெங்ஙனம்புகல்கிற்பா
நின்றபோதுடன்முகிலிடைமறைந்ததுநிரைநிரைநெறிப்பட்டுச்
சென்றபோதுவெம்படைக்கடற்செய்ததோர்சேதுபந்தனம்போலும். (அ௦)

சுற்றுநீளமுமுயரமுநிகர்ப்பனசுழியின்மிக்கனதீமை
யற்றுமேதகுநிறத்தனகவினுடையவயவத்தனவாகி
யெற்றுமாமணிமுரசமுஞ்சங்கமுமெனுங்குரன்மிகுத்திப்பார்
முற்றுமாதிரத்தளவுமைங்கதியினுன்முடிப்பனவிமைப்போதில். (அக)

ஆளினெஞ்சமும்வார்த்தையுஞ்செங்கையுமாசனத்தொடுதாளுங்
கோளிலின்புறக்குறிப்பனவெவற்றினுங்குறைகளற்றனவாகி
யாளிகுஞ்சரம்வானரமுதலியவியக்கினல்விசும்பெங்குந்
தூளிகொண்டிடமிடைந்துவந்தனநெடுந்துரகதம்பலகோடி. (அஉ)

வடிவுடைச்சிலகுரகதமரகதவண்ணமிக்கனவாகிப்
படியினிற்சிறிதமைவுறமிதித்திலபவனவெங்கதிபோல
முடிவிலிப்படிமிசைவரக்கருதியேமுனிவரனுயிர்க்கெல்லா
மடிபடைத்ததுபடைத்ததிங்கிவற்றினுக்கவயவங்குறையாமல். (அங)

---

* பொறுவினிதிருந்தாலும் என்றும் பாடம்.

நீடுமால்வரையடங்கலுநிலைபெறநிற்குமால்வரைமண்மே
லோடுமால்வரையிவையெனத்தனித்தனியூர்ந்ததேர்பலகோடி
நாடுமால்வரைகடல்வனமெனுநிலனுலுமேயொன்றாகக்
கூடுமால்வரையில்லெனப்பரந்தனர்கொடியவெம்படைவீரர். (அச)

அதிர்முழக்கினகருமுகிலேழுடையண்டர்கோனகல்வானுக்
கெதிர்முழக்கெனமுழங்கினதனித்தனியின்னியமிடந்தோறு
முதிர்முழக்கிபமவற்றினுமும்மடிமுழங்கினவவைதாமும்
பிதிர்முழக்கெனமுழங்கினவலம்புரியுரகரிற்பிழைத்தோர்யார். (அரு)

எடுத்தநீள்கொடியாடைவானகல்வெளியெங்கணுநெருங்கிக்கீழ்ப்
படுத்தவானமேவானமாமறைந்ததுமீதுறப்பகிரண்ட
மடுத்தபூநதிவானதிக்கிலதெனவன்புடனுபகாரங்
கொடுத்தமீனெனக்கால்பொரப்பரந்துபோய்க்குளித்தனகுளிர்தோயம். (அசு)

அழுந்தமேலிடுசேனையான்மிகவுநொந்தமரருக்குரைசெய்யச்
செழுந்தராதலமடந்தைபொன்னுலகிடைச்செல்லுகின்றதுபோன்மே
லெழுந்ததூளிகளிடைவிடாதெங்கணுமெழுந்தெழுந்தெதிரோடி
விழுந்ததூளியுந்தடித்தனநிலனுறவிசும்புறும்படிநின்றே. (அஎ)

முன்னர்மாருதமதலையுஞ்சேனையுமுடுகிவன்பொடுபோதப்
பின்னர்வாசவன்மதலையுந்தானையும்பெருந்தகவுடன்போத
வன்னராதிபரிருவருமிருபுறத்தரும்படையுடன்செல்ல
மன்னராதிபன்றூரகாகணத்திடைமதியெனப்புறப்பட்டான். (அஅ)

அங்கண்மாநிலத்தரசர்தம்மகளிர்பேரரும்பிடிமிசைபோதச்
செங்கண்மாமயில்யாகபத்தினியும்வண்சிவிகையின்மிசைபோத
வெங்கண்மாமணிமுரசுயர்த்தருளியமெய்தவாமொழிவேந்தன்
றங்கண்மாநகர்கடந்துவஞ்சாயையுந்தபனனுமெனச்சென்றான். (அகூ)

வேறு.

ஏவினபல்லியுமிடத்திலேவரத்
தாவினகுக்கிலுந்தருமன்றன்னெதிர்
வாவினநெடுங்கலைவரதநூல்வலோ
ரோவினருரைக்கவுமுணர்கலாமையால். (கூ0)

மடந்தையரளகமுமாந்தர்மாலையு
முடைந்துகுகடகரிமதமுமுன்னியே
தடந்தொறுமுரலளிதமரினண்புறத்
தொடர்ந்துடன்வரவரச்சோலையெய்தினார். (கூக)

சம்பகம்பாடலந்தமாலநாண்மலர்
வம்பெழுமிலைச்சுவார்வாவியாடுவார்
செம்பலவாமிரங்கதலித்தீங்கனி
யும்பரினமிழ்தெனவுடனருந்துவார். (கூஉ)

பச்சிளங்கமுகின்மென்பாளைசூடுவா
ரச்செழுங்காய்கனிகவர்ந்தருந்துவார்
கொச்சையங்கடைசியர்குழுமிவாழ்த்தவே
வச்சிரம்போல்பவர்மருதநீங்கினர். (௯௩)

தடாநிறைவெண்ணெயுந்தயிருங்கொண்டெதி
ரடாமுடைநாறுதோளாயர்கைதொழப்
படாமுதன்முல்லையின்பரிமளங்கொளாக்
கடாமலைவயவர்தண்கானமெய்தினர். (௯௪)

தேனினஞ்செறிதருதெரியல்வேலினன்
றுனீரங்கருண்மிகுதருமனுதலாற்
கானிலங்குறைதருகலைகளோடிள
மானினம்பேர்கலாமருங்குவைகுமால். (௯௫)

செருவிளங்காளையர்சேனையின்றிறம்
வெருவிளம்பொதுவியர்விழைந்துகாண்பபோன்
மருவிளங்கிதழிநீள்வனமுமாமலர்க்
கருவிளங்கண்கொடுகலந்துகண்டவே. (௯௬)

புழைநெடுந்தடக்கைவெம்போதகங்களை
மழைமுகிலெனக்களிமயில்களாடின
தழலெழுகானகந்தண்ணெனும்படி
செழுமதவருவியின்றிவலைவீசவே. (௯௭)

வனநெறிகடந்துபோய்மன்னவர்க்கெலாந்
தினகரனெனத்தகுசெய்யகோலின
னினமுகிறவழ்தலினிரங்குபேரிசைத்
தனிதவண்கிரிநெடுஞ்சாரலெய்தினன். (௯௮)

குன்றுறைகடகரிக்குழாங்கள்சேனையி
னொன்றியகளிறுகண்டுட்கியோடின
துன்றியபுறவிபச்சுவடுகண்டுடன்
சென்றிலவெகுண்டிவன்சேனையானையே. (௯௯)

வாளியின்வரும்பரிமாவின்வண்குரத்
தூளிகள்விசும்புறத்தூண்றியோங்கலா
லாளிகள்சிகரமென்றதிர்ந்துபாய்வன
மீளியர்வேலின்வாய்வீழ்ந்துமாய்ந்தவே. (௧௦௦)

கார்தவழ்கொடுமுடிக்கானமால்வரை
வார்தவழ்முலையரமாதரார்செவி
தார்தவழ்தடம்புயத்தரணிமன்னவர்
தேர்தவழோதையிற்செவிடுபட்டவால். (௧௦௧)

வரைநிலங்கழிந்தேறிமகரவாரிதித்
திரைநிலம்புகுந்தனன்சேனைசூழ்வரப்
புரைநிலங்கடந்தறம்புரியுநீர்மையா
னுரைநிலங்கடந்தசீருரைகொள்பேரினான். (க௦உ)

ஒளிநலந்திகழ்வளைபுறங்குநன்னிழற்
களிநறுஞ்சுரும்பிமிர்கண்டல்வேலிசூழ்
புளினமுங்கானலும்பொற்பநோக்கினா
னளினமும்புறந்தருநயனவேந்தனே. (க௦௩)

பெருங்கடமலைக்குலம்பெயர்த்தும்வந்தன
மருங்கடர்பேரணைவகுக்கவேயெனா
விருங்கடகளிறுதேரெண்ணில்சேனைகண்
டருங்கடல்வாய்திறந்தலறியார்த்ததே. (க௦௪)

நன்னெடுந்துறையெலாநாளிகேரமோ
டின்னெடும்பனங்கனியெடுத்தருந்தினார்
புன்னையின்புதுமலர்புனைந்துகைதையின்
மென்னிழல்வைகினார்விலாசவீரரே. (க௦௫)

நாநலம்புனல்கெழுநாடுங்கானமு
மேனலம்புனக்கிரியிடமுநெய்தலங்
கானலுமிவ்வகைகடந்துகாவலன்
றாநலந்திகழ்பதிதோன்றவெய்தினார். (க௦௬)

அத்தினபுரிதனக்கருகுவால்வளை
முத்தினநிலவெழுமுகைக்குந்தாமரைத்
தொத்தினபொய்கையுஞ்சுரும்பருமலர்க்
கொத்தினசோலையுங்குறுகிவைகினார். (க௦௭)

மொட்டினபருமணிமுடிகொடேர்ப்பரி
வெட்டினபரிகளும்வெம்மையாறின
மட்டினபரிமளமரங்கள்யாவையுங்
கட்டினகழைபொருகவளயானையே. (க௦௮)

தரித்தனர்வீரருங்கத்தமாதருஞ்
சரித்தனசும்மைகடங்குபண்டியும்
பரித்தனநன்னிறப்படங்குவீடுகள்
விரித்தனரிடந்தொறும்வேந்தரெய்தினார். (க௦௯)

கைவருதண்டுடைக்காளைவெஞ்சிலை
தைவருசெங்கையான்றுரைவெம்பரி
மெய்வருகுமரன்மேல்விடலைவேந்தனோ
டைவருமமர்ந்தனராண்மையேறனார். (கக௦)

மறத்திருந்தானையான்வஞ்சமெண்ணிஞ
னறத்திருந்திலனெனுவஞ்சியந்தவூர்
புறத்திருந்ததுவெனப்புனிதன்பாசறை
நிறத்திருந்ததுபிறநிகர்ப்பவில்லையே. (ககக)

மீண்டவர்வரிசிலைவிதுரனேவலாற்
பாண்டவர்வரவுமுன்பணிந்துகூறவே
மாண்டவர்குறிப்புறுமாயவஞ்சகம்
பூண்டவர்களித்துமெய்புளகமேறினர். (ககஉ)

தேசறையிடங்களுந்தேங்கொள்கானமு
மூசறைமதுகரமொய்த்தசோலையும்
வீசறல்வனநதிவிதமுமேல்கொளப்
பாசறையிருந்தவாபகரலாகுமோ. (ககங)

விருந்துறுசேனைவெவ்வீரரின்னமு
தருந்தினர்மெய்குளிர்ந்தசைவுதீர்தலும்
வருந்தினரிவர்துயில்வதியவேண்டுமென்
றிருந்தபனனுமிவர்க்கிரவுநல்கினன். (ககச)

மண்வளர்பெரும்புகழ்மன்னரைவரும்
பண்வளர்நல்லிசைப்பலமகீபரும்
கண்வளர்பாளையங்காணவெண்ணியே
விண்வளர்குபேரனும்விழைந்துதோன்றினன். (ககரு)

மருண்மிகுசுரும்பினமணந்தசோலைபி
னிருள்களினிடையிடையெறித்தவெண்ணிலா
வருளுடைமைந்தர்தோளணைந்தமங்கையர்
புரிகுழனெகிழ்ந்தவெண்போதுபோலுமே. (ககசு)

கானிடைசிலசிலகடிகொடேனுமிழ்
தூநிறமுல்லைகண்மலர்ந்துதோன்றுமால்
வானிடைமுறைமுறைவளருமாமதி
மேனியினமிழ்துமிழ்விந்துவென்னவே. (ககஎ)

பொருவில்வெண்டுகில்கொடுபொதிந்ததென்னவே
பரிநெடுந்தேர்மிசைப்பானிலாவெழக்
கிரணவெண்படைக்கெதிர்கெடாமனின்றபே
ரிருளெனவிளங்கினயானைவெள்ளமே. (ககஅ)

பரியனகந்துகப்பரிந்துமாமதக்
கரிசிலபாகையுங்கைகடந்தன
வரிவையர்பலர்துயிலனந்தலோடுதஞ்
சுரிகுழன்மேகலைசோரவோடினர். (ககக)

நீடுறுதருக்களினிரைத்தமாவதன்
கோடிறவெறிந்துகைக்கொள்ளுமோதையான்
மாடுறுபொங்கர்வாய்வதிந்தபுள்வெரீஇப்
பேடொடுசேவன்மெய்பிரிந்துநேடுமால். (கஉ0)

ஊதையின்பரனைசைவுறப்பொருவட
மோதுறுமுளையுடன்முடுகுவேட்டமாய்த்
தீதறுபரிசிலசெல்வன்பாசறை
மாதிரமுறப்பலவாளிபோதுமால். (கஉக)

ஆடுவர்சிலர்சிலரைவர்வான்புகழ்
பாடுவர்சிலர்சிலர்பாயலின்புறக்
கூடுவர்சிலர்சிலர்கோதைமாதரோ
டூடுவர்சிலர்சிலரோகைவிரரே. (கஉஉ)

பஞ்சவர்வாழ்வுறுபதம்பொருமையின்
வஞ்சகமியற்றுவான்மனங்கொலென்னவே
மிஞ்சியகுளிர்மதிமேற்பொருதிகற்
செஞ்சுடரவன்குணதிசையிற்றோன்றினான். (கஉங)

வேறு.

துயிலுணர்ந்துபைந்தொடையன்மார்பினான்
வெயிலெழுந்துதன்விரதமுற்றபின்
பயில்பெருஞ்சனம்பாசறைப்படுத்
தெயில்வளைந்தமாநகரியெய்தினான். (கஉச)

இருமருங்கினுமிளைஞர்நால்வருந்
தருமவல்லியுந்தானுமாகவே
யருமடங்கலேறனையவாண்மையான்
குரவனின்புறுங்கோயினண்ணினான். (கஉரு)

சிந்தையன்புறச்செல்வவாயிலோர்
வந்தமைந்தர்தம்வரவுகூறவே
முந்தையேவலான்மொழியவுள்புகுந்
தந்தமீளிசேவடிவணங்கினார். (கஉசு)

தம்பிமைந்தரைத்தழுவிநும்மையின்
றெம்பிகாணநல்வினையியன்றிலா
னும்பிமாரொடுமொத்துவாழ்கநீர்
நம்பியென்று*நன்னயம்விளம்பினான். (கஉஎ)

பாவைதன்செழும்பணிவுகூறலு
மேவிவாழ்கெனமெய்களிக்கவே
தேவிதன்னுழைச்செல்கவென்றுகொண்
டேவிமைந்தரோடிவைவிளம்பினான். (கஉஅ)

* தன்னயம் என்றும் பாடம்.

கருமநீதிசீர்கல்விமந்திரம்
பெருமையாண்மை * தாள்பீடுநீடுபேர்
தருமம்யாவுநுந்தன்மையாதலா
லருமையின்றியேயரசுசெல்லுமே. (கஉகூ)

இகலெறிந்துநீளிராயசூயமா
மகமுழந்ததும்வண்மைசெய்ததுந்
திகையடங்கலுந்திறைகொணர்ந்ததுந்
தொகுதிகொண்டநுந்துணைவர்கூறினர். (கஙഠ)

எண்டிசாமுகத்தெல்லையெங்கணுங்
கொண்டதாகுமுன்குருகுலத்துளோர்
துண்டியாமனுந்துணைவர்தம்மொடும்
பண்டுபோலமண்பரவவைகுவீர். (கஙக)

சேணிருந்துநுஞ்சீர்செவிப்படுத்
தியாணரன்புகூரினிமையன்றியே
பூணலம்பெறும்பொற்பொடுங்களைக்
காணுமாறுசெங்கண்படைத்திலேன். (கஙஉ)

நேயமுண்டுபோனெஞ்சொடின்னசொற்
றாயமைந்தரைச்சொல்லிநீவிர்போ
யாயையும்பணிந்தெந்தைதாண்மலர்ச்
சேயபங்கபஞ்சேர்மினென்னவே. (கஙங)

இருந்தமைந்தருமேவலோடுசென்
றருந்ததிக்குநேரன்னைதன்னையும்
பரிந்திறைஞ்சினர்பயிலவாழ்த்தினு
டிருந்துபூணினுள்சிறுவர்தம்மையே. (கஙச)

முந்தவந்துதாண்முளரிகைதொழு
மந்தண்வல்லியுமைவர்மைந்தரும்
வந்துநிற்றலுமகிழ்வொடுன்னினுள்
குந்திசெய்தவங்கூருமென்னவே. (கஙரு)

வேயைவென்றதோண்மின்னையங்குவைத்
தியாயையும்பணிந்தெழில்கொடோளினர்
போயகண்டமும்போற்றுகங்கையாள்
சேயையன்புடன்சென்றிறைஞ்சினர். (கஙசு)

வேந்தழைத்ததும்விதுரனேவலிற்
போந்தழைத்ததும்புகலவந்ததுந்
தாந்தழைக்கவேதந்தைதந்தைமுன்
றேந்தழைத்ததார்ச்செல்வர்கூறினர். (கஙஎ)

---

* நற்பீடுபேசருந், தருமம் என்றும் பாடம்.

புள்ளலங்கலார்புரிவுரைத்திடக்
கொள்ளைவன்றிறற்குருகுலேசனுங்
கள்ளவஞ்சர்வெங்கருவிசெய்பினு
முள்ளதுண்டெனுவுண்மைகூறினன். (கஙஅ)

தாதைதாதையைத்தாமகன்றுபின்
கோதைவெஞ்சிலைக்குருவைமைந்தனைக்
கீதநான்மறைக் * கிருபனைச்செழும்
பாதநஞ்செய்தார்பரிவொடேகியே. (கஙகூ)

சதுரமாமறைத்தலைவர்தங்களா
லெதிர்மொழிந்தபேராசியெய்தியே
மதுரமன்றனுண்மாலைமன்னரும்
விதுரன்மந்திரமீளமன்னினர். (கசo)

தமதின்மெய்யுறத்தம்மதாகவே
யமிழ்தருந்தியங்கவரிருந்தபின்
றிமிரநாசனன்செய்யமேனியன்
கமலநாயகன்கடலின்மூழ்கினன். (கசக)

தினகரன்கரந்திகழ்கமண்டலம்
பனிகொள்செக்கர்தம்படமதாகவே
யினியவன்றனைக்கெறியும்வேலைசேர்
புனிதரொத்ததப்புன்கண்மாலையே. (கசஉ)

காய்ந்தமெய்ச்செழுங்கதிரவன்கர
மேய்ந்தவப்பதத்தெழிலெறித்தலா
லாய்ந்துபத்திகொண்டடர்பசும்பொனல்
வேய்ந்ததொக்குமால்வேந்தன்மாடமே. (கசங)

மன்குலத்துளோர்வஞ்சகஞ்செயா
ரென்குலத்துளோரென்கொலீதெனத்
தன்குலத்துளோர்தமைவிலக்கவோ
நன்குலத்துளோனுதயநண்ணினன். (கசச)

குருகுலாதிபன்கொடியநெஞ்சமே
யிருணிறைந்ததென்றியாம்வெறுக்கவோ
மரபிலாதியாமதியுமெண்ணினுட்
கரியனென்னுமாகாணலானதே. (கசரு)

உண்ணிலாவுபேரொளிமழுங்குநீள்
வெண்ணிலாவினல்வெளுத்தவெங்கணுங்
கண்ணிலான்மகன்கடுமையஞ்சியிம்
மண்ணிலார்வெளாவடிவமெய்தினர். (கசசூ)

* கிருபநாமனை என்றும் பாடம்.

விந்தைவாழ்வுகூர்விறன்மிகுத்ததோண்
முந்தையோதைமாமுரசுயர்த்தவன்
சிந்தைகாமுறத்தெரிவைவந்திளந்
தந்தைகோயிலிற்றனுநண்ணினள். (கசஎ)

மங்குல்சுற்றுமாபண்டபத்திடைக்
கங்குலிற்றடங்கண்டுயின்றபின்
பொங்குலைப்பரிம்பொற்றசும்பெனச்
செங்குலக்கதிர்த்திகிரிதோன்றவே. (கசஅ)

பாயன்மன்னுகண்படையுணர்ந்துளந்
தூயவன்பொலஞ்சுடர்பணிந்தபின்
சாயையன்னதன்றம்பிமாரொடுஞ்
சீயமென்னவேதிகழவைநினன். (கசகூ)

முனிவரர்க்கெலாமுதன்மையாகவே
தனதனிற்பெருந்தானமுய்த்திடும்
பனுவல்வித்தகப்பாவலர்க்கெலாங்
கனமெனத்தருங்கனகமாரியே. (கருo)

கண்டுகண்டுதன்கழல்வணங்குமர்
மண்டலேசருமாலைமன்னருங்
கொண்டுவாழ்வுறக்குரகதங்குடை
தண்டுசாமரந்தந்திநல்குமே. (கருக)

பூந்தண்மாமலர்ப்பூவைகொங்கைதோ
யேந்துதோளினனிவணிருந்துழிப்
பாந்தளங்கொடிப்பார்மகீபனைச்
சேர்ந்தமன்னர்தஞ்செயல்விளம்புவாம். (கருஉ)

வேறு.

தானுமாமனுங்குறித்ததம்பிமாருமங்கர்தங்
கோனுமாசிறந்ததந்தைகொடுமரக்கைவிதுரனும்
வானுலாவுபுகழ்படைத்தமைந்தனுந்துரோணனு
மேனையோரும்வந்துகூடிபினிதிருந்தவெல்லையே. (கருங)

மண்டபத்தினழகுகாணமன்னரைவர்தம்மைநீ
கொண்டிடைப்பின்வருகவென்றுகொற்றவன்பணிக்கவே
வண்டுசுற்றுமாலைமார்பன்வண்பிராதிகாமிவா
னண்டர்கற்பமெனவிருந்தவரசர்தம்மையணுகினன். (கருச)

சென்றியாகபதிகழற்றிருப்பதம்பணிந்துகீழ்
நின்றுவாய்புதைத்தறங்கணிலைபெறுஞ்சொனீதியாய்
வென்றிவீரன்மண்டபத்தின்விரிவுகாணவேண்டுநீ
யென்றுகூறியேவினனிங்கென்னையென்றியம்பினன். (கருரு)

ராயசூயபன்னிதன்னையெந்தையில்லில்யாயொடும்
போயிருந்துவருகவென்றுபுரையிலாமனத்தினன்
சியமன்னதுணைவரோடுசென்றுபுக்குநன்றியில்
பேயிருந்ததெனவிருந்தபீடிலானையெய்தினன். (கருசு)

மன்னிருந்தபேரவைக்கண்வந்துமுந்தைவரிசையான்
முன்னிருந்ததாதைதவமிசமுதல்வன்ஞானவிதுரனென்
றின்னிருந்ததலைவர்தாளிறைஞ்சிமுன்னரிட்டதோர்
மின்னிருந்தவாசனத்தின்மீதிருந்துவினவினன். (கருஎ)

இந்தமண்டபஞ்சமைந்தவினிமைதன்னையென்சொல்வேன்
முந்தைமண்டபங்களுக்குமுதன்மையானதேவரு
ரந்தமண்டபத்துமில்லையதனையன்றிமண்ணின்மே
லெந்தமண்டபத்துமில்லையிதனினுள்ளவெழிலரோ. (கருஅ)

எனவியந்துதருமராசனினிதியம்பயாளிவெஞ்
சினவிலங்கலென்னுமாறுசேரவந்தவிளைஞரு
மனுவிளங்குமுறைமையான்வணங்கிமன்னர்மன்னன்முன்
றனதனங்கிருப்பதன்னதவிசின்மீதுவைகினர். (கருகூ)

புரைகொள்பாவமேநிறைந்துபுண்ணியங்குறைந்துநீ
ணரகினூழிகாலம்வாழ்தினர்வாழ்வினுள்ளதுந்
தரணிமீதுபெறுகவென்றுதந்ததொக்கும்வானுளோ
ரரவவேறுயர்த்தவீரனன்றிருந்தபெருமையே. (கசுO)

மாயமொன்றுமெண்ணலாமனத்தின்மிக்கமாமனு
நீயுமின்றுசூதுகொண்டுநிகழ்விலாசமயர்விரோ
வாயவென்றியையனில்லிலமுதமன்னபொனகம்
போயருந்துமளவுமிங்கிருந்துபோதுபோகவே. (கசுக)

மீதெடுத்தவஞ்சராகிவெகுளிசெய்தல்பிறர்பெருங்
கோதெடுத்துரைத்தனன்புகொண்டயிர்த்தல்கொடியவெஞ்
சூதெடுத்துவிழைதலுற்றசூள்பிழைத்தலின்னவே
தீதெடுத்தநூலின்முன்புதீயவென்றுசெப்பினர். (கசுஉ)

வாதுகொண்டுகாதல்கூருமாமனோடுவஞ்சனைச்
சூதுகொண்டுபொருதழிந்துதோல்வியெய்தவேண்டுமோ
தாதுகொண்டுதேனிரங்குதாமமார்பநெஞ்சினீ
ரேதுகொண்டதுநமக்களிப்பனிம்பரென்னவே. (கசுங)

ஒப்பிலாதவேள்விமன்னனுரையுணர்ந்துசகுனியுந்
தப்பிலாதகவறுருண்டதாயமெங்குமொக்குமால்
வைப்பிலாண்மையன்றிவேறுவஞ்சமில்லையுண்டெனச்
செப்பிலார்கொலிவனையாடவருகவென்றுசெப்புவார். (கசுச)

வேணுமாகில்வேணுமன்றிவிரகெனக்கழன்றுதா
ணுணுமாகில்விடுதியேநடக்கவென்றுநவிலுவீர்
பூணுமாகிலினிமையோடுபொருதுமற்றிருந்தநீர்
காணுமாறுநானுமின்றுகற்றவாறியற்றலாம். (கசரு)

நீடுகின்றதருமநீதிநிருபகேள்விழைந்துநா
மாடுகின்றசூதில்வெற்றியழிவுநம்மிலொக்குமால்
வாடுகின்றமிடியர்போலவஞ்சமென்றுரைத்துநீ
யோடுகின்றதொட்டுகின்றவொண்பொருட்குலோபியோ. (கசசு)

யானெறிந்தகவறுவெல்லினிசைவெனக்களித்திநீ
தானெறிந்தகவறுவெல்லினதினிரட்டிதருகுவேன்
றேனெறிந்துதேனுகர்ந்துதேனெடுக்குமாலையா
யானெறிந்தகொலைஞர்போலவஞ்சல்வருதியாடவே. (கசஎ)

என்றுமாமனுற்றுரைப்பவிவைதமக்கவ்வவையில்வே
றொன்றுமாறுரைத்திடாதுதிட்டிரன்னிருக்கவும்
வென்றுமாறடக்கும்வாகைவிசயனும்வெகுண்டுளங்
கன்றுமாறுரைத்தனன்கொல்கன்னனெனனுமன்னனே. (கசஅ)

போதுபோகுமாறிருந்துபொருதும்வருதியென்னவுஞ்
சூதுபோருமஞ்சியேதொலைந்துளந்துளங்குவாய்
மோதுபோரிலெங்ஙனுய்தியினிஞரோடுமுடுகுதேர்
மீதுபோயுன்னகரிதன்னின்விரைவினெய்துகென்னவே. (கசகூ)

இல்லெடுத்துவிரகினோடுமெமையழைத்துமாயைகூர்
வல்லெடுத்துவருதலான்மறுத்தனன்மகீபனுஞ்
சொல்லெடுத்துவைதவாய்துணிப்பனென்றுகன்னன்மேல்
வில்லெடுத்தனன்பொறுமல்வீரவாளிவிசயனே. (கள0)

ஏதிலாரினெம்பிநீயிருக்கவென்றிருத்திமுன்
காதிலாரென்னுடன்முனைந்துகண்விழிக்கவல்லபே
ரோதிலாண்மைகுன்றுமென்றுருத்தெழுந்துமாயநின்
சூதிலாடல்புரிதுமென்றுதருமனுந்தொடங்கினான். (களக)

நின்னைவெல்லினொட்டம்யாவுநீகொடுக்கநீயிவன்
றன்னைவெல்லின்யான்விரைந்துதருவனென்றுதருமனைப்
பின்னைவெல்லொணுதெனப்பிணிப்புடன்மருட்டினான்
மின்னைவெல்லும்வெய்யசோதிவேலிராசராசனே. (களஉ)

அவிர்பசும்பொன்மிளியாளியாசனத்திழிந்துபூந்
தவிசிலொன்றிடப்புகுந்துதருமன்வைகமாமனு
நவிரறுந்திசைப்புறத்துநன்னிலங்குறித்துநீள்
புவிபெருங்கருத்தினோடிருந்தனன்பொருந்தவே. (களங)

*கவளமானபணியின்யாளிகால்வகுத்தபலகையிற்
பவளமானநீலமானகருவிமுன்பரப்பினர்
தவளமானகவறுகைதரித்துமெய்தரித்ததார்
துவளமானநிருபர்தம்மிலாடவேதொடங்கினர். (களச)

ஈரம்வைத்தசிந்தைமன்னனிசைவெனக்கழுத்தின்முத்
தாரம்வைத்துநீயுமாறமைக்கவென்னமாமன்மேல்
வாரம்வைத்தநெஞ்சினனும்வருகவென்றுமாமணிச்
சாரம்வைத்தவலயமொன்றுதானுமுன்னர்வைக்கவே. (களரு)

இருவருங்கவற்றினைலெறிந்தபோதெறிந்தவா
றொருவருங்குறிக்கலாவுபாயமாயிருத்தலான்
மருவரும்புயத்தலங்கன்மாமன்வெல்லமன்னருள்
வெருவருங்களிற்றினனுமேல்விருப்பமிஞ்சினன். (களசு)

வைத்தவாரமவனெடுக்கமாயவன்கொடுத்தநன்
மெய்த்தவாததேர்குறித்துமீளவும்பரப்பினன்
மொய்த்தவாசமாலைமார்பின்முடிமகீபன்மகிழ்தரப்
பொய்த்தவாடல்வல்லமீளிபொருதுவென்றிபுனையவே. (களஎ)

தேர்கொடுத்தபின்னுமாறுசெப்பியுள்ளதேர்மதக்
கார்கொடுத்துமெண்ணிலாதகவனமாக்கொடுத்துமப்
பார்கொடுத்துமரசுகூர்பதங்கொடுத்துமுரியதம்
மூர்கொடுத்துமதனினுள்ள†மொழிவுறுமலோடவே. (களஅ)

வெங்கிராதவனமெரித்தவிசயனுக்குவிஞ்சைய
னங்கிராமகிழ்ந்தளித்தவாடன்மாவுமளகநீள்
பொங்கிராமணஞ்சிறந்தபோகமாதர்பலருமன்
றிங்கிராநரேசனுற்றவிசைவினைலளிக்கவே. (களகூ)

யாவையுங்கொடுத்திருப்பவிளைஞரோடுமெய்த்தவக்
கோவையுங்குறிக்கவென்றுகுருகுலேசன்மொழியவே
யீவையுங்குறித்துவெற்றியெய்தவெய்தவிவர்கடம்
வீவையுங்குறித்துவென்றமேன்மையான்விளம்புவான். (கஅ0)

உன்னையுங்குறித்துவன்புரைத்ததம்பிமாரினங்
தன்னையுங்குறித்திசைந்துதருகவந்துபொருகெனப்
பின்னையுங்குறிப்புறுதுபொருதுகைபிழைக்கமே
லென்னையுங்குறிப்பெனமுன்விரகினலியம்பினன். (கஅக)

மெய்வருந்திறத்தினும்மைவெல்லுமாறுவேறலா
லைவருந்திருந்தவெங்களடிமையின்னராயினீர்
மைவருந்தடங்கண்வேள்விமாதுதன்னையொட்டிநீ
கைவருங்கவற்றினின்னமெறிகவென்றுகூறினன். (கஅஉ)

---

* கவளயானைபணியில்யாளி என்றும் பாடம்.

† ஒழிவிலாமலொட்டவே என்றும் பாடம்.

அன்னபோதிலருள்விதுரனந்தனைப்புகன்றெழு
நின்னபோதமன்றிவேறுநிருபர்தாநினைப்பரோ
வின்னபோதுமோநமக்கியற்கையன்றிதென்றுநீ
சொன்னபோதுமேயமைந்தர்சொன்னசொன்மறுப்பரோ. (கஅரு)

திருகுநெஞ்சின்வஞ்சராகியிளைஞர்தீமைசெய்தகா
லுருகுகின்றதாதைநீயுடன்படுத்திருப்பதோ
மிருகமன்றுபறவையன்றிரக்கமின்றிமேவுநின்
னருகுவந்தணைந்ததெங்களறிவிலாமையாகுமே. (கஅச)

பின்பிறந்ததம்பிமைந்தர்பீடழிந்திரங்கவே
முன்பிறந்தமையன்மைந்தர்மொய்ம்பினலடர்ப்பரோ
வன்பிறந்ததேனுநீதியழியநீநடத்தினு
லென்பிறந்துமுடியுமண்ணிலெண்ணில்காலமின்னுமே. (கஅரு)

வருமமிஞ்சவிவனைவென்றவஞ்சமன்றிமற்றிவன்
றருமவஞ்சிதனையிசைந்துபொருதுமென்கைதருமமோ
கருமமன்றுனக்குநாசகாலம்வந்ததாகலிற்
பெருமதஞ்சமின்றிநெஞ்சுபேருமென்றுபேசினன். (கஅசு)

விதுரனைந்துநீதிகூறவிழியிலாமையன்றியே
*வெதிரனுங்கொலென்னுமாறுவிழியிலானும்வைகினன்
சதுர்புரிந்தசகுனிசொல்லையெதிர்புரிந்துதருமனு
மதிரவஞ்சமுதிரவந்தவருளிலானொடாடினன். (கஅஎ)

காயமுற்றும்வஞ்சமேகலந்ததன்னகள்வன்மே
னேயமுற்றுநின்றுதானுநிகர்பிடித்ததென்னவே
மாயமுற்றகவறுமந்தமாமன்வல்லபத்திலே
தாயமுற்றிடங்கொடாதுதருமனைச்சதித்ததே. (கஅஅ)

இன்னதாயம்வேண்டுமென்றெறிந்தபோதுமற்றவன்
சொன்னதாயமேபுரண்டுசோர்விலாமல்வருதலிற்
றன்னதாயவரசுவாழ்வுதரணிமன்னனல்கினு
னன்னதாயபோதுநெஞ்சசைந்திலானசஞ்சலன். (கஅகூ)

வேறு.

முரசினையுயர்த்தகோமான்மொழிந்தனமுழுதுந்தோற்றுப்
பரசுவதொன்றுமில்லாப்பான்மையோடிருந்தகாலை
விரைசெறியலங்கல்சோரமெய்குலைந்துள்ளம்வெம்பி
யரசவையிருந்தோர்தம்மிலருளினலழிந்துநொந்தார். (ககூ0)

குருமரபுடையவேந்தன்கொடியனேகொடியனென்பார்
மருமகனுயிருக்கிந்தமாமனேமறலியென்பார்
தருமனித்தனைநாட்செய்ததருமமும்பொய்யோவென்பா
ருருமினுங்கொடியவீமனுருத்தினியெழுமோவென்பார். (ககூக)

---

* பெதிரனுங்கொலென்னுமாறுபெரியதாதைவைகினன் என்று ஏட்டுப்பிரதிகளி லிருக்கிறது.

பாந்தளேறுபர்த்தவேந்தன்பார்த்திலனுறவுமென்பார்
மாய்ந்தவேயறமுந்தேசுமனுநெறிவழக்குமென்பார்
பூந்தழற்பிறந்தபாவைபுண்ணியம்பொய்யாதென்பார்
சேந்தனனிருகண்பாரீர்தேவர்கோன்மதலையென்பார். (ககூ௨)

பழியுடைத்தந்தையொன்றும்பகர்கலாதிருக்குமென்பார்
விழியுடையவரையன்றேமேன்மையோர்வெறுப்பதென்பா
ரழியுமேயிவனுன்மைந்தரரும்பெருஞ்செல்வமென்பார்
வழிவழியாகநிற்கும்வசையிவன்புரிந்ததென்பார். (ககூ௩)

இன்னனதரணிவேந்தரிருந்துழியிருந்துகூற
மன்னனுந்தம்பிதானுமாமனுமாறுவண்மைக்
கன்னனுந்தம்மினெண்ணிக்கங்கைமாமகனைநோக்கிப்
பன்னகதுவசன்கேட்டோர்பலருமெய்ப்பனிக்கச்சொல்வான். (ககூ௪)

தண்ணியதருமன்செய்தபாவமோசகுனிசெய்த
புண்ணியநெறியோவந்தப்பொதுமகள்யாகசாலை
நண்ணியதவறேமற்றைநால்வருந்தகைமைகூர
வெண்ணியமதியோவெண்ணினிங்ஙனம்விளைந்ததென்றான். (ககூ௫)

தகாமொழிதலைவன்கூறத்தவத்தினுலுயர்ந்தகோவு
நகாமரபியற்கையன்றுநம்மினும்புன்மைகூறன்
மிகாதினிநிகழ்ந்தசெற்றம்விடுகெனச்செவியிற்சற்றும்
புகாதுளம்வெகுளிகூரப்புரிந்தனன்போதமில்லான். (ககூ௬)

இரங்கினன்றுருகுநெஞ்சினிளையதன்பிதாவைநோக்கி
யரங்கடிசமரவேலானழல்பொழியுருமிற்சொல்வா
னுரங்குடியிருந்ததோளானுரிமையினெமக்குத்தோற்ற
துரங்கமுங்களிறுந்தேருந்துறைதுறைகவரச்சொற்றி. (ககூ௭)

தொல்லைமாநகருநாடுந்தோரணநாட்டச்சொற்றி
யெல்லையினிதிகளெல்லாமிம்பரேயெடுக்கச்சொற்றி
நல்லெழின்மடவார்தம்மைநம்பதியெய்தச்சொற்றி
சொல்லியவினைஞர்தாமுந்தொண்டினராகச்சொற்றி. (ககூ௮)

இவர்தமக்குரியளாகியாகபத்தினியுமான
துவரிதழ்த்தவளமூரற்சுரிகுழறன்னையின்னே
யுவரலைப்புணரியாடையுலகுடைவேந்தர்காணக்
கவர்தரப்புகறியென்றான்கண்ணருள்சிறிதுமில்லான். (ககூ௯)

அறந்தருமைமந்தன்றன்னையறனலாதியற்றிநம்பி
திறந்தருசெல்வம்யாவுந்தீமையிற்கவர்தலுற்றாய்
மறந்தருவலியுமன்றுமணந்தருவாழ்வுமன்று
நிறந்தருபுகழுமன்றுநெறிதருமதியுமன்று. (௨00)

திருத்தகமொழிந்தவெல்லாஞ்செய்தனையெனினுஞ்செவ்வி
மருத்தகுதெரியன்மாலைமாசிலாமன்னர்முன்ன
ருருத்தகுகற்பினாளையுரையலாதுரைக்குமாற்றங்
கருத்தினினினையல்கண்டாய்கடவுளர்சுற்பவ்வாழ்வாய். (உ0க)

விண்ணிலங்கருகித்தோன்றுமேதகுவடமீனன்றி
மண்ணிலங்குவமைசொல்லமடந்தையர்யாருமில்லாப்
பண்ணலங்கடந்தமென்சொற்பாவையைப்பழிக்கநீயின்
றெண்ணின்முன்கேட்டவார்த்தைக்கேற்றதுன்னெண்ணமென்றான். (உ0உ)

கேட்டசொல்வினவுநாககேதனன்கேட்பமீண்டும்
வாட்டமிலன்பினோடுமனங்கனிந்துருகிவீழ
நாட்டமுநன்னீர்மல்கநாவமிழ்தூறப்பின்னுங்
கோட்டமில்சிந்தையானுங்குரிசிலுக்குரைக்கலுற்றான். (உ0௩)

தானவராகியும்மைத்தனித்தனியிறந்தோர்யாரு
மானவராகியிம்மைவந்தனரிம்பரென்றே
தானவர்பொறைபொறுமற்றராதலமென்னுஞ்செங்கண்
மானவராகவேதமலர்முனிதனக்குச்சொன்னாள். (உ0௪)

நான்முகன்றானுமேனைநாகருநாகர்கோனும்
பான்முகந்தெறியும்வேலைப்பாம்பணைப்பள்ளிகொள்ளுந்
தேன்முகங்களிக்கும்பச்சைச்செவ்விவண்டுளபமாலை
மான்முகங்கண்டுகூறவந்தவாமாலுங்கேட்டான். (உ0௫)

மின்னிடைவிளங்குமேகமேனியானவனிமானை
நின்னிடைவந்துதோன்றுகிருபரானவரையெல்லா
முன்னிடைகடையொன்றின்றிமுற்றும்வெம்முரண்கொள்காலன்
றன்னிடைவிடுதுமென்றுசாற்றியேதளர்வுதீர்த்தான். (உ0௬)

அந்தவன்றிகிரியானுநம்மிலோரரசனாகி
வந்தவதரித்தானென்றுமண்ணெலாம்வார்த்தையான
தெந்தவல்வினையாலெவ்வாறெய்துமென்றிதற்கேசால
நொந்துகண்டுயில்பெறாதேநோதகப்புரிந்தேன்மன்னோ. (உ0௭)

ஒருதிறத்தவனிமுற்றுமொருமையாற்புரக்குநீவி
ரிருதிறத்தவருநும்மிலிகலுறுமனத்திராணல்
வருதிறத்தானைவேந்தர்வகைபடக்குழக்கொண்டோடிப்
பொருதிறப்பதற்கேசுற்றும்புரிவிலீர்புரிகின்றீரே. (உ0௮)

என்றவனுரைப்பத்தானுமெறிந்துகைநகைகொண்டாடி
யன்றவனிதயம்வெம்பவவமதிபலவுங்கூறி
நின்றவனொருவன்றன்னைநீநனிவிரைவினோடிச்
சென்றவணிருந்தகோலத்தெரிவையைக்கொணர்தியென்றான். (உ0௯)

பெருந்தகையேவலோடும்பிராதிகாமியுமங்கேகி
வருந்தியமனத்தனாகிமாசறுமரபின்வல்லி
யிருந்துழியெய் துறுமலிடைவழிநின்றுமீள
விரைந்தனனோடிவந்துவேந்தனுக்கேற்பச்சொன்னான். (௨௧௦)

வேறு.

என்னைத்தோற்றுமனுநெறிகூரிசையோன்றன்னைத்தோற்றனனோ
தன்னைத்தோற்றுத்தனதுமனத்தளர்வாலென்னைத்தோற்றனனோ
முன்னைத்*தோற்றதோற்றபொருண்முற்றுங்கவருமுறையன்றிப்
பின்னைத்தோற்றபொருள்கவரப்பெறுமோநினைக்கப்பெறாதென்றாள். (௨௧௧)

செல்வப்பாவைதிருவுள்ளமிதுவென்றந்தத்தேர்ப்பாகன்
சொல்லப்பாவிதரியாமற்றுச்சாதனனைமுகநோக்கி
யல்லற்பான்மைபெற்றழிந்தவைவர்க்கொருத்தியாகியவம்
மல்லற்பானல்விழியாளைமன்பேரவையினழையென்றான். (௨௧௨)

நோன்றாள்வெங்கட்கடகளிற்றுநுழைவேலரசனுவறலுமே
யான்றார்கேட்கிற்செவிபுதைக்குமழல்கால்வெஞ்சொலறனில்லான்
றோன்றாநயனத்துணைவனைப்போற்றுணைக்கண்டுகிலிற்சூழ்ந்திருந்த
வீன்றாளில்லத்திருந்தாளையிகலோடெய்தியிவைசொல்வான். (௨௧௩)

தானேசூதுபொருதழிந்துதலைவன்றனக்குன்பதியான
கோனேசொல்லியாணையுமுன்கொடுத்தான்கொடுத்தபின்னிசைவு
யானேயென்றும்விமன்முதலினையோரென்றுமென்வேள்வி
மானேயென்றுங்குறித்திழந்தான்வழக்கால்வென்றோம்வருவாயே. (௨௧௪)

பொன்னைச்சிரிக்கும்பூங்கோயிற்புனல்வாவியிலென்றெங்கள்குல
மன்னைச்சிரித்தசெங்கனிவாய்பாருதிரங்கியழுதரற்ற
மின்னைச்சிரிக்குநுண்ணிடையாய்வேந்தர்க்கெதிருன்மெய்க்கணவன்
றன்னைச்சிரிக்கவிருக்கின்றசளநீகாணிற்றரியாயே. (௨௧௫)

தலத்துக்கியையாதைவரையுந்தழுவித்தழுவித்தனித்தனியே
நலத்துப்பொய்யேமெய்போலநடிக்குஞ்செவ்விநலனுடையாய்
குலத்திற்பிறந்தாயாமாகிற்கூசாதென்பின்போதுகெனப்
பெலத்திற்செங்கைமலர்தீண்டிப்பிடித்தான்சூழ்ச்சிமுடித்தானே. (௨௧௬)

†சிலைவாயங்கையவன்றீண்டச்செல்லாளாகியல்லலுழந்
துலைவாயழல்போனெடிதுயிராவுள்ளந்தளராவுடனடுங்காக்
கொலைவாயெயினர்கொல்லுகிலங்குறித்துச்செறித்தகொடியநெடு
வலைவாயொருதானகப்பட்டமான்போன்மாமிமருங்குற்றாள். (௨௧௭)

---

* தோற்றுத்தோற்ற என்றும், தோற்றபொருண்முற்றுங் கவரு முறையே முறை யன்றி என்றும் பாடம்.

† சிலைவாயணங்கை யென்றும் பாடம்.

பூவார்குழலி தளர்வொடு தன்புறஞ்சேர்பொழுதுஞ்சிறிதிரங்கா
ணீவாவென்றேயருகிருத்தி நெடுங்கண்பொழியுநீர் துடையாண்
மேவாரல்லர் தமரழைத்தான் மேலுன்கருத்துவிளம்பிவரப்
பாவாயஞ்சாதேகென்றாள் பலபாதகரைப்பயந்தாளே. (உகஅ)

தண்டார்விடலை தாயுரைப்பத் தாய்முன்னனுகித்தாமரைக்கைச்
செண்டாலவள்பைங்குழல்பற்றித் தீண்டானாகிச்செல்கின்றான்
வண்டார்குழலுமுடன்குலையமானங்குலையமனங்குலையக்
கொண்டாரிருப்பரென்றுநெறிக்கொண்டாளந்தோகொடியாளே. (உககூ)

சூழுங்கனல்வாயுருமன்றித் துளிவாய்முகிலுமகிதலத்து
வீழுங்கொல்லோவுற்பாதம்விரவிற்றென்றேவெரூஉக்கொள்ளத்
தாழும்பெரியகரியகுழறாரோடலையத்தழீஇக்கொண்டு
வாழுஞ்சுரும்புசுழன்றரற்றமண்மேலிழுத்துவருகின்றான். (உஉ0)

தழலோவென்னுங்கற்புடையதனிநாயகிதன்றாமநறுங்
குழலோவுரகக்கொடிவேந்தன்குலமோகுலைந்ததிவணென்பார்
நிழலோபுவிக்குநெருப்பன்றோநெறியொன்றில்லாநீடுபொலங்
கழலோன்மதிவெண்குடையென்பார்கையாற்கண்டகண்புடைப்பார். (உஉக)

காட்டுந்திறல்வெஞ்சிலைவிசயன்கையால்வகிர்ந்துகடிகொண்மலர்
சூட்டும்பனிச்சையிவண்புழுதித்துகளேறியதென்றழுதுழைவார்
மீட்டுந்தடாமலேகென்றுவிட்டாண்மைந்தரிட்டவினை
கேட்டுங்கொடியள்காந்தாரிகிளையோடின்றேகெடுமென்பார். (உஉஉ)

இரும்போநெஞ்சமாமனிதற்கிசைந்தானொக்கவிருந்தென்பார்
பெரும்போரரசர்பெண்ணுடனேபிறந்துஞ்சீறப்பெறாரென்பார்
பொரும்போர்வீமன்பொறுத்தாலும்பொற்றேர்விசயன்பொறானென்பா
ரரும்போரரசர்தகாதென்றால்வருமோவிந்தவழிவென்பார். (உஉங)

என்னேகுடியிற்பிறந்தாருக்கிருப்பன்றிவ்வூரினியென்பார்
முன்னேயோடிமுறையிட்டான்முனியுங்கொல்லோவெமையென்பார்
பின்னேயிரங்கியழுதழுதுபேதுற்றின்னல்பெரிதுழப்பா
ரன்னேதுன்பங்களைந்தின்பமாவாயென்றேயருள்புரிவார். (உஉச)

பறைவன்களிற்றுப்பல்புரவிப்பைம்பொற்றடந்தேர்ப்பாஞ்சாலர்க்
கிறைவன்பாவையாங்காணவிவையோபடுவதென்றுரைப்பார்
பொறைவண்சிந்தைத்தருமனுக்குப்பொய்ச்சூதறிந்தும்பொரவென்ன
குறைவந்ததுதன்விதிவலியாற்குறைந்தான்யாவுங்கொடுத்தென்பார். (உஉரு)

நெடுமாநகரிற்சனமனைத்துநேயம்பெறக்கண்டிவைகூற
வடுமாமரபிற்குறத்தேடுமன்பேரவையின்முன்புக்காள்
கொடுமாமலர்க்கண்புனல்சோரக்குலைந்தேகிடந்தகுழல்சோரத்
தடுமாறுள்ளந்தினிசோரத்தலைநாளுளித்ததழல்போல்வாள். (உஉசா)

நாணேமுதலாநாற்குணனுநண்ணுங்கற்புநயந்தணிந்த
பூணேயணையாளழுதரற்றிப்புன்பேரவையிற்புகுஞ்சோகங்
காணேமென்றுநிலனோக்கிக்கதிர்வேனிருபரிருந்திரங்கக்
கோணேநேர்பாடாயிருந்தான்குருடென்றுரைக்குங்கொடியோனே. (௨௨௭)

மேகங்குருதிபொழிந்தகல்வான்மீனும்பகலேமிகவிளங்கிப்
பூகம்பமுமுற்றுற்பாதம்போதியாவும்புரிந்தனவா
னாகம்புனைபொற்றுவசனுடனவிலாநின்றநால்வருமே
சோகம்பிறவாதிருந்தார்மற்றொழிந்தார்யாருஞ்சோகித்தார். (௨௨௮)

வீமன்கதைமேற்கைவைக்கவிசயன்சிலைமேல்விழிவைக்கத்
தாமம்புனைதோளிளையோருந்தத்தங்கருத்திற்சினமூட்டத்
தூமம்படுசெந்தழலவியச்சோனைமேகஞ்சொரிவதுபோ
னாமந்தருமனெனத்தக்கோனிளையோராறநவிலுற்றான். (௨௨௯)

தேம்போதனைத்துமெய்சாயுஞ்சிலபோதலருஞ்சிலபோது
வேம்போதங்குவாழ்வவெலாம்வெங்கானுடனேவேவாவோ
வாம்போதாகுமதுவன்றியாயபொருள்களம்முறையே
போம்போதனைத்தும்போமுன்னம்பொறுத்தீரின்னம்பொறுமென்றான். (௨௩௰)

வாருங்கண்ணீர்வளர்கொங்கைவரைமேலருவியெனவீழத்
தாருங்குழலுமின்னுடனேதலஞ்சேர்கொண்டலெனவீழக்
கூருந்துயரினுடன்வீழ்ந்துகோகோவென்றுகோச்சபையிற்
சோருங்கொடியைமுகனோக்கித்துச்சாதனன்மெய்சுடச்சொன்னான். (௨௩௧)

மன்வந்திருந்தசங்கத்துன்மாமனிருந்தானைவருமுன்
முன்வந்திருந்தார்முன்கொண்டமுறையான்முயங்குமுடிவேந்தர்
மின்வந்தனையநுண்ணிடையாய்விழிநீர்சொரிந்துமெலியவுனக்
கென்வந்ததுகொல்பொதுமகளிர்க்கரிதோவிழிநீரெளிதென்றான். (௨௩௨)

பொல்லாவசையேபுகழ்பூணாப்புல்லன்புகலவிதற்கொன்றுஞ்
சொல்லாதிருந்தபேரவையைத்தொழுதாளழுதாள்சோர்வுற்றாண்
மல்லார்திண்டோண்மாமாவோமந்தாகினியாண்மதலாயோ
வெல்லாநெறியுமுணர்ந்தவருக்கிதுவோமண்ணிலியல்பென்றாள். (௨௩௩)

இன்னற்படுஞ்சொற்பாஞ்சாலியிரக்கந்தனைக்கண்டிரக்கமுறு
மன்னற்கிளையோய்தவறுரைத்தல்வழக்கோவடமீனனையாளை
யென்னக்கழறிநீயுரைத்தவெல்லாமரசற்கியம்பென்றான்
முன்னர்ப்புகலுங்குருகுலத்தோர்முதலாம்வாய்மைமொழியோனே. (௨௩௪)

மன்றோற்றனன்வெஞ்சூதாகில்வழக்காற்கொண்மின்மன்னவையின்
முன்றோற்றனனோவென்னையுந்தான்முன்னேயிசைந்துதனைத்தோற்ற
பின்றோற்றனனோகரியாகப்பெரியோருண்மைபேசுகென
மின்றோற்றனையநுண்ணிடையாள்விழிநீர்வெள்ளமிசைவீழ்ந்தாள். (௨௩௫)

மையோடரிக்கண்மழைபொழியவாடுங்கொடியின்மொழிக்காகார்
வெய்யோனெண்ணந்தனக்காகார்விறல்வேல்வேந்தர்வெரூஉக்கொண்டு
பொய்யோவன்றுமெய்யாகப்புனையோவியம்போலிருந்தாரை
ஐயோவந்தக்கொடுமையையாமுரைக்கும்பொழுதைக்கதிபாவம். (௨௩௬)

அல்லார்கூந்தல்விரித்தமயிலனையாளரற்றவதற்கொன்றுஞ்
சொல்லாதூமர்கணம்போலத்தொல்போர்வேந்தர்சூழ்ந்திருப்ப
மல்லார்தடந்தோள்விகருணனும்வாய்மைக்கடவுள்வாள்வேந்தீர்
பொல்லாநெறியிலனைவிரும்போகாவண்ணம்புகல்வீரே. (௨௩௭)

முறையோவென்றென்றவனிதலமுழுதுமுடையான்முடித்தேவி
நிறையோடழிந்துவினவவுநீர் * நினைவுற்றிருந்தீர்நினைவற்றோ
விறையோன்முனியுமெனநினைந்தோவிருந்தானுறுதியெடுத்தியம்பல்
குறையோகண்கண்டதுநாளுங்குலத்துப்பிறந்தோர்கூறுரோ. (௨௩௮)

தன்னேரில்லாநெறித்தருமன்றனைவென்றுரைக்கத்தக்கவெலா
முன்னேதோற்றுத்தங்களையுமுறையேதோற்றுமுடிவுற்றான்
† சொன்னேருரைக்குத்தான்பிறர்க்குத்தொண்டாய்விட்டுச்சுரிகுழலைப்
பின்னேதோற்கவுரிமையினாற் ‡ பெறுமோவென்றுபேசீரோ. (௨௩௯)

என்னுமன்னர்முகநோக்கியெல்லாரிதயங்களுமகிழச்
சொன்னானெவருந்தக்கோனென்றவனுக்கொருபேர்சூட்டினர்பி
னன்னுமனத்தோடழன்மூளநயனஞ்சிவக்கநஞ்சின்வடி
வன்னானிளவன்முகநோக்கியருக்கன்குமரனறைகின்றான். (௨௪௦)

வேறு.

இருக்கின்றதரணிபரினின்னறிவானுயர்ந்தனையோவிராசநீதி
குருக்கொண்டுமுதிர்ந்தனையோநினையொழிந்தால்வழக்கொருவர்குறிப்பாரற்றோ
மருக்கொண்டதொடைமுடியாய்மொழிகெனநின்னுடன்கேட்கவந்தாருண்டோ
வுரைக்கும்போ$தெவருடனுமுணர்ந்தன்றோவுரைப்பதெனவுருத்தான்மன்னோ. ()

தான்படைத்தபொருளனைத்துந் § தம்பியர்களுடன்றோற்றுத்தனையுந்தோற்றான்
மீன்படைத்தமதிமுகத்தாளிவன்படைத்ததனமன்றிவேறேகொல்லோ
வான்படைத்தநெடும்புரிசைமாநகருந்தனதில்லும்வழங்குமாயின்
யான்படைத்தமொழியன்றேயெங்கணுமில்லெனப்பட்டாளில்லாளன்றோ. (௨௪௨)

மைக்கோதில்கலையுடையன்மதியுடையன்பொறையுடையன்வரிசையாகத்
தக்கோனென்றரசரெலாமுரைத்தபெயரிவன்றனக்கேதக்கதம்மா
மிக்கோர்மற்றுங்களைப்போல்வேறுண்டோமகிதலத்துவேந்தராகித்
தொக்கோர்யானுவன்றமொழிக்கெதிர்மொழியுண்டாபாகிற்சொல்லுவீரே. (௨௪௩)

---

* நினைவற்றிருந்தீர் நிறைவற்றோ என்றும் பாடம்.

† சொன்னேருரைக்கிற்றான்பிறர்க்குத் தொண்டாய்விட்டுஞ் சுரிகுழலை என்றும், ‡ பெறுமோவொன்றும் பேசீரோ என்றும் பாடம்.

$ எவ்வுரையு முணர்ந்தன்றோ என்றும் பாடம்.

§ தம்பியர்களுடனேயத்தருமன்றோற்றான் என்றும் பாடம்.

என்னவெகுண்டிடுகின்றவெல்லைதனிலெழுவுறழ்தோளிராசராசன்
றன்னையகொடுங்கோபத்தம்பியையின்றும்பிதனைத்தக்கோனென்ற
மன்னவையினெதிரேயிம்மானமிலாவைவரையும்வழக்குவார்த்தை
சொன்னகிளிமொழியினையுந்துகிலுரிதியெனவுருமிற்சொன்னான்மன்னே. (உ௪௪)

இத்தகவின்மொழிசெவியினெரிவாளியெனமூழ்கவிருந்தவேந்தர்
தத்தமனமடிந்துருகத்தருமன்மதிமுகநோக்கித்தம்பினோக்கி
வித்தகவெங்கதைநோக்கவிறல்விடன்விசயனுந்தன்வில்லைநோக்க
வொத்தமனனுடையினையோ * ருருப்பமடக்கினனுண்மைக்குறுதிபோல்வான். ()

தருகதுகிலெனவெழுந்துதங்களைவன்பொடுதுச்சாதனன்சொலாமுன்
வருகவெனவரைமார்பின்வாங்காதவுத்தரியம்வாங்கியீந்தா
ரருகணுகிமடவரலையஞ்சாமற்றுகிலுரிவானமைந்தபோதி
லிருகைநறுமலர்தகையவெம்பெருமானிணையடிக்கேயிதயஞ்சேர்த்தாள். (உ௪௬)

ஆறாகியிருதடங்கணஞ்சனவெம்புனல்சோரவளகஞ்சோர
வேறானதுகிறகைந்தகைசோரமெய்சோரவேறோர்சொல்லுங்
கூறாமற்கோவிந்தாகோவிந்தாவென்றரற்றிக்குளிர்ந்துநாவி
லூறாதவமிழ்தூறவுடல்புளகித்துள்ளமெலாமுருகினாளே. (உ௪எ)

அருமறைசொல்லியநாமமாயிரமுமுரைத்தழைக்கவமரர்போற்றுந்
திருமலர்ச்செஞ்சேவடியோன்றிருச்செவியிலிவண்மொழிசென்றிசைந்தகாலை
மருமலர்மென்குழன்மானின்மனநடுங்காவகைமனத்தேவந்துதோன்றிக்
கரியமுகிலனையானும்பிறரெவர்க்குந்தெரியாமற்கருணைசெய்தான். (உ௪அ)

உடுத்ததுகிலுணர்வில்லானுரிந்திடவுமாளாமலொன்றுக்கொன்றாங்
கடுத்தநிறம்பற்பலபெற்றாயிரமாயிரங்கோடியாடையாகக்
கொடுத்தருளவுரிந்தனபட்டிருந்தபெருந்தனிக்கூடங்கொள்ளாதோடி
யெடுத்தனர்பற்பலவீரருரிந்தோனுஞ்சலித்திருகையிளைத்துநின்றான். (உ௪௯)

கங்கைமகன்முதலானகாவலர்மெய்புளநடுங்கிக்கண்ணீர்சோரச்
செங்கைமலர்குவித்திவளேகற்பினுக்குமரபினுக்குந்தெய்வமென்றா
ரங்கணைகல்வானேருமானகமும்வலம்புரியுமதிரத்தங்கள்
பைங்கனகதருவின்மலர்மழைபொழிந்துகருணையினாற்புரிவுகூர்ந்தார். (உரு0)

அழுதழுதுகொடும்புலிவாயகப்பட்டமான்பிணைபோலரற்றாநின்ற
வெழுதரியமடப்பாவைதங்கண்முகங்களைநோக்கியிரங்கிவீழ்ந்த
பொழுதுமனம்புகைமூளப்பூந்தடங்கணனன்மூளப்போரின்மூளப்
பழுதுபடாவடலாண்மைப்பவனகுமரன்றடக்கைபடைமேல்வைத்தான். (உருக)

அருளாருந்தருமபதியாகாதென்றெமைப்பலகாலடக்கயாமு
மிருளால்வெம்பரிதிவடிவொளிப்பதுபோலமர்புரியாதிருக்கின்றேமான்
மருளான்மெய்ம்மயங்கியொருவலியுடையோர்தமைப்போல † மதத்தநீங்கள்
பொருளாகவிருந்தனமோநூற்றுவரும்வருகவெதிர்பொருகவென்றான். (உருஉ)

---

* உருப்பவடக்கினனென்றும் பாடம்.
† மதித்துநீங்கள் என்றும்பாடம்.

கொந்தளகமலர்சரியக்கூப்பிடுவாள்கொடுங்கற்புங்கூறையமாளா
மந்திரமுமடல்வீமன்மானமிலாதுரைக்கின்றவலியுங்காணத்
தந்தைவிழியிருள்போலத்தகுமனத்தோனுந்துச்சாதனனைநோக்கிப்
பைந்தொடியைக்கொணர்ந்தினியென்மடியின்மிசையிருத்துகெனப்பணித்திட்டா
[னே. (௨௫௩)

என்றபொழுதருந்ததிக்குமெய்தாதகற்புடையாளிடியேறுண்ட
வன்றலைவெம்பணிபோலநடுநடுங்கிமாயனையுமறவாளாகிப்
புன்றொழிலோன்யானிருக்கக்காட்டியதன்றொடைவழியேபுள்வாய்குத்தச்
சென்றிடுகவாருயிரென்றெவரும்வெருவுறச்சபித்தாடெய்வமன்னாள். (௨௫௪)

அரசவையிலெனையேற்றியஞ்சாமற்றுகிறீண்டியளகந்தீண்டி
விரைசெயளிபினம்படிதார்வேந்தரெதிர்தகாதனவேவிளம்புவோரைப்
பொருசமரின்முடிதுணித்துப்புலாறுவெங்குருதிபொழியவெற்றி
முரசறையும்பொழுதல்லால்விரித்தகுழலினியெடுத்துமுடியேனென்றாள். (௨௫௫)

பாஞ்சாலிக்கரசவையிற்பழுதுரைத்தோனுடலெனதுபடையாமேழி
போஞ்சாலினிணஞ்சொரியத்துணைவரொடுகுலமாளப்பொருவேன்யானே
தீஞ்சாலிவிளைபழனத்திருநாட்டீர்கேண்மினெனச்செந்தீமூள
வேஞ்சாலினறுநெய்போல்வெஞ்சினத்தான்வஞ்சினமும்விளம்புவானே. (௨௫௬)

வண்டாருங்குழல்பிடித்துத்துகிலுரிந்தோனுடற்குருதிவாரியள்ளி
யுண்டாகங்குளிர்வதன்முன்னிக்கரத்தாற்புனலுண்ணேனொருகாலென்கைத்
தண்டால்வெம்புனலெற்றிமீதெழுந்துவிழுந்திவலைதண்ணீராகக்
கொண்டாவிபுரந்திடுவனிதுவிரதமெனக்கெனவுங்கூறினானே. (௨௫௭)

பகலவன்றன்மதலையுயிர்பகைப்புலத்துக்கவர்வனெனப்பார்த்தன்சொன்னா
னகுலனுமற்றென்கரத்தாற்சௌபலனாயகனுயிர்க்குநாசமென்றான்
சகுனிதனையிமைப்பொழுதிற்சாதேவன்றுணித்திடுவேன்சமரிலென்றா
னிகனிருபரிவர்மொழிகேட்டெளிதோவிக்கொடும்பழியென்றேங்கினாரே. (௨௫௮)

மேகங்கள்வழங்காமல்விண்ணதிர்ந்திட்டோர்கோளும்வெயிலைச்சூழ்ந்து
பூகம்பம்பிறந்துடுவுமரும்பகலேவீழ்ந்துடனே * பொய்கைவாடி
யாகஞ்செய்நெடுஞ்சாலையின்பாலுஞ்செந்நீராயிருந்தவேந்த
ராகங்களொளிமழுங்கிற்றவிதாவென்றணங்கனையாளழுதபோதே. (௨௫௯)

உற்பாதம்பெரிதெனநெஞ்சுகுவாருமென்னாமிவ்வூரென்றஞ்சி
நிற்பாரும்போம்வழிமேனினைவாரும்பலராகிநிகழ்ந்தகாலைக்
கற்பான்மிக்குயர்வேள்விக் † கனல்சுமந்தமடவரலைக்கண்ணிலாதோன்
பொற்பாதம்பணிந்தேத்தியபராதப்புரிந்தவெலாம்பொறுத்தியென்றான். (௨௬௦)

உத்தமமாங்குலமயிலேயென்சிறுவரறியாமலுனக்குநேரே
மைத்துனராமுறையாலிவ்வழக்கலாதனசெய்தார்மதியிலாம
லெத்தனைதாழ்விவர்புரிந்தாரென்றாலுமவையொன்றுமெண்ணாதின்னே
பித்தர்மொழியெனக்கருதிமறந்தருளென்றொருகோடிபிதற்றினானே. (௨௬௧)

---

* பொய்கையாடி என்றும் பாடம்.

† கடன்சுமந்த என்றும் பாடம்.

மைவரையுந்தடங்கண்ணாண்மனச்சோகம்பலமுகத்தான்மாற்றிமைந்த
ரைவரையுந்தனித்தனியேமுகங்கொண்டுகொடுங்கோபமகற்றிநீங்கண்
மெய்வரையும்பொருபுயத்தீர்வற்போரிலிழந்தவியனிலமுந்தேருங்
கைவரையும்பரிமாவுஞ்செல்வமும்யாவையுமீண்டுங்கைக்கொள்வீரே. (உசுஉ)

கோமன்றிலருந்ததியைக்கொண்டினிநீர்நில்லாமற்குருகவூரே
போமென்றுவரவழைத்துத்தழீஇக்கொண்டென்கண்மலரேபோல்வானெம்பி
யாமென்றுமவனென்றுமிரண்டில்லைவிளையாட்டென்றிருந்தேனிவ்வா
றாமென்பதெனக்கொருவருரைத்திலரால்யானுமுதலறிந்திலேனே. (உசுங)

என்மைந்தரிவர்நீங்களவன்மைந்தரெனநினையேனிவரேயெம்பி
தன்மைந்தருங்களையேயென்மைந்தரெனவளர்த்தேன்சம்புநாட்டு
மன்மைந்தருங்களைப்போல்வேறுபடாதித்தனைநாள்வளர்ந்தாருண்டோ
வின்மைந்தர்நடக்கவெனவிடைகொடுத்தான்விரகினுக்கோர்வீடுபோல்வான். ()

படைகொடுத்தானிவனிழந்தபார்கொடுத்தானரசாளப்பண்டுபோல்வெண்
குடைகொடுத்தான்குருகுலத்தேகுலங்கொடுத்தானைவருக்குங்குலத்தேகொண்ட
தடைகொடுத்தானகப்பட்டுந்தலையழிக்கநினையாமற்றானேயம்ம
விடைகொடுத்தானினிவிடுமோவயப்புலியைவாலுருவிவிடுகின்றீரே. (உசுரு)

வேறு.

யாதொருகருமமேனுமெண்ணியேதுணிகவென்றுங்
காதலிற்றுணிந்துசெய்தாலெண்ணுதல்கடனன்றென்று
மோதுநூற்புலவர்சொன்னாருமக்குளவுணர்வற்றன்றே
பேதுறவடர்த்தும்பின்னையுருகிநீர்பிழைசெய்தீரே. (உசுசு)

தீயினாற்சுட்டசெம்புண்ணாறுமத்தீயிற்றீய
வாயினாற்சுட்டமாற்றமாறுமோவடுவேயன்றோ
பேயினாற்புடையுண்டாரோமறப்பரோபெரியோரென்றான்
வீயினாற்றொடுத்ததண்டார்வேந்தர்க்குவேந்தன்மாமன். (உசுஎ)

சகுனிசொன்மருகன்கேட்டுத்தம்பியுமங்கர்கோவு
முகமுகநோக்கியெண்ணியெம்பிநீமொழிகவென்றான்
றுகிலினையுரிந்தவன்கைச்சூரனுந்தருமராசன்
மகனுடன்வெகுளிதோன்றவழக்குறமொழிதலுற்றான். (உசுஅ)

சரதமென்றுண்மையாகச்சபையினீயிசைந்துதோற்ற
விரதமுங்களிறுமாவும்யாவையுமீண்டுதாரோஞ்
சுரதமென்கொடியுநீருந்தொண்டொழிந்துரியீராமின்
விரதமுன்னறத்துக்கென்றும்பொய்கொலோமெய்யேயன்றோ. (உசுகூ)

தந்தைதனருளாற்பெற்றீருரிமையுந்தம்பிமாரும்
பைந்தொடிதானுநீயும்பதிபெயர்ந்துய்ந்துவேயின்
வெந்தழலார்ந்தகானின்வெளிப்படாதுறைமினின்றே
யிந்தமாதரணிகைவிட்டேகுமினெழுமினென்றான். (உஎ0)

என்றலுந்தந்தைமைந்தனியம்பியவாய்மைகேட்டு
நின்றவாநில்லாவஞ்சநெஞ்சினனாகிமீண்டும்
வென்றிகொளரசனோடும்வெஞ்சிலைவிதுரனோடு
மொன்றியவமைச்சரோடுமுறுவனவுசாவலுற்றான். (உஎக)

மேல்வருகருமமெண்ணாவெகுளியான்மிக்கவீரர்
நால்வருமெம்மனோர்கணவின்றனசிறிதுங்கேளார்
சேல்வரும்பழனநாடசெயலறிந்தெண்ணிவேத்து
நூல்வருமுறைசொல்லென்றானோன்சிலைநூலின்மிக்கோன். (உஎஉ)

வின்மகனுரைக்கவேனையமைச்சரும்விதுரன்றானு
மன்முறைதவறினின்றேவசையும்வந்திசையுமென்றார்
கன்மனநெடுங்குன்றன்னான்கருதியக்கணத்தேமீளத்
தன்மனையாவர்நெஞ்சுஞ் * சருகெனத்தழைக்கச்சொன்னான். (உஎரு)

உன்னுணர்வுனக்கேயுள்ளதுன்பெருந்துணைவரான
கொன்னுனைவேலோர்வென்றுகொண்டனகொடுத்தலொல்லார்
பின்னுறவுரிமையாவும்பெறுதிநின்பெருமைக்கேற்ப
முன்னுளோர்பலருஞ்செய்தமுறைமையேமுன்னுகென்றான். (உஎச)

அரசன்மற்றுரைத்தமாற்றமந்தணனுணர்ந்துசெல்வ
முரசதிரயோத்திமூதூர்முன்னவன்கதையுங்கூறி
யுரைசெய்தபடியேயுங்களுலகினை † யிழந்துசின்னாள்
வரைசெறிகானில்வைகிவருவதேவழக்குமென்றான். (உஎரு)

அரிவையோடகன்றுநீவிரைவருமடவியெய்திச்
சுரர்தினமீராறங்கட்டின்னுதிர்மன்னுநாட்டி
னொருவருமறியாவண்ணமொருதினமுறைதிருங்கள்
பெருவிறலரசும்வாழ்வும்பின்னுறப்பெறுதிரென்றான். (உஎசு)

மறைந்துறைநாளினும்மைமற்றுளோரீண்டுளாரென்
றறிந்திடின்மீண்டுமவ்வாறரணியமடைதிரென்றான்
பிறந்தவிம்மாற்றங்கேட்டுப்பிதாமகன்முதலாயுள்ளோர்
சிறந்ததொன்றிதனினில்லையிசைத்ததேசெய்மினென்றார். (உஎஎ)

சுரிகுழல்குலையநின்றதிரௌபதிசுருதிமுந்நூல்
வரபதிமொழிந்தமாற்றங்கேட்டலும்வணங்கியைவ
ரரசருமென்துமைந்தரைவரும்யானுமீண்டு
‡ முரிமையின்றெய்தவெஞ்சூதாடுதலுறுதியென்றாள். (உஎஅ)

---

* சருகெழத்தக்கசொன்னான் என்றும் பாடம்.

† இகந்து என்றும் பாடம்.

‡ உரிமையினெய்தவன்சூதொட்டெதலுறுதியென்றாள் என்றும் பாடம்.

தையலங்குரைத்தமாற்றந்தருமனுங்கேட்டுநாங்கள்
கைபறுதொண்டராகிக்கான்புகல்வழக்குமன்று
லேயுறுதொருகாலின்னமாடுதுமருஞ்சூதென்றான்
மெய்புறவிருந்தவேந்தர்மீளவுங்காணலுற்றார். (உஎகூ)

சத்தியவிரதன்றானுந்தன்பெருந்தேவிசொல்லப்
பத்தியால்வணங்கிமாயன்பன்னிருநாமமேத்தி
யொத்தவெண்கவறுவாங்கச்சகுனியாதொட்டமென்றான்
புத்தியாலவனும்யான்செய்புண்ணியமனைத்துமென்றான். (உஅ0)

உருட்டியகவறுநேமியுடையவனருளினாலே
மருட்டியசகுனியெண்ணின்வழிப்படாதுருண்டகாலை
யிருட்டியவிழியான்மைந்தனிதயமுமிருண்டுசோரத்
தெருட்டியவுணர்வின்மிக்கோன்செப்பியயாவும்வென்றான். (உஅக)

வென்றுதன்னிளைஞரோடுமேதகுபுதல்வரோடு
மன்றலந்தெரிவையோடுமற்றுளோர்தங்களோடு
மன்றுதன்குரவர்பொற்றாளன்புடன்வணங்கிக்கானஞ்
சென்றனனென்பமன்னோசெழுநிலமுடையகோமான். (உஅஉ)

ஒழிவுசெய்கருணைநால்வருள்ளமுமொழியவேணை
வழுவறுமன்னருள்ளமம்மரோடயர்ந்துவிம்மக்
குழைவினுனுகர்தலின்றிக்கொற்றமாநகரிமாக்க
டழலெனவுயிர்த்துமாழ்கித்தனித்தனிபுலம்பலுற்றார். (உஅஙு)

நாட்டிடைபெல்லேபொற்றாணறுமலர்சிவக்கவேகிக்
காட்டிடைபுகுந்தபோதுங்கலக்கமற்றுவகைகூர்ந்தான்
கூட்டிடையின்பத்துன்பக்கொழும்பயன்றுய்த்துமாறி
வீட்டிடைபுகுதும்போதுமெய்ம்மகிழ்விபுதர்போல்வான். (உஅச)

சூதுபோர்ச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-கஉஙுகூ.

சபாபருவமுற்றுப்பெற்றது.

உ

மூன்றாவது

ஆரணியபருவம்.

அருச்சுனன்றவநிலைச்சருக்கம்.

பெருமிதவலியும்பாரும்பேணலார்கவரவின்சொற்
றருமனுந்தம்பிமாருந்தழலெழுதையலாளு
மருமகமுனிவர்முந்நான்காயிரர்சூழ்ந்துபோதக்
கருமுகில்படியுஞ்சாரற்காமியவனம்புக்காரே. (௧)

ஆரமுமகிலுநாறுமருவியுஞ்சுனையுமத்த
வாரணம்பிடிகளோடுவாரிதோய்கானியாறு
மீரமுகிழுங்காயுங்கனிகளும்பாவுமீண்டிக்
காரினம்பொழியுமந்தக்கானகத்தழகுகண்டார். (௨)

அங்கிவர்புகுந்தபின்ன*ரங்கியின்புகையுமாறிப்
பொங்கியவோமத்தீயின்புகையினான்முகிலுண்டாகச்
சிங்கமுந்துதிக்கைமாவுஞ்சேர்ந்துடன்றிரியச்சூழ
லெங்கணுமழகுபெற்றதிமகிரிச்சாரல்போன்றே. (௩)

வேறு.

துருபனுந்திட்டத்துய்மனுஞ்சோமக
நிருபரானவர்யாவருநேர்ந்துடன்
விரவுதானைவிராடனுஞ்சுற்றமு
மருவினாரவ்வனத்திருந்தோரையே. (௪)

மற்றுமற்றுமகீபரிலன்பினா
லுற்றவுற்றவுறவுடையோர்களுங்
கற்றகற்றகலைவிதமாக்களுஞ்
சுற்றுமொய்த்தனர்தோமறுகேண்மையார். (௫)

மாதவத்தின்பயனெனமாதவன்
யாதவக்குலத்தேறிமையோர்பதி
யாதபத்துக்கருநிழல்போலருள்
வேதவித்தகவீரனுமேவினான். (௬)

பாரிழந்தவிப்பாதகச்சூதுகேட்
டுருநெஞ்சினரேமுறுநோக்கினர்
பேரறன்றருபிள்ளையைப்பார்த்தருள்
கூரவன்பொடிவையிவைகூறுவார். (௭)

* அங்கியும்புகையுமாறிப், பொங்கியவோமத்தீயாற்புகலருமுகிலுண்டாக என்றும் பாடம்.

மரபின்வல்லியைமன்னவையேற்றிய
குருகுலேசனைக்கொற்றவெஞ்சேனையோ
டிரியவெற்றுதுமிப்பொழுதேயென
வுரமுஞ்சீற்றமுந்தோற்றவுரைசெய்வார். (அ)

தம்பிமாரைத்தனித்தனியேயுயிர்
வெம்பிவீழவிரைந்துவில்வாங்கியின்
றும்பர்காணவுயிரழிப்போமெனத்
தும்பைசூடக்கருதினர்சொல்லுவார். (கூ)

வஞ்சகச்சுபலன்றருமைந்தனை
வெஞ்சமத்தினில்வீழக்கணத்திடைச்
செஞ்சரத்தின்வழியுயிர்செல்லவே
யெஞ்சுவிக்கவெழுமென்றியம்புவார். (கO)

சீதவெண்குடைவேந்தர்தந்தேர்விடுஞ்
சூதன்மைந்தன்சுயோதனன்றோழனை
மாதிரங்களில்வானவர்காணவிப்
போதுடற்றுவமென்னப்புகலுவார். (கக)

உந்தவுந்தவொருவர்க்கொருவர்வாய்
முந்தமுந்தமுடுகுசினத்தரா
யந்தவந்தவவனிபர்யாவரு
மிந்தவிந்தவுரைகளியம்பவே. (கஉ)

கேட்டிருந்தருள்கேசவன்வாசவன்
காட்டிருந்தனனென்னக்கவின்பெறுந்
தோட்டிருந்தளிதேனுகர்சோலையின்
மாட்டிருந்தமகீபர்க்குரைசெய்வான். (கந)

விடுகவிந்தவெகுளியைப்பின்புற
வடுகநுந்திறலாண்மைகடோன்றவே
வடுமனங்கொடுவஞ்சகஞ்செய்பவர்
கெடுவரென்பதுகேட்டறியீர்கொலோ. (கச)

இயைந்துரைத்தவியைபின்படியினி
வியந்திருக்கும்விபினந்தொறுமிருந்
துயர்ந்தபிற்செய்வினையையின்றுன்னுத
லயர்ந்துரைத்தலலாதிலையாவதே. (கரு)

வேறு.

கேட்டிநீமுரசகேதுகிளைஞர்தம்மிருக்கைதோறு
மீட்டியபுதல்வருள்ளோர்யாரையுமிருத்தல்செய்து
காட்டிடைநீவிர்வைகிக்கடவநாள்கழித்துமீண்டு
நாட்டிடைவந்தாற்காண்டிநலனுளோர்நலன்களெல்லாம். (கசு)

அன்னையைச்சுபலன்பாவையருகுறவிருத்தியுங்க
டன்னையர்தம்மையாகசேனனூர்தன்னில்வைத்துப்
பின்னையும்வேண்டுவோரைப்பிரிவுறநெறியிற்போக்கி
*நன்னயத்தொடுநீர்கானம்வைகுதனன்மையென்றான். (கஎ)

அச்சுதனுரைத்தமாற்றமறன்சுதன்மகிழ்ந்துகேட்டு
மெய்ச்சுதர்முதலாமற்றும்விளம்பியகிளையையெல்லா
மிச்சையின்படியேயாங்காங்கெய்துவித்திராமுண்டு
மச்சுறுகானில்வைகுமார்வமேயார்வமானான். (கஅ)

சோனைமாமுகிலின்மேனித்தோன்றலுந்துவரைபுக்கா
னேனையோர்தாமுந்தத்தமெயிலுடைநகரிபுக்கார்
ஞானயோகிகளுமொவ்வாநரேசனுந்தம்பிமாருங்
கானமேதாங்களாளுங்காசினியாக்கொண்டார். (கசு)

அவ்வனந்தன்னில்வந்தவரசெலாமகன்றபின்னர்
வெவ்வனம்விடாதுமேவித்தவம்புரிவியாதனென்னுஞ்
செவ்வனமுனிவன்வந்தச்சேயவன்சேய்களான
விவ்வனசரிதர்தம்மையினைவுடனெய்தினானே. (உ0)

கண்டெதிர்சென்றுபோற்றிக்கண்ணினுஞ்சென்னிமீதுங்
கொண்டனரவன்றன்பாதங்குளிர்ந்தனருயிருமெய்யும்
புண்டரநுதலினானைப்பூசனைசெய்தபின்னர்
வண்டணிதாரான்செய்தவஞ்ஞையனைத்துஞ்சொன்னார். (உக)

செறிந்தவர்க்கூற்றங்கோலாஞ்செய்தவமுனியுமுன்னே
குறிந்தனநிகழ்ந்ததெல்லாங்கூறுதல்கொடிதுபாவம்
பிறிந்தனதாயந்தன்னிற்பெரும்பகைபினிதென்றன்றோ
வீறிந்தவருரைத்தாரையவவாவினுக்கவதியுண்டோ. (உஉ)

துன்றினரின்னலெய்தத்துன்னலராகித்தம்மி
லொன்றினர்செறினுமுன்னதுண்டெனவுணரத்தேற்றிக்
கன்றினர்கவலைதீர்த்தான்கண்ணுடைக்கருணைமூர்த்தி
குன்றினதுயர்ச்சியந்தக்குன்றினுக்கறியவுண்டோ. (உங)

நீவிரேயல்லிர்முன்னாணிலமுழுதாண்டநேமி
நாவிரிகீர்த்தியாளனளனெனுநாமவேந்தன்
காவிரியென்னத்தப்பாக்கருணையான்சூதிற்றோற்றுத்
தீவிரிகானஞ்சென்றகாதைநுஞ்செவிப்படாதோ. (உச)

தோத்திரமானதெய்வச்சுருதிகள்யாவுநான்காக்
கோத்தவன்பின்னுஞ்சொல்வான்குன்றவில்லவன்பாலின்று
பார்த்தனேசென்றுபாசுபதக்கணைவாங்கினல்லா
லார்த்தபைங்கழலாயெய்தாதரும்பகைமுடித்தலென்றான். (உரு)

---

*நன்னயத் தோடு நீர்கா னடப்பதே நன்மை என்றும் பாடம்.

பரிவுடன்முனிவன்மாற்றம் பணிந்துதன்றலைமேற்கொண்டு
வரிசிலைக்குலகமெண்ணுமகபதிமகனைநோக்கிக்
கிரிசனையுன்னிவெள்ளிக்கிரிப்புறமெய்தியார்க்கு
மரியநற்றவஞ்செய்தேனுமவனருள்பெறுதியையா. (௨௬)

எனவிடைகொடுப்பமண்ணிலிணையிலாவியாதன்பாத
மனனுறவிறைஞ்சியாங்கோர்மந்திரமுறையிற்பெற்று
நனிமிகுதிதியுநாளுநல்லதோர்முகூர்த்தந்தன்னிற்
றனிவதியியக்கர்காட்டத்தனஞ்சயன்சேறலுற்றான். (௨௭)

வெஞ்சலமனத்தரானோர்விரகினாற்கூட்டங்கூட்டி
நஞ்சலதுவமையில்லாநவைபுரிந்தனர்களேனுஞ்
சஞ்சலமும்மைப்போலுந்தரணிபருறுதல்செய்யா
ரஞ்சலிரென்றுமீளவாரணமுனியும்போனான். (௨௮)

மரவுரியுடையன்சென்னிவகுத்தசெஞ்சடையன்றாணிச்
சரமுடனங்கியீந்ததனுவினன்றவத்தின்மேலே
புரிதருமனத்தனெல்லாப்புண்ணியங்களுக்குந்தானே
யுரைபெறுதசரதன்றன்மகனலாதுவமையில்லான். (௨௯)

நெறியிருபுறத்துமூசிநுழையொணாநெருக்கமிக்க
செறிதருவனமுஞ்சிங்கஞ்சிந்துரஞ்செருச்செய்சாரற்
பொறைகளும்வெம்பிசாசபூதமோடியக்கர்யாரு
முறைதருகுவடுநீங்கியுத்தரமுடிவுகண்டான். (௩௦)

அத்திசையிமையமென்னுமரசவெற்படைந்துமிக்க
பத்தியோடம்மைதன்னைப்பயந்தகுன்றென்றுபோற்றிச்
சத்தியவிரதன்றம்பிதபோவனந்தோறுந்தங்கண்
முத்தழல்வளர்ப்போர்பாதமுளரிகண்முடிமேற்கொண்டான். (௩௧)

சாரணரியக்கர்விச்சாதரர்முதற்பலருஞ்செஞ்சொ
லாரணப்படியேசூழ்ந்தவடவிகடோறும்வைகி
நாரணன்மலரோனும்பர்நாயகன்பதங்கணச்சிக்
காரணத்தவஞ்செய்வோரைக்கண்டுகண்டுவகைகூர்ந்தான். (௩௨)

அரியும்வெங்கரியுந்தம்மிலமர்புரிமுழக்கங்கேட்டுங்
கிரியினின்முழக்கங்கேட்டுங்கிராதர்போர்முழக்கங்கேட்டு
மெரிகிளர்முழக்கங்கேட்டுமெம்பிரானிமவான்றந்த
புரிகுழலோடும்வைகும்புண்ணியப்பொருப்பைச்சேர்ந்தான். (௩௩)

கைம்மலையுரிவையோடுகட்செவிக்கச்சுஞ்சாத்துஞ்
செம்மலைவிழியிற்காணுஞ்சிந்தையாற்கண்டுபோற்றி
யம்மலைச்சாரலேறுமருந்தவம்புரிநர்கூற
விம்மலைநீங்கியாங்கண்மெய்த்தவவிரதனானான். (௩௪)

எயிலொருமூன் றுஞ்செற்றோனேந்திழையுடனேவைகுங்
கயிலையின்பெருமைதன்னைக்கட்டுரைசெய்வதெங்ஙன்
வெயிலவன்முதலோர்நாளுமேம்படவலஞ்செய்வார்க
ளயிலுநல்லமுதோர்சூழ்வந்தன்புடன்போற்றுவாரே. (௫௫)

உருகியவெள்ளிபோலவுயர்முழைதோறும்வீழு
மருவிநீர்புனிதன்வேணியமருமாநதியிற்றோன்ற
வுருகியபனிவான்குன்றிலொண்பனிக்கடவுள்வந்து
மருவியதென்னத்தோன்றும்வருணமால்வரையின்றென்பால். (௫௬)

வேறு.

ஆசினான்மறைப்படியுமெண்ணில்கோடியாகமத்தின்படியுமெழுத்தைந்துங்கூறிப்
பூசினான்வடிவமெலாம்விபூதியாலப்பூதியினைப்புரிந்தசடைப்புறத்தேசேர்த்தான்
றேசினாலப்பொருப்பின்சிகரமேவுஞ்சிவனிவனேபோலுமெனத்தேவரெல்லாம்
பேசினார்வரிசிலைக்கைவிசயன்பூண்டபெருந்தவத்தினிலைசிலர்க்குப்பேசலாமோ. ()

ஒருதாளின்மிசைநின்றுநின்றதாளினூருவின்மேலொருதாளையூன்றியொன்றுங்
கருதாமன்மனமடக்கிவிசும்பினோடுங்கதிரவனைக்கவர்வான்போற்கரங்கணீட்டி
யிருதாரைநெடுந்தடங்கணிமையாதோராயிரங்கதிருந்தாமரைப்போதென்னநோக்கி
நிருதாதியரின்மனுவாய்த்தவஞ்செய்வாரினிகரிவனுக்கார்கொலெனநிலைபெற்றானே.

[பொற்றோர்
தோற்றியதெம்மிடத்தேயித்தோன்றன்மாலைசூட்டியபொற்றொடியென்றோதுரங்கம்
கூற்றியல்வெஞ்சிலைபாணந்தூணிநாணிகுரக்குநெடுங்கொடிமுன்னங்கொடுத்தேமென்றோ
காற்றினுடன்விரைவுறச்சென்றருந்துமாறுகாண்டவநம்பசிக்களித்தகாளையென்றோ
நாற்றிசையும்வளர்த்ததழற்கடவுளந்தநரனுடலங்குளிர்விக்குநாரம்போன்றான். ()

வலப்பாகஞ்செழும்பவளச்சோதியென்ன வானீலச்சோதியென்னமற்றைப்பா
கங், கலப்பானதிருமேனியணிந்தநீற்றாற் கதிர்முத்தின்சோதியெனமேனையீன்ற,
குலப்பாவையுடன்கயிலைக்குன்றில்வாழ்விற்குன்றுடையோன்றிருக்கோலங்*குறிப்
பாலுன்னிப், புலப்பாடுபுறம்பொசியமார்புந்தோளும்பூரித்தானுடல்புளகம்பாரித்
தானே. (௪௦)

கருந்துறுகல்லெனக்கருதிப் பிடியுங்கன்றுங் களிற்றினமுமுடனுரிஞ்சக்கறை
யானேறிப், பொருந்துமுழைப்புற்றதெனப்புயங்கமூரப்பூங்கொடிகண்மரனென்று
பாங்கேசுற்றப், பரிந்துவெயினாண்மழைநாள்பனிநாளென்று பாராமனெடுங்காலம்
பயின்றான்மண்ணி, லருந்தவமுன்புரிந்தோரிலிவனைப்போன்மற்றார்புரிந்தார்சிவசிவ
வென்றரியவாறே. (௪௧)

பகிரதனேமுதலானவெண்ணில்கோடிபார்த்திவருந்தவம்புரிந்தார்பைம்பொன்மேனி
யிகலவுணர்முதலானககனவாணரெத்தனைபேர்தவம்புரிந்தாரிமையோரேத்து[வான்
மகபதிதன்மதலையிவனெழுதொணாத வனப்பினுக்கு வரிசிலைக்கைம்மதவேளொவ்
சகலகலைகளுக்குமிவன்றானேயிங்ஙன்றவம்புரிய நினைப்பதே சார்ந்தபாவம். (௪௨)

---

* குறிப்பாலுள்ளும் என்றும் பாடம்.

வேறு.

பண்ணுக்குவாம்பரித்தேராதபனும்பணிந்துபசுபதியைநோக்கி
மண்ணுக்குத்தவம்புரியுந்தனஞ்சயற்குக்கோடையினுமதியம்போன்று
னெண்ணுக்குவரும்புவனம்யாவினுக்குங்கண்ணுவானிவனேயன்றே
கண்ணுக்குப்புனைமணிப்பூண்கண்ணோட்டமென்பதெல்லாங்கருணையன்றே. (சங)

வேறு.

அங்கியாலங்கியை*வெதுப்பிவெம்மையைப்
பொங்கியவாயுவாற்போக்கிமெய்ச்சிரந்
தங்கியவமுதினூற்றண்ணெனும்படி
யிங்கிதத்தொடுக்கினனிதயந்தன்னையே. (சச)

ஈண்டுதன்கருத்தினோடியைந்தமாதவம்
பூண்டிளமதிமுடிப்புண்ணியன்றனை
வேண்டியவாறெலாம்விருப்பொடுன்னினான்
பாண்டியனுயர்குலப்பாவைகேள்வனே. (சரு)

நிரந்தரமநேகநாணினைவுவேறற
வரந்தருபுலன்களையொடுக்கியாயுத
மிரந்தனன்வரையிடையியற்றுநற்றவம்
புரந்தரனறிந்துமெய்ப்புளகமேறவே. (சசு)

குருவுடன்விரகுறக்கூறியீசனை
மருவுறுகொன்றைநாண்மாலைமௌலியைக்
கருமயில்பாகனைக்காண்டல்வேண்டிய
திருமகன்றவநிலைதெரியவுன்னினான். (சஎ)

அரும்பகைவலிமையாலவுணரூர்சுடும்
பெரும்பிறையணிசடைப்பிஞ்ஞகன்றன
திரும்பகழிகள்பெறவெண்ணியேகொலாம்
விரும்பியநித்தவம்வில்வலானரோ. (சஅ)

நற்றவத்துறுதியுநரன்கருத்துநா
முற்றறிகுவமெனமுன்னுஞ்சிந்தையான்
கற்றையஞ்சடையவன்கயிலையங்கிரி
யுற்றறிவுறுவதற்குபாயமெண்ணினான். (சகூ)

தூநகையுருப்பசியரம்பைதொண்டைவாய்
மேனகைதிலோத்தமையென்றுவேலையின்
மானெனமயிலெனவந்தமாதரீ
ரானவாறறிதிர்போயவன்றனெண்ணமே. (ருo)

என்றுகொண்டிந்திரனியம்பமற்றவன்
றுன்றியபேரவைத்தோற்றமிக்கவர்
குன்றிரண்டெடுப்பதோர்கொடிமருங்குலார்
சென்றனரவனுழிச்செய்யவாயினர். (ருக)

* அவித்து வெம்மையை என்றும் பாடம்.

காமனைநினைந்தனர்காமராசனு
மாமலர்வாளியுமதுரசாபமுந்
தேமருமலர்க்கையிற்சேர்த்திச்சேனையோ
டாமுறைப்புகுந்தனனரனுமஞ்சவே. (௫௨)

செந்தமிழ்வரைதருதேரன்செக்கர்வா
னந்தியானையன்மதியாதபத்திரன்
சிந்துவெம்முரசினன்செவ்விகூரவே
வந்தனன்காலமும்வசந்தமாக்கியே. (௫௩)

வேறு.

கந்தனையளித்தகன்னியோர்பாகங்கலந்தமெய்க்கண்ணுதற்கெதிராய்ச்
செந்தமிழுரைத்தகுறுமுனியிருந்ததெய்வமால்வரையிடைத்தோன்றி
யிந்துவுமரவுமுறவுசெய்முடிமேலிருந்தமந்தாகினியருவி
வந்திழிபுனலுஞ்சந்தனங்கமழவந்ததுமந்தமாருதமே. (௫௪)

வம்பறுமதுரப்பல்லவங்கோதிமாமகரந்தமாகந்தக்
கொம்பெலாமிருந்துகுயிலினங்கூவக்கொற்றவெஞ்சிலையினன்முன்னஞ்
சம்பராசுரனைவென்றவீரனைப்பைந்தாமமாமணிமுடிசூட்டி
யெம்பிரான்முனிவுக்கஞ்சலென்பதுபோலியைந்ததுவசந்தகாலமுமே. (௫௫)

பூதமைந்தினையும்புலத்துடனொடுக்கிப்புரிசடையுடன்புருகூதன்
காதலம்புதல்வனருந்தவம்புரிதல்கண்டுபாவிப்பனபோல
மாதிரந்தொறுஞ்செம்பல்லவச்செந்தீவளர்த்துவான்மணியினைநோக்கிப்
பாதமொன்றினினின்றுயர்ந்தனவொளிகூர்பணையுடைப்பாதபங்களுமே. (௫௬)

உள்ளுறக்கலக்கமறத்தெளிந்தசலத்துயர்தலைமுழையினின்றருவி
வெள்ளமொத்தமுதங்கரையறப்பொழியவெம்மையற்றளியுடன்குளிர்ந்து
புள்ளுடைக்கொடியோரிருவருங்காணுப்புண்ணியன்பொருப்பிடைத்தவஞ்செய்
வள்ளலொத்தனவச்சாரலைச்சூழ்ந்துவயங்குநீள்வாவியுஞ்சுனையும். (௫௭)

நீறுபட்டிலங்குமெய்ந்நிலவொளியானெஞ்சினிலிருளினையகற்றி
மாறுபட்டிடுமைம்புலன்களுமொடுக்குமாதவன்வளர்த்தசெந்தழலாற்
கூறுபட்டுமையோடொருவடிவானோன்குன்றுசூழுறைபொறையனைத்து
மாறுபட்டுருகிப்பெருகியோடினவாலம்மலைவெள்ளியாதலினால். (௫௮)

அலைத்தடங்கடலிலமுதொடுற்பவித்தாங்கமரர்வாழ்பதிகுடிபுகுந்தோர்
குலைத்துமென்றெண்ணியொருவருக்கொருவர்கொடியிடைநுடங்கவந்தந்த
மலைத்தடநெருங்கப்புகுந்தனர்குயிலுமயூரமுமானுமேயனையார்
நிலைத்தவம்புரிவோனைவகைநெருப்பினடுவுறநின்றவாகண்டார். (௫௯)

அந்தரத்தமரர்துந்துபிமுழங்கவநங்கதுந்துபியெதிர்முழங்க
வந்துபொற்சிலம்புமேகலைவிதமுமலர்க்கைவெள்வளைகளுமுழங்கப்
பந்தடித்திடுவாரம்மனையெறிவார்பயில்கழங்காடுவார்நெற்றிச்
சிந்துரத்திலகந்தீட்டுவாராகித்தனித்தனிதிசைதொறுஞ்சூழ்ந்தார். (௬௦)

குயிலொடுகூவிக்கிஞ்சுகமலர்ந்துகொஞ்சுபைங்கிளிகளையழைப்பார்
மயிலினடிக்கத்தாமும்*வன்கலாபமணியணியொளியெழநடிப்பார்
வெயில்விடுபரிதிமதியுடன்வலஞ்செய்விடரகமுழுவதுமொலிப்பக்
கயிலையங்கிரியின்சாரலோவெம்மூர்க்கடவுளாலயமெனக்களிப்பார். (௬௧)

கூந்தன்மாமுகிலைக்குலைத்துடன்முடிப்பார்குங்குமங்கொங்கைமேலணிவா
ரேந்துபேரல்குற்கலைநெகிழ்த்துடுப்பாரிட்டவுத்தரியமாற்றிடுவார்
பூந்துகினனையநறுஞ்சுனைபடிவார்புழுகுசந்தனநறும்பனிநீர்
காந்திகொடெறிவார்காமவேதத்தைக்கருங்கடைக்கண்களான்மொழிவார். (௬௨)

பண்ணுடையெழாலினின்னிசைவழியேபாடுவார்பைங்குழல்குறிப்பார்
பெண்ணுடைமடநாணகன்றபேரமளிப்பேச்செலாம்பேசிவந்தடுப்பார்
விண்ணுடையமிர்தம்பருகுவாருகிரான்மென்மலர்கொய்துமேலெறிவா
ரெண்ணுடைமடவார்புரிந்தனவிவ்வாறிங்கிதமெத்தனைகோடி. (௬௩)

காவும்வண்புறவுங்கயங்களுமரும்பக்கவர்ந்தவெங்கணைகளாமைந்து
பூவும்வந்துள்ளமுறவுறப்பட்டுப்புதையவும்புலன்வழியன்றி
மேவுதன்கருத்தின்வழியிலேநின்றவிசயனையங்கிபால்வில்லு
மேவுமுன்பெற்றவிறைவனையெய்தெய்திளைத்தனனிரதிகேள்வனுமே. (௬௪)

கூற்றினையுதைத்தபாதமுமுடுத்தகுஞ்சரத்துரிவையுமணிந்த
நீற்றொளிபரந்துநிலவெழுவடிவுநிலாவெயிலனலுமிழ்விழியு
மாற்றறல்பரந்தகொன்றைவார்சடையுமல்லதையாவையுங்கருதான்
மாற்றமொன்றின்றிநின்றனன்வரைபோல்வச்சிராயுதன்றிருமகனும். (௬௫)

அன்றரனிருந்தயோகினையகற்றியறிவிலாதநங்கனுவெந்த
குன்றிதுதடங்கணாயிரமுடையோன்கூறியகூற்றினைத்தேறி
யின்றவன்மதலைபுரிதவங்குலைத்தாலென்விளைந்திடுமெனவஞ்சி
நின்றிலன்மதனனிற்குமோநெற்றிநெருப்பினானீறுபட்டுள்ளோன். (௬௬)

வானவர்பெருமானேவலால்வந்தவானவர்மகளிருந்தம்மா
லானவக்கிரீடையாவையும்புரிந்துமொருபயன்பெற்றிலரகன்றார்
கானகமுழுதும்பரிமளம்பரப்பிக்கானவண்டிமிர்தரப்புகுந்த
வேனிலுமகன்றதருக்கனுங்குடபால்வெண்டிரைவேலைவாய்வீழ்ந்தான். (௬௭)

வேறு.

இந்திரன்சுதன்றனெண்ணம்யாவதென்றினிதினெண்ணி
யிந்திரசாலமாகவேவிஞரெவருமெய்தி
யிந்திரநீலந்தன்னிலிறைவனுக்குரைத்தாரந்த
விந்திரன்றானுமைந்தன்றவம்புரியிருக்கைசேர்ந்தான். (௬௮)

விருத்தமாமுனிவனாகிவிசயனைநோக்கியாது
கருத்துநீதவஞ்செய்கின்றகாரணமென்னையென்னத்
திருத்தகுசிந்தையோடுஞ்செந்தழலிடைநின்றோனு
மருத்துவானுருவமாறிவந்தவாறுணர்கிலாதான். (௬௯)

---

*வண்சிலம்புமணியணியொலியெழ என்றும் பாடம்.

மாசறுமதியமன்னவாண்முகமங்கைபாகத்
தீசன்வந்தெய்துகாறுமித்தவம்புரிவேனென்ன
வாசறுகடவுளோர்க்குமருமறைதனக்குமெட்டாத்
தேசவன்வருமோவென்றுசிரித்தனன்றேவர்கோமான். (௭0)

சிரித்ததேனென்னமீண்டுந் திருமகன்றன்னைநோக்கி
வருத்தமேயன்றியிந்தமாதவம்பயனின்றென்று
னுருத்திவனவனைநோக்கியுயிரிறுமளவுமிந்தக்
கருத்துநான்வீடேனென்றான்கடுங்கனலூடுநின்றான். (௭௧)

மைந்தனிம்மாற்றங்கூறமனனுறமகிழ்ந்துதெய்வத்
தந்தையும்விருத்தவேடந்தனையொருகணத்தின்மாற்றி
யிந்திரனாகிமுன்னின்றிப்பெருந்தவத்தால்வந்து
பைந்தொடிபாகன்பாசுபதமுனக்குதவுமென்றான். (௭௨)

என்றுரைத்தமரர்கோமானேகியபின்னர்வெள்ளிக்
குன்றுடைப்புனிதன்பாதங்குறிப்புறுமனத்தனாகி
நின்றுநற்றவஞ்செய்கின்றநெடுந்தகைநீர்மையெல்லாஞ்
சென்றுமைக்குரியரானசேடியர்செப்பினாரே. (௭௩)

மேனைமுன்பெற்றகிள்ளைவேலையுஞ்சேலினோடு
மானையும்பொருதசெங்கண்மரகதவல்லிகேட்டுத்
தானையுங்கரியபேருத்தரியமுமாகச்சாத்த
வானையன்றுரித்தநக்கற்கடிபணிந்தருளிச்செய்தாள். (௭௪)

வேறு.

ஆலமுண்டமுதம்பொழிதருநெடுங்கணம்பிகையருண்மொழிகேட்டு
நீலமுண்டிருண்டகண்டனுமிரங்கிநிரைவளைச்செங்கையாய்நெடிது
காலமுண்டருள்கூரறத்தின்மைந்தனுக்குங்காற்றின்மைந்தனுக்குநேரிளையான்
ஞாலமுண்டவனுக்குபிரெனச்சிறந்தோனரனெனுநாமமும்படைத்தோன். (௭௫)

ஆடியானனன்றன்மதலையர்விரகாலாடியசூதினுக்கழிந்து
காடுதாமுறைபுங்கடனினரவரிற்கடவுணாயகன்றருகாளை
நீடுபேரமரிற்பகைவரைச்செகுக்குநினைவினானெருப்பிடைநம்மை
நாடியேயரியதவம்புரிகின்றானமிதுமுன்னமேயறிவோம். (௭௬)

பருகுநீர்துறந்துகாற்றும்வெவ்வெயிலும்பாதபங்களின்சினையுதிர்ந்த
சருகுமேயொழியக்காய்கனிகிழங்குந்தானினிதருந்துதறவிர்ந்தா
னுருகுமாமனத்தைநாமுவந்திருத்தற்குறைபதியாக்கிநம்மிடத்தே
செருகினானுணர்வையாவரேயிவன்போற்செய்தவஞ்சிறந்தவரென்றான். (௭௭)

போகமாய்விரிந்தும்போகியாய்ப்பரந்தும்புலன்களின்வழிமனஞ்செலுத்தா
யோகியாயிருந்தும்யோகிகண்முதலாவுரைப்பரும்பலபொருளாயு
மேகமாய்நின்றுந்தத்துவமறைக்குமெட்டுதற்கரியதன்வடிவிற்
பாகமாய்விளங்கும்பைந்தொடியுடனேபரிவுடன்சின்மொழிபகர்வான். (௭௮)

கேட்டிநீசெவ்வாய்க்கிளிநிகர்மொழியாய்கிரீடியைத்துணைவர்களுடனே
காட்டிலேயொதுக்கியிளைஞருந்தானுங்கடியவஞ்சனையினாற்கவர்ந்த
நாட்டிலேவாழ்வோனேவலான்மூகநாமதானவனிவன்றன்னைக்
கோட்டிலேகொலைசெயேனமாய்வந்திக்குன்றிடையின்றுபுக்கனனால். (எகூ)

மற்றவன்விரைவினுடனமர்மலைந்துவாசவன்*மதலையைவதைத்து
நற்றவமகற்றுமுன்னமேவிரைந்துநாமுயிர்கவருதல்வேண்டுங்
கொற்றவன்மதலைகேட்டனவரங்கள்கொடுத்தலும்வேண்டுமென்றெழுந்தான்
கற்றவர்வளைத்துத்திரிபுரமெரித்தோன்கற்றவர்கருத்திறைகாண்போன். (அ0)

நனைமலர்சிதறித்தொழுதுமுன்னின்றநந்திமேனயனம்வைத்தருளி
வினைபடுகேழல்வேட்டைநாமின்றேவேடராயாடுதல்வேண்டு
நினைவுறவெமதுகணத்தொடிக்கணத்தேநீயுமவ்வுருக்கொளுகென்று
மனைவியுந்தானுங்கிராதர்தங்குலத்துமகிழ்நனும்வனிதையுமானார். (அக)

வேறு.

என்றபொழுதினினந்திமுந்திமுதற்கூற்றுதைத்தவிருதாள்போற்றி
வென்றிபுனைகணநாதர்க்குரைசெய்தானவர்களுமவ்வேடங்கொண்டார்
கொன்றைகமழ்முடியோனும்வேணியினைப்பின்னல்படுகுஞ்சியாக்கித்
துன்றுமயிற்பீலிநெடுங்கண்ணிதிருநெற்றியுறச்சுற்றினானே. (அஉ)

நீலமணித்திருக்கண்டநிலவெழவேபலகறைப்பூணிறையக்கட்டிக்
கோலமணிக்குழைகளினுங்குழையாகப்பிணையன்மலர்கொண்டுசாத்திச்
சேலையெனப்புலியதளுந்திருமருங்கிலுறச்சேர்த்திச்செய்யபைம்பொற்
காலிணையிற்செருப்பணிந்துசெய்யதிருவடிவுமிகக்கரியனானான். (அங)

இடக்கைமலர்வரிசிலையும்வலக்கைமலர்ப்பாணமும்வெந்நிடையேபாண
மடக்கியவெங்கொடுவரித்தோலாவநாழிகையுமிகவழகுகூரக்
கடக்களிறன்றுரித்தபிரான்கண்டவர்கள்வெருவரமுன்கொண்டகோலந்
தொடக்கியுரைசெயநினைக்கிலாயிரநாவுடையோர்க்குஞ்சொல்லலாமோ. (அச)

வேறு.

குறைந்தசந்திரகிரணமும்பீலியுங்கொன்றையந்திருத்தாரும்
புறந்தயங்கிடவிழுந்தசெந்தனிச்சடைப்பொலிவையார்புகல்கிற்பார்
சிறந்தபைம்பொலங்கிரிமுடியடியுறத்தேவர்கோன்றிருச்செங்கை
நிறந்தருஞ்சிலைவளைவறவழகுறநிமிர்ந்துநின்றதுபோலும். (அரு)

வேறு.

வரையரசன்றிருமடந்தைவனமுலைமேன்மணிக்குன்றிவடமுஞ்செங்கை
நிரைவளையும்புலிப்பல்லாணிறந்திகழ்மங்கலப்பூணுநீலமேனி
விரையகிலினறுஞ்சாந்தும்விரித்ததழைப்பூந்துகிலும்வேடமாதர்
நிரைநிரையேதனைச்சூழநின்றவடிவழகினுக்குநிகர்வேறுண்டோ. (அசு)

ஓரேனந்தனைத்தேடவொளித்தருளுமிருபாதத்தொருவனந்தப்
போரேனந்தனைத்தேடிக்கணங்களுடன்புறப்பட்டான்புனங்களெல்லாஞ்
சீரேனல்விளைகிரிக்குத்தேவதைபாங்குழவியையுஞ்செங்கையேந்திப்
பாரேனையுலகனைத்தும்பரிவுடனேயீன்றாடன்பதிபின்வந்தாள். (அஎ)

---

* மதலையையாங்கண் என்றும் பாடம்.

அனந்தவேதமுமிறைவனேவலினான்ஞானிகளாயருகுசூழ
வனந்தகோடியிற்கோடிகணாதர்வேட்டுவராயருகுபோத
வனந்தனாலினித்தரிக்கவரிதரிதிப்பூதலமென்றமரர்கூற
வனந்தமாமுகமாகியடிச்சுவடுநோக்கினானடவியெல்லாம். (அஅ)

மூகதானவனவன்மேன்முந்தியுயிர்கவருமெனுஞ்சிந்தையானப்
பாகசாதனிதவஞ்செய்பாக்கியபூமியைநோக்கிப்பரிவினோடு
மேகசாபமும்வணக்கியேகினானேகுதலுமிலங்குவெண்ணீற்
றாகனானோக்கப்பட்டனாகியதாலருந்தவன்மேலந்தவேனம். (அகூ)

அதிர்ந்துவருகேழலைக்கண்டருந்தவத்தையழிக்குமெனவஞ்சிநாளு
முதிர்ந்தசருகுணவொழியவுணவிலான்விரைவினிற்றன்னொருவில்வாங்கி
முதிர்ந்தசினத்துடனெய்தான்முகம்புதையவக்கணைக்குமுன்னேயண்டம்
பிதிர்ந்திடவின்னாணெறிந்துவேடனதனபராங்கம்பிளக்கவெய்தான். (கூ0)

இருவருமேவியவாளியுடனேபட்டுடலுருவியேனம்வீழ
வெருவருமாறடவியெலாந்தடவிவருவெஞ்சிலைக்கைவேடன்சேனை
யொருவன்முதலெய்திருக்கவவ்*விலக்கைநீயெய்ததுரானோவென்று
பொருவருமாதவம்புரியும்புருகூதன்மதலையுடன்பூசலிட்டார். (கூக)

வேறு.

புராதனாகமவேதகீதபுராணரூபமொழித்துவெங்
கிராதனாகியவடிவுகொண்டகிரீசனோடுரைசெய்குவான்
விராதனாதிநிசாசரேசரைவென்றமுச்சிகரத்தின்மே
லிராதவாறடலமர்புரிந்தவிராமனேநிகரேவினான். (கூஉ)

முன்புவிட்டவென்வாளிகேழன்முகம்பிளந்துபினுருவநீ
பின்புவிட்டசரஞ்சிரத்திடையுருவுமாறுபிளந்ததால்
வன்பொடிப்படிபுகலுகின்றதுவன்மையோதிறல்வின்மையோ
வென்பெயர்ப்பொறியேவுபாரிதனுடலினீவிடுமேவுபார். (கூங)

ஏனக்கருந்தவமுயறலாலுதிர்சருகலாலுணவில்லையா
லுனக்குமுன்படைவேடருக்குரலுண்டியாமிதுகொண்டுபோ
வனக்குறும்பொறைநாடவுன்படைவலிமைகொண்டுவழக்கறச்
சினக்கில்வெங்கணைவிடுவன்யானுயர்திசைதொறுந்தலைசிந்தவே. (கூச)

வேறு.

என்றமொழிசெவிப்படலுமெயினர்க்கெல்லாமிறைவனாகியவெயினனிவனைநோக்கிப், பன்றிபெருமோகரத்தோடின்றுன்னாவிபருகியிடுமெனமிகவும்பயப்பட்டாயோ, நின்றுபெருந்தவமுயல்வோர்தாங்கள்கொண்டநினைவொழியப்புறத்தொன்றுநினைவரோசொல், பொன்றிடினுநீயறியப்பசுத்தோல்போர்த்துப் புலிப்பாய்ச்சல்பாய்வரோபுரிவிலாதாய். (கூரு)

† விலங்கையென்றும்பாடம்.

மறையவனோவொருகுடைக்கீழ்வையங்காக்குமன்னவனோ வைசியனோவடிவமாறிப், பொறையுடனேதவம்புரியுமவுணர்மாக்கள்புத்தேளிர்திருதரிலோர்புறத்துளானோ, நிறையுடன்மெய்ப்பிறைபோலவடிவந்தேய்ந்துநெருப்பிடைநீநிற்கின்றாய்நெடுநாளுண்டு, குறையுனக்கியாதுரையென்றானென்றபோதக்குருகுலநாதனுந்தன்னைக்கூறினானே. (கூசா)

கூறியசொற்கொண்டறிந்துவேடன்மீண்டுங் குருகுலத்தோரைவருளுங்குனிவிற்கற்றுச், சீறிவருதுருபதனைத்தேரிற்கட்டிச்சென்றகுருதக்கிணைசெய்சிறுவனீயோ, வீறியலெங்குலத்திலொருவேடன்றன்னின்மைபொறுத்தவன்றடக்கைவிரலுங்கொண்டாய், பேறறவன்றொருமுனிவன்வார்த்தைகேட்டுப்பிளந்தனைபல்வேடுவரைப்பிறைவாயம்பால். (கூஎ)

கன்றிவரு கனற்கடவுள் கையிற் றேருங்காண்டீவக்கார்முகமுங்கணையும்வாங்கி, யொன்றுபடக்காண்டவக்கானெரித்தநாளி லோருயிர்போற்பலயோனியுயிருபாட்டிக், குன்றுதொறுங்குன்றுதொறுமிருந்தவேடக்குழாமனைத்துநீறுபடக்கொன்றாயென்ப, ரின்றுமெனைமுகநோக்கிவன்மைவின்மையிரண்டுக்குமன்னவநீயிகழ்ந்திட்டாயே. (கூஅ)

மல்லுக்கும் புயவலிக்குங் கலக்குறாதமனவலிக்குமறையுடன்போர்வாளியேவும், வில்லுக்குமுனின்மிகுத்தார் மண்மேலுண்டோ விசயனெனும்பெயர்க்குரியவிசயத்தாலே, சொல்லுக்குவிடேனின்றுநீயுநானுந்தோள்வலியுஞ்சிலைவலியுங்காண்டல்வேண்டுங், கல்லுக்குநிகர்மனத்தாயென்றானந்தக்காளையும்வில்வளைத்தொருவெங்கணைமேல்விட்டான். (கூகூ)

விட்டகொடுங்கணையையொருகணையால்வேடன் விலக்கிவரிசிலைக்குரிய விசயன்றன்மேற், றொட்டனனோரிரண்டுகணையவைபோய்மார்புந் தோளுமுடன்றுளைத்தனவாற்றுளைத்தபோது, கட்டழலினிடைநின்றகாளைமீளக்கடுங்கணைகளொருமூன்றுகடிதின்வாங்கி, வட்டநெடும்பீலியணிமுடியுமார்பும்வாகுவுமேயிலக்காகவலியோடெய்தான். (க00)

எய்தகணைதிருமேனியெய்துமுன்னரிறகுதுணிந்தொன்றிரண்டாயிலக்குறாமல், வெய்தின்வலியுடனெய்தான்மூன்றுவாளிவிண்ணவர்கோன்மகன்மேலும்வேறொன்றெய்தா, னைதினிவன்வினோதமுறத்தொடுத்தானென்பதறியாமலெயினன்முடியணிந்தபீலி, கொய்துநதியறல்சிதறப்பிறையுமானுங் குலையவொருகணைகுரக்குக்கொடியோனெய்தான். (க0க)

அற்போலச்சூழ்கின்றகிராதரெல்லாமவன்முடிமேலிவனெய்ததறிந்துதீயி
னிற்போன்மேலெழுதலுமங்கவரையெல்லாநில்லுமெனக்கையமைத்துநீயின்றெய்த
விற்போர்*கண்டனமடடாவிற்பிடிக்கும்விரகறியோமுன்னிடத்தேவேதவிற்போர்
கற்போமென்றொருகணைமற்றவன்மேல்விட்டான் கனகமலைச்சிலைவளைத்தகையினா
[னே. (க0உ)

வேறு.

பீலிமுடியோன்விடுபிறைக்கணையைவேறொருபிறைக்கணையினால்விலகிவிற்
கோலிவடிவாளிமழைசிந்தினன்மழைக்கரியகொண்டலெனநின்றகுமரன்
†மூலிவடிவாமெயினன்மேலவைபடாமன்முனைமண்மிசைகுளிக்கமுரணார்
வேலியிடுமாறெனவிழுந்தனவிழுந்ததனைவிசயனனிகண்டுவெகுளா. (க0௩)

---

* கண்டனமேடா என்றும் பாடம். † மூலவடிவாம் என்றும் பாடம்.

வேணிமுடிவேடன்மிசைவேறுமொருசாயகம்விடுத்தனன்விடுத்தகணைவின்
ஞாணியறமுன்பினெடுபின்புதொடுகின்றகணைநடுவணறவெட்டுதலுமே
கோணியவிளம்பிறைமுடித்தவன்வெகுண்டுபலகோல்கள்விடவிந்த்ரகுமரன்
பாணியுடனேதொடைநடுங்கியயனின்றதொருபாதபமருங்கணுகினான். (௧௦௪)

கொண்டதவமேதனமெனப்புரியும்வில்லிமெய்குலைந்தயருகின்றநிலையைக்
கண்டருகுநின்றவிமவான்மகளுரைக்கமிகுகருணையொடிரங்கியவனைப்
பண்டுதவமேபுரியிளைப்பறமனத்தின்மிகுபரிவுடையனாகிவெகுளா
வெண்டிசையும்வென்றனலளித்தசிலைநாணியறவெயினர்பதியெய்தனனரோ. (௧௦௫)

உழுந்துருளுமெல்லைதனில்வில்லினெடுநாணறவுரத்தொடெதிரோடிவரிவிற்
கழுந்துகொடுமாமுடியின்மோதுமுனிழுந்ததுயர்கண்ணிபடுபீலிமதியின்
கொழுந்தமுதுசோரவிடநாகர்சுடிகைத்தலைகுலைந்துமணிசிந்தநதியா
ளெழுந்துதடுமாறியகல்வானிலுறவேடனுமிளைத்தவசமுற்றனனரோ. (௧௦௬)

விண்ணினுறைவானவரில்யாரடிபடாதவர்விரிஞ்சன்முதலோருததிசூழ்
மண்ணினுறைமானவரில்யாரடிபடாதவர்மனுக்கண்முதலோர்களதலக்
கண்ணினுறைநாகர்களில்யாரடிபடாதவர்கள்கட்செவிமகீபன்முதலோ
ரெண்ணில்பலயோனியினும்யாவடிபடாதனவிருந்துழியிருந்துழியரோ. (௧௦௭)

வேதமடியுண்டனவிரிந்தபலவாகமவிதங்களடியுண்டனவோரைம்
பூதமடியுண்டனவிநாழிகைமுதற்புகல்செய்பொழுதொடுசலிப்பில்பொருளின்
பேதமடியுண்டனபிறப்பிலியிறப்பிலிபிறங்கலரசன்றன்மகளார்
நாதனமலன்சமரவேடவடிவங்கொடுநரன்கையடியுண்டபொழுதே. (௧௦௮)

என்பொடுகொழுந்தசைநிணங்குருதியென்னுமவையீரிரண்டானும்வயிரா
வுன்பொடுவளர்ந்தமிருகாதிபதிகாரியெனும்வடிவழகுபெற்றமறவோ
னன்பினெடுபேரறம்வளர்த்தருளெயிற்றிமிகவஞ்சவபிராமவெயினன்
பொன்புரையுமேனியிலடித்தமைபொருதும்மற்போர்புரியுமாறுகருதா. (௧௦௯)

உள்ளடிவிரற்றலைகள்புறவடிபரட்டினுடனுயர்கணைக்கான்முழந்தா
டள்ளரியவூருவுயர்தாள்வரைகளொத்தகடிதடமுதரமார்புதிணிதோ
டுள்ளிவருசெங்கையொடுமுன்கைபிடர்நெற்றியொடுசூடமெனவெண்ணுபடையால்
வள்ளலெனையாளுடையமாதவனுமாதவனுமல்லமர்தொடங்கியுறவே. (௧௧௦)

மல்லமர்தொடங்கியிவரிருவரும்வெகுண்டுபொரமாதிரமுமாநிலமுமே
லெல்லையுமதிர்ந்துசுழல்கின்றபொழுதத்திமையவின்பமயில்கேள்வன்வெகுளா
நல்லிசைபுனைந்தமணிநூபுரவிசாலவொளிநண்ணுபதநாண்மலரினால்
வில்லியரிலெண்ணுதிறல்வில்லுடையகாளைதனைவிண்ணினுறவீசினனரோ. (௧௧௧)

விண்ணவர்தமர்புகுதவிண்ணவர்பிரான்மதலைவிசையுடனெழுந்துமுகில்போன்
மண்ணினிடைவீழ்தருமுன்*மார்பகலமல்லதைவயங்குபுறமென்றுதெரியா
னெண்ணரியஞானவொளியாகிவெளியாகிவருமெயினர்பதியானகருணைப்
புண்ணியன்மகிழ்ந்துருகநின்றொலியுடன்பழையபூசல்பொர வெண்ணியெதிர்வான்.

* மார்பமுகமல்லதை என்றும் பாடம்.

வெய்யகணநாதர்கணதேவர்விபுதாதியர்விரிஞ்சிசிவயோகியருஞ்
செய்யசுடரோனளகையாதிபதிகின்னரர்கள்சித்தர்பலசாரணர்மணிப்
பையரவினுடிபுருகூதனிவர்சூழ்தரவொர்பச்சைமயில்பாதியுடனே
துய்யவிடைமீதொருசெழுஞ்சுடரெழுந்ததுதொழுந்தகையதாகுமளவோ. (௧௧௩)

கைவினுடனேயெயினர்கோடிபலர்சூழ்வரக்கன்னிமயில்பின்னர்வரவே
தெய்வமறைஞானிகடொடர்ந்துவரவந்துபொருசெய்யசிவவேடன்முடிமேற்
சைவமுறையேயிறைவர்தன்மலரினோடறுகுசாத்தியொளிர்நாண்மலரெலா
மெய்வடிவுகொண்டனையகரியதவவேடனிணைவிழிமலர்பரப்பிமகிழா. (௧௧௪)

தும்பைவகைமாலைசெறிவில்லமொடுகொன்றைமலர்சூதமறுகேகமழ்தருஞ்
செம்பவளவேணிமிசைதிங்கணதிசூடியருள்செம்பொன்வடமேருவனையா
னும்பர்மணியாழினெடுதும்புருவுநாரதனுமுருகியிசைபாடவருள்கூ
ரம்பையுடனேவிடையின்மீதொளிரநின்றதனையஞ்சலிசெய்தன்பொடுதொழா. ()

வேறு.

ஆடினன்களித்தனனயர்ந்துநின்றன
னோடினன்குதித்தனனுருகிமாழ்கினன்
பாடினன்பதைத்தனன்பவளமேனியை
நாடினனடுங்கினனயந்தசிந்தையான். (௧௧௬)

விழுந்தருவினையினின்மெலிந்துநாயினு
மழுந்தியபிறவியினயருவேன்முனஞ்
செழுஞ்சுடர்மணிப்பணித்திங்கண்மௌலியா
யெழுந்தருளியவிஃதென்னமாயமோ. (௧௧௭)

ஆதியேயண்டமுமனைத்துமாயொளிர்
சோதியேகொன்றையந்தொங்கன்மௌலியாய்
வாதியேமரகதவல்லியாளொரு
பாதியேபவ்ளமாம்பரமரூபியே. (௧௧௮)

பையராவணிமணிப்பவளமேனியாய்
செய்யவாய்மரகதச்செல்விபாகனே
யையனேசேவடியடைந்தவர்க்கெலா
மெய்யனேயெங்குமாய்விளங்குஞ்சோதியே. (௧௧௯)

முக்கணுநிலவெழமுகிழ்த்தமூரலுஞ்
சக்கரவதனமுந்தயங்குவேணியு
மைக்கயன்மரகதவல்லிவாழ்வுறு
செக்கர்மெய்வடிவமுஞ்சிறந்துவாழியே. (௧௨௦)

அன்புறுதருமனுக்கநுசனாயினே
னன்பரம்பொருளுக்குநண்புமாயினேன்
பொன்புரைமேனியாய்போற்றினேனுனை
யென்பெருந்தவப்பயன்யார்பெற்றார்களே. (௧௨௧)

என்றுகொண்டிம்முறையிவனியம்பவே
மன்றலங்கொன்றையம்மாலைமௌலியா
னொன்றியதவம்புரியும்பர்தம்பிரான்
றன்றிருமதலையைத்தழுவினனரோ. (கஉஉ)

தழுவினன்பெருந்துயரகற்றித்தண்ணளி
பொழிதருகண்ணினன்புரக்குஞ்சிந்தைய
னழிவறவொழிவறவமர்ந்தசோதியன்
பழுதறுமொழிசிலபகர்ந்துதேற்றினன். (கஉங)

சூதினில்யாவையுந்தோற்றுக்கானிடை
யேதிலர்போலநீரிளைத்துவாடினீர்
வாதுசெய்புலன்களையடக்கிமண்ணின்மே
னீதவம்புரிந்தமைநினையலாகுமோ. (கஉச)

மூகனென்றுரைக்குமம்மூகதானவன்
வேகமோடேனமாய்விரைவில்வந்தன
னாகவெங்கொடியவனவின்றவாய்மையால்
யோகுசெயுனதுயிருண்ணவெண்ணியே. (கஉரு)

வந்தவன்முந்துமுன்மங்கைதன்னுட
னிந்தவெற்புறைதருமெயினவேடமாய்ச்
சுந்தரமரகதச்சோதிவீரனே
யந்தவல்லசுரனையம்பின்வீழ்த்தினேன். (கஉசா)

நின்னுடனமர்செய்துநின்வின்னாணறுத்
தந்நெடுவில்லினாலடியுமுண்டன
னுன்னருமல்லினாலுதையுமுண்டன
னென்னினியுன்கருத்தென்றுகூறினான். (கஉஎ)

அந்தவில்விசயனுமவன்பதம்பணிந்
தெந்தைபாரதவமர்க்கிசைந்தவீரர்மெய்
சிந்தநின்பேர்பெறுதெய்வவாளியைத்
தந்தருளென்றனன்றவத்தின்மேனின்றான். (கஉஅ)

ஐயனுமம்மையோடருள்புரிந்துபின்
வெய்யபொற்றூணியும்வில்லுமந்த்ரமுந்
துய்யபாசுபதமெய்த்தொடையுமுட்டியு
மொய்யெனநிலையுடனுதவினனரோ. (கஉகூ)

பெற்றனன்விசயனும்பேயும்பூதமுஞ்
சுற்றியகணங்களுஞ்சுருதியோசையும்
வெற்றிகொள்பெற்றமும்விழைந்துசூழவே
*கற்றையஞ்சடையவன்கயிலையேகினான். (கங0)

---

* கற்றவருடையவன் என்றும் பாடம்.

ஏகியபின்னராயிரங்கணுதனு
மோகரதுந்துபிமுழங்கத்தேரின்மே
ஞகருமுனிவருநண்ணிவாழ்த்தவே
வாகைகொள்விசயனைவந்துபுல்லியே. (௧௩௧)

நீபுரிதவப்பயனீடுவாழியே
சாபமுந்தூணியுஞ்சரமும்வாழியே
தீபமெய்யொளியுடன்சேர்ந்துபோர்செயு
மாபெருநீலமெய்வாழிவாழியே. (௧௩௨)

என்றுகொண்டிணையடியிறைஞ்சுமைந்தனைத்
தன்றிருத்தேரின்மேற்றழுந்தகைகளா
லொன்றியவுவகையோடேற்றியும்பர்கோன்
சென்றனன்றன்பெருந்தெய்வவானமே. (௧௩௩)

ஒருபெருமாதலியூருந்தேரின்மே
லிருமரகதகிரியிருந்ததென்னவே
மருவருகற்பகமாலைமௌலியும்
விரிபுகழ்மைந்தனும்விளங்கினரரோ. (௧௩௪)

ஆயிரம்பொலங்கிரியழித்துவானின்மேன்
மாயிருமொருபுரம்வகுத்ததென்னவே
பாயிரமறைபுகழ்*பரமன்றேசெனச்
சேயிரும்பொன்னகர்திகழ்ந்துதோன்றுமால். (௧௩௫)

விண்ணவர்முனிவருள்விளங்கிவாழ்தலா
னண்ணியமுடிப்பெயர்நாகம்பூணலா
லெண்ணருமகபதியிருந்தமாநகர்
புண்ணியன்வடிவெனப்புகழ்ந்திலங்குமால். (௧௩௬)

மாவலிசிறைப்படவைத்ததாண்மலர்
தாவியவிண்ணிடைத்தயங்குபொன்னகர்
தேவருந்தொழுகழற்றேவனுந்தியம்
†பூவிருந்ததுவெனப்பொலிந்துதோன்றுமால். (௧௩௭)

பொலிவுறுமந்நகர்புகுந்துதாதையுஞ்
சிலைகணைபெறுதிறற்றெய்வமைந்தனு
மெலிவுறுமின்னிடைநடங்கமீனினும்
பலரரமாதரார்பரிவுகூரவே. (௧௩௮)

பருமணிவெயிலெழப்பணிலமாநிரை
தருமணிநிலவெழத்தமனியப்பெருங்
குருமணிச்சிலம்பொலிகூருமண்டபத்
தொருமணியாசனத்தோங்கிவைகினர். (௧௩௯)

---

* பரமதேசென என்றும் பாடம்.

† பூவிரிந்தது என்றும் பாடம்.

முருகவிழ்ப்பரிமளமொய்த்ததண்டுழாய்
மரகதகிரிதிருமைத்துனன்றனைப்
பெருமிதவபிமனைப்பெற்றகாளையை
யருள்பெறுமுவகையோடன்னையெய்தினாள். (௧௪௦)

அன்னையைமின்னிடையரியபாவையைக்
கன்னலையமுதொடுகலந்தசொல்லியை
யுன்னருந்தவப்பயனுற்றமைந்தனுஞ்
சென்னியையவள்பதஞ்சேர்த்துநின்றனன். (௧௪௧)

நின்றவக்குமரனைத்தழுவிநேயமோ
டொன்றியவுவகையளுரைவழுத்தினாள்
வென்றிகொளையநீவிபுதர்தம்பிரான்
றன்றிருச்செல்வமுந்தாங்குவாயென. (௧௪௨)

ஆயிரம்பதின்மடங்காகவன்னையு
மாயிரும்புதல்வனைவாழ்த்திவாழ்த்தியே
தூயசெம்பருமணிசுடருமாளிகை
யேயினளிந்திரனிதயம்போன்றுளாள். (௧௪௩)

அந்தரதுந்துபியதிரும்பேரொலி
முந்தியமறையொலிமுழங்குஞ்சங்கொலி
சிந்துரமதகரிசிறுநீடொலி
சுந்தரமுகிலொலிதூங்கத்தூங்குமால். (௧௪௪)

பத்திகொணவமணிபயின்றுசெந்துகிர்க்
கொத்தொளிர்தளிருடன்குலவுகற்பகஞ்
சித்திரவிசயவில்விசயன்சென்னிமேல்
வைத்ததுமுருகவிழ்வாசமாலையே. (௧௪௫)

கிளரிசைத்தும்புருகிளருங்கற்பகத்
தளையவிழ்நாண்மலர்சாத்துநாரத
னளிபயிலமுதமுண்டகமகிழ்ந்துளக்
களியொடுகின்னரர்கானம்பாடவே. (௧௪௬)

* தகையுளவகத்தியன்புலத்தியன்றவ
வகைபெறுவசிட்டனேழ்வசுக்களாதிய
ரகமகிழ்ந்துவகைகொளன்பினாற்றிரு
முகமலர்ந்தருமறைமுனிவர்வாழ்த்தவே. (௧௪௭)

செம்மணிவெயில்விரிசிலம்புகொஞ்சவே
கைம்மணிவரிவளைகலந்துபொங்கவே
பெய்ம்மணிமேகலைபிறங்கியார்க்கவே
துய்ம்மணியொளியரமாதர்சூழவே. (௧௪௮)

* சிகையணிகரகத்தியன்புலத்தியன் என்றும் பாடம்.

வேறு.

இவ்வாறிவரிருவோர்களுமிணைமாமுகிலெனவே
செவ்வாளரிகிளர்கின்றதொர்செம்பொற்றவிசிடையே
மைவானகமுழுதுஞ்செழுமறையோசைவிளைக்கு
மவ்வானவர்புடைசூழ்தரவழகெய்தியிருந்தார். (௧௪௯)

இருந்தாரிவர்குளிர்சாமரையிருபாலுமிரட்டப்
பெருந்தாரகைமதியொத்தொளிபெறுகின்றகுடைக்கீழ்
முருந்தார்நகையரமாதரின்முதன்மைப்பெயர்புனையுஞ்
செருந்தார்குழலுடையாளரிதிருவூருவின்வந்தாள். (௧௫0)

* மானேதருவிழியாடிருமாதேநிகரெழிலா
டேனேதிகழ்மொழியாள்பொரு† சிலையேதருநுதலா
டானேதனைநிகர்வாள்பெயர்தருநாடகமெல்லாங்
கானேசெறிதொடையாரிருகண்கண்டுகளித்தார். (௧௫௧)

இந்நாடகவிதம்யாவையும்யாரேதனிபுரிவார்
மின்னேரிடைமின்னேரிழைமென்கொம்பையலாதா
ரென்னுவிழிகளியாமனமுருகாவிசையெழுதும்
பொன்னூடுடையவன்மைந்தன்வியப்போடுபுகழ்ந்தான். (௧௫௨)

திகழ்கின்றனவுரைதந்தைசெவிப்போதுறமகிழா
விகல்கொண்டுயர்தோளாய்புதிதிந்நாடகமென்னு
மகவான்பெருமிதவாழ்வுரைவானோர்முதல்யாரு
மிகுகுங்குமமுலையாருடன்விடைகொண்டிடவிட்டான். (௧௫௩)

‡ மகனும்புகழ்புனைதந்தையுமந்தாகினியாடிச்
சிகரம்பயில்வரைபோலுயர்திருமண்டபமிசையே
யகிறுன்றியகுழலார்பலரரமாதரளிக்கு
நிகரம்பயிலமுதுண்டவர்நிறைவெய்தியிருந்தார். (௧௫௪)

தருக்குங்களியமுதுண்டவர்தனிவாழ்வுறுமெல்லைச்
சுருக்குங்கணைமணிநீள்வெயில்சுடர்மாளிகைவேறொன்
றிருக்கும்படிவிசயன்பெறவீந்தான்விடையதுகண்
டருக்கன்குடகடன்மாளிகைபணிதேரொடடைந்தான். (௧௫௫)

மேலைத்திசைகாலைச்சுடர்வீழ்தந்திடுமுன்ன
மாலைச்சுடர்காலைத்திசைவாழ்வுற்றிடவந்தான்
சோலைத்தருவருள்வாரிதிசூழ்வான்முகடேறிப்
பாலைப்பொழிவதுபோனிலவொளிகொண்டுபரப்பா. (௧௫௬)

---

* மானேர்தரு என்றும் † சிலையேபொரு என்றும் பாடம்.

‡ வகைகொண்டுயர் தோளாரவர் மந்தாகினி என்றும் பாடம்.

அந்தச்சிலைமகவான்மகனம்மாளிகையிடையே
முந்துற்றதொர்தவிசிற்கருமுகில்போலவிருந்தான்
கந்தர்ப்பன்வெகுண்டேவிய *கணைபட்டுளமுருகா
நொந்துற்றுமுனடனம்புரிநுண்ணேரிழையங்கண். (௧௫௭)

அக்கங்குலினிடையேமலரரிசந்தனவாச
மைக்கங்குனிகர்க்கும்பருமணிநீலமணிந்தா
† ளுய்க்கும்பரிமளநீலிதவுடையாடையுடுத்தாண்
மெய்க்குந்தவவயவாளிகொள்விசயன்னுழைவந்தாள். (௧௫௮)

ஓராயிரமகல்வான்மணியொக்குந்தவிசிடையே
யீராயிரதீபங்களெறிக்குஞ்சுடரெழவே
வாராயிரமுகமாநகர் ‡மஞ்சூர்தருநயனப்
பேராயிரமுடையான்மகனெதிர்கொண்டிவைபேசும். (௧௫௯)

எந்தைப்பெயர்புனையாயுமெனும்பேர்முடியிறைவன்
றந்தைக்குயிர்நிகராகியதளவத்திருநகையாய்
கொந்துற்றெழுகுழலாய்க்குழனிகராகியமொழியாய்
வந்துற்றதெனெனவன்னைமலர்த்தாள்களில்வீழ்ந்தான். (௧௬௦)

இவ்வாறிவனவடாள்களிறைஞ்சிப்புறநின்றான்
மெய்வாய்மையினுயருந்தவவிபுதாதியர்மகளுஞ்
செவ்வாயிதழ்மடியாவிழிசிவவாவுளமழலா
வெவ்வாளரவுமிழுங்கடுவிடநேர்மொழிபகர்வாள். (௧௬௧)

இந்தத்தனியிரவின்கணின்னிருதோடழுவுறவே
வந்துற்றவெனைத்தாயர்தம்வகையிற்புகல்செய்யா
நிந்தித்தனைநீசெய்தவநெறியின்பயனெல்லாம்
வெந்துற்றருநீறாயெழவிடுவேனெனவெகுளா. (௧௬௨)

நின்போன்மரபுடையாரிருநிலமன்னரினுண்டோ
வன்போடழல்வருபாவையையடைவுன்னியளித்தாய்
பொன்போலிரவிடையாடவர்புகலாமொழிபுகல்வாய்
வன்போவருணலமோபெருமிதமோவளர்புகழோ. (௧௬௩)

எனமன்னனைநீபேடியரியல்பாகெனவிதியா
நனைமென்குழன்மலர்மங்கைபுனாணுந்நலமுடையா
டனிகங்குலினிடைசென்றுயர்தன்கோயில்புகுந்தா
ளனலன்றருசிலைவீரனுமஃதெய்தினனந்தோ. (௧௬௪)

ஆடித்திருமுகமன்னவனநுசன்றருவிசயன்
பேடிப்பெயர்நாமோபெறுவோமென்றெழில்வடிவம்
வாடிப்பெரிதுளநொந்தணிமாசற்றதொர்தூசான்
மூடித்துயில்கொண்டான்மணிமுடிமன்னவர்திலகன். (௧௬௫)

---

* கலகக்கணைபடவே என்றும் பாடம்.
† உய்க்கும்புகை நிகர்நீலிதவுடை என்றும் பாடம்.
‡ மஞ்சேநிகர் செங்கட் என்றும் பாடம்.

அக்காலையில்விசயன்றனதிடராரிருளகலச்
செக்காவிபுமரவிந்தமும்வரிவண்டொடுதிகழ்
மைக்காரிருள்வெள்ளம்பிலவள்ளத்திடைவடியத்
தொக்கானுயர்குணதிக்கினிலகிலந்தொழுசூரன். (௧௬௬)

வேறு.

கதிருதித்தவக்காலையின்மாமறை
முதல்வர்முப்பத்துமூவருஞ்சூழ்வரப்
புதல்வனுற்றதுணரான்புரந்தரன்
விதமணிப்பணிமண்டபமேவினன். (௧௬௭)

கண்பரப்பியோர்கந்தருவன்றனை
விண்புரக்குமவ்வேந்தனிருந்தபின்
மண்புரக்கும்வரிசிலைவீரனை
யெண்பெறக்கொணர்வாயெனவேவினன். (௧௬௮)

மற்றவன்றிருத்தாண்மலர்போற்றியக்
கொற்றவன்றிருமுன்னர்க்குறுகியாங்
குற்றயாவுமுணர்ந்தனன்மீண்டுபோய்ச்
சொற்றனன்சுரர்கோமுன்றொழுதரோ. (௧௬௯)

சொன்னவாசகங்கேட்டசுரபதி
கன்னம்வெந்துகண்ணாயிரமும்புன
றுன்னவானவர்சூழ்வரத்தானும்போ
யங்கராதிபன்றன்னையணுகினன். (௧௭௦)

அணுகிமைந்தனையன்பொடுறத்தழீஇக்
கணிகையிட்டகடுங்கொடுஞ்சாபநீ
தணிதியஞ்சலென்றுரைதுமை தடலாற்
பிணியுழந்துமுன்பேர்பெறும்பெற்றியான். (௧௭௧)

அன்னமென்னடையாயிழைதன்னுழைத்
துன்னினன்சுரரோடுஞ்சுரேசன்போய்
மின்னினுண்ணிடையாளும்வெருவுறு
மன்னவன்பதம்வந்துவணங்கினள். (௧௭௨)

வணங்குமுன்னமடநடையோதிமக்
கணங்கொளென்னச்சவின்பெறுகோதையைச்
சுணங்கருமுலைத்தோகையைவார்குழ
லணங்கையண்டரனைவரும்போற்றியே. (௧௭௩)

அன்னைநீயவற்காயினுமாசையி
னின்னதீர்ப்பதெவர்க்குமியல்பரோ
மன்னனாயினும்வான்பிழைசெய்தன
னென்னநாகரவட்கிதங்கூறியே. (௧௭௪)

காமமிக்கவுன்கட்டுரைச்சாபநோய்
பூமிபொய்ப்பினும்பொய்ப்பதன்றலரோ
வேய்மலர்த்தொடையானெஞ்சில்வேண்டுநா
ளாமவற்கிவ்வுருவருள்செய்திநீ. (களரு)

என்றுவானவர்யாவருமேத்தவே
யன்றவற்கவ்வரங்கொடுத்தாளவள்
வென்றிவார்சிலைமீளியுந்தன்பெருந்
துன்றுகோலஞ்சிறந்திடத்தோன்றினன். (களசு)

அருச்சுனன்றவநிலைச்சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள்-கசசஉ.

நிவாதகவசர்காலகேயர்வதைச்சருக்கம்.

அவ்வரந்தனக்குநல்குமன்னைதாள்வணங்கும்வென்றிக்
கைவருசிலையினானைக்கடவுளர்க்கிறைவன்கொண்டு
மொய்வருசுரர்கள்சூழமுதன்மைசேர்சுதன்மையெய்தி
வெவ்வரிமுகத்தபீடம்விளங்கவீற்றிருந்தகாலை. (க)

தூண்டருதோளின்மொய்ம்பானம்வலிதொலைத்துமேன்மேன்
மூண்டெழுமவுணர்தம்மையிவனன்றிமுடிப்பார்யாரென்
றாண்டகையமரர்க்கெல்லாமவன்செயலடைவேசொல்லிக்
காண்டவமெரித்தவீரனிவனெனக்காட்டினானே. (உ)

அவ்வுரைகேட்டதேவரகமகிழ்ந்தவனுக்கன்பாற்
றிவ்வியமறையின்மிக்கதக்கிணைபலவுஞ்செய்தார்
செவ்வியதாதைதானுஞ்சேணதித்தூநீராட்டி
விவ்விரவாதவாசத்தாமமும்விழைந்துசூட்டி. (ஈ)

ஆயிரங்கதிருந்திங்களனந்தமுமடங்கமேன்மேற்
காய்கதிர்விரிவதியார்க்குங்கருத்துறக்காணவொண்ணாச்
சேயொளிதவழ்வதாகித்திசைமுகன்றனக்குநல்கு
மாயிருங்கிரணரத்நமவுலியுங்கவித்தானன்றே. (ச)

ஆடையுங்*கலனுந்தெவ்வையடுந்திறற்படையுநல்கி
யேடவிழலங்கலானோராசனத்திருத்தியென்றுந்
தேடுதற்கரியதூயவமுதுசெம்பொற்கலத்திற்
கூடவுண்டமரர்க்கெல்லாங்குரிசிலாஞ்சிறப்புஞ்செய்தான். (ரு)

அன்னதுநிகழ்ந்தகாலையவன்றிருத்தேவிகண்டு
துன்னியகோபச்செந்தீ†விழியுகச்சிலசொற்சொன்னாண்
மன்னியபுவியில்வைகுமானுடமன்னன்வந்துன்
றன்னுடனெக்கவுண்ணத்தக்கதோவுரைத்தியென்றே. (சு)

---

* கலனு மந்த்ரத் துடனடற் படையு நல்கி என்றும் பாடம்.
† விழியுகப் பொருது சொற்றாள் என்றும் பாடம்.

என்றலுங்கடவுள்வேந்தனிருபுயங்குலுங்கநக்கு
மன்றலந்துளபமாயோன்மைத்துனனெனக்குமைந்தன்
கொன்றையஞ்சடையானோடுமமர்புரிகுரிசிறன்னை
நன்றியின்மனிதனென்றிங்கிகழ்வதேதோநங்கையென்றான். (எ)

ஆங்கதுகேட்டதேவரடிபணிந்தரியவேந்தே
பூங்கொடிதருவோடன்றுபுவியினிற்கவர்ந்தவீரற்
கோங்குமைத்துனனேயாகிலிதனின்மற்றுறுதியுண்டோ
வீங்கிவன்புகுந்தசூழ்ச்சிக்கேதுவுண்டாகுமென்றார். (அ)

தேவர்தம்முரையுந்தேவிசெப்பியவுரையுங்கேட்டுத்
தாவரும்புரவித்திண்டேர்த்தனஞ்சயன்றொழுதுசொன்னான்
யாவரும்பரவுமுன்றனுடனோராசனத்திருந்து
மேவருமுடியுஞ்சூடப்பொறுக்குமோவிமலவென்றே. (கூ)

அவனுரைமகிழ்ந்துகேட்டாங்கமரருக்கதிபன்சொல்வான்
புவனமூன்றினுக்குமுன்னைப்போலொருவீரனுண்டோ
சிவனருள்படையும்பெற்றாய்செந்தழலளித்ததெய்வக்
கவனவாம்பரியுந்தேருங்கணையுங்கார்முகமும்பெற்றாய். (கo)

பிரமனேமுதலாவெண்ணும்பேர்பெறுந்தேவரீந்த
வரமிகுமறையுங்கொற்றவான்பெரும்படையும்பெற்றா
யருமறைமுறையேபார்க்கினமரர்மற்றுன்னினுண்டோ
திருவரும்வின்மைவீரசெப்புவதொன்றுகேளாய். (கக)

கற்றவர்கலைகள்யாவுங்கசடறக்கற்பித்தோர்கள்
பெற்றிடக்கொடுக்குஞ்செல்வமுண்டென்றுபெரியோர்சொல்வர்
கொற்றவவுனக்குநானுங்கூறுநற்குருவேயாகு
முற்றவாறெனக்குநீயுமொருவரந்தருகவென்றான். (கஉ)

தந்தைசொன்மகிழ்ந்துகேட்டுத்தனுவினுக்கொருவனான
மைந்தனுந்தேவர்க்கையமானுடர்செய்வதுண்டோ
சிந்தையினிகழ்ந்ததொன்றுசெப்புகென்றவனுஞ்செப்ப
விந்திரன்றானுமீண்டுமின்னனபகரலுற்றான். (கங)

ஆழிநீரழுவத்தென்றுமுறைபவராழியானு
மூழியினாதன்றானுமுருப்பினுமுலப்பிலாதோ
ரேழிருபுவனத்துள்ளோர்யாரையுமுதுகுகாண்போர்
கோழியான்றனக்குந்தோலாவவுணர்முக்கோடியுண்டால். (கச)

தவாதபோர்வலியின்மிக்கதவத்தினர்சாபம்வல்லோர்
சுவாதமேவீசியெல்லாவுலகையுந்துளக்குகிற்போர்
விவாதமேவிளைக்குஞ்சொல்லர்வெகுளியேவிளையுநெஞ்சர்
நிவாதகவசத்தரென்னும்பெயருடைக்கொடியநீசர். (கரு)

மற்றவரெனக்குநாளும்வழிப்பகையாகிநிற்போர்
கற்றவர்வணக்கினாற்குங்கடக்கரும்வலியின்மிக்கோர்
செற்றிடநின்னையன்றிச்செகத்தினிற்சிலர்வேறுண்டோ
வெற்றிவெஞ்சிலைகொள்வீரவிவ்வரம்வேண்டிற்றென்றான். (௧௬)

செருவென்றமாற்றங்கேட்டுச்சிந்தையினுவகைபொங்க
மருவொன்றுமலங்கன்மார்பும்வாகுபூதரமும்பூரித்
துருவொன்றுமதனையொப்பானொருப்பட்டானுரைப்பதென்னோ
திருவொன்றும்வண்மைவீரன்மறுக்குமோதேவர்கேட்டால். (௧௭)

காற்றெனக்கடியவேகக்கனலெனக்கொடியவென்று
மேற்றிசையெல்லையெல்லாம்வீதிபோயொல்லைமீள்வ
கூற்றமுமுகிலுமுட்கக்குமுறும்வெங்குரலுமேன்மேற்
சீற்றமுந்திறலுமிக்கதீக்கதிசெலாததூய. (௧௮)

ஆயிரப்பத்துவெம்போரடற்பரிபூண்டதேரு
மாயிருங்கலையின்மிக்கமாதலிதனையுநல்கிக்
காயிருங்*கிரணரத்நகவசமுங்கொடுத்துப்பின்னர்
வேயிருந்தெரியலாற்குச்சுரபதிவிடையுமீந்தான். (௧௯)

விடையெனத்தொழுதுபோந்துவெஞ்சிலைவினோதவீரன்
சுடுசரத்தூணிகொற்றப்புயத்தினிற்றுதையத்தூக்கி
யிடுமணிக்கவசமெய்ப்பிலெழிலுறப்புனைந்துதன்னைத்
திடமுடைச்சிங்கமன்னன் செருத்தொழிற்கோலஞ்செய்தான். (௨௦)

மோதுபோர்தனக்குவேண்டுமுரட்படைபலவுங்கொள்ளாக்
கோதைவிற்றடக்கைவீரன்கொடிமணித்தேர்மேற்கொண்டு
மாதலிப்பெயராயபந்தவஞ்சரெத்திசையரென்றான்
சூதனுமவனுக்கன்னோரியல்பெலாந்தோன்றச்சொல்வான். (௨௧)

தோயமாபுரமென்றுண்டுதொடுகடலழுவத்தொன்று
மாயமாபுரமேயொக்குமப்புரமதனில்வாழ்வோர்
தீயவரென்றுசெப்பிச்சித்திரசேனன்றன்னைத்
தூயநன்னெறிகாட்டென்றுசூதன்றேர்தூண்டுமெல்லை. (௨௨)

மொய்திறற்கடவுளோர்முப்பத்துமுக்கோடியாலுஞ்
செய்தமர்தொலைக்கவொண்ணாத்தயித்தியர்சேனைதன்னை
யெய்தொருமனிதன்வெல்வதேழைமைத்தென்றுநக்கார்
மைதவழ்கருங்கட்செவ்வாய்வானவர்மகளிரெல்லாம். (௨௩)

மங்கையர்வாய்மைகேட்டுமணிக்குறுமுறுவல்செய்து
கங்கையம்பழனநாடன்கடிமதில்வாயில்செல்ல
வங்கவன்றன்னைக்கண்டவணிகழல்மரரெல்லா
மங்குல்வாகனனென்றெண்ணிக்கதுமெனவந்துதொக்கார். (௨௪)

* கிரணச் செம்பொற் கவச மென்றும் பாடம்.

கார்க்கோலமேனியானைக்கண்டபிணையநீங்கிப்
போர்க்கோலமிவனுக்கெவ்வாறிசைந்ததுபுகறியென்று
தேர்க்கோலஞ்செய்வான்றன்னைச்செப்பினரவனும்போற்றி
வார்க்கோலபுரத்துவைகுமவுணரைவதைத்தற்கென்றான். (உரு)

என்றவனுரைத்தமாற்றமின்புறக்கேட்டுநெஞ்சிற்
றுன்றியவுவகைதூண்டச்சுருதியாலாசிசொல்லி
வென்றுமீள்கென்றுவாழ்த்திவிரைவினில்வீரன்றன்னைச்
சென்றிடுகென்றுதேவர்தத்தமிற்சிறப்புமீந்தார். (உசு)

சம்புவன்சம்புமாலியெனும்பெயர்த்தனுசர்தம்மை
யும்பர்கோன்வதைத்தவந்நாளூர்ந்ததெவ்வுலகுமேத்துந்
தும்பையஞ்சடையான்வெற்பைத்துளக்கியசூரன்மாள
விம்பவார்சிலைபிராமன்வென்றநாளூர்ந்ததித்தேர். (உஎ)

ஆதலாலித்தேர்மேல்கொண்டடல்புனையவுணருக்குப்
பேதியாக்கவசம்பெற்றுப்பிறங்குபொன்முடியும் பெற்றாய்
சோதிலாயெங்களைஞ்சிற்குறைபெலாந்தீர்த்தியென்றார்
போதில்வாழயனுமொவ்வாவாய்மொழிப்புலவரெல்லாம். (உஅ)

வீரனுமுவகைதூண்டவிண்ணவர்மலர்த்தாள்போற்றிச்
சாரதிதடந்தேர்தூண்டத்தபனனில்விசும்பிற்சென்றான்
கார்நிறக்குன்றமொன்றைக்கனகவான்குன்றேறேந்திச்
சீருறப்பறந்துவானிற்றிசையுறச்செல்வதொத்தே. (உகூ)

வேறு.

திரைகொழித்திடுஞ்சிந்துவின்சூழலிற்
குரகதத்தடந்தேர்போய்க்குறுகலு
மரகதக்கொண்டன்மாதலிக்கன்பினால்
விரகுறச்சிலமாற்றம்விளம்பினான். (௩0)

இப்புரத்திலவுணரியல்பெலாஞ்
செப்பெனக்குத்தெரிதரவென்றலு
மப்புரத்தவராண்மையுந்தோற்றமுஞ்
செப்பலுற்றனன்றிண்டிறற்றேர்வலான். (௩க)

தெழித்தசொல்லினர்சிற்றவெந்தியுக
விழித்தகண்ணினர்விண்முகிலைக்கவி
னழித்தமேனியராழ்வெம்பிலத்தையும்
பழித்தகன்றபெரும்பகுவாயினர். (௩உ)

மண்ணுநீருமனலுமருத்துடன்
விண்ணும்வேண்டின்விரைவின்முருக்குவ
ரெண்ணெயூட்டியிருட்குழம்பாலெழில்
பண்ணியாக்கைவகுத்தன்னபான்மையார். (௩௩)

மற்புயாசலத்தின்வலியாலிகற்
சற்பராசன்றலைச்சுமைமாற்றுவா
ரற்பவாழ்வுடையம்போருகத்தர்தங்
கற்பகோடிகடையுறக்காண்குவார். (௩௪)

பாழியாடகவெற்பிற்படர்சிரங்
கீழதாகக்கிளர்மூச்சடக்கிநின்
றாழிநாளுந்தவமுயன்றோங்குவா
ராழிநீருமளவிடுந்தாளினர். (௩௫)

வதிசூலமெழுமழுவிட்டியின்
சாதிசக்கரந்தாங்குந்தடக்கையார்
மோதுபோரெனின்மொய்ம்புடன்முந்துவோ
ரோதமேழுமுடனுண்டுமிழுவோர். (௩௬)

கூருநல்லுரைகூறினுங்கூற்றுடன்
கார்தொறும்மிடிசேர்ந்தன்னகாட்சியார்
தேர்தொறுஞ்செருச்செய்யுமத்தேவரைப்
போர்தொறும்புறங்கண்டன்றிப்போகலார். (௩௭)

மூன்றுகோடியசுரர்முகிலெனத்
தோன்றுமேனியர்தோமறுமாற்றல
ரேன்றுபோர்பொரினெவ்வெவ்வுலகையுங்
கீன்றுசேரக்கிழிக்குமெயிற்றினர். (௩௮)

செப்புரத்தினிற்செஞ்சடைவானவன்
முப்புரத்தைமுனிந்தவந்நாளினுந்
தப்புரத்தர்சதமகன்றன்னைவென்
றிப்புரத்தையிவர்கவர்ந்தாரென. (௩௯)

தீதிலாத்திறற்சித்திரசேனனைக்
கோதிலாதகுனிசிலைவீரற்கு
மோதுபோர்தரமொய்ம்புடைவஞ்சர்பாற்
றாதுபோகெனப்போக்கித்தொலைவிலான். (௪௦)

விண்ணின்மீதுவிரைவுறுந்தேரினை
மண்ணின்மீதுநடத்தினன்மாதலி
யண்ணலுந்தனருஞ்சிலைநாணியின்
றுண்ணெணோதைதொடரத்துரந்தினன். (௪௧)

தேரினார்ப்பொலியுஞ்சிறுநாணெணுங்
காரினார்ப்பொலியுங்கலந்தெங்கணும்
பாருமேற்றிசையும்பகிரண்டமுஞ்
சேருநாற்றிசையுஞ்செவிடாக்கவே. (௪௨)

அந்தவோசையவுணர்செவிப்புக
முந்தவோடிமுடுகிமுறுவலித்
திந்திரன்பொரவந்தனனென்றுதஞ்
சிந்தைகன்றிவிழியுஞ்சிவந்திட்டார். (சங)

போயதூதனுஞ்செம்பொற்புரிசைசூழ்
தோயமாபுரந்தன்னிற்றுதைந்தவம்
மாயவஞ்சர்மறுகவெம்புண்ணின்மேற்
றீயையொப்பனசில்லுரைசொல்லுவான். (சச)

ஒருகுலத்தினில்வேந்துமொவ்வாதுயர்
குருகுலத்திற்குனிசிலைவீரற்குத்
தருகயுத்தந்திறலுடைத்தானவர்
வருகமற்றும்வரூதினிதன்னொடும். (சரு)

என்றுதூதனிசைத்ததுகேட்டனு
நன்றெனக்கைபுடைத்துநகைத்திடாக்
கன்றுநெஞ்சினர்கண்கள்செந்தீயுகத்
துன்றுகோபத்துடனவர்சொல்லுவார். (சசு)

பூசையொன்றுபுலியின்குழாத்துட
னாசைகொண்டுபொரவந்தழைப்பதே
வாசவன்பெருவாழ்வுக்கெலாமொரு
நாசம்வந்துபுகுந்ததெனாநகா. (சஎ)

வரையுளானுமலரினுளானும்வெண்
டிரையுளானுஞ்செகுப்பருநம்முடன்
றரையுளான்வந்துபோர்பொரத்தக்கதோ
வுரையுளாரென்றுரையிருணரவே. (சஅ)

தனுசர்தானைதனைமதியாதொரு
மனுசன்வந்துமலையமதிப்பதோ
வனுசருங்கொலையாடலவுணருங்
குனிசெயுஞ்சிலையென்றுகொதித்திட்டார். (சகூ)

செங்கணைக்கொடியவன்செல்வமுந்
தங்கணுடுங்கவரத்தரிப்பறப்
பொங்குகானிற்புகுஞ்சிலைவீரனை
வெங்களோடுமெதிர்க்கவந்தெய்தினன். (ருo)

என்றுகூறியிகலசுராதிபர்
துன்றுசேனைக்குழாம்புடைசூழ்வரச்
சென்றுகாந்தத்திரைக்கடலார்ப்பபோ
லொன்றயாருமொருங்குசென்றுற்றனர். (ருக)

ஆனைதேர்பரியாளெனுநால்வகைத்
தானையோடுமெழுந்தனர்தானவர்
வானுமண்ணுந்திசையுமற்றெண்பெறு
மேனைலோகமுமெங்குநடுங்கவே. (ருஉ)

சங்கும்பேரியுந்தாரையுஞ்சின்னமுந்
துங்கமாமுழவுந்துடியிட்டமு
மங்கண்மாமுரசும்முகவந்தத்திற்
பொங்கும்வேலையொலியிற்புலம்பவே. (ருங)

சூலநேமியெழுமழுத்தோமரங்
கோலும்வார்சிலைகுந்தங்கொடுங்கணை
நாலுதானைநடுவுஞ்சுடரயில்
வேலும்வாளின்விதமுமிடையவே. (ருச)

*முந்துகோபவசுரர்முடுகுதே
ருந்துவீரனொருதனித்தேரினை
வந்துசூழவளைத்தார்மதுமலர்க்
கொந்துசூழ்வரிவண்டின்குழாத்தினே. (ருரு)

நீலமால்வரைபொன்றினெருக்கிவீழ்
காலமாமுகிலென்னக்கடியவர்
கோலும்வார்சிலைக்கொண்டலன்றன்மிசைச்
சூலநேமிசுடுசரந்தூவினர். (ருசா)

வேறு.

அக்கார்முகவீரனுமங்கவர்தம்
மைக்கார்முகிலென்னவழங்கியதிண்
மெய்க்காய்கணைசாபம்விசித்துவிடா
நக்கானிவைநின்றுநவின்றனனே. (ருஎ)

திக்கோடியநுந்திறலும்புகழுந்
தொக்கோடியுடற்றுபடைத்தொகையுங்
கைக்கோடியவெஞ்சிலையின்கணையான்
முக்கோடியுமின்றுமுருக்குவனால். (ருஅ)

முன்போர்தொறும்வந்துமுனைந்துவெரீஇ
வென்போகியவிண்ணுறைவீரரலேன்
பொன்போலுநும்மேனிபொடிச்செய்திடாப்
பின்போகுவனென்றிவைபேசலுமே. (ருகா)

தழல்வந்தருள்பாவைதடந்துகிலுங்
குழலுங்கவர்தந்தடல்கூருமமக்
கழறுன்றியகானமளித்தவனாக்
கழல்வெஞ்சிலைவீரகடிந்திலையே. (சா0)

*முந்துதோயவசுரர் என்றும் பாடம்.

என்னுவசுரேசரிசைத்தனுமே
மன்னுகவவீரனும்வார்சிலைநாண்
டன்னுகமுறத்தழுவத்தழல்வாய்
மின்னூர்கணைதூவிவெகுண்டனனே. (௬௧)

பொய்த்தானவர்போரரியன்னவன்மேன்
மொய்த்தார்முகில்செங்கதிர்மூடுவபோல்
வைத்தாரைவடிக்கணைவாண்மழுவே
லுய்த்தார்வரைமே* லுருமேறெனவே. (௬௨)

என்முன்னவனென்முனெனுவெவரு
முன்முன்வரமுந்தமுருக்கினனுந்
றன்முன்னொருவீரர்தராதலமேல்
வின்முன்னினிலாவிறல்வில்விசயன். (௬௩)

ஒருதேர்கொடுவீரனுடன்றவர்தங்
கரிதேர்பரியாளணிகையறமுன்
னிருதேசரைவென்றவனேரெனமேல்
வருதேரணிதோளுமலைந்திடவே. (௬௪)

வீரன்சரம்வஞ்சகர்மெய்ம்முழுதுங்
கூரும்படிசென்றுகுளித்திடலா
லாரும்பொரவஞ்சினரப்பொழுதிற்
றேருந்தினரெண்ணிறபித்தியரே. (௬௫)

என்னேயொருமானுடனுக்கெவருங்
கொன்னேயடலாண்மைகொடுக்குமதோ
வின்னேயிவனுவியழித்திமையோர்
முன்னேவயவாகையுமுற்றுவமால். (௬௬)

காளப்புயலென்னநிறங்கரியார்
மீளப்படைகொண்டுவிரைந்துவெகுண்
டாளித்திறன்மொய்ம்பனையங்கடலால்
வாளக்கிரியென்னவளைந்தெவரும். (௬௭)

ஆர்த்தாரகல்வானமுமாழ்கடலுந்
தூர்த்தார்சுடர்வெம்படைகொண்டெவருந்
தேர்த்தானவர்வானுறைதேவருமெய்
வேர்த்தாரினிமேல்விளைவேதெனவே. (௬௮)

கூற்றொப்பனபல்படைகொண்டவன்மேற்
சீற்றத்தொடெறிந்தனர்தீயவரு
மாற்றற்சிலைவீரனுமவ்வவ்வெலா
மாற்றிச்சரமாரிவழங்கினனால். (௬௯)

---

*உருமுற்றெனவே எனவும் பாடம்.

அவன்விட்டசரங்களறுத்தணிதேர்
கவனப்பரிபாகுகலக்கமுறப்
பவனத்துடனங்கிபரந்ததுபோற்
றவனித்தவர்வெம்படைதூவுதலும். (௭௰)

கட்டார்முதுகார்முகவீரனுமுன்
கிட்டாவுலகோர்புகழ்கேழ்கிளர்சீர்
முட்டாமரைமேன்முனிவன்படையைத்
தொட்டானசுரேசர்தொலைந்துகவே. (௭௧)

காற்றாய்மிகமண்டிகடுங்கனலாய்க்
கூற்றாயவராவிகுடித்துகுசெஞ்
சேற்றாலொருபாதிசிவந்ததுபா
ரேற்றாரொருபங்கெனவெங்கணுமே. (௭௨)

நூறாயிரதேரணிநூறியுமே
லாறாதசினத்துடனக்கணைபோய்
மாறாயவர்மார்பமும்வாண்முகமுஞ்
சீறாவெதிர்சென்றுசெறிந்ததுவே. (௭௩)

குருகோடியையுங்குருதிக்கடல்வா
யொருகோடிதயித்தியராருயிருண்
டருகோடியவாளியடர்ப்பதுகண்
டிருகோடியுமுற்றனமற்றிவன்மேல். (௭௪)

வேறு.

இருண்டதுமண்ணும்விண்ணுமெல்லையெண்டிசையுமெங்கும்
புரண்டதுகுருதிவெள்ளமூழிவெங்கடலிற்பொங்கி
முரண்டகுதேரோன்றன்னைமொய்த்தவெம்பனிபோன்மூடித்
திரண்டதுதிருகிமீண்டுந்திறலுடைத்தகுவர்சேனை. (௭௫)

எங்கெங்கேயெங்கேவல்வின்மனிதனென்றெதிர்ந்தோர்யார்க்கு
மங்கங்கேயங்கேயாகியவரொடுமடுபோர்செய்தான்
சங்கங்கேய்செங்கைநல்லார்விடுத்தனசுரும்பின்சாலங்
கொங்கெங்கேயெங்கேயென்றுதனித்தனிகுடையுந்தாரான். (௭௬)

கார்முகக்கொண்டலன்றன்மிசைக்கடுங்கணைகளேவித்
தேர்முகத்தியக்கமாற்றித்திதிமைந்தர்வெம்போர்செய்யப்
போர்முகத்தொருவரொவ்வாப்புரிசிலைவீரன்றானுங்
கூர்முகப்பகுவாய்மாயோன்கொடுங்கடும்பகழிகோத்தான். (௭௭)

விண்ணிடத்தசனிநாகர்மேல்வெகுண்டிடுவதென்ன
வெண்ணுடைச்சேனைவெள்ளமெங்கணுந்தானேயாகி
வண்ணவிற்படையிராமன்வாரிதிவெள்ளம்வீத்த
பண்ணெனப்படுத்ததந்தப்பைந்துழாய்ப்பரமன்வாளி. (௭௮)

தசையும்வெம்பிணமுந்துன்றத்தனித்தனிபெருகியெல்லாத்
திசைதொறுங்குருதிநீத்தந்திரைக்கடற்சென்றுமண்ட
வசைவிலாவவுணர்மீண்டுமந்தரத்தொளித்துநின்று
விசயவில்விசயன்றன்மேல்வெகுண்டுவெம்படைகள்விட்டார். (எகூ)

விட்டவெம்படைகளெல்லாம்விண்ணிடைச்சுண்ணமாக
கட்டமுதுடையவீரன்மகேந்திரக்கணையால்வீக்க
வெட்டுணைப்பொழுதில்வஞ்சரெழிலியின்படைமேல்வீச
வட்டவார்சிலையினானுமண்டழற்படையான்மாற்ற. (அ0)

மண்டிமேலெழுந்திங்கெல்லாவுலகையுமடிக்குமாயச்
சண்டவாயுவின்பேர்வாளிதானவரவன்மேலேவ
* வண்டமுந்துளங்கவோங்குமருவரைப்பகழிவிட்டா
னெண்டிசைமுழுதுந்தன்பேரெழுதுபோர்விசயனென்பான். (அக)

காற்றும்வெங்கனலுங்காருமிடியுங்கன்மழையுமெங்குந்
தோற்றியவிருளுமின்னுந்திசைதொறுஞ்சூழ்ந்துபொங்கக்
கூற்றும்வாய்குழறியஞ்சக்கொடியமாமாயவாளி
யாற்றல்சாலரியன்றன்மேலெறிந்தடலவுணரார்த்தார். (அஉ)

கன்மழைசொரிந்துவேகக்கனன்மழைவிசியெங்கு
மின்மழைசிந்திமிக்கவசனியின்மழைகள்வீழ்த்திச்
சென்மழைசிதறியெல்லாத்திசைதொறும்பரந்துகொற்ற
வின்மழைபொழிவான்றன்னைவளைந்ததுவெய்யமாயை. (அங)

கோதிலாவிரதம்பூண்டகுரகதக்குழாமுமுட்கிச்
சூதனுந்தடந்தேருருந்தொழின்மறந்துயங்கிவீழத்
தாதவிழலங்கலானுமற்றவன்றன்னைத்தேற்றித்
தீதிலா† வமோகபாணஞ்சிந்தையாற்றொழுதுவிட்டான். (அச)

மாயவல்லிருளையெல்லாம்வான்கதிர்ச்செல்வனென்னச்
சேயவப்பகுவாய்வாளிதிசைதொறுங்கடிந்தவெல்லை
யாயவம்முறைமைதப்பாவறம்பொருளின்பமுற்றுந்
தூயவரிதயமென்னத்தொலைந்ததுசூழ்ந்தமாயை. (அரு)

வஞ்சவாளவுணர்வெம்போர்மறந்துமெய்ம்மயங்கிமீண்டு
நெஞ்சினிலறிவுதூண்டநிரைநிரைதடந்தேர்தூண்டிச்
செஞ்சரஞ்சூலம்விட்டேறெழுமழுத்திகிரிவாள
மஞ்சனக்குன்றன்னான்மேலெறிந்துடனார்த்தகாலை. (அசு)

கடுஞ்சிலைவிரைவும்வீரன்கைத்தொழில்விரைவுமென்மேல்
விடுங்கணைவிரைவுமெண்ணில்விபுதர்க்குங்காணொணாதார்
கொடுந்தொழில்சுரர்மெய்யிற்குளித்தசெஞ்சரமுமன்னோர்
படும்படுந்துயருமெங்குங்காணலாம்பாருளோர்க்கும். (அஎ)

---

* அண்டருந்துளங்க என்றும் பாடம்.

†யோகபாணம் என்றும் பாடம்.

ஆய்ந்தநூலறிஞர்க்கீந்தவரும்பொருளென்னமேன்மேல்
வேந்தர்கோன்பகழியொன்றுகோடியாய்விளைந்ததெங்கு
மாந்தர்கைக்கொடாதபுல்லர்வனப்பிலாச்செல்வம்போலத்
தேய்ந்ததுவஞ்சநெஞ்சத்திறலுடைத்தனுசர்சேனை. (௮௮)

படாதொழியவுணர்மீண்டும்பரிபவப்படுத்தாயெம்மை
யடாவினியுன்னையின்னேயாருயிர்குடித்துமென்னாக்
கடாமலைவயவன்மீதுகடும்படைபலவும்விட்டார்
தொடாநெடும்பகழிதன்னாற்சூரனுந்துணித்துவீழ்த்தி. (௮௯)

உரங்களுந்தோளுங்கண்ணுமுதரமுமதரத்தோடு
சிரங்களுந்தாளுநாளுஞ்செய்தவமுயன்றுபெற்ற
வரங்களுமறையுமேன்மேல்வான்படைக்கலங்கள்வீசுங்
கரங்களுஞ்சரங்கள்கொண்டுகணத்திடைக்கண்டங்கண்டான். (௯௦)

அற்றனகுறைகளெல்லாமவயவம்பொருந்திமீண்டு
முற்றனமூன்றுகோடிசேனையுமுருத்தெழுந்த
வெற்றிவேற்குமரனன்னவிசயனுங்கைசலித்து
மற்றிதற்கென்செய்வேனென்றினைவுடன்மதிக்கு மேல்வை. (௯௧)

வென்றிகொள்வீரவாகைவேகவில்விசயகேளாய்
தென்றிசைமறலிபாலித்தீயவஞ்சகர்முன்பெற்ற
வன்றிறற்படையுமிக்கவரமுமெய்வலியுமுண்டா
லென்றசரீரிபின்னுமின்னவையுரைத்ததம்மா. (௯௨)

வெய்யவெம்படைகட்கெல்லாம்விளிகிலர்மெய்ந்நூறாகக்
கொய்யினுமுருவமீண்டுங்கூடுவர்குறிப்பினின்று
கையினுவுடன்வாய்சென்றுகலந்திடுங்கணத்தினம்பா
லெய்திடுகென்றுவீரற்குறுதியுமிசைத்ததன்றே. (௯௩)

வானிடத்தருபிசொன்னவாசகமனத்திற்கொள்ளாத்
தேனுடைத்தெரியல்வீரன்றேரினைத்திரியவோட்டிக்
கானிடைக்கடவுள்வேடன்றருங்கணைகரத்திற்கொண்டு
தானுடைத்தனுவிற்பூட்டியதுப்படச்சமைந்ததோரார். (௯௪)

தானவர்சமூகத்தோடுசமர்புரிந்தாற்றாதஞ்சி
மானவன்முதுகுதந்தானென்றுவாளசுரரெல்லாம்
வேனில்வேளனையான்றன்மேல்வெகுண்டுவெங் * கடலிற்பொங்கி
யானதங்கைவாய்சேர்த்தியாவலங்கொட்டியார்த்தார். (௯௫)

உரம்பட்டவஞ்சர்சேனைபொருப்பட்டவுறுதிநோக்கித்
திரம்பட்டசிலைக்கைவீரன்சிலீமுகந்தெறித்தபோதச்
சரம்பட்டதனுசரங்கஞ்சங்கரன்செங்கையம்பாற்
புரம்பட்டபரிசுபட்டுப்பொடிந்தனபொடியாய்மன்னே. (௯௬)

---

* கனலிற்பொங்கி என்றும் பாடம்.

உருத்ததுமிகவுமண்டமுடைந்திடவுடன்றுபொங்கிச்
சிரித்ததுதனுசர்மெய்யுஞ்சிந்தையுஞ்சேரப்பற்றி
யெரித்ததுதூநீராடியிவனிடந்தன்னில்வந்து
தரித்ததுமீண்டுமந்தச்சங்கரன் செங்கைவாளி. (௯௭)

வேறு.

துவசத்தொடுதேர்களம்வீழச்சுடர்நிவாத
கவசத்தொடுமெய்கடல்வீழக்கடுகியற்றைத்
திவசத்திவருவரமங்கையர்வீழச்சென்று
ரவசத்துடனந்தகனூரிலசுரரெல்லாம். (௯௮)

ஆர்த்தாரணிகூரலர்மாமழையால்விசும்பைத்
தூர்த்தார்துதித்தார்மதித்தார்நனிதுள்ளுகின்றார்
போர்த்தானவர்தஞ்செருக்காற்படும்புன்மையெல்லாந்
தீர்த்தானிவனென்றகல்வானுறைதேவரெல்லாம். (௯௯)

கூரும்படையுங்குடையுங்கொடியுங்கொழித்துத்
தேருங்கரியும்பரியுந்திரைதோறுமுந்தி
யூருங்குருதிக்கடல்பொங்கியுவர்க்கடன்மேற்
போரும்பொரப்போயணியோடுபுகுவபோலும். (௧௦௦)

தத்திக்குருதிக்கடல்பொங்கத்தனித்தனிநின்
றெத்திக்கினும்வெம்பிணக்குன்றமெழிலொடோங்கப்
பத்திப்படமேற்பருந்தின்குலம்பந்தர்செய்யக்
கொத்துற்றதண்டார்த்திறற்கோதண்டவீரனின்றான். (௧௦௧)

மின்போனுடங்கவிடைவேல்விழிநீர்ததும்பப்
பொன்போலுருவங்கருகும்படிபூழிபோர்ப்ப
வன்போடவுணர்மடமாதாரற்றுமோதை
யென்போலுமென்னினிடிபோல்வந்திசைத்ததெங்கும். (௧௦௨)

இவ்வாறவுணர்மடமாதரிரங்கியேங்க
மைவாள்விழியின்வழியஞ்சனவாரிபாயத்
தெவ்வாறியபின்னருந்தீர்ந்திலதீர்ந்தவன்றே
கைவார்சிலையான்கடுங்கோபமுங்கண்சிவப்பும். (௧௦௩)

அன்னார்நகரத்தழகுந்தொல்லரணுநோக்கி
மின்னாரும்வேலான்விறன்மாதலிதன்னைமீண்டு
நன்னாகரூரிற்றடந்தேரைநடாத்துகென்னச்
சொன்னானவனுந்துணைதேர்நனிதூண்டுமெல்லை. (௧௦௪)

செம்பொற்புரிசைதிகழ்கோபுரச்செம்பொன்மாடத்
தம்பொற்கொடிசேர்நகரந்தரத்தோன்றகாணா
வம்பிற்பொலிதார்த்தடந்தேர்விடுமாட்சியானை
விம்பத்திறல்வார்சிலைவீரன்வினவவன்னான். (௧௦௫)

மன்னுந்தனுசகுலமாதரில்வஞ்சநெஞ்சக்
கன்னங்கரிய குழற்காலகைகாமர்சோதிப்
பொன்னங்கொடிபோலெழில்கூர்நுண்ணிடைப்புலோமை
யென்னும்பெயராரிருவோருளரென்று முள்ளார். (௧௦௬)

அம்மாதர்தந்தைதனைநோக்கியனந்தகாலஞ்
செம்மால்வரையிற்றவஞ்செய்தனர்செய்தநாளின்
மைம்மான்விழியார்தமக்கந்தவனசவாண
னெம்மாலிசைத்தற்கிசையாதவரங்களீந்தான். (௧௦௭)

தம்மக்களாயவசுரேசரதிதிதந்த
வம்மக்கடம்மாலழியாமையுமாடகத்தான்
மும்மைப்புரம்போல்விசும்பூர்தருமொய்ம்பினிந்தச்
செம்மைப்புரமுங்கொடுத்தானத்திசைமுகத்தோன். (௧௦௮)

பொன்காலுமெய்யர்பொறிகால்பொலங்குண்டலத்தர்
முன்காலனையுஞ்சபர்மோதிமுருக்குமொய்ம்பர்
மின்கால்படையர்விடங்காலும்விழியர்வெம்போர்
வன்காலகேயரெனும்பேர்திசைவைத்தவீரர். (௧௦௯)

வருமுப்பொழுதுமறையந்தணரங்கைவாரி
யுருமுப்புயல்போற்கவர்வோர்முன்னுகாந்தநாதன்
பொருமுப்புரத்திலுறைதானவர்போலும்வீர
ரிருமுப்பதினாயிரம்வஞ்சகரிங்குமுண்டால். (௧௧௦)

தன்றேர்வலவன்மொழிகேட்டுத்தயங்குநீலக்
குன்றேயனையான்கொடும்போர்வஞ்சினங்கள்கூறி
யின்றேயிவராவியுந்தென்புலத்தேற்றிப்பின்ன
ரன்றேயினிநானமராவதிசெல்வதென்றான். (௧௧௧)

இந்தப்புரத்தின்மிசைத்தேரினையேவுகென்னக்
கந்தற்குவமைதருதிண்டிறற்காளைகூறச்
சிந்தைக்குமுந்துந்தடந்தேரைத்தனுசர்வைகு
மந்தப்புரத்தில்விடுத்தான்மற்றவனுமாதோ. (௧௧௨)

தேராரவாரத்துடனேதிண்சிலைவலான்றன்
போராரவாரச்சிலைநாணொலிமீதுபோக
வாராரவாரத்திடிகேட்டவரவமொத்தார்
காராரவாரமெனப்பொங்குமக்காலகேயர். (௧௧௩)

வேறு.

இந்தவோதையெழிலியேழுமூழிநாளிடித்தெழு
மந்தவோதையோவதன்றியாழிபொங்குமோதையோ
கந்தன்வானின்மீதுதேர்கடாவுகின்றவோதையோ
வெந்தவோதையென்றயிர்த்துயிர்த்துவஞ்சர்யாவரும். (௧௧௪)

தெழித்துரப்பியெயிறுதின்றுவைதுசெய்யகண்கடை
விழித்துமீசைநுனிமுறுக்கிவெய்யவீரவாளுறை
கழித்தெழுந்துபொங்குகின்றகாளகூடமென்னவே
கொழித்தழன்றுமண்ணும்விண்ணுமின்றுகோறுநாமெனா. (கக௫)

ஓடுவாருமந்தவோதையெதிருடன்றுறுக்கிமே
ணாடுவாருநமர்களாண்மைநன்றுநன்றெனாநகைத்
தாடுவாருமமரர்வாழ்வுபாழ்படுத்துமாயுதந்
தேடுவாருமெண்ணிறந்ததேர்களேறுவாருமே. (கக௬)

கூளிகோடியுய்ப்பகுஞ்சரங்கள்கோடியுய்ப்பபே
ராளிகோடியுய்ப்பவாயுகதிகொடந்தரத்தின்மேல்
வாளிபோதும்வாசிகோடிகோடியுய்ப்பவாயதே
ரோளியாகவானினெல்லைமறையவுந்திமுந்தினார். (கக௭)

அந்தகன்பொரற்குநம்மைவல்லனல்லனபமுன்
றந்தவிந்திரன்றனக்குமொக்குமன்னதன்மைதான்
கந்தனென்னிலாறிரண்டுகண்கள்கைகளில்லைமே
லெந்தவீரனம்மொடின்றெதிர்க்குமிந்தவீரனே. (கக௮)

எண்டயங்குமெயிறுவெண்ணிலாவெறிப்பவெயின்மணிக்
குண்டலங்களழகெறிப்பமகுடகோடிகுலவிமேன்
மண்டியெங்குமெவியிலெறிப்பவஞ்சர்தம்வனப்பெலாங்
கண்டுகண்டருச்சுனன்கருத்துநொந்துகூறுவான். (கக௯)

கன்னல்வேளைவென்றவிக்கவின்படைத்தகாட்சியு
மின்னுபூண்விளங்குமார்பும்விபுதருக்குமில்லையா
லென்னபாவமிவரையாவியிடழிப்பதென்றுபோர்
மன்னர்மன்னன்முன்னுரைத்தவாய்மையுங்குறிப்புறா. (க௨0)

வில்வளைத்துநின்றநீலவெற்பதொன்றைவிண்ணிடைச்
செல்வளைத்ததென்னவந்துதீயவஞ்சர்யாவரு
மல்வளைத்தசிகரவாகுகிரியின்மீதுமார்பினுங்
கொல்வளைத்தபகழிதூவியின்னநின்றுகூறுவார். (க௨க)

உழுவைகண்டவுழைகள்போலவோடியோடிமேருவின்
முழைதொறும்புகுந்ததேவரேவல்கொண்டுமொய்ம்புட
னிழிவில்சந்தனங்கடாவியிங்குவந்ததென்னடா
புழுவிலொன்றுமொன்றுபூதலத்துளானொருத்தனீ. (க௨௨)

என்றுகாலகேயர்நின்றிசைத்தசொற்செவிக்கொளா
நன்றுகாலகேயர்சொன்னவாய்மைநன்றெனாநகைத்
தொன்றுகாலம்வந்ததிங்குருத்துநானுடன்றுமைக்
கொன்றுகாலனூரினுங்களாவியுங்கொடுக்கவே. (க௨௩)

காலகேயர்விசயனின்றுகட்டுரைத்தவுறுதிகேட்
டாலகாலமெனவுருத்தழன்றுபொங்கியபின்முனைச்
சூலநேமிபாலம்வெய்யசுடுசரந்துரத்தினார்
நீலமேனிசெம்புணரிஞனிறஞ்சிவக்கவே. (கஉச)

விண்சுழன்றுதிசைசுழன்றுவேலையுஞ்சுழன்றுசூழ்
மண்சுழன்றுவரைசுழன்றுவானினின்றவானுளோர்
கண்சுழன்றுயாதினுங்கலங்குறாதகலைவலோ
ரெண்சுழன்றுமற்றுமுள்ளயாவையுஞ்சுழன்றவே. (கஉரு)

அவர்விடுத்தபடைகள்யாவுமழியவானுடைக்கணைக்
கவர்தொடுத்துவிலகிமீளவவர்கள்காயமெங்கணுந்
துவர்நிறத்தகுருதிசோர்தரச்சரந்துரத்தினன்
றவரினுக்கிராகவன்கொலெனவருந்தனஞ்சயன். (கஉசா)

பார்த்தனெய்தவாளிமெய்படப்படப்பதைத்துமீ
தார்த்தெழுந்துகரிஞெடுமந்தரத்தினெல்லைபோய்
வார்த்தரங்கவேலையூடுமண்ணினூடுமறையவத்
தூர்த்தர்செய்தவஞ்சமாயைசொல்லலாகுமளவதோ. (கஉஎ)

அண்ணறேரின்முன்னதாகுமளவிறந்ததேரொடும்
விண்ணின்மீதுதிசையளக்கும்வெற்பின்மீதுபொலியுமெக்
கண்ணுமாகுமக்கணத்தின்மீளவுங்கரந்திடு
மெண்ணலாவதன்றதன்றியற்றுமிந்த்ரசாலமே. (கஉஅ)

அந்தவஞ்சர்புரியுமாயைவகையறிந்தருச்சுனன்
சிந்தைகன்றிவிழிசிவந்துதெய்வவாகைவில்லைபு
மைந்துடன்குனித்துவாளிவாயுவேகமுடன்விடுத்
தெந்தவெந்தவுலகுமம்புமாரியாலியற்றினன். (கஉகூ)

தனிதமேகமன்னதேருமொன்றுதாவில்குன்றுபோற்
குனிதருங்கடுப்பின்மிக்ககொடியவில்லுமொன்றுமேற்
கனிவுறுஞ்சரக்குழாம்விசும்பினெல்லைகாட்டுமோர்
மனிதன்வின்மைநன்றுநன்றெனுமதித்துவஞ்சரே. (கங0)

வேறு.

புருவவில்வளைவுறவிழிகனல்பொதுளக்
கருமுகிலனையவர்கடுகினர்முடுகிச்
சரமழைபிடிமழைதழன்மழைசொரியாப்
பெருமழையெனநனிபிளிறினரெவரும். (கஙக)

இவருயிர்கவர்தரவிடமிதுவெனவே
நவையறுதிறலுடைநகுசரமுகையா
வவரவரகலமுமணிகிளர்கரமுந்
தவருடன்விழவிழவொருதனிபொருதான். (கஙஉ)

அவன்விடுமடுகணையடையவுநொடியிற்
பவனனெதிர்சருகெனநனிபரியக்
கவனபொடெழுபரிரதகதிகுலையத்
துவனியொடெறிபடையெதிரெதிர்தொடவே. (௧௩௩)

வரிசிலைவிறலுடைமகபதிமகனு
மெரிவிழியவுணருமுறைமுறையிகலிப்
பொருதனர்பசுபதிபுதல்வனுமடுபோர்
நிருதருமெதிர்பொருபமர்நிகரெனவே. (௧௩௪)

இப்படைகளினுயிரழிகிலரிவரென்
றப்படைகளையொழிதரவடலுடையார்
மெய்ப்புகும்விறலதுவிடையவனருளுங்
கைப்பகழியைமனனுறநனிகருதா. (௧௩௫)

முச்சிரமுடையதுமூவிருதிரடோ
ளச்சிரமுடனெதிரழல்பொழிதருக
ணைச்சரவணையதுநகமிறுமுனைவாய்
வச்சிரமனையதுவருதலுமகிழா. (௧௩௬)

பசுபதியருளியபகழிமுன்வரலும்
விசயனுநறைவிரிமலர்கொடுபரவித்
திசைதொறுமமர்புரிதிறலுடைவடிவே
லசுரர்தமுடலுகவடலுடன்விடவே. (௧௩௭)

அக்கணைவிசையுடனகல்வெளிமிசைபோய்
நக்கதுபிறையெயிறிளநிலவெழவே
முக்கணுமழலுகமுரனொடுமுடுகிப்
புக்கதுதனுசர்தமுடல்பொடிபடவே. (௧௩௮)

மாருதம்விசையுடன்வடவனல்கொளுவிக்
கார்தொறுநிரைநிரைகடிகுலவதுபோற்
றேர்தொறுமமர்புரியவுணர்கடேகத்
தோரொருகணையொருநொடியினிலுறவே. (௧௩௯)

மகபதியரிசிறைவரைநிகரெனவே
திகைதொறுமவுணர்கள்சிரநனிசிதறிப்
புகையொடுதெறுகனலகல்வெளிபொதுளக்
ககபடலமுமுறைகளுலினகளமே. (௧௪௦)

ஆடினவறுகுறையலகைகளுடனின்
றோடினதிசைதொறுமுகுகுருதியினீர்
நீடினபிணமலைநிரைநிரைநெறிபோய்த்
தேடினகதிர்களுமிசைவழிசெலவே. (௧௪௧)

மாதவமிகுதிறலசுரரைமறலிக்
கோதனமிடுமவனொருசிலைவலிகண்
டாதபனருணனிலனிகிளருயர்தேர்ச்
சூதனும்விசயனதிணையடிதொழுதான். (க௪௨)

தள்ளினர்தமதுயர்சலமினியிலதென்
றுள்ளினர்விசயனதுறுதியுமுரனு
மள்ளினரமுறிதனவகநனிமகிழாத்
துள்ளினரிமையவர்சுரபதிமுதலோர். (க௪௩)

வேறு.

தேனமர்கமலத்தோங்குந்திசைமுகன்வரத்தினாலோ
மானவன்விசயனுய்த்தவடிநெடுஞ்சரத்தினாலோ
தானவர்தானையெல்லாமடிந்தவத்தளர்வினாலோ
போனதுகரந்துவஞ்சவிரணியபுரமுமன்னோ. (க௪௪)

வாணகைதளவம்வாங்குமவுணர்தம்மகளிர்தெய்வப்
பூணொடுகுழைகள்வாங்கப்புனைவயவாகைவாங்கு
நாணுயர்தனுவின்வாங்கிரயந்திளைப்பாறிநின்றான்
றாணொடுபறம்புவாங்குஞ்சுடர்மணிக்கடகத்தோளான். (க௪௫)

பார்கொண்டதசுரர்மெய்யிற்பரந்தசெங்குருதிவெள்ளங்
கார்கொண்டவிசும்புகொண்டதவர்பிணக்காயம்வானோ
ரூர்கொண்டதுரிமையோடுமவருயிர்மீண்டுமென்றாற்
றார்கொண்டவமரர்க்கெவ்வாறிவன்பகைதடிந்ததம்மா. (க௪௬)

இவ்வகையசுரசேனையாவையுமிரியநூறிக்
கொய்வரும்வரிவில்வீரன்குரகதத்தேர்மேற்கொண்டான்
வைவருமுனைவேற்சித்திரசேனன்வாசவனுக்கோடி
நைவருதுயரநீங்கநவின்றனன்புரிந்தவெல்லாம். (க௪௭)

சித்திரசேனன்மாற்றஞ்செவிக்கமுதாகக்கேட்டுப்
பத்திகொள்விமானச்சோதிப்பைம்பொன்மாநகரிகோடித்
தெத்திசையவருமேனையிமையவர்குழாமுஞ்சூழ
வித்தகவிசயன்றன்னைவிபுதர்கோனெதிர்கொண்டானே. (க௪௮)

கின்னரமிதுனவின்சொற்கீதங்களினிதுபாடத்
துன்னியெங்கெங்குஞ்சேரத்துந்துபிக்குழாநின்றார்ப்பப்
பன்னருமறைகடெய்வமுனிவரர்பகர்ந்துவாழ்த்த
மன்னவர்மன்னன்றன்னைவாசவன்றழுவிக்கொள்ளா. (க௪௯)

கையுடைக்கயிலையன்னகடகரிப்பிடரின்வைத்து
மையுடைக்கொண்டல்வாகனகர்வலஞ்செய்தபோதின்
மெய்யுடைக்கலைகள்வல்லான்விஞ்சையனொருவன்கண்டு
பொய்யுடைத்தலத்தோர்க்கின்னபொறுக்குமோபுனிதவென்றான். (க௫0)

விஞ்சையனுரைத்தமாற்றம்விபுதர்கோன்செவியிற்சென்று
நஞ்செனப்புகுதலோடுநயனங்கள்செந்தீக்கால
நெஞ்சினிலறிவிலாதாய்நீயிதுகேட்டியென்னா
மஞ்செனக்கரியமெய்யான்மனங்கனன்றினையசொல்வான். (௧௫௧)

ஆதிநாயகன்மாமாயனமரர்தந்துயருமேனைப்
பூதலமடந்தைக்குற்றபுன்மையுந்தீர்ப்பானெண்ணிச்
சீதைதன்கொழுநனை திண்டிறலிராமன்போல
வேதநீருலகின்மீண்டுமருச்சுனனுருவங்கொண்டான். (௧௫௨)

ஆதலான்மனிதனென்றிவ்வருச்சுனன்றன்னையின்னே
நீதியாலமரர்யாருநெஞ்சினிலிகழலென்று
மாதர்கள் வீதிதோறுமலர்மழைசொரிந்துவாழ்த்தக்
கோதிலாவமரர்கோமான்கொண்டுதன்கோயில்சேர்ந்தான். (௧௫௩)

அரிமுகக்கனகபீடத்தண்ணலையிருத்தியண்ட
ரிருபுடைமருங்குநிற்பவிந்திரனிருந்தபின்னர்
மருவுபொற்றடந்தேரூருமாதலிதன்னைநோக்கிப்
புரிசிலைவிசயற்குற்றபோர்த்தொழில்புகனீயென்றான். (௧௫௪)

மற்றவன்றொழுதுபோற்றிவானவர்குழுவுக்கெல்லாங்
கொற்றவவென்னாலின்றுகூறலாந்தகைமைத்தன்று
ஆற்றெதிர்மூன்றுகோடியசுரருமுடனேசேர
விற்றதுகண்டேன்பின்னர்வில்லினாணிடியுங்கேட்டேன். (௧௫௫)

ஆயதுநிகழ்ந்தபின்னரயனருள்வரத்தினாலே
பேயவாள்வலியின்மிக்கவிரணியபுரத்துளோரைத்
தீயவெம்பகழியொன்றாற்செற்றனனிமைப்பின்முற்று
மாயமோமனிதன்வில்லின்வன்மையோதெரிந்ததில்லை. (௧௫௬)

என்றுகொண்டுயர்தேர்ப்பாகனிசைத்தனயாவுங்கேட்டு
வன்றிறலமரர்கோமான்மனமகிழ்ந்திருந்தபோதிற்
றுன்றியவமரர்யாருந்தனித்தனிசுருதியோடும்
வென்றிடுபடையுமற்றும்வேண்டுவபலவுமீந்தார். (௧௫௭)

தேவர்பால்வரமுமெல்லாச்சிறப்புமின்னருளும்பெற்ற
காவலன்கடவுள்வேந்தன்கழலிணைபணிந்துபோற்றித்
தாவரும்புரவித்தானைத்தருமன்மாமதலைபொற்றாண்
மேவரவேண்டுமின்னேவிடையெனக்கருளுகென்றான். (௧௫௮)

மைந்தனங்குரைத்தமாற்றமனனுறமகிழ்ந்துகேட்டுத்
தந்தையுமின்னஞ்சின்னாட்டங்குகவிங்கென்றேத்திச்
செந்திருவனையதோற்றத்தெய்வமென்போகமாத
ரைந்தொடாயிரரும்வேறோரம்பொன்மாளிகையுமீந்தான். (௧௫௯)

வரோதயமானதெய்வவான்*படைமறைகள்பின்னும்
புரோசனப்பகைவற்கீந்துபுரந்தரனிருந்தபின்னர்ச்
சரோருகரண்டம்விண்டாலொருமயிர்சலிக்குமுன்கை
யுரோமசமுனியைநோக்கியுரைத்தனனுற்றவெல்லாம். (கசு0)

வரிசிலைவிசயன்வந்துவான்றவம்புரிந்தவாறு
மரிவையோர்பாகனன்பாலவற்கருள்புரிந்தவாறு
மிரியவென்பகையையெல்லாமிவன்றனிதடிந்தவாறுந்
தருமனுக்குரைத்தியென்னத்தபோதனமுனியும்போனான். (கசுக)

நிவாதகவசர்காலகேயர்வதைச்சருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள்-கருஎரு.

புட்பயாத்திரைச் சருக்கம்.

மற்கொண்டு வகுத்தனையசிகரத்திண்டோள் வாளரக்கன்குலத்தோடுமடிய முன்னம், விற்கொண்டுசரந்தொடுத்துப்புரையில்கேள்வி விண்ணவர்தந்துயர்தீர்த்தவீரராமன், கற்கொண்டவகலியைதன்னுருவமீளக்கவின்கொள்ளக்கொடுத்ததிருக்கமலபாதஞ், சொற்கொண்டுதுதித்தெழுந்துதுள்ளிநாளுந்தொழுமவரேயெழுபிறவித்துவக்கற்றாரே. (க)

இப்பால்வெஞ்சிலை †விசயன்றுறக்கமீதிலிந்திரன்றனருகிருப்பவிமையோரூரிலப்பானற்றவம்புரியுந்தழல்கூர்வேள்வியந்தணர்தங்குழாஞ்சூழவழகார்மண்ணிலொப்பாருமிலாதமடமயிலினோடுமுயர்வனத்தினிடைநாளுமொருநாள்போலத்தப்பாமலறம்வளர்க்குநீதிவேந்துந்தம்பியரும்புரிந்ததினிச்சாற்றுகிறபாம். (உ)

விரல்விசயன்றனைப்பிரிந்தவருத்தமேன்மேல்விஞ்சவொருதஞ்சமறவெம்பியம்பொற், சிறகிழந்தபறவையெனத்துணைவரோடுந்திறல்வேந்தன்சிந்தனையுற்றிருந்தகாலைப், பொறையறிவுநிறைதருமமுடையவாய்மைப்போர்வேந்தேயஞ்சலெனப்புகழ்ந்துவாழ்த்தி, மறையொருபொன் வடிவுகொடுவந்ததென்ன மாமுனியுமிமைப்பினிடைவந்துற்றானே. (௩)

வந்தபெருங்கடவுண்முனிவரவுநோக்கி வாள்வேந்துந்தம்பியருமகிழ்ச்சிகூர்ந்து, சிந்தைவிழிமலரொடுபேருவகைபொங்கச் சென்றெதிர்போய்வணங்குதலுஞ்சிந்தைவிலாத, வந்தமுனிவரனுமவர்க்கன்பாற்‡றுன்பமணுகாதவந்தமிலாவாசிகூறிப், புந்தியுடனளித்தசெழும்புனிதகோலப்புலித்தவிசினிருந்தடைவேபுகன்றானெல்லாம். (ச)

---

* படைக்கலன்கள் என்றும் பாடம்.

† விசயனின்பமெய்தி யென்றும் பாடம்.

‡ துன்பமகலமிகவந்தமிலாவாசி என்றும் பாடம்.

வாள்விசயன் புரவிசயன் றன்னைநோக்கிமன்னு தவம்புரிந்ததுவுமகிழ்ச்சிகூர்ந்த
வ். வேள்விசயந்தவிர்த்தபிரானருளால்வேண்டுப் விறற்படைகளளித்ததுவும்விபுதர்
கோமா, னுள்விசயம்பெறக்கொடுபோயும்பருரினளிர்மகுடம்புனைந்ததுவுநாளுந்தன்
பொற், றோள்விசயந்தொலைத்ததிறலவுணர்சேனைசுடுசரத்தாற்றொலைத்ததுவுஞ்சூழ்
ந்தயாவும்.
(ரு)

தன்னருகேயமரரெலாமினிதுபோற்றத் தனஞ்சயனங்கிருந்ததற்பின் றயங்கு
ஞ்சோதி, மன்னுமெழிற்காந்தர்ப்பமென்னுநாமவரைவழியேவருவதுவுமருவுகாத,
லுன்னுடையபெருந்துயரந்தணியுமாறுமுரைத்தருள்கவெனவும்பார்கோமானுன்பா
லென்னைவிடுத்தனன்வந்தேனென்றனெல்லாவுலகமுடிந்திடுநாளுமீறிலாதான். (சா)

மாமுனிதன்மொழிகேட்டுப் புரையில்கேள்விமன்னவனுந்தம்பியரும் வருத்த
மாறிக், காமியமென்றுரைபெறுசிர்வனத்தைநீங்கிக் கடவுண்முனிதன்னொடுமக்க
ணத்தினேகி, நாமமதுகாதீர்த்தமுதலாவுள்ள நற்றீர்த்தமெவற்றிலும்போய்நான
மாடித், தாமமதிதவழ்சிகரத்திந்த்ரநீலசயிலத்தின் சுனைகெழுதண்சாரல்சார்ந்தார்.

அக்கிரியின்புதுமையெலாமடைவேநோக்கியங்குள்ளவருவிநறும்புனலுமா
டித், தக்கபுகழ்விசயனருந்தவம்புரிந்தசாரலிதுவென்றுதவமுனிவன்சாற்ற, மிக்க
களியுவகைநிகழ்நெஞ்சராகிவிசயனைக்கண்டனர்போலவிரும்பிக்கண்டு, தொக்கமுனி
கணத்தொடும்போய்த்தசாங்கமென்னுந்தொல்லைமுனி தபோவனத்தின்சூழல்சார்ந்
தார்.
(அ)

அங்குள்ளதபோதனர்தம்பாதம் போற்றியவருரைத்தவாசியும்பெற்றப்பாலேகி
யெங்குள்ளகடவுணெடும்புனலும்யாறுமெப்புனலுந்தப்பாமலினிதிழுடி
வங்கமெறிகடல்கடைந்துவானோர்க்கெல்லாமருந்துவிருந்தருளியமந்தரமுங்காட்டிக்
கங்கைநதிகுதிபாயுஞ்சிகரச்சாரற்காந்தர்ப்பமெனும்வரையுங்காட்டினனே. (கூ)

அந்தவுயர்கிரியினெடுஞ்சாரறோறுமருந்தவஞ்செய்முனிவரரையடைவேகாட்
டி, யிந்தவனந்தனக்கெமையாளுடையான்குன்றமீரைம்பதியோசனையென்றெடுத்
துக்காட்டிக், கந்தமெனவெக்கலையும்வல்லஞானக்கடவுண்முனிவிசாலயுலையமுங்
காட்டி, யுந்துநெறிச்செங்கோலாயிதனிலோராண்டிருத்தியெனவுரோமசனுமுரைத்
திட்டானே.
(கo)

அம்முனிவன்மொழிப்படியேவரம்பில்கேள்வி யறன்மகனுந்தம்பியருமரிவை
யோடு, மெம்முகமுந்தம்முகமாவிலையுங்காயுமினியகனியுடனருந்தியிருக்குநாளின்,
மைம்முகில்வாகனன்கனகமுடிமேலம்பொன் வனசமலரொன்றுதழுன்மயின்முன்வி
ழுச், செம்மலரைச்செங்கண்மலர்தன்னேனைக்கிச் செய்யமலர்க்கரத்தேந்திச்சிந்தித்
தாளே.
(கக)

இந்தமலருலகனைத்துமீன்றகோல வெழின்மலரோவிரவிதிருக்கரத்தில்வைகு,
மந்தமலரோவமுதிற்பிறந்தபாவையமர்ந்துறையுமணிமலரோவவனிதன்னி, லெந்த
மலருங்கருகக்கமழாநின்றதெங்கெங்குமிதன்மணமேயென்றுபோற்றிக், கந்தவகன்
மைந்தனுக்குக்கனலோனல்குங்கனங்குழைசென்றுவகையுடன்காட்டிச்சொல்வாள்.

இம்மலருக்கொருமலருமவனிதன்னிலெதிரில்லையென்றிதழாயிரத்தின்மிக்க, வம்மலரைக்கைம்மலரிற் கொடுத்தீதொக்கு மணிமலர்நீயெனக்கருளவேண்டுமென்னச், செம்மலையிற்றிகழ்சிகரத்திண்டோள் வீமன்றெய்வமுனிபுங்கவன்றன்றிருத்தாள்போற்றி, மென்மலரைத்திருமுன்புவைத்துநின்றுவினவினானவனுமெதிர் விளம்புவானே. (கங)

என்பலவுமியாமுரைப்பதிந்தப்பூவினியல்பினையும்பெருமையையுமியக்கர்தங்கண், மன்பதியிலுளதன்றிவரம்பிலாதவானாகிலுளதென்னின்மற்றுமுண்டோ, வுன்பிறருக்கிதுகோடற்கெளிதோமாயனும்பர்பதிபுகுந்தொருபைந்தோகைக்கீந்த, பின்பிதனைக்கண்டறிவாரில்லையென்றுபேசினான்யாவரொடும்பேச்சிலாதான். (கச)

இயக்கர்பதிதனிலுளதென்றிசைத்தமாற்ற மின்புறக்கேட்டொருகாலுமீறிலாத, வயக்கொடுவெஞ்சராசனமும்வன்போர்வாகைமறத்தண்டுங்கரத்தேந்திமடந்தைநெஞ்சிற், றுயக்கமறவிக்கணத்திற்றெய்வபோக சுரபிமலரளித்திடுவனென்று சொல்லிச், சயக்கரடமுறுதறுகட்சயிலமன்னசதாகதிமைந்தனுமிமைப்பிற்றனிசென்றானே. (கரு)

கைக்காற்றுந்தொடைக்காற்றுமூச்சுக்காற்றுங் கனகமணி வரைபோலக்கவின்கொள்சோதி,மெய்க்காற்றும்பரந்தெழுந்துவனத்திலுள்ளவெற்புநெடுந்தருவனைத்துமொடிந்துவீழ, வெக்காற்றுமுடன்றெழுந்தவுகாந்தகாலமெனச்சென்றானினவனைகளெண்ணில்கோடி, செய்க்காற்றுஞ்செழுந்தரளநிலவுவீசச்சேதாம்பல்பகன்மலருஞ்செல்வநாடன். (கசு)

இலங்கைநகர்தன்னில்விறலிராமதூதனிகலரக்கன்சோலையெலாமிறுத்தவாபோ
னிலங்குலுங்கவரைகுலுங்கவனத்திலுள்ளநெடுந்தருக்கள்யாவையும்வேருடனேரா
க்கி, விலங்கினொடுபுள்ளினமுமடையத்தாக்கிமெய்ந்நடுங்கித்தடுமாறிவெம்பியுள்ளங்
கலங்கிவிழக்கனமதிர்வபோலவார்த்துக்காஞ்சனப்பேரெழில்வனமுங்கடந்திட்டா
[னே. (கஎ)

அவ்வனத்தையிகந்தனந்தகாதபேகியங்கிடைவிட்டுத்தரத்தினப்பாலேகி, மெய்வனப்புமடல்வலியுமிகுத்தவாகைவீமனெனும்பேர்திசையின்விளக்கும்வீரன், மைவனப்பினுடன்படியுஞ்சினைக்கைவாசமலர்ப்பொழிலினொருமருங்கேமத்தமாவின், கைவனப்புந்தழைசெவியுமருப்புஞ்சேரக்கவினளிக்குங்குலைக்கதலிக்காடுகண்
[டான். (கஅ)

அக்கதலிவனந்தனக்குக்காவலாயவடலரக்கரனேகருடனடுபோர்செய்து
மிக்கதலங்குருதியினால்வெள்ளமாக்கிவெகுண்டவர்தம்மாவியையும்விண்ணிலேற்றித்
திக்கதலமுதலாமெவ்வுலகுமேங்கச்சிங்கநாதமுஞ்செய்தான்செய்தகாலை
யுக்கதலைமணியுரகராசற்கென்றாலும்பர்படுந்துயரமெம்மாலுரைக்கலாமோ. (ககூ)

வரைகலங்கவனங்கலங்கக்கலங்குறாதமண்கலங்கவிண்கலங்கமகரமுந்நீர்த்
திரைகலங்கத்திசைகலங்கவீறிலாதசெகங்கலங்கவுகங்கலங்கச்சிந்தைதூயோ
ருரைகலங்கவுளங்கலங்கத்தாளங்கிமெய்யிலூன்கலங்கவிலங்கொடுபுள்ளினங்கள்யாவு
நிரைகலங்கவுலகினுயிர்படைத்ததம்மினிலைகலங்காதனவுண்டோநிகழ்த்தினம்மா.()

வேறு.

அந்தவோதையப்பொழிலிடைத்தவம்புரிந்தருளு
மந்தராசலமனையதோண்மாருதிகேட்டு
விந்தமன்னதிண்புயாசலவீமனுக்கெதிர்போய்
முந்தமற்றவன்வருநெறியதனிடைமுன்னி. (உக)

வெற்பிரண்டினில்வேலைமுன்கடந்ததாணீட்டிப்
பொற்புயாசலமிரண்டையுமிருவரைபோக்கி
யற்பவாழ்வுடையரக்கன்மாநகரழலூட்டுஞ்
சிற்பவாலதிதிசையெலாஞ்சென்றுநின்றேங்க. (உஉ)

எம்பிரான்றனக்கொழியமற்றியாவர்க்குந்தெரியாச்
செம்பொன்மாமணிக்குண்டலமிருபுறந்திகழ
விம்பமால்வரைமீதொருமேருவையொக்கு
மம்பொன்மால்வரையிருந்தெனவிருந்தனனுமான். (உங)

குகைத்தடங்கிரியனையதோள்கொட்டியார்த்துரப்பி
*நகைத்துநாகமுநடுங்கிடநடந்தனனடந்து
மிகைத்தவாளரிபோல்வரும்வீமன்முன்கண்டு
திகைத்துநின்றனன்மறமையுந்திறமையுமுடையான். (உச)

அண்டர்தானவரரக்கருமணுகுருவனத்தி
லெண்டிசாமுகமெங்கணுமிரிந்திடவார்த்து
மண்டிமேல்வருமானுடனாரடாவென்றான்
சண்டவாயுவின்றனயனைமற்றவன்றமையன். (உரு)

தம்முனாகியவானரஞ்சாற்றியவுரைகேட்
டெம்முனாகிவந்திருந்தநீயார்கொலென்றிசைத்தான்
றெம்முனையினுஞ்செவ்விமென்போகமாமகளிர்
தம்முனையினுநாத்தவறுவடல்வீமன். (உசு)

துன்னும்வெஞ்சிலைவலிகொலோதோளிணைவலியோ
வென்னைநீபுகலாரடாவென்பதிங்கெவனோ
வுன்னை†நீயறியாநெறியுணர்விலாமனிதா
மன்னும்வாறனைக்கடந்துபோவல்லையேலென்றான். (உஎ)

உரங்கொள்வீமனம்மாருதியுரைத்தசொற்கேளா
வரங்கொள்வார்சிலையிராகவன்மாப்பெருந்தூதன்
றரங்கவாரிதிதாவுமென்றம்முன்வாலன்றிக்
குரங்கின்வாலிதுகடப்பதிங்கரியதோகூறாய். (உஅ)

---

* நகைத்துநாகமுநாகமுநடுங்கிடநடந்து என்றும் பாடம்.

† நீயறியாய்நெறி யென்றும் பாடம்.

என்றுதன் றிருத்துணைவனின் றிசைத்ததுகேட்டு
*நன்றுநன் றுநீநவின்றதுநன்றெனநகையாத்
துன்றுவார்சிலைமனி தனைச்சுமந்துதோள்வருந்தும்
புன்றொழிற்சிறுகுரங்கையோவென்றெடும்புகல்வாய். (உகூ)

குரக்குநாயகனவ்வுரைகூறலுங்கேட்டுத்
தரைக்குநாயகன்றடம்புயங்குலுங்கிடநகையா
வரக்கர்நாயகனூரழலூட்டியிவ்வகிலம்
புரக்குநாயகன்றன்னையோவிழித்துநீபுகல்வாய். (௩0)

பின்னும்வார்சிலைபிராகவன்பெருமையுமனுமான்
மன்னுதோளிணைவலிமையுமாருதிசாற்ற
வன்னபோழ்தினிலகமகிழ்ந்தருளுடனோக்கி
யென்னகாரியம்வந்ததிங்கியார்கொனீயென்றான். (௩க)

தாமமாருதியுரைத்தசொற்றம்பியுங்கேட்டு
நேமிமாநிலம்புரக்குநன்னீதிவேற்றரும
நாமநாயகற்கிளையவனரனுக்குமூத்தோன்
வீமன்வாயுவின்புதல்வன்யானென்றனன்விறலோன். (௩உ)

அன்னவாசகமவனுரைத்தலுமிகலனுமான்
கன்னபாகமுஞ்சிந்தையுமுந்துறக்களித்து
மின்னுவார்சிலைபிராகவன்மெய்ப்பெருஞ்சீர்த்தி
சொன்னவாறுநன்றுனக்கிதார்சொற்றவரென்றான். (௩௩)

வரத்தினாலருமறைபினால்வார்சிலைபயிற்றும்
பரத்துவாசன்முன்பகர்தரக்கேட்டனன்பலகாற்
றிரத்தினாலுயரிராகவன்சிலைவலியென்று
னுரத்தினாலொருவீரருமொப்பிலாவுரவோன். (௩௪)

குந்திகான்முளைகூறியவாசகங்கேட்டுப்
புந்தியாலுயரஞ்சனைபுதல்வனும்புகல்வான்
சிந்துசீகரச்சிந்துமுன்கடந்துசெந்தீயா
லுந்துவாள்வலிநிருதரூரொருங்குசுட்டவனும். (௩௫)

அந்தவார்சிலையிராமனுக்கடிமையாயென்றுஞ்
சிந்தையாலவன்றிருப்பதஞ்சிந்தைசெய்பவனு
முந்தையாகியவாயுவுக்குற்பவித்தவனு
மிந்தவாழ்வுடையனுமனேயென்றனனிகலோன். (௩௬)

என்றவாசகமிருசெவிக்கமுதெனக்கேட்டுத்
துன்றுநெஞ்சினிலுவகையன்றுதித்தனன்றுள்ளி
யென்றும்யாமுயறவப்பயனிருந்தவாவென்னாச்
சென்றிறைஞ்சினன்றிரைக்கடல்கடந்தசேவடிமேல். (௩எ)

---

* நன்றுநன்றிதுநவின்றதுவெனமிகநகையா என்னும் பாடம்.

தம்பியைத்துணைத்தாழ்தடக்கைகளாலெடுத்து
வம்புசேர்மணிமால்வரைமார்புறவணைத்துப்
பம்புசெந்தழற்கானிடைப்பதமலர்சிவப்ப
வெம்பிநீதனிநடந்தவாறென்கொலென்றிசைத்தான். (௩௮)

தாயத்தாரும்வல்வஞ்சனைச்சகுனியுங்கூடி
மாயத்தாலொருகவறுகொண்டெங்கண்மண்கொண்டு
நேயத்தானெடுங்கானகநேர்ந்தனரென்றான்
சீயத்தாலரசிழந்திடுஞ்சிம்புளேறனையான். (௩௯)

திகந்தமெட்டினுந்தன்மணமொல்லெனச்செல்லச்
சுகந்தபுட்பமொன்றியாமுறைவனத்தினிற்றோன்றத்
தகைந்தவப்புதுமலர்தனைத்தழன்மகள்காணு
வகைந்தவித்துணைபலரெனக்கருளுதியென்றாள். (௪௦)

ஆதலாலிவண்யானுமின்றணுகினனென்று
நீதியானுயர்தம்முனைநெடுந்தகைபோற்றக்
கோதிலாதவக்குரிசிலுங்குமரனைநோக்கித்
தீதிலாயிதுகேட்கெனச்செப்புவன்மாதோ. (௪௧)

அருநிதிக்கிழவன்றனதளகைமாநகரின்
மருமிகுத்தநீண்மஞ்சனவாவியின்கரையிற்
றருமலர்ப்பெருஞ்சோலையிற்றங்குமம்மலர்சென்
றுரிமையுற்றதுகோடன்மற்றும்பர்க்குமரிதால். (௪௨)

ஈறிலாவிகலரக்கரோடியக்கர்தங்காவல்
கூறும்வாசகம்பொய்ப்பவர்கூர்தவமுயலும்
பேறிலாதவர்பேரருளிலாதவர்பிறிது
மாறிலாதவர்தமக்குமங்கணுகுதலரிதால். (௪௩)

அறிவும்வாய்மையுந்தூய்மையுமன்புமின்னருளும்
பொறையுஞானமுங்கல்வியும்புரிபெருந்தவமு
நெறியுமானமும்வீரமுநின்னவாதலினுற்
பெறவுனக்கரிதாயதேதென்றனன்பெரியோன். (௪௪)

முன்னவன்புகலுறுதிகூர்மொழியெலாங்கேட்டுப்
பின்னவன்றொழுதிவையிவைபேசினன்பின்னு
மன்னர்மன்னவனறமுண்டுமறமுண்டுவழக்கே
யுன்னினுன்னருளுண்டுதிண்டோளுரமுண்டால். (௪௫)

தேவர்காக்கினுந்தயித்தியர்காக்கினுஞ்சிறந்த
மூவர்காக்கினுமுறைமுறைமொழிந்தமூவுலகில்
யாவர்காக்கினுமிக்கணத்தியக்கரூரெய்திக்
காவின்மேற்பயில்கடிமலர்கவருவேனென்றான். (௪௬)

ஆண்டவன்புகலுறுதியுமாண்மையுங்கேட்டு
நீண்டதோள்வயமாருதிநெடிதுவந்தருளிப்
பாண்டவன்றனைப்பண்புறப்பரிவினுேக்கி
வேண்டுநல்வரம்வேண்டுகவீண்டைநீயென்முன். (சஎ)

நெடியகானகநீங்கியாநெறியினேரலரைக்
கடியவெஞ்செருப்புரிபெருங்குருதிவெங்களத்தி
லடிகளாங்கெழுந்தருளிவந்தருச்சுனன்றடந்தேர்க்
கொடியின்மீதுநின்றுவந்துகூத்தாடுதிரென்முன். (சஅ)

நீட்டுமவ்வரமவனுக்குநேர்ந்தனனனுமான்
மீட்டுநல்வரமொன்றுமுன்வேண்டினன்வீம
னீட்டுமாநிதியிலங்கைதீயிட்டநாளிசைந்த
மோட்டுருத்தனைக்காட்டுகென்றிறைஞ்சினன்முதல்வன். (சகூ)

வேறு.

என்றடல்வீமனிசைத்திடுமுன்ன
மொன்றியிவ்வேழுலகங்களுமொன்று
மன்றுளதாள்புனைவாமனனைப்போ
னின்றுநிமிர்ந்தனனித்தமுமுள்ளான். (ருய)

படியினதெல்லைபதத்தினதெல்லை
மடியினதெல்லையவ்வானினதெல்லை
யடியினதெல்லையளப்பரிதென்முன்
முடியினதெல்லைமொழிந்திடலாமோ. (ருக)

அந்தரமெங்குமடக்கியமெய்யிற்
சுந்தரவாலதிசுற்றியதோற்ற
முந்தியநீளுடல்வாசுகிமுன்னுண்
மந்தரவெற்பைவளைத்ததுமானும். (ருஉ)

நீளகல்வானநெருங்கமருங்கே
தோள்புறம்வாலதிசூழ்தரநிற்போ
னுளொடுதாரகைஞாயிறுமுதலாங்
கோளணிசூழ்வருகுன்றமுமொத்தான். (ருங)

இவ்வகைமுன்னமிலங்கையெரித்தான்
பைவருநாகர்* பணஞ்சுழியத்தின்
மெய்வகைகொண்டதுகண்டுவியந்தார்
மைவகைசேரகல்வானவரெல்லாம். (ருச)

மேலளவாதுவிளங்கியசொன்மெய்ந்
நூலளவாகியநுண்ணறிவோர்போன்
மாலளவன்றிவணங்குதலில்லான்
காலளவல்லதுகண்டிலன்வீமன். (ருரு)

---

*பணங்கள்சலிக்க என்றும் பாடம்.

அருக்கனின்மும்மடியாரொளிவீசு
முருக்கிளர்மேனியையூடுறநோக்கா
வெருக்கொடுதாண்மிசைவீழ்ந்தனன்மீண்டுஞ்
சுருக்குகவென்றுதுதித்தனன்வீமன். (௫௬)

அந்தமுமாதியுமற்றவருக்கஞ்
செந்தமிழ்செய்துதிரட்டினைப்போ
லந்தரவானுமகண்டமுமொன்று
வந்தியமேனியொடுக்கினனம்மா. (௫௭)

இந்திரசாலமியற்றினைப்போன்
மைந்தொடுதொல்லையில்வடிவுகொள்பொழுதத்
தந்தமிலாயடியேன்பிழையெல்லாம்
புந்தியுறாதுபொறுத்தருளென்றான். (௫௮)

திருவடிதன்னிருசேவடியிற்போய்
மருவடிதார்புனைமாருதிதொழவே
*யருள்வடிவாகியகண்டமுமெங்கு
மொருவடிவானவனுற்றுரைசெய்வான். (௫௯)

உன்னருகேபயிலும்பியரோடு
மின்னருகேபயில்வேந்தொடும்வாழ்வுற்
றென்னருகேவருகென்றனனென்றுந்
தன்னருகேதமுறாததவத்தோன். (௬௦)

அங்கவனம்மொழிகூறலுமையா
வெங்கணுநின்னுயரின்னருளுண்டே
பங்கயமாநிதிவாழ்பதியெய்தச்
சங்கையினன்னெறிசாற்றுகவென்றான். (௬௧)

என்றலுமிந்தவனத்தினதெல்லை
யொன்றியயோசனையோரிருநூறு
சென்றபின்யோசனைசிற்சிலசென்றான்
மன்றன்மலர்ப்பொழில்வாவியின்மன்னும். (௬௨)

அப்பொழில்காவலரக்கரநேக
ரெப்பொழிலுந்திறைகொள்ளுமெயிற்றார்
துப்புடனேயவராவிதொலைத்தாற்
செப்பியமாமலர்சென்றுறலாகும். (௬௩)

அல்லதுநீடளகாபதிதானு
மெல்லியலும்பொழின்மேவியபோது
நல்லுறவாகிநயத்தொடுசென்றான்
மல்லன்மலர்தருவோடுவழங்கும். (௬௪)

* அருவடிவாகி என்றும் பாடம்.

உறுதியுமொன்னலருக்கமுமேகு
நெறியினதெல்லையினீர்மையுநெறியிற்
குறிகளும்யாவையுமன்பொடுகூறி
யறிவுடையான்விடையன்பொடளித்தான். (௬௫)

மொய்ம்புடைமாருதிதாளிணைமுன்னு
வெம்பியகானிடைமேவியபயனிங்
கெம்பெருமானுணையெய்தினனென்னு
நம்பியுநாழிகையொன்றினடந்தான். (௬௬)

அக்கணமாசுவினுசுகன்மைந்தன்
மிக்குயர்விஞ்சையர்நாட்டிடைவிட்டுத்
திக்குறைநாகர்திரண்டுதுதிக்குஞ்
சக்கரநாகமதன்புடைசார்ந்தான். (௬௭)

தவாமறைவாணர்தவம்புரியுந்தண்
கவானுடைநீள்குகரத்துயர்கலைசே
ருவாமதிசூழ்வருமோங்கலொடொக்குந்
திவாகரமால்வரைசேர்ந்திடுமெல்லை. (௬௮)

அஞ்சனமேகமொடாலமளாவி
வஞ்சனைகொண்டுவகுத்தனமெய்யான்
குஞ்சிகள்வானினிடைக்கொடியோடிச்
செஞ்சுடர்காறருகின்றசிரத்தான். (௬௯)

குளிர்வரையொன்றியநீள்குகரம்போ
ளவில்பெரும்பகுவாயதின்மதியின்
பிளவெனலாவளையும்பிறழுந்தண்
ணிளநிலவென்னவிலங்குமெயிற்றான். (௭௦)

ஆறிருகாதமகன்றுயர்தோளா
னூறிருகாதநொடிக்குணடப்பா
னேறுடையான்முதல்யாவர்களெனினு
மாறொடுகாதிமலைந்திடவல்லான். (௭௧)

எண்டிசையுந்திறைகொண்டிகலோடும்
புண்டரிகப்பெயர்நாடுபொறித்தோன்
றிண்டிறன்மாருதிசேய்வருவானைக்
கண்டனனங்கழல்கான்றிடுகண்ணான். (௭௨)

உருத்துமுகிற்குலமுருமுடன்மட்கச்
சிரித்திதழ்கவ்வியெயிற்றிணைதின்றுங்
கரித்துவசன்றனைநோக்கியரக்கன்
கருத்துடனின்றிவைகட்டுரைசெய்வான். (௭௩)

யானுறைகானகமென்றிமையோருந்
தானவர்தாமுமிதற்கிடைசாரார்
மானுடனீயிவண்வந்ததுசுவையா
மூனிடவோவிஃதுரைத்திடுகென்றான். (எச)

வென்றியரக்கன்விளம்புதல்கேளாக்
குன்றனதோள்கள்குலுங்கநகைத்தாங்
குன்றனதாவியுமுண்டிடவந்தே
னென்றனன்முன்னமிடிம்பனைவென்றோன். (எரு)

மற்றதுகூறமறத்தொடரக்க
னுற்றெதிரோடியுறுக்கியபோதக்
கொற்றவனுங்கதைகொண்டுடன்மண்டிப்
பற்றினன்வந்தவனைவிபறிப்பான். (எசு)

குன்றொடுகுன்றமர்கூடுவதேபோ
னின்றுநெடும்பொழுதாகமலைந்தும்
வன்றிறலுந்தமவாகுவின்வலியு
மொன்றுமிளைத்திலரொத்தவுரத்தார். (எஎ)

எல்லையிலாவமரிங்கிவரிவ்வா
றெல்லையின்மோதியுடன்றிடுபோழ்திற்
றெல்லையிலோர்முனிசொல்லியசாப
மல்லலருபிவழங்கியதன்றே. (எஅ)

ஒன்றினுமாவியுனக்கிவனெல்கான்
றன்றிடுதோண்மிசைதோமரமேவிக்
கொன்றிடுவாயினிவாயுகுமாரா
வென்றதுவானினிடத்தசரீரி. (எகூ)

அங்கசரீரியரற்றிய * மாற்றஞ்
சங்கையுறாதுசமீரணிகேட்டுப்
பங்கயநாமநிசாசரபதிதன்
றுங்கவயப்புயமேற்கதைதொட்டான். (அ0)

தொட்டகொடுங்கதைதோளுறுமுன்னர்ப்
பட்டுளநொந்துபதைத்தடல்வஞ்சன்
வட்டநெடுங்கடலூடுமருத்தன்
றிட்டபெருங்கிரியென்னவிழுந்தான். (அக)

வேறு.

ஏற்றத்தோடிகலிபிவ்வாறிடைவழியதனில்வந்து
சீற்றத்தோடெதிர்ந்தவெம்போர்த்திண்டிறலரக்கன்றன்னைப்
பாற்றுக்கும்பருவாய்ப்பேய்க்கும்பருந்துக்கும்வருந்துகின்ற
கூற்றுக்கும்விருந்துசெய்தக்கொற்றவேற்குரிசில்போனான். (அஉ)

* சாபம் என்றும் பாடம்.

எண்டிசையமார்போற்றுமிந்துமால்வரைசென்றெய்திப்
புண்டரீகன்றனுடும்பொருக்கெனநோக்கியப்பாற்
றெண்டிரையளித்ததெய்வச்செல்வமாநிதிகளோங்கு
மண்டர்மாநகருமொவ்வாவளகைமாநகரங்கண்டான். (௮௩)

அந்தமாநகரின்றென்பாலகல்விசும்புறநின்றோங்கும்
விந்தமாமென்னநின்றவிளங்குதோள்வீமசேனன்
முந்தைமாருதிநண்போடுமொழிவழிபெய்தியந்தக்
கந்தவான்பொழிலுநன்னீர்க்கடிமலர்த்தடமுங்கண்டான். (௮௪)

ஆயிடைக்குறுகுமெல்லையப்பொழிறப்பிற்காப்போர்
சேயிடைப்பரந்தமார்பர்சேணிடைகடந்ததோளர்
வாயிடைப்பிறைகளென்னவளைந்தவாளெயிற்றர்வஞ்சத்
தீயிடைச்சோரிதோய்ந்துதிரண்டெனச்சுழல்செங்கண்ணர். (௮௫)

சூழிருட்பிழம்புநஞ்சுதோய்ந்தன்னதுவக்கருன்னி
ஞாழிகையொன்றினெல்லாவுலகையுநலியுமீட்டார்
வாழிமந்தரமத்தாகவாசுகியிருமாயோ
ஞாழிநீர்கடைந்தநாளுமமுதெழக்கடைந்தவீரர். (௮௬)

மறத்தொடுவஞ்சமானநண்பெனவளர்த்துநாளு
மறத்தொடுபகைக்குநெஞ்சர்பிலத்தினுமகன்றவாயர்
புறத்தினின்முகத்தர்மார்பிற்புழைமுழைமுக்கரின்ன
திறத்தினர்குஞ்சிச்செந்தீச்சிரத்தினர்வரத்தின்மிக்கோர். (௮௭)

கரங்களாயிரத்தர்நண்ணுங்கால்களாயிரத்தர்குஞ்சிச்
சிரங்களாயிரத்தர்பூழைச்செவிகளாயிரத்தர்வென்றி
யுரங்களாயிரத்தரூழிதவமுயன்றரிபைபெற்ற
வரங்களாயிரத்தர்மிக்கமறைகளாயிரத்தர்மன்னோ. (௮௮)

வைத்தாரைவாளம்வில்வேன்மழுவெழுத்திகிரிசூலங்
கைத்தாரைபடக்கொண்டென்றுங்கண்ணிமையாதுகாப்போர்
மைத்தாரைமாரியொப்பார்மானுடநாற்றங்கேட்டு
மொய்த்தாரக்கடவுள்வாசமொய்ம்மலர்ச்சோலையெல்லாம். (௮௯)

மண்டியெங்கெங்குமேன்மேன்மறிகடன்முகக்குநீலக்
கொண்டலிற்குமுறியார்த்துக்குறுகியகொடியநீசர்
சண்டவேகத்தினெய்துஞ்சதாகதிதனயன்றன்னைக்
கண்டனர்சூலபாசகாலனைக்கண்டதன்னர். (௯௦)

எற்றவென்பாருஞ்சூலத்தெறியவென்பாருமெய்திப்
பற்றவென்பாருமாவிபறிக்கவென்பாரும்யாக்கை
சுற்றவென்பாருஞ்சென்னிதுணிக்கவென்பாருமாகி
யுற்றனரரக்கர்நூறுயிரருருத்திரைக்கலுற்றார். (௯௧)

இந்திரன்முதலாவுள்ளவிமையவர்தாமுமிந்தக்
கந்தவான்சோலைகண்ணுற்காணவுங்கருதிநைவார்
வந்தமெதன்மதியிலாதமானுடாவுன்றனுவி
சிந்துமுன்செப்புகென்னுத்தெழித்தனர்தீயோரெல்லாம். (கூஉ)

அருளிலாவரக்கரிவ்வாறகங்கரித்தாற்றுமிந்தப்
பொருளிலாவுரைகட்கெல்லாமுத்தரம்புகலானுகி
யிருளிலாமுத்தமன்னவெயிற்றருப்பிலங்கநச்சான்
றெருளிலாமதனைமுன்னமெரித்திடுஞ்சிவனைப்போல்வான். (கூங)

தனிதமேகம்போலார்க்குநமதுயிர்சரத்திற்சாய்த்திப்
புனிதவான்பொழிலில்வாசப்புதுமலர்கொய்யவந்தேன்
குனிதவர்கொண்டுமுன்னுங்குலங்கரிசறுத்தவீரன்
மனிதனேவானுளானேமறந்திரோவஞ்சரென்றுன். (கூச)

மாவிந்தமனையபொற்றோண்மாருதிவாய்மைகேட்டுப்
பூவிந்தவனத்தினீயோபறித்தியென்றமுன்றுபொங்கி
நாவிந்தவுரைதந்தின்னுமிருப்பதோநரனுக்கென்னுக்
கோவிந்தனெடுத்தகுன்றிற்கொண்டலின்குழாத்திற்சூழ்ந்தார். (கூரு)

வானகமறையவீசிவான்படைக்கலங்கள்வால
சேனனேமுதலாவுள்ளசேனையின்றலைவரார்த்தார்
கானுடைத்தொடையலானுங்காலனுக்காவியன்ன
தானுடைத்தண்டமேந்திப்புகுந்தனன்சலிப்பிலாதான். (கூசா)

தண்டினுலவர்கள்விட்டபடையெலாந்தகர்த்துமீள
மண்டினுனுழுவைகண்டவாளுகிர்மடங்கலொப்பான்
மிண்டினுருடலம்பாவுமெய்தலைதம்மினொன்றக்
கிண்டினுன்மூளைச்சேற்றிற்கிடத்தினன்படுத்துமன்னே. (கூஎ)

தாக்கினுன்சிலரைத்தண்டாற்றடக்கையாற்சிலரைவானிற்
றாக்கினுன்கறங்கினின்றுசுழற்றினுன்சிலரையெற்றி
நூக்கினுன்சிலரைத்தாளாலுறுக்கினுன்சிலரைவாளால்
வீக்கினுன்சிலரையாவிவேறிட்டான்சிலரைவீமன். (கூஅ)

பிடித்தனன்சிலரையள்ளிப்பிசைந்தனன்சிலரைமண்ணி
லடித்தனன்சிலரையங்கமகைத்தனன்சிலரையெண்ண
முடித்தனன்சிலரைப்போகமுகிழ்த்தனன்சிலரைக்கண்ட
மொடித்தனன்சிலரையஞ்சவுறுக்கினன்சிலரைமன்னே. (கூகூ)

கரக்கமுந்ததனினுனுங்கனவரைத்தோளினுனும்
வரக்கொடுங்கதையினுனுமராமரப்பணையினுனு
முரக்கடுங்காலினுனுமொருக்கினுனுரைப்பதென்னே
வரக்கரையென்றுற்பின்னைவிடுங்கோலோவனுமன்பின்னேன். (௧00)

இப்படியெதிர்ந்தசேனையாவையுமிமைக்குமுன்னந்
துப்புடன்றொலைத்துவாயுசுதனின்றவுறுதிநோக்கி
மைப்படிவரைகள்போல்வார்வாளெயிற்றரக்கர்பின்னுஞ்
சைப்படைகொண்டுநூறுயிரரொருகணத்திற்சூழ்ந்தார். (கoக)

அவர்வெகுண்டழன்றுமேன்மேலலைகடல்போலவார்த்துப்
பவர்கொண்டபனகமென்னச்சூழ்வரும்பரிசுபாராக்
கவர்கொண்டதொடையலானுங்கதையொழிந்திலங்குசெங்கைத்
தவர்கொண்டுநெடுநாணண்டந்தகர்தரத்தழங்கவார்த்தான். (கoஉ)

அன்னநாணோதையெங்குமகண்டமும்பொதுளத்தாக்க
மன்னுநாகங்களெட்டுமதம்புலர்ந்துயங்கிவீழத்
துன்னும்வாய்நஞ்சுகக்கிச்சுழன்றுமண்சுமக்குங்கொற்றப்
பன்னகாதிபனுமுள்ளம்பதைத்துவெம்படங்கள்சோர்ந்தான். (கoரு)

உரம்படச்சரங்கண்மேன்மேலுறுக்கிவெல்வீமனுந்தச்
சிரங்களிற்றோளின்மார்பிற்கண்களிற்செருகச்சென்று
கரன்படைக்குழாத்துமுன்னங்காகுத்தன்கதிர்கொள்கூர்வாய்ச்
சரம்படத்தளர்ந்ததென்னத்தளர்ந்ததத்தளர்வில்சேனை. (கoச)

சக்கரஞ்சூலம்பாசந்தண்டம்*வேல்கப்பணம்வாண்
முற்கரங்கணையம்விட்டேறெழுக்கொழுமுசுண்டிகுந்த
மெக்கரங்களினுமேந்தியாவருமிவன்மேலேவி
யக்கணந்தன்னின்மீண்டுமகங்கரித்தார்த்தகாலை. (கoரு)

அப்படைத்தொகைகளெல்லாமறுத்தறுத்தவர்கடத்த
மெய்ப்படச்சரங்கள்சிந்திச்சிரங்கள்வெவ்வேறதாக்கி
யிப்படிக்கரக்கர்சேனையாவையுந்துணித்துமீண்டுஞ்
செப்படிப்பவரினின்றுசிரித்தனன்சிங்கம்போல்வான். (கoசு)

வேறு.

அந்தவயப்படையவ்வாறுதல்கண்டு
கந்தமலர்ப்பொழில்காக்குங்காவலாளர்
புந்திமயக்குறநொந்துபுகுந்தவெல்லா
முந்தியியக்கர்பிரானுக்கோடிமொழிந்தார். (கoஎ)

எம்பெருமானிதுகேட்டியென்றிறைஞ்சி
வம்பவிழ்சோலையிடத்தோர்மனிதன்வந்து
பம்பியசேனையிடத்தேழ்மதமும்பாயு
மும்பலின்வாவிபுகுந்துழக்குகின்றான். (கoஅ)

என்றவர்வாய்மைபுதைத்திசைத்தல்கேட்டுக்
குன்றுடனொன்றுபுயங்குலுங்கநக்குக்
கன்றியசிந்தையனங்கிகால்செங்கண்ணொ
னொன்றியமங்குலினீடுருத்துரைத்தான். (கoகூ)

---

*வேல்சாபம்வாளம்மென்றும்பாடம்.

தன்றுணைநின்றசங்கோடணனைநோக்கி
வன்றிறல்கூரடல்வேகமணிதன்றன்னைச்
சென்றவனுவிசெகுத்தல்செய்யாதின்னே
துன்றுபுயங்கடுவக்கியெய்தச்சொன்னான். (௧௧௦)

அந்தவியக்கர்பிரானுமக்கணத்தில்
வந்துநிதிக்கிழவன்றன்பாதமன்னித்
துந்துபிகொட்டவளப்பில்சேனைசூழ
வந்தியிமைப்பின்மலர்த்தண்சோலையுற்றான். (௧௧௧)

மன்னுகுருக்கள்குலத்துமன்னர்மன்னன்
றன்னையியக்கர்குலத்திலெண்ணுந்தலைவர்
துன்னு*படைக்கடலோடும்பொங்கிச்சூழ்ந்தார்
மின்னிமுழக்கியிடிக்குமேகம்போல்வார். (௧௧௨)

மானவரக்கர்குலத்தைவானிலேற்றி
யூனொடிரத்தமுகுக்குஞ்சோலையூடே
தானைவளைத்திடநின்றசாபவீரன்
யானையினங்கள்வளைக்குப்யாளிபோன்றான். (௧௧௩)

விண்ணிலியக்கர்படைக்கலங்கள்வீசி
யெண்ணிலர்சுற்றும்வளைத்தெதிர்ந்தபோதில்
வண்ணவரிச்சிலைகோலிவாயுமைந்தன்
றுண்ணெனவுட்கவடிச்சரங்கடொட்டான். (௧௧௪)

தொட்டசரங்கடுளைத்துமார்புந்தோளு
முட்டவிசும்பினதெல்லையெங்குமூடப்
பட்டதொழிந்துபடாதசேனையெல்லாங்
கெட்டனபட்டதுரைக்கவுண்டோகேட்கின். (௧௧௫)

மன்னளகாபதிசேனைநாதன்மார்பிற்
றன்னடையாளமுறத்தண்டாலேதாக்க
மின்னிடைநாகம்வெருக்கொண்டென்னமீண்டான்
றன்னெதிர்வீரரிலாதான்சங்கோடணனே. (௧௧௬)

கருத்தொடுசென்றளகேசன்பாதகமலஞ்
சிரத்தினில்வைத்திவைநின்றுசெப்பலுற்றா
னுருத்திரன்மானுடவுருவங்கொண்டதன்றேல்
வரத்திவன்மானுடனல்லன்மன்னவென்றே. (௧௧௭)

பண்புடனிக்கணப்வேண்டுநிதிகள்பலவு
நண்பொடவற்கெதிர்சென்றுநல்காயென்னின்
விண்புகுமிப்புரம்வேந்தவென்றான்மெய்யிற்
புண்புகவுட்கியுளைக்கும்வேழம்போல்வான். (௧௧௮)

---

*படைக்கலமோடும்என்றும் பாடம்.

கோதிலியக்கனியாவுங்கூறக்கேட்டுத்
தாதையுருத்திரசேனன்றன்னைநோக்கி
மாதர்மலர்ப்பொழிலூடுவந்தபணித்த
னேதிலருத்தியனென்னக்கேட்டியென்றான். (௧௧௯)

தந்தையுரைத்தருள்வாய்மைதலைமேற்கொள்ளா
மைந்தனுமப்பொழிலூடுசென்றுமன்னிச்
சிந்தியரக்கர்சிரங்கள்குன்றஞ்செய்து
கந்தனினிற்குமறத்தினானைக்கண்டான். (௧௨௦)

கண்டுமருத்தருள்காளைதன்னைநோக்கி
வண்டுமிடைப்பயிலாதகாவில்வந்து
மிண்டுமரக்கர்குலத்தைவீணேயாவி
கொண்டுபடுத்தனையார்நீகூறுகென்றான். (௧௨௧)

நீன்னளகாபதிமைந்தர்சாபநீக்க
முன்மருதூடுதவழ்ந்தவாகைமொய்ம்பற்
கின்னருள்மைத்துனன்மண்ணில்யாரும்போற்று
மன்னவன்வீமன்மருத்தின்மைந்தனென்றான். (௧௨௨)

மாயவனற்புதனாதன்கண்ணன்வையந்
தாயவன்மைத்துனனாகினையதனிநீ
யேயவனத்தினில்வந்ததென்கொலென்றான்
றாயவனுற்றனயாவுந்தோன்றச்சொன்னான். (௧௨௩)

மற்றவனவ்வுரைகூறமகிழ்வோடந்தண்
பொற்றருநண்பின்வழங்கிப்போகென்றருளி
வெற்றியுருத்திரசேனன்மீண்டுவந்தாங்
குற்றதுதாதைதனக்குரைத்திருந்தான். (௧௨௪)

வேறு.

அண்ணற்றருப்பெற்றபின்னந்தவயமீளியக்காவினிற்
றண்ணித்திலப்பொய்கைபடிவுற்றினமுதன்னதண்ணீர்குடித்
தெண்ணற்றகழுதாடலதுகண்டிருந்தங்கிளைப்பாறினான்
மண்ணுக்கும்விண்ணுக்குமறலிக்குமுறவானவடிவாளினான். (௧௨௫)

இவ்வாறிவன்செய்கையிவன்வந்ததறியாமலெழில்கூர்வனத்
தவ்வாறுபயில்கின்றவருள்வாரிதானுற்றவதுகூறுவாங்
கைவார்கதைக்காளையைக்கண்ணுறச்சூழல்காணாதுமுன்
செவ்வாய்மடப்பாவைநின்றாளைநீகூறெனச்செப்பினான். (௧௨௬)

வானின்றுமலரொன்றுதன்முன்புமின்போலவந்துற்றதுந்
தானின்றிம்மலர்போலமலர்தேடிநீயின்றுதருகென்றதுந்
தேனின்றதொடையானுமளகேசனகர்மீதுதனிசென்றதுங்
கானின்றகுழலாளுமன்னற்குமுன்கட்டுரைத்தாளரோ. (௧௨௭)

கருமத்தின்வடிவானமடமங்கையிவ்வாறுகழறுதமு
னுருமுத்துவசன்மைந்தன்முன்போகவன்போடுமுளநொந்துளான்
மருமத்துவேறைத்தபுண்மீதுகனலுற்றதெனமாழ்கினுன்
றருமத்தினுருவாகியெழுபாருநிலையிட்டதனியாண்மையான். (கஎஅ)

வாளிப்பரித்தேர்மனிவ்வாறுதுயரெய்திமனனஞ்செயக்
கூளிக்குழாம்வானின்மிசையுய்த்ததெனநற்கொடித்தேரின்மேற்
காளக்கருங்கொண்டல்போல்வந்துவீமன்றருங்காளைமுன்
றுளிப்பெருங்கொற்றவெற்றித்திருத்தாதையடிமன்னினுன். (கஎகூ)

மின்றுரைபடவெண்ணிலாவீசுமேகங்கொலெனவந்துமு
னின்றுனைமுகநோக்கிநீதிக்கொர்வடிவாமனிவைகூறுவா
னுன்றுதைதமியேனை*டியவாமலொருவாசமலர்கொண்டிடச்
சென்றுனெனச்சிந்தைநொந்தன்புடன்பின்னுமிவைசெப்புவான். (கஅ0)

எம்பிக்கொரிடையூறுவந்தெய்துமுன்யாமியக்கேசனூர்
வம்புற்றமலர்வாவிசென்றெய்திவிரைவோடுவருவோமென
வெம்புற்றபைங்கானிடைமின்னுமிளையோருமுடன்மேவவே
கப்பிக்குநெஞ்சோடவன்றேரின்மீதக்கணத்தேறினுன். (கஅக)

கரக்கும்பகம்பக்கடாயானைமன்னன்கருத்தோடுசென்
றரக்கன்றடந்தேரிலவனோடுநீடந்தரத்தேகினுன்
பரக்கும்பெரும்புண்யமும்பாவமுந்தாவில்பகிரண்டமும்
புரக்கும்பரஞ்சோதியும்பொங்குமாமாயையும்போலவே. (கஅஉ)

கானெல்லைசெல்லாதுகதிரோனெடுந்தேரெனக்கங்கைசேர்
வானெல்லைபுறவோடியொருநாளுகடிகைக்குள்வயமன்னுதே
ரூனெல்லையில்லாதுபுகமண்டமிகமண்டுமுதிரத்துடன்
றேனெல்லையில்லாதுகுக்கும்பெருஞ்சூழல்சென்றுற்றதே. (கஅஙு)

ஆனைக்குழாநூறுமரியேறெனப்பொங்கியளகேசன்வெஞ்
சேனைக்குழாநூறியதனூடுபயில்வாயுசிறுவன்றனைத்
தானைப்பெருங்கொற்றமன்கண்டுதானுற்றதளர்வாறினு
னேனைத்திருத்தாதையைக்கண்டுதேர்நின்றிழிந்தின்புறு. (கஅச)

மைக்காளமுகிலன்னமகனுந்தனடிமன்னவயவீமனுங்
கைக்கானினறைவாசமலர்கொண்டறன்காளைகழனல்கியே
முக்காலும்வலம்வந்துமுறையோடுதொழுவானைமுகநோக்கிநின்
றெக்காலுநாவந்ததிசையாதவிசையோனுமிவைகூறுவான். (கஅரு)

என்னேவலாலன்றியிமையோருமெய்தாதவிக்காவினீ
மின்னேவலால்வந்துவிரகாகவினைசெய்தவிதுமேன்மையோ
வுன்னேவல்புரிவாருமுளரும்பிமாரொன்றுருத்தானரோ
தன்னேவலாலிந்தவுலகேழும்வலம்வந்ததனியாழியான். (கஅகூ)

---

* உரையாமலென்றும்பாடம்.

என்றிந்தவுரைகூறிமுனிவாறியிறையோனுமிகலோனுடன்
சென்றந்தண்மலர்வாவிபடிவுற்றுவாசத்திருத்தார்புனைந்
தன்றந்தவிடம்விட்டிமைப்போதிலத்தேரின்மிசையேறியே
மின்றந்தவிடையாளுமிளையோருமுறைகானினிடைமேவினன். (கஙஎ)

மேவிப்பெருந்தெய்வமுனிபாதமலர்சென்னிமிசைவைத்துமென்
காவிக்கயற்கண்ணிணைச்*சேயிதழ்ப்பாவைகளிகூரவே
வாவிச்செழுந்தாமமலர்நல்கியொல்காதுவலிகூருநல்
லாவிக்கின்னமுதானநிருதற்குவிடையன்றளித்தானரோ, (கஙஅ)

வேறு.

மின்புரைமருங்குன்மின்னும்வேந்தருமந்தக்கானி
லன்புடைமுனிவன்கூறவவன்மலர்ப்பாதம்போற்றித்
துன்பமுந்துனியுமாறிநாடொறுந்தோகைபாகன்
றன்பெருங்கதையுங்கேட்டுத்தங்கினரென்பமாதோ. (கஙகூ)

புட்பயாத்திரைச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-கஎகஉ.

சடாசுரன்வதைச்சருக்கம்.

அழுதும்வாண்முறுவலரும்பியுங்களித்துமாடியும்பாடியுமகிழ்ந்துந்
தொழுதுமாதரித்தும்விழுந்துமேலெழுந்துந்துதித்திடத்தன்பதந்†தந்தான்
முழுதுமாயோங்குமுச்சுடராகிமூலமாய்ஞாலமாய்விண்ணா
யெழுதொணுமறைக்குமெட்டொணுவடிவத்தெம்பிரானும்பர்நாயகனே. (க)

இந்தநீள்வனத்தின்மன்னவரிவ்வாறின்பமுற்றிருந்தவந்நாளி
லந்தமாவனத்தின்சூழலிற்பயிலுமருந்தவமுனிவரர்பலருந்
தந்திபேருழவையாளியெண்கிவற்றூற்றுமிடருழந்துமெய்தளர்ந்து
வந்துமாமகிபர்க்கபயமென்றவர்வாழ்வனத்திடைப்புகுந்துமன்னினரால். (உ)

அருந்தவமுனிவரனைப்பலரிவ்வாறபயமென்றழுங்குசொற்கேட்டுப்
பெருந்திறலரசனவர்பதம்வணங்கிப்பேசுகநுங்குறையென்னப்
பொருந்தியகொடியவிலங்கினுற்றமக்குப்புகுந்துளயாவையும்புகன்றே
வருந்தியதுயரந்தவிர்த்திநீயென்றூர்மன்னனுமக்குறைநேர்ந்தான். (ங)

மறத்துடன்றொழுதுவணங்கிமுன்னின்றவாயுவின்மதலையைநோக்கித்
திறத்தகுமுனிவரிடுக்கணீயையசென்றுதீர்த்திடுகவென்றேவி
யறத்தினதுருவாயகண்டமும்புரக்குமரசனுங்கிருந்துழிவந்து
புறத்தொருநிருதன்புகுந்தவஞ்சனையும்புரிந்ததும்புகலலாமளவோ. (ச)

---

* சேய்தழற்பாவை என்றும்பாடம்.

† தருவான் என்றும் பாடம்.

தோளிரண்டினாநாடொறுமிரண்டந்தண்சுரும்பினைவிரும்பினன்சுமந்து
தாளிரண்டுடையதொருகருங்குன்றஞ்சரிப்பபோலகண்டமுஞ்சரிப்பான்
கோளிரண்டஞ்சிப்பிறையிரண்டகல்வான்குகையிடைப்புகுவதேபோல
வாளிரண்டன்னவெயிறிரண்டொளிகூர்வாணிலாவழங்கியவாயான். (௫)

முருக்கினாண்மலருங்கறுத்திடச்சிவக்குமொய்யழல்பெய்செழுங்கண்ண
னரக்கினாலுருக்கிக்கம்பிசெய்தென்னவவிர்பொலங்குஞ்சியன்வஞ்சத்
திருக்கினாலறங்கள்யாவையுஞ்செகுக்குந்தீயவன்றீமையேபுரிந்து
தருக்கினாலமரர்யாரையுஞ்செகுக்குஞ்சடாசுரனெனும்பெயர்ச்சழக்கன். (௬)

அந்தணர்வடிவங்கொண்டிலங்கையில்வாழாதிவாளரக்கனைப்போலச்
செந்தழலளித்தமடமயிலிருந்தசிறப்பவண்சாலையினெய்திக்
கொந்தவிழலங்கற்கொற்றவரறியாவகையொருகோண்மறைபிதற்றிப்
பைந்தொடிதனைக்கொண்டந்தரந்தன்னிற்பறந்தனன்பழியுணராதான். (௭)

அபயமென்றவளந்தரத்தின்மீதரற்றுமவ்வுரைகேட்டுமாத்திரிதன்
னுபயமைந்தரும்வார்சிலைகரத்தேந்தியுருத்தெழுந்துருமெனவோடி
யிபநடுங்கிடமுன்வளைத்திடுங்கொற்றத்தியாளிபோலிருபுறஞ்சூழ்ந்து
நபமுகிலென்னமின்னொடும்பெயர்வான்றனக்கெதிர்நின்றிவைநவில்வார். (௮)

மறையவர்வடிவங்கொண்டுவந்தருளில்வஞ்சநீவஞ்சனையாகப்
பிறர்பெருந்தாரம்வௌவியந்தரத்திற்பெயர்வதுபெருமையோபித்தா
நெறியலாநெறிசெய்துன்குலத்தொருபோர்நிருதன்முன்பட்டதுநினையாய்
முறையிலாதியன்றுன்னுயிரினைமுடிக்குமுரணுடைத்தறுகண்மாமூர்க்கா. (௯)

என்றிவ்வாறுரைத்துச்சரத்தின்மாமாரியிருவரும்விரைவுடனேவக்
கன்றிவாளரக்கன்கனமெனவதிர்ந்துகண்சிவந்துருத்தெழுமெல்லை
யொன்றிவாழ்மறையோரருந்துயரொழித்தாங்கொருநொடிப்பொழுதினின்மீளும்
வென்றிவாள்வீமனுற்றதுநிருதன்வெகுள்வதும்விசும்பிடைக்கண்டான். (௧௦)

கண்டனனிரண்டுகண்களுங்கருத்துக்கனன்றுசெந்தீச்சுடர்காலக்
கொண்டவெஞ்சினத்தீக்கதுவியெண்டிசையுங்குலைகுலைந்துடன்வெரூஉக்கொள்ள
வண்டமுங்குலுங்கநகைத்தெதிர்ந்துரப்பியார்த்தனனழன்றுதோள்கொட்டி
மண்டிமேனடந்தானுகாந்தகாலத்துமருத்தெனமருத்தின்மாமைந்தன். (௧௧)

பகன்விறலிடிம்பன்பண்பில்புண்டரீகனிவருயிர்பறித்தளகேச
னகரிடையரக்கர்யாரையுஞ்சேரநல்லுயிரொல்லையிற்செகுத்து
வகைப்பட்டீற்றியுடனுறவாக்கிவானுலகளித்தனனின்ற
சிறுகூப்புனதுயிருமிக்கணத்தளிப்பன்றென்புலக்கிழவனுக்கென்னா. (௧௨)

நெடும்பணைப்பொருவின்மராமரமொன்றுநெறியிடைநேர்ந்ததங்கதனைப்
பிடுங்கினன்விசும்பிலெறிந்தவன்றன்னைப்பிளந்தனன்பிளந்தவப்பொழுதி
னெடும்பணைத்தடக்கையரக்கனுந்திருகியணங்கைவிட்டக்கணத்தழன்று
படும்பணைக்குன்றமொன்றுவேரோடும்பறித்தவன்மேற்படவெறிந்தான். (௧௩)

4114

விட்டகுன்றினைத்தன்மேற்படாவண்ணம்விசும்பிடைப்பொடிபடக்கதையாற்
றெட்டனன்பின்னும்விசும்பினின்றவன்றன்றோளிணையொசிதரத்தாவிக்
கட்டினன்குறங்கைக்குறங்கினால்வீசிக்கம்பமுற்றகிலமுங்கலங்கக்
கிட்டினன்றலத்தின்மிசையடலரக்கன்கீழ்ப்படமேற்படவிழுந்தான். (கச)

முன்னம்வாளெயிற்றோரரக்கனைவெள்ளிமால்வரைமுனிந்தகொன்றதற்குப்
பொன்னின்மால்வரையோரரக்கனைத்தானும்புவிப்படுத்தரைப்பதேபோலக்
கன்னம்வாய்நெரிபக்கரங்களான்மயக்கிக்கழுத்தையும்புறத்தினிற்றிருப்பித்
துன்னுதோளிணையுந்தாளும்வன்னெஞ்சுஞ்சுளிதரத்தாளினுற்றுகைத்தான். (கரு)

விழுந்தவாளரக்கன்றருக்குநெஞ்சொடிந்துவெகுண்டிவன்றனைத்தள்ளிமீண்டு
மெழுந்துதோள்கொட்டியார்த்தழன்றுருமேறெனக்கொதித்திடுதலுவீம
னழுந்தவெவ்விரலாற்பிடித்தவனகலத்தடிகொடுமிதித்துவெண்பிறையின்
கொழுந்துபோலெயிறோிரண்டையுங்கஞ்சன்குஞ்சரமெனப்பிடுங்கினனால். (கசு)

புலவுகால்*வயிரவாளெயிறிரண்டுமுதலொடும்போனவாணிருத
னிலவிலாநிசியுமின்னிலாவிடிகொணீலமாமுகிலையுநிகர்த்தான்
குலவுதோள்வாயுகுமரன்மேன்மீளக்கொதித்தெழுந்திருகரங்கொண்டு
மலையின்மேலுருமுற்றென்னமற்றவன்றன்மார்பகஞ்சுழிதரப்புடைத்தான். (கஎ)

முட்டியால்வஞ்சமூர்க்கனுஞ்சமரமொய்ப்பனுமுறைமுறையாக
மட்டியேமுதலாவுள்ளமற்றொழிலின்வல்லனவல்லனபுரிந்து
கட்டியேகுறங்குகுறங்குடன்பகைப்பக்கரங்கரத்தொடுநனிபிணங்க
வொட்டியேமுடுகியொருவருக்கொருவருரத்துடன்மோதினுரவோர். (கஅ)

முருக்கிவெஞ்சமரமிவ்வகைவெம்போர்மொய்ம்பனீடுயர்முழந்தாளா
லரக்கனையகலத்தமுக்கிவிட்டவன்றனவயவமியாவையுமொன்றாச்
சுருக்கியந்தரத்திற்சுழற்றினனெறிந்தான்றொடுகழலிராகவன்றம்பி
குரக்குநாயகன்முன்விரலினாற்றெறித்தகுன்றெனச்சிந்திவீழ்ந்திடவே. (கசு)

எறிந்தவாளரக்கன்விசும்பினதெல்லையெவ்வளவவ்வளவும்போய்
மறிந்தமால்வரைபோன்மீளவும்புவிமேன்மாசுணநடுங்குறவீழ்ந்து
செறிந்தபேருடலுமாவியுஞ்சிந்தத்தென்புலத்திமைப்பினிற்சென்றா
னறந்துறந்தென்றுமடாதனசெய்தாலார்கொலோபடாதனபடாதார். (௨0)

வேறு.

வாளரவமுண்டுமிழும்வாண்மதியும்வஞ்சக்
கோளுழுவைகொள்ளவிடர்கொண்டுகுலைகுலையா
நாள்வலியினுய்ந்தமடநவ்வியுநிகர்த்தாள்
காளவிடமுண்†டமுதடக்குமிருகண்ணாள். (க)

---

* வாயின் வாளெயிறு என்றும் பாடம்.

† அமுதளிக்குமென்றும் பாடம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் THE MADURA TAMIL SANGAM 26

அடாதுசெய்சடாசுரனதாவியையுமம்பொற்
படாமுலைகடாமுடையபைந்தொடியையும்போய்த்
தடாவமர்விடாதுடையதம்பியரையுங்கொண்
டிடாவிறல்கொண்மாருதியிருக்கும்வனமுற்றான். (உஉ)

உற்றபடிதம்முனிருதாடொழுதுரைத்தான்
மற்றவனுமங்குறையுமாமுனிவரோடுங்
கொற்றமிகுதம்பியரொடுங்குழுமியன்றே
நற்றபதிநாரணனதாச்சிரமநண்ணி. (உந)

அங்கவன்மலர்ப்பதம்வணங்கியருள்பெற்றுக்
கங்கைவளநாடர்கலைதேர்முனிவரோடுந்
தங்கினர்கள்சிற்சில்பகறங்கியபினப்பாற்
சிங்கமெனவெண்ணில்வரைசேர்நெறிகள்சென்றார். (உச)

ஏணில்வரைமார்பரிமையோர்புகழுமெட்டுக்
கோணுடையமாமுனிவனங்குறுகியன்றான்
மாணுடைமலர்ப்பதம்வணங்கினர்துதித்தார்
தாணுவனையானுமவர்தம்மையெதிர்கொண்டான். (உரு)

அன்பொடொருநாளெனவனந்தநெடுநாளங்
கின்பமொடிருந்தனர்களெக்கதையுங்கேட்டாண்
டொன்பதுகழித்தனர்களிவ்வகையொருங்கே
பின்பவணிகழ்ந்ததொருபெற்றியுநாசெய்வார். (உசா)

சடாசுரன்வதைச்சருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள் சஎநஅ.

மணிமான்வதைச்சருக்கம்.

அங்கிவரமர்ந்துறைபுநாளிலணியோடும்
பொங்கியொருமாநதிபுதுப்புனல்வரப்போய்
மங்கைமுனிமங்கையர்கடங்களொடுவாசப்
பங்கயநெடுந்துறைவிரும்பினள்படிந்தாள். (க)

அப்புனலிலார்தருமணங்கமழுவந்தண்
மெய்ப்புதுமைநாண்மலர்மிதந்துவரமீதே
மைப்பதுமவாள்விழிமடந்தையதுகாணூக்
கைப்பதுமநாண்மலருறக்கடிதெடுத்தாள். (உ)

எடுத்தமலர்கைக்கொடொரிமைப்பின்மயிலன்னா
ளடுத்துவயமாருதியையம்மலரவன்கைக்
கொடுத்திம்மலரெங்குளதுகூறுகெனவமரிற்
றொடுத்தவயவாகைபுனைதோன்றலிவைசொல்வான். (ந)

முன்புமுன் மலர்க்குழ றனக்கிமலர்முன் பா
லன்புடனியக்கர்பதிநின் றுமருள்செய்தே
னின்புறவிமைப்பொழுதினின் றுமிதளிப்பேன்
றுன்புறறழற்கடவுடந்தவொருதோகாய். (௪)

இந்தமலரிந்திரபுரத்தெனினுமின்றுன்
னந்தமில்கருங்குழறனக்கருள்கிலேனேன்
முந்தரவுயர்த்தவன்முதற்பகைமுடிக்கு
மைந்துடையவன்றெனதுவாகுகிரியென்றுன். (௫)

என்றிணையவாசகமுரைத்திகலினென்றும்
வென்றிதருதண்டுசிலைகொண்டுவிறலோடுந்
தன்றுணைவரொன்றுமுணராதபடிதானே
சென்றனனிடிம்பனையடுந்திறலின்மிக்கான். (௬)

குன்றமொரிரண்டவையெனக்குலவுதோளான்
மன்றன்மலர்கொண்டுவருமாநதியின்வழியே
சென்றுபலயோசனைகடிங்களொடுநாளு
மென்றும்வலம்வந்தருளிரத்நகிரியெய்தி. (௭)

மரகதமணிப்பணிசெய்மாளிகைகளொருசா
ரரிமணியழுத்தியனவாலயமதொருசா
ரெரிமணியழுத்தியனவில்லின்விதமொருசார்
தருணமணிமுத்தினியவுஞ்சதனமொருசார். (௮)

கின்னரர்பயிற்றுமெழுகீதமெழுமொருசார்
மின்னனையபாவையரும்விஞ்சையருமொருசா
ரன்னநடைமங்கையருமாரணமுமொருசார்
மன்னுமலியக்கருமடந்தையருமொருசார். (௯)

சூலுடையமந்தியயர்வுற்றதுயர்தீரக்
காலுடைநெடுங்கடுவன்வார்கழைநறைத்தேன்
மாலைவரிவண்டிரியமோதிவழையிலையிற்
கோலியதன்வாயிடைகொடுத்திடுவதொருசார். (௧0)

கடக்கலுழிபாய்மதகதக்களிறுமந்தண்
மடப்பிடிகளுந்தமின்மணந்திடுவதொருசா
ரடர்த்தறுகுமாளியுமதிர்ந்துமுழைதோறும்
புடைத்தெதிர்மலைந்துமிகுபோர்புரிவதொருசார். (௧௧)

தண்டரளமாதிநவரத்நவொளிதானே
யெண்டிசைவிளக்கும்வரையின்புதுமையெல்லாங்
கண்டுவகைகொண்டுநனிகண்ணிணைகளித்தான்
புண்டரிகவாணிருதனைப்பொருதழித்தான். (௧௨)

அக்கிரியினின் றுமிழிவுற்றளவில்செல்வ
மிக்கவளகேசனகர்வெய்தின்விரைவெய்தித்
தொக்கமணிவாயிலொருநாலுமொருதானே
புக்குவடமேற்றிசையினின்றிதுபுரிந்தான். (௧௩)

வேறு.

சீர்த்தாரைகளுதிரத்திசைமருவுங்கரிசிதறக்
கார்த்தாரைகள்கற்றூரைகளுருமேறெறுடுகக்க
வார்த்தாழ்கடலுலையக்கதிர்மணிவெள்வளைவாய்வைத்
தார்த்தானாகவந்தத்தெழுமடன்மாருதமனையான். (௧௪)

அந்தத்தமரஞ்சென்றுயரளகாபுரியுறைவோர்
சிந்தைத்துயருறமற்றவர்செவியிற்செறிவுறலு
மிந்தத்தொனிபுரிவானிவனெவனோவெனவெவரு
*முந்திக்கரிபரிதேரிவைகொண்டேயுடன்மொய்த்தார். (௧௫)

அவ்வேலையினொருவிஞ்சையனஞ்சாவலிநெஞ்சன்
வெவ்வேலையின்மிகவோதைசெய்மீளிக்கெதிர்செல்லாக்
கைவேலினனிவனாமெனக்கண்டான்வெருக்கொண்டான்
வைவேனிருதரில்வஞ்சமுமாமாயையும்வல்லான். (௧௬)

இம்மானவனெழில்கூர்ரதிபதியைப்பொருமெரிகட்
கைம்மானவனருளுங்களிமயிலோனெனமுதனாண்
மைம்மான்விழிமொழியப்பொழில்வந்தோனெனக்கருதா
விம்மாநமர்க்குணாயாடுதுமெனவெய்தினின்மீண்டான். (௧௭)

மேனாளொருமலர்காரணம்விறல்வாணிருதரைமேல்
வானாடர்தமுலகத்தடன்மறலிக்கிடமறவோ
னானுமுனிவினன்மீளவுமணுகுற்றனனென்னச்
சேனாபதிமணிமானுழைவந்தேயுரைசெய்தான். (௧௮)

அவன்வந்திதுபகராதமுனதிவேகமொடழலாச்
சிவனண்பனதுயிர்நண்பனும்விழிசெந்தழல்பொழியப்
பவனன்றருசிறுமானுடனவனோபடிமுதலாம்
புவனந்தொழுபெருமானகரிடைவந்திவைபுரிவான். (௧௯)

தும்பிக்குலமிரதத்தொகைதுரகத்திரள்காலாள்
பம்பிப்பணைவிதமோலிடப்பணியோலிடநடவா
நம்பிக்கினியுரையாடலனாமேயவனுடலங்
கம்பித்திடப்பொருதாவியுங்கவர்வோமெனக்கழறா. (௨௦)

பண்ணார்படைநஞ்சேனையின்பரவைக்கதிபதியா
மெண்ணாயிரமியக்கேசருமிவன்மேலெழுகென்னத்
தண்ணார்மதிக்கவிகைத்திறற்சாலேந்திரன்முதலோர்
விண்ணாடரும்வெருவச்செருப்புரிவான்விரைவுற்றார். (௨௧)

*முந்தக்கரிபரிதேரிவைமேல்கொண்டுடன்மொய்த்தார் என்றும் பாடம்.

தாமப்புரிசையின்வாயிலெழுந்தானையின்வெள்ள
நேமிக்கிரிநெரியப்புரிநெடுவெள்ளநிகர்ப்பத்
தூமக்கனல்சொரிகண்ணினரெண்ணாயிரர்தொலையாச்
சேமக்கவசியர்வீமனைத்திரையாழியிற்சூழ்ந்தார். (உஉ)

உதிக்குஞ்சுடரோராயிரமுருக்கொண்டெனவொளிகூர்
விதிக்குஞ்சமர்தொலையாவிறல்விச்சாதரவெள்ளக்
கொதிக்குங்கடலிடைநின்றிடுகுமரன்குரைகடன்முன்
மதிக்கும்படிநெடுமாலிடுமாமந்தரமொத்தான். (உ௩)

ஊழ்வந்துதன்னெதிருந்தலுமுயர்வானுலகுறுவான்
சூழ்வந்தபெருஞ்சேனையைத்தொலையா*வமர்பொருவான்
காழ்வந்தகதாபாணியுங்காணார்முனைக்கென்றும்
வீழ்வந்தகொடுஞ்சாயகம்வின்னாணில்விசித்தான். (உ௪)

அக்காலையில்விறலோனிலையறிவானுயரறிவாற்
றக்கார்புகழ்சாலேந்திரன்றன்சேனையைத்தகையாக்
கைக்கார்முகவயமாருதிதிருமுன்கடிதோடிப்
புக்கானொருதேர்மேனனியிவைநின்றுபுகன்றான். (உ௫)

சிவனோதிசைமுகனோவதிர்திரையாழியிற்றுயில்கூர்
பவனோபருவரைமார்புறப்பகிருஞ்சுடர்வடிவே
லவனோதிறனரவாகனனளகாபுரிவருவோ
னெவனோவுனதுயிர்சிந்துமுன்யார்நீயுரையென்றான். (உ௬)

என்னாவவனுரையாடலுமிவனின்புறநகையா
முன்னாவொருமலர்காரணமுனைவோருயிரெல்லாம்
பொன்னாடர்தமுலகுய்த்திடுபுகழோனிகலடுபோர்
மன்னாகவமதியாவிறல்வயமாருதியென்றான். (உ௭)

மருவீசுபொலந்தாமரைமலரின்னமுமொருகாற்
றருவீரெனிலுமதாருயிர்யானுந்தருகுவனாற்
பொருவீரெனில்யமனூர்பதிபுகுவீரினியென்றா
னொருவீரருமுவமைக்கெதிரில்லாவிறலுரவோன். (உ௮)

வேறு.

என்றுவயமாருதியிசைத்தமொழிகேளா
வென்றிதிகழ்வாகைபுனைவிஞ்சையர்பிரானுங்
குன்றனையதோளிணைகுலுங்கநகைசெய்யாக்
கன்றினன்வெகுண்டுகனல்காலுமிருகண்ணான். (உ௯)

தேனிடறுவாசமிகுதெய்வமலரென்னே
மானுடர்கள்சூடவருவார்கண்மதியற்றோய்
கானுடைய†வாழ்க்கைபுரிநின்னுயிர்கணத்தென்
றானிடறுவாளிகடமக்குணவளிப்பேன். (௩௦)

* அமர்புரிபோர்க் காழ்வந்த என்றும் பாடம்.
† வாகைபுரியென்றும் பாடம்.

மற்றிவன்வெகுண்டிவையுரைத்துவருசேனைக்
கொற்றவரைநின்றுநனிகூவியெதிரேவிச்
சுற்றுமிகல்வெம்படைகடூவியிகலோனைப்
பற்றுமின்விரைந்தினியெனப்பகரலுற்றான். (௬௧)

பற்றுமெனவந்தபடைவீரருயிரெல்லாங்
கொற்றமிகுவெங்கணைகுளிக்கும்வகைதொட்டே
செற்றமிகநின்றெதிர்சிரித்தனனுருத்தான்
பற்றலர்புரம்பொடிபடுத்தவனையன்னான். (௬௨)

இவ்வகைபொழிந்தவடிவாளியினியக்கர்
மெய்வழிசெழுங்குருதிவேலையிடைவீழ்ந்தா
ரவ்வளவில்விஞ்சையரநேகரதுகாணாக்
கைவரிவில்கொண்டவன்மிசைக்கணைதொடுத்தார். (௬௩)

தொடுத்தசரவார்சிலைதுணிந்துநனிமேன்மேல்
விடுத்தபடையும்பொரவெகுண்டுமுனைவாய்வந்
தடுத்தவர்கடோளுமணிமார்புமிருதாளு
நடுத்தறியவெங்கணையுகைத்தனனகைத்தான். (௬௪)

மண்டுதிறல்விஞ்சையர்மடிந்தசெயல்யாவுங்
கண்டுசிலசாரணர்கறங்கனையதேர்மேற்
கொண்டுகடலென்னவுருமென்னநனிகோதியாத்
தண்டுகொடெதிர்ந்தனர்கடண்டதரனோடும். (௬௫)

வார்சிலையொழிந்துவிறன்மன்னுவயவாகைப்
போர்செய்கதைகொண்டெதிர்புகுந்துபொரலுற்றான்
பார்செய்பயனன்னநிருபற்கிளவல்பார்மேற்
கார்செயுருமேறுருமுடன்கனல்வதேபோல். (௬௬)

தண்டினொடுதண்டெதிர்தகர்ப்பவெழுபொறியு
மண்டுமுடியோடுமுடிமன்னவெழுபொறியுந்
திண்டிறல்வயப்பொருநர்செங்கணுமிழ்பொறியு
மண்டமுழுதும்பொதுளிமீதுபுகுமப்பால். (௬௭)

மட்டவிழலங்கன்மறவோனுடன்வயப்போர்
தட்டமர்புரிந்துதனுவுஞ்சிரமும்வேறாப்
பட்டவரெனைப்பலர்படாதவர்விடாதன்
றிட்டனர்புறந்திறலியக்கர்குலமெல்லாம். (௬௮)

தொடிக்கரமிழந்திருதுணைப்புயமிழந்தாங்
கடிப்பதமிழந்தவயவங்களடைவேபோ
யிடிக்குரலின்விஞ்சையரெதிர்ந்தயரவாங்கே
கொடிக்குடரிழந்தனர்மருத்துதவுகூற்றால். (௬௯)

அன்னநிலைகண்டடலரக்கரொடியக்கர்
பின்னருபெணைப்பலர்பிறங்கலைநிகர்க்குங்
கன்னமதமாவிரதகற்கியிகல்காலாண்
மன்னுதிறன்மானுடமடங்கலைவளைத்தார். (௪௦)

வளைத்துவயவெம்படைகள்வீசிமறிகடல்போ
லுளைத்தொருவர்போலெவருமுருமெனவுருத்துப்
புளைத்தரதமாபுரவிபோதகமிசைப்போய்
விளைத்தனர்பெருஞ்சமரம்விஞ்சையர்களெல்லாம். (௪௧)

தேரணியும்வெம்பொறியெனச்செறிபுகர்க்கைக்
காரணியும்வாயுநிகர்கற்கியணியும்போர்ப்
பேரணிகலன்றனிபிறங்குமணிமார்பன்
றூரணியெனத்தனதுதண்டுகொடுடைத்தான். (௪௨)

நெரிந்தனரதந்துணையுநேமியுடன்வேழஞ்
சரிந்தனநெடுங்குடரரிந்துதலைதாள்போய்
முரிந்தனபெரும்புரவிவெள்ளமுனைதோறும்
விரிந்தனருரங்கடவுள்விஞ்சையர்கண்மன்னே. (௪௩)

மீளியொருதண்டுகொடுவிண்டெதிர்வெகுண்டோர்
மூளைநிணம்வாய்புகமுருக்குதலுமெய்ம்பிற்
றுளுடைமருத்தெதிர்சரிக்கும்வகையெய்தும்
பூளைவனமொத்தனர்பொரும்பொருநரெல்லாம். (௪௪)

சிந்துரமணிக்கொடிகொடேர்புரவிகாலா
ளந்தகபுரத்தணுகலுற்றவொழியப்போய்த்
தந்தமபுரத்தணுகலுற்றனசயப்போர்
மந்தரவரைப்புயனுநின்றனன்மறத்தால். (௪௫)

இருவரொருநீணெறியியங்கலர்தியங்கா
வரிபுழுவைகண்டுடையுமானினமதேபோல்
வெருவியுளநொந்துதிறல்விஞ்சையர்களெல்லாம்
பொருவிலளகாபுரிபுகுந்தனர்விரைந்தே. (௪௬)

இஞ்சிமதில்வாயரணம்யாவுமிகல்புரிவா
னஞ்சினர்கள்விஞ்சையரடைந்தனர்களழகார்
மஞ்சனையமேனிமணிமான்முனமடைந்தே
துஞ்சினரொழிந்தவரவற்றெழுதுசொன்னார். (௪௭)

அந்நிலையுணர்ந்துமணிமானுமவிர்சோதிப்
பொன்னசலமொத்துயர்புயத்துணைதுடிப்ப
மன்னுபுருவச்சிலைவளைத்துமழைமுகில்போன்
மின்னிலகநக்குருமெனத்தனிவெகுண்டான். (௪௮)

வேறு.

வானிலவுணரைமோதிமுனைதொறும்வாகைபுனைமணியானுமச்
சேனைமுதல்வரைவேகமுறநனிசீறியுரைபலகூறிஞ
ஞனிலனதுடல்வீழவமரிடையாவிகவர்தரவஞ்சிரந்
தானைபரியெதிரேகுகரியினமாகிவெருவொடுசாய்வதே. (சகூ)

என்றுதனதெதிர்நின்றவரையிகழ்வுற்றுமொழிபலசொற்றுமற்
குன்றமெனவமர்வென்றிதருவதொர்கும்பமதகரிமேல்கொளா
வொன்றுபடவுலகின்றுபொடிபடவுந்துகரிரதமுந்தெனச்
சென்றுபுடைவருகின்றபடையொடுதெண்டதரனெதிர்மண்டினன். (ருo)

மண்டியெதிர்வருகின்றபொருநரைவன்புபெறுபுயமுன்பனுங்
கண்டுமுகிழ்நகைகொண்டுதனதிருகண்கள்கனலுகநின்றபி
னெண்டிசையும்வளைகின்றவிமையவரென்றிஞெளிதிகழ்குன்றினீர்
மொண்டமுகிலெனவொன்றுபடமிசைமூசிபெறிபடைவீசவே. (ருக)

வீசுபடையொருகோடிவிசைபடவோடிமிசைவரவீமனும்
பாசதரனெதிர்நீலமயிலொருபாகனிகரெனவேகியா
வாசைதொறுமுகில்போலவளைபவராகமிருபிளவாவுளங்
கூசியலமருமாறுதருவளர்கோடுகொடுநனிசாடினன். (ருஉ)

ஆயபொழுதளகாதிபதியுயிராயவணிமணிமான்விறற்
சீயமெனவவன்மீதுபலபடைசிந்தியமர்செய்துமுந்தினன்
வாயுகுமரனும்வேகமுடனவன்மார்புகிழிதரமோதினன்
காயபலமொடுதாயமுறவொருகாயமிருகடகக்கையால். (ருங)

முன்புபெறுபுயமொய்ம்பனவன்மருமத்தின்விசைபடமொத்தலு
மென்புதசைநிணமிந்திரியம்வலியென்பவிவைநிலைசிந்தியே
துன்பமுறமனநொந்துதளர்வொடுதுத்திமணிபுரகத்தின்மேல்
வன்பினுடனுருமுற்றெனவொளிமட்கிவெருவுடனுட்கினன். (ருச)

வேறு.

வஞ்சனைபுரியுமாமாயப்போர்க்கலாற்
றுஞ்சலனிவனெனத்துணிந்துசூழ்ச்சியா
னஞ்செனவெகுண்டுதன்னயனந்தீயுக
விஞ்சையன்கதுமெனவிசும்பிலேறினன். (ருரு)

புகையொடுபரந்துகால்பொங்கமங்குல்கள்
வகைபடவெழுந்துமாமாரிசிந்திடச்
சிகையனல்விண்ணெலாஞ்செக்கமண்ணெலாந்
துகள்படத்திசையெலாஞ்சூழ்ந்துதோன்றினன். (ருசா)

அப்பொழுதினிலிகலரிப்பதாகனு
முப்புரஞ்சுடுமுகினிறத்துவாளிமுன்
னெப்பறவருளுடனுதவுஞ்சோரிவாய்
வைப்பெரும்பகழியொன்றேவிமாற்றினன். (டுஎ)

அசைமணிக்கொடிகொடேரருக்கன்றன்னெதிர்
திசியெனப்பறந்ததுநீலமேனியான்
வசையறக்குரிசிலுக்கருளும்வாளியாற்
றிசையுறப்பரந்தமர்செய்தமாயையே. (டுஅ)

விறல்புனைவீமனும்விஞ்சைவேந்தனு
நிறைபுவிவிசும்பின்மேனின்றுபோர்செய்தா
ரெறுழ்வலியிராகவற்கிளையவார்சிலைச்
சிறுவனுமிந்திரசித்துமென்னவே. (டுகூ)

அந்தவஞ்சனையெலாமகன்றுபோனபின்
விந்தமொத்துயர்ந்ததோள்வீமசேனன்மேற்
சந்திரன்மிசைவருதழலராவெனச்
சுந்தரன்வெகுண்டொருசூலம்வீசினன். (சு0)

சூலமுந்தனதுமேற்சூலமேவினேன்
கோலமும்பொடிபடக்கொதித்துமீளிபு
மூலபங்கயமறைமுனிவன்வாளியை
யாலமுங்குளிர்வுறவழலவீசினன். (சுக)

பிரமன்வெஞ்சரம்வலிபெற்றவிஞ்சையன்
மருமமெங்கணுஞ்செறிந்துருவமாழ்கியே
யுருமின்வெங்குரலுடனெடுங்கிமண்மிசைக்
கருமுகில்வீழ்ந்தெனக்கலங்கிவீழவே. (சுஉ)

அந்தரனந்தரம்புகவனந்தரந்
தந்திரத்தலைவருந்தளர்ந்துசாய்ந்தன
ருந்தினர்கரிபரியிரதமூர்புக
முந்தினதமதுயிர்கொண்டுமுந்தினர். (சுரு)

விரிதிரையுவரிநீரென்னவெஞ்சினக்
கரிபரியாளொடுங்கலந்துகுத்தமெய்ச்
சொரிபெருங்குருதியின்சுழலியாற்றினின்
றரிமகனடலரிநாதஞ்செய்பவே. (சுச)

வேறு.

இத்தலைவயவீமனிகல்பொருதிவணின்று
னத்தலையுயிர்போலுமனுசனையெதிர்காணுன்
மொய்த்தலைதொறுமேறுமுழுமணிமுரல்சங்கஞ்
செய்த்தலைதுயிறுடன்றேவியைவினவுற்றான். (சுரு)

மன்னவன்மொழிகேளாமான்மதர்விழிமானு
நன்னதிதனிலின்றோர்நறைமலரதுகாணு
வின்னமுமொருகானீயிம்மலர்கொணர்கென்றே
னன்னவன்விசைசென்றானளகைநன்னகரென்றாள். (௬௬)

மன்றலில்குழலாடன்வாசகமெனுநஞ்சாற்
பொன்றினனெனமன்னன்புலம்பியபொழுதன்பா
லொன்றியமுனிரோமனுரையெனுமமுதாலே
துன்றியதுனிதீராச்சோகமொடுரைசெய்வான். (௬௭)

கூற்றுவனிகர்நாகக்கொடியவன்முதலாயோர்
நூற்றுவரையும்யானேநூறிவிண்ணுலகின்மே
லேற்றுமவ்வளவும்யானின்பபநுகரேனென்
றூற்றுதியுயிரையாவம்மொழிபழுதாமோ. (௬௮)

துணைவருகடலாடைசூழ்வருமெழுபூவோ
நணைகெழுமொருபூவோநன்றெனநகைசெய்யா
ரிணையொருவனையும்யானுளனெனினொருவேனுக்
கிணைவருமுளர்யானுமாருபிருளனம்மா. (௬௯)

முன்செய்வெவ்வினையாலோமுடிவினல்வினையாலோ
மின்செய்தகழலானவ்விசயனுமகல்வுற்றான்
பொன்செய்தமுடியானும்போயினனினிநானிங்
கென்செய்வதெனமன்னன்முனியடியிணைவீழ்ந்தான். (௭௦)

அஞ்சலையுரவோனுமாருயிரழிவில்லான்
விஞ்சையரொடும்வெம்போர்விளைந்ததங்கொருகோடி
வஞ்சனைமணிமானம்மாருதிவிடுமம்பாற்
றஞ்சினனவன்மேலுந்துனிவருமினிமாதோ. (௭௧)

இவன்மிசையிடையூறொன்றெய்துறவதன்முன்பா
நவநிதிகளிறைதனன்னகருறவேண்டுங்
கவரெயிறுளபேழ்வாய்க்கடோற்கசன்வருமாறிங்
கவனிபநினையென்றானரசனுநினைவுற்றான். (௭௨)

புந்திசெய்தவன்முன்னம்புதல்வனுமொருதேர்மேல்
வந்தனன்விரைவோடும்வணங்கினனிருதாண்மே
லெந்தைசொலடிநாயேன்பணிவிடையெதுவென்றான்
றந்தையுநிருதன்றன்றாதைதன்னிலைசொன்னான். (௭௩)

அக்கணமதுகேளாவவரனைவரையுங்கொண்
டிக்கணமிடையூறெழுமெழுமெழுமென்னா
முக்கணனுயிர்நண்பன்வாழ்தருமூதூர்வாய்த்
திக்குறநெடுவானிற்சென்றனனொருதேர்மேல். (௭௪)

சென்றொருநொடிவேலைச்சிறுவனுமூறவிம
னின்றமர்புரிவெம்போர்நிலமஞ்சுறுமுன்னம்
வென்றிகொளுரவோனும்வேந்தனையெதிர்கொள்ளா
மன்றல்கொண்மலர்தூவிவணங்கினனிருதாண்மேல். (எரு)

சதித்தனைசதிசெய்தாய்தம்பியுமலைவாளா
வதைத்தனைமணிமான்றன்மன்னுயிர்தனைமன்னோ
நிதித்தலைவனுநீடுஞ்சேனையுமினிநின்மேற்
கொதித்தெழுமுதனாளிற்கோபமுமுளதந்தோ. (எசு)

பொற்றொடிமொழியாலிப்போதொருபொருளாக்கிச்
செற்றனைசிவனண்பன்சேனையைநீயென்னாக்
கொற்றவனிளையான்மேற்கொதித்தனன்மொழிபோதங்
குற்றதையுரைசெய்வானேடினனொருதூதன். (எஎ)

அழுதறல்குதிபாயுங்கண்ணினனயிலம்பா
லிழுதுடன்முழுதெல்லாமூனுடனுகுபுண்ணீர்
வழிதரமனமெல்லாமறுகுறவிறைபொற்றூ
டொழுதனனியல்பெல்லாந்துணிவுறும்வகைசொன்னான். (எஅ)

வேறு.

அழுங்கினான்மன்னனல்லறிவுமாவியு
மழுங்கினான்வடிவமுமஃடியும்வல்விடம்
விழுங்கினானெனநனிவெதுண்டுநெஞ்சுறப்
புழுங்கினானிவையிவைபுகறன்மேயினான். (எகூ)

ஒருவனாபானுடனேதைமாநகர்
வருவனாம்விறன்மணிமானெடுஞ்சமர்
பொருவனாமவனுயிர்பொன்றவென்றிடர்
தருவனாமென்பெயர்தனதனாகுமாம். (அ0)

அடுப்பனாமளகையையறிவின்மானுடன்
றொடுப்பனாம்பொருசரஞ்சூழ்ந்தசேனையைப்
படுப்பனாமதுகொடுபதுமந்தன்னைவந்
தெடுப்பனாமென்பெயரிராசராசனாம். (அக)

இந்திரனல்லனாமீசனல்லனாஞ்
சந்திரனல்லனாந்தபனனல்லனாம்
வந்தொருவலியிலாமானுடன்கொலாங்
கந்தருவனையெலாங்களத்தினூறுவான். (அஉ)

வென்றகோச்சித்தரும்விஞ்சைவேந்தரு
நின்றகின்னரரும்வானிருதரும்புடை
துன்றுசாரணர்களுஞ்சூழ்மின்மொய்ம்பனை
யென்றுகொண்டெழுந்தனனியக்கர்தம்பிரான். (அங)

உருத்திரசேனனப்பொழுதுணர்ந்துதன்
கருத்தொடுதாதைபொற்கழல்வணங்கியே
மருத்தருள்பவன்வரலாறுமற்றவன்
றிருத்தகுதுணைவர்தஞ்செயலுங்கூறுவான். (௮௪)

எந்தைகேளிவனைமானுடனென்றெண்ணலை
முந்தைமுப்புரம்பொடிபடுத்தமூர்த்திதன்
சிந்தையாலவரிந்திரனைச்சென்றென
வந்தனர்நிலமகள்வருத்தமாற்றுவான். (௮௫)

தருமனென்பவனிவன்றமையன்றம்பியும்
வரிசிலைவிசயனென்றொருவன்மற்றவன்
புரிதிறலசுரரைப்பொருதங்கிந்திரன்
றிருவமருலகெலாந்திருத்திவைகினான். (௮௬)

வேடமோமானுடம்வெகுண்டபோதலா
லாடவர்பெருமையையறியலாகுமோ
நாடியசிறுகுறளொன்றுநம்பகே
ணீடியமுகடுறநிமிர்ந்ததில்லையோ. (௮௭)

மற்றுளவரையெலாநடுங்கவார்பிறைக்
கற்றையஞ்சடையவன்கயிலைமாக்கிரி
யுற்றுடனெடுத்தவனுயிரும்வாழ்க்கையுஞ்
செற்றவன்மனிதனோதேவனோவையா. (௮௮)

மட்டவிழ்தொடைமணிமாலையோர்முனி
யொட்டியவரிசிலைமனிதனாலுயிர்
பட்டழிகுவையெனப்பகர்ந்துசாபமன்
றிட்டதுமுணர்ந்தவற்கிரங்கலெந்தைநீ. (௮௯)

அருத்தியேதென்றவற்கருளியையவிங்
கிருத்தியேல்வாழ்வுமின்னுயிருமெய்தலாந்
திருத்தியசேனையுநீயுஞ்சென்றுமே
ஊருத்தியேலுறுபயனொன்றுமில்லையால். (௯௦)

என்றிவைதிருமகனியம்பியேத்தவு
நின்றிலனெனதுயிர்நேயநண்பனைக்
கொன்றவன்றன்னுயிர்கொள்வன்யாமெனாச்
சென்றனன்புட்பகத்தேரின்மீதரோ. (௯௧)

மண்ணெலாமிரதமுங்களிறும்வாசியும்
விண்ணெலாம்விமானமும்விபுதரீட்டமும்
பண்ணெலாமுரல்வனபணையின்றுப்பையு
மெண்ணலாபாவதோவியக்கர்சேனையே. (௯௨)

விண்டலமுறவருசேனைவேலையு
மண்டலமுறவெழுமகரவாரிபோ
லெண்டிசையுறப்பரந்தெழுந்தசேனையுங்
கண்டனன்கண்ணுறக்கருணைக்கண்ணனே. (௯௩)

உணங்கினானுடலமுமுணர்வுமாவியும்
பிணங்கினானிளைஞனைப்பேதைபங்கனோ
டிணங்கினான்புகழெலாமேத்திநெஞ்சுற
வணங்கினான்மணிமுடிமன்னர்மன்னனே. (௯௪)

அனகனேயமலனேயளகைவேந்தனே
தனதனேசங்கரன்றன்சகாயனே
புனிதனேகுபேரனேபுலத்தியன்குல
செனிதனேசெல்வனேதேவதேவனே. (௯௫)

வெறுப்பதோவிளைந்ததுமிகையதாயினு
மறுப்பதோவென்மொழிமாறுகொண்டெதிர்
செறுப்பதோவிளையவர்செய்ததீமைகள்
பொறுப்பதேபெரும்புகழ்புனிதமூர்த்தியே. (௯௬)

எனவிவனிவைபகர்ந்திசையவேத்தனு
முனிவொடுவயிரமுமுரணுமாறியே
மனனுறமகிழ்ந்தெதிர்வந்துமார்புறத்
தனதனுந்தருமனைத்தழீஇக்கொண்டானரோ. (௯௭)

நிலத்தியறண்ணளிநிருபநீமதி
குலத்தியனுடன்வருகுமாரனாதலாற்
சலத்தியறருமுரண்டணிந்தென்யானெனப்
புலத்தியன்மகன்மகன்புகன்றுபோற்றினான். (௯௮)

என்னகர்நின்னகரென்றுவேறிலை
நின்னகரிதுமுதனீங்கள்வாழ்வுறுந்
தொன்னகரெனதெனத்துணைவர்தம்மொடு
மன்னனைத்தன்னகர்கொண்டுமன்னினான். (௯௯)

திருத்தகுநகரியுஞ்சிறப்புஞ்செல்வமு
மருத்தகுகற்பகவனமும்வாவியுங்
குருத்தகுமணிகளின்குழாமுங்கோயிலுங்
கருத்துறமகிழ்ந்துகண்களிப்பக்காணவே. (௱)

காட்டினான்றன்மனக்கருணைவெள்ளநீ
ராட்டினனன்கலத்தமுதமன்புட
னூட்டினானுகந்துபசரித்துச்செங்கையா
னீட்டினானுடையுநிதிகள்யாவுமே. (௱௧)

அத்தினபுரிதனக்கதிபநீவர
வித்தினமென்றவப்பயனிருந்தவா
நித்தனையெனதுயிர்நேயநண்பினு
லொத்தனையெனவிவையுரைசெய்தானரோ. (௧௦௨)

வேறு.

நெருநலிந்திரபுரத்திலிந்திரனும்யாருநீடவையிருந்தபின்
புருநலந்*திகழும்விசயனென்னவவனொருவனெய்துதலுமவனையித்
திருநலம்புதியசெம்மல்யாவனெனமற்றவன்செயலும்வெற்றியுங்
குருகுலம்பெறுகுலேசனென்பதுவுநின்றவானவர்கள்கூறினார். (௧௦௩)

அந்தவிண்ணுலகினின்றுநின்றுணைவனமரர்சூழவரநாளையே
யிந்தமண்ணுலகுநீயும்வாழ்வுபெறவிந்திரன்றனுடனெய்துமா
லெந்தமண்ணுலகுநின்னதாகுமிடருற்றிரங்கலெனமகிழ்வினிற்
கந்தவண்ணமலருங்கொடுத்துவிடைநல்கினானளகைகாவலன். (௧௦௪)

ஐயநின்னையறியாமனின்னகரிலனுகினன்சிறுவனாதலிற்
செய்ததீமைகள்பொறுத்தியொன்றுநனிதிருவுளத்திடைகொளேலென
மொய்கொடாமமுடியுறவணங்கிமுடிமன்னர்மன்னனிளையோரொடு
மைதவழ்ந்துலவுமாடநீள்புரிசைஞாயில்வாயிறனிலெய்தினான். (௧௦௫)

மாசிலாதமுடிமன்னர்மன்னனுடன்வந்தமாமுனிவரர்க்கெலா
மேசிலாநெறியினெண்ணிரண்டுவகையாயபூசைகளியற்றியே
காசிலாமணியுமாடையுங்கலனுநல்கமல்கிவளர்செல்வனுக்
காசிகூறியுடனேதபோவனமடங்கினாரவரடங்கவே. (௧௦௬)

குந்திமைந்தரொருநால்வரும்புதியகொடிமருங்குன்மடவல்லியுஞ்
சிந்தையன்புடையமுனியும்வாணிருதசேகரன்றனதுதேரின்மேற்
பந்திபந்திபதினாயிரம்பதின்மடங்குகூளிகள்பரிக்கவா
னுந்திமுன்பயிலுநந்திசேனன்வனமொருநொடிப்பொழுதிலெய்தினார். (௧௦௭)

எய்தியந்தமுனிசெய்யதாண்மலர்மனஞ்செய்தன்புடனிறைஞ்சியே
செய்தியாவுமவனுக்குநண்பொடுரைசெய்துசூழ்வரவிருந்தபின்
வெய்தின்வந்தடலரக்கர்நாயகன்விபத்தினுக்குதவியானதுங்
கொய்திலங்குவடிவாளினான்விறலும்யாவுமேன்மையொடுகூறினான். (௧௦௮)

வெங்கராவின்முழைவாய்புகுந்தலறிவேழமூலமெனவிரைவினிற்
பொங்கராவணைதுறந்துவந்தெதிர்புரந்தபுண்ணியனையொக்கவே
தங்கராபதநெருங்குதொங்கலணிதாமவேலடலரக்கனீ
யங்கராகமணியாரமார்பநினைதயவுருபிரளித்தியே. (௧௦௯)

தொடைகொடுத்தளகைநாதனன்றுதவுதுகில்கொடுத்துமதிமுத்தவெண்
குடைகொடுத்துநவமணிகொடுத்தமரிலென்றும்வென்றிதருகொற்றவெம்
படைகொடுத்தடலரக்கனுக்குயர்பதங்கொடுத்துமிகுபரிவுடன்
விடைகொடுத்தனனனந்தரஞ்சமரவீரவாகைபுனைவேலினான். (௧௧௦)

* திகழுமதனராசனெனவொருவனெய்திடவுமவனை என்றும்பாடம்.

வணங்கியன்புடன்மகிழ்ந்துமன்னரைவலம்புரிந்துமன்னனஞ்செயா
நிணங்கமழ்ந்தொழுகிவழியவாளெயிறுநிலவெழும்புழைகொள்வாயினன்
றுணங்கைகொண்டலகைகோடிவானின்மிசைதுள்ளியூருமிரதத்தின்மே
லிணங்கிமீளவும்விநாழிகைப்பொழுதினில்விடிம்பவனமெய்தினன். (௧௧௧)

வேறு.

அப்பொழுதுவானுலகம்தனினிடைநின்று
மைப்பொலியுமேனிவிசயன்வனமடைந்தான்
செப்பரியவைவர்களுந்தேவியுடனேயவ்
வொப்பரியதெய்வவனமொன்றினருறைந்தார். (௧௧௨)

மணிமான்வதைச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௧௮௫௦.

துருவாசமுனிச்சருக்கம்.

சாபத்தாலுஞ்சாபமொழிதன்னால்வளருந்தவத்தாலுங்
கோபத்தாலும்பேர்படைத்தகொடியமுனிவன்றுருவாசன்
றீபத்தான்மெய்வகுத்தனையான்றிகழ்பன்முனிவர்புடைசூழ
வாபத்தால்வந்தடைந்தவர்போலடைந்தானந்தவடவியின்வாய். (௧)

அருமாதவப்பேறனைத்துமக்கட்மாவென்னச்செப்பார்ந்து
குருமாமரபோரைவருந்தங்குஞ்சித்தலைமேலடிவைத்தெம்
பெருமானிங்கேயெழுந்தருளப்பெற்றேமென்னப்பெரிதுவந்தங்
கருமாமுனியைப்பூசித்தாரவனும்புகன்றானாசியரோ. (௨)

இட்டதவிசின்மிசையிருத்தியெரிகான்வந்தவிளைப்பாற்றித்
தொட்டகழற்காலுதிட்டிரன்கைதொழுதுதிப்பத்துருவாசன்
வட்டமணித்தேரவனுச்சவானத்தடைந்தான்யாமருந்தப்
பட்டவுணவிங்கமுதுசெயப்பருவமிதுவென்றுரைசெய்தான். (௩)

மூத்தோன்குளித்துவருகவெனமுனிவருடனம்முனிகடத்துப்
போய்த்தோய்வதற்காங்கெழுந்தருளப்புரசைக்களிற்றுமுரசுயர்த்தோன்
வாய்த்தோன்வரவுக்கென்புரிவோமதிப்பீரெனத்தன்றம்பியர்க்கும்
வேய்த்தோள்வேள்விமடந்தைக்குமுரைத்தாங்கவரைவினவினனால். (௪)

மேவாருணாக்கவிவன்வந்ததல்லாற்பிறிதுவேறில்லை
யாவாவிதற்கின்றென்செய்வேமாமாறுகநாமெழுந்து
கோவானவனும்பலபடையுங்குன்றச்சென்றுபொருதிமைப்பிற்
சீர்வாநிற்பதுறுதியினியென்றான்வன்றாட்சமீரணியே. (௫)

சுருதிக்கடவுளனையானைச்சுனைநீர்படிந்துவரச்சொல்லிக்
கருதிப்பிறநாம்புரியுமதுகடனேயென்றான்கழல்விசயன்
மருதிற்கிடைபோமவன்விரைந்துவருமாறுழைமினெனமொழிந்தா
னொருதிக்கினும்வெம்பரிபேற்றுக்கொத்தோரில்லாவுரவோனே. (௬)

யாதேயாகவிந்தவிபத்தேகும்பொழுதைக்கிசையளிக
டேதேயென்னாப்பசுந்துளபத்திருமாறன்னைச்சிந்தியுமிப்
போதேவருமிங்கவன்வந்தாற்போமிக்கவலையெனப்புகன்றான்
சாதேவனுமங்கவனிசைத்தசொல்லுக்கிசைந்தான்றருமனுமே. (௭)

என்னேயென்னேயாதவன்வானிடையுங்கடந்தான்முனிவன்வரு
முன்னேநுகர்ந்தாஞ்சாகபலமூலம்பலபேர்முனிவரொடுங்
கொன்னேமுனியுமுனிக்கினியென்கொல்லோபுரிவதெனநின்ற
மின்னேரிடையாணடுநடுங்கிவிளைவதென்னோவெனப்பயந்தாள். (௮)

தப்போதாமற்றம்பியர்க்குந்தருமக்கொடிக்குமிதமாக
வப்போதுணரும்படியுணர்ந்தானசோதைமகனையறத்தின்மக
னெப்போதியாவரெவ்விடத்திலெம்மைநினைப்பாரெனநின்ற
வொப்போதரியானுதிட்டிரன்றனுளப்போதிடைவந்துதித்தானே. (௯)

திருக்கண்கருணைபொழியவருந்திருமாலவரைத்தேற்றிமுத
லருக்கனுதவும்பாண்டத்தினன்னமுளதோவெனவினவ
முருக்கினிதழைக்கருக்குவிக்குமுறுவற்செவ்வாய்த்திரௌபதியு
மிருக்குமுறையோரன்னங்கண்டெடுத்தாள்கொடுத்தாளிறைவன்கை. (௧௦)

அந்தவன்னஞ்சதுர்மறையுமன்னமாகியருள்செய்தோன்
முந்தவுலகமுழுதுண்டமுளரியிதழினிடைவைத்தான்
வந்துசுனையில்வந்தனைசெய்மறையோரெவரும்வாரிதிமுன்
றந்தவமுதுண்டவர்போலத்தாபந்தணிந்துதண்ணென்றார். (௧௧)

உதரங்குளிர்ந்துவடிவுகுளிர்ந்துள்ளங்குளிர்ந்துமறைநாறு
மதரங்குளிர்ந்துகண்குளிர்ந்தாங்கருமாமுனிவனதிசயித்து
மதரஞ்சனக்கட்டிருவாழுமார்போன்மாயாவல்லபத்தா
விதரங்கடந்தானுதிட்டிரனென்றிவன்பான்மீண்டுமெய்தினனால். (௧௨)

உண்டோமுண்டோமும்பருக்குமுதவாவோதக்கடலமுதங்
கண்டோமுன்னாளெவ்வுலகுங்காணாமுகுந்தன்கழலிணைகள்
வண்டோலிடுந்தார்ப்பேரறத்தின்மகனேயுன்னையரசென்று
கொண்டோரல்லாலெதிர்ந்தோரில்யாரேவாழ்வார்குவலயத்தில். (௧௩)

நென்னற்புபக்கசேதனன்றன்னிலயந்தன்னிற்றீம்பாலுங்
கன்னற்கட்டிமுதற்பலதீங்கனிநெய்யுடனேயினிதருந்தி
யின்னற்பசிதீர்பொழுதத்திலென்பால்வரங்கொளெனவுரைப்ப
முன்னர்ப்பலவுமுரையாமலொன்றேமொழிந்தான்முடிவேந்தன். (௧௪)

எம்மிற்றுய்த்தவோதனம்போலெம்மோடிகலிவனம்புகுந்தோர்
தம்மிற்சென்றுநாளைநுகரிதுவேயெனக்குத்தரும்வரமென்
றும்மிற்செல்வமுடையவன்போலுரைத்தானதனாலுயர்ந்தோர்க
டம்மிற்சிறந்தோய்வந்தனம்யாமென்றானந்தத்தவமுனியே. (௧௫)

பரங்கொண்டுலகமுழுதுமிசைபரப்பிப்புரப்பான்பாண்டுவெனு
முரங்கொண்டுயர்ந்தோனளித்தருளுமுரவோய்நீயிங்குனக்கான
வரங்கொண்டிடுகவெனமுனியையவணங்கிப்பகைத்தோர்மாற்றங்க
டிரங்*கொண்டொன்றுங்கொள்ளாதியென்றான்வளையாச்செங்கோலான். (கசு)

அன்னான்மொழிகேட்டம்முனியுமடைந்தான்றன்பேருந்தவக்கான்
முன்னோனமுகுந்தனுந்தன்முந்நீர்த்துவரைநகர்புக்கான்
பின்னோர்வணங்கப்பேரழலிற்பிறந்தாண்மகிழப்பேரருட்குத்
தன்னோடொருவர்நிகரில்லானிருந்தானந்தத்தனிவனத்தே. (கஎ)

துருவாசமுனிச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்-கஅகஎ.

பழம்பொருந்துசருக்கம்.

அந்நெடுவனத்திற்சின்னாளகன்றபினமித்திரன்பே
ரென்னுமாமுனிவற்கென்றேயாவருமருகுசெல்லா
நன்னலமிகுத்தநெல்லிநறுங்கனியொன்றுகண்டாள்
கன்னலும்புளிக்குமின்சொற்†கயிரவங்கருகும்வாயாள். (க)

இக்கனியெனக்குநீநல்கென்றுவில்லெடுத்துக்கொண்ட
மைக்கனிக்களவுமானும்வடிவுடைவிசயனோடு
மெய்க்கனிவுடைமைதோன்றவிளம்பினாள்வீசுதென்றன்
முக்கனிகமழுஞ்சோலைமுகிறவழ்நாடன்பாவை. (உ)

சோமகர்க்கரசன்பாவை‡சொல்லுமுன்வில்லுவாங்கி
மாமுனிக்குணவாய்நின்றமதுரவாமலகந்தன்னை
§யேமுறைதொடுத்துவீழ்த்தியிதனுமாங்கட்கண்டோ
ரேமுறக்காணிலிப்போதென்படுமிறுத்தோனென்றார். (ங)

கண்டவம்முனிவர்சொல்லக்கடவுளர்கோமான்மைந்தன்
கொண்டவக்கனியைமூத்தகொற்றவன்றிருமுன்வைத்து
மண்டழற்பாவைசொல்லான்மதியிலேனெய்தேனென்றான்
றிண்டிறற்றேவர்க்காகத்திதிமைந்தராவிகொண்டான். (ச)

காடுறைவாழ்க்கையெய்திக்காய்கனிமூலந்தின்று
நீடுறுகாலம்போக்கிநீங்கலாதிருக்குநம்மை
நாடொறுமிடையூறன்றிநண்ணுவதில்லையாயி
னேடுறுதாராய்செய்வதென்கொலென்றியம்பினானே. (ரு)

அவ்வுரைவீமன்கேட்டாங்கமித்திரன்வந்தபோதே
யிவ்வுரைகேட்கினம்மைபெரியெழச்சபித்தறிண்ணம்
வெவ்வுரையுரையாமுன்னமெய்ம்முனிதன்னைப்போற்றிச்
செவ்வுரைகூறினம்மைச்சீறுமோசீறல்செய்யான். (சா)

* கொண்டென்றுங்கேளாதி என்றும்பாடம்.
† கயிரவமனையவாயாள் என்றும்பாடம்.
‡ சொல்லுமுனமித்திரப்பேர் என்றும், § ஆமுறத்தொடுத்து என்றும் பாடம்.

பொறுத்திடுமேலிடாவைம்புலத்தினாதலாலே
மறுத்திடாணையகின்றன்மாசிலாவாய்மையென்ன
நிறுத்திடுந்துலையோடொப்பானினைவினுக்கிசையத்தெவ்வைச்
செறுத்திடுவிசையன்மீளச்செப்பினன்செப்பமாக. (௭)

செய்தவனினிதுமாந்தத்தேவர்நாளொன்றுக்கொன்றாங்
கைதவமில்லாநெல்லிக்கனியினைக்கருதுறாம
*லெய்தவன்றன்னையன்றியாரையுமிடான்வெஞ்சாப
மெய்தவறாதசொல்லாய்வெருவுதலென்கொலென்றான். (௮)

வேந்தனம்மாற்றங்கேட்டுவில்வலான்றன்னைநோக்கி
யேந்திழைசொல்லவோராதினியவிக்கனியின்றீர்ந்தாய்
மாந்தரின்மடங்கலொப்பாய்வருத்தநீயுழக்கயாமோ
போர்ந்துபோய்ப்பிழைப்போமென்றான்பிதாவினுங்கருணைமிக்கான். (௯)

அம்முனிவந்தவாபத்ததனினுங்கொடிதிக்கானத்
திம்முனியுணவுகொண்டதெனவெரீஇநகுலன்றானும்
வெம்முனிவகற்றிநாமுமேம்படவேண்டினின்னந்
தெம்முனிதிகிரியானைச்சிந்தனைசெய்தியென்றான். (௧௦)

விளைதவமுனிவன்கண்டுவெகுளுமுனவன்றாள்போற்றிக்
கிளைபடுநெல்லிவாசக்கேழுறுகனிமுன்வைத்தா
லுளைவுறாமுனியானம்மையுறுதிமற்றிதுவேயென்னா
விளையவன்றானுந்தம்முனினைவினுக்கேற்பச்சொன்னான். (௧௧)

†பெண்மொழிகேளாரென்றும்பெரியவரெனக்கொண்டிந்த
மண்மொழிவார்த்தைபொய்யோவருத்தநீருற்றவெல்லா
மெண்மிகவெண்ணின்முன்னமென்பொருட்டன்றோவென்று
கண்மலரருவிசோரக்கனற்பிறந்தாளுஞ்சொன்னாள். (௧௨)

தம்பியர்தாமும்வேள்வித்தையலுமுரைத்தமாற்றங்
கிம்புரிநெடுங்கோட்டப்பொற்கிரிவல்லோன்கேட்டபின்னர்
வெம்பரிநகுலன்சொல்லேவிதியெனக்கருதியப்போ
தெப்பெருமானையுன்னவிவனெதிரவனும்வந்தான். (௧௩)

வேறு.

கண்டிருகண்ணுமிதயமுங்களிப்பக்கட்செவிப்பேரணைமறந்து
வண்டுவரையின்வாழ்தண்டுழாய்மாலைமாதவன்வருதலுமெதிர்கொண்
டண்டருமிறைஞ்சற்கரியதாளிறைஞ்சியாங்குறுமிடரினையவற்குத்
திண்டிறலறத்தின்றிருமகனுரைப்பத்திருச்செவிசாத்தினான்செப்பும். (௧௪)

திண்மையாலுயர்ந்தநீவிரைவிருமித்தியிடைப்பிறந்தசேயிழையு
முண்மையாநெஞ்சினிகழ்ந்தபட்டாங்கிண்டுரைத்திடக்கோட்டின்மீண்டொன்றும்
வண்மையாலுயர்ந்தீரென்றுசெப்பவளவாய்மலர்ந்தருளினான்மாயோன்
றண்மையார்கருணைத்தராபதிமுதலோர்சாற்றுவார்தம்மனத்தியல்பே. (௧௫)

* எய்தவென்றன்னை என்றும் பாடம்.
† பெண்மதிகேளாரென்றும் பாடம்.

வெல்லுகவறமுமெய்மையும்பொறையுமேகமேனியனும்வெல்லாமற்
செல்லுகபாவம்பொய்மொழிகோபந்தயித்தியர்குலமெனத்தெளிவுற்
றல்லும்வெம்பகலுமென்மனநிகழுமலகையாமன்னனைமுன்னங்
கொல்லுதல்புரிந்தோயென்றனன்முரசங்கோட்டியகொற்றவெங்கொடியோன். ()

பிறர்மனையவரைப்பெற்றதாயெனவும்பிறர்பொருளெட்டியேயெனவும்
பிறர்வசையுரைத்தல்பெருமையன்றெனவும்பிறர்துயரென்றுயரெனவு
மிறுதியேவரினுமென்மனக்கிடக்கையெம்பிரானிவையெனவுரைத்தான்
மறலியு*மடியுமாறுமல்லியற்கைவலிமைகூர்வாயுவின்மைந்தான். (கஎ)

ஊனமேயானவூனிடையிருக்குமுயிரினைத்துறந்துபொண்பூணு
மானமேபுரப்பதவனிமேலெவர்க்கும்வரிசையுந்தோற்றமுமரபு
ஞானமேயானதிருவடிவுடையாய்ஞாலமுள்ளளவுநிற்றலினா
லீனமேயுயிருக்கியற்கையாதலினாலென்றனன்விமனுக்கிளையோன். (கஅ)

குலமிகவுடையரெழின்மிகவுடையர்குறைவில்செல்வமுமிகவுடையர்
நலமிகவுடையரென்னினுங்கல்விஞானமற்பமுமிலாதவரை
வலமிகுதிகிரிச்செங்கையாய்முருக்கின்மணமிலாமலரெனமதிப்பேன்
சலமிகுபுவியிலென்றனன்வாகைத்தார்புனைதாரைமாவல்லான். (ககூ)

ஒருமொழியன்னைவரம்பிலாஞானமுற்பவகாரணனென்றுந்
தருமமேதுணைவன்கருணையேதோழன்சாந்தமேநலனுறுதார
மரியதிண்பொறையேமைந்தன்மற்றிந்தவறுவருமல்லதாருறவென்
றிருவரிலிளையோன்மொழிந்தனன்றன்பேரிதயமாமலர்க்கிடையெடுத்தே. (உ0)

ஐம்புலன்களும்போலைவரும்பதிகளாகவுமின்னம்வேறொருவ
னெம்பெருங்கொழுநனாவதற்குருகுமிறைவனேயெனதுபேரிதய
மம்புவிதனிற்பெண்†பிறந்தவரெவர்க்குமாடவரிலாமையினல்லா
‡னம்புதற்குளதோவென்றனள்வசிட்டனல்லறமனைவியேயனையாள். (உக)

$அறுவருமிவ்வாறுண்மையேயுரைத்தாராதலானிரைநிரைப்படியே
மறுவணிதுளபமார்பனுங்கேட்டான்மாமுனிக்கோதனமான
நிறைசுவையமுதநெல்லியின்கனியுநின்றகொம்பணைந்ததாலென்றும்
பெறுமுறைபெறுமேயுள்ளவாறுரைத்தாற்பெரியவர்பேசும்வாசகமே. (உஉ)

முளைத்தெழுகமலத்தரும்பெனவரும்புமுகிழ்ப்புலைப்பொதுவியர்மலர்க்கை
வளைத்தழும்பகலாமரகதமலைபோல்வடிவழகுடையவெம்மாயோ
னுளைத்தெழுதரங்கப்பாற்கடன்§மறவாதுறையும்வண்டுவரையைநோக்கி
யிளைத்தவரின்னலொழித்துமீண்டகன்முனிவருமீண்டிறைஞ்சியாங்கிருந்தார். ()

பழம்பொருந்துசருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-கஅகூ0.

---

*மடியமோதுமல் என்று பாடம்.
†பிறந்தவரெவரும் என்றும், ‡நம்புதற்குளபோ என்றும் பாடம்.
$அறுவருமிவ்வாறுரைத்தனருண்மையவரவர்நினைவினின்படியே என்றும்பாடம்.
§மறந்தேயுறையும் என்றும் பாடம்.

நச்சுப்பொய்கைச்சருக்கம்.

சேயபங்கயச்சிறுவிரலங்கையிற்றிரட்டியநறுவெண்ணெ
யாயர்மங்கையரிடவிடவமுதுசெய்தாடியதிருக்கூத்து
நேயமுங்குறுமுறுவலும்புரிந்துபார்த்தருளியநெடுங்கண்ணு
மாயவன்றிருவடிவமுமழகுமென்மனத்தைவிட்டகலாவே. (க)

வண்டுசிந்தியமதுத்துளிமுகில்பொழிமழைத்துளியொடுஞ்சேர்ந்து
கண்டுசிந்தையுநயனமுமுருகுபைங்கானிடைக்கழிகேள்வி
விண்டுசிந்தனென்றொருமுனியருந்தவவிபினமேவினராகிக்
கொண்டுசிந்தனையறவிருந்தனர்குலக்குந்திமுன்பயந்தோரே. (உ)

ஆண்டுமற்றவருறைதருகாலையிலரவவெங்கொடியோனு
மூண்டழற்பொறிகன்றியமனத்தினர்மூவருமுடன்முன்னி
மீண்டுமிப்புவிவேண்டுவரிருக்கினும்விரகுடன்முற்கோலிப்
பாண்டுபுத்திரர்க்கோறுமென்றருளிலாப்பாவியர்துணிந்தாரே. (ங)

காளமாமுனிதனைக்கொடுவருகெனக்கலந்தநீற்றொளிகூருந்
தூளமாமுனியொருவனோடறிவிலாச்சுயோதனனுரைசெய்ய
வாளமாநிலமுழுதுடைமன்னனில்வந்தனன்வினாவிற்போய்
மீளமாமறைவேள்விகூர்முனியொடும்விடுத்தமாமுனியம்பா. (ச)

ஒருமுனிக்குலங்களுக்குமுன்செய்கலாவுயர்வுடையுபசாரம்
பெருமுனிக்களித்திறைஞ்சிநீபுரிதவப்பெருமையால்வளர்கின்ற
திருநிலப்பரப்பெங்குமென்னுனையேயென்னைநீயீடேற்றத்
திருவுளத்தருள்செய்குகவெனவவன்சேவடிகளில்வீழ்ந்தான். (ரு)

நன்கலாவிதமனைத்தையுந்தெரிக்குநன்னுவுடைமுனியென்னை
யென்கொலாமிவணழைத்ததின்றெனவவனிருந்தாயனைநோக்கத்
தன்கலாமனந்தோன்றவச்சகுனியத்தவமுனிவனைப்போற்றி
மின்குலாவருவேணியாய்நீயிவன்வெம்பகைகளைகென்றான். (சா)

கொடுத்துமாநிலத்தின்னிசைவளர்க்குமக்கொடியபாவியுமைவர்
விடுத்தபாரினப்வேண்டுவரிருக்கினவ்வேந்தனைவிண்ணேற்றற்
கடுத்தவேமம்வஞ்சகங்களாலியற்றுதியாயினிவ்வெழுபாருங்
கொடுத்திநீநிலைபெறவரவெழுதியகொடியவன்றனக்கென்றான். (எ)

கன்னன்வாசகங்கேட்டபோதிரண்டுதன்கன்னமுநெருப்புற்ற
தென்னவேவவைம்புலன்களுநெஞ்சமுமிடிபின்வாயரவொத்தான்
பின்னையாதவனுரைப்பதுதவங்களும்பெருந்தகைமையும்பொன்றி
முன்னமேயெழுபிறப்பினல்வினைகளுமுடிந்தவின்றெனமுன்னி. (அ)

எண்வகைப்பெருந்திசையினுநினதுபேரிசையிலாத்திசையில்லை
மண்ணைத்துநின்றனிக்குடைநிழலிலேமனுமுறைமையின்வாழுங்
கண்ணுற்றதிக்கருமநீயெக்குறைகண்டுவெங்கழற்காலாய்
விண்ணகத்துநானேற்றுதல்புரியினும்வீவரோவீவில்லார். (கூ)

தொடங்கிடான்புரிதீவினையென்னையேசுடுவதல்லதுகொற்ற
மடங்கல்போல்பவர்தங்கண்மேற்செல்லுமோமாயவனிருக்கின்றா
னிடங்கொள்பாரகம்பெறுவதற்கென்னுநின்னிச்சையின்படியேகி
விடங்களாலுயிரொழிப்பவர்க்கொத்துநான்வீவதேமெய்யென்றான். (கO)

அசைவிலாமனத்தருந்தவமுனிவனையனைவரும்பணிந்தேத்தி
யிசையுமாறுசெய்தோமவான்பொருள்களுக்கியாவும்வேண்டுவநல்கத்
திசையெலாமுகமுடையவனிகர்தவச்செல்வனுஞ்சென்றான்வெவ்
வசையினான்மிகுகொடியகோலரசனுமகிழ்ந்துதன்மனைபுக்கான். (கக)

போனமாமுனிதன்றபோவனத்தொருபுடைமிடைநெடுங்கள்ளிக்
கானமானதுபுகுந்துபாரிடங்களுங்கழுகினங்களுந்துன்றி
யானையோடிடநரிதுரந்திடுநிலத்தெரிவெயிற்கழைமுத்தம்
வானெலாநெடுந்தாரகைபோலெழுமால்வரைப்புறஞ்சார்ந்தான். (சஉ)

அண்டர்யாவருமானுடமுனிவருமகலிடந்தனின்மற்றுங்
கண்டகண்டவர்யாவரும்வெருவரக்கடும்பலிபலநல்கி
யுண்டியால்வளர்ந்தாரழல்கோளகையூடுறும்படியோம
குண்டமெவ்வளவவ்வளவிந்தனங்கொடுந்தருக்களிற்சேர்த்தான். (கங)

மிக்கமந்திரடாமளமுதலியவேதபந்திரந்தம்மிற்
றக்கமந்திரந்தெரிந்துகொண்டாசறுசடங்கமுந்தப்பாமற்
றொக்கமந்திரமொன்றினுக்கோரெழுசுருவையினறுநெய்வார்த்
தொக்கமந்திரமனைத்தினுங்கொடுமைகூரோமமும்புரிந்தானே. (கச)

தன்றனிச்சையினன்றியேழ்கடலுடைத்தராதலந்தனையாளு
மன்றனிச்சையிற்புரியுமவ்வேள்வியில்வந்துறுபெரும்பூதஞ்
சென்றெயிற்றிளநிலவெழத்துணைவிழிதீயெழவெயில்வாய்கார்க்
குன்றெனப்பொலிந்தெழுந்ததுமுனிவனுங்கூசிமெய்குலைந்திட்டான். (கரு)

வேறு.

இப்பாலிவ்வாறோமஞ்செய்திவனிப்பூதமினிதெழுப்ப
வப்பாலிருந்தவனசரிதரைவர்க்கமைந்தவாறுரைப்பா
முப்பாலினுக்குமுதற்பாலாய்மும்மைப்புவனங்களுங்காக்குந்
தப்பாவாய்மையறக்கடவுளறிந்தானெண்ணந்தப்புவிப்பான். (கசு)

தன்மைந்தனுமத்தம்பியருஞ்சரியாநின்றதபோவனத்து
நன்மைந்தரிலோர்முனிமைந்தனனானுடன்பூணசினத்தை
வின்மைந்தரையுமதியாமல்விரைந்துள்புகுந்துவிசைத்தகல்வான்
றன்மைந்தனைப்போலோருழைகொண்டோடிற்றென்றுற்சொலவுண்டோ. ()

மறைவாய்ச்சிறுவன்கலைத்தோலைமான்கொண்டோடிவானிடையிற்
பொறைவாய்ப்புகுந்ததபயமெனப்புகுந்தாங்கழுதுபுலம்புதனு
நறைவாய்த்தொடையலறன்மகனுமிளைப்பவீரர்நால்வருந்தந்
துறைவாய்ச்சிலையோடம்பேந்தித்தொடர்ந்தாரதனைச்சூழ்புலிபோல். (கஅ)

அகப்பட்டதுபோன்முன்னிற்குமருகெய்தலுங்கூராசுகப்போன்
மிகப்பட்டோடுந்தோன்றாமல்வெளிக்கேயொளிக்கும்விழியிணைக்கு
முகப்பட்டிடுமீண்டை வருந்தம்முரண்டோள்வன்மைதளர்வளவுந்
தகைப்பட்டொழிந்தாரதிலாசையொழிந்தாரிந்திரசாலமெனா. (ககூ)

தடங்கானகமும்வானகமுஞ்சாரற்பொருப்புந்தாழ்வரையு
மடங்காவரும்போஞ்சூழ்போதுமப்போதந்தமான்கன்று
தொடங்காவிவரையிளைப்பித்ததொழிலைச்சொல்லினொருநாவுக்
கடங்காதின்னுமாயிரமுண்டானாலதற்குமடங்காதே. (உ0)

கானீதிவர்க்குத்தலைதெரியாக்கானங்கருத்துமிகக்கலங்கிப்
பானீய்த்துக்கைவருமெய்ப்பதையாநிற்பரெனவறிந்து
தூநீர்நச்சுச்சுனையாயச்சுனைசூழ்வரமேவார்தொன்மரமா
யானீபவனென்றெண்ணுமலெல்லாமானோனிருந்தானே. (உக)

வேறு.

தருமனுந்தம்பியாருந்தாலுவும்புலர்ந்துதாகத்
துருகியமனத்தராகியுடற்றளர்ந்தயருமாங்க
ணெரியுறுகானம்போல்வானிளவலைநோக்கியின்னே
மருவரும்புனல்கொண்டோடிவருதிநீவிரைவினென்றான். (உஉ)

அக்கணத்தினிற்சாதேவனடவிகடோறுந்தேடி
யெக்கணுங்காணாகியென்றுதோய்குன்றொன்றேறி
மிக்கவண்சீதவாசவிரிசுனையொன்றுகாணாப்
புக்கனன்பருகலுற்றான்பொலிவறப்புலர்ந்தநாவான். (உங)

செழும்புனலுதரந்தன்னிற்சேருமுனாவிபோன்றி
விழுந்தமையறிவுறாதுமீளவுநகுலன்றன்னை
யழுங்கினனேவச்*சென்றாங்கவனுமப்பரிசின்மாய்ந்தா
னெழும்படைவிசயன்றன்னையேவினனவனும்போனான். (உச)

தம்பியர்கிடந்ததன்மைகண்டுமத்தலைவன்மேன்மேல்
வெம்புறுகொடியதாகமிகுதியால்விரைந்துவாரிப்
பைம்புனலருந்தியவ்வாறிறந்தனன்பரிதாபத்தோ
டெம்பியரென்செய்தாரென்றிறைவனுமினைந்துசோர்ந்தான். (உரு)

வீமனங்கவனைத்தேற்றிமெலிவுறுசோகத்தோடு
மீமமொத்தெரியுங்கானமெங்கணுந்திரிந்தங்கெய்திச்
சாமுறைத்தம்பிமாரைக்கண்டருந்தடத்துநீரை
யாமெனக்கருதாதாலமாகுமென்றகத்திற்கொண்டான். (உசு)

---

* சென்றானவனுநீரருந்தி மாய்ந்தான் என்றும் பாடம்.

பின்னவர்மூவர்சேரப்பிணங்களாய்க்கிடத்தல்கண்ட
மன்னவன்றனக்குத்தாகமாறுமோவளர்ந்துமேன்மே
லென்னவன்பட்டானென்பதியம்புதற்கெட்டுமோமுன்
சொன்னவன்றானுமிந்தச்சோகமோதொகுக்கமாட்டான். (௨௭)

குசையுடைப்புரவித்திண்டேர்க்குரக்குவெப்புதாகையானை
யசைவில்பொற்சயிலமன்னவாண்டகைமனத்தினைத்
திசையனைத்தினுந்தன்னாமந்தீட்டியசிலையின்வெம்போர்
விசையனைத்தன்கண்ணீரான்மெய்குளிப்பாட்டினானே. (௨௮)

நற்றுணைச்சிறுவனோடுநகுலனைநோக்கியந்தோ
வெற்றுணையிழந்தேனென்னுமென்செய்வதினிநானென்னு
முற்றுணைவனுமக்கானின்முடிந்திடுமொழியவேறோர்
பிற்றுணைகாண்கலாதேன்யாரொடுபேசுவேனே. (௨௯)

மணிமுரசுயர்த்தோனீண்டுவருதலுங்கூடும்வந்தா
லணிதருநச்சுத்தோயமருந்தவுங்கூடுமென்னாப்
பணியுடன்செய்வான்போலப்பருமணலேட்டிற்கையாற்
றுணிவுறவெழுதியந்தத்தோயமேதானுந்துய்த்தான். (௩௦)

பொருப்பினும்வலியகொற்றப்புயமுடைவீமனென்றா
லருப்புடை*யறலினஞ்சமஞ்சுமோவாலமென்னு
முருப்பினையறிந்தும்வாரியுண்டுதன்னுயிரும்வீந்தா
னெருப்பினுஞ்சொல்லினாவேநினைப்பினுநெஞ்சம்வேமால். (௩௧)

ஆருயிர்பொன்றுங்காலையமுதமும்விடமாமென்று
பாருளோருரைக்குமாற்றம்பழுதறப்பலித்தகாலை
மாருதிமுதலாவுள்ளமன்னவர்நால்வர்தம்மோ
டோருயிரானமற்றையொருவனேயொருவனானான். (௩௨)

கட்புலனாகவேறோர்யோனியுங்காண்கலாத
வெட்புலந்தன்னிற்சோகமிஞ்சவேதாகம்விஞ்சி
யுட்புலனழிந்துபின்போமுள்ளமோடுயங்கிவீழ்ந்தா
னட்புலந்தவரால்முன்னங்கானகநண்ணினானே. (௩௩)

ஈங்கிவருயங்கிவீந்தவெல்லையிலெரிசெய்யோமத்
தாங்கவணெழுந்தபூதமம்முனிதன்னைநோக்கிப்
பாங்குடன்புரியுமேவல்பணித்தருளென்னநெஞ்சிற்
றீங்கிலாமுனியும்பூதவரசுடன்செப்புவானே. (௩௪)

நின்றிடாதிமைப்பிற்குந்திமைந்தராய்நெடியகானிற்
றுன்றிடாவைகும்வேந்துந்துணைவருமிருந்தசூழற்
சென்றிடாவொன்றாயைந்துசெயற்கையாமுடலைச்சேரக்
கொன்றிடாவருதியென்றுகூறியவுறுதிகேளா. (௩௫)

---

* அறலின்றாக மஞ்சுமோ என்றும் பாடம்.

ஐம்பெரும்பூதமொக்குமப்பெரும்பூதஞ்சாதிச்
செம்பொனினொளிருமேனித்தெய்வமாமுனியைநோக்கி
வெம்புகானுறைவோரின்றென்விழிக்கிலக்கல்லரானா
லெம்பிரானினையேகொல்வனெனத்தொழுதேகிற்றன்றே. (௩௬)

காட்டுறுகோடைவெப்பங்களைகுவான்கரியமேக
மோட்டுருக்கொண்டுமின்னான்மூளைத்தெழுமெயிறுதாங்கித்
தோட்டுணைபுடைகொண்டெங்குஞ்சூறைபோன்மரங்கள்வீழ்த்திக்
காட்டுறைவாழ்க்கையானைக்கண்ணுறக்கண்டதன்றே. (௩௭)

அந்தணன்சொன்னவேந்தரைவரிலறனால்வந்த
மைந்தன்மற்றிவனேயாவிமாய்ந்ததோர்வடிவனாகிச்
சந்தனதருவிற்சார்ந்துசாய்முடித்தலையனாகி
மந்திரமறந்தவிஞ்சைமாக்களின்வடிவுசோர்ந்தான். (௩௮)

சிறந்தமெய்ந்நிழல்போற்சூழுந்துணைவருஞ்சேரவிட்டுத்
துறந்தனர்போலும்யாண்டுந்துப்பிலாவெப்பந்தன்னா
லிறந்தனனிவனுமற்றிங்கென்செய்வேனென்றென்றெண்ணி
நிறைந்தநீர்ச்சுனையின்மற்றைநிருபர்நால்வரையுங்காணா. (௩௯)

பச்செனும்புனலான்மிக்கபங்கயச்சுனையுங்கொல்லு
நச்சுவெஞ்சுனையேபோலுநால்வருஞ்சேரமாண்டா
ரிச்சுனையருந்திப்போலுமென்னிலிங்கேதுசெய்தார்
நிச்சயங்கொடிதுகெட்டேனிந்தநிட்டூரமென்னா. (௪0)

காவலன்வார்த்தைகேட்டுக்காளமாமுனிவனென்னு
நாவலனேமத்தீயினம்மையுற்பவித்துவிட்டான்
மேவலர்கொல்லுமுன்னேவிந்தனரிந்தப்பாவங்
கேவலமல்லவென்றுகிளர்சினமூண்டுமீண்டே. (௪௧)

காலங்கண்மூன்றுமெண்ணுங்கடவுணிகலக்கமெய்தி
ஞாலங்கொளாசையினில்லாநயனிதன்மகன்சொற்கேட்டுச்
சீலங்கொள்வாய்மையாய்ச்செந்தீயெழுகானிற்சின்னீ
ராலங்கொல்பான்மையாரையார்கொல்வானருளிச்செய்தாய். (௪௨)

பூண்டவெள்ளரவத்தோடுபுனைமதிவேணியார்க்குத்
தாண்டவநடனஞ்செய்யத்தக்கதோர்தழல்வெங்கானிற்
பாண்டவர்தம்மைக்கொல்லப்பணித்தனையொருகாலாவி
மாண்டவர்பின்னும்பின்னுமாள்வரோமதியிலாதாய். (௪௩)

நீயிதற்கிலக்கமாகிநின்றனையென்றுகோபத்
தீயெழப்பொடிக்குங்கண்ணுஞ்சிரிப்பெழுமெயிறுமாகி
மூவிலைச்சூலந்தன்னான்முனிதலைதுணிந்துவீழ
வேவலிற்பழுதில்பூதமிவனையேயெறிந்ததன்றே. (௪௪)

எறிந்ததுமீண்டுமோமவெரியிடையொளிக்கக்கானிற்
செறிந்தமாமுனிவர்யாருந்தேவரோடிரங்கியார்ப்ப
வறிந்தவரவனியாளுமரசனைவெறுக்கத்*தம்மிற்
பிறிந்தவர்மீண்டுமாவிபெற்றவாபேசக்கேண்மோ. (௪௫)

வேறு.

மூச்சறப்புலர்ந்துபங்கியமுரசவெங்கொடியோன்
மாச்சினைத்தடஞ்சந்தனபகீருகநிழலில்
வீச்சுறப்பபிறென்றலான்மெய்யுயிரெய்தி
நாச்சுவைப்படுஞானநன்மந்திரநவிலா. (௪௬)

தனைப்பயந்தநற்றருமதேவதைதிருவருளால்
வினைப்பயன்களாலுறுதுயர்யாவையும்வீட்டிச்
சுனைப்பெரும்புனற்றுகமுமடிக்கடிதோன்ற
நினைப்புமெய்தியத்தம்பியர்தம்மையுநினைந்தான். (௪௭)

ஆனதன்மனவலியுடனொண்டுநின்றெழுந்து
கானகத்திடைநீங்கியவறன்றருகாளை
போனதம்பியர்சேவடிச்சுவட்டினிற்போயத்
தூநிறப்புனலுண்டுவீழ்துணைவரைக்கண்டான். (௪௮)

ஊறிலாமைகண்டடற்றினரில்லெனவுணர்ந்து
மாறிலாதவரெங்ஙனமாருயிர்மாய்ந்தார்
சேறிலாதவெஞ்சுரத்திடைச்செழும்புனனுகரும்
பேறிலாமையினிறந்தனர்போலும்பெரியோர். (௪௯)

அண்டகோளகையனையதோராதபத்திரத்தான்
மண்டலங்களீரொன்பதும்புரந்திடவல்லான்
சண்டமாருதியெழுதியதாழ்மணலெழுத்தைக
கண்டுநஞ்சமிக்கயத்தறலென்பதுகண்டான். (௫௰)

வெஞ்சமஞ்செயவருவர்கொன்மீண்டுமென்றருளில்
வஞ்சகன்செய்தவஞ்சனையிதுவெனமதித்து
நஞ்சநீர்கொடுதானுந்தன்னுவினைநனைக்கு
நெஞ்சணுகியந்நிறைபுனற்கயத்திடைநேர்ந்தான். (௫௧)

திருந்து†நல்வரைச்செங்கையாலள்ளியநீரை
யருந்துமவ்வயினகல்விசும்பிடையசரீரி
கருந்தடம்புனனஞ்சிதுநுகர்வதுகருதேல்
விருந்தர்நால்வருமென்மொழிகேட்டிலர்வெய்யோர். (௫௨)

உன்னையான்வினவுரைதனக்குத்தரமுரைத்துப்
பின்னைநீநுகர்பெருதுபெற்றனையவிப்புனலை
யன்னைபோலுயிரனைத்தையும்புரந்திடுமரசே
‡யென்னையோபெருந்தாகம்விஞ்சிடினுமின்றெனவே. (௫௩)

---

* தம்மி, விறந்தவர் மீண்டு மாவி பெற்றவா றியம்பக் கேண்மோ என்றும் பாடம்.
† நல்வரைக்குறிதிகழ் செங்கையாலள்ளி, யருந்தும் என்றும் பாடம்.
‡ என்னையா என்றும்பாடம்.

பெருநலம்பெறுமகனையப்பேரறக்கடவு
ளிருவிசும்பினிலருவமாயியம்பியமாற்றந்
திருவுளந்தனிற்கொண்டுதன்செங்கைநீர்வீழ்த்திப்
பொருவிலாமகன்புகலுவபுசுறிநீயென்றான். (௫௪)

சொல்லுநூல்களிற்பெரியதேதரியமெய்ச்சுருதி
யில்லறத்தினுக்குரியதேதென்னுடையில்லாண்
மல்லன்மாலையின்மனமுளதேதுவண்சாதி
நல்லமாதவமேதுதங்குலம்புரிநடையே. (௫௫)

முனிகுலந்தொழுகடவுள்யார்மொய்துழாய்முகுந்த
னனைமணங்கமழ்குழலினர்க்கியற்கையாதுயர்நாண்
தனமிகுந்தவர்க்கேதாண்டகைபெறுதான
மினியதேதிருசெவிக்கிழங்குதலையரின் சொல். (௫௬)

நிற்பதேதுகொனீடிசையொன்றுமேநிற்குங்
கற்பதேதுகொல்கசடறக்கற்பதேகல்வி
யற்பமாவதேதனைத்தினுமயற்கரத்தேற்றல்
சிற்பமாமிவைசெப்பெனச்செப்பினன்சிறுவன். (௫௭)

இவ்வகைப்பலவினவலுமியப்பியமகனை
யவ்வயிற்பெரிதுவந்துகண்ணினுக்கிலக்காகிச்
செவ்வையிற்பொலஞ்சிலம்பெனச்சேர்ந்துமெய்தழுவி
வெவ்வயிற்புரிவிரகெலாம்விளம்பினன்மாதோ. (௫௮)

வேறு.

அறப்பெருங்கடவுளென்றறிந்துதாதையைச்
சிறப்புடன்சேவடிசென்னிசேர்த்திய
மறப்பெரும்புதல்வனைமகிழ்ந்துநம்பிய
ரிறப்பினைபொழிப்பதற்கேதுவுண்டெனு. (௫௯)

நச்சுநீர்குடித்துயிர்நீத்தநால்வரி
னுச்சமாமன்புடையொருவன்றன்னைநீ
யிச்சையானிம்மறையியம்பியெண்ணிலோ
ரச்சமற்றழையெனவருள்செய்தானரோ. (௬௦)

தாதைகூறியமறைதனைக்கொண்டேகுத
னேதமுற்றிடாவகையிளையதம்பியை
யூதைவந்துள்புகவுணர்ச்சிநல்கினன்
வேதமுநிகரிலாவிரதவாய்மையான். (௬௧)

கண்டுநின்றறப்பெருங்கடவுள்வாயுவின்
றிண்டிறன்மாமகன்றேவர்கோமகன்
மண்டமழல்விடத்தினான்மடியமாமருத்
தண்டர்நல்கிளவலையழைத்ததென்னென்றான். (௬௨)

குத்திரமிலாமொழிக்குந்திக்கியானொரு
புத்திரனுளனெனப்புரிந்துநல்கினாய்
மத்திரைக்கொருமகவில்லைவல்லவர்
சித்திரம்வகுத்தெனத்திகழுமேனியாய். (௬௩)

என்றுதன்றந்தையோடியம்பத்தந்தைபூ
மன்றலந்தொடைமுடிமைந்தனுக்கமர்
வென்றிடுமறைகளும்வில்லொடேவுமே
லென்றபல்படைகளும்யாவுநல்கினான். (௬௪)

கருதலனழைத்ததுங்காளமாமுனி
புரிதழல்வளர்த்ததும்பூதம்வந்தது
மருகிவர்நச்சுநீரருந்திமாய்ந்ததும்
விரிசினத்துடனதுமீண்டுபோனதும். (௬௫)

முனிவனைக்கொன்றதுமுனிவன்வாய்மையிற்
றுனிவனத்துழையினைத்தொடர்ந்துபோயதுந்
தனிவனத்திடைவிடத்தடாகஞ்செய்தது
மினிமையிற்புத்திரற்கியாவுங்கூறினான். (௬௬)

நன்பெருவனஞ்செறிநாளகன்றன
பின்பிறரறிவுறாப்பெற்றிபெற்றுநீர்
துன்புறாதிருமெனச்சொல்லியேகினா
னன்பினாலருள்புரிந்தரியதாதையே. (௬௭)

தம்பியரனைவருந்தத்தமாவிபெற்
றும்பரிற்றலைவனாமுரியதந்தையை
வம்பவிழ்மலரடிவணங்கிநெஞ்சுட
னம்பகமலர்ந்துதம்மடவியெய்தினார். (௬௮)

தீதறக்கானிடைச்செறிந்தவைவரும்
பேதுறத்தொடர்ந்தொருபிணைபின்போனது
மேதமுற்றிறந்ததுமெழுந்துமீண்டது
மாழ்துயர்த்திரௌபதிக்கறியக்கூறினார். (௬௯)

நச்சுப்பொய்கைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௧௯௫௯.

ஆரணியபருவ முற்றுப்பெற்றது.

———0———

நான்காவது

விராடபருவம்.

நாடுகரந்துறைசருக்கம்.

அங்கையினேமிசங்குவாடண்டோடடற்சராசனந்தரித்தருள்வோன்
சங்கையின்மறைகளாயிரங்களுக்குஞ்சாற்றுதற்கரியதத்துவத்தோன்
கங்கையினறலுங்காளியன்முடியுங்காளிந்திக்கரையுமேகமழும்
பங்கயமலர்களிரவுநன்பகலும்பணிந்துபாடுதுமவன்புகழே. (௧)

அரவவெங்கொடியோனேவலின்படியேயைவருமாறிரண்டாண்டு
துருபதனளித்தபாவையுந்தாமுஞ்சுருதிமாமுனிகணம்பலவும்
பரிவுடன்மலரும்பலங்களுங்கிழங்கும்பாசடைகளுமினிதருந்தி
யொருபகல்போலக்கழித்தனரறிவுமொடுங்கியபுலன்களுமுடையோர். (௨)

தொல்லறக்கடவுளருளுடனளித்ததோன்றறன்றுணைவரைநோக்கிக்
கல்லமர்கிரியுங்கானமுமிடமாக்கழித்தனமொழிந்தனகால
மெல்லையோராண்டுமியாவருமுணராதிருப்பதற்காமிடம்யாதோ
சொல்லுமினென்றுனென்றலுந்தொழுதுசுரபதிமகனிவைசொல்வான். (௩)

நீதியும்விளைவுந்தருமமுநிறைந்துநிதிகண்மற்றியாவையுநெருங்கி
யாதியின்மனுநூல்வழியினிற்புரப்பானவனியைமனுகுலத்தரசன்
மாதிரமுழுதுமவன்பெரும்புகழே*வழங்குவதமரருப்வேள்வி
வேதியர்பலருமுறைவதுமவணேவிராடர்கோன்மச்சநாடையா. (௪)

ஆங்கவனகரியெய்திமற்றின்றேயைவருமணியுருக்கரந்து
தீங்கறவுறைவதல்லதுவேறோர்சேர்விடமில்லெனச்செப்பத்
தேங்கியவருளுக்கிருப்பிடமானசிந்தையான்சிந்தையாற்றுணிந்து
பாங்குறையரசர்யாரையுந்தத்தம்பதிகளேசெல்கெனப்பகர்ந்தான். (௫)

முனிவராயுள்ள†தபோவனத்தவரைமுடியுறத்தனித்தனிவணங்கிக்
கனிவுறுமன்பாலென்றுநானும்மைக்காண்பதென்றவர்மனங்களிப்ப
வினியனவுரைகள்பயிற்றியாவரையுமேகுவித்திற்றைநாளிரவிற்
றினகரனெழுமுன்செல்வமச்செல்வந்திகழ்தருநகர்க்கெனச்செப்பா. (௬)

---

* வழங்குவதியாவரும் வேள்வி என்றும் பாடம்.

† தபோதனத்தவரை என்றும் பாடம்.

கல்கெழுகுறும்புஞ்சாரலங்கிரியுங்கடிகமழ்முல்லையம்புறவு
மல்குநீர்ப்பண்ணைமருதமுங்கடந்துவன்னியிற்பிறந்தமாமயிலும்
வில்கெழுதடக்கையிளைஞருந்தானும்விராடர்கோன்றனிக்குடைநிழலிற்
பல்குலமாக்கள்வாழ்வுகூர்வளநாடடைந்தனன்பாண்டவர்தலைவன். (எ)

தராதலமுழுதுமுடையகோமகனுந்தம்பியர்நால்வருந்திருவு
மிராவிடைவிரைவினுறிடைக்கடந்தோரெண்ணமுமிருக்கையும்வாய்ப்பக்
கராமுலாவருபைந்தடமும்வண்காவுங்கனகவான்புரிசையுஞ்சூழ்ந்த
விராடன்மாநகரியெல்லைபுக்கொருபான்மயானபூமியினிடைவிரவா. (அ)

யாமளமறையால்யாவரும்பணிவாளெழுவகைத்தாயரிலொருத்தி
சாமளவடிவோடங்கர்*வாழ்வாள்சங்குதண்டங்கையிற்றரிப்பாள்
கோமளவல்லிக்கொடிநிகர்காளிகோயிலின்முன்னரோர்வன்னி
நாமளவிடுதற்கரியபல்கிளையானலம்பெறுபாதவநண்ணு. (௯)

தத்தமபடையுங்கவசமுமனைத்துந்தனித்தனியைவருந்தரித்த
மெய்த்திறலுடையயாவுமத்தருவின்கோடரத்தொளித்தொருவிரகால்
வைத்தனராகியாவருமுணராவகையருமறைகளும்பயிற்றி
முத்தலைவடிவேற்காளியைவணங்கிமுன்னினார்புரிதொழின்முற்றும். (௧௦)

தம்பியர்வணங்கித்தனதுதாளிணையிற்றங்கவோர்தாபதவடிவு
மும்பரும்வியப்பக்கங்கனென்றுரைக்குமொருதிருநாமமுந்தரித்து
வெய்பரிதியினுஞ்செம்மைகூர்வடிவம்வெண்புரிநூலொடுவிளங்க
வைம்புலன்மகிழச்சென்றுகண்டிறைவந்தடிதொழவாசியுமுரைத்தான். (௧௧)

யாரையாநீவிரெங்குநின்றிவண்மற்றெழுந்தருளியதெனவினவப்
பாரையாளுடையவுதிட்டிரன்பாங்காய்ப்பயின்றனனவன்பெருவனத்திற்
சேருநாளுடன்போய்த்திரிந்தனனின்பாற்சிலபகல்வைகுமாறெண்ணி
வீரவார்கழலாய்வந்தனனென்றான்வேள்வியாற்கேள்வியான்மிக்கோன். (௧௨)

மன்முனிமொழிந்தவாய்மைகேட்டந்தமனுகுலமன்னனுமகிழ்ந்து
தன்மனநெகிழ்ந்தநெகிழ்ச்சியுமுணர்வுந்தகைமையுமுவகையிற்றோன்ற
வென்மனைவயினின்றெய்தியபயன்யானேழெழுபிறப்பினும்புரிந்த
நன்மையின்விளைவேவேண்டுநாளீண்டுநண்ணுதிரெனநனிநவின்றான். (௧௩)

தண்டினுக்கொருவன்புயவலிக்கொருவன்றனுவினுக்கொருவனென்றுரைக்குந்
திண்டிறற்பவனகுமரனுஞ்சின்னாள்சென்றபின்றெள்ளமுதனைய
வுண்டியைக்குறித்துக்கற்றதன்கல்வியுரிமையைக்குறித்தடுதொழிற்கு
மண்டலத்தரசேயொருவன்யான்வீமன்மடையனென்றரசவைவந்தான். (௧௪)

வந்துதன்றம்முன்மலரடிமுன்னிமலர்க்கையான்முடியின்மேல்வணங்கி
யைந்துபல்வகையிற்கறிகளும்வெவ்வேறறுசுவைமாறுமாறமைப்பேன்
வெந்திறன்மல்லும்புரிதொழிலுடையேன்விருதுடைப்பலாயனனென்பே
ரிந்திரனுலகுதன்னிலுமெண்ணிலென்றொழிற்கெதிரிலையென்றான். (௧௫)

* வாழ்வாள் பலபடைதனதுகைதரிப்பாள் என்றும்பாடம்.

என்றபோதவனைவிராடனுமகிழ்வுற்றிருகையுஞ்சென்னிமேலிருத்திப்
பொன்றிகழ்மணிப்பூண்மென்றுகில்பலவும்புரவிபோதகங்களும்வழங்கி
யின்றுதொட்டெமக்கு*மைம்பெருஞ்சுற்றத்தொருவனீயென்றடுதொழிற்கு
நின்றவரெவர்க்குந்தலைவனுமுரிமைநிலைபெறவழங்கினன்மாதோ. (கசு)

நீடியசிலைக்கைத்தேவர்கோன்மதலைதிருத்தநல்லரங்கினின்முன்னாள்
வாடியமருங்குற்பணைத்தபூண்கொங்கைவாட்டடங்கண்கள்வார்குழைமே
லோடியவதனத்துருப்பசிபணியாலுறுவதற்கோரியாண்டமைந்த
பேடியின்வடிவந்தரித்தனனுண்மைக்கிமையவரெவரினும்பெரியோன். (கஎ)

வாயுவின்மதலைசென்றுகண்டதற்பின்மற்றைநாளொற்றைவெண்கவிகைச்
சேயொளிமகுடச்சென்னியானிருந்தபேரவைசிறப்புறச்சென்று
தூயவெண்டுரிநூன்முனிதிருக்கழலிலொருபுடைதோய்தரத்தலைசாய்த்
தேயவெஞ்சிலைக்கையருச்சுனன்கோயிலிருப்பதோர்பேடிநானென்றான். (கஅ)

நாதமுமியலுமேதகுநடநூனவிறருபரங்கினுக்குரியேன்
பேதையர்தமக்குநடம்பயிற்றுவிப்பேன்பெயர்பிருகந்நளையென்ப
வாதிபநினதுசெல்வமாநகரிலிருப்பதற்கெண்ணிவந்தடைந்தேன்
வேதமுமுலகுமுள்ளநாளளவும்விளங்குகநின்மரபென்றான். (கக)

வித்தகனெனவெக்கலைகளும்பயின்றவிராடனும்பேடிதன்மொழிகேட்
டுத்தரமுடையார்வேலைசூழுலகினில்லையென்றினிதுரைத்தருளி
யத்தகவுடைபாண்மகிழ்வுறக்கலனுமாடையும்வேண்டுவவழங்கி
யுத்தரைதனக்குப்பாங்கினீயென்றூங்குரியதன்மகளுழைவிடுத்தான். (உ0)

பின்னருஞ்சின்னாளகன்றபினகுலன்பேரழகினுக்குவேளனையான்
மின்னுடைவடிவேல்வேந்தர்கோன்விராடன்வெம்பரியேறுமுன்றிலின்வாய்
மன்னியதொழில்கூர்கம்பியுங்கயிறுமத்திகையுடன்கரத்தேந்தி
யுன்னயமுதலாம்புரவிநூலறிவோனுளநிகழ்தருக்கொடுசென்றான். (உக)

சென்றவன்றன்மேற்புரவிமேலிருந்தோன்செழுந்தடங்கண்மலர்பரப்பி
வன்றொழிற்புரவிவான்றொழிற்குரியோயெவ்வயினின்றுவந்தனைநீ
யென்றலுமவனுமியம்பினன்விசயற்கிளையவனகுலனென்றெல்லாக்
குன்றினுந்தன்பேரெழுதினோனவன்றன்கொற்றம்யார்கூறுதற்குரியார். (உஉ)

மற்றவன்றனதுவாசிமந்துரைக்குத்தலைவராய்வாழுமாக்களில்யா
னுற்றவனொருவன்வாம்பரிவடிவுமுரைதகுசுழிகளுமொளியும்
பற்றியநிறனுங்கந்தமுங்குரலும்பல்வகைக்கதிகளும்பிறந்த
சொற்றகுநிலனுமாயுவுமுணர்வேன்றுயருறுபிணிகளுந்தவிர்ப்பேன். (உ௩)

மண்டலம்வீதிகோணமேமுதலாம்வாசிகளூர்தொழில்வல்லேன்
றிண்டிறற்றடந்தேர்பூண்பதற்குரியசெயலுடைப்பரிகளுந்தெரிவேன்
வண்டிமிரலங்கன்மாலையாய்பாண்டுமைந்தர்போய்வனம்புகுந்ததற்பி
னுண்டியுமிழந்தேனுறுதியுமிழந்தேனுன்புகழ்கேட்டுவந்துற்றேன். (உச)

---

* மெய்ப்பெருஞ்சுற்றமென்றும் பாடம்.

என்னவப்புரவி*யேற்றுநாயகன்வந்தியம்பியவின்மொழிகேட்டு
மன்னவர்க்கெல்லாமொதுங்குதண்ணிழலாய்வயங்குமாமதிக்குடைமன்னன்
முன்னவர்க்குள்ளவரிசைகள்யாவுமும்மடங்காகவேவழங்கி
யந்நகர்த்துரங்கமவையனைத்தினுக்குமதிபதியெனும்பதங்கொடுத்தான். (௨௫)

கிளைபடுபுரவிபுரந்திடுந்தாமக்கிரந்தியாய்ப்பெயர்புனைநகுலற்
கிளையவனந்தகோபன்மைந்தனைப்போலிடையர்தங்கோலமதெய்தித்
துளைபடுகுழையிலொருகுழையணிந்துதோளிலோர்தொடித்தடிதழுவி
விளைபுகழ்விராடன்வேத்தவையதனைவேறொருநாளையினடைந்தான். (௨௬)

ஆர்கோனீயென்னவறன்மகனுடனோராசனத்திருந்தபூபதியைச்
சீருறவேறோர்விரகினல்வணங்கிச்செப்பினனன்னசாதேவன்
பார்கொளநினைந்துசுயோதனன்விடுப்பப்படர்வனம்புகுந்தபாண்டவரிற்
றார்கொள்வேலிளையோன்றனதுகோபாலன்றந்திரிபாலன்யானென்றான். (௨௭)

ஆங்கவனிவ்வாறுரைத்தலுமவனையருகுறவருகெனவழைத்துப்
பாங்குறத்தக்கவழக்கமும்வழங்கிப்பல்வகைநிரைகளுநீயே
யீங்குமப்படியேபுரத்தியென்றுரைத்தானிவனுமவ்வரசனேவலினாற்
றீங்கறக்கைகொண்டவ்வவர்க்கெல்லாந்தகைபெறுஞ்செம்மலாயினனே. (௨௮)

வேறு.

ஓமமகவாரமுலினூடுருவுயிர்க்கு
மாமயிறிரௌபதியும்வண்ணமகளாகித்
தேமருவுதார்முடிவிராடனிருதோள்சேர்
கோமகளைநாடியவள்கோயிலிடைபுக்காள். (௨௯)

மதுமலரின்வாழ்திருவும்வந்துதொழவுரியா
ளெதுமலினளாகியொருநுண்ணிடைநடந்தாள்
பதுமவிழியாயெனும்வாயிலவர்பால்போன்
மதுரமொழியாளமைமின்வாணுதலையென்றாள். (௩௦)

வந்தவளிருந்தவண்மருங்கணையும்வேலை
யந்தணுபசாரமுடனருகுறவிருத்திச்
சந்தொடகில்பூவிலைகடகவுடன்வழங்கி
யெந்தநகரீருறைமின்யாமுணரவென்றாள். (௩௧)

தான்விரதமாயைபுரிசகுனிபொருசூதாற்
கான்விரதமாகவுரைகாவலர்கள்கோயின்
மான்விரதநோக்கியர்மருங்குறவிருந்தேன்
யான்விரதசாரணியெனும்பெயரினளே. (௩௨)

பூசுவனசுற்றுவனபூண்பனமுடிப்ப
தேசொடுவனப்புநனிதிகழும்வகையணிவேன்
வாசவனொடொத்தமனுகுலவரசன்மனைவி
யேசறவுனக்கெனுவையாகுவதெனெண்ணம். (௩௩)

*ஏறுநாயகனென்றும் பாடம்.

எந்தைதமனையிற்பயிலிளம்பருவநாளிற்
கந்தருவர்காவல்புரிகற்புடையளானே
னிந்துநுதலாய்மனிதர்யார்முகமுநோக்கேன்
வந்தனனின்மாளிகையின்வைகும்வகையென்றாள். (௬௪)

வண்ணமகள்கூறியவைமகிழ்வினொடுகேட்டுத்
துண்ணெனவெரீஇயினள்சுதேட்டிணைவிரும்பி
விண்ணவர்கள்பாவைபரின்மேவுதியெனக்குக்
கண்ணிணையுநீயுனதுகாவலெனதுயிரும். (௬௫)

அன்னையெனுமாறுநெறியானமுறைகூறி
யென்னருகிருத்தியெனவெரியின்வருமின்னு
மின்னனையநுண்ணிடைவிராடபதிதேவிக்
கெந்நலமுநாடொறுமியற்றினளிருந்தாள். (௬௬)

மைவருதடங்கண்மடமானுமதிமரபோ
ரைவருமறைந்தனர்களாயுறையுநாளின்
மெய்வருவழாமொழிவிராடபதிதிருநா
டெய்வருபெருந்திருவொடோங்கியதையன்றே. (௬௭)

குருக்களவனூரினிடைகுருநிலனொடொப்புற்
றிருக்கும்வழிமாமழையுமெவ்விளைவும்விஞ்சித்
தருக்கினுடன்யானைமுதலனைகளும்விஞ்சிச்
செருக்குமுடன்விஞ்சியதுசெப்பவரிதம்மா. (௬௮)

நாடுகரந்துறைசருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௧௧௬௭.

மற்போர்ச்சருக்கம்.

அல்லினுக்கிந்துவென்னவாங்கவருறையுநாளில்
வில்லினுக்கிராமனென்னவேலினுக்கிளையோனென்னச்
சொல்லினுக்குததிதோய்கைத்தொன்முனியென்னவன்போர்
மல்லினுக்கொருவன்யானேவாசவனென்றுவந்தான். (௧)

அண்டமாமுகடோடொத்தசென்னியனவனிமுற்றுங்
கொண்டமாமேருவொத்தகுங்குமக்கடகத்தோளான்
சண்டமாருதத்தோடொத்தவலியினன்றந்தியெட்டின்
கண்டமார்முகத்தினீண்டகையெனத்திரண்டகாலான். (௨)

ஆயிரமல்லர் தன்னையணிநிழலென்னச்சூழப்
பாயிரும்புரவித்திண்டேர்மிசைவரும்பரிதிபோல
மாயிருஞாலந்தன்னின்மற்றிவற்கெதிரின்றென்னச்
சேயிருந்தடக்கைவேந்தன்றிருந்தவையதனைச்சேர்ந்தான். (௩)

மன்னனைவணங்கிநின்றுவலியுடைமல்லின்போருக்
கென்னலதில்லையிந்தவெழுகடல்வட்டத்தென்றான்
கொன்னவில்வேலினானுங்கொடுப்பனகொடுத்துமுன்னந்
தன்னுழைவைகுமல்லர்தங்களைநோக்கினானே. (௪)

அந்தமற்றொழிலின்மிக்கோரநேகர்நீடசனியொப்பார்
வந்தமற்றலைவன்றன்னைவருதிநீயெம்மோடென்று
முந்தமற்கலைநூல்சொன்னமுறைமையினரசன்காணச்
சந்தமற்சமரஞ்செய்தார்தனித்தனியொருவராக. (௫)

தத்தியுந்தோளுந்தோளுந்தாக்கியுஞ்சென்னிகொண்டு
மொத்தியும்பற்பல்சாரிமுடுகியும்வயிரக்கையாற்
குத்தியுங்காலுங்காலுங்கோத்துமற்கூறுதோன்ற
வொத்தியும்பாறையென்னவுரனுடனுரங்கள்சேர்த்தும். (௬)

ஓரொருமல்லராகவொருதனிமல்லன்றன்னோ
டாரமருடற்றிமல்லரனைவருமழிந்தபின்னர்
வீரரில்வீரனனவென்றிவேல்விராடன்மெச்சித்
தேரின்மேல்வந்தமல்லன்றனக்கெலாச்சிறப்புஞ்செய்தான். (௭)

அன்றுபோய்மற்றைநாளினரசனோடறத்தின்மைந்தன்
வென்றயமாமல்லன்றன்னைவெல்லுதற்குரியமல்ல
னின்றுநின்மடையர்தம்மிற்பலாயனனென்போன்றன்னை
யன்றிவேறில்லையென்றானரசனுமழைமினென்றான். (௮)

பைம்பொன்மாமேருவெற்பின்பராரையைச்சோதிநேமி
விம்பமாய்வளைந்ததென்னவிளங்குபொற்கச்சைவீக்கித்
தம்பமாமென்னத்தக்கதண்டொடுதரணிவீழா
வும்பரரமுதமுண்டவுரவினன்விரைவின்வந்தான். (௯)

கதையுடைக்காளைவந்துகடுந்திறன்மல்லன்றன்னோ
டுதயமோடத்தமென்னுமோங்கலோரிரண்டுசேர்ந்து
துதைவுறப்பொருவதேபோற்றோள்புடைத்துருமினார்த்துப்
பதயுகத்தாலுந்தத்தம்பாணிகளாலுஞ்சேர்ந்தார். (௧௦)

உதைத்தனர்வீசிவன்போடுரங்கொடுகரங்களெற்றிப்
புதைத்தனர்விரல்கண்மெய்யிற்புருவமுமூக்கும்வாயுஞ்
சிதைத்தனர்புயங்களென்னுஞ்சிலைப்புகடாக்கத்தாக்கப்
பதைத்தனரோடியோடிப்பற்றினர்மீளமீள. (௧௧)

கற்றனகாயமெல்லாங்கண்டுகண்களிக்கக்காட்டி
யுற்றனர்நின்றபோதிலூதையின்புதல்வனூரு
மற்றவன்மருங்குபற்றவன்கரமிடறுபற்றச்
செற்றனனிடிம்பன்றன்னைச்செற்றவெங்கொற்றத்தோளான். (௧௨)

தேர்மிசைவந்தமல்லன்சிதைந்தபேருறுப்பினோடும்
பார்மிசைகிடக்கநின்றுபணைப்புயங்கொட்டியார்த்தான்
சீர்மிகுமல்லன்றன்னைச்சிறப்புறத்தழுவியெல்லாப்
போர்முகங்களுக்குநின்னைப்போல்பவரில்லையென்றான். (௧௩)

*மன்னவர்களிக்கத்தக்கவரிசைகளனைத்துநல்கி
முன்னவனாகிவைகுமுனிமனங்களிக்குமாறு
தன்னருகணுகவைத்துத்தலத்தெதிரில்லையிந்த
வின்னமுதடுவோர்க்கென்றானியற்றிறல்விராடன்றானே. (௧௪)

மற்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௨௦௧௧.

கீசகன்வதைச்சருக்கம்.

அன்னநாளினின்மன்னவன்றேவியாமன்னமென்னடையாரமுதன்னசொற்
சொன்னசாயற்சுதேட்டிணைதன்றிருத்துணைவர்நூற்றொருநால்வரிற்றோற்றமு
மன்னுமாண்மையுந்தேசுஞ்சிறந்துளான்வரூதினிக்குத்தலைவன்முற்றோன்றிய
கன்னல்வேளனையான்றன்றுணைவியைக்காணவந்தனன்காண்டகுமேனியான். (௧)

தம்பியப்பெருந்தையலைநூபுரத்தாளின்வீழ்ந்துதகவுடன்மீடனு
மம்பரத்தவர்கற்பகக்காநிகரந்தவந்தப்புரத்தகன்காவினில்
வெம்புகர்க்களிற்றிறைவர்தந்தேவியாம்விரதசாரணிமென்மலர்கொய்திளங் [னாள்.
கொம்பொடொத்திடைசோரப்பணைத்தபொற்கொங்கையாளிவன்முன்னர்க்குறுகி

இயற்கையானகவினுடைப்பாவையையிறைவன்றேவிக்கிளையவன்கண்டனன்
செயற்கையாநலங்கண்டிலன்யார்கொலித்தெரிவையென்றுதன்சிந்தையினோக்கி
மயற்கையாலழிந்தானைம்புலன்களும்வழக்கொழிந்துமதிமருண்டானிணைக் [னான்
கயற்கையானக்கயற்றடங்கண்ணியைக்கண்டகாட்சியிற்காமுகனாகியே. (௩)

இந்திரன்னகர்ப்பாவைகொலோமடலேந்துபங்கயத்தேவிகொலோவியற்
சந்தமாருந்தடவரைத்தையலோதாரணிக்குள்வருந்தனித்தெய்வமோ
முந்தராவுறைபாதலந்தன்னில்வாழ்மோகினிக்குயிலோமுரல்கின்றிடு
முந்துநீரரமங்கைகொலோவெழிலோவியத்தொளியோவெனவுன்னினான். (௪)

அருகுநின்றமகளிரைமற்றிவளார்கொலென்னவறியான்வினவினான்
வரிநெடுங்கண்மகளிருமாதரார்வண்ணமாமகளென்றனர்மையலா
லுருகுகின்றவக்காளையுநாணமுற்றொடுங்கிநின்றவுயர்தவப்பாவைத
னிருபதங்களில்வீழ்ந்தெனதாவிநீ†யென்றுமீளவுமெத்தனைகூறினான். (௫)

* மன்னவர்க்களிக்க என்றும் பாடம்.
† என்றுநின்றங்கினியனகூறினான் என்றும் பாடம்.

கூறுகின்றமொழிகளுக்குத்தரங்கொடாதுநின்றதோர்கொம்பரின்வாய்மறைந்
தேறுகின்றபழிகளும்பாவமுமிம்மைதானுமறுமையும்பார்த்திலை
பாறுகின்றிலைசொல்லத்தகாதபுன்மாற்றமின்னமுமன்னுயிர்யாவும்வந்
தாறுகின்றகுடைநிழல்வேந்தனுக்கழிவுசெய்தியறிவிலிபோலுநீ. (௬)

மாரசாயகத்தாலுயிர்மாளினும்வசையிலாதமரபின்வந்தோர்பிறர்
தாரமானவர்தம்முகம்பார்ப்பரோதக்கவர்க்குத்தகவிவையேகொலாஞ்
சோரனாதலிற்சொற்றவினித்தவிர்சுரேசரைவர்தங்காவலென்றோளிணை
வீரபோவென்னருகுறிலாவிபோம்விழித்திமைக்குமுன்னென்றுவிளம்பினாள். (௭)

பேதையிப்படிக்கூறவுங்காதனோய்ப்பெருகுசிந்தையன்பின்னையுமுன்புறு
வாதரத்தெனதாருயிர்போகினுமமையுமென்றவளம்புயச்சீறடி
மீதுநெற்றிபடத்தொழுதான்வடிவேற்கணாளும்வெகுண்டுவிரைவினிற்
றாதுளங்கனிவாய்முத்தவாணகைச்சுதேட்டிணைப்பெயராளுழைத்துன்னினாள். ()

நடுங்குமெய்யினள்பேதுறுநெஞ்சினளாணுநீர்மையளாவினுணீரிலா [வாள்
தொடுங்குமென்மையடன்மையினாற்புனலுகுத்தகண்ணினளோவியம்போன்று
கடுங்கண்யானைப்பிடரிருந்திந்நிலங்காக்கும்வெண்குடைக்காவலன்றேவிகே
டொடுங்கழற்கழலானின்றுணைவனெற்சுட்டியாயிரஞ்சொல்லலசொல்லினான். (௯)

விரதசாரணியென்பதுந்தேவரென்மெய்புரக்கும்விரதமுமிங்குனக்
கிரதமாகவரமனைக்கெய்துமுனியம்பினேனையையாவருமிச்சியார்
சுரதமாடுமகளிரைத்தேடிநின்றுணைவன்வேட்கையுஞ்சோகமுமாற்றிடு
சரதடாகநீயாதொழிநெறிதப்பிலாருயிர்தப்புமென்றோதினாள். (௧௦)

கேகயங்களெனுமெழிற்சாயலாள்கிளந்தவாசகங்கேட்டிடியேறுறு
நாகமென்னநடுங்கியப்பூங்கொடிநயனநீர்துடைத்துற்றதுநன்றெனா
வேகமுற்றுமனத்தொடுதம்பியைமிகமுனிந்துதன்வீடணுகாவகை
யேகுகென்றனளென்றலுஞ்சோகமோடேகினானறம்பாவமென்றெண்ணலான். ()

சென்றுதன்மனைபுக்கபின்மன்மதன்செருவினைந்தழிசிந்தையனாய்மலர்
மன்றன்மெல்லணைவீழும்வெம்பாலையால்வகுத்ததோவிம்மலரணைதானெனுந்
தென்றறன்னையுந்தீயெனுந்திங்களைத்தினகரன்கொலென்றேங்குஞ்செயலழிந்
* தன்றவன்கருங்கங்குலிற்பட்டபாடவனையல்லதையார்படுவார்களே. (௧௨)

பாவிதன்மனைச்சேடியரானவர்பலரும்வந்துபடியுடைமன்னவன்
றேவிதன்னைவணங்கியக்காமுகன்சிந்தைநோயுஞ்செயலும்புகன்றெழிற்
காவியங்கண்ணவளைத்தனதுகண்காணினுந்தணியுங்கடுங்காதலு
மாவியும்பெறுமெய்யனாகானினதாணையென்றனராதரமாற்றுவார். (௧௩)

பாசகாரிகளாமைம்புலன்களும்பரிவுகூரப்பரிந்துயர்ந்தோர்புகல்
வாசகாதிகள்கற்றுந்தெளிந்திலைமதனவேதத்தின்மார்க்கமும்பார்த்திலை
நாசகாலம்வரும்பொழுதாண்மையுஞானமுங்கெடுமோநறுந்தார்முடிக்
கீசகாவென்றழுதனளம்மொழிகேட்டபோதக்கிளிநிகர்மென்சொலாள். (௧௪)

---

* அன்றகன் என்றும் பாடம்.

ஆகுலத்தொடுநெஞ்சந்தளர்ந்து தன்னருகினின்றவருந்ததியேநிகர்
மீகுலக்கொடி தன்னிருதாண்மிசைவீழ்ந்துநின்றன்விழியருளுண்டெனிற்
கோகுலத்திலுயர்ந்தவென்காதலன்கோலுநீதியுங்குன்றுமெனதுரை
நீகுலைக்கிலைத்துமின்றேகெடுநேரிழாயிதுநெஞ்சுறக்கேட்டியால். (௧௫)

இளையனுதலினென்னிளையோன்மனத்தெண்ணமின்றிகன்மதனம்பினு
லிளையுமேனியனுகினின்மெய்ந்நலமாதரித்தின்றடாதுசெய்நீர்மையால்
விளையுமேகொடுவெம்பழிப்பழிவிளைவுறுமல்விரகினைக்காதனைப்
களையுமாறெண்ணினுங்கவனுவிபுங்காத்துநின்பெருங்கற்பையுங்காக்குமால். (௧௬)

எண்ணுகின்றனன்யானென்றுநீமறுத்தெனதுவாய்மையெதிர்கொண்டிளையவ
னண்ணுமில்லிடைச்சென்றிந்நாண்மலர்நறைகொண்மாலையைநல்கினைமீளுவாய்
கண்ணினின்னுருக்காணினுமற்றவன்கன்னமின்புறக்கட்டுரைகேட்பினும்
வண்ணமாமகளேயுயிர்நிற்குநீவாழியேகிவருகெனவாழ்த்தினாள். (௧௭)

மொழியலாதமொழியைச்சுதேட்டிணைமொழிந்தபோதுமுதுக்குறைவுள்ளவப்
பழியிலாமொழிப்பாவைவெம்பாதகம்பகர்தியென்னைவெறுத்தொழிபாவைநீ
யழிவிலாதபெருங்கிளைக்கல்லல்கூரழிவுவந்ததறிந்திலையென்றுதன்
விழிகளாரஞ்சொரியக்கொடுத்தபூவேரிமாலைகொண்டேகினண்மின்னனாள். (௧௮)

ஆண்டுவந்ததுருபதன்மாமகளடைந்தநாட்டொட்டமரரோரைவரே
தீண்டலன்றியொருவருமென்னைமெய்தீண்டுவாரிலையென்றென்றுசெப்பவு
நீண்டசெங்கைத்தரணிபன்காதலிநினைவிலாமனதிபற்றதம்பிபான்
மீண்டுமவ்வழியேகென்றுரைப்பதேவிதியையாவர்விலக்கவல்லார்களே. (௧௯)

வேறு.

மாதவள்கீசகன்மனையிலேகவற்
போதகலவுமவன்புலம்பல்போகவும்
பாதமில்வன்றிறற்பாகனூர்ந்ததே
ராதபனுதயவெற்பணுகினனரோ. (௨௰)

தருக்கியகாமுகன்றகாதுசொல்லவே
யுருக்கிளர்சாயலோடுளமழிந்துபோய்
முருக்கிதழ்வல்லிதன்முளரிச்செங்கையா
லருக்கனையிறைஞ்சினளழிவில்கற்பினாள். (௨௧)

துரங்கமோரேழுடன்சோதிகூர்மணிக்
கரங்களோராயிரங்கவினத்தோன்றினாய்
வரங்கொள்வேனின்னையான்மரபுபொன்றுமென்
றிரங்குறுமென்னகத்திடரைநீக்குவாய். (௨௨)

என்றுகொண்டென்றினைப்பணிந்துமன்றலாற்
கன்றியகீசகக்கலகன்முன்புபோய்
மன்றலந்தொடையனும்வழங்கிமெய்வெரீஇ
நின்றனளானிலைநின்றகற்பினாள். (௨௩)

காமருகுளிரிளைபைங்கதலிமெல்லடை
தாமரைவளையம்வண்டாதருமல
ராமுறையணைத்துமெல்லமளிமேல்விரித்
தீமவல்லெரியின்மேலென்னவைகினான். (உ௪)

சாந்தொடுதண்பனிநீருந்தாமமு
மேந்தியகரத்தினரேழைமார்பலர்
காந்தியகனன்மிசைகாட்டுநெய்யென
வேந்தனதுடலகம்வெதும்பவீசினார். (உ௫)

தாக்கியகாமநோய்தழைக்கவன்புற
நோக்கியதிசையெலாங்காணுநோக்கினான்
பாக்கியநெஞ்சுறப்பலித்ததென்னவே
நீக்கியமடந்தைமுனிற்றல்கண்டுளான். (உ௬)

வந்தனளென்னுடைமாதவப்பயன்
வந்தனளென்னுடைவழிபடுந்தெய்வம்
வந்தனளென்னுடையாவிவாழ்வுற
வந்தனளென்னுடைவண்ணமங்கையே. (உ௭)

வருகநீயருகுறமதுரவாசகந்
தருகநீயிருசெவிதழைக்கவுள்ளநின்
றுருகநீதழுவுகவுடலந்தேமுறப்
பருகநீவழங்குகபவளவாயெனா. (உ௮)

கிடந்தவனெழுந்தொருகேடுவந்துறு
மடந்தையைத்தழுவுவான்வந்துசார்தலும்
விடந்திகழ்விழியினாளோடவேட்கையாற்
றொடர்ந்தனனறிவிலாச்சோரன்றானுமே. (உ௯)

ஓடியமடக்கொடியுலகுகாவலன்
சூடியமணிமுடிதுலங்குகோயிலின்
வாடியகொடியெனவந்துவீழ்ந்தன
ணீடியவேத்தவைநிருபர்காணவே. (௩௦)

தொழுந்தகைமனுகுலத்தோன்றல்கண்ணெதிர்
விழுந்தழுந்தெரிவையைவேட்கைநோயினா
லழுந்தியகாமுகனச்சமின்றியே
செழுந்துணைக்கைத்தலந்தீண்டவுன்னினான். (௩௧)

உன்னுமவ்வளவையினுருளையொன்றுடைப்
பொன்னெடுந்தேரவன்புகலமற்றொரு
வன்னெடுங்கிங்கரன்சூறைமாருத
மென்னவந்தடுத்தயலெடுத்துவீசினான். (௩௨)

கண்டனனிருந்தமண்காவல்வேந்தனு
மெண்டகுநெறிமுறையிடறுகீசகன்
றிண்டிறல்வலிமையுஞ்செயலுஞ்சிந்தையிற்
கொண்டொருவாய்மையுங்கூறவஞ்சினான். (௩௩)

அடுதொழிற்பலாயனனழுதமின்னையுங்
கடுமையிற்பின்றொடர்காளைதன்னையும்
படருறக்கண்டுதன்பாங்கர்நின்றதோர்
விடவியைப்பிடுங்குவான்வெகுண்டுநோக்கினான். (௩௪)

கனிட்டனதெண்ணமக்கங்கனாகிய
முனித்தகையுணர்ந்தவன்முகத்தைநோக்கியித்
தனிப்பெருமராமரந்தழல்கொளுந்திடா
னுனக்கடுமிந்தனமன்றென்றோதினான். (௩௫)

சீரியகங்கனன்றுரைத்தசெம்மொழி
பாரியதாமெனப்பலாயனன்கொளா
வீரியமகத்துளேநிறுத்துப்வேலையிற்
கூரியவிழியினாளழுதுகூறுவாள். (௩௬)

ஈண்டுதறுகாதெனச்செம்மையொன்றிலான்
வேண்டியசெய்வதுவேசூதுநீதியோ
வாண்டகையிதற்குநீயல்லவாமெனா
வீண்டொருமொழிகொடாதிருப்பதென்கொலோ. (௩௭)

அன்புடைத்தேவிதன்னருகுதோழியாய்
நின்பெருங்கோயிலினீடுவைகினே
னென்பெருவினையினாலின்றுன்மைத்துனன்
றன்புயவலியினாற்றழுவவுன்னினான். (௩௮)

பெருந்தகையன்றிதுபேசலன்றிநீ
யிருந்தனையுனக்கரசெங்ஙன்செல்வது
வருந்தினர்வருத்தநீமாற்றலாயெனி
லருந்திறலரசநின்னாணைபொன்றுமே. (௩௯)

எனவிவள்புலம்பிமெய்யேய்ந்தபூழியுங்
கனதனநனைத்திடுங்கண்ணினீருமாய்
மனமிகமறுகிடமன்னன்றேவியா
லினைவுடனெய்திவீழ்ந்தேங்கிவிம்மினாள். (௪0)

பூதலமாண்மையாற்புரக்குமன்னவர்
தீதொழில்புரிஞரைத்தெண்டியாரெனி
னீதியுஞ்செல்வமுநிலைபெறுங்கொலோ
வேதிலர்தமரெனவிரண்டுபார்ப்பரோ. (௪௧)

யாருமில்லொருத்திநின்னில்லில்வைகினா
லார்வமுற்றவள்வயினன்புகூர்வது
வீரமோதருமமோவிருப்பமோவிவை
பூரியராலாதவர்புரிதல்போதுமோ. (௪௨)

கீசகனாயினுங்கேடுசெய்தன
னாசைநோய்மன்பதையனைத்தினுக்குமுண்
டேசிதுநினக்குமென்றிருந்தவேந்தொடும்
வாசகம்பலசொனான்மறைவலானுமே. (௪௩)

முன்னுறமுனிவரன்மொழிந்தவாய்மையு
மின்னலோடழுதவளிசைத்தவாய்மையுங்
கன்னமூடுறச்சுடக்கருத்தழிந்துபோய்
மன்னனுந்தன்றிருமனையிலெய்தினான். (௪௪)

கண்ணெருப்பெழவிருகைந்நெருப்பெழ
வுண்ணெருப்பெழத்தனதுடனெருப்பெழ
மண்ணெருப்பெழவருமடையிலெய்தினான்
றிண்ணெருப்பினுமிகுசினங்கொள்வீமனே. (௪௫)

வேறு.

பன்னிருவரினுநாடொறுங்கனகபருப்பதம்வலம்வருந்தேரோன்
மின்னிகர்மருங்குல்விரதசாரணிபால்விளைவுறுதுயரமதுணர்ந்து
தன்னொருமரபிற்றோன்றலைவெறுத்துத்தணிப்பெருந்தேர்குடபொருப்பின்
சென்னியினுருளவுருட்டியத்திசையுஞ்சிவப்புறத்தானுமெய்சிவந்தான். (௪௬)

குந்திதன்புதல்வரைவருஞ்சோகமுதிர்ந்திடவிதயமுங்கொதித்தார்
வெந்திறல்வடிவேல்விராடனுந்தனதுவேத்தியல்பொன்றலின்வெறுத்தான்
செந்திருவனையசுதேட்டிணையென்னுந்தெரிவையுந்தெருமரலுழந்தா
ளந்தமாநகரிலனைவருநைந்தாரார்கொலோவாகுலமுறாதார். (௪௭)

அனைவருந்துயின்றுகங்குலும்பானாளானபினழுதகண்ணீரோ
டினைவருதையல்கண்கணீர்மல்கவிறைமகன்மடைப்பளியெய்தி
நினைவருசெற்றமுடித்திடவல்லார்நீயலதில்லையிக்கங்குற்
கனைவருகழலாய்ப்புரிவதியாதென்றுள்காளையுங்கனன்றிவைசொல்வான். (௪௮)

பொறையெனப்படுவதாடவர்தமக்குப்பூணெனப்புகலினும்பொருந்தார்
முறையறப்புரிந்தாலக்கணத்தவர்தம்முடித்தலைதுணிப்பதேமுழுப்பூ
ணறைமலர்க்குழலார்தமக்குமெய்யகலாநாணமேநலஞ்செய்பூணெனினு
நிறையுடைப்பெரும்பூணமளிவாய்நாணநிகழ்வுறுநிகழ்ச்சியேயன்றே. (௪௯)

அரசவைப்புறத்திற்சௌபலன்சூதிலழிந்தநாளினுமெம்மையடக்கி
முரசவெங்கொடியோன்றேசழித்தனனாலின்றுமம்முறைமையேமொழிந்தான்
புரசைவெங்களிற்றின்மத்தகம்பிளக்கும்போருகிர்மடங்கல்போலின்னே
துரிசறப்பொருதுகீசகனுடலந்துணிப்பன்யான்றுணைவரோடென்றான். (௫௦)

மருத்தின்மாமதலைவார்த்தைகேட்டந்தமருச்சகன்மடக்கொடியுரைப்பா
ளுரைத்தநாளெல்லாஞ்சில்பகலொழியவொழிந்தனவொழிவிலாவுரவோ
யருத்தியோடொருவரறிவுறுவண்ணமிருந்தசீரழிவுறுமென்னுங்
கருத்துநின்றம்முற்குண்மைபிற்றடுத்தான்காலமுந்தேயமுமுணர்வான். (ருக)

பாயும்வெஞ்சிறகர்க்கலுழன்முன்பட்டபாந்தள்போற்கீசகன்பதைப்பக்
காயுமதிந்தக்கங்குலிற்கடனன்றொருபகலிருபகல்கழிந்தா
னேயமோடின்றுவந்துகந்தருவர்நேர்படமலைந்தனரென்னுந்
தூயசொல்விளையப்பொருவதேயுறுதியென்னவத்திரௌபதிசொன்னாள். (ருஉ)

ஐயெனவிவனுந்தன்னைமுன்பயந்தவார்முலனையகற்புடைய
னைதையறன்மொழியைத்தானுமுட்கொண்டுதகுசெயல்விரகுடன்சாற்றி
வெய்யதன்சினமுந்தன்புயவலிபோன்மேலுறமேலுறவளர
நெய்புறுகனலிற்பொங்கியக்கங்குனீந்தினான்வேந்தனுக்கிளையோன். (ருங)

அற்றைநாளிரவிற்றன்பரிதாபமாறியவறிவுடைக்கொடியு
மற்றைநாளந்தச்சுதேட்டிணைகோயின்மன்னவன்மைத்துனன்வரலுங்
கற்றைவார்குழலிற்பூழியுங்கண்ணீர்கலந்தவான்கொங்கையுஞ்சுமந்தாங்
கொற்றைமென்கொடிபோனின்றனளவனுமுளங்கவரவணிலைகண்டான். (ருச)

வேறு.

கலைமதிகண்டகாந்தக்கல்லெனவுருகிச்சிந்தை
தலைமகனல்லான்வஞ்சந்தனக்கொருவடிவமானா
னிலைபெறுகற்பினாளைநேருறநோக்கிப்பின்னு
முலைவுறுகாதன்மிஞ்சவுரனழிந்துரைக்கலுற்றான். (ருரு)

மன்னவன்வாழ்வுமிந்தவளநகர்வாழ்வுமெல்லா
மென்னதுவலிகொண்டென்பதின்றனக்கேற்பக்கண்டா
யுன்னைமெய்காக்குந்தேவருறுதியுமுரனுங்கண்டா
யென்னைகொல்லினியுன்னெண்ணென்றிருகரங்கூப்பினானே. (ருசு)

கருத்தினிமுடியுமென்றுகடுங்கனன்முகத்திற்றோன்று
திருத்தகுபாவையந்தத்தீயவன்றன்னைநோக்கி
வருத்தநீயுறவுமுன்னர்மறுத்தனன்மரபினாலுஞ்
சரித்திரத்தாலுங்கொண்டதவவிரதத்தினாலும். (ருஎ)

கந்தருவருமற்றென்னைக்காப்பதுமறந்தார்போலு
மிந்திரனெனினுமாதரெளிமையினொருப்பட்டெய்தார்
புந்தியிலொன்றுங்கொள்ளேலாரிருட்பொழுதிலின்று
சந்தணிகுவவுத்தோளாய்தனித்துநீவருதியென்றாள். (ருஅ)

அக்கொடியுரைத்தமாற்றமவன்செவிக்கமுதமாகிப்
புக்குயிர்நிறுத்திமெய்யும்புளகெழவிளகிநெஞ்ச
மிக்கதோர்வேட்கைகூரவிடுத்தலின்வேந்தன்கோயிற்
கொக்கின்மேற்குயில்கள்கூவுங்குளிர்பொழிற்குறியுஞ்சொன்னாள். (ருகூ)

குருட்டியன்மதியினானைக்கோதிலாவறிவின்மிக்காண்
மருட்டினளாகியந்தவளர்தடம்பொழிலினோர்சா
ரிருட்டிடைநிலவுகாட்டுமின்பமண்டபத்தில்வம்மி
னுருட்டடந்தேரோயென்றாளவனுமஃதொருப்பட்டானே. (௬௦)

குறியவன்றனக்குநேர்ந்தகொடியவெங்கொலைவேற்கண்ணா
டறிபொருகளிற்றினன்னசமீரணன்மகனையெய்திச்
செறிவொடக்காலையோடுசெப்பியயாவுஞ்செப்பிப்
பிறிதொருகருத்துமின்றிப்பெரும்பகல்போக்கினாளே. (௬௧)

எல்லையெண்டிசையும்போனவிருளெலாமீண்டுதுன்ற
வெல்லையின்றலைவனானவிரவியுங்குடவெற்பெய்த
வெல்லையில்காதலோனுமிடையிருளிடையேயந்த
வெல்லையைநோக்கிச்சென்றான்யமன்றிசையென்னமன்னோ. (௬௨)

வடுவறத்தெவ்வர்போருமன்னவனுணவுங்கையா
லடுதொழிற்குரியசெம்பொன்வரையிரண்டனையதோளா
னுடுமுகத்தின்மைவானமொளியறவிருண்டகங்கு
ணடுவுறப்பொழுதிற்செவ்விநவ்வியர்கோலங்கொண்டான். (௬௩)

அங்கியிற்றோன்றுநாளாயனியுடனள்ளிக்கொள்ளப்
பொங்கியவிருளின்முன்னம்புகன்றவப்பொங்கரூடு
தங்கியதவளமாடந்தன்னிடைப்புகுந்துசான்ற
விங்கிதத்துடனேநோக்கியிருந்தனனிமைப்பிலாதான். (௬௪)

அணங்கனசாயலாளையப்புறங்கரந்துவைத்து
மணங்கமழலங்கன்மார்பன்மண்டபத்திருந்தகாலைப்
பிணங்கலனணிந்ததன்னபேரெழிற்பெற்றியானெஞ்
சுணங்கநாப்புலரவந்தவ்வுயர்பொழிலூடுசேர்ந்தான். (௬௫)

வேறு.

சாந்தினான்மெழுகியதவளமாளிகை
யேய்ந்தபொற்றாணிடையிலங்குமின்னெனச்
சேர்ந்துறைபெண்ணுருக்கண்டுசிந்தையிற்
கூர்ந்தபேரார்வமோடிறைஞ்சிக்கூறுவான். (௬௬)

என்பெருந்தவப்பயனென்றறிந்திலேன்
மின்புரைமருங்குலாய்வேட்கைவிஞ்சலாற்
புன்பிழைசெய்தனன்பொறுத்திநீயென
வன்புடன்சிலம்பணியடியில்வீழ்ந்துமேல். (௬௭)

பைங்குலைக்குரும்பையைப்பழித்தகொங்கையாய்
மங்குலைப்புழுகளைவைத்தகூந்தலாய்
கங்குலிற்கால்வழிகாட்டவந்ததின்
றிங்குலப்புறுமெனதாவியீயவோ. (௬௮)

கிஞ்சுகமலர்ந்துநின்கிள்ளைவாய்மையா
லஞ்சலென்றோருரையளித்தல்காண்கிலே
னஞ்சனவிழிக்கடைநயந்தபார்வைகொண்
டெஞ்சுமென்னுயிரினையெடுப்பதென்றுநீ. (சுசு)

வழிபடுதெய்வமுமற்றுமுற்றுநீ
யிழிபடுபிறர்முகமென்றுநோக்கலேன்
கழிபடருற்றதென்காமநோயெனு
மொழிபலகூறினான்முகம்புகுந்துளான். (எ0)

கீசகனிம்முறைகிளந்தபற்பல
வாசகங்கேட்டலுமலங்கொணெஞ்சுடைப்
பூசகர்பூசைகொள்ளாதபுன்பவ
நாசகக்கடவுள்போனகைத்துநோக்கியே. (எக)

பெண்ணுடையுருக்கொளும்பெற்றமாமகன்
கண்ணுடைப்பொறியெழுங்கனலின்வந்திட
மண்ணுடைக்காவலன்மைத்துனன்றனை
யெண்ணுடைக்கைகளாலிருகைபற்றினான். (எஉ)

பற்றினான்பற்றியபாணியாலெழச்
சுற்றினான்கறங்கெனத்தூணமொன்றினோ
டெற்றினான்சென்னியையெடுத்ததன்வினை
முற்றினானெடும்பெருமூச்சனாகியே. (எங)

வீமனைப்பிடித்தகைவிலக்கிமற்றவன்
மாமுகத்திருகையுமாறிமோதினான்
றீமுகத்தவனையச்செம்மன்மீளவுஞ்
சாமுகத்தவனெனத்தள்ளிவீழ்த்தினான். (எச)

ஓரொருகுத்தொருவருமுவீழ்ந்தென
மேருவொடொத்ததோள்வீமன்குத்தலு
மீரிடத்தினும்விலாவெலும்புநெக்கன
கூருகிர்த்தலைகளாற்குருதிகக்கவே. (எரு)

கேளொடுகெடுதருகீசகன்கழற்
றாளொடுதாளுறத்தாக்கிமற்கெழு
தோளொடுதோளுறத்தோய்ந்துகன்னல்வில்
வேளொடுவருநலம்விஞ்சமேவினான். (எசு)

தாழ்வரைத்தடக்கையாற்றையலாளெதிர்
காழ்வரப்பொருதிறற்காளைதன்னையுஞ்
சூழ்வரச்சூறையிற்சுற்றிப்பார்மிசை
வீழ்வரப்புடைத்தனன்மிடலில்விஞ்சினான். (எஎ)

விழுந்தவன்மீளவும்வெய்துயிர்த்தன
னெழுந்துதன்பகைவனதிருண்டகுஞ்சியை

யழுந்தவல்விரல்களாற்சுற்றியாய்மரக்
கழுந்தெனப்புடைத்தனன்கைகள்சேப்பவே. (எஅ)

புடைத்தனனிவனவன்புடைத்தகைகளை
விடைத்தனனகற்றிமெய்ம்மேவுபூதியுந்
துடைத்தனனுகிபத்தோன்றல்வாயினை
புடைத்தனனொருகையாலொருகைபற்றியே. (எகூ)

வீரமும்வலிமையும்விரகுமொத்தவர்
தீரமுந்தெளிவுநாஞ்செப்பற்பாலவோ
நேரமுஞ்சென்றதுநிசையெனுமிகு
சூரமுஞ்செற்றமுமுடையதோன்றலே. (அ0)

மன்னவன்மைத்துனன்மார்பொடிந்திடச்
சென்னியுந்தாள்களுஞ்சேரவொன்றிடத்
தன்னிருசெங்கையாற்றுக்கிவான்றசை
துன்னியமலையெனச்சுருக்கினனரோ. (அக)

மாற்றினனவன்பெருமையலாவியைக்
கூற்றினர்கைக்கொளக்கொடுத்துத்தன்சின
மாற்றினனத்திறலார்கொல்வல்லவர்
காற்றினல்வருதிறற்காளையல்லதே. (அஉ)

பண்ணியவினைகளின்பயனலாதுதா
மெண்ணியகருமமற்றியாவரெய்தினர்
திண்ணியகீசகன்செய்ததீங்கிவன்
புண்ணியமானதாற்புகல்வதென்கொலாம். (அங)

செங்கைகாலுடலொடுசென்னிதுன்றிட
வங்கையாலடக்கிநின்றநேகமாயிரம்
வெங்கையானையின்மிடல்வீமன்வெற்பன
கொங்கையாடன்னையுங்கூவினனரோ. (அச)

பூங்கொடியனையவள்புறவடிப்புறத்
தோங்கியகீசகனுடற்பிழம்பினை
நீங்கியவாய்மைகணிகழ்ந்ததென்னவே
பாங்கினில்வைத்தடற்பவனன்மைந்தனே. (அரு)

விடுங்குழைமராமரமொன்றுவேருடன்
பிடுங்கினன்கைகளாற்பிசைந்துதீயெழச்
சுடுங்கொலென்றஞ்சிலன்சுவாலைசெய்தன
னெடுங்கணாள்கண்டுதன்றுயரநீங்கவே. (அசு)

வேறு.

வாசமென்குழன்மாதுநல்லாயுனை
யாசைகொண்டவரிப்படியாவர்கா
ணேசின்மங்கைநல்லாயினியேகென
மாசிலானுமடைப்பள்ளியெய்தினன். (அஎ)

தோட்டுமென்மலர்ச்சோலையினுனைதயு
மோட்டுவன்கரமுட்டியினுனைதயு
பாட்டுவண்சுதைமண்டபத்தோனைதயுங்
கேட்டுணர்ந்தனர்கீசகன் றம்பிமார். (அஅ)

தொய்யிலாதிசுதேட்டிணைக்கொப்பனை
கையிலாரழகேறக்கவின்செயுந்
தையலாள்பொருட்டாகத்தனக்குறு
மையலான்மிகவாடிவருந்தினன். (அகூ)

வண்டருந்தமலர்க்குழல்வல்லியைக்
கண்டகாவிலிக்கங்குற்பொழுதிடைச்
சண்டவேகக்களிறன்னதன்மையான்
கொண்டமாலிற்குறுகினன்போலுமால். (கூ0)

தூவிவாசந்துளிமதுச்சோலையி
லேவலாலியற்றும்மெழிற்பாவைமெய்க்
காவலாகியகந்தருவப்பெயர்த்
தேவரால்வெஞ்செருவுளதானதோ. (கூக)

அழிந்தகீசகனன்றிமற்றுண்டென
மொழிந்ததம்பியர்நூற்றொருமூவருங்
கழிந்தீயுமிழ்கண்ணினராயுயி
ரொழிந்துபோதுமென் றுன்னினரோடினர். (கூஉ)

நகரியெங்கும்வெருவரநள்ளிரு
ளுகருமாறுபன் னூற்றுளித்தீபமோ
டகருநாறுதண்காவிலரும்பக
னிகருமென்னநெருங்கினர்நேடினர். (கூங)

சுதைநிலாவொளிசூழ்மண்டபத்திடைச்
சிதையுமெய்யொடுஞ்செம்பொற்சிலம்பெனக்
கதைவலான்வெங்கடுங்கொடுங்கைகளால்
வதைசெய்தம்முன்வடிவுகண்டார்களே. (கூச)

பழுதுடைப்பெரும்பாதகன்மாண்டமை
தொழுதுரைத்துச்சுதேட்டிணைதன்னொடு
மழுதரற்றியயலறியாவகை
யெழுதழற்கணிடுவதற்கெண்ணினர். (கூரு)

எண்ணிலாமனத்தெம்முனையெண்ணுடை
விண்ணுளார்சிலர்வீத்ததற்கேதுவாம்
வண்ணமாமகடன்னையும்வன்னியா
லண்ணலோடுடுடுதுமென்றார்களே. (கூசா)

சொல்லுமாடவர்சொல்லினராயினுங்
கொல்லுமோகனுன்பெற்றகோதையை
மல்லன்மாலையினார்வந்துபற்றலு
மல்லல்கூரவரற்றினளாலவள். (கூஎ)

வெருவருங்கருங்கங்குலில்வெங்கொலை
நிருபரென்னைநெருப்பிடைவீழ்த்துவான்
கருதினார்கண்மெய்காக்குங்கடவுள்காள்
வருதிரென்றுகண்வார்புனல்சோரவே. (கூஅ)

மடைப்பெரும்பள்ளியெய்தியமாருதி
கிடைப்பதன்றிக்கிளர்பெரும்போரெனாத்
*துடைப்பரும்பவனத்தனல்சோர்தரப்
புடைப்பவோடினன்போர்மதமாவனான். (கூகூ)

அகப்பொழிற்கண்டவம்மரம்யாவையு
மிகப்பிடுங்கினன்வேரொடுங்கோட்டொடு
முகப்புடைத்தனனேடத்தொடங்கினார்
தகச்செயாமதிக்கீசகன்றம்பிமார். (க00)

போனபோனதிசைதொறும்போய்த்தொடர்ந்
†தானவானவனைக்கவக்கோட்டினான்
மானமும்மவராவியும்வாங்கினா
னேனையோர்களுந்தம்முனையெய்தினார். (க0க)

துவன்றுகற்புடைத்தோகையைவிட்டுமுன்
னுவன்றகீசகர்நூற்றொருமூவரு
மவன்றன்வாகுவினாலழிவுண்டபின்
கவன்றதாலக்கடிநகரெங்குமே. (க0உ)

கற்கும்யாழுடைக்கந்தருவர்க்கெதிர்
நிற்பரோவுடனேர்பொரமானவர்
கிற்குமைந்துடைக்கீசகர்யாவருந்
தற்கினான்மடிந்தார்தகவொன்றிலார். (க0௩)

என்றுமாநகர்யாவுநடுங்கிடத்
துன்றுகங்குலிற்சோரர்தம்மாருயிர்
பொன்றுவித்தபொருநனும்பூவையுஞ்
சென்றுதத்தமசேர்விடநண்ணினார். (க0ச)

கரியகங்குல்கனையிருட்போர்வையோ
டிரியவந்தவிருள்வலிதன்னினும்
புரியினன்றுபுரிந்தவப்போரும்வன்
கிரியின்மன்னுங்கிளர்விளக்கானதே. (க0ரு)

---

* துடைப்பரும்புவனத்தினிற்சோர்தர என்றும் பாடம்.
† ஆனைமானவனக்கொடுங்கோட்டினான் என்றும் பாடம்.

புலியினும்பெரும்போரிற்றனித்தனி
வலியராகியமைத்துனர்யாரையும்
பலியிடுங்கந்தருவரைப்* பார்க்கவே
மெலிவுழுந்தனன்விற்கைவிராடனே. (கOசு)

காண்டகுந்தமவேடங்கரந்துறை
யாண்டுசென்றதினிச்சிலநாளென
மீண்டுதோன்றுதுமென்றுவிரதரராம்
பாண்டுமைந்தரும்†பான்மையினண்ணினர். (கOஎ)

கீசகன்வதைச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-உககஅ.

நிரைமீட்சிச்சருக்கம்.

தொழுவார்தம்வினைதீரமுற்கோலமாய்வேலைசூழ்பாரெயிற்
றுழுவானைநன்றும்மொன்றாயினுங்கற்றொருருவோதினர்
வழுவாதசுரராகரபாகபுள்ளாகமாவாகபுன்
புழுவாகவொன்றிற்பிறந்தாலுநரகிற்புகார்காணுமே. (க)

மூதாரழற்பாலைவனமுந்தடஞ்சாரன்முதுகுன்றமுஞ்
சூதாடியழிவுற்றடைந்தோர்கள்சரிதங்கள்சொன்னோமினிப்
பாதாரவிந்தத்துமருவார்‡விழுக்கொண்டுபாராளும்வெங்
கோதார்மனத்தோன்விராடன்றனிரைகொண்டகோள்கூறுவாம். (உ)

ஈராறுமொன்றுஞ்சுரர்க்குள்ளநாள்சென்றவினிநம்முடன்
பாராளவருமுன்னரடலைவருறைநாடுபார்மின்களென்
$ேறாராயிரங்கோடியொற்றுள்விடுத்தானவ்வொற்றுள்களும்
வாராழிசூழெல்லையுறவோடிவிரைவின்கண்வந்தார்களே. (ங)

காடென்றுமலையென்றுநதியென்றுகடலென்றுகடலாடைசூழ்
நாடென்றுநகரென்றுநாடாததிசையில்லைநாடோறும்யாந்
தோடென்றுதாதென்றுதெரியாதுமதுமாரிசொரிமாலையாய்
நீடென்றுவலமேவுமவனிக்குளவரில்லை§நின்பாதமே. (ச)

முன்னொற்றையிருசங்கமுடனூதவெதிர்சென்றுமுனைவெல்லுமா
மன்னொற்றரிதுகூறமந்தாகினிமைந்தன்மகன்மைந்தனுக்
குன்னொற்றருணர்தற்குவருமோவறன்காளையுறைநாடுகார்
மின்னொற்றுமழையுண்டுவிளைவுண்டெனத்தேடும்விரகோதினன். (ரு)

* பற்றவே என்றும் பாடம்.
† பாவையுமெண்ணினர் என்றும்பாடம்.
‡ விழக்கண்டு என்றும்பாடம்.
$ ஓராயிரம்பேர்களொற்றுள் என்றும்பாடம்.
§ நின்னாணையே என்றும்பாடம்.

ஒற்றாளிலொருவன்பணிந்தென்றமெவ்வாழ்வுமுண்டாகியே
விற்றானைவெம்போர்விராடன்றன்வளநாடுமேம்பட்டதான்
மற்றாழ்புயக்கீசகன்றானுமொருவண்ணம்*மகள்காரணத்
திற்றானெனுஞ்சொல்லுமுண்டென்றுநிருபற்கெடுத்தோதினான். (௬)

வண்டார்விராடன்றன்வளநாடுதண்டான்மலைந்தேதொறுக்
கொண்டாலவன்சூழலிற்சூழும்வினயங்குறிப்போரிருப்
புண்டாகினிரைமீளுமின்றாகின்மீளாதென்னுட்கோளிதென்
றெண்டாமுமிதயத்துநிருபற்குரைத்தானிரவிமைந்தனே. (௭)

தக்கோர்தகுஞ்சொற்கள்கேளாததுரியோதனன்சொல்லினான்
மிக்கோர்மிலைச்சுஞ்செழுந்தாமவிறல்வெட்சிமிலைதோளினான்
றிக்கோதையெழவிம்மமுரசங்களரசானதிரிகத்தர்கோ
†னக்குரோணிபடையோடுபோயானடித்தானவன்சார்பிலே. (௮)

கணைகாணவரிதானகடலொத்தவெஞ்சேனைகைசூழவுந்
தணைகாவல்பெறுதோளினுண்மைப்பெருங்கேளிர்தற்சூழவும்
விணைகாலுமலரோடையெனுமாறிருக்கும்விராடற்குநன்
ணிணைகாவனின்றோர்பணிந்தோதினார்தெவ்வர்நிரைகொண்டதே. (௯)

செருமிக்கபடையோடுசதியாகமதியாதுதிரிகத்தர்கோ
‡னிருமிக்கவொட்டாதவென்பூமிதனில்வந்துநிரைகொள்வதே
பருமிக்கமதயானைதேர்வாசியாளின்னபண்செய்யுமென்
றுருமிக்கமுகில்போலுரைத்தானொ$ரக்குரோணியுளதானையான். (௧௦)

ஒண்டூளிவானம்புதைக்கப்பல்லியசாலமொலிபட்டிடத்
திண்டூசியணியாகநிரைகொண்டவெஞ்சேனைசென்றெய்தினான்
ஞெண்டூரும்வயறோறும்வளைநித்திலஞ்சிந்திநிலவூரவே
வண்டூதமலருந்தடம்பொய்கைசூழ்மச்சவளநாடனே. (௧௧)

உட்பேடியாய்வைகும்விற்காளையல்லாதவொருநால்வரு
நட்பேறுபூபாலனுடனேகினார்போர்நலங்காணவே
கொட்பேறிநிரைகொண்டவெஞ்சேனையுஞ்செல்கொடுஞ்சேனையும்
பெட்பேறியமர்செய்யமுன்னிட்டகுருசேனைபின்னிட்டதே. (௧௨)

மெய்க்கொண்டபுண்ணோடுதன்சேனைநில்லாமல்வென்னிட்டபின்
கைக்கொண்டநிரையைக்கடத்திப்பொலம்பொற்கழற்காலினான்
செய்க்கொண்டகழுநீரலங்கற்கரந்தைத்திருத்தாமன்மேன்
மைக்கொண்டலெனவில்வளைத்தாறுபத்தம்புமழைசிந்தினான். (௧௩)

மாமச்சவுடல்புன்புலான்மாறிவண்காவிமணநாறுமக்
கோமச்சவளநாடனுங்கொற்றவரிவிற்குனித்தந்துசெந்
தாமச்சரங்கொண்டுதேர்பாகுகொடிவாசிதனுவுந்துணித்
தாமச்சமுறமற்றவன்கோலமார்பத்துமம்பேவினான். (௧௪)

---

* மகள்காதலால் என்றும்பாடம்.
† அக்கோணி என்றும் பாடம்.
‡ நிருமிக்கவெட்டாத என்றும் பாடம்.
$ அக்கோணி என்றும் பாடம்.

தனைத்தேரழித்தோனைநிரைகொண்டுபோகின்றதனுவீரனுந்
துனைத்தேரும்வேறொன்றுமேல்கொண்டுநாலைந்துதொடையேவியே
வினைத்தேரும்வயமாவும்வெம்பாகும்விழவெய்துவின்னுணிஞன்
முனைத்தேர்முகத்திற்பிணித்தானவன்சேனைமுகமாறவே. (கரு)

வேறு.

திண்டிறற்சிலைவிராடனைத்தேரொடும்பிணித்துக்
கொண்டுபோதலுங்குருகுலக்கோமகமுனிவன்
கண்டுதன்றிருத்தம்பியைக்கடைக்கணித்தருள
மண்டுதீயெனவெழுந்தனன்மடைத்தொழில்வல்லான். (கசா)

உகத்தினீறுதோறுதையோதையாந்தாதை
நகத்தினுயர்நகங்களைநருக்குமாபோலத்
திகத்தபூபதிதேரினைவேறொருதேராற்
றகர்த்துவில்லொடுமகப்படுத்தினனவன்றனையும். (கஎ)

வீரியந்தனக்கொருவனும்விராடனையொருபொற்
றேரிலேறுகென்றேற்றியத்தேரினிற்றிகத்தன்
சோரிபாய்தடந்தோள்களைவடத்தினுற்றுவக்கி
மூரியேறெனமீண்டனன்முறிந்ததச்சேனை. (கஅ)

பொருமுகத்தினிற்பகைவனைப்புயமுறப்பிணித்து
வெருமுகத்தினில்விடுகொள்வீமனைவிராடன்
செருமுகத்தினிலெனக்குநீசெய்தபேருதவிக்
கொருமுகத்தினுமில்லைகைம்மாறெனவுரைத்தான். (ககூ)

சேவலானெனத்தயித்தியனனையவத்திகத்தர்
காவலானையக்கான்மகன்பிணித்தமைகண்டு
மாவலான்வயமாப்பதினுயிரம்வெளவக்
கோவலானவன்கொண்டகோமீளவுங்கொண்டான். (உ0)

துன்னலன்றனைத்தோளுறத்துவக்கிமுன்றந்த
பன்னுநான்மடைப்பலாயனற்கண்டுபாவித்தாங்
கன்னகாலையிலருக்கனைத்தேரொடுமணைத்து
மன்னுதன்றிசைவன்சிறைப்படுத்தினன்வருணன். (உக)

கங்கனென்றுதன்னருகிருந்தருளியகடவுட்
டுங்கமாமுனிசொற்படிதோள்வடநெகிழ்த்துச்
சிங்கமன்னவத்திகத்தனைச்செல்கெனவிடுத்தா
னங்கமாமதிலயோத்திமன்றேருமொன்றளித்தே. (உஉ)

போரணிப்படையொடுமவன்போனபின்றனது
தேரணிப்பெருஞ்சேனையைரவிகுலதிலகன்
பேரணிப்படவகுத்துமற்றியாரினும்பெரியோ
னீரணிப்படைவருமெனக்கங்குலங்கிருந்தான். (உங)

கெட்டவெம்படைகெட்டமைசுயோதனன்கேளா
முட்டவெண்டிசாமுகங்களும்பேரிகைமுழங்கத்
தொட்டபைங்கடற்சூரியன்ருேன்றுமுன்ருேன்றி
வட்டமாமதில்விராடனூர்*வடதிசைவளைந்தான். (உச)

வளையநாடெலாமன்னவன்வருதினிபரப்பி
விளையுநன்பெருவிளைவெலாம்வெங்கனல்கொளுத்தி
யளையுமாமணியானிரைகவர்தலுமாய
ருளையவோடிவந்தூர்புகுந்துத்தரற்குரைப்பார். (உரு)

குடநிறைப்பனகுவிமுலைக்கோநிரைமீட்பான்
றிடனுடைப்புயமன்னவன்றென்றிசைச்சென்ருன்
வடதிசைப்புலமுழுவதுமாசுணக்கொடியோ
னடல்வயப்படையாழியிற்பரந்ததையன்றே. (உசு)

நாட்டிலுள்ளனபலன்களுங்கவர்ந்தனர்நறுந்தண்
காட்டிலுள்ளனசுரபியின்கணங்களுங்கவர்ந்தார்
கூட்டிலுள்ளுறைகலுழனின்குஞ்சுபோலினிநீ
வீட்டிலுள்ளுறைகின்றதென்வேந்தன்மாமதலாய். (உஎ)

என்றபோதிலப்புதல்வனைப்பரிவுடனீன்ரு
ணின்றமங்கையர்தங்களைநிரைநிரைநோக்கிச்
சென்றகாவலன்வருந்துணைசெங்கையிற்படைகொண்
டொன்றவேகிநம்மெயிற்புறங்காமினென்றுரைத்தாள். (உஅ)

உரைத்தவன்னையைக்கதுமெனவுத்தரன்வணங்கி
நரைத்தவோதிநின்றிருமொழிநன்றெனநகையா
வரைத்தவாரமுமாரமுமாலையுமணிந்தென்
வரைத்தடம்புயம்வளர்த்ததுமகளிர்போர்பொரவோ. (உகூ)

கனைகடற்படையுடனிரைக்கணங்கவர்ந்தவரை
முனைபடப்பொருதிமைக்குமுன்முதுகுகண்டிடுவேன்
வினைமுகத்தினையறிந்துதேர்†விசையுடன்விடவென்
னினைவொடொப்பதோர்சாரதிநேர்ந்திலனென்ருன். (௩0)

உத்தரன்புகலுறுதிகேட்டொப்பனைக்குரியாள்
கொத்தரம்பொருகூரயிற்குமரனைக்குறுகி
வித்தரம்பெறுதேர்விடும்விசயனுக்கிவளென்
றத்தரம்பெறுபேடியைக்காட்டினளன்றே. (௩க)

என்றபோதவன்பயந்தவட்கியம்பியதுரைப்ப
நின்றபேடியைநிரைவளைதழுவிநீநேரில்
வென்றுபோர்முனையரசரைவிடலைவெய்தீண்டுந்
துன்றுதாரிணுயெனவியந்தின்னவைசொன்ருள். (௩உ)

---

* வடாதுறவளைந்தான் என்றும்பாடம்.
† விரகுடன் என்றும்பாடம்.

நாடிவாசியினல்லனநான்கவைபூட்டித்
தேடியாயுதஞ்சிலைமுதற்றெரிந்தவைகொண்டு
கோடிகோடிபைங்கோதையர்சூழ்இயினர்வாழ்த்தப்
பேடிதேர்விடச்சென்றனன்சுதேட்டிணைபிள்ளை. (௩௩)

விலங்கன்மாமதில்களுட்புறவீதியுங்கடந்தாங்
கிலங்குநேமியொன்றுடையதேரென்னலாந்தேர்மேற்
றுலங்குபேரொளியருக்கனிலுருத்தெழுதோற்றத்
தலங்கலுத்தரனுத்தரதிசையைவந்தடைந்தான். (௩௪)

*விண்கொளாமதிமேன்மைகொண்மீனினமென்ன
மண்கொளாவிறன்மன்னுடைவரம்பில்வான்படையை
யெண்கொளாமனத்திராகவன்றிருக்குலத்திளைஞன்
கண்கொளாவகைபுகுந்துதன்கண்ணுறக்கண்டான். (௩௫)

கைந்நடுங்கவுங்கானடுங்கவுங்கருத்தழிந்து
மெய்ந்நடுங்கவுநாப்புலர்ந்துயிர்ப்புமேல்விஞ்சிச்
சொன்னடுங்கவுஞ்சுடர்முடிநடுங்கவுஞ்சோர்ந்தான்
மைந்நெடுங்களிற்றுரனுடைவிராடர்கோன்மைந்தன். (௩௬)

அஞ்சலஞ்சனீபகைவரையாருயிரடுத
றஞ்சமென்றிவையிரண்டலாற்றுணிவுவேறுண்டோ
வெஞ்சமந்தனில்வந்துபுண்படாதினிமீண்டால்
வஞ்சநெஞ்சுடைவஞ்சியரென்சொலார்மறவோய். (௩௭)

நிலையுமுட்டியுநிலைபெறநின்றுநேர்படத்திண்
சிலைவளைத்துவெஞ்சிலீமுகஞ்சிற்சிலதொடுத்து
மலையிலக்கெனயாவரையுமலைந்திடுமலைந்தா
லலைகடற்புவியரசரிலாரெதிர்நிற்பார். (௩௮)

தூண்டுமாவிவைசொரிமதக்களிறிவைதுரங்கம்
பூண்டதேரிவைபதாதிமற்றிவையெனப்புகல
வீண்டுநின்றவையாவையுமியாவெனத்தெரியா
மீண்டுபோவதேயுறுதியென்றனனிகல்வீரன். (௩௯)

வெயர்த்தமேனியைநறும்பனிநீரினல்விளக்கி
யயர்த்துநீமுதுகிடாதொழியிமைப்பொழுதையா
வுயர்த்தபல்கொடிப்பகைஞரைத்தனித்தனியோட்டிப்
பெயர்த்துநல்குவேனிரையுமென்றுரைத்தனள்பேடி. (௪௦)

கொடித்தடந்தனித்தேரினின்றுகைத்துமுன்குதியா
வடித்தலம்பிடரடித்திடவோடலுமவனைத்
தொடித்தடம்புயமிரண்டையுந்தொடர்ந்துபோய்த்துவக்கிப்
பிடித்துவந்தொருநொடியினிற்றேருடன்பிணித்தான். (௪௧)

---

* விண்கொளாதகோணுள் விறன்மீனினமென்ன என்றும்பாடம்.

பிணித்ததேரினைப்பெற்றமும்பிற்படக்கடாவித்
திணித்தருட்பெரும்பொதும்பரிற்சேர்த்தியசிலையுந்
துணித்துமேவலர்முடியுகுசோரிதோய்தொடையுங்
*கணித்தவெல்லையிற்கொண்டுமீண்டமர்க்களங்கலந்தான். (சஉ)

எரிப்புறத்தருத்தருபடையாவெனவினவக்
கிரிப்புறப்பெருங்கானுறைகீரிடியவென்னத்
தெரிப்புறப்புகலெவ்வயிற்சேர்ந்தனனவனென்
றரிப்புறத்தடங்கண்ணியைக்கேட்டனனவனும். (சங)

கிரீடியெங்குளனென்றெனக்கேட்டநீகேண்மோ
விருடியாகிநின்றுதையோராசனத்திருக்கும்
புருடனிப்பதிபுகுந்தநாள்வந்துடன்புகுந்தோ
ரரிடமானதன்விதியினாற்பேடியுமானான். (சச)

யாண்டுசென்றிலதின்னமுமீரிருகடிகை
வேண்டுமாலினியீண்டையவ்விசயனுந்தோன்று
மீண்டுபோகலைவிடுவிடுவிரைபரித்தடந்தேர்
தூண்டுநீயெனத்தோளிலத்துவக்கையும்விடுத்தான். (சரு)

அறிந்துதாள்விழுந்தெழுந்துபின்னுங்கவனருளாற்
செறிந்தமால்பெருஞ்சிறப்பையச்சிறுவனும்பெற்றுப்
பிறிந்தபற்பலபேரணிநால்வகைப்படையு
முறிந்துபோகவத்தேர்விடுதொழிலினின்மூண்டான். (சசா)

ஓடினானுமித்தேர்விரைந்†தூர்பவனென்றும்
பேடிநாமுதலையுறும்பெருந்தகையென்று
நாடினார்பலர்நந்தியாவர்த்தநாண்மாலை
சூடினானெடுஞ்சேனையிற்றுரோணனேமுதலோர். (சஎ)

பேடியன்றுதன்பெண்மையையாண்மையாப்பிறர்கொண்
டாடவந்தவெஞ்சாபமுந்தொடிக்கையிலாக்கிக்
கோடியம்புகளோரொருதொடையினிற்கோத்து
வீடுவிப்பனீயஞ்சிடாவிடுகதேரென்றான். (சஅ)

என்றபோதவன்றேரினையிமைப்பினிற்செலுத்தச்
சென்றுபோர்முனைச்சிலைவிடுசிலீமுகங்களினாற்
கொன்றபோர்மன்னரிறிலர்குருகுலத்தவராய்
நின்றபோர்முடிமன்னருஞ்சுளித்துளநெளித்தார். (சகூ)

அன்றுபோலலனருச்சுனனம்பிகாபதிபாற்
றுன்றுபோர்புரிதவத்தினாற்சுடுகணைபலபெற்
றன்றுபோரினிலவுணரையமரருக்காக
வென்று‡போனகநுகர்ந்துபொற்றருமலர்வேய்ந்தான். (ருo)

---

* கணித்தவேலையில் என்றும்பாடம்.
† ஊர்பவனம்மா என்றும்பாடம்.
‡ பொன்னகரமர்ந்து என்றும்பாடம்.

தன்னிலத்தினிற்குறுமுயறந்தியின்வலிதென்
றிந்நிலத்தினிற்பழமொழியறிதிநீயிறைவ
வெந்நிலத்தினுமுனக்கெளிதாயினுமிவர்நந்
நன்னிலத்தினில்வரவமர்தொடங்குதனன்றால். (௫௧)

என்றுகூறினன்விதுரனுமேனையங்கருகு
நின்றவிடுமென்றுரோணனுமினிவிதுவென்றா
ரன்றுநாகவெங்கொடியவன்கொடியநெஞ்சழன்றான்
குன்றமாயினுநீறெழுமருகுறக்குறுகின். (௫௨)

தேருமங்கொருதேர்தனித்தேரின்மேனின்று
வீரவெஞ்சிலைவளைத்தகைவீரனும்பேடி
யாருநெஞ்சழிந்தஞ்சுவதென்கொலென்றிசைத்தான்
சூரன்மாமகனாகியசூரரிற்சூரன். (௫௩)

கொண்டகோநிரைகோவலர்கொண்டுமுன்போகத்
தண்டுநிற்கெனத்தம்பியரனைவருந்தானுந்
திண்டிறற்பெரும்பேடியைத்தேர்மிசைக்கண்டு
மீண்டுவீரெனக்கூறியேசுயோதனன்மீண்டான். (௫௪)

மானமாமுடிமன்னரைவிலங்கிவல்விரைந்து
கோநிரைக்குலங்கொண்டுபோங்கோநிரைதுரந்து
போனபேடிவெம்பூசலும்பொழுதுறப்பொருது
தூநிறத்திளங்கன்றுடைத்தொறுக்களுமீட்டான். (௫௫)

முந்தவான்பெறுமீட்டலுமுற்கவர்பொதுவர்
வெந்தநெய்யெனவாரவமடங்கினர்மிகவு
மந்தநெய்யினிற்பாற்றுளிபுகுத்தெனவார்த்தார்
வந்தமச்சர்கோமகனொடும்வந்தகோபாலர். (௫௬)

பாலெடுத்தபொற்குடநிகர்படியினபருவச்
சூலெடுத்தநல்வயிற்றினமழவிடைதொடர்வ
கோலெடுத்திளங்கோவலர்கூவினர்துரப்ப
வாலெடுத்தனதுள்ளிமீண்டோடினவனமே. (௫௭)

கடிகைநாலவண்சென்றபின்கடைசிவந்தகன்ற
நெடியகண்ணியன்றிட்டவெஞ்சாபமுநீங்கக்
கொடியின்மீதெழுமனுமனைக்குறிக்கவக்கொடியு
முடிகொடன்றனிபிரதமுமுன்வரக்கண்டான். (௫௮)

உரியதேரினைமீதுகொண்டுத்தரன்செலுத்தக்
கரியமேனியன்செய்யதாமரைத்தடங்கண்ணன்
புரியவாங்கியசிலையினனின்றனன்பொலம்பொற்
கிரியின்மீதெழுமரகதகிரியெனக்கிளர்ந்தே. (௫௯)

4114

படுங்குறும்பனிபுதைத்தலிற்பரிதிதன்னுருவ
மொடுங்குமாறெனவொளித்ததன்பேட்டுருவொழித்து
நெடுங்கொடுங்கணைநிருபன்வெஞ்சேனையின்வேந்தர்
நடுங்குமாறுமுன்றோன்றினனரனெனுநாமன். (௬௦)

செருச்செய்வான்வருசேனைவெண்டிரையையுங்கடப்பான்
பருச்சிலம்பினின்றுகைதருபாவனைபோல
வுருச்செழுஞ்சுடரெறிப்பநின்றுலாவின*னுண்மைக்
கருச்சுனன்றடந்தேர்க்கொடியாடையிலனுமன். (௬௧)

மருமிகுந்தொடைத்தடம்புயமகபதிமதலை
பெருமிதம்படவளைத்தவிற்பிறங்குநாணொலியாற்
செருமியெங்கணுங்கரிபரிதேர்மிசைநின்றோ
ருருமின்வெங்குரல்கேட்டகோளுரகரோடொத்தார். (௬௨)

குறித்தசங்கொலிசிங்கநாதத்தொலிகுனிவிற்
செறித்தநாணொலிசெவிப்படச்சிந்தனைகலங்கிப்
பொறித்தபாவையினுத்தரன்பொறிமயக்குற்று
மறித்தும்வீழ்ந்தனன்மாவிடுதொழிலையுமறந்தே. (௬௩)

தாழ்ந்தவாடையினுபர்கொடித்தண்டுடைத்தேர்மேல்
வீழ்ந்தபாகனைமீளவும்விரகுறத்தேற்றிச்
சூழ்ந்ததன்பெருந்துணைவனைச்சூதினாற்றுரந்து
வாழ்ந்தமன்னன்மேலேவினான்வரிசிலைவல்லான். (௬௪)

மச்சநாடன்மாமதலையம்மன்னவன்மொழியா
லச்சமற்றிருந்துளவுகோலருணனிற்கொள்ள
வுச்சவானிடைப்பகலவனூர்ந்ததேர்பூண்ட
பச்சைவாசியினோடினசுவேதவெம்பரிமா. (௬௫)

உரவினால்வடமேருவைக்கொடுமுடியொடித்து
விரவியென்பெருந்தாதைநின்றாதையைவென்றான்
பரிவினின்னையான்வெல்வனென்றவனிபன்பதாகை
யரவைமற்றிவன்பதாகையிலனுமன்வந்தடுத்தான். (௬௬)

வட்டமாகவில்வளைத்தெதிர்மண்டலநிலையாய்த்
தொட்டவாளியானடிமுதன்முடியுறத்துணிப்புண்
டிட்டமாமணிக்கவசமும்பிளந்தெதிர்ந்துள்ளார்
பட்டொழிந்தனரொழிந்தவர்யாவர்புண்படாதார். (௬௭)

வேகவற்றியநதியனவிதநடைப்புரவி
பாகவற்றினைத்தலையறமலைந்துபாழ்படுத்தி
மாகவற்றினிற்பொய்த்தசூதாடியவஞ்ச
நாகவற்றியபுன்மொழிநிருபனைநகைத்தான். (௬௮)

---

* உண்மை, யருச்சுனன் என்றும்பாடம்.

பாகும்வாசியுமமைந்ததேோர்தேர்மிசைப்பாய்ந்து
மாகுசூழவுந்தப்பியவரிநிறமாபோ
லேகுகின்றபேரிராசராசனேயெதிர் தகைந்து
கோகுதட்டிடுதனஞ்சயனிவைபிவைகூறும். (சுசு)

வேறு.

கார்முகங்கைத்தலத்திருப்பக்கைம்மிகு
போர்முகந்தன்னினீபுறந்தந்தேகினு
லூர்முகக்களிற்றின்மேலுலாவும்வீதியின்
வார்முகக்கனதனமாதரென்சொலார். (எ0)

இருபுறஞ்சாமரமிரட்டத்திங்கள்போ
லொருகுடைநிழற்றவிவ்வுலகின்னதா
மருவலர்கைதொழவாழுகின்றநீ
பொருமுனைகாண்டலும்போதல்போதுமோ. (எக)

உன்பெருந்துணைவரோடுன்னையோர்கணத்
தென்பெருங்கணைகளுக்கிரைகளாக்குவேன்
வன்பெருங்கொடிமிசைமடங்கலேற்றினான்
றன்பெருஞ்வஞ்சினந்தப்புமேகொலாம். (எஉ)

எங்களைக்கானில்விட்டிரவியேகவெண்
டிங்களைப்போனெடுந்திகிரியோச்சினீர்
சங்கை *பயில்வளநாடன்றண்டினு
லுங்களைக்களப்பலியூட்டுநாளையே. (எந)

இரவலரிளையவரேத்துநாவலர்
விரவியதூதுவர்விருத்தர்வேதிய
ரரிவையர்வெஞ்சமரஞ்சுவோர்பெருங்
குரவரென்றிவர்களைக்கோறல்பாவமே. (எச)

பற்பலவுரையிவன்பகருமேல்வையிற்
சொற்பயினன்மறைத்துவசன்வீடுமன்
கற்பகநிகர்கொடைக்கன்னனாதியோர்
மற்புயநிருபனைவந்துகூடினர். (எரு)

மின்னுடன்மின்மினிவெகுளுமாறுபோற்
றன்னுடனிகரிலாத்தடக்கைவண்மையான்
மன்னுடனிகல்வதுவார்த்தையன்றினி
யென்னுடன்மலைதிநீயென்றுகூறினன். (எசு)

கரக்கவுண்மதம்பொழிகாய்களிற்றைவிட்
டிரக்கொடுவரியின்மேலோடும்யாளிபோ
†னிரக்குமங்கிருபனுநிற்கவந்துபோ
ரிரக்குமக்கன்னன்மேலிரதமேவினன். (எஎ)

---

*பயில்வயனுடன் என்றும் பாடம்.
†சிரைக்கொடுவெம்படைசிற்க என்றும் பாடம்.

இரதமுமிரதமுமெதிர்ந்தபோதிரு
ருரதுரகதங்களுங்குமுறியார்த்தன
வுரைதருபாகருமுடன்றுகூவினர்
விரைதனுவளைத்தனர்வீரர்தாமுமே. (௭௮)

இருவருமெதிரெதிரேவும்வாளியால்
வெருவருமிருளுறவிசும்புதூர்த்தனர்
பொருவருமமர்நெடும்போதுதாக்கியு
மொருவருமிளைத்தில*ரொத்தவாண்மையார். (௭௯)

மற்றொருதொடையினிற்சுவேதவாகனன்
முற்றொருகணத்திடைமூன்றுகோல்விட
விற்றொருகணத்திடையிவுளிபாகுதே
ரற்றொருவினனடலாண்மையங்கர்கோன். (௮௦)

ஒருவியிட்டோடிமற்றோரோர்தேர்மிசை
மருவியிட்டெதிருறவந்துமோதியு
முருவியிட்டனகணையொன்றுபோற்பல
வெருவியிட்டனனவன்மீளமீளவே. (௮௧)

இம்முறைவந்துவந்தெதிர்ந்துவெஞ்சமர்
மும்முறைமுறிதலுமுனிவன்மாமக
னம்முறைமுதுகிடுமருக்கன்மைந்தனைத்
தெம்முறைமையிற்சிலவார்த்தைசெப்புவான். (௮௨)

தேருமொன்றொருவனேதேரிலாளுமிங்
கியாருமஞ்சுதிரென†விகழ்ந்துரைத்தநீ
போருடைந்தோடுதல்போதுமோநறுந்
தாருடன்பொலிதருதாமமார்பனே. (௮௩)

சொல்லலாமிருந்துழிச்சொன்னசொற்படி
வெல்லலாமென்பதுவிதிக்குங்கூடுமோ
மல்லலாளியைப்பலவளைந்துகொள்ளினுங்
கொல்லலாயிருக்குமோகுஞ்சரங்களால். (௮௪)

‡கொழுதுமம்பினுமிகக்கொடியகூற்றினை
பழுதறுநாவினன்பகரும்வேலையின்
முழுதுணர்முனியையுமுந்தைதன்னையுந்
தொழுதுபற்குனன்சிலதொடைகளேவினன். (௮௫)

தாளிணையிறைஞ்சியதனஞ்சயன்றொடும்
வாளிகண்டுளமிகமகிழ்ச்சிகூரவு
மீளிமையுடையவவ்§வீரன்மீதெழுந்
தூளிசெய்தேரினைத்துரோணனுந்தினன். (௮௬)

---

*உவமைவேறிலார் என்றும் பாடம்.
†இகழ்ந்துநக்கநீ என்றும் பாடம்.
‡கொழுவயிலம்பினும் என்றும் பாடம்.
§வீரன்மேனெடுந், தூளி என்றும் பாடம்.

வேறு.

உந்துதேர்முனியையந்தவுதிட்டிரனிளவனோக்கிச்
சிந்தையிலன்புகூரச்சேவடிபணிந்துபோற்றி
யந்தணரரசேயுன்றனருளினாலடவிநீங்கி
வந்தனமென்றுசிற்சில்வாசகமியம்புவானே. (௮௭)

யாதுமொன்றறியாவென்னையிவனலாதிலையென்றிந்த
மேதினிமதிக்குமாறுவின்முதற்படைகள்யாவுந்
நீதறத்தந்தவுண்மைத்தெய்வநீயென்றுற்பஞ்ச
பாதகந்தன்னிலொன்றுன்பதயுகம்பிழைப்பதையா. (௮௮)

மன்னொடுசூழநின்றமாசுணமுயர்த்தகோனை
மின்னொடுமுருமேறென்னவெகுண்டமர்புரிவதல்லா
னின்னொடுங்கிருபனோடுநின்மகனோடுமுந்தை
தன்னொடும்புரியேன்வெம்போர்தக்கதோசரதம்பாவம். (௮௯)

அம்முனிதன்னோடிவ்வாறருச்சுனன்புகலவல்விற்
கைம்முனிவனுஞ்செஞ்சோற்றுக்கடன்கழித்திடுதல்வேண்டுந்
தெம்முனைமதியாவீராதேவர்தம்பகையைவென்ற
வெம்முனைகாணுமாறுன்வில்வளைத்திடுகவென்றான். (௯௦)

குருவுமக்குருவைத்தப்பாக்குருகுலக்கோவுந்தங்க
ளருவரைத்தோளினாணியறைதரப்பிறைவில்வாங்கிக்
கருவுயிர்த்தெழுந்தகாலமழைமுகில்கால்கொண்டென்ன
வொருவருக்கொருவர்வாளியோரொருகோடிபெய்தார். (௯௧)

அதிரதர்தம்மையெண்ணிலணிவிரன்முடக்கவொட்டா
முதிர்சிலைமுனியும்*வீரமுனிவிலாமுகனும்விட்ட
கதிர்முனைப்பவனவேகக்கடுங்கொடும்பகழியாவு
மெதிரெதிர்கோத்தவல்லாற்பட்டிலவிருவர்மேலும். (௯௨)

வண்டுதான்முரலுங்கஞ்சமாலையான்பயிற்றுவித்துப்
பண்டுதான்கண்டகூற்றிற்பதின்மடங்குயர்ந்தபண்பான்
மிண்டுதானவரைவென்றவிரலுடைவிசயன்வின்மை
கண்டுதானவன்றனோடுகற்பதற்குன்னினானே. (௯௩)

எறுதேர்முரியவேதமெழுதியதுவசம்விழக்
தாறுபாய்புரவிநான்குஞ்சாரதிதலையுஞ்சிந்தக்
கூறுபோர்†நாணியோடுகுனிசிலைதுணியப்பின்ன
ராறுகோறொடுப்பவெள்கியாரியன்முதுகிட்டானே. (௯௪)

தந்தைபோரழிந்துபோனசாபலங்கண்டுவெம்பி
யிந்திரன்மதலையோடுமெதிர்த்தனனிவுளித்தாமா
முந்துறவிருவர்வில்லுமுரண்படக்குனித்தபோரி
னந்தணன்கணையான்மன்னன்வில்லினாணற்றதன்றே. (௯௫)

*மூரன்முனிவிலா என்றும் பாடம்.
†நாணியற்றுக்குனிசிலை என்றும் பாடம்.

மந்தரமனையதோளான்மற்றொருவரிவில்வாங்கி
யிந்தவெம்பகழிக்கெல்லாமீடுறுனிவனென்றெண்ணிச்
சந்திரமவுலிதந்தசாயகந்தொடுத்தலோடு
நொந்தினியென்செய்வோமென்றார்புகநோக்கினானே. (௯௬)

கிருபனுமவனைக்கண்டுகெட்டனன்கேடிலாத
நிருபர்கள்பலருமோதிநேர்பொருதாவிமாய்ந்தார்
பொருபடைச்சேனையாவும்புக்குழியாவர்கண்டா
ரொருபரியொற்றையாழித்தேரவனுச்சமானான். (௯௭)

வென்னிடுமளவினின்றவீடுமன்விதுரன்வண்டு
தென்னிடுமலங்கன்மாலைச்சுயோதனன்சிந்துராயன்
றன்னிடுகிருபர்சூழச்சூழ்திசைநான்கும்வந்து
முன்னிடுந்தேரோன்றன்னைமுனையுறவளைந்துகொண்டார். (௯௮)

இவர்பெருந்தேரின்மேலோனொருவனேயிலக்கதாகத்
தவருடன்குனித்தநேகசாயகந்தொடுத்தகாலைக்
கவுரிபங்காளன்றன்னைக்கண்ணுறக்கண்டகாளை
பவுரிவந்தொன்றுந்தன்மேற்படாமல்வெம்பகழிகோத்தான். (௯௯)

குடதிசைமகவான்வாளிகுணதிசைவருணன்வாளி
வடதிசைமறலிவாளிதென்றிசைமதியின்வாளி
யடலுறவிமைப்பினேவியவரவர்மார்புந்தோளும்
படருறப்படைகணீறுபடப்படப்பரப்பினானே. (௧௦௦)

கோகனநாகவேகக்கொடியவன்சேனையாவு
மோகனக்கணைபொன்றேவிமுடியடிபடிக்கண்வீழ்த்தான்
மாகனற்கடவுடந்தமணிப்பொலந்தடந்தேர்வெள்ளை
வாகனக்குரிசில்வின்மைவல்லபமிருந்தவாறே. (௧௦௧)

இத்தரையிடங்கொளாமலிறந்தனர்போலவீழ்ந்த
மத்தரைமயிர்கொய்தென்னமணிக்கொடித்தூசுந்தூசு
முத்தரைவண்டற்பாவைக்குடித்துதற்கென்றுகொய்தா
னத்தரமவுலித்திங்களமுதுகப்புடைத்தவில்லான். (௧௦௨)

விழுந்தவர்நெடும்போதாகமெய்புணர்வெய்திமெல்ல
வழுந்தியபகழியோடுமரிபடுகவசத்தோடு
மெழுந்துதம்மிரதம்யானையிவுளியினேறியேறித்
தொழுந்தகுதெய்வமன்னசூரனைத்துதித்துமீண்டார். (௧௦௩)

கொடிமதிற்பாகைவேந்தன்கொங்கர்கோன்புரவிக்காலால்
வடதிசையரசர்தங்கண்மாமணிமகுடம்போல
வடலுடைவிசயனொற்றையம்பினான்மீண்டுஞ்சென்று
படவரவுயர்த்தகோவைப்பண்ணினான்மகுடபங்கம். (௧௦௪)

வல்லினிலழிந்துநின்முன்மன்னவைதன்னினன்று
சொல்லியகாலஞ்செல்லாமுன்னிவர்தோற்றஞ்செய்தார்
புல்லியகானினின்னம்போகநீபுகறியென்று
வெல்படைவேந்தன்சொல்லவீடுமன்மீண்டுஞ்சொல்வான். (௧௦௫)

செந்நெலைகன்னல்காட்டச்சேர்ந்தயற்செறுவினின்ற
கன்னலைகமுகுகாட்டுங்கங்கைநீர்நாடகேண்மோ
வின்னலைப்புழந்தோர்காலமிந்துவினியக்கந்தன்னா
னென்னலைசென்றதென்றுநெஞ்சினிலழுக்கிலாதான். (௧௦௬)

அரவினையுயர்த்தகோமானவ்வுரைகேட்டபோழ்தே
பரவையினிரவிகண்டபனிமதிபோலமாழ்கி
வரவரவறிதுமென்றுமாபெருஞ்சேனையோடு
மிரவிடையாருந்துஞ்சவெயில்வளைநகரிபுக்கான். (௧௦௭)

வேந்தனைமுதுகுகண்டவெந்திறல்வீரன்மீண்டு
போந்துமுன்னெடுத்தவன்னிப்பொதும்பரின்புறத்துவந்து
வாய்ந்தவாயுதங்கள்யாவும்வைத்தெழில்வடிவமாற்றி
யாந்தகவெண்ணிப்பேடியாயினானென்பமாதோ. (௧௦௮)

இவ்வெயிலெறிக்கும்பைம்பொனிலங்குதேர்மீண்டுமேகக்
கைவ்வெயிலெறிக்கும்பைம்பூட்காளைதன்றேரிலேறி
வெவ்வெயிலாறும்வண்ணம்விரைந்துபோய்விராடன்மூதூ
ரவ்வெயில்சூழ்ந்தகாவினமர்ந்தனனரசரேறே. (௧௦௯)

ஆறியபசுந்தண்காவினசைவொரீஇயிருந்தவீர
னேறியகானிற்பல்யாண்டிருந்தபினேனையாண்டு
மாறியவடிவத்தோடிவ்வளநகர்வைகினோமென்
றாறியவமுதச்சொல்லானுத்தரற்குரைசெய்தானே. (௧௧௦)

பேடிதேர்செலுத்தச்சென்றபிள்ளையும்பெரும்போர்வென்று
கோடிதேர்முதுகுகண்டுகோநிரைமீட்டானென்றென்
றோடிநீர்சொன்மினென்றுதூதரையோடவிட்டா
னீடுநீர்பரக்குங்கங்கைநாடுடைநிருபர்கோமான். (௧௧௧)

இங்கிவனிவ்வாறுய்ப்பமுற்பகலேகியாங்கட்
கங்குலிற்சேனையோடுங்கண்படையின்றிவைகிச்
செங்கதிரெழுந்தபின்னர்த்தென்றிசைப்பூசல்வென்ற
வெங்கழல்விராடன்றானுமீண்டுதன்னகரிபுக்கான். (௧௧௨)

தடம்பதியடைந்தகாலைத்தன்மனையிருந்தபேடி
திடம்படுதடந்தேரூரத்திருமகன்சென்றசெய்கை
விடம்படுவெகுளிவேற்கட்சுதேட்டிணைவிளம்பக்கேட்டாங்
குடம்புயிரின்றிவீழ்ந்ததென்னுமாறுருகிவீழ்ந்தான். (௧௧௩)

சந்தனவளறும்வாசத்தண்பனிநீரும்வீசி
வெந்திறல்வேந்தன்றன்னை*மெய்ம்மெலிவிருந்துதேற்றி
மைந்தனிப்பொழுதேவென்றுவருகுவன்பொற்றேரூர்ந்தா
ளந்தமெய்ப்பேடியாகிலென்றனனந்தணாளன். (௧௧௪)

அறன்மகன்வாய்மைதேறியரசனுங்கிருந்தவெல்லை
மறனுடையுரககேதுவன்சமரழிந்தவாறு
முறமலைந்தொருதன்றேர்கொண்டுத்தரன்வென்றவாறுந்
தொறுநிரைமீட்டவாறுந்தூதர்போய்த்தொழுதுசொன்னார். (௧௧௫)

சீதளவமுதவாரிசெவிகளிற்செறிந்ததென்னத்
தூதர்வந்துரைத்தசொல்லாற்சோகமுந்துனியுமாறித்
தாதையன்றேதுசெய்தான்றனையொழிந்துள்ளசேனை
யாதிபரெவருமெய்தியண்ணலையெதிர்கொள்கென்றான். (௧௧௬)

சோரர்தங்கருவைத்தங்கள்கருவெனத்தோளிலேந்தி
யார்வமுற்றுருகுநெஞ்சினறிவிலார்தம்மைப்போல
வீரன்வெஞ்சமரம்வெல்லவிராடனுத்தரன்வென்றானப்
போரினையென்னுமேனிபுளகெழப்பூரித்தானே. (௧௧௭)

பூழிகளடக்கிச்செம்பொற்பூரணகும்பம்வைத்து
வாழையுங்கமுகுநாட்டிமணியொளித்தீபமேற்றிச்
சூழவன்பதாகைகட்டித்தோரணம்பலவுநாட்டி
யேழுயர்மாடமூதூரெங்கணுங்கோடித்தாரே. (௧௧௮)

மகன்வருமளவும்வெஞ்சூதாடுதும்வருகவென்றாங்
ககமிகமகிழ்ந்துவேந்தனந்தணன்றன்னோடாட
மிகமுனியடுத்துவெல்லவென்றியுத்தரன்முன்மேவா
ரிகலழிந்தென்னவிப்போரழிதிநீயெந்தையென்றான். (௧௧௯)

என்றவன்மொழிந்தபோதிலெண்ணில்வெஞ்சேனையோடு
வன்றிறலுரககேதுவலியழிந்துடைந்துபோக
வென்றவன்பேடியேதன்மெய்ந்நடுங்காமற்போரி
னின்றுநின்சிறுவன்வெல்லவல்லனோநிருபரேறே. (௧௨௦)

பிருகந்நளையென்றோதும்பேடியைப்பேடியென்று
கருதனீயவனேமுன்னங்காண்டவமெரித்தகாளை
யொருதனித்தடம்பொற்றேரூர்ந்தும்பருக்காகவும்ப
ரரிகளையரிதின்வென்றானென்றனனந்தணாளன். (௧௨௧)

கோடியின்கோடியானகுருக்கள்வெஞ்சேனைதன்னை
யோடியென்புதல்வன்றானேயொருதனிபொருதுவென்று
நீடியநிரையுமீட்டுமீண்டனனென்னநீயப்
பேடியைவிறல்கொண்டாடிப்பேசுதிபிரமமூர்த்தி. (௧௨௨)

* மெல்லெனவிருந்து என்றும் பாடம்.

புன்னவையானமாற்றம்புகன்றனரெனினுங்கேட்டாங்
கின்னவைநன்றுநன்றென்றிதம்படமொழிவதல்லான்
மன்னவையிருந்துநாளும்வழிபடுமாந்தர்மன்னர்
சொன்னவைமறுத்துமாறுசொல்வரோசுருதிவல்லாய். (௧௨௩)

என்னவுமிடங்கொடாமலெதிருறவிருடிமீண்டுங்
கன்னன்விற்றுரோணன்மைந்தன்காங்கேயன்முதலினோரை
மன்னவவெல்லநின்சேய்வல்லனோவந்துசொன்னாற்
பின்னைநீதெளிதியென்றான்பீடுடைப்பேடிதன்னை. (௧௨௪)

*கொடுவிலாண்மையினாலின்றென்குமரன்வென்றிடவுஞ்சற்று
நடுவிலாதவரிற்பல்காலென்கொனீநவில்வதென்னாக்
கடுவிலாடரவிற்பொங்கிக்கவற்றினாலெறிந்துநக்கான்
வடுவிலாமுனியைமன்னன்வடுப்படுமாறுமன்னோ. (௧௨௫)

எற்றியகவறுநெற்றியெதிருறவிருந்தகங்க
னெற்றியிற்சென்றுவாசநிறைத்தகுங்குமத்தின்சேற்றாற்
பற்றியதிலகம்போலப்படுதலும்பாங்கர்நின்ற
வற்றியவோடையன்னவனப்பினாண்மருண்டுகண்டாள். (௧௨௬)

பல்கியகிளையுந்தேசும்பார்த்திவன்வாழ்வுந்தாங்க
லல்கியநகருமின்றேயழியுமென்றஞ்சியேகொ
னல்கியநேயமேகொனயனநீர்மல்கமல்க
மல்கியகுருதிதன்னைமாற்றினாள்வண்ணமாதே. (௧௨௭)

கண்ணினீர்மல்கவண்ணக்காரிகைகலையாலந்த
வண்ணமாமுனிவன்சோரிமாற்றியகாலையுற்
றெண்ணமுஞ்செயலும்வேறாயென்செய்தோமென்செய்தோமென்
றண்ணலுந்தன்னைநொந்தாங்கருஞ்சினம்பாவமென்றான். (௧௨௮)

ஆயிடையத்தக்குன்றுக்காதபனணியனாகச்
சேயிடையெதிர்கொள்கொற்றச்சேனைமன்னவர்கள்சூழ
வீயிடைவரிவண்டார்க்கும்வியன்பெருங்காவுநீங்கிப்
போயிடைநெருங்கிவேந்தன்புதல்வனப்புரத்தைச்சேர்ந்தான். (௧௨௯)

பரந்துவெம்படைகண்மின்னப்பல்லியம்பணிலமார்ப்பச்
†சுரந்துழும்மதமும்பாயுந்துதிக்கைவாரணங்கள்சூழப்
புரந்தரனகரிற்காளப்புயல்வருமாறுபோல
வுரந்தருபேடிதன்றேரூரவேவீதியுற்றான். (௧௩0)

வென்றுமீள்குமரன்றன்னைவீதிகடோறுமாத
ரன்றெதிர்கொண்டுநன்னீராசனமெடுத்துவாழ்த்தக்
குன்றெறிந்தவனைக்கண்டகுன்றவில்லினைப்போன்முந்தச்
சென்றவன்பிதாவுந்தேர்மேற்சிக்கெனத்தழீஇக்கொண்டானே. (௧௩௧)

* கொடுவிலாடமரிலின்றென் என்னும்பாடம்.
† சுரந்தெழுமதமும் என்னும் பாடம்.

தழுவிய*வரசன்றாளிற்றலையுறவீழ்ந்துவேந்தர்
குழுவிடைக்கொண்டுபோகக்கோயிலிற்புகுந்தபின்னர்ப்
பழுதறுவாய்மைவேதபண்டிதன்பாதம்போற்றிச்
செழுமலர்வதனநோக்கித்திருநுதல்வடுவுங்கண்டான். (௧௬௨)

திகழ்ந்தநின்னுதலினூறுசெய்தவர்யார்கொலென்ன
நிகழ்ந்தமைதந்தைகூறநெஞ்சினுற்றந்தைதன்னை
யிகழ்ந்தமைநுவலும்போதைக்கெல்லையின்றிவனைப்போல
வகழ்ந்தநீராடைஞாலத்தார்கொலோவமைவின்மிக்கோர். (௧௬௩)

செறுப்பதுபெருமையன்றுசிறியவர்செய்ததீமை
பொறுப்பதேபெருமையென்றுபூசுரன்பாதம்போற்றி
வெறுப்பதுவிளைத்ததாதைவீழ்ந்தபின்றானும்வீழ்ந்து
மறுப்பதுபுரியாஞானிமனத்துனியகற்றினானே. (௧௬௪)

ஆன்றமைந்தடங்குகேள்வியண்ணலுமவனைப்பெற்ற
தோன்றலும்பின்னர்ச்சென்றுசுதேட்டிணைகோயிலெய்த
வீன்றவப்பொழுதினோகையெண்மடங்காகவிஞ்சச்
சான்றதன்மகனைக்கண்டுமகிழ்ந்தனடவத்தின்மிக்காள். (௧௬௫)

ஓடியுத்தரன்றேரூரவொருமுனையாகத்தன்னை
நாடியுத்தரிக்கமாட்டாநராதிபர்பதாகைத்துசுங்
கோடியுத்தரியப்பட்டுங்†குழமகன்றனக்குநல்கிப்
பேடியுத்தரைதன்னோடும்பெற்றதாய்பின்புநின்றாள். (௧௬௬)

தந்தையுந்தானுமாங்குத்தனித்திருந்தடையலாரை
முந்தியவமரிற்சென்றுமுனைந்துபோர்விளைத்தவாறும்
வந்தவர்சாய்ந்தவாறுமணிநிரைமீட்டவாறுஞ்
சுந்தரகிரிகள்போலுந்தோளினான்றோன்றச்சொல்வான். (௧௬௭)

வேறு.

உருப்பசிவெஞ்சாபத்தாற்பேடியான வுருவமொழித்தருச்சுனன்றன்னுருவங்கொண்டு, பொருப்பனையகவித்துவசத்தேர்மேல்வண்ணப் பொருசிலைதன்கரத்தேந்திப்புகுந்தபோது, செருப்புரவியிரவியெதிர்திமிரம்போலத் திறலரியேற்றெதிர்கரியின்றிறங்கள்போல, நெருப்பெதிர்ந்தபதங்கம்போலழிந்தாரைய நிரைபோக்கியணியாகின்றவேந்தர். (௧௬௮)

அருகுவிடாதுனக்குயிர்நண்பாகிநீதி யறமுறைப்போனறத்தின்மகனாகவேண்டு, மருமலருமான்மதமுந்துறந்தகூந்தல் வண்ணமகள்பாஞ்சாலன்மகளேபோலும், வெருவருமற்போர்கடந்தமடையன்றன்னை வீமனெனவயிர்க்கின்றேன்வேந்தே மற்றை, யிருவரினுமாவலானகுலன்றானே யின்னிரையின்காவலானிளையகோவே. ()

---

* சனகன்றாளில் என்னும்பாடம்.

† குலமகடனக்கு என்னும்பாடம்.

ஆளையேயடுங்களிற்றார்தம்மையாரு மறியாமலிந்நகர்க்கணடங்கிநின்றார், நாளை யேவெளிப்படுவர்நெருநலேதந் நாளுள்ளகழிந்தனவானயந்துகேண்மோ, வேளை யேயனையவெழிற்றேருகைவாகை வேளையேயனையவிறல்விசயனென்னுங், காளையே யடியேனுக்கிளையகாதற் கன்னிகைக்குவரனென்றுகருதுவாயே. (௧௬௦)

மகனிவைமற் றுரைத்தளவிற்றாதைகேட்டு மனநடுங்கிநெகிழ்ச்சியுடன்மகிழ்ச் சிகூர்ந்தான், பகலமரிலேறியமெய்ப்பாகமாறப் பகலோனும்புனல்படிவான்பர வைசேர்ந்தான், றகவுடையபாண்டவரும்வண்ணமாதுந் தனித்தெண்ணிப்பரகாய சரிதர்போலப், புகலரியபழையதமவடிவங்கொண்டார் போனபகலவனுதயப்பொ ருப்பின்மீண்டான். (௧௬௧)

நிரைமீட்சிச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௨௨௫௧.

வெளிப்பாட்டுச்சருக்கம்.

எக்கடலுமெக்கிரியுமெவ்வுலகுமுலகிற்
றக்கபலயோனிகள்சராசரமனைத்து
மிக்கவிதியால்விதிசெய்விதியினைவிதிக்குஞ்
செக்கமலநாபிமுகில்சேவடிதுதிப்பாம். (௧)

அருக்கனடிகைதொழுதனந்தரமருக்க
னுருக்கருகவேயருணவுருவழகெறிப்பத்
திருக்கிளர்நலம்பெறுசெழுந்தெரிவையோடுங்
குருக்குலம்விளங்கவருகோமகனிருந்தான். (௨)

காற்றின்மகனுங்கடவுளாதிதிருமகனு
மாற்றமுதிராயுண்மறைவானவர்மகாரு
மேற்றமுறையாலடியிறைஞ்சியிசையோடுந்
தோற்றமுறுமாறருகுசூழ்தரவிருந்தார். (௩)

தன்னைநிகர்கிற்பவரிலாததனுவல்லோ
னென்னைதிருநெற்றியிலிருந்தவடுவென்றான்
மின்னையும்வெறுத்தொளிருமேதகுநிறத்தாள்
பின்னையவனுக்குநிகழ்பெற்றியுரைசெய்தாள். (௪)

உரைத்தபொழுதிப்பொழுதிவ்வூரெரிகொளுத்தித்
தரைத்தலைவனைத்தலைதடிந்திடுவலென்னா
விரைத்தடவரைப்புயன்வெகுண்டுவிலெடுத்தா
னிரைத்துவருகான்மகனுமெரிவிழிசிவந்தான். (௫)

ஒன்றுதவிசெய்யினுமவ்வுதவிமறவாமற்
பின்றையவர்செய்பிழைபொறுத்திடுவர்பெரியோர்
நன்றிபலவாகவொருநவைபுரிவரேனுங்
கன்றிடுவதன்றிமுதுகயவர்நினையாரே. (௬)

*அனலுமுதுகானகமகன்றுநெடுநாணங்
நினைவுவழுவாமலிவணீழலிலிருந்தோஞ்
சினமிகுதலிற்றவறுசெய்தனனெனப்போய்
முனிதல்பழுதாகுமெனமுன்னவன்மொழிந்தான். (௭)

குந்திவயின்வந்துதமகுருகுலம்விளக்கு
மைந்தரசுமன்றுதனகன்கடையிருக்கச்
சிந்தனையொடுந்திறைகொள்செல்வநிதியோடு
மைந்தனொடுமெய்தியவர்மலரடியின்வீழ்ந்தான். (௮)

விராடனைநறுங்குவளைமாலைவியன்மார்பிற்
றராபதியெழுந்தெதிர்தழீஇயினனிருத்திப்
பராவருபெரும்புகழ்படைத்தவருனைப்போ
லராவின்முடிமேலுலகிலார்கொலுளரென்றான். (௯)

அறைமுரசுயர்த்தவனையவனுநனியையா
பொறையுடையவர்க்கலதுபுகழ்புனைதலுண்டோ
†விறையமுதநற்குணமிலாதவரிடத்திற்
குறைதிருவுளத்தினிடைகொண்டருளலென்றான். (௧௦)

இந்நகரிலெய்தியபினைத்துயருமெய்தா
தெந்நகரியென்னநெடுநாளினிதிருந்தேஞ்
‡செந்நெல்வயலூடுமுதுசேலுகளுநாடா
நின்னினுமுயர்ந்ததமர்நீயறியவுண்டோ. (௧௧)

நின்புதல்வருந்திறல்வரூதினியுநீயு
மென்புயமெனச்சமரிலென்னருகுநின்றால்
வன்பினொடுவஞ்சனைசெய்மன்னர்படையாவுந்
தென்புலமடைந்திடமலைப்பலிதுதிண்ணம். (௧௨)

எனமுரசுயர்த்தவனியப்புதலுமகிழா
மனனிடரகற்றினனம்மச்சவளநாடன்
றனயனுநமக்குறுதிதக்கதெனவெண்ணா
வினிமையொடறத்தின்மகனுக்கிவையிசைப்பான். (௧௩)

எத்தரையுநீழல்செய்தனிக்கவிகையெந்தா
யித்தரையுநின்னதுநின்னேவலினர்யாமும
பத்தரையொடீரரைகொள்பல்படையுநினவே
யுத்தரையும்வில்விசயனுக்குரியளென்றான். (௧௪)

---

* அனலின்முதிர்கானகம் என்றும்பாடம்.

† அறிவுமுதனற்குணமடாதவரிடத்தில் என்றும் பாடம்.

‡ சென்னல்வயல் என்றும் பாடம்.

வில்விசயனுத்தரன்விளம்புதலும்வீரங்
கல்விசெய்கலைத்திறன்வனப்புடையகாளா
யில்விசயமெய்க்குணனின்மிக்கவிளையாளென்
*றொல்விசயமுற்றசுதனுக்குரியளென்றான். (கரு)

வேறு.

விசயன்றெகுத்துநயமாகவிராடனெஞ்சுக்
கிசையும்படிசொற்றவரோடுமிருந்தபின்னர்
வசையின்றிவாழுந்தமராகியமன்னர்க்கெல்லாத்
திசையுந்தமதுசெயறூதரிற்செப்பிவிட்டார். (கசா)

வெளிநின்றமாற்றம்வெளியானபின்வெண்டயிர்த்தண்
டுளிநின்றமேனித்துளவோன்றன்றுணைவரோடு
†மளிநின்றமாலைபுனைதங்கையபிமனோடுந்
தெளிநின்றவேற்கைச்சிவேதன்னொடும்வந்துசேர்ந்தான். (கஎ)

கண்டான்மகிழ்ந்தானறன்மைந்தனைக்கைதழீஇயுங்
கொண்டானவன்றனிளையோர்கைகுவித்துவீழ்ந்தா
ரெண்டானவரோடியைபைந்தெண்ணிப்புவனமேழு
முண்டானுரைத்தானுரைத்தக்கவுரைகளெல்லாம். (கஅ)

சிவன்றன்னைநோக்கிச்சிவேதன்றவஞ்செய்தவாறு
மவன்றன்னருளாற்பலவாயுதம்பெற்றவாறு
மிவன்றன்பகைசெற்றதும்யாவுமியம்பியுள்ளங்
கவன்றன்புறுமல்விராடன்றன்கவற்சிதீர்த்தான். (ககூ)

தெம்மைந்தரென்னுங்களபங்களைச்சிங்கசாப
வெம்மைந்தின்வேறற்‡கமைந்தோனொருவீரனனை
தன்மைந்தனைக்கண்டுருகுந்திறற்றந்தைதாளி
லம்மைந்தனும்வீழ்ந்துடன்வைகினனர்வமிக்கே. (உ0)

பாஞ்சாலர்போசகுலமன்னவர்பாண்டிவேந்தர்
வாஞ்சாமனத்தின்வபமத்திரர்மாகதேயர்
பூஞ்சாபவெற்றிக்கொடிக்கேரளர்பொன்னிநாடர்
தாஞ்சால்புடனப்பதிவந்தனர்தானையோடும். (உக)

---

*எல்விசயமென்றும் பாடம்.

† அளிநின்ற நெஞ்சிற் குருமைந்த ரறுவ ரோடும் என்றும்பாடம்.

‡ அமைந்தோரொரு வீர ரான, தம்மைந்த ரைக்கண் டுருகுந்தந் தையர்க டாளி, லம்மைந்த ரும்வீழ்ந் துடன்வைகின ரார்வ மிக்கே என்றும் பாடம். இது, மேற்பதினே ழாஞ் செய்யுளின் பாடபேதத்திற்கியைந்தமை காண்க.

வந்தோகையோடுமிருபாதம்வணங்கிவைகுங்
கந்தோடடர்கைக்கடுங்கோபக்களிற்றுவேந்த
ரந்தோநெடுநாளகன்கானிலடைந்திரென்று
நொந்தோரையாற்றிநுவல்வானந்நுதிகொள்வேலான். (௨௨)

தேனிற்குளித்தசிறையம்புயச்சேக்கையன்னம்
வானிற்பறந்துபுலர்த்தும்புனன்மச்சநாடன்
வேனிற்சிலைவேள்விராடன்புரமேயவன்றே
கானிற்றிரிந்தபரிதாபங்கழிந்ததென்றான். (௨௩)

பண்ணுக்குருகிப்பறையாலகப்பட்டமான்போன்
மண்ணுக்கிறைவன்மொழிதேறிமகன்செய்வஞ்ச
வெண்ணுக்கழிந்தேனினிச்செய்வதென்யாருநீவிர்
கண்ணுக்கிமைபோலிருந்தீர்களைகண்களாக. (௨௪)

அரசர்க்கடைவேயவையின்கணவையனைத்து
முரசக்கொடியோனயமாகமொழிந்தபோது
விரைதுற்றுதார்ச்சல்லியன்முன்புவிளைந்தவெல்லாம்
பரசுற்றகன்றான்பிழைகொன்றபகடுபோல்வான். (௨௫)

கரடக்கடவெங்களியானைகவனமான்றேர்
துரகப்பதாதிப்படைதம்மொடுஞ்சூழ்ச்சியாக
விரகிற்புகுந்துநெறியின்கண்விருந்துசெய்த
வுரகக்கொடியோற்கரும்போரிலுதவிசெய்வான். (௨௬)

நஞ்சோடுசாலுமமரின்கணமர்களென்று
நெஞ்சோடியைந்ததுணையென்றுநினைத்தல்செய்யார்
செஞ்சோறுசாலவலிதென்றுமண்செப்பும்வார்த்தை
வெஞ்சோரிவேலானிலையிட்டனன்மீண்டுமீண்டும். (௨௭)

ஓமஞ்செய்தீயிற்பொரிசிந்தலினுற்றவாசத்
*தூமம்புடைசூழ்புவிவேந்தர்தொடையல்சூழக்
காமன்றிருமைத்துனற்கன்பொடக்கன்னிதன்னை
மாமன்றலங்கேபுரிவித்தனன்மச்சர்கோமான். (௨௮)

---

* தூமங்கமழப் பலவாசத்தொடையல்சூட்டி என்றும்பாடம்.

முன்னிச்சமருக்கொருப்பட்டமுடிமகீபர்
கன்னிக்குவேண்டுங்கடனைபலிகனல்கி
வன்னிப்பொதும்பர்வயின்வைத்தவயங்குசோதி
மின்னிற்றிகழ்வெம்படையாவையுமீண்டுகொண்டார். (உகூ)

சேயோன்விழவுவிழைமேவொடுசிறந்தபின்னர்
மாயோனுமற்றக்குருமைந்தருமன்னர்யாரும்
*போயோதைவிதியுபலாவிபுகுந்துதங்க
ளாயோதனத்துக்குறுநீர்மைகளாயலுற்றார். (௩0)

வெளிப்பாட்டுச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-உஉஅகூ.

விராடபருவ முற்றுப்பெற்றது.

* போயோகையோடும் என்றும் பாடம்.

ஐந்தாவது

உத்தியோகபருவம்.

உலூகன்றூதுச்சருக்கம்.

மீனமாகியுங்கமடமதாகியுமேருவையெடுக்குந்தா
ளேனமாகியுநரவரியாகியுமெண்ணருங்குறளாயுங்
கூனல்வாய்மழுத்தரித்தகோவாகியுமரக்கரைக்கொலைசெய்த
வானநாயகனாகியுநின்றமான்மலரடிமறவேனே. (௧)

வல்லினாலவன்கொண்டமண்மீளவும்வல்லினாற்கொளலன்றி
வில்லினாலமர்மலைந்துகொள்ளுதுமெனல்வேத்துநீதியதன்றாற்
சொல்லினாலொருதூதினிலறியலாஞ்சுயோதனனினையென்று
கல்லினால்வருகன்முகில்விலக்கியகரியமாமுகில்சொன்னான். (௨)

உரியவம்புவியுதிட்டிரன்றனையவனுற்றவர்பலர்காண
வரியவன்பெருஞ்சூதினால்வென்றுபல்லாண்டடிப்படவாண்டான்
றிரியவன்புடன்வாங்குதற்கெண்ணுமித்தீமதிகொடிதென்று
கரியவன்புகல்கட்டுரைகேட்டபின்காமபாலனுஞ்சொன்னான். (௩)

இளையசாத்தகிதமையனைமிகக்கரிதிதயமாயினுநாவில்
விளையுமாற்றநின்றிருவடிவினுமிகவெள்ளையாகியதென்ன
வுளையவார்த்தைகளுரைத்தனனுரைத்தலுமுற்றவரிடுக்கண்கள்
களையுமாப்புயலிருவருமொழிமினுங்கட்டுரையினியென்றான். (௪)

பேருலூகமும்பிணையுநல்கியபெரும்பிறப்புடைப்பரித்திண்டேர்க்
காருலூகலநிகரடிக்களிறுடைக்கண்ணிலாவரசன்பாற்
சீருலூகனைத்தூதுசென்றிவர்மனஞ்செப்பிமீள்கெனப்போக்கி
யோருலூகலமுடன்றவழ்ந்தவன்றனதூர்புகுந்தனனன்றே. (௫)

இந்தவந்தணனீயிசைத்தனவெலாமியல்புடனினிதாக
வந்தவந்தனோடுரைத்தபினவனினதவனிதந்திலனாகின்
முந்தவந்தண்மாமுரசகேதனதிருமுகம்வரவிடுகென்று
வந்தவந்தமன்னவர்களுந்தந்திருமாநகரடைந்தாரே. (௬)

அரசர்போனபின்மால்பணிதவறுறுதம்முனிதனைநோக்கி
முரசகேதனனீயெழுந்தருள்கெனமுனிவனைத்தொழுதேத்தி
விரைசெய்தார்புனைவீடுமனெந்தைமெய்விதுரன்வேதியர்கோவைப்
பரசினேமடியென்றுபின்னுரியசொற்பணித்தருளெனப்போந்தான். (௭)

போனநான்மறைப்புரோகிதனத்தினுபுரிபுகுந்தெரிபைம்பொன்
மானவார்கழற்றிருதராட்டிரனெனுமன்னவைதனிலெய்த
ஞானமாமுனிவரவுகண்டெதிர்கொளாநயந்திருபதம்போற்றி
யானமாமணியாசனத்திருத்தினனரவவெங்கொடியோனே. (அ)

விந்தமன்னதோள்வீடுமன்முதலியோர்விழைவுடன்றொழுதேத்தி
வந்தவாறுரைத்தருள்கென*வறன்மகன்வந்தனைமுதற்கூறி
யந்தணாகியகந்தடர்கடகளிற்றரசனுமவனந்த
மைந்தர்யாவருங்கன்னனுஞ்சகுனியுமனங்கனன்றிடச்சொல்வான். (௯)

ஆண்டுபன்னிரண்டடவியுற்றொருவருமறிவுறுவகைமற்றோ
ராண்டுமன்னியபாண்டுவின்மதலையரைவரும்வெளிப்பட்டா
ராண்டுமன்னர்முன்சூதுபோர்பொருதழிந்தளித்திடுதலினீர்கொண்
டாண்டுவந்தபார்நும்மொழிப்படியவர்க்களித்திரோவளியீரோ. (௧௦)

முன்னமுப்பொருசூதுபோர்மோதுபோர்முனிவுடன்கருதாம
லின்னமும்பொரவேண்டுமேற்பொருதிடுமிலஞ்சியிற்பொலஞ்செங்கா
†லன்னமுங்கிரிமயில்களுமுடன்விளையாடுநல்வளநாட்டீர்
பின்னமும்பிறவாதினிப்பண்டுபோற்பீடுறும்பெருவாழ்வும். (௧௧)

அன்றியேயவருடன்மலைகுவமெனவழிவினைக்கருதாமல்
வென்றியேயினைந்தெதிர்த்திரேலுங்களால்வெல்லுதலரிதம்மா
கன்றியேயடல்வீமனும்விசயனுங்களம்புகிலனைவீரும்
பொன்றியேவிடுகின்றனிர்முனிவர்சொற்பொய்க்குமோபொய்யாதே. (௧௨)

என்றுபூசுரனியம்பலுங்குங்குமமெழிலுறுமிணைமேருக்
குன்றுபூசியதனையபொற்றடம்புயக்குருகுலவயவேந்த
னின்றுபூசைபோலிருந்துழியுரைக்குமீதிகலதன்றிருவர்க்குந்
துன்றுபூசலிற்காணலாமாண்மையுந்தோள்வலிமையுமென்றான். (௧௩)

கல்விதூயநெஞ்சிலாதவச்சுயோதனன்கழறியமொழிகேட்டு
வில்விதூரனிவ்வேதியன்மொழிப்படிமேதினிவழங்காமற்
புல்விதூடகரினுமுணர்விலாதவர்புகலும்வாசகங்கேட்கிற்
செல்விதூரியளாய்விடுஞ்சுற்றமுஞ்சேனையுங்கெடுமென்றான். (௧௪)

திரத்துவாய்மைநீதவறிமற்றவருடன்சேனையுந்திறலுங்கொண்
டுரத்துவாளமருடற்றலோபெரும்பிழையுடன்றனையாமாகிற்
சரத்துவாய்தொறுஞ்சோரிகக்கிடவிடுந்தனஞ்சயன்றனுவென்று
பரத்துவாசனும்பகர்ந்தனன்கிருபனும்பகர்ந்ததேபகர்ந்திட்டான். (௧௫)

காடுமன்னுநின்புதல்வருக்கறுதிசெய்காலமோகழிந்தன்று
நாடுமன்னவகொடாமல்வெஞ்சமர்பொரநாடினையெனினாளைக்
கோடுமன்னுவிலருச்சுனற்கெதிரெவர்குனிக்கவல்லவரென்று
வீடுமன்றிருத்தனயனோடுறுதிகள்வெகுண்டுரைத்தனனன்றே. (௧௬)

*முனிவனும்வரன்முறையடைவாக என்றும் பாடம்.
†அன்னமுங்குருகினங்களும் என்றும் பாடம்.

முன்னமேயுகிரிழந்தவெம்புலியெனமுரணழிமுனிமைந்தன்
றன்னைமற்றவனிடத்துநீகற்றவெஞ்சரத்தின்வென்றமையல்லா
லென்னசேவகங்கொண்டுநீயாரையுமிகழ்ந்துரைப்பதுவென்று
கன்னனுந்திறற்காங்கெயன்றன்னொடுகண்சிவந்துரைசெய்தான். (௧௭)

தூமவெங்கனற்றோன்றியதோகையத்தொடையல்சூட்டியநாளி
னாமவெஞ்சிலைநாணெடுத்தனையடர்நரனொடும்போர்செய்தாய்
தாமவெண்குடைநிருபனையந்தரசரிதர்கொண்டேகாமல்
வீமன்வெஞ்சிறை*மீட்டநாளினுந்திறல்வினைபுரிமுனைவென்றாய். (௧௮)

†ஒருநன்மாநெடுந்தேரினையறிவுறுவுத்தரன்விரைந்தூர
நெருநலானிரைகவர்தருமுகத்தினுநின்றனைநெடும்போது
மருநறுவுமிழ்துழாயவன்றேர்விடமலையுநாள்வயவாளி
வெருநர்மேல்விடாவிசயனைநீயலால்வெல்லவல்லவருண்டோ. (௧௯)

கங்கைமாமகனிவையிவைபுகலவுங்கன்னனைக்கசிந்துட்கொண்
டங்கைகொட்டிநக்கிருந்தவந்தணனையுமவமதித்தெமதேபார்
தங்கள்கானகந்தமதெனப்புகன்றனன்சர்ப்பகேதனனந்தப்
பங்கயாசனமுனிவனுமீண்டுபோய்ப்பாண்டவர்க்கவைசொன்னான். (௨௦)

ஆங்கவர்க்கிவனவணிகழ்ந்தனவெலாமருந்தகையுறச்சொல்லி
யீங்குவந்தெழில்யாதவற்கியம்பலும்யாதவன்மகிழ்வுற்று
வாங்குவெஞ்சிலைவிசயனைவிரைவினில்வரவிடுகெனமீள
வோங்குமாதவலூகனைப்போக்கினானவனும்வந்துரைசெய்தான். (௨௧)

உலூகன்றூதுச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௨௩௧௦.

வாசுதேவனைப்படைத்துணையழைத்த சருக்கம்.

அராவணைதுறந்துபோந்தன்றசோதைகண்களிப்பநீடு
தராதலம்விளங்கவெண்ணெய்த்தாழிசூழ்தரநின்றாடிக்
குராமணங்கமழுங்கூந்தற்கோவியர்குரவைகொண்ட
புராதனன்றனையேயேத்தும்புனிதர்தாள்போற்றிசெய்வாம். (௧)

புரோகிதன்றானுவந்துபோனபின்புயங்ககேது
விரோசனன்சுதனைக்கங்காசுதனொடும்வெகுளிமாற்றித்
துரோணனைமுதலாமிக்கதொன்மதியமைச்சரோடுஞ்
சரோருகசதனமென்னத்தனித்திருந்தெண்ணினானே. (௨)

---

* மீட்டகானிலும் என்றும் பாடம்.

† ஒருதன்மா என்றும் பாடம்.

தேயமெங்கெங்குஞ்செங்கோல்செலுத்துமத்திகிரிவேந்த
ராயவர்தம்மைக்கூட்டவடைவினிற்றாதுபோக்கிக்
காயமுமுயிருமாகிப்பொருடொறுங்கலந்துநின்ற
மாயவன்றன்னைக்கூட்டவளர்மதிற்றுவரைசேர்ந்தான். (௩)

மாடநீள்வீதிமூதூர்வயங்குமாமதிலின்றோற்ற
மேடவிழ்துளபமாலங்கிருந்தனனென்றுகேட்டுச்
சேடன்வந்தனந்தகோடிசெங்கதிர்மணியின்பத்திச்
சூடிகாமகுடத்தோடுஞ்சூழ்ந்ததோர்தோற்றம்போலும். (௪)

கார்க்கடல்வண்ணன்றன்பாற்கண்டுயிலொழிந்துபோந்து
மேற்கடற்றுவரைமூதூர்மேவரும்விரகுநோக்கிப்
போர்க்கடற்பொறிகள்யாவும்பொறுத்தவப்புரிசைதன்னைப்
பாற்கடல்வளைத்ததொக்கும்பன்மலரகழியம்மா. (௫)

ஈண்டுநீவரினுமெங்களெழிலுடையெழிலிவண்ணன்
பாண்டவர்தங்கட்கல்லாற்படைத்துணையாகமாட்டான்
மீண்டுபோகென்றென்றந்தவியன்மதிற்குடுமிதோறுங்
காண்டகுபதாகையாடைகைகளாற்றடுப்பபோன்ற. (௬)

அருள்குடியிருக்குங்கண்ணனவதரித்தனனென்றெண்ணித்
தரணியின்மீதுவந்துதன்னுடைச்சோதிவைகும்
பரமமாஞானபோகப்பதிகுடியிருந்ததன்ன
திருநகர்வீதிபுக்கான்சித்தசித்துணர்விலாதான். (௭)

வந்தமையறிந்துகொற்றவாயிலோர்தம்மைநோக்கி
யந்தன்மாமதலைவந்தாலறிவியாதமைமினென்று
சந்திரனெடுங்கிரிற்பத்தபனனேசரிக்குமாறு
பந்தனையிலாதான்யோகத்துயில்வரப்பள்ளிகொண்டான். (௮)

பொற்புடைப்புனிதன்கோயிற்புறத்தினிலனிகநிற்பச்
சற்பவெம்பதாகைவேந்தன்றடையறத்தனிசென்றெய்தி
யுற்பலவண்ணன்பள்ளியுணர்தருகாறுமிட்ட
சிற்பவண்டவிசினேறித்திருமுடிப்பக்கஞ்சேர்ந்தான். (௯)

வந்திலன்விசயனென்றுவான்றுயில்புரிந்தவண்ணல்
சிந்தனைசெய்யும்வேலைச்சிந்தையிற்கடியதேரோன்
*பந்தனையறுக்கும்பாதபங்கயம்பணிந்துநிற்ப
முந்துறவிழித்துநோக்கிமுகமலர்ந்தருள்செய்தானே. (௧௦)

நின்றவனிருந்தவேந்தன்வரவினைநிகழ்த்தநேமிப்
பொன்றிகழ்படையோனந்தப்பொய்த்துயிற்பாயனீங்கி
மன்றலந்தொடையன்மார்பாவரவெமக்குரைசெயாதென்
னென்றுரநெருங்கப்புல்லியின்சொலாலுவகைசெய்தான். (௧௧)

* வந்துமாலைப்பணிந்துமன்னையும்வணங்கிநிற்ப என்றும் பாடம்.

இருவிரும்வந்தவாறென்னியம்புதிரென்றுவாச
மருவிரிதுளபமாலைமரகதவண்ணன்கேட்பச்
செருவினீயெமக்குவெம்போர்செய்துணையாகவேண்டும்
பொருவிலோவென்றுகொண்டவ்விருவரும்புகன்றகாலை. (கஉ)

உற்றமருதவிசெய்வானுதிட்டிரன்றனக்குமுன்னே
சொற்றனமாங்கணிங்குந்துயிலுணர்பொழுதத்தின்று
விற்றிறல்விசயன்முந்தவிழிக்கிலக்கானனென்று
பற்றறத்துணிந்துசொன்னான்பாண்டவர்சகாயனானன். (கங)

முடைகமழ்முல்லைமாலைமுடியவன்றன்னைப்போரிற்
படையெடாதொழிமினென்றுபன்னகதுவசன்வேண்ட
நெடியமாமுகிலுநேர்ந்துநினக்கினிவிசயபோரி
லடுபடையின்றிச்செய்யுமாண்மையென்னறைதியென்றான். (கச)

செருமலியாழியங்கைச்செழுஞ்சுடர்நின்றென்றேரிற்
பொருபரிதூண்டினிந்தப்பூதலத்தரசரொன்றோ
வெருவருமியக்கர்விண்ணோர்விஞ்சையரெனினுமென்கை
வரிசிலைகுழையவாங்கிமணித்தலைதுமிப்பனென்றான். (கரு)

அடர்சிலைவிசையனிவ்வாறிசைத்தலுமமலன்வஞ்சப்
படவரவுயர்த்தவென்றிப்பார்த்திவன்றன்னைநோக்கி
நடையுடைப்புரவித்திண்டேர்நானிவற்கூர்வதன்றி
யிடைபடைபேவிநும்மோடமர்செயேன்வேந்தவென்றான். (கசு)

எம்மையேயொழியவுள்ளயாதவகுலத்துளோர்க
டம்மையுமெம்முனைதாலகேதுவையுஞ்சேரச்
செம்மையோடுதவியாகக்கொண்டுநீசெல்கவென்று
மும்மையுமுணர்ந்தநாதன்முன்னுறப்பின்னுஞ்சொன்னான். (கஎ)

கிருதவன்மாவக்குரோணிகிளர்படையோடுநின்பால்
வருவனென்றுரைத்துவேண்டுமதுரவாய்மைகளுங்கூறி
மருதுபோழ்ந்திட்டசெங்கண்மாயவன்விடுப்பவேகிக்
கருதலான்வினயமொன்றுங்கண்ணன்முன்னோனைக்கண்டான். (கஅ)

கண்ணனங்கருளிச்செய்தகட்டுரைப்படியேசங்க
வண்ணனுக்கிளவல்சொன்னமாற்றமுமரசன்சாற்றி
யெண்ணருந்தொகைகொள்சேனையாதவகுமரரோடே
யண்ணலேவருகென்றேதியத்தினுபுரிபுக்கானே. (கசு)

கூறியவேகநாகக்கொடியவனகன்றபின்னர்த்
தேறியவிசையினோடுஞ்செழும்புனற்றுவரைநீங்கி
யாறிருநாமத்தோனுமையிருநாமத்தோனு
மூறியகருணைநெஞ்சினுதிட்டிரனிருக்கைபுக்கார். (உ0)

வாசுதேவனைப்படைத்துணையழைத்தசருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள் - உஙங0.

சஞ்சயன்றூதுச்சருக்கம்.

*ஒருகுலத்திடையவதரித்தணிபொதுவர்சிற்குடிலுறைவதோர்
மரகதப்புயறனையெடுத்தொருமகவெனத்தனதிறுதியா
லரிதுபற்றியவலகைசெற்றிடவணிமுலைப்பயநுகர்வுறு
மருதிடைத்தவழ்பொருவில்வித்தகன்மலரடித்துணைவாழ்த்துவாம். (௧)

நஞ்சநாகமுயர்த்தமீளிதனகர்புகுந்துழிநண்பறக்
கஞ்சமாமனைவென்றவன்செயல்கண்ணிலானொடுரைத்தபின்
வஞ்சமைந்தரொடுயவிமீளவுமண்கொடாதகுறிப்பினன்
சஞ்சயன்றனைவருகவென்றிருதாள்பணிந்திவைசாற்றுவான். (௨)

குருகுலத்தரசர்க்குறுந்தொழில்கூறுநற்குருவாதலா
லிருகுலத்தினுமுற்பவித்தவரென்றுநின்சொன்மறுத்திடார்
பெருகுலைக்கனலன்னபிள்ளைகள்பேசுகின்றபிணக்கறுத்
தொருகுலத்தவருததிசூழ்புவியாளுமாறினியுட்கொளாய். (௩)

அறத்தின்மைந்தனுமிளைஞரும்புவியாசையற்றகலடவியின்
புறத்திருந்துதவஞ்செயும்படிபுரிவுரைத்தருள்போயெனச்
செறுத்திடுந்திருதராட்டிரன்றனசிந்தையொப்பனசெப்பினான்
மறுத்திலன்பெருமுனியுமற்றவர்பாடிவீடுறமன்னினான். (௪)

சென்றவம்முனிசெலவறிந்தெதிர்சென்றுதத்தமசென்னிதா
ளொன்றவைத்துவணங்கியாசியுரைக்குமெய்ப்பயனுற்றபின்
மன்றலந்துளவோனுநல்லறன்மைந்தனுந்திறலநுசருந்
துன்றுபொற்றவிசினிலிருத்தவிருந்துசில்லுரைசொல்லுவான். (௫)

புடவியாளுதல்விட்டுநன்னெறிபுரியுமாதவர்தம்மினீ
ரடவியாளவும்வல்லிராயினி†ராதலானலமானதே
மடவியார்நிலைபற்றசெல்வமகிழ்ந்துவாழ்தினமாறினால்
விடவியாரழலுற்றெனப்பெருநரகிலாழ்வுறவீழ்வரால். (௬)

உற்றயோனிகடம்மிலுற்பவியாமன்மானுடவுற்பவம்
பெற்றுவாழுதலரிதுமற்றதுபெறினுமாயைசெய்பெருமயக்
கற்றுஞானிகளாய்விளங்குதலரிதுவீடுறுமறிவுபின்
பற்றுமாறரிதிங்குனக்கிவைபண்பினோடுபலித்தவே. (௭)

திகந்தவெல்லையுறப்பெரும்புவிசெல்லநேமிசெலுத்தினு
மகந்தையோடமராடவெண்ணிடுமரவகேதனனுங்களோ
டுகந்துவாழவொருப்படானினியுற்றதாயமுமுரிமையு
மிகந்துமாதவமுயறலேகடனீறிலாவுலகெய்தவே. (௮)

* ஒருதலத்திடை என்றும் பாடம்.

† ஆதலாலறமானதே என்றும் பாடம்.

பராசரன்குலமாகினும்பெறு* பயனிறுக்கிலர்பாரிலே
துராசரன்பிலரென்சொலின்றுசுயோனாதியர்கைக்கொளார்
சராசரங்களனைத்துமாகியசுகனையேநிகர்தன்மையாய்
நிராசர்நின்னளவிற்குறித்தவையுறுதியென்றினிநீகொள்வாய். (௯)

பாரிலாசையுநின்னிராசபதத்திலாசையுமன்னுவெம்
போரிலாசையுநேயமங்கையர்போகமன்பொடுபுதிதுனுஞ்
சீரிலாசையும்விட்டுநன்னெறிசேரவுன்னுதிநீயெனத்
தூரிலாசையறத்துறந்தருள்சுருதியாமுனிசொல்லவே. (௧௦)

செம்மையல்லதுவிரகிலாதுதெரிந்தமேதகுசிந்தையான்
மும்மையுந்தெரிமுனியுரைத்தசொன்முன்னியொண்குறுமுறுவல்செய்
திம்மையேவசைநிற்கவீடுறவெண்ணிநீபுகலென்னினும்
வெம்மையேழ்நரகுந்தனித்தனிவீழ்வதேநலமிகவுமே. (௧௧)

நின்னறத்தினினீர்மைதன்னைவிளங்குமாறுநிகழ்த்தினு
மன்னறத்தினைவிட்டுநல்லறமன்னரானவர்முயல்வரோ
வென்னறத்தினினின்றுதெவ்வரையிருவிசும்பினிலேற்றினாற்
பின்னறத்தினினினைவுகூருமெனக்கனன்றிவைபேசினான். (௧௨)

முனியுமப்பெருமுரசுயர்த்தவனும்புகன்றனமுன்னிநா
மினியுரைப்பதுகடனெனத்துணைவிழிசிவப்பெழவெழிலியின்
றனிதமுற்றெழுவுருமின்வெஞ்சினமூளமற்றிவைசாற்றுவான்
கனியெனத்தினகரனைவெளவியகடவுண்மாருதிதுணைவனே. (௧௩)

எமக்குநீபிரமப்பெருங்குருவெங்களோடெதிராகுவார்
தமக்குமொக்குமொருமையிலேயருள்சாரவோதுதறக்கதோ
வமர்க்குநென்னலுலூகனாமனுடைறுதியிட்டனனரவினஞ்
சுமக்குமேதினியாளுமேவோர்வினைவேறுபட்டதுசொல்வரோ. (௧௪)

இடக்கணாகவலக்கணாகவிரண்டுமொக்குமெனாமலே
பிடர்க்கணேமதியானகண்ணிலிபெற்றியல்லனபேசினான்
கடற்பெரும்படைகூடிநாளையணிந்தவெய்யகளத்தினு
னடற்கடுங்கதையாலடித்திடுமதிசயந்தனையையகேள். (௧௫)

உவந்துநீமொழிதவமருந்தவமல்லவொன்னலருடலுகுஞ்
சிவந்தசோரியின்மூழ்கிமாழ்குசிரங்கள்போய்நடமாடுமக்
கவந்தகானகமேவியூடுறுதீயவெவ்வினைகளைவதே
தவந்தனிற்றலையானவீடுறுதவமெமக்கிதுசாலுமே. (௧௬)

போரதாகியபூமிசாலையில்வேலைசூழ்தருபூமியின்
பாரமானசுயோதனாதியரென்னுநூறுபசுப்படுத்
தீரமானதயாமனத்தொடிராயசூயமகஞ்செயும்
வீரமாமுனிதன்னைவெங்களவேள்வியும்புரிவிப்பனே. (௧௭)

* பயனினைக்கிலர் என்றும்பாடம்.

நேமியானிவைசொன்னவீரனைநிற்கவென்றுநிறுத்தியுட்
காமியாதமுனிக்குநல்லுரைகட்டுரைத்தனனிவர்களிப்
பூமியாளுதலவர்களுக்கமருலகமேறுதல்புரிதவம்
யாமியாதுமுரைத்துமென்பயனீயெழுந்தருளென்னவே. (கஅ)

இருந்தபேரவைவிட்டுமற்றவரிதயமிப்படியெனநினைந்
தருந்தவக்கடன்மீளவத்தினபுரியடைந்தவனிபனுடன்
பரிந்தறன்றருகாளைசொற்றதும்வீமனின்றுபகர்ந்ததுங்
குருந்தொசித்தருண்முகிலுரைத்ததுமுண்மையாம்வகைகூறினான். (கக)

சஞ்சயன்றூதுச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-உநசக.

கிருட்டிணன்றூதுச்சருக்கம்.

பேர்படைத்தவிசயனுடன்மும்மைநெடும்பிறவியினும்பிரியானாகிச்
சீர்படைத்தகேண்மையினாற்றேரூர்தற்கிசைந்தருளுஞ்செங்கண்மாலைப்
பார்படைத்தசுயோதனற்குப்படையெடேனமரிலெனப்பணித்தகோவைக்
கார்படைத்தநிறத்தோனைக்கைதொழுவார்பிறவாழிக்கரைகண்டாரே. (க)

ஞானமன்பொடினிதுரைத்துஞானமுனியகன்றதற்பின்சாமபேத
தானதண்டமெனநிருபர்தருமமுறைமையிற்புகலுந்தகுதிநோக்கித்
தூநறுந்தண்டுளவோனைத்தூதுவிடுவதற்கெண்ணிச்சுனைகடோறு
மேனலந்தண்கிரிப்பெருந்தேனிறைக்குமெழிற்குருநாடனியம்புவானே. (உ)

செஞ்சொன்முனிசஞ்சயனுக்கியாமுரைத்தகருமமுமுன்சென்றகாலை
யஞ்சொன்முனிபுரோகிதனுக்கவனிசைத்தகருமமுநீயறிதியன்றே
நஞ்சுதனைமிகவருந்திநன்மருந்துமந்திரமும்விரைந்துநாடா
தெஞ்சினர்தங்களைப்போலவிருக்குமதோயார்மனத்துமிருக்குஞ்சோதி. (ங)

அருஞ்சமரம்புரியும்வகையவர்துணிந்தாராயினுமறமொன்றின்றிப்
பெருஞ்சமரம்விளைக்குமதுகடனன்றென்றருள்வெள்ளம்பெருகக்கூறும்
பொருஞ்சமரநெடுமுரசப்பூங்கொடிபோன்றனைநோக்கிப்*புயப்போர்வாண
னிருஞ்சமரந்தொலைத்தபிரானிளைஞரையுமுடனிருத்தியியம்புவானே. (ச)

செய்வராலினமுகளுந்திருநாடுபெறநினைவோசென்றுமீளப்
பைபயராவருங்கானிற்பயின்றுதிரிதரநினைவோபகைத்தபோரி
லுய்வராரெனவிரைவினுருத்தெழுந்துபொரநினைவோவுண்மையாக
வைவராமவனிபர்க்குநினைவேதென்றருள்புரிந்தானமரர்கோமான். (ரு)

வயிரமெனுங்கடுநெருப்பைமிகமூட்டிவளர்க்கினுயர்வரைக்காடென்னச்
செயிரமரில்வெகுளிபொரச்சேரவிருதிறத்தேமுஞ்சென்றுமாள்வோங்
கயிரவமுந்தாமரையுங்கமழ்பழனக்குருநாட்டிற்கலந்துவாழ
வுயிரனையாய்சந்துபடவுரைத்தருளென்றானறத்தினுருவம்போல்வான். (சா)

*புயல்போல்வாணன் என்றும் பாடம்.

அரவுயர்த்தோனுடன்மறுசூதாடிநீர்வென்றவந்நாளவன்றான்சொன்ன
விரதமொழிதவிராமல்வெங்கானம்போய்மீண்டீர்வெய்யோனுங்கள்
குருநிலத்திற்பாதியினிக்கொடாதிருந்தாலங்கவனைக்கொன்றுபோரி
லிருநிலத்தையாளவினித்துணிவதேகடனென்றானெம்பிரானே. (எ)

குரவரையுங்கிளைஞரையுங்குலத்துரியதுணைவரையுங்கொன்றுபோர்வென்
றரவநெடுங்கடலாடையவனியெலாந்தனியாளுமரசுதன்னிற்
கரவுறையுமனத்தாதைமுனிக்குரைத்தமொழிப்படியேகானந்தோறு
மிரவுபகற்பலமூலசாகநுகர்ந்துயிர்வாழ்தலினிதுநன்றே. (அ)

கோதிலானிந்தமொழிகூறுதலுமாமாயன்கூறலுற்றான்
மோதமருக்கிளைத்துநீர்மொய்த்தபெருங்கானகத்தேமுடுகிச்சென்றாற்
பூதலத்தோரேசாரோபுகன்றபெருவஞ்சினமும்பொய்த்திடாதோ
நீதியோவெனவுரைத்தானங்கதற்குநிகழ்தருமனிகழ்த்தலுற்றான். (கூ)

நீதூதுநடந்தருளியெமதுகிளைவவர்க்குரைத்தானினைவின்வண்ணந்
தாதூதியளிமுரலுந்தண்பதியுந்தாயமுந்தான்றாரானாகின்
மீதாதுவளைக்குலமும்வலம்புரியுமிகமுழங்கவெய்யகாலன்
மாதூதர்மனங்களிக்கப்பொருதேனினும்பெறுவனிதுவசையுமன்றே. (கo)

முந்தூர்வெம்பணிக்கொடியோன்மூதூரினடந்துழவர்முன்றிற்றேறு
நந்தூரும்புனனாட்டின்றிறம்வேண்டுநாடொன்றுநல்கானாகி
லைந்தூர்வேண்டவையிலெனிலைந்நிலம்வேண்டவைமறுத்தாலடுபோர்வேண்டு
சிந்தூரத்திலகநுதற்சிந்துரத்தின்மருப்பொசித்தசெங்கண்மாலே. (கக)

மூத்தோன்மற்றிவ்வுரைப்பவிளையோன்வெஞ்சினமனத்தின்மூளமூள
நாத்தோமினுரைபதறக்கதுமெனவுற்றெழுந்திறைஞ்சிஞாலமெல்லாம்
பூத்தோனேபூந்தவிசிற்பூவைபுணர்மணிமார்பாபுன்மையாவுந்
தீர்த்தோனேயூனமிலான்மானமிலாதுரைப்பதற்கென்செய்வதென்றான். (கஉ)

விரிகுழற்பைந்தொடிநாணிவேத்தவையின்முறையிடுநாள்வெகுளேலென்று
மரபினுக்குநமக்குமுலகுள்ளளவுந்தீராதவசையேகண்டா
யெரிதழற்கானகமகன்றுமின்னமும்வெம்பகைமுடிக்கவிளையாநின்றா
யரவுயர்த்தோன்கொடுமையினுமுரசுயர்த்தோயுனதருளுக்கஞ்சினேனே. (கங)

கானுளவுனைவிடுத்தகண்ணிலாவருளிலிதன்காதன்மைந்தன்
றானாளுந்தரணியெல்லாமொருகுடைக்கீழ்நீயாளத்தருவனின்றே
மேனாணம்முரிமையறக்கவர்ந்தபெருந்துணைவனுனைவெறாதவண்ணம்
வானாளவானவர்கோன்றன்பதமற்றவன்றனக்கேவழங்குவேனே. (கச)

போர்முடித்தானமர்பொருதுபுலம்புறுசொற்பாஞ்சாலிபூந்தண்கூந்தற்
கார்முடித்தானிளையோர்முன்கழறியவஞ்சினமுடித்தான்கடவுட்கங்கை
*நீர்முடித்தானிரவொழித்தநீயறியவசையின்றிநிலைநின்றோங்கும்
பேர்முடித்தானிப்படியேயார்முடித்தாரிவனுடனேபிறப்பதோநான். (கரு)

*நீர்முடித்தானவனறிய நீயறிய என்றும் பாடம்.

அணிந்துவருஞ்சமரிலெதிர்ந்தரவுயர்த்தோனுடனரசருடலமெல்லாந்
துணிந்திரண்டுபடப்பொருதுதொல்லையுலகரசாளத்துணிவதல்லாற்
றணிந்தறமுங்கிளையுறவுங்கொண்டாடித்தானின்னந்தனித்தூதேவிப்
பணிந்திரந்துபுவிபெற்றுண்டிருப்பதற்கேதுணிகின்றான்பட்டபாடே. (௧௬)

பரிவுடன்மற்றிவைகூறும்பவனகுமாரனைமலர்க்கைபணித்துநோக்கிக்
குருகுலத்தோர்போரேறேகுற்றமதுபார்க்குங்காற்சுற்றமில்லை
யொருகுலத்திற்பிறந்தார்களுடன்வாழும்வாழ்வினைப்போலுறுதியுண்டோ
விருவருக்கும்வசையன்றோவிருநிலங்காரணமாகவெதிர்ப்பதென்றான். (௧௭)

உரிமையுடன்றம்பியரன்றுணர்வறியாமையினவைக்கணுரைத்தமாற்றம்
பரிபவமோகேட்டோர்க்குப்பரிபவமென்பதுபிறராற்பட்டாலன்றோ
கருதிலிதுமற்றெவர்க்குமொவ்வாதோகண்மலரிற்கைபடாதோ
பொருதொழிலுங்கடைநிலத்திற்கிடந்ததேயெனமொழிந்தான்புகழேபூண்பான்.

சூடுகின்றதுழாய்முடியோன்சுரருடனேமுனிவர்களுஞ்சுருதிநான்குந்
தேடுகின்றபதஞ்சிவப்பத்திருநாடுபெறத்தூதுசெல்லவேண்டாம்
வாடுகின்றமடப்பாவைதன்வரமுமென்வரமும்வழுவாவண்ணங்
கோடுகின்றமொழியவன்பாலெனைத்தூதுவிடுகவினிக்கொற்றவேந்தே. (௧௯)

மலைகண்டதெனவென்கைம்மறத்தண்டின்வலிகண்டுமகவான்மைந்தன்
சிலைகண்டுமிருவர்பொருந்திறல்கண்டுமெமக்காகத்திருமானின்ற
நிலைகண்டுமிவள்விரித்தகுழல்கண்டுமிமைப்பொழுதினேரார்தம்மைக்
கொலைகண்டுமகிழாமலவன்குடைக்கீழுயிர்வாழக்குறிக்கின்றாயே. (௨௦)

வெம்புயவீமனும்வெகுண்டு மீண்டுமிவையெடுத்துரைப்பமேகமேனிப்
பைம்பொனெடுந்தனித்திகிரிப்பரந்தாமன்கருணையுடன்பரிந்துநோக்கி
யம்புவியின்முன்பிறந்தோரரசுநெறிமுறையுரைத்தாலதுகேளாமற்
றம்பியருமறுப்பரோதலைவவினிக்கடுங்கோபந்தணிகவென்றான். (௨௧)

மைக்காலமுகிலூர்திவானவர்கோன்றிருமதலைவணங்கிநின்று
முக்காலங்களு*முணருமுகுந்தனுக்குமுதல்வனுக்குமொழிவான்மன்னோ
வக்காலம்பொறுத்தவெலாமமையாமலின்னமிருந்தறமேசொன்னா
லெக்காலம்பகைமுடித்துத்திரௌபதியுங்குழன்முடிக்கவிருக்கின்றாளே. (௨௨)

தேவராயினும்பழையதயித்தியராயினுமற்றுஞ்செப்புகின்றோர்
யாவராயினுமெதிர்ந்தோருயிருணவென்றிருப்பதுவேயென்கைவாளி
மூவராயவர்களுக்குமுதல்வனாகியமூர்த்திமுகிறோய்பூக
மீவராலுகளும்வயற்குருநாடென்னிவனவன்பால்வேண்டுமாறே. (௨௩)

தீண்டாதகற்புடையசெழுந்திருவைத்துகிலுரியச்செயலொன்றின்றி
நீண்டானேகரியானேநிமலாவென்றரற்றினளாய்நின்றுசோர
மாண்டார்போலதுகண்டுமன்னவையில்யாமிருந்தமாசுதீர
வேண்டாவோவேண்டுவதுமேம்படுநல்லறமேயோவேந்தர்வேந்தே. (௨௪)

---

*உணரு முதல்வனுக்கு முருகமன மொழிவான் என்றும் பாடம்.

பொன்னாருந்திகிரியினான்போனாலும்பொறைவேந்தன்புகன்றவெல்லாஞ்
சொன்னாலுமவன்கேளான்விதிவலியாற்கெடுமதிகண்டோன்றாதன்றே
யெந்நாளுமுவர்நிலத்தினென்முளைவித்திடினும்விளைவெய்திடாது
பன்னாகந்தனக்கமிர்தங்கொடுத்தாலும்விடமொழியப்பயன்கொடாதே. (உரு)

பார்த்தனிவைபுகன்றிறைவன்பணித்தருளவிருந்ததற்பின்பரிவினோடுந்
தீர்த்தனிருபதமிறைஞ்சித்தருமனையுங்கைதொழுதுசினங்கொள்வேலா
னீத்தநெடுங்கடலெழுபாரடலைவர்பெறுவரெனுமிகழ்ச்சிபொய்யோ
கோத்தருமந்தனிலாண்மைகூறாதோகூறுகநீகொற்றவேந்தே. (உசு)

கேவலந்தீர்வலியபகைகிடக்கமுதற்கிளர்மழைக்குக்கிரியொன்றேந்து
கோவலன்போயுரைத்தாலுங்குருநாடுமரசுமவன்கொடுக்கமாட்டா
னாவலம்பூதலத்தரசர்நாடிரந்தோமெனநம்மைநகையாவண்ணங்
காவலன்றன்படைவலியுமெமதுதடம்புயவலியுங்காணலாமே. (உஎ)

அன்னநடையரம்பைதனையவுணர்கவர்ந்திடவிமையோரரசுக்காக
முன்னமவருடன்பொருதுசிறைமீட்டானங்குலத்துமுதல்வனன்றோ
மன்னவையில்யாங்காணமடவரலைத்துகிலுரிந்தவலியோன்றன்பா
லின்னமிரந்தவன்குடைக்கீழிருந்தக்காநம்மையுலகென்சொலாதே. (உஅ)

கானகம்போய்க்கரந்துறைந்துகடவநாட்கழித்ததற்பின்கானநீங்கி
யீனமிலாவகைவந்தார்நந்துணைவரெனச்சிறிதுமிரங்கானாகின்
மாநகரும்வளநாடுமுரிமையுந்தன்மொழிப்படியேவழங்கானாகிற்
றானறியாதவன்பிறர்போய்க்கற்பித்தாலறிவனோதரணிவேந்தே. (உகூ)

நகுலனிவையுரைத்ததற்பினன்றெனக்கையமைத்தருளிநகுலன்சொல்லு
மிகல்விசயன்றன்மொழியுந்திறல்வீமனியம்பியதும்யாவுங்கேட்டோம்
புகலரியவுணர்வுடையோய்புகழுடையோய்திறலுடையோய்புகனீயென்ன
முகிலனையதிருமேனிமுகுந்தனுக்குமனமுருகமொழிகின்றானே. (ஙo)

சிந்தித்தபடிநீயுஞ்சென்றாலென்னொழிந்தாலென்செறிந்தநூறு
மைந்தர்க்குமுதல்வனிலம்வழங்காமலிருந்தாலென்வழங்கினாலென்
கொந்துற்றகுழலிவளுமுடித்தாலென்விரித்தாலென்குறித்தசெய்கை
யந்தத்தின்முடியும்வகையடியேற்குத்தெரியுமோவாதிமூர்த்தி. (ஙக)

முருகவிழ்க்கும்பசுந்துளபமுடியோனேயன்றலைகைமுலைப்பாலுண்டு
மருதிடைச்சென்றுயர்சகடம்விழவுதைத்துப்பொதுவர்மனைவளர்ந்தமாலே
யொருவருக்குந்தெரியாதிங்குன்மாயையானறிவேனுண்மையாகத்
*திருவுளத்துக்கருத்தெதுவோவதுவெனக்குங்கருத்தென்றான்றெய்வமன்னான். ()

இவ்வண்ணஞ்சாதேவனியம்புதலுநகைத்தருளியிகலோர்சொன்ன
வவ்வண்ணம்புகலாமல்விரகுரைத்தானிவனென்னவவனோடாங்கோர்
பைவண்ணமணிக்கூடந்தனிலெய்திப்பாரதப்போர்பயிலாவண்ணா
†மெவ்வண்ணஞ்சொல்லுகநீயுபாயமெனத்தொழுதுரைப்பானிகல்கொள்வேலான்.

---

* திருவுளத்திலெதுநினைந்தாயது என்றும் பாடம்.

†உய்வண்ணஞ்சொல்லுகநீ யுபாயமெனத் தொழுதுரைப்பா னுரங்கொள் வேலான் என்றும் பாடம்.

வேறு.

நீபாரதவமரில்*யாவரையுநீறுக்கிப்
பூபாரந்தீர்க்கப்புரிந்தாய்புயல்வண்ணா
கோபாலாபோரேறேகோவிந்தாநீயன்றி
மாபாரதமகற்றமற்றூர்கொல்வல்லாரே. (௬௪)

பாராளக்கன்னனிகற்பார்த்தனைமுன்கொன்றணங்கின்
காரார்குழல்களைந்துகாலிற்றளைபூட்டி
நேராகக்கைப்பிடித்துநின்னையும்யான்கட்டுவனேல்
வாராமற்காக்கலாமாபாரதமென்றான். (௬௫)

முன்னநீகூறியவையெல்லாமுடித்தானு
மென்னைநீகட்டுமாறெவ்வாறெனமாய
னுன்னைநீதானுமுணராதாயுன்வடிவந்
தன்னைநீகாட்டத்தளைந்திடுவன்யானென்றான். (௬௬)

மாயவனுமன்பன்மனமறிவான்கட்டுகவென்
றாயவடிவுபதினாறாயிரங்கொண்டான்
றாயவனுமூலமாந்தோற்றமுணர்ந்தெவ்வுலகுந்
தாயவடியிணைகடன்கருத்தினாற்பிணித்தான். (௬௭)

நீதேவனென்றறிந்துநெஞ்சாற்றனைக்கட்டுஞ்
சாதேவன்கண்களிக்கத்தானேயாய்முன்னின்றான்
பூதேவருங்கனகப்பூங்காநிழல்வைகு
மாதேவருந்தேடிக்காணுமலரடியோன். (௬௮)

அன்பாலின்றென்னையறிந்தேபிணித்தமைநன்
றென்பாதந்தன்னையினிவிடுகவென்றுரைப்ப
வன்பாரதப்போரில்வந்தடைந்தேமைவரையு
நின்பார்வையாற்காக்கவேண்டுநெடுமாலே. (௬௯)

என்றென்றிறைஞ்சியிருதாமரைத்தாளி
லொன்றுங்கதிர்முடியாற்கோமென்றுரைத்தருளி
யின்றிங்கிருவேமுமிப்போதுரைத்தமொழி
யொன்றும்பிறரறியவோதாதொழிகென்றான். (௭0)

ஆண்டிருந்தவவைநீங்கியறிவுடையோரிருவோரும்
பாண்டவர்கண்முன்னெய்திப்பழுதில்புகழ்ப்பாஞ்சாலி
நீண்டகருங்குழல்சோரநின்றாளைமுகநோக்கி
யீண்டவரிலிளையோனுஞ்சந்துமிகவினிதென்றான். (௭௧)

---

*ஐவரையுநோக்கிப், பூபாரந்தீர்க்கப்பிறந்தாய் என்றும் பாடம்.

தருமனுக்குங்கருத்திதுவேதமருடன்போர்புரியாம
லிருநிலத்திலுடன்வாழ்தலெனக்குநினைவென்றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோரமலர்மறந்தகுழல்சோர
விரைமலர்ச்செஞ்சேவடிக்கீழ்வீழ்ந்தழுதாண்மின்னனையாள். (சஉ)

சாலக்கனகன்றனிமைந்தனைமுனிந்த
காலத்தவனறைந்தகற்றூணிடைவந்தாய்
மூலப்பேரிட்டழைத்தழும்மதமால்யானைக்கு
நீலக்கிரிபோன்முன்னின்றநெடுமாலே. (சங)

கற்றைக்குழல்பிடித்துக்கண்ணிலான்பெற்றெடுத்தோன்
பற்றித்துகிலுரியப்பாண்டவரும்பார்த்திருந்தார்
கொற்றத்தனித்திகிரிக்கோவிந்தாநீயன்றி
யற்றைக்குமென்மானமார்வேறுகாத்தாரே. (சச)

மன்றிலழைத்தெனக்குமாசளித்தமன்னவன்பாற்
சென்றுதமக்கைந்தூர்திறல்வீரர்பெற்றிருந்தா
லன்றுவிரித்தவருங்கூந்தல்வல்வினையே
னென்றுமுடிப்பதினியெம்பெருமானேயென்றாள். (சரு)

தண்டிருந்ததிவன்கரத்திற்றனுவிருந்ததவன்கரத்தில்
வண்டிருந்தபூங்குழன்மேன்மாசிருந்ததெனவிருந்தாள்
கண்டிருந்தீரெல்லீருங்கருதலர்பாலூர்வேண்டி
யுண்டிருந்துவாழ்வதற்கேயுரைக்கின்றீருரையீரே. (சசூ)

சண்டமுகிலுருமனையசராசந்தன்றனைக்கஞ்சி
வண்டுவரையரணகவட்மதுரைகைவிட்ட
திண்டிறன்மாதவன்மதியோதிகழ்தருமன்றன்மதியோ
பண்டுமவர்கருத்தறிந்துபார்போய்வேண்டுவதென்றான். (சஎ)

சாத்தகிநின்றிவையுரைப்பச்சடைக்குழலாளழுதரற்றக்
கோத்தருமன்முதலாயகுலவேந்தரைவரையும்
பார்த்தருளியருள்பொழியும்பங்கயக்கணெடுமாலு
மேத்தரியபெருங்கற்பினிளையாளுக்கிவையுரைப்பான். (சஅ)

தொல்லாண்மைப்பாண்டவர்க்குத்தூதுபோய்மீண்டதற்பி
னல்லாயுன்பைங்கூந்தலுனேமுடிக்கின்றே
னெல்லாருங்காணவினிவிரிப்ப*தெண்ணரிய
புல்லார்தமந்தப்புரமாதர்பூங்குழலே. (சகூ)

மைக்குழலாய்கேளாய்மருவாருடற்புலத்துப்
புக்குழலாகுங்கொழுவாம்போர்வாளபிமன்னுத்
தொக்குழலும்வெங்கோன்மைத்தொல்வேந்தர்தங்குலமு
மிக்குழலுஞ்சேரமுடியாதிராதெனன்றான். (ருO)

---

* எண்ணியவப், புல்லார் என்றும் பாடம்.

பெண்ணீர்மைகுன்றாப்பெருந்திருவின்செங்கமலக்
கண்ணீர் துடைத்திருதன்கண்ணிற்கருணையெனுந்
தெண்ணீரினாற்பொருந்தத்தேற்றினான்சாற்றுகின்ற
மண்ணீரனலனிலம்வான்வடிவாமாமாயன். (௫௧)

துன்றுபிணியோர் துறந்தோரடங்காதோர்
கன்றுசினமனத்தோர்கல்லாதவரிளையோ
ரொன்றுமுறைமையுணராதவர்மகளி
ரென்றுமிவர்*மந்திரத்தினெய்தப்பெறாதாரே. (௫௨)

என்னக்கழறியிருந்தோருரைதவிர்த்து
நின்னொப்பவரில்லாய்நீயேகெனவுரைப்ப
மன்னர்க்குமன்னவன்பான்மாயோனுந்தூதாகிப்
பொன்னுற்றநேமிப்பொருபரித்தேர்மேற்கொண்டான். (௫௩)

சங்குமணிமுரசுஞ்சல்லரியுந்தாரைகளு
மெங்குமுழங்கவெழில்வெண்குடைநிழற்றப்
பொங்குகவரிபுடையிரட்டவெண்ணில்லா
வங்கமொருநான்குமவனிபருந்தற்சூழ. (௫௪)

கல்வரையும்பாலைக்கடுஞ்சுரமுங்கான்யாறு
நல்வரையுநீர்நாடுநாளிரண்டிற்சென்றருளித்
†தொல்வரையகோபுரமுநீண்மதிலுஞ்சூழ்ந்திலங்கு
மல்வரையதோளான்வளமாநகர்கண்டான். (௫௫)

வேறு.

மேவுசெந்துகிர்த்திரளுமாமரகதவிதமுங்
கோவைவெண்கதிர்த்தரளமுநிரைநிரைகுயிற்றித்
தாவும்வெம்பரித்தேரினான்றனக்கெதிர்சமைத்த
காவணங்களிற்றோன்றினபச்சிளங்கமுகம். (௫௬)

வம்புலாமகில்சந்தனம்வருக்கைமாகந்தஞ்
சம்பகந்தமாலம்பலதிசைதொறுந்தயங்க
வும்பர்நாயகன்வரவுகண்டுளங்களிகூர்ந்து
தும்பிபாடினதோகைநின்றாடினசோலை. (௫௭)

அணிகொளத்தினாபுரியெனுமணங்குசெந்திருவின்
கணவனுக்கெதிர்காட்டுநீராசனங்கடுப்ப
மணமிகுத்தசெந்தாமரைமலருடன்சிறந்த
புணரியிற்பெரும்புனலையுங்கொள்வனபொய்கை. (௫௮)

---

* மந்தணத்தின் என்றும் பாடம்.

† தொல்வரைசேர் கோபுரமும் என்றும் பாடம்.

நடந்தநாயகன்கோலமாய்வேலைசூழ்ஞால
மிடந்தநாளிடையதுவழியாகவந்தெழுந்து
படர்ந்தபாதலகங்கையப்*படர்மதில்சூழ்ந்து
கிடந்ததாமெனச்சிறந்ததுதாழ்புனற்கிடங்கு. (௫௯)

அடிநிலத்திலேபடிவனவிடிமுகிலனைத்து
முடிநிலத்தினுக்குடுபதத்தினுமுடிவில்லை
நெடியசக்கரப்பொருப்பையுநிகரிலாவிதற்கோர்
படிவகுத்ததாமெனும்படிபரந்ததுபுரிசை. (௬௦)

பகலினுங்கடும்பரிதிதன்கதிர்பரப்பாம
லிகலியெங்கணுமெறிந்துகால்பொருதலி†னெற்றிப்
புகலுகின்றமந்தாகினித்தரங்கமேபோல
வகல்விசும்பிடைமிடைவனநெடுங்கொடியாடை. (௬௧)

புயங்கபூமியோபுரந்தரற்கமைத்தபொன்னுலகோ
தயங்குசெல்வநீடளகையோநிகரெனுந்தரத்த
வியங்குகார்வரைமுழைதொறுமெழுவனபோல
வயங்குகாரகினறும்புகையுயிர்ப்பனமாடம். (௬௨)

மன்னர்வேழமுஞ்சேனையுமெதிரெதிர்மயங்கப்
பின்னுமுன்னுமெம்மருங்கினும்பெயரிடம்பெறுமற்
றுன்னிநின்றவரேகுமினேகுமின்ெருடர
வென்னுமோசையேயுள்ளனவீதிகளெல்லாம். (௬௩)

வரையெலாம்பலவனமெலாங்கடலெலாம்வளைந்த
தரையெலாம்படுபொருளெலாந்தனித்தனிகுவித்த
நிரையெலாங்கவராவணநீர்மையைப்புலவோ
ருரையெலாந்தொடுத்துரைப்பினுமுவமைவேறுளதோ. (௬௪)

விரவுகான்மலரினும்பலவீரரின்விதங்கள்
பரவைவெண்மணலினும்பலபுரவியின்பந்தி
யிரவில்வானமீனினும்பலயானையினீட்ட
நிரைகொள்கார்த்துளியினும்பலதேரணிநிலையே. (௬௫)

ஆசிலாமறையந்தணராலயமொருபான்
மாசிலாமுடிமன்னவர்மாளிகையொருபாற்
காசிலாமதியமைச்சர்தங்கடிமனையொருபாற்
பேசிலாவளவணிகர்தம்பேரிடமொருபால் (௬௬)

மங்கலந்திகழ்மனையெலாம்வலம்புரியோசை
திங்கடோய்நெடுந்தலமெலாஞ்செழுஞ்சிலம்போசை
யங்கண்மாநகரனைத்துமும்முரசதிரோசை
யெங்கணுங்கடவுளரிடந்தொறுமுழவோசை. (௬௭)

---

* படைமதில் என்றும் பாடம்.
† எத்தி என்றும் பாடம்.

முன்றிலின்கணின்றிடம்பெறுவரசர்மாமுடிக
ளொன்றொடொன்றறைந்தெற்றிமேலொளிர்பொறிசிதறிச்
சென்றசென்றவெத்திசைதொறுந்திகழ்ந்ததுசெம்பொற்
குன்றெனும்படிகுருகுலநாயகன்கோயில். (௬௮)

என்றிசைக்குநல்லொளிநிமிரெழின்மணிமகுடக்
குன்றிசைக்கும்வண்கோபுரநீணகர்குறுகித்
தென்றிசைக்குளிர்செண்பகமலருடன்சிறந்து
நின்றிசைக்கும்வண்சோலைவாயமர்ந்தனனெடுமால். (௬௯)

அன்றுதூதுகொண்டிலங்கைதீவிளைத்தவனைவர்க்
கின்றுதூதுவந்தெயிற்புறத்திறுத்தனனென்னுந்
துன்றுதூதுவண்டினமுரன்றொடையலான்றனக்குச்
சென்றுதூதுவரியம்பினர்சேவடிவணங்கி. (௭௦)

தொல்லைநாயகன்வந்தனனென்றலுஞ்சுரும்பார்
மல்லன்மாலையானேவலான்மாநகர்மாக்க
ளெல்லைநீண்மதில்வட்டம்யோசனையெழுநூறுஞ்
செல்வமாநகர்த்தெருவினையொப்பனைசெய்தார். (௭௧)

மின்னுமாமுகிற்பல்லியவிதங்கண்முன்முழங்க
மன்னர்மன்னவனெழுந்தனன்மாலெதிர்கொள்வா
னென்னைநீயவற்கெதிர்செல்வதென்றுதன்மருகன்
றன்னைவன்பொடுதகைந்தனன்கொடுமைகூர்சகுனி. (௭௨)

சீர்வலம்புரிதிகிரிசேர்செங்கையான்றனக்குக்
கார்வலம்புரிகோயிலுங்காட்சியுமமைத்துப்
போர்வலம்புரிநிருபருமிளைஞரும்போற்றத்
தார்வலம்புரியவனிருந்தனன்பொலந்தவிசின். (௭௩)

தொல்பகீரதிமைந்தனுந்துரோணனுஞ்சுதனும்
வில்விதுரனுங்கிருபனுமுதலியவேந்தர்
மல்குழூவிருபத்துநூறாயிரர்மகிழ்ந்து
செல்வநாயகற்கியோசனையிரண்டெதிர்சென்றார். (௭௪)

வந்துவந்திருமருங்கினுமன்னவர்வணங்கப்
பைந்துழாய்முடிப்பரமனுங்கண்மலர்பரப்பி
யந்தமாநகர்புகுந்தபினரசனிற்புகாமற்
புந்திகூரருள்விதுரன்வாழ்வளமனைபுகுந்தான். (௭௫)

வேந்தர்யாரையும்விடைகொடுத்தகன்றபின்விமலன்
வாய்ந்தமாளிகைநடுவணோர்மண்டபங்குறுகி
யாய்ந்துவல்லவர்நவமணியழுத்தியவரியே
றேந்துமாசனமிடைப்பொலிந்ததன்மிசையிருந்தான். (௭௬)

இருந்துவந்தருளிறைவனையிறைஞ்சினனிறைஞ்சிப்
பெருந்துவந்தனைப்பிறப்பையுமிறப்பையும்பிரித்தான்
மருந்துவந்தனையமரருக்கருளியமாயோன்
விருந்துவந்தனனென்றுளமுருகியவிதுரன். (எஎ)

கோடுகொண்டகைக்குரிசிலையலர்ந்தகோகனதக்
காடுகண்டெனக்கண்டுதன்கண்ணிணைகளியாத்
தோடுகொண்டதார்விதுரனிப்பிறப்பையுந்தொலைத்தான்
வீடுகண்டவர்க்கியம்பவும்வேண்டுமோவேண்டா. (எஅ)

உள்ளினுனுணர்ந்துள்ளமுமுருகினனெழுந்து
துள்ளினன்விழுந்திணையடிசூடினன்றுயரைத்
தள்ளினன்மலர்த்தடக்கையாற்றத்துவவமுதை
யள்ளினனெனக்கண்களாலருந்தினனளியோன். (எகூ)

முன்னமேதுயின்றருளியமுதுபயோததியோ
பன்னகாதிபப்பாயலோபச்சையாலிலையோ
சொன்னநால்வகைச்சுருதியோகருதிநீயெய்தற்
கென்னமாதவஞ்செய்ததிச்சிறுகுடிலென்றான். (அ0)

மும்மையாகியபுவனங்கண்முழுதையுமருந்து
மெய்ம்மையாளுடைநாயகன்விருந்தினுக்கிசைந்தா
னம்மவென்றனனறுநூறாயிரமடையர்
தம்மைநோக்கினனவர்களும்விரைவுடன்சமைத்தார். (அக)

வந்தகொற்றவேல்வரிசிலைவாள்வலிதினிக்குங்
கந்தடர்ப்பனகரிக்கும்வெங்கவனவாம்பரிக்கு
மைந்துபத்துநூறாயிரமரசர்க்குமெவர்க்கு
மிந்திரற்குமெய்தாவமுதெனும்படியியற்ற. (அஉ)

அமைத்தவாசநன்னீர்கொடுமஞ்சனமாடிச்
சமைத்தபல்கறியடிசிறம்விருப்பினலருந்தி
யுமைக்குநாயகனிரவொழித்தருளினனுதவ
விமைப்பிலாரமுதருந்தியவியல்பெனவிருந்தார். (அங)

வாசநீரும்வண்சுண்ணமுமுறைமுறைவழங்கப்
பூசறுத்துழிப்பூசினர்சூடினர்புனைந்தார்
வீசுசாமரமிரட்டவெண்மதிக்குடைநிழற்றக்
கேசவன்மணிக்கேசரித்தவிசிடைக்கிளர்ந்தான். (அச)

ஞானகஞ்சுகவிதுரன்வாழ்மனையினயகனும்
போனகம்பரிவுடனுகர்ந்திருந்தவப்பொழுதிற்
றானுமேருவுக்கப்புறத்தவ்வமுதருந்தப்
பானுவும்பெருங்குடதிசைப்பரவையிற்படிந்தான். (அரு)

கருதிபந்தணர்யாவருந்தங்கடன்கழிப்பச்
சுருதியென்னும்வெஞ்சாபமேலம்புகைதொடுத்துப்
பருதிதன்பெரும்பகைவர்மேல்விடுத்தலிற்பரந்த
குருதியாமெனநிவந்தெழுச்சிவந்ததுகுடபால். (அசு)

தரங்கவாரிதிப்புறத்தெதிர்மலேந்தவெஞ்சமரி
லுரங்கொள்கூர்நெடும்படைகளாலுடன்றமந்தேகர்
துரங்கமேழுடைக்கடவுளைநிரைநிரைதுணித்த
கரங்கள்போன்றனகரைதொறும்வளர்துகிர்க்காடு. (அஎ)

நீதியிற்புகல்பகலெலாநீரரமகளிர்
மீதுறைத்தெழும்வெவ்வெயில்படாவகைவிரித்துப்
போதுபுக்கதென் * றிதம்படச்சுருக்கியபூம்பட்
டாதபத்திரம்போன்றனதாமரையடவி. (அஅ)

கலந்துமங்கலமுழவுவெண்சங்கொடுகறங்க
மிலேந்தபூங்குழல்வனிதையர்மெய்விளக்கெடுப்பக்
கலந்ததாமரைத்தடமெலாங்குவிந்ததுகண்டு
மலர்ந்ததாமரைவாவிபோன்றதுநகர்வட்டம். (அகூ)

உரகபுங்கவன்மணிமுடியொப்பனதீப
மிருமருங்கினுமாயிரமாயிரமேந்த
வரிசுமந்தபேராசனத்தமுகுடனிருந்த
புரவலன்றனைப்புண்ணியவிதுரனும்போற்றி. (கூ0)

பொங்கராவணைபொலிவறப்போந்தபின்பொதுவர்
தங்கள்பாடியில்வளர்ந்துமாமருதிடைத்தவழ்ந்த
கங்கைமாநதிகால்வழிகருணையங்கடலே
யிங்குநீதனிநடந்தவாறுரைத்தருளென்றான். (கூக)

தோட்டுவந்துசெந்தேனுகர்சுரும்புசூழ்தொடையாய்
காட்டுவந்துமுன்றிரிந்துதங்கடவநாட்கழித்து
நாட்டுவந்தபேரைவர்க்குநற்குருநாடு
கேட்டுவந்தனமென்றனன்விதுரனுங்கேட்டான். (கூஉ)

முழக்கினூயர்முரசுயர்த்தவன்றனக்குரிமை
வழக்கினலறிந்தடலரவுயர்த்தகோன்வழங்கான்
றழக்கினலிருதிசையினுமுரசெழச்சமரி
லுழக்கினல்லதுணர்வனேவென்றவனுரைத்தான். (கூங)

வாளைவாவியினுகண்டெழுவளரிளங்கமுகின்
பாளைவாயளிமுரன்றெழும்பழனநாடுடையா
னாளைவாழ்வவர்க்களித்திலனெனிலெதிர்நடந்து
மூளைவாயுகமுடிப்பர்வெம்போரெனமொழிந்தான். (கூச)

* இனம்பட என்றும் பாடம்.

விரைந்துபாய்பரிமன்னவரிதம்படமெலிவுற்
றிரந்துவேண்டினுங்கிளைஞருக்கொருபொருளீயார்
பரந்தபோரினிலெதிர்த்தவர்படப்படப்பகழி
துரந்தபோதவர்க்குதவுவர்சொன்னவையெல்லாம். (௯௫)

என்றுபாரினிலியற்கையும்விதுரனுக்கியம்பி
வென்றுபோர்கெழுநேமியான்விடைகொடுத்தருளிக்
குன்றுபோற்புயக்காவலர்கொடுந்துடிகறங்க
மன்றஞண்மலர்ப்பாயலின்மீதுகண்வளர்ந்தான். (௯௬)

குளிருமாமதிமுகத்தொளிர்குமுதவாய்மலர்த்தித்
தளவவாணகைபரப்பிவஞ்சததளமலர்க்கை
யளவிலேகுவித்தளியொடுமகன்றிலாமையினுற்
களிகொடோள்விலைக்கணிகையைப்போன்றதக்கங்குல். (௯௭)

அளைந்தவாரிருட்கடல்பொரூதொருபுடையண்டம்
பிளந்ததாமெனக்கரும்படாம்பீறியதென்ன
வளைந்தவேழ்கடல்வற்றமேல்வடவையின்முகத்திக்
கிளர்ந்ததாமெனக்கிளர்ந்தனவிரவியின்கிரணம். (௯௮)

இகலும்வாளரவுயர்த்தவனிருந்ததொல்பதியி
லகிலநாயகனொருதனிநடந்தவாறறிந்து
மகரவாரிதியகன்றுமாமருங்குறவணைந்த
திகிரிபோலவந்தெழுந்தனனிரவிகீழ்த்திசையில். (௯௯)

வேறு.

சோதிவானநதிமைந்தனும்பழையசுருதியாலுயர்துரோணனு
மாதியாகவுயிரினும்வியப்புறவடுத்தமன்னவரநேகரு
நீதியாறுவகையைந்துபத்தொடறுபத்தொராயிரவர்நிருபருந்
தீதிலாததிறலக்குரோணிபதினொன்றுபெற்றமிகுசேனையும். (௧௦௦)

தொக்கவெண்கவரியாலவட்டநிரைசொட்டைவாள்பரிசைதுகிலுடன்
கைக்களாசியிவைகொண்டுலாவிவருகன்னிமங்கையர்களனைவரு
மிக்கவேதியர்கள்வல்லபல்கலைவிதத்திலுள்ளவர்கள்யாவருந்
தக்கதம்பியரும்வந்துசூழவுயர்தரணிமேனிருபர்தம்பிரான். (௧௦௧)

நிரைகதிர்க்கனகநீள்சுவர்ப்பவளவுத்திரத்திடைநிரைத்தவொண்
பருமணிக்கிரணபற்பராகவயிரத்துலாமிசைபரப்பிவெண்
டரளவர்க்கவபிரேயப்புதியகோமளப்பலகைதைத்துமா
மரகதத்தினொருகோடிதூணிரைவகுத்தமண்டபமருங்கரோ. (௧௦௨)

முட்டநித்திலநிரைத்தபந்தரினகைத்தசீரரிமுகத்தகால்
வட்டமெத்தைகொடமைத்தபீடமிசைவாசவன்கொலெனவைகினன்
பட்டவர்த்தனருமகுடவர்த்தனரும்*வந்துசேவடிபணிந்தபி
னிட்டபொற்றவிசின்முறைமையாலினிதிருக்கவென்றவரையேவியே. (௧௦௩)

*வந்துவந்தடிஎன்றும்பாடம்.

காவன்மன்னவர்முகங்கடோறுமிருகண்பரப்பியபார்கருதுவோ
ரேவலின்கண்வருதூதனாமிடையனின்றநம்மவையிலெய்தினா
லோவலின்றியெதிர்சென்றுகண்டுதொழுதுரவுகூறியினியுங்களூர்
தீவலஞ்செயவடர்ப்பனென்றுநனிசீறினான்முறைமைமாறினான். (௧௦௪)

இந்தவண்ணமுரைசெய்துமன்னவையில்ராசராசனுமிருக்கவே
தந்தவண்ணனுடன்வந்தவண்ணலொளிதங்குகண்டுயிலுணர்ந்தபின்
கந்தவண்ணமலர்கொண்டுகைதொழுதுகாலையிற்பலகடன்கழித்
திந்தவண்ணமுனிருந்தபேரவையிலேயினானிசைகொள்வேயினான். (௧௦௫)

தன்னுகங்கைமகனுந்துரோணனொடுசுதனுநீதிபுனைவிதுரனு
மன்னர்மன்னனையொழிந்தமன்னவரும்வந்துசேவடிவணங்கினார்
கன்னனுந்தலைகவிழ்ந்திருந்தனனழன்றுளஞ்சகுனிகருகினான்
முன்னநின்றவர்களிட்டபீடமிசைமொய்துழாய்முகிலுமெய்தினான். (௧௦௬)

முன்னகங்குடைகவித்தகாளமுகின்முன்னிருந்தபின்முகங்கொடா
தென்னகந்தனையொழித்துநென்னலிடையிந்தமாநகரிலெய்தியும்
பொன்னகங்கொள்புயவிதுரனில்லிடைபுகுந்ததென்கொலிதுபுகலெனாப்
பன்னகந்தனையுயர்த்தகோவுமுரைபகரமாலுமெதிர்பகருவான். (௧௦௭)

என்னினின்னிலொருபேதமில்லையிதுவென்னினின்னிலதுவென்னினு
மின்னின்முன்னிலகுவிறனெடும்படைவிதூரன்வந்தெதிர்விளம்பினா
னுன்னிலின்னமுளதொன்றுபஞ்சவருரைக்கவந்ததொருதூதன்யா
னின்னிலின்னடிசிலுண்டுநின்னுடன்வெறுக்கவெண்ணுவதுநீதியோ. (௧௦௮)

அரவமல்கியபதாகையாய்மதியமைச்சராயரசழிப்பினுங்
குரவர்நல்லுரைமறுக்கினும்பிறர்புரிந்தநன்றியதுகொல்லினு
மொருவர்வாழ்மனையிலுண்டுபின்னுமவருடனழன்றுபொரவுன்னினு
மிரவியுள்ளளவுமதியமுள்ளளவுமிவர்களேநரகிலெய்துவார். (௧௦௯)

சீதநாண்மலர்மடந்தைகேள்வனிவைசெப்பவுந்தெரியவொப்பிலா
நாதநாயகன்முகத்தில்வைத்தவிருநயனனாகிமிகநகைசெயாத்
தூதனாகிவருதன்மைசொல்லுகெனமன்னர்மன்னனிதுசொன்னபின்
வேதனாறுமலருந்திவண்டுளபவிரைசெய்தாரவனுமுரைசெய்வான். (௧௧௦)

சூதினாலரசிழந்துநின்றுணைவர்சொன்னசொல்லும்வழுவாதுபோ
யேதிலார்களெனநொந்துதண்ணிழலிலாதகானினிடையெய்தியே
தீதிலாவகைகுறித்தநாள்பலகழித்துவந்தனர்செகத்தினிற்
கோதிலாதகுருகுலமகீபவவருரிமைநண்பொடுகொடுத்தியே. (௧௧௧)

சொல்லவாவுரகதுவசநின்னுரியதுணைவர்தங்களையழைத்துநீ
வல்லவாறுசிலநாடளித்தவர்கடம்முடன்கெழுமிவாழ்தியே
னல்லவாய்மைநிலையுடையையென்றரசர்நாடொறும்புகழ்வர்நண்புகொண்
டல்லவாமெனமறுத்தியேலறமுமாண்மையும்புகழுமல்லவே. (௧௧௨)

என்றுகேசவனியம்பவங்கெதிர்ராசராசனுமியம்புவா
னன்றுசூதுபொருதுரிமையாவையுமிழந்துபோயினர்களைவரு
மின்றுநீவிரகின்மீளவுங்கவரவெண்ணினைவரிலெளியனோ
சென்றுகானிலவரின்னமுந்திரிவதுறுதியென்றுநனிசீறியே. (ககங)

நீவெறுக்கிலெனிருந்தமன்னவர்திகைக்கிலென்பலநினைக்கிலென்
போய்நகைக்கிலெனுரைத்தவுண்மைமொழிபொய்த்ததென்றமரர்புகலிலென்
வேய்மலர்த்தொடையலைவரென்னுடன்மிகைத்துவெஞ்சமர்விளைக்கிலென்
னீயிருக்குமிடமெனினுமிப்புவியில்யானவர்க்கரசினிக்கொடேன். (ககச)

கார்வழங்குருமெனச்சினத்தினெடுகண்ணிலான்மதலைகழறவும்
பார்வழங்கநினைவில்லையேலவனிபாதியாயினும்வழங்குவாய்
தார்வழங்குதடமார்பவென்னவதுதானுமன்னவன்மறுக்கவைந்
தூர்வழங்குகெனவுற்றிரந்தனனிவ்வுலகெலாமுதவுமுந்தியான். (ககரு)

மாடளிக்குலநெருங்குபைந்துளபமாலையாய்மகரவேலைசூழ்
நாடளித்திடவுமைந்துபேருடையநகரளித்திடவும்வேண்டுமோ
காடளிக்கவதனிடை* திரிந்துறைகரந்துபோயினர்கள்காணவோர்
வீடளிக்கினும்வெறுப்பரோவிதனைவிடுகவென்றெதிர்விளம்பினான். (ககசு)

தந்தைகாதலுறுதன்மைகண்டிளையதாய்பயந்தவிருதம்பியர்க்
கிந்தவாழ்வுமரசுங்கொடுத்தவனுநின்குலத்தொருவனிங்குளான்
முந்தமாநிலமனைத்தினுக்குமுயர்முறைமையாலுரியவரசருக்
கைந்துமாநகருநீகொடாதொழியினென்னதாகுமுனதரசியல். (ககஎ)

ஒருகுலத்தினிலிரண்டுமன்னவருடன்பிறந்துரிமையெய்தினா
லிருகுலத்தவருமொக்கவாழ்வுறுதலெக்குலத்தினுமியற்கையே
பொருகுலக்களிறுவளர்திசைக்கண்மிகுபுகழ்பரப்பியெழுபுவிபெறுங்
குருகுலத்தவரியற்கைநன்றெனமொழிந்தனன்கரியகோவலன். (ககஅ)

பேரராவணைதுறந்தமாயனிவைபேசவன்பினோடுபின்னையுஞ்
சீரராவினையுயர்த்தகோவும்விழிதீயெனும்படிசெயிர்த்துளே
போரராநிருபன்மணிநெடுஞ்சுடிகையாயிரங்கொடுபொறுத்தபார்
வீரரானவரதல்லவோவுரிமைவேண்டுமோவெனவிளம்பினான். (ககக)

பொய்வளர்ந்தமொழிமன்னன்மற்றிவைபுகன்றபின்புயவலியினா
லைவர்தங்களரசுங்கொடாமலடலாண்மைகொண்டெதிரடர்த்தியேன்
மெய்விளங்கவருகுருநிலத்தினிடைவந்துவெஞ்சமர்விளைக்கவே
கைவழங்குகெனநின்றதூணிடையறைந்துரைக்குமிவைகாவலன். (கஉ0)

புன்பிறப்புடையபொதுவர்தங்களொடுபுறவிலானிரைபுரந்திடு
முன்பிறப்புமுரலோடுகோவியருனைப்பிணித்ததுமறந்தநீ
மன்பிறப்பிலுயர்குருகுலத்தவர்தம்வாய்மைதானுமொருமாசிலா
வென்பிறப்புமுணராமலோசபையிலிந்தவாசகமியம்பினாய். (கஉக)

---

* திரிந்தெழில்கரந்து என்றும் பாடம்.

ஏவிலங்குசிலையைவர்வந்தணுகில்யானயர்ந்தெளிதிருப்பனோ
கோவிலங்குபொரலஞ்சுமோகரடகுஞ்சரங்கள்பகைகொண்டகான்
மேவிலங்குமுன்மலைத்தல்கைபறையவேண்டுமென்றதுநின்மேன்மையோ
நாவிலங்குமெனவெண்ணியோமிகவுநன்றுநன்றரசர்ஞாயமே. (௧௨௨)

அளிவருங்குழல்பிடித்துமன்னவையிலைவருக்குமுரியாளைநா
னெளிவருந்துகிலுரிந்தபோதருகிருந்துகண்டவர்களல்லவோ
துளிவரும்புனல்பரிந்தருந்தியிடுசோறுதின்றுயிர்சுமந்துதோ
ளெளிவரும்படியிருந்தபாவியருமின்றுமானநிலையுணர்வரோ. (௧௨௩)

அன்னையானவருமிருவராமுதலளித்ததந்தையர்களைவராம்
பின்னையாசைகொடுகுநகுலத்துரிமைபெறுவராமொருபிறப்பிலோர்
மின்னையாமவர்களைவரும்பரிவினொடுதனித்தனிவிருப்புவா
ரென்னையாமவரொடொருகுலத்தரசனென்பதம்மவினையென்கொலாம். (௧௨௪)

ஞாலமுற்றுமுடையவன்மொழிந்திடநகைத்துவண்டுவரைநாதனுஞ்
சால*முற்றுமினியவர்கருத்தெனநினைந்துபேரவைதணந்துபோய்க்
கோலமுற்றசிலைவிதுரன்வாழ்வுபெறுகோயில்சென்றுநனிகுறுகினான்
சீலமற்றவர்சினத்தபோதுமொருநீதிலாதவர்செயிர்ப்பரோ. (௧௨௫)

கரிந்துமாலைசருகாகவும்புதியகமலவாண்முகம்வெயர்க்கவுந்
திருந்துகண்ணிணைசிவக்கவுங்கொடியசெய்யவாயிதழ்துடிக்கவு
மிருந்தபேரவையினெடிதுயிர்த்திடுமிராசராசனவனுக்கிவன்
விருந்துசெய்தவுறவென்கொலென்றரசரெதிர்விதுரனைவிளம்புவான். (௧௨௬)

வன்பினாலவனிவெளவ†வென்றெனதுமனையிலுண்டியைமறுத்தவன்
றன்பதாகினியொடினிதருந்தும்வகைதன்னிலின்னமுதியற்றினா
னென்பிதாவொடுபிறந்துமின்றளவுமென்னையோதனமருந்தியு
மன்புதானுடையனல்லனென்பகைதனக்குமுற்றபகையல்லவோ. (௧௨௭)

முதல்விழைந்தொருவனுடனியைந்தபொருள்பற்றியின்புறமுயங்கினா
மதிகமென்றபொருளொருவன்வேறுதரினவனையேயொழியவறிவரோ
பொதுமடந்தையர்தமக்குமண்ணிலிதுபுதுமையல்லவவர்புதல்வனும்
விதுரனின்றவனொடுறவுகொண்டதொர்வியப்பையென்சொலிவெறுப்பதே. (௧௨௮)

இன்னவாறிவனுரைத்தபோதவனெழுந்திருந்துவசையென்னைநீ
சொன்னவாய்குருதிசோரவாள்கொடுதுளைத்துநின்முடிதுணிப்பன்யான்
மன்னவாகுருகுலத்திலேயொருவன்மைந்தனாருயிரைவெளவினா
னென்னவானவர்நகைப்பரேயெனையுரைத்தநாவுடனிருத்தியோ. (௧௨௯)

ஈண்டவர்க்குதவியாயதூதெனவிசைப்பவற்குலகமெங்கணு
நீண்டவற்குதவியாயினேனெனநினைத்துநீயெனையடர்த்தியோ
மாண்டவர்க்குதவியாயபேரறமுமிசையுமாண்மையும்வளர்த்திடும்
பாண்டவர்க்குதவியாகிலென்னைமுடிமன்னரானவர்பழிப்பரோ. (௧௩௦)

---

*முற்றுமவர்நினைவெனப்பெரிதுவந்துபேரவை என்றும்பாடம்.
†என்றுகொலென்மனையில் என்றும்பாடம்.

சொல்லிரண்டுபுகலேனினிச்சமரினின்றுவெங்கணைதொடேனெனா
வில்லிரண்டினுமுயர்ந்தவில்லதனைவேறிரண்டுபடவெட்டினான்
மல்லிரண்டினையுமிருவராகிமுன்மலைந்தகாளமுகில்வந்துதன்
னில்லிரண்டுதினம்வைகுதற்குலகிலெண்ணிலாததவமெய்தினான். (௧௩௧)

அந்தவில்லினைமுறித்தவில்லிதனதாலயம்புகுதவச்சுதன்
சந்தவில்லுமரன்வில்லுமொப்பதொருதாமவில்லினைமுறிப்பதே
முந்தவில்லியரிலெண்ணும்வில்லுடையவிசயன்வந்தமரின்முடுகினா
லெந்தவில்லியெதிர்நிற்கும்வில்லியினியென்றுகாவலிரங்கினார். (௧௩௨)

காரனைத்தும்விடுதாரையன்னபலகணைகளேவியமர்கருதும்வில்
வீரனைப்பழுதுரைத்தநீபகையையெங்ஙனேதனிகொல்வெல்லுவாய்
பாரனைத்துமினியவராளும்வகைபண்ணுவித்தனையழிந்ததுன்
பேரனைத்துமெனவுள்ளழிந்துசிலபேசினானுயர்பிதாமகன். (௧௩௩)

பிதாமகன்பரிவுடன்முனிந்துசிலபேசநாசமுறுபேரனும்
*மதாணிமார்பனும்விதூரனல்லதுவில்வல்லவீரர்பிறரில்லையோ
வுதாரசீலனுயரங்கர்கோன்வரிவிலொன்றுமேயமையுமுற்றெழும்
பதாதியோடமரிலைவரும்படமலைந்திடப்பரணிபாடவே. (௧௩௪)

நீயிருக்கநெடுவிற்கையாசிரியனவனிருக்கநிகரற்றவன்
சேயிருக்கவிறன்மன்னரிப்படிதிரண்டிருக்கவெதிர்சென்றுநீள்
வேயிருக்குமிதழிடையனுக்குநல்விருந்துசெய்தவன்வெறுக்கிலென்
போயிருக்கிலென்முறிக்கிலென்சிலைமலைந்துநம்மொடெவர்போர்செய்வார். (௧௩௫)

என்றுகூறவிறலங்கர்பூபதியும்யானிருக்கவிகல்விசயனைச்
சென்றுசீறியுயிர்கொள்ளவல்லவர்கள்யாவரென்றுநனிசெப்புவீர்
கன்றினால்விளவெறிந்தகோவலவனின்றுதேர்நனிகடாவினு
மன்றுபோரினிடைகாணலாகுமெனதாடல்வெஞ்சிலையினாண்மையே. (௧௩௬)

அம்பரத்தவருடன்றுசீறினுமொரம்பிலேயழிவர்திண்ணம்யான்
வெம்பணிப்பகழியேவிலாவியுடன்மீளுவானமரில்விசயனோ
விம்பரிற்புகலவிருதளத்தினுமெனக்குநேரொருவரில்லையென்
றும்பர்கற்பகமுநாணவண்மையிலுயர்ந்தவீரனிவையுரைசெய்தான். (௧௩௭)

திசையனைத்தினும்வளைந்ததானவரையிரவிவந்ததொருதிசையின்வாய்
நிசியெனப்பொருதுவானவர்க்கரசளித்துவந்தவிறனீர்மையான்
விசயனுக்குநிகர்நீகொலோகடவுள்வெண்மதிக்குநிகர்வெள்ளியோ
வசைவில்விற்றொழிலும்வல்லையோவெனவோரசைவிலாதவனறைந்தனன். (௧௩௮)

அவன்மொழிந்தமொழிதன்செவிப்படலுமருகிருந்தமுதருந்துநீ
யிவனுடன்சிலர்பகைக்கின்மற்றவர்தமிசையுமாண்மையுமியம்புவாய்
புவனமொன்றுபடவரினுமென்றனொடுபொருவராயினெதிர்பொரவிடாய்
சிவனுமென்கணையையஞ்சுமென்றுநனிசீறினானிரவிசிறுவனே. (௧௩௯)

---

*விதாரமொய்ம்பனும் என்றும்பாடம்.

இரவிமைந்தனொடுகங்கைமைந்தனைதிர்வாய்மையொன்றையுமிசைத்திலன்
பொரவறிந்திடுமன்றுவெஞ்சமரிலென்றெழுந்துதனிபோயினு
னரவவெங்கொடியுயர்த்தகோவுமிகலரசருக்குவிடைநல்கினன்
விரவுபைந்துளபமாலையான்விதுரன்மனையிலுற்றதுவிளம்புவாம். (கசO)

வேறு.

பொருசிலைமுறித்தவீரன்கோயிலிற்புகுந்துநேமிக்
குரிசிலைவணங்கியாங்கணிருப்பவக்குரிசினோக்கி
யிருசிலையுண்டென்றிந்தவிருநிலத்தியம்பும்வில்லி
னொருசிலைமுறித்தசீற்றமென்கொலோவுரைசெயென்றான். (கசக)

ஆவதுகருதானாகிலமைச்சர்சொற்கேளானாகில்
வீவதுகுறியானாகில்வினைவதுமுணரானாகி
னுவதுகாவானாகிலவனுக்கானடந்துபோரிற்
சாவதுபழுதென்றன்றேசகத்துளோர்சாற்றுகின்றார். (கசஉ)

செல்வம்வந்துற்றகாலைத்தெய்வமுஞ்சிறிதுபேணார்
சொல்வனவறிந்துசொல்லார்சுற்றமுந்துணையுநோக்கார்
வெல்வதேநினைவதல்லால்வெம்பகைவலிதென்றெண்ணார்
வல்வினைவிளைவுமோரார்மண்ணின்மேல்வாழுமாந்தர். (கசஙு)

நினைக்கவுந்தொழவுமெட்டாநீயெழுந்தருளப்பெற்றுந்
தனக்கிதுதகுதியென்றுதமருடன்வாழவெண்ணான்
மனக்கடுங்கனலினான்றன்மதத்தினாலுரைத்தவெஞ்சொ
லெனக்கிசையாமல்யானுமிருஞ்சிலையிறுத்ததென்றான். (கசச)

மாயனுமகிழ்ந்துநோக்கிமாசுணமுயர்த்தமன்னன்
போயருஞ்சேனையோடுபோர்க்களங்குறுகும்போது
நீயவனருகுநில்லாதொழியினுன்னேயமைந்தர்
தாயமுஞ்செல்வமுற்றுந்தரணியும்பெறுவரன்றே. (கசரு)

ஏற்றியாறுநெய்வீசியிந்தனமடுக்கினாலுங்
காற்றுவந்துறாதபோதுகடுங்கனல்கதுவவற்றோ
நீற்றணிநிமலனன்னநின்கைவில்லிற்றதாகிற்
சீற்றவேலரசன்சேனைதென்புலம்படர்கைதிண்ணம். (கசசு)

பன்னியபுரையில்கேள்விப்பயனுகர்மனத்தாய்சின்னை
மன்னவன்மொழிந்தவெல்லாம்பொறுத்தியென்றருளிமாயோ
னந்நகர்தன்னில்வண்மையருளழகாண்மைபேசுங்
கன்னனைப்பயந்தகாதற்கன்னிதன்கோயில்புக்கான். (கசஎ)

மண்டலமதியமன்னமாசறுமுகத்தினாளுந்
திண்டிறன்மருகன்றன்னைச்சென்றெதிர்கொண்டுகண்டு
வெண்டிரைமகரவேலைவிரிபுனன்முகந்துதோன்றுங்
கொண்டலைமகிழ்ந்துகாணுங்குளிர்பசுந்தோகைபோன்றாள். (கசஅ)

யானுறைபில்லின்வந்ததென்னமாதவமென்றெண்ணிக்
கானுறைமைந்தர்தம்மைக்கண்டனள்போன்றுளாகித்
தேனுறைதுளவினான்றன்செய்யமாமுகத்தைநோக்கி
வானுறைபுரிசைசூழ்தூர்வந்த*தென்கருதியென்றாள். (கசகூ)

நின்பெரும்புதல்வர்சொல்லநெடும்புனனாடுவேண்டி
வன்பணியுயர்த்தகோமான்மனக்கருத்தறியவந்தேன்
றென்புலவேந்தன்வெஃகச்செருத்தொழில்புரிவனென்று
னென்பலசொல்லிநாளையெதிர்க்கவேயிசைந்ததென்றான். (கருo)

என்றலுங்குந்திசாலவிரங்கினளெதிர்ந்தபோரில்
வென்றிடுவார்கள்யாரோவிதியினாலமர்க்களத்திற்
பொன்றிடுவார்கள்யாரோவென்றுளம்புலர்ந்துநொந்தா
ளன்றவடன்னைத்தேற்றியாழியானுரைக்கலுற்றான். (கருக)

தன்மைநானுரைப்பக்கேணின்றந்தைதன்மனையினீயுங்
கன்னியாயிருந்துவாழுங்காலையோர்முனிவன்வந்து
சொன்னநன்மந்திரத்திற்சூரியன்றன்னைநீயு
முன்னினையவனுமன்றுவந்துநின்முன்புநின்றான். (கருஉ)

கதிரவனருளினாலோர்கணத்திடைக்காதல்கூர
மதலையங்கொருவன்றன்னைப்பயந்தபின்வடுவென்றஞ்சி
மிதவையம்பேழைதன்னிற்பொதிந்துநீவிடவப்போதந்
நதியுமம்மகவைக்கங்கைநதியிடைப்படுத்ததன்றே. (கருங)

காதனின்புதல்வன்றன்னைக்கண்ணிலாவரசன்பொற்றேர்ச்
சூதன்வந்தெடுத்துக்கொண்டுசுதனெனவளர்த்தகாலை
யாதபனிவனையாருங்கன்னனென்றழைக்கவென்றான்
றாதையும்விசும்பிற்சொன்னநாமமேதக்கதென்றான். (கருச)

பண்புடைக்குமரன்கற்றபடைத்தொழில்பலவுங்கண்டு
நண்புடையுரிமையெல்லாநல்கிமாமுடியுஞ்சூட்டி
வண்பணியுயர்த்தகோமான்வாழ்வவற்களித்தான்மற்றைத்
திண்பரித்தேர்வல்லோரிலவனையார்செயிக்கவல்லார். (கருரு)

அந்தநின்மைந்தன்றானேயருஞ்சிலைவிசயனோடு
வந்தெதிர்மலையநின்றானுறவுமற்றறியமாட்டான்
சிந்தையினையந்திரவிதனைநீதெளியச்சொல்லிக்
கொந்தவிழலங்கலானைக்கூட்டுகவிரைவினம்மா. (கருசு)

தம்பியரைந்துபேருந்தனித்தனியேவல்செய்ய
வம்பவிழலங்கலோடுமாமணிமகுடஞ்சூடி
யம்புவிமுழுதுநீயேயாளல்லாம்வருகவென்று
லும்பர்காவனையகையானுன்னுரைமறுத்தானாகில். (கருஎ)

---

* என்னருடியென்றாள் என்றும்பாடம்.

எரியமுதருந்தக்கானமெரித்தநாளகன்றுபோன
வரவினையங்கர்கோமானாசுகமாகக்கொண்டான்
வரிசிலைவிசயன்றன்மேன்மறுகணைதொடுக்காவண்ண
மொருவரம்வேண்டுகென்றானுற்றவர்க்குறுதிசூழ்வான். (கருஅ)

மன்றலந்தெரியல்வெய்யோன்மதலையென்மைந்தனென்ப
தன்றெனக்குரைத்தாயாகிலவனுடனணுகவொட்டேன்
சென்றுயிரொழிக்குமாறுசெருவினைவிளைத்துப்பின்னை
யின்றெனக்குரைத்தாயையாவென்னினைந்தென்செய்தாயே. (கருகூ)

கான்பட்டகனலிற்பாயுங்கடுங்கணைவிலக்கினேனேல்
வான்பட்டபுரவித்தேரோன்மகன்படுமகவான்மைந்தன்
றான்பட்டுமடியுஞ்சென்றுதடாதினியிருந்தேனாகில்
யான்பட்டகொடுமைநன்றென்றென்பட்டாளிரங்கிவீழ்ந்தாள். (கசுo)

தேக்குந்தியகிலுஞ்சாந்துஞ்சிந்துநீர்நதிசூழ்செல்வக்
கோக்குந்தியரசன்பாவைகுலைந்தழுங்கொடுமைகண்டு
மீக்குந்தியுறிகடோறும்வெண்ணெயுந்தயிருமுண்ட
வாக்குந்திமலரோன்பின்னுபனத்தளர்வகற்றினானே. (கசுக)

பைவருந்தலைகளைந்துபடைத்தபன்னகமேபோல
வைவரும்படுதனன்றோவங்கர்கோன்படுதனன்றோ
வுய்வருஞ்சமரிலாவியொருவர்போயொருவருய்யார்
நைவருந்துயரமாறி*நடப்பதேநன்மையென்றான். (கசுஉ)

காளமாமுகிலின்மேனிக்கரியநாயகனுந்தேற்றி
மீளமாதவத்தின்மிக்கவிதுரன்வாழ்மனையினெய்த
வாளமால்வரையில்வெய்யோன்குறுகினன்வருணன்றிக்கி
னீளமால்யானைநெற்றிநிறத்தசெந்திலகம்போன்றே. (கசுங)

நாற்றிசையுலகுதன்னினான்மறையுணர்ந்தோர்தாமும்
போற்றிசைமாலையென்னும்பொற்புடையணங்குவைக
மாற்றிசைவிலாதசெம்பொன்மண்டபந்தன்னிலாதி
மேற்றிசைக்கடவுளிட்டவெயின்மணிப்பீடப்போன்றான். (கசுச)

கொண்டமென்சிறைவண்டென்னுங்கொழுநருக்கிடங்கொடாமன்
முண்டகக்குலத்துமாதர்முகங்குவிந்தூடிநிற்பக்
கண்டெதிர்நின்றகாதற்கயிரவக்கணிகைமாதர்
வண்டுறைநின்றுதங்கள்வாய்மலர்ந்தழைக்கலுற்றார். (கசுரு)

கானெலாமலர்ந்தமுல்லைககனமீதெழுந்ததென்ன
வானெலாம்வயங்குதாரைநிரைநிரைமலர்ந்துதோன்ற
வேனிலான்விழவின்வைத்தவெள்ளிவெண்கும்பமென்னத்
தூநிலாமதியம்வந்துகுணதிசைத்தோன்றிற்றம்மா. (கசுசு)

---

* நடப்பதேகருமமென்றான் என்றும் பாடம்.

தூவியனிலவுதோன்றத் துணைவரைப்பிரிந்தோர்கண்கள்
காவியுமாம்பலும்பைங்கருவிளமலரும்போன்ற
மேவியமகளிர்கண்கண்மீனெறிபரவையேழுந்
தாவிடனுழையுங்காதற்சகோரமும்போன்றமாதோ. (௧௬௭)

அரவியலல்குலாருமகிழ்நருமன்புகூர
விரவியவமளியெய்திவீதிமாநகரியெங்கும்
பரவையினிமிர்ந்தவோதையடர்ந்தபின்பரித்தேர்வேந்த
னிரவிடைச்சூழ்ந்தவண்ணமின்னதென்றியம்புகின்றாம். (௧௬௮)

தந்தையுந்தம்பிமாருங்கன்னனுஞ்சகுனிதானுஞ்
சிந்தையிற்றெளிந்தகல்விச்செழுமதியமைச்சர்தாமு
முந்தரவுயர்த்தகோமானேவலான்முழுதுமெண்ணி
மந்திரமிருப்பான்வந்தோர்மண்டபங்குறுகினாரே. (௧௬௯)

தீதறுமதிவல்லோரைச்செழுமதிக்குடையானோக்கிப்
பாதபவனத்திற்போனபாண்டவர்தம்மைமீண்டு
மேதகவழைத்துநாடுவேண்டுமினென்றுமூட்டும்
யாதவன்றனித்துவந்தானென்செய்வதியம்புமென்றான். (௧௭௦)

பொரும்படைமைந்தன்கூறத்தந்தையும்*பொருந்தச்சொல்வா
னிரும்புலிவலையிற்பட்டால்விடுவரோவெயினரானோர்
வரம்பில்வெஞ்சேனையோடும்வளைந்தினிமாயன்றன்னைக்
கரும்பொழுதகலுமுன்னேகொல்வதேகருமமென்றான். (௧௭௧)

கண்ணிலானுரைத்தமாற்றங்கேட்டலுங்காவலோரின்
மண்ணிலாரிதற்குமுன்புதூதரைவளைந்துகொன்றா
ரெண்ணிலாவிந்தவெண்ணமெவ்வுழிக்கற்றதென்று
வெண்ணிலாமுறுவல்செய்துவிகர்ணனும்விளம்பலுற்றான். (௧௭௨)

மூத்தவரிளையோர்வேதமுனிவரர்பிணியின்மிக்கோர்
தோத்திரமொழிவோர்மாதர்தூதரென்றிவரைக்கொல்லிற்
பார்த்திவர்தமக்குவேறுபாவமற்றிதனினில்லை
பூத்தெரிதொடையாய்பின்னுநரகினும்புகுவரென்றான். (௧௭௩)

பழியுடைப்பகைஞரேனுந்தன்பெரும்பதியில்வந்தா
லழிவுறக்கோறல்பாவமாண்மையுமல்லவென்பார்
கழிகடற்சேனையோடுகங்குலின்வளைந்திட்டாலு
மெழிலுடைக்கொண்டல்வண்ணனகப்படானெவர்க்குமென்றான். (௧௭௪)

வெம்புயவலியான்மாதைவிரிதுகிலுரிந்தவீரன்
றம்பியைமுனிந்துசீறித்தமையனைநோக்கிச்சொல்வான்
வம்பவிழலங்கன்மார்பாமந்தணமுரைக்கலுற்றா
லிம்பர்மற்றியாதுசொல்லவினைஞரையழைத்ததென்றான். (௧௭௫)

* பொருதுகொல்லு, மிரும்புலி என்றும் பாடம்.

அதிரதர்முதலாவுள்ளவவனிபர்வளைந்துநிற்ப
வெதிர்முகிறவழுங்கோயிலெரிபிணையெங்குமூட்டி
விதுரனுமவனுஞ்சேரவெந்திடமலைவதல்லான்
மதிபிறிதில்லையின்னேவல்விரைந்தெழுமினென்றான். (௧௭௬)

செங்கதிரெழுந்துசீறிற்செறிபிருணிற்பதுண்டோ
விங்கிவனிருந்தவில்லிலெரியிடவேண்டுமோதான்
வெங்கணையொன்றினாலேவிளிந்திடவென்றிகொள்வேன்
கங்குலினெழுமினென்றுகன்னனுங்கனன்றுசொன்னான். (௧௭௭)

பதிப்பெயர்ந்தேகினாளைப்பகைவரைக்கூடுமாயின்
விதிப்பயனென்னநம்மைவெஞ்சமர்வெல்லவொட்டான்
மதிப்பதென்வேறுகள்ளப்பாயணைமணையிற்கோலிச்
சதிப்பதேகருமமென்றுசௌபலன்பின்னுஞ்சொல்வான். (௧௭௮)

கொல்லுவதியற்கையன்றுகுழிபறித்தரக்கரோடு
மல்லரையிருத்திமேலோராசனம்வகுத்துநாளை
யெல்லிடையழைத்துவீழ்த்தியிகலுடன்விலங்குபூட்டிச்
சொல்லருஞ்சிறையில்வைத்தறாதருக்குரிமையென்றான். (௧௭௯)

மாதுலனுரைத்தமாற்றமருகனுமிசைந்துகங்குற்
போதிடையநேகமல்லர்வருகெனப்புகன்றுதானு
நீதியினிருந்துதாழுநிலவறைசமைத்தபின்ன
ராதிநூறாயிரம்போரரக்கரையதனுள்வைத்தான். (௧௮௦)

மல்லர்பப்பரவர்தம்மைமற்றதினிரட்டிவைத்தான்
வில்லுடைவீரர்தம்மைவேறதினிரட்டிவைத்தான்
பல்படைவல்லோர்தம்மைப்பதின்மடங்கதனில்வைத்தா
னெல்லிலோர்கடிகைதன்னிலிறைவனையழைக்கவென்றான். (௧௮௧)

பெரும்பிலவறையைவேய்பின்பிளப்பினானிறைத்துமூடி
யரும்பெறன்மணிகளாலோராசனமதன்மேலாக்கிச்
சுரும்பிமிர்மாலைதூக்கித்தொழிலுடைவிதானமேற்றி
வரம்பிலாவென்றிவேலான்மாறிலாவண்ணஞ்செய்தான். (௧௮௨)

அடியவர்மனத்திலுள்ளவாரிருட்கங்குறீர்க்கு
நெடியவனிருக்கவென்றுநிலவறைவிரகிற்செய்த
கடியவனியற்கையஞ்சிக்கங்குலுங்கடிதிற்போகப்
படியவர்துயிலும்போகப்பரிதியுமுதயஞ்செய்தான். (௧௮௩)

சிரந்தருசுடிகைநாகத்திரண்மணிபலவுஞ்சிந்தி
நிரந்தரமருவிவீழுநிறந்திகழுதையக்குன்றிற்
பரந்தெழுமருக்கன்சூழ்ந்தபடரிருட்கங்குல்கண்டு
புரந்தரன்கோயிலிட்டபொங்கொளித்தீபம்போன்றான். (௧௮௪)

தொடர்ந்தொளிருதயராகத்தோடுறநெருங்கிமேன்மே
லடர்ந்தரிபரந்துகாமனாகமவேதம்பாடத்
தடங்கயன்மலைந்துலாவத்தாமரைமுகமுங்காதன்
மடந்தையர்முகமுஞ்சேரமணம்பெறமலர்ந்தமாதோ. (௧௮௫)

இருந்துயிலுணர்ந்தவேந்தர்யாவருமிரவிற்சற்றும்
வருந்துயிலிலாதகண்ணன்வாழ்பெருங்கோயில்புக்கார்
பெருந்துயிலனந்தபோகப்பேரணைதுறந்தமாலு
மருந்துயிலெழுந்துகாலையருங்கடன்முறையிற்செய்தான். (௧௮௬)

மாதவனிருந்தகோயில்வந்தடிவணங்கிமன்னன்
றூதுவராழியங்கைத்தோன்றலைதுளபமாலை
யாதவகுலத்தோரேறேயெழுந்தருள்கென்றானின்றெம்
மேதகுமரசனென்றார்முகுந்தனும்விரைந்துசென்றான். (௧௮௭)

கந்தடுகளிற்றுவேந்தன்கண்ணிலாவரசுங்கங்கை
மைந்தனுமுதலாவுள்ளமன்னருமதிவல்லோருந்
தந்திரவகையுமேனையிளைஞருந்தன்னைச்சூழ
விந்திரனிருக்கையன்னகோயிலூடினிதிருந்தான். (௧௮௮)

நாமவேலரசரோடுநால்வகைச்சேனையோடு
மாமுகில்வண்ணன்வந்தானென்றனர்வரவுகண்டோர்
வீமலர்த்தொடையினானும்வேத்திரத்தவரைநோக்கித்
தாமரைத்தடங்கண்மாயன்றன்னையேவிடுமினென்றான். (௧௮௯)

தன்பெருஞ்சேனைநிற்கத்தண்டுழாயலங்கலானு
மின்புறநகைத்துவேந்தரிருந்தபேரவையினெய்த
மின்புணர்துவசநாகவிடநிகர்மனத்தினானு
மன்பொடுதிகிரியானையதன்மிசையிருக்கவென்றான். (௧௯௦)

வேறு.

இறைவனெழிற்கதிர்மணிகளழுத்தியதவிசினிருத்தலுமே
நெறுநெறெனக்கொடுநிலவறையிற்புகநெடியவனப்பொழுதே
மறலியெனத்தகுநிருபனியற்றியவிரகைமனத்துணரா
முறுகுசினத்துடனடியதலத்துறமுடிககனத்துறவே. (௧௯௧)

அஞ்சினமஞ்சினமென்றுவிரைந்துயரண்டர்பணிந்திடவுந்
துஞ்சினமின்றெனவன்பணியின்கிளைதுன்பமுழந்திடவும்
வஞ்சமனங்கொடுவஞ்சகனின்றிடுவஞ்சனைநன்றிதெனா
நெஞ்சில்வெகுண்டுலைகொன்றுபடும்படிநின்றுநிமிர்ந்தனனே. (௧௯௨)

மல்லரரக்கர்குலத்தொடுபப்பரர்வாளினர்வேலினர்போர்
வில்லினரிப்படிதுற்றநிலத்தறைமேவியவீரரெலாந்
தொல்லையிடிக்கயர்வுற்றுயிரிற்றுறுசுடிகையராவெனவே
கல்லெனவுட்கினர்தத்தமுடற்பலகால்கொடுதைத்திடவே. (௧௯௩)

அற்புதபங்கயநற்பதமுந்தலினக்குழியின்புடையே
சற்பதலந்தொறுமற்றவிழுந்தனதத்தநெடுந்தலைபோய்
முற்பவனன்பொரமுக்குவடுந்துணிபட்டுமுடங்கியபொன்
வெற்பெனநின்றனர்வெற்றுடலங்கொடுவிற்படைகொண்டவரே. (ககூச)

மேல்வலியுற்றெதிர்வீசியெழிற்கருமேகநிறத்திருமால்
கால்விசையிற்படமோதுதலிற்பொருகாமர்புயத்துணைபோய்
நீலநிறக்கவின்வாசவன்வச்சிரநீள்படையிற்சிறகிர்
மால்வரையொத்தனர்வாகைபெறக்கதிர்வாள்களெடுத்தவரே. (ககூரு)

வெயில்விடுபைத்தலையமளிமிசைத்துயில்விபுதர்களுக்கரியோன்
பயிலவுதைத்தலினவர்களுரத்திடைபதமலர்பட்டுருவா
மயில்கடவிக்கடவுளர்பகையைக்கதிர்மகுடமுருக்கியவே
லயில்கொடுகுத்தியநெடுவரையொத்தனரயில்களெடுத்தவரே. (ககூசு)

மின்சுடிகைப்புயகங்கள்வெருக்கொளும்வெங்கருடக்கொடியோன்
வன்பதபற்பநகங்கொடெடுத்துயர்வண்ககனத்திடலான்
முன்புவனத்திடைவந்துகவிக்கிறைமொய்ம்புணரப்புகல்போ
தென்புமலைக்குறுபண்பையடுத்தனரெஞ்சியபப்பரரே. (ககூஎ)

மைந்துபடைத்துயர்பஞ்சவர்சொற்படிவர்தமலர்க்கழலா
னுந்தியுதைத்துடலம்புதையப்பிலமொன்றியொளித்திடலா
லந்தணன்முற்பகல்வந்துபுடைத்திடவஞ்சிநிலத்திடைவீழ்
விந்தமொடொத்தனர்வன்குழியிற்றிகழ்வெங்கணரக்கருமே. (ககூஅ)

அந்தவிடத்தெறிபம்பரமொத்துடலஞ்*சுழலச்சுழலக்
குந்தியுறித்தயிருண்டவர்பொற்கழல்கொண்டுசுழற்றுதலான்
முந்தமரர்க்கமுதந்தரமைக்கடன்முன்சுழலச்சுழலு
மந்தரமொத்தனர்குந்தமெடுத்தெதிர்வந்துமலைந்தவரே. (ககூகூ)

முட்டியதொல்குருதிக்கடன்மல்கலின்முட்டிகொள்பல்விரலா
னெட்டுடல்பல்வகிர்பட்டதனுள்விழநித்தர்செய்தொல்வினையான்
மட்டறவல்விறலுற்றெதிர்செல்கவிமைக்கடலெல்லையிலே
யிட்டனகல்வரையொத்தனர்வெல்கழலெக்குலமல்லருமே. (உ00)

எப்புவிநிற்பனவெக்கிரிநிற்பனவெக்கடனிற்பனவென்
றிப்புவனத்துயிர்முற்றுமயக்குறவுட்கினரெய்த்திமையோர்
மைப்புயலொத்தொளிர்பச்சைநிறத்தினன்†மற்கமலக்கழலா
லொப்பறமட்குழியுற்றவரைப்படவொத்திமிதித்தலுமே. (உ0க)

கொண்டன்முழக்கெனவம்புவியைக்கடல்கொண்டெழுதற்கதிருஞ்
சண்டமுழக்கெனவன்பவனக்கிளைதந்தமுழக்கெனவே
வண்டினமொய்த்தெழுவண்டுளபத்தொடைவண்டுவரைத்திருமா
லண்டமுகட்டுறநின்றுசிரித்தனனங்கணெருப்பெழவே. (உ0உ)

* சுழலச்சிறிதே என்றும்பாடம்.
† வார்க்கமலர்க்கழலால் என்றும் பாடம்.

ஒன்றுபடக்கடலம்புமுகப்பனவும்பர்குலத்தருவுஞ்
சென்றுமுறிப்பனவெண்டிசையிற்குலசிந்துரமெற்றுவவெண்
குன்றமுடைப்பனபைம்பொனுரக்கிரிகொண்டுதிரிப்பனவா
லன்றுதனித்தனிநின்றுமலைத்தருளங்கைகள்பற்பலவே. (௨0௩)

துகிரிதழ்வைத்துநல்வளைகண்முழக்கினதொடர்சிலகைத்தலமே
யகிலம்வெருக்கொளவரிமழுவெற்றினவவைசிலகைத்தலமே
புகலும்வடிக்கணை*பலவுமெடுத்தனபொருசிலகைத்தலமே
திகழ்விசயத்தொடுசிலைகள்குனித்தனசிலசிலகைத்தலமே. (௨0௪)

வெங்கணையத்திரள்குந்தநிறப்படைவெம்புமுலக்கைகள்போர்
பொங்கியவச்சிரமுந்துகலப்பைகள்புன்கழுவர்க்கமயி
லெங்குமலைத்தெழுசெஞ்சுரிகைத்திரடண்டமிவற்றினொடுந்
தங்கியசக்கரபந்திதரித்தன தண்பலகைத்தலமே. (௨0௫)

மேலெழுபூங்கதிர்வாளுறைபோம்படிவீசினவான்புடையே
தோலினமேந்தினநீள்கவணேந்தினசோரிகள்சோர்ந்திடவே
ஞாலமெலாம்பொருதோமரம்வாங்கினநாவொருமூன்றனவாஞ்
சூலமொடோங்கினபாசமொடோங்கினசூழ்சிலபூங்கரமே. (௨0௬)

சிலசிலகைத்தலமடுகழலிற்பலசெறிகழல்கட்டினவே
சிலசிலகைத்தலமிறுகுபுயத்திடைசெறிதொடையிட்டனவே
சிலசிலகைத்தலமணிகொளுரத்திடைபணிகடிருத்தினவே
சிலசிலகைத்தலம்விரல்கொடுசுட்டினசெறுநர்திகைத்திடவே. (௨0௭)

மாயிருஞாலமெலாம்வெயில்போயொருமரகதசோபையுறப்
போயிருபாலும்வளைந்துவளைந்தெதிர்பொருமுனைவெம்படையோ
டாயிரமாயிரமங்கைபுறப்படவண்டருமாதவரும்
பாயிரநான்மறைபாடிவியந்துபணிந்துபுகழ்ந்தனரே. (௨0௮)

ஆரணனேயரனேபுவனங்களனைத்தையுமன்றுதவுங்
காரணனேகருணாகரனேகமலாசனிகாதலனே
வாரணமேபொதுவேயொருபேரிடவந்தருளும்புயலே
நாரணனேமுனியேன்முனியேலெனநாகர்பணிந்தனரே. (௨0௯)

மாதவனேமுனியேலெமையாளுடைவானவனேமுனியேல்
யாதவனேமுனியேலிதயத்திலிருப்பவனேமுனியே
லாதவனேமுனியேன்மதிவெங்கனலானவனேமுனியே
னீதவனேமுனியேன்முனியேலெனநின்றுபணிந்தனரே. (௨௧0)

கங்கைமகன்கதிரோன்மகனம்பிகைகாதன்மகன்றனய
ரங்கவையின்கணிருந்தநராதிபரடையவெழுந்தடைவே
செங்கைகுவித்தசிரத்தினராயுணர்வொன்றியசிந்தையரா
யெங்கள்பிழைப்பினையின்றுபொறுத்தருளென்றுபணிந்தனரே. (௨௧௧)

---

* உதணமெடுத்தன என்றும் பாடம்.

கண்ணபொறுத்தருள்வெண்ணெயருந்தியகள்வபொறுத்தருள்கார்
வண்ணபொறுத்தருள்வாமபொறுத்தருள்வரதபொறுத்தருணீ
திண்ணமனத்துணர்வொன்றுமிலாதவர்செய்தபெரும்பிழையென்
றண்ணன்மலர்க்கழல்சென்னியில்வைத்தெதிரன்றுதுதித்தனரே. (உகஉ)

தேவரும்வாசவனுந்தவருந்திசைமுகனுநராதிபரும்
யாவருமன்பினொடாயிரநாமமுமெண்ணியிறைஞ்சுதலான்
மூவருமொன்றெனநின்றருளுதனுமுனிவுதவிர்ந்தருளா
மீவருமண்டமுறுந்திருமேனியொடுங்கினன்மீளவுமே. (உகங)

தன்னிலுயர்ந்தவர்யாருமிலாமுகில்சதுர்மறையின்படியே
யென்னிலமுந்திருவடியின்மறைந்திடவிப்படிநின்றிடவும்
பின்னையுமஞ்சியயர்ந்திலனெஞ்சுபெயர்ந்திலனைசனமுஞ்
சென்னியிலுங்கரம்வைத்திலன்வண்புகழ்சிறிதுமொழிந்திலனே. (உகச)

தொல்லைவயின்கணிருந்தநராதிபதுன்மதியாலெனைநீ
கொல்லநினைந்ததுநன்றெனவன்றிறல்கூறினனெம்பெருமா
னெல்லையினின்குலமுற்றுமடிந்திடவுற்றுமலைந்தொர்கணத்
தெல்லையின்வெஞ்சமர்நூறுவன்யாவருமேறுவர்வானுலகே. (உகரு)

அஞ்சினநின்னையழித்திடநின்னுடனன்றுபெருஞ்சமர்வாய்
வெஞ்சுடராயுதமொன்றுமெடுக்கிலமென்றுவிளம்பியது
மெஞ்சமலைந்தெதிர்வந்துயிர்கொள்ளுதுமென்றுதனித்தனியே
பஞ்சவர்கூறியவஞ்சினவாசகமும்பழுதாமெனவே. (உகசு)

என்றுரையாடிநெடுங்கடல்வண்ணனெழுந்தருளப்பிறகே
சென்றனரெம்முடிமன்னவரும்பணிசேர்கொடியோனையலார்
நின்றுபசாரமுரைத்தவர்தம்மைநிறுத்தியநந்தரமே
வன்றிறலங்கர்பிரானொடுகூறினன்மற்றொருவாசகமே. (உகஎ)

வண்மையினாலுயரங்கர்குலாதிபமதிகுலம்வாழ்வுறவந்
துண்மையினாலுயர்மன்னவரைவருமுன்னிலுனக்கிளையோர்
பெண்மையினாலுயர்குந்திவயிற்றிடைபெருமையினாலிதயத்
திண்மையினாலுயர்நின்னையுமன்பொடுதினகரனல்கினனே. (உகஅ)

ஏயுநெடுங்கொடிமுரசுடையோனையெழிற்றருமன்றரவே
வாயுவழங்கினன்வீமனைநல்கினன்விசயனைவாசவனு
மாயுநிகழ்ந்திடுவேதமருத்துவரன்பொடளித்தனர்செந்
தேயுவெனுந்திறனகுலனையுஞ்சகதேவனையும்பெரிதே. (உககூ)

அந்தணன்முன்றருமந்திரமொன்றினிலறுவரையுங்கடவுட்
குந்திபயந்தனள்யானினியென்பலகூறுவதுங்களினீ
ரிந்தநிலம்பெறுவீர்தவிர்கிற்பெறயாரினிவேறுரியார்
வந்தினிநம்பியர்தம்மொடுசேர்கெனமாயன்மொழிந்தனனே. (உஉ0)

வேறு.

கன்றால்விளவின்கனியுகுத்துங்கழையானிரையின்கணமழைத்துங்
குன்றான்மழையின்குலந்தடுத்துங்குலவுஞ்செல்வக்கோபாலா
வின்றாலெனதுபிறப்புணர்ந்தேனென்றன்புருகியெம்பியர்பாற்
சென்றாலென்னைநீயறியச்செகத்தாரென்றாஞ்சிறியாரோ. (௨௨௧)

ஆரென்றறியத்தகாதவெனையரசுமாக்கிமுடிசூட்டிச்
சீருந்திறமுந்தனதுபெருந்திருவுமெனக்கேதெரிந்தளித்தான்
பாரின்றறியநூற்றுவர்க்கும்பழிதீர்வென்றிப்பாண்டவர்க்கும்
போரென்றறிந்துஞ்செய்நன்றிபோற்றாதவரிற்போவேனே. (௨௨௨)

இரவிக்குரியதிருமதலையிவ்வாறுரைக்கவிசைவண்டு
விரவிப்பயிலுந்துழாய்முடியோன்வேறோர்மொழியும்விளம்பாம
லுரவிற்றடந்தோளுரவோனையேகென்றருளியொருசார்வெம்
புரவித்தாமாநின்றானைவருகென்றழைத்துப்புகல்கின்றான். (௨௨௩)

போயேகானம்பலதிரிந்துபுகன்றவிரதம்பொய்யாதோ
ராயேவந்தபாண்டவர்களைந்தூர்வேண்டமறுத்ததற்குச்
சேயேயனையசிலைமுனிவன்சேயோநாளைச்செருக்களத்தி
னீயேகரியென்றெடுத்துரைத்தானெடியோன்றுளபமுடியோனே. (௨௨௪)

ஆனாவுனதாண்மைக்குநிகரவனிதலத்தில்வேறுண்டோ
ஞானாதிபனேபோர்க்களத்தினாகக்கொடியோன்பணிந்துன்னைச்
சேனாபதியாகென்றாலுஞ்செலுத்தேனென்றானீமறுத்தி
யானாலுய்வரைவருமற்றவர்பாலுனக்குமன்புண்டே. (௨௨௫)

ஆயோதனத்திலடலரியேறனையான்றன்னையிவ்வாறு
மாயோனுரைத்துத்தன்விரலின்மணியாழியைமண்ணிடைவீழ்த்தான்
சேயோனதனையெடுத்தவன்றன்செங்கைகொடுக்கவாங்காமற்
றாயோயூர்கோள்பரிதிதனைச்சூழ்ந்ததகல்வான்மீதென்றே. (௨௨௬)

வரித்தாமரைக்கட்டிருநெடுமால்வான்வாய்நோக்கவரிவிற்கைப்
பரித்தாமாவுமாழியுடன்பரிதிவடிவந்தனைப்பார்த்தான்
கிரித்தாழ்கவிகைக்கருங்கள்வன்கிளர்நான்முனிவன்மைந்தனையும்
பிரித்தானவனுஞ்சூளுற்றானென்றாரிருந்தபேரவையோர். (௨௨௭)

தனிவந்தகலுந்தூதனைப்போய்த்தானேயணுகித்தடஞ்சாப
முனிவன்புதல்வன்மோதிரந்தொட்டருஞ்சூண்முன்னர்மொழிகின்றா
னினிவந்துறவாய்நின்றாலுமெங்ஙன்றெளிவதிவனையெனத்
துனிவந்தரசர்முகநோக்கிச்சொன்னானிடியேறன்னானே. (௨௨௮)

துளியார்மதுவின்வலம்புரித்தார்த்துரியோதனன்றான்சொல்லியது
மொளியாரவையில்வாள்வேந்தரொருவர்க்கொருவருரைத்தனவுங்
களியானையனான்செவிப்படலுங்கலங்கிச்சித்தமிவரென்னைத்
தெளியாவண்ணம்பேதித்தான்றிருமாலென்றேசிந்தித்தான். (௨௨௯)

தண்ணந்துளபமுடியோனுந்தனித்தங்கிருந்துதன்மனத்தி
னெண்ணம்பலித்ததெனமகிழ்ந்தேபிளையோன்றனக்குவிடைநல்கி
விண்ணின்றமரர்மிகத்துதிக்கவிதுரன்மனையின்மேவியபின்
றிண்ணங்கடவுட்குலவரசன்வருமாறறிந்துசிந்தித்தான். (௨௩௦)

அந்தக்கணத்தில்வந்திறைஞ்சுமாகண்டலனைத்தழீஇக்கொண்டு
கந்தத்துளபமுடியோனுங்கண்ணுங்கருத்துங்களிகூரத்
தந்தத்தொழிலினரிசுமந்ததவிசினிடையேயுடனிருத்தி
முந்தக்கருதுகின்றவினைமுடிப்பானுபாயமொழிகின்றான். (௨௩௧)

கிரியின்சிறகையரிபடையாய்க்கேண்மோவாண்மைக்களமீதில்
வரிவெஞ்சிலைக்கைவிசயனுக்குமாறாய்முனிந்துவருகின்ற
வெரியுங்கனல்வாய்விடவரவொன்றிவனுக்குற்றபகையான
வரியின்புதல்வன்றனக்கொருபேரம்பாகியதாரறியாதார். (௨௩௨)

கன்னன்விசயன்றனைக்கொல்லிற்கடற்பார்முழுதுங்கண்ணில்லா
மன்னன்புதல்வன்றனக்கேயாமொழிந்தோர்தாமுமடிந்திடுவார்
முன்னஞ்சூதின்மொழிந்தபகைமுடியாதிருக்கிலவர்க்கல்ல
நின்னெஞ்சறியயானறியநினக்கேவசையுநிலையாமே. (௨௩௩)

கவசங்கனககுண்டலமென்றிரண்டுபுனையிற்கற்பாந்த
திவசம்பொரினுங்கன்னனுயிர்செகுப்பார்மண்ணிற்சிலருண்டோ
வவசங்கிளைஞருறத்துணைவராற்றக்களத்திலடுகுரக்குத்
துவசம்படைத்தோன்படும்பபந்ததுணைவாவின்னேசொன்னேனே. (௨௩௪)

வல்லார்வல்லகலைஞருக்குமறைநூலவர்க்குங்கடவுளர்க்கு
மில்லாதவர்க்குமுள்ளவர்க்குமிரந்தோர்தமக்குந்துறந்தவர்க்குஞ்
சொல்லாதவர்க்குஞ்சொல்பவர்க்குஞ்சூழுஞ்சமயாதிபர்களுக்கு
மல்லாதவர்க்குமிரவிமகனரியதானமளிக்கின்றான். (௨௩௫)

மைந்தற்குறுதிநீவேண்டில்வல்லேமுனிவர்வடிவாகிச்
சந்தப்பனுவலிசைமாலைத்தாருகரனைவிரைந்தெய்தி
யந்தக்கவசகுண்டலங்களளிப்பாயென்றாலவனென்று
மிந்தப்புவியின்மறுத்தறியானுயிரேயெனினுமீந்திடுவான். (௨௩௬)

இரண்டுமவன்பானீகவரிலிருந்தேறூர்ந்திப்படியரசர்
திரண்டுவரினும்வெஞ்சமரிற்றிண்டேர்விசையனெதிர்நில்லார்
முரண்டுபொருவிற்கன்னனுந்தன்முன்னேயெய்திமுடிசிதறிப்
புரண்டுமறியுமெனவணங்கிப்புத்தேளரசன்போகின்றான். (௨௩௭)

வேறு.

தண்டுதாளெனக்குனிந்துடலலமரத்தாளிணைதளர்ந்துதள்ளாடக்
கண்டியாவருங்கைதொழக்கவித்தகைக்குடையுடன்கங்கைநீர்நுரையை
மொண்டுமேலுறச்சொரிந்தெனவிரிந்தவெண்ணரையுடன்மூப்பொருவடிவங்
கொண்டதாமெனவொருமுனியாகியக்கொற்றவன்வாயில்சென்றடைந்தான். ( )

அடுத்ததானமும்பரிசிலுமிரவலர்க்கருளுடன்முற்பகலளவுங்
கொடுத்துநாயகன்புகுந்தனனாளைநீர்குறுகுமினென்றவன்கோயிற்
றடுத்தவாயிலோர்மீளவுமுணர்த்தலிற்றலைவனுந்தருகெனவிரைவின்
விடுத்தனான்மறைமுனியைமுன்காண்டலும்வேந்தனுந்தொழுதடிவீழ்ந்தான். ()

என்னமாதவம்புரிந்தனனன்பரிந்துநீண்டெழுந்தருளுதற்கென்று
பொன்னினாசனத்திருத்திமெய்யன்புடன்பூசையுமுறைமையிற்புரிய
வன்னவேதியன்றளர்ந்தவென்னடையினாலானதேபிற்பகலென்று
சொன்னவேலையினகைத்துனைக்களிப்பனீசொன்னவையாவையுமென்றான். ()

அருத்திபீதல்பொற்சுரதருவினுக்குமற்றரிதுநீயளித்தியோவென்று
விருத்தவேதியன்மொழிந்திடநகைத்துநீமெய்யுயிர்விழைந்திரந்தாலுங்
கருத்தினோடுனக்களித்திலேனெனிலெதிர்கறுத்தவர்கண்ணிணைசிவப்ப
வுருத்தபோரினிற்புறந்தருநிருபர்போயுறுபதமுறுவனென்றுரைத்தான். (௨௪௧)

வந்தவந்தணன்கவசகுண்டலங்களைவாங்கிநீவழங்கெனக்கென்னத்
தந்தனன்பெறுகெனவவன்வழங்கவிண்டலத்திலோர்தனியசரீரி
யிந்திரன்றனைவிரகினான்மாயவனேவினான்வழங்கனீயெனவுஞ்
சிந்தையின்கணோர்கலக்கமற்றளித்தனன்செஞ்சுடர்த்தினகரன்சிறுவன். (௨௪௨)

அண்டர்யாவருமலர்மழைபொழிந்தனரந்தரதுந்துபியார்ப்பக்
கொண்டல்வாகனன்கொண்டமெய்பொழிந்துதன்கோலமெய்புடன்வெளிநின்றான்
கண்டுமாமனமுருகியேகளித்திடுங்கன்னனுக்கந்நெடுங்கடவுண்
மண்டுபோரினில்வயந்தருமிதுவெனமற்றொருகொற்றவேலெடுத்தே. (௨௪௩)

வெலற்கருந்திறல்விசயன்மேலொழித்துநீவெஞ்சினமடங்கல்போனெஞ்சிற்
கலக்கமொன்றறப்பொருதிறல்புனைந்திடுகடோற்கசக்காளைதன்னுயிரே
யிலக்குவந்தெதிர்மலைந்தபோதிதற்கெனவேவெனமறையையுமியம்பிச்
சொலற்கரும்புகழ்ச்சுரபதிகொடுப்பவத்தோன்றலுந்தொழுதுகைக்கொண்டான்.

நிரந்தரம்புகழ்நிலைபெறுங்கன்னனைநெஞ்சுறமகிழ்ந்தவணிறுத்திப்
புரந்தரன்பசுந்தண்டுழாயணிந்திடும்புயல்வணனிருந்துழிப்போந்தே
யிரந்துசென்றுதான்மொழிந்ததுமவ்வளவீந்ததுமாங்கவற்கிசைத்தான்
வரந்தருந்திருமாலதைவினவியவ்வாசவன்றனக்குரைவழங்கும். (௨௪௫)

உண்மையாகவெஞ்சமர்முகத்தெதிர்படையொன்றும்வந்துடலுறவொட்டாத்
திண்மையாலுயர்கவசகுண்டலங்களைச்சென்றிரந்தவற்கிவன்கொடுத்தா
னெண்மையாயினுங்கிளைஞரேயேற்பினுமீவிலாப்புன்செல்வரியார்
வண்மையாளர்தம்மாருயிராயினுமாற்றலார்கேட்பினுமறாரே. (௨௪௬)

வாசவன்றனக்குவிடைகொடுத்ததன்பின்வந்தகாரியந்தனைமுடிப்பான்
கேசவன்றனதுதாதையோடுதித்தகேண்மைகூர்தெரிவையைக்கிட்டித்
தேசவன்றந்தகுருசில்பால்விரைவிற்செல்கெனப்பயந்தசேயிழையும்
பாசவன்பாசமுன்னுறவலிப்பப்பாதபங்கயஞ்சிவப்பித்தாள். (௨௪௭)

வந்துகுந்திநின்கோயிலெய்தினளெனவாயிலோருரைத்திட மைந்தன்
முந்துமன்புடன்றொழுதெதிர்கொண்டுநன்முறைமையாலாசனத்திருத்தி
யிந்துவின்கதிர்கண்டுமேன்மேலுற்றிரங்கிவான்கரைகடந்தேறுஞ்
சிந்துவெண்டிரைச்சிந்துவொத்துருகுந்தெரிவையோடுரைசிலசெப்பும். (௨௪௮)

அன்னைவந்ததென்னருந்தவப்பயனென்றன்பினாலின்புறவணங்கி
யென்னைவந்தவாறென்னமற்றவளுமீன்றதாயானுனக்கென்று
முன்னைவந்தொருமந்திரந்தவமுனிமொழிந்ததுங்கதிரவனருளாற்
பின்னைவந்ததும்பேழையில்விடுத்ததும்பிழையிலாதுரைத்திடக்கேட்டே. (௨௪௯)

மாயனார்விரகிதுவெனமனத்தினின்மதித்துவந்தளித்திடும்வள்ள
னீயனுளெனைப்பயந்தவளென்னினுநின்மொழிநெஞ்சுறத்தேறேன்
பேயனார்சிலர்பேரறிவின்மையாற்பெற்றதாயெனக்கெனவந்து
தூயநாகரினமைந்தநேர்தகிலாற்றுன்பமுற்றென்புருவானார். (௨௫0)

அடாதுசெய்தவர்படாதுபட்டனரெனுமங்கர்கோன்றன்மொழிகேட்டுத்
தடாதவன்புடைக்கெடாததூமொழிபகர்தையலுமையலிற்றவிர்ந்து
படாமதென்கையிற்றருகெனவருதலும்பயந்திலேனெனிலெனைமுனியென்
றெடாவிரித்தலைத்துடற்படப்போர்த்தெதிரீன்றதாயாமெனவிருந்தாள். (௨௫௧)

இருந்ததாயீன்றவன்றுபோலுருகியிருதடங்கொங்கைபால்சொரிந்தா
ளருந்துவான்போல*விரவிசேய்விரும்பியாதரத்துடன்புளகானான்
புரிந்ததாயன்போடிறுகுறத்தழுவிப்பொன்முடிமோயினளுபிராப்
பரிந்துநானன்றேயுனைவளர்த்தெடுக்கப்பாக்கியஞ்செய்திலேனென்றாள். (௨௫௨)

வருகவென்மதலாயிளைஞரைவருநின்மலரடியன்பினால்வணங்கி
யுரிமையான்மனமொத்தேவலேபுரியவொருதனிச்செய்யகோலோச்சி
யரசெலாம்வந்துன்கடைத்தலைவணங்கவாண்மையுஞ்செல்வமும்விளங்கக்
குருகுலாதிபர்க்குங்குரிசிலாய்வாழ்வுகூர்வதேகடனெனக்குறித்தாள். (௨௫௩)

பெற்றநீர்மகவன்பிலாமையோவன்றிப்பெரும்பழிநாணியோவிடுத்நீ
ரற்றைநாட்டொடங்கியென்னையின்றளவுமாருயிர்த்துணையெனக்கருதிக்
கொற்றமாமகுடம்புனைந்தரசளித்துக்கூடவுண்டுரியதம்பியருஞ்
சுற்றமானவருமென்னடிவணங்கத்தோற்றமுமேற்றமுமளித்தான். (௨௫௪)

மடந்தைபொற்றிருமேகலைமணியுகவேபாசறத்திகழுமேகாந்த
விடந்தனிற்புரிந்தேநானயர்ந்திருப்பவெடுக்கவோசோக்கவோவென்றான்
றிடம்படுத்திடுவேலிராசராசனுக்குச்செருமுனைச்சென்றுசெஞ்சோற்றுக்
கடன்கழிப்பதுவேயெனக்கினிப்புகழுங்கருமமுந்தருமமுமென்றான். (௨௫௫)

பின்னையும்பற்பன்மொழிந்தபின்பலவும்பேசியென்பூசலோவிளைந்த
துன்னிநீரிங்குவந்ததென்கரவாதுண்மையாலுள்ளவாறுரைமி
னென்னமைந்தனுமிப்பரிசினாலுரைப்பவீன்றறத்துறந்தவன்றையினு
மன்னைநெஞ்சழிந்தேயிருகணீர்சொரியவலறிவாய்குளறிநொந்தழுதாள். (௨௫௬)

*இளவலுமுருகியந்தியான்கண்டகன்றானென்றும் பாடம்.

ஆண்டுமாமகனுமிருகணீர்துடைத்தவ்வன்னையைப்பன்முறைதேற்றி
மூண்டவல்வினையின்பயனலாதியார்க்குமுயற்சியால்வருவதொன்றுண்டோ
வேண்டும்யாவையுமேதருகுவேனீரும்வேண்டியவேண்டுகவென்னப்
பாண்டுவின்றிருமாமனைவியுமதற்குப்பண்பினாலின்னனபகர்வாள். (௨௫௭)

பார்த்தன்வெஞ்சமரினின்னுடன்மலைந்தாற்பகைப்பெரும்பாந்தளம்பகழி
கோத்தலும்பிழைத்தான்மறித்துநீவிடுத்துக்கோறலென்றொருவரங்குறித்தாள்
வாய்த்தமற்றவர்களினைவரென்றவரைமலையலென்றொருவரங்குறித்தாண்
மூத்தவன்காதலினைவர்தம்பொருட்டான்மொழிந்தமைகேட்டிவைமொழிவான். ()

தெறுகணையொன்றுதொடுக்கவுமுனைந்துசெருச்செய்வோன்சென்னியோடிருந்தான்
மறுகணைதொடுப்பதாண்மையோவலியோமானமோமன்னவர்க்கறமோ
வுறுகணையொன்றேபார்த்தன்மேற்றொடுப்பனொழிந்துளோருய்வரென்றுரைத்தான்
றறுகணரலர்க்குந்தறுகணனவர்க்குந்தண்ணளிநிறைந்தசெங்கண்ணான். (௨௫௯)

பெருவரமிரண்டும்பெற்றபின்றன்னைப்பெற்றதாயினைக்கரங்குவித்துத்
தருவரமெனக்குமிரண்டுளவுலகிற்சராசரங்களுக்கெலாந்தாயீர்
வெருவருமமரிற்பார்த்தனாலடியேன்வீழ்ந்தபோதவனிபரறிய
மருவருமுலைப்பாலெனக்களித்துந்தமகனெனும்வாய்மையுமுரைப்பீர். (௨௬௦)

உய்வருதிறல்வெம்போர்முடிப்பளவுமுமக்குநான்மகனெனுந்தன்மை
யைவருமறியாவண்ணநீர்காப்பீரல்லதங்கவர்சிறிதறியின்
மைவருங்கடற்பாரனைத்தையுமெனக்கேவழங்குவர்வழங்கினால்யானென்
கைவருந்துணைவன்றனக்கலால்வழங்கேன்கடைப்பிடிகருமமீதென்றான். (௨௬௧)

என்றலுமதுகேட்டீன்றதாயொக்குமென்றுகொண்டவ்வரநேர்ந்து
வன்றுயர்மேன்மேல்வளரயான்றளராவகையுயிருனக்குமுற்பெயர்வ
தென்றினியெனத்தன்கண்கணீர்சொரியவிணைந்துநைந்தழுதழுதிரங்கி
யென்றருண்மதலைதனைத்தழீஇநிறுத்தியாதவனிருந்துழிச்சென்றாள். (௨௬௨)

கண்ணனுங்குந்திகன்னனோடுரைத்தகருத்தெலாந்திருத்தமாக்கேட்டாங்
கெண்ணமுமுடிந்ததெனமகிழ்ந்தந்தவணங்கையுமில்லிடையிருத்தித்
தண்ணளியுடன்றன்பின்வருநிருபர்தம்மையுமுறைமுறைநிறுத்திப்
பண்ணமைதடந்தேர்மீதுகொண்டன்றேபாண்டவருறைநகரடைந்தான். (௨௬௩)

தூதுபோயரவத்துவசனோடுறுதிசொன்னதுமறுத்தவன்சினந்து
மோதுபோர்புரியத்துணிந்ததும்விதுரன்மூரிவில்லிறுத்ததுங்கங்குற்
போதுபோய்வஞ்சம்விளைத்ததுங்கன்னன்புரந்தரற்கீந்ததும்பயந்த
மாதுபோய்வரங்கள்பெற்றவையொழியமற்றெலாமைத்துனர்க்குரைத்தான். ()

கிருட்டிணன்றூதுச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௬௧௩.

படையெழுச்சிச்சருக்கம்.

படர்ந்துகானகந்திரிந்துமீண்டன்புடன்பணிந்தபஞ்சவர்க்காகக்
கடந்தஞானியர்கடவுளர்காண்கலாக்கழலிணைசிவப்பேறத்
தொடர்ந்துநான்மறைபின்செலப்பன்னகதுவசன்மாநகர்த்தூது
நடந்துநாயகன்கருமுகில்வண்ணமென்னயனம்விட்டகலாதே. (௧)

முகுந்தன்வாசகங்கேட்பதன்முன்னமேமுரசுயர்த்தவன்முன்னி
மிகுந்தகோபமோடிக்கணமுடிப்பன்யான்வெம்பகையினியென்னாத்
தருந்தராதிபர்தன்னுடனியைந்தவர்தமக்குவெஞ்சமர்மூளப்
புகுந்தவாறெலாந்தூதரிற்போக்கினானோலையின்புறத்தம்மா. (௨)

எட்டுத்திக்கினுமுள்ளமன்னவருடன்யாகசேனனும்வந்தான்
றிட்டத்துய்மனுந்திட்டகேதுவும்விறற்சிகண்டியுமுறைவந்தா
ரொட்டிப்போர்பொருமுத்தமோசாவும்வேலுதாமனுமுடன்வந்தார்
பட்டப்போதகந்தேர்பரியாளெனும்படையுடைப்பாஞ்சாலர். (௩)

விராடபூபனுஞ்சதானிகநிருபனும்விறற்சிவேதனுமாதி
வராககேதுவுமுத்தரகுமாரனுமச்சநாட்டவர்வந்தார்
பராவுபேருடைச்சேரசெம்பியருடன்பாண்டியன்முதலோருங்
குராநறும்பொழிற்கேகயத்தலைவருங்குந்திபோசரும்வந்தார். (௪)

அரக்கிதந்தருள்கடோற்கசக்காளையுமபிமனோடிராவானும்
விரிக்கும்வெண்குடைவிந்தனுஞ்சோமனும்வீரகீர்த்தியும்போரிற்
செருக்குநெஞ்சுடைப்புண்டலன்*செபசனன்செருவிடைத்தெவ்வோடத்
துரக்கும்வெம்பரித்திரௌபதரைவருஞ்சூழ்படையுடன்வந்தார். (௫)

சீனர்சாவகர்மத்திரர்மாளவர்தெலுங்கர்வெங்கலிங்கேசர்
சோனகாதிபர்கன்னடர்மாகதர்துலுக்கர்குச்சரரொட்ட
ரானவெம்படையாதியாய்நடப்பனவையிரண்டெண்பூமித்
தானைமன்னரும்வந்தனரிந்தமண்டலத்திலார்வாராதார். (௬)

பாங்கினால்வருமகுடவர்த்தனருடன்பட்டவர்த்தனருள்ளார்
வாங்கும்வெஞ்சிலைமன்னவகுமாரரின்மண்டலீகரினுள்ளார்
தாங்குமாமொழிமந்திரிகளிலிகற்றந்திரிகளினுள்ளா
ரோங்குநீள்கொடிப்பதாகினிதிரண்டவாறுன்னியாருரைக்கிற்பார். (௭)

யானைதேர்பரியாளெனுந்திறத்தினாலிலக்கணத்தெண்பட்ட
சேனையேழுமக்குரோணிகடிரண்டனதிரைக்கடலேழென்னச்
சோனைமாமுகிலேழுமொத்ததிர்ந்தெனத்துந்துபிக்குலமார்ப்பத்
தானைமன்னரைத்தனித்தனிமுறைமையாற்றருமனுமெதிர்கொண்டான். (௮)

* செயவிறற் சேனனுந் தெவ்வோட என்றும் பாடம்.

தான்வணங்குநர்தன்கழல்வணங்குநர்தங்களைத்தழீஇக்கொண்டு
தேன்வணங்குதார்மன்னவரிருந்தபின்சென்றவர்முகநோக்கி
யான்வணங்கிமாமாயனைத்தூதுவிட்டெனதுபாரெனக்கென்ன
வான்வணங்கினும்வணங்கலாமுடியினான்மறுத்தமர்புரிகென்றான். (௯)

கேண்மையாலெனதரசுநீதருகெனக்கேட்கவுமதியாம
லாண்மையாலவன்மறுத்தமையெனக்குயிரனையநீரறிமின்கள்
வாண்மையால்வரிவின்மையான்மேன்மையால்வலிபுரைக்கலனுங்க
டோண்மையாலமர்தொலைத்தடல்வாகையுஞ்சூடுவனினியென்றான். (௧0)

வெங்கண்மாமுரசுயர்த்தவனிம்மொழிவிளம்பலும்விளக்கஞ்செய்
திங்கள்சூழ்தருதாரையின்கணமெனச்சேர்ந்தமன்னவரெல்லா
மெங்களாவியுமெம்பெருஞ்சேனையும்யாவையுநினதென்றார்
தங்கள்வீரமுமானமுமரபுநல்வாய்மையுந்தவறில்லார். (௧௧)

சுற்றுமன்னவர்சொற்றசொற்களிற்பகைதொலைத்தனன்போலாகிச்
செற்றுவார்கழற்சிவேதனைத்தன்பெருஞ்சேனையின்பதியாக்கி
யற்றைநாண்முரசறைந்தபார்குறித்தனுமரவமின்மகன்றெவ்வர்
கொற்றவெம்படையனைத்துமோரம்பினாற்கொல்வனோர்தினத்தென்றான். (௧௨)

பாண்டுவின்றிருமைந்தர்களைவரும்பார்த்திவருடன்கூடி
யீண்டிருந்தனரிவ்வழிச்செருக்குறித்தெழிலிமேனியனெடுந்
தூண்டும்வெம்பரித்தேர்த்துரியோதனன்றூதுபோய்ப்பரந்தாமன்
மீண்டுவந்தபின்னவ்வழிப்புரிந்தனவிளம்புகின்றனமன்னோ. (௧௩)

வேறு.

முந்தரவுயர்த்தோனோலைமுடியுடையரசர்காண்க
வெந்திறலவரோடும்வெஞ்சமர்விளைந்ததாலே
தந்தமகிளைஞரோடுஞ்சாதுரங்கத்தினோடும்
வந்தவர்தமக்கேவாழ்வுமுழுதுமென்றெழுதிவிட்டான். (௧௪)

மித்திரரானமன்னர்விறலுடைத்துணைவரோடுஞ்
புத்திரரோடுந்தத்தம்போர்புரிசேனையோடுஞ்
சத்திரநிழல்விடாததன்மையராகிச்சூழ
மத்திரபதியும்வென்றிமருகருக்காகவந்தான். (௧௫)

இடைப்படுநெறியில்வைகுமிவனதுவரவுகேட்டுத்
தொடைப்படுதும்பைமாலைச்சுயோதனன்சூழ்ச்சியாக
மடைப்படுவிதியிற்செய்தவிருந்தினான்மருண்டவற்கே
படைப்படுசேனையோடும்படைத்துணையாயினானே. (௧௬)

சல்லியன்றானுமாயச்சகுனியுந்தறுகண்வெம்போர்
வல்லியமனையவென்றிமாகதர்பதியுங்கொற்ற
வில்லியல்கடகத்திண்டோள்விந்தரன்விந்தனென்று
சொல்லியநிருபர்தானையாறெடுங்கடலிற்சூழ்ந்தார். (௧௭)

கலிங்கர்கோன்சோமதத்தன்கௌசிகன்காம்பிலீசன்
றெலுங்கர்கோன்போசனாதிகேகயன்றிகத்தபூபன்
வலங்கொள்வேற்கவுண்டராசன்மாளவன்வளவன்சேரன்
றுலங்குநீரோகனீகனெனும்பலவேந்தர்தொக்கார். (௧௮)

பங்களங்குகுராஞ்சீனம்பப்பரங்கொப்பம்வங்கஞ்
சிங்களந்துளுவமங்கமாரியந்திகத்தஞ்சேதி
கொங்கணங்கடாரங்கொங்கங்கூபகமிரட்டமொட்ட
மெங்கணுமுள்ளவேந்தர்யாவருமீண்டிமொய்த்தார் (௧௯)

அண்ணலந்துரகத்தாமாவாதியாங்குமரராலு
மெண்ணிருபத்துநாறும்யாதவகுமரராலும்
வண்ணவேற்பூரிகௌரி*மாமுதற்குமரராலு
மெண்ணருஞ்சேனைவெள்ளமெங்கணும்பரந்தமாதோ. (௨0)

தம்பியரனைவருந்துச்சாதனன்முதலாவுள்ளோர்
வெம்பரிதடந்தேர்வேழ்ம்வேல்சிலைவடிவாள்வல்லோ
ரம்பரத்தளவுமுந்நீரம்பரபெழுந்ததென்ன
வும்பருமிம்பராருமுரகரும்வெருவவந்தார். (௨௧)

வீடுமன்கிருபன்கன்னன்விற்கையாசிரியன்வையம்
பாடுசேர்விகத்தசேனன்பகதத்தன்முதலாவுள்ளோ
ராடல்வெம்பரிதேர்யானையனீகினித்தலைவர்செம்பொற்
கோடுயர்குன்றஞ்சூழ்ந்தகுலகிரியேழுமொத்தார். (௨௨)

நதியெனைப்பலவும்வந்துசிந்துவினண்ணுமாபோ
லெதிரறப்பொருதுவெல்லுமிராசமண்டலங்களெல்லாஞ்
சதமகற்குவமைசாலுந்தரணிபன்றன்னைச்சூழ்ந்து
பதினொரக்குரோணிசேனைபார்மிசைப்பரந்தவன்றே. (௨௩)

பரசுடையிராமன்பாதபங்கயஞ்சென்னியேந்தி
வரிசிலைவேதங்கற்றுமற்றவன்றனையும்வென்ற
குரிசிலைக்கங்கைதந்தகுருகுலக்கோமான்றன்னை
யரசன்வெஞ்சேனைக்கெல்லாமதிபதியாக்கினானே. (௨௪)

படையெழுச்சிச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௬௫௭.

முகூர்த்தங்கேள்விச்சருக்கம்.

கயம்படுமனத்தனயகண்ணிலாவரசன்மைந்தன்
வயம்படகினைந்துகங்குல்வகுத்ததோர்சூழ்ச்சிதன்னாற்
பயம்படுமெல்லரோடுபாதலமடியநீண்ட
சயம்படுகமலத்தாளென்றலைமிசையகல்கிலாவே. (௧)

*மன்னவகுமராராலும் என்றும் பாடம்.

அளப்பிலாச்சேனைநாதனடிபணிந்தவனிவேந்தன்
களப்பலிக்குரியார்யாவர்கடவுநாள்யாவதென்னத்
தளப்பிலாமுகூர்த்தம்வல்லோன்சாதேவனல்லதில்லை
யுளப்பொலிவுடையாயின்றேயுற்றவற்கேண்மினென்றான். (௨)

ஒன்றநம்படைகளெல்லாமொருபகற்பொழுதிற்கொல்வா
னின்றனனிராவானென்பானீயவன்றன்னைவேண்டிற்
கொன்றெனைப்பலிகொடென்றுகூறுமக்குமரற்கொன்றால்
வென்றுனக்கரசும்வாழ்வுமெய்தலாம்விரைவினென்றான். (௩)

என்றலுமவனுமாங்கோரியந்திரவெகினமூர்ந்து
சென்றனனவனுங்கேட்டுச்சிலையில்வெங்கதிரைத்திங்க
ளொன்றியபகலிராவிற்களப்பலியூட்டினல்லால்
வென்றிடலரிதென்றிட்டான்கிளைஞரைவேறிடாதான். (௪)

ஐவரிலிளையோன்றன்பான்முகூர்த்தங்கேட்டவர்சேயான
பைவருமுடியோன்றன்பாற்சேறலும்பணிந்துதாதை
யுய்வருவரங்கேட்டென்னையூட்டுகபலிநீயென்று
னெய்வரிசிலையினானும்பெற்றனனென்றுமீண்டான். (௫)

முகூர்த்தங்கேள்விச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௩௪௨.

களப்பலியூட்டுசருக்கம்.

குன்றெடுத்தாயர்மாதர்குரவைகொண்டொருவிளாவிற்
கன்றெடுத்தெறிந்துவெய்யகாளியற்கிருதாணல்கி
யன்றெடுத்திறுத்தவில்லேயனையவில்விழவுகாண்பான்
சென்றெடுத்திறுத்துநின்றசெங்கண்மாலெங்கள்கோவே. (௧)

கொடுத்தனன்பலிக்குத்தன்னைக்குமரனென்றறிந்துகுன்ற
மெடுத்தவன்றிதிபன்னான்கினிடையுவாவின்றுகென்று
தொடுத்தநான்முனிவரோடுஞ்சொல்லினன்சுடர்கடப்பி
லடுத்திதுவென்னையென்னவன்றதுவாயதன்றே. (௨)

ஆயபின்றருமற்குற்றவாறெலாப்விளம்பியின்று
நீயவன்றனக்குமுன்னேகளங்கொளநேரினல்லாற்
போயவன்றன்னைவேறலரிதெனப்புகன்றுசெங்கண்
மாயவனென்னைவல்லேவன்பலியூட்டுகென்றான். (௩)

தருமனுந்தம்பிமாருஞ்சாற்றியமாற்றங்கேட்டே
யுருமெறிபுயங்கம்போலவுள்ளழிந்துள்ளாய்நின்ற
கருமுகில்வண்ணன்பாதகமலத்தில்வீழ்ந்துவாழ்வும்
பொருமுனைவயமும்வேண்டேம்பொன்றுதலமையுமென்றார். (௪)

அப்பொழுதரவமைந்தனரவுயர்த்தவற்குநேர்ந்தே
னிப்பொழுதுமக்குநேர்ந்தேனெனைப்பலியிடுமினென்ன
மைப்புயல்வண்ணனின்னையல்லதுமண்ணிலென்னை
யொப்பவரில்லைநம்மிலொருவரேவேண்டுமென்றான். (௫)

அடியனேனிருக்கநீயேயரும்பலிக்கிசைவாய்போரின்
மடியநேரலரைக்கொன்றுவாழ்விவர்க்களிக்கநின்றாய்
கடியநேர்பலிதந்தாலுங்காயமர்சிலநாட்கண்டு
முடியநேரலர்வெம்போரின்முடிவெனக்கருளுகென்றான். (௬)

அவ்வரமவற்குநல்கியத்தினத்தவ்விராவிற்
றெவ்வரையொளித்துத்தங்கள்சென்மதேயத்திற்சென்றார்
மெய்வருகாளிமுன்னர்மெய்யுறுப்பனைத்தும்வீரன்
கொய்வருநிலையிற்கொய்துகொடுத்தனனென்பமன்றே. (௭)

ஆண்டகைகன்னிமுன்னரவயவமனைத்துமீந்து
காண்டகமலர்ந்ததீபமெனமுகங்கவினநின்றான்
பாண்டவர்யாமளத்தின்படிபகடாதியாக
வேண்டியபலிகளீந்துவென்றியும்வேண்டிமீண்டார். (௮)

களப்பலியூட்டுசருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௬௫௦.

அணிவகுப்புச்சருக்கம்.

மற்றைநாள்வசுதேவன்மாமகன்மண்டலீகருமன்னருஞ்
செற்றுநீடவைபுக்கிருந்தசிவேதனோடிவைசெப்பினா
னிற்றைநாளதிரதர்மகாரதர்சமரதாதியரெவரொடுங்
கொற்றவஞ்சிமிலைச்சியேகுககுருநிலத்திடையென்னவே. (௧)

அதிரதாதிபர்தானும்வீமனும்விசயனுந்திறலபிமனுஞ்
சிதைவிலாதசிகண்டிசாத்தகிதிட்டத்துய்மன்விராடர்கோன்
மதுரமாமொழிதருமனோடிவர்மாரதாதிபர்சமரதப்
பதிகளானவர்யாகசேனனுதாமனுத்தமபானுவே. (௨)

நண்ணுமர்த்தரதர்க்குநாயகர்நகுலனுஞ்சகதேவனு
மெண்ணும்வெற்றிபெறுங்கடோற்கசனென்னும்வீரனுமாகவே
மண்ணகத்தணியணிகளாகமகீபர்தம்மைவகுத்துளான்
விண்ணகத்தணிவிபுதர்சேனையில்வேளொடொத்தனன்வீரனே. (௩)

நெருங்குவெம்படைகண்டுவந்தபினைம்புலன்களுநெஞ்சமு
மொருங்குசென்றெனமன்னரைவருமாலும்வெஞ்சமமுன்னவே
மருங்குநின்றவிராமனும்பின்மதித்தபோர்முடிவளவும்யான்
பொருங்கடும்புனனதிகளாடுவனென்றுநண்பொடுபோயினான். (௪)

போனவெம்பலபத்திரன்பொருபூசலிற்புகுதேனென
மானவெஞ்சிலைமுன்னிறுத்தவிதூரனோடுமகிழ்ந்துபோய்க்
கானகங்களில்வரையில்வாழ்முனிகணம்விரைந்தெதிர்கொள்ளவே
நானமெங்கணுமாடுவானிருநாலுதிக்கினுநண்ணினான். (௫)

இடிபடப்படவருமுகிற்குலமெனநிரைக்கடலெனநெடுங்
கடிபடப்படவதிர்பணைக்குலமெனவதிர்ப்பனகறைகள்போ
லடிபடப்படவுரகர்பைத்தலையணிமணிக்கணமடையவும்
பொடிபடப்படவுடனடப்பனபுகர்முகக்கரிநிகரமே. (௬)

உருண்மணித்திகிரியின்முனைப்படிலுயர்பொருப்பையுமுரகர்வா
ழிருநிலத்திடைபுதைபடப்படவெதிர்நடப்பனவிவுளியின்
குரதுகட்கொடுகலகமிட்டணிகொடிநிரைத்துகில்கொடுபொலந்
தருநிலத்தவர்விழிதுடைப்பனசரதமிப்படியிரதமே. (௭)

பலவகைப்படுகவனமெய்க்கதிபவனமொப்பனபரவைசூ
ழுலகனைத்தையும்வெளியிலுய்த்தலினுரகருக்குமொருதவியா
யிலகுசக்கரசிகரிசுற்றடியெனவளைப்பனவெழுபெயர்க்
குலமுகிற்றலைகிழியவைப்பனகுரவிதத்தனபுரவியே. (௮)

புருவவிற்குனிவெழவுயிர்ப்பொடுபுகையெழத்துகிர்புரையும்வாய்
மருவுமுத்திளநிலவெழத்தனிமனநெருப்பெழவளர்தடக்
கரதலத்தயில்வெயிலெழப்புனைகலன்வனப்பெழமிளிருநீ
ணிரையிமைப்பறுவிழிசிவப்பெழநிருதரொத்தனர்விருதரே. (௯)

கொடிநெருக்கவுமதியெனத்திகழ்குடைநெருக்கவுநடைகொளா
ளடிநெருக்கவுமிபநெருக்கவுமயநெருக்கவுமெழுதுகட்
பொடிநெருக்கவும்வளர்புயத்தொடுபுயநெருக்கவுமொளியரு
முடிநெருக்கவுமுறைநெருக்கினர்முரசமொத்தசொல்லரசரே. (௧0)

பகன்மறைத்திருள்வரவிடுத்தெறிபவனமெய்க்கதியுடனுலா
யகனிலத்திடைவருநதிப்புனலருவருத்துயர்நதியின்வா
யுகள்வரிக்கயலினமுமொத்தனவுடுகுலத்துடனொளிர்பெருங்
ககனவட்டமுமறையவிட்டனகவசமொத்தனதுவசமே. (௧௧)

உறவின்மிக்கவர்பகையினெய்த்தவருதவுமப்படைகுடைநிழற்
செறிதலத்தினில்வளர்நகர்ப்படைதிரள்வனப்படைபொருள்விலைத்
தறுகண்மெய்ப்படையுறுதியிற்பொருதமதகப்படையெனவிரா
யறுவகைப்படைகளும்வகுத்தனவணிகளுட்கினபணிகளே. (௧௨)

சதியெனைப்பலவெனமுழக்கினசதவிதப்பணைதவளமா
மதியெனைப்பலவெனநிழற்றினமகிபர்பொற்குடைமழைகொள்வா
னதியெனைப்பலவெனநிரைத்தனநவமணிக்கொடிநளினவெம்
பதியெனைப்பலவெனவெறித்தனபலவகைப்படைகுலவவே. (௧௩)

பிடர்வலிக்கடகரிகளிற்செறிபிடிகளிற்புனைமுடிகளிற்
படர்நிழற்கவிகையின்மிசைத்துகள்பரவிமொய்த்தெழுபுரவியிற்
சுடர்விதப்படைகளினிரைப்படுதுகிலுடைக்கொடிகளின்விரா
யடர்பொருப்பினமிடையிடைப்பயிலடவியொத்ததுபடவியே. (கச)

வளைமுழக்கினகிடுகுகொட்டினவயிரொலித்தனபகுடியின்
கிளையிமிழ்த்தனமுழவதிர்த்தனகிணையுரற்றினபலவிதத்
துளையிசைத்தனமுரசிரைத்தனதுடியரற்றினசெவிடுபட்
டுளையவிப்படிபடைபுறப்படவுலகமுற்றதுகலசமே. (கரு)

செங்கண்மாலுயிர்தருமன்மார்புசிவேதனைனமிருபுயம்
வெங்கண்வீமனும்விசயனுந்திறல்வின்பருத்துவர்மைந்தர்தா
ளங்கண்மாமுடியரசர்மற்றுளவவயவாதிகளாகவே
தங்கள்பூமியிலானபோதொருவடிவமொத்தது தாளையே. (கசா)

வேறு.

இங்கிவர்வயப்படைகுறித்தகுருபூமியிடையிவ்வகையெழுந்ததினிமே
லங்கவர்செயப்படையெழுச்சியுரைசெய்குவபருந்திதிமயக்கிவிரையக்
கங்குலினழைத்துபககன்னிமகளைப்புகல்களப்பலிகொடுத்தனரெனச்
செங்கணரவத்துவசமீளியுமுணர்ந்துதனசேனைமுதல்வற்குரைசெய்வான். (கஎ)

கொதிகொள்சினநெஞ்சின்வலியின்றியவரஞ்சுபுகொடுத்தனர்களப்பலிநமக்
கெதிரொருவர்நிற்குமவரில்லையெனும்வீரநிலையானறிவனீயறிவையே
யதிரதர்கண்மாவிரதர்சமரதர்களத்தரதராகநம்மனீகினியின்மா
மதுகைமுடிமன்னரைவகுத்தெழுகவென்றனன்மனத்தசைவிலாதவலியோன். ()

ஆனதெனவீடுமனுமதிரதரின்மிக்கதனுவாசிரியனுப்புதல்வனுந்
தானுமுயர்பூரிசரவாவுமிவர்சோமவரதத்தபகதத்தர்கள்வழா
மானமிகுதன்மருடணன்றலைவர்மாரதரில்வன்கிருதபன்மவரசன்
ஞானகிருபன்சகுனிசல்லியசயத்திரதர்நன்சமரதத்தலைவரே. (கசு)

அங்கர்பெருமான்விருடசேனனரசற்குரியவநுசர்வரத்தரதரிற்
றுங்கவயவீரரெனவிம்முறைவகுத்துரகதுவசனுடனேயுரைசெய்தான்
கங்கைமகனோடுபலகூறிநனிசீறியுயிர்காய்வனெனவாளுருவிநீ
பொங்கமரின்மாளுமளவும்படைதொடேனெனமொழிந்தனனிசாரிபுதல்வன். ()

யானைமிசைதேரின்மிசையிவுளிமிசைபோம்வயவரேதிசிலைவேல்வயவரிற்
றானைகளொராறுமுகிலேழுமெனவண்பனைதயங்குதிசைசூழவரவு
மேனைநரபாலரணிதோறும்வெயில்வாளிரவியென்னவிருபாலும்வரவுஞ்
சேனைமுதனுதனொடுமெய்த்துணைவர்தங்களொடுசென்றனனிராசதிலகன். (உக)

பொழியுமுகில்பற்றியெழுமிளவெயிலெறித்தனையபுகரனபனைக்கைகொடுகார்
கிழியும்வகையெற்றிமிசையொளிருநவரத்நகணகிரணவுடைவைக்கவர்வபோர்
விழிவழிநெருப்புருகிவழியநுதலிற்றிலகம்வெயில்வழியமுற்றுநிலவே
வழியுமதியத்தின்வகிர்நிகர்பனைமருப்பினிடைமகரிகைதரித்தமதமா. (உஉ)

நடுநிலமுரைக்கினுயரவனிதலமொக்குமிசைநவமணிபழுத்தியனவா
ணுடுநிகரமொக்குமுருளுருளைகளுருக்கணுடனுடுபதியையொக்குமகுடங்
கொடுமுடிகளொக்குமிவுளிகடிசையனைத்துமெறிகுன்றபவனமொக்குபடைவே
யிடுதுகினிரைத்தகொடிசொரியருவியொக்குமெழுகுலகிரிகளொக்குமிரதம். (௨௫)

யவனசவனத்தினிடைவளர்வனசதத்தினெடுமிரவிபுரவிக்குநிகர்வ
புவனதலமுற்றுமுடன்வளையவொரிமைப்பொழுதில்வருவனபுறப்புணரியைக்
கவனமொடெழுப்பிவிடுதுகள்கொடுநிறைப்பவிரைகதிகளின்விதத்தைமொழியிற்
பவனகதியைத்தொடர்வபரிமளவுயிர்ப்புடையபலவகைநிறத்தபரிமா. (௨௪)

அரவின்விடமொத்தவெரிசினமுநிலைபெற்றுடையவசலநிகரொத்தமனமும்
புரவியுடனொத்தகதிவிரைவுமுருமொத்தவதிர்குரலுமெழுவொத்தபுயமு
முரவனிலமொத்தவலியுரமுமதனொத்தவொளியுருவமுமனைத்துமருவிப்
பரவைமணலொத்தபலவணிபடவகுத்தபலபடையுடனடக்குநடையார். (௨௫)

குடைநிலவெறிக்கவிருபுறமுமசைபொற்கவரிகுளிர்நிலவெறிக்கவெறிகைப்
படைவெயிலெறிக்கவணிமுடியுடன்மணிப்பணிகள்பலவெயிலெறிக்கவுடனே
யிடையிடையெடுத்தகொடிநிரையிருளெறிக்கவெழுதுகளிருளெறிக்கவெழுபா
ரடையவொர்தினத்தின்வலம்வருதிகிரியொத்தனர்களவனிபரனைப்பலருமே. ( )

முழவுமுதலெற்றுவனகடிபடுபணைக்கருவிமுழுமணிமுதற்கருவிபைங்
குழன்முதலமைத்தபலவகைபடுதுளைக்கருவிகுலவளைநரப்புநிரையா
லுழைமுதலெழப்புவனவிசைபடுமிசைக்கருவியுழையுழையதிர்த்தவுடனே
யெழுகடல்கொதித்ததெனவெழுபுவிமறித்ததெனவெழுமுகிலிடித்ததெனவே. ( )

முறைமைதவறற்றகடிமுரசெழுதுபொற்றுவசமுதல்வனுயிர்மைத்துனமையால்
விறலுதவுதற்குவருகரியவன்மணித்துவசமிசைகருடனிற்குமெனவோ
வெறியுமுருமுத்துவசன்மதலைவிதலைச்சமரினிறுதியைவிளைக்குமெனவோ
வறைவளியெதிர்த்துவரவெருவொடுபுறக்கிடுவதரசனுரகத்துவசமே. (௨௮)

உயர்முறைமைதப்புமவர்குடைநிழலிலிற்றையளவுள்குறையகற்றியினிநா
னிலைப்புடைநெறித்தருமனொருகுடைநிழற்றவவனிடையினிதிருக்குவனெனு
வியனதிமுழுப்புனலின்முழுகிவருதற்கவனிமிசையுறநடப்பதெனவே
பயில்படைநடக்கவகன்முகடுறநிரைத்தரியபகலையுமறைத்ததுகளே. (௨௯)

பொருபடைகொடிப்படை*யுறப்படுபெரும்படைபுகுந்துகுருபூமியுறவே
யிருபடையுமொத்துடனெருங்கினசுராசுரரெதிர்ந்துபொருபூசலெனவே
யொருபடையெனப்படமொராயிரமுநொந்துரகனுரநெரியவேழுலகமும்
வருபடைநிலத்தினிடைவந்தளவிலேயுததிவையமெனதாய்முடியுமே. (௩0)

எண்ணறுபரப்பினிடையோசனைகளத்தினிடையிருபடையுநிற்பவெவருந்
துண்ணெனவெருக்கொளமுனின்றருள்பகீரதிசுதன்றனைவியாளதுவசன்
கண்ணெதிர்நிரைத்தபடையாவையுமுருக்கியுயிர்†கவரவெதுநாள்செலுமெனப்
பண்ணளிநெருக்கொழியமாதிருகண்ணளிபடாததொடைமீளிபகர்வான். (௩௧)

---

*புறப்படு என்றும் பாடம்.
†கவரவெகுநாளென்றும் பாடம்.

ஒருபகலில்யான்மலைவன்முப்பகலிலேமலைவனுபகிடதவிற்கைமுனியும்
வருபகலொரைந்தின்மலைவன்பரிதிமைந்தன்முனிமைந்தனொருநாழிகையினிற்
பொருபடைபடங்கமலையும்புவியும்வானெடுபுரந்தரனிருந்தவுலகும்
வெருவரமுனைந்தொருகணத்தினிடையேமலைவன்வில்விசயனென்றனனரோ. (௩௨)

யானையொடுதேர்புரவியாளிவையநேகவிதமெண்ணரியதானையுடனே
சேனைமுதலாய்முனையினின்றருள்பிதாமகனுமற்றுளசெழுங்குரவருந்
தானைநெடுவாரியிடைதேரிடையருக்கனெனநின்றதுரியோதனனும்வான்
மீனைநிகர்கேளிருமணிந்தநிலைகண்டுருகிவிபுதர்பதிமைந்தன்மொழிவான். (௩௩)

நின்றமர்தொடங்கநினைகிற்பவர்பிதாமகனுநீள்கிளைஞருந்துணைவருங்
கொன்றிவரைவாகுவலியிற்கவர்வதித்தரணிகொள்பவனுமென்றுணைவனே
யென்றுபலபேசியதிபாதகமெனக்கருதியான்மலைவுறேனினியெனு
வன்றுவசுதேவன்மகனோடுரைசெய்தானமரிலவனுமிவனோடுரைசெய்வான். (௩௪)

அணிவகுப்புச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௬௮௪.

உத்தியோகபருவமுற்றுப்பெற்றது.

ஆறாவது

வீட்டுமபருவம்.

முதற்போர்ச்சருக்கம்.

மேவருஞானானந்தவெள்ளமாய்விதித்தோனாதி
மூவருமாகி*யந்தமூவர்க்குமுதல்வனாகி
யாவரும்யாவுமாகியிறைஞ்சுவாரிறைஞ்சப்பற்ப
றேவருமாகிநின்றசெங்கண்மாலெங்கள்கோவே. (க)

மாயையென்றொருத்திதன்பான்மனமெனுமைந்தன்றோன்றித்
தூயநல்லறிவன்றன்னைத்தோற்றமின்றாக்கிவைத்தான்
றாயொடுதந்தைமக்கடாரமென்றிவர்பால்வைத்த
நேயமுமவன்றனாலேநிகழ்ந்ததோர்நினைவுகண்டாய். (உ)

குயின்றவைம்பொறிவாய்நின்றுகுறித்தவைம்பொருளுந்தானே
யயின்றுமுக்குணங்களோடுமறுவகைப்படைகளோடும்
பயின்றரசாளுமந்தமனமெனும்பகைவனாங்குத்
துயின்றபோதொளித்துநின்றதோன்றலுந்தோன்றுங்கண்டாய். (ங)

அந்தநல்லறிவன்றன்னையறிந்தவரறிஞராவார்
தந்தையால்வகுக்கப்பட்டசராசரப்பொருள்கடோறும்
வந்தவன்றீம்பானெய்போலுயிர்க்குயிராகிவாழும்
பந்தமதுணர்ந்துநேரேபார்க்குங்காற்பகையார்நண்பார். (ச)

உம்பருமுனிவர்தாமும்யாவருமுணராவொன்றை
யிம்பரின்றுனக்குநானேயிசைவுறவுணர்த்தாநின்றே
னைம்பெரும்பூதத்தானுமமைந்தனவுடலம்யார்க்கு
நம்பனுமொருவனுள்ளேஞானியாய்நடத்துகின்றான். (ரு)

என்னைநீபுகலக்கேண்மோவெங்குமாயாவுமாகி
மன்னியபொருளும்யானேமறைக்கெலாமுடிவும்யானே
யுன்னையான்பிறிவதில்லையொருமுறைபிறந்துமேனா
ணன்னிலாவெறிக்கும்பூணாய்நரனுநாரணனுமானோம். (சா)

பின்னொருபிறப்பின்யாமேயிராமலக்குமப்பேர்பெற்றோ
மிந்நெடும்பிறப்பினீயும்யானுமாயீண்டுநின்றோ
நின்னிடைமயக்குமிந்தநேயமுமொழிகவென்று
தன்னிலையவற்குக்காட்டித்தத்துவந்தெளிவித்தானே. (எ)

*மீனமுதலியபவங்களாகி யென்றும் பாடம்.

ஆங்கவன்றெளிந்துதேறியறம்பொருளின்பமுற்றிப்
பாங்கினானின்னையெய்தும்பயனெனக்குரைத்தாயென்று
பூங்குடிக்கமலநாறும்பொன்னடிபோற்றியான்செய்
தீங்கெலாம்பொறுத்தியென்றுசெருச்செயுமாறுபூண்டான். (அ)

பூண்டவெம்பரித்தேர்மீதப்பொய்யிலாமெய்யினானும்
பாண்டவர்தாமுமாகப்பகீரதிமைந்தன்றன்பா
லீண்டினானெய்திநீயேயிவருடன்மலையின்மற்றுன்
காண்டகுபோரின்வென்றுகளங்கொளத்தகுமோவென்றான். (௯)

மற்றவன்றருமராசன்மைந்தனேயவனிக்கெல்லாங்
கொற்றவனாகுமென்னைக்கொல்லநீயுபாயங்கேண்மோ
வற்றைவெஞ்சமரிற்சீறுமம்பையென்றொருத்திதானே
செற்றிடத்தவமுஞ்செய்துசிகண்டியாய்ப்பிறந்துநின்றாள். (௧௦)

பன்னுசீரியாகசேனன்குமரனைப்பத்தாநாளி
லென்னெதிரமரிற்காட்டியான்படையாவுந்தீண்டேன்
பின்னவன்வெகுண்டுசெய்யும்பெருமிதங்கண்டுமீண்டு
கன்னனைவெல்லநின்றகாளைகைக்கணையால்வீழ்வேன். (௧௧)

நின்றனையருளொடாங்கேநீலமாமேனியாய்நீ
வென்றிமற்றிவரேயல்லால்வேறியாரெய்துகிற்பா
ரென்றனனென்றபோதப்பிதாமகனிருதாள்போற்றி
நின்றவர்தம்மைக்கொண்டுசிலைமுனிநிலையிற்போனான். (௧௨)

போயவர்குருவின்பாதம்போற்றிமுன்னிற்பச்செங்கண்
மாயவனவனைநோக்கிவாகையந்தாமஞ்சூட
நீயிவர்க்களித்தியாகிலுண்டலானின்னைவையந்
தாயவர்தமக்குவேறலரிதெனச்சாற்றினானே. (௧௩)

மன்மகன்றருமன்வென்றுவையகமெய்திநிற்பா
னென்மகனெனக்குமுன்னேயிறந்தனனென்றுவானில்
வின்மகபதியையொக்கும்வேந்தன்முன்சொல்லிற்சூரன்
றன்மகன்மகனேபின்னைச்சாபமொன்றெடுக்கிலேனே. (௧௪)

என்பெருஞ்சாபங்கைவிட்டியானெதிர்நிற்றலானுந்
தன்பெருஞ்சாபத்தாலுஞ்சமரிடைத்திட்டத்துய்மன்
வன்புடனெனக்குக்கூற்றாய்மலைகுவன்மலைந்தவன்றே
நின்பெருங்கருத்துமுற்றுமேகுவீர்நீவிரென்றான். (௧௫)

முனிவனைவிடைகொண்டேகிமுகுந்தனுந்தாமுமுன்னந்
தனிவனந்திரிந்துமீண்டோர்தானையங்கானிற்புக்கார்
பனிவனநிறைந்தபொய்கைக்கரைநிழற்பரப்புந்தேமாங்
கனிவனமென்னயார்க்குமுதவிகூர்கருணைக்கண்ணார். (௧௬)

கொற்றவர் தம்மையேழக்குரோணிவெஞ்சேனையோடும்
பற்றுடையசலமாகும்பான்மையால்வியூகமாக்கி
வெற்றிதந்தருள்கென்றேத்திவிந்தையைவணங்கிமாயோன்
சொற்றபின்றாசியோடுதூசிசென்றுற்றதன்றே. (௧௭)

வேறு.

புரசையானைப்பொருபரித்தேருடை
யரசன்மாத்துவசத்தனவாதலாற்
குரைசெய்வான்பணைக்குப்பைகள்யாவினு
முரசசாலமுழங்கினசாலவே. (௧௮)

மலர்ந்தபற்பவனநிகர்பைந்துழா
யலங்கல்வித்தகனேந்தினவாதலால்
வலம்புரிக்குலம்வாழ்வுபெற்றேமெனச்
சலஞ்சலத்தொடுஞ்சங்கொடுமார்த்தவே. (௧௯)

சென்றுதேர்களுந்தேர்களுஞ்சேர்ந்தன
வென்றிவேழமும்வேழமுமூர்ந்தன
நின்றவாசியும்வாசியுநேர்ந்தன
வென்றிவீரரும்வீரருமேவினர். (௨௦)

பாரவாளமும்வாளமும்பாய்ந்தன
கூரவேல்களும்வேல்களுங்குத்தின
வீரசாபமுஞ்சாபமும்வீக்கின
தூரவாளியும்வாளியுந்தோய்ந்தவே. (௨௧)

இட்டதார்முடிமன்னவரோடெதி
ரிட்டதார்முடிமன்னவரெய்தினர்
பட்டவர்த்தனப்பார்த்திவர்தம்முடன்
பட்டவர்த்தனப்பார்த்திவரெய்தினர். (௨௨)

மந்திரத்தவர்தம்முடன்மாமதி
மந்திரத்தவர்வந்தெதிர்மோதினர்
தந்திரத்தவர்தம்மிசையேசெலத்
தந்திரத்தவர்சாயகமேவினர். (௨௩)

மண்டலீகர்தம்மார்புறையாகவே
மண்டலீகர்தம்வாட்படையோச்சினர்
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கவே
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கினர். (௨௪)

முடியிழந்தநிருபர்முகுந்தனை
விடிபடுந்தலைராகுவொடேயின
ரடியிழந்தவராதபன்றேர்விடுந்
தொடிநெடுங்கைவலவனிற்றேன்றினர். (௨௫)

பூபர்தங்கள்புயங்களுமார்பமுஞ்
சாபவெங்கணைதைத்துகுசோரியாற்
றீபமென்னவுஞ்செம்மலர்க்கோடுடை
நீபமென்னவுநின்றனராண்மையால். (௨௬)

கையில்வாளிதொலைந்தபின்காய்ந்துதம்
மெய்யில்வாளிகள்வாங்கிவில்வாங்கினார்
பொய்யிலாமொழிப்பூபதிசேனையின்
மையிலாண்மையினார்சிலமன்னரே. (௨௭)

வலக்கையற்றுவிழவுமனத்தொரு
கலக்கமற்றவெங்கார்முகத்தார்சிலர்
துலக்கெயிற்றுக்கணைதொடுத்தார்தொடை
யிலக்கமற்றபடையிலக்காகவே. (௨௮)

தாளிரண்டுடைச்சிங்கமன்னார்சிலர்
வாளிரண்டோர்தொடையினில்வாங்கினார்
கோளிரண்டுமெனக்குறுகார்தடந்
தோளிரண்டுந்துணிந்தெதிர்விழவே. (௨௯)

ஓடிமுட்டலிற்றேர்களுடைந்தன
நாடிமுட்டலினாகங்கள்வீழ்ந்தன
கூடிமுட்டலிற்கொய்யுளைமாய்ந்தன
சாடிமுட்டலினாள்களுஞ்சாய்ந்தனர். (௩௦)

பற்றிநின்றொருவன்படைவாளெதி
ருற்றவன்றலைசிந்திடவோச்சினா
னற்றதன்றலைகொண்டவனுந்தனைச்
செற்றவன்றலைசிந்திடவீசினான். (௩௧)

புங்கமெய்புதையப்புதையச்சிலர்
சிங்கமென்னச்செருக்களத்தாடினார்
கங்கமிட்டபைங்காவணநீழலி
லங்கைகொட்டிபலகைநின்றாடவே. (௩௨)

வாளியாயிரந்தைத்தவழியெலா
மோளியாகவொழுகுங்குருதியாற்
றுளிலானடத்துந்தடந்தேருடை
மீளியாமெனநின்றனர்வீரரே. (௩௩)

வெட்டினார்படைமெய்ப்பிற்படாமைநின்
றொட்டினாரிமைப்போதினிலோடியே
தட்டினாருடலைத்தழுவிக்கொடு
கட்டினார்விழுந்தார்சிலகாளையர். (௩௪)

வேறு.

கொங்கர்போசலர்போசர்சிங்களர்குகுதராரியர்துளுவருங்
கங்கர்சோனகர்யவனர்சீனர்கலிங்கர்தத்தர்தெலுங்கரும்
வங்கர்கோசலர்தமிழர்குண்டலரொட்டர்மாளவர்மகதரு
மிங்குமங்குமணிந்துநின்றவரெதிர்முனைந்தனரிகலியே. (௩௫)

விசயன்வெஞ்சிலைவீடுமற்கெதிரமர்தொடங்கலும்வெருவவெண்
டிசையுமொன்றவளைந்துகொண்டனவிருவர்தம்பொருசேனையு
மிசையெழுந்துகளாலிமைத்தனர்மேலைநாகரும்வெங்கழுத்
தசையகின்றுசுமந்திளைத்தனர்கீழைநாகருமடையவே. (௩௬)

உகவைதன்னொடுவீடுமற்குறுமுதவியாகமகீபனுஞ்
சகுனிசல்லியனிவரையும்பலதம்பிமாரையுமேவினான்
மிகுகொடுஞ்சினவீமன்விந்தரனபிமனாதியர்விசயனுக்
கிகனெடும்படையரசனேவலினுதவியாம்வகையெய்தினார். (௩௭)

வன்பனைக்கொடிமீதுபன்னிருவாளிமெய்க்கவசத்தின்மே
லொன்பதிப்படியேவிவீடுமன்மெய்ந்நடுங்கவுடற்றினான்
மன்பரப்பொடுசகுனிசல்லியன்வந்ததம்பியரனைவரும்
பின்படப்பலகணைதொடுத்தனன்வருசதாகதிபிள்ளையே. (௩௮)

ஏசிலாதுயர்தன்பிதாவினைழிற்பிதாமகனேறுதேர்
வாசிநாலும்விழத்தொடுத்தனன்வாளியாலபிமன்னுவு
மாசிலாவிறலுத்தரன்றிறன்மத்திராதிபனுடனுடன்
றூசிலாவடலப்புமாமழைசிந்தினான்முகிலஞ்சவே. (௩௯)

வாவிமேல்வருபுரவிவீழவும்வலவன்வீழவுமற்றுளா
ராவிவீழவுமவனெடுத்தவிலற்றுவீழவுமமர்செய்தான்
பாவியோடினிவில்லெடுப்பதுபாவமென்றொருபாரவே
லேவினானெதிர்சென்றுசல்லியனிவனும்வானகமேறினான். (௪௰)

*இன்றுபட்டனன்மச்சர்கோமகனென்றுதங்களினேரிலா
ரொன்றுபட்டுமிகைத்தெழுந்தனரூழிவாயெழுமுததிபோ
லன்றுபட்டலக்கமப்படியைவர்தம்படையமரின்மேல்
வென்றுபட்டமணிந்தவாரணமென்னவந்தனன்வீமனே. (௪௧)

தாமன்மேல்வரவரவுடைந்திடுதமமெனும்படிதண்டுடன்
வீமன்மேல்வரவரவுடைந்தனர்மேவலார்கள்வலம்புரித்
தாமன்மேல்வரவரவுகண்டுதரிக்கிலாதெதிர்சென்றனன்
காமன்மேலரனென்னநெஞ்சுகனன்றுகண்கள்சிவக்கவே. (௪௨)

செண்டினால்வசுகிரிதிரித்திடுசெழியனென்னவெடுத்ததைத்
தண்டினாலெதிர்சென்றுதேரணிதிரியவன்பொடுசாடினான்
மண்டினார்மணிமுடியும்வேழமும்வாசியும்பலதுணிபடக்
கிண்டினான்முனைநின்றபன்னககேதுவோடமர்மோதினான். (௪௩)

*நின்றுபட்டனன் என்றும் பாடம்.

யோதியாபிரபேதமாகமுனைந்துதங்களிலிருவருஞ்
சாதியாதனவில்லைமீளிமடங்கலேறனதன்மையார்
காதியாடமர்புரியுமேதினிகாவலன்குனிகார்முகஞ்
சேதியாவொருகைகொடேறியதேரெடுத்தெதிர்சிந்தினான். (௪௪)

ஆரழிந்தனவுருளழிந்தனவச்சழிந்தனவச்சிரத்
தேரழிந்துகொடிஞ்சியும்பலசின்னமானதுமன்னனும்
போரழிந்தனனென்றுசேனைபுறக்கிடாவருபொழுதினிற்
கூரழிந்ததெனக்குறித்தணிநின்றகாவலர்கூடினர். (௪௫)

பரித்ததேரொடுபரிதியைச்செறிபரிதிபோலிருபக்கமுந்
தரித்தவேலினர்தாரைவாளினர்தாமவில்லினராகவே
விரித்தவெண்குடைமன்னர்சூழ்தரவீமனிற்பதொர்மேன்மைகண்
டெரித்தநெஞ்சொடுவிரைவின்மைத்துனரானகொற்றவரெய்தினர். (௪௬)

எய்துமைத்துனரெய்துதெவ்வரொடெண்ணில்போர்செயவிண்ணிடைச்
செய்துபெற்றனதேரினின்றுமிழிந்துளானனிசீறினான்
மொய்திறற்பவமானனன்றுமுறித்தமுக்குவடென்னவே
கைதவப்படைமன்னர்மாமுடிசிதையவங்கொருகதையினால். (௪௭)

அம்பரத்தவர்கண்டுநின்றவரதிசயித்திடவானின்மே
லிம்பரிப்படிதெவ்வர்வெம்படையிரியவன்பொடுதிரியவே
தம்பிபட்டனனென்றுகொண்டெழுசாகரத்தெழுதழலெனத்
தும்பையுற்றுமிலைச்சியீசனளித்தவில்லொடுதோன்றினான். (௪௮)

சங்கினங்கண்முழங்கவும்பணைமுரசினங்கடமுங்கவுந்
துங்கவெங்களிறிவுளிதேரொடுதானைமன்னவர்சூழவே
யெங்குநின்றனனெங்குநின்றனன்மத்திரத்தரசென்றுபோ
யங்குநின்றமகீபர்வென்னிடவவனைமுந்துறவணுகினான். (௪௯)

வேறு.

சல்லியனெனப்பெயர்தரித்துவருகோமுன்
வல்லியமெனத்தருசிவேதனமர்வல்லான்
பல்லியமுழக்கியதெனப்பலவும்வீரஞ்
சொல்லியொருவர்க்கொருவர்தொடுசிலைகுனித்தார். (௫௦)

ஒருவருமிவர்க்குநிகரில்லையெனவுற்றே
யிருவருமலைந்திடவிராசகுலராசன்
பருவரல்கொண்மத்திரபதிக்குதவியாகென்
றருவரையொடொத்தபுயரறுவரைவிடுத்தான். (௫௧)

தரணிபதிதம்பியர்கடானையொடுவந்தே
யிரணமுகமொன்றுமயிலோனெனவெதிர்த்தார்
திரணறைகொடார்புனைசிவேதனவரந்தக்
கரணம்வறிதாகும்வகைகணைபலதொடுத்தான். (௫௨)

முரண்டெதிருமன்னவர்முரண்கொள்சிலையோரொன்
றிரண்டுசிலையாகவொருவிரனிவனெய்தான்
றிரண்டுவருமன்னர்முடிசிந்திடபண்மேற்
புரண்டுவிழவாளிமழைதூவுபுயல்போல்வான். (௫௩)

தேரும்விசைகூரிவுளியுஞ்செறிபனைக்கைக்
காருமயில்வாள்சிலைதரித்துவருகாலாள்
யாரும்வெடிபூளைவனமென்னவொருதானே
யூருமொருதேரனிலமொக்குமெனநின்றான். (௫௪)

பட்டனவொழிந்தபலபடையுமிவனம்பிற்
கெட்டநிலைகண்டுரககேதனனுரைப்பத்
தொட்டவரிவில்லிறெடுசூறையனிலம்போல்
விட்டபரிமாவிரதவீடுமனெதிர்ந்தான். (௫௫)

மத்திரனைவிட்டுமிசைவந்தபடபதிமே
லத்திரமும்விட்டவனடற்சிலையறுத்தான்
சித்திரமெனும்படிதிகைத்தனன்விராடன்
புத்திரன்விடுங்கணைபொறாதுபுலிபோல்வான். (௫௬)

வீடுமனுமீளவொருவிற்கொடுசிவேதன்
சூடுமுடிவீழவொருசுடுகணைதொடுத்தான்
கோடுசிலைவாளிபலகொண்டிவனவன்றேர்
நீடுகொடியாடையைநிலத்துறவழித்தான். (௫௭)

பின்னையுமவன்றனிபிடித்தவரிசாபந்
தன்னையுமிவன்பலசரங்கொடுதுணித்தான்
மின்னையுநகும்பகழிவீடுமன்வெகுண்டாங்
கென்னவமர்செய்வதினியென்றுதளர்வுற்றான். (௫௮)

தளர்ந்தநிலைகண்டுதுரியோதனனரும்போர்
விளைந்ததுசிவேதனுடன்வீடுமனிளைத்தா
னிளந்தலையுறாதபடியேகுமினெனப்போய்க்
கிளர்ந்தமுடிமன்னர்பலர்கிட்டினர்விரைந்தே. (௫௯)

அந்தமுடிமன்னவரநேகரையுமுன்னம்
வந்தவழிமீளவும்வரும்படிதுரந்தான்
றந்தம்வரிவில்லுமணிதாரும்விடுதேருஞ்
சிந்தவெரிகால்வனசிலீமுகம்விடுத்தே. (௬0)

வெவ்வனலநேர்குருராசனையும்வேறூ
ரைவரையுமேவினன்முனைந்தனர்களவருஞ்
செவ்வரைகள்போல்பவர்சிரங்களும்வளைக்குங்
கைவரிவிலுந்துணிபடக்கணைதொடுத்தான். (௬௧)

கங்கைமகன் மற்றுமொருகார்முகம்வளைத்துச்
சிங்கமெனவப்பொழுதுறுக்கியெதிர்சென்று
னங்கவனகைத்தொருதனம்புகொடுமீளப்
பங்கமுறவிற்றுணிபடுத்தியெதிர்நின்றான். (௬௨)

ஆனபொழுதந்தரநெருங்கியமர்காணும்
வானவர்விராடபதிமைந்தனைமதித்தார்
வேனிலவன்மேனுதல்விழித்தவனளிக்குங்
கூனல்வரிசாபமிதுகொண்டனன்வரத்தால். (௬௩)

ஏறனையவீடுமனிளைத்தபடிகண்டால்
வேறவனைவில்லவரில்வெல்லவுரியார்யார்
மாறுபடுவெஞ்சமரில்வஞ்சனையிலன்றிக்
கோறலரிதென்றனர்குலப்பகைமுடிப்பார். (௬௪)

ஒகைதிகழெண்வகைவசுக்களிலொருத்த
ளுகியநராதிபதியம்முறையறிந்தான்
வாகைவரிவில்லொழியவாளயில்களென்னும்
வேகமுறுவெம்படைகள்கற்றிலைகொல்மெய்யோய். (௬௫)

என்றெதிர்சிவேதனெடியம்புதலும்வெள்கிக்
குன்றுசிலைகொண்டவனளித்தசிலைகொள்ளான்
வென்றிவடிவாளுருவிமேலுறநடந்தா
னின்றவனும்வேறொருநெடுஞ்சிலைகுனித்தான். (௬௬)

வாளினெதிர்வெஞ்சிலைவளைத்துவயவீரன்
றோளிணையிலொன்றுதுணியக்கணைதொடுத்தான்
காளைபொருகைவிழவுமற்றையொருகையான்
மீளவும்வெகுண்டுசுடர்வாளினைமெடுத்தான். (௬௭)

எடுத்தவடிவாளினெடுமெண்ணில்பலபாணந்
தொடுத்துவருவீடுமனைமாமுடிதுணிப்பா
னடுத்துவருபோதவனழன்றொருசரத்தா
னடுத்தகையுருமலவனல்லுயிர்கவர்ந்தான். (௬௮)

வேறு.

பூழிபடகிலமிசையப்பொற்சுண்ணங்கமழ்மேனிப்புதல்வன்வீழ
வாழிமொழிந்துளமகிழ்ந்தாரந்தரதுந்துபிமுழங்கவானோருள்ளா
ரூழிபெயர்ந்துலகேழுமுள்ளடக்கித்திசைநான்குமுகளித்தேறி
யாழிபரந்தார்ப்பதெனவார்த்தனரப்பெருஞ்சேனையரசரெல்லாம். (௬௯)

உடைந்ததடந்தேருருள்களுகுகுருதிப்புனலேறுறமும்பர்வானி
லடைந்தவயவருக்குவழியாயசுடர்மண்டலத்தின்சாயைபோலு
மிடைந்தகுடைகாம்பற்றுமிதப்பனவுங்கரியபுகர்வேற்கண்மாதர்
குடைந்தநறும்பரிமளச்செங்குங்குமநீரிடையெழுந்தகுமிழிபோலும். (௭0)

வெங்கலங்கற்கடுங்குருதிவெள்ளத்துக்கொடியாடைமிதக்குந்தோற்றஞ்
செங்கலங்கற்புதுப்புனலில்விளையாடித்திரிகின்றசேல்கள்போலும்
பொங்கலங்கனிருபர்தலைபுனைமகுடத்துடன்கிடப்பபொறியார்வண்டு
தங்கலங்கல்வண்கனகசததளபங்கயமுகுளசாலம்போலும். (எக)

எண்ணிழந்தகுருதிநதியிருமருங்குங்கரிபரியாள்கரைகளாகக்
கண்ணிழந்தபறையிடையேசெருகியகால்வாய்த்தலையின்கண்கள்போலு
மண்ணிழந்துபடிமரசர்மணிக்கலங்கள்பலசிந்திவயங்குதோற்றம்
விண்ணிழந்துபரந்தசெழுங்கடலிடையேமீனினங்கள்வீழ்ந்தபோலும். (எஉ)

பட்டநுதற்களியானைப்பாண்டவர்தம்படைத்தலைவன்பட்டானாகத்
தொட்டகழற்றடபகுடச்சுடர்வடிவாண்மகிபரெலாந்துணுக்கமெய்தி
விட்டபடங்கியல்பாடிவீடணைந்தார்வெயிலோனுமேல்பாற்குன்றிற்
கிட்டவவன்வடிவமுமிக்குருதியினுற்சிவந்ததெனக்கிளர்ந்ததம்மா. (எ௩)

திருநெடுமான்முதலானதேர்வேந்தர்விராடனுமைச்சென்றன்மைந்த
ரிருவருமின்றொருபடியேவெஞ்சமரிலெஞ்சினரென்றிரங்கலையா
பொருமுனையில்வீடுமனைப்புறங்கண்டுநிருபரெலாம்பொன்றவென்று
விரகுடன்வாளெடுப்பித்தபிறகன்றோதொடுசரத்தால்வீழ்ந்ததென்றார். (எச)

பேய்செய்தவரங்களையபெருங்கானிற்றிரிவோர்க்குப்பெற்றகாதற்
றாய்செய்தவுதவியினுந்தகுமுதவிபலசெய்தாய்சமருடின்றுன்
சேய்செய்தவுயிருதவிதேவரெலாந்துதிக்கின்றார்செறிந்தோர்தம்மி
னீசெய்தபேருதவியார்செய்தாரெனவுரைத்தானெறிசெய்கோலான். (எரு)

உன்னுயிர்போனீவளர்த்தவுத்தரன்றனுயிருமுருத்தெழுஞ்சிவேதன்
றன்னுயிரும்போரரசர்தாமிருந்துகொண்டாடச்சமரிலீந்தா
ரென்னுயிருநினதன்றியாரதினிச்சதுர்முகத்தோனீன்றபாரின்
மன்னுயிருக்குயிரனையாயெனவுரைத்தான்வளமலிசீர்மச்சர்கோமான். (எசு)

முப்பொழுதுமுணர்கேள்விமுகுந்தனுடன்பாண்டவருமுடிசாய்த்தாங்க
ணெப்பொழுதுவிடிவதெனநினைதருமெல்லைபின்வல்லையிரண்டுபோரு
மப்பொழுதுகாண்டற்குவருகின்றானெனத்தடந்தேருக்கன்வந்தான்
மைப்பொழுதுஞ்சிவேதனெதிர்மத்திரத்தான்வருதினிபோன்மாய்ந்ததம்மா. (எஎ)

முதற்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-உஎசுக.

இரண்டாம்போர்ச்சருக்கம்.

எந்தவெந்தயோனிபேதமெங்குமெங்குமுள்ளன
வந்தவந்தயோனிதோறுமாவியானதன்மையைச்
சிந்தையின்கணெண்ணுகணத்தினிகழுமாறுதேவர்கோன்
மைந்தனுய்ந்திடப்புகன்றவள்ளறாள்வணங்குவாம். (க)

சோனைமேகமென்னவாளிதூவுதிட்டத்துய்மனைச்
சேனைநாதனாகிநீசெருச்செய்கென்றுசெப்பினான்
வானையாதியானபூதபேதமாகிமாயையா
யேனைஞானரூபியாகியாவுமாயவெம்பிரான். (௨)

ஐவர்சேனையிங்கெழுந்ததங்கெழுந்ததடலுடைத்
தெவ்வர்சேனைவெகுளியோடெழுந்திரண்டுசேனையும்
பவ்வமோரிரண்டெழுந்துபடர்வதென்னவெருவருங்
கவ்வையோடுவந்துவெங்களத்திடைக்கலந்தவே. (௩)

வெம்பராகம்வெளியிலுற்றெழுந்தபோதுவேழவிற்
சம்பராரிதகனநாளிலன்றெழுந்ததன்மையென்
றம்பரார்நடுங்கினாருருத்துவீழுமுருமென
விம்பரார்நடுங்கினாரிரங்குபல்லியங்களால். (௪)

அளவின்மன்னரேறுதேர்களாறிரண்டுபத்துநா
றிளவலோடுகசதுரங்கமங்களோடுமிடம்வரப்
பளகமன்னவெழுபதுற்றபத்துநாறுதேரொடும்
வளவராதிமன்னரோடுநகுலராசன்வலம்வர. (௫)

*மிடல்கொள்வாளமைச்சரோடுவிரைவின்வீரர்பின்வர
முடுகுசேனையபிமன்வீமன்விசயன்மாயன்முன்செல
நடுவுநால்வகைப்படும்பதாதியோடுநாயகன்
கடகநாதனுடனணிந்துநின்றனன்களத்திலே. (௬)

மாடிரண்டுமெண்ணில்கோடிமன்னர்சேனைநிற்கவும்
பீடுகொண்டநேகமன்னர்பேரணிக்கணிற்கவுஞ்
சூடுதும்பைமண்டலீகர்தூசியாகநிற்கவும்
வீடுமன்மகீபனேறுநடுவண்வந்துமேவினான். (௭)

வீசுகொண்டலுடனெதிர்ந்துகோடையுந்திவீசவே
மூசுகொண்டலோரிரண்டுமுடுகிநின்றுபொழிவபோற்
றாசிநின்றவீரரோடுதூசிவீரர்வில்வளைத்
தாசுகங்கள்வீசவீசவந்தரம்புதைந்தவே. (௮)

சொற்கையாதவாய்மைவல்லதுருபதன்குமாரனும்
விற்கையாசிரியனுமுற்றெதிர்ந்துதம்மில்வெகுளவே
பொற்கைவெஞ்சராசனம்பொழிந்தகோலிழிந்தவா
னுற்கையென்னவொருகைமாமுகங்களூடொளித்தவே. (௯)

வீரசாபமுடனுரைக்கும்வெய்யசாபம்வல்லவத்
தீரன்வாளியாலழிந்துசிலையுமேறுதேரும்விட்
டீரமாமதிக்குடைந்தவிருள்கொலென்னவேகினா
னாரவாரமுடன்மலைந்தவைவர்சேனையதிபனே. (௧௦)

* மிடலும்வாண்மிலேச்சரோடு வீட்டும்வீரர்பின்வர என்றும்பாடம்.

உடைந்துடைந்துசேனைமன்னன்வருதல்கண்டுருத்துவான்
மிடைந்தகொண்டலெனவதிர்ந்துவீமசேனன்வேலையைக்
கடைந்தகுன்றொடொத்ததேர்கடாவிவந்துமுனிவனோ
டடைந்தமன்னருட்கியோடவொருகணத்திலமர்செய்தான். (௧௧)

உக்கிரமாகவீமன்வந்தவுறுதிகண்டநேகபோர்
விக்கிரமாமதத்தடக்கைவேழவீரர்தம்முடன்
வக்கிரசாபமழைபொழிந்துவடகலிங்கமன்னவன்
சக்கிரதேவன்முகிலெறிந்தவுருமெனத்தலைப்பெய்தான். (௧௨)

வேறு.

கதிக்கடுந்தேரினின்றிழிந்துகாலிங்கன்
மதிக்குழும்மதகரிவந்தயாவையுந்
துதிக்கைவன்கரங்களாற்சுற்றிபெற்றினான்
விதிக்கொருவிதியனான்வீமசேனனே. (௧௩)

மின்பொழிபடையுடைமேவலாருட
லென்புகவிபங்களையெடுத்தெறிந்தனன்
தன்பெருந்துணைவனுந்தாமமாருதி
வன்புடன்பறித்தெறிவரைகளென்னவே. (௧௪)

வெம்பிமேல்வருதிறல்வீமன்மும்மதத்
தும்பிமேல்விழவிழத்தும்பிவீசுவ
பம்பிமேலெறிதருபவனனாற்கட
லம்பிமேல்விழவிழுமம்பிபோன்றவே. (௧௫)

வருகளிறொருகையால்வாங்கிவீசலிற்
பொருபணைமண்ணுறப்புதையவீழ்ந்தன
விரிதிரைநெடுங்கடல்விசும்புதூர்த்தநா
ளிருநிலமிடந்திடுமேனம்போன்றவே. (௧௬)

கழலணிபொலங்கழற்காலைகைகளா
லெழுவெழுமதகரியெடுத்துவீசலின்
விழுவனவன்றிமேல்விசையிற்போவன
பழையகல்சிறகுடன்பறப்பபோன்றவே. (௧௭)

புகலுறுகலிங்கர்கோன்போரில்வென்னிட
விகலுடனெடுத்தெடுத்திவணெறிந்தபோ
தகல்வெளிமுகடுறவதிர்ந்துமேலெழு
முகபடமுகில்கள்வான்முகில்கள்போன்றவே. (௧௮)

வென்னிடுகடகரிவீரன்வீமன்முன்
முன்னணிகலங்குறமுறிந்தவாறுகண்
டென்னிதுவெனமொழிந்தேறுதேரொடுந்
தன்னொருசிலையொடுந்தானுந்தோன்றினான். (௧௯)

களத்திடைமடிந்தனகலிங்கன்வேழமென்
றுளத்தழல்கண்ணிணைசிவப்பவுந்திடத்
தளத்தரணிபரெனுந்தானையானைகள்
வளைத்தனமருத்தின்மாமடங்கறன்னையே. (உ0)

கந்தடர்களிற்றுடன்கலிங்கபூபதி
மைந்தருஞ்சேனையும்பொருதுமாய்ந்தபி
னிந்திரனூற்சிறகிழந்தகுன்றுபோற்
சிந்தைநொந்துடன்றனன்சேனைமன்னனே. (உக)

வீமனுந்தனதுதேர்மேல்கொண்டாங்கொரு
தாமவேலவன்புயத்தடத்திலோச்சினன்
மாமருமாலையான்றானுமற்றவே
ரோமரமொன்றினாற்றுணித்துவீழ்த்தினன். (உஉ)

வேறு.

ஓடுமிரதத்திவுளிநாலுமுட்டலற்றவிழவோரொர்கணைதொட்டிரதமு
மீடுகுலைபத்துவசம்வீழவனிகத்தவருமேகவெதிர்முட்டுதலுமே
நீடுவரையொப்பதொர்கதாயுதமெடுத்தணுகிநேர்படவடித்தனனரோ
வீடுமன்மனத்தனையதேர்வலவனைக்கடிதின்வீமனெனும்வெற்றியுரவோன். (உ௩)

வேகமுடனிப்படியவ்வீமனுமுடற்றியடல்வீடுமனொடொத்தமுதுபோர்
மோகரவிதத்தரசர்மாமகுடரத்நமுடன்மூளைகடெறிக்கவடியா
நாகமொடெடுத்திவுளிதேர்சிதறிமுற்றவொருநாழிகையிலெற்றிவரவே
யாகவமுழக்கவுருமேறெறிவதொக்குமெனவாரவமிகுத்ததறவே. (உ௪)

மீளவும்வளைத்தசிலைவீடுமனதிர்த்தகுரல்வீமனெடுருத்திருவங்
காளமுகிலுக்குமுகினேர்மலைவதொக்கவெரிகாலுநயனக்கடையினர்
மூளவெதிர்முட்டியிருசேனையுநிலத்துதிரமோதுபொழுதத்துவெகுளா
வாளபிமன்வெற்றிவரிவார்சிலைகுனித்துவயவாளிகடொடுத்துவரவே. (உரு)

வார்சிலையைவட்டவடிவாம்வகைவணக்கியெதிர்மாறுபடவுற்றுவருவோ
ரோரொருவர்நெற்றிதொறுமோரொருவடிக்கணைகளுந்துருவவிட்டுநகுவோன்
மேருவைவளைத்துநெடுவாசுகிபிணித்துமழைமேகநிகர்மெய்க்கணைதொடா
வாரழலின்முப்புரமுநீறெழநகைத்தவரவாபரணனொத்தனனரோ. (உசா)

மேவலர்விதப்படையும்வீடுமனுமூட்கும்வகைவீமனும்விறற்புதல்வனும்
பூவலயமுற்றுமெழுகாலவிறுதிப்பரவைபோலிகல்விளைத்தபொழுதிற்
கூவலினிலைப்புனலுமீதெழுவதொத்தொரு*கோபமொடுசேர்ப்பதுவசக்
காவலனுரைப்பவிருவோரையும்வளைத்தனர்கள்காவலிரணைப்பலருமே. (உஎ)

தானவர்சமத்துமிருதோள்வலியுமற்றுமுனைதானைபுறகிட்டழியவே
வானவர்துதிக்கவபவாகைபுனையக்கடவுள்வாழ்வினிதளித்துவருவோன்
மீனவனெனத்தகையகாளையொடெடுத்தகதைவீமனைவளைத்தனரெனக்
கூனல்வரிவிற்பகழிதூவிபிரதத்தின்மிசைகூவியவரைக்குறுகினன். (உஅ)

---

* கோபமொடுமத்தினபுரிக் என்றும் பாடம்.

வீசுபகழித்துளியின்மேகமெனவிற்கொடிவன்மேலுறநடக்குமளவிற்
றேசுடையருக்கனெதிர்மூடுபனியொத்தரசர்தேரணிகெடச்சிதறினார்
மாசுணமணிக்கொடியகீபதிபடைத்தலைவன்வார்சிலைவளைத்திலனெடும்
பாசறைபுகக்கடவினார்கடகளிற்றினணிபாய்பரியணிப்படைஞரே. (௨௯)

வேலையமுதுக்குவருவானவர்களொத்தனர்கள்வீடுமன்முதற்படைஞரா
ராலகிகரொத்தனனனீகினிதொலைத்தொருதனுண்மைநிலையிட்டுவருவோன்
மேலினியிமைப்பொழுதுநாம்வெளியினிற்கிலிவன்மேலிடுமெனக்கருதினான்
போலெழுவயப்புரவியூருமிரதத்திரவிபோயுததியிற்சொருகினான். (௩0)

ஆதபனொளித்ததிசையோவொளிசிவந்ததறவாழ்குருதிமெத்துகையினான்
மாதிரமுமைக்கடலுமாநிலமுமுட்டவொருமாசறுசிவப்புவடிவா
யேதிலிருள்புக்குலவலாமிடமறக்*கடையினேறனலியொத்ததிகலிப்
பாதகமிகுத்தகொலைவாணிருபர்தத்தமதுபாடிநகர்புக்கனர்களே. (௩௧)

கூளிகள்செருக்கிநடமாடுகளம்விட்டரசர்கோமகனையுற்றளவிலே
வாளபிமனுக்குமொருதேர்விசயனுக்குநம்வரூதினிபுறக்கிடுவதே
நாளைமுறுகிட்டவரையாருயிர்செகுத்திடுவனெனவுரைத்தனனரோ
மீளவுமுதித்தனன்விரோசனன்முதற்பகலில்வீரர்விறலைக்கருதியே. (௩௨)

இரண்டாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௭௧௩.

மூன்றாம்போர்ச்சருக்கம்.

தந்தமூறியிலவர்வைத்ததயிர்பால்வெண்ணெயெட்டாமற்
குந்தியுரலின்மிசையேறியிளங்கோவியர்முன்கூத்தாடி
நந்தன்மனையிலசோதையிருநயனங்களிக்கவிளையாடு
மைந்தனிருதாளொருநாளுமறவாதாரேபிறவாதார். (௧)

ஏலாவமரின்மூன்றுநாளிரண்டுபடையுந்திரண்டேறக்
காலார்திண்டேர்வீடுமனும்வகுத்தான்கடுங்காருடயூக
மேலாம்வென்றிப்பாண்டவர்தம்வெஞ்சேனையைக்கொண்டஞ்சாமற்
றேலாவர்த்தசந்திரப்பேர்வியூகம்வகுத்தான்றுளவோனே. (௨)

போரேதொடங்கியிருபடையும்புகுந்தபொழுதிலுகந்தொலைத்த
காரேதொடங்கிக்கார்கோள்வெங்கடுங்கால்கலிகொண்டார்ப்பனபோல்
வாரேதொடங்கும்பணைக்குலமுமணிக்காளமுமுடன்முழங்கப்
பாரேதொடங்கியெவ்வுலகுமடைவேசெவிடுபட்டனவே. (௩)

சொல்லார்கேள்விக்கங்கைமகன்றுரோணன்முதலாமதிரதரு
மெல்லாரிரதகயதுரங்கமேலாளுடனேகாலாளும்
வில்லான்முன்னாட்டமைத்துரந்தவீரன்றனையுஞ்சிறுவனையு
மல்லால்வஞ்சமல்லடர்த்தமாயன்றனையும்வளைத்தாரே (௪)

---

* கடலினேறனலி என்றும் பாடம்.

சூரர்க்கெல்லாமுதலெண்ணுந்துரியோதனனுந்தம்பியரு
மாரக்கவிகைக்காந்தாரன்முதலாவுள்ளவவனிபருஞ்
சேரத்திரண்டுகரிகளொருசிங்கம்வளைத்ததெனச்சிங்க
வீரத்துவசனின்றுழிப்போய்வளைத்தார்சமரம்விளைத்தாரே. (௫)

வரத்தான்மறையாற்றாம்பெற்றவரிசாபங்கள்பிடித்ததனிக்
கரத்தான்மறைந்ததவரவர்தங்கடைக்கண்படைக்கண்விரைந்துவிடுஞ்
சரத்தான்மறைந்ததகல்வானந்தரணிதலமச்சரந்துணித்த
சிரத்தான்மறைந்ததுகுருதிச்சேற்றான்மறைந்ததிசைநான்கும். (௬)

துவசம்பிளந்துதேரூருந்துரகம்பிளந்துசுடர்மணிப்பொற்
கவசம்பிளந்துமார்பகமும்பிளந்தூடுருவக்கடோற்கசன்றா
னவசந்திரமாமுனைவாளிதொடுத்தான்றொடுத்தநாழிகையி
னவசம்பிறந்துதம்பியர்முன்விழுந்தானொருவர்க்கழியாதோன். (௭)

நாகந்துவசமெனவுயர்த்தோனடுங்காமுன்னநண்ணலரை
மாகந்தனிற்சென்றமர்கடந்துவருமைந்துடையோன்றிருமைந்தன்
வேகப்படநின்றொருசமரவேலான்மீண்டுமவ்வேந்தன்
பாகன்றனதுமருமத்திற்பாய்ந்தானவனுமாய்ந்தானே. (௮)

விழுந்தான்வேலாற்றேர்ப்பாகன்வெஞ்சாயகத்தால்விறல்வேந்தர்
தொழுந்தாளரசன்றானுமுயிர்சோர்ந்தானென்னுந்தொனிகேட்டுச்
செழுந்தார்வாகைவிசயனையுந்திருமாலையும்விட்டொருமுனையா
யெழுந்தான்மந்தாகினிமைந்தனிளைத்தோர்தமக்கோரெயில்போல்வான். (௯)

வண்டாரலங்கல்வலம்புரியோன்மார்பந்துளைத்தவாளிவழி
கண்டானெடுத்துத்தாழ்ந்ததிருக்கையாலணைத்துக்காற்றேரிற்
கொண்டானாவிதருமருந்துகொடுத்தானவனுங்கொடுத்தமருந்
துண்டானுண்டகணத்தினின்மீண்டுணர்ந்தானுலகேழுடையானே. (௧௦)

மன்னன்றனையச்சந்தனுவின்மைந்தன்பெரும்பேரணிநிறுவிப்
பொன்னங்குன்றேயிவன்சிலையுமிவனேகாணும்புராரியென
மின்னுங்கழற்கால்வீமனுடன்வெம்போர்விளைத்துவிடலையராய்
முன்னின்றவரும்பின்னிடத்தன்முனைவாளியினால்வினைசெய்தான். (௧௧)

மருமங்களினும்புயங்களினும்வதனங்களினுங்கண்களினுஞ்
செருமும்படிவெங்கணைமாரிசிந்திச்சிந்திச்சிரந்துணித்துத்
தருமன்சேனைப்பரவையெலாந்தானேயாகித்தலைநாளிற்
பொருமந்தரமால்வரைபோலத்திரிந்தான்வெம்போர்புரிந்தானே. (௧௨)

மலையொத்ததிருங்கடகளிறும்வயமாவணியுமான்றேருந்
தொலையத்தொலையயாவரையுஞ்சுடுவெங்கணையாற்றுரந்துதுரந்
தலையத்தரங்கமெறிகடல்வாய்வடவானலம்போலவனின்ற
நிலையைக்கண்டுங்காணான்போனின்றான்விசயனிகரில்லான். (௧௩)

வேறு.

கானெரிதுற்றெனவீடுமனிப்படிகாதிமலைந்திடவே
மானநினைத்திலைசாபமெடுத்திலைவாளிதொடுத்திலைநீ
யேனிதுனக்கெனமாயனுரைத்தவனேறிரதத்திழியா
வானதெனக்கினியாகவெனத்தனியாழியெடுத்தனனே. (௧௪)

ஆழியெடுத்தனன்வீடுமனைப்பொருதாவியழித்திடுவா
னாழிமுகக்கனல்போலெழுமப்பொழுதோடியருச்சுனனுந்
தாழிதனக்குமுன்வீடுகொடுத்தருடாளிணையைப்பிடியா
வாழியுனக்கிவனோவெதிர்வித்தகமாயவெனத்தொழுதான். (௧௫)

வாசவன்முற்பெறுகாளைதொழத்தொழமாறுபடச்சினவுங்
கேசவனிப்படிமேல்வருகிற்பதுகேவலமுற்றுணரா
நாசநமக்குறுகாலநணித்தெனநாடிநடுக்கமுடன்
றேசணிபொற்றடமேருவெனத்திரிதேரினைவிட்டிழியா. (௧௬)

ஆரணகற்பிதமாதவவச்சுதவாழியிடைத்துயிலுங்
காரணசிற்குணரூபமலர்க்கொடிகாதன்மனத்துறையு
நாரணவற்புதவானவருக்கொருநாயகநிற்பணியும்
வாரணமுத்திவிசாலதலத்திடைவாழ்வுறவைத்தவனே. (௧௭)

ஆவியழித்தனைதூணிலுதித்தடலாடகனைத்தலைநாண்
மாவலியைச்சிறுமாணுருவத்துடன்வார்சிறைவைத்தனையா
லேவிலரக்கனைவீழவடர்த்தனையாளெரிலக்கெனவோ
நீவலியிற்சினமூளுமனத்தொடுநேமியெடுத்ததுவே. (௧௮)

வானரகிற்புகுதாமலெனக்குயர்வானுலகைத்தருவா
னீநினைவுற்றதுபோனபிறப்பிலென்னீடுதவப்பயனே
யானுமினிப்பிறவாமலளித்தருளீசவெனப்பரவா
ஞானமனத்தொடு*நாகுழறப்பலநாடியுரைத்தனனே. (௧௯)

ஆரியனப்பொழுதாறினனிற்கவுமாடலருச்சுனனுந்
தாரைவடிக்கணையாயிரமுய்ப்பதொர்சாபம்வளைத்ததிரா
யாரெதிர்நிற்பினும்யாவர்தடுப்பினும்யானினியிப்பகலே
சேரமுருக்குவனேறுகெனத்தனதேர்மிசைபுக்கனனே. (௨௦)

நீறுபடுத்தினன்மாமகுடத்திரணீணில்வைப்படையச்
சேறுபடுத்தினன்மூளைகளிற்றசைசேர்குருதிப்புனலா
லாறுபடுத்தினனோரொருவர்க்கெதிராயிரம்வைக்கணையா
லீறுபடுத்தினன்வீடுமன்விட்டவர்யாவர்பிழைத்தவரே. (௨௧)

வாயுவடிக்கணைவாசவன்வைக்கணைவாருணமெய்க்கணைசெந்
தீயின்வடிக்கணைதேவர்சுடர்க்கணைசேரவிடுத்தமையா
லாயுமுனைப்படுதேரணிபட்டனவாளணிபட்டனவெங்
காய்கரிபட்டனபாய்பரிபட்டனகாவலர்பட்டனரே. (௨௨)

---

* நாகுழறிப்பலநாமமுரைத்தனனே என்னும்பாடம்.

நாடியொளித்தனர்சூழ்புனன்மத்திரநாடன்முதற்பலருங்
கூடியொளித்தனர்மாரதரிற்றிறல்கூரும்வயப்படையோ
ரோடியொளித்தனராடமரிற்றுரியோதனனுக்கிளையோர்
வாடியொளித்தனர்மாகதரொட்டியர்மாளவர்குச்சரரே. (௨௩)

வேறு.

பார்த்தனம்பினான்மேவலாபடைப்பரவைசாயவேவிரவுகோவியர்
துர்த்தனன்புடன்கண்டுவந்துதன்றொக்கசேனையின்பக்கமெய்தினான்
சேர்த்தவெம்பனைக்கொடிமகிபனும்வில்வினோதனுஞ்செல்வமைந்தனுங்
காத்துநின்றுதங்காவலன்றனைக்கொண்டுபாசறைகடிதினெய்தினார். (௨௪)

வெஞ்சரத்தினால்விசயன்வென்றபோர்மிகுகளத்தின்வாய்விசையொடற்றன
குஞ்சரத்தின்வீழ்கைகளுகமேகுருதிவட்டமும்பரிசிவட்டமே
பஞ்சரத்தொடுந்திரியுமானையின்பக்கமெங்கணும்பட்டுமூழ்கிய
செஞ்சரத்தின்மேற்சிறகர்பண்டுவச்சிரமரிந்திடுஞ்சிறகர்மானுமே. (௨௫)

கொற்றமன்னர்சென்னியினணிந்தபொற்கோலமியாவையுந்தாளமாகவே
யற்றைவெஞ்சமத்தடலருச்சுனனாண்மைபாடிநின்றலகையாடுமான்
முற்றவெம்பிணக்குவையும்வேழமுமுடிகுவாசியுந்தேருமொய்ம்புறத்
துற்றகுன்றெனவொன்றுபட்டெழச்சொரியுமூளையாறருவியொக்குமே. (௨௬)

பமரமும்மதக்கரிவிலாவின்வேல்பட்டவாய்நிணம்பறியநிற்பன
குமரன்வேலின்வாயனலமூர்தருங்கோடுடைத்தடங்குன்றமொக்குமா
லமரர்கோன்மகன்செங்கையம்பினாலற்லவீரர்தந்தலைகள்கவ்வியச்
சமரபூமிசேர்ஞாளிமானுடத்தலைவிலங்கினின்றன்மைசாலுமே. (௨௭)

அன்றுவெஞ்சரத்தொடுதறிந்தவாளரசர்சோரிமெய்ப்பட்டதாதலிற்
சென்றுசெங்கதிர்ச்செல்வன்வாருணத்திசையடைந்துவெண்டிரையின்மூழ்கினா
னின்றருச்சுனன்பொரமறந்ததுநெடியசெங்கண்மானேமிதொட்டதும்
பின்றைவில்லெடுத்தவன்மலைந்ததும்பேசினான்மகிபதிபிதாமகன். (௨௮)

தருமன்மாபெருஞ்சேனைதன்னுளார்தங்களாதரத்தொடுதனஞ்சயன்
பொருவிலாண்மையும்வீமன்மாமகன்பொருதவீரமும்புகழ்ந்துபாடினா
ரரவகேதனன்சேனைதன்னுளாரழிந்தமன்னருக்கழுதரற்றினா
ரிருவர்சேனையுங்கண்படாமலன்றிரவுபட்டதென்னென்றியம்புவாம். (௨௯)

நென்னலங்கையிற்கொண்டதென்னையேநேமியாகவந்நீலமேனியா
னின்னமும்பொரத்தேடுமாகவத்தின்றுமென்றுகொண்டெண்ணியேகொலோ
தன்னெடுந்தனிச்சயிலமும்பொலந்தபனியத்தடஞ்சயிலமாகவே
மின்னெடுஞ்செழுங்கதிர்பரப்பினான்வெய்யவேழ்பரித்தேர்விபாகரன். (௩௦)

மூன்றாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௮௨௩.

நான்காம்போர்ச்சருக்கம்.

தேடியவகலிகைசாபந்தீர்த்ததா
ணீடியவுலகெலாபளந்துநீண்டதா
ளோடியசகடிறவுதைத்தும்பாம்பின்மே
லாடியுஞ்சிவந்ததாளென்னையாண்டதாள். (க)

நற்பகலிடைவருநளினநாயகன்
பொற்பகலுறவொளிபுரியுநேமியான்
பிற்பகலணியையும்பிறங்குசேனையான்
முற்பகல்வியூகமேயாகமூட்டினான். (உ)

கார்முகில்வண்ணனைக்கண்டுகாணலார்
தாமுமவ்வியூகமேசமைத்துமுந்தினா
ரேமமோடெதிர்முனைந்திருவர்சேனையும்
போர்முரசெழவெழப்பொங்கியார்த்தவே. (ங)

எழிருபுவனமுமேந்துமேருவைச்
சூழ்வனகிரிக்குழாஞ்சுற்றுமாறுபோற்
பாழியம்புயகிரிப்பவனன்மைந்தனை
வேழவெம்படையுடைவேந்தர்சூழவே. (ச)

வேறு.

ஆலாலமெனக்கதுவாவதிரா
மேலாள்விழவீமன்வெறுங்கைகளா
லேலாவுடலென்புகபோதவெறுந்
தோலாயினசிற்சிலதோலினமே. (ரு)

மேல்வாய்தமகையொடுமேலெழவுந்
தோல்வாயவைகீழ்விழவுந்துணியா
மசல்வாரணம்வாய்கள்கழன்றனமுன்
னால்வாயெனுநாமநலம்பெறவே. (சு)

மதிவெண்குடைமாருதிவன்புடனே
குதிகொண்டொருகைகொடுகுத்துதலா
லதிர்சிந்துரவல்லுரமத்தனையு
மெதிர்சிந்துரமாகியிழைத்தனவே. (எ)

உடலிற்றசையாவுமுடைந்துநெடுங்
குடலற்றுவிழும்படிகுத்துதலான்
மிடல்பற்றியவீமன்வெறுங்கைகளா
லடலத்திகளத்திகளாயினவே. (அ)

கந்தாவகன்மொய்ம்புறுகாளைபுயக்
கந்தாலமர்செய்துகலக்குதலிற்
றந்தாவளசேனைதரிப்பறவே
தந்தாவளமுற்றனசாயுறவே. (௯)

வெவ்வாயுவின்மைந்தன்வெகுண்டொருதோன்
மொய்வாகுவில்வைத்தெதிர்மோதுதலாற்
கைவாலதிமெய்தலைகால்கள்கரந்
தவ்வாரணம்வாரணமாகியதே. (௧0)

தும்பித்தனகாருடல்பேருயிருங்
கும்பித்தனவாயுகுமாரனிவ
னம்பொற்கரபங்கயமள்ளுதலிற்
றும்பிக்குலமாயினதும்பிகளே. (௧௧)

மின்னுசமணிப்புயன்வெங்கதையான்
முன்னுகமலைந்துமுருக்குதலா
லென்னாகமுநாகமெனும்படியே
மன்னுகவமெங்குமடிந்தனவே. (௧௨)

கோடுங்கரமும்பறியக்குதிகொண்
டோடுங்குருதிப்புனலூடுடல
மூடும்படியாவருமூழ்குதலா
லாடுங்கயமாயினவக்கயமே. (௧௩)

வீசுந்தமகைம்முதன்மெய்ம்முழுதுங்
கூசும்படிசிற்சில்குழம்புகளாய்
மூசுங்களபக்குலமொய்ம்பனுடற்
பூசுங்களபக்களிபோன்றனவே. (௧௪)

கிரியேயெனவந்தெதிர்கிட்டினபுன்
பொரியேயெனவானிடைபுக்கனபோ
ரரியேறனையான்வலிமைக்கவர்தங்
கரியேகரியல்லதுகண்டவர்யார். (௧௫)

இவ்வாறுவெகுண்டிவனெற்றுதலுங்
கைவாரணவேலைகலக்கமுறத்
தெவ்வாகியமன்னவர்தேர்களொடும்
வெவ்வாசிகடம்மொடும்வென்னிடவே. (௧௬)

உடைகின்றமைகண்டுரகத்துவசன்
குடையுங்கொடியுங்குளிர்மாமுரசும்
படையுஞ்சிலதம்பியரும்பலரும்
புடைகொண்டுவரப்போனவன்மேல். (௧௭)

வீமற்கெதிர்நின் றவன்வில்லறவுஞ்
சேமக்கவசஞ்சிதைவுற்றிடவு
நாமக்கணையேவினனுயகனை
மாமுத்தமதிக்குடைமன்னவனே. (௧௮)

ஆறம்பினிலற்றரவத்துவச
னாறம்பகன்மார்பினுழைந்தனபின்
வேறம்புதொடுத்திலன்வீமனவன்
மாறம்புதொடுத்தனன்மற்றிவன்மேல். (௧௯)

சிங்கக்கொடியற்றணிதேர்சிதைவுற்
றங்கத்தினுழைந்தனவம்புகளுந்
துங்கக்கடகத்திரடோள்புடையா
வெங்கட்கனல்வீமன்வெகுண்டனனே. (௨0)

நொந்தானிவனென்றுநுதிக்கதிர்வே
லந்தார்முடிமன்னரநேகருடன்
வந்தார்பலர்தம்பியர்மைத்துனருங்
கொந்தார்தொடைவீரகுமாரருமே. (௨௧)

மலருங்குடைமன்னவர்வந்தமைகண்
டலருங்கொடிவாளரவோனருகே
பலருங்கரிதேர்பரியாளுடனே
சிலரும்புவிபாலர்திரண்டனரே. (௨௨)

வேறு.

எதிர்ந்தார்மன்னரிருதிறத்துமொருவர்க்கொருவரிடையிடைநின்
றதிர்ந்தார்சிறுநாண்பேரொலியாலுடையாவல்லவகிலாண்ட
முதிர்ந்தார்போரிற்றெருநிகணையான்முரட்டோடுணிந்துமுடிதுணிந்து
முதிர்ந்தார்தத்தமுடனிலத்திலுயர்ந்தாராவியுயர்வானில். (௨௩)

தாமத்தெரியல்வலம்புரியோன்றடந்தாமரைக்கைத்தனுத்தறியச்
சேமக்கவனப்பவனகதிப்பரிமாகான்குஞ்சிரந்துணிப
மாமொட்டொடிந்துகொடிஞ்சியுடன்மான்றேர்சிதையமார்புருவ
நாமக்கணைகள்பலபடவில்லுகைத்தானின்றுநகைத்தானே. (௨௪)

முன்னுளமரிற்கடோற்கசன்றன்முனைவெஞ்சரத்தான்மூழ்குவித்தான்
பின்னுண்மீளப்பிறைக்கணையாற்பிளந்தானவனைப்பெற்றெடுத்தோ
னென்னுவிரங்காமெய்ந்நடுங்காவெடுத்தாரணைத்தார்சகுனியுமப்
பொன்னூர்தடந்தேர்ச்சல்லியனுமுதலாவுள்ளபூபாலர். (௨௫)

தம்முன்றளர்ந்தநிலைகண்டுதரியாராகித்தம்பியர்க
ளெம்முன்பொருதற்கிசைவார்களிசைவீரென்றென்றிகல்கூறித்
தெம்முன்செவிகள்செவிடுபடச்சிறுநாணெறிந்துதேர்கடவி
முன்முன்கடிதிற்கணைபொழிந்தார்முகுந்தன்றடுத்தமுகில்போல்வார். (௨௬)

வின்மேல்விசையிற்கடும்பாணமேன்மேனிறுத்திவேந்தரைப்பார்த்
தென்மேனியீனவென்றவரவர்பேரிரதந்துணித்துச்சிலைதுணித்துத்
தன்மேல்வந்ததம்பியரிற்றரியாதுடன்றவைவர்க்கு
மன்மேலெய்தவாளியெனத்தொடுத்தானைந்துவயவாளி. (௨௭)

சேனாவிந்துசுதக்கணன்பொற்றேர்ப்பிங்கலசன்சலாசந்த
னானாவீமவாகுவெனுமடல்வாணிருபரைவரையும்
வானாடாளும்படிவிடுத்தான்வன்பாற்றம்மையைவரையுங்
கானாள்கென்றகாவலனைப்போல்வான்வீரக்கழல்வீமன். (௨௮)

ஒருபால்வீமன்சிலைவிசயனொருபாலொருபாலபிமன்னு
வொருபானகுலன்சாதேவனொருபாலொருபானுரகேச
னொருபாலரக்கன்பாஞ்சாலனொருபாலடனுத்தமபானு
வொருபானுடன்றுபொரப்பொரவேயுடைந்ததரசன்பெருஞ்சேனை. (௨௯)

விண்ணாடருக்காவெஞ்சமத்திலசுராதிபரைவென்கண்டோன்
மண்ணாளரசர்மகுடசிகாமணியேபோல்வான்மாமரபாற்
பண்ணார்பஞ்சகதிமான்றேர்ப்பகலோனன்னபகதத்த
னெண்ணார்துரக்கவரும்படையையஞ்சலென்றென்றெதிர்சென்றான். (௩0)

அலைகால்வெள்ளக்கருங்கடல்போலதிராநின்றவாகவத்தின்
மலைகால்பெற்றுவருவதுபோல்வருதிண்பணைக்கைமாமிசையான்
சிலைகால்வளைத்துத்தீவாய்வெஞ்சரங்கொண்டடையார்சிரங்கொண்டான்
கொலைகால்செங்கட்கரியநிறக்கூற்றந்தனக்குங்கூற்றன்னான். (௩௧)

தாராரோடைத்திலகநுதற்சயிலம்பதினாயிரஞ்சூழ
வாராநின்றமதகயத்தின்வன்போர்வலியுமனவலியுஞ்
சேரார்வணங்கும்பகதத்தன்றிண்டோள்வலியுஞ்சிலைவலியும்
பாராநின்றகடோற்கசன்றன்படைபின்றளர்வும்பார்த்தானே. (௩௨)

வேறு.

ஆயபோதிலாயிரநாறுமதமாவு
மேயதீயகாலனையொக்குமேலானுஞ்
சாயகம்முஞ்சாபமும்யாவுந்தானேயா
மாயவேடங்கொண்டவனேடுமலைவுற்றான். (௩௩)

சங்கமூதத்தார்முரசார்ப்பமுழவார்ப்பப்
பொங்குமூழியாழிவறக்கும்படிபோதச்
சிங்கங்குன்றிற்செல்வதுபோலச்சிலையோடு
மெங்குந்தானும்வேழமுமாகியெதிர்சென்றான். (௩௪)

மைபோலார்த்துமும்முறைதானமழைசிந்திக்
கைபோய்முட்டிக்கையொடுதத்தங்கால்வீசி
மெய்போல்வெம்போர்செய்தனவீரன்விறல்வேழம்
பொய்போனின்றவருபகதத்தன்போர்வேழம். (௩௫)

நின்றார்நின்றபடிகடிதாகநெடிதோடிச்
சென்றார்கண்டசிந்துரம்பாவுந்தியம்பிற்
கொன்றார் மற்றக்கொற்றவர்யாருங்கொலையுண்டார்
வென்றானன்றேவீமன்மகன்சேனையில்வீரர். (௩௬)

ஆன தான தாகவமெங்குமானைப்போர்
போனபோனமைந்தர்பிழைப்பீர்போமென்றென்
றானமெய்தாதவ்விறைபோனானுயிரோடும்
போனகண்டகாய்கதிரோனும்புறமிட்டான். (௩௭)

பூந்தண்மாலைப்பஞ்சவரானைப்போர்வென்று
சேர்ந்தசேர்ந்தமன்னவரோடுந்திறலோடுந்
தாந்தம்பாடிவீடுபுகுந்தார் தரையாளும்
வேந்தனோடும்பாசறைபுக்கான்வீடுமன். (௩௮)

பூண்பாய்மார்பிற்புத்திரர்தம்மைப்பொலிவோடுங்
காண்பாளைவர்க்கண்டிலள்பெற்றகாந்தாரி
சேண்பாலெய்தச்சென்றனரோவென்றிருகண்ணீர்
தூண்பாலாகிச்சோர்தரவுள்ளஞ்சோர்வுற்றாள். (௩௯)

கொன்னேகுந்திமைந்தரிருக்கக்கொலையுண்டார்
முன்னேமுன்னுமுன்னமுடிந்ததெனமுன்னா
மின்னேயென்னமெய்குலையாமண்மிசைவீழ்ந்தா
ளென்னேயென்னேயென்றினையாநின்றென்செய்தாள். (௪0)

வீறார்கற்பின்மின்னனையாளைவிறன்மைந்த
ரேறாமன்றிலேற்றவுமாமன்றென்னாதா
னூறாவன்பிற்கண்ணறைமன்னனொருதேவி
யாறாவெள்ளத்துன்புறவன்றேபடியிட்டாள். (௪௧)

ஆளாய்மாய்ந்தவேந்தரிடந்தோறழுமோசை
கேளாவெப்போதேகுவமென்றக்கிளர்கங்குன்
மீளாவோடிற்றத்திசைவானோன்மிளிர்சென்னிச்
சூளாமணிபோல்வந்ததுகாலைச்சுடரம்மா. (௪௨

நான்காம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௮௯௫.

ஐந்தாம்போர்ச்சருக்கம்.

கருமாமுகிற்கோலநெஞ்சத்திருத்துங்கருத்தெய்துமே
லருமாதவன்றானுமவன்முத்திதருகைக்குமவனேகுருத்
தருமாலைமணநாறுதாளானைவண்டேறுதண்ணந்துழாய்
மருமாலைபுனைகின்றதிருமாலையல்லாதுவல்லார்கள்யார். (௧)

வரசங்கமுந்தாரையுஞ்சின்னமும்பொன்மணிக்காளமு
முரசங்களுந்துந்துபியுமெங்குமெழுவிம்மமுழவிம்பவே
கரைசிந்துதிரைசிந்துநுரைசிந்துவிரைசிந்துகணமென்னவே
யரசன்பெருஞ்சேனைவெள்ளம்புறப்பட்டதணியாகவே. (௨)

விருதாயிரங்கோடிமுரசாயிரங்கோடிமேன்மேலெழப்
பொருதானையுடன்வந்தணைந்தார்புறந்தந்தபூபாலருங்
கருதாவரக்கன்கொடுந்தானையிறைவன்கடுந்தானையென்
றிருதானையும்போலவெதிருற்றவிருமன்னரிருதானையும். (௩)

அரக்கர்க்குமுதல்வானளித்தோருமெமரின்றுமவர்போலுமைத்
துரக்கைக்குநின்றேனெனத்தெவ்வர்தம்மோடுசொல்லிற்றெனக்
குரக்குக்கொடித்தேரின்மிசையேறிவிசையோடுகூத்தாடவே
புரக்கைக்குநின்றானுடன்செங்கண்விசயன்புறப்பட்டனன். (௪)

அரணின்றனன்போலவவனின்றதேரொத்தவணிதேர்மிசைப்
பொரநின்றநதிமைந்தனைநடுசென்றுமுனைநின்றுபொரவெண்ணியே
சரநின்றகுனிசாபவிசயன்றனைக்கொண்டுசங்கங்குறித்
துரநின்றவவனெஞ்சுடைப்பாகன்மான்றேநகைத்தாரவே. (௫)

ஊர்கின்றதேரோடியுயர்கங்கைமகனின்றவொருதேருடன்
சேர்கின்றவெல்லைக்கலிங்கேசர்முதலானதெம்மன்னர்போய்
நேர்கின்றவிசயன்றனுடன்மோதியவனேவுநெடுவாளிபட்
டார்கின்றபுண்வாயில்வார்கின்றசெந்நீரினிடைமூழ்கினார். (௬)

செல்லுங்கலிங்கேசரலையுண்டநிலைகண்டுசிவனென்றுபார்
சொல்லும்பெருஞ்செம்மல்பல்லங்களவன்மேற்றொடுத்தேவினான்
கொல்லுங்கொடும்பாணமவையைந்துவிசயன்கொதித்தேவினான்
வில்லுந்தன்வின்னாணும்விறலம்புமுடனற்றுவிடைகொள்ளவே. (௭)

இவர்கொண்டசெற்றத்தொடிவ்வாறுபோர்செய்யவிகல்வீடணைப்
பவர்கொண்டநெடுவேலைபோல்வந்துமொய்த்தார்கள்பலமன்னருங்
கவர்கொண்டமுனைவாளியவர்மார்புதோளுங்கழன்றோடவே
தவர்கொண்டுசெற்றான்முன்னளகேசனமர்வென்றதனியாண்மையான். (௮)

துச்சாதனன்றம்பிமார்மைந்தர்மற்றுஞ்சகுனிசல்லிய
னெச்சாபமுடிமன்னரும்பின்னருந்துன்னியெதிர்சீறினா
ரச்சாபமொன்றாலுமன்றவ்வவர்க்கம்பநேகந்தொடுத்
துச்சாசனஞ்சொல்லிநின்றானவ்வடன்மன்னருடனோடவே. (௯)

செருத்துப்புடைத்தோடிவருதம்பியர்க்கண்டுசெற்றத்துடன்
கருத்துப்புகைந்துட்கலங்கிக்கடைக்கண்கள்கனல்காலவே
மருத்துத்தருங்காளைநின்றானையின்றுவிமலைவேனெனா
வருத்துத்தடந்தேரின்மிசைவந்தடுத்தானுரககேதனன். (௧௰)

பேராதநிலைநின்றுவன்போடுசாபம்பிடித்தெங்கணுஞ்
சோராதவயவாளியீரைந்துசேரத்தொடுத்தேவினா
னாராவமுடனிட்டகவசம்பிளந்தோடியாண்மைக்கெலாம்
வீராபிடேகஞ்செய்வயவீமனகன்மார்பின்மிகவாழ்கவே. (௧௧)

ஈமந்தொறுஞ்சென்றுநடமாடுகழலையனெதிராய்வருங்
காமன்றனுடன்மேல்விழித்திட்டநுதலிற்கனற்கண்ணனைத்
தாமம்புனைந்தாரமணநாறுமார்பத்தடந்தோயவே
வீமன்றொடுத்தானொரெதிரம்புபார்மன்னன்மிடல்சாயவே. (௧௨)

வேறு.

ஓரம்பினுளைந்தேழுலகுடையானலமரவே
வீரம்புனைவீமன்குனிவில்லோடெதிர்நிற்கப்
போரம்பரவுலகாள்பவர்புகழ்பூரிசவாவந்
தீரம்புதொடுத்தானொருதேர்மேலினனிவன்மேல். (௧௩)

இவனாண்மையைமதியாதெதிரெய்தானெனவெய்திற்
பவனாகதிபெறுதேரினனரிநாபதியிளவ
லவனாருயிர்கவர்வேனெனவம்பொன்றுதொடுத்தான்
றவனான்மறைதெரிபூரிசவாவுஞ்சரம்விட்டான். (௧௪)

ஏணற்றுயர்வரைமார்பினரிருவோர்களுமொருவோர்
காணற்றொழிலரிதாமுறைகடிதிற்கணைதொடவே
நாணற்றனவெஞ்சாபமுநடுவற்றனவெனினுங்
கோணற்றனபுகல்வானொருகுறையற்றதவர்க்கே. (௧௫)

ஒருகேடகவுரைதேறினருளமேயெனவயரிற்
பொரு*கேடகநடவுங்கனபொற்றேர்மிசையிழியா
முருகேடவிழ்தார்மார்பினர்முனைவாளமிரண்டோ
டிருகேடகமிருகையினுமிருவோருமெடுத்தார். (௧௬)

படிவாயுடுபதியுந்தினபதியும்பொருதெனவே
தொடிவார்கரதலமொன்றியதுறுதோலிடைமறையா
வடிவாண்முனையசையாவிசைவருசாரிகள்பயிலா
விடிவாய்முகிலதிராவெதிரெதிர்சீறினரிப்பால். (௧௭)

தோலாதடலொடுசீறினதுரகத்தொடுதுரக
மேலாளொடுமேலாள்வரிவில்லாளொடுவில்லா
ளேலாமுடியரசோடரசிரதத்துடனிரதங்
காலாளொடுகாலாண்மதகரிமாவொடுகரிமா. (௧௮)

---

*கேடநடவும் என்றும் பாடம்.

நீடுங்கடகரியின்கரநிரையற்றனநதியா
யோடுங்குருதியின்வாளைகளெனவோடினவொருசார்
கோடுஞ்சிலையம்பிற்றலையரியுண்டனகுறைநின்
றாடுந்தொறுமுடனாடுவவலகைக்குலமொருசார். (௧௯)

கோல்கொண்டவைசிலைகொண்டவைவாள்கொண்டவைகூர்வாய்
வேல்கொண்டவையவைதம்முடன்விழுகைக்குலமொருசார்
கால்கொண்டுகுசெந்நீர்விரிகளமேகனமதா
மால்கொண்டகரிக்கோடிளமதியாவனவொருசார். (௨௦)

முந்நீர்தருபவளங்கொடுமுன்னஞ்சமைவனபோற்
செந்நீரின்மிதந்தோடுவதேராழிகளொருபா
னன்னீர்மழைபொழிசெம்புனனதிவாய்வருநுரைபோ
லந்நீரிடைபுகுசூழிகளலைபாய்வனவொருசார். (௨௧)

வையாரயில்கணைதோமரம்வாள்கப்பணமுதலாங்
கையாயுதமுழுகுந்துளைவழிசெம்புனல்கால
மெய்யாயிரவிதமாய்விழவெம்போரிடையிருபத்
தையாயிரமுடிமன்னவரகல்வானமடைந்தார். (௨௨)

இவ்வாறுமுனைந்தாருயிரிருசேனையுமடிய
மைவானுலகிடமற்றதுவயவீரர்நெருக்கா
லவ்வானவர்தமதாலயம்வலம்வந்தவருக்கன்
செவ்வானுறுகுடபால்வரையிடமென்றதுசேர்ந்தான். (௨௩)

எப்போதுமரும்போரினிலிதயங்களிகூர்வார்
கைப்போதுறுபடைசெய்புனல்வழியேயுயிர்காய்வா
ரொப்போதுதலரியாரிருதிறமன்னருமொருவா
வப்போதனிகத்தோடுமகன்பாசறைபுக்கார். (௨௪)

இரவென்றிருள்கெழுநஞ்சினிளந்திங்களெயிற்றோ
ரரவுண்டதுதான்மீளவுமிழ்ந்தென்னவருக்க
னுரவுங்குடதிசைநீனிறவுததிக்குளொளித்தோன்
விரவுங்குணதிசைவேலையின்மிசைவந்துகிளர்ந்தான். (௨௫)

ஐந்தாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௮௯௦.

ஆறாம்போர்ச்சருக்கம்.

கோயிலாளுடையபைங்கொண்டலார்கண்டுயில்
பாயலாய்வாழநீபாக்கியஞ்செய்ததென்
றீயலாதுவமைவேறில்லெனத்தீயநின்
வாயெலாநஞ்சுகால்வாளெயிற்றுரகமே. (௧)

பயிலும்வெம்பாசறைப்பாண்டவரைவருந்
துயிலுணர்ந்தணிபசுந்துளபமாலடிபணிந்
தயிலுநஞ்சனையபோரடுகளங்குறுகினர்
சயிலவெங்கடகரித்தானையுந்தாமுமே. (உ)

பகுத்தபல்லணிகளின்பான்மையக்குரோணியாய்
மிகுத்தவெஞ்சேனையாம்வெள்ளநீர்வேலையைத்
தொகுத்துவண்டிமிர்தொடைத்துருபதன்றிருமகன்
வகுத்தனன்புறமிடாமகரமாவியூகமே. (௩)

போகமுந்தருமமேயானமெய்ப்புனிதனு
நாகவெங்கொடியுடைநாயகக்குரிசிலும்
வேகவெப்படையுடைவேந்தருஞ்சேனையு
மாகவங்குறுகினாராரவம்பெருகவே. (௪)

பொருஞ்சமங்கருதியாள்புரவிதேர்போதகந்
தெரிந்துகொண்டிருதிசையினுஞ்செல்லவே
பெருஞ்சனந்தன்னையப்பீடுடைவீடுமன்
கிரிஞ்சமென்றுள்ளபேர்வியூகமுங்கட்டினான். (௫)

இந்திரன்முதலியவிமையவர்தங்களா
லந்தரமிடனறவரவுளாந்தலமர
வந்துவந்திருபெரும்படைஞருமாறுபட்
டுந்தினார்முந்தினாரொட்டினார்முட்டினார். (௬)

பரவினால்விதவயப்படைஞருஞ்சூழவா
ளிரவினான்வெம்பகையிருளினுக்கென்றுதன்
புரவினான்மறையெனப்பூண்டதேர்தூண்டினான்
விரவினான்வீமன்மேல்விற்கையாசிரியனே. (௭)

சிலைவரம்*பெறுதிறற்றேசிகன்சீறவு
நிலைபெறும்புகழினானெஞ்சினஞ்சலிசெயா
மலையினும்பெரியதேர்வலவனும்புரவியுந்
தலைபறும்படிசரந்தனுவளைத்துதைபினான். (அ)

சூழிவெங்கசரததுரகதநிருபரை
வீழவெங்கணைகளான்மெய்துளைத்தளவிலே
தாழநின்றிலனெழிற்சல்லியன்றன்னொடே
தோழவின்றமர்செய்கென்றொருதிசைத்தோன்றினான். (௯)

வல்லைவெஞ்சமர்செயவல்லைநீவருகென
வில்லையுந்துணிசெய்துவெல்லவர்தவனையுந்
தொல்லைவெங்கரியெனத்தேரொடுந்தோண்டுடுத்
தெல்லையம்புவியின்மேலெற்றினான்வீமனே. (௧௦)

* பெறுதலிற்றேசிகன் என்றும் பாடம்.

சல்லியன்றன்பெருஞ்சலிவுகண்டங்கையி
னெல்லியங்கனியினிநேரலாருயிரெனப்
பல்லியங்களுமெழப்பாந்தளம்பொற்கொடி
யல்லியந்தெரியலானங்குவந்தணுகினான். (௧௧)

வெம்புயவீமன்மேல்வில்வளைத்தாயிர
மம்புகண்மாரிபோலார்த்தெழுவிசினார்
தும்பையந்தார்முடிச்சூழ்ப்படைமன்னருந்
தம்பியர்யாவருமாமனுந்தானுமே. (௧௨)

தோன்றரித்துவசனுஞ்சோகமில்பாகனார்
வான்றடந்தேரொடும்வருகெனச்சென்றெதி
ரூன்றினான்மைந்தருமீளேனுமுயிரையே
போன்றமைத்துனரும்வாணிருபரும்புடைவர. (௧௩)

நின்றிருசேனையுநேர்படவேலினும்
வன்றிறல்வில்லினும்வாளினுமலைவுறக்
குன்றநேர்தோளினரிருவருங்கொக்கரித்
தொன்றினார்வில்வளைத்தொருவருக்கொருவரே. (௧௪)

அவனுமம்பிவனுரத்தழுகுறவெழுதினா
னிவனுமம்பவன்மணித்தோளின்மேலெழுதினான்
புவனமெங்கணுமிகப்பொறியெழப்போர்செய்தார்
பவனனுங்கனலியுநிகரெனும்பரிசினார். (௧௫)

வரத்தின்முன்பெறுகதைவன்மையும்வின்மையுஞ்
சிரத்தினின்றெண்ணவோர்பேர்பெறுஞ்சேவகன்
சரத்தினுங்கடுகுதேர்ச்சர்ப்பகேதனனையன்
றுரத்தின்வெங்கணைகள்பட்டுருவவில்லுதையினான். (௧௬)

தான்விடுங்கணைகளிற்றம்பியர்தம்மையுந்
தேன்விடுந்தெரியலானெய்துபுண்செய்துபின்
னூன்விடும்படிதுளைத்துருவுபல்பகழியால்
வான்விடும்பேரையும்வானிலுய்த்தனனரோ. (௧௭)

வாவருங்கவனமாக்கடுகுதேர்வலவர்போ
யேவருஞ்சிலைகள்போயிருபுயவலிமைபோ
யாவரும்பண்டுதாமிடுபுறமிட்டனர்
தேவருங்கண்டுவந்தலர்மழைசிந்தினார். (௧௮)

வேறு.

ஏயவரிசிலைவீமனெடும்பொருபோரிலெவருவரும்வென்னிட
மேயவிழியிலையாயபதிதருவீரர்பலரும்விகன்னனு
மாயமுதிர்சினமூளவிரைவுடன்மீளவரவபிமன்னுவுந்
தூயவரிசிலைவாளிகொடுதனதேர்கொடவரெதிர்துன்னினான். (௧௯)

மானவபிமனுஞானவிகனனைவாளிபலபலவேவவமே
லானவிரதமுமாவும்வலவனுமாழிகளுமுடனற்றபின்
றானவிரதமுறாமல்விசையொடுதத்தியருகுறுசித்திர
சேனனெனுமிளையோனதணிபெறுதேரின்மிசைகடிதேறினான். (௨0)

மற்றையிளைஞருமைத்துனனுமதமத்தகயபகதத்தனுஞ்
செற்றவிகனனுமுற்றுமிவனொடுசெற்றியர்பொருகிற்றினார்
வெற்றியபிமனும்விற்கையுடனவர்விட்டகணைகள்விலக்கிமார்
பெற்றுகணையனைவர்க்குமவரவரெய்த்துவிழவிழமொத்தினான். (௨௧)

நெடியவரிசிலைநிமிரமுறைமுறைநெடியவிசையுடன்வீசினா
னிடியுமுகிலெனவகிலவெளிமுகடிடியவதிர்பெருநகையுடன்
கொடியவிகனனைமடியவவனுடல்கொடியகுடருகுருதிநீர்
வடியவிருபுயமொடியவுதைபினன்வடியகணையொருநொடியிலே. (௨௨)

மன்னர்மணிமுடிமன்னுகனைகழன்மன்னனிளவல்விகன்னனை
முன்னருறுகணைபின்னர்விழவிழமுன்னரமர்பொரமுன்னினான்
பொன்னசலநிகரன்னபுயவபிமன்னுவொருவனுமின்னுநா
மென்னவமர்பொரவின்னரணுகுவதென்னவெருவினர்துன்னலார். (௨௩)

அன்றையமரினிலொன்றுபடவவரங்கமயர்வுறுபங்கமே
தென்றுமொழிவதுதந்தமனையுறவெந்தநிருபருமுந்தினார்
வென்றுபொருமுனைநின்றவபிமனைவிஞ்சுமுவகைகொணெஞ்சுடன்
சென்றுதழுவினரிந்துவரவெழுசிந்துவெனமகிழ்தந்தைமார். (௨௪)

கோடுமுதலொடுவாளிகளினிறவீழ்வபலகடகுஞ்சரங்
காடுபடுதுளவோன்முன்வரவிடுகஞ்சன்மழகளிறொக்குமா
லோடுகுருதியினூடுவடிவொருபாதிபுதைதருமோடைமா
நீடுமுதலையின்வாயின்வலிபடுநீலகிரியைநிகர்க்குமால். (௨௫)

மாலுமதகடசாலுநுதலுமருப்புமொருகையும்வதனமுந்
தோலுமொழியவுளானதசைபலபேய்கணுகர்தருதும்பிமா
நாலுமறைகளுமோலமெனவகல்வானமெனமுழுஞானமே
போலுமெனவொளிர்மேனியுடையவர்போர்வைபுரியதள்போலுமே. (௨௬)

சேனையிபமுகமற்றுவிழுவனசென்றுதசைவழிகவ்விவிண்
போனவயவர்கள்படைகொடெதிரெதிர்பூசல்புரியிருபூதமுஞ்
சோனைமழைமுகில்வாகன்முதலசுரேசர்தொழுதுதுதிக்கவே
யானைமுகவசுரேசனுடனமராடுமுதல்வனையொக்குமே. (௨௭)

இமையமணுகினன்விசயன்மதலையையின்றையமரினியுங்களுக்
கமையுமெனமுதலனிகமடையவுமணியுமவனிபர்நால்வருந்
தமையனொடுதமபதியினணுகினர்தங்கவிரைவொடுகங்குல்போய்ச்
சிமையமணுகினன்மீளநனியிருள்சிதையவுதயதிவாகரன். (௨௮)

ஆறாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௯௧௮.

ஏழாம்போர்ச்சருக்கம்.

உரலும்வேதமுந்தொடரநந்தகோனுடனசோதைகண்டுருகவாழ்வுகூர்
தரணிமீதுசெங்கையுமாமுழந்தாளும்வைத்துவைத்தாடுமாயனார்
விரவிநின்றமாமருதினூடுதாமெத்தெனத்தவழ்ந்தருளிமீளவும்
புரியுநீள்கடைக்கண்ணும்வண்ணமும்போற்றுவார்கண்மெய்ப்புளகமேறுமே. (௧)

இருவர்சேனையுஞ்சேனைமன்னருமிகலியேபலதிசைகளெங்கணு
முரசமாதிவெம்பணைமுழங்கவேமுன்னைவெங்களம்பின்னுமெய்தினார்
மரகதாசலம்போலுமேனிமாமாயனச்சுமாசுணவியூகமுந்
தரணிகாவலன்றன்பிதாமகன்சகடவியூகமுந்தான்வகுக்கவே. (௨)

மன்றனிம்பநாண்மாலைமௌலியான்மாறன்மீனவன்வழுதிபஞ்சவ
னன்றுபஞ்சவர்க்காகவேயுடன்றந்தணற்குடைந்தஞ்சியோடினான்
றுன்றுமாயமால்யானைகொண்டுபோர்யானைமன்னரைத்தொல்லமர்க்கணே
வென்றுகண்டவர்புறமவர்க்கிடான்மீளவந்தனன்வீமன்மைந்தனே. (௩)

முகினிறங்கொண்மாமேனிமாயனார்முன்பிறக்கவேபின்பிறந்தவன்
புகுநிலந்தனிற்சற்றுநின்றிலன்பொருசுதாயுதன்போர்பொறாமையிற்
சகுனியும்பெருஞ்சேனைமுன்வரத்தக்கசல்லியன்றானுமோடவே
மிகுநிறங்கொள்பைந்தாமவாகைபோர்வென்றுசூடினான்வீமசேனனே. (௪)

உயர்ந்தமேருவோடொத்திலங்குதேருலகளந்ததாள்வலவனூரவே
செயந்தன்மாபெருந்துணைவன்வன்பெருஞ்சேனைதன்னொடுஞ்சென்றுபற்றினான்
வியந்ததேரின்மேன்முப்புரங்களும்வென்றமீளிபோனின்றவீடும
னியைந்துபோரினுக்கெதிரவில்வலோரிருவர்விற்களுமெதிர்வளைந்தவே. (௫)

ஒருவரெய்தவம்பொருவர்மேலுறாதோரொரம்பினுக்கோரொரம்புதொட்
டிருவரும்புகுந்தெய்தவல்லபமின்னதாகுமென்றுன்னலாகுமோ
வரிவில்வெங்கடகரியின்வந்ததாரகனுமாமயிற்குகனுமன்றியே
மருவுவெங்குரற்கொண்டல்வாகனும்வலனும்ராமராவணருமென்னவே. (௬)

கரியணிக்குளெக்கரிகள்புண்படாகடவுதேரிலெத்தேர்கலக்குறா
பரிநிரைக்குளெப்பரிதுணிப்புறாபாகர்தம்மிலெப்பாகர்வீழ்கலார்
நரனும்வெற்றிகூர்வசுவுமுற்றபோர்நவிலுகிற்கினாநடுங்குமா
லிருதளத்தினுமிருவரம்பினுமேவுறாதபேரெந்தமன்னரே. (௭)

வேறுபோரினிப்பொருதல்வேண்டுமோவிசயன்வீடுமனென்னும்வீரர்தஞ்
சீறுபோரிடைத்திசையடங்கலுஞ்சிவந்தகோலமெய்க்கவந்தமாடுமாற்
கூறுபோர்பொரக்கருதிவெங்களங்கொண்டுதங்களிற்கொல்லலுற்றநா
ளாறுபோரினும்பட்டபேரினுமறுமடங்குபேரன்றுபட்டதே. (௮)

பாரவாளினுங்கூரவேலினும்பகழிவாயினும்பட்டபட்டபேர்
வீரவானின்மேல்வழிநடத்தலான்மெய்தளர்ந்துவேதனைமிகுத்தபின்
சேரநீருநம்பாடியெய்துவீர்செருவிளைந்ததிச்சேனையென்றுபோ
யாரவாரநீடாழியெய்தினாழியொன்றுடைத்தேரருக்கனே. (௯)

வெங்களந்தனிற்பகன்மலைந்தபோர்மெய்விடாய்கெடக்கைவிடாதுபோய்த்
திங்களின்குலத்திருவர்தம்பெருஞ்சேனைமன்னரும்பாடியெய்தினா
ரிங்களந்தவாறப்புறத்துவானெல்லைதானளந்திந்தமன்னவர்
தங்கள்வெஞ்சமங்காணமாமணிச்சயிலமெய்தினான்றபனன்மீளவே. (௧௦)

ஏழாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள். ௨௯௨௮.

எட்டாம்போர்ச்சருக்கம்.

பூத்தநாபியந்தாமரைப்பூவில்வந்துபல்பூதமுஞ்
சேர்த்தநான்முகப்புனிதனுமுனிவர்யாவருந்தேவரு
மேத்தநாளுமேவதங்களுந்தேடநின்றதாளெம்பிரான்
பார்த்தன்மாமணித்தேர்விடும்பாகனானதெப்பான்மையே. (௧)

நெருநலிப்பெருஞ்சேனையோகிலைதளர்ந்ததச்சேனையைப்
பொருநிலத்தினிற்புறமிடப்பொருதுமென்றுறக்கருதியே
வருநிலத்தெழுந்தூளியால்வானயாறுநீர்வற்றவுந்
தருநிலத்துளோர்காணவுந்தருமன்வந்தனன்சமரிலே. (௨)

வென்றுபோனபோர்மேன்மையால்விலோதனப்பணிக்காவல
னின்றுட்வேறுமென்றக்களத்தெண்ணில்சேனையோடெய்தினான்
றுன்றுகங்கையின்றிருமகன்சூசியூகமுந்துளபமால்
வென்றிகூர்பெருஞ்சகடமாம்வெய்யயூகமுஞ்செய்யவே. (௩)

தொலைவிலங்கழற்றுணைவரேதுணைவராகவெஞ்சூறைபோற்
கொலைவிலங்கையன்பிறைமுகக்கூரவாளியன்றேரினன்
மலைவிலங்குதோள்வீமனைவளைத்துவந்தெதிர்திளைத்தனன்
றலைவிலங்கலுக்கரசெனத்தகும்வலம்புரித்தாரினான். (௪)

தும்பிமேன்மதத்திடைவிழுந்தும்பிபோல்விறற்றுரோணன்றனுந்
தம்பிமாருமுற்றெய்தவெஞ்சாயகங்கண்மெய்தைக்கவே
வெம்பிவீமனுந்தன்சரம்விண்டலத்திலிவ்வேந்தனுக்
கெம்பிமாரிலின்றெண்மர்போயிடம்பிடிக்கவென்றேவினான். (௫)

முந்தவன்றுசென்றுசுகன்மைந்தனுசுகமூழ்கவே
சுந்தரன்விசாலக்கணன்விரவாசிபௌதுண்டனு
மந்தமாமகோதரனுடன்மாகவிந்துவுமபயனுஞ்
சிந்தினார்களந்தன்னிலாதித்தகேதுவுஞ்சேரவே. (௬)

அற்றகந்தரமுயிரினோடந்தரம்புகத்துள்ளவு
மிற்றபேருடம்பவனிமேலெடுத்தவில்லுடன்வீழவு
முற்றதம்பியர்மாய்தல்கண்டுள்ளுடைந்துபோயுரனுடைக்
கொற்றவன்பெருங்குருகுலக்குரிசினின்றுழிக்குறுகினான். (௭)

தன்பிதாமகன்செய்யதாடனதுமௌலிமேல்வைத்துநின்
றன்பிதாவின்மேலன்பினுலகமும்பியர்க்குதவுவா
யென்பிதாவுநீயாயுநீயென்றிருந்தனனெம்பிமார்
முன்பிதாமருத்தென்னுமம்முதல்வனுன்முடிவெய்தினர். (அ)

நீவினைத்தலைச்சேனையின்றலைவனாகிமுன்னிற்கவே
வீவெனக்குவேறில்லையென்றெண்ணினேனெனவேந்தர்வேந்
தோவிபத்தின்மெய்புணர்வழிந்துள்ளழிந்துகொண்டுரைசெய்தான்
வாவிநித்திலமென்னவேமலர்ந்தகண்கணீர்மல்கவே. (௯)

வேறு.

இரங்கனீசிறிதுமையபவெரிபடையெடுப்பதியாரு
முரங்கள்போயமரிற்சாகாதுய்ந்தனரோடவன்றே
சரங்களாலயிலால்வாளாற்றம்பகைசெகுத்துத்தாமுஞ்
சிரங்கள்வேறுடல்கள்வேறாக்கிடப்பதேசெல்வமம்மா. (௧௦)

இருந்தனம்படைத்தமாக்களின்பமுமறனுமஞ்சார்
விருந்தெதிர்சிறிதுமஞ்சார்மேம்படவாழுமில்லோர்
பொருந்தியவிறப்பையஞ்சார்போதமெய்புணர்ந்தமாந்த
ரருந்தவமுனிவாஞ்சாரரசருமடுபோரஞ்சார். (௧௧)

இன்னமொன்றுரைப்பக்கேண்மோவிருசெவிக்கேறுதேனு
முன்னரசாண்டவேந்தர்முறைமையிற்சிதைந்ததுண்டோ
மன்னவைதன்னினின்றமாசிலர்வடமீன்போல்வா
டன்னிருகண்ணீரின்னமிவைகொலோதருவதம்மா. (௧௨)

கால்வருகவனமான்றேர்க்கன்னனுங்கன்னபாக
மால்வருகலுழிவேகமாவலான்சகுனிதானு
நூல்வருபழுதில்கேள்விநம்பியுநீயுமிந்த
நால்வருங்குறித்தவெண்ணநாளையேதெரியுமையா. (௧௩)

விதுரனும்வெஞ்சொலாற்றான்வில்லினையொடித்துநின்று
னதிரதனாலன்றியங்கர்கோனமரில்வாரான்
முதிர்படைவிசயன்வீமன்மூண்டமர்புரியுங்காலை
யெதிரினிநானுநீயுமல்லதிங்கிலக்குவேறார். (௧௪)

புரிந்தறம்வளர்க்குநீதிப்பொய்யிலாமெய்யனங்கே
செருந்தவிழ்துளபமாலைத்திருநெடுமாலுமங்கே
யருந்திறலமரிற்பொன்றுதங்கிருந்தவரையிங்கு
மிருந்தவர்காண்பதல்லால்யார்கொலோவிறக்கலாதார். (௧௫)

விடுகநீகவலைவேண்டாமேலுனக்குறுதிசொன்னேன்
முடுகவாளமரிற்சென்றுமுன்முனைந்தாரையின்றே
யடுகமற்றென்றிலொன்றிலாங்கவர்தங்கள்கையாற்
படுகவாவென்றுதேர்மேற்சென்றனன்பரிதிபோல்வான். (௧௬)

காயிருங்களிற்றின்மேலான்கடோற்கசக்காளை தானே
ராயிரம்வடிவாய்முந்தியரசர்பேரணியையெல்லாந்
தோயிருட்பிழம்போடுற்றசோனையம்புயலிற்றோன்றி
பாயிருவிசும்பிற்றாராகணமெனமாய்த்துவந்தான். (௧௭)

ஒருபுடையிவன்போர்செய்யவொருபுடையுரககன்னி
யருளுடைமைந்தனெண்ணிலாயிரமுருவமாகி
யிருபுடையினும்போர்வேந்தரெலிகள்போலேங்கியம்பாற்
பொருபடையுருண்டுபோகப்பொருவில்வெம்பூசல்செய்தான். (௧௮)

இப்பகன்முடியுமுன்னேயாரையுமுடிப்பனென்றுப்
பைப்பகன்மகுடமைந்தன்பலபெரும்படையுமாகி
யப்பகலடுபோர்செய்யவன்றமரழிந்துமாய்ந்த
மெய்ப்பகனிளவலந்தவீமன்மேல்வெகுண்டுவந்தான். (௧௯)

என்னுடன்பிறந்தோன்றன்னையுதிட்டிரனிளவல்கொன்றான்
றன்னுடல்பிளப்பேனென்றுதானைவல்லரக்கரோடு
மன்னுடன்சொல்லிநிற்பான்வந்தெதிர்மலைந்தகாலை
மின்னுடைமுகில்போற்சென்றான்வீமனுக்கிளையோன்மைந்தன். (௨௰)

வலம்புரித்தாமவேந்துக்காகவேபலைவான்வந்த
வலம்புதனோடுஞ்சென்றோரடங்கலுமரக்கர்மாயக்
குலம்பழுதற்றமைந்தன்கொண்டபல்லுருவத்தோடும்
புலப்புறப்பொருதானந்தவரக்கனும்புறந்தந்தானே. (௨௧)

அஞ்சினன்போனபின்னரரவினையடர்க்குமாய
வெஞ்சினக்கலுழனாகியுருமெனமீளவந்தா
னஞ்சினையுமிழும்வெவ்வாய்நாகங்களனைத்துமொன்றா
யெஞ்சினபோலநின்றானிருதருக்கிறுதிசெய்தான். (௨௨)

நின்றவன்றன்னையந்தநிருதனும்வடிவாளோச்சிக்
கொன்றனன்கொன்றானைக்குருகுலத்தரசன்சேனை
வென்றனனரக்கனென்றுவிரிகடல்போலவார்த்த
தன்றவனடர்த்தமாயமார்கொலோவடர்க்கவல்லார். (௨௩)

வேறு.

பூஞ்சாயகன்கைப்பொருசாபம்பொசிந்துகண்ணாற்
றீஞ்சாறுபாயுஞ்செழுநீர்வயற்செந்நெல்வேலிப்
பாஞ்சாலநாடர்பலரும்படப்பாணம்விட்டார்
தாஞ்சாபம்வாங்கிமறைமைந்தனுந்தந்தைதானும். (௨௪)

பட்டான்றுணைவனெனக்கேட்டுப்பரிவுபொங்க
விட்டான்மணித்தேர்வளைத்தான்றனிவெய்யசாபந்
தொட்டான்பகழியபிமன்னுத்தொடுத்தலோடுங்
கெட்டாரரசன்பெருஞ்சேனையிற்கேடில்வேந்தர். (௨௫)

மைந்தன்களத்தின்மடிந்தானெனவாயுமைந்தன்
றந்தம்பறியுண்டெதிர்சீறியதந்தியென்ன
வெந்தங்கமுற்றுமனந்தீயெழமேனடந்தான்
சிந்தந்திகழுவெழுதுந்திறற்சிங்கமன்னான். (௨௬)

சினத்தோடுநம்மேல்வருகின்றனன்செம்மலென்னா
வினத்தோடுசெல்லும்பிறைவாளெயிற்றேனமென்ன
மனத்தோடியைந்ததிருத்தம்பியரோடுமன்னர்
சனத்தோடும்வந்தானெதிர்சீறித்தரணிவேந்தன். (௨௭)

திளைத்தாரரசர்திகிரிக்கிரியென்னவோடி
வளைத்தார்கனகவரைபோல்வருமன்னன்றன்னை
யுளைத்தாரனைவோர்களுமோரொருபாணமேவித்
துளைத்தார்கிளைத்தார்விளைத்தாமர்தூண்டுதேரார். (௨௮)

எடுத்தானொருதன்சிலைவீமனுமெண்ணில்பாணந்
தொடுத்தானவர்மேலிமைப்போதையிற்சூழ்ந்துளோரைக்
கெடுத்தானரசர்க்கிளையோரெதிர்கிட்டிமீண்டும்
படுத்தானெழுவரிவன்வாளியிற்பட்டுவீழ்ந்தார். (௨௯)

அறமிக்கசொற்குண்டலபோசனனாதியக்கன்
றிறமிக்கதீர்க்கநயனன்சிலைத்திம்மவாகு
மறமிக்கவேற்குண்டலன்குண்டலதாரன்மன்னூற்
றுறைமிக்கமிகள்விக்கருடத்துசனானதோன்றல். (௩௦)

இப்பேரெழுவர்சிரமேருமெழுந்துதுள்ளி
மைப்பேரெழிலியகல்வானிடைவந்தவெல்லை
யொப்பேதெனவாசவன்கேட்டலுமோங்கல்விந்தை
கைப்பேரெழிற்பைங்கழுங்கென்றனர்கண்டவானோர். (௩௧)

அறந்தந்தவாழ்க்கைமுடிக்கின்றனையாகிநீயு
மிறந்தந்தரத்திலினியேகுகவென்றுசீறி
மறந்தந்தசீயக்கொடியோன்கொடிமாசுணத்தோன்
புறந்தந்தபோரிற்புறந்தந்தனன்போகலுற்றான். (௩௨)

கந்தேயனையபுயவீமன்கணைகள்பட்டுத்
தந்தேரழிந்துபடுமன்னவர்தானையென்ன
மந்தேகரெல்லாமலைவுற்றுமடிந்துவீழச்
செந்தேரருக்கன்குடபாற்றிசைசென்றுசேர்ந்தான். (௩௩)

தளவொத்தமூரற்றலமானைத்தருமன்மைந்தன்
வளமிக்கவெம்போர்க்களம்வென்றுவதுவைசெய்வா
னுளமுற்றளித்தகலன்போலுமுருகுகலன்கள்
பிளவுற்றவேழநுதனித்திலப்பெட்டிபோலும். (௩௪)

பூட்டற்றவில்லின்மிசைசோரிப்புனலின்வீரர்
வாட்டற்றவீரல்பலசுற்றிவயங்குதோற்றம்
வேட்டற்பொருட்டாற்புவிமானுக்குவேந்துசூட்டுஞ்
சூட்டற்றுமுற்றுங்குடர்வாசத்தொடையலற்றே. (௩௫)

குலமாகிருபருடல்சோருங்குருதிவெள்ளப்
பல்மாநதிபோய்த்திரைவேலையிற்பாய்ந்ததோற்ற
நிலமான்விளிம்புசிவப்பேறியநீலவாடை
நலமாகமன்றற்குடுத்தென்னநவிலலாமே. (௩௬)

தன்பாடிபுக்கான்புறந்தந்ததரணிவேந்தன்
மின்பாடிலங்குங்கணைவெஞ்சிலைவீமனோடு
மன்பாடிபுக்கான்பெரும்போரிடைமாய்ந்தமன்னர்
தென்பாடிபுக்கார்குடிபுக்கதுசேர்ந்தகங்குல். (௩௭)

அன்றேகளத்திற்பலியூட்டியவாண்மைவீர
னின்றேயிறந்தானிதற்குன்னியிரங்கலீரென்
றொன்றேமொழியுமுரவோன்முதலைவருக்குங்
குன்றேகவித்தகுடைக்கோவலன்கூறினானே. (௩௮)

உன்னிக்களத்திலுயிர்வீடுமுரகமைந்தன்
சென்னிக்கதிர்மாமணிசிந்தியசோதியெல்லாந்
தன்னிற்கவர்ந்தானெனப்பண்டையிற்றுமமேனி
மின்னிப்பரிதிதுனைபாற்றிசைமேவினானே. (௩௯)

எட்டாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௨௯௬௭.

ஒன்பதாம்போர்ச்சருக்கம்.

பேராறுமூழ்கிமறைநூல்பிதற்றிமிடறுப்பிளந்துபிறவித்
தூராறுமாறுநினைபாமலுங்கடொழிலேபுரிந்தசமய
ரோராறுபேதசமயங்களுக்குமுருவாகிநின்றவொருவ
னீராறுநாமமுரைசெய்துமண்கொடிடுவார்கள்காணுமிமையோர். (௧)

முன்போருடைந்துதனதில்லடைந்தமுடிமன்னன்முன்னையிரவிற்
றன்போலுமாமனவனோடுகேடுதருதம்பியோடுகருதிப்
பின்போதில்வண்மையொழிவானையோடியபழையென்றுபேசவவனு
மின்போலிறந்தவிளையோர்கள்பாடுவினவாவிருந்தபொழுதே. (௨)

மாவில்லெடுத்தென்னிளையோர்கள்கந்தவகன்மைந்தன்முன்புசிவன்முன்
பூவில்லெடுத்தமதனானவாறுபுகல்கிற்பதல்லவனிகக்
கோவில்லெடுத்தென்மறைநாலும்வல்லகுருவில்லெடுத்தெனினிமே
னீவில்லெடுக்கிலைவேமுமுய்துநினையாரும்வாகைபுனையார். (௩)

என்னுஞ்சொலண்ணல்*செவியேறநெஞ்சமெரியேறவெய்தின்மொழிவான்
முன்னுந்தைதந்தையுரைசெய்தமேன்மையறியாய்கொலம்பொன்முடியாய்
தன்னுந்துதேரும்வரிவில்லுமுண்டுசரமுண்டுநாளையவனே
யுன்னுங்களத்திலவர்வானமாளவுலகாளுவிப்பனுனையே. (௪)

விற்கவ்வுவாளியடலைவர்மீதுவிடவஞ்சிவீரரெதிரே
புற்கவ்வுமாகில்விரைவோடுகங்குல்புலராமுன்வந்துபொருவேன்
சொற்கவ்வையாகநினையற்ககொன்றுசுரர்நாடளிப்பனினியுன்
சிற்கவ்வைதீரவவருக்குநின்றதிருமாலினுக்குமெனவே. (௫)

துச்சாதனுவிம்மொழிசென்றுகங்கைசுதனுக்குரைக்கவெனவே
நச்சாடராவையனையானுமங்கொர்நொடியுற்றபோழ்தினடவா
வெச்சாபமன்னுமணியூகமானவிரதந்தனக்குநடுவோ
ரச்சாணியானவவனுக்கிவன்சொலடைவேபுகன்றனனரோ. (௬)

பேரன்புகன்றமொழிகேள்விசெய்துபெரியோன்முகிழ்த்துநகையா
வீரம்புகன்றெனினிநானுமக்குவிசயற்செறுத்தன்முடியா
தீரந்துறந்தவொருநூறுபேரைமகுடந்துணிப்பனெனவே
நேரன்றவைக்கணுரைசெய்தவாய்மைநிறைவேறுநாளையுடனே. (௭)

ஒருநாளுநீவிர்பொறுமின்களும்மையுலகாளுவிக்கவருவோர்
வருநாடொடங்கியமர்செய்துதெவ்வைமடிவிப்பர்சொன்னவகையே
குருநாடுமற்றைவளநாடுமெய்திநுமரோடியைந்துகுபூமிப்
பெருநாளிருந்துநனிவாழ்திரென்றுவிடைநல்கிவிட்டபிறகே. (௮)

கண்ணுந்துயின்றுதுயிலும்முணர்ந்துசிறுகாலையுள்ளகடனு
மெண்ணுங்கருத்தின்வழியேயியற்றியிகன்மன்னர்சூழவரவே
மண்ணுங்குலுங்கவரையுங்குலுங்கவெழுதூளியாதிரமுமால்
விண்ணும்புதைக்கவடலாகவத்தின்மிசைசென்றுபுக்குவிரகால். (௯)

நாகங்குறித்தகொடிமன்னர்மன்னைநடுவேநிறுத்தியடைவே
பாகங்கடோறுமொருகோடிமன்னர்பகதத்தனோடுநிறுவிப்
பூகம்பமாகவினமோடலம்புதனுமுன்புபோகவொருபேர்
யூகஞ்சருப்பதோபத்திரமாகவணிசெய்துமானவரவோன். (௧௦)

நின்றானமர்க்கணவரங்குநிற்கவிவரிங்குநென்னனிருதன்
கொன்றானெனத்தன்மதலைக்கொரெண்மரெழுவோரைநீடுகொலைசெய்
தொன்றாகமன்னர்பலராவிகொண்டவுரவோனுமும்பர்பகைபோய்
வென்றானுமற்றையிளையோருமொன்றிவிரகற்றகோவுமுதலோர். (௧௧)

மற்றுள்ளமன்னர்புடைபோதமுன்னர்மழைமேனிமாயன்வரவே
யுற்றுள்ளவீரரொடுசேனைநாதனணிநிற்கவொண்கொயுளைமா
முற்றுள்ளவெங்குமெழுபூழிதுள்ளமுரசங்கடுள்ளமிகவுஞ்
செற்றுள்ளமேவுகனறுள்ளவந்துசெருவெங்களத்தினிடையே. (௧௨)

---

*செவியேறவெய்தினிடிபோலதிர்ந்துமொழிவான் என்றும் பாடம்.

செம்பற்பராகமுடிமாமதாணிசெறிதொங்கல்வாகுவலயம்
பைம்பற்பராகமலர்வல்லியோடுதிருமேனிசோதிபயில்வான்
வெப்பற்பராகவரையூகமாகமுறையாலணிந்துவெயில்கா
லம்பற்பராகபதியென்னநிற்கவமராடலுற்றபொழுதே. (௧௩)

வேறு.

இந்திரனுமேனையிமையோர்களுநடுங்க
வந்தரமுமெண்டிசையுநின்றதிரவதிரா
வெந்திறலலங்கல்புனைவீமனுடன்மலைவான்
வந்தனனலம்பசன்வலம்புனைபுயத்தான். (௧௪)

செருவில்வெருவாநிருதசேகரன்வயப்போர்
மருவுசுடர்வாளினுடன்வந்தநிலைகாணா
விரவிவருதேரனையதேரின்மிசையிழியா
வுருவுருமெனாவிரைவினோடியெதிர்வந்தான். (௧௫)

யாளியொரிரண்டிகல்புரிந்ததெனவிகலா
மீளிமையினாலும்வலியாலும்விறன்மிக்கோன்
வாளின்மிசைவாளதனைவைத்தடலரக்கன்
றோளிலொருதோணிலனுறும்படிதுணித்தான். (௧௬)

அற்றதிரடோடுணியவச்சமறவேநின்
றுற்றுழியும்வாளுரகமென்னவுளனாகி
மற்றையொருதோளின்மிசைதட்டியினிமற்போற்
பற்றுகெனவீமனுடல்பற்றுபுபுகுந்தான். (௧௭)

குத்துவர்திரிப்பரிருகுன்றனையதோள்கொண்
டொத்துவர்வயப்புலிகளென்னவுடனோடித்
தத்துவருரத்தொடுரமூழ்கமுதுதகர்போன்
மொத்துவர்சினத்தொடெதிர்முட்டுவர்சிரத்தால். (௧௮)

மல்வலியழிந்துபிறைவாளெயிறரக்கன்
வில்வலியறிந்திடுதுமென்றுவிலெடுத்தான்
கல்வலியதோள்விடலைகன்றிவிலெடுத்தான்
றொல்வலியினோடிருவருங்கணைதொடுத்தார். (௧௯)

கணைகளவையொன்றினுடனொன்றெதிர்கடித்துப்
பிணைபடவிழுந்தசெயல்கண்டுநனிபேதுற்
றிணையிலதிவர்க்கினியிரண்டனிகினிக்கும்
புணையுமிவரொன்றனர்புரந்தரனொடிமையோர். (௨௦)

மலையினையும்வாசுகியையும்பொருவுநாணுஞ்
சிலையுமறமேலொருசெழுங்கணைதொடுத்தான்
றலைவில்பகையானபகன்மார்புமிருதோளுங்
குலைகுலையுமாறுநனிகுத்தியுயிர்கொண்டான். (௨௧)

மந்தரமுமந்தரமுமென்னவபர்பலைவா
னந்தரமிதல்லவெனவந்தரநெறிப்போய்க்
கந்தரநெடுங்கிரிகரத்தினிலெடுத்தச்
சுந்தரன்வயங்குதிரடோடனிலெறிந்தான். (௨௨)

எறியுமளவிற்குரிசிலிளவறிருமைந்தன்
குறியினெடுவெஞ்சிலைகுனித்தருகுநின்றான்
பொறியிலவன்வீசியபொருப்பொரணுவாகி
முறியும்வகைபல்பகழிமுகிலெனவிடுத்தான். (௨௩)

வில்லபிமன்வெங்கணைகள்விசையொடவனெறியுங்
கல்லசலநீறுபடுவித்ததிறல்கண்டே
கொல்லவினிவேண்டுமெனவெய்யதொருகூர்வேல்
வல்லடலரக்கனகன்மார்பின்மிசைவிட்டான். (௨௪)

விட்டவடிவேலுருவவேலுருவுமுன்னே
பட்டவனும்வீழவிருபாலும்வருசேனை
முட்டவுமிவன்கணைமுனைக்கெதிரிலக்காய்க்
கெட்டனர்நிசாசரர்கள்கிரிகளெனவீழ்ந்தார். (௨௫)

ஆறுபடிநூறுபடியாயிரமரக்கர்
மாறுபடுபாடைவடமன்னரொருகோடி
யூறுபடவெங்கதைகொடன்றவனுடைக்கச்
சேறுபடுமூளைகடெறித்தனசிரத்தால். (௨௬)

முற்பகலின்மைந்தனைமுருக்கியவரக்கன்
பிற்பகலில்வீழவடிவேல்கொடுபிளந்தான்
சொற்பகலிலானிளவலென்றனர்துதித்தா
ரற்பகலிலாவுலகில்வாழமரரெல்லாம். (௨௭)

காசியர்கள்சேதியர்கண்மாளவர்கலிங்கர்
பூசலிடையேழுபதினாயிரவர்பொங்கிக்
கேசவனடாவுகிளர்தேர்கெழுசுவேத
வாசியுடையான்விசயன்வாளியின்மடிந்தார். (௨௮)

வேறு.

துரகத்தடந்தேர்த்தனஞ்சயன்கைவரிவெஞ்சாபஞ்சொரிகணையா
லுரகத்துவசன்பெருஞ்சேனையொருசாருடையவொருசாரிற்
சருகொத்தனிலகுமரன்கைத்தண்டாலுடையக்கண்சிவந்து
கருகித்திருகிமேனடந்தான்கங்காநதியாடிருமைந்தன். (௨௯)

பட்டக்களிற்றுப்பாய்புரவிப்பைம்பொற்றடந்தேர்ப்பாஞ்சாலர்
திட்டத்துய்மன்முதலானோர்சிகண்டியுடனேயெதிர்தோன்ற
வட்டக்கவிகைவீடுமனுமன்னற்கிளையகாளையரு
மெட்டுத்திக்கிற்காவலருமவரோடெய்தியிகல்செய்தார். (௩௦)

வரிவெஞ்சிலைக்கைக்கௌரவர்க்குமுதலாமுதல்வன்வடிக்கணைக
டெரியுங்கணத்திற்றெரியாமற்றேருந்தாமுஞ்சிலர்பட்டார்
கரியுந்தாமுஞ்சிலர்பட்டார்கலிவாய்மதுகைக்கால்வேகப்
பரியுந்தாமுஞ்சிலர்பட்டார்படாதாருண்டோபாஞ்சாலர். (௩௧)

நீயுங்ககனங்குடியேறநின்பேருடலநீணிலத்திற்
றேயும்படிநிற்பொரநின்றேனென்றேசொல்லாயிரஞ்சொல்லிச்
சேயுந்தனக்குநிகரில்லாச்சிகண்டிகடுங்காற்சிலைவாங்கிக்
காயுங்கணைகட்கிலக்கானான்காமன்கணைக்குங்கலங்காதான். (௩௨)

வில்லோன்சரங்கள்படநகைசெய்தவன்மேற்றனதுவில்வளையாத்
தொல்லோனின்றநிலைகண்டுதுச்சாதனன்றன்சுடுசரத்தாற்
பல்லோர்வியப்பத்தங்கள்குலப்பகைவன்சேனாபதியிளவல்
செல்லோடணவுநெடுங்கொடியுந்தேருஞ்சிலையுஞ்சிதைவித்தான். (௩௩)

இவனோவிலக்காமென்பகழிக்கென்பான்போலவெங்குலத்தி
லவனோசெங்கைச்சிலைவீழ்த்தானரசன்றம்பிக்கழிந்திவனுந்
தவனோதயத்திலிருளென்னச்சாய்ந்தானென்றுதனஞ்சயன்றன்
பவனோதயத்தேர்நடுவிட்டான்பணியார்தாமும்புறமிட்டார். (௩௪)

பார்த்தன்கணையாற்பட்டவரைப்பங்கேருகத்தோன்பலகோடி
நாத்தந்திலனேயெண்ணுதற்குநாமார்புகலத்தேமாலை
மாத்தந்திகளும்புரவிகளுந்துணியத்துணியவழிசோரி
நீத்தந்தன்னால்வடவைமுகநெருப்பொத்ததுகார்நெடுவேலை. (௩௫)

மன்னுஞ்சேனைபடக்கண்டவாட்சந்தனுவின்றிருமைந்தன்
பின்னுந்தனதுசிலையேந்திப்பேணாரெவரும்பின்காட்டத்
துன்னும்பகழிமழைபொழிந்துதுரக்கும்பொழுதுவிராடபதி
யென்னுங்குரிசிறனக்கிளையோனிராமற்கிளையோனெனத்தக்கோன். (௩௬)

பண்ணும்பரிமான்றேருடையான்படைத்தேர்மன்னர்பலர்சூழ
வெண்ணுஞ்சிலைக்கைச்சதானிகன்வந்தெதிரூன்றுதலுமெண்டிசையு
மண்ணுந்திகைக்கும்படிமலைந்தான்மன்பேருயிருக்காருயிருங்
கண்ணும்போல்வான்கருதலர்க்குக்கடுங்காலெழுப்புங்கனல்போல்வான். (௩௭)

உற்றுச்சமரில்வில்லெடுத்தவுரவோன்றன்னையுடலோடு
மற்றுச்சென்னிவேறாகிவீழத்துணித்தேயம்பொன்றாற்
செற்றுக்கங்கைமகனிற்பச்சேராரோடத்தேரோனு
மிற்றுத்தெறித்தமகுடமெனவீழ்ந்தான்புணரிக்கிடையந்தோ. (௩௮)

திலத்திற்சின்னம்படமுன்னஞ்சிவேதனுயிர்கொண்டுடல்சிதைத்தான்
றலத்திற்கனகமுடிசிந்தச்சரத்தாலழித்தான்சதானிகனை
வலத்திற்றிகிரிதனையுருட்டுமான்றேர்மச்சத்தவனிபர்தங்
குலத்திற்கிவனேகூற்றென்றார்கூற்றுங்குலையுங்கொலைவேலார். (௩௯)

சேந்தநெடுங்கண்முரிபுருவத்திட்டத்துய்மன்சேனையொடுஞ்
சார்ந்தநிருபரைவரொடுந்தானுந்தன்பாசறையடைந்தான்
பாந்தளுயர்த்தவரசுடனும்பைம்பொற்கவரிமதிக்கவிகை
வேந்தருடனும்போய்ப்புகுந்தான்றன்பாசறையில்வீடுமனும். (௪0)

சென்றபரிதியாயிரம்பொற்சிகரப்பொருப்புக்கப்புறத்து
நின்றவிருளையிப்புறத்துநீங்காவண்ணங்குடியேற்றி
யொன்றவுலகமுற்றதுயிலுணர்த்துவான்போலுதயமெனுங்
குன்றமிசைநின்றனைவரையுங்கரத்தாலெழுப்பக்குணக்கெழுந்தான். (௪௧)

ஒன்பதாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௩00அ.

பத்தாம்போர்ச்சருக்கம்.

வலியிலன்றுதந்தைசெற்றமைந்தனுக்குவந்தபேர்
நலிவெலாமகற்றுநாமநாலிரண்டெழுத்துடன்
பொலியுநாமமறைகள்சொன்னபொருள்விளக்குநாமமுன்
கலியனெங்கண்மங்கையாதிகண்டுகொண்டநாமமே. (௧)

தருமராசன்மதலைபஞ்சசயனநின்றெழுந்தபின்
கருமமானகாலையிற்கடன்கழித்துநேமியம்
பெருமனோடுசென்றுதக்கபெற்றிபேசிவெற்றியிற்
பொருமகீபர்சூழநின்றவிளைஞரோடுபோதவே. (௨)

திரண்டுபல்லியங்கடேவர்செவிபுதைக்கவானிடைப்
புரண்டெழுந்ததூளிகண்புதைக்கமெய்பதைக்கவே
முரண்டொடங்குசேனைவந்துமுன்னர்நாளையூகமே
யரண்டொடங்குயூகமாகவாகவத்துளணியவே. (௩)

வீடுமன்னெனுந்தடக்கைவீரமன்னும்வெஞ்சுடர்க்
காடுமன்னுபரிதியைக்கரங்குவித்திருந்தபின்
ரோடுமன்வலம்புரித்துலங்குதாமநிருபனு
நீடுமன்னர்பலரும்வாயிலிருபுறத்துநிற்கவே. (௪)

வனைந்திலங்குகழலுமுத்துவடமும்வாகுவலயமும்
புனைந்தசெம்பொன்மவுலியோடுபொற்பின்மீதுபொற்பெழ
முனைந்தடங்கவின்றுநாமுடித்தும்வெய்யபோரெனு
நினைந்துதன்பனைப்பதாகைநீடுதேறிலேறினன். (௫)

சுற்றறுதவில்லினன்றொடைமிடைந்ததூணியன்
கொற்றவாகைவாளினன்கூரவீரவேலினன்
மற்றுமாயுதங்களோடுமன்னரோடும்வார்முர
செற்றுமாரவத்தினோடுமடுகளத்தினெய்தினான். (௬)

தானுமுன்னணிந்தவாறுதானையைநிறுத்தியச்
சேனைமன்னன்வந்துநின்றநிலைமைகண்டுசெங்கண்மால்
வானினின்றிழிந்தகங்கைமைந்தனுக்குவானுலாம்
யானமின்றளித்தியென்றுவிசயனோடிசைக்கவே. (௭)

போரினண்டர்பகையைமுன்புபொருதுவென்றவின்மையான்
மூரிவெங்கொடிக்குரங்குமுன்னடக்குமேன்மையான்
வாரிதங்கொண்மேனியான்வனம்புகுந்துவருதலான்
யாருமின்றிராமனென்னவிசையநின்றவிசயனே. (௮)

சிலைபதாகையிவுளிதேர்செழுங்*கனலளித்தன
வலவன்யாரெனிற்குறிப்பொடென்னையாளவந்தநீ
தலமகீபரல்லதேவர்தானவரெதிர்ப்பினுங்
கொலைபடாமலேவர்போவர்குன்றெடுத்தகோவலா. (௯)

எந்தையாகத்துணைவராகதனயராவெந்தைதன்
றந்தையாகநீயுரைக்கில்யாரையுந்தறிப்பன்யான்
முந்தையாரணங்களுக்குமுடிவினின்றபொருளையென்
சிந்தையாரமுற்றுவித்துவினையறுத்தசெம்மலே. (௧௦)

என்றபோதுவந்துதேவவிரதனின்றவெல்லையிற்
குன்றமன்னதேர்கடாவியருகணைந்தகொற்றவ
ரொன்றுபட்டசேனையோடியாவரும்முடன்றுபோய்
நின்றசேனைநிருபன்மேனிரைத்துவாளிதூவவே. (௧௧)

பலருமெய்தவாளிமெய்படப்படப்பனித்துநாப்
புவரநொந்துகங்கைமைந்தனிதயமும்புழுங்கினான்
மலருகின்றவார்பனிக்குடைந்துசாலமாழ்கிநீ
டலருமந்தநிறமழிந்தவம்புசாதமென்னவே. (௧௨)

துன்னிமித்தமும்பலதொடர்ந்துசெய்யவெய்யவா
மந்நிமித்தநன்னிமித்தமாகுமென்றகந்தெளிந்
துன்னிமித்திரர்க்குநாளுமுதவிசெய்யுமுறுதியோன்
வின்னிமித்தவாளியாலவ்வாளிகள்விலக்கினான். (௧௩)

துருபதேயர்†மகதநாடர்வெங்குலிங்கர்சோனகர்
கருநடேசர்‡சிங்களர்கடாரபூபர்கௌசலர்
தருமராசன்மதலைசேனைமுதுகிடச்சரங்கள்போ
யொருவர்போலவனைவர்மேலுமுருவவெய்துறுக்கினான். (௧௪)

* கனலளித்தனன் என்றும் பாடம்.

† மச்சநாடர் வெங்கலிங்கர் என்றும், ‡ சிஞ்சியர் என்றும் பாடம்.

முடிதுணிந்துபின்புவீழமுன்னடந்துடற்றுவா
ரடிதுணிந்துவிழவிருந்தலங்கல்வில்வணக்குவார்
கொடிதுணிந்துவிற்றுணிந்துகோறொடுத்தகையுடன்
றொடிதுணிந்துசோரிவெள்ளநதியினூடுசுழலுவார். (௧௫)

மருத்தெறிந்தபூழியென்னவந்தவாமடங்குவா
ருருத்தெறிந்தவுருமினொந்தவுரகமென்னவுட்குவா
ரொருத்தரோடவென்னிதென்றநேகரஞ்சியோடுவார்
விருத்தன்வில்வளைத்தவாண்மைவிசயனுக்குமிசையுமோ. (௧௬)

வேறு.

வெம்புயவிசாலவடமேருவொரிரண்டுடையவீடுமனைநீடுமுனைவா
யம்புதமெழுந்துபொழிகின்றவழியோடிவருமனிலமெனவந்தணுகினார்
செம்பியனுமாகிருபனுஞ்செறிதுரோணனொடுசேயொடுசயத்திரதனுந்
தம்பியருமாமனுஞ்சயிந்தரொடுவெய்யபகதத்தனொடுசல்லியனுமே. (௧௭)

மனஞ்செய்வலிகூர்கசதுரங்கமபதாதியிரதத்துடன்வளைந்துபலருந்
தனஞ்சயமடங்கலெதிர்சாபமும்வளைத்தெதிர்சரங்களுமுகைத்தமர்செய்தார்
கனஞ்சலதிமொண்டுகொடெழுந்தனையவண்ணனொருகார்முகம்வணக்கியொருநூ
றினஞ்சரமொரோர்தொடையிலேவியவரேவுசரம்பாவுமெதிரேவிலகினான்.

தேருதயபானுவெனநின்றவிசயன்றனெதிர்தெவ்வர்பனியென்னவகலத்
தாருதயமாநிருபர்வேலைசுவறத்தனதுதண்டுதனிகொண்டுகுதியா
வோருதவியின்றிமுடியோடவர்சிரங்களுமுடைந்துமுதுகிட்டுடையவே
மாருதசகாயனெனமாருதனெனக்கடவுண்மாருதசுதன்கடுகினான். (௧௯)

ஏறிவருதேருடனெடுத்தெறிதருஞ்சிலரையிருபணைகள்பற்றியிறுகச்
சீறிவரும்யானையொடெடுத்தெறிதருஞ்சிலரையைந்துகதியுஞ்சிவணவே
மாறிவருவாசியொடெடுத்தெறிதருஞ்சிலரைவஞ்சினமும்வெஞ்சினமுடன்
கூறிவரும்வாளரசரேறியணிகின்றரதகுஞ்சரதுரங்கம்விழவே. (௨௦)

முந்துபடைவீரர்மிகநொந்துகதைவீமனெதிர்முதுகிடுதல்கண்டுமுனியா
வைந்துறழுநூறுபடியாயிரவர்வின்மையிலருச்சுனனையொத்தவடலோ
ருந்துரகசேதனனுரைப்பமுகிலேழுமுடனூழியிறுதிப்பொழிவபோல்
வந்துவடிவாளிமழைசிந்தினர்பராக்கிரமவாசியிபமாவிரதரே. (௨௧)

வெவ்வனமெரிக்கடவுளுண்டிடவணக்குமொருவில்லியுமவ்வில்லொடெதிர்போ
யவ்வவர்தொடுத்துவிடுமம்புகளனைப்பலவுமவ்வவைதொடுத்துவிலகிக்
கைவரிவிலற்றுநடுநாணிநடுவற்றுவளர்கைத்தலமுமற்றுவிழவே
வைவரிவடிக்கணைகளேவினன்மணித்திகிரிவலவன்விடுதேரில்வருவோன். (௨௨)

தருமன்முதலைவரையும்வென்றிடுதுமென்றுதுச்சாதனனொடைவரிளையோர்
பொருமுனையின்வீடுமன்முனின்றவர்களல்லதுபுகன்றநரபாலரெவரும்
பருமமதமாபுரவிதேர்கொடுபரந்தனர்படாதவர்கெடாதகதையுஞ்
செருமுனைசராசனமுமுடையவிருவோருநனிசீறியமர்செய்தபொழுதே. (௨௩)

விண்ணவரினுற்றெழுவர்கண்டுகளிகூறவிறல்வீடுமன்விருப்பினுடனே
கண்ணிணைநெருப்பெழவுடன்றினிநமக்குமிதுகாலமெனமாலைபுனையும்
வண்ணவரிவிற்றலைவணக்கிவிதமானபலவாளிகடெரிந்துதருமற்
கெண்ணுமிரதத்தலைவரனைவரையும்விட்டிலனிமைப்பொழுதினெய்தனனரோ. ()

எத்தனைமுடித்தலைகளெத்தனைபுயக்கிரிகளெத்தனைகரக்கமலம்வே
றெத்தனையுடற்சுமைகளெத்தனையுறுப்பினிணமெத்தனைகொடிக்குடர்களோ
டெத்தனைநிணத்தடிகளெத்தனைநரப்புவகையெத்தனையெலுப்புநிரைமே
லெத்தனைமணித்தொடைகளெத்தனைமலர்க்கழல்களிற்றனகளத்தினிடையே.(உரு)

விரிந்தனவுரங்களும்வெகுண்டனமனங்களும்விழுந்தனபசுங்குருதிநீர்
நெரிந்தனவெலும்புகளழிந்தனகொழுந்தசைநிமிர்ந்தனநரம்பின்விசியுஞ்
சரிந்தனபெருங்குடர்துணிந்தனசிரங்கடைதவழ்ந்தனநெடும்புருவமு
மெரிந்தனமுகங்களுமிடிந்தனமனங்களுமிறந்தனர்கடுங்கணிளையோர். (உசு)

சோமகரின்மச்சரிற்றென்னரின்றுளுவரிற்றுருபதேயரில்வளவரிற்
றேமருவலங்கற்குலிங்கரிற்சேரரிற்*சிஞ்சியரில்வெஞ்சமர்விடா
மாமகுடவர்த்தனரின்மண்டலிகரிற்பட்டவர்த்தனரின்மற்றிவ்வரவோ
னேமருகணைக்கிலக்காகாதமன்னவர்களொம்மன்னரென்றுமொழிவாம். (உஎ)

வேறு.

மேலெழுந்துதம்படையைநீடுகங்கைமைந்தனடுமேன்மைகண்டிரங்கிவெகுளா
ஞாலமுண்டசெம்பவளவாய்மலர்ந்துகொண்டிவனைநாமுரண்டொடங்கவிதுவே
காலமென்றுமன்றல்கமழ்கார்முகுந்தன்வெம்புரவிகால்கொள்சந்தனடங்கடவே
கோலவெஞ்சரங்களடைவேதெரிந்துகொண்டுசிலைகோலினன்றனஞ்சயனுமே. ()

ஓதம்வந்தெழுந்ததெனமேகநின்றதிர்ந்ததெனவூழிடும்பெயர்ந்ததெனவே
மாதிரங்களுஞ்செவிடுபோயகண்டமும்பொதுளிவாய்பிளந்ததண்டமுகடுஞ்
சீதரன்செழுந்துளபமாதவன்றயங்கருணசீதபங்கயங்கொடிருவி
ஞுதன்வெஞ்சமங்கருதியூதுகின்றசங்கின்முழுநாதம்வந்தெழுந்தபொழுதே. (உகூ)

தூரியங்கறங்கநரபாலர்சங்கினங்களணிதோறுநின்றுநின்றுகுமுறத்
தேர்களுந்துரங்கமொடுவேழமுங்கலந்துவருசேனைமண்டலங்களுடனே
பேர்பெறுஞ்சிகண்டிதலையாகமுன்புகொண்டுலகுபேருமன்றுமின்றுகொலெனப்
போர்தொடங்கிவென்றிபுனைவீடுமன்றடங்கணெதிர்போயினன்றனஞ்சயனுமே. ()

காதிவெங்கொடும்பகழியேவுதிண்சிகண்டிதலைகாணலுங்குனிந்துநகையா
வாதியம்பையின்றுபகைமீளவந்ததென்றுதனதாயுதந்துறந்துவிரைதேர் [துச்
மீதுகங்கைமைந்தனொருதான்வெறுங்கைநின்றளவின்மேனடந்துசென்றுபொரு
சாதனன்சரங்கள்பலதூவினன்பரிந்தெதிரிசாபமுந்துணிந்துவிழவே. (ஙக)

சாகநின்றிலன்றுருபதேயனெஞ்சமின்றிவரிசாபமின்றிவண்கொடிகொடேர்
வாகமின்றிவந்தவழிமீளநின்றசந்தனுகுமாரனுஞ்சரங்கள்விடவே
யூகமும்பிளந்துசுரராசன்மைந்தன்முந்திரதமூருகின்றசெங்கணெடுமான்
மேகமுங்கருங்கடலுநீலமுங்கலந்ததிருமேனியுஞ்சிவந்ததறவே. (ஙஉ)

---

* சிங்களரில் என்றும் பாடம்.

போனதின்சிகண்டி தனைமீளவுங்கொணர்ந்துபலபூசலுங்கடந்திரதமே
னீநிலஞ்சனின்கணையுமேவுகென்றுவெஞ்சமரினோர்நடந்துசென்றுவிசயன்
கூனலங்கிதந்தசிலைகோலியம்பொடம்புபலகூடநெஞ்சழன்றுதையினன்
வேனிலம்புமுன்புதையாதிலங்குமம்பொன்வரைமேனியெங்கணும்புதையவே.

தோளுநெஞ்சமுஞ்சிரமுமார்பமுந்தொடங்கிநிலைதோறும்வந்துவந்துருவவே
சாளரங்கொளங்கவழியோடுகின்றவிந்துமுகசாயகங்கைகொண்டுபிடியா
நாளறிந்தெதிர்ந்துபொருவோனுமைந்தனன்றுமுதனுமமுஞ்சிகண்டியிவனெய்
வாளியொன்றுமிங்கெமையுறாதனஞ்சயன்செய்பெருவாழ்விதென்றறிந்துமகிழா.

நாமவெங்கொடுங்கணையினுமுநொந்தனஞ்சமரநாளுமின்றுமுந்தவினிநீர்
போமடங்கனுந்தமையனீள்பதம்பொருந்தியுறுபோரறிந்துகொண்டுபொருவீ
ராமதன்றியென்செயினுமாவதொன்றுமின்றுதனியாண்மைபொன்றலென்றருகு
சேர், கோமடங்கறம்பியர்களாகிநின்றமைந்தரொடுகூறினன்பனங்கொடியனே. ()

கோடுகொண்டசெம்பவளநாதம்வந்துவந்துசெவிகூடமுன்புநின்றநிலையே
நாடிநெஞ்சழிந்துதிருநாமமன்புடன்றனதுநாகுழன்றுகொண்டுநவிலா
வோடுகின்றவம்பொழியநீடுடம்படங்கமுனையூரநின்றவம்பொரணையா
வீடுமன்கிடந்தகிடைதேவர்கண்டுவந்தனர்கண்மேல்விழுந்ததம்பொன்மலரே. (௩௬)

போரிலெஞ்சினன்குருகுலேசனென்றுகண்டபுருகூதன்மைந்தனும்புனைதுழாய்
வீரனுந்துனைந்துவருதேரினின்றிழிந்திருகண்வீழுமம்பினின்முழுகினார்
சேரவந்திரண்டுவகையாகிவெங்களங்குறுகுசேனையுந்*திரண்டலறவே
யாருநெஞ்சழிந்தனர்கள்யாருநொந்துநைந்தனர்கள்யாருநின்றிரங்கினர்களே. ()

வேறு

ஆகவெங்குந்தங்குமம்பினணைமேல்வீழ்வான்
யோகங்கொண்டேயுயிரையோடாவண்ணநிறுவி
மாகஞ்சூழும்பரிதிவடபாலெய்துமளவு
நாகங்காணேனென்னஞானத்தொடேவைக. (௩௮)

இங்குந்தருமன்முதலாவுள்ளமன்னரெவரு
மங்குந்துரியோதனனாதியானவரசர்
†பொங்குங்கடலாலுலகம்பொன்றுமன்றுபோலே
சிங்கமன்னான்பாதஞ்சென்னிமேற்கொண்டழுதார். (௩௯)

மறமும்வாகுவலியும்வல்வின்முதலைப்படையின்
றிறமுந்தேசும்வாழ்வுஞ்சீருங்கேள்விச்செலவு
நிறமுமுண்மையறிவுநெறியும்புகழுந்திகழ்பே
ரறமும்பொன்றுநின்னோடையாவந்தோவந்தோ. (௪0)

* திரண்டுவரவே என்றும்பாடம்.

† பொங்குங்கனலால் என்றும்பாடம்.

தந்தையின்பமெய்தத்தவமேயின்பமாகச்
சிந்தைதெளியுஞானச்செல்வாசெஞ்சேவகனே
முந்தைமரபுக்கெல்லாமுதல்வாஞாலமுழுது
மெந்தையாளவைப்பாரினியார்கோவேயென்றார். (௪௧)

அழுதமைந்தர்தம்மையஞ்சலென்றென்றாற்றி
யெழுதுதொல்லைவினையையாரேவிலக்குகிற்பா
ருழுதுவாளியுருவவுங்கண்முன்னர்வீழ்ந்தேன்
பழுதொன்றில்லையிதுவேபயனென்பவத்தாலென்றான். (௪௨)

சரத்தின்சயனம்பஞ்சசயனங்களினுமினிதென்
சிரத்தின்றாழ்வுதீர்ப்பாய்திண்டோள்விசயாவென்ன
வரத்தின்பயனாலுயிரைநிறுத்துமன்னன்மகிழ
வுரத்தினம்பான்முடியையுயரும்வண்ணமுயர்த்தான். (௪௩)

சொரியுங்கண்ணீர்துடைத்துத்துரியோதனனைநோக்கி
வரியுஞ்சாபக்கன்னன்மன்னர்க்குருமேறன்னான்
றெரியுங்காலத்தவனைச்சேனைத்தலைவனாக்கிப்
புரியும்போருநாளைப்புரிமினென்றுபுகன்றான். (௪௪)

கோயிறருமன்செய்யக்கூர்வெஞ்சரமேயணையா
நோயிலயர்வுமெய்யினுழையக்காலநோக்கி
வீயின்முத்தியில்லையென்னவிருந்தான்விருந்தாச்
சேயின்முனிவர்கேள்வித்தெள்ளாரமுதநுகர்வான். (௪௫)

இன்றுன்மைந்தன்பட்டானென்றுதந்தைக்கிசைப்பான்
சென்றுபரிதிமேலைத்திக்கினெல்லைசேர்ந்தா
னன்றவ்வருணனன்பாலமுதசெந்நீராறாய்
மன்றவெங்கும்பரந்ததொக்குஞ்செக்கர்வானம். (௪௬)

பாண்டுமன்னன்புதல்வர்படையும்பாடிபுக்க
தாண்டுபாடிபுக்கதரவத்துவசன்படையு
மீண்டுமுதல்வன்பட்டதெந்தைக்குரைமினென்று
தாண்டுமான்றேர்மைந்தன்சஞ்சயனைவிடுத்தான். (௪௭)

முனியுநகரிற்சென்றுமுகுரானனனுக்குரைப்பக்
கனியுமன்பின்வெள்ளங்கண்ணீராகிச்சொரிய
வினியென்மைந்தர்க்குறுதியில்லையென்றென்றேங்கிப்
பனிவெண்மதியங்கண்டபங்கயம்போலானான். (௪௮)

மண்மேல்விழுந்தானெழுந்தான்மானம்போனதென்றான்
கண்மேலெற்றியின்றேகண்ணுமிழந்தேனென்றான்
விண்மேலுள்ளோர்செல்வம்வீறுபெற்றதென்றான்
புண்மேலயிலுற்றென்னப்புலர்ந்தான்முதல்வன்புதல்வன். (௪௯)

செங்கணரவக்கொடியோன்சேனாபதியாய்நாளை
யிங்குமுனையினிற்பார்யாரென்றெண்ணுமெல்லை
யங்கர்பூபன்யானேயமரிற்றலைவனாகிக்
கங்கைமைந்தன்சொன்னபரிசேகாப்பனென்றான். (௫0)

தானாதிகனேநீவெஞ்சமரிற்சேனைத்தலைவ
னாலரசாய்நிற்பார்யாரென்றவனைவிலக்கி
மீனார்கொடியோன்றன்னைவென்றவேதக்கொடியோய்
சேனாபதியாகென்றான்றீவாய்நாகக்கொடியோன். (௫௧)

சிலையாசிரியன்வேந்தர்வேந்தன்சேனைக்கெல்லாந்
தலையாய்மன்னர்யாருந்தன்னைவந்துசூழக்
கொலையார்பகழிவெள்ளமார்பந்தோறுங்கோத்துத்
தொலையாவெம்போர்தொலைக்கத்துணிந்தானெவருந்துயின்றார். (௫௨)

வருணன்மைந்தன்பாடுவருணற்குரைத்துமீளத்
தருணமைந்தன்விசயஞ்சதமகத்தோன்கேட்ப
விருணிறைந்தகங்குலேங்கிமுன்னேயோட
வருணன்பொற்றேர்தூண்டவருக்கன்குணபாலடைந்தான். (௫௩)

பத்தாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-௩0௬௧.

வீட்டுமபருவமுற்றுப்பெற்றது.

——:o:——

௨

ஏ ழா வ து

துரோணபருவம்.

ப தி னொ ரா ம் போ ர் ச் ச ரு க் க ம்.

காயமும்புலனுமந்தக்கரணமுமாகியெல்லாத்
தேயமும்பரந்துநின்றுமீளவுஞ்சிதைத்துச்சுத்த
மாயமுமாகிநீங்கிவருபெருஞானானந்த
மாயவெம்பெருமானென்னையாண்டருளாழியானே. (௧)

பகிரதிமைந்தன்சேனாபதியெனப்பத்துநாளு
மிகல்புரியியற்கையெல்லாமியம்பினமினிமேலந்தத்
துகளறுகேள்வியேவெள்வித்துரோணவாசிரியன்செய்த
புகலருமைந்துநாளைப்பூசலும்புகலலுற்றும். (௨)

சென்றனன்கங்கைமைந்தன்றினகரன்மைந்தன்செல்வா
னின்றனன்றுரோணன்மைந்தனீடமர்முனைந்துசெய்யான்
வென்றனமினிநாமென்றுமெய்ம்முகில்வண்ணன்சொல்லக்
குன்றனகுவவுத்தோளார்வெங்களங்குறுகினாரே. (௩)

மாதனத்தளைகையாளுமன்னெனவானிற்பாக
சாதனக்கடவுளென்னத்தகும்பெருந்தரணிவேந்தன்
சேதனப்படைஞரோடுஞ்சேனையின்காவலான
வேதநற்குருவினோடும்வெங்களம்வந்துசேர்ந்தான். (௪)

மதியிலாவிசும்புஞ்செவ்விமணமிலாமலருந்தெண்ணீர்
நதியிலாநாடுந்தக்கநரம்பிலாநாதயாழு
நிதியிலாவாழ்வுமிக்கநினைவிலாநெஞ்சும்வேத
விதியிலாமகமும்போன்றவீடுமனிலாதசேனை. (௫)

பகடுதேர்புரவிகாலாள்பலவகைப்பட்டசேனை
சகடமாவியூகமாகவகுத்தனன்றனுநூல்வல்லான்
றிகடரு*கவுஞ்சயூகமாகவேதிட்டத்துய்மன்
றுகடருசாதுரங்கம்யாவையுந்தொகுத்துநின்றான். (௬)

படையுடையிருவர்சேனாபதிகளும்பனிவெண்டிங்கட்
குடையுடைநிருபர்சூழவருதினிக்குழாங்கள்சூழ
நடையுடைத்தடந்தேருந்திநாகரும்பனிக்கும்வண்ணந்
தொடையுடைவாளிமாரிசோனையம்புயலிற்பெய்தார். (௭)

மருத்துவர்மைந்தர்தம்மிலிளவலும்வலியசூது
கருத்துடன்பொருதுவென்றமாமனுங்கலந்துதம்மி
லொருத்தரையொருத்தர்வேறலரிதெனவுடன்றுவேக
சரத்தொடுசரங்கள்பாயச்சராசனம்வாங்கினாரே. (௮)

ஒருகணைதொடுத்துப்பாகனுயிர்கவர்ந்துயர்த்தகேது
விருகணைதொடுத்துவீழ்த்தியிரதமாத்தொலையநான்கு
பொருகணைதொடுத்துவஞ்சன்பொருவருமார்பிலாறு
வருகணைதொடுத்துவாகைமிலைந்தனன்வஞ்சமில்லான். (௯)

உருநிணச்சேற்றிலூன்றியோடுதற்குன்னுவான்போற்
சகுனியத்தேரினின்றுமிழிந்துகைத்தண்டமேந்த
நகுலனுக்கிளையகோவுநகுமணிவலயத்தோண்மேன்
மிகுதிறற்றண்டுகொண்டேவென்னிடப்பொருதுமீண்டான். (௧௦)

---

* கரிஞ்சயூகம் என்றும் பாடம்.

மதாசலமகுடமான்றேர்வாம்பரிவயவர்வெள்ளப்
பதாதியெம்மருங்கும்போதப்பார்த்திவர்நிழலிற்போதப்
பிதாமகனிறந்தானென்றுபேதுறுநிருபன்போந்து
சதாகதிமைந்தனோடுந்தாக்கினன்றபனன்போல்வான். (௧௧)

அரிக்கொடியரியேறன்னானரவவெங்கொடியுமற்று
வெருக்கொள்பேரரவமன்னான்வில்லுமுனற்றுவீழ
வெரிக்கணையேவிச்சூழ்ந்ததரணிபரெதிர்ந்தவேந்தர்
கரிக்குலமிவுளிதிண்டேர்மடியவெங்கணைகடொட்டான். (௧௨)

பல்லியமுழங்கமன்னர்படப்படப்பரித்தேரோடும்
வில்லியருணைவேந்தன்வென்னிடும்விரைவுகாணாச்
சொல்லியவிற்கைவாயுசுதனுடனுருமேறென்னச்
சல்லியன்முனைந்துவீரசகாயமேவினானே. (௧௩)

தம்முனோடுடன்றுவந்தசல்லியகுமாரன்றன்னை
யெம்முடனெதிர்ப்பையாகிலிமைப்பொழுதிகல்செய்கென்னா
வெம்முனைகடந்தபொற்றேர்வெஞ்சிலைநகுலன்றோன்றி
யம்முனைகவந்தமாடவவனுடனடுபோர்செய்தான். (௧௪)

மோகரித்தொன்றிரண்டுமூன்றுநாலைந்தம்பேவிப்
பாகனைச்சிலையைப்பொற்றேர்ப்பதாகையைப்பரியைவீழ்த்தி
யாகமுற்றுருவவெய்தானருச்சுனனிளவன்மாறுப்
போகமத்திரத்தார்கோவும்புறந்தந்துபோகலுற்றான். (௧௫)

சையமோரிரண்டுதம்மிற்பொருதெனத்தடந்தேருந்தி
வெய்யவன்மகனும்வீரவிராடனுமெதிர்ந்தவேலை
வையகங்கம்பமுற்றுமாசுணநடுங்கமேன்மே
லெய்யும்வெங்கணையால்வானத்தெல்லையுமறைந்ததன்றே. (௧௬)

துருபதயாகசேனநிருபனுந்தும்பைசூடி
வருபகதத்தனென்னுமடங்கலேறனையகோவு
மொருபகன்முழுதுந்தங்களூக்கமுமுரனுந்தேசும்
பொருபடைவலியுங்காட்டிப்போதகப்பூசல்செய்தார். (௧௭)

துன்றுவெங்கழற்காற்சோமதத்தனுஞ்சூழ்ந்துநின்ற
வன்றிறல்வேந்தர்தாமும்வாளமர்புறந்தந்தோட
வன்றுவீடுமனைவென்றவாண்டகைசிகண்டியென்பா
னின்றுபோர்செய்தவீரமெம்மனோர்க்கியம்பலாமோ. (௧௮)

வேறு.

தேர்த்திரள்பரித்திரள்கரித்திரள்சேனையின்
கோத்திரள்புடைவரக்குடைவரக்கொடிவரப்
பார்த்திவன்மதலையும்பார்த்தன்மாமதலையுந்
தூர்த்தனர்விசும்பையுந்தொடுத்தனதொடைகளால். (௧௯)

மொய்கணைபிற்படமுந்துதேருந்தவும்
பெய்கணைகணையுடன்பின்னிமுன்வீழவு
மெய்கணையபிமனுமிலக்கணகுமரனுங்
கைகணைதரநெடுங்கார்முகம்வாங்கினர். (௨௦)

இன்சிலைமதனவேளெனவருங்குமரனவ்
வன்சிலைவில்லிதான்மகிழ்வுறுங்குமரனை
நன்சிலைநடுவறநாணொடுந்துணியவே
தன்சிலைகொண்டுவெஞ்சாயகமேவினன். (௨௧)

அற்றவிற்றுணிகளாலரியையும்பாகையுஞ்
செற்றனன்சென்றனன்றேரொடுந்தேருறக்
கொற்றவர்நூற்றுவர்க்குரியவக்குமரனைப்
பற்றினனுயிரோடும்பாண்டவர்குமரனே. (௨௨)

வீயினால்வென்றபோர்வில்லியைக்கண்ணுதற்
றீயினால்வென்றவன்றிகழ்தருஞ்சிந்தையோன்
காயினன்வார்குழல்கைப்படுத்தெதிருறப்
போயினனவனொடும்பொன்னெடுந்தேரின்மேல். (௨௩)

முந்துவாளபிமனம்முரிவிற்குமரனை
யுந்துதேர்மீதுகொண்டோடலுமொருபுடைச்
சிந்துபூபதிசெயத்திரதன்வெஞ்சினமுற
வந்துவெங்குனிசிலைவாளியிற்றகையவே. (௨௪)

மடங்கலைவளைவதோர்சிலம்பினால்வலையெனத்
தொடங்கியமன்னவன்றேருரந்தொலைந்தபின்
றிடங்கொடோளங்கர்கோன்முதலியதேர்மன
ரடங்கவந்தபிமனுமொருவனோடமர்செய்தார். (௨௫)

வந்தவர்வந்தவர்வானுதனிலைதொறுஞ்
சிந்துரத்தூளியாற்றிலகமிட்டனனெனக்
கொந்துறுகணைமுனைக்குருதிநீர்மல்கவே
வெந்திறல்வில்லின்வென்கண்டனன்வீரனே. (௨௬)

சென்றதேர்யாவையுந்தன்னொருதேரினால்
வென்றுமாமன்னவன்மகனையுமீதுகொண்
டன்றுபோம்வெஞ்சிலையாண்மைகண்டபிமனை
வன்றிறற்சல்லிபின்வந்துமுன்வளையவே. (௨௭)

சித்திரபானுவிற்சீறிமுற்செல்லுமம்
மத்திரராசனைவருகநீவருகவென்
றத்திரநாலிரண்டவன்முகத்தடைசினன்
மித்திரர்செல்வமாம்விசயன்மாமதலையே. (௨௮)

தோளிரண்டினூடுத்துளைப்படப்பாகன்மேன்
மீளவுங்கொடியதோர்வீரவேலேவினு
னீளவெங்கதையுடனீள்வரையிழிதரும்
யாளிபோற்சல்லியனிரதம்விட்டிழியவே. (௨௯)

வன்புடனபிமன்மேன்மற்றவன்வருதனு
மன்புடன்கண்டுபேரனிலன்மாமதலைபோ
யென்புடன்புயநெரிந்தினமணிமகுடமு
முன்புடன்சாயவேதண்டினுன்மொத்தினுன். (௩0)

தலக்கணைசல்லியன்வீழ்தலுந்தந்தையோ
டலக்கணுற்றடியனேனுண்மையென்றுமெனக்
குலக்கணியானவிற்குமரனின்றயர்தனு
மிலக்கணகுமரனுந்தனதுதேரேறினுன். (௩௧)

தரையில்வீழ்சல்லியன்றன்னையுந்தனதுபே
ரிரதமேலேற்றியவ்விலக்கணகுமரனுங்
குரிசிலையன்றுயக்கொண்டுபோயினனரோ
கிருதவன்மாவெனுங்கிளர்முடிநிருபனே. (௩௨)

பொரும்பொருமுனைதொறும்புண்ணியன்சேனையிற்
பெரும்பெருந்தரணிபர்பேறுடன்வேறலா
லரும்பெருங்கொடியின்மேலரவவேறெழுதினுன்
றிரும்பினன்பல்வகைச்சேனையுந்தானுமே. (௩௩)

வேறு.

தண்டேகொண்டுவீமனெனுஞ்சண்டபவனந்தாக்குதலாற்
றிண்டேரென்னப்பட்டவெலாஞ்சிதைகின்றனகண்டிதயம்வெரீஇப்
பண்டேயுள்ளவோராழித்தேரோடொளித்துப்பரிகளுடன்
கொண்டேயருக்கனவ்வளவிற்குடபான்முந்நீர்குளித்திட்டான். (௩௪)

சென்றநிருபர்புறநாணத்திண்டோளபிமன்முதலான
வென்றிநிருபர்குழூஉக்கொண்டுவிறலார்சேனைவேந்தனுடன்
மன்றல்கமழுந்துழாய்மவுலிமாலுந்தாமும்பாடிமனை
யொன்றியினிதிற்கண்டுயின்றுருரனுந்திறலுமுடையோரே. (௩௫)

பானுளளவுந்துயிலாமற்பாந்தட்டுவசன்றனக்குபிர்நண்
பானுர்பலரும்வாள்வேந்தரமைச்சர்பலருமிளையோருஞ்
சேனுபதியுஞ்சூழவிருந்தபிமன்கைபிற்றிருமைந்தன்
றுடைமரிலகப்பட்டதாழ்வுக்கிரங்கியுளநொந்தார். (௩௬)

தனுவேதத்தின்கேள்விக்குஞ்சதுர்வேதத்தின்வேள்விக்குஞ்
செனுவேயுன்னையல்லதினிச்செய்துமுடிக்கவல்லவர்யார்
மனுவேயனையவுதிட்டிரனைநாளைச்சமரின்மற்றிதற்கோ
ரனுவேயென்னவகப்படுத்தினல்லாற்செற்றமமுறதென்றுன். (௩௭)

பெற்றோன் றனினுஞ்ச தமடங்குவலியோன்வீமன்பின்னிற்கப்
பொற்றேர்ள்விசயன் முன்னிற்கப்பொரும்போர்முனையிற்போருதவி
யற்றோர்போலவில்வலியாலறத்தோன் றனையகப்படுத்தன்
மற்றோர்பிறப்பிற்றெரியாதிப்பிறப்பின்முடிக்கமாட்டேமால். (௩௮)

செவ்வாய்வைக்கும்வலம்புரிக்கைத்திருமால்செம்பொற்றேரூர
வெவ்வாய்வாளிவில்விசயன்மெய்மைத்தருமனணிநின்ற
வவ்வாயிமைப்போதணுகாமற்காப்பார்சிலருண்டாமாகி
லிவ்வாய்நானையகப்படுத்தித்தரலாமென்றானெழின்மறையோன். (௩௯)

திகத்தராசன்முதலாகச்சஞ்சத்தகரிற்சிலமன்ன
ருகத்திற்கடையிற்கனல்போல்வாரொருவர்க்கொருவருனைமுந்திச்
சகத்துக்கொருவனெனும்விசயன்றம்முற்குதவிசெய்யாமன்
மகத்திற்சனிபோல்வளைக்குவம்யாமெனவஞ்சினமும்பலசொன்னார். (௪௦)

அருளேவடிவுகொண்டனையோனருகங்கமரிலணுகாம
லுருளேரிரதத்தருச்சுனனைபொருநாண்முழுதுந்தகைந்திலமேன்
மருளேகொண்டுகுடிவருந்தமனுநூல்குன்றிவழக்கழியப்
பொருளேவெஃகுமரசரைப்போற்புகுவேம்யாமுநரகென்றார். (௪௧)

மறனிற்சிறந்தபுயவலிடால்வரைபோன்றனிலன்மைந்தனெனப்
புறநிற்பானைத்தம்முனிடைப்போகாவண்ணந்தகைந்திலமே
லறனிற்கொண்டதன்மனையாளமளித்தலத்தினழுதிரங்கப்
பிறனிற்றேடும்பெரும்பாவிபெறும்பேறெமக்கும்பேறென்றார். (௪௨)

கன்றால்விளவின்கனியுதிர்த்தோன்கடவுந்திண்டேரவனைக
வன்றாட்டடக்கைமாருதியேயாகவமரின்மறித்திலமே
லென்றானாளைமுனிபோரினெங்ஙன்றியினுஞ்செய்ந்நன்றி
கொன்றார்தமக்குக்குருகுலத்தார்கோவேயாமுங்கூட்டென்றார். (௪௩)

*இவ்வாறுரைத்தவேந்தர்தமக்கெய்துஞ்சிறப்புச்செய்தகற்றிக்
கைவார்சாபமுனிவரன்றன்கழற்கால்வணங்கியேகுகெனச்
செவ்வாய்மலர்ந்துமானத்தாற்றிறலால்வாழ்வாற்செகத்தொருவ
ரெவ்வாவரசன்றன்கோயிலடைந்தான்விபுதர்க்கொப்பானே. (௪௪)

கங்குற்சிலைநூன்முனிவனுடன்கழற்காலரசன்பணித்தமைகேட்
டங்குத்தரியாதிவன்கரத்தேயருள்கூர்நெஞ்சனகப்படுமென்
றிங்குத்துயில்வார்யாவரையுமிருபாலையத்தினிடந்தோறுஞ்
சங்கக்குரலாற்றுயிலெழுப்பித்தபனன்குணபாற்றான்சேர்ந்தான். (௪௫)

பதினோராம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௩௪௦௬.

---

*வெவ்வேறுரைத்த வேந்தர்க்கு வேண்டுஞ்சிறப்புச்செய்தகற்றி என்றும் பாடம்.

பன்னிரண்டாம்போர்ச்சருக்கம்.

பொய்யாததவமுனிபின்போயநுளித்தாடகைதன்
மெய்யாவிகரென்னவெஞ்சரத்தாலழுத்தியபின்
மையாழிமுகில்வண்ணன்வாங்கியனபூங்கமலக்
கையாலுமொருசாபங்காலாலுமொருசாபம். (௧)

அற்றராபதிகருதியாசாரனுடுரைத்தவெலா
மொற்றராலக்கணத்தேயுணர்ந்தமுரசக்கொடியோன்
மற்றராவணைதுறந்தமாயனுக்கும்விசயனுக்குஞ்
சொற்றராபதநெருங்கத்தொடைத்தும்பைபுனைந்தானே. (௨)

கருங்களவின்கனிவண்ணன்கனைகழற்கால்வேந்தரொடும்
பெருங்களஞ்சென்றெய்தியபின்பேணார்கள்வெருக்கொள்ள
விருங்களிறுதேர்பரியாளிருமருங்குப்புடைசூழ
வருங்களிகொள்வரூதினியைமண்டலமாவகுத்தானே. (௩)

பின்னிறுத்திமாருதியைப்பேரணியிற்பலவகையா
மன்னிறுத்திகிருபாலுமருத்துவர்மைந்தரைநிறுத்தி
மின்னிறுத்துநெடுவாளிவிசயனையுங்குமரனையு
முன்னிறுத்திநடுநின்றான்முரசநிறுத்தியகொடியோன். (௪)

இப்பான்மற்றிவர்நிற்பவிரவுரைத்தமொழிப்படியே
தப்பாமற்றிகத்தகுலத்தலைவனுஞ்சஞ்சத்தகருந்
துப்பார்வெஞ்சிலைத்தடக்கைத்துரோணன்முதலனைவோரு
மப்பால்வந்தணிமகரவியூகம்வகுத்தணிந்தாரே. (௫)

காரணிபோற்பொருப்பணிபோற்காற்றணிபோற்களிற்றணியுந்
தேரணியும்பரியணியுந்திரிகத்தகுலபதியு
நாரணகோபாலரெனுநராதிபரும்வாள்விசயன்
காரணமாவறைகூவிக்கடுங்கொடுங்கார்முகம்வளைத்தார். (௬)

ஆர்த்துவருமவர்சிலைகண்டரசனைநீரிமைப்பொழுது
காத்திடுமினெனநின்றகாவலரோடுரைசெய்து
கோத்தருமன்பணித்ததற்பின்கோதண்டமுறவாங்கிப்
பார்த்தனுமன்றவரெதிர்போய்ப்பலவாளிமழைபொழிந்தான். (௭)

தூளியேயண்டமுறத்தூர்த்துமுதலகல்விசும்பை
வாளியேதூர்க்கும்வகைமலைவாங்குசிலைவாங்கி
யாளியேறனையானுமவனிபருங்கவந்தமுடன்
கூளியேநடமாடக்கொடுஞ்சமரம்விளைக்குங்கால். (௮)

தடித்தலைவேற்சயத்திரதன்சவுபலன்குண்டலன்முதலா
முடித்தலைவாளடனிருபர்முப்பதினாயிரர்சூழ
*விடித்தலைமாமுரசியம்பவிபதுரகப்படைசூழக்
கொடித்தலைமான்றடந்தேரான்குனிசிலையின்குருவந்தான். (௯)

வந்தகுருக்குருகுலமாமன்னுடன்போர்புரிவதன்முன்
பந்தமுறப்பாஞ்சாலர்பல்பதினாயிரர்சூழ
முந்தவயப்பணைமுழங்கமுழங்கொலிநீர்கொதிப்பதுபோ
லந்தமுனிக்கெதிர்நடந்தானவர்சேனாபதியே. (௧௦)

இருவர்பெருஞ்சேனையுமுற்றெதிரெதிராயுதமெடுத்தங்
கொருவரொருவரைவேறற்கொண்ணாதவமருடற்றச்
செருவிலரியேறனையான்றிட்டத்துய்மனும்வெகுண்டு
பொருசிலைவெங்கணைபொழிந்தான்போர்வேந்தர்பலர்மடிந்தார். (௧௧)

துன்முகனைப்புறங்கண்டுதுன்மருடன்முனைசாய்த்துக்
கன்முகமாங்காந்தாரர்கலிங்கர்கவுசலர்கிடதர்
புன்முகராயினைத்தோடப்பொருதழித்தான்பொருதழிந்த
மன்முகவெம்பெருஞ்சேனைமறையவன்பாலடைந்தனவே. (௧௨)

மறைவாய்வெஞ்சிலைமுனிவன்வரூதினிதன்னிலையழிந்து
குறைவாவந்தமைகண்டுகோதண்டமெதிர்வாங்கித்
துறைவாய்வெங்கனல்போலுந்துருபதன்கைச்சிலைதுணியப்
பிறைவாய்வெங்கணைதொடுத்துப்பிறைமுடியோனெனச்சென்றான். (௧௩)

சத்தியகேதுவின்சாபஞ்சரமொன்றாலிரண்டாக்கிச்
சித்திரவெஞ்சிலையாண்மைச்†சிகண்டியையுஞ்சிலையறுத்திட்
‡டுத்தமபானுவைமுதலாவுள்ளகொடுந்திறல்வேந்தர்
தத்தமுயிருடன்போகத்தானையெலாமடிவித்தான். (௧௪)

தாண்டியவெம்பரிநகுலசாதேவர்வென்னிட்டார்
பாண்டியனுமுதுகிட்டான்பாஞ்சாலர்புறமிட்டா
ரீண்டியவெங்களத்தவிந்தாரெத்தனையாயிரம்வேந்தர்
தூண்டியவெம்பரிநெடுந்தேர்த்துரோணன்கைத்தொடையாலே. (௧௫)

வடுத்தருவெஞ்சிலீமுகமும்வணக்குகொடுஞ்சராசனமு
மெடுத்துமனங்கதுவுசினமெழப்பவெழுந்தோர்நொடியி
னடுத்தகைவின்வானவருநடுக்குறுவெம்போர்முனையி
லடுத்தனர்வன்றபோதனனுமடற்றருமன்குமாரனுமே. (௧௬)

---

* இடித்தலைமா முகிலனைய விபதுரகம் புடைசூழ என்றும் பாடம்.

† சிகண்டியையுந்தேரழித்திட்டென்றும் பாடம்.

‡ உத்தமோசாமுதலா என்றும் பாடம்.

வேறு.

அதிர்த்தனசங்கசாலமுதலனைத்துவிதங்கொள்காகளமு
முதிர்த்தனவண்டகோளமுறவொலித்துடுவின்குழாமுழுதும்
விதிர்த்தனசெங்கைவாளொடயில்விழித்தனகண்கடையுமிழ
வெதிர்த்தனதங்கள்சேனைகளுமெதிர்ப்படுமைந்தர்போர்செயவே. (கஎ)

மதித்துமதங்களேழினுமெய்வனப்புறுகொண்டன்மானுவன
கதித்துநெடுங்கைவீசியுடுகணத்தைமுகந்துவாருவன
மிதித்துரகன்பணாமுடிகள்விதிர்த்துவெருண்டிலாவுவன
கொதித்திருகண்களாலுமெரிகொளுத்தினகும்பவாரணமே. (கஅ)

வரைக்குலமென்றுகூறிடினவ்வரைக்குவயங்குநேமியில
நிரைக்குநெடும்பதாகையிலநிறத்தகொடிஞ்சியாதியில
வுரைப்படவுந்துபாகரிலவுகைத்ததுரங்கராசியில
விரைத்துவிரைந்துலாவலிலவெனச்செருமண்டுதேர்பலவே. (ககூ)

உகத்தின்முடிந்தநாளலையொடொலித்தெழுசங்கவேலையென
மிகப்புகைகொண்டுவானுலகும்வெடித்திடமண்டுதேயுவென
நகச்சிகரங்கள்சாயவெதிர்நடப்பனசண்டவாயுவென
விகற்செய்துசெம்பராகமிசையெழுப்பினதுங்கவாசிகளே. (உ0)

விளைத்தனர்தொந்தமாகவமர்மிகைத்தனர்தந்தம்வீரமுட
னுளைத்தனர்சிங்கசாபமெனவுறுக்கினர்சென்றுமேன்முடுகி
வளைத்தனர்கொண்டவார்சிலைகள்வடித்தசரங்களாலுழுது
திளைத்தனர்வென்றிகூறும்வகைசெருக்களமெங்குமாடவரே. (உக)

மிகைத்தனர்தும்பைமாலைமுடிமிலேச்சினரின்றுசாலுமென
நகைத்தனர்தங்கடேருமெதிர்நடத்தினர்சண்டவேகமொடு
பகைத்தனரங்கம்யாவுமிசைபடப்படநஞ்சுகால்பகழி
யுகைத்தனரன்றையாடமரிலுதிட்டிரனுந்துரோணனுமே. (உஉ)

சினத்துமுனைந்தபோரில்வருசிலைக்குருவின்பதாகையற
மனத்தினுமுந்துமாதுணியவபத்துடனுந்துபாகன்விழ
வனைத்துருளுஞ்சதாவியிடவடுக்குறநின்றதேரழிய
வினத்தொடையைந்துபூபதியுமிமைப்பொழுதின்கணேவினனே. (உங)

தனித்துமலைந்தபோரிலெழுதலத்தரசன்கைவாளிகளி
லனத்தம்விளைந்துநாணொடுவிலறத்துணியுண்டதாகவமுன்
முனிக்குலமென்றுமாதிமறைமுதற்குருவென்றுமேன்மையுற
வினிக்கணையொன்றுமேவுகிலமிளைப்பாறவஞ்சலேகெனவே. (உச)

அறத்தின்மகன்றனுண்மையினையழித்துயிரெஞ்சிடாவகைதன்
மறத்தொடுகொண்டுபோவலெனமதித்தெதிர்வந்தசாபமுனி
திறத்தினிவன்கையேவுகணைசெயித்ததுகண்டுநாணிமெலி
வுறத்தளர்சிந்தையோடுதனதுடற்சுமைகொண்டுபோயினனே. (உரு)

வேறு.

தருமன்மைந்தனுடன்மலைந்துசமரிலஞ்சியோடியுங்
கருமநன்றுபடநினைந்தகலசயோனிபின்னையு
முரண்மிகுந்துடற்றவேகொன்முந்தவோடவேகொலாம்
விரைவுடன்சினங்கடாவவேறொர்தேரிலேறினான். (௨௬)

தங்கண்மன்னனம்முனைத்தனித்துவென்றவின்மையுந்
தூங்கவென்றியின்றியேதுரோணனாரழிந்தது
மங்குளங்கனன்றுமீளவணிகொடேரினானதுஞ்
சிங்கமென்னவருகுநின்றசிறுவர்கண்டுசீறியே. (௨௭)

முந்திமுந்திமச்சராசனோடுசேனைமுதல்வனுங்
குந்திபோசனாதியானகுலமகீபர்யாவரும்
வந்துசூழவேழமீதுவயமடங்கல்செல்வபோ
லந்தவேதமுனியையோடியக்கணத்தில்வளையவே. (௨௮)

கன்னனாதிசகுனியாதிகலிங்கதேசனாதியா
மன்னனாதியாகவங்குமற்றையவன்பெரும்படை
தென்னனாதிநகுலனாதி*திட்டத்துய்மனோடபி
மன்னனாதியாகவிங்குதிட்டிரன்வரூதினி. (௨௯)

நின்றசேனைமன்னர்தாமுநின்றவந்நிலத்திடைச்
சென்றசேனைமன்னர்தாமுமெங்கணுஞ்செருச்செய்தா
ரென்றுகூறியெதிருரைத்தல்யாவருக்குமுடிவுறு
தொன்றுநூறுசின்னமாவுடைந்ததோரொருடலமே. (௩௰)

வேல்விதத்தும்வாள்விதத்தும்வில்விதத்தும்விடுநெடுங்
கோல்விதத்துமுடிதுணிந்தகொற்றமன்னர்சற்றலார்
நூல்விதத்துமிக்ககேள்விநோன்சிலைக்கைம்முனிபடைக்
கால்விதத்துரததுரங்ககயவிதத்துவயவரே. (௩௧)

குத்துவார்ப்படைக்கலங்கள்கொண்டுமற்குறிப்பினான்
மொத்துவாரிரண்டுதேருமுட்டவிட்டுமொய்ம்பினா
லொத்துவார்களிற்றினின்றுமொருகளிற்றின்முதுகுறத்
தத்துவார்துரங்கமங்கடாரையாகவேறுவார். (௩௨)

கொற்றவாளின்முடியிழந்தகுறையுடம்புவாளுடன்
கற்றசாரியோடுமக்கணக்கறிந்துபுகழுவா
ரற்றகால்களற்றகைகளாயுதங்களாகவே
யெற்றுவார்படைக்கலனிழந்துநின்றவீரரே. (௩௩)

---

* திட்டத்துய்மனாதிமால், பின்னனாதியாகவிங்குதிட்டிரன்பெரும்படை என்றும் பாடம்.

சொன்னவாறுகுறியுமுள்ள துரகதந்துணிந்தன
கன்னவாறுசொரிமதக்களிற்றினங்கள்வீழ்ந்தன
பின்னவாறுபட்டனபிறங்குதேர்பதாதிக
ளின்னவாறுபட்டனவெனக்குறித்தியம்பொணா. (௩௪)

உங்கள்சேனைகெட்டதென்றுதிட்டிரன்றளத்துளார்
திங்களன்னகும்பயோனிசேனைதன்னையிகழுவா
ரெங்கள்சேனைகெட்டதுங்களிறைவன்வின்மையாலெனத்
தங்கள்சேனையந்தணன்றளர்ந்ததற்கிரங்குவார். (௩௫)

இருதளத்துநின்றமன்னரிருவராகவிகலியே
யொருதளத்துமன்னரென்னவொத்துநின்றுடற்றினார்
பொருதளத்தினிங்ஙனின்றுபோர்புரிந்தபொழுதிலே
வருதளத்தொடுதவினான்மருத்துவிமன்மைந்தனே. (௩௬)

நிருதகன்னிமகனுநேமிநீலவண்ணன்மருகனுங்
கருதிநெஞ்சமுன்றுவந்தகாவன்மன்னர்யாவருஞ்
சுருதியன்னதூமொழித்துரோணன்மேனடக்கவே
பரிதிகண்டபனியெனப்பகைத்தளம்பறந்ததே. (௩௭)

பறந்துபோய்நெடும்பணிப்பதாகையானொடெய்தினார்
பிறந்துபோய்வளர்ந்தபின்பிறப்புணர்ந்தபெருமனுந்
துறந்துபோயவிதுரன்முன்றுணித்தவில்லெனத்துணிந்
திறந்துபோனமன்னரன்றிநின்றமன்னரெவருமே. (௩௮)

வதிட்டனுந்துதிக்கும்வாய்மைவரிசிலைக்கைம்முனிவனோ
டுதிட்டிரன்புரிந்தபோருரைக்கவேயுணர்ந்துளான்
பதிட்டிதம்பிறந்ததின்றுபாண்டவர்க்குஞாலமென்
றதிட்டமொன்றுமுணர்கலானுமனிலவேகமாயினான். (௩௯)

விட்டவிட்டரததுரங்கவேழவாகனத்தொடுந்
தொட்டதொட்டசிலையொடுந்துணிந்துவெங்களத்திடைப்
பட்டபட்டநிருபர்தங்கள்பாடுகாணவெண்ணியோ
முட்டமுட்டவேகுகென்றுதன்படைக்குமுந்தினான். (௪௦)

முந்தவந்தமன்னனுமுரண்கொள்வாகையரசரும்
வந்தவந்தசேனையும்வகுத்தணிந்துமுனையவே
யந்தவந்தமுனைகடோறுமந்தவந்தவீரர்மெய்ப்
சிந்தவந்துடற்றினன்சிலைத்தடக்கையபிமனே. (௪௧)

சிந்திவாளிமழைகளோடுசிலைவளைத்துமுடுகுதே
ருந்திவாரிமேகமென்னவமர்செய்தானுமொருவனே
யந்திவானமொத்ததுற்றகுருதிநீரிலக்களந்
தந்திவாசிதேர்களோடுடைந்ததெண்ணிறுனையே. (௪௨)

ஏறுதேரழிந்துசாபமிற்றுமுற்றுமின்றியே
வேறுதேருமேறிநின்றுவில்லெடுத்தவேதியன்
கூறுதேருதிரட்டிரன்குனித்தவிற்குடைந்துபன்
னூறுதேர்தனைப்புரக்கநொய்தினிற்கழற்றினான். (௪௩)

முனியுமேனையானைதேரின்முடுகிவந்தநிருபருங்
குனிசிலைக்கையபிமன்வெங்கணைக்குவென்கொடுக்கவே
யினிநமக்குநல்லகாலமென்றுசீறியெய்தினான்
றனிதமிக்கசலதமன்னசதமகன்சகாயனே. (௪௪)

வேறு.

அதிதவளமத்தவாரணமுமுதலமுமதனத்திலாழிமிசைவரு
மதகளிறுசுத்தமாகவிவனுமமகபதியெடுத்தகார்முகமுமவ
னெதிர்தரவெடுத்தசாபமிவனுடனிகல்செயநினைக்கயாவருளரென
விதமுறவகுத்தயானையணியுடன்விருதுபகதத்தராசனுதவவே. (௪௫)

இருபதுபதிற்றுநூறுகளிறுளவிவனினுமிகுத்தவீரர்கடவுவ
ரொருபதுபதிற்றுநூறுமழகளிறுவமையெனமிக்கவாகுவலியினன்
முருகனெனவெற்றிநேமிமுகிலெனமுரணவுணருக்குவாழ்வுகெடவுயர்
சுரபதிதனக்குவாழ்வுவரும்வகைசுரருலகளித்ததோழனிவனரோ. (௪௬)

எழிலணிதடக்கைமேருகிரிநிகரிபசிரமதைக்கமோதியுருமென
மொழியுறவதிர்த்துநீடுபுயகிரிமுறைமுறைதடிக்கவேகமொடுபுகை
பொழிசினமனத்தின்மூளவவிரொளிபுனைநுதல்வெயர்க்கவாயுகதியென
விழிவழிநெருப்புவீழவிரைவுடன்விறன்மிகுகளத்திலானபொழுதிலே. (௪௭)

பொருதுபுறகிட்டசேனையிவன்வருபொலிவொடுபுறக்கிடாதிருகின
வரவினையுயர்த்தகோவுமிளைஞருமவனிபருமொத்துமீளமுடுகினர்
முரசெழுதுபொற்பதாகைநிருபனுமுதலமர்செகுத்தவாகையபிமனு
மிருகைமலர்கொட்டியாடியெதிர்கொளவிருபடையுமுற்றபூசல்விளையவே. (௪௮)

நிசிசரனெடுத்தவாதிகயிலையுநிகரலவிதற்கெனாமுன்வருகரி
விசையுடனடத்திவீமனெவணவன்விறன்முடிதுணித்துமீள்வனினியென
வசைபலபிதற்றிவேகமுடன்வரும்வலியபகதத்தன்வாகுகிரிகளை
பொசிதரவளைத்துமார்புசுழிதரவொருகைகொடுகுத்திவாயுகுமரனே. (௪௯)

கதைகொடுபனைக்கைவீசியெதிர்வருகடகரியினெற்றியோடையணியொடு
புதைபடவடித்துமீளவிசையொடுபுரவியிரதத்தின்மீதுகுதிகொள
விதயமலர்செற்றமூளவிவனவனெதிர்சிலைவளைத்துவாளிநிரைபட
வுதையவுதைபட்டவாளிதனதுகையுயர்கதைபுடைத்துவீழமுனையவே. (௫0)

ஒருவரையொருத்தர்வேறலரிதரிதொருபடிசெருச்செய்தாலுமினியென
விருவருமெடுத்தசாபமொலிபடவெதிரெதிர்தொடுத்தவாளிநெடுமழை
யொருவருடலத்தின்மூழ்கிமுனையுறவுருவுதொழிலற்றுநூலின்முறைமையி
னிருவரும்விலக்கவோடிவிலகினவெதிரெதிர்கடித்துவானமறையவே. (௫௧)

மகரிகைமருப்புநானுமுளவெனில்வலியகுணதிக்கில்வாரணமுமினி
நிகரலவிதற்குநாமமுரைசெயினிலையுடையசுப்பிரதீகமிதன்வலி
பகரிலிபமெட்டுநானுமெதிரெறிபடைகளுணர்வுற்றபோரிலெரிவரு
புகர்முககரக்கபோலமதகரிபொருதொழிலுரைக்கலாகுமளவதோ. (௫௨)

கரிகளையெடுத்துவானினிடையிடைகரநுதிகொடெற்றுநீடுபிறைநிக
ரிருபணைமருப்பினாலுமவரவரெதிரெதிருடைக்குநேமியிரதமு
முரானுடையசித்திரவால்கொடொருபடியொலியொடுபுடைக்கும்வாசிவிழவிழ
வரவபயமிட்டுவீழநடைபயிலடிகொடுதுகைக்கும்வீரரணியையே. (௫௩)

அமர்செய்பகதத்தனானுமவன்விடுமருவிமதவெற்பினாலுமணிகெழு
தமபடையிளைத்ததாகவிரகொடுதருமனுணர்வுற்றுவேறோர்திசையினி
லிமிரமுரசெற்றுபூசல்புரிதருமிளையவனடத்துதேரின்வலவனை
நிமலனையனைத்துமானவொருவனைநினையினன்மனத்தினோடுபரவியே. (௫௪)

வேறு.

நினைவுற்றபொழுதெழுதுமுரசுற்றகொடிநிருபனியமித்தபடிதரியலார்
முனைமட்கவமர்பொருதுசெயமுற்றிபுவகைபெறுமுகிலொத்தவடிவினெடுமால்
புனைவிற்கையடுபகழிதிசைசுற்றுமறையநனிபொழிகொற்றவிசயனுடனே
வினைமுற்றியுயர்தருமனுடனிற்றையரியவமர்விளைவுற்றதெனவுரைசெய்தான். ()

ஒருபத்தொடுறமொருபதுறம்பத்தொடுறமொருபதுடைபெட்டுநிருபருயிர்நீ
தெரிவித்தபகழிகொடுமடிவித்துவலிமையொடுசிலைவெற்றியுறவமர்செய்தாய்
முரணற்றதிவணினியுனுயிரொத்ததமையனொடுமுனைபுக்குவிரைவினனுகா
வரையொத்தகளிறுடையபகதத்தனுயிர்கவரவருகிற்றினொடியிலெனவே. (௫௬)

அரியொத்தபரிகடவிமனமொத்தவிரதமிசையமரர்க்குமுதல்வன்மகனோ
டெரிபற்றிவருமனிலமெனவெற்றிவரிவளையுமிதழ்வைத்தவ்வொருநொடியிலே
கிரிமுற்றுமரிவதொருகிளர்வச்சிரமெனவுதயகிரியுற்றபரிதியெனவே
கரிசுற்றும்வரவிகடகரடக்கைம்மலையில்வருகணைவிக்கிரமனையணுகினான். (௫௭)

அனிலத்தின்மதலையொடுவயிரத்துமலையுமனையமர்விட்டுமுகிழ்நகைசெயா
வினியிற்றையமரிலரிதெளிதொட்டியெதிர்பொருதலெனமத்தகரியின்மிசையான்
மனமுற்றுமழல்கதுவமொழிமுற்றுமிடிநிகரவலிபட்டசிலையைவளையா
மினலொத்தகணைபலவும்வசையற்றபுகழுடையவிசயற்குமிசையுதவினான். (௫௮)

அவன்விட்டசுடுகணைகள்கொடிமற்கடமுநடுவணறவெட்டியதிதவளமா
கவனத்தின்முடுகியடுபரிகொத்தியுடலிடுகவசத்தைமறையநுழையூச்
*சிவமுற்றமலரினுறைபிரமற்குமுணர்வரியதிகிரிக்கைவலவனையுமே
சவனத்தின்மிகுதுயரமுறுவிக்கவவசமிகுதளர்வுற்றதனுவிசயனே. (௫௯)

உரமிக்கதனதுசிலைகுனிவித்துமதிபின்வகிருவமிக்குமடுபகழியால்
வரமிக்கதவளநிறமதவெற்பையெதிர்கடவிவருவெற்றியவனிபதிநீள்
கரமுற்றசிலைகவசமறவெட்டிவிடுகணைகள்கணைவிட்டுவிலகவவன்மா
சரம்விட்டொரயில்விசயனிரதத்தின்வலவன்மிசைதமரத்தினுடனெறியவே. ()

* சிவனுக்குமலரிலென்றும் பாடம்.

எறிகுற்றவயிலசுரருயிர்செற்றவயிலதனையெதிர்முட்டவிடுபகழியாற்
றறிவித்துமகபதிதன்மகன்முக்கணிறைவனொடுசரியொத்துமுறுவல்புரியா
வெறிமத்தகரடமுகபடசித்ரபுகர்கொண்முகவிகடக்கைம்மலையணியெலா
முறியத்தன்வரிவிலுமிழ்முனைபட்டபகழிமழைமுகில்வர்க்கமெனமுடுகினான். (௱௧)

அணிகெட்டுமதகரிகள்கரமற்றுவிழமுதியசிரமற்றுவிழவருகுதாழ்
மணியற்றுவிழநெடியகுடரற்றுவிழமுழைகொள்வயிறற்றுவிழவுடலெலாந்
துணிபட்டுவிழுவிசிறுசெவியற்றுவிழவலியதொடையற்றுவிழமகரிகைப்
பணிபெற்றபணைகளொடுபதமற்றுவிழவுழுதுபடுவித்தபலபகழியே. (௱௨)

பெயர்பெற்றகரிவயவர்பிணமிக்கவமரினிடைபிறகிட்டுமுறியுமளவே
சயசக்கிரதரனையிவன்வழிபட்டபொழுதுதருதழலுக்கிரமுடையதொருவேல்
வயமுற்றசிலைவிசயனுடலத்தினெறிவதுதன்வடிவத்திலுறவுதவினா
னயர்வுற்றவுணர்வினலமெனமுத்திமுதல்வனெனவருகுற்றமதவலவனே. (௱௩)

பருமித்தகளிறுவிடுபகதத்தனெறியுமுதுபகைசெற்றுவருகொடியவேன்
மருமத்தினிடைமுழுகுபொழுதத்திலதுபுதியமணிவர்க்கமிகுதொடையலாய்
நிருமித்தபடிதனதுபுயவெற்பின்மிசையொளிரநிகரற்றகருணைவடிவைக்
கருமத்தின்முதலையிமையவர்சித்தமொடுதொழுதுகரையற்றபுகழுரைசெய்தார். ()

இதுநிற்கவயமனைநிகர்பகதத்தனுயிர்கவரவிதுபக்குவமெனவிசயனோ
டுதரத்தின்முழுதுலகுகுடிவைத்தபுயனுரைசெய்துறுதிக்கண்விடுபகழிதா
னிதயத்தினுடனருளவுயர்வச்சிரன்மதலைதொழுதிருபொற்கைம்மலர்கொடுகொளா
வதிரத்தனெதிர்களிறுபொரவிட்டநொடியிலவனகலத்தினுருவிடவே. (௱௫)

பரிதத்தவருமிரதமிசைதத்தவெதிர்முடுகுபகதத்தனுடன்முழுதுநீ
டெரிதத்தியுகுவதெனவுகுவித்தகுருதிநதியிடைதத்தவலிகெழுவுதோட்
கிரிதத்தமகுடமொடுதலைதத்தவொருரசதகிரிதத்திவிழுவதெனவே
கரிதத்தமறியலகைகடைதத்தியுவகையொடுகளமுற்றுநடநவிலவே. (௱௬)

வேறு.

பகதத்தனும்பட்டவனூர்ந்தபகடும்பட்டுப்புடைசூழச்
சிகரக்கிரிபோலணிநின்றசேனைக்களிறும்பட்டமைகண்
டிகலிற்பொழிகார்வெஞ்சிலைக்கையிமையோர்தலைவன்குமரனையும்
புகழ்தற்கரியபாகனையும்புகழாரில்லைப்பூபாலர். (௱௭)

விருதுஞ்சங்கும்பல்லியமுமேன்மேலதிரவிற்போரிற்
பொருதின்றிவனைக்கொன்றன்றிப்போகோமென்னப்புடைசூழ்ந்தார்
மருதுஞ்சகடும்விழவுதைத்தவலவன்கடவவாயுவெனக்
கருதும்புரவித்தேரூருங்கழற்காவலன்மேற்காந்தாரர். (௱௮)

காந்துந்தறுகட்காந்தாரர்கடுவெங்கனல்போற்கண்சிவந்தங்
கேந்துஞ்சிலையாற்சரமழைபெய்தெழிலிக்கணம்போலெதிரூன்றிச்
சாந்தும்புழுகுங்கமழ்வாகுச்சகுனிதனயர்தலைப்போரிற்
சேர்ந்தன்றிறந்தார்விடசெயனுஞ்செயனுமெனும்போர்ச்செயவீரர். (௱௯)

சஞ்சத்தகர்விண்குடியேறத்தானேயடர்த்தான்பகதத்தன்
விஞ்சைக்கடவுள்சிகரநிகர்வேழத்துடனேவிழப்பொருதான்
வஞ்சச்சகுனிமைந்தரையுமலைந்தான்விசயன்வடிக்கணையா
லெஞ்சப்பொருதநராபாலர்க்கிலக்கேதன்றங்கெண்ணுதற்கே. (௭௦)

இங்கிப்படிபோருடன்றெழுந்தசகுனியிவன்கைபெரிகணையாற்
பங்கப்பட்டவரசொழியப்படாதவரசர்பலரோடுஞ்
சிங்கத்தனியேறெனச்செம்பொற்றேர்மேனின்றதருமனுடன்
புங்கப்படையாலமர்புரியப்புகுந்தான்மதுகைப்புலிபோல்வான். (௭௧)

சோரத்துடனீபொருதடர்த்தசூதன்றிவைமெய்துளைத்துருவும்
வீரப்பகழிபுணையிவற்றால்வெல்வேனெனப்போர்வில்வாங்கி
யீரக்கருணைமுகத்தண்ணலெய்தானவற்றுக்கெட்டாமற்
பேரப்பேரத்தேர்கடவிப்பின்னிட்டவர்க்குமுன்னிட்டான். (௭௨)

உடனேவந்துபொருநிருபரொருவர்க்கொருவதிருட்டிரன்கை
விடநேர்கணையாலேவுண்டுவிளிந்தாரொழிந்தார்வெஞ்சமத்திற்
கடனேதமக்கென்றார்புகுந்தார்காலைச்செந்தாமரைமலர்ந்த
தடநேரென்னநிறம்பெற்றதப்போதந்தச்சமபூமி. (௭௩)

ஆசாரியனுந்திருமகனுமடல்வேலங்கர்பெருமானுந்
தூசாருரகக்கொடிநெடுந்தேர்த்துரியோதனனுந்தம்பியரும்
வீசாநின்றமாருதம்போன்மேலவந்தடுத்தவீமனுடன்
கூசாதெதிர்ந்துவெம்பகழிகோத்தார்விசும்பைத்தூர்த்தாரே. (௭௪)

கெடுமோகருடனுரகர்க்குக்கிரிவெஞ்சரபந்தனையரிக
ளடுமோசக்கிரபாணியுடனமருந்துவரோவசுரேசர்
நெடுமேருவின்முக்குவடொடித்தானேயப்புதல்வன்பேருடலிற்
படுமோதொடுத்தபகழிபருப்பதஞ்சேர்மழைபோற்பாறினவே. (௭௫)

பொல்லாவவுணர்வைகியமுப்புரநீறெழவன்றரன்வளைத்த
வில்லாமென்னவலியவிறல்வில்லொன்றெடுத்துவிறல்வீம
னெல்லாமன்னவருமூர்ந்தவெல்லாவிரதங்களுமிமைப்பின்
வல்லானெறிந்தபம்பரம்போற்சுழலும்படிகால்வளைத்தானே. (௭௬)

ஒன்றுமுதலாப்பலபகழியோரோர்தொடையிற்றொடுத்தேவி
யன்றுமுதன்மைபுறமலைந்தவரசருடலந்தொறுமூட்டி
யின்றுமுதலாயோதனத்திலேறேமென்னும்படியாகக்
கொன்றுமுதற்பின்வருமுரகக்கொடியோன்மனமுங்கொதிப்பித்தான். ()

கொதித்தானரசனெனவரிவிற்குனித்தாரிளைஞர்குனித்ததுகண்
டதிர்த்தான்வீமன்றன்கணையாலறுத்தான்வில்லுமணிநாணும்
விதித்தான்வரினும்வீமனுடன்விற்போர்புரிதலரிதென்று
மதித்தார்தம்முனினைத்தவெல்லாமுடிக்குஞ்சமரவரிவில்லார். (௭௮)

கின்றார்நின்றபடிகொடித்தேர்நிருபன்றனையுமிளைஞரையும்
வன்றாள்வரிவிற்குருவினையுமைந்தன்றனையுங்கன்னனையும்
பொன்றாழ்மார்பிற்பல்படைக்கைப்பூபாலரையுங்கொல்லாமற்
கொன்றான்வாயுகுமரன்றன்கோலாகலவெங்கொடுங்கணையால். (௭௯)

இளைத்ததடையப்பெருஞ்சேனையினிநாமொன்றுக்கிடாகோம்
வளைத்தசிலையோடிவணிற்கமாயன்றன்னோடவணிற்கத்
துளைத்தகணையாற்றுரோணன்வலிதொலைத்தோனிற்கமலைந்திவரைத்
திளைத்தலரிதென்றக்களத்திற்பொன்றாவரசர்சென்றாரே. (௮௰)

பெரும்பேரறத்தின்றிருமகவைப்பிடிப்பானெண்ணிமுடிப்பான்போற்
பொரும்போரரசருடன்வந்தபெற்றோர்முனியும்புறம்போனான்
* பரும்போருரகக்கொடிவேந்தன்பட்டான்மிகவும்பரிபவமென்
றரும்போரரசர்களித்தாடவவருந்தம்பாசறையடைந்தார். (௮௧)

காரிற்குளிர்ந்துகுழைந்தசெழுங்கானப்பூத்ததெனக்கவினிப்
பாரிற்பிறந்துசிறந்தவிந்தப்பன்மாநிறத்தபரியனைத்தும்
போரிற்புகுந்துமடிந்ததற்குப்புறந்தந்தஞ்சிப்போவான்போற்
றேரிற்றுரகங்கொண்டோடிக்குடபாலடைந்தான்றினகரனும். (௮௨)

வேறு.

அறந்தந்தமைந்தற்கும்வீமற்கும்விசயற்குமபிமற்குமே
புறந்தந்தவயவீரரெல்லாருமரசன்புறஞ்சார்பிருந்
திறந்தந்தயூகத்துவாராதமன்னர்க்கிரங்காவழா
மறந்தந்தவேழத்துடன்பட்டபகதத்தன்வலிகூறினார். (௮௩)

பன்னர்க்குமன்னன்றன்முன்வைகுமுனிதன்னைமதியாமனீ
னென்னற்கலங்காமலுரைசெய்தவுரையின்றுநிலையானதே
கன்னப்பெயர்க்காளைமறையந்தணர்க்கென்னகட்டாண்மையுண்
டென்னச்சிரித்தான்வணங்காதவர்க்கென்றுமிடியேறனான். (௮௪)

தெருமந்தசிந்தைச்சிலைக்கைக்குருக்கண்சிவப்பேறவே
யுருமுந்திகைக்கக்கொதித்தங்கர்பதியோடுறக்கூறுவான்
கருமந்தவாவில்விறற்கன்னனேயல்லகழன்மன்னரிற்
றருமன்றன்முன்னிற்கவல்லார்கள்யாரித்தளந்தன்னிலே. (௮௫)

இன்றல்லநாளைக்குமாகின்னவைக்கண்ணிருந்தோர்களிற்
சென்றல்லலுறமோதியறன்மைந்தனைத்தங்கள்சிலையாண்மையால்
வென்றல்லதனுகாதவீரர்க்குவிடைநல்குவிறன்மன்னநீ
நன்றல்லவீரத்திலோரஞ்சொலுவதென்றுநனிசீறினான். (௮௬)

வில்லாண்மையாவர்க்குமின்றென்றெனைப்போலமிகுவஞ்சினஞ்
சொல்லாமலறன்மைந்தனைப்போர்மலைந்துங்கடோளாண்மையால்
வல்லாரினிக்கொண்டுவம்மின்கள்வந்தாலிம்மண்மேன்றுமோ
வல்லாதவுலகிற்குமிருநாலுதிக்கிற்குமவர்வீரரே. (௮௭)

---

* பரும்பேருரகக்கொடி என்றும் பாடம்.

எம்போலவரிவில்லெடுத்தெய்யயார்வல்லரெனும்வீரரும்
வெம்போரில்வந்தாலொரணுவுக்குநில்லாதுவிளிகிற்பரால்
வம்போதியென்பேறுவல்லாண்மைபுனையந்தவில்லாளிகூ
ரம்போடிராமன்கையடலம்புமுவமிக்கிலதிபாவமே. (௮௮)

கொத்தொத்ததொடையொத்தவளவொத்தசிறகொத்தகுதையொத்தவந்
தொத்தொத்துமுனையோடுமுனைதத்திவிழமாறுடன்றேவினன்
றத்தொத்தபுரவித்தடந்தேர்மனென்னோடுசாதித்ததும்
வித்தொத்தமென்வாளியவன்விட்டவடிவாளிவினைவொத்ததே. (௮௯)

வன்மைக்குவயவீமன்வின்மைக்குமுகிலூர்திமகனன்றிவே
றின்மைக்குமாவிந்தைகிரிகன்னிகரியென்பரெம்மன்னரும்
வின்மைக்கும்வன்மைக்குமிளையோரையனையாரைமிகவெண்ணலாந்
தன்மைக்குநிலையானதருமற்குநிகர்யாரதனித்தெண்ணவே. (௯0)

அதிர்வார்களதிர்மின்களதிரப்பொரும்போரிலறன்மைந்தனோ
டெதிர்வார்களுண்டாகிலிக்கங்குல்சென்றுவினிக்காணலா
முதிர்வாய்மையாலென்னபயனென்றுவெஞ்சாபமுனியேகினன்
கதிர்வார்முடிக்கோவுமரசர்க்குளிடைதந்துகண்டுஞ்சினன். (௯௧)

மகதத்தரிற்சூரசஞ்சத்தகரிலுள்ளமகிபாலரும்
பகதத்தனைத்துன்னியெதிர்வந்தகாந்தாரபதிமைந்தருந்
தகதத்தவெனவெங்களத்தூடுவிழவென்றதனுவேதியுஞ்
சுகதத்தமுறவோடிவென்றோர்களுங்கண்டுயின்றோர்களே. (௯௨)

நிலையானவயவீரருந்தேவராய்நின்றநிலைகண்டுவெண்
கலையானிரம்புஞ்செழுந்திங்களேகக்கடைக்கங்குல்வா
யலையாழிமுழுநீலவுறைநின்று*மாணிக்கமணியாடிபோ
லுலையாதவொளிகொண்டகதிராயிரத்தோனுமுதயஞ்செய்தான். (௯௩)

பன்னிரண்டாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௩௧௯௯.

பதின்மூன்றாம்போர்ச்சருக்கம்.

சங்கையிலாவகையமபடராலுயிர்தளர்பொழுதத்தருகே
மங்கையர்சூழவிருந்தழுதுள்ளமயக்கினும்யான்மறவேன்
கங்கையுநான்மறையுந்துளவுங்கமழ்கழலிணையுந்திருமா
லங்கையின்மீதொளிர்சங்கமுநேமியுமஞ்சனமேனியுமே. (௧)

* மாணிக்கவணியாழிபோல் என்றும் பாடம்,

நஞ்சவியாளமுயர்த்தபதாகைநராதிபனேவலினால்
விஞ்சவருதினிமன்னர்திரண்டனர்விசயனைமேலிடுவா
னெஞ்சவராலழிவுண்டதபோதனனெருநலினுங்கடுகிப்
பஞ்சவர்கோமுதல்வன்றனைவன்பொடுபடைபொரவெண்ணினனே. (௨)

இலக்கணமைந்தனுமைந்துடைமன்னவனிளைஞருமெம்முனையுங்
கலக்குறவென்றகலிங்கருமுட்படுகாவலர்பற்பலருஞ்
சிலைக்கைவயம்பெறுசிந்துநராதிசெயத்திரதன்சிரமா
நிலக்கணெழுந்துகள்வானிடைசென்றிடநின்றனர்பேரணியே. (௩)

அக்கரம்யாவுமுணர்ந்தசிலைக்குருவாசுரசேனைநடுச்
சுக்கிரனார்நிகரென்னவகைப்படுதூசியின்மாமுறையே
யெக்கரமும்படைகொண்டெழுசேனையையெயில்கள்வளைப்பனபோற்
சக்கரயூகம்வகுத்திரதத்திடைசயமுறநின்றனனே. (௪)

ஒப்பறுபோரினில்வாகைபுனைந்தவுதிட்டிரனன்றடையார்
தப்பறவெண்ணியவெண்ணமுணர்ந்துதனஞ்சயனுக்குமுரைத்
தப்பறுகோடையில்வெங்கதிரோனென*வாகநீள்வரிவிற்
றுப்புறுசிங்கைதமகீபர்வருதினிசூழநடந்தனனே. (௫)

ஈரிருதேரினர்மூவலகயானைபரெண்ணறுபாமிசையோ
ரோரிருநாலுடையையிருபூமியிலுள்ளபதாதியுடன்
பாரிருநாலுதிசாமுகமும்படையோடுபரந்துவரும்
பேரிருமானவருதினியின்றிரள்பேசுறலாமளவோ. (௬)

வருபடைதன்னைநிறுத்திவிதம்படமகரவியூகம்வகுத்
தொருபகல்யூகமுமிப்பகலுக்கினியொப்பலவென்றிடவே
குருபதியுந்திருமாலுமதிக்கவணிந்தடுகோளரிபோற்
றுருபதன்மைந்தனுநின்றனனந்தரதுந்துபிமீதெழவே. (௭)

இத்தகவாகவணிந்திருசேனையுமெதிர்முனையும்பொழுதின்
முத்தகவெண்குடைமன்னவனேவலின்முற்பகலின்படியே
மத்தகமாமுதலாகியநான்மைவருதினிதன்னெடுசஞ்
சத்தகர்வந்தறைகூவவெகுண்டுதனஞ்சயனேகினனே. (௮)

மால்விடுதேர்மிசையான்வரிசாபம்வளைத்ததுமல்லிகல்வெங்
கோல்விடுபூசலும்வில்லுடனேபொழிகொண்டல்வியப்பெனலா
மேல்விடுதேர்களும்யானையும்வாசியும்வீரருமெய்புருவக்
கால்விடுதாரையெழுஞ்சருகென்னவுடைந்தனர்கையறவே. (௯)

பட்டவரெத்தனையாயிரர்கின்றுபடாமலுயிர்ப்புடன்வென்
னிட்டவரெத்தனையாயிரரஞ்சலினேகுகவென்றமர்வாய்
விட்டவரெத்தனையாயிரர்தங்குலமேன்மையும்வெந்திறலுங்
கெட்டவரெத்தனையாயிரரன்றுகிரீடிதொடுங்கணையால். (௧௦)

---

* ஆகவநீடளவித்துப்புறு என்றும் பாடம்.

ஓரொருடம்பினிலாயிரமாயிரமுறப்பலவாளிபடத்
தாரைபடும்படிபொழிமுகிலொத்தனர்சமர்முனையிற்றரியார்
மாரனையங்கமெரித்தருள்கண்ணுதல்வடிவமெனும்படியே
பாரொருபாதிசிவந்ததுமேனிபரந்தெழுசோரியினால். (௧௧)

இந்திரன்மாமகனிங்கிவர்தம்முடனிம்முறைபோர்புரியச்
சந்திரசூரியமண்டலமொத்தணிதானையிரண்டுமுனந்
துந்தியவேலையினுந்திகணுலுடையுந்திரதத்திடைபோ
யந்தணன்மேல்வரிசாபம்வளைத்தனனவர்படைத்தலைவன். (௧௨)

நூலொடுசாபம்வளைத்தவன்மற்றிவனெய்தினுகைத்தவடிக்
கோலொடுகோன்முனையற்றுவிழத்தொடுகுணிசிலைநாணழியச்
சேலொடுசேல்பொருசீலமெனும்படிதேர்களிரண்டுமணிக்
காலொடுகால்பொரவன்றுவசத்தொடுகவசமழித்தனனே. (௧௩)

அருமுனியாதிவதிட்டனுமன்குலவாதியுமந்தணனும்
பெருமுனிதானுமுடற்றியபோர்சிலர்பின்பொருதாருளரோ
வொருமுனியேழ்கடலுங்கரமொன்றிலொடுக்கினன்மன்னனைமேல்
வருமுனிவென்றனன்முனிவருடன்பொரவல்லவர்யார்புவிமேல். (௧௪)

வந்தெதிர்முட்டுதலுந்தனதேரினைமாறுபடத்திருகிச்
சிந்தையுமானமும்வீரமும்விட்டொருசெயலறவென்னிடலுந்
தந்திரநாதனுடைந்தனனென்றிருதானையின்மன்னவரு
மந்தணனுண்மையும்வன்மையும்வின்மையுமன்றுதுதித்தனரே. (௧௫)

வேதியன்விட்டசரங்களினைந்துவெரீஇவருமன்னவனைத்
தாதவிழ்பொற்றொடைமார்பிலணைத்துயர்தருமனுரைத்தருள்வா
னீதவறிற்பினையார்நிலைநிற்பவர்நிருபர்சிகாமணியே
மோதியிளைத்தனையாறுகெனப்பலமுகமன்மொழிந்தனனே. (௧௬)

தன்னெதிர்மாமயிலோனெனநின்றதனஞ்சயன்மாமகவைப்
பொன்னெதிர்பேரொளியருள்வடிவாகியபூபதிவருதியெனு
நின்னெதிர்போரினினிற்பவர்வேறிலர்நேமிவியூகமுநீ
முன்னெதிராவமர்புரிபொழுதன்றிமுரண்குலையாதினியே. (௧௭)

என்னைவளைத்திடநென்னலுடன்றுவெனிட்டவிலாசிரியன்
மன்னனைவளைத்தொருசக்கரயூகம்வகுத்தெதிர்நின்றனனு
னின்னையளித்ததராபதிதன்னையுநின்னையுமேயொழியப்
பின்னையெடுத்தவிலோடெதிர்சென்றுபிளந்திடவல்லவர்யார். (௧௮)

புல்லுகவென்றனன்மார்புறவன்பொடுபுல்லியிமைப்பொழுதிற்
செல்லுகவென்றனன்வன்சமரத்திடைசென்றுமிகப்பகையைக்
கொல்லுகவென்றனனின்புயமேவருகொற்றவைதன்னருளால்
வெல்லுகவென்றனனன்றுதுரோணனைவென்றபெருந்தகையே. (௧௯)

வேறு.

மூத்ததாதைதன்னேவலிற்கழன்முளரிகைதொழுதரனுறச்
சேர்த்தநாணுடைவில்லன்வெய்யதெரிந்தவாளியன்முதுகுறக்
கோத்ததூணியன்வாண்முதற்பலகொற்றமுற்றியபடையினன்
பார்த்தன்மாமகனிரதமீதுயர்பரிதியாமெனவேறினான். (௨0)

வீரவார்கழல்கழலின்மீதுவிளங்கமார்பினில்வெண்ணிலா
வாரமாலைதுலங்கமாசுணவலயம்வாகுவிலழகெழச்
சேரவானமதிருளகற்றுமிரண்டுசெஞ்சுடரென்னவே
சாரமாமணிகுண்டலங்கள்வயங்கமௌலிதயங்கவே. (௨௧)

இனஞ்செய்கேண்மைகொடுருபதேயனுமெண்ணில்கோடிமகீபருங்
கனஞ்செய்தூரியமெழவெகுண்டெதிர்காலெனும்படிகைவரத்
தினஞ்செய்நாதனடாவுதேர்நிகர்தேர்விரைந்துசெலுத்தினான்
றனஞ்சயன்றலைநாண்முயன்றதவம்பலித்தனதன்மையான். (௨௨)

ஓதைகொண்டணிநின்றசக்கரயூகமன்னருரந்தொறுங்
கோதைதங்குகரத்தில்வில்லுதைகூரவாளிகுளிக்கவே
சீதைகொண்கனுமேவலாருயிர்தென்புலத்திடுதன்பெருந்
தாதைபுந்தரமெனவிமைப்பிடைதாவுதேரினனேவினான். (௨௩)

அச்சுதப்பெயர்மாதுலன்புகலரியமந்திரமன்பினோ
டுச்சரித்தொருநொடியினிற்பலகோடிபாணமுடற்றினா
னெச்சிரத்தையுமெய்ப்புயத்தையுமிடைதுணித்தலினடையமுன்
வச்சிரத்தவனுரைசெய்சக்கரமாறிலாவணிபாறவே. (௨௪)

மல்லலம்புயவபிமன்வெஞ்சரமழையனைத்தையுமாலெனப்
பல்லவெங்கணைகொடுவிலக்கிமுனைந்துவந்தெதிர்பற்றினான்
வெல்லவந்ததுரோணமாமுனிவிறலழிந்ததுகுருவெனுஞ்
சொல்லழிந்ததுவில்லழிந்ததுதேரழிந்ததுதொடைகளால். (௨௫)

தந்தைவென்னிடுமுன்னர்முப்புரதகனனேநிகர்மகன்மிகச்
சிந்தைகன்றிவெகுண்டுதேரொடுசென்றுகால்வளைசிலையினா
லுந்துகின்றசிலீமுகம்பலபகைமுகங்களிலுருவவே
முந்தினானவனப்புமாரியின்முழுகினானுடன்முற்றுமே. (௨௬)

கன்னனென்றுலகெண்ணும்வீரனுமொய்ம்புடன்பலகணைகள்வான்
மின்னொழுங்கொருகோடியென்னநிறுத்திமெய்புறவீசினா
னன்னவன்பகழிக்குலங்களநேகமோகரமாகையா
லென்னவெஞ்சமமினிநமக்கெனவேறுதேருடனேகினான். (௨௭)

கிருபமாமுனிதானுமேதகுகிருதவன்மனுமோர்புறத்
திருவராண்மையுநிலைபெறும்படிசென்றுதூவினரேவினா
லொருவனேயிவனிவனெடுத்ததுமோருசராசனமம்பிலே
வெருவியோடினர்தங்களோரிருவில்லுமற்றுவெறுங்கையே. (௨௮)

சகுனியுந்திருமகனுமற்றுள தமருமேலிடு தானையோ
டிகனெடுங்களம்வென்றுகொள்குவமென்றுவந்தெதிரணுகினர்
மகன்விழுந்தனன்மார்பின்மூழ்கியவாளியொன்றினின்மற்றுளார்
மிகநடுங்கியொடுங்கியோடினர்வீழுமன்னர்கள்வீழவே. (உ௯)

வின்முகந்தெழுவாளிவாளிவிலக்கவந்தவிகன்னனுந்
துன்முகன்றலையாகமற்றுள துணைவருஞ்சமர்துன்னினர்
நன்முகம்பெறுவிசயன்மைந்தனுநானுமக்கெதிரன்றுநீர்
பின்முகம்படவோடியின்றுயிர்பிழையுமென்றுரைபேசினன். (௩௦)

மற்றுமற்றுமுனைந்துவந்துமலைந்தவெஞ்சினமன்னர்மெய்ம்
முற்றுமுற்றுமிவன்கைவாளிகண்முனைபுதைந்திடமூழ்கலா
விற்றவிற்றபடைக்கலங்களுமெய்த்தவெய்த்தபதாதியு
மற்றவற்றவிதங்கொள்வாகமுமாகியேகினரடையவே. (௩௧)

இளையவன்றனிமதலைதெவ்வரிளைக்கவிப்படியிகல்செயத்
தளையவிழ்ந்தவலங்கன்மீளிசமீரணன்றிருமதலைபோய்
வளையவன்சிலைமன்னவன்கழன்மலர்வணங்கிவணங்கலா
ருளையவந்தமர்முடிகின்றமைகண்டுசோகமொடுரைசெய்தான். (௩௨)

தோலநேகமநேகநேமிதுரங்கமங்களநேகநீள்
வேலநேகமநேகம்வாள்வரிவில்லநேகவிதம்படக்
காலநேகமெழுந்ததொத்தமராடுகின்றகளத்திடைப்
பாலனேகடிதேகிவெம்முனைபயிலுவானொருபாவமே. (௩௩)

எனக்குநீவிடைநல்குகென்றவனிருபதந்தொழுதியாரினுந்
தனக்குநேர்தனையல்லதில்லெனவெல்லவல்லதொர்தண்டினன்
மனக்குநேர்வருதேரினன்பலமண்டலீகருமன்னருஞ்
சினக்குழாமுறுசேனையும்புடைசூழவன்றெதிர்செல்லவே. (௩௪)

சாயையொத்தெழுசேனையோடெதிர்தடவிமன்குலவடவியிற்
றீயையொத்துவிளங்குமாருதிசென்றுமண்டியதிசையெலா
மாயையொத்தொருவடிவுமின்றிவகுத்தசக்கரமண்டல
மீயையொத்ததுகலுழனொத்தனனீறிலாவரியேறனன். (௩௫)

கலிங்கர்சோனகர்மகதர்கன்னடர்கங்கர்கொங்கணர்கௌசலர்
தெலுங்கராரியர்துளுவர்பப்பரர்சீனர்சாவகர்சிங்களர்
குலிங்கர்மாளவர்களமரொட்டியர்குகுரர்கொப்பளர்கூபகர்
புலிங்கசாலமெனச்சதாகதிபுதல்வனோடுறுபோர்செய்தார். (௩௬)

பொருதபற்பலபாடைமன்னவர்பொன்னிலங்குடிபுகுதவே
விருதவித்தகனுடன்வரும்பலபாடைமன்னவர்வெட்டின
*ரொருதிறத்தசீலிமுகங்களுறுக்கியோடியுடன்றநா
ணிருதர்பட்டதுபட்டிறந்தனர்நேமியுட்படுநிருபரே. (௩௭)

---

*ஒருதிறத்துவலீமுகங்கள்என்றும்பாடம்.

மண்டுகொண்டலின்மிகவதிர்ந்துமருத்தின்மைந்தனுருத்தெழுந்
தண்டுகொண்டுவியூகமாகியசக்கரத்தையுடைத்தலால்
விண்டுகொண்டுமுருக்குமாருதிமீளவந்தனனுமெனக்
கண்டுகொண்டனன்வெஞ்சினக்கனனின்றுகாய்தருகண்ணினன். (௩௮)

வேறு.

நபமுகின்முழங்கியேறியிடிவிடநடுநடுநடுங்கிமாயுமரவென
வுபரியெழுகின்றசீயம்வரவரவுடையுமிபசங்கமோடுவனவென
வபிமனொருவன்கையேவினமுடையவுடையநெளிகின்றதாயபொழுதினில்
விபினமிசைமண்டுதீயொடனிலமும்விரவுமியல்பந்தவீமனணுகிலே. (௩௯)

சகுனியுடன்விந்துபூரிமுதலியதரணிபரடங்கவேகிமகபதி
மகன்மகனெடிங்குரூதபடியெதிர்வளைமின்வருகந்தவாகன்மதலையை
விகனனுமடங்கல்பொனுமிளைஞரும்விருதர்பலருந்துரோணன்மதலையு
மிகன்மலையிலிந்தநாழிகையிலிவரிருவரையும்வென்றுகோறலெளிதரோ. (௪௦)

எனவுயர்புயங்ககேதுவுரைசெயவிவனைவிடைகொண்டுவீரனைவரு
முனைபடவணிந்துகாலமுகிலெனமுரசினமுழங்கவோடியெதிரெதிர்
கனலெனவெகுண்டுசேனைபலபலகசரததுரங்கராசியுடன்வர
வனிலகுலமைந்தனுனபதியொடுமபிமனொடும்வந்துபோரின்முடுகவே. (௪௧)

விழிமலர்சிவந்துகோலமதிநுதல்வேயர்வரவிரண்டுதோளுமுறைமுறை
யழகுறவிளங்கவூரனிலவெழவணிமகரகுண்டலாதிவெயிலெழ
முழவினொடுசிங்கநாதமெழவெழமுடுகியெதிர்சென்றுபோதியவரவ
ரெழில்வடிவமெங்கும்வாளியுதையின்னிரதமிசைநின்றவாயுமதலையே. (௪௨)

மணிமுடிசிரங்களோடுதறிபடவலையமொடணிந்ததோள்கடறிபட
வணிகழலொடுந்துதாள்கடறிபடவயிலொடுகரங்களானதறிபட
நணியவிரதங்கள்சாயவிவுளிகணடுவறவளைந்தசாபமுதலிய
துணிபடவழிந்துமீளநடவினர்துவசபுயகன்பதாதிநிருபரே. (௪௩)

விசயன்மகனுந்தன்மீதுவரும்வரும்விருதருடலங்கள்யாவுநிரைநிரை
தசைகுருதியென்புமூளையிவையிவைதரணிமிசைசிந்திவேறுபடவிழ
வசையவிரதங்கடாவிவளைதருமணிசிலையுமம்புமாகிமுனைமுனை
திசைதொறுநடந்துசீறரவியெதிர்திமிரபடலங்களானவடையவே. (௪௪)

இருவரெதிரும்பொருமன்முடுகியவிருபடையுநொந்துமீளவவனிபன்
வெருவொடுதளர்ந்துபோனநிருபரைமிகவசைமொழிந்துபோதநகைசெய்து
கருகிமுகநெஞ்சுகோபவனல்கொடுகதுவிநயனங்கள்சேயநிறமுற
வருகுவனசிந்துராசதிலகனொடபரிமிதமின்சொலாகவுரைசெய்தான். (௪௫)

மறனுடையைசெம்பொன்மேருகிரிநிகர்வலியுடையைவென்றிகூறுமரசிய
லறனுடையைபஞ்சபாணனெனவடிவழகுடையைநின்றசேனையரசரி
னிறனுடையைதிங்கள்சூடியனதிநிறைபுனல்பரந்துலாவுமவுலியர்
திறனுடையமன்றனுருமலரடிதெளிவொடுபணிந்தஞானமுடிவினை. (௪௬)

வயவிசயனின்றதேர்கடவிவரும்வலவன்மருகன்றனோடுவரைபுரை
புயமுடையதண்டவீமனுறிலிருபொருநரையுமின்றுபூசல்பொரவரி
தயவிவரகன்றுபோகிலமர்பொரவறவுமெளிதுண்டுபாயநுதலெரி
நயனனருள்கொன்றைமாலைதனையிவர்நடுவிடிலிரண்டுபாலுமகல்வரே. (௪௭)

அரன்முடியணிந்ததாமமிதுவெனவடிகொடுகடந்துபோகவெருவுவர்
பரவைநிகர்நம்பதாதியவனிபர்பலருடன்வளைந்துகோலியமரிடை
வரமுறவணங்குநாளிலருள்செய்துமனமகிழுமங்கைபாகனுதவிய
வுரனுடையதண்டினாலிவ்வபிமனையுயிர்கவர்தலின்றுசாலவுறுதியே. (௪௮)

எனவிவன்மொழிந்தபோதிலவனிவனிணையடிவணங்கியாதுநினைவினி
யுனதுநினைவெஞ்சிடாமலபிமனையுயிர்கவர்வனென்றுதேறவுரைசெய்து
தனகதருமன்றன்மாலையெனவொளிர்கடியிதழியந்தண்மாலைபரமனை
மனனுறவுணர்ந்துநாவினிகழ்தருமறையொடுவளைந்துவீழவெறியவே. (௪௯)

எறிதொடையல்சங்கபாணிமருமகனிகலுமமர்வென்றுமீளுமளவையி
னெறியிடைவிளங்கிவாளகிரியெனநிமிர்வுறவளைந்துசூழவருதலு
மறிவுடனிறைஞ்சியாதிபகவனதணிமுடியலங்கலாகுமடையலர்
முறியவினிமண்டுபோரிலமலர்செய்துமுடிதுமெனவந்துமீளமுடுகவே. (௫௰)

வேறு.

பரிசனகுமாரன்விடு
மெரிகணைகளான்முடுகு
தரியலர்பதாதிபடை
நெறியவருகாலையிலே. (௫௧)

விறலபிமனின்றகள
முறுதுமினியென்றுநனி
குறுகலும்விலங்கியது
நறையிதழியந்தொடையே. (௫௨)

இன்றமரின்யாருமுயிர்
பொன்றிடினுமீசனணி
கொன்றைகடவேனெனமுன்
னின்றனனராதிபனே. (௫௩)

முந்துவடிவாளமரின்
வந்தனுகுவான்மதலை
நிந்தனைகொலாமிதென
நொந்துசிலகூறினனே. (௫௪)

இந்தமதுமாலையிடை
தந்தபிமானுருயிரை
யுந்திவிடவோவெளிது
சிந்துபதிசேவகமே. (௫௫)

விரகுபடவெப்பொழுது
முரணமர்தொடக்கும்வலி
யுரகதுவசற்கொழிய
வரசரிலெவர்க்குளதோ. (௫௬)

தன்மகனையுஞ்சமரில்
வன்மையொடுகொன்றொழிய
மன்முனைதிரண்டிடினு
மென்மகன்மடிந்திடுமோ. (௫௭)

என்றிதழிமாலைதனை
நின்றுதொழுதன்பினொடு
சென்றனனிடிம்பனைமுன்
வென்றதிறல்வீமனுமே. (௫௮)

மாலைகடவாமல்வரு
பாலனரசர்க்குநடு
வேலைவடவைக்கனலி
போலொளிரநின்றனனே. (௫௯)

யாளியெனநின்றவய
மீளியைவளைந்துபல
வாளிகள்பொழிந்தனர்கள்
கூளிகணடஞ்செயவே. (௬௰)

பற்பலருமர்த்தரதர்
விற்பலவணக்கியெதிர்
சொற்பொலிவயப்பகழி
சிற்சிலதொடுத்தனரே. (௬௧)

பெய்கணையடங்கவிவ
னெய்கணைவிலக்கியிட
மொய்கணையனந்தமவர்
மெய்கணையவுந்தினனே. (௬௨)

கன்னனுமடங்கலபி
மன்னுவுமுடன்றுமுனை
முன்னிரதமுங்கடவி
மன்னமர்தொடங்கினரே. (௬௩)

அங்கர்பதிதேரிலிவன்
வெங்கணைகளுலுவிட
மங்குலெனநாலுதுர
கங்களும்விழுந்தனவே. (௬௪)

தொடுத்தசிலைகோலியவ
னெடுத்தசிலையுங்கொடியு
நடுத்தறியவெட்டிமுனை
கெடுத்தனனனந்தரமே. (௬௫)

இரவிமகனேகுதனு
மரவதுவசன்றுணைவர்
விரவினர்வளைந்துதம
புரவியணிதேர்படவே. (௬௬)

விட்டவிரதத்தினொடு
வட்டவரிவிற்குரிசி
றொட்டகணைதைக்கவவர்
கெட்டுமுதுகிட்டனரே. (௬௭)

சுகனிகர்துரோணனொடு
மகன்விசயன்மைந்தனெதிர்
முகனமரில்வந்துபுர
தகனனெனநின்றனரே. (௬௮)

நிற்குநிலைநின்றவரி
விற்களும்வளைத்தனர்க
ளூற்கைகளினூறுபல
பொற்கணைதொடுத்தனரோ. (௬௯)

வருகணைவிலக்கியெதிர்
பொருகணைகளாலே
யொருவனொரிமைப்பொழுதி
லிருவரையும்வென்றான். (௭௰)

தேர்முகமிழந்துமிரு
கார்முகமிழந்தும்
போர்முகமிழந்துமவர்
நேர்முகமிழந்தார். (௭௧)

துன்மகனுமன்றமரின்
முன்முனமர்செய்தே
வன்மிகமறிந்ததென
நன்முடிதறிந்தான். (௭௨)

சித்திரவில்வீரனெனு
மத்திரர்பிரானும்
புத்திரரிலாதியுரு
மித்திரனும்வந்தார். (௭௩)

வந்தபிமனோடமரின்
முந்தியிருவோருஞ்
சிந்துகணைமாரிகளி
னந்தரமறைத்தார். (௭௪)

அவரவரெடுத்தவிரு
தவருநடுவெட்டா
விவர்கணைவிலக்குவன
கவர்கணைதொடுத்தான். (௭௫)

மைந்தனொருவாளியினி
லந்தரமடைந்தா
னைந்துபலவாளியொடு
தந்தைபுறகிட்டான். (௭௬)

வென்றமரில்வாளபிம
னின்றநிலைகண்டே
யொன்றுபடமாவிரதர்
சென்றனருடைந்தே. (௭௭)

கெட்டவர்களின்னரென
முட்டவுரைக்கொண்ணா
பட்டவரநேகரிவன்
விட்டகணையாலே. (௭௮)

வேறு.

முற்சக்கிரயூகம்பிளப்புண்டபின்முன்பிறேடும்
பொற்சக்கிரமென்ன*வெறித்தாமம்பொலிந்துசூழ
விற்சக்கிரமாகமணித்தேரினின்மீதுநிற்பான்
கற்சக்கிரமாகநடுவூர்செங்கதிரோடொத்தான். (௭௯)

வடாதுந்தெனாதும்பராரசர்வகுத்தநேமிக்
குடாதுங்குணாதுமவற்றுட்படுகோணநான்கும்
விடாதுந்துதேரின்மிசையெங்கும்விராயபோது
சடாதுங்கமௌலிப்புரசூதனன்றன்னையொத்தான். (௮0)

வின்மைந்துகொண்டுதகுவோர்தமைவென்றவீர
னன்மைந்தனுக்குமுதுகிட்டனரென்றுநாணி
மன்மைந்தரெண்ணில்பதினாயிரர்வந்துசூழத்
தன்மைந்தனையுமுடனேவினன்சர்ப்பகேது. (௮௧)

மேல்வந்தவேந்தன்மகனும்பலவேந்துமூழிக்
கால்வந்துவேலைக்கடறன்னைக்கலக்குமாபோ
னால்வந்தகொற்றச்சிலையாசுகநொய்தினேவி
மால்வந்தகைக்குன்றனையானைமுன்வந்துசூழ்ந்தார். (௮௨)

முன்முன்புமுந்திப்பலரேவியமூரிவாளி
தன்முன்புதூவுமலர்போலிருதாளில்வீழ
வின்முன்புடையோனொருவில்லின்விசித்தவம்பாற்
பின்முன்புபட்டபலகோடிபிறங்குசேனை. (௮௩)

வேறு.

அரவுயர்த்தவன்மதலையொடடலுடையரசர்புத்திரரனைவருமெழுபரி
யிரவிபொற்கதிர்தெறுதலினிரிதருமிருளெனத்திசைதிசைதொறுமுதுகிட
வரனுடைப்பணைமுழவுறழ்திணிபுயனொருசமர்த்தனுமொருதனியிரதமும்
விரவிமுற்பொருகளமழகுறும்வகைவிறல்வயப்புலியெனவெதிர்முடுகவே. (௮௪)

வளையமுத்துதிர்விழியுடைவரிசிலைமதனன்மைத்துனனவனிபர்பலரையு
மிளையெனப்புறமிடவமர்பொருதபினிளையவித்தகனெதிருறவருதலு
முளையெயிற்†றிளநிலவெழவகல்வெளிமுகடுடைப்பதொர்நகைசெய்துகடவின
னுளைவயப்பரியிரதமுமிரதமுமுரனொடொத்தினவுருள்களுமுடையவே. (௮௫)

ரகுகுலத்தவனிளவலுநிசிசரரிறையளித்தருளிளவலுமிருவரு
நிகரெனத்துணைவிழிகடைநிமிர்தரநெறிகடைப்புருவமுமிகமுரிதர
முகிலிடித்தெனவெழுகடல்களுமிகமொகுபொகுத்தெனவனிலமுமனிலமு
முகமுடித்தெனமுறைமுறைபலபலவுரையெடுத்தனரொருவரொடொருவரே. ()

---

* எறிதாமம் என்றும் பாடம்.

† இளவிகலரியெனவெளிஎன்றும்பாடம்.

ஞெலிமரத்தினுமனனெரியெழுவெழுநிருபர்விட்டனகசரததுரகமு
மெலிவெழப்பிறகிடவுகின்றொருதனிவிறல்கூறித்திரதமுமெதிர்கடவினை
யொலிபடுத்தெதிர்வரின்விரிசுடரெதிருலவுவிட்டிலினுயிரழிகுவையென
வலியுறுத்தினனவனியன்மதலையைவலியவச்சிரன்மதலைதன்மதலையே. (அஎ)

இவனுமப்பொழுதெதிரொலியெனநனியிகலருச்சுனன்மதலையையுனதுயி
ரவனிபர்க்கெதிர்கவருவனொருநொடியளவையிற்பொருதெனமுனையணுகினன்
சிவன்வளைத்தபொன்மலையினும்வலியினசிலைவளைத்தனரிருவருமெறிதரு
பவனன்மைக்கடல்வடவையின்முனிதருபவனமொத்தனபடுகளமுழுதுமே. ()

துரகதத்துடல்கெழுமினசிலகணைதுவசமற்றிடவிரவினசிலகணை
யிருவர்நெற்றியுமெழுதினசிலகணையிருபுயத்திடைசொருகினசிலகணை
யரணியொத்தெரிகதுவினசிலகணையகன்முகட்டையுமுருவினசிலகணை
முரணிலக்கணகுமரனுமபிமனுமுடுகியிப்படிமுரணமர்புரியவே. (அகூ)

மழைமுகிற்குலநிகர்திருவடிவினன்மருகன்முட்டிபுகிலையுமெய்வலிமையு
மழகுறத்தொடுகணைகுருநபதிமகனவயவத்தினிலடைவுறமுழுகின
கழல்களற்றனவிருதொடைநழுவினகவசமற்றதுகரமலர்புயமுடன்
முழுதுமற்றனவொளிவிடுநவமணிமுகுடமற்றதுமுகிழ்நகைமுகனொடே. (கூ0)

வேறு.

இலக்கணகுமரன்வெங்கானெரித்தவன்குமரனேவா
லலக்கணுற்றுவிமாய்ந்தானமரிடையென்றுகேட்டுக்
கலக்கணீர்சொரியநின்றுகண்ணிலிகுமரன்வெம்பி
வலக்கணோர்முனிவரோடுமன்னவரோடுஞ்சொல்வான். (கூக)

மன்னவர்மைந்தரோடென்மைந்தனைக்கொன்றமைந்தன்
றன்னையுமிமைப்பிற்சென்றுசயமுறச்செகுத்திலீரேற்
பின்னையிவ்வரசும்வேண்டேன்பெருமிதவாழ்வும்வேண்டே
னென்னுயிர்தானும்வேண்டேனென்றனனிராசராசன். (கூ௨)

தனித்தனியரசரெல்லாந்தாளிணைபணிந்துபோற்றிப்
பனித்துயிர்பொன்றிவீழப்பார்த்தன்மாமகனையின்னே
குனித்தவின்னிமிராவண்ணங்கொடுஞ்சமர்க்கொன்றிலேமே
லினித்தனுவென்றுபோரிலெடுக்கிலேமிறைவவென்றார். (கூ௩)

குன்றவில்லவனையொக்குங்குமரனும்பகைகளாறும்
வென்றவின்முனியுமற்றும்வேந்தராயருகுதொக்கு
நின்றவில்விருதர்யாருநிருபன்மாமதலையாவி
பொன்றவில்வளைத்தோன்றன்னைப்புலிவளைந்தென்னச்சூழ்ந்தார். (கூச)

போரொருமுகத்தாலன்றிப்பொருப்பொன்றிற்புணரியேழுங்
காரொருமுகமாய்மொண்டுகணக்கறப்பொழியுமாபோற்
றேரொருவனையாகச்சென்றுதிண்சிலைகள்கோலி
யோரொருவீரர்கோடியாசுகமுடற்றினரே. (கூ௫)

தரணிபரெய்தவெய்தசரங்களைச்சரங்களாலே
முரணறவிலக்கிப்பாதமுடியளவாகவந்தக்
கரணமும்புலனுமெய்யுங்கலங்கியக்கணத்தில்யாரு
மரணமென்றுன்னவல்வில்வளைத்தனன்வளைவிலாதான். (௯௬)

ஆகவந்தன்னின்முந்தமனுகுலத்தரசன்பட்டான்
கேகயன்குமரன்மாய்ந்தான்கிருபன்வில்லொடிந்துமீண்டான்
மாகதக்குரிசிலோடுமகுடவர்த்தனரநேகர்
நாகமுற்றனர்கள்கோடிநரபதிகுமரர்வீந்தார். (௯௭)

சிலையழிந்தவரநேகர்தேரழிந்தவரநேகர்
தலையழிந்தவரநேகர்தாளழிந்தவரநேகர்
நிலையழிந்தவரநேகர்நெஞ்சழிந்தவரநேகர்
துலையழிந்தவரநேகர்தோளழிந்தவரநேகர். (௯௮)

இனைவருஞ்சகுனிமைந்தரெழுவருந்துணைவருள்ளா
ரனைவருமாவிமாளவமரழிந்தவனும்போனான்
றனைவரும்புரவித்தேர்த்துச்சாதனன்றுணைவரோடு
முனைவருமளவிற்பாலன்முனைவெரீஇமுதுகுதந்தான். (௯௯)

காவலருடைதல்கண்டுகன்னனையரசன்பார்த்துக்
கேவலமல்லவிப்போர்கிரீடிவந்திவனைக்கூடி
னீவலையாகிற்சென்றுநேர்மலைந்தடர்த்தியென்னக்
கோவலன்மருகன்றன்னைக்குறுகினன்கொடையான்மிக்கோன். (௧00)

மன்முரிகுவவுத்திண்டோள்வாசவன்பேரன்றன்னோ
டன்முரியிரவிமைந்தனருஞ்சமர்விளைத்தகாலைச்
சென்முரிந்தென்னவேறுதேர்முரிந்தெடுத்தவாகை
வின்முரிந்துள்ளந்தானுமிகமுரிந்துடைந்துமீண்டான். (௧0௧)

தேறினான்றேறித்துச்சாதனன்றருஞ்செம்பொற்றேரி
னேறினான்மீளவில்லுமெரிகணைபலவுங்கொண்டு
தூறினானபிமன்செங்கைத்தொடைகளாலெதிர்த்தலஞ்சி
மாறினான்முகமுந்தேரும்வரிவில்லுமழிந்துமன்னோ. (௧0௨)

தூண்டினன்மேலாளாகித்துணைபரித்தடந்தேர்தூண்டி
மீண்டனன்காலாளாகிவிழுந்தனன்றெளிந்துமீளத்
தாண்டினபரித்தேர்தேடிச்சாபமுந்தேடிநெஞ்சாற்
பூண்டனன்பொருவான்றன்கைப்பொருகணைப்புயங்கம்போல்வான். (௧0௩)

விற்குனித்திரவிமைந்தன்விடும்விடுங்கணைகள்பட்டுப்
பற்குனன்மைந்தன்றிண்டேர்ப்பரிகளும்பாகும்பட்டு
முற்குனித்தெய்தவில்லுமுரிந்ததுமுரித்தேரு
நிற்குநன்னிலைமைகுன்றிநேமியுநெறிந்ததன்றே. (௧0௪)

தன்னையத்தனயன்செய்ததாழ்வெலாந்தனயன்றன்னை
பின்னையத்தந்தைசெய்துபின்னிடாதசைந்துநிற்ப
*முன்னையபுரவித்தேருமூரிவெஞ்சிலையுமின்றி
மின்னையொத்திலங்கும்வாளோடவனிமேல்விரைந்துபாய்ந்தான். (௧0௫)

வாளொடுபரிசையேந்திமண்டலம்பயிற்றியிற்றை
நாளொடுதுறக்கமெய்தநயந்தனனின்றவீரன்
றோளொடுபுரையுஞ்செம்பொன்மேருவைச்சுடரோனுகைக்
கோளொடுசூழ்வதென்னச்சுழற்றினன்குமரரேறே. (௧0௬)

வேறு.

தேர்போனதுபரிபோனதுசிலைபோனதுசிறுவன்
போர்போனதினிச்சென்றமர்புரிவோமெனநினையாக்
கார்போனனியதிராவிதழ்மடியாவெறிகடல்வாய்
நீர்போனுடன்மொய்த்தார்வெருவுறவோடியநிருபர். (௧0௭)

துச்சாதனன்மகன்மன்னர்தொழுந்துச்சனியென்னு
நச்சாடரவனையானினிநானேபழிகொள்வே
னிச்சாயகமொன்றாலெனவெய்தானவன்முடியோ
டச்சாயகம்வடிவாள்கொடறுத்தானடலபிமன். (௧0௮)

துரியோதனன்மகனும்பொருதுச்சாதனன்மகனும்
புரியோதனமுனைவென்றமைபுரிவின்முனிகருதா
வரியோமெனுமறையாலடலம்பாயிரமெய்தான்
வரியோலிடுகழலானவைவாள்கொண்டுதுணித்தான். (௧0௯)

சொரியுங்கணைமழையேவுதுரோணாரியன்வில்லும்
பரியுங்கடவிரதத்தொடுபாகும்பலபலவாய்
முரியும்படிவடிவாள்கொடுமோதாவமர்காதா
விரியுஞ்சுடரெனநின்றனன்விசயன்றிருமகனே. (௧௧0)

ஒருக்காலழிதேரன்றியுமுருளாழிகொடேர்மே
லிருக்கால்வரமுக்கால்வரவெக்காலுமழித்தே
பெருக்காறணைசெய்தொத்தவிர்பிள்ளைப்பிறையனையான்
செருக்கானகைசெய்தான்வரிசிலையாசிரியனையே. (௧௧௧)

முன்னுஞ்சுருதியினூலுயர்முனிவீரனைமுனியாப்
பின்னும்பனிவரைபோலொருபெருந்தேர்மிசைகொள்ளா
மன்னுஞ்சிலைகுனியாமுனைவடிவாளொடுகையு
மின்னும்பிறைமுகவாளியின்வீழும்படிவிட்டான். (௧௧௨)

பேணாருயிர்பருகும்பசிபெட்பப்பகுவாய்வெங்
கோணாகமுலாவந்ததெதிர்கொடுநாவெறிவதுபோற்
பூணார்கடகக்கையொடுபுகர்வாளமுமண்மே
னீணாகர்வியக்கும்படிவிழமீளிபுகின்றான். (௧௧௩)

---

* உன்னயப்புரவித்தேருமொத்தவெஞ்சிலையுமின்றி என்றும் பாடம்.

இருதோள்களினொருதோண்முனி யிகல்வாளியின் விழவு
மொருதோள்கொடுபொரநிற்பதொர்மதவாரணமொத்தான்
கருதோகையொடளகாபதிதனையோர்கதிபெறமுன்
மருதோரடியிணைசாடியமாயன்றிருமருகன். (௧௧௪)

தன்மாதுலன்முதனளுரைதருமந்திரமொன்று
லென்மாமணியுருளொன்றினையெறிசக்கரமாக்கிக்
கன்மாரிவிலக்குங்கிரியெனமேல்வருகருதார்
வின்மாரிவிலக்காவதுகொடியாரையும்வீழ்த்தான். (௧௧௫)

ஒருகையினிலுருணேமிகொடோடித்திசைதோறும்
வருகையறவெறிவானுயர்வனமாலியையொத்தா
னிருகையொருவரைமண்ணிலிறைஞ்சாமுடியிறைவன்
பொருகையறவபிமன்பொருபோர்கண்டுபுழுங்கா. (௧௧௬)

வேறு.

ஒருவனம்படைத்தலைவர்களைவரையுமொருகைகொண்டடற்றிகிரியின்விழவெதிர், பொருவதென்கொலிச்சிறுவனொடொருபடிபொழுது சென்றதெப்பொழுதமர்முடிவது, வெருவருந்திறற்றரணிபர்களிலிவன்விளியவென்றிடத்தகுமவரிலரினி, யருளுடன்சயத்திரதனையழையெனவவனும்வந்துபுக்கனனொருநொடியிலே. (௧௧௭)

அருகுநின்றகொற்றவர்களுமவரவரரியதிண்டிறற்குமரருமயரிலுன், மருகனும்படப்பொருதனன்மகபதிமகன்றனைப்பசுபதியருளிய, வருகெழுங்கதைப்படைகொடுகவருதியுயிரையென்றெடுத்துரைசெயவரசனை, யிருகையுங்குவித்தருளுடன்விடைகொளுமெழில்கொள்சிந்துவுக்கொருதனிமுதல்வனே. (௧௧௮)

உரகவெங்கொடித்தரணிபனவைருமுளமகிழ்ந்திடக்கதிபல்படவரு
துரகதம்பிணித்தணிகொளிரதமிசைதுவசமுந்தொடுத்தடலுடைவலவனை
விரைவுடன்செலுத்துகவெனவுரைசெய்துவிழிசிவந்துசிற்றிளமதிபுனைதரு
கரகவண்புனற்சடைமுடியவனடிகருதிநின்றெடுத்தனனொருகதையுமே. (௧௧௯)

மறலிதண்டெனக்கொலைபுரிதொழின்மிகவலியதண்டுகைக்கொளுமளவினிலிவன்
விறல்புனைந்தகைத்திகிரியையொழியமுன்வினையழிந்துபற்றலர்முதுகிடவிழு
திறல்விளங்குபொற்கதைகொடுவிரைவொடுதிருகிநின்கதைக்கிதுகதையெனவுரை
யுறவிளம்பியப்பொருகளமுழுவதுமுருமெறிந்ததொத்துவகையொடதிரவே. ()

சினவுசிங்கமொத்திருவருமுறைமுறைதிருகிவெஞ்செருப்புருதலினெழுமொலி
கனல்வளைந்துசுட்டணிலமுமெறிதருகடலதிர்ந்தெனக்கனமதிர்வனவென
மினல்பரந்தெழத்திசைகளின்முடிவுறவெடிகொடண்டபித்தியுமுடைதரவெழ
மனமழன்றுபொற்கிரிநிகர்தமபுயவலிமைகொண்டடற்றினர்வயமலியவே. (௧௨௧)

உரியசிந்துவுக்கரசனதிருபுயமொடியவென்புநெக்குடன்முரிதரவுர
னெரியவெங்குடர்க்கொடிநெடுவளையமுநிமிரவன்றொடைப்புடைமிடைநடையுற
வரியகண்கனற்பொறியெழமணிமுடியழகழிந்துபொற்பிதிர்படவுதிர்பட
வெரியெழுஞ்சினத்தொடுதனதொருகையினிலகுதண்டமிட்டிகலுடனெறியவே. ()

வசையறும்புகழ்க்குருகுலதிலகனைமருதிரண்டொடித்தவர்திருமருகனை
விசயன்மைந்தனைப்பணைமுகின்மிசைவருவிபுதர்தங்குலத்ததிபதிபெயரனை
யசைவில்வன்றிறற்பகைமுனைநிருபரையடையவென்றகட்டழகுடையபிமனை [வே.
யிசைகொள்சிந்துவுக்கரசனுமொருகதையிருகைகொண்டெடுத்திகலுடனெறிய

கரமிழந்துமற்றொருகரமிசையொருகதைகொள்வெஞ்சினக்களிறனையவனிவ
னிரதமுந்தகர்த்துறுகதியுடன்வருமிவுளியுந்துணித்தடலுடைவலவனை
முரணுடன்புடைத்தணிதுவசமும்விழமுதுகுகண்டபிற்சரபமதெனும்வகை
யரன்வழங்குபொற்கதையுடனவனியிலவனுமுன்குதித்தடலுடன்முனையவே. ()

பதயுகங்களொத்தியவலிபலகணபணபுயங்கர்பற்பலமுடிசிதறின
வெதிர்கொடண்டமொத்தியவொலிதிசைகளிலிபமடங்கமெய்ப்பிடியொடுசிதறின
கதியில்வந்தசித்திரமெனமுறைமுறைகதுவிமண்டலித்தொருபகன்முழுவது
மதிசயம்படப்பொருதனரெதிரெதிரபிமனுஞ்சயத்திரதனுமமரிலே. (௧௨௫)

உலைவிறண்டினிற்பரிசனன்மதலைபுமுவமையின்றெனப்பகழியின்மழைபொழி
சிலையின்வன்றொழிற்றிறலுடைமகபதிசிறுவனுந்தனக்கெதிரிலனினியென
மலையும்வெஞ்சமத்தொருதனிமுதுபுயவலிமைகண்டுபொற்புறுகழலபிமனை
யலைநெடுங்கடற்றரணிபரனைவருமமரருந்துதித்தனர்முகடதிரவே. (௧௨௬)

கழுகுபந்தரிட்டனமிசைவிசையொடுகழுதினங்களிட்டனபலகரணமு
மெழுகவந்தமிட்டனபலபவுரிகளிருபுறங்களிட்டனவெதிரழிபடை
யொழுகுசெம்புனற்குருதியின்வருநதியுததியுஞ்சிவப்புறும்வகைபெருகலின்
முழுகியெஞ்சியிட்டனசுழியிடையிடைமுகிலின்வெங்குரற்கசரததுரகமே. (௧௨௭)

முறைமையின்றியெத்தரணிபர்களுமெதிர்முடுகவந்துமுற்றெறுதலினவரவர்
பொறையழிந்துகெட்டனைவரும்வெருவொடுபுறமிடும்படிக்கொருதனிபொருதபி
னிறைவலம்புரித்தொடைகமழ்புயகிரிநிருபதுங்கன்மைத்துனனுளம்வெருவர
வறைபெருங்கதைப்படைகொடுவலியுறவமர்புரிந்திளைத்தனனடலபிமனே. (௧௨௮)

இவன்மயங்கிமெய்த்தளர்வுடன்மெலிவுறுமிறுதிகண்டினித்தெறுவதுகடனென
வவனிகொண்டபற்குனன்மதலையையவனருகுவந்தடுத்தணிபுயவலிகொடு
சிவனையஞ்செழுத்துரைசெய்துதொழுதொருசிகரதண்டர்விட்டெறிதலினெறிதரு
பவனனன்றுகுத்தினகிரியெனவிசைபடவிழுந்ததப்பருமணிமகுடமே. (௧௨௯)

தலைதுணிந்துதத்திடவிழுவிவனொருதனதுதிண்கைபிற்கதைகொடுதரியல
னிலையறிந்துபுக்குரனுறவெறிதலினெரிநெரிந்ததத்தரணிபனுடலமு
மலைமறிந்ததொத்தபிமனதுடலமுமகிதலந்தனிற்றரியறவிழுதலி
னலையெறிந்துமைக்கடல்புரளுவதெனவரவம்விஞ்சியிட்டதுகளமடையவே. (௧௩௦)

வேறு.

மாயனுந்திருமாமன்றனஞ்சயனுந்திருத்தாதைவானோர்க்கெல்லா
நாயனும்பிதாமகன்மற்றொருகோடிநாதிபராநண்பாய்வந்தோர்
சேயனுமபிமனுவாஞ்செயத்திரதன்கைப்படுவான்செயற்கைவெவ்வே
றுயநாளவனிதலத்தவ்விதியை*வெல்லும்விரகார்வல்லாரே. (௧௩௧)

* வெல்லும்வகைஎன்றும்பாடம்.

சேடன்முடிநெளியவருசெம்பொற்றேரழிவதோவந்தோவந்தோ
கேடகம்வாளணிவலயங்கிளர்புயத்தோளறுவதோவந்தோவந்தோ
கூடகவெங்கதையொன்றாற்சிந்துபதிகொல்வதோவந்தோவந்தோ
*வாடமரிலொருவரும்வந்துதவாமலிருப்பதோவந்தோவந்தோ. (௧௩௨)

கன்னனையுந்தேரழித்தான்கந்தனிலும்வலியனேயந்தோவந்தோ
மன்னவரைவருமிருக்கமைந்தனுயிரழிவதேயந்தோவந்தோ
பொன்னுலகோர்வியந்துருகிப்புந்தியினான்மலர்பொழிந்தாரந்தோவந்தோ
வன்னநெடுந்துவசனிவற்காயுமிகக்கொடுத்திலனேயந்தோவந்தோ. (௧௩௩)

சரமறுத்தான்வில்லறுத்தான்கொடியறுத்தான்றேரறுத்தான்சமரபூமி
யுரமறுத்தான்முதற்பொருதவுதயதினகரன்மைந்தனுடன்றுசீறிக்
கரமறுத்தானடுப்பொருதகார்முகத்தின்குருவிசயன்காளைதன்னைச்
சிரமறுத்தான்பின்பொருதசயத்திரதனிவன்வீரஞ்செப்பலாமோ. (௧௩௪)

எட்டானைத்தம்பமுடன்சயத்தம்பநாட்டியபோரிறைவன்மைந்தன்
பட்டானென்பதுகேட்டுத்திருகினார்முதுகிட்டுப்பறந்தவீர
ரொட்டாமற்செயிரமரிலுயிரிழந்ததன்புதல்வற்குருகுஞ்சோகம்
விட்டான்வெஞ்சமரமினிவென்றேமென்றுட்கொண்டான்வேந்தர்வேந்தன். ()

ஓரிரண்டுவயவர்முனைந்துடன்பொருதவுலகியற்கையொருவன்றன்மேற்
போரிரண்டுபுறமும்வளைந்தொருகோடிமுடிவேந்தர்பொருதுகொன்றார்
தேரிரண்டுகிடையாதகுறையன்றேகளத்தவிந்தான்சிறுவனென்றென்
றீரிரண்டுபெயரொழியமற்றுள்ளாரழுதிரங்கியென்பட்டாரே. (௧௩௬)

தாள்விசயம்பெறமுனைந்துசக்கரயூகம்பிளந்துதானேநின்று
வாள்விசயன்றிருமதலைவானோரும்வியந்துரைக்கமாய்ந்தானென்று
வேள்வியினாலுண்மையினாற்றிண்மையினாற்றண்ணளியால்விறலாற்பன்னூற்
கேள்வியினான்மிகுந்தெவர்க்குங்கேளானவுதிட்டிரனுங்கேட்டானன்றே. (௧௩௭)

பிறந்ததினமுதலாகப்பெற்றெடுத்தவிடலையினும்பீடுந்தேசுஞ்
சிறந்தனையென்றுனைக்கொண்டேதெவ்வரைவென்றுலகாளச்சிந்தித்தேன்யான்
மறந்தனையோவெங்களையுமாலையினால்வளைப்புண்டுமருவார்போரி
லிறந்தனையோவென்கண்ணேயென்னுயிரேயபிமாவின்றென்செய்தாயே. (௧௩௮)

தேனிருக்குநறுமலர்த்தார்ச்சிலைவிசயனிருக்கவரைத்திண்டோள்வீமன்
றானிருக்கமாநகுலசாதேவர்தாமிருக்கத்தமராய்வந்து
வானிருக்கின்முடிவானமரகதமாமலையிருக்கவாழ்வானெண்ணி
யானிருக்க†வினையறியாவிளஞ்சிங்கமிறப்பதேயென்னேயென்னே. (௧௩௯)

நின்றனையேயெனைக்காத்துநீயேகென்றியானுரைப்பநெடுந்தேரூர்ந்து
சென்றனையேயிமைப்பொழுதிற்றிகிரியையுமுடைத்தனையேதெவ்வரோட
வென்றனையேசுயோதனன்றன்மகவுடனேமகவனைத்தும்விடங்காலம்பிற்
கொன்றனையேநின்னாண்மைமீண்டுரைக்கக்கூசினையோகுமரரேறே. (௧௪௰)

---

* ஆடமரிலருகொருவர்வாராமலிருப்பதோஎன்றும்பாடம்.

† வினைவறியாஎன்றும்பாடம்.

உனக்குதவியொருவரறவொருதனிநின்றமருடற்றியொழிந்தமாற்றந்
தனக்குநிகர்தானானதனஞ்சயனுங்கேட்கினுயிர்தரிக்குமோதா
னெனக்கவனிதரவிருந்ததித்தனையோமகனேயென்றென்றுமாழ்கி
மனக்கவலையுடனழிந்துமணித்தேரின்மிசைவீழ்ந்தான்மன்னர்கோவே. (கசக)

சங்கலாரிடைவளைத்தசக்கரத்தைபுடைப்பதற்குத்தம்பியேனெய்தி
யங்குலாவருமிரதத்தரசரையுந்தொலைத்துன்னையடுப்பான்வந்தேன்
பங்கெலாமரகதமாம்பவளநிறப்பொருப்புதவுபைம்பொற்கொன்றைத்
*தொங்கலானுனைவளைத்தசூழ்ச்சியையின்றறிந்திலனேதோன்றலேநான். (கசஉ)

மின்னுமலிடித்ததெனவீழ்த்தபொலந்தொடையானும்விடையோனீந்த
பொன்னார்வெங்கதையானுமல்லதபிமனையமரிற்பொரவல்லார்யார்
தன்னாண்மைநிலைநிறுத்திச்சங்கமுழக்கியவீரசிங்கசாப
வென்னனையிறந்துபடவின்னமுநானிவ்வுயிர்கொண்டிருக்கின்றேனே. (கசங)

எடுத்தபடையனைத்தினுக்குமெதிரில்லையெனக்கலைகளெல்லாமுன்னை
யடுத்ததுகண்டையாநின்னாருயிர்க்குக்கரைந்துகரைந்தையுற்றேன்யான்
விடுத்தபெருந்தாதையிருவிழிகளிப்பப்பகைவென்றுமீளாதென்னைக்
கெடுத்தனையேபிழைத்தனையென்றினியொருவர்வந்துரைக்கக்கேளேன்கொல்லோ.

என்றென்றுவீமனுந்தன்னிளையோருமழுதரற்றவிறந்தோன்வீர
நன்றென்றுதளமிரண்டினரபாலர்பலர்திரண்டுநவிலாநிற்ப
வன்றென்றுமனமருளுற்றபிமனடுதலைக்குன்றையடுத்துமேலைக்
குன்றென்றுதடுமாறிப்பின்னையும்போய்த்தனதுதடங்குன்றுசேர்ந்தான். (கசரு)

வேறு.

இந்நிலத்தவனிபாலரிவ்வகையிரங்கியேங்கத்
தென்னிலத்தெதிர்ந்துளாரைத்தென்னிலந்தன்னிலேற்றி
யெந்நிலத்தினுந்தன்னாண்மைக்கெதிரிலாவிசயன்றானு
மந்நிலத்தகன்றுமீண்டானுற்றவாறறிகிலாதான். (கசசா)

போனதுவருவதெல்லாம்புரையறவுணருகிற்கு
மானதிர்கனகத்திண்டேர்வலவனுமதுரைமன்னன்
றேனதிர்கடுக்கைமாலையிடுசயத்திரதன்றன்னா
லானதுங்குறித்துவானோரரசையுங்குறிக்கலுற்றான். (கசஎ)

மதித்தலுமனத்திற்றோன்றும்வலாரியைக்குறிப்பினாலுன்
கதித்தடந்திண்டேர்மைந்தனுயிரைநீகாத்தியென்னத்
துதித்தவன்றொழுதுமாயச்சூழ்ச்சியான்முனியுமாகி
விதித்தலைப்பட்டகாதற்சுதனுடன்விளிவேனென்னா. (கசஅ)

நெறியிடைபிவர்கள்காணநெருப்பினைவளர்த்துத்தானும்
பொறியுறவீழுங்காலைப்புவனங்களனைத்துமீன்றோ
னறிவுடைவிசயற்கிந்தவந்தணன்றழலில்வீழா
தெறிகணைவரிவில்வீரவிலக்குநீயீண்டையென்றான். (கசகூ)

---

* தொங்கலாற் கோறல் புரிசூழ்ச்சியை என்றும் பாடம்.

என்றலும்விசயனெய்தியெந்தைநீபெரியில்வாளர
பொன்றலுய்ந்திருந்தாலின்னம்புதல்வரைப்பெறலுமாகு
நன்றலதவத்தின்மிக்கோய்நல்லுயிர்செகுத்தலென்னக்
குன்றினும்வலியதோளான்முனிவனைத்தழுவிக்கொண்டான். (க௫௦)

வீதலும்பிழைத்தலும்விதிவழியன்றிநம்மா
லாதலுமழிவுமுண்டோநின்னில்வேறறிஞருண்டோ
பூதலந்தன்னில்யாவர்புதல்வரோடிறந்தாரையா
சாதலிங்கியற்கையன்றென்றருளுடன்றடுத்தகாலை. (க௫க)

தன்மகவுடன்றீமூழ்கத்தவிர்ந்தநற்றவனுமீள
வின்மகனாகின்றவிசயனைவெகுண்டுநோக்கி
யென்மகனிறக்கவென்னையிருத்தினையாயினம்ம
நின்மகனிறந்தாலென்சொன்மறுதொழிநீயுமென்றான். (க௫௨)

ஐயெனத்தொழுதுவீரனந்தணனுயிரைமீட்டு
மையெனக்கரியமேனிவலவனுந்தானுந்திண்டே
ரொய்யெனச்செலுத்துகாலைவேலையிலோதைதானும்
பொய்யெனப்பரந்தோரோதைசெவிகளைப்புதைத்ததன்றே. (க௫௩)

பாசறையணுகுமுன்னம்பாசடைப்பதுமம்போல
மாசறவிளங்குமேனிவண்டுழாயலங்கன்மூர்த்தி
யாசறுவரிவிற்காளையங்கையுமருகுநீங்காத்
தேசுறுபடைகள்யாவுமொழித்தனன்றீமைதீர்ப்பான். (க௫௪)

அங்கையார்த்தலைத்துளோருமரற்றுபேரரவங்கேட்டுக்
கங்கையம்பழனநாடன்கண்ணனைவணங்கிநோக்கி
யிங்கயலெழுந்தகோடம்யாதெனயாதுஞ்சொல்லான்
பங்கயநெடுங்கண்சேப்பநித்திலம்பரப்பினானே. (க௫௫)

வன்கணனிளகிச்செங்கண்மாலடிவீழ்ந்துமேன்மே
லென்கணுந்தோளுமார்புமிடனுறத்துடிக்கைமாறு
நின்கணுமருவிசோரநின்றனையின்றுபோரிற்
புன்கணுற்றவர்கண்மற்றென்புதல்வரோதுணைவர்தாமோ. (க௫௬)

திருவுளத்துணராதில்லைசெப்புகென்றயர்வான்றன்னை
மருவுறத்தழுவித்திங்கண்மரபினுக்குரியசெல்வா
வெருவுறப்பகையைவென்றவீரனென்மருகனென்றென்
றருவரைத்தோளினானுக்குற்றவாறனைத்துஞ்சொன்னான். (க௫௭)

மைத்துனனுரைத்தமாற்றமைத்துனன்செவிக்குத்தீக்கோ
லொத்திருபுறனும்வேவவுள்ளுறச்சுட்டபோது
புத்திரசோகமென்னுநஞ்சினாற்பொன்றினான்போ
லத்தடந்தேரினின்றுமவனிமேலயர்ந்துவீழ்ந்தான். (க௫௮)

அயர்ந்தனன்விழுந்தகோவையச்சுதன்பரிவோடேந்திப்
புயந்தழீஇயெடுத்துவாசப்பூசுநீர்தெளித்துமாற்றப்
பயந்தரு*கொடியகூடபாகலந்தணிந்துமெல்லக்
கயந்தெளிவுற்றதென்னக்கண்மலர்ந்தழுதலுற்றான். (௧௫௯)

போரினிற்றுணைவரோடும்புயங்ககேதனனைவென்று
பாரெனக்களித்திநீயேயென்றுளம்பரிவுகூர்ந்தே
னேருனக்கொருவரில்லாய்நீகளம்பட்டாயாகி
லாரினிச்செகுக்கவல்லாரைவருக்குரியகோவே. (௧௬0)

சக்கரம்பிளந்தவாறுந்தரியலருடைந்தவாறுந்
துக்கரமானகொன்றைத்தொடையலால்வளைத்தவாறு
மெய்க்கரந்துணிந்தவாறுமீண்டுருத்தடர்த்தவாறு
முக்கிரமுடனென்முன்னேயோடிவந்துரைசெய்யாயோ. (௧௬௧)

பன்னகவரசன்பெற்றபாவைமாமதலைதன்னை
முன்னுறமுனையிற்றோற்றேன்மூர்க்கனேன்முடியாதுண்டோ
வுன்னையுமின்றுதோற்றேனுன்னுடன்றொடர்ந்துவாரா
தின்னமுமிருக்கின்றேன்யானென்னுயிர்க்கிறுதியுண்டோ. (௧௬௨)

கதிரவனுதிக்குமுன்னேகண்டுயிலுணர்த்தியென்னை
யதிரமர்க்கோலங்கொள்வானறிவுறுத்துரைக்கவல்லாய்
முதிரமர்முருக்கிமீண்டேனித்தனைப்போதுமுன்போ
லெதிர்வரக்காண்கிலேனிங்கில்லையோவென்செய்தாயோ. (௧௬௩)

தந்திரமியாவுமின்றித்தனித்துநீதானேபோர்செய்
சந்தரமமையுமென்றிவ்வகலிடந்துறந்தவையா
மைந்துடனம்மைக்காணமகன்மகன்வருகின்றானென்
றிந்திரனேவவுன்னையிமையவரெதிர்கொண்டாரோ. (௧௬௪)

தேரழிந்தெடுத்தவில்லுஞ்செங்கதிர்வாளுமின்றி
யோருதவியும்பெறாமலொழிந்துயிரழிந்தமைந்தா
போரமருடற்றிநீயப்பொன்னகரடைந்தபோதுன்
பேரமராண்மைகேட்டுப்பிதாமகனென்சொன்னானே. (௧௬௫)

மற்புயக்குன்றிலொன்றுவாளுடன்வீழ்ந்தபின்னும்
பொற்புறப்பொருதநீயப்பொன்னுலகடைந்தகாலை
யற்புதப்படைகள்வல்லாயபிமனேயமரருநுங்
கற்பகக்காவும்வானிற்கங்கையுங்காட்டினாரோ. (௧௬௬)

வளைத்தவின்னிமிராவண்ணம்வாளியான்மாவுந்தேருந்
துளைத்துமுன்காலாளாகத்துரோணனைத்துரந்தவீரா
திளைத்தவெஞ்சமரினொந்துதனஞ்சயன்சிறுவன்மேனி
யிளைத்ததென்றிந்திராணியின்னமுதூட்டினாளோ. (௧௬௭)

---

* கோடி கூடப்பாகலம்என்றும்பாடம்.

வேறு.

என்னமகவான்மகனிரங்கினனரற்ற
முன்னவர்கள்பின்னவர்கண்முறைமுறைபுலம்பச்
சென்னிகரம்வைத்தனைவருங்கலுழிசெய்ய
வன்னபொழுதாரணமளித்தமுனிவந்தான். (௧௬௮)

வந்தமுனிமற்றுமுடன்வருமுனிவரோடு
மந்தநரபாலர்கண்ணரும்புனறுடைத்துக்
கந்தனிகர்மைந்தனெடுங்கையறநினைக்கும்
பந்தனையறுக்குமொழிபற்பலபகர்ந்தான். (௧௬௯)

தாயரொடுதந்தையர்கடாரமொடுதனையோர்
தூயதுணைவோர்களொடுசுற்றமெனநின்றோர்
மாயையெனும்வல்லபமயக்குறுமயக்கா
லாயவுறவல்லதவரார்முடிவில்யாமார். (௧௭௦)

வந்துபிறவாதமனையில்லைமுலைமாறித்
தந்துபரியாமலொழிதாயர்களுமில்லை
புந்தியுணர்வற்றவர்புலம்புறுவதல்லா
லிந்தவுலகத்தறிஞர்யாதினுமயங்கார். (௧௭௧)

உம்மையினும்யாருறவுணர்ந்திலமினிப்போ
மம்மையினும்யாவருறவாவரெனவறியே
மிம்மையினிகழ்ந்தவுறவித்தனையிரங்கன்
மும்மையுமுணர்ந்துவருமூதறிவினீரே. (௧௭௨)

ஆற்றியுமதாண்மையழியாமலிருமென்றென்
றேற்றிபடைவேசுருதியாவையுமெடுத்துத்
தேற்றியுரைசெய்துதனசேவடியிறைஞ்சிப்
போற்றியமகீபரையிருத்திமுனிபோனான். (௧௭௩)

தேற்றினுமகப்பரிவுதேறலரிதன்றே
யாற்றவரிதாதலினருச்சுனனரற்று
மாற்றரியபேரழல்வளர்த்தியெனவல்லே
யேற்றதுணராதுதனதிளவலொடுரைத்தான். (௧௭௪)

மத்திரைமகன்கனல்வளர்க்கவதனூடே
மித்திரரும்யாவரும்விலக்கவும்விலங்கான்
சித்திரவில்லோடுயிர்செகுப்பனெனநின்முன்
புத்திரரிலாவிடர்பொறுத்திடலுமாமோ. (௧௭௫)

அன்பொடுதுழாய்முதல்வனப்பொழுதழைக்க
முன்புதழன்மூழ்கலொழிமுனிவிரைவின்வாரா
நின்புதல்வனோடெரியினீபுகுதனெறியோ
வென்புதல்வனோடெனையிறப்பதுதவிர்த்தோய். (௧௭௬)

வழிப்படவழக்கின்வழிவருகவெனமுனிவன்
மொழிப்படிபொறுத்தழலின்மூழ்குதொழின்மாறி
விழிப்புனலின்மூழ்கிமனம்வெந்துதளர்வுறுவோன்
பழிப்படுசுரத்தின்முளிபாதவமதானான். (௧௭௭)

காமர்பிறையன்னசிறுகாளைதனைவாளா
வேமமுறுவெஞ்சமரிலேவினர்களென்னா
மாமுரசணிந்தகொடிமன்னனையும்வண்டார்
வீமனையுநின்றவிளையோரையும்வெகுண்டான். (௧௭௮)

சிந்துபதியாகியசெயத்திரதனைத்தே
றாந்தமரினாளையுருமேறெனவுடற்றா
வந்திடுமவ்வளவினாவிகவரேனேல்
வெந்தழலின்வீழ்வனிதுவேதமொழியென்றான். (௧௭௯)

இன்றமரில்வாளபிமனின்னுயிரிழக்கக்
கொன்றவனைநாளையுயிர்கோறல்புரியேனேன்
மன்றிலொருசார்புறவழக்கினையுரைக்கும்
புன்றொழிலர்வீழ்நரகுபுக்குழலுவேனே. (௧௮௦)

மோதமரினென்மகன்முடித்தலைதுணித்த
பாதகனைநானெதிர்படப்பொருதிலேனேற்
றாதையுடனேமொழிதகாதனபிதற்றும்
பேதைமகனெய்துநெறிபெற்றுடையனாவேன். (௧௮௧)

சேயனையவென்மதலைபொன்றவமர்செய்தோன்
மாயமுனடர்த்துவயவாகைபுனையேனேற்
றாயர்பசிகண்டுநனிதன்பசிதணிக்கு
நாயனையபுல்லருறுநரகிலுறுவேனே. (௧௮௨)

வஞ்சனையிலென்மகனையெஞ்சமுன்மலைந்தோ
னெஞ்சமெரியுண்ணவமர்நேர்பொருதிலேனேற்
றஞ்செனவடைந்தவர்தமக்கிடர்நினைக்கு
நஞ்சனையபாதகர்நடக்குநெறிசேர்வேன். (௧௮௩)

வினையிலென்*மகன்றனுயிர்வேறுசெய்வித்தோனைக்
குனிசிலையினாளையுயிர்கோறல்புரியேனேன்
மனைவியயலான்மருவல்கண்டுமவள்கையாற்
றினையளவுமோர்பொழுதுதின்றவனுமாவேன். (௧௮௪)

இன்னணமிருந்தவர்கள்யாவருநடுங்க
மன்னவையிலன்றுபலவஞ்சினமுரைக்கச்
சொன்னவுரையானகனல்சுட்டசெவியோடும்
பின்னையறன்மைந்தனெடுமாலினொடுபேசும். (௧௮௫)

* மகன்றனுடல் என்றும் பாடம்.

வேறு.

வடிசுடர்வாளியான்மொழிந்தவஞ்சினப்
படிசயத்திரதனைப்படுத்தல்கூடுமோ
பொடியனலிவன்புகிற்புகுந்துநால்வரு
மிடிபொருமரவெனவிறத்தறிண்ணமே. (௧௮௬)

முப்பதுகடிகையின்முரண்கொண்மொய்ம்பனைத்
தப்பறக்கொல்லுவேனென்றுசாற்றுமா
லப்பெருஞ்சேனையிலவனையுள்ளுறத்
துப்புறவணிந்திடிற்றுன்னலாகுமோ. (௧௮௭)

எஞ்சின்மற்றென்செய்வேனென்னுமேல்வையி
னஞ்சலென்றறன்மகனவலமாற்றினான்
கஞ்சவான்பொய்கையிற்காவின்வாய்ப்படு
குஞ்சரந்தனக்கருள்கொண்டன்மேனியான். (௧௮௮)

இந்திரன்காக்கினு*மியமன்காக்கினுஞ்
சிந்துவின்றலைவனைத்தேவர்காக்கினுங்
கந்தனிற்சிறந்தநின்கனிட்டனானையே
மைந்துறப்பொருதவன்மகுடங்கொள்ளுமே. (௧௮௯)

வெயிலெழுவதன்முனிவ்வியசயன்றன்னெடுங்
கயிலைபம்பொருப்பனைக்கண்டுமீளவுந்
துயிலுணர்த்திடும்படிதோன்றுவோமென
வயிலணியாழியானவனொடேகினான். (௧௯௦)

ஏகியநெறியிடையிளைத்துவாசவற்
காகியகுமரன்மெய்ப்பயர்ந்துவீழ்தலும்
போகியின்றிதுயில்புரியுநான்மறை
யோகியங்கையினனைத்துயக்கமாற்றியே. (௧௯௧)

உண்டிலையடிசிலுமுண்ணுந்தீம்புனல்
கொண்டிலைபசிக்கனல்கொளுந்திவீழ்ந்தனை
மண்டிலவேலினாய்மகவினன்பினாற்
கண்டிலையுலகியல்காட்டக்காட்டவே. (௧௯௨)

மாங்கனிவாழையின்கனிவருக்கையின்
றீங்கனிகன்னலிற்செய்பநீருள ...
வேங்கனற்பசியுநின்விடாயுமாறவே
யீங்கினிதருந்துதியேந்தலென்னவே. (௧௯௩)

சரிந்தவர்சரிவறத்தாங்குநாயகன்
பரிந்திவையுரைத்தலும்பாவைபங்கன்மேற்
புரிந்திலனின்னமும்பூசையென்றனன்
வரிந்தவெஞ்சிலைக்குமண்மதிக்கும்வீரனே. (௧௯௪)

---

* ஈசன்காக்கினும் என்றும் பாடம்.

மருவருகானகமலரினாலெமைப்
பொருவருபூசனைபுரிதியையநீ
யிருவருமொருவரேயென்பதின்றுபோ
யருவரையவனடியடைந்துகாண்டியே. (௧௯௫)

என்றரியம்பலுமிருமருங்கினா
நின்றநன்பலர்கொடுநிகரில்கேள்வியான்
மன்றலந்துழாய்முடியாயன்மேன்மன
*மொன்றியேசிவாகமவுரையிற்சாத்தினான். (௧௯௬)

சாத்தினன்றொழுதுபின்றலைவன்றாண்மலர்த்
தீர்த்தமுங்கனிகளுந்தெவிட்டவுண்டுதன்
காத்திரந்தேறினன்கருத்துந்தேறினன்
பார்த்தன்முற்றவப்பயன்பலித்தவாறரோ. (௧௯௭)

போயருநெறியிடைப்புள்ளின்வேந்தனைத்
தாயவனினைத்தலுமவனுந்தோன்றினான்
மாயனைத்தோளினும்வலாரிமைந்தனைச்
†சேயெனக்கரத்தினுஞ்சேரவேந்தியே. (௧௯௮)

நீலமுற்றியமலையிரண்டொடொன்றுபொற்
சீலமுற்றியமலைசெல்வதென்னவே
யாலமுற்றுயர்களத்தையன்வெள்ளியங்
கோலமுற்றியமலைகுறுகினானரோ. (௧௯௯)

மாற்றினால்விளங்குபொன்வடிவன்வெஞ்சிறைக்
காற்றினால்விசையுறக்கழன்றுபோயின
வாற்றினாலறம்புரியம்மையோடொரு
கூற்றினான்வரைபடிகொண்டலேழுமே. (௨௦௦)

‡பறிந்தனகொடுமுடிபலவும்வேரொடு
மறிந்தனசாரலின்மரங்கள்யாவையு
மறிந்தனமயின்முதலானபுள்ளினஞ்
செறிந்தனபணிந்தனசெய்யதாள்களே. (௨௦௧)

§பாண்டவசகாயனார்பறவையின்குலத்
தாண்டகையிருசிறகசையுமோதையாற்
காண்டகுசடைமுடிக்காலகாலன்மெய்ப்
பூண்டனபணிகளும்புரண்டுவீழ்ந்தவே. (௨௦௨)

வரிந்தபைங்கனைகழல்வயினதேயனை
விரிந்தவெண்கிரியரமாதர்மீதுகண்
டெரிந்திடுவச்சிரனிந்தமால்வரைக்
கரிந்திலன்சிறகெனவையமெய்தினார். (௨௦௩)

---

* ஒன்றுபட்டாகமவுரை என்றும் பாடம்.
† சேயதன்கரத்தினும் என்றும் பாடம்.
‡ ௨௦௧, § ௨௦௨ இவ்விரண்டுசெய்யுளும் இப்பொழுதுகிடைத்த எட்டுப்பிரதிகளிலுள்ளன.

நிறைமதிநிகரெனநிறத்தவெள்ளியம்
பொறைமலைதிசைதொறும்பொழியும்வாணிலா
நறைமலரிதழிசேர்நாதன்வார்சடைப்
பிறைமதிநிலவினும்பிறங்கவீசுமால். (௨௦௪)

நீரறுதருக்களுந்தழைக்கநின்றுமுன்
னாரதன்முதலியோர்நவிறருநாதயாழ்
பாரதவமர்புரிபச்சைமாமுகி
லாரதர்விடாயைவந்தாற்றுகின்றதால். (௨௦௫)

சங்கரன்மணிவரைச்சாரன்மாருதந்
திங்களினிலவுமிழ்செக்கர்வேணிமேற்
கொங்கவிழ்செழுமலர்க்கொன்றைவாசமுங்
கங்கைதண்டுவலையுங்கலந்துவீசுமால். (௨௦௬)

அங்குளவிடரகத்தநேகமாயிரம்
பொங்கழலுமிழ்விழிப்புயங்கமாமணி
யெங்கணுமிருளறவிலங்குசோதியாற்
கங்குலும்பகலவன்கரங்கள்காட்டுமால். (௨௦௭)

* செந்திருமடமயில்கேள்வன்சென்றனை
யந்திவானிறத்தவனறிந்துமுன்னமே
நந்தியுமுரைசெயக்கேட்டுநன்றெனப்
புந்தியான்மகிழ்ந்தெதிர்போந்துபுல்லினான். (௨௦௮)

* ஆங்கொராசனத்திடையிருத்தியையனைப்
பாங்கினால்வினவினான்பவளமேனியா
னீங்கிவன்பிறந்ததுமிளைத்தபார்மக
டேங்கறப்புரிதருசெயலுமியாவுமே. (௨௦௯)

---

* ௨௦௮-முதல் ௨௨௦ வரையுள்ள செய்யுட்கள் இப்பொழுதுகிடைத்தஏட்டுப்பிரதிகளிலுள்ளவை.

$ செந்திருமடமயில்கேள்வன்சென்றுசெவ்
வந்திவானிறத்தினனருள்செய்வாய்மையா
னந்தியுள்விடுத்திடநரன்றனோடுதன்
புந்தியின்மகிழ்ந்துமந்திரத்துட்போயினான்.

$ புரநகையாலெரிபுராரிதன்முன
நரனொடுநாரணனாகியன்பினாற்
சரணபங்கயமுறத்தாழ்ந்துபன்முறை
கரனுறமுகிழ்த்திதுகழறன்மேயினார்.

$ பொங்கராவெயின்மணிப்பூணும்பேணுநீற்
றங்கராகமுமுவந்தணியுமேனியாய்
சங்கராமேருவெஞ்சாபம்வாங்கிய
செங்கராசிவசிவதேவதேவனே.

* கேசவன்புரிவெலாங்கிரீசனென்னுமத்
தேசவன்றெளிவுறச்செப்பிவிட்டபின்
வாசவன்புதல்வனைவருகவென்றலும்
பாசவன்புடனவன்பணிந்துபோற்றினான். (௨௧௦)

$ விண்ணிடைத்திரிபுரம்வெந்துநீறெழப்
பண்ணுடைச்செந்தழல்பரப்புமூரலா
லெண்ணுடைக்காமனையெரித்தபேரழற்
கண்ணுடைக்கடவுளேகாலகாலனே.

$ தருவதுமுயிரெலாங்காக்குந்தன்மையு
முருவறவொழித்தலுமுன்றனாடலே
கருவராதொழிந்தவர்கருத்திற்கண்டுதே
றொருவனேயெம்மனோர்க்குரைக்கற்பாலையோ.

$ நித்தனேநிமலனேநிகழ்நின்னாமனே
யத்தனேயடியவர்க்கெளியவண்ணலே
பித்தனேயாதியந்தங்கள்பேசொணா
முத்தனேயுயிர்தொறுமுலாயமுன்பனே.

$ என்றுபற்பலவுரையெடுத்துக்கூறியே
நின்றுளநெக்குநெக்குருகிநேயமோ
டொன்றுகண்ணருவிகளுகுத்தனோக்கியே
யன்றுமாபதியவர்க்கருள்செய்தானரோ.

$ கண்ணன்மேலணிமலரனைத்துங்காயெரி
வண்ணன்மேற்காண்டலுமகிழ்ந்துமேதினி
யுண்ணுமாதவன்சிவனுருவமென்றுணர்ந்
தண்ணலுமுடல்புளகரும்பினானரோ.

$ இமையநல்வரையினிதீன்றகன்னிகை
யுமையவள்கணவனெவ்வுயிர்க்குநாயகன்
சமைவுறத்துதித்திடுமடியர்தம்முக
மமைவுறுதிருவுளத்தருளினோக்கியே.

$ வேண்டுவதென்னெனவிண்டுதாழ்ந்தெழீஇப்
பூண்டருள்கருணையம்புனிதவிங்கிவ
னாண்டருள்படைகளாலவுணர்க்காய்ந்தன
னீண்டுநல்குதிவிறலெய்தும்வண்ணமே.

$ தானவர்ப்பொருபடைகொண்டுதாரணி
மானவர்ப்பொருவதுவழக்கன்றாதலாற்
கூனல்விற்கணையொடுகுறைவுறாததோர்
தூநிறத்தடமருள்கென்றுசொற்றனன்.

$ இவ்வடையாளமுள்ள ௧௧-செய்யுளும் இதற்குமுன்பதித்த அச்சுப்பிரதிகளிலுள்ளவைகள்.

* கண்ணன்மேலணிமலரனைத்துங்காய்கனல்
வண்ணன்மேற்காண்டலுமனங்களிப்புரு
வெண்ணின்மேலிரண்டெனவிலதென்றவ்விற
லண்ணன்மேனியும்புளகரும்பினனரோ. (௨௧௧)

* பொங்கராவெயின்மணிப்பூணும்பேணுநீற்
றங்கராகமுமுவந்தணியுமேனியாய்
சங்கராமேருவெஞ்சாபம்வாங்கிய
செங்கராசிவசிவதேவதேவனே. (௨௧௨)

* விண்ணிடைத்திரிபுரம்வெந்துநீறெழப்
பண்ணுடைச்செந்தழல்பரப்புமூரலா
யெண்ணுடைக்காமனையெரித்தபேரழற்
கண்ணுடைக்கடவுளேகாலகாலனே. (௨௧௩)

* கையுறுசிலையுடன்கானவேடனென்
றையுறவருகுவந்தணுகிமெய்புடன்
மெய்யுறவமர்புரிவிநோதநாடொறு
மையுறுகண்டனேமறப்பதில்லையே. (௨௧௪)

* உமையவள்கணவனேயுகாந்தகாலனே
யிமையவில்வீரனேயென்றுகொண்டிவ
னமைவுறத்துதித்தலினவனுமற்றிவன்
சமைவுகண்டையனோடுவகைசாற்றினான். (௨௧௫)

* ஆற்றினைதுயர்மயலனைத்துமெய்யுறத்
தேற்றினைசிந்தையைத்தெளிந்தவாய்மையான்
மாற்றினைமும்முறைப்பிறப்பும்வந்துநின்
கூற்றினையடைதலாற்பிறவிகொள்ளுமே. (௨௧௬)

* வேண்டுவதென்கொன்மற்றென்னவீரனும்
†பூண்டதோர்பறையறைந்தன்றிப்போகலே
னூண்டருள்படைகளாலவுணர்க்காய்ந்தன
னீண்டருளுதிவிறலெய்தும்வண்ணமே. (௨௧௭)

* தானவர்ப்பொருபடைகொண்டுதாரணி
மானவர்ப்பொருவதுவழக்குமல்லவால்
கூனல்விற்கணைகளுங்குறைவுறுததோர்
தூநிழற்பொய்கையுங்கொடுத்திதோன்றலே. (௨௧௮)

வேறு.

* என்றலுமீசனகைத்துரைசெய்தனன்யானெனநீயெனவே
றன்றிவையாவுமளித்திடுதற்குனையல்லதுவல்லவர்யார்
நின்றதொர்தூணிடைவந்தனையானமுனின்றனகஞ்சனையுங்
கொன்றனைமன்னவையூடுரியப்பலகூறைகொடுத்தனையே. (௨௧௯)

† பூண்டதோர் பகையறுத்தன்றி என்றும் பாடம்.

* முன்னுருவாயினைநின் றிருநாபியின்முளரியின்வாழ்முனிவன்
றன்னுருவாகியிருந்துபடைத்தனைபலசகதண்டமுநீ
நின்னுருவாகியளித்திடுகின்றனைநித்தவிபூதியினு
லென்னுருவாகியழிக்கவுநின்றனையேதமின்மாதவனே. (௨௨௦)

ஆயிடைநின்றகிரீடியைமுக்கணனங்கொருபொய்கையிலே
போயிடைமூழ்கெனவப்புனலூடொர்புயங்கமெழுந்ததன்
வாயிடைவந்தனன்மானுருவாயொருமாமுனியம்முனியச்
சேயிடைநீரிலெடுத்தனன்மற்றொருசிலையுடன்வாளியுமே. (௨௨௧)

முப்புரநீறெழுநாளினியற்றியமுட்டியுநன்னிலையு
மப்புரசூதனனேவலினந்தணனமரர்பிரான்மதலைக்
கொப்புறவோடுபயிற்றியிதங்கொடுருத்திரமாமறையுஞ்
செப்பினனலவைபெற்றனனென்றுசெயத்திரதற்றெறுவான். (௨௨௨)

யாதொருபோதுநினைத்தனையவ்வழிபெய்துமுனக்கிவையென்
றோதியநேகவரங்கள்கொடுத்தபினுமையொருகூறுடையோன்
பூதலமாதிடர்தீரவருஞ்சமர்புரிதொழின்முற்றியபின்
†சீதரநின்பதமேவுகவென்றருள்செய்துவிடுத்தனனே. (௨௨௩)

எண்ணியகாரியமெய்தியிறைஞ்சியவிந்திரன்மாமகனுந்
திண்ணியநேமிவலம்புரிவாள்கதைசிலையுடைநாயகனும்
புண்ணியன்மால்வரைநின்றுரகாரிபுயங்களும்வன்கரமு
நண்ணியகாலையில்வெள்ளியெழுந்ததுஞாயிறெழுந்திசையே. (௨௨௪)

இங்கிவர்மூவருமேகினர்மீளுமுனெறிமுரசக்கொடியோ
னங்குரைபாடியதுரைசெயின்மண்மிசையார்வியவாதொழிவார்
பங்குனனோதியவஞ்சினமும்பசுபதியிடையேகியதுங்
கங்குலினேவினனுரைசெய்கவென்றுகடோற்கசமீளியையே. (௨௨௫)

மற்றவன்முந்துறுதந்தையைவந்துவணங்கிமுன்வஞ்சனையிற்
செற்றவர்தம்முடனுற்றதுசொல்வதுசேவகமோவறிவோ
கொற்றவர்மாமுடிகமழ்கழலாய்வலிகூர்திறலுஞ்செயலு
மற்றவர்போலவுரைப்பதென்னென்றுளழன்றுபுகன்றனனே. (௨௨௬)

திறனறியாமலுரைத்தனைமாருதிசிறுவனெனும்படிநீ
‡மறநெறியேன்றுவயிர்த்தவர்கொல்வதுவஞ்சனையோவிரகோ
வறநெறியேபொருதல்லதுவெல்லுதலாண்மைகொலோவழகோ
விறனெறியாவதுபொய்யிலதென்றனன்மெய்ம்மையுணர்ந்திடுவான். (௨௨௭)

நிருதனைகைத்துவணங்கிநிணங்கமழ்நீளிலைவேலினொடுங்
கருதலர்துற்றியபாசறையன்றொர்கணப்பொழுதிற்புகுதா
வொருதனிலக்கணமைந்தனிறந்தனனென்றழுதுள்ளழியும்
விருதுடைவித்தகன்வாயிலினின்றுவிளித்தனனோருரையே. (௨௨௮)

---

† சீதரநீவருகென்றுதழீஇயுரைசெய்தனன்மீளவுமேஎன்றும்பாடம்.

‡ மறநெறியன்றுவயிர்த்தவர்சொல்வது என்றும் பாடம்.

எதிரெதிர்கொற்றவன்வாயிலினின்றவர்யாரெனவெய்துதனு
மதிர்முரசக்கொடியோனரவக்கொடியரசனிடைப்பகர்வான்
முதிரவுரைத்ததொர்மொழியுளதம்மொழிமொழிதரவந்தனன்யா
னெதிரறுவெற்றியரிக்கொடியோன்மகனென்றனன்விக்கிரமனே. (௨௨௯)

அம்மொழிதீயுருமேறெனநீடவையரசர்செவிப்படவோர்
செம்மொழியற்றவன்மொழிவழிசென்றொருசிறிதுமதித்தருளா
னும்மொழிவிட்டொருமெய்ம்மொழிகேண்மெனநோதகுநெஞ்சினனும்
வெம்மொழிவித்தகவெம்மொழிநுந்தைதன்மெய்ம்மொழியென்றனனே. (௨௩௦)

தன்றிருமைந்தனைமௌலிதுணித்தசயத்திரதன்றனைவாள்
வென்றிகொள்*காவலர்காவன்மிகுப்பினும்வெயிலவன்வீழ்வதன்முன்
கொன்றிடுவேனதுதப்பினருங்கனலூடுகுதித்திடுவே
னென்றுமொழிந்தரன்வாழ்கயிலாயமுமெய்தினன்வில்விசயன். (௨௩௧)

வஞ்சனையாலமரிற்பகைதன்னைமலைப்பதுபாதகமென்
றஞ்சினனாதலினீயறியும்படியையன்விடுத்தனனா
லெஞ்சினனாளையுன்மைத்துனனென்றுகொளென்றனன்வன்றிறல்கூர்
நெஞ்சினில்வேறொருசஞ்சலமற்றநிசாசரன்மாமருகன். (௨௩௨)

வேறு.

மன்மைந்தர்பலரொடும்போய்மறித்தொருவர்மீளாமன்மலைந்துவீழ
வென்மைந்தனிறந்திடவும்யாதொன்றும்புகலாமலிருக்கின்றேன்யான்
றன்மைந்தனிறந்தனனாந்தான்றழலின்மூழ்குவனாஞ்சபதங்கூறி
வின்மைந்தின்மிகுந்தவருக்கழுதிரங்கியாற்றுவதுவீரந்தானோ. (௨௩௩)

பயத்திரவினடுங்கியரன்பருப்பதம்புக்கவன்கொடுத்தபடையும்வாங்கி
வயத்திரதமால்கடவவந்தெதிர்தோன்றுவனாகின்மகரமோதுங்
கயத்திரவிவிழுவதன்முன்கையறுதன்புதல்வனைப்போர்க்களத்தின்மாளச்
சயத்திரதன்றொடுங்கணையாற்றான்படுதலுறுதியெனச்சாற்றுவாயே. (௨௩௪)

என்னினும்பார்தனக்குரியன்சிலைத்தொழிலிற்சிலைக்குருவாயெவரும்போற்று
மன்னினுந்தான்மிகப்பெரியன்றண்டெடுத்தாலுந்தையினும்வலியன்சால
வுன்னினுந்தோளுரனுடையன்மதியாமலிப்படிநீயுரைக்கலாமோ
தன்னினும்போர்க்கெளியனோசயத்திரதன்றானென்றுசாற்றுவாயே. (௨௩௫)

ஆளையாணிலையறிவதல்லதுமற்றறிபவர்யாரணிந்தபோரி
னாளையார்வெல்வரெனத்தெரியுமோவெனநவின்றுநகைத்தான்மன்னோ
பாளைவாய்நெடுங்கமுகின்மிடறொடியக்குலைத்தெங்கின்பழங்கள்வீழ
வாளைபாய்குருநாடுமெந்நாடுமுழுதாளுமன்னர்கோமான். (௨௩௬)

தாரரசன்மகன்றுச்சாதனன்மகன்சல்லியன்மகன்வேற்சகுனியென்னும்
பேரரசன்மகன்முதலாவெத்தனைபேர்பட்டாலும்பெரியதன்றே
பாரரசாளுதற்கிருந்தபார்த்தன்மாமகனொருவன்பட்டானாகி
லாரரசுக்கினியுரியாரந்தோவென்றுரைத்தான்மற்றங்கர்கோமான். (௨௩௭)

---

* காவலர்வீரர்தடுப்பினும் என்றும் பாடம்.

அங்கிருந்துசயத்திரதனுவிகவர்ந்திடுவலெனவாண்மைகூறிப்
பங்கிருந்தவுமாபதிபாற்பணிந்துவரம்பெறச்சென்றான்பார்த்தனுகிற்
கொங்கிருந்ததாராய்நின்குடைநிழற்கீழிதுகாலங்கூட்டங்கூடி
யிங்கிருந்தவேழையரேமென்செயமற்றிருக்கின்றேமென்றுஞ்சொன்னான். ()

இவன்மொழிந்தவிகழுரைகேட்*டிடிம்பன்மருமகன்வெகுளூற்றென்சொன்னாலு
மவனிதலமுழுதுமினியரசாளநினைந்திருந்தீரறிவிலீர்காள்
சிவனெரிசெய்புரம்போலும்பாடிவீடழலூட்டிச்சேனையாவும்
பவனன்மகன்மகனென்னும்பரிசறியத்தொலைத்திடுபடுத்துவேனே. (௨௩௯)

தசைகுருதிநிணமொழுகத்தனித்தனியேயெதிர்த்தவரைத்தலைகள்சிந்த
விசையன்வரவேண்டுமோமற்றுள்ளார்திரண்டுவரவேண்டுமோதா
னிசைபுலருமுனமுனைந்துநீறாக்கிவிடுகுவனெந்நிருபன்சொன்ன
வசைவின்மொழிமறுத்துடற்றலாகாதென்றிருக்கின்றேனறிகிலீரே. (௨௪0)

இருவரெதிரெதிர்தம்மிலிகல்பொருதலுலகியற்கையாருங்கூடிப்
பருவமுறாத்தனிக்குதலைப்பாலகனுக்காற்றாமற்பறந்துபோனீ
ரொருவனெடுந்தேரழிக்கவொருவன்மலர்க்கைதுணிக்கவொருவன்பின்னைப்
பொருவனெனவறைகூவிப்பொன்றுவித்தானிதுகொண்டோபுகல்கின்றீரே. ()

வரைக்குவமைபெறுந்தடந்தோள்வீமன்மகனிப்படியேமதியானுகி
யுரைக்குமொழிகேட்டிருந்தவுரகமணிக்கொடிவேந்தனுருத்துநோக்கி
யிருக்குமெழிலவைக்கேற்பவியம்பாமற்றன்மதத்தாலியம்புகின்ற
வரக்கிமகனுடனென்றுங்கழறாதீரென்றுரைத்தானரசர்யார்க்கும். (௨௪௨)

அந்தவுரைமீண்டிவன்கேட்டாங்கவனைநகைத்துரைப்பானரக்கரேனுஞ்
சிந்தனையில்விரகெண்ணார்செருமுகத்தில்வஞ்சகமுஞ்செய்யாரையா
வெந்திறல்கூர்துணைவருக்குவிடமருத்தார்நிரைக்கழுவில்வீழச்செய்யா
ருந்துபுனலிடைப்புதையாரோரூரிலிருப்பகற்றாருரையுந்தப்பார். (௨௪௩)

செழுந்தழல்வாழ்மனைக்கொளுவார்செய்ந்நன்றிகொன்றறியார்தீங்குபூணா
ரழுந்துமனத்தழுக்குறாரச்சமுமற்றருளின்றிப்பொய்ச்சூதாடார்
கொழுந்தியரைத்துகிலுரியார்கொடுங்கானமடைவித்துக்கொல்லவெண்ணா
ரெழுந்தமரின்முதுகிடாரிவையெல்லாமடிகளுக்கேயேற்பவென்றான். (௨௪௪)

தேனிடறிப்பாண்முரலுஞ்செழுந்தாமவிசயனுடன்செருவில்வந்தான்
மானிடரிற்பொரவல்லார்சிலருண்டோதெரியாதுவானுளோரிற்
கோனிடையுற்றருகிருந்ததிறல்வேந்தர்காத்திடினுங்குறித்தவீரன்
றானிடருற்றுயிரழிகைதப்பாதென்பதுமுணர்த்துத்தனயன்மீண்டான். (௨௪௫)

வேறு.

அரக்கனப்பேரவையகன்றபின்பகை
துரக்கும்வெங்குனிசிலைத்துரோணன்றன்னொடும்
பரக்கும்வெண்டிரைக்கடற்பாரெலாமுடன்
புரக்கநின்றவன்சிலபுகழ்ந்துகூறுவான். (௨௪௬)

---

* இடிம்பிமகன் மிகவெகுளூற்று என்றும் பாடம்.

கொடிநெடுஞ்சேனையைக்கூறுசெய்துநீ
கடிகைமுப்பதுமுடன்காக்கவல்லையேல்
வடிவுடைச்சிந்துமாமகனுமுய்குவன்
வெடியனற்குளிக்குமவ்விசயன்றானுமே. (௨௪௭)

நாளையோர்பகலுமேநமக்குவெய்யபோர்
காளையரனைவருங்காமின்காமினென்
றாளையுமடுகளிற்றாழிமன்னவன்
வேளைபுக்கவரினும்வீழ்ந்துவேண்டினான். (௨௪௮)

மணிமதிலரணெனமன்னுசேனையை
யணிபடநிறுத்தியாமளவுங்காப்பன்யான்
பணிவுறுபுண்ணியபாவமுற்றுவ
துணிவுறத்தெரியுமோதும்பைமாலையாய். (௨௪௯)

முப்பதுகடிகையின்மொழிந்தவஞ்சினந்
தப்பதுபடாதெனிற்றனஞ்சயன்சிலைக்
கொப்பதொன்றில்லைமற்றுரைத்தவாசெய
லப்பதுமாசனன்றனக்குமாகுமோ. (௨௫௦)

மல்வினான்மல்லரைமலைந்தமாலவற்
புல்லினனெனினுஞ்சிந்துபூபனை
வில்லினால்வெல்லரிதென்றுமீளவுஞ்
சொல்லினான்மறைமொழித்*துரோணன்றானுமே. (௨௫௧)

கோப்பலருடன்பலகூறன்மற்றவர்
நாப்பலநவிலினுநாளைவான்பகற்
றாப்புலிநிகர்சயத்திரதன்றன்னுயிர்
காப்பல்யானென்றனன்கதிரின்மைந்தனே. (௨௫௨)

அன்மருளிரவிவீழளவுநாளையித்
தென்மருடெரியல்வேற்சிந்துவேந்தனைக்
கன்மருடிகிரியிற்காப்பன்யானென்றான்
றன்மருடணனெனுந்துணைவன்றானுமே. (௨௫௩)

விரற்புனைகோதைவல்வில்லின்வல்லவர்
குரற்படச்சேவகங்கூறுகிற்பரோ
வரற்புரைநீட்டியோடையானையாய்
சரற்புயலானதுதனிதஞ்செய்யுமோ. (௨௫௪)

பொருதொழில்விதம்படப்புரிந்தகாலையில்
விருதர்களிருவரும்வேறல்கூடுமோ
வொருதலைநின்றிவனுடற்றும்வின்மையுங்
கருதலன்வின்மையுங்காண்டிகாவலா. (௨௫௫)

---

* துரோணசாதனே என்றும்பாடம்.

4114
மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

என்றுசேனாபதிமகனியப்பின
னின்றகாவலர்களுநிசைபுலர்ந்துழிச்
சென்றுபோர்புரிந்துநின்றெவ்வர்யாரையும்
வென்றுமீளுதுமெனவிடைகொண்டாரரோ. (உ௫௬)

பூதனைமுலைநுகர்பூந்துழாய்முடி
நாதனும்விசயனுநலத்தொடேவிய
தூதனுமருக்கனுந்துயிலுணர்த்தினர்
சேதனர்புகழ்மொழித்திகிரிவேந்தையே. (உ௫௭)

கயிலைபுக்கதுமரன்கணையுஞ்சாபமும்
வியன்மலர்ப்பொய்கையும்விசயற்கீந்ததும்
புயலெனக்கரியமெய்ப்பூந்துழாயவன்
றுயிலுணர்குரிசிலுக்கடைவிற்சொன்னபின். (உ௫௮)

பைதிகழ்மணிப்பணிப்பதாகையாணிடை
யெய்தியங்குரைத்ததுமிருந்தமன்னவர்
வெய்துறப்புகன்றதுமீண்டுவந்ததுங்
கொய்திறற்கடோற்சன்றானுங்கூறினான். (உ௫௯)

ஆகச்செய்யுள்-௩,௪௫௮.

பதின்மூன்றும்போர்ச்சருக்க முற்றிற்று.

பதினான்காம்போர்ச்சருக்கம்.

அரியதண்கலைவாண்மதியமுங்கொதிகொளாலமுந்தனதிடத்தடக்கி
யுரியவொண்கங்காநதிக்கொருபதியாயுரைபெறுமுயர்மகோததியிற்
பரியதிண்சிலையோடப்பெலாமுகந்துபற்குனப்பொருப்பிடைப்பொழியுங்
கரியபைம்புயலைக்கைதொழுமவரேகருவிலேதிருவுடையவரே. (௧)

காலையாதபனைத்தருமன்மாமதலைகைதொழுகடன்முடித்தருளிச்
சாலையார்தழல்செய்வேள்விபந்தணர்க்குத்தானமுந்தகுவனவழங்கி
மாலைபாமளவிற்றனஞ்சயன்மொழிந்தவஞ்சினம்வழுவறமுடிப்பான்
வேலையாரவப்பலபணைமுழக்கவெம்முரட்சேனையோடெழுந்தான். (௨)

அடைந்தவரிடுக்கணகற்றுதற்கெண்ணியாடகப்பொருப்பினாற்கடலைக்
கடைந்தமுதளித்தகருணையங்கடலேகடும்பரிச்சந்தனங்கடவ
மிடைந்தொளியுமிழும்வேற்படைத்தடக்கைவீமனுமிளைஞரும்பலருங்
குடைந்திருபுறனுங்கைவரமகவான்குமரனுமமர்க்களங்குறுக. (௩)

சோனையம்புயலிற்கணைதொடும்பதாதிதுரகதந்துரகதத்தடந்தேர்
யானையென்றுரைக்குநால்வகையுறுப்புமிராசமண்டலமுகமாகத்
தானையங்கடலைமிடலுறவகுத்துத்தான்முதற்போரணியாகச்
சேனையின்பதியாமைத்துனனின்றான்றேவரும்யாவரும்வியப்ப. (௪)

பாப்புவெம்பதாகைப்பார்த்திவன்பணியாற்பத்திரண்டியோசனைப்பரப்பிற்
றீப்புறஞ்சூழநடுவணிற்பதுபோற்செயத்திரதனையிடைநிறுத்திக்
கோப்புறப்பரிதேர்குஞ்சரம்பதாதிகூறுநூன்முறையணிநிறுத்திக்
காப்புறத்திசைகளெட்டினுநெருங்கக்காவலர்யாரையுநிறுத்தி. (ரு)

தூசியின்முதனுள்வஞ்சினமொழிந்ததுன்மருடணன்றனைநிறுத்தி
யூசியுநுழையாவண்ணம்விற்பதாதிவயவரையுரனுறநிறுத்தி
வாசியிலிபத்திற்றேரிலெண்பட்டமன்னரையிருகையுநிறுத்திப்
பேசியகன்னன்சகுனிசல்லியரைப்பேரணியாகவேநிறுத்தி. (சா)

அணிகளைந்தைந்தாலைவகைவியூகமாகியசேனையின்சிரத்து
மணிமுடிபுனைந்துவைத்தெனவலங்கல்வலம்புரிமார்பனைநிறுத்திப்
பணிவுறுமவுணர்பதாகினிவகுத்தபார்க்கவனிவனெனப்பயில்போர்த்
துணிவுடன்பஃறேர்சூழ்வரச்சகடதுண்டத்துநின்றனன்றுரோணன். (எ)

மந்தணமிருந்துகங்குலின்முதனுண்மன்னனேடியம்பியவகையே
யந்தணனணிந்தவிரகினைவியானத்தமரருமதிசயித்துரைத்தார்
சந்தணிகடகவாகுநீள்சிகரச்சயத்திரதனையொருபகலிற்
கொந்தழலுமோடத்தனஞ்சயன்பொருதுகோறலோவரிதெனக்குறித்தே. (அ)

செய்த்தலைக்கயனும்வாளையும்பிணங்குஞ்செழும்புனற்சிந்துநாட்டரசைக்
கைத்தலத்தடங்கும்பொருளெனக்காத்துக்காவலர்நின்றபேரணிகண்
டுத்தமோசாவுமுதாமனுமுதலோரோரிருபுறத்தினுஞ்சூழ
வித்தகவலவன்முன்செலத்தடந்தேர்விசயனவ்விணைஞர்மேனடந்தான். (கூ)

போர்முகத்தடங்காமடங்கலேறனையான்விதம்படப்பொழிசிலீமுகங்கள்
கார்முகத்தெழுந்ததாரைபோல்வழங்கக்கார்முகத்தொலியினாற்கலங்கித்
தார்முகத்தரசன்றம்பியோடணிந்தசாதுரங்கமுமுடனுடைந்து
நீர்முகத்துடைந்தகுரம்பெனத்துரோணனின்றுழிச்சென்றடைந்தனவே. (கO)

புரவிமுப்பதினாயிரங்கொடுமுனைந்துபொருதிறற்கிருதவன்மாவுங்
கரவிறற்கரிநூறாயிரங்கொண்டுகாதுதுச்சாதனன்றானு
மிரவியைக்கண்டமின்மினிக்குலம்போலிடமிழந்திடவுடன்றெங்குஞ்
சரவிதப்படையால்விண்டலந்தூர்த்துத்தானைகாவலன்முனைச்சார்ந்தான். (கக)

வேறு.

சென்றவிற்றனஞ்சயற்குமுனைகுலைந்தசேனைவாய்
நின்றவத்துரோணனுக்குநீடுபோர்விளைந்ததா
லொன்றொடொன்றுதுரகதங்களுருமின்மிஞ்சியதிர்வுறக்
குன்றுகுன்றொடுற்றெனக்கொடிகொடேர்குலுங்கவே. (கஉ)

முட்டியானுநிலையினாலுமொய்ம்பினாலுமூரணுறத்
தொட்டவில்லுதிமிர்வறத்தொடுத்தவின்மையானுமுன்
கிட்டியாசிரியனுமக்கிரீடியும்பொரப்பொரப்
பட்டவில்லையிருவர்மெலும்விட்டவிட்டபகழியே. (கங)

தேரிரண்டுமிடம்வலந்திரிந்துசூழவரமுனைந்
தோரிரண்டுதனுவும்வாளியோரோர்கோடியுதையவே
காரிரண்டெதிர்ந்துதம்மின்மலைவுறுங்கணக்கெனப்
போரிரண்டுவீரருக்குமொத்துநின்றபொழுதிலே. (௧௪)

இகல்செய்வெஞ்சிலைக்கைவீரவிந்நிலந்தனக்குநின்
பகைவனின்றவந்நிலம்பதிற்றிரண்டியோசனை
புகலுகின்றபொழுதுசென்றதென்றவட்பொருமன்பா
லுகளுகின்றபரிகொடேரையுள்ளுறச்செலுத்தினான். (௧௫)

எதிர்த்ததேர்விழித்திமைக்குமளவின்மாயமிதுவெனக்
கதித்துரங்கவிசையினோடுகண்கரந்துகழிதலு
மதிர்த்தடர்ந்துபின்றொடர்ந்தடுத்தபோதருச்சுனன்
கொதித்துவந்தகுருவொடம்மதிருகிநின்றுகூறுவான். (௧௬)

ஐயநின்னொடமரிழைத்தலமருக்குமரிதுநின்
செய்யபங்கயப்பதங்கள்சென்னிவைத்தசிறுவன்யான்
வெய்யவென்சொல்வழுவுறாமல்வேண்டுமென்னமுறுவலித்
தெய்யவந்தமுனிவுமாறியேகுகென்றியம்பினான். (௧௭)

ஈசனால்வரங்கள்பெற்றவிந்திரன்றன்மதலைகாம்
போசனாதியெண்ணின்மன்னர்பொருதழிந்துவெருவியுட்
கூசநாலுபாலுநின்றநின்றசேனைகொன்றுபோய்ப்
பாசநாமவணியினின்றவீரரோடுபற்றினான். (௧௮)

முன்னர்முன்னர்வந்துவந்துமுனைகடோறுமுந்துறு
மன்னர்தந்தம்வில்லும்வேலும்வாளும்வென்றிவாளியிற்
சின்னபின்னமாகவெய்துசெல்லுமத்தனஞ்சயன்
கன்னனின்றவுறுதிகண்டுகண்ணனோடுமுனைசெய்தான். (௧௯)

விலங்கிநம்மையமர்விளைக்கவிட்டதன்விற்சுதக்கண
னலங்கல்வேலவந்திமன்னனவன்மகன்றனாதியா
வலங்கொள்வாகைவீரர்சேனைவளையநின்றகன்னனைக்
கலங்குமாறுபொருதுபோகவேண்டுமென்றுகருதியே. (௨௦)

ஒக்குமென்றுசெங்கண்மாலுமுளவுகோல்கொடிவுளியைப்
பக்கநின்றபானுமைந்தன்முனையுறப்பயிற்றலு
மிக்கவெம்பதாதியோடுசூழநின்றவிருதருந்
தொக்குவந்துவிசயன்மீதுசுடுசரந்தொடுக்கவே. (௨௧)

சரந்தொடுத்தவயவரைச்சரத்தினிற்றனித்தனி
யுரங்குளிக்கவாகுவீழவுதரமூழ்கவொளிமுடிச்
சிரங்களற்றுமறியவென்புசிந்தவாய்கடுளைபடக்
கரந்துடிக்கவிருபதங்கடறியவேகலக்கினான். (௨௨)

கலக்கமுற்றுவில்லிழந்துகவனமாவிழந்துமே
விலக்கமற்றகளிறிழந்துகொடிகொடேரிழந்துபோ
யுலக்கவிட்டளக்கர்வாயுலம்பவோடுகலமெனத்
துலக்கமிக்குவருதல்கண்டுசூரருநின்றுதுதிசெய்தார் (௨௩)

துதியினாலுயர்ந்தவண்மையுடையபானுசூனுவுங்
கதியினாலுயர்ந்தமாவொடொத்ததேர்கடாவிமுன்
மதியினாலுயர்ந்தகொற்றவலவனுந்துதேருடன்
விதியினாலுயர்ந்தசாபவெஞ்சமந்தொடங்கினான். (௨௪)

தொடங்குபோரில்வலியினாலுமதனினுந்துலங்குமெய்
விடங்கினாலும்வின்மையாலுமுவமைதம்மில்வேறிலார்
விடங்கொள்வாளிமின்பரப்பிவெய்யநாணிடிக்கவே
மடங்கல்போலிரண்டுவில்லுமண்டலம்படுத்தினார். (௨௫)

மண்டலம்படுத்தவில்லின்வலிகொள்கூரவாளியால்
விண்டலம்புதைந்துதங்கண்மெய்படாமல்விலகினார்
குண்டலங்கள்வெயிலுமூரல்குளிர்நிலாவும்வீசவே
*மண்டலம்புகாமனேர்வயங்குவாண்முகத்தினார். (௨௬)

முகத்தினின்றகன்னனோடுமுடிமகீபரோடுநின்
றிகற்செய்கின்றகடிகையோரிரண்டுசென்றதென்றுள
மிகக்கனன்றுதேரும்வில்லுமெய்யணிந்தகவசமுந்
தகர்த்துமார்பின்மூழ்கவாளியேவினன்றனஞ்சயன், (௨௭)

தனஞ்சயன்கையம்பினொந்துதபனன்மைந்தன்போகியா
மனந்தளர்ந்திளைத்தபின்னர்வருணராசன்மாமகன்
கனன்றெழுந்துசேனையோடுவந்துகார்முகங்குனித்
தினங்கொள்வாளியேவினனெதிர்ந்தபோரிலீறிலான். (௨௮)

ஈறிலாதவீரன்வந்தெதிர்த்தகாலைவீரரின்
மாறிலாதவிசயன்விட்டமறைகொள்வாளியாவையுஞ்
சேறிலாதசெறுவில்வித்தசெந்நெலென்னவவனுடற்
பேறிலாமன்முனையுறப்பிளந்துகீழ்விழுந்தவே. (௨௯)

விழுந்தவாளிகண்டுபின்னும்விசயன்மூரிவிற்குனித்
தழுந்தவாளியொன்றுபத்துநூறுவன்பொடடைசினா
னெழுந்தவாளிவாளியால்விலக்கவேவியாசுகங்
கழுந்ததாகவவனெடுத்தகார்முகங்கலக்கினான். (௩0)

முகங்கலங்கமெய்கலங்கமுடிகலங்கமூரிமார்
பகங்கலங்கமற்றோர்தண்டருச்சுனன்றன்மேல்விட
நகங்கலங்கவுருமின்வந்ததனையும்பர்நாயகன்
சகங்கலங்கவேற்றனன்றனாதுமெய்யினாகவே. (௩௧)

---

* வண்டலம்புகமலநேர் என்றும் பாடம்.

ஆகவத்தில்விசயனுய்யவைபன்மெய்பிலறையுமுன்
மோகரித்தெறிந்ததெவ்வன்முடிதுளங்கிமண்மிசைச்
சோகமிக்குவிழுதல்கண்டுதூரகாரியாதலான்
மாகமுற்றவமரர்செம்பொன்மழைபொழிந்துவாழ்த்தினர். (நுஉ)

வாழிவாழிகுந்திமைந்தன்வலவன்வாழிவாழியே
வாழிவாழியவனியுய்யவந்தநாதன்வாழியே
வாழிவாழிகாளமேகவண்ணன்வாழிவாழியே
வாழிவாழிவாசுதேவன்வாழிவாழிவாழியே. (நுநு)

வேறு.

என்றியாவருந்துதிசெயவிரகிஞலெறிந்தகாவலன்றனைக்
கொன்றபோதுதன்னுயிர்பெறுதனஞ்சயன்கொண்டல்வண்ணனைப்போற்றி
நின்றன்மேனியிலெறிகொடுங்கதைபடவெறிந்தவனெடுவானிற்
சென்றமாயமொன்றிருந்தவாறடியனேன்றெளியுமாறுரையென்ருன். (நுச)

பன்னவாதையென்றொருத்திதாய்தந்தையும்பரவைமன்னவனந்த
மன்னவன்றரப்பெற்றனன்பலபடைமறையொடும்வலிகூரத்
துன்னுநாமமுஞ்சுதாயுமற்றொருவராற்றூற்றுயிரழிவில்லான்
முன்னிராயுதன்மிசையிவன்படையுறின்முடிவுறும்வரம்பெற்ருன். (நுரு)

எறிந்தவெங்கதைகொன்றிடும்படைக்கலனெடுத்தவருடற்பட்டா
லறிந்துநாணிடையேற்றலினவனுயிரழிந்ததென்றருள்செய்தான்
பிறிந்தயோனிகளனைத்துமாய்முதலுமாய்ப்பெருமிதமறந்தீண்டுச்
செறிந்தவர்க்கொருசகாயனுயருந்துயர்தீர்த்திடுந்தேர்ப்பாகன். (நுசா)

கதாயுதந்தனக்குரியநாயகன்மிசைகதைபடச்சிதைவுற்றுச்
சுதாயுவென்பவன்பலபெரும்படையுடன்றுறக்கமெய்தியபின்னர்ச்
சதாயுவென்றவனிளவன்மற்றவனினுஞ்சமர்புரிந்தவன்ருனுங்
கெதாயுவாயினன்கிரீடியோடெதிர்த்தவர்யாவரேகெடாதுய்வார். (நுஎ)

ஆயிரம்பதின்மடங்குதேரிபமதன்மும்மடங்கடல்வாசி
யாயிரஞ்சதமதனின்மும்மடங்குகாலாளுடனணியாக்கி
யாயிரம்புயத்தருச்சுனனிகரெனவாழியாற்றுணிப்புண்ட
வாயிரம்புயத்தனெனவெதிர்த்தனனுடலாயிரவாகு. (நுஅ)

உரங்கொளாயிரம்பொலங்கிரியனையனவோரொருகுனிவிற்செங்
கரங்களாயிரங்கொடுவளைத்தாயிரங்கண்ணன்மைந்தனைநோக்கி
வரங்களாயிரமறையொடும்பெற்றவன்மதிவகிர்முகமான
சரங்களாயிரமாயிரமொருதொடைதனிலெழும்படியெய்தான். (நுகூ)

எடுத்தபோதிலொன்றருங்குதைநாணிடையிசைந்தபோதொருபத்துத்
தொடுத்தபோதினூறுகைத்தபோதாயிரமெனவருஞ்சுடர்வாளி
யடுத்தபோர்முடிமன்னவன்விடுவிடுமநேகமாயிரமம்புந்
தடுத்தபோதொருதனுவுமைஞ்ஞூறடற்றனுவுடனெதிர்நின்ற. (சO)

அலிமுகந்தொழுமிளவல்வாணனைப்புயமழித்தமாமறையொன்று
வலிமுகங்கொடியுயர்த்தவன்செவியினிலுரைக்கமற்றதுபெற்றங்
குலிமுகஞ்செறிவரிசிலைகால்பொரக்குனித்துவன்பொடுதொட்ட
சிலிமுகங்களிற்றுணித்தனனுயிரஞ்சிகரவாகுவுஞ்சேர. (சக)

மீதலந்தனக்கிறைவன்வச்சிரத்தினால்வெற்பினஞ்சிறகற்றுப்
பூதலந்தனில்விழுந்தபோல்விழுந்தனபுயங்களாயிரமும்போய்க்
காதலங்கனைதடம்படிந்தேதருதல்கண்டுகாமுகனாகிப்
பாதலம்புகுந்தின்பமெய்தியவிறற்பார்த்தன்வெங்கணையாலே. (சஉ)

அன்றருச்சுனனாயிரம்புயங்களுமரிந்தனன்மழுவீர
னின்றருச்சுனனிவன்புயமரிந்தனனென்றிமையவரேத்தத்
துன்றருச்சுனநான்மறையுராலுடன்றொடரமுன்றவழ்ந்தோடிச்
சென்றருச்சுனமிரண்டுதைத்தருளினோன்செலுத்துதேரவன்சென்றான். (சங)

கடிகைமுப்பதுஞ்சிந்துவுக்கரசனைக்காக்குமாறறைகூவி
யிடியிடித்தெனப்பல்லியமதிர்தரவெழுகடற்படையோடும்
படிநடுக்குறப்பணிக்குலநெளித்திடப்பட்டவர்த்தனருள்ளார்
முடிதரித்தவரனைவருந்திரண்டொருமுனைபடவெதிர்சென்றார். (சச)

பரிதியால்வளைப்புண்டசெம்பரிதியிற்பற்குனன்றனுவாங்கித்
தெரிசரங்களோரொருவருக்காயிரஞ்சிரமுதலடியிறு
நெரிதரும்படிதொடுத்துவெங்கொடிபரிநேமியந்தேர்கோடி
கரிகளுந்துணிபடப்படமலைந்தனன்கடிகையொன்றினின்மாதோ. (சரு)

போரில்வெவ்விடாய்தணிவுறக்களத்தினிற்புறங்கொடுத்தவர்சோரி
நீரின்மூழ்கியுங்கழுகிடுகாவணநீழலாறியுஞ்சென்றார்
தேரில்வாசியிற்களிற்றில்வந்தவர்களிற்சேவடிசிவப்பேற
யாரியார்குதித்தோடுதலொழிந்தவரெறிபடைவீழ்த்திட்டே. (ச௬)

நின்றுபட்டனர்தனித்தனியமர்புரிநிருபர்முந்துநவோடிச்
சென்றுபட்டனர்சேனைமண்டலிகர்வெஞ்சினம்பொழிசிறுசெங்கட்
குன்றுபட்டனபட்டனநவகதிக்குரகதக்குலம்யாவு
மன்றுபட்டவர்க்குறைபிடப்போதுமோவநேகநாளினும்பட்டார். (சஎ)

அநேகமாயிரம்பேர்படக்கவந்தமொன்றுடிமக்கவந்தங்க
ளநேகமாயிரமாடவெஞ்சிலைமணிபசைந்தொருகுரலார்க்கு
மநேகநாழிகையருச்சுனன்சிலைமணியார்த்ததக்களம்பட்ட
வநேகமாயிரப்விருதரையளவறிந்தார்கொலோவுரைக்கிற்பார். (சஅ)

வேறு.

வெவ்வாசிநெடுந்தேர்மிசைநிமிராவரிவிற்கொண்
டிவ்வாறமர்புரிவேலையிலெழுசெங்குருதியினா
லவ்வாடரவுடையானழிபாயோதனமந்திச்
செவ்வானகமெனவந்துசிவப்பேறியதெங்கும். (சகூ)

முருகாரிருசிறைவண்டினமுளரிப்புதுமலர்விட்
டருகார்பொழினிழலூடணியலர்நாண்மலருறவே
யிருகாலுமுழுக்கால்விடுகைம்மாரியிருக்கா
லொருகாலருமறையோர்விடுபதநண்ணினனுதயன். (௫0)

விரவார்முனைபடுதேர்நுகவெவ்வாசிகள்புனலுண்
டிரவாவிடிலோடாதினியென்றையனுரைப்ப
வரவாபரணன்றந்தருளருமாமறைவருணச்
சரவாய்வரவெய்தானவணெழலுற்றதொர்தடமே. (௫௧)

ஆழம்புணரியினும்பெரிதுதினும்பெரிதகலஞ்
சூழெங்கணும்வண்டாமரைதுறையெங்கணுநீலங்
கீழெங்கணுநெடுவாளைவரால்பைங்கயல்கெண்டை
வீழுங்கரையருகெங்கணும்வளர்கின்னரமிதுனம். (௫௨)

ஒருபால்வளர்போதாநிரைகருநாரைகளொருபா
லொருபாலுளமகிழ்நேமிகளன்றிற்குலமொருபா
லொருபான்மடவன்னம்புனலரமங்கையரொருபா
லொருபாலிருபாலுந்தவழொளிநுந்துறைபுளினம். (௫௩)

தலமாமகளூந்தித்தடநிகரானதடங்கண்
டுலமாறுகொளிருதோள்வலியுடைவள்ளலுரைப்பக்
குலமாமணியனையான்விரைதேர்நின்றெதிர்குதியா
வலமானதுரங்கங்களைவள்வார்விசிநெகிழா. (௫௪)

குவளைப்பரிமளமேவருகுளிர்வாரிபருக்கிப்
பவளத்துவர்வாயானிருபாதங்கைவிளக்கித்
தவளக்கிரியொருநாலெனமேன்மே*லொளிர்தருபோ
ரிவுளிக்குமிளைப்பாறவிளைப்பாறினனிப்பால். (௫௫)

அப்பாலிவனுடனேபொருதனிலத்தெதிர்சருகோ
டொப்பாயுளம்வெருவெய்தியுடைந்தோடியவீரர்
தப்பாரொருவருமின்றடுசமரந்தனில்விசயன்
கைப்பாய்கணைபொரநேர்ந்தவர்கழன்மன்னவவென்றார். (௫௬)

துரியோதனனவர்சொல்லியசொற்றன்செவிசுடவே
யரியோடெதிர்பொரவஞ்சியவடல்வாரணமனையா
னெரியோடியபுரியென்னவிளைத்தாரணவேள்விப்
பெரியோனடியெய்திச்சிறுமையினுலிவைபேசும். (௫௭)

அதிரேகவிறற்பற்குனனம்போடெதிரம்பிட்
டெதிரேறியவயமன்னரிலெம்மன்னர்பிழைத்தார்
கதிரேகிடுமுன்றுச்சளைகணவன்றலைகடிதிற்
பிதிரேறுவதல்லாததுபிழைப்பிப்பவரிலரால். (௫௮)

* ஒளிதருபே, ரிவுளிக்கும் என்றும் பாடம்.

காணாதவிடத்தாண்மையுறக்கூறுவர்கண்டா
லேணாடமர்முனைதன்னிலிமைப்போதெதிர்நில்லார்
நாணாதுமுன்வென்னிட்டிடுநெஞ்சேனையடங்கச்
சேணாடுறுமின்றேயொருசெயல்கண்டிலமையா. (ருகூ)

குனிநாணுடைவரிவிற்படைவிசயற்கெதிர்குறுகித்
தனிநானவனுயிர்கொள்ளுதறவிர்கிற்குதலல்லான்
முனிநாயகவேறோர்விரகில்லைத்திருமுன்னே
யினிநாடியடும்போர்விரைவொடுகாணுதியென்றான். (சூ0)

முனியுந்தரணிபனோடுசின்மொழிநன்கினுரைக்குந்
துனிகொண்டுளமழியாதொழிதுணிவுற்றனைமுதலே
யினியஞ்சியிளைத்தெண்ணிடுமெண்ணாந்தகவன்றா
லனிகங்களழிந்தாலுநின்னாண்மைக்கழிவுண்டோ. (சூக)

உரனால்வருதேரொன்றினிலுற்றோரிருவரையு
நரநாரணரிவரென்பர்கண்*ஞானத்தினுயர்ந்தோ
ரரனார்திருவருளான்முனைபடல்வாளிகள்பலவும்
வரனாலுயர்மறையும்பிறர்மற்றார்நனிபெற்றார். (சூஉ)

தவரோடவனின்றால்விதிதானுந்தரமல்ல
னெவரோமலையோடும்பொருதிருதோள்வலிபெற்றா
னுவரோதநிறத்தோ†னவனுயர்தேர்நனியூர்வா
னவரோடினியமர்வெல்லுதலாராயினுமரிதால். (சூங)

அதிகம்பகைதமரோடுறலாகாதெனவரசர்க்
கெதிரன்றவையிடையேவசையேதேதுபுகன்றாய்
விதுரான்றனதுளநொந்தடல்வில்லுந்துணிசெய்தான்
மதியின்றிறனறிவோர்மொழிவழிவந்திலைமன்னா. (சூச)

மன்னாகவமதியாவிறல்வயவன்றனைவிசயன்
றன்னாலொருபகலேயுயிர்தபுவித்திடலாமோ
மின்னார்வடிவேலாயிவைவிதியின்செயலன்றோ
வென்னாவொருகவசந்தனையிவன்மெய்யினிலிட்டான். (சூரு)

வேறு.

பங்கயாசனன்வாசவற்களித்ததுவாசன்பயில்போரி
லங்கராவினுக்குதவியதங்கராவெனக்கருளியதிந்தத்
தொங்கன்மாமணிக்கவசமெவ்வீரருந்தொழத்தகுகழற்காலாய்
புங்கவாளியிற்படைகளிலொன்றினும்பொன்றிடாதிதுவென்றான். (சூசூ)

---

* ஞாலத்திலுயர்ந்தோர் என்றும் பாடம்.

† அவன்விரைதேர்தனியூர்வான் என்றும் பாடம்.

இட்டபொற்பெருங்கவசமோடெழுந்தனனிராசராசனுமுள்ள
பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர்களும்பலபடைஞருங்கூடி
யெட்டிபத்தின்வெஞ்செவிகளுஞ்செவிடுறப்பல்லியமெழுந்தார்ப்ப
முட்டவிட்டனர்தனஞ்சயனின்றமாமுனையில்வேன்முனையொப்பார். (௬௭)

சென்றசென்றவெஞ்சேனைகளினைப்பறத்தெய்விகத்தினில்வந்த
மன்றலம்பெரும்பொய்கைநீர்பருகியப்பொய்கையின்வளநோக்கி
யென்றுமென்றுநாநுகர்புனலன்றுநல்லின்னமுதிதுவென்பார்
தென்றலந்தடஞ்சோலையிற்கரைதொறுஞ்சேர்ந்துதம்விடாய்தீர்வார். (௬௮)

மத்தவாரணங்கொண்டுசெந்தாமரைவனங்கலக்குறுவிப்பார்
தத்துபாய்பரிநறும்புனலருத்துவார்தாமுநீர்படிகிற்பார்
கைத்தலங்களிலளியினமெழுப்பிமென்காவிநாண்மலர்கொய்வா
ரித்தலந்தனிலிம்மலர்ப்பரிமளமில்லையென்றணிகிற்பார். (௬௯)

இன்னவாறுதம்மசைவொழிந்தியாவருமிபரததுரகத்தோ
டன்னவாவியைவளைத்தனர்கடல்வளையாழிமால்வரையென்னத்
துன்னுபாமணித்தேரினின்றிழிந்துதன்சுவேதமாநீரூட்டு
மன்னுவார்கழன்மகபதிமதலையவ்வருதினிக்கடல்கண்டான். (௭௰)

கண்டபோதுபின்கண்டிலன்கண்டவக்கடவுள்வாவியைநன்னீ
ருண்டவாசியைத்தேருடன்பிணித்துவில்லோரிமைப்பினில்வாங்கி
வண்டுழாய்மதுமாலையாய்வளைந்துமேல்வருவருதினிதன்னை
யண்டரூர்புகவிடுத்தபின்றேரின்மேலாகுமாறருளென்றான். (௭௧)

கன்றுசிந்தையன்கோபவெங்கனல்பொழிகண்ணினன்காலாளாய்
நின்றுதேரினுங்களிற்றினும்பரியினுநிரைநிரைதரங்கப்போற்
சென்றுசென்றடுவீரரைத்தனித்தனிசபத்தினாற்சிரஞ்சிந்திக்
கொன்றுகொன்றுசூழ்வரக்குவித்தனன்மணிக்குன்றுதானெனநின்றான். (௭௨)

தலைவனாமுனிகிருபனுங்கிருதனுந்துரகதத்தாமாவு
மலைவுறுமனத்தரசருஞ்சேனையுமுனைந்தணிபணியாகச்
சிலைவலானெதிர்மிசைபடத்தேர்மிசைவிசையுறச்சிலைவாங்கி
வலையவாகுவின்வலியெலாங்காட்டினார்வரங்கொள்வாளிகள்வல்லார். (௭௩)

கைதவன்குலக்கன்னிகேள்வனுமொருகணைக்கொருகணையாக
வெய்துவெங்கணையாவையும்விலக்கிமேலிரண்டுநாலெட்டம்பால்
*வெய்தினெய்தவரவரவர்கொடிகளும்வில்லும்வாசியும்வீழக்
கொய்துகொய்துபல்பவுரிவந்தனன்விறற்குன்றவில்லியொடொப்பான். (௭௪)

தேரினின்றவர்பாரினின்றவன்மிசைவிடுகணைத்திரண்மின்னுக்
காரினின்றுபாதலமுறவுரகர்மேற்கனன்றுவீழ்வனபோன்ற
பாரினின்றவன்றேரினின்றவர்மிசைவிடுகணைபாதாலத்
தூரினின்றுருமையும்விழுங்குவமெனவுரகரேறுவபோன்ற. (௭௫)

* வெய்தினேமியந்தேரொடுகொடிகளும் என்றும் பாடம்.

வேறு.

சேணிலத்தின்மிசைநின்றவர்தொடங்கினவர்தேர்களிற்றனதறிந்தனநெடுந்
துவசம், நாணியற்றனவொடிந்தனதடஞ்சிலையுநாகமுற்றவரொழிந்தனரிரிந்தனர்க,
ணீணிலத்தினிடைநின்றுசமர்வென்றவனுநேமிவச்சிரமகுடம்புனைகொடிஞ்சியுடை
யேணிலத்திவுளிமுந்தமுனையுந்திரதமேறியிட்டனன்முகுந்தனுடனின்புறவே. ()

ஏறியிட்டவன்விரைந்திரதமுங்கடவியேகலுற்றபினியம்பலதழங்கியெழ
வேறுபட்டமருடைந்தவர்களுந்திருகிமேலிடச்சகுனியுந்தினகரன்சுதனு
மாறியிட்டரதகுஞ்சரதுரங்கமமுமாகவிப்படிபொரும்படையொடன்றுநனி
*சூறியிட்டனன்வலம்புரியலங்கல்புனைதோளிலெப்புவனமுந்தனிசுமந்தவனே. ()

யோதனத்திலிவனென்கணெதிரின்றளவும்யோசனைக்குமிடைநின்றிலன்முனை
ந்துசமர், மோதுகைக்குநினைவுண்டுகொலெதிர்ந்துமிகமோகரித்துவருகின்றதுதெரி
ந்ததிலை, யாதுபெற்றெனனெடுஞ்சிலைகொல்வெங்கணைகொலேதமற்றகவசங்கொ
லிரதங்கொலென, மாதவற்கிடைவணங்கியிதுவென்கொலெனவாசவக்கடவுண்மை
ந்தனுரைதந்தனனே. (௭௮)

ஈசனப்பொழுதுணர்ந்தருளிவென்றிவரியேறுவிற்குரியபற்குனனுடன்பழைய
வாசவற்கபன்வழங்குகவசந்துவசமாசுணற்கருளினன்கலசசம்பவனு
மாசுகத்தினிலொழிந்தபலதுங்கமுனையாயுதத்தினிலழிந்திடுவதன்றதனை
நீசெகுத்திடுதியென்றுதுரகங்களையுநேர்படக்கடவினன்கதிவிதம்படவே. (௭௯)

கானகத்தினிடைமண்டியெரியங்கிதருகார்முகத்தின்வலிகொண்டுமுனைவெஞ்ச
மரின், மேனடக்குமவர்தங்கண்மகுடங்களினுமேருவொத்துயர்புயங்களினுமுந்தி
யினு, மானனத்தினுநுழைந்துருவவெம்பரிதியாயிரக்கிரணமும்புடைபரந்ததென,
வானகத்துவெளியின்றியணிபந்தரிடவாளிவிட்டனன்மனஞ்செய்துதனஞ்சயனே.

நாதெறித்தனதுரங்கமநெடுஞ்சிலைகணாணியற்றனவுடைந்தனதடந்திகிரி
பாதமற்றனமதங்கயவிதங்கள்பொருபாகர்பட்டனர்மறிந்தனநெடுந்துவச
மோதுதற்கெதிர்முனைந்தவர்சிரங்கள்பொழிமூளையிற்களமடங்கலுநெகிழ்ந்தரச
ராதபத்திரமழிந்தனவிவன்றனுடணார்சரத்தொடுசரந்தொடவிசைந்தவரே. (௮௧)

ஆரமர்க்கண்மிகநொந்திரவிமைந்தனெடிதாகுலத்தொடுமிரிந்தனன்விரிந்தமணி
வார்கழற்சகுனியுந்துணைவருந்தமுகமாறியிட்டனர்மறிந்தனர்கலிங்கர்பலர்
சீருடைக்கிருபனுங்கிருதனும்பழையசேதிவித்தகனுமஞ்சினரொடுங்கினர்கள்
பூரிபட்டிலனெருங்கியணிநின்றுபொருபூபர்பட்டனரொழிந்தவர்புறந்தரவே. ()

தேவருக்கரசனுந்துகனபந்திநிகர்தேரிடைப்பணிநெடுங்கொடிநுடங்கியெழ
மாவுகைத்துவலவன்றிறலுடன்கடவமாமுடிக்கண்மகுடந்திகழவன்றுபெறு, காவ
ன்மெய்க்கவசமுந்தனிபுனைந்துசிலைகால்வளைத்தவிர்பெரும்பிறைமுகஞ்செய்கணை
தூவியுற்றெதிர்முனைந்தனனனந்தவொளிதோய்கழற்றரணிமண்டலதுரந்தரனே. ()

கோமகக்குரிசின்முந்தவிடுமம்புபலகோறுடுத்தெதிர்விலங்கிவிசயன்றனது
தீமுகக்கணையனந்தநிலையொன்றின்முனைசேரவிட்டனன்விடும்பொழுதினந்தவிறன்
மாமணிக்கவசமெங்குமுடனொன்றியொருமால்வரைப்புயலினுண்டுளிவிழுந்தபரி
சாமெனத்தலைமழுங்கியவையொன்றுமவனாகமுற்றிலவசைந்திலனசஞ்சலனே. ()

* தூறியிட்டனன் என்றும் பாடம்.

வீரன்விட்டனசரங்களவனொண்கவசமேலுறப்படுதலின்றிவிழுகின்றதிலை, யோரி
மைப்பினிலறிந்துகுமரன்கையயிலோடுரைக்கவுவமம்பெறுவிடங்கொளயி, றேரி
னிற்பொலியநின்றிருகைகொண்டுநனிசீறிமெய்ப்படவெறிந்தனனெறிந்தளவில்,
வார்சிலைக்குருவின்மைந்தனதுகண்டதனைவாளியிற்றுணிபடும்படிமலைந்தனனே. ()

வாகைநெட்டயிறுணிந்திடலும்வன்பினுடன்மானிரைத்திரதமுங்கடவிவந்துமுத
லாகவத்தினிலுடைந்தவரடங்கமுனையாயெதிர்த்தொருமுகம்படநெருங்கிமிக
மோகரித்துவருகின்றசெயல்கண்டமரர்மூவருக்கரியவன்கழல்பணிந்துபரி
தாகமுற்றமர்தொடங்கவுமறந்துகமழ்தாரருச்சுனனுயங்கினனனந்தரமே. (அசு)

கோமணிக்குரலுகந்துபுறவின்கணுயர்கோவலர்க்குநடுநின்றமுமுன்வளர்ந்தமுகி
ல், கார்மனுக்கினியதந்தைதசமரம்பொருதுகாதன்மைத்துனனயர்ந்ததிலைகண்டுபல,
தாமரைக்குளொருதிங்களெனவங்குலிகொடாழ்தடக்கைகளிரண்டொருமுகம்பயி
ல, மாமணிக்குழன்மணங்கமழ்செழும்பவளவாயில்*வைத்தனனலந்திகழ்வலம்புரி
யே.
(அஎ)

நாகர்பொற்றருவையம்புவியிலன்றுதருநாதன்வச்சிரவலம்புரிமுழங்குகுரன்,
மேகமொக்குமெனவெண்டிரையெறிந்துபொருவேலையொக்குமெனவெங்கணுமெ
ழுந்தபொழு, தாசமுற்றுறநெகிழ்ந்துபுளகம்புரியவாகவத்தெழுகடுஞ்சினமடிந்தவி
ய, மோகமுற்றனரெதிர்ந்துபொருமண்டலிகர்மோழைபட்டதுகொலண்டமுகடுஞ்
சிறிதே.
(அஅ)

பானிறப்புரவியுந்தியிரதங்கடவுபாகன்மற்றவர்மயங்கியதுணர்ந்தருளி, மே
னிலத்துநரகன்றனுயிர்கொண்டதொருவேல்கொடுத்திதனில்வென்றிடுதியென்ற
ளவில், *வானவச்சிரன்மகன்கடிதுவந்துபெருவாழ்வுபெற்றனமெனும்பரிவினன்ற
னது, ஞானபத்தியொடெழுந்துவலம்வந்துதிருநாண்மலர்ப்பதம்வணங்கியதுகொ
ண்டனனே.
(அகூ)

மாறுபட்டிவனையின்றுயிர்கவர்ந்துவிடின்மாமருத்தின்மகன்வஞ்சினமழிந்துவிடு
மூறுபட்டுவெருவும்படியெறிந்தமரினோடுவிப்பதுபெருந்தகைமையென்றுகொடு
நூறுபட்டமகவின்றலைவனெஞ்சமிகநோதகக்கடிதெறிந்தனனெறிந்தளவி
னீறுபட்டதுபெருங்கவசம்வந்தவழிநேர்படத்திருகினன்சமரினின்றிலனே. (கூ0)

ஆறுபத்திருபதைம்பதுபெரும்பகழியாகவிட்டுவரிவன்சிலையும்வெம்பரியு,மே
றுபைத்தலைநெடுந்துவசமும்புதியவேழுதட்டிரதமுந்துணிசெய்தங்கருகு, சீறுதற்
குவருதிண்குருவின்மைந்தனொடுதோருக்கன்மகனுஞ்சகுனியும்பலரும், வீறுகெட்
டிருபதங்கொடுவிரைந்துசெலமீளவிட்டனன்முனெண்டிசையும்வென்றவனே. ()

வேறு.

வேர்த்தெதிர்விசயன்வென்றகளத்தி
லார்த்தெதிர்வந்தாரார்கொல்பிழைத்தா
ரேத்தியபதினெண்பூமியினெண்ணும்
பார்த்திவர்பற்பலவாயிரர்பட்டார்.
(கூஉ)

---

* வைத்தனன் வலம்புரி வலம்புரியே என்றும்பாடம்.

† மானவச்சிரன் என்றும்பாடம்.

தம்பியருந்துச்சாதனன்முதலோ
ரம்பிலழிந்துதம்மாருயிருய்ந்தா
ரெம்பெருமானன்றெரிகணையேவ
வம்பரமுற்றதனைவருமுற்றார். (௯௩)

மாரதர்வீந்தாரதிரதர்மாய்ந்தார்
சாரதிகளும்வன்றலைகளிழந்தார்
நாரதன்முதலோர்நாகரநேகர்
பாரதமின்றேபற்றறுமென்றார். (௯௪)

இந்தவயப்போரிம்முறைவென்று
பைந்துளவோனும்பார்த்தனுமாகச்
சிந்துமகீபற்றேடிமணித்தே
ருந்துறுமெல்லையுற்றதுரைப்பாம். (௯௫)

வள்ளல்குறித்தவலம்புரிநாதத்
தெள்ளமுதந்தன்செவியுறுபோழ்தி
னுள்ளணிநின்றமுரசமுயர்த்தோன்
றள்ளுறுநெஞ்சிற்சங்கையனானான். (௯௬)

தன்றுணைநின்றசாத்தகியைக்கூய்
வென்றிடுபோரில்விசயனிளைத்தா
லன்றிமுழக்கானதிர்வளையையன்
சென்றறிகுதிநீயென்றுரைசெய்தான். (௯௭)

வன்கட்டிண்டோண்மன்பலர்நிற்க
வென்கட்டந்தானின்னுரையென்னா
மன்கட்டாரோன்மலரடிவீழ்ந்தான்
றன்கட்டாண்மைத்தன்முனொடொப்பான். (௯௮)

கண்ணுறநில்லார்கடவுளர்முதலாம்
விண்ணவரேனும்விசயன்வெகுண்டான்
மண்ணிலெதிர்க்குமன்னவர்யாரோ
தண்ணளிநெஞ்சுந்தருமமுமிக்கோய். (௯௯)

என்றறன்மைந்தனேவறலைக்கொண்
டன்றொருதேர்மேலதிரதரோடுஞ்
சென்றனன்வெய்திற்றேவகிமைந்தன்
றுன்றியசெருவிற்றூசிபிளந்தே. (௧௦௦)

விருதொடுமுந்தவிளங்கியகொற்றக்
கிருதனையாதிக்கேழலொடொப்பா
னொருதனுவுங்கொண்டோர்பரிமாவு
மிரதமும்வில்லுமிமைப்பிலழித்தான். (௧௦௧)

பன்மகர் நூறுயிரவர் பரித்தே
ரன்மிக நூறுயிரவரழிந்தார்
மன்மதவெங்கைமலைமிசைவீரன்
றன்முன்மலைந்தான்றார்ச்சலசந்தன். (௧௦௨)

தார்ச்சலசந்தன்சாத்தகியென்னுங்
கார்ச்செலவாயகணைமழையாலே
போர்ச்சலமில்லாப்புகர்மலையோடு
மேற்சலமெய்திவெங்கனலானான். (௧௦௩)

நாட்டமிலாதநரபதிமைந்த
ரீட்டமதாகவீரிருவோர்கள்
கூட்டம்பெய்யக்கொடுமுனைவென்றான்
வேட்டம்போனவெங்களிறொப்பான். (௧௦௪)

*யாரும்போரிலெளிவரவீரஞ்
சாருஞ்சாபந்தன்னொடுநேமித்
தேருந்தானுஞ்சென்றிடுவோனைக்
கூருஞ்சாபக்குருவெதிர்கண்டான். (௧௦௫)

வேறு.

ஏகலேகலென்னுடனினியமர்புரிந்தேகென்
றாகுலம்படத்தகைந்தனனடற்சிலையாசான்
மேகவண்ணனுக்கிளவலும்வேதியருடன்போர்
மோகரிப்பதுதகுதியன்றெனக்கெனமொழிந்தான். (௧௦௬)

இருவருந்தமதிருசிலையெதிரெதிர்குனித்தா
ரிருவரும்கொடும்பகழிகளெதிரெதிரெய்தா
ரிருவருந்தமதேர்சிலையாவையுமிழந்தா
ரிருவரும்பெரும்பொழுதமர்திளைத்தனரிளைத்தார். (௧௦௭)

இளைத்துவேதியனிற்பமன்னவனிளைப்பாறி
யுளைத்தடம்பரித்தேருமற்றொன்றுமேல்கொண்டு
வளைத்தவில்லொடுமன்னணிகலக்கிமேல்வருவோன்
கிளைத்தபல்பெருங்கிரணனில்வயங்கோளிகிளர்ந்தான். (௧௦௮)

யானைதேர்பரிவீரரிரொன்பதுநிலத்துத்
தானையோடுதுச்சாதனனடுத்தெதிர்தடுத்தான்
சோனைமேகமொத்திவன்பொழிதொடைகளாற்கலங்கிப்
பூனைபோலழிந்திருபதஞ்சிவந்திடப்போனான். (௧௦௯)

இடையில்வந்துவந்தெதிர்த்தவர்யாரையுங்கடந்து
புடைவருந்தனதனிகினிநிழலெனப்போதத்
தடையறும்படிதருக்குடன்சார்பெரும்பருவ
விடைநடந்தெனநடந்தனன்விசயனின்றுழியே. (௧௧௦)

---

* ஆரும்போரிலழிதர என்றும் பாடம்.

பின்னருங்கொடிமுரசுடைப்பெருந்தகைவருந்தி
முன்னநின்றவாயுவின்மகன்முகனுறநோக்கி
மன்னரெண்படுவரூதினிவாரியினுப்ப
ணென்னராயினரும்பியுமெம்பெருமானும். (௧௧௧)

தகலருந்திறற்சாத்தகிதன்னையும்விடுத்தேம்
பகலுமேற்றிசைப்பட்டதுபாஞ்சசன்னியமும்
புகலுகின்றதுபோர்முகத்ததிர்குரல்பொம்ம
விகல்வலம்படநீயுமங்கேகுதியென்றான். (௧௧௨)

சொன்னவார்த்தையும்பிற்படமுற்படத்தொழுது
தன்னுடைத்ததோள்வலியுடைத்தரணிபரநேகர்
மன்னுநால்வகைப்படையொடுந்திரண்டிருமருங்கும்
பின்னுமுன்னுமொய்த்துடன்வரப்போயினன்பெரியோன். (௧௧௩)

கலிங்கர்மாகதர்மாளவர்கௌசலர்கடாரர்
தெலுங்கர்கன்னடர்யவனர்சோனகரொடுசீனர்
குலிங்கராரியர்பப்பரார்குச்சரர்முதலோர்
விலங்கினார்களைவிண்ணுறவிலக்கிமேல்விரைந்தான். (௧௧௪)

உரங்கவெங்கொடியுயர்த்தகாவலன்றனக்கிளையோர்
துரங்கமாதிகொள்பலர்பெருஞ்சேனைபிற்சூழ்ந்தோ
ரிரங்குமாழ்கடல்பேருகவிறுதியிலெறியுந்
தரங்கநேரெனவிடையிடைதனித்தனிதகைந்தார். (௧௧௫)

முல்லைமல்லிகையுற்பலங்குமுதமாமுளரிப்
பல்லம்வாளயில்சூலமென்பனமுதற்பகழி
யெல்லையில்லனவிடையறாவகைதொடுத்தெதிர்ந்தார்
வில்விதங்களில்யாவையும்பயின்றகைவிறலோர். (௧௧௬)

விந்தன்விந்தரனிருவருமேலிடுமுனையிற்
றந்தம்வாசியுந்தேர்விடுபாகருந்தாமு
மந்தரந்தனிற்றலைகள்போய்முகில்களையலைப்பச்
சிந்துசோரிபோய்ப்பெருங்கடலலைத்திடச்சிதைந்தார். (௧௧௭)

போர்க்குமுந்துறுதேரினன்குண்டலபோசி
தீர்க்கலோசனன்றிண்டிறற்சித்திரசேனன்
மார்க்கநேர்படவிலங்கிமாமறலிநேர்வரினுந்
தோற்கலாதவர்மூவருந்தம்முயிர்தோற்றார். (௧௧௮)

சேரமுப்பதுகுமாரர்கள்சென்றமர்மலைந்தோ
ரோரொருத்தருக்கோரொருசாயகமுடற்றிச்
சூரன்மெய்த்துணைநோதகும்படியுடன்றலைத்தான்
மாருதச்சுதன்வல்லவில்லாண்மையார்வல்லார். (௧௧௯)

ஆயுவற்றவர்சுயோதனனிளைஞரேழைவர்
வாயுபுத்திரன்வாளியாலாருயிர்மடியச்
சாய்தலுற்றதுசடக்கெனத்தரணிபன்வியூகந்
தேயுவொத்திவன்சேறலுந்திமிரநேரெனவே. (௧௨௦)

வேறு.

எகுகின்றதுகண்டுபெருங்கடலேழுமொண்டுவிழுங்கியதிர்ந்தெழு
மேகமம்புபொழிந்தெனவெங்கணும்வீசுமம்புவிரைந்துவிரைந்திட
யூகமின்றுபிளந்துதனஞ்சயனோடிவன்புகுதந்திடினப்படை
யாகுலம்படுமென்றுதடஞ்சிலையாரியன்சமரந்தனின்முந்தவே. (௧௨௧)

ஆதியந்தணன்வந்ததுகண்டிகலாளிலன்சினமின்றிநலம்பெறு
நீதியன்றனுடன்சமர்செய்திடனீபெருங்குருநின்கழலென்றலை
மீதுகொண்டனனென்றுவணங்கவும்வேதியன்கைமிகுந்துபுகுந்தெதிர்
மோதியம்பு*தெரிந்தனன்வன்றிறன்மூரிவெஞ்சிலையுங்குனிகொண்டதே. (௧௨௨)

வீரனென்றுமொழிந்திலன்வந்துமுன்வீழ்சரங்கள்விலங்கிவயம்புனை
தேரினின்றுமிழிந்துநடந்தெதிர்சேரவந்துசெழுஞ்சிலையின்குரு
வூருகின்றவயங்கிரதந்தனையோரிரண்டுகரங்கொடுவன்புடன்
வாரியுந்தவெறிந்தனன்வண்புயல்வானினின்றவரஞ்சியொதுங்கவே. (௧௨௩)

நாகவிந்தம்வளர்ந்துவளர்ந்தகனைகமொன்றியதென்றுநடுங்கிட
மேகபந்திகலங்கவெழுந்ததுமீளவும்புவியின்கண்விழுந்தது
பாகனங்கநெரிந்ததுநொந்ததுபார்முகந்துளைவிண்டனமண்டுருள்
வேகவெம்பரியுந்தலைசிந்தினவேதியன்றனதென்புமொடிந்ததே. (௧௨௪)

வீழவிங்குமவன்றனைவென்றிவன்மேனடந்தூழியெண்டிசையும்படை
சூழவந்துவளைந்தனரந்தகதூதர்தங்களினும்பெருவஞ்சக
ரேழுமண்டலமும்புதையும்பரிசேறுகின்றதரங்கநெடுங்கட
லூழியும்பெயர்கின்றதெனும்படியோதைவிஞ்சவுடன்றுசினங்கொடே. (௧௨௫)

காரிலைந்துமடங்குபுலம்பினகாளஞ்சுரிசங்குமுழங்கின
பேரிபம்பினகொம்புதழங்கினபேரியங்கள்பெயர்ந்துகறங்கின
பூரியும்பொருதஞ்சியவந்தியர்பூபனும்புறமன்றிடவெங்கணை
மாரிசிந்திமலைந்தனன்வெஞ்சினமாறமுன்பவனன்றிருமைந்தனே. (௧௨௬)

மாசுணந்தலைநொந்துசுழன்றனமாதிரங்கண்மருண்டுகலங்கின
வீசுதெண்டிரையம்புவெதும்பினமேலையண்டமும்விண்டுபகிர்ந்தன
பூசலின்கணுடன்றுகழன்றவர்போர்தொடங்கநினைந்துபுகுந்தன
ராசுகன்றிருமைந்தனுடன்சுடராதபன்குமரன்சமர்முந்தவே. (௧௨௭)

கோபம்விஞ்சினர்விஞ்சைவரம்பெறுகூர்சரங்கடெரிந்தனர்கொண்டனர்
சாபமுங்குனிதந்தெதிருந்தினர்தாரைவெம்பரிதங்கிரதங்களு
நீபமெங்குமலர்ந்தெனமண்டுசெந்நீர்பரந்திடநின்றுமுனைந்தெழு
பூபர்தங்களுடம்புசிவந்தனர்பூரமெங்குமலைந்துபுரண்டவே. (௧௨௮)

---

* தெரிந்தன என்றும் பாடம்.

மாருதன்புதல்வன்றொடுமம்பினின்மாவிரண்டுமிரண்டும்விழுந்தன
சோரும்வன்றுவசந்தறியுண்டது சூதனுந்தலைசிந்தினன்முந்திய
தேருமுந்துருளுந்துகள்கொண்டனசேமவெங்கவசந்துளைவிஞ்சிய
தாரவெண்குடையம்புலியும்பிறையானதஞ்சலினெஞ்சுமழிந்ததே. (௧௨௯)

வேறு.

அழிந்துகன்னனுங்கால்விசையினிலிவனம்பினுக்கெட்டாமல்
வழிந்துபோதல்கண்டடல்விடசேனனவ்வள்ளலுக்கெதிரோடி
யிழிந்துதன்பெருந்தடமணித்தேரின்மேலேற்றலுமிவனேறிக்
கழிந்தநீர்க்கணைகோலுவான்போலவன்கண்ணெதிருறச்சென்றான். (௧௩௦)

சென்றுமீளவும்வீமனோடெதிர்ந்துவெஞ்சிலையமர்புரிந்தந்தக்
குன்றுபோனெடுந்தேருநுண்டுகள்படக்குலைந்துவென்கொடுத்தோடக்
கன்றிநாகவெங்கொடியவன்கண்டுதன்கண்ணிகரிளையோரை
யொன்றிநீர்விரைந்துதவுமென்றிருவரையொருகணத்தினிலேவ. (௧௩௧)

கன்னனைக்கடிதுற்றிருவருமதுகயிடவரெனத்தக்கோர்
மன்னருக்கரியனையவீமனுக்கெதிர்வரிசிலையுறவாங்கி
யந்நிலத்தினிலவனுடனெடும்பொழுதமர்புரிந்தவன்கையிற்
செந்நிறக்கொடும்பகழியாற்றம்முடல்சிதைந்துவானிடைச்சென்றார். (௧௩௨)

தனதுகண்ணெதிரிருவருமழிந்தபின்றபனன்மைந்தனுநொந்து
கனதுரங்கமமுடுகுதேர்வயப்படைக்காவலன்முகநோக்கி
யுனதுதம்பியரிருவரைச்செற்றவன்முடித்தலையொடியேனே
லெனதுபுன்றலையவன்கையிற்கொடுப்பனென்றேறினனொருதேர்மேல். (௧௩௩)

குனித்தசாபமுந்தொடுத்தசாயகங்களுங்குலவுமால்வரைத்தோளுந்
துனித்தநெஞ்சமுமுரிந்தனபுருவமுமெரிந்தகண்களுந்தோன்றப்
*பணித்ததேரொடும்போருடன்றெழுதரும்பரிதியின்விரைந்தெய்தி
யினித்தராதலமுரககேதனற்கெனவிளவலோடிகல்செய்தான். (௧௩௪)

ஆற்றையொத்தனகால்வழியளைபுகுமாமைகொளடன்மள்ளர்
சேற்றையொத்தனநித்திலமெடுத்தெறிசெல்வநீள்குருநாடன்
காற்றையொத்தனன்வலியினாற்சினத்தினாற்கதிரவன்றிருமைந்தன்
கூற்றையொத்தனன்பிறப்பிலேதுவக்குளோர்குணங்களுங்கொள்ளாரோ. (௧௩௫)

தேறல்வண்டிமிர்தெரியலான்றினபதிசிறுவனைமுகநோக்கி
யாறல்வெஞ்சமத்தென்னுடன்முனைந்தனைமுனைந்தனையானாலும்
வேறலென்கடனின்னைமன்னவையின்முன்விளம்பியவசனத்தாற்
கோறலெம்பிதன்கடனெனவரிசிலைகுனித்தனன்கொடித்தேரோன். (௧௩௬)

இலக்கமற்றவெங்கணைகளாலிருவருமெதிரெதிரமராடிக்
கலக்கமுற்றபின்றினகரன்மதலையக்காற்றின்மைந்தனைச்சீறி
யலக்கணுற்றிடப்பலபெருங்கணைதொடுத்தவன்விடுங்கணையாவும்
விலக்கிவச்சிரத்தேரும்வெம்புரவியும்விறற்றுவசமும்வீழ்த்தான். (௧௩௭)

---

* பணித்தகோளொடும் என்றும் பாடம்.

காலினால்வருங்காலின்மைந்தனைக்கடுங்கதிரவன்றிருமைந்தன்
வேலினாலடர்ந்தெறிதலுமெறிந்தசெவ்வேலிருதுணியாகக்
கோலினாலவன்றுணித்துமீளவுமழல்*கொளுந்தியதொருதண்டு
நாலினான்முழமுடையதுகன்னன்மேலெறிந்தனனகைசெய்தான். (கஙஅ)

தேரவன்றிருமைந்தனேறியதடந்தேரும்வாசியுஞ்சிந்தி
யூரவந்தவெம்பாகனுந்தலைபிளந்தோடலுற்றனன்பின்னும்
வீரனும்பெருவலியுடன்வருகெனவேறோர்தேர்மேற்கொள்ளத்
தூரநின்றவரிவருமுடன்றமைசுயோதனன்கண்ணுற்றான். (கஙகூ)

கண்டுதுன்முகனெனுந்திறலிளவலைக்கடிதினேவலுங்கங்குல்
வண்டுசெஞ்சுடர்வளையவந்திறந்தெனவலியவார்சிலைவாங்கிக்
கொண்டுதிண்டிறல்வாளியான்மலைமிசைக்கொண்டல்பெய்வதுபோல
மண்டுபோர்புரிந்தண்ணல்கைப்பகழியால்வானிமைப்பினிலுற்றான். (கசO)

தாளினோடியகன்னன்மன்னவன்விடுதம்பிவீழ்தலும்வீமன்
றோளினோடிமண்மிசைபுதைதரவொருதோமரந்தனையேவ
வேளினோடிசைவீமன்மேலதுசெலும்வேலையின்விடவெவ்வாய்க்
கோளினோடியகுரிசில்கைக்கணையினாற்கோளழிந்ததுமன்னோ. (கசக)

மன்னர்மன்னவன்றம்பியரிருவரைமாருதிமிசையேவ
முன்னர்வந்தவரிருவரும்படப்படமுனைந்தபோர்மதியாமன்
மின்னிருங்கணைவிகருணன்முதலியோர்வீமன்மேலோரைவர்
பின்னருஞ்செலநால்வரைப்பிறைமுகக்கணையினாற்பிளந்திட்டான். (கசஉ)

வேறு.

பகருநால்வரும்பட்டபின்பைங்கழல்
விகருணன்பொரவெஞ்சிலைவாங்கலும்
புகலும்வஞ்சினம்பொய்க்கினுநின்னுட
னிகல்செய்யேனெம்பியேகுகென்றனரோ. (கசங)

சுடுவுரைக்கனலன்னதுச்சாதனன்
வடுவுரைக்கவுமன்னுறைமன்றிடை
நடுவுரைக்குநன்னாவுடையாயுனைக்
கொடுவுரைக்கணையேவினுங்கொல்லுமோ. (கசச)

பாரறிந்தபழிக்குட்படாதநின்
னேரறிந்தும்பொரநெஞ்சிசையுமோ
போரறிந்துபொருகவென்றனெடுஞ்
சீரறிந்தவர்செய்ந்நன்றிகொல்வரோ. (கசரு)

வீமனிப்படிச்சொல்லவும்வேரியந்
தாமமுற்றதடவரைத்தோளினான்
மாமணிச்சிலைவாங்கியவ்வீமன்மேற்
றீமுகக்கணையுஞ்சிலசிந்தியே. (கசசு)

* கொளுத்தியென்றொருதண்டு என்றும் பாடம்.

எம்முனோர்களைவருமுங்கையில்
வெம்முனைக்கணையால்விளிந்தேகவு
மும்முன்யானொருவேனுமுய்வேன்கொலோ
வம்மின்வார்சிலைவாங்குகென்றேதினன். (கசஎ)

மிகநகைத்தும்வெறுத்துந்திரிபுர
தகனனைத்தசமீரணன்மாமகன்
முகனுறச்சென்றுமூரிவில்வாங்கிமே
விகனிறக்கணையேவினனென்பவே. (கசஅ)

ஏவினுலிவ்விருவரும்வெஞ்சம
மேவினர்மெய்ப்படாமல்விலக்கினர்
கூவினுரறைகூவிப்பொருதிலைத்
தோவினர்தமையேநிகரொத்துளார். (கசகூ)

விகனன்விட்டகணைகளின்வீமன்மெய்
யிகன்மணிக்கவசம்பிளந்தேறுதே
ரகலரிக்கொடியற்றுக்கொடிஞ்சியுஞ்
சகலமுற்றுத்தனுவுமுரிந்ததே. (கருo)

மின்னைபொத்தவிறற்படைமாருதி
பின்னைவிட்டபிறைமுகவார்கணை
யன்னைசித்தமலமரப்பின்னவன்
றன்னைவெற்றிமகுடந்தடிந்ததே. (கருக)

கோவிகன்னன்கொலைபடப்பற்பல
ராவிகன்னனறைகணையாலறப்
பாவிகன்னன்பதைக்கவென்றேகினன்
மேவிகன்னகம்போற்புயவீமனே. (கருஉ)

அன்றுசாதத்தல்கைகளாடவே
சென்றுசாத்தகிதன்னுடன்சேர்ந்தனன்
றுன்றுசாத்திரத்தின்படிசூழ்முனை
வென்றுசாத்தியவாகைகொள்வில்லினுன். (கருங)

அங்கிதன்னொடனிலமுஞ்சேர்ந்தெனச்
சங்கபாணிதன்றம்பியும்வீமனுஞ்
செங்கலங்கலஞ்சேற்றிடைமூழ்கிய
வெங்களத்துவிசயனைக்கூடினர். (கருச)

வேறு.

தேவரும்பரவுபாகன்செலுத்துதேர்விடலையோடு
மூவருஞ்சுடர்கண்மூன்றுமூண்டெனத்திரண்டகாலை
மேவருஞ்சமரின்முன்னம்வென்கொடுத்துடைந்தவேந்தர்
யாவருந்திருகிவந்தாங்கெதிரெதிரடர்ந்துசூழ்ந்தார். (கருரு)

சாத்தகிதானும்பூரிசவாவும்வெஞ்சாபம்வாங்கிக்
கோத்தனர்பகழிசென்றுகுறுகினதேருந்தேருஞ்
சேர்த்தனர்மலைந்தகாலைச்சிலைதுணிவுண்டுதேர்விட்
டேத்தருந்தடக்கைகொட்டியிருவருமல்லினேர்ந்தார். (கருசு)

மல்லினின்வென்றுவீழ்த்திமாயவன்றம்பிதன்னைக்
கொல்லுவான்முனைந்துமற்றைக்கோமகனடர்த்தனோக்கிக்
கல்லினின்மாரிகாத்தோன்கண்டுவில்விசயனோடுஞ்
சொல்லினன்பகைவன்றன்னைச்சுடர்முடிதுணித்தியென்றே. (கருஎ)

இருவருமுனைந்தபோரிலிளைத்தவர்க்குதவியாகப்
பொருவதுகடனன்றென்றுபோற்றியவிசயன்றன்னை
வெருவரமுனைந்துசீறிமீளவும்விளம்பமாயன்
றிருவுளமறிந்துதெவ்வன்றிண்புயந்துணியவெய்தான். (கருஅ)

புயந்துணிவுண்டபூரிசவாவினைப்புரிந்துதள்ளிச்
சயம்புனைவாளிற்றும்பைத்தார்புனைதலையுங்கொய்து
வயம்புனைந்திளவனிற்பமன்னறமன்றிப்போரென்
றியம்பியவிராசராசற்கெதிர்மொழியியம்பலுற்றான். (கருகூ)

நென்னனீரபிமன்றன்னைநேருறவென்றபோரு
முன்னமேசிவேதன்றன்னைவீடுமன்முடித்தபோரு
மன்னறமுறைதவாமன்மலைந்தனிரென்றுநக்கான்
றன்னைவந்தடைந்தோர்க்குற்றதளர்வெலாமொழிக்குந்தாளான். (கசுo)

பின்னரும்விசயனிற்பப்பேணலார்பின்னிட்டோட
மன்னரின்மலைந்தோர்தம்மைவாளியால்வானிலேற்றி
முன்னவனோடுமந்தமுகில்வண்ணனிளவலோடுந்
தன்னுரைவழுவாவண்ணந்தரியலர்படையைச்சார்ந்தான். (கசுக)

அருக்கனோர்கணத்திலத்தமடையுமவ்வளவுங்காக்கிற்
செருக்கிளர்விசயனின்றேதீயிடைவீழ்தறிண்ண
நெருக்குபுநின்மினென்றுநிலவறையதனிலந்த
மருக்கமழ்தொடையலானைவைத்தனர்மருவலாரே. (கசுஉ)

நச்சளையரவமென்னநடுங்கினனின்றகாலைத்
துச்சளைகணவன்றன்னைத்தோற்றமொன்றானுங்காணான்
பச்சளைமுடைகொண்மேனிப்பாடிமாமகளிர்பைம்பொற்
கச்சளைபுளகபாரக்கனதனங்கலந்ததோளான். (கசுங)

வேறு.

பாராழியவலமறப்பாண்டவர்தம்மிடர்தீரப்பார்த்தன்வாழப்
பேராழியறிதுயிலும்பெருமிதமுமுடன்மறந்துபிறந்தமாயோ
னாழியெழுபரித்தேருடையானைமாயையினாலொழிக்கத்தன்கைக்
கூராழிபணித்தலுமக்களம்போலச்சிவந்தனவக்குடபாலெங்கும். (கசுச)

அயத்திரதமிடப்பசும்பொனாவதுபோலருச்சுனனாறிஞனை
நயத்திரதமொழிக்கிளைதநவின்றபிரான்மயக்கறியார்நாள்செய்வான்றன்
வயத்திரதமறைந்ததெனவலம்புரித்தாரவன்சேனைமன்னர்யாருஞ்
செயத்திரதன்றனைக்கொண்டுசெருமுனையில்விசயனெதிர்சென்றுசேர்ந்தார். ()

எண்சிறந்தமகன்றலையைநிலத்திட்டான்றலைதுகளாகென்றுநாடித்
தண்சமந்தபஞ்சகமென்றொருமடுவிலிவன்றாதைதருப்பிக்கின்றா
னொண்சரங்கொண்டிவன்றலைமற்றவன்கரத்திற்போய்விழநீயுடற்றுகென்று
திண்சயங்கொள்விசயனுக்குச்சிந்துபதிதனைக்காட்டித்திருமால்சொன்னான். (௧௬௬)

என்னுமொழிதனைக்கேட்டுக்காண்டீபமெடேன்கணையுமினித்தொடேன்யான்
சொன்னமொழிபிழையேனென்றெதிர்நடந்தான்சுடரெரியிற்றோய்வேனென்ன
வன்னதுகேட்டாழிமாலதிகோபமுடன்சிறவதனாற்பார்த்தன்
றன்னசிலைதனையெடுத்துக்கணைதொடுக்கமதித்தான்சொற்றவறிலாதான், (௧௬௭)

வரத்தினின்முன்பெறுசாபம்வாங்கியருச்சுனன்சிந்துமகிபன்மௌலிச்
சிரத்தினிலெய்தலுந்துணிந்ததொருசரத்தாற்றுணிதலுமச்சிரம்வீழாமற்
சரத்தினைமேன்மேலேவித்தடத்திருந்துதருப்பித்ததாதைதன்பொற்
கரத்திடையேவீழ்வித்தானவனதனைநிலத்திட்டக்கணத்தின்மாய்ந்தான். (௧௬௮)

முன்பட்டானருக்கனெனவெளிப்பட்டான்வெளிப்பட்டுமுடிவிற்சிந்து
மன்பட்டான்மாமாயன்மாயமிதென்றறியாமன்மகன்போய்ப்பட்ட
பின்பட்டானவன்றந்தையினிப்பட்டாரெவருமெனப்பிழைபட்டான்போ
லென்பட்டானரவுயர்த்தோனெரிப்பட்டான்விசயனெனவெண்ணிநின்றான். ()

கன்னசவுபலர்முதலாங்காவலருஞ்சுயோதனனுங்கரந்தான்வெய்யோன்
சொன்னமொழிபிழைத்தான்வெஞ்சுவேததுரங்கமனென்றுதுள்ளியார்த்தா
ரன்னபொழுதெம்பெருமான்பணிகொண்டசுடராழியகற்றநோக்கி
யின்னமொருபனைத்தனைப்போழ்துண்டெனநின்றனனெழுபேரிவுளித்தேரோன்.

விரியோதநெடுங்கடலில்வீழ்வதன்முன்விரைந்துரகன்விழுங்கினானோ
வெரியோடிமகனிறக்குமெனமகவான்மறைக்கமுகிலேவினானோ
கரியோன்கைத்திகிரியினான்மறைத்தனனோவிருள்பரந்தகணக்கிதென்னோ
பெரியோர்கடிருவுள்ளம்பேதித்தாலெப்பொருளும்பேதியாதோ. (௧௭௧)

உந்திரதத்தனிவலவனுபாயத்தால்வருணன்மகனுயிரைமாய்த்தான்
மந்திரமொன்றறிவித்துவயப்புயமாயிரத்தோனைமடிவித்திட்டான்
றந்திரமெய்ம்மயங்கிவிழத்தன்சங்கமுழக்கினான்றபனன்மாய
விந்திரசாலமுஞ்செய்தானிந்திரன்சேய்வெல்லாமல்யார்வெல்வாரே. (௧௭௨)

முடையெடுத்தநவநீதந்தொட்டுண்டுங்கட்டுண்டுமுன்னாளைக்
குடையெடுத்துமழைதடுத்தும்வஞ்சனைக்கோர்கொள்கலமாங்கொடியபாவி
படையெடுத்துவினைசெய்யேனெனப்புகன்றமொழிதப்பிப்பகைத்தபோரி
னிடையெடுத்தநேமியினால்வெயின்மறைத்தானின்னமிவ*னென்செய்யானே. ()

* என்செய்வானே என்றும் பாடம்.

ஒற்றைநெடுந்திகிரியினன்மறைவதன்முனைவரையுமுடன்றுமோதிச்
செற்றிடுதல்யான்படுதறிண்ணமெனச்சேனையொடுஞ்சென்றுசூழ்ந்தான்
கொற்றவனதுரைகேட்டுக்கொடிநெடுந்தேர்நரபாலர்சபதங்கூறி
மற்றவனோடொருகணத்தில்வம்மினெனத்தனித்தனிபோய்மலைதலுற்றார். (கஎச)

துருபதனுஞ்சாத்தகியுந்திரௌபதிமைந்தருமுடுகித்தொட்டசாபக்
குருவுடனேபோர்செய்தார்தம்பியருஞ்சுயோதனனுங்கொற்றவேந்த
ரொருபதினாயிரவரும்போய்வீமனுடனுடற்றியவனூர்ந்ததேரும்
வரிசிலையுமழித்தனர்பினவனும்வெறுங்கரதலத்தால்வன்போர்செய்தான். (கஎரு)

பரியெடுத்துப்பரியெற்றிப்பரித்தேராற்றேரெற்றிப்பணைக்கைவேகக்
கரியெடுத்துக்கரியெற்றிக்*காலனிகர்காலாளாற்காலாளெற்றிக்
கிரியெடுத்துவிரியாழிகடைந்ததடந்தோளிருடிகேசனென்ன
வரியெடுத்தகொடிவிடலைதோள்வலியாலுழக்கியரிநாதஞ்செய்தான். (கஎசு)

நிருபர்தொழுங்கனைகழற்கானிலவேந்தன்றம்பியரினெடும்போதாக
விருவர்புறங்கொடாமலதிர்ந்தெதிர்ந்திருதோள்வலிகாட்டவிருவரோடு
மொருவரொருவரையறியாவண்ணமிவனொருவனுமேயுடன்றுசீறிப்
பொருதுபிருதனையும்விறற்சூசிதனையும்வானிற்போக்கினானே. (கஎஎ)

இகலிடிம்பன்மருமகனுந்திருமகனுங்குருமகனோடெதிர்ந்துபல்கா
லகலிடஞ்செஞ்சேறாகவமரருடனசுரரைப்போலமர்செய்காலைப்
பகலுடன்காரிருள்பகைத்தாற்பலிக்குமோவஞ்சனபன்மணியப்போதிற்
புகலிடம்பொன்னுலகாக்கிப்போக்கினானொருகணையாற்புரவித்தாமா. (கஎஅ)

மகன்பட்டசினங்கதுவவரையுறழ்தோட்கடோற்கசன்மாமலைகள்வீசி
யகன்பட்டநுதல்வேழமன்னான்மேலெறிந்தெறிந்திட்டார்த்தகாலைக்
குகன்பட்டந்தனக்குரியகோமுனிவன்மாமைந்தன்வீமன்கையிற்
பகன்பட்டபாடெல்லாம்படுத்தியொருகதாயுதத்தாற்படியில்வீழ்த்தான். (கஎகூ)

மோகித்துவிழுமரக்கன்மீண்டெழுந்துமோகரிக்கமுடிமகீபன்
வேகித்துக்கன்னனைப்பார்த்திவனுயிரைவீட்டுகெனவேகத்தண்டாற்
சோகித்துத்தளர்ந்தான்மேற்றொடேன்விசயனுயிருணவென்றொடையோசாலத்
தாகித்ததிப்பொழுதேகொன்றுனக்குக்கடன்ஞாலந்தருவேனென்றான். (கஅ0)

நிருபனுடனிரவிமகன்புகன்றவுரைகேட்டருகேநின்றவிற்கைக்
கிருபன்மிகநகைத்தெதிரேகிட்டினான்முதுகிடுவைகிரீடிதன்னைப்
பொருபகழிக்கிரையாகப்போக்குகின்றேனெனமொழிவைபோர்வல்லோர்க
ளொருவழியத்தம்வலிமையுரைப்பரோவெனவுரைத்தானுரையான்மிக்கோன். (கஅக)

அம்மொழிதன்செவிசுடப்போயக்கணத்தேவிசயனுடனங்கராசன்
வெம்முனைசெய்போரழிந்துதோழிந்துவென்னிட்டான்மீண்டுமீண்டு
மம்முறையிற்பற்குனனாலாவியொழிந்தவராசரநேககோடி
யெம்மொழிகொண்டுரைப்பரிதானுரைக்கவெமக்காயிரநாவில்லைமாதோ. (கஅஉ)

---

* கால்பனிக்கக்காலாளால் என்றும் பாடம்.

அந்தமுனைதனின்மீண்டுமந்தணன்றன்றிருமதலைகுந்திபோசன்
மைந்தரிருவரையிரண்டுவடிக்கணையான்மடிவித்தான்மாயோன்வன்கைச்
செந்திகிரிதனிலடங்கிமுடங்கியதன்கிரணத்தின்சிறுமைநாணி
யுந்துதிரைச்சிந்துவினிலோராழித்தேரோனுமொளித்திட்டானே. (௧௮௩)

வேறு.

இசையினும்பெருகநன்றெனத்தனதியற்கையான்மிகவளர்த்திடும்
வசையினுங்கரியவிருள்பரந்துழிவயங்குதீபநெடுவாளினு
னிசையினும்பொருதுமென்றுதெவ்வர்முனைநேர்நடந்தனனெருங்குகுன்
றசையினும்புடவியசையினுஞ்சமரிலசைவிலாததனியாண்மையான். (௧௮௪)

பகலிராவரவழைத்தனன்பகைவர்பாகனென்றுபடுபகலையவ்
வகலிராவினிலழைத்தனன்கொலெனவண்டகூடமுறவிருளறுத்
திகலிராகவொளியுமிழ்விளக்கினமெடுக்கவென்றுகடிதேவினான்
றகலிராததோர்மனத்தினான்வலியதனதனேர்தருதனத்தினான். (௧௮௫)

பொங்கியாடரவெழுந்தநேகவிதமானதென்றமரர்புகலுமா
றங்குவாளரவுயர்த்தகோனினைவறிந்தளப்பரியவாகவ
மெங்குமானைபரிதேர்கடோறுமொளிர்தீபகாகளமெடுக்கவே
சங்குதாரையெழநின்றனன்றருமன்மதலைதம்பியர்கடம்மோடும். (௧௮௬)

கருதிவாகைபுனைவிசயன்மேல்விசயகன்னன்முந்தியமர்கடுகினான்
கிருதவன்மனெனும்விருதன்மாமுரசகேதனன்றனெதிர்கிட்டினான்
சுருதிமாமுனிதுரோணனும்பழையதிட்டத்துய்மனொடுதுன்னினான்
பொருதுமாய்வனெனவீமனோடுபர்புயங்ககேதுமிகுபோர்செய்தான். (௧௮௭)

சல்லியன்பெருகுசல்லியத்தொடுசதானிகன்றனொடுபோர்செய்தான்
வல்லியம்புனைகடோற்கசன்றனொடுபோர்செய்தான்முனிவன்மைந்தனு
மெல்லியங்குசுடரினுமணிச்சுடர்களெழுமடங்கொளியெறிக்கவும்
பல்லியம்பலமுழங்கவுந்தரணிபாலரிப்படிபகைக்கவே. (௧௮௮)

எற்றருந்தபனனேகினானினியெனக்குவாசிகொடிநீடுதேர்
முற்றருங்கனலினொளியெழுந்ததெனமுரண்மிகுந்திடமொழிந்துபோர்
விற்றருங்கணைகளால்விழப்பொருதுவெயிலவன்சுதனைமீளவும்
பிற்றரும்படிபிளந்தனன்றனுசர்பின்னிடப்பொருதபெற்றியான். (௧௮௯)

ஒருதன்வாகுவலியானும்வார்சிலையுதைத்தவாளிவலியானுமொண்
குருதிபொங்கவடுதருமராசன்ரகுகுலவிராமனிகராயினான்
கிருதவன்மனெனவருநராதிபதிகெட்டுமாவிரதம்விட்டுவா
ணிருதர்சேகரனொடுவமையாயினனெடுங்களத்திலெதிர்நின்றிலன். (௧௯0)

வாளமாகவில்வணக்கியும்பர்பதிமைந்தன்வாளிரவிமைந்தனைக்
கோளமானகுடையிரதம்வாசிசிலைகொடிமுருக்கியமர்கொள்ளவே
மீளமீளவுமழிந்தழிந்தவனொர்வேலினாலெறியவேலையுந்
தூளமாகவடிவாளியாலெதிர்துணித்துவன்பொடுதுரக்கவே. (௧௯௧)

முன்சதாகதிமுருக்கமேருகிரிமுடிமுரிந்தெனமுரண்கொள்போர்
வன்சதானிகன்வளைத்தவிற்கணையின்மத்திரத்தலைவன்மனமுரிந்
தென்செய்தான்முடிவிலோடினான்விறலிடிம்பிமைந்தன்முனிமைந்தன்மேன்
மின்செய்தாரையயிலைவினானவன்விரைந்துதேரின்மிசைவீழவே. (௧௯௨)

தானைகாவலனுமுந்துறப்பொருதுதரணிமன்னன்விடுசமர்முகச்
சேனைகாவலனையோடவோடவொருதெய்வவாளிகொடுசீறினா
னானைதேர்புரவியாளொடுற்றெதிரணிந்தமன்னவர்களனைவரு
மேனைமன்னவர்தமக்குடைந்துமுதுகிட்டுமன்னனருகெய்தினார். (௧௯௩)

அன்னபோதினிலநேகநூறுபதினாயிரந்திறலரக்கரோ
டின்னவாறெனவுரைக்கவேநிகரிலாததிண்டிறலலாயுதன்
கன்னசௌபலர்தமக்குநண்பனிருள்கங்குலோர்வடிவுகொண்டனான்
மன்னர்யாவரும்வெருக்கொளச்சமரின்மன்னர்மன்னனடிமன்னினான். (௧௯௪)

இன்றிராவிடியுமுன்னர்வெஞ்சமமெதிர்ந்தபஞ்சவர்களெஞ்சிடக்
கொன்றுபார்முழுதுநின்னதாகவுயர்வானுளோர்பதிகொடுப்பன்யா
னென்றுகோடிசபதம்புகன்றெதிரெடுத்ததீபமுமிருண்டிடச்
சென்றுவீமனொடுகிட்டினான்விசைகொடேரிரண்டுமுடன்முட்டவே. (௧௯௫)

வேறு.

பணைத்திருபுயக்கிரிவளர்மாற்றலர்பயப்படவயப்படுபயமினாற்றுவர்
துணைப்பெறமனச்சினமுடுகநாக்கொடுசுழற்றுகணெருப்பெழநிருதர்பார்த்திவ
னிணைப்பிறையெயிற்றிளநிலவினாற்செறியிருட்கிழிதரப்பகைமுனையிலேற்குமு
னணைத்திருபுறத்தினும்வருமிராக்கதரதிர்த்தனரெதிர்த்தனரமரைநோக்கியே. ( )

இருட்கிரியெனத்தகுகரியதோற்றமுமெயிற்றினிணப்பிணமுடைகொணாற்றமு
முருக்கலர்வெளுத்திடுமருணநாட்டமுமுகிற்குரலிளைத்திடமுதிரும்வார்த்தையு
மருட்படுகருத்திடைகதுவசீற்றமுமதக்கடகளிற்றதிமதமுமாய்ப்புடை
நெருக்கினர்தருக்கினர்விறனிசாசரர்நிமிர்த்தனர்வடிக்கணைசிலைகள்கோட்டியே.( )

அருக்கனைமறைத்தவர்கடவுதேர்த்தலையருச்சுனன்முதற்பலதுணைவர்சாத்தகி
செருக்குடையமைத்துனர்குமரர்காத்திடுசெருக்களம்வெருக்கொளவளையு
மாத்திரை, மருச்சுதன்வளைத்ததொர்தனுவினாற்சிலவடிக்கணைதொடுத்தலுமிரவு
லாய்த்திரி,துருத்தனும்வளைத்தனனெடியகாற்சிலைதொடுத்தனனிலக்கறுதொடை
கள்வாய்க்கவே. (௧௯௮)

மருச்சுதன்வடிக்கணையமரர்மாற்றலன்வடிக்கணைதடுத்தும்வல்லிரதமாற்றியும்
விருப்புடன்விரித்தணிதுவசம்வீழ்த்தியும்விறற்பரிகளைத்துணிதுணிகளாக்கியு
முரத்தொடுசெலுத்தியவலவன்மாத்தலையுருட்டியுமணிச்சிலையொடியநூக்கியு
மிருட்டொளியுடற்பலதுளைகளாக்கியுமிமைப்பொழுதினிற்றிறன்மடியமாய்க்கவே.

நிலத்திடைகுதித்தனன்வடவைபோற்பெருநெருப்பெழவிழித்தனனெடியமூச்சுட
ன், வலத்துயரலப்படைநிசிசரோத்தமன்வரைத்திரளெடுத்தெதிர்முடுகியோச்சலு
முலப்புயநிமிர்த்தொருகதையினாற்றனதுரத்துடனடித்தவைபொடிகளாக்கின
னிலக்கமில்சுரர்க்கிடமுதவுகோத்திரவெழிற்குவடொடித்தவனுதவுகூற்றமே. ( )

பரத்துவசனுக்குறவுரியகோத்திரிபரிச்சுடருடைப்பெயர்முனிகுலோத்தமன்
மரித்தனனெனத்தனியயில்கொடோச்சியமணிச்சிறுபொருப்பினைநிகர்கடோற்கச
னெரித்தலையரக்கனொடெதிரியாய்ச்சமரெனைத்தருமருச்சுதன்முனைதல்கிழ்த்தொ
ழி, லுரத்துடன்மலைத்திவனுயிரைமாட்டுவனுருத்தெனவுடற்றினனுறுதிதோற்ற
[வே. (உ0க)

இடிக்குரலெனத்தலையுரகர்சாய்த்தனரெதிர்க்குரலெழுப்பினகுலசிலோச்சயம்
வெடித்ததுமுகட்டுயர்கடகமேற்றலைவிபத்தெனவிபத்திரள்வெருவுதாக்கின
துடித்தனரியக்கரொடமரராத்தியர்துணுக்கெனவிமைத்தனர்திசைகள்காப்பவ
ரடிக்கடிபடித்துகள்பரவைதூர்த்தனவரக்கனுமரக்கனுமமரிலார்க்கவே. (உ0உ)

சிரித்தனருருத்தனரணுவின்மோட்டுடல்சிறுத்தனர்பெருத்தனர்மதனினேக்கினி
லெரித்தனரிரீத்தனர்ககனமேற்படவெடுத்தனர்படுத்தனர்புடவிகீழ்ப்பட
முரித்தனகிரிக்கொடுமுடிகளாற்சினைமுரித்தன*மரத்தனதுணிகளாற்கடி
துரித்தனர்தவக்குரநெரிபமேற்பழுவொடித்தனரினைத்தனருருவம்வேர்க்கவே. ()

சிலைப்படையயிற்படைதெளியும்வாட்படைதிறற்பலபடைக்கலவலிமைகாட்டியும்
வலப்படவளைத்துமல்வலிமைகாட்டியும்வயத்தொடுசெயப்புயவலிமைகாட்டியு
முலைப்படுகனற்சினமுதிர்கடோற்கசனுடற்றியவரக்கரையொருவர்போற்பொரு
தலப்படையரக்கனதுயிரைமாய்த்தனனடற்றொடைகளிற்றொடையடைசிவீழ்த்தி
[யே. (உ0ச)

புரத்தினையெரித்தவர்கயிலைமாக்கிரிபுயத்தினிலெடுத்திசைபுனைபராக்கிரமன்
வரத்தினில்வனத்திடைதிரியுநாட்சிலமனித்தரொடெதிர்க்கவும்வயிரியாய்த்தில
னுரத்துடன்மருச்சுதனுதவிராக்கதனொருத்தனுமெனைப்பலருடனுமேற்றெதிர்
துரத்தலின்மறத்தினனிவனெனப்பலர்துதித்ததிசயித்தனர்சுரரும்வாழ்த்தியே. ()

வேறு.

அன்றுகங்குலிற்பலபதினுயிரமரக்கரோடலாயுதன்றன்னைக்
கொன்றுவெம்பணிக்கொடியவன்சேனையைக்குரங்குகொள்கோதைபோற்கலக்கி
யொன்றுபத்துநூறுயிரங்கோடியாமுருவுகொண்டிவுளிதேர்களிருட்
சென்றிமைப்பொழுதளவ்வயில்யாவருந்தென்புலப்படருமாசெற்றுன். (உ0சு)

சண்டமாருதமாயெழுந்திடுமொருகாற்சலதியாயெழுந்திடுமொருகாற்
கொண்டலாயுதகம்பொழிந்திடுமொருகாற்குன்றமாயுயர்ந்திடுமொருகான்
மண்டுபாவகனுயெரிந்திடுமொருகால்வல்லிருளாய்வருமொருகாற்
பண்டுதான்வல்லமாயைகள்பலவும்பயிற்றினன்மாருதிபயந்தோன். (உ0எ)

இம்பர்வாளரக்கனிணத்தொடுபிணந்தின்றிடங்கொள்வாய்கொடுமடுத்திலனேற்
றும்பிமாபரிமாவீரரென்றிவர்மெய்துணித்தலிற்சொரிந்தசெஞ்சோரி
யம்புராசிகளிலண்டகோளகையிலடங்குமோவண்டமும்பிளந்திட்
டும்பர்வாரியையுங்கலக்குமேமிகவுமுண்மைநாமுரைசெயும்பொழுதே. (உ0அ)

---

* மரத்தினதடிகளால் என்றும் பாடம்.

கட்செவியெழுதுங்கொடியுடைக்கொடியோன்கன்னனைக்கடைக்கணித்தருளி
விட்சுரபதிவந்தன் றுனக்களித்தவேலினால்வீமன்மாமகனை
யுட்செறிசினமும்வலிமையுமுயிருமுடனழிந்தும்பரூர்புகுதப்
புட்செறிதொடையாய்கொல்கெனவிரைவிற்புகைந்துநாப்பொறியெழப்புகன்றான்.

புகன்றபோதருக்கன்புதல்வனுமாயப்போரிதுகங்குலிப்பொழுதே
யகன்றிடுமகன்றலிவனுயிர்பிறிதோரம்பினாலகற்றுவித்திடலா
மிகன்றபோர்முனையினாலியிவ்வடிவேலெறிந்துநானிமையவர்க்கிறைவன்
மகன்றனாருயிர்கொன்றுனதுவெண்குடைக்கீழ்வைப்பனிவ்வையகமென்றான். ()

என்றலுமரசன்யாமுமெம்படையுமிரவிடைப்பிழைக்கநீயிவனைக்
கொன்றுபோர்பொருதுசிலைவிசயனையுங்கொல்லுதியெனமனங்கொதித்துக்
கன்றலுமவ்வேலக்கணத்தவன்மேற்காலவெஞ்சூலமொத்தெறிந்தான்
றென்றலுநிலவுநிகரெனத்தன்னைச்சேர்ந்தவரிளைப்பெலாந்தீர்ப்பான். (உகக)

எறிந்தவேல்பகைவன்மார்பகந்துளைத்திட்டிந்திரனிடத்துமீண்டெய்த
மறிந்தமால்வரைபோலரக்கனுமுகம்பார்மருங்குறவிழுந்துயிர்மடிந்தான்
செறிந்தருகணைந்தசேனையும்பயந்தோர்சிந்தையுஞ்செயலறக்கலங்க
வறிந்தவர்க்கன்றியறியொணாவையனவர்துயரகற்றுமாறுரைப்பான். (உகஉ)

இந்தவேல்கவசகுண்டலங்கவர்நாளிந்திரனிரவிமைந்தனுக்குத்
தந்தவேலிதனையாவர்மேல்விடினுந்தரிப்பறத்தெறுமவன்வரத்தா
லுந்தவேலமரில்விசயன்மேற்றொடுக்குமுரகவம்பினுக்குபிருய்ந்தா
லந்தவேலையின்மற்றெறிவதற்கிருந்தானுற்றலாற்கூற்றினுங்கொடியோன். (உகங)

*அலப்படையவனுமநேகமாயிரம்போரரக்கரும்விளியுமாறடர்த்தோ
னுலப்படையவுந்தானுய்யவுமரசனுரைத்தலாலோச்சினனிவன்மேல்
வலப்படமுனையிலின்றுமக்கவனிவழங்கினன்கன்னனேயென்றான்
குலப்படவரவின்முடியின்மேனடித்தகூத்துடைச்சோவியர்கூத்தன். (உகச)

தருமனுமருத்துமடன்மருத்துவருந்தவர்மருத்துவான்மகனைப்
பெருமையும்வலியுநல்வினைப்பயத்தாற்பெற்றனமெனவுறத்தழுவி
யருமையினளித்தமகவுடைச்சோகமாற்றியங்குவகையராணர்
கருமமுமுலகத்தியற்கையுமுணர்ந்தோர்கலங்குதலுறுவரோகலங்கார். (உகரு)

இராவணன்படுபோர்க்களமெனக்கிடந்தவிந்தவெங்களத்திடைமீண்டு
மராவுயர்துவசனாணையால்வரிவில்லாரியனனீகினியுடன்போய்
விராடனும்யாகசேனனுமுதலாம்வேந்தரோடெதிர்ந்தமர்மலைந்து
தராதிபர்பலரோடவ்விருவரையுஞ்சரங்களாற்சிரங்களைத்தடிந்தான். (உகசு)

துருபதன்மடிந்தவெல்லையிற்றிட்டத்துய்மனும்வெகுண்டுளஞ்சுடப்போ
யிருபதமரசர்முடிகமழ்முனியையேன்றுவஞ்சினமெடுத்துரைத்தான்
பொருபகைமுனையிலெந்தையையென்முன்பொன்றுவித்தனையுனைநாளை
நிருபர்தம்மெதிரேநின்மகன்காணநீடுயிரகற்றுவனென்றே. (உகஎ)

---

* நலப்படைவடிவேல் விசயனைச்செகுக்கு நால்வருமழிவது திண்ண, மலப்படாதரவக் கொடியவனுரையாலந்த வேலோச்சினனிவன்மேல் என்றும்பாடம்.

மாமனைமகுடந்துணித்தனனெவரும்வணங்குதாண்முனியெனவயிர்த்துக்
காமனையழகுங்கந்தனைவிறலுங்கவர்ந்தவெங்கார்முகவீரன்
சோமனைவகிர்செய்தனையவெம்முனையதொடைகளாற்சுரும்புசூழ்கமலத்
தாமனைமுதுகுகண்டனன்முன்னந்தபித்தியர்முதுகிடத்தக்கோன். (௨௧௮)

பூத்தகிக்குலமுமால்வரைக்குலமும்புகரிபக்குலங்களும்புகழக்
காத்தகிலமுந்தன்குடைநிழற்படுத்துங்காவலர்நீதியைக்கடந்தோன்
சேத்தகில்புழுகுசந்தனங்கமழுந்திருப்புயத்தணிதருந்திருத்தார்ச்
சாத்தகிமுனைச்சென்றம்முனைக்காற்றாதரியெதிர்கரியெனத்தளர்ந்தான். (௨௧௯)

அனைவருமொருவர்போலுடைந்தவனியாளுடையரசனோடமரிற்
றனைவருதடந்தேர்துரகதங்களிறுமுதலியயாவையுந்தோற்று
நினைவருவிறலோர்தனித்தனிநெருக்கிநின்றுழிநின்றுழித்துரக்க
வனைவருங்கழற்கால்கொப்புளமரும்ப*வாசறைப்பாசறையடைந்தார். (௨௨0)

முற்பொழுதொருபொற்றிகிரியான்மறைந்ததாழ்வறவொளிமுகத்தி
லற்பொழுதடைந்தவாயிரஞ்சுடருமநேகமாயிரஞ்சுடராய
நற்பொழுதிதுவென்றியாவரும்வியப்பநாகராலயம்வலம்புரிந்து
பிற்பொழுதவற்றைக்கவர்ந்துசென்றுதயப்பிறங்கலிற்பிறங்கினன்பெரியோன். ()

ஆக செய்யுள் - ௩, ௲௭௯.

பதினான்காம்போர்ச்சருக்க முற்றிற்று.

பதினைந்தாம்போர்ச்சருக்கம்.

சித்தசித்தோடீசனென்றுசெப்புகின்றமூவகைத்
தத்துவத்தின்முடிவுகண்டசதுர்மறைப்புரோகிதன்
கொத்தவிழ்த்தசோலைமன்னுகுருகையாதிநெஞ்சிலே
வைத்தமுத்திநாதனன்றிவானநாடர்முதல்வன்யார். (௧)

எடுத்ததீபவொளியுமேனையிருளுமேகவேழமாத்
தொடுத்ததேரருக்கர்சோதிதொழுதுதங்கடொழில்கழித்
தெடுத்தகோபமூளநின்றிரண்டுசேனையரசருங்
கடுத்துளங்கருத்துவெய்யகண்சிவந்துகடுகினார். (௨)

நாலுசாபநிலையும்வல்லநரனுவீமநகுலனு
நாலுபாகமானசேனைநாதனுஞ்சிரங்களா
நாலுகூறுசெய்துதானுநரனுமுந்தடவினா
னாலுவேதமுடிவினுக்குமாதியானநாரணன். (௩)

வாலவீமனென்றுபார்மதித்தவாண்மைமன்னனுஞ்
சூலபாசபாணிதன்னொடொத்தசோமதத்தனு
மாலகாலமெனவுருத்தடர்த்தபோரின்முந்துறக்
காலனூரிலேகினார்கிரீடியேவுகணைகளால். (௪)

---

* ஆசறுபாசறை என்றும்பாடம்.

என்முனென்முனென்றுமன்னர்யாரும்யாருமிகலவே
முன்முனின்றியாவரோடுமூரிவில்வணக்கினான்
வின்முனெண்ணவில்லுமில்லைவெஞ்சமத்துமற்றிவன்
றன்முனெண்ணவீரரில்லையெனவருந்தனஞ்சயன். (௫)

ஈரிரண்டுமுகமும்வந்தெதிர்ந்தவீரர்சேனைக
ளீரிரண்டும்வேறுவேறுபட்டுவென்னிடப்புடைத்
தீரிரண்டொர்தொடையில்வாளியேவியேவியிகல்செய்தா
னீரிரண்டுமையிரண்டுமானவிஞ்சையெய்தினான். (௬)

புந்திகூர்துரோணனுக்கியாவரும்புறந்தரக்
குந்திபோசனெண்ணிலாயிரங்குறித்ததேர்களோ
டுந்திமீளமுடுகியந்தமுனிவனோடுடன்றபோ
தந்திவானமொத்ததம்மவமர்புரிந்தவாகவம். (௭)

குருவொடுற்றடர்ந்துகுந்திபோசன்விற்குனிக்கவே
வருசமத்துமத்திரன்றன்மருகனோடுமுடுகினான்
முரண்மிகுத்தகோபவங்கிமூளவந்தமாளவன்
கருகிறத்தனந்தசாயியிளவலோடுகடுகினான். (௮)

முனிவன்மைந்தனிந்திரன்றன்மைந்தனோடுமுடுகினான்
றிஃகரன்றன்மதலைகாலின்மைந்தனோடுசீறினான்
றனுவின்விஞ்சைதென்னனோடுசகுனிபோர்தொடங்கினா
னினியகண்டமுஞ்சிதைக்குமிறுதிகாலமென்னவே. (௯)

எந்தவெந்தமன்னர்தம்மிலிருவராகியமர்செய்தா
ரந்தவந்தவீரர்செய்தவாண்மைசொல்லுமளவதோ
முந்தமுந்தவென்றுவென்றுமோகரித்ததெவ்வர்தாம்
வந்தவந்தவழிமடங்கநின்றதவ்வரூதினி. (௧௦)

தேயுவாளிவருணன்வாளிதேவர்வாளிதிண்மைகூர்
வாயுவாளிமுதலனைத்துவாளியாலுமலைதலா
லாயுநான்முனிக்குடைந்ததன்புமிக்கதந்தையுந்
தாயுமாகிமண்புரந்ததருமன்விட்டதானையே. (௧௧)

வேறு.

குருவுமக்குருகுலேசன்கொற்றவெஞ்சேனைதானும்
பொருகளங்கொண்டுவாகைபுனைந்தவணின்றபோதி
லொருவரையொருவரொவ்வாவும்பர்மாமுனிவர்யாருந்
துருவனுமுவமை*சாலாத்துரோணனைவந்துசூழ்ந்தார். (௧௨)

மகத்தியன்மரீசியாதியெழுவருமலயச்சார
லகத்தியன்முதலாவுள்ளவனைவரும்வருதல்கண்டு
செகத்தினினிறைந்தகேள்விச்சிலைமுனியெதிர்சென்றேத்தி
முகத்தினாலிறைஞ்சிநிற்பமொழிந்தனர்மொழிகள்வல்லார். (௧௩)

* சாலத்துரோணனை என்றும் பாடம்.

மறைகெழுநாலுந்தேசுமாசிலாத்தவமுஞான
முறைவருமுணர்வுமல்லான்முனிவரர்க்குறுதியுண்டோ
துறைகெழுகலைகள்வல்லாய்துன்னலர்ச்செருக்கும்போரு
நிறைதருவலியும்வாழ்வுநிருபர்தம்மியற்கையன்றே. (௧௪)

தொடுகணைவில்லும்வாளுந்துரகமுங்களிறுந்தேரும்
விடுகவெஞ்சினமும்வேண்டாவிண்ணுலகெய்தல்வேண்டுங்
கடுகநின்னிதயந்தன்னிற்கலக்கமற்றுணர்வினொன்று
படுகவென்றுரிமைதோன்றப்பகர்ந்தனர்பவமிலாதார். (௧௫)

ஆனபோதாசானெஞ்சிலருமறையந்தத்துள்ள
ஞானமும்பிறந்துபோரிலாசையுநடத்தலின்றித்
தூநலந்திகழுஞ்சோதிச்சோமியமடைந்துநின்றான்
யானமும்விமானமல்லாலிரதமேல்விருப்பிலாதான். (௧௬)

கோடையால்வற்றிமீண்டுங்கொண்டலானிறைந்ததெண்ணீ
ரோடையாமென்னநின்றேன்முன்னரேயுரைத்தவார்த்தை
மாடையாலிந்திரநீலமணிவரைவளைத்தாலன்ன
வாடையானறிந்து*சொற்றவவதியிதென்றுகொண்டான். (௧௭)

கடல்வடிம்பலம்பநின்றகைதவன்றன்னோடோதிச்
சுடுகனலளித்ததிட்டத்துய்மனையவன்மேலேவி
வடுவுரைமறந்துஞ்சொல்லாமன்னறன்மைந்தனோடு
மடியவரிடுக்கண்டீர்ப்பானுமுறையருளிச்செய்வான். (௧௮)

மந்தரமனையபொற்றோண்மாருதிமாளவக்கோ
னிந்திரவன்மாமேற்சென்றெறிகணைதொடுத்தபோரி
லந்தரமடைந்ததையவச்சுவத்தாமாவென்னுஞ்
†சிந்துரமதனைவென்றித்திசைக்களிறொப்பதன்றே. (௧௯)

மதலைபேரெடுத்துப்போரின்மடிந்தவாறுரைத்தபோதே
விதலையனாகிப்பின்னைவில்லெடான்வீதறிண்ண
முதலமர்தன்னிலந்தமுனிவரன்மொழிந்தமாற்ற
நுதலுதிநீயேசென்றுநவலுதிவிரைவினென்றான். (௨௦)

வையினால்விளங்குநேமிவலம்புரிவயங்குசெம்பொற்
கையினானந்தனுளன்கையறல்புகன்றகாலை
மெய்யினால்வகுத்ததன்னமெய்யுடைவேந்தன்கேட்டுப்
பொய்யினாலாள்வதிந்தப்புவிகொலோவென்றுநக்கான். (௨௧)

அண்ணியகிளையுமில்லுமரும்பெறன்மகவுமன்புந்
‡திண்ணியவறிவுஞ்சீருஞ்செல்வமுந்திறலுந்தேசு
மெண்ணியபொருள்கள்யாவுமியற்றியதவமுமேனைப்
புண்ணியமனைத்துஞ்சேரப்பொய்ம்மையாற்பொன்றுமன்றே. (௨௨)

---

* கோறற்கவதி என்றும் பாடம்.
† சிந்துரம் வலத்தாலந்தத்திசைக்களிறொப்பது என்றும் பாடம்.
‡ திண்ணியமனமுங் கேள்விச்செல்வமுநிதியுந்தேசும் என்றும் பாடம்.

என்றுகொண்டினங்கொள்கோவினிடர்கெடவெழிலியேழுங்
குன்றுகொண்டடர்த்தமாயன்கூறவுமறுத்துக்கூறக்
கன்றுகொண்டெறிந்துவெள்ளிற்கனிநனியுதிர்த்துவஞ்சம்
வென்றுகொண்டவனுமீளவிளம்புவனென்பமாதோ. (உக)

உம்மையின்மறுமைதன்னிலுறுபயனிரண்டும்பார்க்கி
னிம்மையில்விளங்கும்யார்க்குமவரவரியற்கையாலே
மெய்ம்மையேயொருவர்க்குற்றவிபத்தினைமீட்குமாகிற்
பொய்ம்மையுமெய்ம்மைபோலப்புண்ணியம்பயக்குமாதோ. (உச)

வல்லவரனந்தகோடிமறைகளின்படியேயாய்ந்து
சொல்லியவறங்கள்யாவுநின்னிடைத்தொக்கவாற்றாற்
புல்லியபொய்யொன்றென்னும்பொருபெருநெருப்புக்கீர
மில்லைநீயொன்றுமெண்ணாதியம்புதியிதனையென்றான். (உரு)

போரறமலைந்துவென்றுபோதுதாற்பவங்களேழும்
வேரறவெல்லநிற்பான்வீடுறநின்றவெல்லை
வாரறவயமாவோட்டிவயங்குதேர்கடவிச்சென்று
பேரறன்மைந்தனுவிற்பிழையறப்பேசுவானே. (உசா)

*அத்தனேயடுவல்லாண்மையச்சுவத்தாமாவென்னு
மத்தவாரணத்துக்கையோமாருதிசிங்கமானு
னெத்தனைகோடிசேனையிக்களத்திறந்ததந்த
வித்தகன்மலைந்துசெற்றவிரகையென்சொல்வதென்றான். (உஎ)

தீதிலானுரைத்தமாற்றஞ்செவிப்படுமளவினெஞ்சிற்
கோதிலானெடுத்தவில்லுங்கொடியவெங்கணையும்வீழ்த்திப்
போதிலானிறந்தான்போலும்புதல்வனென்றினைதலின்றி
யேதிலான்போலநின்றான்யார்கணும்பந்தமில்லான். (உஅ)

முள்ளியனுளக்கோயின்முனிநடுத்தலையைமுன்னங்
கிள்ளியபினகபாணிகிரீசனேடொத்தவீரன்
றுள்ளியபரித்தேர்த்திட்டத்துய்மனதம்புசென்று
தள்ளியதப்போதந்தத்தவமுனிதலையையந்தோ. (உகூ)

வேறு.

பட்டனன்வாசபதிநிகர்சேனபதியென்னக்
கெட்டதுநாககேதனன்வீரங்கிளர்சேனை
தொட்டவில்லாண்மைத்துரககதாமாவெதிரோடிக்
கட்டழல்வேள்வித்தாதையிறந்தகளங்கண்டான். (கூ0)

கண்டான்வீழ்ந்தானம்முனிபாதங்கமழ்சென்னி
கொண்டான்மோதிக்கண்பொழிநீரிற்குளித்திட்டான்
வண்டார்சோரமண்ணுடல்கூரவன்னஞ்ச
முண்டார்போலவெண்ணமழிந்தானுளநொந்தான். (கூக)

---

*அத்தனேயெனும்வல்லாண்மையென்றும்பாடம்.

வன்பின்மிக்கவிடுமனுன்னைமன்னுகென்
றன்பினிப்பாராளவுமன்றேயருள்செய்தான்
முன்பினென்னவுவமையிலாதாய்முடிவாயோ
வுன்பின்வந்தேனுன்னையிழந்துமுய்வேனே. (கூஉ)

வில்லாய்நீவெம்போர்முனைவெல்லும்விறலாய்நீ
சொல்லாய்நீதொல்வேதியருட்குந்தொழிலாய்நீ
வல்லார்வல்லகலைகளனைத்தும்வல்லானே
யெல்லாமின்றேபொன்றினவுன்றேடைந்தாயே. (கூக)

வேறு.

கற்கொண்டுகன்மழைமுன்காத்தகள்வன்கட்டுரைத்தமொழிப்படியேகருதார்போரின், முற்கொண்டவிரதமறந்தியாருங்கேட்பமுரசுயர்த்தோன்பொய்சொன்னான்முடிவிலந்தச், சொற்கொண்டுவெறுங்கையனுமைவிற்றிட்டத்துய்மனெனநின்றகுருந்துரோகிகொன்றான், விற்கொண்டுபொரநினைந்தாலிவனேயல்ல விண்ணவர்க்குமெந்தைதனைவெல்லலாமோ. (கூச)

இப்புதல்வன்றிருத்தாதைபாடுநோக்கியிவ்வகையேயிரங்குநனுமிராசராசனப்புதல்வன்றன்னையெடுத்தாற்றித்தேற்றியம்புயக்கணருவிதுடைத்தளிசெய்காலை, யெப்புதல்வருடனும்விறற்குந்திமைந்தரியாவரையுஞ்சென்னிதுணித்தியாகசேனன், மெய்ப்புதல்வன்றனையுமறமலைவனென்னுவில்லனைத்தான்சொல்வளையாவேதநாவான். (கூரு)

பாகசாதனன்மதலைதெய்வப்பாகன்பாகடருநெடும்பனைக்கைப்பகட்டின் மேலான் மேகமேனியன்விமைவிற்றங்கள்சேனைவேந்தையெலாஞ்சென்றெய்திவில்வாள்வேலும், வாகனுதியுமகற்றினின்மினென்னமாருதிமைந்தனையொழிந்தோர்மண்ணின்மீது, யோகஞானியராகியனைத்துளோருமொருவரைப்போனிராயுதராயொடுங்கிநின்றார். (கூசா)

மாற்றரியமறையொடுநாராயணான்றன்வாளிதொடுத்தனுமந்தவாளியூழிக்
காற்றெரியோடெழுந்ததெனக்கார்கோண்டொண்டுகாரேழுமதிர்ந்ததெனக்கனன்றுபொங்கி, யேற்றரிபோற்குழாங்கொண்டவயவர்தம்மையெய்தியபோதனைவருந்தம்மிதயமொன்றிச், சாற்றரியவுணர்வினராயேத்தியேத்தித்தாடோய்செங்கரமுகுளந்தலைவைத்தாரே. (கூஎ)

பாருருவித்திசையுருவியண்டகூடம்பாதலத்தினுடனுருவிப்பரந்துசீறி, யோவொருவருடலின்மிசைமயிர்க்காறூறுமோவொருவெங்கணையாய்வந்துற்றகாலை
நேரொருவர்மலையாமற்றருமன்சேனைநிருபரெலாநிராயுதராய்நிற்றல்கண்டு, போருருவமுனிமைந்தன்றொடுத்தவாளிபொருபடைகொண்மாருதிமேற்போனதாலோ.

காற்றின்மதலையுந்தனதுதடந்தேருந்திக்கண்சிவந்துமனங்கருகிக்கால்வில்வாங்கிச், கூற்றமெனவெதிர்சென்றுமுனிவன்மைந்தன்கொடுங்கணையைமதியாமற்கடுங்கணுள்ளன், வேற்றுருவங்கொடுகனலிமுதலாவுள்ளவிண்ணவர்தம்பகழிகளாய்மேன்மேல்வந்த, மாற்றரியபகழிகளையொன்றுக்கொன்றுமாறுனபகழிகளான்மாற்றினனே. (கூகூ)

மூச்சினாலடியுண்டுங்கடுங்கட்கோபமூதுகனலாலெரியுண்டுமுனைகொள்வாளி
யோச்சினாலொடியுண்டுங்குனித்தவிற்காலுதையினாலுதையுண்டுநெடுநாணோசை
வீச்சினாலறையுண்டுங்கடகவாகுவெறபினாலிடியுண்டும்வெகுளிகூரும்
பேச்சினால்வெருவுண்டும்படாததுண்டோபேரனிலன்மகனாலப்பெருமன்வாளி.

தாள்வலியாலெனைப்பலபல்வினைசெய்தாலுந்தப்பமொணாவிதிபோலத்தடந்தோள்வீமன், றோள்வலியால்விலக்கவுமத்தொடைபோய்வாசத்தொடைமிடையார்பகமணுகச்சுராரிதோள்கள், வாள்வலியாலரிந்தபிரான்கையில்வில்லும்வாளியும்வாகனமுமுடன்மாற்றுவித்தா, னாள்வலியார்தமைச்சிலராற்கொல்லலாமோநாரணன்சாயகமிகவுநாணிற்றன்றே. (௪௧)

வேறு.

விட்டவெம்பகழிநாணிமீளுதலும்வில்லின்வேதமுணர்முனிமகன்
வட்டவெஞ்சிலையின்மீதுபாசுபதவாளிவைப்பதுமனஞ்செயா
முட்டவன்பினொடுநின்றகாலையில்வியாதனென்றுரைகொண்முனிவரன்
றொட்டதண்டுமிதியடியுமாகியுயர்சுருதிவாய்மையொடுதோன்றினான். (௪௨)

நின்றசாபமுனிமைந்தன்வந்தமுனிதிருபனைப்பரமனிகமெனச்
சென்றுகைதொழுதுபரசிடப்பரிவுதீர்கருத்தினொடுசெப்பினா
னன்றுபோரிலழியாகசேனன்மகனபூலினாடுவருசாபமும்
வென்றிவாகைபுனைவிசயனோடுகருமேகவண்ணன்வருவிதியுமே. (௪௩)

வரத்தினாலுனதுதந்தைபோரினின்மடிந்ததன்றியொருவயவர்தஞ்
சரத்தினாலவனைவெல்லவல்லவர்தராதலத்தின்மிசையில்லையா
லுரத்தினால்விறன்மயூரவாகனனையொத்தவீரவினியுள்ளுறச்
சிரத்தினாலரனையடிவணங்கியிடர்தீருமாறுநனிசிந்தியாய். (௪௪)

ஒன்றவைம்புலனைவென்றுநீடுதவமூரிமையிற்புரிதியுற்பவம்
பொன்றவென்றுறுதிகூறியன்பொடுபுகுந்ததெய்வமுனிபோதனு
மன்றவென்றுமிவர்செற்றதிற்சதமடங்குசெற்றனர்களின்றெனு
நின்றவென்றும்வெளிநிற்றலஞ்சிநெடுநீலவேலையின்மறைந்ததே. (௪௫)

இருள்பரந்ததினியமையுமிற்றையமரென்றுதுன்றுகழலிட்டதா
ளருள்பரந்தவிழியறனின்மைந்தனொடுசேனைபாசறையடைந்தபி
னுருள்பரந்தரததுரககுஞ்சரபதாதியோடுகடிதோடினான்
மருள்பரந்ததனிநெஞ்சனாகியடன்மன்னர்மன்னனெனுமன்னனே. (௪௬)

தனதுபாசறையிலானவக்குரிசில்சஞ்சயன்றனையழைத்துநீ
நினதுகாதலுயிரனையவெந்தைதனைநிசிதனிற்கடிதினெய்தியே
புனைதுழாய்மவுலிவிரகினான்முரசுயர்த்தபூபனுரைபொய்த்தது
மெனதுவாழ்வுவலிவென்றிதேசுறுதியாவுமாமுனியிறந்ததும். (௪௭)

தனஞ்சயன்றலைதுணிக்கநின்றவரிசாபகோபமுதிர்சாயகத்
தினஞ்செய்நாதனருள்செல்வமாமதலைசேனைநாதனினியாவது
மினஞ்செய்வண்டுமுரலுமமார்பனொடியம்பிமேனிகழ்வயாவையு
மனஞ்செய்திவ்விரவுபுலருமுன்கடிதின்வருகவென்றனன்வணங்கியே. (௪௮)

அந்தவந்தணனுமந்தனோடுவையனைத்துமோதியபினந்தனுஞ்
சிந்தைநொந்தழுதிரங்கியாவும்வினைசெய்திரங்குவதுதீதென
மந்தணம்பெருகவெண்ணிமீளவிடவந்துநள்ளிருளின்மைந்தனுக்
குந்தைதந்தவுரையிதுவெனப்புரையிலுரைபுரோகிதனுமோதினான். (௪௯)

புதல்வனைதிறலங்கர்பூபனிருள்புலருமுன்பொருபடைக்குமா
முதல்வனாமெனமகிழ்ந்துவாளிரவிமுந்துதேர்கடவியுந்தினா
னதலமாதியுலகேழுமாளுடையவரவின்மாமணியனைத்தும்வந்
துதயமால்வரையினுச்சியுற்றதுகொலென்னமேதினியுரைக்கவே. (௫௦)

பதினைந்தாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள்— ௩,எ௨௧

துரோணபருவமுற்றுப்பெற்றது.

——:(o):——

உ

எட்டாவது

கன்னபருவம்.

பதினாறாம்போர்ச்சருக்கம்.

மாதுலனாகியுமேதிலனாகியவஞ்சககஞ்சன்வரவிட்ட
பூதனைதன்னுயிர்முலைபொழிபாலொடுபோதரவுண்டபுயல்வண்ணா
மாதவயாதவவாசவகேசவமாயாவாயாமதுசூதா
வாதியுமந்தமுமாகியநின்புகழல்லாதுரையேனடியேனே. (௧)

கங்கைமகன்சிலையின்குருவென்பவர்காதிமலைந்தேதகைபற்றா
ரிங்கினியென்னுயிர்நண்பனையல்லதுவெல்லவல்லோரிலரென்றே
யங்கர்பிரானைவருந்தினியின்பதியாகென்றருள்செய்தவனோடும்
வெங்களமுற்றனனஞ்சுமிழுங்கொடிவேகநாகவிறலோனே. (௨)

சொற்றவரூததுரோணனைமௌலிதுணித்ததிட்டத்துய்மன்னுங்
கொற்றவரைவருமற்றுளபூபரும்வைனதேயக்கொடியோனு
முற்றெழுகசரததுரகபதாதிகளானசேனையுடனேசென்
றிற்றையருஞ்சமம்வெல்லுதலெங்கடனென்றுதுன்றியெதிர்கொண்டார். (௩)

கற்கியும்வண்டினமொய்க்கமதம்பொழிகரியுந்தேருங்காலாளும்
பொற்கொடியுங்குடைவர்க்க*முமாலையுமொன்றாரெண்ணும்பூபாலர்
நிற்குநிலந்தொறுநிற்குநிலந்தொறுநின்றுநின்றுவினைசெய்ய
மற்கெழுதிண்புயவர்க்கன்மகன்பெருமகரவியூகம்வகுத்தானே. (௪)

*முன்னுளரென்னும்பூபாலர் என்றும்பாடம்.

பானுவின்மைந்தன்முனைந்துமகீபதிமைந்தன்சேனாபதியானான்
போனவருஞ்சமர்போகதனித்தனிபொருதுவேறும்போரென்றே
சேனையின்மன்னவர்யாவரும்வெம்பரிமாவின்மேலுந்தேர்மேலும்
யானையின்மேலுமிருந்தவரவ்வவர்தம்மோடம்மவிகலுற்றார். (ரு)

நாமமிரண்டொடுபத்துடைநாயகனவிலவெஞ்சேனையினாதன்
பாமருகொற்றவரூதினிவேலையைமருவாரஞ்சிவெருவெய்த
நேமிவியூகமதாகவகுத்திடைநின்றுபோர்செய்நிலயத்தில்
வீமன்வயம்புனைதேரினைவிட்டொருவெம்போர்வேழமேல்கொண்டான். (சு)

அடிக்கைகனத்துமதம்பொழியாழியினளவும்புகராலழகெய்தி
மடிக்கினுமண்ணுறுகையதுசெந்நிறவாயதுதேயாமதிதன்னை
யொடித்திருபக்கமும்வைத்தெனமகரிகையொன்றியொன்றியொன்றார்மெய்
யிடிக்குமருப்பதுபுன்னையினுண்மலரென்னுஞ்சீரதிருகண்ணும். (எ)

திலகமுமோடையுமிலகுறுநெற்றியதாலவட்டச்செவியாலே
பலதிசைமாருதமுய்ப்பதுசெம்புகர்பட்டின்றொழிலிற்பயில்கிற்ப
துலகினைமேல்கொளுமவனதெனக்களியூறியதாலங்குலமொத்துக்
குலவியமத்தகமொத்தகழுத்திலுயர்ந்ததம்பொற்குவடென்ன. (அ)

உரத்தினின்முச்சுழியுடையதுதாள்வலிகற்றாணைப்பென்றுரைசெய்யுந்
தரத்ததுவெண்ணெய்நிறத்தநகத்ததுதண்ணந்துளவனிலையொத்த
திரத்தினதாமைகிடந்தவெனும்புறவடியதங்கந்திண்ணென்றே
யுரத்ததுநல்லுதரத்ததிளங்கமுகொத்ததம்மவாலதி. (கூ)

தூணும்விலங்குமுறிப்பதுபாகுபரிக்கோல்யாவுந்தூரத்தே
காணினுநின்றுகொதிப்பதுதன்னிழல்கண்டுசீறுங்கருத்தது
நீணடமுதலியதொழிலொருநாலுநிரந்ததுமேருநிகரென்னச்
*சேணுயர்போதரவெழுமுழமுடையதுதெவ்வரஞ்சுமவ்வேழம். (க0)

ஆசிலருந்திறலாசுகன்மைந்தனுமாண்மைக்கெண்ணுமடல்வீரன்
காசிநரேசனு†மேழுயரேழ்மதமாரிசிந்துங்கரிமேலோர்
தூசியின்வந்துமுனைந்துமுனைந்திருதோளுந்தோளும்போர்செய்ய
வாசவரோரிருவோரிருகார்மிசைமலைவதென்னமலைவுற்றார். (கக)

வேறு.

அங்குசம்வார்த்தைவன்றாளடைவினிற்பயிற்றியேனை
வெங்கதிநடையோடோட்டம்விதமுறவிரைவிற்காட்டி
யங்கசாரியினானன்னூலறிஞர்கொண்டாடவூர்ந்து
செங்கையிற்சிலையுங்கோலித்தீவிழித்துடன்றுசேர்ந்தார். (கஉ)

கோடுகைமுதலாவொன்பதுறுப்பினுங்கோறல்வல்ல
நீடுயர்மாவுமாவுநெருப்பெழமுனைந்துசீற
வாடவர்தாமுமெண்ணிலப்புமாமழைகளேவிச்
சேடனுமமரர்கோவும்வெருக்கொளச்செருசெய்தாரே. (க௩)

---

* சேணுயர் பேரளவுடைய திறத்தது என்றும் பாடம்.
† ஏழுயர் வெம்மதமாரி என்றும் பாடம்.

ஆசுகன்குமரன்வல்விலாசுகம்பொருமலஞ்சிக்
காசிமன்கேமதூர்த்திகாயயிலொன்றுவாங்கி
வீசியக்காளைமார்பினெறிதலும்வீமனேவொன்
றேசிலவ்வேலுந்தெவ்வன்யானையுந்துணியவெய்தான். (கச)

கேமனக்கரியினின்றுங்கிரியினின்றிழியுமாளி
யாமெனத்தரணியெய்தியடல்வயிர்த்தண்டொன்றேந்தி
வீமனன்றார்ந்தவெங்கைவெற்பினைப்புடைத்துவீழ்த்தான்
பூமருதாரினானும்பூவின்மேற்சுரும்பிற்பாய்ந்தான். (கரு)

கரியமர்க்கொருவரானவிருவருங்காலினின்று
பரியவக்கதைப்போர்வல்லபார்த்திவர்பலருங்காணக்
கிரியொடுகிரிசெய்பூசலிதுவெனக்கிளக்குமாறு
புரிவிலார்பொருதபோர்மற்றியாவரேபுகலவல்லார். (கசு)

தண்டொடுதண்டமேந்திச்சாரிகைபலவுங்காட்டிக்
கொண்டலின்முழக்கிதென்னக்குரைகடலொலியிதென்னக்
கண்டவர்க்கன்றிக்கேட்டார்க்குரைப்பருங்கணக்கிற்றாக்கிக்
கொண்டுவன்காயமொன்றாற்கேமனைவீமன்கொன்றான். (கஎ)

எறிந்ததண்டமரிற்கேமனிறந்தனனென்றபோழ்தின்
முறிந்ததுவேலைஞாலமுழுதுடைநிருபன்சேனை
யறிந்தெதிரூன்றிவென்றியாண்டகைக்கன்னன்மீளப்
பிறிந்தபல்லணியுமொன்றப்பேரணியாக்கினின்றான். (கஅ)

பேரணிகலஞ்சேர்மார்பன்பேரணியாக்கின்ற
போரணிமிக்கசேனைப்பொலிவுகண்டொலிகொள்வண்டார்
தாரணியலங்கன்மௌலித்தருமன்மாமதலைசேனை
யோரணியாகக்கூடியுடன்றெதிர்நடந்ததன்றே. (ககூ)

வேறு.

மகரிகையுமிருபணைகளும்விரிநுதன்மருவுகலனொடுமினலெனவொளிவிட
விகலியளிமுரலிருசவுளினுமுடனிழியுமதமழைகுமிழிகளெழவெழ
வகலமுடையனமுதுகிருபுடையினுமணியுமணிகணகணவெனவதிர்தரு
ககனமுகிலெனவுயர்வடிவுடையனகதியின்விததியின்முடுகினகரிகளே. (உ0)

நிறனின்மிகுவனநவமணிகளினியனெடியகொடுமுடிநிகர்வனமகுடமு
மறையுமருவிலையுவமைகொள்சவரமுமடவிநிகரெனவசைவுறுதுவசமு
முறையினறைகமழ்தொடைபடுமலர்களுமுடுகுமிடனுடைமுழைகளுமுடையன
விறகர்கொடுபலமலைதிரிவனவென*விகலிவிசைபெறநடவினவிரதமே. (உக)

அடலில்வலிமையில்விரைவினிலுயர்வனவகிலபுவனமுநொடியினில்வருவன
பொடியின்மிசைவெளிபுதைதரவிடுவனபுணரியிடையலைபலையொடுபொருவன
மிடலிலடுபடைபடிதரநிமிர்வனவிரியுநறுமலர்கமழ்முகவுயிரன
படியிலொருபடிநிலையறுகதியனபவனமெனநனிபரவினபரிகளே. (உஉ)

* இகலியிசைபெற என்றும்பாடம்.

அரியவிலையனவணிகலனடையவுமறலின்முழுகினவருநவமணியென
வரிவின்முதலியபலபடைகளுமுடல்வலியசெலவுறுபவனசகுலமென
நெரியவருவனவகைபடுமிடலணிநிமிரவெழுவனநிரைகெழுதிரையென
விரிவினளவறுசலநிதிநிகரெனவெகுளிமிகுகதிகடுகினர்விருதரே. (௨௩)

முரசுகரடிகைகிணைதுடிபெருமரமுருடுபடுபறைமுதலியகருவிக
ளரசவரிவளைகொடுவயிரெழுகுழலரவவிருதுகண்முதலியகருவிக
ளுரைசெய்கருவிகண்முழுவதுமெழுவகையுலகமுடிவுறவுகவிறுதியிலெழு
கரைசெய்கடலெனவெறிவளியெனமிசைகளுலியுருமெறிகனமெனவதிரவே. (௨௪)

எறியுமுரசமுமெரிவிழியுரகமுமெழுதுகொடியுடையவரிருபடையினும்
வெறிகொண்மதமலைகளுமதமலைகளும்விசயமிகுவனவிரதமுமிரதமு
நெறிகொணவகதியிவுளியுமிவுளியுநிருதர்குலநிகர்விருதரும்விருதரு
நறியதொடைமுடிநிருபருநிருபருநடலையமரிடையடலுடனுடலவே. (௨௫)

இரவிமதலையுமிரவிதன்மதலையரிருவர்மதலையுமிருவருமெதிரெதிர்
புரவிமிசைவிசைபடவலமிடநிகழ்புரிவினுடனமர்பொருபலகதிகளி
னரவினதிபதிமுடிகெழுசுடிகையினருணமணிவெயிலவனியிலெழநனி
பரவியிருள்வரநிரைநிரையெழுதுகள்பகல்செயொளிவெயில்பருகினசெருகியே. ( )

அசைவிறுநடையடிகசைகுசையுளநினைவறியுமுணர்வினவளமையுமுடையன
வசையில்சுழியனபழுதறுவடிவினவருணமொழிகுரன்மனவலிமிகுவன
விசைகொள்பலகதியினும்விரைவுறுவனவிபுதர்குலபதிவிடுபரிநிகர்வன
விசைகளொருபதுதிசைகளுமெழுதியவிறைவரிருவருமிசைகொளுமிவுளியே. ( )

முடியுமொருகவிகையுமிருகவரியுமுதிருமெரிவிடமுரணரவெழுதிய
கொடியுமுடையவனெனுவனுமுரசுயர்கொடியிலெழுதியகுருபதியிளவனு
நெடியவரிசிலைநிலைபெறவளையவுநிமிரவிடுகணைநிரைநிரைமுடுகவு
மிடியிலெழுமடியதிர்குரல்விளையவுமிவுளியமர்கடிதிகலொடுபுரியவே. (௨௮)

நகுலன்விடுகணைவிதரணகுணபதிநடவுகுரகதநடைபயில்குரமற
விகலும்வரிசிலைநடுவறவடமறவிடுகவசமறவெழுதருமிருபுய
சிகரிபுதையவுமுரமுழுகவுநுதறிலகமெனவொளிதிகழவுமலைதலின்
மகிழ்வுசினமெனுமிருகுணமுடன்மனமறுகநிலனிடைவலனுறவிழியவே. (௨௯)

இழியுமளவையின்வினையுடைவலவனொரிரதம்விரைவொடுகொடுவரவிரிகதிர்
பொழியுமிளவெயிலிரவிமுனுதவியபுதல்வன்விறலொடுபுகுதலுமுயர்பரி
யொழியநகுலனுமொருதனிரதமிசையுபரிசரரெனவுரனொடுபுகுதர
விழியின்மணிநிகர்வலவனும்வலவனும்விசையகுரகதம்விசையொடுகடவவே. (௩௦)

கடவுமிரதமுமிரதமு*முபர்கதிகடுகிவருதலுமிருவருமிருசிலை
யடரவளைவுறநொடியினிலெயிறுடையயில்கொள்பகழிகளளவிலசிதறினர்
புடவியுறவகல்வெளிமுழுவதுமிவர்பொழியுமழையெழுபுயன்மழையெனவிழ
வுடலமுகுகுருதியினணியினரருகுதவிசெயவருதரணிபருருளவே. (௩௧)

* உருள்கதிகடுக என்றும் பாடம்.

இருவர்பரிகளுமுரானுறமுழுகினவிருவர்வலவரும்விழவெரிகதுவின
விருவரிரதமுமழியமுன்முடுகினவிருவர்துவசமுமறவிசைகடுகின
விருவர்சிலைகளுநடுவறமருவினவிருவர்கவசமுமிடையிடைகெழுமின
விருவர்கவிகையுமறிதரவருடினவிருவருடலமுமெழுதினகணைகளே. (௩௨)

வேறு.

கன்னனும்பரிநகுலனுந்தமகாவினின்றிடவே
பின்னரும்பொருபாகர்தந்தபிறங்குதேர்மிசையார்
முன்னரம்புதொடுத்தபோரினுமும்மடங்குபொர
மன்னர்யாருமதிக்குமாறுமலைந்துபோர்செயவே. (௩௩)

அல்லிநாண்முகையம்புயங்களலர்த்துநாதன்மகன்
சொல்லினாலுயபாயுள்வேதியர்சுதனையின்றமரிற்
கொல்லினாதவறுங்கொலென்றொருகோலினாலழியா
வில்லினாணழியாநடக்கெனமீளவிட்டனனே. (௩௪)

நின்றமாநகுலற்குவன்றுணையாகிநின்றிடலான்
மன்றன்மாலைவிசாலமார்பினன்மகதபூபனையும்
வென்றிவேன்முருகற்குநேர்புகழ்விடதரன்றனையுங்
கொன்றுவாசவன்மைந்தன்மாமுனைகுறுகவேகினனே. (௩௫)

மடங்கன்மேலெழுமதமுமேலிடவருபணைக்கரிபோல்
விடங்கொள்சாயகவில்லிசென்றுதன்விற்குனித்தடுபோர்
தொடங்குமுன்பலர்வில்லெடுத்தவர்சொல்லும்வில்லியவன்
றிடங்கொண்மார்பினிலம்பிரண்டுதெரிந்துவிட்டனனே. (௩௬)

அருணவெங்கதிராயிரத்தவனன்பினாலுதவுங்
கருணனுஞ்சிலபகழியோரிருகண்ணர்மார்பில்விடா
வருணமும்பெயரும்பிறிந்திலர்மனனுமொன்றெனவே
தருணவாணிலவெழநகைத்துரைதந்துபோயினனே. (௩௭)

அன்றுபோர்புரிசேனையின்பதியானவீரனைநீ
யின்றுபோயினிநாளைவாவெனவினிதியம்பினனால்
வென்றிகூர்வரிவின்மையாலடல்வெவ்வரக்கரைமுன்
கொன்றகாளையையொத்தபேரிசைகொண்டவாண்மையினான். (௩௮)

அல்லியம்புயமனையகண்ணினனநசனுங்குனிவிற்
சல்லியன்பெயரெனவிளங்கியதானைமன்னவனும்
பல்லியங்கடிவைப்பநீடுபணைப்பகட்டுடனே
வல்லியப்பொருமாறெனப்பொரமாறிலாரொருபால். (௩௯)

மாறனுக்கிளையாமலம்பையைமாதவத்துவிடுந்
தீரனுக்குமொராழிகொண்டுசெலுத்துதேருடைவெஞ்
சூரனுக்கெதிராகிமேனிதுலங்குசேரனெனும்
வீரனுக்குமிகுத்தபேரமர்விளையவேறொருபால். (௪௦)

முழுதுணர்ந்தருண்முனிவரன்புகன்மும்மைவண்டமிழும்
பழுதறும்படிதெளிஞரேறியபலகையொன்றுடையான்
வழுதியுந்தனிமதிநெடுங்குடைமன்னன்மாதுலனும்
பொழுதுசென்றிடுமளவும்வெஞ்சமர்புரியவேறொருபால். (௪௧)

குரவர்சொற்கண்மறுத்துவன்பொடுகொண்டபாருடையா
னரவுயர்த்தவனுக்கனந்தரமானதம்பியுடன்
கரவுசற்றுமிலாதசிந்தையன்வாயுவேககதிப்
புரவிவித்தகனிளவல்சென்றமர்புரியவேறொருபால். (௪௨)

வேரியம்புயன்வேதம்யாவையும்வில்லின்வேதமும்வல்
லாரியன்றருகடவுண்மைந்தனுமனிலன்மைந்தனுமே
தூரியம்பலகோடிகோடிதுவைப்பவெஞ்சமரே
காரியம்பிறிதில்லையென்றுகலந்துமோதினரே. (௪௩)

சுரருலோகமகிழ்ந்தணைந்ததுரோணன்மாமகன்மேல்
வருசதாகதிமகனைநாலிருவாளியேவிவெகுண்
டிரதநேமிகுலைந்துசூதனொடிவுளிநாலும்விழப்
பொருதுசீறினன்முற்பயந்தபுராரியேயனையான். (௪௪)

மீளமற்றொருதேரிலேறியவீமன்வெஞ்சினமேன்
மூளமற்புயகிரிதடித்திடமூரிவில்வளையா
வாளமொப்பெனமற்றவன்கொடிவாசிபாகொடுதேர்
தூளமுற்றிடமுதுகிடும்படிதொட்டனன்கணையே. (௪௫)

கருதிவாய்த்ததுபோரெனுமெய்களித்தகைகயனுஞ்
சுருதிகீர்த்தியுமுடன்மலைந்துதொடங்கினாரொருபாற்
கிருதபார்த்திவனுடன்மலைந்துசிகண்டிகெட்டனன்மா
விரதமேற்கொடியாடைவீழ்தரவேகினானொருபால். (௪௬)

தருமபூபதிசேனையின்பதிசாபவாசிரியன்
கிருபனோடுமலைந்துவெஞ்சமர்கெட்டுநீடிரதம்
புரவிபாகுதரித்ததிண்சிலைபொன்றவன்றுயிரோ
டரிதுபோயினன்வேள்வியாகுதியங்கிவாய்வருவோன். (௪௭)

திங்களைத்தலையாகமன்னவர்செப்புமாமரபோர்
தங்களிற்பகையாகிவானவர்தானவர்க்கெதிரா
யெங்களுக்கெழுபாரடங்கலுமென்றுபோர்புரியும்
வெங்களத்தினியற்கையெங்ஙன்வியந்துகூறுவதே. (௪௮)

வேறு.

இற்றகைகால்செறிகளமுழுதுங்கழுகிட்டனகாவணமே
*யுற்றதுகொள்ளலகைக்குலம்வெங்களமுறைபெருகாவணமே
வெற்றுடன்மன்னர்சரிந்த†குடைக்கண்விரிந்தனசாமரமே
கொற்றமிகும்பறையோசையழிந்துகுலைந்தனசாமரமே. (௪௯)

---

* உற்றனகொள் என்றும் † குடற்கண் என்றும் பாடம்.

மின்புயல்வாய்விரிகின்றனவொத்தனவிரிநுதலோடைகளே
யென்புறவூறிவிழுங்கடதாரையினேயினவோடைகளே
முன்புடைவாலதிசெற்றதும்வெம்புகர்முகமுழுகுஞ்சரமே
வன்புடைமால்வரைமறிவனபோலமறிந்தனகுஞ்சரமே. (ரு0)

பட்டமணிந்தநுதற்கிடையேவிழுதும்பிகள்பட்டனவே
தொட்டியுடன்பொருசமர்முனைசீறியதும்பிகள்பட்டனவே
வெட்டியறன்புதல்வன்றன்வரூதினிவென்றுகளித்தனவே
யிட்டகுமண்டையபேய்பிணமிக்கனவென்றுகளித்தனவே. (ருக)

பழுதறவீழ்படைமன்னவர்பேருடல்பற்பலவம்பினவே
பொழிகுருதிப்புனன்மூழ்கினர்மேனிபுலாவினவம்பினவே
தழல்விழிவாரணவீரர்முடித்தலைதடிவனசக்கரமே
யழலுமிழ்வாளிகள்சுற்றினமீளவுமாவனசக்கரமே. (ருஉ)

முழுகியவாளிகள்குழுமியவீரர்முகத்தினவெண்ணிலவே
விழிவழிதீயெழமுறுவல்பரப்பவிரித்தனவெண்ணிலவே
யுழைமழைவீழ்வனபலபடையெங்குமுமிழ்ந்தனவெவ்வெயிலே
யழிவில்வரூதினிசூழெழுயிலுக்கெதிராவனவெவ்வெயிலே. (ருங)

சரமழைகாவலர்தங்கண்மனேவனசம்புகமேயினவே
யிரைகவர்புள்ளினெடுள்ளூறவாவனசம்புகமேயினவே
வரைசிறகற்றுவிழுந்தனவென்னமறிந்தனவாரணமே
யருகுநடிப்பனவலகைகள்பாடவயாமளவாரணமே. (ருச)

செயிருடையாடவர்சோரிபரந்துசிவந்ததுபாரிடமே
வயிறுபெருங்குருதிச்சுனையாகவளர்ந்தனபாரிடமே
பயிலமறைத்தனபாறுபருந்தொடுபலகழுகந்தரமே
யெயிறுடைவாளிதுணிப்பவிழுந்தனவெத்தனைகந்தரமே. (ருரு)

உம்பலநேகமிளம்பிடியென்னவொடிந்தனகோடுகளே
செம்புனல்யாறிருபக்கமும்வீழ்குறைசெய்தனகோடுகளே
தும்பிகளாலறையுண்டனகொற்றவர்சூழ்மனவம்புயமே
வெம்புகர்வாளிலழிந்தனமால்வரைவிதமனவம்புயமே. (ருசா)

தாள்வலியாடவர்சிரமுருளும்படிதைத்தனசாயகமே
யாழ்குருதித்தடமொத்தனவவரவரவ்வுடல்சாயகமே
யேழ்புயல்வானமிருண்டிடவெங்குமெழுந்தவிருந்துகளே
வீழ்பசியாலுழல்பேயொடுபாரிடமிக்கவிருந்துகளே. (ருஎ)

செய்கடலாமெனவந்துசிவந்தகவந்தமலைந்தனவே
கைகொடுகால்கொடுதம்மின்வெகுண்டுகவந்தமலைந்தனவே
யைவகையானகதிக்குரநாலுமழிந்தனவாசிகளே
மெய்வகையாலிவைகூரெரிகோல்விடும்வீரர்கைவாசிகளே. (ருஅ)

தாரைகளொற்றைறதயங்கியநீள்வயிர்சங்கமுழக்கினவே
யோரிமையிற்சிலயானைதுரங்கமசங்கமுழக்கினவே
சேரவளைத்தவிலொன்றொருகோடிசிலீமுகமேவினவே
வீரருயிர்ப்புடல்விட்டரமங்கையர்மெய்ம்முகமேவினவே. (௫௯)

பொருகடலொத்தபெருங்குருதிக்கடல்போதவிரைந்தனவே
விரவுறுதேவர்விமானம்விசும்பிடைபோதவிரைந்தனவே
கருமுகின்முட்டினபட்டவர்கட்கனல்காலுமரும்புகையே
சுரிகையொடற்றுவிழுந்தனமங்கையர்துனியிலரும்புகையே. (௬௦)

கடகரியேனமொடொத்தனவம்பொடுபோனகரத்தனவே
புடவியின்மீதுறைநிறைமதியம்பலபோனகரத்தனவே
படுதிறல்வேலவர்கண்மணிசென்றுபரித்தனவாயசமே
யடுபணியானையின்வெங்குடர்சென்றுபிடுங்கினவாயசமே. (௬௧)

அணிதொடைதேன்மதுகரநிரைசாலவருந்தவிளைத்தனவே
மணிமுடிபாரமுறப்பலநாகம்வருந்தவிளைத்தனவே
கணைபலவீரர்முகத்தனதோளனகண்ணனமார்பனவே
நிணமொடுமூளைநெடுங்குடர்பூதநிரைக்கணமார்பனவே. (௬௨)

ஆவமொடொத்தனவாடவர்நெஞ்சுகளாகியபோதகமே
பூவலயத்துடலாருயிர்வானிடைபுக்கனபோதகமே
மேவுநரிக்குவிளைந்தனவெங்கரிவீழ்தலையோதனமே
நாவலருக்குமுரைப்பரிதந்தநனந்தலையோதனமே. (௬௩)

வேறு.

பேராண்மைசெய்சேனாபதிபின்னிட்டிடுமுன்னே
தேராண்மையும்வில்லாண்மையுமுடையானெதிர்செல்லத்
தாராரகல்வரைமார்பினர்சஞ்சத்தகர்தாமு
நாராயணகோபாலருமணியாகநடந்தார். (௬௪)

சட்கோணநெடுந்தேர்மிசைவருசத்தியசேனன்
புட்கோவெழுதியசீர்பெறுபொன்னங்கொடிவலவன்
றுட்கோடுளமறுகும்படிசுடுதோமரமொன்றான்
முட்கோலுடன்வடமுஞ்சிதைவுறமோதினன்முரணால். (௬௫)

புடையுண்டுளமுருகிப்புயல்போல்வண்ணனகைத்துத்
தொடையுண்டமலர்த்தும்பைசுமக்குந்திரடோளா
ருடையுண்டதொர்கடலாமெனவோடும்படியவர்மேற்
றடையுண்டதடந்தேரினைவிட்டான்முனைதரவே. (௬௬)

சென்றானமர்புரிசேனையுடன்சித்திரசேனன்
வன்றாள்வலிமிகுமந்திரபாலன்றனைவானோர்
தன்றாதையளிக்கும்பல்சரத்தால்விழமோதிக்
கொன்றான்மிடல்வழுவாதகுரக்குக்கொடியுடையோன். (௬௭)

முன்னாண்முதனானாலினுமுனைதோறுமுடற்றித்
தன்னாலுயிர்கவராதவர்சஞ்சத்தகர்யாரு
நன்னாரணகோபாலருநாகங்குடியேறப்
பொன்னாண்வரிசிலைகோலினன்மாலோனுயிர்போல்வான். (௬௮)

சஞ்சத்தகர்கண்ணன்றருதனயோர்பலரடைவே
யெஞ்சப்பொருதனன்வெஞ்சிலைபிமையோர்பதிமகனென்
றஞ்சிக்களமுழுதுங்கழுகாடக்குறையாடக்
குஞ்சத்தொடுகுடைவீழ்தரமுதுகிட்டனர்கூடார். (௬௯)

முதுகிட்டவர்துரியோதனன்முன்வீழ்தலுநூறைம்
பதுகற்கியுநாலாயிரம்விகடப்பொருபகடு
மதுகைப்படுதேராயிரமுங்கொண்டெதிர்வந்தா
னெதிர்கைப்படவொருமன்னருமில்லாவமர்வல்லான். (௭0)

குருமித்துநடக்கின்றனனிவனோடுகொடுங்கா
ருருமிற்பொருதுவமென்றுள*முகளித்தெழுமுனைமே
னிருமித்துநடந்தான்மனுநீதிக்கொருநிலையான்
றருமத்தினதுபிரென்றுரைதக்கோர்சொலமிக்கோன். (௭௧)

வேறு.

துனைவெங்கபோலவிகடகடகரிதுரகம்பதாதியிரதமளவில
வெனநின்றசேனைமுடுகியபில்சிலையெறிதுங்கவாளொடிகலியெழவெதிர்
குனிசங்குதாரைவயிர்கண்முதலியகுணில்கொண்டுசாடுபறைகண்முதலிய
தனிதங்கொண்மேகமெனவுமலைபொருதமரங்கொள்வேலையெனவுமதிரவே. (௭௨)

கதிகொண்டசேனைநடவவெழுதுகள்ககனஞ்சுலாவியனிலகதிபுற
முதிர்சண்டசூரகிரணமிருளெழமுகில்பஞ்சபூதவடிவுபெறவிய
னதிவண்டலாகவமரருறைதருநகரம்பொன்வீதிபுழுதியெழமுழு
மதிபங்கமாசுகழியநிரைநிரைவளரண்டகூடமுகடுபிதிரவே. (௭௩)

குதிகொண்டவாசிவயவர்பலரொடுகுதிகொண்டவாசிவயவர்குறுகினர்
துதிவெங்கைவேழமறவர்பலரொடுதுதிவெங்கைவேழமறவர்துதையின
ரதிர்சண்டவேகவிரதர்பலரொடுமதிர்சண்டவேகவிரதரணுகினர்
பொதிவெம்பதாதிவிருதர்பலரொடுபொதிவெம்பதாதிவிருதர்பொதுளவே. (௭௪)

புரிசெம்பொனேமிவிசையொடிருகிரிபொருவன்புபோலநவமணியினொளி
விரிதந்தசோதிபடலமிதுவனமிசைகொண்டதேர்கள்கடவவலவர்க
ளெரிசெங்கணாகவரசுமுரசமுமெழுதும்பதாகைநிருபரிருவரு
முரிதந்தசாபமுடுகுபகழிபின்முகிறங்குவானமுழுதுமறையவே. (௭௫)

அறன்மைந்தன்வாளியடையநயனமிலவன்மைந்தன்வாளிவிலகவிரகுடை
விறன்மைந்தன்வாளியடையவிரகிலிவிடுபுங்கவாளிவிலகமுறைமுறை
மறமும்பொருதசினமுமிருபுயவலியுந்தவாமலரிதுபொருதபி
னிறமொன்றுமேழுபகழிமுழுகினநிருபன்றன்மார்புகுருதிபொழியவே. (௭௬)

---

* உகளித்தெழமேன்மே, னிருமித்துமுனைந்தான் என்றும் பாடம்.

விரிகின்றநீலகிரியிலிளவெயில்விழுகின்றதாரையனையவழகொடு
சொரிகின்றசோரியுடையமகிபதிசுளிவின்றிமீளவொருகைநொடியினின்
முரிகின்றநீடுபுருவநிகரெனமுனைகின்றசாபமுரியவிரைவொடு
தெரிகின்றகோல்கண்முழுகியறனருடிருமைந்தன்மார்புகுருதிபொழியவே. (எஎ)

மருமங்கள்சோரிவடியவிருவருமலைகின்றபோதின்மதுகைநிலையொடு
தருமன்குமாரனகைகொடவனிபர்தலைவன்குமாரனுரகதுவசமு
மருமந்ததேரும்விசயவலவனுமடல்கொண்டுபாய்புரவியுமழிவுற
வுருமஞ்சநாணியெறியுமொலியெழவொளிவிஞ்சுநாலுபகழியுதையவே. (எஅ)

இழிதந்துமீளவிமயமனையதொரிரதங்கடாவியெதிரியுரனிடை
யழிதந்துமீளவயில்கொண்முனையதொரயில்கொண்டுவீசியெறியுமளவினின்
மொழிதந்தவேலின்முனையுமொடிவுறமுரிவுண்டுகீறிவழியில்விழவெதிர்
பொழிதந்ததாலொர்பகழியறனருள்புதல்வன்கைவாகைபுனையும்வரிவிலே. (எகூ)

பிளவுண்டுவேல்விழுதலின்மகிபதிபிழைகொண்டவேழமனையமெலிவின
னுளநொந்துநாணவுருளுமிரதமுமுடைதந்துபோருமொழியும்வகைசில
கிளரம்புவீசியொருபவளமுதுகிரிகின்றதாகுமெனமுனிலைபெறு
வளமைந்தன்வாய்மையுரைசெய்தனன்மிசைவருமும்பர்யாருமிதயமகிழவே. ()

அளிதங்குமாலையரசரவையிலுனதிவஞ்சமாமனவனிகவர்வுற
வெளிவந்தசூதுபொருதவிரகரிதெளிதின்றுபூசலெனமுன்விரவினை
யொளிவிஞ்சுதேருமுடையபடைகளுமுடையுண்டுநீயுமுறுதிதவறினை
தெளிவென்பதாசுமிலதுன்மனமுறுசெருவென்றவீரமமையுமமையுமே. (அக)

அனிலன்குமாரனரசரசனியெனறசன்சொல்வாய்மைபழுதுபடுமென
வுனையின்றுகோறலொழிவதலதுநினுரமென்கொலாகுமெனாதுகணையெதிர்
புனைதும்பைமாலைசருகுபடவெழுபொடிமண்டவோடிமறைகவிரைவுட
னினியெங்களாண்மையுரைசெய்தெதுபயனெதிர்வந்துநாளையணிகவிகலியே. ()

முதிர்குந்திபோசன்மகடன்மகனிவைமொழிதந்தபோழ்துபெருகமுறுவல்செய்
ததிருஞ்சுயோதனனுமொருயர்கதையவன்மன்றன்மார்பினுரனெடெறிதர
வெதிர்சென்றுநீதிபுனையுநிருபனுமெறிதண்டுகூறுபடவுமெறிபவன்
விதிருண்டுபாரில்விழவுமொருதனிவிறலுந்துவேல்கொடுருவவெறியவே. (அங)

வேறு.

சூழ்ந்ததுவிதிகொல்பாகுந்துரகமுந்தேரும்வீழ
வீழ்ந்தனன்வேந்தர்வேந்தன்மெய்தவாவேந்தன்வேலாற்
றாழ்ந்ததுநமதுகொற்றமெனநடுத்தரிப்பொன்றின்றி
யாழ்ந்தபைங்கடலோடொப்பானடுத்தனனங்கர்கோமான். (அச)

முற்படுதினத்திற்றந்தைமுடிந்தமெய்வருத்தத்தோடு
கற்படுபுண்ணின்மீளத்தடிபடுகணைக்கிற்றாக
வெற்படுதடந்தோள்வேந்தன்வீழ்ந்தனனென்றுவெய்தி
னெற்படுபரிதியென்னத்தோன்றினனிவுளித்தாமா. (அரு)

வேட்டவெங்களிறூடொப்பான்மேதினிக்கரசன்விற்போர்ப்
பூட்டறுபுரவித்தேரும்பொன்றியபுலனுமாகி
யோட்டமிருனையான்கைவேலினுலுடைந்தமாற்றங்
கேட்டனனவர்க்குமுன்னேகிருபவாசிரியன்வந்தான். (அசு)

காப்புடையொற்றைநேமிக்காவலன்றுமமார்பி
ணுப்புகல்வாய்மையான்றனுண்மலர்ச்செங்கைவைவேல்
கோப்புறவிழுமுன்னர்க்கொதித்தெழுமனத்தனுகித்
தாப்புலிபாய்ந்ததென்னச்சல்லியன்றுனும்வந்தான். (அஎ)

எப்பெருஞ்சேனையோடுமெக்குலவேந்தும்வந்து
தப்பருங்கொற்றவேற்கைத்தருமனைவளைந்தகாலை
யப்பெருந்தானைதன்னிலருச்சுனனுதியான
வொப்பருந்தரணிபாலரிவற்கும்வந்துதவினுரே. (அஅ)

இருபடையரசுந்தம்மிலீரிரண்டங்கமாகி
வருபடைகொண்டுநின்றுவல்லவாபூசருக்கப்
பொருபணியுடைப்பதாகைப்பூபதிதனையுங்கொண்டாங்
கொருபடைகைக்கொளாமலொன்னலருடைந்துபோனுர். (அகூ)

நாகையாப்புகழான்பெண்ணைநதிவளஞ்சூரக்குநாடன்
வாகையாற்பொலிதிண்டோளான்மாகதக்கொங்கர்கோமான்
பாகையாட்கொண்டான்செங்கைப்பரிசுபெற்றவர்கள்போல
வோகையாற்செருக்கிமீண்டாருதிட்டிரன்சேனையுள்ளார். (கூ0)

அருக்கனுந்தருமன்மைந்தனுண்மைபுகிலேபுங்கண்டு
வெருக்கொளுநிருபரென்னமேற்றிசைவேலைமூழ்கிச்
சுருக்கமில்கங்குற்காலஞ்சென்றபின்சுதன்மேலன்பு
பெருக்கவுண்டாகமீண்டுங்குணகடற்பிறந்திட்டானே. (கூக)

பதினுரும்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள்—ந,அஉ0.

பதினேழாம் போர்ச்சருக்கம்.

ஈரொருபிறப்பினெருசிறுகுறளாயாவருந்தேவரும்வியப்பக்
காரொருவடிவுகொண்டெனச்சென்றுகாவல்கூர்மாவலியளித்த
நீரொருகரத்தில்வீழுமுன்றரங்கநீனிறமகரநீருடுத்த
பாரொருகணத்திலளவிடுங்கமலபாதனுர்நாதனுர்நமக்கே. (க)

அற்றைவெஞ்சமரிலமர்முனைந்தாற்றாதழிந்துபோமவனிபர்பலரு
மற்றைநாளகிலபுவனமுமின்றேமடியுமென்றனைவருமயங்க
வொற்றைவெண்சங்கும்பல்வகைப்பறையுமோதவான்கடலெனவொலிப்பக்
கற்றைவெண்கவரிகால்பொரத்தனிப்பொற்கவிகைநீழலிற்களங்கலந்தார். (௨)

எண்ணிருதினத்திற்பட்டபல்படையுமீண்டுமீண்டெழுந்தனவென்ன
வண்ணமோரளவில்வாசியுந்தேருமதசயிலமும்பதாதிகளும்
விண்ணுமண்ணகமுந்தெரிவுறுவழக்கின்வெங்களமுழுவதுங்கஞல
வண்ணலந்தடக்கைக்கெதிரிலாவண்மையாண்டகையரசுடனடைந்தான். (௩)

சென்னியின்மகுடமணிவெயிலெறிப்பத்திருக்குழைமணிவெயிலெறிப்ப
மன்னியபொலம்பூண்மணிவெயிலெறிப்பவணிகழன்மணிவெயிலெறிப்பத்
தன்னைமுன்பயந்தோன்றன்னினும்வடிவந்தயங்குசெஞ்சுடர்வெயிலெறிப்பக்
கன்னனன்றிருந்தவழகினையாரேகண்டுகண்களிப்புறுதொழிந்தார். (௪)

ஒருங்களப்பரியபதாகினிக்குழாமுமுயிர்க்குயிரானதம்பியரு
மருங்களக்கனிகொள்வண்ணனுந்தானுமறனருளறனுடையரசன்
பெருங்களப்பரப்பினணிபெறவணிந்துபேருலகுய்யுமாறிருண்ட
கருங்களத்தவனைக்காசினித்தேர்மேற்கண்டெனக்காணுமாநின்றான். (௫)

நின்றவக்குரிசிலருச்சுனன்றேர்மேனின்றருணீலமேனியனை
மன்றலந்துளபமாலைமாதவனைவழிபடுமவர்க்குவான்றுணையைத்
தன்றடங்கண்ணோடிதயமுத்தரும்பத்தாளிணைமுடியுறவணங்கி
பின்றைவெஞ்சமரிலிரவிதன்சேய்வானெய்துமோவியம்புதியென்றான். (௬)

இத்தினமிரவிசிறுவனும்விசயனேவினாலிறந்திடுநாளைத்
தத்தினபுரவித்தேர்ச்சுயோதனனுஞ்சமீரணன்றனயனான்மடியு
மத்தினபுரியுமீரிருகடல்சூழவனியுநின்னவாமென்றான்
சித்தினதுருவாயகண்டமுந்தானாஞ்செய்யகட்கருணையந்திருமால். (௭)

செங்கண்மாலுரைத்தவின்சொலாரமுதஞ்செவிப்படச்சிந்தனைதெளிவுற்
றெங்கண்மானமுந்தொல்லாண்மையும்புகழுநீயலால்யார்நிலையிடுவார்
வெங்கண்மாசுணத்தோன்வஞ்சனைக்கடலின்வீழ்ந்தழுந்தாவகையெடுத்தின்
றங்கண்மாநிலமுந்தந்தனையெனப்பேரறத்தின்மாமகனிவையுரைப்பான். (௮)

பொங்கழற்சிந்தைச்சுயோதனன்கங்கைப்புனல்விளையாட்டிடைப்புதைத்த
வெங்கழுமுனையில்விழாமலோரளியாய்வீமனுக்காருயிரளித்தாய்
பைங்கழலரசரவையினில்யாமும்பார்த்திருந்தலமரப்பயந்த
நங்கழலனையாணானமுந்துகிலுநோக்கினைகாக்குநாயகனே. (௯)

கானகமருங்கின்மேவலன்பணியாற்கடும்பசியுடன்வருங்கடவுண்
மானவமுனிவன்றுபமுஞ்சாபவருத்தமுமுறுவகையொழித்தா
யானொருபொருளாத்தூதுசென்றருளியெதிரிலாவிதுரன்வெஞ்சிலையும்
பானுவின்மதலைகவசமுமகற்றிப்பரிந்துபல்வினைகளும்புரிந்தாய். (௧௦)

களப்பலிநாககன்னிகைபுதல்வன் கருதலான்றனக்குநேர்ந்திடவுங்
கிளப்பருந்திதியைமயக்கிவான்மதியங்கிளரொளியருக்கனைக்கேட்ப
வளப்படுந்திதியின்மூந்துறவெமக்கேவழங்கிடும்படிமதிகொளுத்தி
யுளப்பொலிவுடனேவிசயனுக்கருளாவுருளுடைக்கொடிகொடேரூர்ந்தாய். (கக)

அஞ்சியோவன்றியருள்கொலோவறியேனுகவத்தடுதொழின்மறந்த
வெஞ்சிலைவிசயற்குள்ளவாறுணர்த்திமீளவும்பொரும்படிவிதித்தாய்
வஞ்சினமறந்துநேமியுந்தரித்துவலம்புரிகுறித்துமூதாதை
துஞ்சிடவமரிற்சிகண்டிசெய்தவத்தின்றொடர்பயன்வழாவகைதுரந்தாய். (கஉ)

ஒருபகல்விசயன்மார்பமூடுருவவொழுகுவெங்கடத்தொருத்தலின்மேல்
வருபகதத்தனெறிந்தவேலுன்றன்வண்டுழாய்மார்பகத்தேற்றுப்
பொருபகையரசர்பலர்படவபிமன்பொன்றியபொழுதுசெந்தழலி
னிருபதமுனியால்விழாவகைவிலக்கிநிசியில்வெங்கயிலையுங்கண்டாய். (கந)

வருணன்மாமதலைவாசவன்மதலைமார்பினிலெறிந்தவெங்கதையைக்
கருணையான்மருமம்புதையவேற்றந்தக்காளைகையறும்படிகண்டாய்
தருணவாணிருபர்மயங்கிவீழ்தரவெண்சங்கமுமுழக்கிநேமியினு
லருணனுதபத்தைமறைத்திரவழைத்தாங்கபிமனுக்கரும்பழிகொண்டாய். (கச)

எவருஞ்சாபபண்டிதன்புதல்வனேவியவேலினுல்யாங்கள்
வீவருந்தன்மையறிந்துவாகனமும்விறற்படைகளுமொழித்திட்டாய்
மூவருமொருவராகிநின்றருளுமூர்த்தியேபார்த்திவர்பலருந்
தேவருமுணரார்நின்செயலெனமால்சேவடிகளின்முடிசேர்த்தான். (கரு)

கண்ணனுங்கருணைக்கண்ணனையிறைஞ்சிக்கைகளாற்றழுவியைவிருநீ
ரெண்ணருமமரிலிறக்கிலீரஞ்சலென்றுபசாரமுமியம்பிப்
பண்ணமர்தடந்தேர்ச்சேனையின்பதியைப்பார்த்தணிவகுக்கெனப்பணித்தா
னண்ணலந்திட்டத்துய்மனுந்தெவ்வரஞ்சிடும்படியணிவகுத்தான். (கசு)

வேறு.

ஐவர்பதாகினிவெள்ளமணிந்தவாகண்டடுவிறற்கோனெடுவிற்கையங்கர்கோமான், பைவருமாசுணக்கொடியோன்றன்னைநோக்கிப்பரித்தடந்தேர்நரபாலர்பலருங் கேட்கக், கைவருபல்படைக்குமொருவீரரொவ்வாக்கட்டாண்மையரசேயிக்களத்தி லின்றே, கொய்வரு* தார்ப்புயப்பகைவர்சிரங்களெல்லாங்குறையுடலங்கூத்தாடக் கொய்வேனென்றான். (கஎ)

கார்ப்பாகசாதனன்றன்மகனுக்கெல்லாக்கலகமுஞ்செய்வஞ்சனையேகற்றகள்வன், றேர்ப்பாகனுய்நின்றானவனுக்கொப்பார்தேவருலகினுமில்லைதிசைகளெல்லா மார்ப்பாகமோதிவருங்கவனமாநெஞ்சறிவானும்போரில்விரகறிவிப்பானும், போர்ப்பாகாய்த்தேர்கடவுசெயல்வல்லானும்புனைதாமச்சல்லியனேபுவியிலென்றான். ()

* தார்ப்போர்ப்பகைவர் என்றும் பாடம்,

அவனின்றென்மணிநெடுந்தேர்கடவுமாகிலருச்சுனனுக்கடலாழியவனேயன்றிச், சிவன்வந்துதேர்விடினுங்கொல்வேனந்தத்தேர்நின்றாரிருவரையுஞ்செங்கோல்வேந்தே, பவனன்சேய்முதலான துணைவரோரோர்பகழிமுனை தனக்காற்றார்பரவையாடைப், புவனங்களனைத்தையுநின்குடைக்கீழாக்கிப்புரிதிறல்வாகையுநினக்கேபுனைவிப்பேனே. (௧௯)

நஞ்சோற்றம்பெறநுகர்வுற்றிருண்டகண்டர்நற்றொண்டர்வடிவமெனநண்ணும்வெண்ணீற், றஞ்சோற்றுமடற்கைதைகமழுங்கானலகன்குருநாட்டரியேறேயாணின்றீம்பால், வெஞ்சோற்றோடினிதருந்தியமுதருந்தும்விண்ணவர்போலிந்நெடுநாள்விழைந்துவாழ்ந்தேன், செஞ்சோற்றுக்கடனின்றேகழியேனாகிற்றிண்டோள்கள்வளர்த்ததனாற்செயல்வேறுண்டோ. (௨௦)

ஓரூருமொருகுலமுமில்லாவென்னையுங்கள்குலத்துள்ளோரிலொருவனாக்கித்
தேரூருமவர்மனைக்கேவளர்ந்தவென்னைச்செம்பொன்மணிமுடிசூட்டியம்புராசி
நீரூரும்புவிபாலர்பலரும்போற்றநின்னினுஞ்சீர்பெறவைத்தாய்நினக்கேயன்றி
யேரூருங்கதிர்முடியாயுற்றபோரில்யார்க்கினியென்னுயிரளிப்பதியம்புவாயே. ()

கன்னனிவையெடுத்துரைப்பமகிழ்ந்துகேட்டுக்காந்தாரன்றிருக்குலத்துக்கன்னியீன்ற, மன்னர்பிரானிமைப்பொழுதிற்பழுதிலாதமத்திரராசனையெய்திமதுபசாலங், தென்னதெனவெனமுரனுஞ்செவ்விமாலைத்திருத்தோளாயானென்றுசெப்பினாலவ், வின்னுரைகேட்டொருவரநீநல்கல்வேண்டுமென்னாணையெனக்கரங்கொண்டிறைஞ்சினானே. (௨௨)

செறுத்தவர்தம்பெருவாழ்வுமுயிருமாற்றிச்சேர்ந்தவர்கள்புரிந்தபெருந்தீமையெல்லாம், பொறுத்துலகமுழுதாளுந்திகிரியோயான்பொருளாகவொருவரநீபுகலுவாயேன், மறுத்துரையேனுரைத்தருளென்றுரைத்தானந்தமத்திரபூபனுமிவனுமருவலாரைக், கறுத்தமழைமுகில்வெளுக்கக்கருகுமேனிக்கண்ணனைப்போலெங்களைநீகாத்தியென்றான். (௨௩)

வாவுமாமணிநெடுந்தேரரசர்க்கெல்லாம்வாய்ப்பானநீயெனையும்புரப்பதன்றி
யேவுமாதொழில்புரிந்துன்குடைக்கீழ்வைகுமென்போல்வாருனைப்புரத்தலிசைவ
தொன்றோ, தேவுமாய்மானுடமாய்மற்றுமுற்றுஞ்செப்புகின்றபலகோடிசராசரங்
கள், யாவுமாய்விளையாடுமாதிமூர்த்தியாதவனுக்கியானெதிரோவெதிரிலாதாய். ()

நேர்செலுத்துந்தனிச்செங்கோலுடையாயாதுநினைவுனக்கென்றவன்வினவநிருபன்றானுந், தார்செலுத்தும்பெருஞ்சேனைசூழநின்றசல்லியனைமுகநோக்கித்தனஞ்சயற்குத், தேர்செலுத்துமுகுந்தனைப்போனீயுமின்றுதேரிரவிமகன்றிண்டேர்செலுத்தினல்லாற், போர்செலுத்திவைவரையும்வென்றுவாகைபுனைதனமக்கரிதென்றுபோற்றினானே. (௨௫)

புல்லியசொன்மதியாமலென்னைநோக்கிப்புகன்றனையாற்புன்மேயும்புல்வாய்க்கென்றும், வல்லியமாப்பணித்ததொழில்புரியினன்றோமத்திரத்தான்கன்னனுக்குவலவனாவான், சொல்லியநாவென்படுமற்றொருவன்சொன்னாற்சுயோதனனாதலிற்பொறுத்தேன்சொன்னதென்று, சல்லியன்மாமனங்கொதித்துப்புருவங்கோட்டித்தடங்கண்ணுமிகச்சிவந்தான்றறுகணானே. (௨௬)

சதுர்விதத்தேர்வீரருக்குந்தடந்தேருருஞ்சாரதிதன்றனயனுக்குத்தடந்தேரூர்தன், மதுமலர்த்தார்வலம்புரியாயிழிவன்றோநீமதித்தவிறற்கன்னனுக்குமெனக்குமிப்போ, தெதிர்மலைக்குஞ்சேனைதன்னையிருகூறாக்கியிகல்புரிந்தாலென்கூற்றையிரியவென்றக், கதிரளித்தோன்கூற்றினையுமழித்திலேனேற்கடவுவன்றேரவற்கென்றுகனன்றுசொன்னான். (௨௭)

செங்கோலமலரிலிருந்தனைத்துமீன்றதிசைமுகன்றனறம்வளர்க்குந்தெய்வப்பாவை, பங்கோனுக்காதிமறைப்புரவிபூண்டபடிக்கொடித்தேர்கடவுதனிப்பாகனானான், பொங்கோதப்பாற்கடலானிவனென்றியாரும்புகல்கின்றவசுதேவன்புதல்வன்வந்து, வெங்கோபவிசயனுக்குச்சூதனானான்விசயனுமன்றுத்தரன்றேர்விசையினூர்ந்தான். (௨௮)

பூந்தராதலமுழுதுமதித்தவாண்மைப்போர்வேந்தேயுனைப்போலப்புகழேபூண்டவேந்தராயமர்க்களத்திலதிசயித்தவீரரானவர்க்கிதுதான்மேம்பாடன்றே, மாந்தராயெக்கலையும்வல்லார்க்கன்றிவாசிநெடுந்தேரூரவருமோவென்றென், றேந்தராவெழுதியபொற்கொடியோன்சொல்லியிறைஞ்சுதலுமுடன்பட்டானென்செய்வானே.

மகபதிதன்மகனுக்குவசுதேவன்றன்மகன்பாகனானதுபோல்வயங்குசோதிப்பகலவன்றன்மகனுக்குநிகரிலாண்மைப்பல்விதப்போர்ச்சல்லியன்றேர்ப்பாகனானான், புகலரியதும்பையுடன்வெற்றிவாகைபுனைந்திடுமிக்களத்தில்வலம்புரித்தார்வேந்தனகலுததிபுடையாடையவனிமுற்றுமவனதினியெனவார்த்ததரசன்சேனை. (௩௦)

பெற்றிழந்தகவசமுங்குண்டலமுமீளப்பெற்றனன்போலடலருக்கன்பெற்றபிள்ளை, மற்றையணிவிரன்முடக்கவினையிலாதமத்திரபூபனைத்தழுவிமணித்தேரேற்றப், பற்றலர்நெஞ்சலமருமாறவனும்பாகர்படிவங்கொண்டமர்க்கமைந்தபரிகள்பூட்டி, யுற்றவடிக்கயிறுடனேயுளவுகோல்கொண்டூர்ந்தனனலருணனுக்கேயுவமைசால்வான். (௩௧)

பணிநிறுத்தியெழுதுறுபொற்பதாகையானைப்படாதொழிதம்பியரோடும்பார்க்கவன்போ, லணிநிறுத்திக்கிருபகிருதரையும்பல்போரரசரையுமிருமருங்குமணிகளாக்கி, நுணிநிறுத்திச்சகுனிமுதலானோர்தம்மைநுவலருநாளுடுக்கோளினடுவண்வான, மணிநிறுத்திவைத்ததெனப்பவளமேருவரைநின்றதெனநின்றான்வண்மைவல்லான். (௩௨)

வேறு.

கோவல்சூழ்பெண்ணைநாடான்கொங்கர்கோன்பாகைவேந்தன்
பாவலர்மானங்காத்தான்பங்கயச்செங்கையென்ன
மேவலரெமரென்னாமல்வெங்களந்தன்னினின்ற
காவலன்கன்னன்கையும்பொழிந்ததுகனகமாரி. (௩௩)

அந்தணர்பரிசின்மாக்களவனிபர்முதலோர்யார்க்குஞ்
சிந்தைகள்களிக்கத்தானதியாகமுஞ்சிறப்புநல்கிக்
கந்தனோர்வதனமாகியவதரித்தன்னகன்னன்
சந்தணிகுவவுத்தோளான்சல்லியன்றனக்குச்சொல்வான். (௩௪)

மேகவாகனன்பாற்பெற்றவெயிலவனியமதங்கி
யாகியமுனிவற்கீந்தவரும்பெருஞ்சாபம்பெற்றே
னாகவெம்பகழிபெற்றேனாரணற்கொத்தவுன்னைப்
பாகனுமாகப்பெற்றேன்பாக்கியம்பலித்தவாறே. (௩௫)

எனக்கெதிர்விசயனல்லதில்லையவ்விசயனென்பான்
றனக்கெதிரென்னையன்றித்தரணிபர்யாருமில்லை
மனக்குநேரானதோமுன்மகிதலமுழுதுமெய்தக்
கனக்குரற்களிற்றோயின்றுகாண்டியென்னாண்மையென்றான். (௩௬)

என்றலுமத்திரேசனிளநகைசெய்துநீநின்
வென்றியும்வலியுங்கற்றவின்மையும்விளம்பவேண்டா
வொன்றொடொன்றிரண்டுதேருமுருளுடனுருள்கவொத்துச்
சென்றெதிர்முனைந்தபோதுன்சேவகந்தெரியுமாதோ. (௩௭)

ஒருவரையொருவரொவ்வாவுரனுடைவீரர்நீங்க
விருவரும்பொரும்போர்தோறும்யாங்களும்பாங்காய்நின்றோம்
வெருவரன்மறந்துமில்லாவிசயனையொருபோதத்துந்
திருவரும்வண்மையோய்நீசெயித்திடக்கண்டிலேமால். (௩௮)

வயிர்த்திருவோருஞ்சொன்னவஞ்சினமுடிக்குமாறு
செயிர்த்திடுமிற்றைப்பூசறெரியுமோதெரிந்ததில்லை
யயிர்த்தனமென்றுதேரூராண்டகையுரைப்பநீட
வுயிர்த்தனனாகிமீளவுத்தரமுரைக்கலுற்றான். (௩௯)

இந்திரன்மகனுக்கென்னையெதிரில்லையென்றுநின்ற
தந்திரபாலர்முன்னர்ச்சல்லியவிகழ்தல்வேண்டா
மந்திரவாசித்திண்டேர்வல்லையேலூர்வதன்றி
வெந்திறல்விளைக்கும்வெம்போர்வினைக்குநீயார்கொலென்றான். (௪௦)

*வலியுடைத்தேரோன்சொன்னவாசகம்வலவன்கேட்டுக்
கலியுடைத்தடந்தேர்விட்டுக்காலினின்றுடைவாள்வாங்கி
யொலியுடைப்புரவித்திண்டேருனக்குநானூருவேனோ
வெலியுடைப்பூசல்பூனைக்கெதிர்ப்படினென்படாதோ. (௪௧)

உருவுருமென்னச்சீறியுடன்றபினுதயன்காதன்
மருவுறுமைந்தன்றானும்வாளொடுமண்ணிற்றாவி
யிருவருமிரண்டுகோயமிகலுமுனுரககேது
வெருவருஞ்சிந்தையோடுவெய்திற்போய்விலக்கினானே. (௪௨)

மூளும்வெஞ்சினத்தைமாற்றிமுரணுறுத்தவர்கடம்மை
மீளவுந்தேரிலேற்றிவெஞ்சமர்விளைமினென்றான்
மாளவும்பாண்டுமைந்தர்வையகமுழுதுந்தானே
யாளவுங்கருதியெல்லாவரசையுமழிக்குநீரான். (௪௩)

* வலியுடைத்தோளான் என்றும் பாடம்.

வனைகழற்கிருதவன்மன்வரிசிலைக்கிருபன்றானே
தனைநிகர்சகுனிதாமாச்சாலுவன்றிகத்தராச
னினையபொற்றடந்தேர்வீரர்யாவருமெண்ணில்சேனைக்
கணைகடலோடுசூழ்ந்துகன்னனைக்காத்துநின்றார். (௪௪)

நின்றவக்கன்னன்றன்னைநெஞ்சுறமகிழ்ந்துநோக்கி
வென்றனம்பூசலின்றேவிசயனுந்தாதைதன்பாற்
சென்றிடுமென்றுதேறிச்செப்பினன்சிற்சின்மாற்ற
மன்றலஞ்சுரும்புமாறாவலம்புரிமாலையானே. (௪௫)

சதமகன்மகன்றேர்ப்பாகன்றன்வயிற்சேண்மைவிஞ்சி
விதுரனுமமர்செய்யாமல்வெஞ்சிலையிறுத்துப்பின்னும்
யதுகுலத்தலைவனானவிராமனுந்தானும்பாரி
னதிமுதற்றீர்த்தம்யாவுமாடுவானயந்துபோனான். (௪௬)

கங்கைதன்வயிற்றிற்றோன்றித்தாதைதன்காதறீர்ப்பா
னெங்களுக்கரசும்வாழ்வுமிருநிலமுழுதுந்தந்து
வெங்களத்துதயன்போலவீடுமன்களத்தையெல்லாஞ்
செங்களப்படுத்திமீண்டுந்தேவரிலொருவனானான். (௪௭)

கரிமுகக்கடவுளன்னகடும்பரித்தாமாவென்னுங்
குரைகழற்றுணைத்தாட்சிங்கக்குருளையைப்பயந்ததாதை
யருமறைக்கயனையொப்பானடற்சிலைக்கரனையொப்பான்
றிருவருட்கரியையொப்பான்றிருத்தகுவீடுசேர்ந்தான். (௪௮)

சாயலாற்சிறந்ததோகைச்சாமளத்தடம்புள்ளூர்திச்
சேயலாற்றேவர்வாழ்வுதேவருக்கியாவரீந்தார்
நீயலாற்சமரிலென்னைநிலையிடற்குரியாருண்டோ
தோயலாற்பயந்தகாதற்சூரனையனையசூரா. (௪௯)

மித்திரரென்றுநோக்காதென்னுடன்விளைந்தநண்பான்
மத்திரநிருபன்மைந்தன்வந்தெனக்குதவியானான்
குத்திரனல்லன்செம்மைக்கொள்கையன்மறையின்மிக்க
வத்திரசாபம்வல்லானிவனொடாரமர்செய்கிற்பார். (௫௦)

என்மொழிமறுமலின்றுன்னிரதசாரதியுமானா
னன்மொழியன்றிவேறுநவைமொழிநவிறறேற்றான்
றன்மொழியுறுதியாவுந்தருமெனக்கைக்கொளாமற
புன்மொழியாடிநும்மிற்புலப்பதுபுன்மையன்றே. (௫௧)

இதயமும்வலியுந்தேயத்தியற்கையும்வினையும்பற்பல்
கதிகளுமுணர்ந்துபூணுங்கவனமாத்தெரிந்துபூட்ட
லெதிரிதன்விசயங்கூறலிடிக்குநண்பாதல்வெம்போர்
முதிரிடங்காலமெண்ணல்சூதர்க்குமுறைமைகண்டாய். (௫௨)

வேறு.

என்னமன்னர்மன்னவன்முகம்புகுந்திருவருக்குரல்லுரையெடுத்துரைத்
தந்நிலத்திலேநிற்கவல்விரைந்தறன்மகன்படைக்கதிபனென்றுமுன்
சொன்னதிண்டிறற்றுருபதேயனுஞ்சோமகேசராயுள்ளசூரருங்
கன்னனின்றவம்முனையினெஞ்சினுங்கடுகுதங்கடேர்கடவினார்களே. (௫௩)

சென்றவீரருஞ்சிலைகள்கால்பொரத்திண்சிலீமுகஞ்சேரவேவினார்
மின்றவீரருந்தனுவளைத்துமேனெடியசாயகநிமிரவீசினா
ரொன்றமாநிலம்பொன்றமீதெழுந்தோதமூர்வதொத்தும்பரஞ்சினா
ரன்றையாகவந்தனினிகழ்ந்தபோராரையாரையென்றதிசயிப்பதே. (௫௪)

ஏறுதேரழிந்திவுளிமாவழிந்தேவுபாகழிந்தெண்ணிலெண்ணிலார்
நூறுநூறுகோனுழையமெய்யெலாநொந்துதுஞ்சினார்முந்துபோர்செய்தார்
வேறுவேறுபல்கோடிவீரர்கண்மேருவொப்பதோர்வில்வளைத்திடச்
சூறைமாருதம்போல்விபாகரன்சுதனடாவுதேர்சூழவந்ததே. (௫௫)

முட்டவந்துதம்பின்கொடாமன்மேன்முன்கொடுத்துமாமுனைகொள்வாளியிற்
பட்டொழிந்தவவ்விருவர்சேனையின்பதிகளுஞ்சயம்படவுடற்றினார்
விட்டபாணம்வந்திருவராகமும்வெளியடைக்கவேவில்வளைத்தபின்
றிட்டதுய்மனுங்கன்னனுக்கிடைந்தேறுதேருடன்றேறியோடினான். (௫௬)

சோமகேசரிற்பட்டொழிந்தவெஞ்சூரர்தம்முடன்றுரோணசூதனன்
காமபாணமேயெனவிலக்கருங்கணைகண்மெய்புறக்கைகழன்றபின்
றூமமார்முடித்தம்முனேவலிற்றன்னையொத்ததோள்வீரர்தம்மொடும்
வீமசேனன்மற்றவரைவென்றபோர்விசயகன்னன்மேல்வெய்தினெய்தினான். (௫௭)

காலினால்வருங்காளைமைந்தனுங்கதிரினால்வருங்காளைமைந்தனு
மாலினால்வருங்களிறுவாசிமாமன்னுமேதமெனும்வாகனத்தினார்
வேலினாலெறிந்தமருடற்றியும்வெய்யவாளினால்வெட்டிமுட்டியுங்
கோலினாலெறிந்துருவவெற்றிவிற்கோலியுங்களங்குறுகினார்களே. (௫௮)

மைந்தர்போர்விதங்கண்டுகண்டுதார்மருவுமம்புயத்திருவருங்களித்
துந்துமாநெடுந்தேரிரண்டும்வந்துள்ளமானதேரொத்துலாவவே
யந்தரம்புதைந்தும்பராரெலாமஞ்சியோடுமாறப்புமாரியுஞ்
சிந்தவெண்டிசாமுகமுமண்டமுஞ்செவிடுபட்டிடச்சிலைவணக்கினார். (௫௯)

செல்வணக்கிமேல்கீழெனும்பெருந்திசையிரண்டினுந்திகழும்விற்கள்போல்
வில்வணக்கியவ்விருவரும்பொரும்வெஞ்சமத்தில்வீமனையுரத்தினு
மல்வணக்குதோளினுமிலக்கிலாவாளியேவினானேளியாகவே
கல்வணக்கிமுப்புரமெரித்தமுக்கண்ணினான்வலக்கண்ணளித்துளான். (௬௦)

வலக்கணானசெஞ்சுடரிடக்கணும்வாகுவுந்துடித்தாகுலத்துடன்
கலக்கணீர்பொழிந்தினையும்வேலையிற்கனற்படும்புணிற்றடிபடுங்கணைக்
கிலக்கணாந்தவாவீமன்வாளியீரிரண்டுநாலிரண்டெண்ணிரண்டினா
லலக்கணெய்தவெய்தனுதாரிதன்னணிகணீடுதோளாகமெங்குமே. (௬௧)

வேதமாகிநின்றவனையெய்தபோர்வில்விமுன்னவன்சல்லியன்றனோ
டோதினானிவற்கெம்பிவஞ்சினமொழியுமென்றுகொண்டுயிர்வழங்கினேன்
சூதனாகிநீவந்துதேர்விடுந்தொழிலிலாதபோர்வலியையன்றியே
யாதுகூறலாம்வன்மைவின்மைதான்யாதெனாவிமைப்போதிலேகினான். (௬௨)

வேறு.

அங்கர்குலநரபாலனும்வாழ்வுடையங்கர்களுமுனைசாய்தரவூழியின்
மங்குனிகர்பலகோல்விடுவிமனுமைந்தரனைவருமாறடுகாலையில்
வெங்கைவரிசிலைகால்பொரயாரினும்விஞ்சுதிறல்விடசேனனெனாவரு
செங்கணவன்வசுதேவன்முனாளருள்சிங்கவரசினையாறொடுசீறியே. (௬௩)

திண்சிலையினெடுநாணொலியோடணிசிஞ்சிதமுமெழமாலினையோனிணை
வண்புயமும்வியன்மார்பமுமூடுறவன்புபெறுபலவாளிகளேவனு
நண்பொடவனிவனேறியதேர்கொடிநன்புரவிதுடைபாகிவைவீழ்தர
வொண்பிறையின்முகமானசிலீமுகமொன்பதுதைதயினன்வாகுபுமார்புமே. (௬௪)

குன்றிலருவிகள்போன்மததாரைகள்கொண்டகடதடவாரணமாமிசை
சென்றுசிலகணையேவினரோரிருசிந்துகிரணதிவாகரராமென
வின்றுவபனுழுவிர்புதுநீர்வருமென்றுவரிமணலேகுறிகூறிட
வன்றுவருகுடகாவிரிநாடனுமம்பொன்வரிகழன்மாகதர்கோவுமே. (௬௫)

கங்கைநதியிடைவேவொடுபாகடர்கம்பநிகளமதாசலநீருண
வங்கமறிகடல்சூழெழுபார்வலம்வந்தமனுகுலசோழனைமாகத
னங்கனையரிளமாமுலைதோய்புயமந்திவெயினிகர்சோரியின்மூழ்குற
வெங்கணழலுதிராவதிராவெதிர்மின்கொலெனவிணைவாளிகளேவவே. (௬௬)

வஞ்சிமதுரைபுகாருடையான்வடமண்டலிகர்திறைவாரியநேரியன்
விஞ்சிமுனைதொறும்வாளசுரேசரைவென்றபொழுதடல்வானவர்கோனரு
ணஞ்சுபொழியெரிகாலொருகோல்கொடுநம்பர்சிலைமலைபோலவனேறிய
குஞ்சரமும்விழமாகதர்கோனுயிர்கொண்டுதிருகினன்வார்சிலைகோலியே. (௬௭)

அண்டர்குலபதியாய்விடைவாகனனம்பொன்முடிமலர்நாறிடுதாளி
னெண்டிசையுமனுநீதிசெய்கோலினனெங்குமொருகுடையாலிடுநீழலன்
மண்டுகிரணசிகாமணிமோலியன்வண்டுமதுநுகர்தாதகிமாலையன
மிண்டுமுதுபுலியேறுபதாகையன்வென்றிவளவனையார்நிகர்வீரரே. (௬௮)

வேறு.

யாதேவலென்றுபலமன்னருமீண்டவிப்பார்
மீதேவல்கொள்ளும்விறற்சென்னிகைவில்லின்வன்பான்
மோதேவுபட்டுமுகமாறிமகதர்கோமான்
சாதேவன்விழமுதுகிட்டதுதானைவெள்ளம். (௬௯)

புறமிட்டதானைநிலைகண்டுபொறாதுசோதி
நிறமிட்டவிற்கைத்துரோணன்மகனெஞ்சுகன்றி
மறமிட்டவாளிபலதூவிவருதனோக்கி
யறமிட்டசிந்தையரசன்றனனுசர்தம்மில். (௭0)

இன்றேமுடிப்பன்வினையென்றிரண்டிந்திரநீலக்
குன்றேநிகர்ப்பத்திருமாலொடுங்கூடிநிற்பான்
சென்றேயதிரப்பரித்தாமனைச்செங்கையம்பால்
வென்றேயிமைப்பின்வெறுங்காலினின்மீளவிட்டான். (எக)

துரியோதனன்றனிளையோரிற்சுதக்கணப்பேர்ப்
பெரியோன்முறிந்தபெருஞ்சேனையின்பின்புநின்றான்
பரியோடுமான்றேர்ப்பரப்போடும்பதாதியோடுங்
கரியோடுமூழிக்கனலென்னக்கனன்றுவந்தான். (எஉ)

முகிலின்சிலையிற்சிலைகோலிமுனைகொளம்பு
பெகுலந்தொடுத்துவருகாளையைப்பெட்பினோக்கி
நகுலன்சிறிதுநகைசெய்துநகைசெய்வாளி
யகிலந்தொடுத்தாங்கவன்றன்னையுமஞ்சுவித்தான். (எங)

மட்டுப்படாமல்வருதெவ்வர்மலையினின்றே
தட்டுப்படாதின்றெமரானவர்தானையென்னாப்
பட்டுப்படாதவடிவேனரபாலர்சூழ
முட்டுப்படாதமுரட்கன்னன்முனைந்துசென்றான். (எச)

பாஞ்சாலரிற்கேகயரிற்பலபாடைமாக்க
ளாஞ்சார்பினில்வந்தடைந்தோர்களிலன்றுபோரின்
மாஞ்சாரொழிந்தபலமன்னருஞ்சூழவண்டு
பூஞ்சாறருந்துநறுந்தாமம்புனைந்ததோளான். (எரு)

மன்னன்றருமன்றிருமைந்தன்மலையவந்த
கன்னன்கருத்துங்கடுஞ்சேனையுங்கண்டுமேற்போய்ப்
பொன்னம்பொருப்போரிரண்டென்னவெம்பூசல்செய்தா
ரின்னந்தமக்குத்தமையன்றியெதிரிலாதார். (எசு)

உதையன்புதல்வன்பெருசேனையுதிட்டிரன்கைக்
குதையம்பில்வீழ்ந்தாரினையோரெனக்கூறறேற்றா
ரிதையம்பழுதிலிவன்சேனையவன்கையம்பா
லுதைபுண்டுவீழ்ந்தாருரைத்தாலுமுரைக்கலாற்றா. (எஎ)

பொற்பூசலென்னவிருசேனையும்போரின்மீண்டு
மற்பூசல்செய்யவொளிசெய்யுமம்மன்னர்தம்மின்
முற்பூசலம்பிற்பிளந்தண்டமுகடுவிள்ள
விற்பூசலெய்திப்புரிந்தார்விலின்வேதம்வல்லார். (எஅ)

கொலையம்புமாளாமணியாவமுங்கொண்டசெங்கைச்
சிலையுங்கிரிகளிரண்டென்னத்திரண்டதோளு
நிலையுங்குறிப்புஞ்சிறுநாணொலிநின்றவாறு
மலையுந்திறலும்புகழ்ந்தண்டரும்வாழ்த்தினாரே. (எகூ)

தாழுங்குறித்துக்கரைசெய்யுந்தரங்கவேலை
யாழும்புராசியெழுபார்தனியாளகிற்போன்
சூழும்பொன்மாலைத்துணைத்தோள்களினெட்டுமார்பி
னேழும்புமெய்தானிருள்காயுமிரவிமைந்தன். (அ௦)

தன்றேருமார்புஞ்சரமூழ்கவெஞ்சாபம்வாங்கி
நின்றோனைவாய்மைமனிலைநின்றநிருபரேறும்
வன்றேருநாண்வலித்தோரிருவாளியேவிச்
சென்றோரிமைப்பிற்சிலையுந்திறலம்பும்வீழ்த்தான். (அக)

வேறோர்வரிவில்வெயிலோன்மகன்வெய்தின்வாங்கி
நூறோடுநாறுதொடுத்தேவுநுதிகொளம்பாற்
கூறோரிரண்டுபடயாரையுங்கொன்றபோழ்தி
னூறோடிவிட்டதடையாருடலற்றசோரி. (அ௨)

சாதேவன்றண்டதரன்றண்டகன்சித்திரதேவன்
றீதேதுமில்லாத்திறற்சாத்தகிசித்திரகீர்த்தி
தாதேறுதார்த்தம்பியரோடிகற்றண்டநாதன்
மீதேறுதேருந்தகர்ந்தொண்சுடர்வில்லுமற்றார். (அ௩)

முன்சேனையோடும்வலிபுற்றுமூனைந்துகொற்ற
மன்சேனாதன்பொழிவாளிமழையின்மூழ்கித்
தன்சேனாதன்முதல்யாருந்தளர்தல்கண்டு
நன்சேனாநாதனுமுடன்சூழநடக்கலுற்றான். (அச)

வேறு.

கிருபனெனன்றெண்டிசையும்வரிசிலைக்குரைசெய்முனி கிருதவன்மன்சிந்தைதவிரகுடைச்சகுனியெனு, நிருபரங்கங்கடொறுநிரையினிற்றளையுருவநெடியவம்பைம்பதறுபதுபடப்படமுடுகி, முரண்மிகுந்திண்கடவுண்முரசுடைக்கொடிகொளணிமுகிலின்வந்தண்டர்குலமுதல்வனத்தனுவினோடு, தரணியின்கண்சமரமல்லவதொத்திரதமிசைதருமன்மைந்தன்பரிதிபுதல்வனைக்குறுகினனே. (அ௫)

தருமன்மைந்தன்பரிதிபுதல்வனைக்குறுகியிருசரமவன்செங்கைவரிசிலைதுணித்திடவுமெதி, ரிருசரந்துன்றியுயர்கொடியறுத்திடவுமுடனிருசரஞ்சென்றுதனியிரதமொட்டிடறிடவு, மொருசரம்பொங்குதிறல்வலவன்மெய்ப்புதைதரவுமொருசரந்திண்கவனதுரகதத்துரனுறவும், வரமிகுந்துங்கதனுவினைவனைத்தெரிகொள்சிலைவடிசரங்கொண்டவனதிருபுயத்தெழுதினனே. (அ௬)

வடிசரங்கொண்டவனதிருபுயத்தெழுதியபின்வடகலிங்கங்குருமகதமொட்டியமுதல, படிதொறுந்தங்கள்குடைநிழல்பரப்பியவரசர்பலருடன்பைம்பொன்முடிமகுடவர்த்தனர்பலரு, மிடிமுழங்குங்குரலினதிபயத்தொடுபிலனிலிழிபுயங்கங்களெனவொருவருக்கொருவர்நடை, யடிதளர்ந்தஞ்சலியுமுதுகுமிட்டவரொழியவடையவன்றும்பர்பதிகுடிபுகப்பொருதனனே. (அஎ)

அடையவன்றும்பர்பதிகுடிபுகப்பொருதுதன தணிகொள்சங்கம்பவளவிதழின்வைத்தருளுதலு, முடையுமண்டந்திசைகள்செவிடுபட்டிடுமமரருலகுபொன்றும்பணிகள்பிலமுமுற்றுறவிடியு, மிடைவழங்குந்தரணிவளர்சனத்தொடுமடியுமெனமுழங்கும்பெரியவரவமெக்கடலுமெழ, கடையுகங்கண்டவடவையின்முகத்தெரிகனலிகதுவிமண்டும்பவனனொலியினிற்கடுகியதே. (௮௮)

கதுவிமண்டும்பவனனொலியினிற்கடுகியணிகவசமுங்குண்டலமுமகபதிக்கருள்குரிசில், சதுர்முகங்கொண்டதொருகனகமொட்டிரதமொடுசதுர்விதந்தங்குகதியிவுளியொப்பறவடசி, மதுபமொன்றும்புதியதெரியன்மத்திரநிருபவலவனுந்தும்பொழுதிலதனின்மிக்கெழூமடியு, மதிரவெங்குர்தனதுவளைமுழக்கினினயரவறனின்மைந்தன்சமரமுனைமுகத்தணுகினனே. (௮௯)

அறனின்மைந்தன்சமரமுனைமுகத்தணுகியவனகலமுந்திண்புயமும்வடிசுடர்ப்பகழிபல, வுறவுமஞ்சங்கண்முடியுருளையற்றிரதநடுவுடையவுந்துங்கவரிசிலைகுணத்துடனறவு, மறம்விளங்கும்பரிகடுணிகள்பட்டிடவும்விறல்வலவனங்கஞ்சிதறியுரணிலுற்றனமுதுகு, பறியவுந்தண்டுமுரசெழுதுபொற்றுகிலினொடுபெரியவுஞ்சண்டதனுவுறவளைத்தனனிவனே. (௯௦)

வேறு

இவனுமவனைப்புயமுமுரமுமுழுகத்துவசமிடியமணிமொட்டிரதமொடியவரிரிவிற்றுணிய, நவநடைவயப்புரவிவிறல்வல்வன்மெய்ப்புதையநகுசரநிரைத்தொருவினடுவுறவணக்கினபி, னவனுமிவனைப்பொருதுமுனமிவன்மலைத்தபடியடையவுமழித்தனனிவ்வடன்மிகுகளத்திலென, வுபரிடதவித்துமுதலவனிபமரெனைப்பலருமுரமுமவர்கற்றகலையுறுதியுமுரைத்தனரே. (௯௧)

உறுதியுடன்மற்றொரதமிசைகொளுமுதிட்டிரனு மொருகையில்வயச்சிலையுமொருகையில்வடிக்கணையும், விறலினொடெடுத்தெதிர்செல்பொழுதருண்மிகுத்தமொழிவெயிலவனளித்தருளும்விதரணகுணக்குரிசின், மறமுறவிடுத்தகணைபொடியுறவியற்றியவன்மதுமலருரத்தைவழிவழிதுளைபடுத்துதலி, னெறிபடைவிடுத்திரதமிசையுறவிளைத்துமுதுகிடவறன்மகற்கிரவிமகனிவையுரைத்தனனே. (௯௨)

உரையுடையைகற்றகலையுணர்வுடையைதக்கமதியுளமுடையைமிக்ககிளையுறவுடையைசத்தியகுண, வரையுடையையெத்திசையும்வழுவறவளர்த்தபுகழ்வரிசைகொளறத்திளைஞர்வழிபடுமதிப்புடையை, தரைமுழுதுமுத்தநிலவுமிழ்குடைநிழற்றவொருதனிநனிபுரக்குமுயர்தலைமைபெறுகிற்றிபகை; கரையழியவுற்றபொழுதுயிர்கொடுபுறக்கிடுதல்கடனலவுனக்குநிலைகருதியணிற்றியென. (௯௩)

கருதியணிநிற்றியெனவுறுதிசமரத்துரைசெய்கருணைமதித்துமிகுகருணையவனிற்பளவில், விருதர்தலையற்றுருளவிருதர்மதவத்திகளின்விரிதலைகளற்றுருளவிறலிவுளிமெய்த்துணிய, விரதம்வயிரச்சுருளைமுடிகொடலையற்றுருளவிருபுறமுமுட்டிவிறலொருகதைகொடெற்றியெதிர், பொருசமர்முருக்கிவருபுரையில்பவனக்கடவுள்புதல்வனொரிமைப்பொழுதின்முதல்வனையடுத்தனனே. (௯௪)

வேறு

முதல்வன்வெந்நிடுதல்கண்டுமுடியுடைவேந்தரோடுந்
விதலையில்வயிரநெஞ்சின்வீமன்வந்துறலுங்காலின்
புதல்வனைப்பொருதுவேறலரிதெனப்பொலம்பொற்றேரோன்
மதலையைநோக்கிப்பாகன்வன்பகைதோன்றச்சொன்னான். (௯௫)

காமனேயென்னநின்றகன்னன்விற்கையில்வாங்கி
வீமனேயாகவென்றிவிசயனேயாகவெற்றித்
தாமனேகாண்டியிற்றைச்சமரிலென்றழல்வாயொற்றைத்
தூமநேர்பகழிக்காற்றார்தூண்டுதியிரதமென்றான். (௯௬)

என்னுமுன்மருத்தின்மைந்தனிரதமேல்வரிவில்வாங்கிக்
கன்னனதுரையும்வில்லுங்கணத்திடைச்சிதைந்துவீழ
முன்னொருவாளிதொட்டானெதிரியுமுரண்விலொன்றாற்
பன்னிருவாளிமீளிமார்பிடைப்பரப்பினானே. (௯௭)

பாய்ந்தவப்பாணந்தன்னைப்பாணியாற்றிமிர்ந்துவீமன்
காய்ந்தவாளனையதாரைக்கடுங்கொடும்பகழியொன்றா
லேய்ந்ததேரருக்கன்மைந்தனிதயத்துமூழ்குவித்தான்
வேய்ந்ததாரவனுந்தேரின்மிசையயர்வுற்றுவீழ்ந்தான். (௯௮)

வீழ்தலுமன்னர்மன்னன்வெம்படைவெந்நிட்டோட
வாழ்வறவீழ்ந்தோன்றன்னைமத்திரத்தலைவன்றேற்ற
வேழ்பரித்தேரோன்மைந்தனெழுந்துபின்சாபம்வாங்கிச்
சூழ்படைவீரர்யாருந்துஞ்சிடத்துணித்திட்டானே. (௯௯)

கைத்தலவண்மைவேந்தன்கார்முகம்பொழிந்தவம்பா
லெத்தனைநிருபர்மாய்ந்தாரெண்ணுதற்கியாவர்வல்லார்
பத்திகொள்சாதுரங்கப்படைஞர்பாஞ்சாலர்தம்மிற்
செத்தனரெழுவர்சிங்கசேனையுள்ளிட்டாரே. (௱)

சேனையுமுறிந்துவீமசேனனுமுதுகிட்டோடக்
கானமர்துளவோன்கண்டுகடும்பரிநெடுந்தேர்தூண்ட
யானைமேற்சிங்கஞ்செல்வதென்னவந்தெய்தியிட்டான்
வானவர்க்கரசன்மைந்தன்மைந்துடைவரிவில்லோனே. (௱௧)

சென்றவன்சேனைதன்னினிருபருஞ்செருச்செய்கிற்பா
னின்றவன்சேனைதன்னினிருபருநேர்ந்தகாலை
யென்றவன்மதலையேவுமிமையவர்தெவ்வையோட
வென்றவனேவுந்தம்மில்விசும்பினைவேய்ந்தவாலோ. (௱௨)

இரவிதன்மதலைக்காகவிமைத்தகண்விழிக்குமுன்னர்ப்
புரவியந்தாமாவென்னும்பூசுரன்றேரிற்றோன்றி
யரவணைச்செல்வன்மெய்யுமருச்சுனன்மெய்யுஞ்செக்கர்
விரவியவானமென்னவெஞ்சரம்புதைவித்தானே. (௱௩)

விசயனும்வெகுளூற்றந்தவேதியன்வில்லுந்தேரு
மசைவுறமுடுகியெய்தானவனுமற்றிவனைவேறோர்
குசையுடைப்புரவித்தேருங்குனிவருஞ்சிலையுங்கொண்டு
நிசியினையருக்கன்போலநிலைதளர்ந்திடுவித்தானே. (௧௦௪)

தளர்ந்தவத்தளர்ச்சிகண்டுதனஞ்சயன்றன்னைத்தேற்றிக்
கிளர்ந்சுடர்ப்புரவித்தாமாக்கேவலமல்லனையா
பிளந்திடுங்கிவனையென்னப்பிறைமுகப்பகழியொன்று
ளுளம்புகத்தொடுத்தான்பாகனுரைமுடிவதன்முனம்மா. (௧௦௫)

எய்தவப்பகழியொன்றுவீசன்மாமதலைமாழ்கி
வெய்துயிர்த்திரதமீதுவீழ்ந்தனன்வீழ்ந்தோன்றன்னைக்
கைதவச்செயலினான்றுச்சாதனன்கண்டுமுன்னைச்
செய்தவப்பயன்போல்வந்துதேரொடுங்கொண்டுபோனான். (௧௦௬)

போனவப்புரவித்தாமாப்புரிந்துபோர்தொடங்குமெல்லைச்
சேனைகணான்கினோடுஞ்சித்திரவாகனென்னு
மீனவன்வழுதிமாறன்வெண்மதிமரபில்வந்தோன்
வானவர்முதல்வன்சென்னிவரிவளையுடைத்துமீண்டோன். (௧௦௭)

சென்றெதிரூன்றிவெவ்வேற்சேயனான்றேரின்மேலும்
வன்றிறல்வலவன்மேலும்வாம்பரிமாவின்மேலுந்
துன்றியகணைகளேவித்தொடுசிலைதுணித்துவீழ்த்தா
னன்றவன்செய்தவீரமரசரிலார்செய்தாரே. (௧௦௮)

வேறொருதேர்மேற்கொண்டுவிதிதருமரபினோனுஞ்
சீறிவெங்கணைகளாறுதெரிந்தொருசிலையும்வாங்கிக்
கூறியசெஞ்சொலேடுகுறித்தெதிர்கொண்டவைகை
யாறுடையவனையஞ்சவருஞ்சமருடற்றினானே. (௧௦௯)

அந்தணனேனையெல்லாமவனிபனவ்வவ்வம்பான்
முந்துறவிலக்கித்தங்கண்மூவகைத்தமிழும்போலச்
சிந்தையிற்குளிக்குமாறுசிலீமுகமூன்றுவிட்டான்
றந்தையைமுதுகுகண்டோன்றனயனுக்கிளைக்குமோதான். (௧௧௦)

காலினாற்றுகைத்துவேலைக்கனைகடலேழுமுன்னாள்
வேலினாற்சுவற்றுங்கொற்றவெங்கயல்விலோதவீரன்
மாலினாற்பொருகைவேழம்வாசிதேர்பதாதிமாயக்
கோலினாற்சுவற்றினனக்குறுகலார்சேனைவெள்ளம். (௧௧௧)

சங்கரனருளால்வந்தசதுர்மறைக்குமரன்மீளப்
பொங்கழற்கடவுளென்னப்பொருசிலைவெய்தின்வாங்கி
மங்குல்போற்பொழியும்வாளிமழையினாலழிந்ததந்தோ
செங்கயனெடும்பதாகைத்தென்னவன்செம்பொற்றேரே. (௧௧௨)

சிங்கவேறனையானந்தத்தேரினின்றிழிந்துமுன்னந்
தங்கண்மால்வரையில்வைகுந்தமிழ்முனிதன்னைப்போலப்
பொங்குவெண்டரங்கமுந்நீர்ப்புணரிகளேழுஞ்சேர
வெங்கையால்வாருங்கொற்றவேழமாமேற்கொண்டானே. (௧௧௩)

மலையினிற்பிறந்தவாரமணங்கமழ்வடிவிற்றங்க
அலையினிற்பிறந்தவாரமழகுறவணிந்தகோமான்
கொலையினிற்சிறந்தகோட்டுக்குஞ்சரங்கொண்டுமீண்டுஞ்
சிலையினிற்குருவின்மைந்தன்றேரொடுஞ்செருச்செய்தானே. (௧௧௪)

மோதிமத்தாரைமாறுக்கைம்முகமுழுத்தசெக்கர்ச்
சோதிமத்தகவெங்குன்றின்றழைசெவித்துளங்குகாற்றுற்
சாதிமைத்துரோணன்மைந்தன்றனித்தடந்தேரிற்கொற்ற
வோதிமப்பதாகையாடையப்புறத்தொடுங்கிற்றம்மா. (௧௧௫)

கூற்றெனக்கொண்டலென்னக்குரைகடலென்னச்சூறைக்
காற்றெனக்கொடியகோபக்கடும்பெருங்கபடமாவி
னூற்றெழுமதங்களேழுமொழுகிமண்ணுடைந்துதாழுஞ்
சேற்றிடைப்புதைந்ததந்தச்சேயனுன்றேரின்காலே. (௧௧௬)

மறையவன்செம்பொற்றேரைவளைந்துமண்டலங்களோட்டிப்
பிறைமுகக்கணையாலந்தண்பிறைக்குலவழுதியெய்ய
நிறைவயப்புரவித்தாமாநேருறவிலக்கித்தன்கை
யறைசிறைப்பகழியொன்றாலானையைவீழ்வித்தானே. (௧௧௭)

பாண்டியன்கைவில்லோடும்பதாதியாய்ப்பகழிசிந்தி
மீண்டியவிவுளித்தாமனிருதடந்தோளுமார்பும்
வேண்டியவாறுசோரிவீழ்தரப்பொருதபின்னர்த்
தூண்டியதுரோணன்மைந்தன்றொடையொன்றாற்றானும்வீழ்ந்தான். ()

பட்டனன்முனிவன்கையிற்பஞ்சவனென்றுவேந்தர்
கெட்டனர்முரசந்தீட்டுங்கேதனன்சேனையுள்ளார்
தொட்டனர்வரிவில்வாளிதொடுத்தனரடுத்துமேன்மேல்
விட்டனர்வேந்தர்வேந்தன்சேனையில்வேந்தருள்ளார். (௧௧௯)

வேறு.

விற்கையாரியன்மகன்விசும்பின்வீழ்தரு
முற்கையாமெனவிடுமொளிகொள்வாளியாற்
கொற்கையானிறந்தபின்கோழியானெனுஞ்
சொற்கையாமனுகுலத்தோன்றறோன்றினன். (௧௨௦)

தேரின்மேனின்றுநீசிறுகட்செம்புகர்க்
காரின்மேல்வீரனைக்கணையிற்காய்வதே
பாரின்மேலார்கொலிப்பாதகஞ்செய்தார்
நீரின்மேலெழுத்தெனநிலையிலாண்மையாய். (௧௨௧)

ஆர்ப்பனமறைமொழிந்தனைவர்பாவமுந்
தீர்ப்பனவேள்விகள்செய்வதன்றியே
கூர்ப்பனபலபடைகொண்டுபோர்செயப்
பார்ப்பனமாக்களும்பாரின்வல்லரோ. (௧௨௨)

தாதையைக்கொன்றவெஞ்சாபவீரனைக்
கோதைவிற்கணைகளாற்கொன்றிலாதநீ
யூதைமுற்சருகுபோலோடலல்லதை
மோதயிற்படைகொடுமுனையவல்லையோ. (௧௨௩)

என்றுசின்மொழிமொழிந்திவுளித்தாமன்மேற்
றன்றுவில்வளைத்தனன்சோழபூபதி
குன்றுடன்குன்றமர்குறிக்குமாறுபோற்
சென்றுசென்றடுத்தனதேருந்தேருமே. (௧௨௪)

இருவர்செங்கரங்களுமிரண்டுகால்களு
முரனுறப்பிணித்தநாணோசைவீசவு
மருவுபொற்றோளுறவலியின்வாங்கவும்
விரைவுடன்வளைந்தனவில்லும்வில்லுமே. (௧௨௫)

புகலருமறையவன்புராரியாதியாந்
திகழொளியிமையவர்சிறப்பினீந்தன
விகன்முனைமுனையுறவெதிர்ந்துதள்ளவே
யகல்வெளிபுதைத்தனவம்புமம்புமே. (௧௨௬)

சுரருலகெய்தியதுரோணன்மைந்தனை
யிருகணைபுயத்தினுமிரண்டுமார்பினு
மொருகணைநுதலினுமுருவவேவினான்
மருவிரிதாதகிவாசமாலையான். (௧௨௭)

பிறைமுடிச்சடையவன்பிள்ளைவள்ளுகிர்
விறலுடைப்புலிக்கொடிவீரன்மெய்யெலாம்
புறவினுக்கரிந்தநாட்போலமேல்விடுந்
திறலுடைவாளியாற்சிவப்பித்தானரோ. (௧௨௮)

துளவணிமுடியவன்றுள்ளுகன்றினால்
விளவினையெறிந்தெனவீரவேலினால்
வளவனும்வெகுண்டுபின்மயூரவாகன
னிளவலையெறிந்தனனெவருமஞ்சவே. (௧௨௯)

உருத்திரன்றூதுவினுற்பவித்தவக்
கருத்துடைமுனிவன்மெய்கலங்கிவீழ்தலுந்
திருத்தகுசகுனியுஞ்சிற்சில்வேந்தரும்
வருத்தமோடெடுத்தவன்வருத்தமாற்றினார். (௧௩0)

அவனொடுமீளவந்தபயன் றன்னொடு
கவனமான்றேருடைக்காவன்மன்னவர்
சிவனொடுமமர்பொருந்தெவ்வரென்னவே
துவனிசெய்முரசெழத்துன்றுபோர்செய்தார். (கநக)

துன்மருடணன்மகன் சுவாகுதுன்முகன்
வின்மகன்சுவாதுவாள்வெயில்விபாகரன்
றன்மகன் றிருமகன் சங்கனென்பவர்
மன்மகார்பலரொடுமடிந்துவீழவே. (கநஉ)

பண்ணகவிசையளிபாடுதண்டலைக்
கண்ணகன்காவிரிநாடன்கைக்கணை
மண்ணகநெருக்குறமலைந்தமன்னரை
விண்ணகமிடனறவிரைவினேற்றவே. (கநந)

முன்னியசிலைமறைமுனிவன்மைந்தனுந்
தன்னிகரிலாவிறற்சகுனியாதியாத்
துன்னியநிருபருந்தொல்லமர்க்குநீ
சென்னியென்றவன்புகழ்செப்பிமீளவே. (கநச)

வேறு

சோனாமேகம்பொழிவதுபோற்றுச்சாதனனுந்தம்பியரும்
வானாடேறவழிதேடிவருவார்போலவெருவாமன்
மேனாண்மொழிந்தவஞ்சினங்கண்முடிப்பானின்றவீமனெதி
ரானவாளிமழைதூவிபடல்வெஞ்சிலைபோடடுத்தாரே. (கநரு)

உருத்தின்றரசரைவரையுமுடனேகொல்வனெனவெண்ணிக்
கருத்தின்படியேவிரைந்தோடுங்கவனப்புரவிக்காற்றேரிற்
செருத்திண்பணைகண்முழங்கவருசெங்கோன்மன்னற்கிளையோனை
மருத்தின்புதல்வன்கண்டுமழைமுகில்போலெதிர்வாய்மலர்ந்தானே. (கநசா)

துச்சாதனனேயுனைப்போலுஞ்சூரருளரோசூரரெலா
மெச்சாநின்றார்வேத்தவையின்மேனாணீசெய்விறலாண்மை
யச்சாரிரதப்போர்க்குமுனக்கார்வேறெதிருண்டம்மவிரைந்
திச்சாபோகமாகவிருந்தின்றேமறலிக்கிடுநாளே. (கநஎ)

இன்றேவுன்றன்சென்னிதுணித்திழிசெம்புனலிற்குளித்திடுநா
ளின்றேவழலினுற்பவித்தாளிருளாரளகமுடித்திடுநா
ளின்றேதாகங்கெடநாவுக்கிசைந்ததண்ணீர்பருகிடுநா
ளின்றேவுரைத்தவெஞ்சினங்களெல்லாம்பயன்பெற்றிடுநாளே. (கநஅ)

வென்றேயவனிமுழுதாளும்வீரோதயனின்றம்முனையுங்
கொன்றேநாளையமரரெதிர்கொள்ளக்கடிதின்வரவிடுவ
னின்றேநீபோயிடம்பிடிப்பாயெண்ணாவெண்ணமெணிமன்றி
லன்றேகலகம்விளைத்தென்றுமழியாவரசையழித்தோனே. (கநகூ)

வீமன்கருத்தோடிவைமொழியவேறுத்தரமற்றொன்றின்றி
யூமன்றனைப்போலவனிற்கவுடனேயிளையோரொன்பதின்மர்
நாமம்பெறுகோலோரொருவர்நானாலாகநடந்தவழி
தூமங்கிளரவொருகணத்திற்றொடுத்தாரெதிர்வந்தடுத்தாரே. (௧௪௦)

தொடுத்தார்தொடுத்தகணையனைத்துஞ்சூரன்றானுந்தன்கணையாற்
றடுத்தான்மீளவோரொருவர்க்கோரோர்பகழிதனுவாங்கி
விடுத்தானவருமிரதமிசைவீழ்ந்தார்வீழ்ந்தவீரரைவந்
தடுத்தார்விரைவிலகல்வானத்தழகார்காதலரம்பையரே. (௧௪௧)

உயிர்க்காருயிராந்தம்பியர்களோரொன்பதின்மர்வீமன்கைச்
செயிர்க்காய்கணையாற்சிரந்துணிந்துதேர்மேல்வீழச்சினங்கதுவிப்
பயிர்க்காமாரிபொழிந்துவருபருவப்புயல்போற்பாவனனை
மயிர்க்காறொறுமம்பினஞ்சொருகமன்னற்கிளையோன்மலைந்தானே. (௧௪௨)

தன்மேலுரககேதனனுக்கிளையோன்றொடுத்தசரங்களெல்லாங்
கன்மேன்மேகத்துளியென்னக்காய்ந்தானவற்றைக்கடிதறி
மன்மேற்கொண்டபுயமுறவில்வாங்கிக்கொடும்போர்வாளிபல
மென்மேலெய்தானெதிர்ப்பட்டால்விடுமோபின்னைவிறல்வீமன். (௧௪௩)

தூவாநின்றவேவனைத்துந்துச்சாதனன்றன்றொடைபிழையா
வேவால்விலக்கியேழுகணையெய்தானெய்தகணையேழு
மாவானவற்றின்றலைநான்குமடங்கற்கொடியுமணித்தேரு
மேவாநிருபன்மலர்த்தடக்கைவில்லுந்துணித்துவிழ்த்தனவே. (௧௪௪)

இத்தேரழியவேறொருதேரேறிப்பரவையிடைச்சுழன்ற
மத்தேயனையான்சிலைவாங்கிமன்னற்கிளையவயமீளி
யத்தேரழியக்கொடிவலவன்வயமாவனைத்துமற்றுவிழப்
பத்தேயெய்தாங்கிணைவாளிபகைவன்புயத்திற்படவெய்தான். (௧௪௫)

காரிற்கரியகுழறீண்டிக்கலையன்றுரிந்தகழற்காளை
பாரிற்குதித்தோரதிபாரப்பைம்பொற்கதையாற்பாவனன்றன்
றேரிற்புடைக்கத்தேர்சிதைந்துசிந்திற்றவனுஞ்சிலைமாற்றிப்
போரிற்சிறந்ததண்டமுடன்புவிமேற்பாய்ந்தான்புலிபோல்வான். (௧௪௬)

வேறு.

இருவரும்புயங்களினப்பிமொத்தினரிகல்புரிந்துதண்டிறுகப்பிடித்தனர், மருவியொன்றொடொன்றனல்கக்கமொத்தினர்வலமிடங்கொண்மண்டலமுறப் பயிற்றினரருகுசென்றுசென்றடிவைத்தடுத்தனரகலநின்றுநின்றொரிமைப்பின்முட்டினர், திருகுவெஞ்சினத்திடிபொத்துரப்பினர்திசையின்மண்டிபக்கிரிசத்தமிட்டவே. (௧௪௭)

வெகுளிகொண்டுகொண்டெதிர்கொக்கரித்தனர்விசையுடன்சினந்துயரக்குதித்தன, ருகவைவிஞ்சவெங்கதையைச்சுழற்றினருயர்விசும்பெறிந்தொருகைப்பிடித்தனர், முகமலர்ந்துநின்றதிரச்சிரித்தனர்முதிரவஞ்சினம்பலகட்டுரைத்தனர், மகிபர்கண்டகண்டவர்சித்தமுட்கிடவரையிரண்டுவெஞ்சமர்கற்பதொக்கவே. (௧௪௮)

இகலிவெங்கொடுங்கதையொத்துமொத்தொலியிடியின்வெங்கொடுங்குரலொ
த்தொலித்தன, மகிதலம்பிளந்ததுசர்ப்பவர்க்கமும்வயிறழன்றுநஞ்சுகள்கக்கிவிட்
டன, திகிரியந்தடங்கிரிபக்குநெக்கதுசெவிடுகொண்டயர்ந்தனதிக்கயக்குல, முகடு
விண்டதண்டமுமப்புறத்துறமுகில்களும்பெருங்குகைபுக்கொளித்தவே. (௧௪௯)

விழிகளுஞ்சிவந்தனநெற்றியிற்பொறிவெயர்வுவந்தரும்பினவிப்பிழுத்தென
மொழிகளுங்கிளம்பினநெட்டிடிப்பெனமுரிமுரிந்தவண்புருவச்சிலைத்துணை
யெழிலுடன்பரந்திறுகித்தடித்தனவிமையமந்தரங்களொடொத்தபொற்புய
மழியுமங்கமென்றொருசற்றிளைத்திலரமரிலன்றருங்கதையிட்டடிக்கவே. (௧௫௦)

எதிர்மலைந்தவெஞ்சமரிப்படிக்கிவரிரிதலின்றிமொய்ம்புறவுத்தரிக்கவு
முதரநெஞ்சுரம்புயமெய்க்கழுத்தெனவுரைசெயங்கமொன்றினுமுற்றுறைத்தில
கதைகளும்பிளந்தொடிபட்டெடுத்தனகரதலங்களுங்கருகிச்சிவந்தன
முதிர்சினங்கொளுந்தலின்முற்றும்விட்டிலர்முரணுடன்றொடங்கினர்முட்டியுத்தமே

விரல்களைந்தையுஞ்செறியக்குவித்தொளிமிகுநகம்புதைந்திடவுட்புதைத்திரு
கரதலங்களுஞ்சிகரப்பொருப்பிடைகரியகொண்டன்மண்டுருமொத்திடித்திட
வருளுடன்சிறந்தறனுற்றகொற்றவனநுசனுந்தயங்குரகத்தனிக்கொடி
நிருபர்தம்பெருந்தகைமுற்கனிட்டனுநினைவுடன்கலந்தெதிர்குத்தியிட்டபின். ()

அனிலன்மைந்தனென்றுரைபெற்றகொற்றவனரசன்முந்துதம்பியைமத்தகத்தி
கனல்கொளுந்தவந்திரத்தகர்த்திருகவுணெரிந்துவண்செவியுட்கரக்கவு [டை
முனைசிதைந்துரம்பெறுபற்றெறிக்கவுமொழிகளுந்தளர்ந்தனமுற்றொளிக்கவு
மினலினுஞ்சிவந்தொளிமிக்கவற்புதவிழிபிதுங்கவும்பெருகக்கலக்கியே. (௧௫௩)

பதயுகங்களங்குலிதொட்டுறுப்புளபலவுமென்புடன்றசைபற்றுவிட்டற
விதவிதம்படும்புடைபட்டிடிப்புறவிசிரம்புசந்துகளிற்றெறித்திற
மதுகையந்தடம்புயவெற்பறப்பலவரையுடன்பொருந்தியநற்கழுத்தற
முதுகிலுங்கவின்பெறவுற்பவித்தெனமுகனையும்புறந்திருகத்திருப்பியே. (௧௫௪)

மயிரைவன்கரங்கொடுறப்பிடித்தெதிர்வரவிழுந்திடும்படிபற்றியிட்டுட
லயிர்படுங்கடுந்தரையிற்றுகட்படவடியிரண்டினுஞ்சரியத்துகைத்தெழு
செயிருடன்பெருந்தொடைதொட்டிழுத்தணிதிகழுரம்புகுந்தவுணக்குலத்திறை
யுயிர்கவர்ந்தசிங்கமொடொப்புறத்தனதொளிசிறந்தனன்கடிதுக்கிரத்தொடே. ()

உகிரெனும்பெரும்பெயர்பெற்றசொட்டைகளுருவியெங்கணும்புதைபட்டுரத்தலம்
வகிரவுங்கொடுங்குடர்வட்டமற்றுகுவயிறுதொங்கவுங்கிழிவித்தபிற்செறி
துகிர்பரந்தசெம்பவரொத்தநெட்டுடல்சொரிதருஞ்செழுங்குருதிப்பெருக்கிடை
பகிரதன்றருங்கடவுட்டுறைப்புனல்படியுமும்பர்தம்பரிசிற்குளிக்கவே. (௧௫௬)

வேறு.

மன்னற்கிளையோனைவாட்டருமனுக்கிளையோன்
றுன்னிப்பிளந்தசுரருலகமேற்றுதலுங்
கன்னற்குமற்றுள்ளகாவலர்க்குநில்லாமல்
வெந்நிட்டதம்மன்னன்வீரப்பெருஞ்சேனை. (௧௫௭)

வண்டாரவாரமறுதநறும்பூந்துளபத்
தண்டார்முடியோனும்விற்கைத்தனஞ்சயனுங்
கண்டாரவர்முதலாங்காவலருங்கைகலந்தார்
வெண்டாரகைபரந்தவிண்ணொத்ததாகவமே. (௧௫௮)

வேகமிகுஞ்செந்தீயின்மேனுளவஃதரித்த
தோகைகுழலுந்துகிலுமுடன்றொட்டனவென்
றாகமுறப்பிளந்தவாண்டகைமீண்டவ்வீரன்
பாகமுறுகைவிரல்கள்பத்துந்துணித்தானே. (௧௫௯)

தண்ணீர்நிகரெனத்துச்சாதனன்றன்மெய்யிலிழி
புண்ணீர்பருகப்புதவோனையாவருக்குந்
கண்ணீர்வரத்தடுத்தான்காணுங்காலெத்திறத்தும்
வெண்ணீர்மையில்லாதமேகந்தனைப்போல்வான். (௧௬௦)

குடியாமலக்குருதிகொப்பளித்துவாக்கை
முடியாநின்றென்னெண்ணமுற்றினனென்றங்கட்
படியாளுஞ்செங்கோன்மைப்பார்த்திவருக்கெல்லாங்
கொடியார்மடங்கலெனக்கூத்தாடிநின்றார்த்தான். (௧௬௧)

துன்பமுறுந்துன்னீதித்துச்சாதனன்போர்செய்
தொன்பதின்மர்தம்பியரோடும்பனூர்புக்கானென்
றன்புடையதம்முன்னடிவீழ்ந்தகங்கரித்தான்
வன்புடையதாதையினுமிக்கவலியோனே. (௧௬௨)

பாண்டவர்கள்சேனைமதிகண்டபௌவமெனக்
காண்டவமன்றுண்டகனல்போனனிதருக்கி
மூண்டநிலைகண்டுமுதுகிடுதன்சேனையுடன்
மீண்டுமெதிரூன்றுமல்வெய்யோன்மகனின்றான். (௧௬௩)

மேல்கொண்டுபாண்டவர்தம்வெஞ்சேனைசூழ்ந்திடவு
மால்கொண்டவர்போலமாண்டாயெனக்கழறிக்
கால்கொண்டதிண்டேர்கடாவினன்கையுளவு
கோல்கொண்டான்கன்னனுமக்கூற்றுக்கெதிர்கூறும். (௧௬௪)

வேந்தனனையவிறற்றம்பிவீமன்கை
மாய்ந்தநிலைகண்டுமனந்தளர்ந்ததல்லாது
கூர்ந்ததிறன்மத்திரத்தார்கோவேவெருவுமோ
பாந்தளெதிர்செல்லப்பறவைக்கரசென்றான். (௧௬௫)

முன்னமமரின்முதுகிட்டமன்னரையு
மன்னவர்கண்மன்னனையும்வன்பேரணியாக்கிப்
பொன்னசலம்போலும்புனைபொற்கொடிநெடுந்தேர்க்
கன்னனெதிரூன்றினன்காயுங்கனல்போல்வான். (௧௬௬)

சேனாபதியானதேர்த்துருபதேயனும்வான்
மீனாமெனப்பரந்தவேந்தருடனே தனக்குத்
தானாண்மைக்கொப்பாந்தருமனையுஞ்சேனையையு
மாநாகமுட்கவகுத்தாங்கெதிர்நடந்தான். (௧௬௭)

பொன்னார்முரசமுதற்போர்வெம்பணையாலும்
வின்னாணொலியாலும்விண்ணோர்செவிடுபடப்
பன்னாமபேதப்படையொளியாலும்பலபூண்
மின்னாலுங்கண்கள்வெறியோடிவிட்டனவே. (௧௬௮)

யாமினியிலெவ்வுயிர்க்குமேற்றதுயின்மாற்றுவோன்
மாமதலைகோமதலைமான்றேர்விடசேன
னாமமணித்தேர்மேனகுலன்மேற்சென்றுசில
தாமமுனைவாளிதழற்பொறிபோற்சிந்தினனே. (௧௬௯)

வெம்புரவித்திண்டேர்விசயற்கிளையோனுஞ்
செம்பதுமக்கையிற்சிலைநாணொலியெழுப்பிக்
கம்பமதமால்யானைக்கன்னன்மகனைவியகூ
ரம்படையவம்பாலறுத்தறுத்துவீழ்த்தினனே. (௧௭0)

அண்டர்பெருமானுக்கம்பொற்கவசமுடன்
குண்டலமுமீந்தோன்குமரன்கொடுங்கணையான்
மண்டுகனலருந்தவன்காண்டவமெரித்த
திண்டிறலோன்றம்பிதடந்தேர்க்கால்களையழித்தான். (௧௭௧)

மற்றொருதேரேறிமருத்துவர்தம்மைந்தனுமக்
கொற்றநெடுங்கச்சைக்கொடியோன்றிருமைந்தன்
வெற்றிவிலோதனமும்வெஞ்சாபமுமுடனே
யற்றுவிழவெய்தானவனாண்மைக்காரெதிரே. (௧௭௨)

மீண்டவனும்வேறொருவின்மேருவெனவாங்கிப்
பாண்டவனைவீழும்படியெய்தான்வீழ்ந்தோனை
மூண்டவனற்செங்கண்முரண்வீமன்கொண்டேகக்
காண்டவநீறாக்கினான்கண்டானவன்போரே. (௧௭௩)

நன்றாண்டிகழ்மதியாநாகம்பருமத்தா
லன்றாண்டிரைமதியாவண்டர்க்கமுதளித்தோன்
முன்றாண்டியதேரிற்சென்றான்முனைவாளி
மின்றாண்டில்வீசிவிடசேனமீன்படுப்பான். (௧௭௪)

தம்பிபடுந்துன்பந்தமையனையுங்காண்பனென
வெம்பியெதிர்சென்றுவிடசேனன்வில்வாங்கிப்
பம்பிவருகொடித்தேர்ப்பார்த்தனையும்பாகனையு
மம்பின்மறைத்தானடலேறரியனையான். (௧௭௫)

வின்னுணும்விற்பிடித்தவெவ்விரனும்வின்னடுவு
முன்னுனதும்பைமுடித்தோன்முடித்தலையும்
பின்னாகவாங்கும்பிறையப்பும்பேரமரி
லொன்னார்முனைதடிந்தோனேரம்பினாலறுத்தான். (௧௭௬)

வீழ்ந்தான்விடசேனன்வேந்தரெலாம்வெஞ்சமரிற்
றாழ்ந்தார்புறங்கொடுத்தார்தந்தைதடந்தேர்க்காலைச்
சூழ்ந்தார்சிலவீரர்தோலாதெதிர்நடந்து
வாழ்ந்தார்சுரராகிவான்மாதர்மெய்கலந்தே. (௧௭௭)

வேறு.

சாய்ந்தனன்களத்தருச்சுனன்சரத்தினாற்றனயனென்றவற்றந்த
வேந்தனுங்கருத்தழிந்துதன்றேர்மிசைவீழ்ந்தனனவன்பொற்றே
ரூர்ந்தசல்லியன்றேற்றினன்பற்பலவுரைகளாலவ்வெல்லைப்
பாந்தளங்கொடிப்பார்த்திவனின்றழிச்சென்றனன்பரித்தாமன். (௧௭௮)

தப்பருஞ்சமர்விளைத்தனிர்நீயுமத்தருமன்மைந்தனும்வென்றே
மெய்ப்பெரும்புகழ்புனை* குருகுலத்திடைவீடுமன்முதலான
வெப்பெருந்திறற்சூரவருங்கிளைஞருமேனைமன்னரும்யாரு
மொப்பரும்பெருஞ்சாதுரங்கத்துடனுடன்றுயிர்மாய்ந்தாரே. (௧௭௯)

வளையிலாதனமங்கலவிழவுநல்வரம்பிலாமரபுந்தொல்
விளைவிலாவரும்புலமுமுத்தீயிலாவேதியர்மனைவாழ்வுந்
துளையிலாமணிமுத்துமந்தண்புனற்றுறையிலாவளநாடுங்
கிளையிலாவரசியற்கையுநன்றெனக்கேட்டறிகுவதுண்டோ. (௧௮௰)

தும்பிமாபரிமாவுளதேருளசுருங்கினசுருங்காம
லும்பிமார்களிலிருந்தவர்தம்மொடுநாவலரும்பலகேள்வித்
தம்பிமாரொடுநம்முனாகியவிறற்றருமன்யாமகனோடும்
பம்பிமாநிலம்புரப்பதேகடனெனப்பார்த்திவற்குரைசெய்தான். (௧௮௧)

ஆரியன்றிருமகனிவையுரைசெயவரசனுமவைகேட்டுக்
காரியம்புகல்வதுபுவியாட்சியிற்கருத்துடையவர்க்கன்றோ
சூரியங்கரங்கமரிடையுடல்விழச்சுரருலகுயிரெய்த
வீரியம்பெறலெனக்கினிப்பயனெனவிளம்பினன்விறல்வேலோன். (௧௮௨)

முனிமகன்புகல்கட்டுரைமறுத்தபின்முனிவுறுவகைபோருக்
கினிமைகொண்டசொற்பலமொழிந்தவனெடுமிரப்பவருள்ளங்கைக்
கனியெனுங்கொடைக்கன்னனைத்தழீஇயவன்கண்ணுகுபுனன்மாற்றிப்
பனிநெடுங்குடைப்பார்த்திவனுவன்றனன்பார்த்தனதுயிர்கொள்வான். (௧௮௩)

மலைகலங்கினுமாதிரங்கலங்கினுமாதிரங்களில்விண்ணோர்
நிலைகலங்கினுநெடுங்கடல்கலங்கினுநிலங்கலங்கினுஞ்சேடன்
றலைகலங்கினும்பேரவைமூன்றினுந்தளர்விலாதவர்கற்ற
கலைகலங்கினும்போர்முகத்தென்மனங்கலங்குமோகலங்காதே. (௧௮௪)

---

* குருநிலத்திடை என்றும்பாடம்.

என்மகன்றலையென்னெதிர்துணிபவம்பேசியபுருகூதன்
றன்மகன்றலைதுணிப்பணிக்கணத்திலோர்சாயகந்தனிலென்று
மன்மகன்றனக்கிரதமூர்மத்திரமகிபதிக்குயர்வேள்வி
வின்மகன்றனக்குளமகிழ்ந்துரைத்தனன்வெயிலவன்மகனம்மா. (௧௮௫)

சுரிமுகங்களிற்பேரியங்களிலெழுதுவனியாற்பகிரண்ட
நெரியுமென்றயனஞ்சினன்சேனையினெருக்கினாலெனைத்துள்ள
கிரிகளுஞ்சரிந்திடுமெனவஞ்சினன்கிரீசனுங்கிளராழி
யரியுமஞ்சினன்றாளியாலலைகடலலையவற்றிடுமென்றே. (௧௮௬)

பரியுடன்பரிநெருங்கினநெருங்கினபடையுடன்படைமத்தக்
கரியுடன்கரிநெருங்கினநெருங்கினகடவுதேருடன்றேரும்
விரிநெடுங்குடைகுடையொடுநெருங்கினவிலோதமும்விலோதத்தோ
டரியெறிந்திடநெருங்கினவாடையுமாடையுமலமந்தே. (௧௮௭)

பரியில்வீரரும்பரியில்வீரரும்வயப்படையெறிந்தனர்கொற்றக்
கரியில்வீரருங்கரியில்வீரருமமர்கடுகினர்காற்றேராங்
கிரியில்வீரருங்கிரியில்வீரருமெதிர்கிடைத்தனர்பதசாரித்
தெரியல்வீரருந்தெரியல்வீரரும்பலசெருப்புரிந்தனரன்றே. (௧௮௮)

எடுத்தவேல்களும்வேல்களுமுனைந்தனவிலக்குறக்கொடும்பாணந்
தொடுத்தசாபமுஞ்சாபமும்வளைந்தனதொடியுடைக்கரசால
மடுத்தவாளமும்வாளமும்பொருதனவங்குலிகளிற்சுற்றி
விடுத்தநேமியுநேமியுந்துணித்தனவீரர்சென்னிகள்வீழ. (௧௮௯)

அறன்மகன்பெருஞ்சேனையினிருபருமரவவெங்கொடியாடை
மறன்மகன்கொடுஞ்சேனையினிருபரும்வஞ்சினம்பலகூறித்
திறன்மிகுந்ததஞ்சேனையோடெதிரெதிர்சென்றுசென்றிடந்தோறு
முறமலைந்தனரொருவருக்கொருவர்தோளுரமும்வீரமுமொத்தோர். (௧௯௦)

வேறு.

இளைஞரும்பெருஞ்சேனையுமிருபுடைநடக்கக்
கிளைஞர்யாவருநேமியங்கிரியெனச்சூழ
விளையும்வெஞ்சினவீமன்முன்போதரவிசயன்
வளைநெடுஞ்சிலைகணைமழைபொழிந்திடவந்தான். (௧௯௧)

கிரிசன்மைந்தனுங்கிருபனுங்கிருதவன்மாவும்
வரிபொலங்கழற்சகுனியுமுதலியமறவோ
ரெரியும்வெங்கனற்கண்ணினரெயிலெனச்சூழத்
தெரியும்வாளிவன்சிலையுடைக்கன்னனுஞ்சென்றான். (௧௯௨)

மல்வளைத்ததோள்வலனுறவலனுறத்தத்தம்
வில்வளைத்தனர்விசையுடன்சிலீமுகந்திகிரிக்
கல்வளைத்தபார்தனக்கிடுகாவணம்போலச்
சொல்வளைத்திலர்தொடுத்தனர்தும்பையந்தொடையார். (௧௯௩)

வேறு.

மருவருஞ்சுருதிகூறுநிலைநாலும்வழுவா
திருவருஞ்சிலைவணக்கியதுமெய்தவிரகு
மொருவருஞ்சிறிதுணர்ந்திலருகாந்தமெனவே
வெருவருஞ்செயலில்விஞ்சினர்கள்விஞ்சையருமே. (ககச)

ஒன்றொடொன்றுமுனையோடுமுனையுற்றுறவிழு
மொன்றொடொன்றயிலவோடவிசையோடுபுதையு
மொன்றொடொன்றுதுணிபட்டிடவொடிக்குமுடனே
யொன்றொடொன்றிறகுமௌவுமெதிரோடுகணையே. (ககரு)

இடம்புரிந்திடில்வலம்புரியுமெண்ணின்முறையால்
வலம்புரிந்திடிலிடம்புரியுமண்டலமுமாய்
நடம்புரிந்துபவுரிக்கதிகடத்துமெதிரே
சலம்புரிந்ததிரமுட்டுமிருசந்தனமுமே. (ககசு)

ஆசுபோமிவுளிமாகடவியாழியிரத
மூசுபோரிலொருவர்க்கொருவர்முந்தவிடலால்
வாசுதேவனையுமத்திரமகீபதியையுந்
தேசுவேறுதெரிகிற்றிலர்கடேவர்களுமே. (ககஎ)

மறமுமொத்த*வழுவற்றசுழியொத்தவலிகூர்
புறமுமொத்தகதிபற்பலவுமொத்தபுகல்வா
ணிறமுமொத்தவுபரம்பருமைநீளமெனுமெய்த்
திறமுமொத்தவிருதேரில்வருதிண்பரியுமே. (ககஅ)

நிலையிரண்டினுறநின்றநிமலர்க்குநிகர்வோர்
மலையிரண்டினைவளைத்தெதிர்மலைந்ததெனவே
யலையிரண்டெனவதிர்ந்துபொருமவ்விருவர்கைச்
சிலையிரண்டுநிமிராதுகணைசிந்தினர்களே. (ககசு)

தேவதத்தமுமுழக்கியுயர்தேவர்பலரா
லாவமெத்துவகைபெற்றபலவம்புதெரியா
†மூவர்தத்தம்வடிவாமுதல்வன்மெய்ப்புதல்வன்மேற்
பூவின்மொய்த்தவறுகாலினிரைபோலவிடவே. (உ00)

பரிதியன்பொடுவழங்கியபராபரமெனும்
பெருவலம்புரிகுறித்துவிறலங்கர்பெருமான்
வரிநெடுஞ்சிலைவலாரிதிருமைந்தன்விடுதிண்
சரமடங்கவமர்தந்தசரமெய்துதறியா. (உ0க)

---

* அழகொத்த சுழி என்றும் பாடம்.

† மூவர் சுத்தவடிவாம் என்றும் பாடம்.

வயக்கதிர்க்கணைவிதங்கள்கொடுமாயன்விடுதே
ரியக்கமற்றிடவியற்றினனோர்கூடமிவனுந்
தியக்கமுற்றிடமயக்கிநெடுமால்செய்விரகா
லுயக்கமிக்கசரகூடமுளதாயதவனும். (௨௦௨)

வேறு.

மாயாசர*கூடம்வளைத்திடலால்வலையுட்படுவீரமடங்கலெனச்
சாயாபதிமைந்தனுநின்றனன்மெய்தளர்வுற்றனனின்றதனஞ்சயனு
மேயாவிதுவென்கொன்முனைந்துபொராதெழுதோவியமாயினையென்றுவிறற்
காயாமலர்வண்ணன்விளம்புதலுங்கவிவெங்கொடியோனிருகைகுவியா. (௨௦௩)

வன்போர்புரிவெங்கணையங்கர்பிரான்மறனாலுயர்பேரறனார்குமரன்
றன்போலவிளங்கினனாதலினென்றனுவுங்குனியாதுசரங்கள்செலா
வன்போடியதுள்ளமெனக்கினிமேலவனோடமர்செய்தலுமிங்கரிதால்
வெங்போகுவனென்றலுமேயிறைவன்விசையோடிரதத்தினைமீளவிடா. (௨௦௪)

முகில்வண்ணனும்வாசவன்மாமகனுமுரசக்கொடிமன்னவன்முன்புசெலப்
பகலின்பதிமைந்தனையின்னமுமிப்பகல்சாய்வதன்முன்புபடுத்திலையா
விகலெங்ஙன்முடித்திடுநின்கையில்வில்லிதுவென்னவிலென்றுதிருத்தமையன்
புகலுஞ்சொலவன்செவியிற்புகவேபுண்மேலயிலுற்றதுபோன்றதுவே. (௨௦௫)

கூரார்முனைவாளிகொளிச்சிலையைக்குறையென்னெதிர்கூறினரம்புவிமேல்
யாராயினுமாவிசெகுத்திடுமாலிதுவஞ்சினமாதலினிப்பொழுதே
தாரார்புயவென்றியுதிட்டிரனைத்தலைகொய்வனெனத்தனுவுங்குனியா
†வாராமுன்விலக்கியருச்சுனனைவருகென்றுதழீஇமதுசூதனனே. (௨௦௬)

குரவோர்களைநீயெனினுங்கொலையிற்கொடிதென்றுயர்கேள்வியர்கூறுவரா
லுரவோனையுமம்முறைகொன்றதனோடொக்குஞ்சிலபுன்சொலுரைத்திடுவா
யிரவோர்தமதின்முகம்வன்மையினாலிதயத்தொடுகண்டுமகிழ்ந்துபெரும்
பரவோதநெடுங்கடல்சூழ்புவியிற்பரிதாபமொழித்தபனிக்குடையோய். (௨௦௭)

என்னாவுரைசெய்தலுமஞ்சியிளைத்திருகைகொடிறைஞ்சிநராதிபனைத்
தன்னாவிசையாதனசிற்சிலசொற்றளர்வோடெதிர்நின்றுதனஞ்சயனுஞ்
சொன்னானறன்மாமகனோருரையுஞ்சொல்லாமலினித்துறவெய்துவனென்
றுன்னாவிரைவோடிரதத்தினிழிந்துயர்கானடைவானுணர்வுற்றனனே. (௨௦௮)

நரநாரணர்சென்றுதராபதிதாணளினத்தில்விழுந்தொருநாயகமா
வரனாமவனைப்புனைதேர்மிசையேவைத்துத்துனிமாறிடுமாறுரைசெய்
தரனாமெனநீயணிநின்றிடயாமனலம்பெனவோடியிமைப்பிடைமுப்
புரமேயகமாயதயித்தியரிற்பொருவோனுயிர்கைக்கொடுபோதுவமே. (௨௦௯)

விடைகொண்டனமென்றுவணங்கிநிலாமதியம்பகலேயொளிவிட்டதெனக்
குடைகொண்டுநிழற்றவிரண்டருகுங்குளிர்சாமரமாருதமாறுபொரப்
புடைகொண்டுமகீபர்திரண்டுவரப்புனைதேர்மதமாபுரவித்திரள்கைப்
படைகொண்டபதாதினிமுன்பின்வரும்படியேகினர்மாதவபற்குனரே. (௨௧௦)

---

* கூடமறைத்திடலால் என்றும் பாடம்.

† வாராவெகுள்கின்ற கிரீடியை நீவருகென்று என்றும்பாடம்.

வெங்கோதைநெடுஞ்சிலைபின்சிறுநாண்விசையோதையும்வெவ்விருகோதையும்
வெண், சங்கோதையும்வண்பணையோதையுநால்வகையாகியதானைநெடுங்கடலின்,
பொங்கோதையுமண்டமுடைந்திடவப்புறமுற்றகலாதுசெவிப்படமற், றிங்கோ
தையெழுந்ததறிந்திலராலிமையாவிழியோர்முதல்யாவருமே. (௨௧௧)

தாமங்களின்வைப்பருள்காலையுமச்சரகூடமறுத்தணிதானையொடும்
வீமன்றனெடும்பொருகின்றமைதன்விழிகண்டுகளித்திடவில்விசயன்
காமன்றனைநீறெழவென்றநுதற்கண்போலெரிகின்றகருத்துடனே
மாமந்தரவெற்பனதேர்கடவும்வலவன்றனொடாகவமன்னினனே. (௨௧௨)

அங்கிக்கதிர்தந்தகொடுஞ்சிலைநாணரவக்கணையஞ்சவெறிந்துமிகச்
சங்கித்தடலங்கியளித்ததனிச்சரமேவினன்வந்துதனஞ்சயனும்
பொங்கிக்கனல்சாலமெழுந்ததெனப்புகையும்படிபோயகல்வானதியின்
கங்கிற்பொறிவிட்டதுதாரகையின்கணமென்னவெறிந்ததுகாய்கனலே. (௨௧௩)

இணையின்றியெழுந்தசுடுங்கனலாலிரதங்களும்வேன்முதலெப்படையுங்
கணையுஞ்சிலையுங்கவனப்பரியுங்கரியுங்கரியானவைகண்டியமன்
றுணைவன்றுணைவாகுவளர்ந்திடவுந்துணைவார்புருவங்கடுடித்திடவும்
பணைவெங்குரல்கன்றிமுழங்கிடவும்பவ்வத்தரசன்றருபாணமெடா. (௨௧௪)

பவ்வம்புனல்வற்றமுகந்துவலப்படவம்பரமூடுருவப்பரவா
வெவ்வம்புதமேழுமுடன்பொழியும்வெள்ளம்புரைவெள்ளமிகச்சொரியச்
செவ்வம்பரமொத்தகளத்திடையச்செய்யோன்மகன்வன்பொடுசீறிவிடு
மவ்வம்புநொடிப்பொழுதத்தறவோனநுசன்றழலம்பையவித்ததுவே. (௨௧௫)

வாயுக்கணையேவினன்வானவர்கோன்மைந்தன்றிகழ்பேரொளிவான்மணியின்
சேயுற்றுரகேசன்வழங்கியதிண்டிறல்வெங்கணையொன்றுதெரிந்தனனு
லாயுப்புறமிட்டுவிடப்பொருவோனவ்வெங்கணையங்குமலைந்திடுவோன்
வீயுற்பலமாமுனைவெங்கணைமேல்வீசிப்பொருமுன்புவிழுங்கியதே. (௨௧௬)

என்னம்புதனக்கெதிரில்லையெனுவிருளம்பினையேவினன்வில்விசயன்
கன்னன்கலைபெட்டுடனெட்டுடைவெண்கதிரம்புதொடுத்தெதிர்கன்றினனன்
முன்னம்புசிதைந்துசிதைந்தழியாமுகமாறியிமைத்துவிழிக்குமுனே
பின்னம்புதொடர்ந்துசெலச்செலவேபிலமூழ்கியதென்னபெரும்பிழையோ. ()

மகவானருள்வாளிதொடுத்தனனம்மகவான்மகன்வாசிகளேழுடைவெம்
பகவானருள்வாளிதொடுத்தனனப்பகவானருடியாகபராயணனுந்
தகவாளியிரண்டுமுடன்கதுவித்தாழாதுயராதுசமம்பெறவே
முகவாய்கள்பிளந்தனமற்றுளபோர்முனைவாளியுமிப்படிமுட்டினவே. (௨௧௮)

உரமந்தரவெற்பினுமிக்கபுயத்துரவோனுளம்வெஞ்சினமூறியெழப்
பிரமன்கணையேவுதலுஞ்சமனார்பின்னோன்முடுகிப்பிறைமாமவுலிப்
பரமன்கணையேவினனக்கணையப்பகவன்கணைநீறுபடுத்துதலிற்
சரமங்கவைவேறுதொடுத்திலர்கைத்தனுவுங்குனிவித்திலர்தார்முடியோர். (௨௧௯)

இவ்வாறிமையோர்கள்வரங்களினாலிருவோர்களுமெய்தியமாமறைகூர்
வெவ்வாளிகளோடியுடற்றுதலால்வெஞ்சேனைபடங்கமடங்கியபின்
மைவானளகந்திசைவாண்முகமாமலையாமுலைவாரிதிவண்டுகிலஞ்
செவ்வாறுபடுத்தலின்மேதினியாடிருமேனியணிந்ததுசெவ்வணியே. (உஉ0)

வேறு

மகபதிமைந்தனைமீளவுந்தினகரன்மகனுயிர்கொண்டிடவேணுமென்றுறுசின
மிகமிகவன்சிலைகோலிபொன்கிரிபலமிடைவனம்வெந்திடவோடியந்தரமிசை
புகைகதுவும்படிசீறிவெம்பொறிவிடுபுரிதழன்மண்டியநாளிலம்பெனவரு
மிகலுடைவெம்பகுவாய்களைந்துடையதொரெழில்கொள்புயங்கனையேவவென்றுச
[வியே. (உஉக)

பரிமளசந்தனதீபமுங்கமழ்புகைபணிமலருங்கொடுபூசையும்பரிவுட
னருளிவணங்கியெடாவிடும்பொழுதினிலடல்வலவன்சிலகூறினன்பரிவொடு
விரிதுளவம்புனைமாயன்வஞ்சனையுளன்விசயனகன்றடமார்பகம்புதைதர
வுரகநெடுங்கணையேவுகென்றிடவவ்வுறுதிநினைந்திலனுதவன்குமரனே. (உஉஉ)

மழுவுறுசெங்கைபிராமனென்பவனருள்வரிசிலைகொண்டணிநாணிதன்செவியொடு
தழுவுறமண்டலமாய்வளைந்திடமுதுதறுகணெடுஞ்சினமூளும்வெங்கணையினை
யெழிலிமதங்கயவாகனன்றனயனதெழில்பெறுகந்தரமேதுணிந்திடும்வகை
யழலெழுநெஞ்சொடுநாடிநின்றுதைபினனளிமுரல்பங்கயநாயகன்குமரனே.(உஉங)

வலவனெனுந்திருமாலதன்றனைகெழுவரவையறிந்தணிதேரின்வன்றிகிரிக
ளிலகியவங்குலியாறிரண்டவனியினிடைபுதையும்படிதாழநின்றிடுதலி
னலர்கதிர்தந்தருள்காளையம்பெனவிடுமரவுதனஞ்சயன்மார்பையுங்களனையும்
விலகியவன்றனதாதையன்றுதவியவெயின்மகுடந்தனைமோதிவந்திடறவே. (உஉச)

இடறியதிண்பணிவாளிபின்பறிதலுமெதிர்பொரவெஞ்சிலைகோலிநின்றவனணி
பிடரினுமுண்டுகொல்பார்வையென்றிடவலிபெறநிலைநின்றிருதோள்களும்பரிவுற
வடவியின்வெந்துதன்வால்குறைந்திடவிடுமயின்முகவெங்கணையாலதன்பருமைகொ
ளுடலமிரண்டுடலாய்விழுந்தலமரவுதைபினனும்பர்பிரானருள்குரிசிலே. (உஉரு)

பிறகுபுரிந்தெழில்கூர்தனஞ்சயன்விடுபிறைமுகவெங்கணையாலழிந்திடுபணி
திறலுடன்முன்றுணிசேருமைந்தலையொடுதிரியவும்வந்தெனையேவுகென்றலறவு
முறவொடுகுந்திவழாவறம்பெறுதலினுரைவழுவும்பெரிதாகுலம்புரிபினு
மறுகணையொன்றுதொடேன்முனிந்தினியெனவரிகழலங்கர்குலாதிபன்புகலவே. ()

எரியிடைவெந்துடல்வாலுமுன்றறிதலினிடரறவுய்ந்திடநீபெரும்புகலென
விரைவொடுவந்தெனைவாளிகொண்டிடுகெனவிசயனைவென்றிடுமாறுளங்கருதவு
மொருதனிவெஞ்சிலைகால்வளைந்திலதுகொலொருபடியும்பிழைபோனதுன்றெருடை
யென,வரிகழலங்கர்பிரானைநொந்துரைசெய்துமறலியிடந்தனிலானதன்றுரகமே.()

வேறு.

நாகாயுதந்தப்பிநரனுய்ந்தபொழுதத்துநாகக்கொடிச்
சேகானநெஞ்சத்தவன்சேனையிற்றன்செருச்சேனையிற்
பாகார்கடாயானைநரபாலர்மகிழ்வோடுபரிவெய்தினா
ரேகாதசந்தன்னிலெக்கோளுநிகரென்னவிகலின்றியே. (உஉஅ)

அருமார்பிலக்காகவெய்யென்னவெய்யாவகங்காரமும்
வருமாசுணந்தன்னைமறுகாலுமேவாமன்மறைசெய்ததும்
பொருமாறுநினைவற்றதுங்கண்டுநரனைத்தபோர்மீளியைத்
திருமாலொடொப்பானுமுளநொந்துநொந்தம்மசிலகூறுவான். (௨௨௯)

என்னாலுமரிதித்தடந்தேர்*விரைந்தூர்தலினியென்றுமற்
றுன்னாலுமரிதந்தவிசயன்றனுயிர்கொள்ளலுன்னித்தபோர்ப்
பன்னாகதுவசற்குமரிதாலுனைக்கொண்டுபாராளுமா
றென்னாவிழிந்தானவன்றேரின்மிசைநின்றுமிசைநின்றுளான். (௨௩0)

என்றேயெழிற்குந்திவயினல்குதனியாளியிகலேறனான்
வன்றேர்செலுத்திப்பெரும்போர்முடிப்பிக்கவருசல்லியன்
றென்றேரிசைச்செவ்விநறைநாறுமலர்விட்டசிறைவண்டெனத்
தன்றேரின்மேல்கொண்டுதனிவில்லுமீளத்தரித்தானரோ. (௨௩௧)

கதவாசிநடையற்றுவலியற்றுவரிவிற்கொள்கணையாவையும்
விதவாழிநிலனுற்றவிரைதேருமெய்வன்புமெலிவுற்றபின்
புதவாமன்மழுவாளிபுரைசெய்தசாபத்னதயுறவுன்னினா
னதவாமுரட்போர்தனக்கஞ்சுமோவென்றுமடலங்கர்கோன். (௨௩௨)

இயற்கைப்பெருங்கொற்றவலியன்றியார்பாரிடத்தும்பெறுஞ்
செயற்கைப்படைத்திண்மைகைவந்திலாவெய்யசெய்யோன்மகன்
வெயர்க்கத்தனுதல்கண்சிவப்பேறமனம்வெம்பமண்மீதிழிந்
தயர்க்கச்சபித்தோனைவந்தித்துவேறோரடற்றேரின்மேல். (௨௩௩)

ஏறித்தன்வலவன்செலுத்தத்தடக்கையிலிகல்வில்லுடன்
சீறிக்கொடுஞ்சாயகங்கோடிமுகிலூர்திசேய்மேல்விடக்
காறிக்கனன்றக்கடுந்தேர்செலுத்துங்கருப்பாகனார்
கூறிக்கொடுத்தாரருக்கன்குமரன்வன்மைகுறைகின்றதே. (௨௩௪)

குறையற்றதன்வில்லைமகவற்குமாரன்குனித்தாசுகஞ்
சிறையற்றகிரிபோலநிற்கின்றதினகாரிசிறுவன்றன்மெய்
மறையத்தொடுத்தானுயிர்க்காலவிப்பான்மயிர்க்காறொறுங்
கறையற்றமதிபோலநிலவீனுமுத்தக்கழற்காலினான். (௨௩௫)

வேறு.

எத்தலங்களினுமீகையாலோகைவாகையாலெதிரிலாவீரன்
மெய்த்தலமுழுதுந்திறந்துகுகுருதிவெயிலவன்கரங்கள்போல்விரிய
கொத்தலரலங்கன்மகுடமுங்கவசகுண்டலங்களுமுருக்குலைந்துங்
கைத்தலமறந்ததில்லைவிற்குனிப்புங்கடுங்கணைதொடுத்திடுங்கணக்கும். (௨௩௬)

அத்தவெற்பிரண்டுவிற்கிடையெனப்போயாதவன்சாய்தல்கண்டருளி
முத்தருக்கெல்லாமூலமாய்வேதமுதற்கொழுந்தாகியமுகுந்தன்
சித்திரச்சிலைக்கைவிசயனைச்செருநீயொழிகெனத்தேர்மிசைநிறுத்தி
மெய்த்தவப்படிவவேதியனாகிவெயிலவன்புதல்வனையடைந்தான். (௨௩௭)

* விரைந்தோடவினியூர்தன்மற்றென்றும் பாடம்.

தாண்டியதரங்கக்கருங்கடலுடுத்ததரணியிற்றளர்ந்தவர்தமக்கு
வேண்டியதருதிநீயெனக்கேட்டேன்மேருவினிடைத்தவம்பூண்டே
னீண்டியவறுமைப்பெருந்துயருழந்தேனியைந்ததொன்றிக்கணத்தளிப்பாய்
தூண்டியகவனத்துரகதத்தடந்தேர்ச்சுடர்தரத்தோன்றியதோன்றல். (௨௩௮)

என்றுகொண்டந்தவந்தணனுரைப்பவிருசெவிக்கமுதெனக்கேட்டு
வென்றிகொள்விசயன்விசயவெங்கணையான்மெய்தளர்ந்திரதமேல்விழுவோ
னன்றெனநகைத்துத்தரத்தகுபொருணீநவில்கெனநான்மறையவனு
மொன்றியபடிநின்புண்ணியமனைத்துமுதவுகென்றலுமுளமகிழ்ந்தான். (௨௩௯)

ஆவியோநிலையிற்கலங்கியதியாக்கையகத்ததோபுறத்ததோவறியேன்
பாவியேன்வேண்டும்பொருளெலாநயக்கும்பக்குவந்தன்னில்வந்திலையா
லோவிலாதியான்செய்புண்ணியமனைத்துமுதவினேன்கொள்கநீயுனக்குப்
பூவில்வாழயனுநிகரலனென்றாற்புண்ணியமிதனினும்பெரிதோ. (௨௪௦)

என்னமுன்மொழிந்துகரங்குவித்திறைஞ்சவிறைஞ்சலர்க்கெழிலியேறனையான்
கன்னனையுவகைக்கருத்தினோடுநோக்கிக்கைப்புனலுடன்றருகென்ன
வன்னவனிதயத்தம்பின்வாயம்பாலளித்தலுமங்கையாலேற்றான்
முன்னமோரவுணன்செங்கைநீரேற்றுமூவுலகமுமுடன்கவர்ந்தோன். (௨௪௧)

மல்லலந்தொடையனிருபனைமுனிவன்மகிழ்ந்துநீவேண்டியவரங்கள்
சொல்லுகவுனக்குத்தருதுமென்றுரைப்பச்சூரன்மாமதலையுஞ்சொல்வா
னல்லல்வெவ்வினையாலின்னமுற்பவமுண்டாயினுமேழெழுபிறப்பு
மில்லையென்றிரப்போர்க்கில்லையென்றுரையாவிதயநீயளித்தருளென்றான். (௨௪௨)

மைத்துனனுரைத்தவாய்மைகேட்டையன்மனமலருகந்துகந்தவனைக்
கைத்தலமலரான்மார்புறத்தழுவிக்கண்மலர்க்கருணைநீராட்டி
யெத்தனைபிறவியெடுக்கினுமவற்றுளீகையுஞ்செல்வமுமெய்தி
முத்தியும்பெறுதிமுடிவிலென்றுரைத்தான்*மூவருமொருவனாமூர்த்தி. (௨௪௩)

போற்றியகன்னன்கண்டுகண்களிப்பப்புணரிமொண்டெழுந்தகார்முகிலை
மாற்றியவடிவும்பஞ்சவாயுதமும்வயங்குகைத்தலங்களுமாகிக்
கூற்றுறழ்கராவின்வாயினின்றழைத்தகுஞ்சரராசன்முனன்று
தோற்றியபடியேதோற்றினன்முடிவுந்தோற்றமுமிலாதபைந்துளவோன். (௨௪௪)

அமரரானவருமமரயோனிகளுமமரருக்கதிபனானவனுங்
கமலநான்முகனுமுனிவருங்கண்டுகனகநாண்மலர்கொடுபணிந்தார்
சமரமாமுனையிற்றனஞ்சயன்கணையாற்சாய்ந்துயிர்விடவுஞ்செங்க
ணமலநாரணனைக்காணவும்பெற்றேனென்றுதன்னகமிகமகிழ்ந்தான். (௨௪௫)

வேறு.

அருந்தழன்மாமகம்புரிந்துங்கடவுட்கங்கையாதியாம்புனல்படிந்துமனிலயோகத்
திருந்துமணிமலர்தூவிப்பூசைநேர்ந்துமெங்குமாகியவுன்னையிதயத்துள்ளே
திருந்தநிலைபெறக்கண்டும்போகமெல்லாஞ்சிறுக்கியனைத்துயிருக்குஞ்செய்யவொண்
ணாப், பெருந்தவங்கண்மிகப்பயின்றும்பெறுதற்கெட்டாப்பெரும்பயனின்றிருவரு
ளாற்பெறப்பெற்றேனே. (௨௪௬)

* மூவரிலொருவனாமூர்த்தி என்றும் பாடம்.

நீலநெடுங்கிரியுமழைமுகிலும்பவ்வநெடுநீருங்காயாவுநிகர்க்குமிந்தக்
கோலமும்வெங்கதைவாளஞ்சங்குநேமிகோதண்டமெனும்படையுங்குழையுங்காது
மாலைநறுந்துழாய்மார்புந்திரண்டதோளுமணிக்கழுத்துஞ்செவ்விதழும்வாரிசாதக்
காலைமலரெனமலர்ந்தமுகமுஞ்சோதிக்கதிர்முடியுமிம்மையிலேகண்ணுற்றேனே.()

தருமன்மகன்முதலானவரியகாதற்றம்பியரோடெதிர்மலைந்துதறுகணுண்மைச்
செருவிலெனதுயிரனையதோழற்காகச்செஞ்சோற்றுக்கடன்கழித்தேன்றேவர்கோ
வுக், குரைபெறுநற்கவசமுங்குண்டலமுமீந்தேனுற்றபெருநல்வினைப்பேறுனக்கே
தந்தேன், மருதிடைமுன்றவழ்ந்தருளுஞ்செங்கண்மாலேமாதவத்தாலொருதமியன்
வாழ்ந்தவாறே. (உசஅ)

வான்பெற்றநதிகமழ்தாள்வணங்கப்பெற்றேன்மதிபெற்றதிருவுளத்தான்மதிக்க
ப்பெற்றேன், றேன்பெற்றதுழாயலங்கற்களபமார்புந்திருப்புயமுந்தைவந்துதீண்ட
ப்பெற்றே, னூன்பெற்றபகழியினாலழிந்துவீழ்ந்துமுணர்வுடனின்றிருநாமமுரைக்
கப்பெற்றேன், யான்பெற்றபெருந்தவப்பேறென்னையன்றியிருநிலத்திற்பிறந்தோ
ரில்யார்பெற்றாரே. (உசகூ)

என்றுமகிழ்வுறவணங்குமெல்லிமைந்தனின்புறவண்புறவினிலானிரையின்பின்
போய்க், கன்றுகொடுவிளவெறிந்தகண்ணன்றானுங்கன்னனுக்குக்கட்டுரைப்பான்க
டவுளாத, னன்றுனதுகவசமுங்குண்டலமும்வாங்கவழைத்தேனுங்குந்தியைக்கொ
ண்டரவவாளி, யொன்றொழியத்தொடாதவரங்கொள்வித்தேனுமுற்பவத்தினுண்
மையுனக்குணர்வித்தேனும். (உருo)

தக்ககன்றன்மகவானவுரகவாளிதனஞ்சயனைச்சதியாமற்சாய்வித்தேனு, மெய்க்
கருணைநின்பொருட்டால்பானேயென்றுமீண்டும்போய்த்தேர்வலவன்விசயற்கானு
னெக்கடனுமெக்கிரியுமெல்லாமண்ணுமிமையோருமானுடருமெல்லாமாகி, மைக்க
ணிளங்கோவியர்நுண்டுகிலுநாளும்வரிவளையுமடநெஞ்சும்வாங்குமாலே. (உருக)

பகலவன்றன்மதலையைநீபகலோன்மேல்பாற்பவ்வத்திற்படுவதன்முன்படுத்தி
யென்ன, விகல்விசயனுறுதியுறவஞ்சரிகமெனுமம்பாலவனிதயமிலக்கமாக, வகலு
லகில்வீரரெலாமதிக்கவெய்தானந்தவாசுகமுருவியப்பாலோடித், தகவுடையார்மொ
ழிபோலத்தரணியூடுதப்பாமற்குளித்ததவன்றானும்வீழ்ந்தான். (உருஉ)

கருடனதுதிருத்தோளிற்கண்டகோலங்கண்ணினுநெஞ்சினுநிற்கக்கருணையாதி
புருடனதுதிருநாமந்தனதுநாவிற்போகாமனனிவிளங்கப்புதைந்துவாளி, வருடமு
டல்குளிப்பிக்கச்செம்பொற்றேர்மேன்மன்னரெலாம்புடைசூழவையங்காக்குங்
குருடன்மகனருகிருந்துசோகங்கூரக்குற்றுயிரினுடன்கிடந்தான்கொடையான்மிக்
கோன். (உருங)

முந்தியெதிர்பொரும்விசயன்றொடுத்தகோலான்முடிசாய்ந்தின்றைவருக்குமுன்
னோன்வீழ்ந்தா, னந்திபடுவதன்முன்னேயாவிபோமென்றசரீரியெடுத்துரைப்பவன்
னையான, குந்திதனதுளமுருகக்கண்ணீர்சோரக்குழல்சரியப்போர்க்களத்துக்கோ
கோவென்று, வந்திருகைதலைபுடைத்துத்தலைநாளீன்றமகவின்மேல்வீழ்ந்தழுதா
ண்மன்னோமன்னோ. (உருச)

என்றேயென்றாதையுழைக்கன்னிமாடத்தெழிலிரவிதிருவருளாலின்றேனின்ற வன்றேபொற்பெட்டகத்திற்கங்கையாற்றிலாமுறையாலுனைவிடுத்தேனருளிலா தேன், வென்றேமண்கவர்தருமன்மதலைக்காவிமித்திரனானதுகேட்டுன்வீரங்கேட்டு நன்றேயென்றவப்பயனென்றுன்னிவாழ்ந்தேனாகமுநீயரசாளநடக்கின்றாயோ. ()

ஓரஞ்சுபேருளராலறந்தவாதவுதிட்டிரனாதியருரகக்கொடியோனாதி, யீரஞ்சு பதின்மருளர்தம்பிமார்களிங்கிதங்களறிந்தடைவேயேவல்செய்யப், பாரஞ்சுமொரு குடைக்கீழ்நீயேயாளும்பதமடைந்தும்விதிவலியாற்பயன்பெறுமற், காரஞ்சுகரதல த்தாயந்தோவந்தோகடவுளர்தம்மாயையினாற்கழிவுற்றாயே. (௨௫௬)

என்றென்றேயமர்க்களத்தினின்றவேந்தர்யாவருங்கேட்டதிசயிப்பவேங்கியேங் கி, யன்றன்போடெடுத்தணைத்துமுலைக்கணாறலமுதூட்டிநேயமுடனணித்தாவின் ற, கன்றெஞ்சவினைந்தினைந்துமறுகாநின்றகபிலையைப்போலென்பட்டாள்கலாபம்வீ சிக், குன்றெங்குமிளஞ்சாயன்மயில்களாடுங்குருநாடன்றிருத்தேவிகுந்திதேவி. ()

வேறு.

அன்னைமடியினுங்கரத்துமுடல்கிடப்பவங்கர்பிரானாவிதாதை
தன்னைமருவுறத்தழுவித்தானமுறக்கிளர்ந்ததவண்டடுமாறுமன்
மின்னைவலியுறநீட்டியண்டமுகடசையாமல்விண்ணோர்தச்சன்
பொன்னையழகெழப்பூசியொளிபிறங்கநாட்டியதோர்பொற்றாணொத்தே. (௨௫௮)

மருத்துதவவருசண்டமருத்தாலுமருத்துவான்வழங்குஞ்சோதி
யுருத்திகழுங்கரியசுடருருத்தெழுவெங்கனலாலுமுகாந்தந்தன்னி
னிருத்தமிடும்பெரும்பவ்வநெடுநீத்தம்வறப்பதுபோனிருபன்சேனைப்
பெருத்தகடல்சுவறியவப்பெருமைதனையெப்படிநாம்பேசுமாறே. (௨௫௯)

அணையார்தம்படைக்கடலினருநிலைக்குக்கரையேறலானகோலப்
புணையாயெத்திறங்களினும்பகிராமலுற்றதெலாம்புகலத்தக்க
துணையாயென்னுயிர்க்குயிராந்தோழனுமாகியவுன்னைத்தோற்றேனாகி
லிணையாருமிலாவரசேயாரைக்கொண்டரசாளவிருக்கின்றேனே. (௨௬௦)

சூழ்வேலையுலகாளுஞ்சூழ்ச்சியுமிப்பெருஞ்செல்வத்துவக்குநெஞ்சால்
வீழ்வேனோவமராடவீமனொடுதலைநாளில்விளைந்தசெற்றந்
தாழ்வேனோவுனையொழிந்துந்தம்பியரையொழிந்துமினித்தனித்துநானே
வாழ்வேனோவாழ்வேயென்மனவலியேவருகின்றேன்வருகின்றேனே. (௨௬௧)

எனக்கொண்டுசுயோதனன்பேரிரக்கமுடனழுதரற்றவிருந்தவேந்தர்
மனக்கொண்டவருத்தமுடன்வலியிழந்தோமெனக்கலுழவானினெங்கு
மினக்கொண்டன்முழங்குவபோலந்தரதுந்துபிமுழங்கவிமையோரார்ப்பக்
*கனக்கொண்டகதிர்புதல்வன்பாடறிந்துமூழ்கியதாற்கடலினூடே. (௨௬௨)

பேரறத்தின்மகன்முதலாம்பிள்ளைகளைவருந்தம்மைப்பெற்றபாவை
யார்கயற்கண்புனல்சொரியவழுகின்றகுரலினைக்கேட்டாழியானை
யோரிமைப்பில்வினவியிடவுள்ளபடியுரைத்ததற்பினுருமேறுண்ட
கூரெயிற்றுநாகம்போற்குலைகுலைந்துதம்முனைப்போய்க்குறுகினாரே. (௨௬௩)

* கனற்கொண்ட என்றும் பாடம்.

கன்னியிளம்பருவத்திலரியமாவெனுங்கடவுள்காதல்கூர
மன்னியமந்திரமெமக்குமின்றளவுமுரைத்திலையான்மறந்தாய்கொல்லோ
பின்னியசெஞ்சடைக்குழலாயிதென்னபேரறிவுபெற்றதாயி
னந்நியனன்றாயிருந்ததிப்படியேபிழைப்பிப்பதறிந்திலேமே. (உ௬௪)

ஊற்றிருந்தவிழியினளாயுனைப்பயந்தாண்மனமறுகவுயிராய்நின்ற
காற்றிருந்தவிடந்தேடிக்கணைபலவுமுடல்குளிப்பக்கன்னுவின்று
கூற்றிருந்தபதிதேடிக்குடியிருக்கநடந்தனையோகொற்றவேந்தாய்
வீற்றிருந்திங்கைவேமுமடிவருடப்புவியாளவிதியிலாதாய். (உ௬௫)

ஊன்றொடுத்தவயவாளியெத்தனையாயிரந்தொடுத்தேனுரகத்தானீ
தான்றொடுத்தகடுங்கணைக்குத்தப்பினேனெனமகிழ்ந்தேன்சஞ்சரீகத்
தேன்றொடுத்தமலரலங்கற்றினநாதன்சேயேநின்றிருமார்பத்தில்
யான்றொடுத்தநெடும்பகழியெனைக்கெடுப்பதறிந்திலேனென்செய்தேனே. (உ௬௬)

யாயுரைத்த*தல்லாதவெமருரைத்ததசரீரியென்னுந்தேவின்
வாயுரைத்ததின்றளவுங்கேட்டிலேங்கேட்டனமேல்வாட்டமுண்டோ
பேயுரைத்துத்தாலாட்டமுலைப்பாலோடுயிருண்டபித்தாவீண்டை
நீயுரைத்தபிறகறிந்தோமெம்முனையின்றெமைக்கொண்டேநேர்செய்தாயே. (உ௬௭)

ஆடகனைப்புதல்வனைக்கொண்டழிப்பித்தாயிலங்கைநகர்க்கரசையன்று
வீடணனைப்பகையாக்கிக்கிளையுடனேவீழ்வித்தாய்வேலைசூழ்ந்த
நாடறியப்புகுந்தெமக்குநாயகமாங்கன்னனையுநரன்கையம்பா
லீடழியப்பொருவித்தாயிமையோர்கள்வல்லவிரகியார்வல்லாரே. (உ௬௮)

இவ்வகையேதிருத்தமைபணிணையடிக்கீழ்வீழ்ந்தலறியாயுந்தாங்க
ளைவரும்போய்த்தம்பாடிவீடடைந்தாராகுலத்தாலழிந்தநெஞ்சார்
பைவருமாசுணத்துவசப்பார்த்திவனைக்கொண்டேதம்பாடிபுக்கார்
தைவருதிண்சிலைத்தடக்கைச்சகுனிதனைமுதலானதரணிபாலர். (உ௬௯)

பதினேழாம்போர்ச்சருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள்—௪,0௮௧.

கன்னபருவ முற்றுப்பெற்றது.

---

* அல்லாதுவேறுரைத்தது என்றும் பாடம்.

ஒன்பதாவது

சல்லியபருவம்.

பதினெட்டாம்போர்ச்சருக்கம்.

மீனாமைகோலநெடுநரசிங்கமாகிநிலம்விரகாலளந்தகுறளா
யானாதிசிறுமழுவல்வில்லுவெல்லுமுனையலமுற்றசெங்கையவராய்
வானாடர்வந்துதொழமண்ணாடர்யாவரையுமடிவிக்கவந்தவடிவாய்
நானாவிதங்கொள்பரியாளாகநின்றருளுநாராயணாயநமவே. (௧)

சிதையத்தன்மைந்தனையடுந்தன்மைகண்டுமொருசெயலின்றிநீடுதுயர்கூ
ரிதையத்தனாகியநீல்பகலோன்மறித்தவுணரெதிரஞ்சுமாறுபொருதா
னுதையத்தடங்கிரியுமொளிர்பற்பராககிரியொப்பாகவீசுகதிரிற்
புதையப்பரந்தவகவிருளுந்துரந்துரகர்புவனத்தினூடுபுகவே. (௨)

கண்டுசலின்றியிரவிருகண்ணிலான்மதலைகண்ணீரின்மூழ்கியெவரைக்
கொண்டிங்கெடுத்தவினைமுடிவிப்பதென்றுயர்சகுனியோடுமெண்ணியிருள்போ
யுண்டுஞ்சுகித்துமலர்மதுவொன்றுசாதிமுதலொண்போதுவிட்டுஞிமிறும்
வண்டுஞ்சுரும்புமரவிந்தத்தடத்துவரவருவோனைவந்தனைசெய்தான். (௩)

தொல்லாண்மையெந்தைமுதுதந்தைக்குமைந்துறுதுரோணற்குமண்ணினிகர்வே
றில்லாதவண்மைபுனைவெயிலோன்மகற்குமுடனெண்ணத்தகுந்திறலினான்
வில்லாண்மையாலும்வடிவாளாண்மையாலுமயில்வேலாண்மையாலுமவனே
யல்லாதுவேறுசிலரிலரென்றுசல்லியனையதியாதரத்தொடழையா. (௪)

நீயேயெனக்குயிருநீயேயெனக்குளமுநீயேயெனக்குநிதியு
நீயேதுணைப்புயமுநீயேவிழித்துணையுநீயேயனைத்துநிலையு
நீயேமுனைச்செருவிலதிரதரின்மாரதரினிகரற்றகோவுமதனா
னீயேமுடித்தியெனதெண்ணத்தையென்றுவகைநிகழாவியந்துபுகழா. (௫)

மன்பட்டவர்த்தனருமணிமகுடவர்த்தனருமுறையால்வணங்கவொளிகா
னன்பட்டமுந்தனதுகையாலணிந்துபடைநாலுக்குநாயகமெனா
மின்பட்டவோடைநுதலிபராசன்வன்பிடரின்மிசைவைத்துகந்தனனரோ
வென்பட்டதப்பொழுதுகுருசேனைமெய்ப்புளகமெழவொண்கண்முத்தமெழவே.

சேனாபதிக்குவரிசைகள்யாவுநல்கியுயர்தெய்வீகமானபுனலிற்
றானாதிமறைவாணர்க்கநேகவிததானஞ்சொரிந்துதகிலுந்
தேனாரலங்கல்பலகலனோடணிந்துபொருதேரிற்புகுந்தனன்வழா
வானாளுநாதனதிர்முகிலிற்புகுந்ததெனவன்போடுமன்னர்தொழவே. (௭)

கிருபாரியன்கடவுண்மருகன்றிகத்தபதிசாலுவன்கிருதன்முதலோ
ரிருபாலுமன்னர்வரமுனிவர்பெருஞ்சேனையெங்கணுஞ்சூழவரவே
நிருபாதிபன்றனதுசேனாதிபன்றனெடுநீள்களம்புக்கனனரும்
பொருபாரதச்சமரமின்றேமுடிப்பமெனுமெண்ணத்திறனோடுபொரவே. (௮)

தாமன்றராதிபர்கள்பலரொடும்வலப்புடைசலிப்பின்றியணியவிறல்கூர்
மாமன்றராதிபர்கள்பலரொடுமிடப்புடைவகுப்பொடணியத்தினகரன்
கோமைந்தன்மைந்தரொருமூவரொடுசேனையுங்கொண்டுறவணிந்தனனிகற்
சாமந்தன்மண்டலிகர்முடிமன்னர்சூழ்வரத்தரணிபதிபின்னணியவே. (௯)

ஒருவருமெனக்குநிகரில்லையெனுமத்திரன்புத்திரனையுரகதுவசன்
பொருபடைமுனைக்குரியசேனாபதிப்பெயர்புனைந்தமைபுகன்றனமினிக்
குருகுலம்விளங்கவருகுந்திமைந்தர்களிரவிகுமரனைக்கொன்றவிரவிற்
பருவரன்மிகுந்துளமினைந்ததும்பாசறைபுகுந்ததும்வியந்துபகர்வாம். (௧௰)

வேறு.

செவ்விரவிதிருமகனைச்செகம்புரக்குங்காவலனையிரவலோருக்
கெவ்விரவும்விடிவிக்குமிருகரத்துவள்ளலையின்றிழந்தோமென்று
விவ்விரவுநறுமலர்த்தார்த்தருமன்முதலைவருந்தம்விழிநீர்சோர
வவ்விரவிலிமைப்பொழுதுந்தரியாமலழுதரற்றியலமந்தாரே. (௧௧)

சாயைவெறுத்தனளவளிற்றலத்தேவிமிகவெறுத்தாடபனனீன்ற
சேயைவெறுத்துயிர்கவர்ந்தானுறவறியான்றயிந்தியர்போர்செயித்தானென்று
மாயைவெறுத்திடவிளைத்தமாயோனைவெறுத்தனன்வன்மனத்தியான
யாயைவெறுத்தனன்பின்னைவிதியைவெறுத்தனன்விமற்கிளையகோவே. (௧௨)

அற்றையிராவிடிவளவுந்தனித்தனியேயாகுலமுற்றனிலன்மைந்தன்
மற்றைநால்வருமாலுமன்னவரும்வரூதினியுமருங்குசூழ
விற்றைநாள்வஞ்சினத்தின்குறைமுடிக்கவேண்டுமெனுமிதயத்தோடும்
பிற்றைநாண்முரசதிரவளைமுழங்கக்களம்புகுந்தான்பிதாவைப்போல்வான். (௧௩)

விம்முபெரும்பணையொலியால்விண்டதுசொலண்டமெனவிண்ணோரஞ்சக்
கைம்முகமாமுதலானகடுஞ்சேனைப்பாஞ்சாலன்காதன்மைந்த
னெம்முகமுந்தானாகியிரதமூர்ந்தணிவகுக்கவிளையோர்யாருந்
தம்முனைவந்தடிவணங்கிப்புடைசூழ்ந்தார்சிறிதுமனஞ்சலிப்பிலாதார். (௧௪)

அத்திரயூகமதாகவரும்பெருஞ்சேனையைவகுத்தாங்கதிபனாகி
மத்திரபூபதிநின்றவலியினைக்கண்டதிசயித்துமாலைநோக்கி
யித்திறமாகியபடையோடெப்படிநாஞ்சிலபடைகொண்டெதிர்ப்பதென்றான்
குத்திரமாகியவினைகளொருகாலுந்திருவுளத்திற்குடிபுகாதான். (௧௫)

வீடுமனைச்சிலைத்துருவாம்வேதியனைநம்முனைமுன்வீடுசேர்த்த
நீடுமணிப்பொலங்கழலோர்நின்னருகேநிற்கின்றார்நிகரிலாய்கே
ளாடுதிரைக்கடனீந்தியேறினர்க்குக்கழிகடத்தலரியதொன்றோ
தோடவிழ்தார்ச்சல்லியனுக்கிளைப்பரோவெனமொழிந்தான்றுளபமாலே. (௧௬)

வில்லியரில்வேலாளில்வாளெடுத்தோர் தம்மிலொருவேந்தரொவ்வார்
செல்லியல்வெங்கரியாளிற்றேராளிற்பரியாளிற்சிலர்வேறெவ்வார்
மல்லியல்பொற்றோள்வலிக்குந்தண்டுக்குமெதிர்ந்துபொரவல்லார்யாரே
சல்லியனுக்கொப்பார்நின்றம்பியரிலிலரென்றுஞ்சாற்றினனே. (கஎ)

அருவரையோரிரண்டிருபாலமைந்தனைய தடம்புயங்கண்டவனிவேந்தர்
வெருவருபோர்மத்திரத்தான்வேறொருவர்மேற்செல்லானின்மேலன்றி
யிருவருமேமுனைந்துமுனைந்திரவிகடல்விழுமளவுமிகல்செய்தானு
மொருவரொருவரைவேறலொண்ணாதின்றுமக்கென்றுமுரைசெய்தானே. (கஅ)

பார்த்தனொருவனுஞ்சென்றுபரித்தாமாவுடன்மலையப்படைஞரோடு
மாத்திரிமைந்தரிலிளையோன்சௌபலனைவெல்லவிகன்மாவலோனு
மூத்தவன்மைந்தரைவெல்லமுனைப்பவனன்மைந்தனொடுமூண்டுவெம்போர்
கோத்தருமமத்திரத்தார்கோவையுயிர்கவர்தியெனக்கூறியிட்டான். (ககூ)

வேறு.

கிருபையாலுயர்கேசவனிங்கிதக்கேள்விகளுணர்வுறக்கேட்டுத்
துருபதேயனுந்தன்பெருஞ்சேனையைத்துன்றியவியூகமாத்தொடுத்து
நிருபர்யாவருஞ்சூழ்வரத்தாழ்சலநிதியெனவிதியெனநின்றுன்
பொருபதாகினியிரண்டினுமுனையுறப்போர்வலோர்தூசிகள்பொரவே. (உ0)

ஆயபோதினிற்குருபதிபதாகினிக்கதிபதியாயபூபதியம்
மாயவன்புகன்மொழிப்படிதருமன்மாமதலைமேல்விரைவுடன்வந்தான்
காயும்வெங்கனற்கண்ணினன்செவியுறக்கார்முகங்குனித்தசெங்கரத்தான்
றீயவாகியசிலீமுகமுரனுறச்சொரிதருசிங்கவேறனையான். (உக)

எதிரிதேர்வரும்வன்மைகண்டிமிழ்முரசெழுதியகொடிநராதிபனுங்
கதிரினேழ்பரித்தேரினுங்கடியதன்கவனமான்றேரெதிர்கடவி
முதிரமேல்வருங்கணைகளைக்கணைகளான்முனைகொடுமுனைகொள்கார்விசும்பிற்
பிதிர்படும்படிதொடுத்தனன்றொடித்தடக்கையினிற்பிடித்தவிற்குனித்தே. (உஉ)

கொடிஞ்சிமானெடுந்தேர்களிற்பூட்டியகுரகதக்குரம்படப்படமண்
ணிடிஞ்சுமேலெழுதூளிமுற்பகல்வருமிரவினைநிகர்த்ததவ்விரவு
விடிஞ்சதாமெனப்பரந்ததத்தேர்களின்மின்னியமணிகளின்வெயில்போய்ப்
படிஞ்சதூளியோர்நடம்பயிலரங்கினிற்பரப்பியவெழினிபோன்றதுவே. (உங)

தன்பெருந்தனிச்சங்கினைமுழக்கினன்றருமன்மாமதலைவெப்போரில்
வன்பெரும்பணைச்சங்கினைமுழக்கினன்மத்திராதிபன்றிருமகனு
நன்பெருந்துளைச்சங்குகளெழுப்பியராதம்வான்முகடுறநண்ணி
மின்பெரும்புயலேழுமொத்ததிர்தலின்மிகுகுராற்றனிதயொத்துளதே. (உச)

வில்லெடுத்தனர்வலியுடைநிலையினர்விக்குநாண்விரல்களிற்றெறித்து
மல்லெடுத்ததோள்வலனுறவளைத்தனர்வடிக்கணைமுனையுறவடசிச்
செல்லெடுத்தபேரிடியெனமுறைமுறைதொடுத்தனர்தேர்களுஞ்செலுத்திக்
கல்லெடுத்தெதிர்மலைந்தவாலியுமணிக்கழுத்துடையவனுமேயனையார். (உரு)

எய்தவம்புகளிருவர்மெய்யினும்படாதிடையிடையெஃகுடைத்தலைகள்
கொய்தவம்புகளாகியேமுழுவதும்விழுந்தனகூறுவதெவன்கொல்
கைதவம்புகலுதற்கிலாவெண்ணுடைக்கருத்தினர்திருத்தகுவரத்தாற்
செய்தவம்புரையறப்பலித்தனையவர்திருக்கணுங்கைகளுஞ்சிவந்தார். (௨௬)

கிரித்தடங்குவடனைந்தகேசரிநிகர்சல்லியன்முரசகேதனன்றன்
பரித்தடந்தனித்தேர்விடும்பாகனைப்பாணமொன்றுற்றலைதுணித்து
வரித்தடஞ்சிலைநாணறுத்தொருமுனைவாளியால்வடிக்கணையொன்றால்
விரித்தவெண்குடைமகுடமுமொடித்தனன்வில்வலோரெவரினுமிக்கோன். (௨௭)

வலவன்வீழ்ந்ததுந்தனுவினாணற்றதுமனத்தழுக்காறிலாவாய்மைப்
புலவன்வெண்குடையொடிந்ததுமேல்வருபோற்றலனேற்றமும்பொறுமற்
குலவு* திண்சிலைக்குரிசிலைத்தம்முனைக்கொண்டவீரியமெலாங்கொண்டான்
கலவமாமயிலொழித்துப்பஞ்சானனமெழுதியதனிக்கொடிக்கந்தன். (௨௮)

தனதுதிண்கையிற்சரத்தினுந்தம்பிகைச்சரம்விரைந்துடற்றலிற்றடக்கைக்
கனதனுத்தனையூன்றிநின்றிருவருங்கணக்கறமலையுமாகண்டா
னெனதுதோள்களிலிளையவன்றனக்குவேறியாதெனுமெண்ணுடைமனத்தான்
வினைதகாளையோடுவமைகூர்வலியினன்வேந்தர்யாரினும்புகழ்மிக்கோன். (௨௯)

எந்தவெந்தவெஞ்சாயகமறையுடனிமையவர்முனிவரர்கொடுத்தா
ரந்தவந்தவெஞ்சாயகமடங்கலுமவரவர்முறைமையிற்றொடுத்தார்
முந்தமுந்தமற்றுள்ளவாயுதங்களுமுடிமுதலடியளவாக
வுந்தவுந்தவெங்குருதியுமூளையுமுகவுகவுடற்றினருரவோர். (௩0)

மத்திரப்பெயர்ச்சிங்கவேறனையவன்வன்கைவான்படைகளின்மயங்கிப்
பத்திரப்பெயர்ப்பருத்தகைச்சிறுத்தகட்பாய்மதப்பரூஉப்பகடனையான்
சித்திரக்கதிர்மணிமுடிப்பிடிகைத்திண்டிறற்றிகிரியந்தேர்நின்
றத்திரத்தைவிட்டொருதனிக்கதையுடனதிர்ந்துபோயவனியிலானான். (௩௧)

பகைவனேறியதேர்விடும்வலவனுந்திகிரியும்பாய்பரிமாவும்
புகையெழும்படியிமைத்தகண்விழிக்குமுன்பொடியெழவிடியெனப்புடைப்ப
வகைகொடார்முடிமத்திரத்தலைவனுமாமறத்தோமரப்படையான்
மிகைகொள்வன்றிறல்வீமனைநெற்றியிலெற்றினன்வெற்றிகூர்ந்திடவே. (௩௨)

வேறு

தோமரந்தன்னால்வாயுசுதனமரழிந்தபோதி
லேமருவரிவிற்றனையிருபெருஞ்சேனையோரு
மாமருதடந்தேர்வாசிமத்தவாரணங்களூர்ந்து
தீமருகானமென்னத்தனித்தனிசெருச்செய்தாரே. (௩௩)

தேரவன்மைந்தன்மைந்தர்சித்திரசேனனேனைச்
சூரியவன்மன்சித்திரகீர்த்திமுச்சுடரோடொப்பார்
வீரரில்வீரனானவெம்பரிநகுலனோடும்
போரில்வந்தெதிர்ந்துதாதைபோயுழிப்போயினாரே. (௩௪)

* திண்சிலைக்கவன்சிலைதம்முனைக்கொண்டவீரியமெலாங்கொடுத்தான் என்றும் பாடம்.

தசையுறவளர்ந்தபொற்றோட்சகுனியுந்தனயராகி
யிசையுடன்வளர்ந்தவீரரிருவருமிரதமேலோர்
நிசையுறுமதமாவந்துநெருப்பெதிர்ப்பட்டதென்ன
விசையனதிளவலோடுசெருச்செய்துவெந்நிட்டாரே. (௩௫)

புயங்கவெம்பதாகைநச்சுப்பொங்கழற்புயங்கம்போல்வான்
றயங்குவெங்கழற்கார்க்கேதுதரனெனுந்தனுவலோனை
வயங்குவெஞ்சிறகர்ப்புங்கவயக்கொள்கூர்வாளியொன்று
லியங்குகவானினூடென்றிமையவனாக்கினானே. (௩௬)

இருபெருஞ்சேனையோருமிப்படிச்செருச்செய்காலைத்
தருமன்மாமதலைதன்மேற்சல்லியன்றானுமீளப்
பொருபரித்தடந்தேருந்திப்புகைகெழுமுனைகொள்வாளி
யொருதொடைதன்னிலோரேழுரத்துடன்றுரத்தினானே. (௩௭)

பின்னரும்விரைவினோடும்பெய்கணைமாரிசிந்தி
முன்னருமுனையினின்றோர்முதுகிடமுரண்டுசீறித்
துன்னருந்தடந்தேராண்மைச்சுமித்திரன்முதலாவுள்ள
மன்னரையிமைத்தகண்கண்மலருமுன்மடிவித்தானே. (௩௮)

தனக்கெதிர்தானையானசல்லியன்றானுமீளச்
சினக்கனன்மூளவாளச்சிலம்பெனச்சிலையும்வாங்கிக்
கனக்குலமேழுஞ்சேரக்கன்மழைபொழிந்ததென்ன
முனைக்கடுங்கணையால்வீமன்வடிவெலாமூழ்கவெய்தான். (௩௯)

அறைகழல்வீமன்றானுமங்கர்கோன்பாகன்றானு
முறைமுறைபுரிந்தவெம்போர்மொழிவதற்கியாவர்வல்லார்
நறைகெழுதும்பைமாலைநகுலசாதேவரென்னு
மிறைவருஞ்செங்கண்மாயனிளவலுமிவன்மேற்சென்றார். (௪௦)

சென்றுவெஞ்சிலைகள்கோலிச்சிலீமுகமுறுப்புத்தோறு
மொன்றெனவநேகமேவியொருமுகமாகப்போர்செய்
தின்றிவனாவிகோறுமென்றுசல்லியன்மேற்றங்கள்
வன்றிறல்யாவுங்காட்டிமாறில்போர்மலைந்திட்டாரே. (௪௧)

மதம்படுவேழமன்னமத்திரராசன்றானும்
விதம்படத்திரண்டுபோர்செய்வீரர்தம்மெய்களெல்லாஞ்
சதம்படுபகழியோரோர்தனுக்களினுருவியோட
விதம்படவெய்துநக்கானேவினுக்கிராமன்போல்வான். (௪௨)

*தம்பியர்தளர்ச்சிகண்டுசமீரணன்புதல்வன்சீறித்
தும்பைமாமாலைவேய்ந்துதொடுகணைவலிதின்வாங்கி
வெம்புபோர்மத்திரேசன்வியன்கொடிபாகுவாசி
செம்புனீர்சொரிகளத்திற்சிதறிடவறுத்துவீழ்த்தான். (௪௩)

---

*தம்பியர்தளர்ச்சிகண்டுசமீரணன்புதல்வன்மீள
வெம்பரித்தேரின்மேலான்வில்லினைத்திகிரியாக்கிச்
சம்பரன்பகைவனென்னச்சல்லியன்றேரும்பாகு
மம்புவிதன்னில்வீழவையிருகணைகளேவி. (௪௩) என்றும் பாடம்.

*உற்றிருபுறத்துந்திண்டேர்க்குரனுறவுதவியாய
கொற்றவர்பலரும்வீழக்கொடிகுடைகவரிவீழச்
சுற்றியநேமிவாசிதுளைக்கரக்கோட்டுநால்வாய்ப்
பொற்றைகடுணிந்துவீழப்புங்கவாளிகளுந்தொட்டான். (சச)

துருபதன்முதலாவுள்ளோர்சோமகர்முதலாவுள்ளோர்
நிருபர்தங்குலத்துளேனைநிருபர்களாகியுள்ளோர்
தருமன்மாமதலையோடுந்தம்பியரோடுங்கூடி
யொருமுகமாகிமேற்சென்றுறுசெருப்புரியும்வேலை. (சரு)

வேறு.

அறுதியாகவின்றருஞ்சமர்முடித்துமென்றறத்தின்மைந்தனுக்கன்பா
லுறுதிகூறியபாகன்வெவ்விரைவுடனூர்ந்தவெம்பரித்தேரோன்
பெறுதியாகமாதவம்புரிசிலைமுனிபெற்றவீரனுக்கின்றே
யிறுதிநாளெனவாங்கவனணிந்தபேரிகலணியிடைச்சென்றான். (சசா)

சென்றுபோர்புரியளவையினருச்சுனன்செழுமணிமுழுநீலக்
குன்றுபோனிறம்பவளவான்குன்றெனக்குருதியிற்சிவப்பேற
வொன்றுபோல்வனபிறைமுகக்கடுங்கணையொருபதுதொடுத்திட்டான்
வென்றுபோர்புரியவுணரூர்நீறுசெய்வீரன்மைந்தனையொப்பான். (சஎ)

தொடுத்தவம்பினையம்பினால்வானிடைத்துணித்திடைநணித்தாக
விடுத்தவம்பினான்மருவலன்பாகனும்வெம்பரிகளும்வில்லு
நடுத்தறிந்திடமார்பினுந்தோளினுநாலிருகணையெய்தா
னெடுத்தவெஞ்சிலைதறிதலுமவனுமாவிரதம்விட்டிழிந்தானே. (சஅ)

இழிந்துமீளவும்வேறொருவில்லெடுத்தெரிமுனைபுகைகாலப்
பொழிந்தவாளியோரளவிலவற்றையும்பொடிபடுத்தினன்பார்த்தன்
கழிந்தநீர்க்கணைகோலிவந்தெதிர்ந்துதன்கார்முகக்கட்டாண்மை
யழிந்துபோயினன்முனிமகனெனவெழுந்தார்த்ததுபெருஞ்சேனை. (சகூ)

செருப்புலக்கையாமுரலிடைவிருதராந்தினைக்குறல்களைச்சேர
மருப்புலக்கைகொண்டிடிக்கும்வெஞ்சினமனமத்தவாரணமன்னன்
பொருப்புலக்கையுற்றலமரவரிந்தவன்புதல்வன்மேலொருபார
விருப்புலக்கைகொண்டெறிந்தனனவனுமஃதெண்முறிபடவெய்தான். (ருo)

உலக்கையெட்டுறுப்பானபின்னொருதனித்தண்டுகொண்டுயர்கேள்வி
யலக்கைவித்தகனிளவறேர்விடவருமருச்சுனன்றடந்தோளா
மிலக்கையுற்றிடவெறிந்தனனெறிதலுமிவனவனெறிதண்டை
வலக்கையிற்றொடுகணைகளாற்பலதுணியாகவில்வளைத்தானே. (ருக)

---

*மற்றவன்புதல்வர்யாருமனங்கலக்குற்றுவீழ
வுற்றிருபுறனுந்திண்டேர்க்குரனுறவுதவியாய
கொற்றவர்பலரும்வீழக்கொடிகுடைகவரிவீழப்
பொற்றவர்துணிந்துவீழப்புங்கவாளிகளுந்தொட்டான். _ (சச) என்றும்பாடம்.

பூக்தைபைங்கொடியனையமெய்ப்பூணணிபொதுவியர் தனந்தோயுந்
தூர்த்தன்வெம்பரித்தேர்விடுமளவுமிச்சுரபதிமகனேடுங்
கோத்தவம்பினிற்பலபடைகளிலமர்கொள்ளுதலரிதென்று
பார்த்தன்முன்புநின்றமர்புரிந்திலனகடற்பார்புகழ்பரித்தாமா. (ருஉ)

மற்றவன்றனைமுதுகுகண்டவன்றிருமாதுலன்கிருபப்பேர்க்
கொற்றவன்புறந்தரமலைந்தேனைவெங்கொடுஞ்சிலைக்குலவேந்தர்
முற்றும்வெங்கிடப்பொருதுசல்லியனெடுமுனைபடவெதிர்மோதிச்
செற்றவன்புடையன்புடைத்தம்முனைத்தெம்முனைகெடச்சேர்ந்தான். (ருங)

தயங்குவெண்குடைச்சல்லியன்றண்டுடைச்சமீரணன்மகன்றன்னு
ளுயங்குவெம்பரிபாகுதேர்வரிசிலையுயர்த்தவண்கொடியற்றுத்
தியங்குகின்றபேரிறுதிகண்டுயங்குதல்சிந்தையிற்சிறிதற்ற
புயங்ககேதனன்கண்ணினுக்கிமையெனப்பொருபடையுடன்சேர்ந்தான் (ருச)

சாத்தகிப்பெயரவன்சமீரணன்மகனகுலன்வெஞ்சாதேவன்
பார்த்தனென்றிவரனைவருமிவர்பெரும்படைத்தலைவனுஞ்சேர
வார்த்தெழுந்துமேல்வருதல்கண்டணிகழலாளியேறனையானும்
பேர்த்துமுந்துறத்திருகினனரசொடும்பெருமபடையொடுமம்மா. (ருரு)

தண்டுழாய்முடிமாயவன்றம்பியைச்சாயகம்பலகோடி
கொண்டுதேர்முதலியாவையுமழித்துமெய்குலைந்திடும்படிமோதி
மண்டுபாய்பரிநகுலனையன்புடைமருகனென்றெண்ணைமற்
கொண்டல்வாயிடிநெருப்பெனச்சிற்சிலகூரவாளிகளெய்தான். (ருசு)

ஒருகொடுங்கணைதொடுத்தலும்வெங்கொடுத்தோடினன்சாதேவ
னிருகொடுங்கணைக்கிலக்கமாயினன்மருத்தின்றவனிருதோளும்
பொருகடுங்கணைமூன்றிலைருச்சுனன்புயமுமார்பமும்புண்செய்
தருகொடுங்குறநுதலின்மேலம்புநான்கறத்தின்மைந்தனையெய்தான். (ருஎ)

அறத்தின்மைந்தனதானனங்குருதியாலருக்கன்மண்டலம்போல
நிறத்தவாறுகண்டநகுறக்கதைகொடுநின்றவாயுவின்மைந்தன்
மறத்தடம்புயவரிசிலைச்சல்லியன்மணிமுடிகழன்றோடிப்
புறத்துவீழ்தரவெறிந்தனனெறிந்தமைபுயங்ககேதனன்கண்டான். (ருஅ)

வேறு.

தன்படைத்தலைவனைத்தண்டினலெறி
வன்புடைத்தடம்புயமருத்தின்மைந்தன்மேன்
மின்*படைத்தொருகணைவிசையினேவினன்
புன்படைப்பினிலயன்படைத்தபூபனே. (ருகூ)

* படைத்தொளிர்கணை என்றும் பாடம்.

காமனைச்சம்பரன்கனன்றபோரென
வீமனைப்போர்செய்துவெல்லமுன்னிய
தீமனத்தரசனைச்சிலீமுகங்களின்
மாமுனைப்படுத்தினன்மறித்துவீமனே. (௬௦)

யாளிகளிரண்டெதிர்ந்திகலுமாறுபோன்
மீளிகளிருவருங்குனித்தவில்லுமிழ்
வாளிகளிருவர்தம்வடிவிற்பாயுமுன்
றாளிகள்பட்டனதுணிந்துவானிலே. (௬௧)

தாண்முதன்முடியுறச்சரங்களேவியும்
வாண்முதற்படைகளான்மலைந்துமற்றவர்
தோண்முதலுறுப்பெலாஞ்சோரிகாலவே
நீண்முதற்றீபமேநிகருமாயினார். (௬௨)

வன்பரிபாகுதேர்மதிநெடுங்குடை
மின்பொழிகணையுமிழ்வில்விலோதன
மென்பனயாவையுமிற்றுவீழமா
றென்பதுபடியமருட்டற்றினாரோ. (௬௩)

இரணவித்தகனிவனெறிந்தவேலினான்
முரணுடைச்சுயோதனன்முதுகுதந்தபி
னரணுடைப்படைக்கரசானமத்திரன்
மரணமிப்பொழுதெனவந்துமேவினான். (௬௪)

வேறு.

நேரிலாதகிருபப்பெயர்விறற்குருவுநீடுசாலுவனுமற்புயமணிச்சிகர
வீரனானசகுனிப்பெயர்படைத்தவனும்வீறுசால்கிருதபற்பனுமெனப்புகலு
மாரமார்பினர்முதற்படைஞரிற்றலைவரானவீரதுரகத்தினர்களிற்றினர்க
ளுநமூருமிரதத்தினரெனைப்பலருமோதவாரியெனமத்திரனொடொத்தனரே. ()

வீமசேனனுமவற்கிளையபச்சைமயில்வேலின்வானவர்குலப்பகைதொலைத்தவனு
மேமகூடநிகருத்தமவயப்புரவியேறுவீரனுமவற்கிளையவித்தகனு
நாமமாயிரமுடைக்கடவுளுக்கிளையஞாயிறொடுவமைபெற்றொளிர்நிறத்தவனு
நேமிசூழ்தரணிபெற்றிடநினைத்தமர்செய்நீதிமானருகுசுற்றினர்துணைச்செயவே. ()

ஆடன்மாவுமலையொப்பனமதக்கரியுமாழிசேர்பவனமொத்தவிரதத்திரளு
நாடுபோரிலரியொத்தவனிகத்திரளுநாலுபாலு*மெழவுற்றமருடற்றினர்க
ளோடியோடியெதிருற்றவர்முடித்தலைகளூறுசோரியுததிக்கிடைவிழுத்தினர்கள்
கோடிகோடிதமரப்பறைமுழக்கினொடுகோடுகோடுகள்குறித்தவிருபக்கமுமே. ()

ஆனபோதிருதளத்தினுமிகுத்தவிறலாண்மைவீரரொருவர்க்கொருவர்மெய்க்கவச
மானமேயெனநினைத்துவரிபொற்சிலையும்வாளும்வேலுமுதலெத்திறவிதப்படையு
மேனியூடுருவவெட்டியுநிலைக்குவமைவேறுகூறவிலதெப்படிமலைத்தனர்க
டானவானவர்கள்யுத்தமுமரக்கரொடுசாகைமாமிருகயுத்தமுநிகர்த்தனவே. (௬௮)

* எழவொத்தமரென்றும் பாடம்.

வீமசேனனொடருச்சுனன்வயப்புரவிவீரமாநகுலனட்பினவனுக்கிளைய
தாமமீளியளிமொய்த்ததுளவப்புதியதாரினனநுசன்விற்குருவைமுற்பொருத
சோமகேசபதிமெய்ப்புதல்வன்மற்றுமுளசூரரானவரைமுற்றுறவிலக்கியெதிர்
மாமனாகியுமிகைத்துவருமத்திரனைவாவெனாவமர்தொடக்கினனுதிட்டிரனே. (௬௯)

வீரசாபமொரிமைப்பினில்வளைத்தெதிர்கொள்வேகசாயகவிதத்திறமெனைப்பலவு
மாரசாயகமெனச்சிகரமற்புயமுமார்புமூழ்கவுடன்முற்றுமுனைபிற்புதைய
வீரமானகுருநிப்பிரளயமெப்புறமும்யாறுபோல்பெருகவெற்றுதலும்வெற்றிபுனை
சூரர்யாரினுமிகுத்திருண்முடிக்கவருசூரனாமெனவியப்புடையமத்திரனே. (௭0)

ஆரவாரமுரசக்கொடியுயர்த்தவனதாகமீதணிமணிக்கவசமற்றுவிழ
வூருநேமிபிரதத்துவபிரச்சுடையமேவோடுவாசிதலையற்றிருநிலத்துருள
வேரிலாவலவனெற்றிதுளைபட்டிருவரீடுநாணொடுபிடித்தகுனிவிற்றுணிய
வீரவாய்முனைநெருப்புமிழ்வடிக்கணைகளேவினனொருநொடிக்குளெதிரற்றிடவே.

வீறுசாலருளறத்தின்மகனப்பொழுதுவேறோர்தேர்மிசைகுதித்திமையவெற்பி
னிடை, யேறுகேசரியொடொத்துளநெருப்புமிழ்வீறிலார்புரமெரித்தவனிகர்க்கு
மென, மாறிலாதவொருசத்தியைவெடுத்துநெடுவாயுவாகுமெனவிட்டனனிமைப்
பொழுதி, லாறுபாயருவிமுக்குவடிறுத்தசெயலானதான்முனைகொண்மத்திரன்முடி
த்தலையே. (௭௨)

வேறு.

தொட்டவரிசிலைத்தடக்கையிராமனென்னத்தொடுத்தகணைதப்பாமற்றொழாத
வேந்த, ரிட்டகவசமுமார்பும்பிளந்தபின்னரெடுத்தவொருவடிவேலாலிளையோனெ
ன்ன, மட்டவிழுந்தும்பையந்தார்த்தருமன்மைந்தன்வாகுவலியுடனெறியமத்திரே
சன், பட்டனனென்றணிகுலைந்துமுதுகிட்டோடிப்படாதுபட்டதுயர்த்தபணிப்ப
தாகன்சேனை. (௭௩)

மதிகண்டபெருங்கடல்போற்குந்திமைந்தர்வன்சேனையார்ப்பதுவுமன்னன்சேனை
நுதிகொண்டகனல்கொளுத்துமிராமபாணநுழைகடல்போனைந்ததுவுநோக்கிநோ
க்கிக், கதிகொண்டபரித்தடந்தேர்ச்சல்லியன்றன்கண்போல்வாரெழுநூறுகதந்தே
ராட்கள், விதிகொண்டபடைபோல்வெம்படைகளேவிவெம்முரசக்கொடிவேந்தன்
மேற்சென்றாரே. (௭௪)

அவரளவோவரவுயர்த்தவரசன்றானுமாகுலத்தோடருஞ்சமரிலரியேறென்னக்
கவரிபுடைபணிமாறத்தவளக்கொற்றக்கவிகையொருதனிநிழற்றக்கரைகாணாத
வுவரிநிகர்பெருஞ்சேனைவெள்ளஞ்சூழவுயிரனையதுணைவருடன்மாமன்சூழத்
தவர்முதலாம்படைகளொடுதன்னைவென்றுதரணிகொளவருநிருபன்றன்னைச் சார்ந்
[தான். (௭௫)

வீமன்முதற்றம்பியரும்பொருவிலாதவெஞ்சேனைத்தலைவரும்போர்வென்றிகூருஞ்
சோமகருமுதலாயதறுகண்வீரர்தம்பிகளையரியினங்கடுரக்குமாபோற்
றாமமணித்தடஞ்சிகரத்தோளுமார்புஞ்சரமுழுகத்தனுவணக்கிச்சாய்ந்தசோரி
பூமுழுதும்பரந்துவரப்பொருதவீரம்புலவோர்க்குமதிசயித்துப்புகலலாமோ. (௭௬)

தன்றமையன்றனைப்பொருதுவெல்லவந்ததானையெலாநீறுக்கித்தரணியாளும், புன்றமையனெதிரவனுக்கிளையவீரர்பொரவந்தோரெழுவரையும்புவிமேல்வீழ்த்தி, யின்றமையுஞ்சமரமினிக்காண்டல்பாவமென்றிமையோரதிசயிப்பவிமயம்போல, நின்றமைகண்டானிலனைமகிழ்ந்துநோக்கிநெஞ்சுறவன்றென்செய்தானேடியமாலே (எஎ)

செயகந்தன்செயவன்மன்செயசேனன்சேனுவிந்துசயத்திரதன்றிறலார்விந்து, வயமொன்றுவிக்கிரமனென்போராவிவாளுடுபுகுந்ததற்பின்மதங்களேழுங், கயமொன்றுசொரியவெதிர்நின்றதென்னக்களித்துவலம்புரிவீமன்முழக்கக்கண்டங்,கயனின்றவலம்புரித்தாரண்ணல்சோர்ந்தானநுசர்மேலன்பெவர்க்குமாற்றலாமோ. (எஅ)

தனக்குநிகர்தானுனகிருதவன்மன்றம்பியர்களெழுவர்படத்தம்முன்பட்ட, மனக்கவலையறிந்துபெருஞ்சேனையோடுமற்றவன்றம்பியரைவரோடும்வந்து, சினக்கதிர்வேல்வீமனுயிர்செகுப்பானெண்ணிச்செருச்செய்தானிமைப்பளவிற்றிருகியோட, வெனக்கிவரேயமையுமெனப்புறக்கிடாதவிளையவர்மேற்கடுங்கணையைந் தேவினுனே. (எகூ)

சித்திரவாகுவினேடுபெலசேனன்போர்ச்செயசூரன்சித்திரனுத்தமவிந்தென்றே, யத்திரவில்லாண்மைபினிற்றிகழாநின்றவைவரிவர்யாவரையுமடர்ப்பான் வந்தோர், சத்திரப்பாவையுமேவிச்சங்கமூதிச்சமர்விளைத்தார்நெடும்பொழுதுசமீரணன்றன், புத்திரனுன்முன்சென்றவெழுவரோடும்பொன்னுலகங்குடிபுகுந்தார்புலன்கள்போல்வார். (அ0)

ஏற்றிடைவெங்கனனுமைந்ததென்னமுன்னமெழுவருடன்றனக்கிளையோரைவர்சேரக், கூற்றிடையேகுதலுமிகக்கொதித்துநாகக்கொடிவேந்தன்முடிவேந்தர்பலருஞ்சூழ, நாற்றிசையுமெழுந்துபெருங்கடலேமோதிநடுவடவைக்கனலவித்துநடவாநின்ற,காற்றெனவேபாண்டவர்தம்முடலந்தோறுங்கணைமுழுகவில்விசயங்காட்டினுனே. (அக)

தன்கரத்தில்விற்றுணியவேறேர்வில்லாற் சாதேவன்வலம்புரிப்பூந்தாமவேந்தன், வன்கரத்துமார்பகத்துமுகத்துஞ்சேரவைவாளிகுளிப்பித்தான்மற்றுமற்றுமுன்களத்துளெதிர்ந்துளோரிருசேனைக்குமுன்னெண்ணுந்திறலுடையோர்மூண்டுமூண்டு,பின்களத்தைச்சோரியினுற்பரவையாக்கிப்பிறங்கலுமாக்கினர்மடிந்தபிணங்களாலே. (அஉ)

காந்துகனலுமிழ்சினவேற்கைக்காந்தாரர் காவலனுஞ்சகுனியுந்தன்கனிட்டனுன, வேந்தனுமன்னவனுடன்பல்வேந்தரோடும்வெம்பணைக்கைப்பலகோடிவேழத்தோடு, மேந்துதடம்புயச்சிகரிவீமன்றன்னேடிகன்மலைந்துதொலைந்திரிந்தாரிவரையல்லா, லூர்ந்தமணிப்பணிக்கொடியோனிளைஞர்மீளவொன்பதின்மரவனுடன் வந்துடற்றினுரே. (அங)

பிறங்கியவுத்தமனுதயபானுகீர்த்திபெலவன்மன்பலவீமன்பிரபலதானன், மறங்கிளர்விக்கிரமவாகுசுசீலன்சீலன்வருபெயர்கொளொன்பதின்மர்வானிலேறத்,திறங்கொள்கசரததுரகபதாதிகோடிசேரவொருகணத்தவியச்சிலைகால்வாங்கிக்,கறங்கெனவேசூழ்வந்துபொருதான்வீமன்கட்டாண்மைக்கிதுபொருளோகருதுங்காலே

பாண்டவரில்வீமன்கைப்படையான்முன்னம்பட்டொழிந்தோரொழிந்தோர்கள்பலருங்கூடிக், காண்டகையகேசரிவெஞ்சாபமன்னுர்கண்ணிலான்மதலையரக்களத்திலன்று, மூண்டுபொரும்பணித்துவசமுன்னேன்காணமுனைந்தமர்செய்தவனியின்மேன்முடிகள்வீழத், திண்டரியதிருமேனிதேரில்வீழச்சேணடைந்தாரரம்பையர்கள்சிந்தைவீழ. (அரு)

தனக்கிளையோர்தொண்ணூற்றெண்பதின்மர் தாமுஞ்சயவீமன்சரத்தாலுந் தண்டிறனும், கனக்குடிலிற்குடியேறக்கண்டுகண்டுகைசோரமெய்சோரக்கண்ணீர் சோர, வெனக்குறுதியுரைத்தவர் தம்முரைகேளாமலென்செய்தேனெப்பொருளு மிழந்தேனென்று, மனக்கவலையுறுமன்னன்றனைநோக்கிமாமனுமற்றொருகோடி மாற்றஞ்சொன்னான். (அசு)

வேறு

அருகுசாயைபோல்வாழுமநுசர்யாரும்வானேற
வுருகிமாழ்கிநீசோகமுறினுமீளவாரார்கண்
மருகவாழிகேள்போரின்மடிவுறுதபூபாலர்
முருகவேளையேபோல்வர்முரணுறுதகூர்வேலோய். (அஎ)

கிருதநாமனுல்வேதகிருபனுதியோரான
நிருபர்சேனைசூழ்போதநிமிரவோடிமாறுது
பொருதுசீறிமேன்மோதுபுலியினேறுபோல்வாரை
முரசகேதுவோடோடமுரணுபோரின்மூள்வோமே. (அஅ)

எனமகிபன்வாடாமலினியவாய்மையேகூறி
யனிகராசியோடேகியமரில்வீமன்மேன்மோத
முனைகொள்வீமனுமாறுமுறுவல்வாணிலாவீச
மனனிலோடுதேர்மாறிவலிகொள்பாரிலானனே. (அகூ)

தரணிதாழுமாபோதுசகுனிசேனைவானேற
முரணுவாகுவான்மோதிமுடுகுநீள்கதாபாணி
யரணியாகவேயேனலடவியானதானீடு
மிரணபூமிமால்யானையிரதம்வாசிகாலாளே. (கூ0)

அலகில்வேலைபோல்சேனையதிபனுவிபோமாறு
பலமதாகமேன்மோதுபடைஞர்சாயவேநாமு
மிலகுவாளம்வேனேமியெவருமேவுவேமாக
தலைவகேளெனுவீரசகுனி* கூறினான்மீள. (கூக)

விரகருதசூதாடுவிடலைமீதுசாதேவ
னிரதமேவியோர்வாளியெழில்கொண்மார்பிலேவாமுன்
மருகனுனபூபாலன்மதிகொண்ஞானிபூண்மார்பி
லுருவவீசினான்மாமனுதவியாவொர்கூர்வேலே. (கூஉ)

எதிரிலாததோளாண்மையிளவறேரின்மேல்வீழ
வுதவியாகவேலேவுமுலகுகாவலான்மார்பின்
முதுகிலோடவேநாறுமுழுகவேவினான்வாளி
யதலபூமியூடாழியமுதமாரும்வாயானே. (கூஙு)

சமரில்வீமனேவோடுதலைவன்வீழவேபூமி
யமரனுனதாமாவொரயிலைவீமன்மேலேவ
வெமர்களாவிபோல்வானெடிகல்செயாமலீசான
குமரனுவிபோமாறுகுடைதுநாமெனுவீரன். (கூச)

* கூறினான்மூளஎன்றும்பாடம்.

தனுவின்வேதநூல்வாசிதனயனைதாமாவை
முனைகொண்மார்பின்வாய்மூழ்கிமுதுகிலோடவேயேழு
வினைகொள்வாளிமேலேவிவிதமதாகவேபோர்செய்
மனுகுலேசனீள்சாபவலிமைகூறவராதே. (௯௫)

மருகன்வீழவேசாபமறைவலானுமார்மாலை
விருதனோடுபோராடிவெரிநிடாவிடாதோட
வருதுசூழமாசூரரடையவோடவோடாது
திருகினானராவேறுதிகழ்பதாகையான்மாமன். (௯௬)

சகுனியாவிபோமாறுசபதவாய்மைகோடாமன்
மகிபனேவுவேல்போலவழுவுறுமன்மேலோட
வுகவையோடுமாமாயனுதவுகூரநீள்வேலை
யிகலொடேவினான்வீமனிளவலானபோர்மீளி. (௯௭)

வேறு.

தாவியவெம்பரிமாவிரதத்திடைசாதேவ
னேவியவேலொடுசௌபலராசனிறந்தானென்
றேவியதெங்கணும்வெஞ்சமர்பார்முழுதுடையானு
மாவியழிந்தவுடம்பெனவன்மையழிந்தானே. (௯௮)

தும்பியில்வாசியினீடிரதத்திலொர்துணையின்றிப்
பம்பியசேனையழிந்துவரும்படிபாராதான்
றம்பியர்யாவருமாதுலனும்பலதமரும்போ
யம்பியிழந்தபெருங்கடல்வாணரினலமந்தான். (௯௯)

ஒருமதிவெண்குடையிருகவரிக்குலமூருஞ்சி
ரிரதமதங்கயமிவுளிபணிக்கொடிமுதலான
வரசர்பெருந்தகையரசடையாளமனைத்தும்போய்த்
திருநயனங்களினும்பதமலர்கள்சிவப்பேற. (௧௦௦)

அயனிடையசுரர்குருப்பெறவுற்றதவன்பான்முன்
கயமுனிபெறவிமையோர்குருவிரகொடுகைக்கொண்டு
பயமுறமாமுனிவர்க்குரைசெய்ததுபார்மீதே
யுயர்மறையொன்றுளதம்மறையொருமுனியுரைசெய்தான். (௧௦௧)

அந்நெடுமாமறையாலமரத்திடையளிசேனை
யின்னுயிர்பெற்றிடும்வகைகொடுமீளவுமிகழ்வேனென்
றுன்னியுளந்தெளிவுற்றொருவர்க்குமிஃதுரையாதே
தன்னொருவெங்கதையோடுதராபதிதனிசென்றான். (௧௦௨)

தூயநலந்தருகங்கையெனப்பலசுரருந்தோய்
பாயதடந்தனின்மூழ்கினனம்மறைபயில்வேனென்
றாயுமனங்கொடுசேவடிமுன்பினதாவேகிச்
சேயவன்வெண்டிரைவாரியின்மூழ்கியசெயலொத்தான். (௧௦௩)

வேறு.

கம்பித்துவந்தபுலனைந்துங்கலக்கமாற
வெம்பித்தடங்கிமனஞ்சித்தொடுமேவல்கூரத்
தம்பித்ததோயத்திடை*வாயுத்தசமுமொக்கக்
கும்பித்துஞானப்பெருந்தீபங்கொளுத்தினனே. (௧0௪)

பன்னும்யோகம்பயில்வோரிற்பதின்மடங்காத்
தன்னுகமுற்றுமெலிவின்றித்தயங்குமாறு
நன்னாளமூலநளினத்தைமலர்த்திநாவா
லுன்னுமனுன்னு†முறைமந்திரமோதினனே. (௧0௫)

இதயஞ்சிறிதுங்கலங்காதவிறைவனிவ்வா
றுதகந்தனிற்புக்குயர்மந்திரமோதும்வேலை
மதவெங்கயப்போர்வளவற்குமுதுகுதந்த
விதமண்டலீகர்புலிகண்டமிருகமொத்தார். (௧0௬)

பரபாவகமாம்பரித்தாமனும்பாய்பரித்தேர்க்
கிருபாரியனுங்கிருதப்பெயர்க்கேடிலோனு
மொருபாலிறைகொண்டொழிசேனையுந்தாமுமீண்டு
பொருபாரதப்போர்புரிசௌபலன்பொன்றல்கண்டார். (௧0௭)

கண்டார்மிகவும்பரிவோடுகலக்கமுற்றார்
தண்டாரகைதோய்விசும்பொத்தசமரபூமி
கொண்டான்முரசக்கொடியோனெனக்கோபமிஞ்சி
விண்டார்மிகவும்வியந்தாரவர்வீரமம்மா. (௧0௮)

பூணாரமார்பின்வலத்தேபுரிபூந்தண்மாலைக்
கோணார்சிலைக்கைநெடுநாகக்கொடிகொள்வேந்தைக்
காணார்களத்திலொருபாலுங்கருகியுள்ளம்
வாணாடருக்கன்குடிபோமகல்வானொடொத்தார். (௧0௯)

தனிவந்துதோன்றுதலுஞ்சஞ்சயனென்னும்வேத
முனிவன்றனைக்கண்டிருதாளின்முடிகள்சேர்த்தி
யனிகங்கெழும்போரரசன்றனையங்கைநெல்லிக்
கனிகண்டனையாயெவட்காண்குதுங்காட்டுகென்றார். (௧௧0)

இவ்வோர்வினாவினிவன்றன்னைவினவவஞ்ச
லவ்வோனுயிருக்கழிவில்லையமரின்மோதி
வெவ்வோடையானைவிறன்மன்னவர்வீயயாரு
மொவ்வோன்மறித்துமயர்மோதவுணர்தலுற்றான். (௧௧௧)

---

*வாயுவுந்தம்பமாகஎன்றும்பாடம்.

†மறைமந்திரம்என்றும்பாடம்.

ஈண்டுச்சமரினிறந்தோர்களெவருமின்றே
மீண்டுற்பவிக்கவிடுவித்துவிரகினோடும்
பாண்டுப்பயந்தோர்படையாவுமடியமோதப்
பூண்டுத்தமமாமறைகொண்டகன்பொய்கைபுக்கான். (ககஉ)

என்னைத்துருபன்மகனாதியர்கோறலெண்ணப்
பின்னைக்குவாய்த்தோன்பிழைப்பித்தனன்யானும்வந்தேன்
றன்னைக்குமூழ்கத்தடம்வாய்த்தமைதந்தையோடு
மன்னைக்குரைப்பேனெனப்போயினனந்தணாளன். (ககங)

வேறு.

வேதியன்வாய்மைகேட்டவேதியன்மகனுமற்றை
யோதியகிருபனாதியுள்ளவர்தாமுமெய்தி
மாதுயரகற்றுமற்றவாய்மைகேட்டங்குஞான
வூதியம்பெற்றாலென்னவொடுங்கியவோடைகண்டார். (ககச)

புள்ளியலரவங்காணார்பொருதெறிதரங்கங்காணார்
துள்ளியமீனங்காணார்சூழ்வருமனிலங்காணா
ரொள்ளியமலர்களெல்லாமுறங்குதலன்றிமன்றல்
வள்ளியதோடுதோறுமதுநுகர்வண்டுங்காணார். (கசரு)

ஏறியபாதம்போலவிறங்கியபாதநோக்கிச்
சாறியலிரதமிஞ்சுந்தடம்புனலடங்கநோக்கி
மாறியல்வேந்தர்தம்மில்வாண்முகநோக்கிநோக்கிக்
கூறியவரசன்றன்னைக்கூவினரழைக்கலுற்றார். (ககசா)

நின்கிளையாகிவந்தகிருபருந்துணைவர்யாரும்
வன்களிறிவுளிபொற்றேர்வாண்முதற்படைகள்யாவும்
புன்களமதனிற்சேரப்பொன்றினவிம்பரன்றோ
வென்கருதினைகொலையாவென்பெறற்கென்செய்தாயே. (ககஎ)

வீரியம்விளம்பல்போதாதாயினும்விளம்புகின்றேன்
போரியலமரிலென்னேர்பொருசிலையெடுத்துநின்றாற்
றேரியல்விசயனோடுநால்வருஞ்சேரவென்கை
மூரிவெங்கணைகளாலேமுடித்தலைதுணிவர்கண்டாய். (ககஅ)

எல்லவன்வீழுமுன்னம்யாரையுந்தொலைத்துவேலைத்
தொல்லைமண்ணளித்திலேனேற்றுரோணன்மாமதலையல்லேன்
வில்லெனும்படையுந்தீண்டேன்விடையவன்முதலோர்தந்த
* வல்லியகணையும்பொய்த்தென்மறைகளும்பொய்க்குமாதோ. (ககசு)

மோதுமோகரப்போர்வென்றுமுடித்துமோவொன்றிலொன்றிற்
சாதுமோவிரண்டுமல்லாற்றரணிபர்க்குறுதியுண்டோ
யாதுமோதெளிதிநின்போலேற்றமுள்ளவர்க்கிவ்வாறு
போதுமோபூண்டபூண்டபுகழெலாம்போய்விடாதோ. (கஉ0)

---

* வல்லியற்கணையென்றும்பாடம்.

பாண்டவர்முடியவென்றிப்பாரெலாமுனக்கே தந்தான்
மாண்டவர்தம்மைநின்வாய்மறைமொழிதன்னைக்கொண்டு
மீண்டவராக்கிப்பின்னைவேறொருபகையுமின்றி
யாண்டவரிவரேயென்னத்துணைவரோடாளலாமே. (௧௨௧)

என்றிவைபோல்வபன்னூறியம்பவுமிராசராச
னென்றினுங்கவலைசெல்லாவுணர்வுடையுளத்தனாகி
யன்றிகல்வருணன்கூறுமாகுமென்றறிஞர்சொல்லத்
துன்றியவடிவத்தோடுமடங்கினான்றோயத்தூடே. (௧௨௨)

உரைத்தனவுரைகட்கெல்லாமுத்தரமுரைசெய்யாத
வரைத்தடந்தோளானெஞ்சின்வலிமையைவலிதினெண்ணி
நிரைத்தவெங்கதிர்கொள்வாளிநெடுஞ்சிலைத்துரோணன்மைந்தன்
விரைத்தொடைக்கிருதனோடுமாதுலனோடுமீண்டான். (௧௨௩)

மற்றவர்மீண்டபின்னர்மாதவக்குந்தியீன்ற
கொற்றவர்தாமுஞ்சேனைக்குழாத்தொடுந்தங்களோடுஞ்
செற்றவர்தம்மையெல்லாஞ்சேனுலகேறவேற்றிப்
பொற்றவிராசராசன்புக்குழியறிவுறாமல். (௧௨௪)

பாடியுங்களமுஞ்சூழ்ந்தபாங்கருமங்குமிங்குந்
தேடியுங்காண்கிலாதசிந்தையாகுலத்தராகி
நீடுயிர்த்துயிர்த்துநின்றபொழுதினினிகழும்வேட்டை
யாடியவலைஞர்கண்டோரனிலற்குரைசெய்வாரே. (௧௨௫)

துவமிகுமுனிவரோடுசுரர்களுந்தோயுநன்னீர்த்
தவமுயல்பொய்கைதன்னிற்றண்டுடைக்கையனாகிப்
புவிமுழுதாண்டவேந்தன்புக்கனன்கண்டோமென்றார்
கவலையின்மனத்தனானகாற்றருள்கூற்றனாற்கே. (௧௨௬)

கருமுகிலனையமேனிக்கண்ணனும்பவளமேனித்
தருமனுமெவருங்கேட்பத்தாமவேல்வீமன்சொன்னான்
பொருமரவுயர்த்தோனின்றோர்பொய்கையிற்புகுந்தானென்று
தெரிதருமிருகமாக்கள்செப்பினரென்றுகொண்டே. (௧௨௭)

என்றலுந்தன்னைச்சேர்ந்தோரிடுக்கணுமிளைப்புமாற்ற
நின்றவெம்பெருமானேமிநெடியவனருளிச்செய்வா
னன்றயன்முகத்தினாற்பெற்றநேகமாமுனிவர்தம்பா
னின்றமந்திரமொன்றுண்டுநிகரதற்கில்லைவேறே. (௧௨௮)

வெஞ்சமரிறந்தோரெல்லாமீண்டுயிர்பெறுவரந்த
வஞ்சகமறைமுன்பெற்றான்வலம்புரித்தாரினானு
நெஞ்சமர்வலிமையோடுநீரிடைமூழ்கிநீங்க
டுஞ்சிடப்பொருவானின்னஞ்சூழ்ந்தனன்போலுமென்றான். (௧௨௯)

மாயவனுரைத்தமாற்றமாருதிகேட்டுத்தந்தை
யாயவன்றன்னைப்போலவப்பெரும்பொய்கையெய்தித்
தூயதண்டுளவினனுந்துணைவருஞ்சூழ்ந்துநிற்பத்
தீயெனத்தீயநெஞ்சன்செவிசுடச்சிலசொற்சொல்வான். (௧௫0)

வேறு.

கங்கைமகன்முதலாகக்காந்தாரர்முடிவாகக்களத்தில்வீழ்ந்த
துங்கமணிமுடிவேந்தர்சொல்லிமுடிப்பதற்கடங்கார்தூரகமாவுஞ்
செங்கனகமணிக்கொடிஞ்சித்திண்டேரும்பெரும்பணைக்கைச்சிறுத்தசெங்கண்
வெங்கயமுமேருமல்வீழ்கயத்திலேறினையோவேந்தர்வேந்தே. (௧௫௧)

நெஞ்சறியநீயெமக்குநிலைநின்றபழியாகநெடுநாட்செய்த
வஞ்சகமும்பொய்ம்மொழியுமனுநீதிதவறியதுமறந்தாய்கொல்லோ
துஞ்சியநின்சேனையெல்லாமீண்டுவரநீயறையுஞ்சுருதியிற்றை
வெஞ்சமரமுடித்தன்றேவறைவதிவைவீரருக்குவீரமாமோ. (௧௫௨)

அடிமாறிநீரிடைப்புக்கருமறைநீபுகன்றாலுமரவப்பைம்பொற்
கொடிமாறிக்குருகுலத்தார்கோவேநின்பேர்மாறிக்குலவுமாலை
முடிமாறியொருதனிமாமுத்தநெடுங்குடைநிழற்கீழாளுமுந்நீர்ப்
படிமாறியொழியவிடேன்புறப்படாய்மறைபடவிப்பகல்போமுன்னே. (௧௫௩)

ஓதப்பைங்கடல்புடைசூழுலகாளுமுடிவேந்தருறுபோரஞ்சிப்
பாதத்தில்வீழ்வரோபாரரசர்கேட்டாலும்பழியேயன்றே
மேதக்கவரமகளிர்கைப்பிடிக்கவிந்திரனும்விண்ணோர்தாமுங்
காதத்திலெதிர்கொள்ளக்கற்பகநீழலில்வைப்பன்கலங்கலம்மா. (௧௫௪)

களந்தனிலெத்தனைகவந்தங்கண்களிக்கக்கண்டனைநீகைத்தண்டோடிக்
குளந்தனிலிக்கவந்தமுங்கண்டேகுதற்குப்புகுந்தனையோகொற்றவேந்தே
வளந்தனிலிக்கோபமுமென்வஞ்சினமும்போகாதுவந்துன்பாவி
யுளந்தனிலிக்கவலையைவிட்டுடற்றுதலல்லதுமற்றோருறுதியுண்டோ. (௧௫௫)

இனத்திடைநின்றொருபதின்மேலெழுநாளுமொருவருடனிகல்செய்யாமற்
றனத்திடைநின்றுளமகிழும்புல்லரைப்போன்மதத்துடனேதருக்கிவாழ்ந்தாய்
சினத்திடைவெம்பொறிபறக்கச்செயிர்த்திருகண்சிவப்பேறச்செருச்செய்யாமல்
வனத்திடைசென்றொளிப்பரோமண்முழுதுந்தனியாளுமன்னரானோர். (௧௫௬)

திரிபுவனங்களுஞ்சேரச்செங்கோன்மைசெலுத்தியநின்சீர்த்தியிந்த
விரிபுவனந்தனிலொளித்தான்மிகுவசையாய்ப்போகாதோவெருவலாமோ
புரிபுவனமுண்டுமிழ்ந்தோன்பொன்னிலங்கைவழிகாணப்பொருதவாளி
யெரிபுவனநுகர்ந்ததுபோலித்தடமும்புகையாமுனெழுந்திராயே. (௧௫௭)

பாவனனிப்படியுரைத்தபழிமொழியுந்தனதுசெவிப்பட்டகாலைச்
சீவனமுற்றையும்விடுவோனிருக்குமோமறைமொழியுஞ்சேரவிட்டா
னுவனமற்றறியாமலழிவனமற்றறியாமலடுத்தோராவி
வீவனமற்றரியாமனினையுநினைவினுக்குவமைவேறிலாதான். (௧௫௮)

நீளமுறப்பரவையுறவாளமுறக்கரைபரந்துநிமிர்ந்தநீத்த
நாளமலர்ப்பொய்கையினின்றெழுவான்மெய்ச்சுருதிமறைநவினுநாவான்
காளநிறக்கொண்டல்பெருங்கடன்முழுகிவெள்ளமெலாங்கவர்வுற்றண்ட
கோளமுறக்கிளர்ந்ததுபோற்றோன்றினன்மணியுரகக்கொடியினனே. (கநூகூ)

தோன்றிநெடுங்கரையேறிக்கரைமுழுதுநெருக்கமுறச்சூழ்ந்துநின்ற
தேன்றிகழ்தாரைவரையுஞ்செந்திருமாலையுநோக்கிச்சேனையோடு
மான்றிகழ்தேர்முதலானவாகனங்களொடுநின்றீர்வலிகூறென்கை
யூன்றியதண்டுடனின்றேனொருதமியேனெப்படியேயுடற்றுமாறே. (கச0)

ஐவரினுமிப்பொழுதிங்காரென்னோடமர்மலைவாரறுகான்மொய்க்குங்
கொய்வருதார்ப்புயவீரர்கூறுமெனத்திருநெடுமால்கூறலுற்றான்
செய்வருசேலிளம்பூகமடலொடிக்குந்திருநாடாசெருச்செய்வானிம்
மெய்வருசொற்றவறுதவீமசேனனையொழிந்தால்வேறுமுண்டோ. (கசக)

இளம்பருவமுதலுனக்குமிவனுக்கும்வயிர்ப்பெண்ணிலெண்ணொதா
னுளம்புகலவரசவையில்வஞ்சினமும்பற்பலவன்றுரைத்தேநின்றான்
களம்புகுந்துநின்னொழிந்ததுணைவரையுந்தனதுதடக்கையாற்கொன்றான்
விளம்புவதேதாவேறொருவர்நின்னுடன்போர்மலைவரோவேந்தர்வேந்தே. (கசஉ)

வில்லானும்வாளானும்வேலானும்பரிநெடுந்தேர்வேழத்தானுந்
தொல்லாண்மைதவறுமற்செருமலைந்தோர்சான்றுகச்சூழ்ந்துநிற்பப்
புல்லாரைப்புறங்காணும்போர்வேலோயிருவருநீர்பொருதுநும்மில்
வல்லார்கள்வென்றிபுனைந்தவனிதலம்பெறுமிதுவேவழக்குமென்றான். (கசங)

வேறு.

கொண்டனிகர்திருமேனிக்கோபாலனிவையுரைப்ப
வண்டுபடிவலம்புரித்தார்வயவேந்தன்மனங்களித்துத்
திண்டிறல்வீமனைநோக்கிச்சிலைமுதலாம்படைகொண்டோ
தண்டெனுநின்படைகொண்டோசமர்விளைப்பாய்சாற்றென்றான். (கசச)

தினகரத்தின்மிசையேந்திநின்றதுநீள்கதையாகி
லெனகரத்திற்றண்டுகொண்டேயானுமுடற்றுவனென்றான்
றனகரற்குங்குமரற்குந்தண்டுழாய்முடியவற்குந்
தினகரற்குமேலானசிந்தையுடன்செருச்செய்வோன். (கசரு)

எவ்விடைவீமனும்யானுமிகல்புரிதற்கிடமென்று
பொய்விடையேழுடர்த்தோனைப்புயங்ககேதனன்கேட்ப
மெய்விடையானிரைப்பின்போய்வேயூதுந்திருநெடுமா
லவ்விடையாங்கிருவருக்குமாம்பரிசாலநுள்புரிந்தான். (கசசு)

அரும்பெறலாயோதனமற்றவனுரைக்கும்வேலையினி
லிரும்புனலாடுதற்ககன்றோரிருவருமவந்தவணைத்தக்
கரும்புயலேயனையானுங்காவலருங்கண்களித்து
விரும்பிமனங்களிகூரமேதகவேயெதிர்கொண்டார். (கசஎ)

மதுரைநகர்க்கரசானமாயனுந்தம்முனைவணங்கி
விதுரனையுமெய்தழுவவேல்வேந்தரனைவோருங்
கதிரவரோரிருவரையுங்கண்டுகளிப்பவர்போல
வெதிரெதிர்போய்க்கைதொழுதாரிகலாண்மைக்கெதிரில்லார். (௧௪௮)

அன்றுமுதலேகியநாளளவாகவிருவோருங்
குன்றிடமுங்கடலிடமுங்குறித்தநதிகளினிடமுஞ்
சென்றுசுரரும்படியுந்தீர்த்தங்கடிசைதோறு
மொன்றுபடமகிழ்ந்தாடிமீண்டவாறுரைசெய்தார். (௧௪௯)

அறன்றருகாளையுமுகுரானனன்றருகாளையும்புரிந்த
மறந்தருபோர்வெங்களத்துமன்னவர்களனைவோரு
மிறந்தநிலையுந்தினங்களீரொன்பானிலுந்தோன்ற
மறந்திகழ்தோளிருவருக்குமாமாயன்கட்டுரைத்தான். (௧௫௦)

கேட்டருளிநெடுந்தாலகேதனன்மாமனந்தளர்வுற்
றுட்டரவமுடையவற்கோவழிவுவருவதுபோரி
னட்டமினியேதென்றுநராந்தகனைவினவுதலு
மீட்டுமவற்குரைசெய்தான்விரிதிரைநீர்மறந்தோனே. (௧௫௧)

வீமனுக்கும்வீமனுடன்வெகுண்டமர்செய்வலம்புரிப்பூந்
தாமனுக்குமமர்புரியுந்தலமேதென்றுயாவுகின்றோ
நீமனத்தினிகழ்ந்தபடிநிகழ்த்துகெனநிலவொளியாற்
சோமனுக்குநிகரானோனிளவலைநீசொல்லென்றான். (௧௫௨)

தாவெழுமாமணிநெடுந்தேர்த்தபனனிகர்மழுப்படையோன்
மூவெழுகான்முடிவேந்தரனைவரையுமுடிப்பித்து
நாவெழுபான்மையினுடையோன்களிக்கநரமேதஞ்செய்
பூவெழுதீவினுஞ்சிறந்துபொன்னுலகோடொத்துளதால். (௧௫௩)

அந்நிலமேயிருவருக்குமமர்புரியலானவிட
மன்னவர்தம்முடற்சோரிவழிந்துசமந்தபஞ்சகமா
மென்னநிலைபெற்றிடுமைந்தடங்களுமங்கங்கேயுண்
டுன்னிலெதிரில்லதனுக்கொலிகடல்சூழ்நிலத்தென்றான். (௧௫௪)

அத்தலத்தின்றிசைநோக்கியனீகினியுமனைவோரு
முத்தநெடுங்குடைநிழற்றவுவகைவாகனமேறிக்
கொத்துடனேநெறிபடரக்கொற்றவர்கொற்றவன்றானுங்
கைத்தலமுந்தண்டமுமாக்கால்வேகமுறச்சென்றான். (௧௫௫)

தம்பியர்கள்புடைசூழத்தருமன்மகன்பல்லியமும்
பம்பியெழநடக்கின்றபரிசுதனைமுகநோக்கி
யெம்பியருமெங்கிளையுமிறக்கவிருந்தனமென்றே
வெம்பிமனமிகத்தளர்ந்தான்விதிதனக்கும்விதிபோல்வான். (௧௫௬)

முடிக்குலமன்னவர்தத்தமுடிகளினாற்சிவக்கின்ற
வடிக்கமலநடந்துசிவப்பாவதேயெனவிரங்கிக்
கொடிக்கண்முரசெழுதியவக்கோவேந்தன்கொடித்தேர்விட்
டடிக்குமுரசெனப்புகல்வானிராசராசனுக்கம்பா. (கருஎ)

என்றுணைவருடன்யானுமேவியநின்றொழில்புரிந்து
வன்றுணையாய்ச்சேவிப்பமடங்கலாசனமேறி
யின்றுணைவர்குருகுலத்தாரெனுமிசைபோய்த்திசையேற
நன்றுணவாவாளுதியான்ஞாலமெலாநின்குடைக்கீழ். (கருஅ)

தப்பாதென்மொழியென்றுதருமன்மாமதலைமுகி
லொப்பானதிருமேனியும்பர்பிரான்சான்றுகச்
செப்பாதவாய்மையெலாஞ்செப்பினன்செப்பவுமக்
கைப்பானவன்னெஞ்சக்கடுங்கண்ணான்கண்மறுத்தான். (கருகூ)

எங்கிளைஞரெந்துணைவரெம்பொருட்டாலிறந்தேக
வுங்களருள்பெற்றிருக்குமுயிர்வாழ்வினிதன்றோ
வங்கமெலாம்வேறுபடவாறுபடுகுருதியின்வாய்க்
கங்கமுங்காகமுங்கொத்தக்களத்தவிந்தானெனும்பெயரே. (கசுo)

எனத்தருமன்வார்த்தைதனக்கிசையாமலவனேக
வனைத்துவருதினிகளொடுமைவருமாங்குடனேகக்
கனத்தில்வடிவுடையோனுங்*கைலைவடிவுடையோனும்
வினைத்தடந்தேர்விதுரனொடும்விரைவுடனேகினரம்மா. (கசுக)

கலங்கள்பலவினமேறிக்காளிந்திக்கரையேறித்
தலங்களினற்றலமானசமந்தபஞ்சகமெய்தி
வலங்கொள்படைத்தலைவரெலாம்வளைந்தகடலெனவாள
விலங்கலெனச்சூழ்நிற்பவெஞ்சமரந்தொடங்கினரே. (கசு௨)

பூங்கவசத்துட்புகுந்துபூணணைத்துந்திருத்திமணி
யோங்கலிவையிரண்டுயிர்பெற்றுடற்றுகின்றதெனவுரைப்ப
வாங்கியதண்டமுந்தோளுமலர்க்கரமும்வலிகூர
வாங்குலகுசெவிடுபடவடலரிநாதமுஞ்செய்தார். (கசுங)

கந்தநறுமலர்க்கூந்தற்காந்தாரிபுதல்வனையக்
குந்திமகன்முகநோக்கிக்கொடுஞ்சொற்கள்சிலசொல்வான்
கந்தருவரன்றுன்னைக்கட்டியதோள்வலிகொண்டோ
சிந்தைதனின்வலிகொண்டோசெருச்செயநீபுகுந்தாயே. (கசுச)

இடிப்பதுமின்றிருகதையுமென்கதையாலிடியுண்டு
துடிப்பதுமின்றுன்னுடலமுயிர்துறக்கங்குடியேற
முடிப்பதுமின்றழற்பிறந்தாண்முகிலோதிமுகில்பொழிநீர்
குடிப்பதுமின்றொருவேனின்குருதிநீர்குடித்தாலே. (கசுரு)

* காதலுறுமுன்னேனும் என்றும் பாடம்.

வேறு.

இனிவிடுமேன்மேலுரைக்கும்வாசகமெனதுயிர்நீகோறலிற்றைநாளிடை
யுனதுயிர்வானேறவிட்டுநானுலகொருகுடைமாநீழல்வைத்தலேதுணி
வனிகழுமாயோனடத்துதேருடையநரனும்வாளாண்மைமற்றைமூவரு
நினைவுடனேகாணவச்சிரவாயுதநிகர்கதைதவீமாவெடுத்திநீயென. (௧௬௬)

நடையொழியாதோன்விறற்குமாரனுநயனமிலாதோன்முதற்குமாரனு
மடலொடுகார்வானிடிக்குமாறெனவதிர்வுறவேகூறிமத்தவாரணம்
விடையரிமாவேறெனப்பிரதாபமும்விசயமுமேன்மேன்மிகுத்துமேலிடு
கடையுகநாள்வாயுவொத்துநீடியகதைகெழுபோராதரித்துமூளவே. (௧௬௭)

ஒருதமனீயாசலத்தினோடெதிரொருமுழுமாநீலவெற்புநீடமர்
புரிவதுபோன்மேல்விசைத்துமீமிசைபொறியெழமாறுமலெற்றிவீரர்க
ளிருவருமாகாயமுட்டநாகர்களிறைகொளநாணுலுதிக்குநாகரும்
வெருவரநீணுகருட்கவீசினர்விசையுடனேபோர்விற்கதாயுதம். (௧௬௮)

உவகையினாலேசிரிப்பர்நீள்சினமுறுதலினாலேமடிப்பர்வாய்மலர்
புகையெழவேதீவிழிப்பர்மார்பொடுபுனைகிரிபோலேதடிப்பர்தோளிணை
யிகல்புரிநூலோடுகற்றசாரிகையிடம்வலமேபோவர்வட்டமாகுவர்
முகடுறமீதேகுதிப்பர்பார்மகண்முதுகிறநேரேகுதிப்பர்மீளவே. (௧௬௯)

ஒருகையினாலேசுழற்றிவான்முகடுடைபடமேலேகிளப்பிநீள்கதை
யிருநிலமீதேமறித்துவீழுமு*னெறிகையினாலேதரிப்பர்மேலவர்
விரைவுடனேதாளபொத்தியோடுவர்விசையுடனேகாலொதுக்கிமீளுவர்
பரிதிகள்போலேவிருத்தமாமுறைபவுரிகொளாவீசிநிற்பர்வீரரே. (௧௭௦)

மலரடிதாளூருவட்டவார்தனம்வயிறுமனோராகபற்பமார்பொடு
குலகிரிநேர்தோள்கழுத்துநீடணல்குறுநகைகூர்வாய்கதுப்புவார்குழை
யிலகுபுரூர்பாகநெற்றியானனமெனவடைவேகூறுறப்பியாவையு
முலைவுறமேன்மேன்மிகுத்துமூளையுமுதிரமுமாறுதுக்கமோதியே. (௧௭௧)

கதைகதையோடேயடிக்குமோதைகொல்கதையுடையோர்தாநகைக்குமோதை
கொ, லெதிர்மொழியோவாதிசைக்குமோதைகொலிணையுடலூடேயிடிக்குமோதை
கொல், பதயுகமாறுடிவைக்குமோதைகொல்பணைபலசூழ்போதவெற்று மோதை
கொ, றிதியொடுவானூடுசெற்றவானவர்செவிசெவிடாமாறதிர்க்குமோதையே. ()

அரிவயமாவேறுயர்த்தசூரனுமழல்விடநாகேறுயர்த்தவீரனு
மிருவருமேவாலிசுக்கிரீவர்களெனவமர்மோதாவிளைத்தகாலையில்
வயிரமுடிமேனுளொடித்தகாளைதன்மதலையையேழ்பார்படைத்தகோமக
னுரைதடுமாறுவுயிர்த்துநீயுனதுயிர்நிலைகூறுயெனக்கெனுமுனம். (௧௭௩)

இருவினைகூறுவறத்தின்மாமகனிளவல்விதாதாவொடொத்தகேள்விய
னுரைதவறுதான்மறக்குமோவெனதுயிர்துணைவாகேள்சிரத்திலேயென
வரிமகவானேனுரைத்தபோதிவனவன்முடிமேலேபுடைக்கவீமனு
முருமுறுமாமேருவெற்பதாமெனவுரைதடுமாறுவுழற்றினனரோ. (௧௭௪)

---

* இருகையினாலே என்றும் பாடம்.

மணிதலமேல்வீழ்தலுற்றுமீளவும்வலியுடனேபோர்குறித்துமேல்வரு
பணைகவனைநீயாவிநிற்பதோர்நிலைபகரெனமாருடுசேர்ப்பகேதுவு
மிகனுதலூடேயெனக்குமாருபிரெனமதியாதேயுருத்துவீமனு
முருதருசேய்நீர்பரக்கமோதினனுயர்கதையாலேசிரத்தின்மேலுமே. (௧௭௫)

உரியகதாபாணியர்க்குளோதவொருவமையிலாதானடித்தபோதுயர்
சிரமுடியூடேபிளக்கநாலிருதிசையினும்வார்சோரிகக்கிவீழ்தர
விருநிலமீதேபதைத்துவீழ்தலுமிரிதரமோதாமல்விட்டுநீயினி
விரைவுடனூருறெனத்தனுண்மையைவிருதர்முன்மேன்மேல்விளக்கவீமனே.()

வருகலையாருவுயிர்ப்புருவிழிமலர்திறவாநாவறட்சிபோயுகு
குருதியுகாமேதுடைத்துவீழ்தருகுருகுலபூபாலனுக்கிரவேகமோ
டுருமெறிமாமேகமொத்தகாயமுமுதறிமனேவீரமுற்றுமீளவு
மருகொருபான்மேவிநிற்கும்வீமனையடுகதையாலோடிமுட்டிமோதவே. ()

வேறு.

ஓமவுண்டிகொள்பேரழலோடடலூதைவெஞ்சமராடியவாறெனை
வாமரங்களிறுன்மதியாதமராடுகின்றநிசாசரராமென
வீமனுந்துரியோதனநாமனும்வேகமொன்றியவீரியராயடு
சேமவன்கதையாலமராடினர்தேறிநின்றவர்வாள்விழிமூடவே. (௧௭௮)

மேவுசிங்கவியாளவிலோதனர்வீசுகின்றகதாரவமேலிட
வாவுவெம்பரியாதபனுந்தடுமாறிநின்றனன்வானவர்தானவர்
நாவடங்கினர்மாமுனிவோரொடுநாகரஞ்சினர்நான்முகனுதிய
மூவருஞ்செயலேதெனநாடினர்மோழைகொண்டதுமூடியகோளமே. (௧௭௯)

தார்வலம்புரியானொடுபோரழிதாழ்வுகண்டனன்வீமனைவாசிகோ
டேர்விடுந்திருமால்டிநீண்முடிசேரநின்றுரையாடினன்மாருதி
நேர்தளர்ந்தனன்யாதுகொலோசெயனீமொழிந்தருள்வாயெனவானவ
ரூர்புரந்தவனேதமுராரியுமோதினன்பரிவோடவனோடிவை. (௧௮0)

நீநயந்தனைகேளுறுபோரிடைநேர்மலைந்திடுவோரிருவோரினு
மாநிலன்பெலவானதிலேமுகுரானனன்றருசேய்வினையாதிக
ஞானியம்பறகாதிவராயிரநாண்மலைந்தனராயினும்வீவொடு
வானகம்புகுதாரிருவோர்களும்வாசவன்றருபூணணிமார்பனே. (௧௮௧)

மாறுகொண்டவராவிகொணீள்கதைமாருதன்சுதனேடிவனோருரை
கூறலிங்கிதமேயலவோருரைகூறில்வஞ்சகபாமிவனுண்மையி
னூறுமைந்தரிறுதிபனுகியநானலந்திகழ்மார்பனையாருயி
ரீறுகண்டிடலாமவனூருவையேறுபுண்படவேயெதிர்மோதிலே. (௧௮௨)

ஏழ்பெருங்கடல்சூழ்புவிபாரமுமேதமுங்கெடவேதமிலைவரும்
வாழவன்றுயர்நாரணனுர்திருவாய்மலர்ந்தசொலான்மகிழாமிக
வூழினும்புரிதாள்வலிதேயெனவூருவின்புடைசேர்கரநாண்மலர்
காழ்நெடுங்கிரியேயனையான்விழிகாணநின்றனன்வானரிகாளையே. (௧௮௩)

ஞானபண்டிதன்வாயுகுமாரனுநாரணன்பணியாலிளையோன்மொழி
மோனவண்குறிதானுணராவெதிர்மோதினன்கதைபூபதியூருவின்
மானகஞ்சுகனுறடியேழடிமாறினின்றிடவேபிழைபோதலின்
மேன்முழங்கினவானவர்தூரியமேல்விழுந்ததுபூமழைசாலவே. (௧௮௪)

மாறினின்றசுயோதனன்மீளவும்வாயுமைந்தனைவாகுவுமார்பமு
நீறெழும்படிசாடியபோதவனீணிலந்தனிலோடிவிழாதுத
னூறுமிஞ்சியபேருடலோடெதிரோடிவன்றொடைகீறிடமாறடும்
வீறுகொண்டகதாயுதம்வீசினன்வீரனம்புவிமீதுறவீழவே. (௧௮௫)

வேறு.

அரிப்பதாகனுரகப்பதாகனையதிர்த்துமேலுறவடர்த்துநீ
டுருப்பினோடைதிசயிக்கவூருவைபொடிக்கவேயவனுடற்றலு
நெருப்புறுவிழிசிவத்துவார்கடைநிமிர்ப்புறுதபுருவத்தனாய்
மருப்புநாலுறுமதத்தமாவெனமதத்துமார்பமிசைகுத்தினான். (௧௮௬)

கதுப்பும்வாயுநெரியக்கதாயுதகரத்தினானனிகலக்கினா
னெதிர்த்தயானையையடர்த்தகேசரியெனப்பொன்மௌலியையிருத்தினா
னுதைத்துமேலிருபதத்தினாலவ*னுரத்தைவாகுவையொடித்துநீள்
விதத்தினாலிருநிலத்துமீதுடல்விதிர்த்துவீழ்தரவிழுத்தினான். (௧௮௭)

நிறத்தநீலகிரியொக்கவேபிருநிலத்தின்வீழ்குருகுலத்தினே
னுறைத்துமீளவுமுயிர்த்துமாடனெடிருத்துவாசகமுறச்சொல்வான்
குறிப்பினால்விசயனைக்கொடாருயிர்குறிக்குமாமதிகொளுத்தினா
யறத்தினாலடன்மறத்தினீர்மையினையற்பராயறிகிற்பரோ. (௧௮௮)

மலைத்தபோர்தொறுமெனக்குநீசெய்பிழைமற்றுளோர்செயநினைப்பரோ
குலத்திலேயிழிகுலத்தரானவர்குறிப்பிலாதிவைபிறக்குமோ
சலத்தினால்வினையியற்றுவார்முடிதரித்தகாவலரொடொப்பரோ
நிலத்தில்வாழ்வவர்பெறக்கொடாயினிநினைத்தகாரியமுடித்தியே. (௧௮௯)

எனச்சில்வாசகமிழற்றிமீளவுமெதிர்ப்பதாகவெழலுற்றபோ
தனற்சகாயன்முனளித்தகாளைதனடற்சரோருகபதத்தினா
லுனக்குவாழ்வினியெனக்கொலாமெனவுதைத்துமௌலியையுடைக்கவே
சினத்தலாயுதனிறத்தவாள்விழிசிவக்கவாய்மைசிலசெப்புவான். (௧௯௦)

வேறு.

எம்பிரானைமுராரியைமாயனையிம்பரேழ்கடல்சூழ்புவிமேலொரு
தம்பியாவுடையானவனோடெதிர்சந்தியாவெகுளாவிழிதீயெழ
நம்பிகேளரியோடுடன்மேவியநஞ்சுபோலுரகேசர்முன்னேயுடல்
கம்பியாவிழவூருவின்மோதுதல்கண்டபோதெனதாருயிர்போனதே. (௧௯௧)

---

* உரத்தவாகுவை என்றும் பாடம்.

வே று.

கதையெடுத்துடற்றுமாடவர்கள்கடிதடத்தினுக்குமேலொழிய
வதிர்வுறப்புடைப்பரோதொடையிலடிபடத்துகைப்பரோமுடியி
லெதிரியைச்சலத்தினாலென்விழியெதிர்வழக்கழித்தபாவனை
முதுகிடப்புடைப்பல்யானுமெனமுசலகைத்தடத்தொடோடினனே. (௧௯௨)

வே று.

மதியிரவியோடுபோர்செயுமாறெனவலியதிறல்வீமன்மேலிவனோடனு
மிதயமலர்தோறுமேவருநாயகனிவனைவிரைவோடுபோய்விலகாவிரு
பதுமநிகரானதாள்பணியாமிகுபரிவினொடுசீறுமாண்மைதகாதென
வதிமதுரவாய்மையால்வெகுளாவகையடிகளிவைகேண்மினோவெனவோதினான். ()

வே று.

முகுரானனன்மைந்தனும்வீமனுமுடியாதபெரும்பகையாளர்கண்
மகிபாலர்திருந்தவையூடுரைவழுவாதவன்வஞ்சினமோதின
னிகல்வார்சிலையின்குருவானவனிடுசாபமுமுண்டுதிரௌபதி
பகர்சாபமுமுண்டதனாலெதிர்படுமேயவன்வெங்கதையாலிவன். (௧௯௪)

வே று.

வெஞ்சிலைவிதுரனவனுநீவிருமிஞ்சியபுனல்கள்படியவேகினிர்
பஞ்சவர்களொடுவயிரியாயொருபண்பறவினைசெய்சமரபூமியில்
வஞ்சனைவழியிலொழியநேர்படவன்பொடுமறமுமறமதாம்வகை
யெஞ்சியபதினெண்வகைகொணாளினுமின்றமர்பொருததுரகதேதுவே. (௧௯௫)

வே று.

வெற்றிபுனைபலபத்திரராமனுமெய்த்துணைவனிவைசொற்றகாலையின்
மற்றையநுசனொடுற்றநீள்களம்வட்டமிடவொரிமைப்பினேகின
னற்றையடலமறிற்சுயோதனனற்பவுயிர்நிலைநிற்பநீடுடன்
முற்றுமுகுகுருதிக்கண்மூழ்குறமொய்த்தகழுகினிழற்கண்மேவினன். (௧௯௬)

வே று.

மைந்தினாற்பெரியோனெனும்வாயுவின்மைந்தனாற்றுரியோதனன்மாமுடி
சிந்தவார்த்தனர்நீடிசைகாவலர்சிந்திவாழ்த்தினர்பூமழைதேவர்கண்
முந்தவோட்டியதேரொடுகாய்கதிர்மொய்ம்பன்மேற்கடன்மூழ்கினன்மாலைகொ
ளந்திவாய்த்தமபாசறைமேவினரைந்துபார்த்திவரானவர்தாமுமே. (௧௯௭)

வே று.

மிடன்மிஞ்சுமேவலர்வானிடைபோதரவினைவென்றகாவலர்பாசறைசேருதல்
கடனன்றெனாமுனிமாமகன்வாள்வலிகருதுந்தனீர்மையைவேறறியாவகை
யடல்கொண்டசேனையெலாமவண்வாழ்வுறவவரைந்துவீரருமேவரவேயொரு
புடைதங்குகானிடைபோயினனனிபொழிகொண்டல்போறிருமேனிமுராரியே.

வேறு.

ஆனகமலமலர்வாவியிடையேமுழுகியாவிபுதவுமறையோகபரனுகிமொழி
மானகவசவராசதுரியோதனனைவாயுகுமரன்முதிர்போரிலெதிர்வீழும்வகை
தானகரடகரிமாவையரிமாபொருததாயமெனவுழறினனெனுமுன்வேகமுற
ஞானசரிதகுருவாகியதுரோணன்மகனுடுகளமணுகினனொருவிநாழிகையில். (௧௯௯)

வேறு.

உரகதுவசனயர்கின்றவாவியுனுணர்வொடுதுயில்வதுகண்டுபேருடல்
கரதலமலர்மிசைகொண்டுவார்புனல்கலுழ்தருவிழியினனண்பினுலமர்
பொருகளனிடைதனதந்தைவீடியபொழுதினுமனமிகநொந்துளானுயர்
சுரர்களுமுருகவிரங்கினன்வரிதொடுசிலைவிசயதுரங்கதாமனே. (௨00)

வேறு.

முனைத்தலையழிந்துடல்சோரவும்யான்வினைமுடிப்பனெனு நெஞ்சுடைவாள்வயவீரனை, யனைத்துலகினுங்குருவானசராசனனளித்த முனியன்புறமார்புதழீஇயின, னினைத்தநினைவின்படியேமிகுபோர்செய்து நினக்கவனிதந்திட நீதலைநாளினி, லெனைத்தனிதெளிந்திலையாதவன் மாயையினெனப்பரிவுகொண்டுசில்வாய்மைகள்கூறியே. (௨0௧)

வேறு.

அருளூறவழக்கழி வறவழாமாற்றமு மறனுடனழுக்கறலனுகுரு வேற்றமு, மிருநிலமதித்திடவினிதுகோலோச்சுதலியல்புநிருபர்க்கெனு முறைமையோபார்த்திலை, நரைகெழுமுடித்தலையெனபிதாமீப்படுநதிமகன்முறித்தவில்விதுரனே போற்பல, குரவருமுரைத்தசொலுறுதிநீகேட்டிலை குருமரபினுக்கொருதி லகமாமூர்த்தியே. (௨0௨)

வேறு.

இடியிடித்திடுசிகரிகளாமெனவெறிமருச்சுதன்முதலிகலோர் தலை
துடிதுடித்திடவவரவர்சேனைகடுணிபடப்பொருதெழுபுவிநீபெற
விடிவதற்குமுன்வருகுவன்யானெனவிடைகொடுத்தனனரவவிலோதனன்
முடிமிசைத்தனதுடையசிகாமணிமுனிமகற்கினிதருள்செய்துமீளவே. (௨0௩)

வேறு.

பூசுரர்பெருந்தகை பரித்தாமாவிரியல் போனகிருபன்கிருதபத்மா மூவருமுன், வாசவன்விரிஞ்சனுமைபத்தாமாயன்முதல்வானவர்வழங்கியவயப்போர்வாளிகளி, லாசுகன்மகன்றனையு மப்போதேதுணைவரானவரையுந்தலை துணிப்பானுடியவர், பாசறைபுகுந்தனர் பரித்தேர்யானையொடுபாரதமுடிந்தபதினெட்டாநாளிரவே. (௨0௪)

சல்லியபருவமுற்றுப்பெற்றது.

பத்தாவது

சௌப்திக பருவம்.

வேலமர்தடக்கைவீரரிப்பாடிவீடுசென்றணைதலும்புறத்தோ
ராலமர்சினையிற்பல்பெருங்காகமருட்*பகலழிந்தகூகையினுற்
சாலவுமிடருற்றலமரக்கண்டுதம்மிலேமுகமுகநோக்கிக்
காலமுமிடனுமறிந்தமர்செகுத்தல்கடனெனக்கருதினரன்றே. (௨௦௫)

உரத்துவாரணங்கண்மதமிகுத்தென்னவூக்கமோடொன்றையுமதியார்
புரத்துவாரத்துப்புகுதலும்வெருண்டுபொங்கழல்போல்வதோர்பூதம்
பரத்துவாசனையுமாதுலன்கிருதபன்மனென்றிவரையுமுனைந்து
கரத்துவார்சிலையுங்கணைகளுமுறித்துக்கடவுதிண்டேர்களுங்கலக்கி. (௨௦௬)

முன்புகுவிசயமுனிமகன்றன்னைமுரணெடுந்தோள்களுமுரணு
மென்புடனிணமுந்தசைகளுஞ்சிந்தவிணைக்கருஞ்சிறுகுறுங்கரத்தால்
வன்புகையெழுமாறுள்ளுறமலைந்துமற்றுளோர்கொற்றமுமழித்துப்
பின்புகலறுமாதுரந்ததப்பூதப்பெருமையாம்பேசுறுந்தகைத்தோ. (௨௦௭)

மாதவன்விதியாலகன்பெரும்பாடிமாநகர்காவல்கொண்டுற்ற
பூதமேபொருதுதுரத்தலின்மீண்டுபோய்வடதருநிழற்புகுந்து
பேதுறவெருவோடிருந்தனர்கரியபெரியவக்கங்குலிற்றுரோண
சாதனன்மதலையென்செய்துமென்னத்தன்மனத்தெத்தனைநினைந்தான். ()

எஞ்சினகிருபனுயிரினைநிறுத்தியிவ்விரவகல்வதன்முன்னர்
வெஞ்சினமுறச்சென்றுன்பகைமுடித்துமீளுதுமெனப்பலபடியும்
வஞ்சினமுரைத்துவந்தனமின்னம்வன்குறட்பாரிடந்தன்னாற்
றுஞ்சினமெனினுமமையுமென்றெண்ணித்துணிந்தனன்றுயிலறுகண்ணான்.()

எண்ணியகருமமுடியினுமுடியாதொழியினுமீசனைத்தொழுதல்
புண்ணியமெனுமாறுன்னியாங்கொருதண்பொய்கையிற்புனல்படிந்தேறிப்
பண்ணியலிசையின்படிவமாந்தெரிவைபங்கனைப்†பங்கயமலர்கொண்
டண்ணியகருத்திலிருத்தியஞ்செழுத்தாலாகமப்படியடிபணிந்தான். (௨௧௦)

அன்றவன்மறையின்முறையினுற்புரிந்தவருச்சனைதனையுவந்தருளி
நின்றனன்விழியுமிதயமுங்களிப்பநீறுடையேறுடைக்கடவுள்
வன்றிறன்முனிவன்மதலையும்விதலைமாறிமாறடர்ப்பதோர்படைநல்
கென்றனனென்றவுரைமுடிவதன்முனேதியொன்றீசனுமீந்தான். (௨௧௧)

---

* பகல்கழித்தஎன்றும்பாடம்.

† பற்பலமலர் என்றும் பாடம்.

பாதிமெய்நீலமாகியபவளப்பருப்பதம்விருப்புடனளித்த
வேதிபெற்றுவகையுடனிமைப்பளவினிருந்தவவ்வீரருந்தானும்
வீதிகொள்பாடிவீடுறப்பூதமீளவந்தடர்த்திவன்கரத்தி
லாதிநல்கியவெம்படையினாலஞ்சியாவிகொண்டோடியதன்றே. (௨௧௨)

பருவரலகற்றியிருவர்வீரரையும்பாசறைவாயிலினிறுத்தி
மருவருங்கமலமாலையான்கடப்பமாலையானெனமனங்களித்துப்
பொருவருமுனைக்குக்குரிசிலாயெல்லாப்போரினும்புறமிடாதடர்த்த
துருபதன்மதலைவரிசிலைத்திட்டத்துய்மனைமணித்தலைதுணித்தான். (௨௧௩)

கயில்புரிகழற்காற்றந்தையைச்செற்றகாளையைப்பாளையத்திடையே
துயில்புரியமையத்திமைக்குமுன்சென்னிதுணித்தனன்சுதனெனக்கலங்கி
வெயில்புரிவதன்முன்வல்லிருளிடையேபுணர்ந்தவர்வெருவுடனரற்றப்
பயில்புரிசிலைக்கைச்சிகண்டியைமுதலோர்பலரும்வந்தனர்கள்பாஞ்சாலர். ()

உத்தமோசாவுமுதாமனுமுதலிட்டுள்ளவர்யாவரும்பிறருந்
தத்தமோகையினால்வந்தெதிர்மலைந்தோர்தலைகளாற்பலமலையாக்கி
மெத்தமோகரித்துப்பாரதமுடித்தவீரரைத்தேடிமேல்வெகுளுஞ்
சித்தமோடெங்குந்திரிந்துளானவர்தஞ்சிறுவரைவரையுமுன்சேர்ந்தான். ()

பூதலமுழுதுங்கவர்ந்ததந்தையர்கள்புறத்திடைப்போயதுந்துயின்ற
மாதுலன்முனிவன்மதலைகைப்படையான்மடிந்திடத்தடிந்ததுமுணரார்
தாதலரலங்கற்சமரவாண்முனியைத்தழலிடைவருபெருந்தையல்
காதலம்புதல்வர்கண்டுயில்புரிவோர்கனவுகண்டனரெனக்கண்டார். (௨௧௬)

கண்டவர்தத்தம்படையெடுப்பதன்முன்காசினிமுழுவதும்வென்று
கொண்டவரிவரென்றெண்ணியேசுடரிற்கொளுத்தியசுடரனையாரைத்
திண்டவர்தமக்குச்சிகாமணியனையான்சினத்துறக்கலங்கிவண்டேற [ன்.
லுண்டவர்தமைப்போன்மதத்தினால்வாளாலொருநொடியினிற்றலைதுணித்தா

துருபதன்மைந்தரனைவரும்பஞ்சத்திரௌபதியருந்துயில்பொழுதிற், புரவியங்
தாமாநினைவறப்புகுந்துபொன்றுவித்தனனெனப்புலம்ப, விரவிடையமர் மற்
றென்னைகொலென்னாவிரவிதன்றிருக்குலத்திறைவன், பெருமையோடெழுந்
தான்பகைவன்மேலவன்முன்பின்னிடப்பொருதிடும்பெரியோன். (௨௧௮)

பொன்னிநன்னதியுநேரியம்பொருப்பும்புகாரெனுநகரியும்படைத்த
சென்னியுமவன்றன்சேனையின்விதமுஞ்சேனைமண்டலீகருஞ்சேர
* முன்னியசிலைக்கைமுனிமகனுடன்போய்மோதியவேதியான்மடிந்தார்
பின்னியசடையோன்வழங்கியபடைமுன்பிழைத்தவர்யாவரேபிழைத்தார்.()

புகலரும்பதினெண்பூமிமுற்றுடையபூபதிகளுமவர்படைத்த
விகலருந்தந்திதேர்பரிகாலாளென்பனயாவையுஞ்சேரப்
பகலருஞ்சமரிற்பதின்மடங்காகப்பாதிநாளிரவினிற்படுத்தான்
றகலருங்கேள்வித்தாமனேதாமச்சடையவன்றனயனாதலினால். (௨௨௦)

---

*முன்னியசமரின்முனிமகனென்றும்பாடம்.

உள்ளியபடியேகடுஞ்சினங்கன் றியுள்ளவர்யாரையுமுருக்கித்
துள்ளியவிடைபோற்செருக்கியப்புரத்தின் றுவாரநின் றவரையுங்கூட்டித்
தெள்ளியகுமரர்சென்னியைந்தினையுந்தேவருந்திகைத்திடத்தூக்கி
வெள்ளியகுருவந்தெழுமுனேகுருவின்மிகுகுலவேந்தைவந்தடைந்தான். ()

வே று.

வந்தனேனையமாதவனேவலான்
முந்துபூதமுதுகிடமாமுடி
சிந்தயாரையுஞ்செற்றகன் பாசறை
யைந்துவீரர்தம்மாவியுங்கொண்டரோ. (உஉஉ)

சொன்னசிங்கத்துவசனையாதியா
மன்னரைவருமாண்டனர்மற்றவர்
சென்னியென் றுசிறுவர்தஞ்சென்னியை
முன்னர்வைத்தனனுன்முனிமைந்தனே. (உஉங)

வைத்தசென்னியைநோக்கிவயாவுறு
சித்தமன்னவன்றேறிச்சிறுர்முகந்
தத்தமன்புடைத்தந்தையர்வாண்முக
மொத்தவாகுமிஃதுண்மையென்றோதினன். (உஉச)

ஓதும்வேந்துக்கொருமொழியுஞ்சொலான்
வேதபண்டிதனிற்கவவ்வீரனைப்
பாதகஞ்செய்கைபார்ப்பனமாக்களுக்
கேதமேதமிதென்செய்தவாறரோ. (உஉரு)

துன்னுபாரதந்தோன் றியநாண்முதன்
மன்னரோடமலைந்தனைவாளியாற்
சொன்னபாலர்மகுடந்துணித்ததின்
றென்னவீரியமென்னினைந்தென்செய்தாய். (உஉசு)

இருகுலத்திலெமக்குமவர்க்குமிங்
கொருகுலத்தினுமுண்டெனவில்லையாற்
குருகுலத்தின்கொழுந்தினைக்கிள்ளினை
வருகுலத்தொருமாசறுமைந்தனே. (உஉஎ)

ஆற்றினீர்விளையாடியநாண்முதற்
காற்றின்மைந்தனெடுத்தனைகன் றினேன்
சாற்றினென்வினைதானென்னையேசுடக்
கூற்றின்வாய்புகுந்தேற்கென்னகூற்றையா. (உஉஅ)

பணைநெடுங்கைப்பகட்டுவெஞ்சேனைசூ
ழிணைதருஞ்சொற்கிளைஞர்கள்யாவையுந்
துணைவர்யாரையுந்தோற்றுநின்றேனெனக்
கிணையர்பார்மிசையாருளரெண்ணிலே. (உஉகூ)

என்றுபண்மொழிகூறியிம்மைந்தரைக்
கொன்றுவந்தகுமரனைப்போர்தொறு
நின்றதீவினைநீங்கிடநீதவ
மொன்றிவாழ்கென்றுயர்விடைநல்கினான். (௨௯௦)

வெஞ்சராசனவீரனுமாமனு
நெஞ்சமாழ்குறநின்றவர்போனபின்
கஞ்சநாண்மலர்க்கண்புனல்சோர்தருஞ்
சஞ்சயாரியன்றன்னொடுகூறுவான். (௨௯௧)

யாயொடெந்தையிரக்கமுறுவகை
யாயவின்சொலினாற்றுயராற்றிட
நீயெழுந்தருணின்மொழிவல்லபந்
தூயசிந்தைச்சுரர்களும்வல்லரோ. (௨௯௨)

யானுமெம்பியருமிறந்தோமெனு
மானபங்கமறந்துதன்னெஞ்சினுக்
கானதம்பியளித்தவர்தம்மொடுங்
கோனிலம்புரக்கும்படிகூறுவாய். (௨௯௩)

என்னவம்முனிதன்னிணைத்தாண்மலர்
சென்னிமீதும்விழியினுஞ்சேர்த்திடா
வுன்னிலாண்மைக்குவமையில்லாதவன்
பொன்னிலத்தினுணர்வொடும்போயினான். (௨௯௪)

வேறு.

வயிரஞ்செறிதருமனனும்வாய்மையும்வலியும்பொருபடைவினையின்மேல்வரு
செயிருந்திகழ்குருகுலமகீபதிதிறல்வெஞ்செருமுனையதனின்மேதகு
மயிர்நுண்குழலரமடநலார்பலரளிகொண்டெதிர்கொளவமரனானபின்
னுயிர்கொண்டதுசுரருறையும்வானுலகுடல்கொண்டதுதனதுடையபூமியே. ()

வேறு.

கிடந்தவுடல்வானவர்தங்கிளைசொரிந்தபூமழையாற்கெழுமுற்றோங்க
நடந்தவுயிர்புத்தேளிரமகளிர்விழிமலரானலனுற்றோங்க
வடர்ந்தளிகண்மொகுமொகெனுமாமோதவலம்புரித்தாரண்ணல்யாரு
மிடைந்துமிடைந்தெதிர்கொள்ளவீரருறைபேருலகமேவினானே. (௨௯௬)

கேள்வியுடைவரிசிலைக்கைமுனிமகனுமாதுலனுங்கிருதனென்னும்
வாள்விறல்கூர்நரபதியுங்குருபதிதன்வாய்மையினான்மாழ்கியேகி
வேள்வியருங்கனன்மூன்றுமொருவடிவாய்ப்பிறந்தனையவியாதற்கைவர்
தோள்வலியுந்தஞ்செயலுந்தொழாமுடியோன்றுஞ்சியதுந்தொழுதுசொன்னார். ()

புரிதவத்திற்கானவனங்கிருபனுக்குந்துரோணமுனிபுதல்வனானை
துரகததாமனுக்குமமைத்திவ்வுழிநீரிருத்திரெனச்சொன்னபின்னர்க்
கிருதனுக்குவிடைகொடுத்தானிவருமவன்மொழிப்படியேகிரிசூழ்கானிற்
றருநிலத்தோரதிசயிப்பச்சிவபெருமான்றனைநினைந்துதவஞ்செய்தாரே. (௨௯௮)

நாடியசொற்சுருதிநிகழ்நாவினான்சஞ்சயனுநள்ளென்கங்கு
லோடியொளித்திங்கதிரோனுதிப்பதன்முன்விலோசனநீருகுப்பவெய்தி
யாடிமுகத்தரசினுக்குமைபிருபதரசரையுமளித்துவாழ்ந்து
வாடியமெய்ச்சவுபலைக்குமுற்றதெல்லாம்வாய்மலர்ந்தான்வாய்மைவல்லான். ()

சேனாவிந்துவைமுதலாந்திருமைந்தரைவரும்வான்சென்றநாட்டொட்
டானாமற்சொரிகண்ணீராறுபெருங்கடலாகவழுதுசோர்வாள்
பானாள்வந்தருண்முனிவன்பகருமொழிவிடஞ்செவியிற்பட்டகாலைத்
தூநாகமுருமொலிகேட்டயர்வதுபோல்வீழ்ந்தழுதாள்சுபலன்பாவை. (௨௪௦)

மருத்தின்மகனெனுஞ்சண்டமருத்தனையபுயவலியோன்வன்கைத்தண்டா
லுருத்தமரினுடன்றும்பரூர்புகுந்தான்வாளரவமுயர்த்தோனென்று
வருத்தமுடனுயங்கிமிகமயங்கிநிலமிசைவீழ்ந்துவயிரமான
கருத்தினுடனலமந்தானழுதுபெரும்புனல்சொரியக்கண்ணிலாதான். (௨௪௧)

இப்பான்மற்றிவரிரங்கவெப்பாலுமிருளொளிப்பவிரவிபானுத்
துப்பார்செங்கொடிகளெனவுதயகிரிமிசைப்படர்ந்துதோற்றஞ்செய்யத்
தப்பாமனிலமடந்தைதன்பாரமகற்றுவித்தசார்ங்கபாணி
யப்பாலப்பாண்டவர்களைவரொடும்புரிந்தசெயலறைதுமம்மா. (௨௪௨)

ஐந்துபெரும்பார்த்திவரோடாரணியம்புகுந்தபிரானரியகங்குற்
சிந்துதினகரனுதயஞ்சேருமுனம்பாசறையிற்சென்றுநோக்க
விந்திரனேநிகர்நிருபர்முடித்தலைகள்வெவ்வேறுயிடையேசிந்த
மைந்தருடற்குறைதழுவியாகுலித்துமெலிந்தரற்றுமானைக்கண்டார். (௨௪௩)

கண்டவுடன்மனமெலிவுற்றிவ்வண்ணமெவன்கொலெனக்கரியமேனிக்
கொண்டலுரைத்தனன்றுரகதாமாவின்வினைகளெலாங்கூற்றுமுட்க
வண்டமுகடதிரவுருத்தருச்சுனனுமாருதியுமவன்றனாவி
யுண்டலதுதவிரோமென்றுரைத்தோடமாறடுத்தேயுரைக்குமன்றே. (௨௪௪)

பாரிடமொன்றினைப்புரத்திபாசறையையெனப்புகன்றுபரிவிற்சென்றேம்
வீரருக்குமுனைத்தாமன்சுயோதனற்குச்சூளுரைத்துமீண்டானைவ
ராரமணிமுடிகொய்துதரணியெலாமுன்குடைக்கீழமைப்பனின்றே
காரிருக்குமலரளகக்காந்தாரிசுதவுள்ளங்களித்தியென்றே. (௨௪௫)

திருகுசினத்தொடுங்கடுகிப்பாசறையிற்புகுதலுமேசெங்கட்பூதம்
பெருகுவிழிநீர்சொரியவடர்த்தலும்பின்னிட்டரனைப்பெட்பிற்போற்றி
முருகிதழிச்சுடராருளும்படைக்கலம்பெற்றிவ்வண்ணமுடித்தானம்மா
குருகுகிரியெறிந்தோனைநிகர்த்தவன்றன்விறலெவர்க்குங்கூறலாமோ. (௨௪௬)

என்றுபினுமபாண்டவியமெனும்படையுந்துரந்தான்மற்றெவரேகாப்பா
ரன்றுநமதுயிரைந்துமளிப்பனெனும்வாய்மையினாலகன்றேனின்னும்
வென்றியுமதுழியடைவிற்சேர்ப்பவன்யான்விடுமினெனமின்னனாளைத்
துன்றிவிதியினையெவரேவெல்பவரென்றெடுத்தருளிச்சூழ்ச்சிவல்லான். (௨௪௭)

மைந்தருயிர்க்கிரங்குவதென்மலர்க்குழலாயுன்கொழுநர்வாழ்தற்கியான்செப்
தந்திரமற்றொருகோடியுரைக்கடங்காவெனத்துயரந்தவிர்த்துத்தன்மன்
கொந்தலருமுகநோக்கிக்கன்னன்முதல்யாவருக்குங்குலவுமீமத்
தந்தமுறுகடன்கழித்துமெனவுலுகன்சொற்படிநின்றளித்தபின்னர். (௨௪௮)

அத்தினபுரியதனிலைவருடன்சென்றரியுமந்தன்முன்னர்ப்
பத்தியினாலிறைஞ்சிடமற்றெவர்கொலெனத்தருமன்முதற்பாலரென்ன
வித்தகனாமாசிசொற்றுச்சதாகதிசேயினைத்தழுவவேண்டுமென்ன
வத்தனத்துணளித்தருளத்தழுவிநெரித்தனன்றுகள்களாயதம்மா. (௨௪௯)

இனியூழிவாழ்திரெனவிளைஞரொருநால்வருடனறத்தின்மைந்தன்
றனையிருத்திமீள்வலெனச்சாத்தகியுமலாயுதனுந்தன்னைச்சூழ
வினையகற்றும்பசுந்துளவோன்றுவரைநகர்த்திசைநோக்கிமீண்டான்சீர்த்திக்
கனைகடற்பாரளித்தவரு*மங்கரினறநெறியேகருதிவாழ்ந்தார். (௨௫௰)

ஆகச் செய்யுள்-௪,௫௫௯.

பதினெட்டாம்போர்ச்சருக்க முற்றிற்று.

சௌப்திகபருவம்

முற்றுப்பெற்றது.

---

* அங்கரில்வாழ்ந்தசெயல்கழறுவாமெனென்றும்பாடம்.

4114

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

கணபதிதுணை.

மகாபாரத அரும்பதவுரை.

சிறப்புப்பாயிரம்.

க. பொருப்பு- ஈண்டுப்பொதியமலை. அகத்தியமுனிவர் அகத்தியமுதலாய நூல்களையுண்டாக்கியதன்றித் தொல்காப்பியமுனிவர் முதலாய பன்னிரு மாணுக்கருக்குங் கற்பித்திருத்தலாற் பொருப்பிலே பிறந்தென்றும், அம்முனிவர்கண் முதலாய வான்றோர்பலரு மியற்றுஞ் செய்யுளெல்லாம் உரைப்பாருரைக்கு முறையாவும் புகழில் வைத்தோதுகிய தென்னன் புகழிலமைந்து கிடத்தலாற் றென்னன்புகழிலேகிடந்தென்றும், முச்சங்கப் புலவருங் குழுமியிருந்தாராய்தலிற் சங்கத்திருப்பிலே யிருந்தென்றும், சமணரை வெல்லுமாறு திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் திருக்கையாலிட்ட திருப்பாசுரம் வரைந்த வேடு வையையாற்றின் எதிர்செல்லுதலால் வையையேட்டிலே தவழ்ந்தபேதையென்றும், பின்னும் அந்நாயனுர் வாது நிகழ்ந்துழிப்பாண்டியனெதிர் வளர்த்த பெருநெருப்பிலேயிட்ட திருநள்ளாற்றுப் பதிகம் வரைந்தவேடுவேவாது நிற்றலால்நெருப்பிலே நின்றென்றும், பலநூல் கற்றோர் அவற்றைப் பயின்று சிந்தித்தொழுகலாற் கற்றோர் நினைவிலே நடந்தென்றும், உலகிலாங்காங்கு வதிந்து வளர்தலால் ஒரேனமருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள் என்றுங் கூறினுரென்க. கடையடிக்குத் திருமாலாகிய வோர் பன்றியின் கோட்டிற்றூங்கின பூமியாகிய பெண்ணினெக்கலையிலிருந்து வளர்கின்றாளென்க. திருமால் வராகாவதாரமாகிப் பிரளயநீரிலே முழுகியிருந்த பூமியைக் கோட்டிற் றூங்கி மேலெடுத்தருளினர் என்னுங் கதையினை விஷ்ணு புராணத்திலறிக. தமிழைப்பேதையென வுருவகஞ்செய்ததற்கியைய அப்பருவத்திற்காகும் பிறத்தல் கிடத்தல் முதலிய வினைகளை முறையே கூறினுரென்க. வருங்கவியில் அகத்தியன்பயந்தசெஞ்சொலாரணங்கு எனக்கூறலால் ஈண்டுக்கூறியபொருப்புத்தமிழ்பிறந்த விடமென்றாயிற்று.

உ. அம்புசாதன் - பிரமன். (அம்புசாதம் - தாமரை) பத்தாம்போர்ச்சருக்கம் - ௰௨ ஆவது கவியிற்காண்க. முகம் ஆகுபெயராய் நாவையுணர்த்தியது. மூந்நீர் - படைத்தல் காத்தல் அழித்தலாகிய மூன்று தன்மையையுடைமையாற் கடற்கு ஆகுபெயராயிற்று. செய்கென - இதில் வியங்கோளீறு தொக்கது. பிறபாவினங்களு முளவாயினு மிகுதியால் விருத்தயாப்பென்றாரென்க.

காஞ்சிப்புராணத்திலே சிவபிரான் வடமொழியையுந் தென்மொழியையும் பாணினி முனிவர்க்கும் அகத்தியமுனிவர்க்கும்முறையே கற்பித்தாரென்பதனுலும், அவ்விருவருக்குமுன்பே திருமந்திரத்தில் ஆரியந்தமிழெனுமிரண்டுமுமாதேவியார்க்குக் கற்பித்தாரென்பதனுலும், திருஞான சம்பந்தமூர்த்திநாயனுர் அச்சிறுபாக்கமுதலிய பதிகங்களிற் கூறியதனுலுஞ் சிவபிரானேயுண்டாக்கினுரென்பது புலப்படும்; அங்ஙனமாகவுஞ் சிவபிரானைக்கூறாது அகத்தியமுனிவர் மலையத்துவந்திருந்து விருத்திசெய்து விளக்கினமையால் அவர் பெருமை விளங்குமாறு அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு என்றாரென்க.

ந. எழுவகையாவன—தடாகப்பிரதிஷ்டை, தநநிக்ஷேபம், அக்கிரகாரப்பிரதிஷ்டை, தேவாலயப்பிரதிஷ்டை, நந்தனவனப்பிரதிஷ்டை, பிரபந்தநிர்மாணம், சத்திரப்பிரதிஷ்டை என்பன. இவற்றை வடநூலார் சப்தசந்தான மென்பர். நூல்செய்தற்கேது வாய்ச் சிறந்தமையிற் பாடுவித்தலையுமுடன் கூறினுரென்க. நவை - குற்றம்.

ச. முதலிரண்டடிக்கு - அச்சுவினி முதலிய நாண்மீன்களை நிரைத்து, மற்றை அநேகநக்ஷத்திரக்கூட்டமாகிய புதியமணிகளோடு ஞாயிறு முதலான ஒன்பது விதங்கொண்ட கோள்களை நிரைத்துப், பதினுலுலகங்களையுஞ்சூழ்ந்த வெற்றியையுடைய திருமால்போலக் (கடலினீரையுண்டு கருநிறங்கொண்டு) வருகின்ற மேகமென்க. நிரைத்தல்-

ஒழுங்குபடச்செய்தல். நாண்முதலியனவொழுங்குபடச்செய்யாவழி மேகமழைபெய்யாமையறிக. நிரைத்தலிரண்டுந் திருமாலுக்குங்கொண்டுரைக்க. விஷ்ணுபுராணத்திற்றேவர் முதலோர்களைப்படைத்தலுந் துருவனுக்குப்பதங்கொடுத்தலுங் கூறியிருத்தல் காண்க. ஈரேழ்புவனமும்வலஞ்செய்கொற்றம் திருமாலுக்கேகூறிய விசேடணமென்க. இன்ஐந்தாவதுஒப்புப்பொருட்டு. இவ்வாறன்றி, நேமியை மேருமலையெனக்கொண்டு நாணிரைத்துமுதலிய விசேடணங்களை மேருவுக்காக்கி ஈரேழ்புவனங்கட்கும் வலிமையைச்செய்கின்ற மேருமலையினின்றும் வருகின்ற கொண்டலெனப்பொருள் கூறுவாருமுளர். இப்பொருட்குஇன்-நீக்கப்பொருட்டு. வாள்- வாட்படை. இரவி-அங்நந்திமலை. விதிர்த்தல்- அசைத்தல்.

ரு. வம்பு-வாசனை. உம்பர்-மேலுலகம். உள்ளூற - கண்டோர்மதிக்க. அம்புராசி-கடல். அதற்கு-அம்மந்தரமாகிய மத்திற்கு. அதனுடன் - அம்மந்தரமாகிய மத்துடன். குன்றின்-இன்ஐந்தனுருபு. குன்றின்வீழருவியென்றியையும். வைத்தது எனற்பாலது வைத்தெனக்குறைந்துநின்றது. உம்பரூடெழ என்னும் பாடத்திற்கு ஊடுஎழனுருபென்க.

சு. ககனம்-ஆகாயம். பண்ணை - வயல், வாவியுமாம். பெண்ணையேகொண்டு என்பது பெண்ணையாற்றைக் கொண்டென்றும், பெண்ணைக்கொண்டென்றுமிருபொருள் கொள்ள நின்றது. எகாரம் முன்னையவிரண்டுமசையும் பின்னையது தேற்றமுமாம். ஆல்-அசை.

எ. சூதமகளிரைக்குறிக்குங்கால், தொடுத்த-நாரினாற் றொடுக்கப்பெற்ற. அகில்-அகிற்புகை. உந்திச்சுழிவயினிலங்க-கொப்பூட்சுழிவயிற்றில்விளங்க. மெய்த்தனங்கள்-மெய்யிலுள்ளமுலைகள். வீசி-பரப்பி. மணிமருங்கு - அழகியஇடை. வண்டு-வளையல். தடங்கண் - விசாலமானகண்கள். கரையழிந்து - அளவுகடந்து. அணைப்போர்-கலவி. என்றும்; ஆற்றைக்குறிக்குங்கால், தொடுத்த-சேர்க்கப்பட்ட. அகிலளைந்துந்தி-அகில்மரங்களைப் பொருந்தித்தள்ளி. சுழிவயினிலங்க-நீர்ச்சுழிகள் இடங்கள் தோறுமிலங்க. மெய்த்தனம்-உண்மையான பொன். வீசி-எறிந்து. மணி-நவமணி. மருங்கு-பக்கம். வண்டு-வண்டுகள், சங்குமாம். சிலம்பிரங்க-மலையெதிரொலி செய்ய. தடங்கள்-வாவிகள். கரையழிந்து-கரைகடந்து. படுத்த-கட்டப்பட்ட என்றுங்கொள்க. பண்ணையங்கானல் - வயல்களும் அழகிய சோலைகளும். ஆல்-அசை.

அ. ஔவையார், பாரியென்னும் வள்ளலின் மகளிராகிய அங்கவை, சங்கவையைத்தெய்வீகனென்னும் அரசனுக்கு மணம்புரிவித்தபோது, "முத்தெறியும் பெண்ணை முதுநீர துதவிர்ந்து, தத்தவரு நெய்பாறலைப் பெய்து-குத்திச், செருமலைதெய்வீகன் றிருக்கோவலூர்க்கு, வருமளவிற் கொண்டோடிவா." எனப்பாடிய பாடலுக்காக நெய்பால் பெருகி வந்தமையால் அருந்தமிழறிவினாற் சிறந்து என்றார். வரால்முதலியன எதிரேறிச்செல்லுகையால் எதிர்கொள்ள வென்றார். சனம்-கூட்டம். சம்பவச்சருக்கம் ௬௭-ஆவது கவியிற்காண்க. மலங்குமுதலியமீன்களாகிய சனங்கள் எதிர்கொள்ள வெனவுங் கூறுவர். உம்மை-எச்சத்தோடு சிறப்பு.

௯. அருந்தமிழ்ப்பாவாற்பேர் பெறுபனுவற்பாவலர் மூவருமெனக்கூட்டுக. மூவர்-பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார். நெருக்கி- ஒருவரையொருவர் நெருக்கி. மொழிவிளக்கு- பிரபந்தமாகியவிளக்கு. இம்மூவரும் திருக்கோவலூரை யடைந்து மாலையிற்பொய்கையாழ்வார்ஒருவர்திருமாளிகையிற்சென்று இடைகழியிற் சயனித்திருந்தனர்; பின்னர்ப் பூதத்தாழ்வார்சயனித்தற்கு இடந்தேடிவந்து பொய்கையாழ்வாரைக்கண்டு அடியேன் சயனித்தற்கு இடமுண்டாவென்று வினவ அவர் இவ்விடமொருவர் படுக்கலாம் இருவரிருக்கலாமென்று கூறியழைக்க அவ்விருவருமங்கிருந்தனர்; பின்னர்ப்பேயாழ்வாரும் இடந்தேடி அத்திருமாளிகைக்கு வந்து சயனித்தற்கிடமுண்டாவென்றுவினவ இவ்விருவரும் இவ்விடம்ஒருவர் படுக்கலாம்இருவர் இருக்கலாம் மூவர்நிற்கலாமென் றழைக்க இவருமுள்ளேசென்றனர்; இம்மூவரும் ஒருவரை யொருவர் விசாரித்து மகிழ்ச்சியடைந்தனர்; அப்பொழுது திருமால்பேரிருளையும் பெருமழையையுமுண்டாக்கித் தாமுமவ்விடைகழியிற் சென்று அதிகநெருக்கமுண்டாக்கியருளினார்; அவ்வாழ்வார் மூவரும் முன்னில்லாத நெருக்கமிப்பொழுதுண்டாயதென்னையென்று திகைத்தனர்; பொய்கையாழ்வார் வையந்தகழியாவெனத் தொடங்கிய முதற்றிருவந்தாதியாற் சூரியனை விளக்காகவேற்றிப்பார்க்கப், பூதத்தாழ்வார் அன்

பேதகழியாவெனத் தொடங்கிய இரண்டாந்திருவந்தாதியால் ஞானதீபத்தை யேற்றிப் பார்க்க, இவ்விரண்டானு மிருளற்றமையாற் பேயாழ்வார் திருமாலையுள்ளபடி கண்டு, திருக்கண்டேனெனத் தொடங்கிய மூன்றாந்திருவந்தாதியையருளிச்செய்தார். என்னுங்கதையினைச்சுருக்கி மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத்தொழுதநன்னாடு என்றார். மூவரிலிருவர்-திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னுமூவரிற் பின்னர்க்கூறப்பட்ட விருவர். மொழி-ஆகுபெயர்.

௰. அமுதம்-நீர். சந்தம்-சந்தனம். பகடு-எருமைக்கடா. முன்னேருழுவ-முன்னேராயுழுவன, முன்னேராயுழுவனவென்றுமாம். சிந்தச்சிந்த என்னுமடுக்கு ஒருதொழில் பலகால் நிகழுமிகுதிகுறித்து நின்றது.

௰௧. களை-அம்மலராகியகளை. குழைதோய் விழி-காதளவியகண். துவைத்தல்- ஈண்டு நையமிதித்தல். செறு-வயல்.

௰௨. தலைதெரியா-வேற்றுமைதெரியாத தலை-அசைநிலை; புறநானூறு-௰௯-ஆம் பாட்டுரையிற்காண்க. சேருக-அத்தேனூறுசேருகும்படி. வேலைக்கழிக்கானலங்கைதை- கடற்கரையிற்கழியையுடைய அளங்களினிற்கின்ற அழகியதாழைகள். சுரும்பு தும்பி- வண்டுகளின் பேதம். சோறிடுதல்- ஈண்டு மகரந்தத்தைச்சொரிதல். பாடுவாரிசைகேட்டு அவர் வருத்தந்தீரச் சோறிடுந்தன்மை தோன்றக்கூறினாரென்க. தெரியா- ஈறுதொக்கபெயரெச்சம்.

௰௩. கம்பலை- ஒலி. கழனியிலென்ன எழாவது விரிக்க. காம்-இறைப்பொருள். ஐம்புலத்தவர்- ஐந்திடத்தார். அவர் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்பவர். புவக்கிழத்தி- நிலமகள். இதனாலரசருக்குச்செலுத்துங்கடன் ஆறிலொன்று என்பது பெறப்பட்டது.

௰௪. கடலேழு-உவர், கருப்பஞ்சாறு, தேன், நெய், தயிர், பால், நன்னீர் என்பன. பழனப்பண்ணை-வயல்களையுடைய மருதநிலம். வண்ணம் நான்கு- பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர வருணங்கள்.

௰௫. ஐந்துபா- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா. நால்வகைக்கவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். கவித்துறை- கவிவர்க்கம். பரமனை-பரமனுக்குஎன நான்காவதாக்குக.

௰௬. தென்னர், சேரலர், செம்பியர்- பாண்டியர், சேரர், சோழர். வரிசை-சிறப்பு. முத்தமிழ்- இயல், இசை, நாடகம்.

௰௭. தாரகாயணவண்டு- தாரமென்னுமிசையைப்பாடுவதாகிய வண்டென்க. தாரம்-மூக்காற்பிறக்குமிசை. தண்டலை-சோலை. வீரராகவன்-வில்லிபுத்தூரர் தந்தை, குருவென்பாருமுளர். தீரகாகளம்-வெற்றிச்சின்னத்தைக்குறித்தது. தாரகாகணவண்டு என்றபாடத்திற்கு-நக்ஷத்திரக்கூட்டம்போலவண்டுகளென்க. பெரியாழ்வார்க்கு வில்லிபுத்தூரர் எனப்பெயருண்மையால் அப்பெயரை இந்நூலாசிரியர் தமக்கிட்டழைக்கப்பெற்றாரென்பர்.

௰௮. குரிசில்-பெருமையிற் சிறந்தோன். கலி-வறுமை. கருநடம் - கன்னடபாஷை. கலங்காமல்-நிலைகுலையாமல். தலைகண்டான்-மேம்பாடாகச்செய்தான்; பரிபாலித்தான் என்பது கருத்து. தமிழ்நூல்கள் கலியின்மூழ்குதலாவது- கற்பாரின்றிக்குறைதல். கருநடப்பெயர்வெள்ளத்துவிழுதலாவது- கருநடபாஷை அதிகரித்துப்பரவ அதனுளடங்குதல்; அடுத்த தேசங்கருநடதேசமாதலாற் பெருகிய அத்தேய பாஷைகலந்து தமிழ்ப்பெருமைகுன்றாமை கருதிக்கருநடப் பெயர்வெள்ளத்து விழாமலென்றார்.

௰௯. வளவன்-சோழன். வழுதித்தெவ்-பாண்டியனாகியபகைவன். கொற்றவை-வீரலக்குமி. கோட்டினான்- எழுதினான். கொற்றவைமனங்களிப்பத் தெவ்வைச்செற்றுக்கமலமாதுமனங்களிப்பக்கற்றவர்க்களித்து எனக்கூட்டிப்பொருள்கொள்க. இருகையுடைக்கற்பகம்-இல்பொருளுவமை.

௨௰. அமர்பொருது கன்னாட்டிக் கங்கைநீரூட்டு வித்து எனக்கூட்டுக. கண்டன் வேங்கை- கண்டனென்னுஞ்சோழனது புலிக்கொடி. எழுதிய அவனெனற்பாலது எழுதியவன் எனப்பெயரெச்சத்தீறு தொக்கது. எழுதியவன்-வினையாலணையும் பெயருமாம். கன்னாட்டுதலாவது- புறங்கொடாது போர்செய்திறந்தோன் பெயர்தீட்டி அவற்கு இஃதுருவமென்று கல்லைநாட்டுதல்; இதுபுறப்பொருளிலக்கணம் "என்னைமுன் னில்லன்மின் றெவ்விர்பலரென்னை,முன்னின்று கன்னின் றவர்" என்னுந்திருக்குறளானுமுணர்க. நாட்டி- நாட்டுவித்து எனப்பிறவினையாக்குக. கங்கைநீரூட்டிவித்து எனவே வீரசுவர்க்க வின்ப மெய்தவிடுத்தென்பது கருத்தாயிற்று. வேங்கை-ஆகுபெயர்.

௨௰௧. வக்கபாகை- நகரத்தின்பெயர். தன்

றிருப்பெயர்- ஆட்கொண்டான். அறனெறி யாவீட்டிய பொருளென்பார் மெய்ச்செல்வமென்றார். தோற்றிய-ஈண்டுத்தன்வினை.

உஉ. உய்யக்கொண்டவன்- யாவரையுமீடேறச்செய்தவனாகிய அவ்வாட் கொண்டான். நற்கேள்வியானிறைந்த செவியென்பார் சிறந்த செவியென்றார்.

உங. இருக்காதிமறை மொழிந்தோன்- வேதத்தைஇருக்குமுதல்நான்காகப்பகுத்துரைத்தோனாகிய வியாசமுனி. சுருக்காக-சங்கிரகமாக. புராணமுறை-பழையமுறை. அது முதனூலோடு முரணாமுறையாம். பெருக்காளர்-கல்வி செல்வ முதலியவற்றாற் பெருக்கமுடையோர். வரந்தருவார்தம்மைப்படர்க்கையாகக்கூறினாரென்க. வியாசமுனிவர் முற்காலத்திலே தைத்திரிய முதலிய பெயரையுடையனவாயிருந்தவேதங்களை இருக்கு முதலிய பெயரிட்டு வரையறைப்படுத்தியுரைத்தமையால் இருக்காதிமறைமொழிந்தோனென்றார். ‘இக்கருத்தைக்கலித்தொகையிற் கடவுள் வாழ்த்துரையிற்காண்க.’

தற்சிறப்புப்பாயிரம்.

என்பது, தெய்வவணக்கமுஞ் செயப்படு பொருளுங் கூறுவது.

:o:

க. வாடாத-சுருங்காத. வடமேருவெற்பேடாக ஆகவங்கூர்தன்கோடெழுத் தாணியாக எழுதும்பிரானை யெனக்கூட்டியுரைக்க. ஆகவங்கூர்தன்கோடு—யுத்தத்திலே கூர்ந்ததனது கொம்பு. ஆகஎன்பது நிகழ்காலத்தின்வந்தசெயவெனெச்சம். மறை-என்பது ரகசியார்த்தங்களையுடையதுஎனப்பொருடருதலாற்காரணப்பெயர். வினைமுதற்பொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது. பாரதம் என்னும் பெயர் முதனூலாற் பெற்றபெயர். திருமான் முதலாய தேவர்களின் சரித்திரங்களைக் கூறுதலானும், உலகினரெளிதினுணர்ந்துய்யுமாறுபலதருமநீதிகளைக்கூறுதலானும், வேதவியாசமுனிவராற்கூற விநாயகரெழுதப் படுதலானும் பாரதம் ஐந்தாம் வேதமெனப்பட்டதென்க. மாபாரதஞ்சொன்னநாள் அதனை யெழுதும் பிரானெனக்கூறலால் அதில் விருப்புடைய அவ்விநாயகக்கடவுள் அதனைத்தமிழின் மொழிபெயர்த்துக்கூறு மிந்நூலுமிடையூறின்றி யினிது முற்றுமாறருள்வரென்பது கருத்தாயிற்று. இக்கவிக்கு யாம் என்பது தோன்றா வெழுவாய்.

உ. தாமம் - கொன்றை. திறம்-வகை. புருகூதன்முதலாய-இந்திரனை முதல்வனாகக்கொண்ட. பூதேவர்-பிராமணர். கோடி-எண்ணின்மிகுதிகுறித்ததென்க. உற-மிக. அடியார்முயற்சித்திறந் திருநாமல்விளைவிக்குமெனவே, அன்பனாகிய யான் செய்யும் இந்நூன்முயற்சியை யிடையூறின்றி யினிது நிறைவேற்றுவ ரென்பது கருத்தாயிற்று. காண்டவதகனச்சருக்கத்தில்; “தேவர் முப்பத்துமுக்கோடியரென்றும் கோடிதேவருக்கொருவர்தலைவராக இருவரெண்மர்பதினொருவர் பன்னிருவரெனுமவ் விண்ணவர்கண் முப்பத்துமூவர் என்றும், இவர்கட்கெல்லாந்தலைவன் இந்திரனென்றுங்கூறலால், மூன்றாமடிக்கு இந்திரன் முதலாகியமுப்பத்துமுக்கோடி தேவர் எனப்பொருள் கூறுவது பொருந்தாதென்க. புருகூதன்-யாகத்தில் அதிகமாக வழைக்கப்படுபவன்.

ங. உலகம் முதல் ஆக்குமாறயனும்-உலகங்களை முதலிற் படைக்குநெறிக்கு பிரமனாகுவன். ஆக்கியவுலகம்-அவ்வாறு படைக்கப்பட்ட வுலகங்களை. அடி போற்றி-பாதங்கள் நம்மாற் போற்றப்படுவன. போற்றிஎன்பதில் இகரஞ்செயப்படு பொருளுணர்த்தும் விகுதி. போற்றிய வென்னும் வியங்கோண்முற்றுப் போற்றி எனநின்றதாகக் கொண்டு காக்கவெனப் பொருள்கூறுவாருமுளர். அவை-அவ்வுலகங்கள். உலகம்- இடைநிலத்தீவகம். யாதுயாண்டொடுங்கும் அஃததனி

லுற்பத்தியாம் மண்ணிற் கடம்போலும் என்னுமவினுபாவத்தால்; உலகஞ்சங்காரகாரணன் மாட்டொடுங்குதலின் மீளத்தோன்றுங்கால் அவனிடத்து நின்றுந்தோன்றும்; அவனை யொழியத் தோற்றுவிப்பாரொருவனிலனென்பார் வீக்குமாறரனும், அவை வீந்த நாண் மீளப்பூக்குமாமுதலெவன் என்றாரென்க. ஆகுமென்னுஞ்செய்யுமென்முற்று ஆம் என நின்றது. இவ்வாறன்றி ஆம் அசையெனினுமாம்.

ச. தேங்குககசுருதி - வேதங்களெங்கு நிரம்பக்கடவன. புயல்-மழை.

ரு. * கன்னபாகம்-காதுவழியால். காதெனினுமாம். துகள்-குற்றம். சுகன்-சுகமுனி. பாவம்-அபிப்பிராயம். மற்று-அசை.

சு. ஊமன் - கண்ணிலாதவன். கேட்டலுங் காண்டலும் என்பது முறைநிரனிரையணி.

எ. முன்சொல்-வடசொல். சொல்லென்பதனை ஆகுபெயராக்கிப்புராணங்களென்பாருமுளர். புன்சொல்- வழூஉச்சொல். என் சொல் வழூச்சொல்லாயினு மாப்பெருங்காப்பியக்கதை மகிமையாற் பொறுத்தங்கீகரிப்பர் என்பது கருத்து. உம்மை இழிவுசிறப்பு. தமிழ்நூலார் காப்பியத்தைத் தொடர்நிலைச்செய்யுளென்பர்.

அ. மொழி-ஈண்டு வடமொழி. மாதவன் இலச்குமிநாயகன். மன்உமாதவன் எனப்பிரித்து உமாதேவிநாயகனாகிய சிவபிரான் எனப்பொருள்கொண்டு இந்நூலார் அரிசிவபத்தி யிரண்டுமுளராதலால் இங்ஙனமிருபொருள்படக்கூறினாரென்பாருமுளர். அவர் கூறுமாறே சிவபத்தியுமுடையரென்பதனை இந்நூலுள்வந்துழிவந்துழிக்காட்டுதும்.

௨

முதலாவது ஆதிபருவம் குருகுலச் சருக்கம்.

க. சந்திரன்றோன்றுமிடம் பலவுளவாயினும் அவன்பெருமைதோன்ற, எங்கண்மாதவனிதையமாமலர் வருமென்றார் என்க. கோடிஎன்றதன்பின் உள்ளாரென வருவித்துமுடிக்க. சந்திரன்றோன்றுமிடம் பலஎன்பதைச் சூதுபோர்ச்சருக்கத்தில்“விழியினெஞ்சின்வானெருப்பினீடுசதியின் விதிபடைப்பினிற்றோன்ற” எனக்கூறுதலாற்காண்க.

உ. நாள்கள்- நாண்மீன்கள். சடைமேல்திருந்த இருந்த வானவன் எனக்கூட்டியுரைக்க. திருந்துதல் - ஈண்டுக்கலைதேய்வுறுதின்புறல். திருந்த—என்பதுகாரியப்பொருளில்வந்த செயவெனெச்சம். இனித்திருந்து அவ்வானவர் எனப்பிரித்துரைப்பினுமாம். சடைமுடிமேலிருந்தகதை புராணங்களிற் காண்க.

ந. முதலிரண்டடிக்கு-(உலகில்) வட்டமாகப் பயிலுகின்ற பாம்புகளின் பெரிய சுவாசத்தினால் கலந்துறெங்கிய ஆலமானது தாக்க வருந்திய பெரியதுன்பம் நீங்க. மயங்குதல். ஈண்டுக்கலத்தல்; நன்னூல் “மம்முன்பயவமயங்கு மென்ப” என்பதினும், புறநானூற்றில்-மகூ-ஆவது பாட்டுரையினுங் காண்க. அலம் - விடம். ஆலம் - அலமென விகாரமாயிற்றென்பாருமுளர். இவ்வாறன்றி உயிர்ப்பினான் மண்டு அலம்பொரமயங்கி வருந்திய பெருந்துயர் எனக்கொண்டு கூட்டியுரைப்பாருமுளர். நிழல்—குளிர்ச்சி. மரபு-தன்மை; புறநானூற்றில். ாஉ-சு-ஆவது பாட்டுரையிற்காண்க. நிழலினாலும், அமிழ்தினாலும் மாறக்குளிரவைத்தோன் என்க.

ச. பைம்பொன்மால்வரை -பசியபொன்னினையுடைய பெரியமந்தரமலை. பணி பாம்பு. ஆனவர்-எழுவாயுருபு. அம்புராசி-கடல்.

ரு. மித்திரன்-சூரியன். சித்திரம்-அழகு. அபரபக்கத்திற்சூரியனிடத்திலேஒவ்வொருகலையாக ஐக்கியமாதலும் பூர்வபக்கத்தில் ஒவ்வோர் கலையாகத்தானடைதலுங் கருதி அவைமுன் கொடுத்து மீளவுங்கவர்வோன் என்றார்.

சு. புந்தி-அறிவு. சந்திரன் வியாழகுருவின் பன்னியாகிய தாரையைப் புணர்ந்து புதனைப் பெற்றானென்பது புராணங்களின் கதை. உந்தியாரழகுடையபேருரோகிணி

* கன்னபாகம்-காது. புட்பயாத்திரைச்சருக்கம்-நந-ஆங் கவியிற்காண்க.

வயிற்றிற், புந்தியாலுயர்புதனையப் புண்ணி
யன்பயந்தான். என்றிப்போதுகிடைத்த
எட்டுப்பிரதிகளிலிருக்கின்றதாயினும் புரா
ணங்களோடு மாறுகொளக்கூறலாலது பாட
மன்றென்க.

எ. மநு - மநுஎன்னும்பெயரையுடைய
அரசன். இவன்மைந்தன் இளனென்னும்
பெயரையுடையவன். உளை-பிடர்மயிர். விபி
னம்-காடு. விதி-ஈண்டுச்சாபம்; அது உமா
தேவியார் அருந்தவம் விளைக்கின்றவனத்
தையுற்றதனாற் பெண்ணாகும்படி விதித்த
தென்க. என்ப-அசை; சீவகசிந்தாமணியுரை
யிற்பலவிடங்களிலுங் காண்க.

அ. மாரகாகளம்-மன்மதனுடைய வெற்
றிச்சின்னமாகிய குயில். ஈண்டு ஆகுபெய
ராகக் குயிலோசையை யுணர்த்திற்று. தீரகா
மம்-வலியகாமம்.

கூ. பூவை-ஆகுபெயர். பின்னிரண்டடி
யினுமுறைநிரனிறையணியறிக. அகத்திய
முனிவர்க்குச் செந்தமிழையறிவுறுத்திய பர
மாசிரியராதலாற் கலைமுருக னென்றார். இவ்
வாறன்றித் தலைச்சங்கமிருந்து கலைகளையா
ராய்ந்தமையாற் கலைமுருகனென்றார் என்
பாருமுளர்.

௰. உரு-அழகு. உருவினிற்சிறத்தல் அசு
ரர் கவர்தற் கேதுவாதலறிக. முற்காலத்
தின் மலைகளெல்லாஞ்சிறகுடன் பறந்து வீழ்
நதூர்களை யழித்தமை கண்டு இந்திரன
வற்றின் சிறகரிந்திட்டமையாற் பொருப்
பினைச்சிறகரிந்தவ னென்றார். உருப்பசி-
தேவகணிகையரிலொருத்தி.

௰க. அபயம்-ஈண்டு அடைக்கலம். போ
தலும்-உம்மீற்று வினையெச்சம்.

௰உ. புறம்-முதுகு. மறம்-வீரம். மறந்த
ருங்கழல் என்பது ஒருபொருட்டன்மையை
மற்றொருபொருண்மேல்வைத்துக் கூறலா
ன்மரபுவழுவமைதி யென்க.

௰ங. திருமால்நரன்நாரணன் எனஇருவ
ராகி வதரிகாச்சிரமத்திற் றவஞ் செய்கை
யில் அவர்களுடைய தவத்தைக் கெடுக்க
இந்திரன் அநேகதேவகணிகையரை விடுத்த
னன், அதனால் நாராயணன் கலங்காதிரு
ந்து தொடையில் ஊருவசிமுதலியஅநேக
தாசிகளைப்பிறப்பித்தான் அவர்களைத் தே
வர்கணிகையர்கண்டு மயங்கி ஊருவசிமுத
லியவரைத் தங்களுக்கு நாயகிகளாகக்கொ
ண்டுதேவலோகமடைந்தனர் என்பதுகதை
அவிப்பாகத்தைத் தேவர்கட்கு முன்னரே
யுவந்து சுவைகாணலாற் றேயுவை முற்
கூறினார்.

௰ச. முகுடம்- முடியுறுப்பு, ஈண்டாகு
பெயராய் முடியினை யுணர்த்தியது. சகுடநீ
ரென- சேம்பினிலைக்கண்ணீர்போலப் (பற்
றற்று) இதுஇசை யெச்சம். சகுடம் -சேம்பி
னிலையையுணர்த்தலால் ஆகுபெயர். சதம்-
நூறு.நாமவேல்- அச்சத்தைத்தரும்வேல்.அர
சு-உயர்திணைப்பொருள் குறித்த அஃறிணை
ச்சொல்.

௰ரு. புலோமசை-இந்திராணிக்கோர்பெ
யர், பூலோமாவென்னுமசுரன்மகள். முயக்
கு-கலவி. யானம்-சிவிகை. முனிவாய்மை-மு
னிந்தவாக்காகியசாபம்,இதுவினைத்தொகை
பெரும்புயங்கம்- பெரும்பாம்பு. உம்மை-எச்
சம். எவலென்றது சத்த முனிவர்கள்தாங்க
ச்சிவிகையிலேறி வருவாயென்று கூறிவிடு
த்த எவலுரையை. சாபமாவது நகுடன்சிவி
கையிலேறி விரைந்துநடக்குமாறு சர்ப்பஎன
க்கூறலாற் குறுமுனி சர்ப்பமாகஎனச்சபித்
தல்; இக்கதையினைத் திருவிளையாடற் புரா
ணத்திலிந்திரன்பழிதீர்த்தபடலத்திற் காண்
க.

௰சு. மைந்து-வலி. கொற்றவை- வீரலக்
குமி. பகை- பகைவரையுணர்த்தலால் ஆகு
பெயர். செற்றவன்- அழித்தவன். செற்றம்-
கோபம். தொறும் என்பது ஈண்டிடப் பன்
மைகுறித்துநின்றது.

௰எ. புகரவன்-சுக்கிரன். இவன் புதல்வி
பெயர் தெய்வயானையென்க. குயாசலம்-தன
மலை.இருவர்பெயர்- யது, துருவசுஎன்க.பிதா
வாக்கியத்தை அங்கீகரியாதவராதலால் வெ
ங்குமரரென்றார். அதனை-உ௩-ஆவது-கவியி
ற் காண்க. தழீஇ-தழுவி, இதுசெய்தென்வா
ய்பாட்டு வினையெச்சம்.

௰அ. கவி-சுக்கிரன். உரை-புகழ்.மன்னவ
ன்- விடபபன்மன்என்னுமசுரமன்ன னென்
க; இவன்மகளின்பெயர்சன்மிட்டை.தெய்வ
யானையுஞ்சன்மிட்டையு நண்புற்றிருக்கு நா
ளில் ஓர்நாட்சன்மிட்டை தன்னைக்கோபத்தா
ல்நிந்தித்த தெய்வயானையைக்கிணற்றிற்றள்
ளினாள்.அதனால் விடபபன்மன்சன்மிட்டை
யைத் தெய்வயானை கருத்தின்படி அவளுக்
கேவலாட்டியாக்கினான் சன்மிட்டையுமவ்
வாறிசைந்தொழுகினாள் என்னுங்கதையினை
ச்சுருக்கி முன்னிசைந்தபேரிசைவினாலேவ
லின்முயல்வாளென்றார்.

௰கூ. ஆழி- ஈண்டு ஆக்கினையாகிய சக்க
ரம்.அணங்கென—தெய்வமகளைப்போல.பா
ழி- பெருமை. யாழினோர் புணர்ச்சி- கந்தரு

வருடைய மணம்; அது தலைவனுந் தலைவியுமெதிர்ந்து தாமேகூடுவது. எட்டுமணத்தினுஞ் சிறந்தமையாற் பெரும்புணர்ச்சி என்றார். துடித்து- துடிக்க எச்சத்திரிபு. வாழி-அசை. ஆடவர்க்கு வலந்துடித்தல் நற்குறியென்க.

௨௰. மைந்து-வலி. தரிப்பான்-எதிர்கால வினையெச்சம். பிதாவினுரைகொள்ளு நீதியனென்பது விளங்கப்புண்ணியப் புதல்வனென்றார்.

௨௧. இறைமனை-செய்வயானை. அழன்று- கோபமுற்று. அப்புதல்வர்தன்னையகளையொத்தவடிவுடையராயிருத்தல்கண்டுகோபமுற்றானென்பதுகதை. கொல்-அசை. மைந்தரிருவர்பெயர்- துருகுவு, மநுஎன்பர்.

௨௨. ஐ-சிலேட்டுமம். செப்பலும்-உம்மீற்று வினையெச்சம். நூறு-ஆகுபெயராய்நூறு வயதினையுணர்த்தியது.

௨௩. உசன்-சுக்கிரன். யாவரும் என்றது பூருவையொழிந்த நால்வரை. சபித்தமை கருதிக்கூறலால் உசனர் என்பதில் ஆர்இழித்தற்கண்வந்தது.

௨௪. விந்தை - வீரலக்குமி. முந்தை-பழமை. மணம்- போகம். ஆதரம்- ஆசை. சிந்தனை- விருப்பம். விந்தைமுதலோர்விரும்ப என்றதனால் அட்டஐசுவரியங்களுடன் போகங்களை யனுபவித்தானென்பது கருத்தாயிற்று. உம்மை- அசை.

௨௫. இடியுமாறுகொணெடுமொழி-இடியும்ஆறுதல் கொள்ளத்தக்க மேம்பாட்டுரை. உம்மை-சிறப்பு. முரசு அரசர்க்குத்தசாங்கத்தினொருறுப்பென்க. அடி-வம்மிசமுதல்.

௨௬. விரதம்-நோன்பு. சுரதம்-புணர்ச்சி. பரதம்- நாடகம். இசை-சங்கீதம். சரதம்-உண்மை. இவ்வரசனு வுண்மையாக விருத்தியடைந்தனவென்பார். பரதமுமிசையுஞ் சரதமின்புறஎன்றார். இவன்சிறந்து விளங்கலாலிவன்முதற் சந்திரவம்சத்திற்குப்பரதவம்மிசமென்றும், அவ்வம்மிசசம்பந்தமான கதைக்குப்பாரதமென்றும் பெயர் கூறுவர்.

௨௭. சமூகம்-கூட்டம். சுராரிகள்-தேவர்கள் பகைவராகிய அசுரர். பூசல்-போர். வெந்-முதுகு. புரசைநாகம்- கழுத்திடு கயிற்றை யுடையயானை. நாகம்- சுவர்க்கம். கடவினன்-முற்றெச்சம். முன்போரிலசுரரைக்கொன்று சுவர்க்கத்தாரைக் காத்த வொற்றுமை கருதி அறுமுகக்கடவுளென்றயிர்த்தாரென்க.

௨௮. முக்குலம் - அக்கினிசூரியசந்திர குலம். மைக்குலம் - முகிற்கூட்டம். புட்கலாவர்த்தம் - பொன்மழைபொழியுமேகமென்க.

௨௯. வாகம் - வாகனம். அப்புரவலன்- அந்த அத்திராசன். இயக்கர்நகர் - அளகாபுரி. தானம்-சுவர்க்கம். "பெறுவதுகொள்வாருங் கள்வருநேர்" என்றாற்போல நிகர் என நின்றதென்க.

௩௰. விநதை-கருடன்றாயின்பெயர். யானம்-வாகனம். விநதைபயந்தயானம் - கருடனாகியவாகனமென்க. கானம் - வாசனை. கயம்-தடாகம். கயம்-யானை. கராம்-முதலை. கயமுஞ் கராமுமானவர் இந்திரத்துய்ம்மன், அநுரு என்பவர்.

௩௧. வயம்-வெற்றி. மருவரும் - அடைதற்கரிய. அங்குரித்தல் - தோன்றுதல். இவன்பிதாசவ்வருணன், வசிட்டராகிய குருவினருளாலிவனைப் பெற்றமையாலிவனுக்குக்குருவென்று பெயரிட்டானென்க.

௩௨. இருகுலம்-ஈண்டு அக்கினிகுலஞ் சூரியகுலமென்க. வேறொருகுலமென்றது இம்முக்குலமுமொழிந்த குறுநிலமன்னர் முதலோர்குலங்களை. இருகுலத்தினுமென்பதற்குத்தந்தைதாய்என்னுமிருமரபினும் என்றும், வேறொருகுலத்தினும் என்பதற்கு இவன்குலமன்றி வேறெந்தக்குலத்திலாயினுமென்றும் பொருள்கூறுவர். ஒசாரம்-எதிர்மறை.

௩௩. அமுதவெண்டிரைச்சிந்து என்றதனாற்பாற்கடலென்க. இவன்முன்னோர்கள் ஐந்தாம்வேதமாகி உலகிற்குபயோகமாகும் பாரதகதை நிகழ்தற்கேது வாயிருந்தமையால்இவன்செயல்விரித்துக்கூறுது மென்பார் வகுத்துக்கூறுவாம் என்றார், இவன்றந்தை பிரத்தீபன்.

௩௪. வேட்டைபோய்-மிருகங்களைக்கொலை செய்தற்குப்போய். தூ-வெண்மை. சூழல்- ஈண்டு இடமாகிய கரைஎன்க.

௩௫. மரு-வாசனை. பொற்ப-பொலிய. குழை-காது. உடைமைதோன்ற - தனக்குடைமையாந்தன்மைதோன்ற. ஒடு-எண்ணின்கண்வந்தது.

௩௬. சோகம்-ஈண்டு வேட்டையிற்போய்வருதலாலுண்டாகிய இளைப்பு. தாபம்-தாகம். பங்கயம்-தாமரை. இக்கவிமுதன் மூன்றுகவியும் அகப்பொருட்டுறையில் முறையே காட்சி, ஐயம், துணிவு என்க.

௩௭. கொல்-ஐயம். கலை வேதமுதலாகப்பலவாகவிரிதலிற்கலைவிதம் என்றார்.

௩௮. புண்ணியயபனைப் புண்ணியமென்றது ஆகுபெயர். இமைத்து இமைக்க எனத்திரித்துரைக்க. உம்மை - இறந்ததுதழீஇயவெச்சம். இவளைப்பெற்றோர் மிக்க புண்ணியஞ் செய்திருக்க வேண்டுமென்பது கருதி யாவர் செய்புண்ணியமென்ருன்.

௩௯. புளகம்-மயிர்சிலிர்த்தல். தோற்றியது என்பது தன்வினை. அயனிடுசாபம்-௫௬-ஆவதுசெய்யுண் முதலாகக்காண்க.

௪௰. விழிப்புரிவு-கண்ணின்செயல், அது குறிப்புநோக்கம். ஆதரம்-ஆசை. இங்கிதம்-அவள் எண்ணக்குறிப்பு. தடம்-உயர்ந்தவிடம். திருக்கோவையாரில் "அகல்கின்றவல்குற்றடமது" என்னுங் கவியுரையிலறிக. மகளிர்க்கு ஆடவர்மீதாசை யுறுங்காற் குறிப்பு நோக்கமுந் தனம்பூரித்தலுமுண்டாமென்க.

௪௧. கடி-விவாகம். உசாவினன் - ஆராய்ந்தான். இகல் - வலி. வடி - கூர்மை. என்னில் என்பதில் இல் - ஐந்தாமுருபு. பான்மையை-முன்னிலை வினைமுற்று.

௪௨. சேணுறுதனதுமெய்த்தேசு-தூரத்தே விளங்குகின்றதனது மெய்யொளி. வாய்மை-வசனம். கற்புடைமகளிராடவருடன் பேசுங்காலவர்முகம்பாராது தலைகவிழ்ந்து பேசுதலியல்பாதலால் முலை முகம்பொருந்தநோக்கினள்என்றுந், தான் வினவுவது தீச்செயலாயினுந் தன்மாட்டுள்ள மோகத்தாலுடன்படுமவன் குறிப்பு நோக்கிவனறிவிருந்தவா றென்னையென எள்ளல்பற்றி நகைநிகழுதலால்நகைவாணில்வெழஎன்றுங் கூறினர்.

௪௩. இரிந்து-அஞ்சி. பரிந்து-இரங்கி. புணர்வல்-சேர்வேன். பொறுத்தியேல்-முற்றின்மேல் வந்த எலீற்று வினையெச்சம்.

௪௪. கைதருக-கைவழங்குக. ஒன்றை நிச்சயிப்பார் கைகொடுக்கும்வழக்குண்மையின்றுங் காண்க. உய்வு-உய்தல். தருக-என்பதில் வியங்கோளீறு தொக்கது.

௪௫. அரசு-ஈண்டு இராச்சியம். மருட்டினன்-மயக்கினன். மன்றல்-கல்யாணம். யாவையு நினது என்றதுபன்மையொருமை மயக்கம். நிகரிலா - ஈறுதொக்க பெயரெச்சம்.

௪௬. நுண்ணியவறிவினரன்றி யேனையோரறியலாகாமையின் அருமறை யென்ருர்.

௪௭. மணந்து-புணர்ந்து. கருவுயிர்த்தனள்-பிள்ளையைப்பெற்ருள். பழிக்கஞ்சாநெஞ்சளாய் வெளிப்படச் செய்தாளென்பார்புவனங்காணப் புதைத்தனள் என்ருர்.

௪௮. கதித்தல்-ஈண்டுச்சொல்லுதல். பரிவு-அன்பு.

௪௯. முரண்டு-மாறுபட்டு. அறுவரைமாய்க்க வெனக்கூட்டுக.

௫௰. முருக்கினள்-கொன்ருள். "நிறைமகவுடையவர் நெறிசெலைம்பொறி, குறைமகருறையினுங் கொடுப்பராமுயிர்" அவ்வாறுகவும் இவள் பொறிகள் சிறிதுங்குறையாத பேரழகரெனக்கண்டுந் தயையின்றி வதைத்தனள் என்பார் வழுவறுமைந்தரோரெழுவரையீன்றதாய் முருக்கினள் என்ருர். மகப்பெற்ரோரருமை பெற்ருேரறிவார் என்பார் மகப்பலபயந்த மங்கையரென்ருர்.

௫௧. அனந்தரம்-பின்பு. வயிறுவாய்த்தல்-ஈண்டுக்கருப்பந்தரித்தலென்க. கயகடகரி பெரியமதத்தையுடையயானை அங்கு-அசை.

௫௨. கதுமென-விரைய.விரைதல்முன்போலிப்பிள்ளையையும் வதைசெய்யாமைகருதியென்க. பணிதல் தான்கூறியவுறுதிமொழி யழிதலால் அவள் நீங்காமைக்கென்க. மற்று-அசை. என்றலும்-உம்மீற்றுவினையெச்சம்.

௫௩. வேண்டும்-இதுதேற்றப்பொருட்தொழிறபெயர். ஆல்-அசை. உம்மை-எதிர்மறை. வியங்கோள்கள்வேண்டிக்கோடற்பொருளில் வந்தன.

௫௪. அடுக்கு-வெகுளிபற்றிவந்தது. எவன் என்னும் வினு என்என மரீஇயிற்று.

௫௫. உரைசெய-இதுவொருசொல். கொல், ஆம்-அசைகள். உம்மை-எச்சம்.

௫௬. மதியமுமிதழியுங் கமழுங்கங்கையாள் என்றதனுற் சிவபெருமான் சடைமுடியிலிருப்பவளென்பது கருத்தாயிற்று. முகம்-இடம். தன்னைப்படர்க்கையாகவைத்துக்கூறினளென்க.

௫௭. கலையெனுமிகற்புரவி வீரன்--கலையென்னும் வலியவாகனத்தையுடைய வீரனுகிய வாயுதேவன். கலையிமையவர்-கல்வியறிவினையுடையதேவர். அலைமதியினைமதிக்குமாறு-அலைகின்றஅறிவினை (யிவ்வளவினதென்று)வரையறைசெய்யுமாறு. எதிர்-பிரமனுக்கெதிர். அருங்கலை- அக்கங்கையினரியபுடவை.மானங்காத்தலிற்சிறந்ததென்பார் அருங்கலையென்ருர். இறைஞ்சுவாண்மருங்கலை இமையவர்மதியெனக்கூட்டுக.

இறைஞ்சுவாண்மருங்கு அருங்கலையெனக் கூட்டியுரைப்பினுமாம்.

௫௮. மருத்து-வாயு. காதல்கூருரு - ஆசையைமிகுவிக்கும் அவ்வவயவத்தையென்க. கூர்உரு-பிறவினைவிகுதிதொக்க வினைத்தொகை. தகுமுரிமை-புணருமுரிமை. பெண்பாற்குரிய அவயவங்களிலின்பத்தைத் தருவதிதுவென்பது விளங்கத்திருத்தகுமவயவம் என்றும், காண்டற்கரிய அவயவத்தை யெளிதிற்காணச்செய்தமையான் மருத்தினை மனனுறமகிழ்ந்தென்றுங்கூறினார். உம்மை-இழிவுசிறப்பு.

௫௯. பாக்கியம்-செல்வம். உரும்-இடி. மறையாக்கியமுனிஎன்றதுபசாரம். உருத்தழன்று-ஒருபொருட்பன்மொழி. செங்கோல்செலுத்தி வீடுமனைப்புதல்வனாகப் பெறுமிவனாற்பூமிதேவிக்குமேன்மைகளெல்லாமுளவாமென்பதுபற்றிப் பார்மகள் பாக்கியமென்னவுற்பவிக்க எனக்கூறினானென்க.

௬௰. தந்தை-பிரமன். வழு-தவறு. அவள்செய்ததவறாவது வருணனைத்தானும்பிரியமுற்றுப்பார்த்தல். முற்பிறப்புணர்ச்சியுடையளாயிருக்க என்பான் நினைவொடுகுறுகியென்றும், இகபரசாதனத்தை யடைந்து பயனெய்தற்குரியதென்பான் நன்மானுடமென்றுங்கூறினானென்க.

௬௧. பதம்-பதவி. ஈரம்-அன்பு. உற்கை-விண்மீன். வார்-மிகுதி. சாபத்தாலொளிமழுங்கினாரென்க.

௬௨. எவன் என்னும் வினா என்னைஎனமரீஇயிற்று. பின்னை-இதில் ஐ, சாரியை. தன்னை-தனக்கு உருபுமயக்கம்.

௬௩. உற்று-சேர்ந்து. வாய்மை-வசனம். சற்று-சிறிது. ஒருவன்-பிரபாசனென்னும் வசு. எனையெழுவர்-அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன்.

௬௪. தேனு-காமதேனு. மீனெறிகரந்தென-மீன்சென்றவழி (பிறர்க்குத்தெரியாமல்) மறைந்தாற்போல. மீள-மீண்டு. இதுஎச்சத்திரிபு. மீனெறிகவர்ந்தெனஎன்னும் பாடத்திற்கு மீன்இரைபொருந்திய தூண்டிலைக்கவர்ந்தாற்போல எனப்பொருள்கொண்டு மீனெறிகவர்ந்தெனத்தேனுவைக்கைக்கொளா எனக்கூட்டுக. எறியால்வருந்துன்பத்தையறியாது மீன்கவர்ந்தாற்போல அப்பசுவால்வருந்துன்பத்தையறியாதுகவர்ந்தோமென்பது கருத்தாயிற்று. எறி-தூண்டில்.

௬௫. முசு- குரங்கினுளோர் சாதி. அது போல உரோமம் வளர்ந்து மெய்யிளைத்திருப்பதனான் முசுக்குலமனையமெய்ம்முனிவரென்றாரென்க. வளர்தற்கும்இளைத்தற்குங்காரணந்தவவிரதமென்க.

௬௬. உததி-கடல். பெறுவது-தொழிற்பெயர். உத்தமாங்கமாதலிற்பூஞ்சென்னியென்றார்.

௬௭. புரிந்து-அடைந்து. புரை-ஒத்த. விழைந்த-விரும்பிய. மானுடப்பிறப்பால்வரும்பயனில்லையென்பதுகருத்தாகப்புரிந்துமீளுதிர்என்றும், தெரிவைசொல் விழைந்ததனான் மாதராலெய்துமின்பமில்லை யென்பது கருத்தாக இன்பமற்றென்றுங் கூறினமையுணர்க. மனைவிசொல்விழைந்தவன் அஷ்டவசுக்களிற்பிரபாசனென்றறிக.

௬௮. விழைவு - போகம்; இதுஆகுபெயர். தையலும் என்றதில் உம்மையெச்சம். இறுதியிற்கூறிய வரும் என்பது உவமையுருபுமாம்.

௬௯. வரம்-ஈண்டுச்சாபம். கொண்டு-மூன்றாவதன் சொல்லுருபு. மனை-மனைவி.

௭௰. இறைவனென்றது பிரபாசனென்னும்வசுவை. நெஞ்சுற-பிதாவின்மனத்திற்கிசைய.

௭௧. படாத-அழியாத. எவரும்பூமியிற்பிறந்து பயனடைதல் வேண்டுமாதலால் தவஞ்சாலிருநிலம் என்றார்.

௭௨. சதையமீன்கடவுள்-வருணன். சந்திரகுலம் பல்கியதினாலென்பாள் சசிகுலத்து நல்விதையெனவும், மானுடமகளாயினாளென்பாள் அளிசெறிகுழற்றோகையாயினாளென்றுங் கூறினாள். தோகைமின்-ஆகுபெயர்.

௭௩. இன்ன-அஃறிணைப்பன்மைப் பெயர்.

௭௪. இவன் குருமரபை விளக்கி நெடுநாளிருந்து புண்ணியங்களையீட்டிக் கதியடைவானென்பதனை யறிந்தானாதலால் உயர்சிறப்புடையினையவன் என்றான். இலா, எகலா-ஈறுதொக்கபெயரெச்சம். எமை-உருபுமயக்கம். இறப்பவர்-இறத்தலையடைந்தஅவரென்க.

௭௫. குலத்தவம்-மேலானதவம். மெய்க்குலத்தந்தையாம்விழைவு- மெய்ம்மையுடையகுலத்தில்தாமொருவர்க்குப் பிதாவாயிருக்குங்காமவிச்சை. உம்மை-பின்னதுசிறப்பு. இவனுக்கு எனநான்காவது விரிக்க. பெரி

யோர்செய்யுந்தண்டமுங் கருணையேயாதலால் அருளினால் என்றார்.

௭௬. கழல்-பாதம். பார்-ஆகுபெயர். இல்வாழ்க்கையியையாத இப்புதல்வனுக்குப் பின் குருமரபு குன்றுமே என்றுலகம் வருந்தலைநீக்கவென்பான் பார்களிக்க என்றான்.

௭௭. போய்-விண்ணுலகிற்போய். சமாதிஎன்னுமணிபற்றி அனுபவித்து என்பதற்கு அருந்தி என்றார்.

௭௮. பதம்-பருவம். தன்பிரிவாலவனுக்காம் வருத்தநீங்குமாறும், தன்னன்பினைப்புலப்படுத்துமாறும்தழீஇயினாளென்க.

௭௯. எழுதி-படத்தில் வரைந்து. ஒன்றுபட்டு-மனமொருமித்து. கண்டு-அவள் அவயவங்களைநோக்கி. தலைநாள்-முற்காலத்தில். எண்ணுநாளெல்லை - அவள்குறித்த நாள்வரையும். ஆண்டு-அரசாண்டெனினுமாம். அடுக்கு ஒருதொழில் பலகானிகழ்தற்பொருளில் வந்தது.

௮௰. முன்னொருதினத்தில்-முன்னொருநாட்போல்; இல்ஐந்தாவது. உறைமறையும் மெல்லியல்எனக்கூட்டுக. மெல்லியலையும் என உருபும் உம்மையும் விகாரத்தாற்றொக்கன. உறைமறையும்-நீரிலேமறைந்த. இவ்வாறன்றி மெல்லியல் திரும்பிச்சென்றுறைந்தரகசியமும் எனக்கூறுவாருமுளர். கொண்டால் என்பது கொண்டு எனத்திரிந்துநின்றது.

௮௧. மலையமாருதம்-தென்றல். புளினம்-மணற்குன்று. புளினம்-பறவைக்கூட்டம். எதிர்ப்பட்ட எனற்பாலது எதிர்ப்படுமெனக்காலவழுவமைதியாயிற்று. ஓ-ஐயம்.

௮௨. பேது-மயக்கம். பாதவம்-மரம். முறுகவளைத்தவில்லென்பார் கால்பொரக்குனித்தகார்முகம்என்றார். கால்பொர-இருகாலும்பொருந்தஎன்க. விரிதலை மார்பினுக்கேற்றுக.

௮௩. வயந்தன் - தென்றல். வின்மை-வில்வலிமை. பயந்த-பெற்ற. படி-வடிவம்; சிலப்பதிகாரவுரையிற்காண்க. வீரத்தான் முருகனோ, அழகான் மதனோ, பெருமிதத்தாற்சயந்தனோ என்றயிர்த்தானென்க. எ, ஓ-அசைகள். ஐயப்பொருட்டருங்கொல் என்பதனை மதலைக்குங்கூட்டுக.

௮௪. தழுவுறவளைத்தல்-இருகாலும்பொருந்தவளைத்தலென்க. மோகனம்-மயக்கம். மறை-மந்திரம். தனு-வில். திவலைச்சிந்து-துளியையுடையநீர். எழுதி - ஈண்டழுத்தியென்க.

௮௫. அயர்வு-சோர்வு. சிலைவினோதன்-வில்வித்தையே போதுபோக்கும் விளையாட்டாகவுடையவனென்க. ஓதம்-பெருக்கு. சூடகம்-வளையல். மற்று-அசை. சிலை,திரை-ஆகுபெயர். பால்விரவிச்சிறப்பினால்வினோதனுந்தானுமெடுத்தாள் எனவொருமுடிபேற்றது. வெண்மையாகிய கங்கையினின்று புதல்வனொடெழுந்து சென்றமையாற் பாற்கடலின்மதியுடனுதித்த இலக்குமிபோலென்றாரென்க.

௮௬. கழல்-வீரக்கழல். பொழிவது-தொழிற்பெயர். அடுக்கு-பன்மைபற்றிவந்தது. “மீளநின்கைப்படுத்துவல்” எனமுன்னர்க்கூறியபடிதானாடிய கருமம் பிதாவேதன்னிடந்தேடி வந்தமையால் எளிதின்முடிந்ததென்பாள் நாடியகருமம் வாய்த்ததுஎன்றாளென்க. நாடியகருமம்வாய்த்தது என்பதனைச்சந்தனுவுக்கேற்றிப்பொருள்கூறலுமாம்.

௮௭. மழுப்படையோன்-பரசுராமன். மறை-மந்திரம். சிலை, படை-ஆகுபெயராய் அவற்றின்றொழில்களை யுணர்த்தின. ஏ-தேற்றம். மிகுதிபற்றிவெள்ளமென்றார்.

௮௮. ஓரடிக்கோரடிபுரிந்து-(பிரிவாற்றாமையால்) அடிக்குமேலடிவைத்தல்செய்து. தசைவுற-தளர்ச்சியுற. மயில்-ஆகுபெயர். தகவு-தக எனநின்றது. கல்வி, வீரமுதலியவுடைய புதல்வனைப் பெறுதலான் மகிழ்ச்சியும், வாழ்வும்,மெய்வலியுமிகப் பெறுந்தவ நீ செய்தனை யென்றாள். ஓரடிக்கோரடிபுரிந்து என்பதற்கு அடிக்குமேலடிவைக்குந்தோறுஞ்சொல்லியெனப்பொருள்கூறுவாருமுளர்.

௮௯. கேள்வி-கல்வி. தணப்ப-நீங்க. புரம்-நகரத்திலுள்ளார்; இது ஆகுபெயர். ஏகாரம்-தேற்றம். நிறைந்ததண்ணளியனையிருத்தலாலே தந்தைக்கு மதியையும், பண்டிதனையிருத்தலாலே புதல்வனுக்குப் புதனையுமுவமை கூறினாரென்க.

௯௰. பாரம்-கரை. காற்றெனக்கூற்றெனநடந்து-வேகத்தால்வாயுவெனவும்,கொலையால் யமனெனவுஞ்சென்று என்க. நாட்டிற்கேதஞ்செய்யும் விலங்குகளைக்கோறல் அரசர்க்கு முறையாதலால் விலங்கினுயிர் கவர்நசையாற்குற்றமின்றென்க.

௯௧. பாசறை-பாடிவீடு. உயிர்க்குமெல்லுயிர்ப்பு-செல்கின்றமெல்லியகாற்று. தாசர்-பரதவர். ஈசன்-ஈண்டுத்தலைவனென்க. ஒல்லென - விரைவுக்குறிப்பு. கொல் - அசை.

கடவுட்பரிமளம்-தெய்வீகமணம்.

௯௨. பக்கமது என்பதில் அது பகுதிப்
பொருள்விகுதி. எச்குற்றத்தால் யாதுவரு
மோவென்றுகருதலால் அஞ்சினளெனவும்,
நாணுடைப்பெண்ணாதலால் ஒதுங்கினெனவும்
கூறினார்.

௯௩. குறிப்பாவது-மணம்பேசு என்பது.
ஓ-ஐயம். பரதவர்பதியை யுடன்படுத்தற்
குரிய மெய்ப்பாட்டைத்தன்கணிகழ்த்தியிரு
த்தினனென்பார் ஓகையோடிருத்தி யென்
றார்.

௯௪. பயந்த-பெற்ற. கொல்-அசை. இ
ருந்தான், பயந்த என்பன இயல்பினவிற
ந்தகாலமாயினவமுவமைதி. மற்று-பிறிது
என்னும்பொருளில் வந்தது.

௯௫. கன்னம்-காது. உன்மதம் - தான்
கொண்ட மயக்கம். முனி-ஈண்டுப்பிரமன்.
ஆகுலம் - வருத்தம். படப்பை-தோட்டம்.

௯௬. ஆதரம்-ஆசை.களிந்தவெற்பளித்த
மங்கை-களிந்தமலைபெற்ற காளிந்திநதி; இவ
ள்சூரியன் புத்திரிநதிவடிவாய்க் களிந்தமலை
யினின்றுவருகின்றவள். சங்கை-ஐயம். பங்
கயானனம்-வடநூன்முடிபு. இவன்முகம்நா
ளொருவண்ணமாய்க் குறைந்ததென்பது வி
ளங்கமுறைமுறை குறையும் பான்மதியை
யுவமை கூறினரென்க.

௯௭. இளவரசு-தேவவிரதன். ஏகாரம்-
தேற்றம். நீட்டம் - தாமிதம். தந்தை யெ
ண்ணத்தை நிறைவேற்றற்குடனே விரைந்
தானென்பார் அக்கணத்தில் என்றார்.

௯௮. வீடுமன்று-நீங்குமக்காலம் சரதம்-
இதுஉண்மை. தாது-சுக்கிலம். மூலத்தழல்-
மூலாக்கினி. இரதம்-இனிமை.சுரதம்-புணர்
ச்சி. ஏகாரம்-தேற்றம். இந்திரியாவத்தை
யெனக்கில்லையென்பது விளங்கத்தாதுவுமூ
லத்தழலுடன்மீதெழுந்தகைத்துஎன்றும், த
ந்தைமனத்தையுவப்பித்தலாகியபுண்ணியத்
தால் என்பது விளங்கத்தந்தைதன்பொருட்
டால் என்றுங்கூறினன்.

௯௯. ஏற்றபேர் - இயைந்தவீடுமனென்
னும் பெயர். நிருபர் வெருவருந்திறலான்
என்பது அரசர் யாவருமடக்கற்கரிய காமத்
தையடக்கியதுகண்டஞ்சத்தக்கமனவலியன்
எனவும், அரசர்யாவருமஞ்சத்தக்கமெய்வலி
யன்எனவுமிருபொருள்கொள்ளநின்றது. பீ
ஷ்மன் என்னும் வடமொழி வீடுமனெனத்
தற்பவமாயிற்று. பீஷ்மன்-பயத்தைச்செய்
பவன்.

௱. காளி-பரிமளகந்திக்கோர்பெயர். மன்
றல்-மணம்.செய்ம்மகிழ்பழனம்-மகிழ்செய்ய
த்தக்கபழனம். குருநிலம்-குருநாடு. பூபதியு
ங்காளியுந்தானுஞ்சேர்ந்தான் இது சிறப்பின
லொருமுடிபேற்றல். பராசரமுனிவரால் வி
யாசமுனிவரைப் பெற்றுளாயினும் பின்பு அ
ப்பராசரமுனிவரருளாற் கன்னியாயினள் ஆ
தலாற் கன்னிகை என்றார்.

௱௧. தாழ்ந்துமோந்துருகி என்னுஞ் சி
னைவினை முதல்வினையோடுமுடிந்தது. உம்
மை-சிறப்பு. பிதாவாகிய யயாதிக்குப் பூரு
வென்பவன் றன்னிளமையைக்கொடுத்துப்
பின்பெற்றுக்காமவின்பத்தைப் பின்னுயினு
மனுபவித்தான்;நீஅங்ஙனங்காமவின்பத்தை
யும் அரசுரிமையையு மனுபவியாதென்று மி
ழந்தாயென்பது போதரக்கோமகனுமுனக்
கெதிரல்லன் என்றானென்க.

௱௨. சதம்-நூறு. முந்துற-அதற்குமுன்
னாக. இவ்வரம் பொய்யாதுபலித்ததென்பத
னை "மாகஞ்சூழுமிரவிவடபாலெய்துமளவு,
நாகங்காணே னென்ன ஞானத்தோடேவை
க" எனப்பத்தாம் போர்ச்சருக்கத்திற் கூறு
மாற்றறிக.

௱௩. கிளி-ஆகுபெயர். ஏகாரங்கள்-தே
ற்றம். வலைஞர்-ஈண்டுப்பரதவர்.

௱௪. கேசரன்-விஞ்சையன். ஆகாயத்தி
ற்சேறலால் விஞ்சையனையுவமைகூறினார்.
கிரிகை-வசுவின் மனைவிபெயர். வீரியம்-சுக்
கிலம். தேசவனளித்த நதி-சூரியன் பெற்ற
யமுனையாகியகாளிந்திநதி. தரளம்-முத்து.
வசுவென்பான் றன்மனைவிமீதுகொண்ட
மோகத்தால் விழுந்த வீரியத்தைஇலைக்கல
த்திட்டு மனைவிக்கீயுமாறு ஒருவல்லூற்றினி
டத்திற் கொடுக்க அது அலகாற்கௌவிக்
கொண்டுபோங்காலையில் ஓர்பறவை அதனை
யிரையென்றுகருதி அதனுடன்போர்செய்ய
அவ்வீரியங்காளிந்தி நதியிற்சிந்தியது என்னு
ங்கதையினைச்சுருக்கித்தேசவனளித்த நதியி
டைச்சிந்தியதென்றார்.

௱௫. முனி-ஈண்டுப்பிரமன். ஈன்-ஈனு
தல்; முதனிலைத் தொழிற்பெயர். யமுனை
யும் யமனுஞ் சூரியன்மகாராகிய சகோதர
ரென்க.

௱௬. மானவர்பதி-நரபதியென்க. காட்
டலும் இது உம்மீற்று வினையெச்சம். குயில்
வேற்றுச் சாதியாகிய காகத்தினிடம்வளர்
ந்து பருவம் வந்துழித்தன்கிளையோடு சேரு
மாறுபோல் இவள் வேற்றுச்சாதியாகிய தன்

னிடம் வளர்ந்து பருவம்வந்துழித்தன்னரசசாதியுடன்கலந்தமையாற்குயிலையுவமை கூறியதென்க.

௱௭. எளியபரதவப்பெண்ணை மணந்தானென்றுகூறுமிழிவில்லையெனமகிழ்ந்தானென்பார் அவைக்கண்ணவன்மொழி கேட்டுவந்தென்றார். மன்றல்-விவாகம்.

௱௮. வாளி - மண்டலமாயோடல். மீளி-வலியுடையவனாகியசந்தனு. விடையன்-சிவன், வருணன். காளி-காளியென்னும் பெயரையுடைய பரிமளகந்தி, கருநிறமுடையவுமாதேவி. வேய்-மூங்கில். சந்தனுஇடபக்குறியுடைய வருணனவதாரமாயிருத்தலால் விடையவனென்றார். இச்செய்யுள்சிலேடையயணி.

௱௯. எங்கை-என்றங்கை. யமுனையின்பால் வருமங்கை-யமுனாநதியிற்பிறந்த பரிமளகந்தி.

௱௰. சந்தனுவுக்கு வண்டும் பரிமளகந்திக்குப் பூவிதழும் போகத்துக்குத்தேனுமுவமையாகக்கொள்க.

௱௰௧. கன்னபூரம்-காதுமுற்றும். ஓரிடத்திற் பிறத்தலினாலும், இருளைநீக்கியொளியையாக்கி உலகையளித்தலினாலும் அருக்கனுந்திங்களுமுவமையாகக்கூறினார். கொண்டால் என்பது கொண்டு எனத்திரிந்து நின்றது.

௱௰௨. தம்முன்-தங்கள்தமையனாகிய வீடுமன். இளையவனாற்குருகுலம்விளக்கமடைந்தமைபற்றி அவர்கு விசேடணங்கொடுத்துக் கூறினாரென்க.

௱௰௩. எம்பி-என்தம்பியாகிய சித்திராங்கதன். அனந்தரம்-பின்பு. விதி அவன்சாபத்தைநீக்கிப்பூருவநிலையிற் சேர்த்தமைபற்றி நண்பினால் என்றார். விதியேற்றினான் என்பதிலக்கணை.

௱௰௪. கண்-இடம். நாமம்-சித்திராங்கதனென்னும்பெயர். மலைந்து-பொருது. போர்த்தொழில்வல்ல கையென்பார்அங்கை என்றார். வீடுமற்கஞ்சிக்கந்தருவராசன் வந்தான் என்பது விளங்கக்கங்குல்வந்தென்றார்.

௱௰௫. விம்முதல்-ஏங்குதல். துனி-துன்பம். தெம்முன்-பகைமுனையில். எம்முன்னிறந்தாற்காண்டன் முதலியவற்றாற்சிறிதுகவலையொழியுமே அதுவுமில்லையே என்பாள்எம்முனன்றி யென்றாள்.

௱௰௬. முதலிரண்டடிக்கு-ஞானப்பொருளானபரம்பொருளினது சந்நிதியில்(பிரபஞ்சந்) தொழிற்படுமுபாயம்போல் என்க, பிரபஞ்சமென்பது அவாய்நிலையாக வருவித்துரைக்க. குவ்வுருபை அதுவுருபாக்குக. எதிர்-சந்நிதி.உபாயமது என்பதில்அதுபகுதிப்பொருள்விகுதி. வாய்மை-வாக்கு.

௱௰௭. சேர்வது (எங்களினியமம்) எனவருவித்துரைக்க. சேர்வது-தொழிற்பெயர். மாசிறுல்குலமன்னவர் என்றதனால் அன்னாராகாரேல் இழிக்கப்படுவரென்பது கருத்தாயிற்று.

௱௰௮. வரித்தமன்னர்-(கன்னியர்) நியமித்தவரசர். மறம்-வீரம். திரித்தும்-மாறுபடுத்தியாயினும். இதிலும்மை எதிர்மறை.

௱௰௯. அரவம்-ஓசை. ஊதை-காற்று. உம்மை-சிறப்பு.

௱௨௰. சராசனம்-வில். மஞ்சம்-என்பதீண்டுஉயர்ந்த ஆசனத்திலேறுதற்கு அதின்கீழ்ப்படியாயிடப்பட்டதென்க.

௱௨௧. குருத்தலம்-குருநாடு. வஞ்சினம்-விரதமாகியசபதம்; அது-௯௮-ஆங்கவியிற்காண்க. விருத்தன் - முற்கூறியவிரதத்திற்கு ஒவ்வாதவனாய் எனமுற்றெச்சமாக்குக. கிழவன்எனப்பொருள்கொள்ளற்க.

௱௨௨. செவிலியர்-வளர்த்ததாயர். முருந்தவாணகை - மயிலினிறகடிக்குருத்துப்போன்றஒளியையுடைய பற்கள். அரசகன்னியரை யவைக்கழைத்துச்சென்று சுயம்வரத்திற்குவந்தஅரசர் வரலாற்றை அவர்க்குக்கூறல் செவிலியர்க்குமரபென்க.

௱௨௩. வெய்ய-விரும்பிய. வையமன்னன்-வீடுமன். வயநிலை-வீரநிலை. இவன் என்றது அக்கன்னியர்தனித்தனி விரும்பியஒவ்வொருவரைக்குறித்தது. தம்மை வலாற்காரமாகக்கொண்டு போங்குறிப்பினனாகிநின்ற வீடுமன் வீரநிலையைக்கண்டு நாம்விரும்பிய அரசர்க்குமாலை சூட்டினால் வீடுமனால் எத்தீங்குறிகழுமோ வென்று ஐயமுற்றாரென்க.

௱௨௪. இவரை-இப்பெண்மூவரையும். சந்தனம்-தேர். சோனை-விடாமழைபோல். அஞ்சாது சென்றானென்பார் கடதடயானையெனவேகினானென்றார். தடம்-பெருமை.

௱௨௫. மொய்ம்பு-வலி. கோக்குலம்-அரசர்கூட்டம். ஏற்ற-எதிர்த்தன. குலம் என்பதற்கியைய ஏற்றஎன அஃறிணைவினைகொடுத்தார். எற்றஎன்னும் பாடத்திற்குப்போர் செய்தெதிர்க்க என்க. பிறைமுகக்கணை-பிறைவாயம்பு. முறையாவது கன்னியர்வரித்தமாலைசூட்டல். இவ்வீடுமனோ டொத்தவ

விமுதலியனவுடைமையால்ஒருகுறையுமின் றென்பார் எக்குறையினுமென்றார்.

௱௨௬. ஆடமர்விந்தை-வெற்றியையுடையயுத்தத்தில் தம்மிடத்திலிருக்கும் வீரலக்குமி. உம்மை-எச்சம்.

௱௨௭. அமர-விரும்ப. சமரின்முந்திய-யுத்தத்திற்குமுற்பட்ட.

௱௨௮. பதி-நாயகன். தனஞ்சயன்- அக்கினி. வம்பு-புதுமை. ஏ-தேற்றம்.

௱௨௯. இகப்ப-நீக்கிவிட. மன்றல் -முன்னது விவாகம் பின்னது வாசனை. கற்பால்வந்தவளைக்கடிதலிற்றீமதிச் சாலுவன்என்றார்.

௱௩௰. கடிமணம்-மீமிசைச்சொல்; புதியமணமெனினுமாம். கூர்-மிகுதி. சங்கை- ஐயம். இருவருநீக்கினமையால்இனிமணமுடியுமோ என ஐயமுடையளாயினளென்பார் சங்கையோடென்றார்.

௱௩௧. கோதையால்-சூட்டுகின்றமாலையால். கைதரல்-கைகொடுத்தல்; அதுமணஞ்செய்தலையுணர்த்திற்று. பின்னையும்-இதில்ஐ சாரியை. உம்மை-எச்சம். தூது உயர்திணைப்பொருளையுணர்த்திய அஃறிணைச்சொல்.

௱௩௨. மீனகேதனன்- மன்மதன். அவனைவென்றானனவே காமவிகாரமின்றி என்பது கருத்து. ஏகாரம்-தேற்றம். வீடுமென்மணத்தைவிரும்பலால் ஆதரவும், அதுகைகூடாமையால் அருலுமாயினவென்க.

௱௩௩. குருவாதலாற் பரசுராமனருண்மொழிமறான் என்றான். விளம்புமேல்-எனிற்றுவினை யெச்சம். எனது கைகள் என்பது போல் அவனதிருபதம் எனவந்தது.

௱௩௪. சதுரந்தயானம்-சிவிகை. யமதங்கிமைந்தன் -சமதக்கினிமுனிவன் புதல்வனாகிய பரசுராமமுனி. கூறிய என்பதனைப்பெயரெச்ச மாக்காது வினையெச்ச மாக்கி ௧௩௨-ஆஞ்செய்யுளில் (அருளினால்) என்பதற்கு முடிக்குஞ்சொல்லாக்குக. "எட்டேயவ்வ்" என்பதனால், ஜமதங்கி யமதங்கிஎன்றாயிற்று. பரசுராமனகர் - மகேந்திர மலைச்சார்பிலுள்ள தென்பர்.

௱௩௫. கடை-வாயில். ஆசினால் - விரைவொடு. தன்சொல்லை மறானெனத்துணிந்து கூறினானென்பார் யாமுடிக்குவமிதென்று மெய்ம்மையொடு பேசினான் என்றார்.

௱௩௬. சரதம்-உண்மை. மேவலும்-உம்மீற்று வினையெச்சம்.

௱௩௭. வின்மை - வில்வித்தையென்க. இருந்தவாவென - இருந்தவாறு (என்னை) யென்று சொல்லி;று விகாரமாயிற்று. பெரியகரிய கண்ணி இதில்ஈரடைசினையை விசேடித்தல். ஆருகவென்னும்வியங்கோளீற்றின் அகாரந்தொக்கது.

௱௩௮. இரதமணம் - புணர்ச்சிக்குரிய விவாகம். இரதம்-இனிமையுமாம். உம்மையும், ஓகாரமும் எதிர்மறையில் வந்தன.

௱௩௯. அநுராகம்-ஆசை. மாதர்-அழகு. குருவே தெய்வமெனக்கொள்வது முறையாதலாற் கடவுளுன்னையன்றி யிலையுண்மையே என்றான்.

௱௪௰. வீரியன் - கார்த்தவீரியனென்னுமரசன். அனந்தரம்-பின்பு. யாமுடிக்குவமெனக்கூறிய வுறுதிமொழி யழிந்ததென வஞ்சி வெளுத்தானென்பார் வெளுத்த மேனியன் என்றார். வீரியன்-முதற்குறை. கார்த்தவீரியன்றன்பிதாவைக்கொன்றதனாலவனைப்பரசுராமன் கொன்றானென்பது கதை.

௱௪௧. வெருவு-அச்சம். குருவினாலிறத்தன்மேலாய வறமென்பான் குருவுடன்பொருதுமடிதனன்று என்றான். தாலம்- பனை. அமைந்து - அலங்காரமமைக்கப்பட்டு. வீழவும் இதிலும்மை சிறப்பு. உறுவதில் இதில் இல் ஐந்தாவது நீக்கப்பொருட்டு.

௱௪௨. அவ்விராமன்-அந்தத்தசரதராமன். இவனை-இப்பரசுராமனை. பகற்போலப்புண்ணியகாலமன்றாதலால் வெவ்விராவென்றார். அஞ்சி-என்பதற்கு ஆசாரியன் என்னுமரியாதையால் அஞ்சி என்க. தசரதராமன்பரசுராமனைச்செயித்தகதை இராமாயணம் பாலகாண்டத்திலறிக.

௱௪௩. நவ்வி-உவமையாகுபெயர். அமையும்-(மணஞ்செய்தல்) போதும். அடுக்கு ஒரு தொழில்பலகானிகழ்தற்பொருட்டு.

௱௪௪. விகங்கராசன்-கருடன். வம்பு மூன்றும்முறையேகச்சு,வாசனை,புதுமையென்க. தும்பை-பொருதற்குரிய மாலையென்க.

௱௪௫. அமை-மூங்கில். இயக்கி-தருமதேவதை, காளியென்பர். வானுளோர்நாள்பன்னிரண்டும் பூவுள்ளோர்க்குப்பன்னிரு வருடமென்க.

௱௪௬. களங்கமே முயல்வடிவாகத்தோன்றலால் முயல்ஆகுபெயரென்க. முயலிலாமதி, புயலிலாதமினல் என்பன இல்பொருளுவமை. சிகண்டி- அலி. வயினிடை- இடத்தில். செயலில் என்றதனால் வடிவாலொப்பிலாமையறிக. யாகசேனன் வரலாறு பின்னர்க்காண்க.

௱௪௭. நிருபன்-என்றது விசித்திரவீரியனை. பெரும்பிணி-பெருவியாதி. நணித்து-சு

ருங்கியது. பற்றிலாதநெறிபற்றிஞனென்பதற்குமுத்தியடைந்தான் என்பதுகருத்தாயிற்று; இதுவுமுபாசாரமென்க. பிணித்து- பிணிக்கப்பட்டு;செயப்பாட்டுவினை விகுதிதொக்கது.

சம்பவச் சருக்கம்.

க. அலகை-(பூதனையென்னும்)பேய். பரிவு-அன்பு. உருகுதல்-மனங்கசிதல். முருகு-இளமை. பாலுண்ணுதலை வியாசமாக வைத்து அவளுயிரை யுண்டானென்பார் முலைப்பாலுட னவளுயிருண்டென்றார்.

உ. தென்புலத்தவர்-பிதிரர். உலகியல்-ஈண்டு அபரக்கிரியை. யாமினி-இரா. மன்-ஈண்டுவீடுமன். மற்று-அசை.

ந. மரபரும்பனிப்பகைச் சிரத்தெழிலியொத்தது-மரபு எழிலிச்சிரத்தரும் பனிப்பகையொத்ததுஎன வியைத்து மரபானது(புதல்வரின்மையால்)முகிலின்மேல் அதனன் மறைக்கப்பட்டொளி மழுங்கி யிருந்த சூரியனை யொத்தது என்க. மரபரும் பனியச்சிரத்தெழிலி யொத்தது என்னும் பாடத்திற்கு-மரபானது அரியகுளிர்ச்சியை யுடைய முன்பனிக்காலத்துமேகத்தையொத்ததுஎன்க. அச்சிரம் என்பது முன்பனி; சிலப்பதிகாரம் ஊர் காண்காதையில், ா௫ - ஆம் அடியிற்காண்க. உணர்கிற்றி-முன்னிலைவினைமுற்று;கில்-ஆற்றலிடைநிலை.

ச. தேவாநீதியில்- கணவனுடன்பிறந்தவனுக்குரிய வொழுங்கினல். தேவான்-கணவனுடன் பிறந்தவன். மூண்டுவானுருமெறிந்த-முகிலினிடி கிளர்ந்துதாக்கிய. முரிந்து-நிலைகுலைந்து. கடையடிக்கு-பெரியநதியானது திரும்பித் தோன்றியதன்னிடத்திற்சென்றால் என்னுடைய விரதமுந்தவறுமென்றான்; எனவே நதி தானொழுகியநெறியன்றித்தோன்றியவிடத்துச்செல்லாது,அதுபோலத்தூறவற நெறியிலொழுகுமென்விரதமுங்கெடாது என்பது கருத்தாயிற்று. வயின்-இடம். மிசை-எழனுருபு.இவ்வாறன்றி மீண்டும் மாநதிவயின்மிசைப்புரியின் எனப்பிரித்து நான் திரும்பவும் பெரியகங்கைவயிற்றிலவதரிக்கில் எனக்கூறுவாருமுளர்.இப்பொருட்குவயின்-வயிறு. ஆல்- அசை. விரதமும் என்றதில் உம்மை-சிறப்பு.

ரு. மனுகுலமென்றது-சூரியகுலத்தரசர்களை. ஏகாரம்-தேற்றம். உம்மை- எச்சம். காமவின்பங்கருதாது நூல் விதிப்படி முனிவரைப்புணர்ந்தமையாற் பழுதின்மங்கையரென்றான்.

சு. பரிதிதந்தமாநதி-சூரியன்பெற்றகரியகாளிந்திநதி.புலவு-புலான்மணம்;ஆகுபெயர். சுருதிவாய்மையில் - வேதம்போலத்தவறில்லாதவாக்கினல். மறைத்து-சூரியனை மறைத்து;எனவே பகலையிராப்போலாக்கியென்க. வண்டுறைக்குறை- அழகியஆற்றிடைக்குறையில். பராசரமுனிவர்உலகிற்குநன்மைசெய்யுமோர் புதல்வனைப்பெறுதற்குத்தாங்குறித்த முகூர்த்தகாலஞ்சமீபித்தமையான் மச்சகந்தியைக்கண்டு அவளைப்பரிமளகந்தியாக்கி விபூதியைத்தூவிச் சூரியனைப்பனியினன் மறைத்துப் பகலையிரவுபோலாக்கிப் புணர்ந்தாரென்னுங்கதையினைச்சுருக்கிக் கூறியவாறுணர்க.

எ. முரண்-வலி. கேள்வி- கல்வி. முஞ்சி-ஆகுபெயராய் முஞ்சிப்புற்கயிற்றையுணர்த்தியது; இதுபிரமசாரிகள் அரையிற்கட்டுவது. தபோதனமுனி- தவச்செல்வனுகிய முனிவன். அரணி-தீக்கடைகோல். எளியவென்னிடத்தில் உயர்முனியவதரித்தானென்பதும், சேர்ந்தவப்பொழுதே யுதித்தா னென்பதும் விளங்க அரணியின்புறத்தனலென வென்வயினவதரித்தனன் என்றுங் கூறினள். அம்மா-வியப்பிடைச்சொல்;அசையெனினுமாம்.

அ. உறுவல்-உறுவேன். முனி-பராசரமுனி. கையறுதல்-ஈண்டுச்சாதலையுணர்த்தியது.

கூ. எவனும்-இதில்உம்மைசிறப்பு. கொல் ஐயம். ஓ-அசை.

௰. விழுது சடைக்குவமானமென்க-மீள-அப்பழுதுநீங்க. உய்த்திடல்-செலுத்தல்; ஆக்கினைசக்கரஞ்செலுத்தலென்க. குறைநேர்ந்தான்- குறையைநீக்கவுடன்பட்டான் என இடையேசொற்பெய்துரைக்க.

௰க. உழை-இடம். தழைத்தநெஞ்சினள் பரிமளகந்தி யென்க. அனந்தரம்- பின்பு. இழைத்த-செய்த.

௰உ. கனை-மிகுதி. ஒல்க-சுருங்க. பொழுது-உரியகாலம்என்க. நூல்விதிப்படி புதல்வரின்பொருட்டுப் பிறரைப்புணரினுங் கணவனைநினையாவிடிற் பாவமுண்டென அவனைநினைந்தனர் என்பார் கணவனைமறவாது நினையுநெஞ்சினர்என்றார். மரவுரிமுதலியனவணிந்து உண்டிமுதலியனவெறுத்தலால் புன்ம

ணாநிரைந்தொளிகுறைந்தொல்கப்புனையுமெய் என்றார். பொழுதொடும் என்றதில் ஒடு வேறுவினையுடனிகழ்ச்சியில்வந்தது.

௰௩. நினைவொடு - புதல்வற்பேறுகருதிய எண்ணத்தோடு. காமவின்பங்கருதினனல்லன் என்பார் நிராசைநெஞ்சினன் என்றார். மெய்க்குறி-கண்மூடியிருத்தல் முதலியசரீரத்தின் குறிஎன்க. கராசலம்-யானை; வடநூன் முடிபு. குஞ்சரம் என்றதற்கியைய அதற்கு என்றார்.

௰௪. தூளம் - விபூதி. சுதன் - பிள்ளை. நாளபங்கயப்பதி - தண்டையுடைய தாமரைக்கு நாயகனாகிய சூரியன். கவிகை - குடை. ஆள-அகர வீற்றுவியங்கோள். சூரியன் இருளை நீக்கி ஒளியைச் செய்யுமாறு போல இவனும் பகையை நீக்கிப் புகழை யாக்குவானாயிருத்தல் வேண்டுமென்பாள்பங்கயப்பதியென வென்றாள். தோன்றல்- அண்மைவிளி.

௰௫. துகிர் - பவளம். வெரீஇ - அஞ்சி. விளர்த்திட்டாள் - வெளுத்தாள். உலகிற்கு நன்மை செய்யும் புதல்வற்பேற்றாலுண்டாம் புகழுங்கதியுமாகிய பயன்களுள் ஒன்றையுமென்க.

௰௬. தபோநிதி-தவச்செல்வனாகிய வியாதமுனி. இருந்தவாறு-நிகழ்ந்த படியை. இமையவன் - தேவன். இமையவனெனவுரைத்து எனக்கூட்டித் திரிகாலவுணர்வுடைய தேவனைப்போலக்கூறினனெனப்பொருள் கூறலுமாம். மருட்சி-ஈண்டுஅச்சம். விளர்த்திடும் - வெளுத்திருப்பான்.

௰௭. பாண்டு - வெள்ளைநிறம்; ஆகுபெயராயதனையுடையானையுணர்த்திற்று. பொழுதுற்றுச்சாதரராயினர் - (பிறத்தற்குரிய) காலத்தைப்பொருந்திப்பிறந்தார்கள்.

௰௮. சிந்தனையுறச் சொல்ல- தன்னெண்ணத்தை அம்முனிவன்மனத்திலமையும்படி சொல்ல; எண்ணமாவது பிறந்த பிள்ளைகளிருவருமுடற்குற்றமுடையரா யிருத்தலால் அரசாளுதற்குச்சிறப்பிலராயினார்; இனியக்குற்றமிலாதபிள்ளைவேண்டுமென்பதாம். முன்னர் நாணுமச்சத்தாலுங்கண்மூடினமையாற் பின்னுமவ்விரண்டாலுந்தோழியொருத்தியைப்பூவணையணைவித்தாள் என்பார் நாணலந்திகழம்பிகையென்றும், அஞ்சியென்றுங் கூறினார்.

௰௯. அநங்கநூன்மரபு-மதனநூன்முறை. சந்தனாகரு- ஆகுபெயராக்கிச்சந்தனமுமகிலுமாகிய குழம்பென்க. தனதடம்-முலைத்தடம்.

மிகச்சிறந்த போகமென்பார். இந்திராதிபர் போகமென்றார்.

௨௰. தருமன்-யமன். விதுரன்- அறிந்தவன்என்பர். வனநெறி-காட்டுவழி. பெயரென்றதன்பின் கூறுகளென்பதனை அவாய்நிலையாகவருவித்துரைக்க. மாண்டவியமுனிவர் சாளுவராசனாற்றிருடனென மதித்துக் கழுவிலிடப்பட்டு, பின் அவ்வரசன் வேண்ட அவனை வெகுளாது யமனிடத்திற்போய் எனக்கித்துயர்வந்ததற்குக்காரணம் என்னையென அவன் குழந்தைப்பருவத்தில்நீ, தும்பிகளைப்பிடித்து முள்ளாற் குத்திக்கொன்றமையினாலித்துயர் வந்ததென்று கூற அம்முனிவர் வெகுண்டு அறியாப்பருவத்திற்செய்த குற்றத்தாலென்னைத்தண்டித்தமையால் நீ, இழிந்தவள்வயிற்றில் பிறக்கக்கடவையென்று சபித்தனர்; அதனால்யமன் விதுரனாய்த்தாதிவயிற்றிற்பிறந்தான் என்னுங்கதையுண்மையறிக. கந்தருவராசனாகிய மீசன் திருதராட்டிரனாகவும், இயக்கராசனாகிய குபேரன் பாண்டுவாகவும்பிறந்தார்கள் என்பதுகதை. திருதராட்டிரன் என்பதற்குத் தேசத்தைத்தாங்குபவன் என்பது பொருள்.

௨௧. குவடு-சிகரம். படை, களிறு, தேர், புரவி இவை ஆகுபெயராய் அவற்றின் றொழிலையுணர்த்தின. திண்மையுந்தோற்றமுமுடைமையாற்குருகுலத்தைப்பெருங்கிரியென்றும் மலையைச்சிறப்பிக்குங் குவடுபோல இம்மூவரும், குருகுலத்தைச்சிறப்பித்தார் என்பார் இலங்குமுக்குவடென்ன என்றுங்கூறினார்.

௨௨. திக்கு-ஆகுபெயர். மகன்றனை - மகனுக்கு. ஏ-தேற்றம்.

௨௩. காந்தாரபதியின் பெயர் சுபலன். வடமீனெனத்தகுங்கற்பாளாதலால் விழியிலாமையன்றிநற்குணங்களெல்லாமுண்மையால் விதியளித்ததென்றுளமகிழ்ந்தனளென்றார். இவள்பெயர் காந்தாரி.

௨௪. சமைத்தபட்டம்- உண்டாக்கிய புடவை. தனையோர்-சகுனிமுதலாயபுத்திரர். நாயகன்போலக்கட்புலனால் வருமின்பத்தைத்தானுமனுபவியாதிருத்தல் வேண்டிப்பட்டத்தாற்கண்களை மறைத்தாளென்க. பெதும்பை-ஈண்டுபருவத்தைக்குறித்தது.

௨௫. குந்திபோசர்-யாதவகுலவரசர். பிரதை-பிரசித்தியுடையவள். நிகரென்ன என்பதனைக்கலைமகண்முதலியவற்றோடுங்கூட்டுக; இது எதுவமையணி.

உசு. மடம் - அழகு. மூந்த - மூதன்மை பெற. மூந்து அம்மாதவம் எனப்பிரித்துரைக்கினுமாம். வழி-இடம்.

உஎ. துறைவரிவண்டலாடல் - நீர்த்துறையில் வரிபொருந்திய வண்டலாகிய மணலில் விளையாடல். ஒருங்குவிடாமல் ஒவ்வொன்று மறந்தனளென்பார் தனித்தனி மறந்திட்டாள் என்றார். திரையெடுத்து வீசலாற் சங்குகள் நிலாமுற்றத்திற் றவழ்ந்தனவென்க.

உஅ. தொழுது - (வண்ணஞ் செய்மாதர்) வணங்கி. முதுக்குறைந்து-அறிவின் முதிர்ந்து. ஒன்று என்பது ஒரு நாளை யுணர்த்திற்று. கோபத்தாற்றவம் வளரும் வரமுடையன் என்பார் கோபமே மிக மிகுமுனிவரன் என்றார்; அதனைப்பின் றுருவாசமுனிச் சருக்கம் முதற்செய்யுளிற் காண்க எ-தேற்றம்.

உகூ. மறை - மந்திரம். அடுக்கள் பன்மை பற்றிவந்தன. மந்திரமொன்றே என்பது கிருட்டிணன் றூதுச்சருக்கம் (உாஉய) உாசகூ ஆஞ்செய்யுளிற் காண்க.

ஙய. மானதம், மந்தம், உரை என்னுமூன்றனுள் மானதத்தாற் செபித்தாளென்பார் மனத்தொடுபயின்றன என்றும், தேவரைச்சேரும்படி துருவாசமுனியருள்பெற்றமையின் அரமகளெனவென்றுங்கூறினார். தெளிவுபற்றியெய்தியது என இறந்தகாலமாகக்கூறினார்.

ஙக. இமிர்-ஒலிக்கின்ற. சுதை-சுண்ணச்சாந்து. காண்பான்-பானீற்றுவினையெச்சம். பூவிற்றேனைக்கொள்ள வண்டுவருமாறுபோலப்பானுவுமிவள்போகத்தைக்கொள்ள வந்தானென்க.

ஙஉ. ஆரம்-பதக்கம். அங்கதம்-வாகுவலயம். வம்பு-வாசனை. பதுமினி-முதற்சாதிப்பெண். பதுமினியென (நின்று) எனவருவித்துரைக்க. சூரியன்வந்தமையால் இம்மந்திரசித்தியாற்றன் முகமலர்தலால் ஆனனமலர்வுறஎன்றார். அணைத்ததனைன் முகமலர்ந்திலள்என்பதனை வருங்கவியிலறிக.

ஙங. அறிகிற்றி-அறிவாய். இதையமும் இதிலும்மைஎச்சத்தொடுசிறப்பு. அடுக்கு அச்சத்தின்கண்வந்தது.

ஙச. உரு-அழகு. சாயை - சாயாதேவி. உழை-உஷாதேவி; இவர்சூரியன்மனைவிகள். வெருக்கொளா-அஞ்சி. தப்பாதுபலிக்குமந்திரமாதலால் மெய்ம்மறையென்றான்.

ஙரு. அதிதி-தேவர்களைப்பெற்றவள், சூரியனுக்குந்தாயென்றறிக. அஞ்சல்-எதிர்மறைவினைமுற்று. ஆல்-ஈண்டு உடனிகழ்ச்சியில்வந்தது. மைந்தன்றனையும் என்னுமும்மைவிகாரத்தாற்றொக்கது. மற்று-அசை.

ஙசு. முகம்-வாயில். இரந்து-யாசித்து. மதர்விழிப்புரிவு-மதர்த்தகண்ணின் குறிப்பாலாகும்விருப்பு. மூரல்-நகை. வேய்-மூங்கில். பாயிரம்-வரலாறு. ஐயுற-சூரியன்சந்தேகிக்க. புணர்ச்சிக்குடன்பட்டமைதோன்றவிழிப்புரிவுமூரலுநல்கிஎன்றார்.

ஙஎ. தனக்குரியவெப்பத்தொடுபுணரிற்சகிக்கமாட்டாளென்று தன்மேனியைக்குளிரச்செய்தானென்பார் சுடர்வடிவமும்அமிர்தெழுதிங்களின்வடிவாகஎன்றார் ஆகஎன்பதில்ஆதல்ஒப்புப்பொருட்டு. "ஆள்வாரிலிமாடாவேனோ" எனத்திருவாசகத்திற்கூறியதனாலறிக.

ஙஅ. அந்தியாரழலெனப்பரிதியினொளியடைந்தபின் - மாலைக்காலத்திற் சூரியனொளியைவாங்கிவிளங்கும் அக்கினியைப்போல (இவள்) சூரியனைப்புணர்ந்து அவனொளியைக்கொண்டபின்பு. அஸ்தமயமானகாலத்திற் சூரியன்றன்னொளியை அக்கினிக்குக்கொடுத்து உதையகாலத்தில் வாங்கிக்கொள்வன் என்பதுநூல்வழக்கு. சூரனுக்குகுந்திபோசன்என்பது குடியால்வருபெயர். இரந்தனவினையாலணையும்பெயர்.

ஙகூ. வாரமகன்எனவியைக்க. வாரம்-அன்பு. பாரம்-உயர்ச்சி. பழுது-ஈண்டுவசை. பூரம்-நிறைவு. கேடுறுவண்ணம்பொதிதலால்நனிபொதிந்துஎன்றார். நதி-கங்கை. பேடகம்- கூடு. வருங்கவியிற்பஞ்சரமென்றதனாலுங்காண்க. பெட்டகம் என்பாருமுளர்.

சய. கோளரிச்சாபம்எனமாற்றிச்சிங்கக்குட்டிஎன்க. அஞ்சரத்திரை-அழகியநடையையுடையதிரை. சஞ்சரத்திரைஎன்னும் பாடத்திற்கு உலாவுதலையுடைய அலையென்க. சூதநாயகன்-தேர்ப்பாகர்களுக்கதிபதி. தாலாட்டு ஈண்டுத்திரையொலியைக்குறித்தது. அடுக்கு ஒருதொழில் பலகாநிகழ்தல்பற்றிவந்தது.

சக. கோடகப்பட-கரைதன்னுட்பட. தினபதி-சூரியன். சூடகம்-வளையல். சூதபுங்கவன்-சூதநாயகன். இராதை-அவன்மனைவி பெயர். ஆடகக்குலம்-பொற்குவை. அரும்பெறலாதரம்-பெருதற்கரியவிருப்பம். புத்திரப்பேறில்லார்க்கு வலியவந்துவாய்த்தலால்ஆடகக்குலமடைந்ததொத்துஎன்றார். கோடும்என்னுஞ்சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

சஉ. அதிரதத்தைச்செலுத்தும் பாகனு
யிருக்குமுரிமையால்இவனை அதிரதன்என்று
ர்; அதிரதம்-நால்வகையிரதங்களிலொன்று.
கற்றை-தொகுதி. மதி-ஈண்டுப்பிறையென்
க; அஃது, "இருகோட்டொருமதியெழில்
பெறமிலச்சினை" எனப்பிறருங்கூறுமாறுகா
ண்க. படைகளும்என்னும்உம்மைமுற்றுப்
பொருளன்றி எச்சப்பொருளுந் தருதலால்
எனைக்கலைகளையுங்கொள்க. கவின்-அழகு.

சங. முகவோலை-திருமுகமாகியவோலை.
வரிக்கும்-(நம்மை) நியமிப்பாள். சென்னற்
படைவேல்-சென்னலென்னுந் தேன்கெண்
டைமீனையொத்தவேற்படை. செல்லுகின்
றநல்லபடைவேல் என்பதுசிறப்பின்று. செ
ன்னற்படிவேல்என்னும்பாடத்திற்குப்,படி-
ஒப்பு. புறநானூறு-உஅஎ-ஆம் பாட்டிற்கெ
ண்டையின்வேல் எனக்கூறல்காண்க.

சச. உருவம்-அழகு. உதிக்குமேனும்
இது உம்மீற்றுவினையெச்சம். மலருமாஎன்ப
தில், று கடைக்குறை.

சரு. அமுதம்போலஎனைமாதரினும் இ
வள் சிறந்திருத்தலாலமுதினையுவமை கூறி
னர். மத்திரம்-ஓர்தேயம்.

சசா. கண்ணுற்ற-இடமகன்ற. சாரல்-ம
லைப்பக்கம். இமையச்சாரற்புறம்எனமாற்று
க. புறம்-எழனுருபு.

சஎ. காட்சியாமா-அழகுடையகாட்டுப்
பசு. கற்கியாமாவென்னும் பாடத்திற்குக் க
ற்கி-குதிரை. ஏனம் - பன்றி. எண்கு-கரடி.
பகடு-யானை. சனம்-கூட்டம். மானச்சரம்-வ
லியபாணம். வாகை-வெற்றி.

சஅ. குருதி-இரத்தம். மேருவில்விசை
யம்-சிவபிரான்கைலை. கேதம்-ஈண்டுத்துன்
பமாகியஇளைப்பென்க. பைய-மெல்ல. இ
மநாகபவனன் - இமயமலையிலிருந்து வருகி
ன்றகாற்று.

சகூ. கலை-ஆண்மான். கூர-மிக.

ருய. நாரி-பெண்ணாகியவுமாதேவி. கூறு-
பாகம். முதல் - முன்பு. எய்த-மதனெய்த.
வேரி-தேன். சோரி- இரத்தம். நாரிக்கொரு
கூறானார்முதனல்கவெய்த, வேரிக்கணையெ
ன்றதனாற் கடவுளரையுமயக்கும் பாணமெ
ன்பதாயிற்று.

ருக. அன்போடுஇறத்திஎனக்கூட்டுக. த
ன்போன்மகிழ்நன் - தன்னைப்போற்றுன்பா
விக்குநாயகன். பிணை-ஈண்டுப்பெண்மான்.

ருஉ. நினைவற்றசாபம்-கருதாமையால்
வந்தசாபம்; எனவே அபுத்திபூர்வத்தால்
வந்தசாபமாம். இனைவு-வருத்தம். காதல்வை
த்தமனைமடவார்எனவியைக்க. மன்றல்-வி
வாகம். முனைவைத்தவாய்மை-முதன்மை
பொருந்திமெய்ம்மை. முயன்று-தவத்தைமு
யன்றுஎன்க.இனிச்சாபம்பலியாமைக்கும், ந
ற்கதியடைதற்கும் ஏதுவாகியதவமே நன்
மையெனத் தெளிந்தான் என்பார்நன்மையி
துவேயினியென்றுதேறி என்றுங்கூறினார்.
வனைவற்றகாதல்என்னும்பாடத்திற்கு,வனை
வு-அலங்கரித்தல். முனைவற்றவாய்மைஎன்
னும்பாடத்திற்கு,முனைவு-கோபம். மனைவி
யைமகன்பால்வைத்தாயினும், உடன்கொ
ண்டாயினுந்தவத்திற்கேகுதல் விதியாதலா
ல் இவன்மனைவியரையுடன்கொண்டு சென்
றானென்க.

ருங. விடயங்களின்வேடமாற்றி-விஷய
ங்களாலாகிய அரசவேடத்தைநீக்கி. இன்
ஏதுப்பொருட்டு.

ருச. முதலடிக்கு-புறத்துப் பொருந்திப்
பகைகொண்டு மாறுபட்டஎல்லாவற்றையும்.
செற்று-அழித்து. தனியாழி-ஏகசக்கரம். உ
ட்பகையாறு-காமம், குரோதம், உலோபம்,
மோகம், மதம், மாற்சரியம். காமமுதலிய
வற்றைஉட்பகைஎன்றதற்கியைய அவற்றை
நீக்கும் யோகத்தைப்படைஎன்றார். இது இ
யைபுருவகம்.

ருரு. ஆரம்-முன்னதுசந்தனம், பின்ன
துமுத்துவடம். குசம்-முன்னதுதனம் பின்
னது தருப்பை. தைவரல்-தடவல். நாரக்க
மலம்-நீரிலுள்ளதாமரைமலர். முதலடியில்
இல்லுருபை ஐயுருபாக்குக.

ருசா. நாமம்-அதிசயம். தாமம்-மாலை.
உணர்வுண்மை-மெய்யுணர்வு.

ருஎ. சமித்து-ஓமவிறகு. மனைவியருட
னிருந்துகாமமின்றிச் செய்தவமாதலால் அ
ரியதவமென்றார். புவிமேலுறைதெய்வமன்
னன்என்பது இல்பொருளுவமை.

ருஅ. ஆர்வம்-ஆசை. வேந்து-ஈண்டுத்தி
ருதராட்டிரன். ஆதரிக்க-விரும்ப. சிவபிரா
ன்வரத்தாற்கருப்பந்தரித்தாளென்பது மூத
னூற்கதை.

ருகூ. கல்லாமழலை-கற்றுப்பழகாமழலை, தி
ருக்கோவையாருரையில் மழலையிளஞ்சொல்
என்றார். கல்லாமழலையாகியசொல்லாலெனை
க்கூட்டுக. கனியூறல்-வினைத்தொகை. யூறல்
வாய்நீருக்குஆதலால்ஆகுபெயர்.

சாய. தானம்-அறநெறியால்வந்த பொரு

ளைந்தக்கார்க்குதவல். வண்மை-அப்பொருளைவரையாதுகொடுத்தல்.

௬௧. பயவாதவர்-பெருதவர். தென்பாலவர்-பிதிரர். இடர்-புத்திரப்பேறில்லாத்துன்பமென்க.

௬௨. மூன்ருமடியில், இல்லுருபுகள் எதுப்பொருட்கண்வந்தன. யாகாதிகருமங்களையேற்றுப் பலன்றாலாற்றேவரையும் அவற்றைச்செய்வித்தலான்முனிவரையும் எதுவாகக்கூறினனென்க. பிறரைச்சேர்ந்து புதல்வரைப்பெறுவாயெனின் இயையாளெனக்கருதிஇயையுமாறு மேற்கவியினும் இக்கவியினுங்குறிப்பாற் பணிமொழிகூறினனென்க.

௬௩. பொன்ற-(மனம்)அழிய. சொற்பால-சொல்லும்பகுதியன. இற்பாலவர்-இல்லறத்திற்குரியமாதர்.

௬௪. வருட்டி-வற்புறுத்தி. வருடிஎன்பதுவருட்டிஎன விகாரமாயிற்றென்பர் வருடி எனக்கூறினுஞ் செய்யுளியையுமாதலின் அஃதுரையன்றென்க. பெற்றி-தன்மை. தன்ருய்முதலாயினோர் பிறரைச்சேர்ந்து புதல்வரைப்பெற்ருர்கள் எனக்கூறினனென்பார் பிறர்பெற்றிகாட்டியென்றும், கன்னன்பிறந்ததைக்கூறின் வடுவாமென்றஞ்சி மறைத்தாள்என்பார் கன்னன்பிறந்ததொழிய என்றுங்கூறினர்.

௬௫. பணித்தேவுதல் - நீநினைத்ததேவரைப்புணர்ந்து புதல்வரைப்பெறுகவெனக்கூறிவிடுத்தலென்க. தருமாதிபன்- யமன் இதுவடநூன்முடிபு. உம்மை-சிறப்பு.

௬௬. நிறைமாமதிக்கூட்டமுற்ற அந்தித்தெரிவை - பூரணமான அழகிய சந்திரனாகிய நாயகனதுகூடுதலைப்பொருந்திய மாலைக்காலமாகியபெண். இதுஏகதேசவுருவகம்.

௬௭. சிவம்-நன்மை. முகூர்த்தம் ஈண்டு லக்கினமென்க. தினம்-ஈண்டுநட்சத்திரம். கோளும்-என்றதில் உம்மைமுற்றுமெச்சமுமாம்.

௬௮. உதிட்டிரன்-யுத்தத்திலேதிரமுள்ளவன்.

௬௯. சலநிதி-சமுத்திரம். ஏ-அசை. பிறைபோல்வளரவளர மகிழ்ச்சியதிகரிக்கச் செய்தலின் தருமனுக்குப்பிறையையுவமைகூறினர்.

௭0. அரிதாய்ப்பெற்றமையிற் பேருரையென்ருர். சிந்தியாதாள் வினையாலணையும்பெயர்.

௭௧. மை-குற்றம். வயின்-வயிறு. ஈண்டுப்பரிமளகந்திநினைவின்படி வியாதமுனிவர் வந்தாரென்பது முதனூற்கதை. விழுந்ததாக-இதுவிழுந்ததென்னுமுற்றுச்சொல்லோடு ஆகஎன்னுமெச்சம்புணர்ந்து ஒருசொன்னீர்மைப்பட்டுநின்ற செயவென்வாய்பாட்டு வினையெச்சம்.

௭௨. சஞ்சலமானகோசத்தசை-கலக்கமடைந்தகருப்பையின்றசை. எஞ்சலவாக-குறையாதனவாக. இழுது - நெய். நின்றவக்குறை - சேடமாயிருந்த அந்தத்தசை. குறை ஆகுபெயர். அஞ்சில்-அழகியபொன்வட்டத்தகட்டணி.

௭௩. கையறும்-அழிந்துவிடும். வெருவுறல், மருவுறல்என்பனஎதிர்மறை வியங்கோள்வினைமுற்று.

௭௪. காம்பு - மூங்கில். தேம் - வாசனை. ஈற்றளை - முட்டையிட்டிருக்கின்ற புற்றுஎன்க. பாம்பு தானிட்டமுட்டைகளினின்று குஞ்சுவெளிப்படும் பருவம்வரை அளையைப்பிரியாதுகாத்தல்போல் இவளுங்காத்திருத்தலிற் பாம்பினையுவமைகூறினர்.

௭௫. குந்திபோசர் யாதவருள் ஒருபகுப்பினராதலாற் குந்திபோசராசனாகியசூரனையாதவனென்ருர். கேட்டு-நாரத முனிவராற்கேட்டு. பவனன்-வாயுதேவன்.

௭௬. கலைவாகன்-கலைமான்வாகனத்தையுடையவாயுதேவன். வீமன்-பயத்தைச்செய்பவன்.

௭௭. சாயல்-அழகு. நண்புடையனலன்-அவ்வாயுதேவனோடுநட்பையுடைய அக்கினிதேவன். நற்சகுனமாக இளந்தென்றல் வீச அக்கினிவலஞ்சுழித்ததென்பதுகருத்து.

௭௮. அனிலன்-வாயு. பிறந்தனனாகஎன்பதற்கு ௭௧-ஆங்கவியில் விழுந்ததாக என்பதற்குரைத்தாங்குரைக்க. சுயோதனன்-நன்ருயுத்தம்பண்ணப்பட்டவன்.

௭௯. வாரி-கடல். விம்முதல்-ஒலித்தல். ஓரி-நரி. பாரிய-உயர்ந்த. பனித்தல்-துளித்தல். சோனைமேகம்-விடாமழைபெய்யுமேகம். துற்சகுனமுண்டாயினவென்பது கருத்து.

அ0. கோள்கள்-நவக்கிரகங்கள். கழை-மூங்கில். துச்சளை-பிறரால்வருத்தப்படுத்தமுடியாதவள்.

அ௧. செம்பொற்கன்னிகை-சிவந்தஇலக்குமியாகியபெண்; சிவந்தஅழகியபொகுட்டென்பாருமுளர். இது எதுவுவமை.

௮௨. மொழிமறை-பின்மொழி நிலையல். கொல்-அசை. ஓ-எதிர்மறை. தேன்மொழித்தெரிவையென்றது அவள் என்னுஞ்சுட்டுப்பொருளாய்நின்றது.

௮௩. இரண்டாமடிக்கு-பங்குனிமாசத்துப்பூரணையோடுகூடியஉத்தரநக்ஷத்திரத்தில். சூரியன்பிறந்தநாள்உத்தரமாதலால் ஆதபன் பயிலுநாள் என்றார். உத்தரநக்ஷத்திரத்திற்கும் பங்குனியென்னும் பெயருண்மையால் அதிற் பிறந்தவுரிமைபற்றிப் பங்குனனென்னுநாமம் பகுதியாற் படைத்திட்டானென்றார். பகுதி-ஈண்டு உரிமை.

௮௪. பொற்பு-அழகு. முழவு-வாத்தியம். விம்ம-ஒலிக்க. புரிவளை-புரியையுடையசங்கு. வாத்தியப் பொதுவிற்குமுழவென்னும் பெயர் பிங்கலநிகண்டிற்காண்க.

௮௫. உரைப்ப-மாத்திரையும் புதல்வரைப்பெறுமாறு மந்திரத்தையுபதேசிப்பாய் என்றுசொல்லவெனவருவித்துரைக்க. குறைவற - இருமையின்பமுமில்லையென்னுங் குறைநீங்க. இரவிமைந்தரிருவர் - சூரியன்புதல்வராகியமருத்துவரிருவர்; இவர்தேவவயித்தியர்.

௮௬. வரிசை-மேன்மை. ஒருவர்போல என்றதனால் ஒற்றுமைப்பட்டுப் புணர்ந்தார் என்பதுகருத்து. பருவரல்-துன்பம்.

௮௭. அசைவு-கலக்கம். சிங்கசாபம்-சிங்கக்குட்டி.

௮௮. புல்வாய்-மான். விழைதல்-விரும்புதல். பாலப்பருவத்திலும்மிக்க வீரமும் வேகமும் உடையரென்பார்போதகமுதலியவற்றோடோடிவிளையாடலுற்றாரென்றார்.

௮௯. சாத்தி-சேர்த்தப்பெற்று எனச்செயப்பாட்டுவினையாக்குக. கைதவம்-துன்பம். எதுகைநோக்கி மெய்தவமெனமிகாது நின்றது. கலைகளையெளிதிற்கற்றற்கும் வனப்புமிகுதற்கும் முற்செய்தவம்வேண்டுமாதலின் மெய்தவம் விளங்கவென்றார்.

௯௰. தெரியன்மாலை-ஒருபொருட்பன்மொழி. அகன்ற, நிறைந்த, உயர்ந்த, மிக்க, பரந்த என்பன அஃறிணைப்பன்மைவினைமுற்று. ஐவருங் கல்விமுதலியவற்றான் மிக்காராயினாரென்பதுகருத்து. கண்ணிற்சிறந்தவுறுப்பில்லையாதலால் அதனையெடுத்துக்கூறினார்.

௯௧. ஆரம்-முத்துவடம். மூன்றாமடிக்கு-ஓருயிரிரண்டு சரீரத்தினும்பொருந்த உருகுகின்றஆடவர்களுமாதர்களும்கலவிவேட்டுருகும்படி. மாரனை-மாரனுக்கு. வசந்தகாலமானது உருகும்வண்ணஞ்சூட்ட ஆரமுதலாகியஇவற்றோடுவந்ததென்க. ஆகியஇவற்றோடுஎன்பன அவாய்நிலையாய்வந்தன. இதம்பெறுதற்குக்காரணமான தென்றலென்க.

௯௨. விதுநலம்பெறுகா-சந்திரனாற்குளிர்ச்சியாகிய சுகத்தைப்பெறுஞ்சோலை. காவானது எற, மொய்ப்ப, உலாவ, நடுங்கத்தடுமாறிற்று என்றியையும். சோலையைக்குறிக்குங்கால், மதுவயர்தல்-மதுவைச் செய்தல். மெய்சிவப்பேற - தளிரால் வடிவஞ் சிவக்க தலைநடுங்க-தலையசைய. காறடுமாறிற்று-தென்றலாலசைந்ததுஎன்க. கள்ளுண்டோரைக்குறிக்குங்கால், அயர்தல் - குடித்தல்என்க.

௯௩. செந்தழலாக்குதல்-சிவந்ததளிராக்குதல். சூதம்-மா. தருக்களெல்லாங்காட்டுஞ்சீரால்இயற்கையினியற்றுமென்க.

௯௪. இராகம்-ஆசை. முரண்-வலி. மோகனச்சுண்ணம்-மயக்கப்பொடி. புரிந்த-புரிகின்ற, இதுகாலமயக்கம்.

௯௫. மாநலம்-பேரழகு. மாத்திரி-மத்திரை. நலம்-இன்பம். சாபம் ௫௧-ஆங்கவியிற்காண்க. பானல்-கருங்குவளை. அவன் நலமுறுதற்குச்சிரிப்புமோரேதுவாயிருந்ததென்பார் மாநலந்திகழுமூரன்மாத்திரி எனவுடம்பொடுபுணர்த்திக்கூறினாரென்க.

௯௬. அலகுடனலகுசேரத் தளிர்நல்கினக. அவசம்-பரவசம். மாதவி-குருக்கத்தி. இதுபந்தர்போற்செறிந்திருத்தலாற்பந்தரென்றார். அலகு-மூக்கு.

௯௭. கண்ணோட்டம்-இச்சை. நலிய-வருத்த. எஞ்சியகாலம்-கழிந்தகாலம். அடுக்கு-மிகுதிகுறித்தது. பஞ்சின்மெல்லடிஎன்பதற்குப்பஞ்சினுமெல்லடியெனினுமாம்.

௯௮. பொங்க - பொலிவடைய. புணர்முலை - நெருங்கியமுலை. காவி-கருங்குவளை. ஓவியம்-சித்திரப்பாவை.

௯௯. தொண்டை-கொவ்வைக்கனி. சுரதபோகம் - புணர்ச்சியாலாகியபோகம். மன்றல்-பரிமளம். சிறிதுவிழித்தகண் என்பார் அரும்பியவிழியென்றார். வீழ்ந்தான் என்பதற்குஇறந்தான்என்க; வருங்கவியாலறிக.

௱. என்னஎன்பதுஎனவெனக்குறைந்துநின்றது. ஓ-எதிர்மறை. அஞ்சு முதனிலைத்தொழிற்பெயர்.

௱௧. வசந்தன்-மதன். சித்திரைச்செவ்வியுடன்-இளவேனிற்காலத்தால். சித்திரை

ஆகுபெயர். உடன் மூன்ருவதன்சொல்லுருபு கருவிப்பொருளில்வந்தது. முத்திரை-ஈண்டு மரணக்குறியென்க. கொல், ஆம்-அசை.

௱உ. அயிர்த்தல்-சந்தேகித்தல். வயிர்த்தனள்-மனவைரங்கொண்டாள். உணர்ந்திலன்என்றதில் உம்மைஎச்சம். நிலம் வானம் என்பன அவற்றின் வாழ்வை யுணர்த்தலால் ஆகுபெயர். இறக்கத்துணிந்தாள் என்பது கருத்து.

௱ங. புந்தி- அறிவு. மன்றல்-ஈண்டுப்புணர்ச்சி. கொல்-ஐயம். அந்தி - மாலைக்காலம். பூவை, அரவிந்தம் - என்பனஆகுபெயர். நாயகன் புணர்ச்சியாலிறப்பன் என்னுமறிவு சிறிதுமிலளாயதற்குடன்பட்டாள் என்பார் புந்தியிலளென்ருர்.

௱ச. உற்றது-சம்பவித்தது. நலம்-இன்பம்.

௱ரு. அரசை-அரசனுக்கு. ஈமவிதி-தீக்கடன். செய்ய-அம்முனிவர்கள்செய்விக்க; இதில்விவ்விகுதி தொக்குநின்றது. முகத்தாள், விடாதாள் முற்றெச்சம். நாயகனுடன்செல்கின்றமையின் மகிழ்ச்சியுடையளாயினள் ஆதலாற்பொற்புடை முகத்தாளென்ருர். உடன்சென்மகளிர்க்கு நெருப்பு நீர்போன்றிருத்தலின் அனலைப்புனலென்ருர்.

௱சு. கங்கைவனம்-கங்கைநீர். கற்பவனம்-கற்பகச்சோலை. உம்மை-முற்று. முடித்தனள்என்றதிற்பிவ்விகுதிதொக்குநின்றது.

௱எ. ஆசி-வாழ்த்து. ஏசு-குற்றம். தேசிகர்-ஆசாரியர். சதசிருங்கர் வேதியர்கருத்தால் உய்த்தார் என்க.

௱அ. மன்னன்-ஈண்டுத்திருதராட்டிரன். புறம்-உடம்பு. பிறந்தபொழுதொத்து-அப்புதல்வர்கள் பிறந்தபொழுதின் மகிழ்ச்சியையொத்து. பெற்றி-தன்மை.

௱கூ. வியன்-பெருமை. சயம்-வெற்றி. புனலிரண்டாவன - சோகத்தால்வருபுனல், ஆனந்தத்தால்வருபுனலென்க.

௱ய. கனகுலம்-முகிற்கூட்டங்கள். நற்குணமுதலியவுடைமையால் ஐவர்க்குவனசமலரையும், அவையின்மையால் நூற்றுவர்க்குக் குமுதமலரையுமுவமை கூறினரென்க.

௱யக. இன்னணம்-இவ்விதம். ஆகுலத்தாளாகிய பூமிதேவியென்க; அவளெண்ணமுடித்தலாவதுபூபாரந்தீர்த்தல். தலைவனைத் தந்தகோமான் - கிருட்டிணனைப்பெற்றவசுதேவனும்என்க ; இதில் எண்ணும்மை விகாரத்தாற்ருெக்கது. பிருதுவிக்குப் பொன்னிறமுடைமையாற் பொன்னெனு நிறமென்ருர்.

௱யஉ. அந்தமில்-அழிவில்லாத. சிவபிரான்றிருமாலையாதலால் வான்கொன்றையென்ருர். கொன்றை ஈண்டாகுபெயர். கிருட்டிணன் முதலோர் அவதரித்தமையாற் போசகுலத்தைத் தெய்வகுலமென்ருர்.

௱யங. விடலை-என்றதுபலராமரை. மாது-என்றதுதேவகியை. கோத்தார்-ஒழுங்குபடுத்துக்கூறினரென்க.

௱யச. தருமக்கடவுளின் அமிசமாயவதரித்தலால் தருமராசனைத் தரும தேவதையென்ருர். அம்புராசி-கடல். இம்பர்நோய்-இவ்வுலகிற்குத்துன்பம். ஏ-தேற்றம். பூபாரந்தீர்த்தலாகிய தன்னெண்ணத்தையும், ஞாதியர்முதலிய பகைவரைவெல்லுதலாகிய தருமன்முதலோர் கருத்தையுமுளப்படுத்தியெல்லாவெண்ணமுமெனக்கூறினமை காண்க. இம்பரேயகற்றிஎன்னும் பாடத்திற்கு நோய்என்னுஞ்சொல்லை வருவித்துரைக்க.

௱யரு. முகுரவானனன் - கண்ணடியைப்போலுமுகத்தவன்; திருதராட்டிரனென்க. தர்ப்பணனனனென்றும், அது பிறரைத்தான் காணுதவாறுபோல இவனும்பிறரைக் காணனென்றுங்கலித்தொகை உரு-ஆம் பாட்டுரையிற் கூறினமைகாண்க. கண்ணடியைப்போலு முகத்தவன் என்பதனை வாரணவதச்சருக்கம் ௱உ-ஆஞ்செய்யுளிலுங்காண்க. வேத்துமுனிவன் - இராசமுனிவனுகியவீடுமன். பாந்தளேறுயர்த்தகோ-சர்ப்பவேற்றைக்கொடியாகவுயரச்செய்த துரியோதனன். தகைவு-தடுத்தல். கெழுமினர் - மனங்கலந்தார். திரிகரணசுத்தியுடையவன் என்பார் மனஞ்சொற்காயம் பகிர்விலா விதுரனென்ருர்.

௱யசு. தாதைதன்ருதை-பாட்டன். முன்பு-வலி. மன்பதை-மக்கட்கூட்டம். தன்பதி பன்மையிெருமைமயங்கிற்று. அடுக்கு ஒருதொழில்பலகானிகழ்தல் பற்றிவந்தது.

௱யஎ. வைநுதியுடைச்சமரவேல்-கூரிய நுனியையுடைய யுத்தஞ்செய்யும்வேல் எனவுரைக்க. தோற்றம்-உயர்ச்சி. ஆற்றுவரேனும்என்றதில் உம்மைஎதிர்மறை.

௱யஅ. பலமாற்றம்யாவும்என்க. பலவும் என்பதில் உம் அசை. ஏ-அசை. தனதன்-குபேரன்.

௱யகூ. எயில்-மதில். (மணிகளால்) வெ

யிலுநிலாவுமென்க. விலாசம்-விளையாட்டு. பயினன்மேல்வருகல் - படக்கூட்டங்களையு டையவனுகியஆதிசேடன் படத்தான்மேன் மூடியமேருமலை; இவ்வாறன்றி அழகியசூரி யன்மேலுதையமாகிவரப்பெற்றஉதையகிரி யென்றுமாம். இப்பொருட்குப் பை-அழகு. இனன்-சூரியன். பிங்கலநிகண்டிற்காண்க.

பவனன்-வாயு. வயினதேயன்-கருடன். காத் திரவேயர்-சர்ப்பங்கள். உம்மை-சிறப்பு. பை யினன், வையினதேயன் என்பன பயினன்வ யினதேயன்எனப்போலியாயின. இதனுற்ப கையுடையரானுரென்பதும் வீமனைநூற்று வர்வெல்லும் வன்மையிலராயினுரென்பதுங் காண்க.

வாரணவதச் சருக்கம்.

க. முகில்வண்ணன்-மேகத்தினிறம்போ லுநிறத்தையுடையான். இக்கருத்தை, திரு க்கோவையார் ௩௪௩ - ஆங்கவியில் நீவயின் மேனியன்என்பதற்குரைத்தமை காண்க. ஒருபெருண்மேற்பலபெயர் வந்ததனுல்இறு தியிலிறைஞ்சி எனவொருவினைகொடுத்தார்.

உ. அயருமாயிடை-(விளையாட்டை)ச்செ ய்யுமக்காலத்திலென்க. பாங்கு-உரிமை; ஈ ண்டுநண்பன் எனப்பொருடந்தது குணத்தி ன்பெயர் குணிமேலாயிற்று. வாங்குபு-அழை த்து.

௩. மங்குலின்வருபகீரதி-விண்ணினின் றும்வருகின்றகங்கை. ஆல்உடனிகழ்ச்சியில் வந்தது.

௪. தைவரல்-ஈண்டழுக்கறத்துடைத்த லென்க. ஆடகம்-பொன். போனகம்-அன் னம்.

௫. கண்படை-நித்திரை. கன்னசௌ பலர்-கன்னனுஞ்சகுனியும். இதுவும்மைத் தொகை. படைக்குமரன்-ஈண்டுத்துரியோ தனன். பாவகனண்பன்-வாயு. வல்லி-கொடி. சிக்க-இறுக. யாத்தல்-கட்டல்.

௬. உரன்-வலி. பொருப்பு-ஈண்டுமந்தர மலை. பரவை-கடல். இருமையினுமுறுதிபய வாதசெயலென்பார் பயனில்செய்கையென் ருர்.

எ. அனந்தரம்-பின்பு. பிணி-கட்டு. து ணி-துண்டு. அவசம்-பரவசம். இலக்குவன் றன்னைக்கட்டியநாகபாசத்தைநீக்கியெழுந்த வியைபுபற்றி அவனையுவமைகூறினுரென்க. இராவணன்றம்பிபோன்றுளான்என்னும்பா டத்திற்கு சரீரப்பெருமைவலி முதலியவற் ருற்கும்பகன்னனை யொத்துளானுகிய வீம ன்என்பர்.

அ. வாள்-கிரணம். நித்திராலு-நித்திரை செய்பவன் இதுவினையாலணையும்பெயராய் வீமனையுணர்த்திற்று. முதலிரண்டடியிற்கூ றியவுவமையால் அறிவொழுக்கமுதலிய வற் றிற்சிறந்த வீமனைக்கெடுக்குஞ்சூழ்ச்சியையு டைய கொடியமனத்தினன்என்பது விளங் கிற்று. வஞ்சத்தாற்கொல்லத்துணிந்த துரி யோதனனைவீரனென்றது புகழ்வதுபோலப் பழித்தலென்க. சோலையில்விளையாடி அன் றிரவுநித்திரைசெய்யும்போது பிடாரர்களைக் கொண்டு பாம்புகளாற்கடிக்கச் செய்தானெ ன்க. உம்மை-எச்சம்.

௯. மற்குணம்-மூட்டுப்பூச்சி. வடித்தவே ல்-கூராக்கியவேல்.

௰. கழுநிரைத்து-கழுவை (ஆற்றினுள் ளேபிறர்க்குத்தோன்ருவண்ணம்)நிரைத்து. வண்டினுல்-கிருட்டிணனுகிய வண்டினுலெ ன்க. கழுநாட்டியவிடத்தின்மேலே கிருட்டி ணன்வண்டாகிச் சுழன்றுகொண்டிருந்தமை யைச்சுருக்கி வண்டினுலென்ருர்.

௰க. பெற்றம்-வாயு. ஆலுருபுஒடுருபின் பொருளில்வந்தது.

௰உ. வடம்-கயிறு. பிணித்தல்-கட்டல். வாரி-நீர். கிங்கரர்-ஏவல்செயவார். தான்செய் வஞ்சனை பிறர்க்குப் புலப்படுத்தாமையால் இதையமொத்தவரென்ருர்.

௰௩. ஓதம்-திரை. பவனசூனு-வாயுகுமா ரனுகியவீமன். ஆதவம்-ஒளி. பணம்-படம். கடலிடையொளித்தவெற்பு-தன்சிறகையறு த்துவிடுவானென்று இந்திரனுக்கஞ்சிக்கடலி ல்வீழ்ந்தொளித்த மைநாகமலை.

௰௪. அலரி-சூரியன். முளையெயிறு-வினை த்தொகை. முளைபோன்றஎயிறெனினுமாம். உம்மை-எச்சம்.

௰௫. ஆசுகன்மதலை-வாயுகுமாரன். ஏசு-குற்றம். மற்று, ஆல் அசை-அமிர்தங்குறையாதகுடங்களையறிந்தென்பார் தெரிந்தென்றார். தன்சாதியாகிய அரவினங்கட்குணவாயிருந்து அவற்றைவளர்க்கும் வாயுவின்குமாரனென்றசம்பந்தத்தாலமுதையூட்டினனென்க. பத்து-அன்பு.

௰௬. புலம்-காடு அதிலுள்ளமரமுதலியவற்றையுணர்த்தலால் ஆகுபெயர். கனல், புலம்என்பனவற்றை ஆகுபெயராக்கிமுறையேசூரியகிரணமெனவும் வயலிலுள்ளபயிர் எனவுங்கூறுவர். எழில்-அழகு.

௰௭. எய்-எய்ந்த. எண்பகல்-எட்டுநாள். மேய்-மேவி, செய்தெனெச்சம். என்ன-என்றுபிறர்சொல்ல.

௰௮. பாவி-ஈண்டுத்துரியோதனன். தவனன்-சூரியன். உததி-கடல். அவனிபன்-ஈண்டுத்திருதராட்டிரன். அரசவெள்வளைத்துவனி-அரசர்க்குரியவெண்சங்கினொலி. எடுக்க என்னுஞ்செயவெனெச்சம் நிகழ்காலத்தின்கண்வந்தது. மாலை சூரியனைச்சாய்த்துச் சிறிதுபோது மேம்பட்டுத்தோன்றிப் பின்னழியுமாறுபோலப்பாவியும் வீமனைநதியில்விழ்த்தி அதனாற்சிறிதுபோது பெருமிதங்கொண்டு பின்னதனையிழந்ததனாற்றவனனை யுததியிற் சாய்த்தமாலைபோலவென்றார். அரசநகரிற்காலைமாலை சங்கொலித்தலியல்பென்க.

௰௯. தரித்திலன்-துயரைச்சகித்திலனென்க. விம்மல்-ஏங்குதல்.

௨௰. வீடினன்-இறந்தான். நடுக்கில்-பிறிதொன்றானுநடுக்கமில்லாதஎன்க.

௨௧. சுயோதனகுமரன்-துரியோதனனாகியவிராசகுமாரன். ஆற்றலின்வெரீஇ-வலியினாலஞ்சி. அழுக்கற்ற-பொறாமைப்பட்ட. ஏ-பிரிநிலை.

௨௨. ஊதையில்பூதம்-வாயுவையொழிந்தவேனைநான்குபூதங்கள். ஒத்தஎன்னும்பெயரெச்சத்தீறுதொக்கது. ஊதையில்லாப்பூதங்களையொத்து எனக்கூறிற்பொருட்சிறப்பின்று. விதவையாதலிற்கோதையில்குழலினளென்றார். தாதைதாதை-பாட்டனாகியவீடுமனென்க.

௨௩. தெருமரல்-கலக்கம். தெய்வங்கூறல்-ஆவேசப்பட்டுக்கூறல். மூன்றாமடிக்கு-நற்சகுனங்கள் வரவிற்குரிய குறியைக்காட்டவும் என்க. யமனவதாரமாதலால் விதுரனைத் தருமமன்னனென்றார்.

௨௪. போகிகள்-பாம்புகள். வீமன் பதினாயிரமரசுவாக்களின் வலியமைந்திருத்தலால்வருந்தியுற்றெடுத்தனவென்க.

௨௫. பாழி-பெருமை. பாண்டவன்-பாண்டுவின்புத்திரனாகியவீமன். சூழ்-மண்டலமிடுகின்ற. இகல்-வலி. வாழி-அசை. ஆதலால் அவைகளுமிவனைச்சுமக்க வல்லவாயின என்பதுகுறிப்பெச்சம். ஓகாரமிரண்டில்முன்னையது வினாவுதற்கண்ணும் பின்னையது இறையாய் வினாவெதிர் வினாவுதற்கண்ணும் வந்தன. இனிதினேந்துவானென்றதனாலிலேசாகத்தாங்கும்வலியுடையானென்பது கருத்தாயிற்று.

௨௬. உயங்கி-வாடி. பதி-தம் நாயகனாகிய சூரியன். வான்-ஆகாயம். உபமேயத்திற்கியையப்பங்கயத்திற்குச்(சூரியன்மறைதலாற் கூம்பி,) என்னுஞ்சொற்களையும், ஆகாயத்திற்குச் (சூரியனால்வெப்பமடைந்து) என்னுஞ்சொற்களையும்வருவித்துரைக்க. இதுபலபொருளுவமை.

௨௭. மூன்றாமடியிற் கூறியகுவ்வுருபை ஏனையவற்றோடுங்கூட்டி எண்ணும்மைவருவித்துரைக்க. ஞாதியர்-தாயத்தாராகியதுரியோதனன்முதலானோர்.

௨௮. குந்தியை குந்திக்கு எனத் திரித்துரைக்க. அருந்திமீன்என்றது அருந்ததியை. ஏ-அசை.

௨௯. கோதமன்மகன்மகன் - கௌதமமுனிமகனாகியசரத்துவந்த முனியுடையபுத்திரன். படைக்கலம் - ஆயுதம் இது ஆகுபெயராய் அதன்றொழிலையுணர்த்தியது. வீறு-பெருமை. அம்மாதவன்-அச்சரத்துவந்தமுனிவன். கேதம்-குற்றம். சரத்துவந்தமுனிவன் வனத்திற்றவஞ்செய்யுங்காலை இந்திரனதனையழிக்கவோரரம்பையைவிடுக்க அம்முனிவன் அவளைக்கண்டுமோகித்து வீரியத்தைத் தானிருந்ததருப்பையாசனத்திலிரண்டுதுளியாகவீழ்த்தினான். பின்னர்த்தன்கையிலிருந்த வில்லையும்திவ்வியாஸ்திரங்களடங்கிய அம்புக்கூட்டையும் அவ்வாசனத்தில் வைத்துவிட்டுவேறிடஞ்சென்று தவஞ்செய்திருந்தான். அவ்வீரியத்துளிகள் ஆணும் பெண்ணுமாக விருபிள்ளைகளாயுதித்திருக்க வேட்டைக்குவந்தசந்தனுமகாராசன் அப்பிள்ளைகளையுந் தூணியையுங்கண்டெடுத்துக் கொண்டுபோய்வளர்க்கச்சரத்துவந்தமுனிவன்வந்து மகனுக்குஆயுதப்பயிற்சிசெய்து அவனையவ்விடத்தில்விடுத்துப்போயினான்; அம்மகனுக்குக் கிருபாசாரியனென்றுபெயர்; இவனுடன்பிறந்

தாளுக்குக்கிருபியென்றுபெயர் இவள் துரோணாசாரியன்மனைவியாயினாள்.

௩௰. மற்று-அசை. சிலைமுதலியன ஆகுபெயர்.

௩௧. பரிவு-அன்பு. குருபதி-ஆண்டுவீடுமன். உம்மைமுன்னது எச்சம்பின்னது சிறப்பு. இது வேற்றுப்பொருள்வைப்பணி.

௩௨. பரதநாதவேதம்-நாடகத்தலைவனாகியகடவுளருளியவேதம். சுரததாது-புணர்ச்சிக்கிக்குரியவீரியம். துரோணகும்பம்-பதக்குநீர்நிறைந்தகும்பம்.

௩௩. ஈரேழ்விஞ்சை - பதினான்கு வித்தை; அவை வேதம்நான்கு, அங்கம் ஆறு, மீமாஞ்சை, தருக்கம், தருமசாஸ்திரம், புராணம் என்பனவாம். நீர்-கடல்.

௩௪. வேந்தன்-ஆண்டுவீடுமன். பன்னியின்பெயர் கிருபி. கடையடியில் இன் ஏதுப்பொருட்டு. இளங்குழவியென்பார் கையின் மதலையென்றார். ஏ-பிரிநிலை, தேற்றமுமாம். இம்மதலையின்பெயர் அசுவத்தாமன்.

௩௫. சகல கலைஞானவுணர்ச்சியாற் றுரோணனை வீடுமனெஞ்சின்மதித்துவைத்தமையாலவனெஞ்சைச் சிந்தாசனமென்றார். எந்தையென்னும்பெயர் எந்தாய்என விளியாயிற்று.

௩௬. மூசி-நெருங்கி. முருகு-தேன். செவ்வி-அழகு. வாசிமான்-குதிரை. ஏசு-குற்றம். கடவுள்வாய்மை-தெய்வவாக்கு. ஆசி-வாழ்த்து. ஐயுருபைக் குவ்வுருபாக்குக. இருக்கால் இதில் ஆல்உடனிகழ்ச்சிப்பொருட்டு.

௩௭. வேத்துமுனி-விகாரம். பூதம்-சென்றகாலம். புன்மை-எளிமை. ஏதம்-குற்றம். பூட்டுதல்-சம்பந்தப்படுத்தல், என்பான் இதிற் படுவிகுதிதொக்குநின்றது, இல்வாழ்வானென்னுந்திருக்குறளுரையிலறிக.

௩௮. பானு-சூரியன். அங்கிவேசன்-ஓர் முனி. இம்முனிதுரோணாசாரியனுக்குப் பிரதமகுரு, இரண்டாவதுகுரு பரசுராமமுனி. கற்று கற்கஎனத்திரித்துரைக்க. என்னையும் என்னுமிழிவுசிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. தானும்என்னுமெச்சவும்மையாற் றுரோணனும் வல்லனாதல்கொள்க.

௩௯. ஆதரியா-ஆதரித்து. என்னை-என் பிதா. எய்தி-எய்தஎனத்திரித்துரைக்க.

௪௰. அடுக்கு-எள்ளல்பற்றிவந்தவுவகை. வென்று - பகைவரைவென்று எனவருவித்துரைக்க.

௪௧. தவறு-ஈறுதொக்கபெயரெச்சம். ஏ-முன்னது பிரிநிலை பின்னது அசை. சனம்-பிரசைகள்.

௪௨. ஐயாண்டு - ஐந்து வயதுடையது என்க.

௪௩. மாவின்பால்-மாவைநீரிற்கரைத்தமைத்தபாலென்க. கோ-ஆண்டுயாகசேனன். நாவின்பாலால்-அப்பொழுதுண்டாகிய நாவினியல்பால். பழையநண்பு அவனுக்குப்புலப்பட நானுனண்பன் என்றானென்க. ஏ-பிரிநிலை. கண்டும் என்னுமும்மை விகாரத்தாற்றொக்கது.

௪௪. மரபு-முறைமை. அரசர்க்கு அந்தணர்கள் அமைச்சர்முதலானோர் ஆதற்குரியரன்றி நட்பினராதற்குரியரன்மையின்மரபாலென்றான்.

௪௫. சுகன்-சுகமுனி. உம்மை-எச்சம். ஏ-அசை.

௪௬. படைமைக்கல்வி-ஆயுதத்தொழில் வித்தை. வஞ்சினம்-சபதம்.

௪௭. ஆகஎன்பதுஈறுதொக்கு ஆவெனநின்றது. உம்மை-எச்சம்.

௪௮. நிதியோர் எவரும் எனக்கூட்டுக. தொன்று-பழைமை. மறை-மந்திரம். முதலேநின்றகுறை-முற்பிறப்பிற்கற்றதனால் நின்றசேடம். முதல்-ஆகுபெயர். ஏ-அசை. முன்னர்க்கிருபாசாரியனிடத்திற் கற்றதனினின்றசேடம்என்றுங்கூறுவர்.

௪௯. சிலை-வில்வித்தை; இது ஆகுபெயர். விசயம்-வென்றி. எஞ்சியகுமாரர் என்றது ஏற்புழிக்கோடலாற்றுரியோதனாதியரையென்க.

௫௰. கிராதன்-வேடன். முனி-துரோணமுனி. தனியிறைஞ்சி-குருகுல குமாரரின்றித் தனியேயிருந்தபோது வந்து வணங்கி எனவருவித்துரைக்க. இவனேவலின்வழாதுகலையடைந்து—இம்முனிவற்குச் செய்யுமேவலிற்றவறாதவனாதலைப்பொருந்தி. வில்வித்தைகற்பிக்கவேண்டினபோது அதற்குடன்படாமையாற் றுரோணாசாரியனைப் போலவொருவடிவத்தை யுண்டாக்கிவைத்துப்பூசித்து அவனிடத்திற்கற்குமாறுபோலக்கற்றானென்னுங்கதையைச்சுருக்கி இங்ஙனங்கூறினாரெனக்கொள்க. மேகலை-மேகலையாக. மாகலை-பெரிய தனுர்வேதம். இவ்வேகலைவன்றன்னிடம்வந்த துரோணாசாரியனைவணங்கிக் குருதக்கிணை பெறவேண்டுமென்றுவேண்ட, இவன்மேற்பொறாமையுற்றிருந்த அருச்சுனனுவக்க இவன் வலக்கைப்

பெருவிரலைக்கேட்க அதனைத்தக்கிணையாக
வறுத்துக்கொடுத்தானென்க. என்றொரு
இதிற்பெயரெச்சவீறுதொக்கது.

ருக. அங்குலிகம்-மோதிரம். புங்கம்-அ
ம்பு. துங்கம்-உயர்ச்சி. இலக்கின்றுடையால்-
ஒப்பில்லாத (ஒரு) பாணத்தால். அளவற்ற
பாணத்தால் எனின்அவ்வாறுகதையின்மை
யினதுபொருந்தாதென்க. வடம்-ஆல்.

ருஉ. முனி-ஈண்டுத் துரோணாசாரியன்.
எனலும்-இடைச்சொல்லடியாகப்பிறந்த உம்
மீற்றுவினையெச்சம். போல்கணை - வினைத்
தொகை. முதலையில்-முதலையைப்போல.

ருங. நிலை-சரம்விடுநிலை. ஆலீடம், பிரத்
தியாலீடம், பைசாசம், மண்டலம்என்னுஞ்
சரம்விடுநிலைநான்கு. மறை-மந்திரம். ஒகா
ரம் எதிர்மறை.

ருச. கலையோனாகிய சிலைக்குருவென்க.
சிரமநிலை-யுத்தப்பயிற்சி. அலைத்தலை நிலா
வெழுசரிற்புதல்வன் - அலையினிடத்துநிலாவு
ண்டாகின்ற கங்கையின்புதல்வனாகிய வீடு
மன். சரித்-நதி. அறக்கடவுள்-யமனுடைய
அவதாரத்தனாகியவிதுரன். அரங்கு-ஈண்டுயு
த்தப்பயிற்சியைக்காட்டுஞ்சபையென்க. அரி
யுடன்கலைப்புரவியூர்திரு - சிங்கத்துடன்கலை
மானாகியவாகனத்தையூர்கின்ற வீரலக்குமி.

ருரு. புரி-நகரம். சனபதம்-நாடு. வரிபட-
நிரைபொருந்த. இருந்தபொழுதில் (அச்ச
பையானது) வானிகரும்என்க.

ருசா. ஆசிரியரிருவர்-கிருபாசாரியன் துரோ
ணாசாரியன். நாணேற்றிய-நாணேற்ற. சராச
னம்-வில். வடிவாளியின்-கூரியஅம்புகளால்.
பெருவண்மைசிறுநுண்மைசலநிச்சலம் என
ச்சொல்வகையாகியஇலக்கம் அவை நாலுவ
கையாற் பிளந்து மாற்றினரெனக்கூட்டுக.
பெருவண்மை-பெரியஇலக்கு. சிறுநுண்மை
சிறியஇலக்கு. சலம்-அசையுமிலக்கு. நிச்சல
ம்-அசையாதஇலக்கு. வகையால் - மூன்றுவ
கையால் ; அவையாவன—கெசமுட்டியும், சி
ரோமுட்டியும், கணமுட்டியுமாம்; இவற்றை
த்தமிழ்நூலார் மேனோக்கியெய்தல், கீழ்நோ
க்கியெய்தல், நேரேயெய்தல்என்பர்.

ருஎ. தெற்றி - திண்ணை, சித்திரகூடமு
மாம். நவை-குற்றம். என-என்றுசொல்ல.
வல்லனபுரிந்தனர் - வல்லவற்றைச்செய்தார்
கள்.

ருஅ. வலி - சரீரவலி. திறல் - தைரியம்.
வினை-போர்த்தொழில். அனிலன் சிறுவன்-
வீமன். கதை-தண்டாயுதம். வலியோருந்தி
றலோரும்வினையோரும்ஆகிய அரசன்மகனு
ம் அனிலன்சிறுவனும் எனக்கூட்டுக. மற
வோர்-மறத்தன்மையுடையோராய் எனமுற்
றெச்சமாக்குக.

ருகூ. உரும்-இடி. உடற்ற-தாக்க. மறம்-
வீரம். செயிர்த்து-கோபித்து பெரியோனா
கிய குருவின் சிறுவனெனக்கூட்டுக. குரு
வின்சிறுவன்-அசுவத்தாமன். சந்தநோக்கி
மெய்கல்வி என இயல்பாயிற்று.

சாய. மீளி-வீரன். ஆயுதபுரோகிதன்-ஆ
யுதத்தொழில்வல்ல புரோகிதனாகிய துரோ
ணாசாரியன். எரு-ஆங்கவியிலுஞ்சிலைப்புரோ
கிதன்என்றார் ; புரோகிதன்-எந்தக்கருமங்க
ளுக்குமுன்னேவைத்துக்கொள்ளப்படுபவன்
மணிமேகலை அரும்பதவுரையிற்காண்க. வி
லோசமுணர்ந்து - பார்வைக்குறிப் பறிந்து,
உன்தனூர்வேத சாமர்த்தியத்தைக் காட்டுவா
யெனவாயாற்கூறாது கண்ணாற்குறித்தமை
யின் விலோசனமுணர்ந்தென்றார். வன்னி-
அக்கினி. சலிலம்-நீர். திமிரம்-இருள். இரவி-
சூரியன். ஏகாரம்-தேற்றம்.

சாக. மங்குல்-மேகம். மஞ்சகோடி-மஞ்ச
வரிசை; இந்திரப்பிரத்தச்சருக்கம் உகூ-ஆங்க
வியிற்காண்க. பங்கசாதம்-தாமரை. பானுரா
சருனு-சூரியனாகியதலைவனுக்குப் பிள்ளையா
கியகன்னன்.

சாஉ. தேசிகேசன்-குருசிரேஷ்டனாகிய
பரசுராமனென்க. அடுக்கு பன்மைபற்றிவந்
தது. நிலையும்எவும் - சரம்விடுநிலையிலும்பா
ணத்தைச்செலுத்துதலிலும்.

சாங. ராசமண்டலம்-இராசசமூகம். பி
ணையன்மாலை-பின்னல்மாலை; ஒருபொருட்
பன்மொழியுமாம். பெற்றி-ஈண்டுச்சாமர்த்தி
யத்தன்மை. தன்னின்மேம்பட்டமைபற்றி
நாணினனென்க. வரிகழல்-கட்டியவீரக்கழல்.

சாச. வம்மின்-வாரீர். குமரன்-ஈண்டுத்
துரியோதனன்.

சாரு. அனந்தரம்-பின்பு. நீகொலந்தர
மெனக்கு-நீயாவெனக்குநிகர். முகசரோருக
ம்-முகமாகியதாமரைமலர். அரங்கபூசை-வீ
ரலக்குமிக்குஅரங்கத்திற்செய்யும் பூசையெ
ன்க.

சாசா. எழிலி-மேகம். வின்மை-வில்லின்
வலிமை. கோதமன்-கௌதமமுனிபேரனா
கியகிருபாசாரியன். அமுதவிந்து-அமிர்தத்
துளி. கிருபாசாரியன்சொற்கள் நீதியுடை
யார்செவிக்குஇனிமையாதலால், அவற்றிற்கு
அமுதவிந்துவை உவமைகூறினார். ஏ-அசை.

௬௭. சூதன்-தேர்ப்பாகன். ஏதம்-குற்றம். ஓ-எதிர்மறை.

௬௮. கொற்றவர்-அரசர். ஞானசரிதர்-ஞானவொழுக்கத்தையுடையவர். நன்மைதிமையென்பன - ஈண்டுயர்வுதாழ்வைக்குறித்தன.

௬௯. வேய்-மூங்கில். பரவை-கடல். ஒருவயின்-ஒரிடம்; அதுகும்பமென்க. உயர்ந்தோரை அடிகளெனக் கூறுதல் மரபாதலால் ஈண்டு அடிகளென்றது கிருபாசாரியனை; திருவிளையாடற்புராணம்இந்திரன்பழிதீர்த்தபடலத்தில் "அடிகணீர்மருதமொன்று" எனக் கூறுதலும், அருச்சுனன்றீர்த்தயாத்திரைச்சருக்கம் ௫௭-ஆங்கவியிலுங்காண்க. சரம்-நாணற்புல் நீருமாம். கிருபாசாரியன் பிறந்ததனை இந்தச்சருக்கம் ௨௯-ஆஞ்செய்யுளுரையிற்காண்க. முருகவேள்கங்கைநீரிற் சரவணப்பொய்கையிலுற்பவித்ததனைக் கந்தபுராணத்திற் காண்க. ௮௫-ஆஞ்செய்யுளிலுங்காண்க.

௭௰. எனையிழிவினேடொன்றி நின்றவாடகத்தையோடவைக்குமாறுபோல் - மற்றையிழிவுடையனவாகியலோகங்களோடு கலந்திருந்தபொன்னை (அவைகெட)ப்புடம்வைக்குமாறுபோல. இழிவு-ஆகுபெயர். ஓடவைத்தல்-மாற்றுயரப்புடமிடுதல்; ஓடவிட்டபொன்னெனவழங்குதலாலறிக. அங்கம்-அங்கதேசம்.

௭௧. அரிமுகஞ்செய்தாள்சுமந்ததவிசு-சிங்கமுகஞ்செய்யப்பட்டகால்களாற்சுமந்த ஆசனம். படையினன்-ஈண்டுக்கன்னன். வாகுசிகரமீதுமண்டலமிருத்தினனெனவே புயமலையிற் பூபாரந்தாங்கவைத்தானென்பது கருத்தாயிற்று. தாங்கல் தோள்வலியாற்றுஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ்செய்தாளுதல்.

௭௨. செல்வத்தாற்றுரியோதனனும் வலிமையாற்கன்னனுஞ் சிறந்தமைவிளங்குதற்குத் தனதனையுஞ்சிவனையுமுவமைகூறினரென்க.

௭௩. யானம்-வாகனம். ஆயுதம், யானம் அவற்றின்றொழிலையுணர்த்தலால்ஆகுபெயர்.

௭௪. வம்மின்-வாருங்கள். தம்மின்-தாருங்கள். எம்மினன்-எமதுபகைவன். எ-அசை. இனன்-இடைக்குறை.

௭௫. கனன்று- (யாகசேனன்மேற்) கோபங்கொண்டு. அங்கநாலு-ரதகசதுரகபதாதிகள். தெவ்-பகை; ஆகுபெயராய்ப்பகைவனையுணர்த்திற்று.

௭௬. மொய்ம்பு-வலி. முனை-யுத்தம். அனீகினி-சேனை. துவனி-ஒலி. விருதர்-வீரர். ஒளி நீட்டல்விகாரமாயிற்று; ஒளி ஒழுங்குமாம்.

௭௭. உளைத்து-கொர்ச்சித்து. முழை-குகை. உடன்ற-கோபித்த. மோகம்-ஆசை. கொடுத்தற்குடன்பட்டபூமியைக்கொடாமலதிலாசையுள்ளான் என்பதுவிளங்கமோகயாகசேனனென்றார்.

௭௮. சோமகர்-பாஞ்சாலர். சமர்-யுத்தம். கூர-மிக. பூமகன்-பிரமன்.

௭௯. தூறு-கூட்டம். வீறு - பெருமை. மன்விலங்கர்-மன்னுகியவிலங்கு. மன்-ஈண்டுயாகசேனன். விலங்கு விலங்கர் எனவிறுதி போலியாய்நின்றது. ஈடுபட்டது-வலியழிந்தது, அகப்பட்டதென்பதாம்.

௮௰. தகவுபடும்என்றது தகப்படும்என்ருயிற்று. பிணித்து-கட்டி. வாள்-ஈண்டுஆயுதம்என்னும்பொருள்பட நின்றதென்க.

௮௧. முறுவல்-நகை. உறுவது-சம்பவிப்பது. மூன்றாமடியில், உம்மைமுன்னதுஇழிவுசிறப்பு பின்னதுயர்வுசிறப்பு. எ-அசை. ஓ-எதிர்மறை. என்மேற்றவறில்லையென்பான் மறுவிலந்தனுளனென்றான்.

௮௨. வரைந்து-பிரித்து. சாபமுனியும் உதவினன்எனமுடிக்க. மற்று-பிறிதென்னும் பொருள்படவந்தது; அசைநிலையுமாம். மூன்றாமடியிற்கூறியது புகழ்வதுபோலப்பழித்தலென்க.

௮௩. புயங்கம்-பாம்பு. சுருதிவாய்மை-வேதவாக்கு, வேதம்போலப்பொய்யாதவாக்கு. குருக்கள்-குருகுலத்தவர். உயங்குதல்-வருந்தல். அடுக்கு அவலம்பற்றிவந்தது.

௮௪. மறுகு-வீதி. பணிலம்-சங்கு. நாடுடையான்-ஈண்டுயாகசேனன். தறுகண்-வன்கண்மை. முறுகிப்புரிதல் - திருகிவளைதல், இதுகோட்டைவிசேடித்தது. வெம்மை கலையைவிசேடித்தது. ஏ-பிரிநிலை. மகவைத்தோற்றுவிக்கும்யாகத்திற்கைவந்தவராதலாற் கலைக்கோட்டுமுனிவரையீண்டுவமைகூறினரென்க.

௮௫. நதி-ஈண்டுக்கங்கை. கோவின்வழக்கப்பெருவேள்வி-அரசர்க்குரிய வழக்கமாகிய பெரியபுத்திரகாமேஷ்டியை. நோன்மை-பெருமை.

௮௬. மிச்சில்-சேடம். விபுதர்-தேவர். இமைப்பு - இமைத்தல்; இது ஆகுபெயராயிமைப்பொழுதினையுணர்த்திற்று.

அஎ. வலையம்-வாகுவலையம். வயம்-வீரம். குருளை-குட்டி. பொலங்குன்றின்புறத்து-பொன்மலையின்மேல். தலைவன்-ஈண்டியாக சேனன். தலைப்படுதல்-நேர்படுதல்.

அஅ. அருணம்-சிவப்பு. செவ்வி-அழகு. வீரோதயன் - வடநூன்முடிபு. அடுக்கு-மிகுதிகுறித்தது. தோறும்-காலப்பன்மைபற்றிவந்தது.

அகூ. சங்கச்சங்கம் - கூட்டமாகியசங்குகள். சோமகன்-ஈண்டியாகசேனன். சயந்தன்-இந்திரன்மகன். ஆர்வம்-அன்பு. எண்டிசையுமலினமின்றிவிளங்குதல் மங்கலமென்க.

கூ௰. சுருவை-நெய்த்துடுப்பு. புறம்-எழனுருபு.

கூக. ஒருத்திஎன்றதுசீதையை. வாமனுதற்கண் -சிவபிரானதுநெற்றிக்கண்ணாகியவக்கினி. எண்-ஆலோசனை. அம்மா-வியப்பிடைச்சொல். கொல்-அசை.

கூஉ. முரண்-வலி. ஆங்கு-அசை.

கூங. கரணம்-அந்தக்கரணம். அரணி-தீக்கடைகோல். செகுத்தல்-கெடுத்தல், அம்மா-வியப்பிடைச்சொல். வினைப்பயனைமறுத்தல்கூடாதெனவறிந்தளித்தானென்க. இது வேற்றுப்பொருள்வைப்பணி.

கூச. அமைந்த என்னும் பன்மைவினைமுற்றினீறுதொக்கது. அமைந்து எனவினையெச்சமாக்கில் முற்செய்யுளோடுபொருத்தமின்றென்க. இக்காலத்தில் வியாசமுனி பரிமளகந்தியைவணங்கித் துரியோதனாதிகளும் பாண்டவரும் போர்புரியப்போகின்றார் நீபாராதுன்மருகி மாருடன்றவஞ்செய்யென அவ்வாறே அவருடன்வனத்திற்போய்த் தவஞ்செய்து கதியடைந்தாள் என்பது முதனூற்கதை.

கூரு. பூதி-செல்வம். ஆதிபன்-தலைவன். அனங்கனை வென்றோன் என்றது வீடுமனை. உம்மை-எச்சம்.

கூசா. ஏ-பிரிநிலை. நிலக்கு-இதில்அத்துச்சாரியை குறைந்துநின்றது.

கூஎ. குடைக்கும்முடிக்கும் இந்துவையும் ஆதபனையும்உவமானமாகக்கொள்க. தழீஇ-இச்செய்தெனெச்சத்தைச் செயவெனெச்சமாக்குக.

கூஅ. மாழ்கி-மயங்கி. மன்மதி-அரசநீதி, மதி ஆகுபெயர். இலாதான்-முற்றெச்சம்.

கூகூ. மன்பதை-மக்கட்கூட்டம். அநுசர்-தம்பியர். ஏ-பிரிநிலை. எந்தாய்-விளி. அன்பது இதில் அது பகுதிப்பொருள்விகுதி. அம்ம-இரக்கத்தின்கட்குறிப்பு. ஐ-சாரியை.

ஙா. எம்பி-என்றம்பி. ஆல்-அசை. ஏ-தேற்றம். ஓ-எதிர்மறை. தன்புதல்வனை ஐயா என்றது உவப்பின்கண்வந்தமரபுவழுவமைதி.

ஙாக. வாய்மை-வாக்கு. ஆதிபர்-தலைவர். வேத்து-விகாரம்.

ஙாஉ. உகவை-மகிழ்ச்சி. முகமுகுரம்புரைமுதல் - திருதராட்டிரன். சம்பவச்சருக்கம் ஙா௰ரு-ஆஞ்செய்யுளிற்காண்க. உண்டு-பொதுவினைக்குறிப்புமுற்று. முதல்என்னும் பண்பு பண்பியையுணர்த்தியது.

ஙாங. பேதகன்-கருத்துவேறுபட்டவன். மருள்-மயக்கம். ஏ-அசை. மொழிக்கு இதில் நான்காவது கருவிப்பொருளில்வந்தது.

ஙாச. இங்ஙன்-இவ்விடத்தில்.

ஙாரு. ஒன்றாது-இணங்காமல். திறல்-வலி. ஒருதிறல் இருதிறன்மைந்தரும் எனக்கூட்டினுமாம்.

ஙாசா. தெம்முறை-பகைமுறைமை. மதி-அரசனேமதிப்பாய். இனியவர்மதியாகுவது தம்மதியே - இனிமேலவர்கட்குப்புத்தியாவது தங்கள்புத்தியேவேறில்லை. ஏ-முன்னது அசை. பின்னிரண்டுந்தேற்றம்.

ஙாஎ. பொதுமை-நடுவுநிலைமை. புரோசனன் இப்பொழுது துரியோதனன்வழிப்பட்டுப் பாண்டவர்க்குத்தீங்குபுரியத் துணிந்தமையாற் பொதுமையிலாதபுரோசனனென்றார்.

ஙாஅ. தனிவயின்-தனியிடம். புரிந்து-விரும்பி. மற்று-அசை.

ஙாகூ. வாரணவதம்-காசி. புகழ்வது, நண்ணும்இவைகளிற்படுவிகுதிதொக்குநின்றன.

ஙா௰. ஒன்றுபட்டு-மனமொருப்பட்டு.

ஙா௰க. பின்னிரண்டடிக்கு-பார்த்தவர்கள் அமராவதியைக் கற்பகச்சோலையொன்றாலன்றி (ஏனையவற்றால்) இதற்குத்தாழ்ந்ததென்றுசொல்ல என்க.

ஙா௰உ. காவலன் - ஈண்டுத்திருதராட்டிரன். ஆங்கு-அசை. புறம்-ஏழனுருபு.

ஙா௰ங. செற்று-கொல்வித்து. செய்து-செய்வித்து எனப்பிறவினையாக்குக.

ஙா௰ச. என்னவும்-எவைகளையும். என்ப-அசை. தலைமைபற்றி இளவரசைக்கூறவே ஏனைநால்வருந் தாயுமுடன்சென்றாரென்பது தாமேபோதருமென்க.

ஙா௰ரு. ஆரம்-பதக்கம், சந்தனமுமாம்.

பூரஞானம்-நிறைந்தவறிவு.

௱௰௬. இங்கிதம்-எண்ணக்குறிப்பு.

௱௰௭. பாண்டவருக்குஅகத்திற்கேடுசூழ்கின்றானாயினும் அதுதோன்றாவண்ணம் புறத்திலவர்க்குயிர்போலினியனா யொழுகுதலால் ஆவியன்னவனைமச்சன் என்றார்.

௱௰௮. பேதுமயக்கம். பின்னம்-வேற்றுமை.

௱௰௯. ஆலயம்-மாளிகை. விரகு-உபாயம். ஏ-தேற்றம். ஐ-சாரியை. சூழ்ச்சியும்பெரிது-(ஆதலால்) இவன்கண் ஆராய்ச்சிமிகவிருக்கின்றது. வரும்பொழுதுதுரியோதனன் கருத்திற்கிசைந்து தன்வழியொழுகுஞ்சேனைகளைத்தெரிந்துகொடுவந்தானாகலின் அச்சேனைகள்புரோசனன்வழிப்பட்டிருந்தனவென்க. "தொழுதகையுள்ளும்படையொடுங்கும்" என்னுந்திருக்குறளின் கருத்தை யீண்டுக் கூறினமை காண்க.

௱௨௰. சங்கை-ஐயம். கோடலம்-கொள்ளோம்; இதில் து சாரியை, அல் எதிர்மறையிடைநிலையென்க.

௱௨௧. சையம்-மலை. பட்டதை-சம்பவித்ததை. ஐவருள்வீமன் சரீரவலியின்மிக்கானாயிருத்தலாலவனுக்கறிவித்தானென்க.

௱௨௨. நடுவுநிலையுடையனாதலில் விதுரனை அறன்வடிவாந்தந்தையென்றான். யமனுடைய அவதாரத்தனாகியதந்தையெனப்பொருள்கோடல் ஈண்டுஅத்துணைச்சிறப்பின்று.

௱௨௩. இப்படியினால் - இந்தத்தன்மையினால். தொழிற்பயன்என்றது பாண்டவர்ஐயுறாதுள்ளிருந்திறத்தலை. கோட்டுதல்-ஈண்டுச்செய்தல். முழை-குகை.

௱௨௪. ஊறு-தீங்கு. பிறரறியில்அதுவாயிலாகப்பின்னுந் தீங்குநிகழுமென்பான் திருவுளத்தடக்கியென்றான்.

௱௨௫. பிச்சர்-பித்தர். இவன்-புரோசனன். அம்மனை-அக்கினி; நீர்பிறத்தற்கிடமாயுள்ளதுஎன்றபடி. நித்தம்-நிச்சயமென்றுமாயிற்று. நித்தம்-தினம். கொடையின்மிகுதிவிளங்கப்பிச்சரிற்கொடுத்தென்றார். கொல்-ஐயம்.

௱௨௬. விடவி-மரங்கள். நடந்தார்-ஒழுகினார். புடவி-பூமி. குளிருமா இதுஈறுகுறைந்துநின்றது. புடவி-ஆகுபெயர்.

௱௨௭. பாந்தள்-பாம்பு. மந்திரம்-ஆலோசனை. காந்துநெஞ்சு-அழலுகின்றமனம். கைவிடார் - நீங்காதவராய். பாம்போடொருமனைவயிற்பயில்பவர் அதுஎங்ஙனமாயினுங் கேடுபயக்குமென்றச்சத்தோடு தம்மைக்காத்தொழுகிப் பயிலுமாறுபோல் இவருந்தீயபுரோசனனோடங்ஙனம்பயின்றாரென்பார் பாந்தளோடொருமனைவயிற் பயில்பவர்போல என்றார்.

௱௨௮. உசாவி-விசாரித்து. பாங்கர்-பக்கத்தில். அளையாகியபள்ளிஎன்க. பாங்கர் இறுதிப்போலி. புரோசனனையருகிற் பள்ளிகொள்கவெனின் அவனையுறுவனெனக்கருதி அவனஃதுறாதபடி அரசியலுசாவினாரென்க.

௱௨௯. அற்றம்-சமயம். தாதைநண்பன்-காற்றின்சகாயனாகியஅக்கினி.

௱௩௰. முளிகழை-காய்ந்தமூங்கில். புரிசை-மதில். கோயில்-அரசமாளிகை.

௱௩௧. தொக்க-பொருந்திய. பொக்கெனல்-விரைவுக்குறிப்பு. ஊர்-திரிபுரம். மூவர்-சுதன்மன், சுசீலன், சுபுத்தி; இம்மூவருந்திரிபுரத்திலெரியாது தப்பியவர். காஞ்சிப்புராணம் முப்புராரிகோட்டப் படலத்திலறிக. அங்கு-அசை.

௱௩௨. புரிந்த- (அம்மாளிகையையுண்ண) விரும்பிய. பாவகன்-அக்கினி. மீண்டும் என்பதிலும்மை எச்சம். கண்டோர்-வேடரைவருந்தாயுமெரிந்துகிடந்தமை கண்டோரென்க.

௱௩௩. விடமிட-(துரியோதனனேவற்படிபாண்டவருக்கு) நஞ்சிடவென்க. பாண்டவருக்குவிஷங்கலந்ததேனைக்கொடுக்க வேடரைவரும்அவர்தாயுந் துரியோதனனேவற்படிவந்திருந்தார் என்பது முதனூற் கதை.

௱௩௪. போது - சூரியன். மாது-அழகு. எதுபட்டன-என்னபாடுபட்டன, அதிகவருத்தமுற்றன என்பதுகருத்து. பட்டு-பட. புகுந்து-புக. எனச்செயவெனெச்சமாக்குக.

௱௩௫. கொட்பு-சுழற்சி. குருக்கள்-குருகுலத்தவர். துட்பதம் - தீதாகியவியாசம். பெட்புற - ஆசைமிக. பாண்டவரிறந்தமை கேட்ட துரியோதனாதியர்நடிப்புமாத்திரையாகக்காட்டியசெயற்கைத்துன்பம்புறத்தும் இயற்கைமகிழ்ச்சியகத்து முடையரானமையின், மூன்றாமடியிலங்ஙனமுவமைகூறினார்.

௱௩௬. பொன்னலங்கொள - புறத்தேபொன்னினழகுகொள்ள. மருச்சுதன் - வீமன். சுடுவான் எண்ணினான் எனக்கூட்டுக. என்னவாண்மைகொல்-இஃதென்ன வாண்டன்மையோஎன்க. ஏ-முன்னதுவினா. கொல்-ஐயம். ஓ- எதிர்மறை. மருச்சகன்-காற்றின்சகாயன்.

வேத்திரகீயச் சருக்கம்.

க. பூதநாயகன்-உயிர்களுக்குத்தலைவன். போதகாதிபன்-சுசேந்திரனென்னும் யானை. பொறை-வலி.

உ. தொக்கு - கூடி. குகரம் - எண்டுசில வறை. கதி - வேகம். சாரல் - பக்கம். தாய் துணைவர்தலைகளுந் தன்றலையும் விளங்கலாற் பலதலையாயினவென்க.

ா. நள்ளியாமம்-நடுயாமத்தில். திமிரம்-இருள். வன்னம்-வனமென்றாயிற்று.

ச. இராவணி - இந்திரசித்து. மெய்க்கந்தம்-சரீரவாசனை. மாயமும் வீரமுமுடைய னுதலில் இராவணியை யுவமைகூறினனென்க.

ரு. மலைதல் - யுத்தஞ்செய்தல். கொம்மை-வட்டம். கூறுகிற்பது-பிறர்க்குச் சொல்லுதற்கு. இறுதி - (என் கருத்தின்) முடிவென்க. அம்ம, வ, கொல், ஆம்-அசைகள். பெண்கள் தாமுறுகாமத்தன்மைதாங்களே ஆடவர்க்குரையாமை அவரியல்பென்க.

எ. நிற்க - கொல்லுதற்காயத்தமாய் நிற்க. ஓடி-அதற்குமுன்னுகவோடி. செகுத்திடும்-நீச்குவான். அம்பரம்-ஆகாயம். இரக்கமின்றி வருத்துதலான் மாரனை நிருதனென்றாள்.

அ. ஆண்மைபோதுமோ-ஆண்மைக்குத் தகுமோ என நான்காவது விரித்துரைக்க.

கூ. நவை - குற்றம். நீர்மையான் - முற்றெச்சமாய் வருங்கவியிலியையும்.

ல. இடிபடுத்து-இடியையுண்டாக்கி. வெடில்-மூங்கில். வானுற நிமிர்ந்தமையாற் கானமெங்கணு நிழலுண்டாயிற்றென்க. நீர்மையனுய்ப் புகைந்து சிரித்து வாயினனுய் நிமிர்ந்துளானுய்க் கூவிக் குறுகினனென்க. நெடிபடுத்த என்பது பாடமாயின் நெடி-சின் வண்டென்க.

லக. கங்குல்வாணர் - நிசிசரர். அணவுதல்-பொருந்துதல். பிணவு-பெண். கலை-கலைமான். பேதை-அண்மைவிளி.

லஉ. வார் - நேர்மை, எண்டு முறைமையையுணர்த்திற்று; அடா-ஈறுதொக்க பெயரெச்சம். யாதுதானர் - இராக்கதர். வாரடாவென்பதற்கு வாடாவெனப் பொருள் கூறுதலுமாம்.

லா. வென்றி - வெற்றி, நல்குமா என்பது கடைக்குறையாயிற்று. விந்தை - வீரலக்குமி.

லச. குணபவல்சி - பிணத்தையுணவாகவுடைய இடிம்பன். முனைந்து - பொருது. தத்தினுர்-பாய்ந்தவராகி. அம்புதம்-மேகம். உரும்-இடி. அடுக்கு மிகுதிபற்றிவந்தது.

லரு. செம்புனீர்-இரத்தம். கேதம்-துன்பம். கோதவாய்மை-குற்றமுடைய வாக்கு. ஆடகன் - இரணியன். பின்னை - இலக்குமி இடிம்பன்றங்கையுமாம். முன்னுற-முன்னுக நிற்க.

லஎ. தமையனிறந்தமையால் வருத்தமும் இனி வீமனைச் சேரலாமென்பதனுன் மகிழ்ச்சியுமுற்றாளாதலால் உளைவுடனுவகையுமென்றார். உளைவு-வருத்தம்.

லஅ. மங்கலஞ்செய்தற்குரிய திசையாதலால் அருந்திசையென்றார். இது பெயர் பொருட்டற்குறிப்பேற்றவணி.

லகூ. சூரியனைக்குறிக்குங்கால், கரம்-கிரணம். நிசாசரவிருள்-இரவிற் சஞ்சரிக்கு மிருள். வனம்-நீர். த[illegible]முகம் - தாமரைமலர்களின் முகம் என்[illegible]. வீமனைக்குறிக்குங்கால், இராக்கதனுகியவிருள், காடு, தாமரைமலரைப்போன்ற முகம் என்க. வரம்-மேன்மை.

உல. எண்டகுகவர்மனம் - யோசனைமிக்க கவர்த்த மனம். மணம்புணர்வாறோ ஒழிவாறோ என விருபகுதிப் படநினைத்தலாற் கவர்மனமென்றார். காணலன்-[illegible]கைவன்.

உக. காய்ந்தமை-(சூர்ப்பநகி மணஞ்செய வேண்டியபோது அம்மணத்தை) வெறுத்தமையை என்க. காய்ந்தமை என்பதற்கு அவளை மூக்குமுலையுமரிந்தமை யென்பாருமுளர்.

உஉ. அனிலன் காதலன்-வாயுகுமாரன். கட்டுரை-உறுதிமொழி. ஓசை - கீர்த்தி. உசாவி - ஆய்ந்து. ஏசு - குற்றம். விரும்பிய கன்னிகையை மறுத்தல் ஆடவர்க்குக் குற்றமாதலின் அது நீங்கவுரைத்தாளென்பார் வசறவுரைத்தனளென்றாரென்க.

உா. கறுத்தவர் - பகைவர். வேண்டும், தகும் என்பன தொழிற்பெயர், தேற்றப் பொருடந்தனவென்க.

உரு. முந்துறவைகி எனக்கூட்டுக. மனனுற-மனம்பொருந்த.

உஎ. தமபடர்-தங்களுடைய வருத்தம். இமையவன்-தேவனுகிய வியாதமுனி.

௨௯. கொடிமந்தரம்-லதாக்கிரகம். கந்தருவப் புணர்ச்சியாதலின் மேன்மணம் என்றாரென்க.

௩௧. காதியதிறல் - பகைவரை யழித்தவலி. ஆதிவெங்கோலம்-திருமாலாகிய வெவ்விய வராகம். திருமால் வராகரூபங்கொண்டபொழுது தன்னைக்கண்டுமயங்கிய பூமிதேவியைப் புணர்ந்து நரகாசுரனைப்பெற்றார் என்னுங்கதையுண்மையறிக. பின் அந்நரகாசுரன் செய்நீங்கிழைலவனைக் கொன்றாரென்றுங்கதையுமுண்டு.

௩௨. நிறை-ஆடவர்க்குரிய குண நான்கினென்று. பிறையெயிறு-பிறைபோன்ற வக்கிரதந்தம். பனிவிடை- உம்மைத்தொகை. ஐவரையுநோக்கித் தந்தையர் நீர் என்றான். தந்தையைநோக்கி யிறைவவென்றான்; வேறுமுடிவுகோடலிற் பால்வழுவின்றெனக.

௩௩. முனிவர் - ஈண்டுப் பிராமணர். காத்திரம்-வடிவம்.

௩௪. அதிதியர் - விருந்தினர். முந்துபு-முந்தி. ஆதிதேயர் - விருந்தினரையுபசரிப்போர். அடுக்கு உவகைபற்றிவந்தது.

௩௫. மன்மனை-அரசமாளிகை. தருமன் தன்மன் என்றாயிற்று. அம்மனை-தாய்.

௩௬. அருநெறிக்கடவுளர் - அரிய வழிப்போக்கினராகிய பூசுரர். முறைப்படி - உபசரிக்குமுறைப்படி. தன்மை-இயல்பு. அமிழ்தம், அமுது என்பன உணவினைக்குறித்தன.

௩௮. வனசரிதர் - வனத்திற் சஞ்சரிப்பவர்கள். பொலிவு - அழகு. கொடுமை-வருங்கவியிற் கூறும் பகனால்வந்த கொடுமை. இறையும்-கணப்பொழுதும். அறல்-நீர். இனைதல்-வருந்தல்.

௩௯. குறைய - சோர்வடைய. குறையவுரைசெய்குவனெனக்கூட்டுக. மறண்-வலி. தறுகண்-அஞ்சாமை. மகன், வனன் என்பன இறுதிப்போலி. மகன்-இருமடியாகுபெயராய்க்கண்ணோட்டத்தையுணர்த்திற்று.

௪௰. சரிதம் - ஒழுக்கம். பொறி - அடையாளம். உடல்முழுதும் என்னு முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. கடையடி இல்பொருளுவமை.

௪௧. மன்ற - நிச்சயமாக. மறுகிடை - வீதியில். செங்கையார்-மூற்றெச்சம்.

௪௨. விஞ்சையோர்குன்றம் - விஞ்சையரிருத்தற்குரியவெள்ளிமலை, கைலையன்றென்க. அடிசில்-சோறு. அடுக்குப்பன்மை குறித்து நின்றது.

௪௩. இறை - சிறிது. பலி-நரபலி. எஞ்சுற-குறைய. தஞ்சம்-ஈண்டுத்துணை. அந்தணர்வேண்டுகோட்கிரங்கி அங்ஙனமுடன்பட்டமையின் இறையன்பினொடு என்றார்.

௪௪. சர்மன் . சன்மன் என நின்றது; சர்மன் பிராமணனுக்குரிய பெயர். குலமுதல் - வமிசத்துக்கு மூலமாயுள்ளவன். அன்னை என்பது முறைப்பெயர்பற்றிய வழுவமைதி.

௪௬. அலமரல்-மனஞ்சுழலற்க.குவ்வின்-பூமியில். சுதர்-புதல்வர். அவ்வியம்-பொறாமை. செவ்வியோர் - நடுநிலைமையர். இவ்விவரில்-இந்தக்குணங்களையுடைய இவர்க்குள். பௌவம்-கடல். பைதல்-துன்பம்.

௪௭. மறலி-இயமன். மகவு - ஈண்டுமார்க்கண்டேயர். செனக செனனியர் - தாய்தந்தையர். தவம் தவன் எனப்போலியாயிற்று. துவனி-ஈண்டழுகையொலி.

௪௮. விடலை-ஈண்டு வீமன். தம்பண்டி-தங்கள் வயிறு. ஒருபண்டிகெழுமியபண்டம்-ஒருபண்டியில் அவ்வுணவுப்பொருள்கள் நிறைந்தன. அடையடுத்த மலைகள் பலபொருளுவமை.

௪௯. வைகலுடன் - உதையகாலத்தில்; உடன் என்பதனை எழனுருபாகத்திரித்துரைக்க. ஐயை-தாயாகிய குந்தியென்க. ஒய்யென் விரைவு-மிகவிரைவு என்க. மெய்யை - தன்னுடம்பை. மொய்-ஈண்டு மிகுதியை யுணர்த்தியது. தெளிவுபற்றிப் பெய்த குருதிஎன இறந்தகாலத்தாற்கூறினாரென்க.

௫௰. நெற்றிமிசை-அப்பண்டியின் முற்பக்கத்தில். அரி-சிங்கம். துற்றபலகறிசெற்றிய மலைசெய்துப்பு-குவிந்த பலகறிகள் நெருங்கிய மலைபோலச் செய்யப்பட்டவுணவாகிய அன்னம். சகடு எனச்சந்தவின்பநோக்கி யிரட்டாது நின்றது. அடுக்கு மிகுதிகுறித்து நின்றது. உய்க்கக்கட்டினனென இயைக்க. உய்க்க-உய்க்கும்படி.

௫௧. பரிதி-சூரியன். முனிகுலம் - பிராமணர்கள் கூட்டம். பேயிரதம்-கானல். அடுக்கு ஒருதொழில் பலகாணிகழ்தல்பற்றிவந்தது. ௫௨, ௫௫, ௫௬-ஆங்கவிகளினும் அடுக்குகள் இவ்வாறே வந்தனவென்க.

௫௨. களிந்த வெற்பு - களிந்தமலை. நதி-காளிந்தியென்க. கழிமுழை - பெரிய முழைஞ்சு. முனிந்து-காய்ந்து. புகைமுகன்-சினக்

குறிப்புண்டாகின்ற முகம். புகைதல்-சினக் குறிப்பு. பலிவருந்திசையைநோக்கி நின்றமையால் விழிநிரைத்தென்றார்.

௫௩. விகங்கம்-பறவை. மேவர-விருப்பமுண்டாக. சம்புகம்-நரி. அல்லல்-துன்பம். உடற்றினல்-கொன்றால். வல்சி - அன்னம். இச்சையான்-முற்றெச்சம். இவனுண்டெஞ்சிய புலாலைப் புசிக்குமாறு சூழ்ந்தனவையிட்டனவென்பார் துதிசொல்லவென்றும், இயைந்த எதிரிவாய்த்தமையின் உகந்தென்றுங் கூறினர்.

௫௪. வாரி-கடல். ஆர் - அருமை. பின்-அருந்தியவதன்பின்பு. பண்டியில் முன்பின்னாக மாறியிருந்துண்கின்றமையின் பகன் வீமனுக்குப்பின்னாகவெய்தினனென்க.

௫௫. விடக்கு - தசை. பூனை - பூனை. எளிமை-நீகருதிய எனதுஎளிமைத்தன்மை. பனை-பருமை.

௫௬. முட்டிகள்-முட்டியாகப்பிடித்தகைக்குத்துகளை யுணர்த்தலால் ஆகுபெயர். போவது-தொழிற்பெயர்.

௫௭. சுவடு - அடையாளம். அர்க்கன் - சூரியன். ஒத்து என்றதன்பின் உக்கிரங்கொண்டு எனவருவித்துரைக்க. இவனோடுத்தரித்து-இப்பகனோடு சருக்கித்து. ஒட்டினன்-போர்க்குடன்பட்டவனாகி. கச்சகத்துகைப்பான பயனில்வார்த்தை. உத்தரித்துரைசெய்தல் என்பது ஒருசொன்னீர்மையாய் விடைகூறுதலை யுணர்த்திற்றென்பர். அடுக்கு மிகுதிகுறித்தது. கச்சஎன்பது போலி.

௫௮. சரணபற்பன்-பாததாமரையுடையனாகிய வீமனென்க. உடல - போர்செய்ய. வட்டம்-மண்டலம். ஒட்டி-கலந்து. மற்றொழிற்செரு-மற்றொழிலாகிய யுத்தம். மட்டியா-மட்டித்து. முட்டியுத்தம்- முட்டிப்போர்; அது கைவிரல்களைமடக்கிக்குத்தும்போர். பத்மம் பற்பம் எனத்தற்பவமாயிற்று. நிற்பது என்னுந் தொழிற்பெயர் ஈறுகெட்டு நின்றது. அடுக்குகள் மிகுதிபற்றி வந்தன.

௬௰. பிணங்க - பின்ன. மூன்றாமடியில் அட்டு என்பதற்குச் சேர்த்து என்றும், நான்காமடியில் இட்டு என்பதற்கு எறிந்து என்றும் பொருள்கொள்க. இகலி-மாறுபட்டு.

௬௨. விழுத்திமார்பின் மண்டியிட்டுஎனக்கூட்டுக. மண்டியிடுதல்-இருகான் மடக்கி நிற்றல்.

௬௩. அரி-அக்கினி. மோகரித்து-கோபித்து. அவுணர்-மந்தேகர் என்னுமசுரர்கள். தடிந்து வதைத்து.

௬௪. மணி-அழகு. எடுப்ப-நகருள்ளாரெடுப்ப. தவம்-ஈண்டு இல்லறதருமவிரதங்கள்.

௬௫. சமரமொய்ம்பன்-யுத்தவலியுடைய வீமன். சொல்-ஜயம். துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தமையான் மால்கொலென்றானென்க.

திரௌபதி மாலையிட்ட சருக்கம்.

௧. பங்கம்-குற்றம். மாழ்க-வருந்த. துங்கம்-உயர்ச்சி. துருபதன்-யாகசேனன். சூழ்ந்தது-எண்ணிச்செய்தது.

௨. வான்மொழி-அசரீரி. தேசிகன்-தன் குருவாகியஉவூகமுனியென்பர். உரத்தினர் ஈண்டுப்பாண்டவரென்க. தேசிகனுரைத்தவாறுவதுபாண்டவரிறந்திலரென்பது.

௩. தான்வரித்தவற்கு - தானாகவேண்டுமென்றுநியமித்தவனுக்கு. தனயை-புத்திரி. கான்-வாசனை. வரி-இராகம். உண்-(தேனை) யுண்கின்ற. வரி-செவ்வரி. தேன்வரித்தல்-வண்டுகள்நியமித்தல். சேனைஎன்றதற்கியையத்திரண்டதுஎன்றார்.

௪. பாங்கு-அழகு. தாங்கு - முதனிலைத்தொழிற்பெயர். மனத்தேர் - மனமாகியவிரதம்.

௫. சாரம் - இனிமை. தந்திரம் - நூலறிவையுணர்த்தலால் ஆகுபெயர். நீரதநெறி-நீரற்றவழி. அதம்-கேடு. இன், ஆல் அசைகள்.

௬. முந்த-முன்னாக. வாழ்வு - வாழ்வை. சுணங்கு-தேமல். தொடையல்-மாலை. கொள்வான்-வினையெச்சம்.

௭. எய்தும் - அடையுங்கள். தோற்றுதலாண்மை-சுயவடிவத்தோடு தோன்றுதலாண்டன்மை. மைப்புறப்பார்த்தன்-கரியசரீரத்தையுடையவருச்சுனன். மணி-அழகு.

௮. குத்திரம்-வஞ்சம். விஞ்சைவேந்தன் பெயர் சித்திராங்கதன். தீயத்திரம் -அக்கினி

யம்பு. இருந்தை-கரி. அம்மா-அசை, வியப்பிடைச்சொல்லுமாம்.

௰. புலர்ந்தன - ஈண்டுநீங்கினவென்க. புள்-பறவை. மா-விலங்கு. குருகு - ஈண்டுச்சேவலென்க.

௰௧. அடுக்கு-உவகைபற்றிவந்தது. போலும்-ஒப்பில்போலி. உதவ-(என்பதற்குஎன் நண்பன்மகளை மணம்புரிந்து) உதவிசெய்ய என்க.

௰௨. வெறி-தேன். முளரிமொக்குள்-தாமரையரும்பு. பொறி-புள்ளி. வரி-இராகம். நிமித்தம்-சகுனம்.இங்ஙனமேநாமுந் திரௌபதியின்போகத்தை அனுபவிப்போமென்று மனத்தில்நிச்சயித்துச் சென்றாரென்க.

௰௩. துறை-நீர்த்துறை. உறை-நீர். வென்று-அம்மீன்களைவென்று. ஆங்கு,ஏ-அசை. திரௌபதியைக்கருதி பலவரசர்வந்திருந்து அவர்கணம்மாற்றேல்வியடையநாமே அவளைக்கைக்கொள்வோமென்பதனை இக்குறிப்பினாலறிந்துவகை கூர்ந்தாரென்க.

௰௪. மாக்குரல்-வ[illegible]டுகளினோசை. இவ்வாறன்றிமா-கருமை. குரலளகம் ஒருபொருட் பன்மொழியெனினுமாம். வம்மின் - வாருங்கள். கூக்குரல் - கூவுகின்றசத்தத்தால். விளிப்ப-அழைப்பன, இதுபெயர்பொருட்டற்குறிப்பேற்றம்.

௰௭. வாரணமாயை-மறைப்பினைச்செய்யுமாயை. ஆரவம்-ஒலி.

௰௮. மங்கலமுழவம் - மணமுரசம். எல்லாத்தானை-நால்வகைச்சேனை. இராசமண்டலம்-இராசகூட்டம் என்க.

௰௯. தொடங்கல், வளர்தல், மடங்கல் இம்மூன்றுமுறையே சிருட்டி திதி சங்காரங்களைக்குறித்தன. இந்நகர்யாவரையும் எல்லாப்பொருளையுமடக்கியிருத்தலால் திருமாலுதரம்போன்றதென்றார்.

௨௰. மழைப்புறமாடம்- மேகத்தைப்புறத்தேயுடையமாடம். இதில்அல்பொருட்டற்குறிப்பேற்றவணிகாண்க.

௨௧. விதானம்-மேற்கட்டி. குலாலன்-குயவன். வீரமுடையமன்னர்பிராமணர்வடிவங்கொண்டமையாலிவ்வுவமானங்கூறினார். பிராமணர் குயவர்மனையிற்றங்கலாமென்பது நூல்வழக்கு.

௨௨. எதுகைநோக்கித் தூங்கணங்குரீஇ எனமெலித்தலாயிற்று, இன்னுருபு ஒப்புப்பொருட்டு.

௨௩. ஆதியில்-முற்பிறப்பில். விதியினால்-சிவபிரானியமித்த நியதியினால். உலப்பு-ஒழிவு. ஐவர்-தொகைக்குறிப்பு.

௨௪. வைகல் - நாள். தீட்டிய-எழுதிய. கோட்டிய-வளைத்த. கோலம்-அருச்சுனன்வடிவக்கோலம்.

௨௫. மீண்டு-திரும்ப. தன்பிதாஅருச்சுனன்வென்றியை வியந்துபிரியத்தால்மணஞ்செய்துகொடுக்க வுடன்பட்டமையால் அன்பினாலென்றாள். ஏ-தேற்றம்.

௨௬. சேண்புனல்-தூரதேசங்களிலிருந்து வந்ததீர்த்தங்கள்.

௨௮. பாவை-ஆகுபெயர். பாவம்-அபிப்பிராயம்.

௨௯. மங்குலில் - ஆகாயத்தில். அவர்என்றதுபாண்டவரை. ஓ-வினா.

௩௧. சிலீமுகம்-பாணம். திரிகை-குலாலசக்கரம். இலைமுகம்-ஆர். எந்திரத்திகிரிநாப்பண்-யந்திரசக்கரத்தினடு.

௩௨. கதித்து - மேலெழுந்து. பரிவு-ஆசை. பிரிவுற்றார் - நீங்கினார்.

௩௪. திருந்து - திருந்துதல். இருந்தார்-பெருமையாகியமாலை. முருந்து-மயிலிறகடிக்குருத்து.

௩௫. இவனுக்குமாலைபுனையாமைவேண்டுமெனக்கருதிப் பொய்யேமலர்ந்ததிருமுகத்தானென அவன்றீக்குணத்தையெடுத்துக்கூறினாரென்க.

௩௬. கொடுமைவகிர் - கொடுமையின்பிளவு; இது இல்பொருளுவமை.

௩௭. உலைவந்து-வருந்தி. குலக்கலை-நல்லஆண்குரங்கு. கண்டாய் - முன்னிலையசை. முன்னிரண்டடியால் இவனும்மாதர்க்கு வேண்டியவற்றைத் தந்துவக்கச்செய்வன் என இறைச்சிப்பொருடோன்றினும், அதுகருதிவிரும்பாதிருக்கவேண்டிப் பின்னிரண்டடியினும் அவன்றீக்குணங்களையெடுத்து கூறினாரென்க. நிலைவஞ்சனை-எவராலுமாற்றுதற்கரியவஞ்சனை.

௩௮. சிவானுக்கிரகத்தாலுற்பவித்தலாற்பிறப்பால்என்றார்.படை-படைக்கலத்தொழில்; இதுஆகுபெயர். ஈசானன்-வடகீழ்த்திசைக்கிறைவன்.

௩௯. உரை-புகழ்.

௪௰. இராமன்-பலராமனென்க. அலம்-கலப்பை. சலம்-கோபம். யமுனை-யமுனாநதி இதுகருநிறமுள்ளது. தானை-நீலவஸ்திரமென்க. முன்பலராமன்ஆயமகளிருடன் கிரீடைசெயக்கருதித் தூரத்திலிருந்த யமுனை

யைஅருகுவரவழைக்க அவ்வாறுவாராது பராமுகஞ்செய்தமையால் வெகுண்டுதன்கலப்பையாயுதத்தை அதிலிட்டுப்பிளந்தமையால் அலத்தான் முன்னம்பிளந்தபகை யென்றார்.

௪௧. இந்திரனுடைய அந்தநகரத்திலிருக்குங்கற்பகச்சோலையைத் தன்மனைவியிருக்கும் அந்தப்புரத்திற்கொண்டுவந்துவைத்தமையைப்பின்னடியிற் கூறினரெனக.

௪௨. கண்ணன்றனனைக் கார்முகத்தையவமதித்துப் புன்சொற்கழறுந்திண்ணென்கருத்தான்எனக்கொண்டு கூட்டுக. சேதி-சேதிநாடு. காண் - முன்னிலையசை. இச்சிசுபாலன் கண்ணனுக்கோரத்தை பிள்ளையெனவறிக.

௪௩. உம்மை-எச்சத்தொடு சிறப்பு. மதுராபுரி யமுனை நதிக்கரையிலுள்ளது, துவாரகை மேற்கடனடுவிலுள்ளது. இச்சராசந்தன் மலைக்கோட்டை சூழ்ந்த மகததேசாதிபதியென்க.

௪௪. பகடு-யானை. வினை-யுத்தம்-முனைக்கண்-போர்முனையில். இவன்யானைப்போரில் வல்லவனென்க. இவன் நகரம்சமுத்திரநடுவிலுள்ள மாகிஷ்மதி.

௪௫. சல்லியன்மத்திரதேசாதிபதி யென்க. வீரசுவர்க்கமேற்றுதலால் இமையோராக்குமென்றார். நீலன் நகரம்-மாகிஷைபுரி.

௪௬. அரசு என்னுஞ்சொற்கியையத் திரண்ட என அஃறிணையாக முடித்தார். மதன் பூவாளிக்கிலக்காகாதவரிலர்போல இவ்வரசர்வாளிக்கிலக்காகாதவரிலராதலின் மதனைநிகர்கூறினர்.

௪௭. தவர்-வில். சாயகம்-பாணம். பவரிற்செறிய நிரைத்துருளும் பல்வாய்த்திகிரி-கொடியாற் பொருந்த ஒழுங்காய் நிறுத்தப்பட்டுருளுகின்ற பல வாய்கள் பொருந்திய யந்திரசக்கரத்தில். வாய் எண்டுஆரின் வெளிகளென்க. பவர் கொடியென்பதனைப்புறநானூற்றுரையிற்காண்க. கம்பரும் வேள்விப்படலத்தில் "பவர்சடையந்தணன்" என்றார். எழுந்திருந்து-என்பது ஒருசொல்.

௪௮. கைத்தாயர்-செவிலித்தாயர். முகத்தாளை-முகத்தாளுக்கு.

௪௯. அனுவுருக்கொண்டு (அப்பார்ப்பனமாக்களை) யொத்தவுருவத்தைக் கொண்டு. அலாயுதன்- கலப்பையாயுதனாகியபலராமன்.

௫௰. அகங்கரித்து - அகங்காரங்கொண்டு பணை-பருமை. அமையும்-இது போதும்.

௫௨. பூதகன்-பூமியிற்பிறந்தவன். கதன்-அடைந்தவன்; எண்டுப்பிறந்தவன் என்க. மாகதன் மகததேயத்தரசனாகியசராசந்தனென்க. வில்லின்மார்பு - வில்லினடுவென்க. சாகதன்-வலியவன்.

௫௪. உரவு-வலி. இரவிகுலச்சிறுவன் - இராமன்.

௫௫. வின்மரபு-விற்குலம். கடையிற கூறியவுவமையாலிவனுமோராணுத் துணையும் வருத்தமின்றி யெடுத்தானென்க. அந்தணர் எனைமூன்றுவருணத்தும் மணம்புரியலாமென்னும் விதிபற்றி தகவென்று கூறினனென்க.

௫௮. ஆனகதுந்துபிமுதல்வன்- வசுதேவனுடைய முதன்மைப்புத்திரனாகிய கிருட்டிணன். வசுதேவனாகிய முதல்வன் என்பது சிறப்பின்று. சூனு-பிள்ளை.

௫௯. பரிவித்து-வருத்தஞ்செய்து. வேர்ப்பாடுநுதல்-வேர்வையுண்டாகுநெற்றி. ஆர்ப்பு-ஆரவாரம். கோடி-எண்டுமிகுதியையுணர்த்தியது.

௬௰. முருத்து-விகாரம் கோகு-புயம்; நிரைமீட்சிச்சருக்கத்தில், "கோகுதட்டிடுதனஞ்சய" எனக்கூறுமாறு காண்க. தட்டிட்டு-தட்டி. வார்தக-மிக.

௬௧. மிகைத்த-கோபித்த.

௬௨. இருவர்-கன்னனுஞ் சல்லியனும். வேதமோதன்முதலியகருமஞ்செய்யும் வைதிகராதலின் இவரை வென்றாலும்வசையேயென்றாரெனக.

௬௪. கொற்றவை - வீரலக்குமி. கம்பி-தொழிலையுடையவன். தாங்கொண்டவேடத்திற்கியைய ஐயமென்றாரெனக.

௬௫. புறம்பர்-வெளி. சுரும்பர் என்றாற்போலப்போலியாயிற்று.

௬௬. ஒருமாதை ஐவர்மணஞ்செயதல் கூடாதாயினுஞ் சிவபிரானியமித்த ஊழின்வயத்தராயிவர்நிற்றலின், எங்கணெஞ்சிலு நினைவுண்டெனக்கூறியது வழுவன்றென்பது விளங்கக்கடையடியில்விசேடணங்கொடுத்துக் கூறினரெனக.

௬௭. எவருங்காணின் இவளான் மயங்கி அம்மதனாலாளப்படுதலின், மாரனுக்கரசு நல்குமங்கையென்றார். மங்கையுந்தானுங் கேட்டாள் எனச்சிறப்பினாலொருமுடிபேற்றதென்க.

௬௯. வைக்க-பரிசோதிக்கு நிமித்தமாகவைக்க. பண்டைப்பயிற்சிவயத்தாலுஞ், சாதித்

தருமத்தாலும் ஆயுதத்தையே யெடுத்தாரென்க.

எரு. உரை-புகழ். மௌற்கல்லியன் ஓர் முனிவனென்க. நாளாயனன் என்னுமோர் முனிவன் புத்திரியானதால் நாளாயனியென்றுபெயரென்பர்.

எச. துவக்குநோய்-ஈண்டுப்பெருவியாதியென்க. கோதித்த இதில் முதனீண்டது. கூர்ந்து-மிகுந்து.

எரு. மிச்சிற்புறத்து-சேடத்தில். வீழ்தல்-விரும்பல். குச்சித்தல்-அருவருத்தல். மிச்சில்-ஈண்டு உண்டெஞ்சியவுணவென்க.

எசு. திறைநல்க - (உமாதேவியாருக்கு)த்திறையாகக்கொடுக்கஎன்க. உம்மை - சிறப்பு.

எஎ. மிச்சிலில்விரல்வீழவும் விரும்பிநுகர்தல் அருந்ததியுஞ் செய்யாமையின், மிகு கற்புடைமீனுமொவ்வாளென்றார்.

எஅ. அவன் குன்றாயின் இவள் நதியாயும், அவன்மரமாகில்இவள்கொடியாயும் இவ்வாறேஒவ்வொருயோனியிலும்பிரியாதுதுய்த்தாரென்க.

எகூ. இந்திரசேனையென்னும் பெயருடையவளாகியென்க. அந்தப்பதியை - அந்த நாயகனாகிய மௌற்கல்லிய முனிவனை.

அய. ஏந்தல்-ஈண்டுமௌற்கல்லியமுனி. கூற்றால்- (என்றவத்திற் கிடையூறு புரிவதனால் நீமானுடயோனியிற் பிறந்து ஐந்துபுருடரைச்சேர்வாய் என்று சொன்னசாப) வசனத்தால். மூரல்-நகை, இது தனது எள்ளல் பற்றிவந்ததென்க.

அக. ஐந்தானசொல்லால்-(பதிந்தேகி என்று ஐந்துமுறையாகச்) சொல்லிய ஐந்தாகிய சொல்லால் என்க. ஐந்தானபோகம் - ஐம்புலனுகர்ச்சியானவின்பமென்க. ஐந்தான சொல்லான்-பஞ்சாக்கரமாகிய ஐவகைச்சொல்லுடையானாகிய சிவபிரான்; ஒவ்வோரக்கரமுமொவ்வொருபொருளைத்தருதலின் ஐந்தானசொல்லானென்றார்; சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம், "அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி" யெனக் கூறுமாறு காண்க.

அஉ. தேவன்மொழியின்படி-சிவபிரான் இக்கங்கையின்மூழ்கிஉன்னெதிர்தோன்றும் புருடனையழைத்து வா என்ற) திருவாக்கின் படி. அழுகின்ற-(எவரையுங் காணாமையால்) அழுகின்ற. கண்ணீரெல்லாம்பொற்றாமரைகளாயினவென்க. தன்னந்தனி - மிக்கதனிமை.

அரு. தொடர்பால்-(சிவபிரானருளிய திருவாக்கின்) சம்பந்தத்தால். எஞ்சினான்-இறந்தவன்.

அச. வச்சிரம்-வச்சிராயுதம்.

அரு. பாகசாதனன்-பாகன் என்னுமசுரனைச் கொன்றவன். சிவபிரானைமதியாமையாகியதவறுபுரிந்தமையாற் புன்பாகசாதனனென்றார்.

அசு. தினநாதன்றனயர்-சூரியன்புதல்வராகியதேவமருத்துவரிருவர். சிலைவீரன்-என்றது விசயனை. பிறப்பிற்கு - தன்னுடைய பிறப்பினுக்கு. நான்கிந்திரருந் தருமன்முதலோர் கலையாற்பிறக்க இவன் தன்கலையாற் பிறந்தமையாற் பிறப்பிற்கவனேமுன்பிதாவுமானானென்றார்.

அஎ. தெம்மாதர்முற்பூண் - பகைவர்மனைவியர் மங்கிலியங்களை யனையணிகட்கு முதன்மையுற்றிருத்தலான் முற்பூணென்றார்.

அஅ. மறைநாலுமுருவுசெய்தலாவது-தைத்திரியம், பௌடியம், தலவகாரம், அதர்வம் எனநான்காய் விரிந்து கிடந்த வேதங்களைப் பின்புசிற்றறிவோரெளிதினுணருமாறு இருக்கு முதல்நான்காக வகுத்தல்; இதனைக் கலித்தொகையுரையிற்காண்க. செய்த ஒவ்வா வியாதன்என்றியையும். ஒவ்வா-ஈறுதொக்கபெயரெச்சம். வியாதமுனி சிவபிரானருளால் ஓதாதுணர்ந்து மறைநாலுமுருவு செய்தமையால், அவனருளால் ஓதியுணர்ந்த வேதா அம்முனிக்கொவ்வானென்க. தூதான வண்டு - மகளிர்விடுத்த தூதாகியவண்டுகள். துதைதல்-நெருங்குதல். சோமகேசன்-யாகசேனன். ஐவர்க்குமுரியளாகியமகளைவிவாகஞ்செய்தல் தகாதென்று கருதினமையாற் கோதான நெஞ்சு என்றார். வேதாவும் என்றவும்மைசிறப்பு.

அகூ. சிவபிரானருளால், ஐந்திந்திரர்களாகிய விவர் இவட்கு நாயகராயினரென்றமையால்உண்டாகியவியப்பென்க. ஈடா-தகுதியாக. அயர்வித்தனன் - செய்வித்தனன்.

கூக. பிளிறியார்ப்ப-மிகவொலிப்ப. வேதி - மணஞ்செய்தற்கியற்றப்பட்டமேடையில் எனஇல்லுருபு விரித்துரைக்க.

கூஉ. மிளிரும் என்றதனால் விடத்தோடமுதங்கலந்ததென்ன என்பது பண்புவமை; போதுநோக்காற்றுயரையுங் குறிப்புநோக்காலுவப்பையுந்தருதலால்விடமுமமுதமுமுவமை கூறினாரென்றலீண்டியையாதென்க.

உரைத்தகுறி-நூல்களாலுரைத்த அடையாளம். கடையடியில் ஓடு - வேறுவினையோடு.

௩௩. கேள்வி-கல்வி. வேள்வி-விவாகம். ஈட்டி-தொகுத்து. கரி-சான்று. தாள்வித்தகன்-முயற்சியையுடைய சாமர்த்தியன். வரம்-மேன்மை. சடங்கு-கிரியை.

௩௪. மங்கலம்-மங்களவணிகள். சாத்தி-அணிவித்து, இதில் விவ்விகுதி தொக்கு நின்றது.

௩௫. கடல் இராக்காலத்தில் மிகக்கிளர்ச்சியாதல் பற்றிக்கங்குலைக் கூறினர். புறம் - இடம். பொரி-நெற்பொரி. பொழியுமாறு என்பதிலிறுதிவிகாரமாயிற்று.

௩௬. ஏனைநால்வருக்குங் கன்னிகையாக ஒவ்வொருமுறை தீயின்மூழ்கினள் என்பார் முறைமூழ்கினளென்றார். ஐவரைமணந்துழியுங் கற்பிற்கிழிவின்றென்பார் வடமீனிகர் கற்பினளென்றார்.

௩௮. அங்குரித்தார்-வெளிப்பட்டாரென்க. இகல்-வலி. தார்த்தாராட்டிரர்-திருதராட்டிரன்மைந்தர்.

௩௯. மூன்றுமடிக்கு-கொல்லப்பட்ட சேனையொழிந்தஞ்சியகுருகுலத்தவர் சேனையையென்க. வென்றசேனை-வெற்றிகொண்ட திட்டத்துய்மன்சேனைகள்.

௪0. நால்வர்-சகுனி, கன்னன், துரியோதனன், துச்சாதனன். நச்செயிறுவன-காளி, காளாஸ்திரி, யமன், யமதூதி. வீரர்பலரிருப்பினுஞ்சிறந்தவரிந்நால்வருமேயாதலின் அவரையெயிறாகக்கூறினர். வருக்கம்-ஈண்டணிவகுப்பு. ஆலுதல்-ஒலித்தல்.

௪௧. தோற்றம்-வலி, பிங்கலநிகண்டிற் காண்க.

௪௨. மெய்தமர்பட- தன்னுடம்புந்துளைபட; இவ்வாறன்றி யானையணிமுகத்தோடு அதன் மெய்யுந்துளைபட எனக்கூறினுமாம்.

௪௩. இடையென்னுமேழாவதைமூன்றாவதாக்குக.

௪௫. விரோசனக்கதிர் - சூரியன். வேந்தன் - துரியோதனன். சரோசனன் - ஒத்தகோபமுடையோன். புன்மதி - அற்பமதியினன். அரோசனம் - சந்தோஷமில்லாமை. அத்தினம்-அத்தினபுரி.

௪௭. அம்பிகேயன் - அம்பிகையின்புதல்வனாகிய திருதராட்டிரன்.

௪௮ காதினால் - கொலைசெய்வதனால். கண்கள்போற்கோதினாற்றெரியா மனக்கோளினான் - கண்கள் குருடானமையிற்றமக்குரிய விடயத்தைப்பற்றாதவாறு போலக்குற்றமாகிய அறியாமையுண்மையால் நன்மை தீமையையறியாத மனக்கொள்கையுடையானாகிய திருதராட்டிரனெனவிரித்துரைத்துக்கொள்க.

௪௯. ஏற்க-இயைய. அந்நாடு-பாண்டுவின் கூறாகிய நாடென்க. அகரம்- பண்டறிசுட்டு.

இந்திரப்பிரத்தச் சருக்கம்.

௧. ஞாதம்-காண்பான்; ஞாதாஎன்னும் வடசொல் லீண்டு ஞாதமெனநின்றது.

௨. மைத்துனன்-சகுனி.

௩. கோடித்து-அலங்கரிப்பித்து. கடி-விளக்கம். இயற்றி-இயற்ற.

௪. அத்தி- யானைத்தந்தம்; இதுஆகுபெயர். அரி-சிங்கம். தசும்பு-குடம். சித்திரம்-அழகு. கிரி தருமனைகவும், நிலாவெள்ளந்தீர்த்தமாகவுங்கொள்க.

௫. ராசம்-செந்நிறம். உதையன் - சூரியன். துதைதல்-நெருங்கல். பதயுகம்-இரண்டு பாதம். நீராசனம்-ஆலத்தி.

௬. ஒற்றை-ஓர்ஊதுகருவி; நிரைமீட்சிச் சருக்கம். ௫-ஆங்கவியிலும், பதினாறும்போர்ச்சருக்கம். ௫௬-ஆங்கவியிலும்காண்க. வாய்த்தவாவென்ன-வாய்த்தபடி நன்றென்றுகூற. ஏழு - ஈண்டு ஏழுமுழத்தினைக்குறித்தது; ஏழுமுழமுயர்ந்திருத்தல் அரசுவாவிற்கிலக்கணமென்க.

௭. குரவர் என்றது கிருபன்துரோணன் வீடுமன்திருதராட்டிரன் முதலோரை யென்க. கொற்றவன்-திருதராட்டிரன்.

௯. நாயகக்கடவுள்-இந்திரன். விச்சுவகன்மா-தேவதச்சனென்க. அழைத்ததியாதோவெனநடுங்கியுந்தரிசித்தமையால் விழிகளித்தும் நின்றானென்க.

௰. நமதாம்விண்ணினும் என்றமையால் அமரசேகரன் என்றது இந்திரனையென்க.

௰௧. முதலடிக்கு, தேவதைகட்கும்தேவயோனியிற்பிறந்த கூட்டத்தினுள்ளுஞ் சிறப்புற்றயாவர்க்குமென்க. தேவு-தெய்வத்திற்குப் பெயரென்றார் நச்சினார்க்கினியார்.

௰௨. வைதூரியம்-வைடூரியம். எரிமணி-மாணிக்கம். ஆகரம்-உறைவிடம் அரி-திருமால், இந்திரனுமாம்.

௰௪. ஆபதம் - ஆபத்து. மந்திரம்-மாளிகை. கொந்து - பூங்கொத்து. இந்திராபதி-கிருட்டிணன். பிரஸ்தம் - விஸ்தாரமானவிடம்.

௰௬. நிதி-நிறைவு, சங்கநிதிபதுமநிதியுமாம். அளகையோர்என்றது தனவைசியரை.

௰௭. மஞ்சத்தலம் - மஞ்சங்களையுடையவிடம். வாகம்-வாகனம்.

௰௯. கண்டல்-ஓர்மரம். பழனவேலி-மருதநிலம்.

௨௰. மீன்கொடி - நக்ஷத்திரவரிசையென்க. வாளைகளொன்றன்பினொன்றுதொடர்ந்து சென்றமைவிளங்கக் கொடிபோலென்றார். மருதத்தில் என ஏழாவது விரிக்க.

௨௧. புரிசை-மதில். கிடங்கு-அகழ். பரிசயம் - பழக்கம். பறத்தல் பறல் எனநின்றது. அன்னங்கள் மலையில்வாழ்தலுமுண்டாதலாற் கிரிமிசைப்பறக்குமன்னமென்றார். இது மயக்கவணி. வருங்கவியுமது.

௨௨. அருவியில் எனஏழாவது விரிக்க. அருவியில் விருப்புடன் முழுகுவனவாகிய சகோரங்கள் தம்மை அன்னச்சேவல்கள் பேடையென்று (புணர்ச்சிக்குறிப்புடன்) நணுகலால் மனநாணுமென்க.

௨௩. அரிமணிச்சிலை-ஒளியுடைய நீலரத்நக்கல். அளிக்க-பெற. களிந்தவெற்பு-களிந்தமலை. நதி-யமுனையென்க; இந்நதி கருநிறமுடையது. புரிமணிச்சுழி - வளைந்த கரியசுழி. சாலகங்கள் சுழியாகவும், அவற்றிற்றோன்றுங்கண்கள் கயல்களாகவுங் கொள்க.

௨௪. துலைகொண்மனம்- துலாக்கோலின்றன்மையைக் கொண்டமனம். உணர்வு, கேள்வி இவ்விரண்டும்வாழ்வார்தொழில்நகரிமேலேற்றிக்கூறினரென்க. ஓ-எதிர்மறை.

௨௫. இரதம்-இரசகுளிகை.பிறக்கம்-மலை.

௨௬. மயங்கலில்-கலந்திருத்தலால். நாடனைத்தும் வாவிமுதலியனமயங்கலின் பூமகள்வடிவையோவியங்குறித்தொப்பனை செய்தவாறொக்குமென்க. ஓவியங்குறித்து-சித்திரமெழுதி. ஒப்பனை-அலங்காரம்.

௨௮. கோயில்-அரசமாளிகை.கரங்குடிபுகாமல்- கையாற்செய்யாமல்என்பதுதாற்பரியம்.

௨௯. முதலடிக்கு-நாவைப்பழுதடையாமற்காப்பதற்கியைந்தகுற்றமற்றசத்தியத்தையுடையவேந்தனென்க.கோடி-ஈண்டுவரிசை.

௩௰. எறிற்றுக-எற.ஐயுற்றேகொல்-ஐயமுற்றோ. எ-அசை. சப்தாசுவம் என்னும் பெயரை எழ்புரவியென்றார். இதுமுதல் ௩௭ - ஆஞ்செய்யுள் வரை தற்குறிப்பேற்றவணி காண்க.

௩௧. உருள்-உருளுதல், முதனிலைத்தொழிற்பெயர். திமிரம்-இருள். சின்னெறி-சிறுவழி. தெருளுடைத்திமிரம்- திணிந்தவிருள் என்பது கருத்து. சின்மை-சிறுமை.

௩௨. சமர்முகப்பொறிகள்-போர் முகத்தையுடைய பொறிகள்; யானைமுதலியபொறிகளும், வின்முதலிய பொறிகளுமதிலுக்குரியவங்கமென்க. குமர்-அழியாமை.

௩௩. அசும்பறுமடை - நீர்க்கசிவறுதமடைப்பள்ளி.

௩௪. அனிலன்-வாயு. மிடுக்கு-வலி. நாள் என்றது நாண்மீனிருபத்தேழையுமென்க.

௩௫. துதைதல்-நெருங்குதல்.பொங்கர்-கொம்பு. விதம்-பகுப்பு. காளம்-கருமை. அகழியாகியபெரியமேகலை என்க.

௩௬. ஈட்டிய-தொகுக்கப்பட்ட. புடை-பக்கம். பூட்டியசிகரிசாலப்புரிசை-சேர்க்கப்பட்டகோபுரங்கண்மிக்க அம்மதில், மன்றல்-விவாகம். சூட்டியசூட்டு-கோலஞ்செய்வார் சூட்டியநெற்றிச்சூட்டு; தலையிற்சூட்டியமாலையுமாமென்பர்.

௩௭. பணை-வாத்தியம். துணைமணி-தம்மொளொத்த இரத்நம்.புணைவனம் - மூங்கிற்காடு. பொழி-மழையைப்பொழிகின்ற. இருமருங்குமுள்ளமாடங்களை இணைவரையாகக் கொள்க.

௩௮. எண்-மதித்தல்.

௩௯. ஓசம்-ஒளி.

௪௰. வேய் முன்னது அலங்காரம், பின்னது மூங்கில். வாய்-உண்மை. ஆய்-அழகு. தாய்முதலோர்மொழிகளைக் கொள்ளுமுறை கூறினமையுணர்க.

௪௧ சந்தனுகருவின்றூபம்-சந்தனம் அகில்ஆகிய இவற்றின்புகை. வந்தனு ஆவீறுஜயாகாது நின்றது. ஆதிவாசவர்-பழையஇந்திரர். நாரதரை வழிபட்டமகிழ்ச்சியாலுமேன்மையாலும் ஆதிவாசவர்களானரென்க.

௪௨. சிவபிரான் ஐவர்க்குமுரியளாவாய் எனக்கொடுத்தவரத்தால் ஐவரைச்சேரினுங்கற்பிற்குறையாதவளென்பார் வரமிகுகற்பினளென்றார். சரிகமபதநி என்னுமேழுசுரங்களென்க. தண்டு-வீணை. தைவரல்-தட

வல். படைவீடு-ஈண்டுத்தங்குமிடம் என்க. எம்பிரான் என்றது சிவபிரானை.

௬௩. முராரி-திருமால். சுராரிகள்-தேவருக்குப்பகைவராகிய அசுரர்கள். சுந்தன், உபசுந்தன் என்றிருவரென்க. திராரி-வலியபகைவனாகிய இந்திரனென்க. திலோத்தமை-பெண்களைச்சிருட்டிக்கும்போதுவாய்ந்தஅழகினுள்ளே திலந்திலமாக எடுத்துச்செய்யப்பட்டவளென்பர்.

௬௬. எண்ணுற - மனம்பொருந்த. ஆறிருது-ஆறுபருவம்; கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்; ஆவணிமுதலிரண்டிரண்டுமாதமென்க. எ-அசை.

௬௭. தேவர்நாளுக்கின்ன நாளவதியென்று-தேவருடையஒருநாளுக்குஇத்தன்மையாகியமானுடவருடம் எல்லையாமென்று.

அருச்சுனன்றீர்த்தயாத்திரைச் சருக்கம்.

௧. தரியார் முனைமதியாவன்பன் - பகைவர்போரைமதியாவலியவனாகிய தருமராசன். இயல்பாதலின் - இயற்கையாயிருத்தலினால். அவனது தண்ணளியைக் குடைமேல் வைத்துப்பைங்குடை யென்றார். பசுமை-ஈண்டுத்தண்மையென்க. அறம்பொருளின்பமெனக்கூறுது செய்யுளாதலிற்றலைதடுமாற்றமாகக்கூறினர்.

௨. திறை-திறைப்பொருள். இறை-கையிறை. எண்ணுற-இதற்குக்காரணம் யாதோவென்றுயாவரும் யோசனைசெய்க. அடுக்கு அவலம்பற்றிவந்தது.

௩. புவித்தேவன்-பூசுரன். மறையின்றொடைகாவல - வேதவொழுக்கத்தைக்காப்பவனே. விடைகாவலர்நிரை - இடையர்வசத்திருந்த பசுக்கூட்டத்தை.

௪. ஏ-பாணம்; ஏவின்றொழிலுக்காகுபெயராயிற்று. திலகன்-மேலோன். திலகனாகிய விசயன் எனக்கூட்டுக.

௫. மாணநிரை - மாட்சிமையுடையபசுக்கூட்டம்; இவற்றின்மாட்சிமைசிவதருமோத்திரத்திற்சோபுரவியலிற் காண்க.

௬. தொறு-பசுக்கூட்டம். முனி - நாரதமுனியென்க. துலைநிகர்தம்முன்-துலைநாவன்னசமனிலையையுடையதமையனாகிய தருமன். துலை-ஆகுபெயர். நிகழ்வு-தீர்த்தயாத்திரைக்குரிய கருமநிகழ்ச்சியென்க.

௭. ஆடம்பரம்-இடம்பம். சூடம்-சடைமுடி. சேடன்றலம் - நாகலோகம். புனலயர்தல் - ஈண்டுப்புனலாடுதலென்க. முதலடியில் அரசவேடத்தினிழிபும், தவவேடத்தினுயர்வுந்தோன்றக் கூறினமைகாண்க.

௮. அநுராகம்-ஆசை. நலம்-அழகு.

௯. பாயல்-சயனம். பரிபுரம்-சிலம்பு. மலராகிய கால்களையென்க. இம்மெனல், பொம்மெனல் ஒலிக்குறிப்பு. ஊடுதல் காமத்திற்கின்பமாதலாற் பரிபுரநாண்மலர்பொற்சென்னியில்வைத்து மென்றார்.

௰. நாகாதிபன்-இமயமலை. நாகாதிபன்விடு-ஐராவதஞ்சொரிகின்ற.

௰௧. களிந்தாநதி - காளிந்திநதி. மூளிந்து-காய்ந்து. முக்கோல்-திரிதண்டம்; மூன்றுகோல் ஒன்றாகச்சேர்த்துக் கட்டப்பட்டதண்டம். திரிமூர்த்திகளுமொன்றெனபதுவிளங்கமூன்றுகோல்களுமொன்றாகச் சேர்த்துக்கட்டப்பட்டதென்பர்.

௰௨. இட்டசித்திகளைப் பெறுதற்கேதுவாயிருத்தலாற் சித்திக்கொருவிதையாகியதென்னடென்றார். அரவக்கிரி-திருவேங்கடமலையென்பர்.

௰௩. அறமெண்ணான்கு-ஆதுலர்க்கன்னசாலை முதலாயின; அவைபிங்கலநிகண்டுமுதலியவற்றிற்காண்க. செச்சைத்தொடை-வெட்சிமாலை. கச்சிப்பதி-காஞ்சிநகர்.

௰௪. அத்திகிரிக்கு-நான்காவதையேழாவதாக்குக. ஐராவதம் மலைவடிவானமையின் அத்திகிரியெனப்பெயராயிற்று. மா-வேதமாமரம். எழுநதி-கம்பை, பம்பை, மஞ்சனி, பிச்சி, கலிச்சி, மண்ணி, வெஃகா என்பனவாம்.

௰௫. சகதண்டம்இதுவடநூன்முடிபு; சகத்அண்டம்எனப்பிரித்துத் தோன்றியழியுமியல்புடையஅண்டமென்பர். அவை பெற்று முற்றாமுகிழ்முலையாள் என்பதன் கருத்தை "உலகுயிரெல்லா மீன்றும்பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்" என்னுஞ் சிவஞானசித்தியாரிற்கூறிய வாற்றாற்காண்க. பற்றாமென-பற்றுதலையுடைய

தானமாமென்று. பற்று-ஆகுபெயர். மிக்கோரிகழ்பற்றென்றினுமுண்மைகற்றார் தொழுமருணைசலம்- மேலோரிகழும்பற்றுத் தம்மைவந்தடைந்தாலும் ஞானிகள் வணங்குமருணைசலம்; நினைத்தான் முத்தியுதவுந் தலமாதலின் இருந்தவிடத்திருந்து ஞானியரும் வணங்குந்தலம் என்பதாயிற்று. ஒன்றினும் என்றஎச்சவும்மையால் ஒன்றாவிடினும் வணங்கு மருணைசலமென்க. பற்றொன்றினால் வணங்குதல் அதுநீங்குதற்கெனவும், பற்றொன்றாவிடின் வணங்குதல் அப்பற்றுப்பயிற்சி வயத்தாற் பின்னும்வந்து தாக்காமை கருதியெனவுங்கொள்க.

௰௬. துறை-நதி;நெய் பாலைக்கூறினமையாற்பெண்ணை நதியென்க. நெய்பால்பெருகினமை சிறப்புப்பாயிரத்திற்காண்க.எழேழுபிறப்பு-எழுமையினையுடைய தன்னெழுபிறப்பு, "எழுமையெழுபிறப்பும்"என்னுந்திருக்குறளிற்காண்க. முகின்மேனியர்-திருமால். அமுதானவர் என்றது சிவபிரானை. திருமால்சிவபிரான் பாதங்களை யென்க. கவிஞானியர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலோரென்பர்.

௰௭. இயல்வாணன்-தமிழ்வாணராகியசுந்தரமூர்த்திநாயனாரென்க. ஆவணம் - ஓலை. பதி - திருவெண்ணெய்நல்லூர். திருவீரட்டம்-திருவதிகை வீரட்டம். இதுதிரிபுரதகனத்திற்கிடமாயிருந்ததலம்.வீரத்தைப்புரியுமிடம்வீரட்டானம் என்றும், வீரஞ்செய்தட்டதானம் வீரட்டானமென்றுங்கூறிப், பின் வீரட்டானம் வீரட்டம் எனமரீஇயிற்றுஎன்றுங்கூறுவர்.

௰௮. பலர்-அரிபிரமர் இருவரும்; இருவரைப்பலரென்றது தமிழ்வழக்கு. உம்மைகள் சிறப்பு. முதலடியிற்கூறியவாற்றால் மறுமைப்பயன்கருதிவணங்கினனென்க.

௰௯. செற்றவன் என்றது அநுமானை. அறிதுயில் - யோகநித்திரையென்பர். பொலம் - பொன்.

௨௰. பதியென்பதற்கு ஊர் எனப்பொருள்கொண்டு மேற்கவியில் ஸ்ரீரங்கத்தைக்கூறியதனாலீண்டு உறையூர் முதலாக விளங்கு மூர்கடோறு மென்க. தமிழ் - தேவாரப்பதிகத்தை யுணர்த்தலால் ஆகுபெயர். இளமை - ஈண்டழகு, அன்றிக்கருத்தாவினிளமையை அவர் செய்த பதிகத்தின்மேலேற்றிக் கூறியதெனினுமாம். துறை - ஈண்டு வையைநதி. புறவம் - முல்லைநிலம்.

௨௧. குன்று - ஈண்டு வெள்ளிமலை. வாடை - வடகாற்று. தென்றல் - தென்காற்று. பொதியமலைக்குச்சந்தனம் போல வெள்ளியங்கிரிக்குக் கொன்றை சிறந்ததென்க. சிவபிரான் றிருவடையாள மாலையாதலிற்றிருக்கொன்றை யென்றார். மதுரை நான்மாடக்கூடலானது திருவிளையாடற் புராணத்திற் காண்க.

௨௨. கன்னியைக்கண்ணுற்றாட - கன்னியாகுமரிநதியைக்கண்டுமூழ்கஎன்றும்,கன்னிப்பெண்ணைக்கண்டு அவளைக்கூடவென்றும்இருபொருளாகக் கூறினனென்க. திரௌபதியைக்காண்டலாற்றீர்த்தமாடவென வேறுமொருபொருள் கொள்ளநின்றதெனவுங் கொள்வர்.

௨௩. இந்திரன் முடியில் வளையெறிந்தகதை திருவிளையாடற்புராணத்திற் காண்க. ஒருகோடிதருக்களென மாற்றி ஒப்பற்ற புதுமையுடைய ஐந்தருக்களென்க. வரூதம்-இருப்பிடம். அவரோதம் என்பது பாடமாயின் அவரோதம் - அந்தப்புரம்; கட்டுப்பாடுமாம். கைதவர்கோன் - பாண்டியராசன்.

௨௪. சேவிக்க - வழிபட. அரி - பருக்கைக்கற்கள்; அழகுமாம். அரவிந்தை-இலக்குமி. அழகினாலும் புண்ணியமுடையானைச் சேர்தலானும் இலக்குமியையுவமைகூறினார்.

௨௫. பிச்சன் - பித்தன். இவனுந்தன் வயமழிந்து நிற்றலிற் பிச்சன்போலென்றார்.

௨௬. பூழிவேந்தனாகிய சித்திரவாகனனென்க. பூழி - பூழிநாடு,இது கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனு ளொன்று, இந்நாட்டையுமுடையனாதலிற்பூழிவேந்தனென்றார். மித்திரம்-சினேகம்.

௨௭. வாகம்-வாகனம். சாமன்-காமன் றம்பி.

௨௮. வண்டானம்-கொய்யடிநாரை. வரி-இசை. தார் - ஆரம்; கிளியின் கழுத்திற்றோன்றுவது. "செந்தார்ப்பசுங் கிளியார்" எனக்கூறியிருத்தல் காண்க.

௨௯. கந்தருவமுறையாவது கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தலைவனுந்தலைவியுந் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தெய்வங்கூட்டப்புணர்வது; இதனைக்களவென்பர்.

௩௰. நீடியது-(கால) நீட்டித்தது. அஞ்ஞான்று-அப்பொழுது.

௩௧. பரியங்கம்-கட்டில். ஐயமளி-பஞ்சசயனம்; அவை மயிர்ச்சேணம், இலவின்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத்தூவி என்னுமைவகைமெத்தை. பிங்கல நிகண்

டில் வேறுபடக்கூறுவர். நவிர்-புன்மை. கரை-எல்லை.

௩௪. ஐந்தரு - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். அரிசந்தனத்திற்குத் தேவதாரமென்பர். மூன்அரி-இந்திரன். மகோததி - கடல். ஆரம்பூண்டதும், வருணன்விடுத்த கடலைக்கணைக்காலளவாகவற்றச்செய்ததுந் திருவிளையாடற்புராணத்திற் காண்க. இவன் குலத்துளான்செயலை ஒற்றுமைபற்றி இவன்மேலேற்றிக்கூறினர்.

௩௫. விபுதர் - அறிஞராகிய முனிவரென்க. வேறாக இச்செயவெனெச்ச மீறுதொக்கது.

௩௬. பஞ்சவன்-பாண்டியன். சஞ்சரிகம்-வண்டு. அஞ்சல்-அஞ்சற்க; எதிர்மறைவியங்கோள். மறைந்து நின்றெய்தலால் மதனை வஞ்சகனென்றார்.

௩௭. மதி-மூன்னிலையசை. கிரீசன்-கைலாசபதி. மக-பிள்ளை. வரமும் என்றவும்மை எச்சம்.

௪௰. கோமடந்தை-பூமிதேவி. விந்தை-வீரலக்குமி. ஒப்பனை-அலங்காரம். பூமடந்தை-இலக்குமி. பூமியாளுதற்குரிய அரசைப் பெறலாற் கோமடந்தைகளிகூரவென்றும், அங்ஙனம் அரசுசிறத்தலாற் பெரும்புகழ் விளைதலிற்புகழ்மடந்தைகளிகூர வென்றும், அரசும்புகழுஞ்சிறக்கவேயெதிர்ந்த பகைவரஞ்சிமுதுகுதரவெற்றிவிளைதலில்விந்தைகளிகூரவென்றும், நல்வினையுடையான் மாட்டுச் சேறலிற்பூமடந்தை யனையாளென்றுங்கூறினர்.

௪௨ நுண்ணியபுலவி என்றதனுற்புலவி நுணுக்கமென்க. அது திருக்குறளிற் காண்க. அப்புலவிதுனியாகாது விரைந்து புணர்தற்குரியதாயிற்றென்பார் மென் புலவி யென்றார். அநுராகம்-ஆசை. துலையையுவமைகூறலால் இருவர்போகமுந் தம்முளொத்திருந்தன வென்க. பாக்கியத்தைப்பயப்பதாய ஊழைப் பாக்கியமென்றது ஆகுபெயர்.

௪௩. தென்னு-பாண்டியனே எனவிளியாகவும், இசைக்குறிப்பாகவு மிரட்டுறமொழிக. மூன்றாமடியில், மக்கட்கேயன்றி நான்கறிவுடைய வண்டுகளிறந்துழியும் வேண்டுவனகொடுப்பவன் எனக்கொடை மிகுதிவிளங்கக்கூறினர். தேம்-தேன்.

௪௪. யாழோரின்பம்-காந்தருவப்புணர்ச்சியின்பம். பார்த்தன் - பிரதையின்புத்திரன். அருச்சுனன் - தூயசெயலினன். கரியோன்-கரியநிறத்தவன். விசயன்-யுத்தகளத்தில்வெற்றி கொள்பவன். பாகசாதனி-இந்திரன்புதல்வன். சவ்வியசாசி-வலக்கையாலன்றி இடக்கையாலும் பாணப்பிரயோகஞ் செய்பவன். பற்குனன்-(பங்குனன்) உத்தரநட்சத்திரத்திற்பிறந்தவன். தனஞ்சயன்- எல்லாவரசர்களையும்வென்றுகொண்ட செல்வத்தையுடையவன். கிரீடி - இந்திரனுற் சூட்டியகிரீடமுள்ளவன். சுவேதவாகனன் - வெள்ளைக்குதிரையான்.

௪௫. இக்கவியிற்கூறியகதை இராமாயணத்திலறிக. தம்பியர்மூவரினுங்குறிப்பறிந்தேவல்புரிதலைமேற்கொண்டு வனத்தினுந் தொடர்ந்து சென்றபேரன்பனுதலில் வாய்த்ததிருத்துணைவனென்றார். வழியின் பெருமையுணர்த்துவார் இன்றளவுநாறுமென்றார்.

௪௬. திரையாகியகளிற்றினம் என்க. கணையமரம்-யானைபொருதாமற்றடுப்பதற்கிடுவதென்பர். தலைகள் - வாயு பறித்தெறிந்த தன் சிகரங்கள். இருபூதலம் - பாண்டிநாட்டையும் இலங்கையுமென்க. முக்கோணக்குன்று - திரிகோணசலம்; இது ஈழநாட்டிலுள்ளது. அச்சேது போலுமென்க. இதுபலபொருளுவமையணி.

௪௭. மழுப்படையோன் - பரசுராமன். பலபோகங்களுமிகச் செறிந்திருத்தலாற்பாக்கியபூமியென்றார்.

௪௮. இந்திரனிமித்தமாகவிளைந்த சாபமென்க. இந்திரன் ஐந்தரம்பையரைத்தன் உத்தியாவனத்திருந்த ஒருமுனிவன் றவத்தையழிக்கும்படி யேவ அவரங்ஙனம் புகுந்தபோது அம்முனிவனிட்டசாபத்தான்முதலைகளாயினர்; பின் அம்முனிவன் அவர்வேண்டுகோட்கிரங்கி அருச்சுனனுலிச்சாபங் கழியுமென்றான்; அவர் முதலைகளாய் வாசஞ்செய்யும்ஐந்துதடங்களிலும் அருச்சுனனிறங்கவே அவர்சாபநீக்கிப்பழையவடிவடைந்தனரென்பர். ஐந்துதடத்திற்கும் நாரீதீர்த்தமென்று பெயருண்டு. பசுவின் செவிவடிவாய்ச்சிவலிங்கமிருத்தலால் அத்தலத்திற்குக்கோகன்னமெனப்பெயராயிற்று.

௪௯. ஆகன்னம் - காதளவும். கோட்டுக்கோட்டுநாகு - நீர்க்கரையிற்சங்கின்பெடைகள் பாவை என்றது சுபத்திரையை. முக்கோற்பகவன்-திரிதண்டசந்நியாசி.

௫௰. குடதிசை - மேற்றிசை. செய்யவாடை-ஈண்டுக் காவிதோய்த்த சிவந்தவஸ்

திரம். இரைவதகசைலம்-ஓர்மலை. வடம்-ஆல். பொதும்பர்-சோலை. ஆடையுந்தானுஞ்சேர்ந் தான் எனத்திணைவிரவிச்சிறப்பினலாண்பான்முடிபேற்றது.

௫௧. காலம்-கார்காலமெனக. நீலம்-நீலநிறம். விதானம்-மேற்கட்டி. இடியாகிய முரசமெனக. அம்மா-அசை. மேற்றிசை கீட்டிசையிருதிசையினும் இந்திரதனுத்தோன்றுதலால் இரட்டை வரிசிலை யென்றார். ஒருதிசையிலிரண்டு சிலைதோன்றுதலுமுண்டெனக. தாரைமுத்து - தாரைகளுடன் சொரியுமுத்து எனக. முழுப்பொரி-முரிவில்லாத பொரி. தம்முடைய நாயகன்புதல் வனுதலின் இவ்வாறுபசரித்தனவெனக. இது தற்குறிப்பேற்றவணி.

௫௨. இராமன்-பலராமன்; தலைக்குறை. பாங்கு-உரிமை. அவயவங்கள் கமலமலர்போலிருத்தலாற் கமலமலரோடையனையானென்றார்.

௫௪. குன்று - இரைவதகமலை. போசர்-குந்திபோசர். சூது-சூதாடு கருவி. தன்றங்கையாகிய சுபத்திரை மணத்தை அருச்சுனனுக்கு எளிதின்முடிப்பதற்குக் கிருட்டிணனிங்ஙனமேவினதெனக.

௫௫. தவவேடமுடைமையிற்காயத்தால் வணங்காது மனத்தால் வணங்கினனெனக.

௫௬. கன்னியிளமை என்பது மீமிசை. இமையாதுநோக்கலில் விரிந்தபின் குவியாத கடம்பலருவமையாயிற்று. கூந்தலினீலவொளிவிளங்க மின்கொடிபோற்றுவண்டு தோன்றலிற் புயலின்மின்னியரேகையையுவமை கூறினர். காட்சி தவவேடத்திற்கியையாமையாற்புன்கூரலுண்டாயிற்றெனக. மைததுனமை-மைத்துனமுறைமை.

௫௭. அடிகள்-சுவாமிகள். கடியயர்வுற்று-விவாகஞ்செய்து. இருபருவம்-நாலுமாசம். துரியோதனனுக்குச்சுபத்திரையைமணம்புரிய உத்தேசித்திருத்தலால் இசையலரென்றும், பிறரறியாமல் மணம்புரிந்துகொண்டேகல் நீதியன்றென அருச்சுனனினையாவண்ணம் காவலர்க்குக் கடனென்றும், அருச்சுனன் தன்பாலன்பாலிவ்வுபாயங்கூறியது என்றுட்கொண்டுருக வென்பார், கசியவென்றும், சுபத்திரை ஐயுறுமைக்கு மெய்ம்மையுறக் கொண்டகோலப்படிவமுனியென்றுங் கூறினர். இராசகன்னியர் தாங்கருதியவரங்கொள்ளற்காக முனிவர்க்சேவல் புரியுமாறு நியமித்தல் மரபெனக. அவ்வாறு குந்திதேவி சரிதத்திற்காணக.

௫௯. இவள் வந்ததெனக. கண்ணினள்-முற்றெச்சம்.

௬0. புடவி-பூமி. அடவி-வனம். விடவிலோசனக்கடை - நஞ்சுபோன்றகடைக்கண். பலவுறுப்பினும்விரகக்கனலைமூட்டுதலிற் சிறந்ததுகண்ணேயென்பார் அதனைக்கூறினர்.

௬௧. சதனம்-வீடு. அகக்கண்ணைமறைத்துநீங்காத்துயர்செய்யும்வன்மையினல்வெம்மோகவிதனவல்லிருளென்றார். உம்மை இரண்டுஞ்சிறப்பு.

௬௨. கற்றை-தொகுதி. ஒற்றையன்றில்-துணைபிரிந்த அன்றிற்பறவை.

௬௩. நலத்தாலுங்கரங்களாலும் எனவும்மை விரிக்க. கொல்-அசை.

௬௬. ஊழின்-இன்னதுப்பொருட்டு. வாழி-அசை. வினவாதுமறைத்தனளெனக. யாழ்-ஆகுபெயர்.

௬௯. யாதவி-சுபத்திரையெனக. கச்சணிகுரும்பை என்றதனல் முலைகளெனக. ஆகுலம்-ஆரவாரம்; ஈண்டுமகிழ்ச்சியையுணர்த்திற்று. ஓ-எதிர்மறை. ஒகாரத்தைஅசையாக்கி ஆகுலம் படாது என்பதற்கு வருத்தப்படாது எனப்பொருள்கொண்டு மகிழ்ச்சியேயுண்டாமென்பாருமுளர்.

எ0. உகவை-சந்தோஷம். அகவு - ஆடுகின்ற. முத்தம், பவளம், நீலம் இவை ஆகுபெயர். தகைதல்-ஈண்டுப்பற்றல். ஊழ்வயத்தால் ஏவப்பட்டுப்பற்றியதனுற்றகவுடைத்தனதடக்கையென்றார்.

எ௧. அசைதல்-எழுதல்.

எ௨. அலாயுதன்-பலராமன். மறி- மான்; முனிவரேவியமான் எனக. தம்மைப்பாம்பொருளெனமதியாதஅகங்காரிகட்குந்தம்மைப்பரம்பொருளெனஅறிவுறுத்தியாளுங்கிருபாநிதியென்பதுவிளங்க மறிகொள் செங்கையனென்றார். தான்புரியுஞ்சூழ்ச்சி, பிறர்க்குப்புலப்படாதென்பது விளங்க உறியில் வெண்டயிருண்டவ னென்றார். முப்பத்துநாலுநாட்சிவபிரானுக்கு விழாச்செய்தனர் என்பர்.

எ௩. பாண்டுவினும் மேம்பட்டுச்சிறந்தமையிற் பெரும்பிதாவென்றார். தியானமுற்ற-தன்கருத்து முற்றஎன்றும், தியானவிலக்கண முதிரஎன்றும் இருபொருட்குமெனக.

௭௪. இந்திராபதி - கிருட்டிணன். ஆதவம்-ஒளி; சந்திரனொளியைச்செய்யுமண்டபமென்க; எனவே வெண்மணிகளாலியன்ற மண்டபமாம். கிருட்டிணனையும்புதல்வனையுங் கண்டமையாலும், புதல்வனுக்குச் சிறந்தமணமெய்தினமையாலு மகிழ்ந்திருந்தானென்றார்.

௭௫. புலோமகன்னிகை - புலோமன்மகளாகிய இந்திராணி. மரு-முதனிலைத்தொழிற் பெயர்.

௭௬ அதிவிரகன்-மிக்கவுபாயத்தையுடையானாகிய கிருட்டிணன். சால் - அமைதி; சிலப்பதிகாரவுரையிற் காண்க. அமைதியாகிய குணத்தையுடைய அருந்ததியென்க; சிவஞானபோதச்சிற்றுரையில் அமைதிக்குணமுடையதுபெண்ணென்றார். நூலார்-அறிஞர். தநி-சமையம்.

௭௭. நாதவெம்முரசு - ஓசையையுடைய விரும்பப்படுமுரசு. சுரிமுகம்-சங்கு. சடங்கு-கிரியை. விடங்கு-அழகு. மடங்கினர் - மீண்டுஞ் சென்றாரென்க. ஆக என்பது ஈறுதொக்கு ஆ வெனநின்றது.

௭௮. முன்னம் - அடியார்மனக்குறிப்பென்க; தன்மனக்குறிப்பென்றுங் கூறுவர். கொள-இது எதப்பொருளின் வந்தவெச்சம். அடுசகுப்பன்மை குறித்தது.

௭௯. சாபவீரன் - வில்வீரனாகிய அருச்சுனன். தாமக்குழலாள் என்றது சுபத்திரையை. காமபாலன்வாமப்பதி - பலராமனது அழகிய துவாரகை.

௮௰. சிறகர் இறுதிப்போலி. அப்பலற்கு-அந்தப்பலராமற்கு.

௮௧. காலாந்தகனும் - உருத்திர மூர்த்தியும்; உம்மை-சிறப்பு. நீலாம்பரன்-நீலவஸ்திரத்தையுடைய பலராமன்.

௮௩. அகில்நாறும்-(நீராடுமொதர்கூந்தலுக் கூட்டிய) அகிற்புகைமணநாறுகின்ற. மருதவேலி-மருதநிலம்.

௮௪. முசலப்படை - உலக்கைப்படை. மொய்ம்பு-வலி. உபசாரம் - உபசாரப்பொருள்; இது ஆகுபெயர். முதலடியிற்புகழுவது போலப்பழித்தலாமென்க. அருச்சுனனோடு சமர்புரிந்த தலைவன் கொண்டசினந்தணியுமாறுபின்போயினியமொழியாயிரம்பேசினனென்க.

௮௫ தாலத்துவசன் - பனைக்கொடியையுடைய பலராமன். சீலத்தவன்-ஈண்டு அருச்சுனன். அவண்-இந்திரப்பிரத்தமாகிய அவ்விடத்தில்.

௮௭. ஆதங்கம்-வருத்தம். குணமைந்தாவன-சத்தபரிச ரூபரசகந்தமென்க. வேதம்-வேதவொழுக்கத்தையுணர்த்தலால் ஆகுபெயர். பிரதிவிந்தியன், சுருதசோமன், சுருதகீர்த்தி, சதாநீகன், சுருதசேனன் என ஐவர் மைந்தர் முறையேதருமன்முதலிய ஐவருக்கும் பிறந்தாரென்க.

௮௮. விதி-சாதகன்மமுதலாயின. வின்மை-விற்றொழில். தெவ் இதில்வகரவொற்று மகரவொற்றாயது. தெவ் - பகை. கடையடிக்கு - (ஒருவர்க்கொருவர்) ஒழுங்காக வாது கொண்டு மிகப்பழகும்படி செய்தார் என்க.

௮௯. தோற்றம்-காட்சி. நாரதமுனிவனிட்டசாபத்தாற் குபேரன் புத்திரராகிய நளகூபரன், மணிக்கிரீபன் என்னுமிருவரும் இரு மருதமரமாயிருந்தவர் பின் அம்முனிவர் கிருட்டிணனாலிச் சாபங்கழியுமென்றபடி அக்கிருட்டிணன் உரலோடுதவழ்ந்து இடையேபோகும்போது அம்மரவடிவநீங்கினனென்பர். மதுசூதனன்-மது என்பவனைக்கொன்றவன். விருது-வெற்றி.

௯௰. நரநாரணர்க்குள்ள நண்புபோல வசந்தகாலமாரனோடு நண்பிசைந்தது என்க. மரன்-குறுக்கல். இசைந்தன்று-இவ்வினைமுற்றில் அன்சாரியையென்க. வான்-பெருமை.

வசந்தகாலச்சருக்கம்.

௧. நனியாடல் - மிகுதியாகிய வெற்றி. திசை-தென்றிசையில். முனியாமல்-வெறுக்காமல். பரிதாபம்-மிக்கதாகம். தனியாழி-ஒருருளை. பரியை-பரிக்கு வேற்றுமைமயக்கம். சைலராசன்-இமயமலை. பனிப்பகை - சூரியன். பனிசெய்வோன் - அவ்விமயமலையென்க. சூரியன் தக்ஷிணாயனத்தை நீக்கி உத்தராயணமானான் என்பதிதன் கருத்து. இது பெயர்பொருட்டற்குறிப்பேற்றவணி.

௨. வேனிற்கலகம் - வேனிற்காலத்திற் செய்யும் மதனலீலைப்போரென்க. சிலை-மதன்கருப்புவில். தென்றல் நறுமணங்கலந்து

வருதலால் அதனை நகா அதன்பின் அளிகளோடினவென்க. கருங்கொல்லன் குயிலாகவும், சிறுகுறடு அலகாகவும், உலைக்கனல் செந்தளிர் நெருங்கியகாவாகவும், பரந்த தகடு விரிந்ததளிராகவும், ஒதுக்கிச் சமைத்தல் அலகாற்றளிரைச் சுருட்டிக் கோதுதலாகவுங் கொள்க.

௩. முத்தீ-ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி. தடமாகியஓமகுண்டம், மதுகரங்களாகிய அந்தணர்கள் எனவுருவகமெடுத்துரைக்க. தனஎன்பதில் அகரவுருபு அஃறிணையொருமையில் வந்தது. யாகமுடித்த பின்பன்னியுடன்றேரேறியுலாவரான் மரவென்க.

௪. சால-அமைய. சாலுதல்-அமைதல்; திருமுருகாற்றுப்படையுரையிற்காண்க ஓவியமுமுயிர்ப்பெய்த-சித்திரமுந்தம்மைக்கண்டுபெருமூச்சுவிட. உம்மை-சிறப்போடெச்சம். பொங்கர்-சோலை. மனக்கலப்பாலுநிறத்தாலும் இருவருக்குமுபேந்திரனையு மிந்திரனையுமுவமை கூறினாரென்க.

௫. சாயற்றோகை-மென்மையையுடைய மயில்கள்; சாயல் அழகுமாம். வண்டு - வளையல். தனமாகியமலையென்க. இங்ஙனம் நிகழ்ந்தன கார்காலக்குறியென்க. தையலார் வடிவுதோறும் எழ, நுடங்க, வளைவுற, தோன்ற, மலர, விழக்கண்டுகளிக்கும் எனமுடிக்க. இது மயக்கவணி.

௬. பாதஞ்சேராமல் செங்கை சேராமல் எனக்கூட்டி உதையாமல் அணையாமல் எனப்பொருள்கொள்க. முகராகம் - ஒருசொல்லாய் நட்பையுணர்த்தியது. ஆராமம் - சோலை. வேனிற்காலமானதால் இத்தொழில்களியற்றாது இயல்பாய்மலர்ந்தனவென்க. பெண்களால், மா பார்க்க, முல்லை நகைக்க, குருக்கத்தி பாட, புன்னை ஆட, அசோகு உதைக்க, குரா அணைக்க, பாலை நட்புற, பாதிரி இகழ, மகிழ் சுவைக்க, சண்பகம் நிழலளிக்க மலர்வனவாம்; சூடாமணிநிகண்டு பன்னிரண்டாவதுதொகுதியில், எடவிழ் என்னுஞ்செய்யுளாலறிக.

௭. சிந்தைத்தாபம்-மனத்திலுண்டாகிய காமவெப்பம். முலையென்னுமிளநீரென்க. கூந்தலாகியபூகத்தாறென்க. மாகதச் செந்துகிரால்-மரகதமாகிய பாக்குக்காயினாலுஞ் சிவந்தபவளமாகியபாக்குப்பழத்தினாலுமென்க. நவமணிகளு நீரிலுளவாதலின் மரகதமும் பவளமுந் தடாகத்திலுளவென்றார்.

௮. சிவிறி - நீர்தூவுந்துருத்தி. மழை - நீர்மாரி. விரற்சாளரங்கள்- விரல்களினிடைவெளிகளாகிய பலகணிகள் என்க. விரல்- ஆகுபெயர்.

௯. சலமதி-நீரிற்றோன்றுஞ் சந்திரன். பரிவுகூர-(அவளுக்கு) விருப்பமிக. கூர்ந்தபார்வை - நுண்ணிதாய்ப்பார்த்த அவள்கண்கள். விடவும் என்றவும்மைசிறப்பு. குங்குமப்புனல் செங்கலங்கற்புதுப்புனலாகவும், எதிராய்ப்பார்த்த கண்கள் அதற்கெதிரோடிவிளையாடுஞ் சேல்களாகவுங்கொள்க.

௰. நெறி-நெறிப்பு. அறல்-நீர். கூந்தலுக்குக் கருமணலையும், வீசியநீருக்குச் சின்னீருமுவமையாகக்கொள்க. அமைந்தது-ஒத்தது என்க.

௰௧. விளிந்து-வருந்தி. வேய்-முட்கோல். பாகு-பாகன். களிந்தகிரி-களிந்தமலை.

௰௨. வீச அந்தநீர்எனவருவித்துரைக்க. நிரைத்து - நிரைக்கப்பட்டு; படுவிகுதி தொக்கு நின்றது. நிறத்த - ஒளியைச்செய்தன இது இல்பொருளுவமை.

௰௩. ஆடி-விளையாடி. மனை-அச்சோலையிலமைக்கப்பட்டிருந்தமனைகளென்க. அழகாலுங் காமநுகர்ச்சியாலும் மதனுமவன் படையுந்தோல்வியடைந்துசேவித்தாரென்க.

௰௪. படுஎய் கஞ்சவெள்வளையமென்க. தண்மைதருதலாற்றாமரை வளையமுமுடன் கூறினார். படுஎய் - தடாகத்திற்பொருந்திய. ஆலவட்டம் - விசிறி. படீரம்-சந்தனம். வடு-மாவடுவகிர்க்கு ஆகுபெயர்; "மாவின் வடுவகிரன்ன கண்ணீர்" எனத்திருவாசகத்திற் கூறல்காண்க.

௰௫. செவிப்பூ - செவியிலணிந்தபூ. புன்முறுவலிதழூறல்-புன்சிரிப்பையுடைய அதரத்திலூறுமமுதவூறல். மூழ்கி-அமிழ்ந்தி. கலகமிடுதலால்வரும் பரிதாபமென்க. பரி-மிகுதி. வெம்மைக்காலத்திற் குளிர்ச்சியைத்தருதலால் ஈரமுலையென்றார். தடம்-உயர்ந்தவிடம்என்றார் திருக்கோவையாருரையில்.

௰௬. மாரவசந்தனையகன்று-மாரனுக்குரிய தென்றலைநீங்கி. வெங்கோடை - முதிர் வேனிற்காலமென்க. சீதளமேயன்றி அக்கினியும் எனப்பொருள்கொள்ளநிற்றலால் உம்மை எச்சம். பிணங்கினார்-மனங்குழம்பினாரென்க.

௰௭. கொண்டல்-கீழ்காற்று. கோடை-மேல்காற்று. வாடை-வடகாற்று. மாருதம்-காற்று. வழக்கம்-இயங்குதல். ஆடைமுதலிய

விவற்றான் மாத்திரங் காற்றியங்கினவென்பதாம். ஒடை-நெற்றிப்பட்டம். இறகு-மயிலிறகாற்செய்த விசிறி ஆகுபெயர்; இதற்குப் பறவைகளிறகு எனக்கூறலுமாம்.

௰அ. தாழ்-தாழ்வு. இல் - இல்லாத. குவளை-செங்குவளை. பாழி-சிறுகுளம்; கொடுந்தமிழ்நாட்டுப்பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழியென்பர். பூழிபடுகமர்வாயநானிலம்-புழுதிபொருந்தியபிளப்பைத்தம்மிடத்துடையமுல்லைமுதலானநான்காகியநிலம். நீர்போல இன்பஞ்செய்தலால்உருவகமாக்கி அருட்புனலென்றார். தனக்கெனப்பாலைக்கு நிலமின்றாதலில் நானிலமென்றார். இறைக்கின்ற-இறைக்கப்படுகின்ற, இதிற்படுவிகுதி தொக்கது.

௰௯. நீகாரம் - பனிநீர். பாகு-பால். ஆர்-உவம உருபு. பயில்-பொருந்த. காளம்-கருமை. ஆகாரம்-உடம்பு. கார்காலம் என்பது ரகரவொற்றிடைவந்த ஆசெதுகை.

காண்டவதகனச்சருக்கம்.

௧. சிகைக்கொழுந்து - சுவாலையின் கொழுந்து. ஓமப்புகையென்பார் புனிதவெண்புகையென்றார்.

௨. அக்கினிதேவனுகைவிருத்தல் பற்றித் தவிசிற்குவேதிகையைஉவமைகூறினார். அவி-அவிப்பாகம். உந்துதல்-மேன்மேல் வளர்தல். ஓதனம்-அன்னம்.

௩. முனி - அண்மைவிளி. போனகம்-அன்னம். சற்பாத்திரனாய்த்தானேவந்த அதிதியாதலில் உவகையுண்டாயிற்றென்க. அரியவற்றைக் கொடுத்தல்ஔவையார்க்கு நெல்லிக்கனிகொடுத்தஅதியமானெடுமானஞ்சியிடத்தும், வழங்குதற்கேற்றன வல்லவற்றைக்கொடுத்தல் தம்மனைவியையீந்தஇயற்பகைநாயனார்மாட்டும், தம்மிற்பெரியனவற்றைக் கொடுத்தல் மாயமுனிக்குப் புண்ணியத்தையீந்தகன்னன்மாட்டுங் காண்க; முறையேபுறநானூறு, பெரியபுராணம், பாரதமிவற்றிற் கூறுப.

௪. இருபிறப்பினன்-பார்ப்பான். உதாசனன் - ஓமஞ்செய்வனவற்றையுண்பவனாகிய அக்கினி. உணா-உணவு, ஆகியென்னுமெச்சம். கூ-ஆங்கவியில்என்றான்என்னுமுற்றுவினைகொண்டது. இந்திரன்காவலுடைமையாற்காண்டவத்தையெரிக்க உடன்படேனென்றிங்ஙனம் வந்தேனென்பான் ஒளித்துவந்தனனென்றும், அவ்வனத்தை ஆசைதீரவுணல் வேண்டுமென்பது விளங்கக் குளித்தருந்துதற்கென்றுங் கூறினான்.

௫. நால்வகைமகீருகங்கள்-நால்வகைப்பட்ட தாவரயோனிகள்; அவைவித்து, வேர், கிழங்கு, கொடிகளிற்றோற்றுவன. மகீருகம்-பூமியிற்றோற்றுவது. ஆலயம் - தங்குமிடம். அரி-சிங்கம். கடையடிக்கு-கடைந்தாற்போன்றகூரியபற்களில் நஞ்சையுடையதக்ககன் என்னும்பாம்பு வாழ்கின்றவனமாகும். கண்டீர்-அசை. தக்ககனும் என்றவும்மை எச்சத்தோடு சிறப்பு.

௬. தொகுந்தராதலம்-நெருங்கியவுலகம். ஒருமுனைபட-ஒருமுகமாக. முகம்-ஆகுபெயராகிவாயையுணர்த்தியது. சொரிந்து-பிறவினைவிவ்விகுதி தொக்குநின்றது. இக்காண்டவத்தையெரிக்க அக்கினிதேவன் வந்ததற்குக் காரணமென்னையெனில், சுவேதகியென்னுமரசன்ஒருயாகத்தைச்செய்தான். அது மிகவும்புகைந்தமையால்அதனைநடத்திய முனிவர்கள்மிகவருந்த அதனை விடுத்துப்போயினர்; அரசன்அதனை நிறைவேற்றப்பிராமணர்களைவேண்டினன். அவர்களுடன்படாது பரமசிவனைக்குறித்துத்தவஞ்செய்யென, அரசன் அவ்வாறுசெய்யச்சிவபிரான் வெளிப்பட்டுப் பன்னிரண்டுவருடம் நெய்யையிடைவிடாமற்சொரிந்து ஓமஞ்செய்வாயாயினுன்கருத்து முற்றுமென்றார். அரசன்அவ்வாறோமஞ்செய்துபிரார்த்திக்கப்பரமசிவன் துருவாசமுனிவனையழைத்து இவ்வரசன் யாகத்தை முற்றுவிப்பாயெனக்கட்டளையிட்டனர். அம்முனிவன் அவ்வாறேமுற்றுவித்துப்போயினன். அவ்வரசன்பன்னிருவருடஞ்சொரிந்தநெய்யாகுதியினாலும், அவிகளினாலும் அக்கினிதேவனுக்கு வாட்டமுந்துர்ப்பலமும் நிறவேறுபாடுமுண்டாயின; அதனாலவன்வருந்திப் பிரமதேவனிடத்திலே தன் குறையைத்தெரிவித்தான். அவன் காண்டவமென்னும்வனத்தில் அநேகஔடதங்களும்பிராணிகளுமிருக்கின்றன, அவ்வனத்தைநீயுண்பாயாயின் அங்குள்ள ஔடதங்களாலும் பிராணிகளினுடைய மேதசுகளினாலும் உன்னோய்நீங்குமெ

னக்கூறினன். அக்கினி அவ்வாறே அதனையுண்ண ஏழுதரமுயற்சித்தும் இடையூற்றாலது முடிவுபெறாதாயிற்று. அக்கினி மீண்டுஞ் சென்று பிரமதேவனிடத்திற்கூற, அவன் கிருஷ்ணார்ச்சுனர்களாலுனக்குக் கிடைக்கும் அவர்களிடம்போவாயெனக்கூற, அவன் கூறியவாறே அவ்விருவரிடத்தில்வந்தானென்பர்.

௭. கூர்-மிகுதி. வடி-கூர்மை. ஈந்தனம் தெளிவுபற்றி இறந்தகாலமாயிற்று. வாசியும் என்றவும்மை குரக்குக் கொடியையுந் தழுவி நிற்றலால் எண்ணோடெச்சமாம். வருங் கவியிலறிக.

௮. தொழில்-சாரத்தியம். அருணனில்-சூரியன் றேர்ப்பாகனாகிய அருணனைப்போல். காய்ந்த-பகைவரை வதைத்த. உலையிற்காய்ந்தவென்றுமாம். நாழிகை-தூணி. மாணிக்கச்கவசமணிந்தமையால் அருக்கனையுவமைகூறினார்.

௯. சிஞ்சினி-வின்னாணி. வாழ்வனசத்துவம்-வாழ்வனவாகியபிராணிகள். வீரத்தாலும், தேவர்க்குணவளிக்குமிவ்வக்கினிதேவனுக்குணவளிக்கப் பெற்றேமென்னு மகிழ்ச்சியாலும் புயங்கள் பூரித்தனவென்க.

௰. ஆழி-கடல். வடவை முகத்திடை-பெண்குதிரைமுகத்தில். வனத்திற்குக் கடலையுவமையாகக்கொள்க. முருக்கல்-அழித்தல். பாழி-பெருமை. பாவகன்-அக்கினி. பவனன்-காற்று. அடுக்கு, உவகைபற்றிவந்தது. பாங்கு-உறவு. புறப்பொருள்வெண்பாமாலையுரையிற்காண்க.

௰௧. வாளம்-வட்டம். இந்திரன் பூந்தோட்டத்திற்கு நந்தனமென்று பெயர்கூறுப.

௰௨. ஆகுலம்-வருத்தம். தூநிறம்-வெண்ணிறம். கபோதம்-புறா. ஒடு எதுவின்பொருட்டு.

௰௩. தடம்-மலைப்பக்கம். கதுவிய-பற்றிய. பலநிறப் பொருளுண்மையால், அவற்றிற்பற்றியதீயின்புகைகளுஞ்செம்மைமுதலிய நிறமாயினவென்க. இது இல்பொருளுவமை.

௰௪. புயங்கம்-பாம்பு. குவடு-சிகரம். சாரல்-மலைப்பக்கம். பாம்புகள் தனக்குப் பகையாதலிற் சூழ்வருதற்குப் பரிதி அஞ்சுகின்றானென்க.

௰௫. கோத்திரம்-மலை. கவான் என்றது பக்கத்தை. திறம்-பகுதி. குலிகநீர்-இங்குலிகங் கலந்த நீர். தாது-பொன். அன்றியும் என்பதனை மூன்றாமடியிறுதியினுங் கூட்டுக. இது பலபொருளுவமை.

௰௬. தளைத்தபாதவம்-ஒன்றையொன்றுபிணித்தமரங்கள். வன்னியின் சிகாவர்க்கம்-அக்கினிச் சுவாலையின் பகுதிகளென்க. பொறியளி-புள்ளியையுடைய வண்டு. கிசலயம்-தளிர். திளைத்த-நெருங்கிய. நீபசாலம்-நீபவிருக்ஷம். பற்றின எரிவன வன்னியின் சிகாவர்க்கமென்க.

௰௭. மயங்கியபொறிமாலை-கலந்த தீப்பொறிகளினொழுங்குகள். கரம்-கிரணம். அடவி-காடு. முழைத்த-முழைஞ்சின்றன்மையையுடைய. மழைத்த-முகிலின்றன்மையையுடைய.

௰௮. கேசரிக்குலம்-சிங்கக்கூட்டம். உளை-பிடருரோமம். வாலதி-வால். விளிவுடைச்சவரங்கள்-(ஒரு மயிர்போகினும் உயிர்வாழாது) இறத்தலையுடைய கவரிமான்களென்க. சோகவெங்கனல்-(அகத்திலேகொண்ட மானமாகிய)சோகவெங்கனலென்க. சலித்தல்-புடைபெயர்தல்.

௰௯. இரலை-புல்வாய். உழை-மான். மெய்ப்புறம்-மெய்யாகியவுடம்பு; உடம்பின் புறம் எனினுமாம். அப்புறம்-அவைகளின் புறம்; அப்பால் எனினுமாம்.

௨௰. முதலடிக்கு-புறத்தே வயிரத்தையுடையவேய்ங்குழலின்றுவாரங்கடோறுங் காற்றுற்பரந்தொலிக்கின்றவென்க. கழை-ஆகுபெயர். புறத்துக்காழுடையன பனைமூங்கின் முதலாயின; அவை பெண்மரம் என்றுபெயர்கூறுப. அசுணத்தை விலங்கென்பர் நச்சினார்க்கினியர். சூடாமணி பிங்கலநிகண்டுகளிற் பறவையென்பர். சடுலவோசை-தீப்பற்றியெரிதலாலுண்டாகுமொலி; பின்னர் இச்சருக்கத்திற் சடுலவாரவம் என்பதனானுமுணர்க. ஊழி-ஊழிக்காலம். உரகர்-பாம்புகள்.

௨௧. விபினம்-வனம். சாலம்-கூட்டம். சினை-கொம்பு. சிகாவளகலாபம்-மயில்களின்றோகை. அலகு-மூக்கு. பந்தி-வரிசை. 'புனைதல்-அலங்கரித்தல்.

௨௨. ஆசுகன்-வாயு; விரைந்துசெல்பவன். ஆசுசுக்கணி-அக்கினி; விரைந்துசுரத்தைவற்றும்படி செய்வதில் விருப்பமுள்ளவன். புலிங்கசாலம்-தீப்பொறிக்கூட்டம். புகல்-புகலிடம். பாசு-பசுமை.

௨௩. சென்னியிற் பற்றியவன்னியென்க. குஞ்சி-குடுமி. வஞ்சி-கொடி. நகமாகிய பூரணமதியென்க. பஞ்சி-செம்பஞ்சுக்குழம்பு. பதயுகம்-இருகால்கள்.

௨௪. மூவர்-வாரணாவதச்சருக்கம்-௱௩௧

ஆஞ்செய்யுளிற்காண்க. பைப்புறம்-படத்தின்புறம்; படத்தின்கண் என வேழாமுருபுமாம். தப்பினரும் என எச்சவும்மை விரிக்க.

௨௫. விழிகளும் கரிந்தன பொறியெழுந்தனவென்க. பொறி-தீப்பொறி. மிகை-அதிகம். தகைவு-தடை. கழை-மூங்கில். சடுலவாரவம்-சடுலவொலி.

௨௬. விரதம்-நியமம். குறித்த காலத்தில் உதித்தல், மறைதல் செல்லுதலாகிய நியமமென்க. அக்கினிபற்றிய காண்டவத்திற்குச்செம்பொன்மால்வரை உவமானமென்க. அநுசன்-தம்பி; உபேந்திரனாகிய கிருட்டிணன். சபதம்-(அக்கினிதேவனுக்குக்கூறிய) சத்தியம். தாவகம்-வனம். பாவகன் - அக்கினி. பாகசாதனன்-இந்திரன்.

௨௭. முரண்-வலி. மூரி-பெருமை. உந்திஉடைத்தலினெனக்கூட்டுக. உந்தி - தள்ளி. இந்திராலயம் - இந்திரன்கோயில். சூடிகை-சுடிகை.

௨௮. தமனியச்சிலை - மேரு மலையாகிய பொன்வில். வெள்ளூர்தி - இடபவாகனமென்க. அழலுதல் - கோபித்தல். வலாரி - வலனென்னுமசுரமன்னனைக் கெடுத்தவனாகிய இந்திரன். கானவர்-வேடர்.

௨௯. புகையான் முகினிறமதிகமாகுமென்க. நிரந்தரம்-எப்பொழுதும். ஈரிருமருப்புப்பொருப்பு-வெள்ளையானையென்க.

௩௰. எவகவிருத்தச்செல்வியின்றனு- பாணத்தையகத்திலுடைய இந்திரன் வில்லென்க. விருத்தச்செல்வி-பெரியோர்களாற்கேட்கப்படுவன், பெரியோர்களிடத்தில் விஷயங்களைக்கேட்பவன் என்பது பொருள். சேவகம்-வீரம். நா - எழுவிதநாக்களையும் என்க. விதிர்த்தல்-அசைத்தல். சலதரசஞ்சலாசாலம்-மேகத்திலுண்டாகுமின்னற்கூட்டங்கள்.

௩௧. பிளிறு-ஒலிக்கின்ற. சூறிய-சூழ்ந்த. புவனம்-நீர். பவனம்-காற்று. நகை-வீரநகையென்க.

௩௨. தூமம்-புகை. எமது - எம்முடையது. உம்மை-எச்சம். மா-பெருமை. தேயுவினினறுமப்புத்தோன்றுதலாற் றேயமுமெமதென்றுனென்க. அற-மிக.

௩௩. ஆண்டவன் என்றதிந்திரனை. கணம்-கூட்டம். கனம்-மேகம். புரத்தும்-காப்போம். தந்தலைவனாகிய இந்திரன்வனமாதலால் உரிமைபற்றிஎங்கள்காண்டவமென்றனனென்க.

௩௪. நுகர்ந்தென்ன - உண்டாற்போல. வேட்டானாகியவக்கினியென்க; வேட்டான்-வினையாலணையும்பெயர். வேலை - கடல். விதம்-பலதிறம்.

௩௫. தொக்கு-திரண்டு. அடல்-வலி. சோனை - விடாமழை. சுருவை - நெய்த்துடுப்பு. மைக்கடலுமென்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. இடியொலி வேதவொலி போன்றிருந்ததென்று கொள்ளுதற்கு உருமோடெழுமெழுகொண்டல்என விசேடித்தார். சோனைக்கொண்டலாகிய சுருவையென்க. மழை அக்கினியின்முகத்தைச் சிறிது தணித்ததன்றி அவனைத் தணித்திலது என்பது கருத்தாயிற்று.

௩௬. மாரி-மழை. எ-பாணம். உணவைக்கொடுத்ததன்றிக் கவிகையுங்கொடுத்தான் எனப்பொருள்படலால் உம்மை எச்சத்தொடு சிறப்பு. கவிகை-குடை.

௩௭. பொசிதல் - நீரரும்பல். தொடையல்-மாலை. அழித்தல்-ஈண்டு நீரறுமகத்தலையுணர்த்தியது.

௩௮. மதலை-பிள்ளை. வாளிகளாற்கண்டகூடம்-சரக்கூடமென்க. சண்டம்-வலி.

௩௯. சாயக மண்டபம்-சரக்கூடமென்க. அவன்றன்மெல்லியல்-அத்தக்ககன் மனைவியானவள். மகவை - புத்திரனை. உம் - இசைநிறை, சிறப்புமாம். செக்கல் - விகாரம். தன்-சாரியை. நாகருறவைக்கருதாது அக்கினிக்குதவிய வாக்கை நிறைவேற்றுதற்கு வீழ்த்தினன் என்பது கருத்தாக உரக கன்னியைத் திருமணஞ்செய்தான் வீழ்த்தினனென்றார்.

௪௰. அயில்-கூர்மை. சதகோடி-வச்சிராயுதம்; நூறுமுனையுள்ளது. கரு-சூல். செருவயிற்புரள-அப்போர்க்களத்தினின்றும் விலக. தோழன்சிறுவன் - தக்ககன் புத்திரனாகிய அச்சுவசேனன். உதாசனன்-அக்கினி. ஒருவயிற்பிறந்தோன்-சகோதரன்; தேவர்கட்குத் தாய் அதிதியாதலால் அக்கினியை இந்திரனுடன்பிறந்தவனென்றார்.

௪௧. வாய் - ஈண்டாகுபெயராய்த்தலையினையுணர்த்தியது. வாலதி-வால். அலமரல்-சுழலல். வீடு- விடுதல். முனை-யுத்தம். வாரிதம்-மேகம். முன்னை, பின்னை இவற்றில் ஐ சாரியை.

௪௨. திரமால் - வலியுடைய இந்திரன். வீடு-விடுதல். சூரன்மாமதலை-கன்னன். அரணம்-காவல். அரணாகிய இடம் எனினுமாம். எ-தேற்றம்.

௪௩. வயின்-இடம். வயினும் என்னுமுற் றும்மை விகாரத்தாற்றொக்கது. வேழம்-யானை. யாழ-அசை; இது படர்க்கையில் வந்ததென்க. தோல்வியின்றி நிற்றலிற் பெருந்தனையனென்றார்.

௪௪. சாலம்-கூட்டம். திளைத்து - நெருக்கி. அணிந்தயூகசாலம் - அணிவகுத்தபடை வகுப்பின் கூட்டம். உருத்து - கோபித்து. பகடு-யானை. உள்ளமும் என்றவும்மை எச்சம். நிகரின்மையால் ஏகமென்றாரென்க.

௪௫. சிரங்களாய்- தலைவர்களாகி. முப்பத்துமூவர் - மருத்துவரிருவர், வசுக்களெண்மர், உருத்திரர் பதினொருவர், சூரியர் பன்னிருவரென்க; எண்ணிய வசுக்களென்னுஞ் செய்யுளிற் பிரபாசன் வீடுமனாதலின் அவனை விலக்கியமையால் இங்கே முப்பத்துமூவர் என்றது அவனையொழிந்தோரையென்க. வாகம்-வாகனம். அணிந்தார் - அணிவகுத்தார். கொல்-ஐயம். விபுதர்-தேவர்.

௪௬. திகிரி - தேரினொருருளை. உச்சமாமகத்தில்-(தக்ஷப்பிரசாபதிசெய்த) உயர்வாகிய யாகத்தில். துணையா-இதில் ஆகவென்னுஞ்செயவெனெச்ச வீறுதொக்கது. அருக்கன் என்றது பிரதானமான இரவியை. அருக்கர் பன்னொருவர் என்றது வைகர்த்தன் முதலோரை. இழந்து-இழக்க, செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாய் நின்றது. சிவபிரானை மதியாது செய்த யாகமாதலாலங்குவந்திருந்த தேவர்களை வீரபத்திரர்தண்டிக்கும்போது இரவியின் பற்களைத் தகர்த்தாரென்க.

௪௭. இங்கே உருத்திரரென்றது முன்பு தேவருங் கோடியென்னுஞ் செய்யுளிற்கூறியவாறே பதினொருகோடிதேவர்கட்குத்தலைவராய் நின்ற பதினொருவரை, இவர்கட்குச் சிவசின்னங்களுண்டென்க; இவர் தேவகணத்தலைவரேயன்றிச் சிவகணத்தலைவரல்லரென்க.

௪௮. அமர்-யுத்தம். நிலயம்-இடம். ஆயுள்வேதியர்-மருத்துவர். ஓ-எதிர்மறை.

௪௯. ஆசுகன்-வாயு. மதி-குபேரன். சோமன் என்றுங்குபேரனுக்குப் பெயருண்மையால் ஈண்டுமதியென்றார். மதிமுடித்தவன் என்றது வடகீழ்த்திசைக்கிறைவனாகிய ஈசானனை. இவனுக்குமேற்கூறியஉருத்திரர்பதினொருவருக்குப்போலச் சிவசின்னங்களுண்டென்க. இச்செய்யுளில் இந்திரனையொழிந்த திக்குப்பாலகரெழுவரைக்கூறினாரென்க. அரக்கன் என்றது நிருதியை.

௫௰. கொங்கர் பூபதி தன்பொற்பதம் பொருந்தலர்போல-கொங்கர்குலபூபாலனாகிய ஆட்கொண்டானுடைய அழகிய கால்களை அடைக்கலமென அடையாத பகைவரைப் போல. எனை அறுவகைமுகிலுமஞ்சிமீண்டமைகூறாதேயமையும். அச்சத்தால் உடம்பு வெளுக்குமென்பதை சூதுபோர்ச் சருக்கம் ௱௪௬-ஆஞ் செய்யுளிற்காண்க. பாகையுந்தனதுஎன்பது பாடமாயின் வக்கபாகையென்னு நகரமென்க.

௫௧. இடித்துவசம்-இடிக்கொடி. காயம்-ஆகாயம். காயம்-சரீரம். பரிவு-அன்பு. நவை-குற்றம். இந்திரன் அருச்சுனனிவர் பகையாகிய நவையை நீக்குதலாலுந் தெய்வமொழியாதலாலும் அசரீரியை நவைதீர் நல்லுரையென்றார். அத்தந்தையென்னுஞ்சுட்டு உலகறிபொருட்டு என்பர்.

௫௨. குருநிலம் - குருக்ஷேத்திரம். குமரன்-அத்தக்கன் குமரனாகிய அச்சுவசேனன். தூமக்கொடியன்-அக்கினிதேவன். நரனு நாரணனு நமர்களிலிருவர் எனக்கூட்டுக. மனிதரல்லரென்பது கருத்து.

௫௩. என்றுகொண்டு - என்றுஎன ஒருசொல்லாக்குக. குறித்தான் என்பதற்கு ஈண்டு ஊதினனென்க. சங்கமும் என்ற உம்மை சிறப்பு.

௫௪. கடிமணம் - புதியவிவாகம். புடவி-பூமி. பூசல்-போர். சடைமவுலி - சடாமுடி. முடிவற-அளவின்றி. நிருபர்-என்றது சித்திராங்கதனையும், வசுதேவனையும். கன்னியர் என்றது சித்திராங்கதையையும் சுபத்திரையையும்.

௫௫. மாசுணத்தரசன் மந்திரமமைத்து-சர்ப்பராசனாகிய தக்ககனது கோயிலையுண்டாக்கி. அவ்வனமென்க. ஆசுசுக்கணி-அக்கினி. அபயமென்றரற்றக்கேட்ட அர்ச்சுனன் மயனுக்கு அபயங்கொடுத்தமையால் அம்மயனைக்கொல்லும்படி சக்கரப்படை எடுத்த கண்ணன் கொல்லாது கருணைபுரிந்தான் என்பது முதனூற்கதை; இதனையுட்கொண்டு திகிரிச்செங்கண்மாலென்றாரென்க.

௫௬. கனம்-மேகம். வெங்கண்டு-புறந்தரச்செய்து. தவன் என்றது மந்தபால முனியை; இம்முனி நெடுங்காலந் தவமியற்றிப் பின் பிதிர்லோகத்தை அடைந்து அங்கே தவத்துக்குத்தக்க பயன் கிடைக்கப்பெறாமையால் அங்குள்ள முனிவரை வினவ, அவர் பிள்ளைப்பேறின்மையாற் கிடையாதாயிற்றென, மீண்டு பூமியில்வந்து காண்டவவ

னத்தில் ஜரிதையென்னுமோர்சாதகப்பறவையோடு சேர்ந்து நான்கு குஞ்சுகளைப்பெற்று அவைகட்குச் செயற்பாலன செய்து கற்பித்து அவைகளை அவ்வனத்தில் விடுத்து, அப்பாற்செல்லும்போது வழியில் அக்கினிதேவனைக் கண்டு, காண்டவதகனஞ்செய்யுங்கால் தன் பிள்ளைகளாகியகுஞ்சுகளைக்காத்தல்வேண்டுமென்றுவரம்பெற்றனன். இதனால் அக்கினிதேவன் அக்குஞ்சுகளைத்தகியாதொழிந்தான் என்பதுகதை. இம்முனிவன் கௌதமமுனிவம்சித்தவனென்பர்.

ருஎ. பிற-வேறு. புவனமும் என்னுமுற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஆசி-வாழ்த்து. நிறையவுண்டமையாலும், நோய்நீக்கத்தாலுண்டாகிய சுகத்தினாலும் அக்கினிதேவன் அசைந்துபோயினானென்க.

ருஅ. காவலர் என்றது நரநாரணரை. தமரம்-ஒலி. முதலடியில் உம்மை சிறப்போடெச்சம். மும்முரசு-வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு ; புறநானூற்றுரையிற் காண்க. நியாய முரசைநீக்கி மணமுரசைக்கூட்டியுரைப்பாருமுளர்.

ஆதிபருவம் முற்றிற்று.

இரண்டாவது சபாபருவம்.

இராயசூயச் சருக்கம்.

க. வினைமுழுவதுவுமுனைதோறு முரண்முருக்கி - பகையனைத்தையும் போர்முனைதோறும் வலியழித்து. காக்குமாறே - காக்குநெறியாகியகிருத்தியத்தையே; இந்நிலை எனைத்தொழில்செய்யினும்நியமமாகப் பூண்டதொழில்காத்தலேயென்பது தோன்றப்பிரிநிலையேகாரங்கொடுத்துக்கூறினாரென்க.

உ. வியன்-மேன்மை. ஐம்புலனுமனமும்போல்-பஞ்சப்பொறிகளும் அவற்றை விடயங்களிற் செலுத்தி நிற்கு மனமும்போல. புலன்-ஆகுபெயர். தருமன் முதலிய ஐவரையுங் கிருட்டிணன் வேண்டுங்காரியங்களிற் பிரேரித்து நிற்குந்தலைமையு மொற்றுமையும் விளங்க இவ்வுவமை கூறினாரென்க.

ந. காண்டவத்தீயிற்றுன்புறும் வினைமுற்செய்தமையால் அருவினையேனென்றான். காத்துதவலில் நீர்தந்தவுயிரென்றான். கைம்மாறு-பிரதியுபகாரம். தெம்மாற-பகைவரிலராக. தெவ்-பகை. இப்பகை என்னும் பண்பு பண்பியையுணர்த்தி ஆகுபெயராயிற்று. குருபதி-என்றது தருமனை. சிற்பம்-சிற்பநூல். அம்மா-வியப்பிடைச்சொல். தான் அமைத்ததற்கு அவர் உடன்பட்டிருக்குமாறு அரிய மணிமண்டபமென்றான். இது சபாமண்டபமென்பர்.

ச. தரியலர்-பகைவர். திறை - வென்ற அரசர்க்குத் தோற்றவரசர் கொடுக்கும் பொருள். தாராபந்தி-நக்ஷத்திரவரிசை; அவை பலநிறமுண்மையால் மணிகளும்பலநிறமுண்மைகொள்க. பொய்கைதன்னில்-பொய்கைக்கரையிற் பொருந்திய கோட்டைக்குள் என்க; இது இலக்கணையாகக்கொள்க. இவ்விந்துவெனும்பொய்கை மைநாகமலைக்குச்சமீபமாயுள்ளதெனமுதனூலிற் கூறும். ஆனாமல்-அளவுக்கமையாமல். உபதானம் - முதற்காரணம். ஏ-தேற்றம்.

ரு. அசைந்தாலும் என்றவும்மை எதிர்மறை-முன், நொடி இவை விரைவுதோன்ற நின்றன.

சூ. வீதிபோக்கி - ஒழுங்குபடச்செய்து. ஓதிடத்திற் சுருங்காமல் - சிற்பநூலிலோதுகின்றஇடங்களளவிற்குறையாமல். மாதிடத்தான்-சிவபிரான். வாய்க்குமதோவீது-இது கிடைக்குமோ. ஓகாரம் - எதிர்மறை. சுதன்மை-இந்திரன் சபாமண்டபம்.

எ. இனம்-தன் சாதியர்கள். திங்கள்-மாதம். தண்டு வீமனுக்கும், தேவதத்தமென்னுஞ் சங்கு விசயனுக்குங் கொடுத்தானென்றும், இவை இரண்டும் விடபருவராசனுடையனவென்றும், விந்துவெனும் பொய்கையினின்றெடுக்கப்பட்டனவென்றும், இத்தண்டாயுதம் எவ்வகை ஆயுதங்களாலுமழிக்க முடியா வலியினதென்றும், இச்சங்கம் ஒலிக்கிற் பகைவர் மூர்ச்சிக்கத்தக்க ஒலியுடையதென்றும், இச்சபா மண்டபம் நீரில்லாதவிடம் நீரிருப்பதுபோலவும் நீருள்ள விடம் நீரில்லாததுபோலவும், இன்னுமநேக விசித்திரங்களமைக்கப் பட்டதென்றும் முதனூலிற் கூறப்பட்டன.

அ. குறிப்பு-கருத்து. வித்தாரம்-அகலம்.

பொதுவாகத்தாரெனினும் ஈண்டுக்குவளை
மாலையெனக. தருமனையிடியேருகக் கூறின
தற்கியைய இறைஞ்சலாகிய சர்ப்பமென்
க. இது ஏகதேசவுருவகம்.

௯. அமையம்-சமையம். தோன்றல்-பெ
ருமையிற் சிறந்தோன். பணிந்திறைஞ்சி-தா
ழ்ந்துவணங்கி. என்செய்தான் என்னும் வின
விற்கு விடைவருஞ்செய்யுளிற்காண்க.

௰. உபசாரமாவன - எதிர்கொளல் பணி
தல்முதலிய ஒன்பதுவகையன ; அவை நிக
ண்டிற்காண்க. போற்றுதல்-ஈண்டுவணங்கு
தல், பிங்கலநிகண்டிற்காண்க. சூதம்-மாமர
ம். போற்றுதல் புகழ்தல் இவ்விரண்டும் உப
சாரம்யாவும்தந்துஎனமுன்னர்க்கூறியவற்றி
லுளவாகவும் அன்பாராமை மீக்கொளலாற்
பின்னரும்போற்றினன் புகழ்ந்தானென்க.

௰௧. அமுதுண்டோர் செவியிரதந்தெவி
ட்டுவிப்பாய் - தேவர்கள் செவிகளிற் சுவை
யை நிறைவிப்பாய். தெவிட்டுவிப்பாய், ஞா
னி இவ்விரண்டும் விளி. தத்துவம்-உண்மை
மூன்றுமடியிற் கூறிய அடைமொழிகளாற்
சிவபெருமானுடைய தியானவடிவுடையா
ளங்களைவிளக்கின. அன்றியும், அவைமுறை
யே கருமமே கடவுளாகக்கொண்ட மீமா
ஞ்சகருடைய செய்கை பயன்றருதலில்லை
யென்பதுணர்த்துமாற்றுற் பதியுண்டென்
பதும், எக்குற்றம்புரிந்தோருஞ் சரணடை
ந்தாலவரை வாழ்விக்குங் கருணையுடைமை
யும், எத்தொழில் புரியினுஞ் சத்தியுஞ் சிவ
முமாயிருந்து புரியுந்தன்மையுங் குறிப்பித்த
னவென்க.

௰௨. மாடகூடம்-உப்பரிக்கையையுடை
ய மண்டபமென்க.

௰௩. மண்மிசைநால்விரனிற்கு மணிமகு
டத்தணியரங்கில் - உலகங்களில் (சிறந்த ச
பாமண்டபங்களைக்குறித் தெண்ணுவதற்கா
கக் கைவிரன்மடக்கும்போது இதனையொ
ன்றுகக்கருதிச் சிறுவிரலொன்றுமே மட
க்கப்படப் பின் இதனுடன்சேர்த்தெண்ண
ப்படுஞ்சிறப்புடையவையின்மையால் எனை)
அணிவிரன்முதலிய நான்குவிரல்களுமடக்க
ப்படாமனிற்கப்பெறும்நவரத்நங்களாற்செய
ப்பட்ட சிகரங்களையுடைய சபாமண்டபத்தி
ல் ; இக்கருத்தைப் பின்பு இந்நூலாசிரியர்
அதிரதர் தம்மையெண்ணிலணிவிரன்முட
க்கவொட்டாமுதிர்சிலைக்குருவும். எனக்கூறி
யதனுலறிக ; எனவே உலகிலே தனக்கொ
ப்பின்றியிம்மண்டப மேம்பட்டதென்பது
கருத்தாயிற்று. சிறுவிரன்முதலாக மடக்கி
யெண்ணுதலே வழக்கமென்க. சிறுவிரற்
கடுத்தவிரல் அணிவிரல், அதற்கடுத்த விர
ல் நடுவிரல், அதற்கடுத்த விரல் சுட்டுவிரல்,
அதற்கடுத்த விரல் பெருவிரல் என விரல்
களின் பெயர் வழங்கும். விராயவருமறைச்
சடங்கினிராயசூயம்-கலந்த அரியவேதத்திற்
பொருந்திய சருமமாகிய இராயசூயமெனப்
படும் யாகத்தை. இன்-சாரியை. கான்முளை
யை-புத்திரனல். ஐஉருபுமயக்கம். கான்மு
ளை ஒருபொருட்பன்மொழி. புரிவி-செய்விப்
பாய். காலனூர்-யமலோகம். எனவும் என்ற
வும்மைமுற்கவியிற்சாற்றியதையுந் தழுவிநி
ற்றலால் இறந்ததுதழீஇயவெச்சம். இராய
சூயம் அரசராற்செய்யப்பட்டது; அஃதாவது
எனை அரசரைவென்று அவர்கொடுத்த தி
றைப்பொருளாற் செய்யப்பட்டதாகிய யாக
மென்க.

௰௪. தம்பியான விந்திரனும்-உபேந்திர
னுகிய கிருட்டிணனும். உம்மை-சிறப்பு. எண்
ணமாவது சராசந்தனைவதைத்தலாகிய நினை
வென்க. சராவென்பவளாலே பொருத்தப்
பட்டவனுதலாலே சராசந்தனெனக்காரணக்
குறியாயிற்று. இச்சரிதம் பின்வரும். அர்த-ப
ண்டறிசுட்டு. அடைய-எல்லாம். பந்தம்-வில
ங்கு, கட்டெனினுமாம். நரமேதயாகம் - நர
னைக்கொன்று செய்யும் யாகம்.

௰௫. சதகோடி-முன்னது வச்சிராயுதத்
தையுடைய இந்திரன், எனையனவரையறை
ப்பட்ட எண்ணையுணர்த்தாது மிகுதியையு
ணர்த்தின. கிரி-மைநாகமலை. இபம்-யா
னை. மதுகை - வலி. சதாகதி சேய் - வீமன்.
சாதித்தல்-கொல்லுதல். எல்லாத்தேயத்த
ரசர்களையும் வென்றடக்கிய பின்னர் இராய
சூயயாகஞ் செய்தல்வேண்டும் இப்பொழு
து மகததேசத்திற் கிரிவிரசநகரிற் சராச
ந்த மன்னன் நரமேதயாகஞ்செய்யவேண்டு
மெனக் கருதி அநேகவரசர்களைச் சிறைவை
த்திருக்கின்றுன். அவ்வரசரெல்லாம் அவன்
கருத்தின்படியொழுகுவர். அதனுலவனிடை
யூறுசெய்யவுங் கூடும், முதலிலே அவனைச்
செயிக்கவேண்டும். அது வீமனுல் நிறைவே
றும் எனக்கிருட்டிணன் கூறினமை முதனூ
லிற்காண்க.

௰௬. சந்தனமரங்கள் உள்ளனவாதலால்
ஆரமணங் கமழுசலமென விசேடித்தார். கூ
லம்-கரை. மதித்தல்-கடைதல். அஃதேசெ
ய்யத்தக்கது என இசையெச்சமாக வருவி

த்து முடிக்க. முதலிரண்டடியு முற்கவியிற் கூறிய இறுதியடியுமியைந்து பொருள்படலால் வேற்றுப்பொருள்வைப்பணியென்க.

௧௭. அரி-வண்டு. விரசுதல்-கலத்தல். இரண்டரி-வாயு, இந்திரன். கிரிவிரசம் - மலைகளாற்சூழப்பட்ட நகரமென்பர்.

௧௮. ஆசி-வாழ்த்து. கந்து-தூண். குவவு-திரட்சி. காட்சி-பார்வைக்குறிப்பு என்க.

௧௯. விது-சந்திரன். மான்மதம்-கஸ்தூரி. யாதவன் - யதுவம்மிசத்தான். காவலர்க்கு-வாயிற்காவலரால் இது உருபு மயக்கம். முனிவராய் வந்தோமென்றதனால் அவரையொழிந்த அரசர் முதலாயினார் அனுமதியின்றிப் புகுதலாகாமைபெறப்பட்டது. ஓ-தெரிநிலை அசையெனினுமாம். போர்குறித்துவந்தோர் நகர்காண்பான் வந்தோமென்றது பொய்யன்றோவெனின்? நகரார் காணவந்தோமென்னும் பொருளுந்தாலாற்பொய்மையன்றென்க.

௨௧. நோயென-(மருந்திற்கு)ப் பிணிநீங்குவதுபோலவென்க. முதலிரண்டடியில், சராசந்தன்மருகனாகியகஞ்சனைக்கிருட்டிணன் கொன்றகாரணத்தாற் பதினெட்டுத்தரம் விளைந்தபோரிற் றோற்றோடிக் கிருட்டிணன் வடமதுரையை விட்டு மேற்குச் சமுத்திரத்திலே துவாரகாபுரியையுண்டுபண்ணி அதிலே யாதவருடனிருந்த கதையைச் சுருக்கியிங்ஙனங் கூறினாரென்க.

௨௨. மதலை-மகன், இவன்பெயர் சகதேவனென்பர். பெரும்போர்க்குச் செல்லுமரசர் அநித்தியத்தை நினைந்து செய்யும்வழக்கப்படி தன் மகனுக்கு முடிசூட்டினானென்க.

௨௩. யாளி-சிங்கம். சமரமண்டலம்-போர்க்குரிய மண்டலவகை. முட்டி-குத்துதற்கு முடக்கிய கை. திங்களொன்றினிற் பாதிநாளினும் எனக்கூட்டுக. நள்ளிரவு - செறிந்த இரா.

௨௪. ஏழுகிரி-உயர்கின்ற மலைகள். போதகம்-திக்குயானைகளென்க. மெய்யுற-உண்மையாக. மனம்பறையறைதல், நெஞ்சு துடித்தல்.

௨௫. காலுடன்பறித்தகால் - அடியோடு பிடுங்கிய வாயு. வாயுதேவனுடன் ஆதிசேடன் இகலியேருமலைச்சிகரங்களைத் தன்படங்களான் மூடிக்கொள்ள வாயுதேவன் மூன்றுசிகரங்களைப் பிடுங்கித் தக்கிணதிசையில் வீசியெறிந்தான் என்னுங்கதையைச் சுருக்கிப் பொன்வரையின் முக்குவடு காலுடன் பறித்த காலென்றார்; அம்முக்குவடும் திருக்காளத்தி மலையும், திருசிராமலையும், திருக்கோண மலையுமாகியதலங்களாகித் தக்கிண கைலாயமென்று சொல்லப்படும்; சிவந்திருப்புராணங் கந்தபுராணங்களிற் காண்க.

௨௬. மிருகம் - ஈண்டுத் தலைமைபற்றிச் சிங்கமென்க. உற்று - உணர்வுற்று. விதலை-நடுக்கம். மேவலன் - பகைவன் முடக்கற-மடக்காமல். கனகன்-இரணியன். கோளரி-சிங்கம்.

௨௭. கேதனம்-கொடி. கேசரி - சிங்கம். மலைந்து-பொருது. ஆல்-அசை.

௨௮. கீண்ட - கிழித்த. மாகதவடிவோனென்றது கிருட்டிணனை. அக்குறிப்பினைற் குறித்து-அவ்வடையாளக் குறிப்பாலறிந்து. வேறிட-தலையுங்காலுமாறுபட. அடையாளக் குறிப்பாவது-ஒருதுரும்பையிரண்டாகக்கிழித்து அஃநுனிமாறியிட்டுக்காட்டியதென முதனூலிற்கூறினமைகாண்க.

௨௯. புதுமை-சராசந்தனுடல் இருகூறுகப்பிரிந்து பின் பொருந்தி மாறியிடப்பொருந்தாது மாய்ந்ததாகிய புதுமையென்க.

௩௧. முதலடிக்கு தேவர்கட்குப் பகைமன்னராயினோர்களிலே மகத குலத்தினையுடைய பிரகத்திரதனென்னுமோரரசன் என்க. மீனேறுதி-மச்சங்களையுடைய கடல். மகாரதனெனினும்பிரகத்திரதன் எனினுமொக்கும். அணிந்த-அணிவகுத்த.

௩௨. மண்-பூமி. பசுவாக-யாகத்திற்குரிய பசுவாக. கண்ணி-கருதி. விண்ணிற்றேவர்களும் வெருவுவரெனவே மண்ணிலரசர்கள் வெருவுதல் கூறாதேயமைந்ததென்க. இதில் உம்மை சிறப்பு. மகம்-ஈண்டு நரமேதயாகமென்க. யாகத்திற்குரிய ஆட்டைப் பசுவென வழங்குதலாற் பசுவாகவென்றார்; சாகபசு நியாயம் எனக்கூறுமாறு காண்க.

௩௩. தவன் - தவத்தனாகிய முனியென்க. சூதம்-மா. சூதநிழலிடத்தில்வசித்திருக்கின்ற முனியை சூதத்தில் வாழ்வதாகக் கூறியதிலக்கணை. பிரகத்திரதன் காசிராசனிரட்டைப்புதல்வியரை விவாகஞ்செய்யும்போது யான் எவ்விதவுபசாரம் புரியினும் இருவருக்குஞ் சமமாகவே புரிவேன் என அவர்க்கு வாக்குத்தத்தஞ்செய்தபடி ஒருகனியை அவ்விருவருக்குங்கொடுத்தான்என்பது கதை.

௩௪. வடு-பிஞ்சு. ஆசு-விரைவு. மாசு-களங்கம். பாசம்-அன்பு. பாதி பாதி என்றது

பப்பாதி என வந்தது. அருளாற் பிளங்தென்க. வடுப்போலுங்கண் என்பதே பெருவழக்காயிருக்கக் கண்போல்வடுவென்றதனுலிது விபரீதவுவமை.

நரு. உற்பாதம் - ஈண்டுப்பின்வருங்கேட்டுக் கறிகுறியாய் முன்னே நிகழ்வதென்க. வியன் - விசாலம். புரிசை-மதில். சரா சனை என ஆவீறு ஐயாயிற்று. பிரகத்திரதமகாராசனுக்குப் பிள்ளையில்லையென்று வருந்துவதையறிந்து அளித்தாளென்பதுகதை. சராவென்பவளாற் சந்துசெய்யப்பட்டமையாற் சராசந்தன் என்று பெயர் கூறுவர்.

நஎ. வினை-போர். இனைதல்-வருந்துதல். அந்தகாரீசன் - அந்தகாரத்துக்குத் தலைவனாகிய சகதேவனென்க. துனை-வேகம். முன்னர்ச் சராசந்தன் மணிமுடி புனைந்தானெனக் கூறியிருக்க ஈண்டு மகுடம்புனைவித்தென்றதென்னையெனின் அவனுலிளவரசாக்கப்பட்டவனைத் தம்வயமாகக்கொண்ட விவர்தலையரசாக்கி மகுடம்புனைவித்தாரென்க.

நஅ. கவர்ந்தோர் என்றது கிருட்டிணன் முதலிய மூவரை.

நகூ. சுருதி ஆகுபெயராய் வேதவிதியையுணர்த்தி நின்றது. மந்திரங்கிரியை திராவியங்களிற் சிறிதும் லோபமின்றிச்செய்ய என்பதுவிளங்கத் தேற்றேகாரங்கொடுக்கப்பட்டதென்க. வரம்-மேன்மை. குணபால்-கீழ்த்திசை. காற்றிசைக்கு நிருதித்திசைக்கு நடு-மேற்குத்திசை என்க. எம்பி-என்றம்பியாகிய நகுலன். வேளின்றோர் வருதிக்கு-தென்றிசை. இளையோன் என்றது சகாதேவனை. மலைவான்-(வெற்றிபெறுதற்குப் பராசனை)ப் போர்புரியும்பொருட்டு.

சய. கடவுளாலயம்-தேவமாளிகை. துண்ணென்றிட்ட- திடுக்கிட்டன; இது அச்சக்குறிப்பு. இயம்-வாத்தியம். ஐவகை வாத்தியமாவன-தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன. துழனி-முழக்கம்.

சக. மூன்றுமடியிற் றசாவதாரமுங் கூறினதாகப் பொருள் கொள்க. அரி-சிங்கத்துக்குங் குதிரைக்கும்பெயர். மனுடவடிவமுஞ் சிங்கவடிவமுஞ்சேர்ந்தது நரசிங்காவதாரம்; மனுடவடிவமுங்குதிரைமுகமுஞ் சேர்ந்தது கற்கியவதாரம்; ஆதலாலிரட்டுறமொழிதலால் நரவரியென்றார். வாமனவதாரமும், பரசுராமாவதாரமும், ராமாவதாரமும், பலராமாவதாரமும், கிருட்டிணவதாரமும் நரவடிவாதலால் நரர் என்றார். இவ்வாறு ஒவ்வொரு காரணம்பற்றித் தசாவதாரமெடுப்பினும் நாதனுந்தன்மையிற்றிரிவிலன் என்பதற்கு மெஞ்ஞான வானந்தமுமாகிய நாதனென்றார். மெய்ஞ்ஞானவானந்தம் - சச்சிதானந்தம்.

சஉ. வருதினி-சேனை. மும்மதம்-கன்னமதம், கைமதம், கோசமதம். முனைமுரண்-முனைகின்றவலி.

சங. அவண்-அக்கீழ்த்திசையில். மற்று மற்றும்-வேறுவேறு; உம்-அசை. இன்-சாரியை. தடிந்து-கொன்று. யானம்-ஊர்திகள். முற்ற-மிக. முற்றுதல், மிகுதல்; ஐங்குறுநூற்றுரையிற்காண்க. குருதிநதி - செந்நிறநதி. முருக்கி-கொன்று. தலைகளால்வாயினமுங் குருதியாற்செந்நதியுமாயெழுவென நிரனிறையாக்குக.

சச. அபயம் - ஆபத்துற்றவர் அதனைத் தவிர்க்குமாறு வேண்டுகின்ற சொல். சிகரவடமகீதரம் - கொடுமுடிகளையுடைய வடமலையாகிய மேரு; பூதரமெனினு மகீதரமெனினுமொக்கும். இறை-கப்பம். தந்திவிதங்கள் - கிரிசரம், நதிசரம், வனசரம் என்பன; இவைகிரிமுதலியமூன்றிடத்திலுந்தோன்றிச் சஞ்சரிப்பனவாம். அடுக்கு - மிகுதி. கொண்டு கொடுவென விகாரமாயிற்று.

சரு. நிசை-இரா. பாரத்தால் அசையவென்க. பராகம்-ஈண்டுத்தூளி.

சசு. பிஞ்ஞகன்-சிவபிரான். திறை-கப்பம். எழுபுணரி-வினைத்தொகை. பாரதப்பெயர்கொள்வருடம் - பாரதவருடம்; இப்பாரதவருடம் ஆயிரம்யோசனையெல்லையுள்ளகுமரிகண்டத்துக்கு வடக்குள்ளதென்றும், அக்குமரிகண்டம்போலெட்டுக்கண்டங்கொண்டதென்றுங் கூறினர்; திருவிளையாடற்புராணத்திற்காண்க.

சஎ. மாலியம்-மாலியவான் என்னுமலை. அந்தராதிபர் - அழகிய நிலமன்னர்; அன்றி அந்தர அதிபர் எனப்பிரித்து மலைகளிலே கந்தருவர்முதலானவர் வாழ்தலுண்மையால் அவர் எனப்பொருள் கூறினுமாம்.

சஅ. உத்தரகுருவினுள்ளாரை உத்தரகுருக்கள் என்றார். உத்தரகுரு-போகபூமி ஆறினொன்று. மெத்திசைப்பனிநிலா - நிறைத்த கீர்த்தியாகிய குளிர்ந்த நிலா.

சகூ. பவனம் - காற்று. கவனம்- வேகம். எழுகிரிப் புறந்தெறுகிரீடி-(முற்கூறிய) எழுமலைகளின் பக்கத்திலுள்ள தேயங்களையடர்

த்த அருச்சுனன். எழுகிரி என்பதற்கு மேலுயர்கின்ற மலைகள் எனக்கூறுவாருமுளர். அரி-வண்டு.

௫௰. வடகுள்ள துவடாது, குடக்குள்ள துகுடாது; இவை மரூஉமொழி. வடக்குள்ள தாகிய தேயம், குடக்குள்ள தாகிய தேயமென்க. அடுக்குகள் அச்சம்பற்றி வந்தன. அஞ்சல்-அஞ்சற்க; எதிர்மறை வியங்கோள். அடாதமன்னர்-பணியாதெதிர்த்தமன்னரென்க. ஏனைமன்னர்-போர்க்கஞ்சிய மன்னர்.

௫௧. தாளவன்படை-தாளியால் அவ்வலியடைந்த. தாளவண்கதியுடைத்துரங்கம்-தாளத்துக்கியைந்த சிறந்த நடையுடைய குதிரை; எனவே நாட்டியக்குதிரையாம். சுடரெ முதல் ஆயுதங்களாலும் அணிகளாலுமாம்.

௫௨. இசைக்கும்-ஒக்கும். கருக்குலைந்து-வலிமைகுலைந்து. கருமை-வலிமை. வெரு-அச்சம். அவர்கள் - அம்மேற்றிசைமன்னர். இசைக்கும்வசைகொண்டு என்பதற்குத் தங்கள் கீர்த்திக்கும் ஓர் வசையையுண்டாக்கின என்றுரைப்பினுமாம்.

௫௩. இசைத்த- ஒத்த. இறைகொள்ளல் ஈண்டுநிற்றல். பணை - வாத்தியம். இசைப்பனிநிலாவெழ-கீர்த்தியாகியகுளிர்நிலவுபரக்க. படர்தல்-செல்லுதல்.

௫௪. இருகடல்-ஈண்டுக் குணகடல், குடகடல் என்க. மத்திகை-சம்மட்டி. புத்திகைக்க - மனம்வெறுக்க. பித்திகைத்தொடயல்-சிறுசண்பகமாலை; பிங்கலநிகண்டிற்காண்க. பதி-மாகிஷ்மதியென்னும் பட்டணமென்க.

௫௫. வஞ்சி -பகைமேற்செல்வோரணியுமாலை. எஞ்சி-மிகுந்து. மஞ்சிவர்ந்த - மேகமண்டலம்வரையெழுந்த. வீரர் அந்தணரைக் கொல்லாரென்று அவர்வடிவாகி வந்தானென்க. அக்கினியாற்சேனைகள்வருந்தும்போது சகாதேவன் அக்கினியைத்தியானிக்க அவன் வேதியர்வடிவாகவந்துமுன்னிற்கச், சகாதேவன் உமக்குப் பிரீதியான யாகஞ் செய்தற்பொருட்டு வந்தேனாதலின் இப்போரில் அதற்குமாறாக நீர்நிற்குங்காரணமென்னையென, அவ்வக்கினி தேவன் காண்டவவனமுண்டபோதுஉன்றமையனுதவிபெற்றேனாயினும் நீலராசன் என்னிடம்வரம்வேண்டியபோது சொல்லியவாக்குத் தவறாமலிங்ஙனஞ்செய்தேனென்று கூறி, நீலராசனிடஞ் சென்று சகாதேவன் பெருமையையும் வரலாற்றையுந்தெரிவித்து யாகத்திற்காக மிகுபொருளைத்திறையாகக்கொடுக்கும்படிசெய்தான் என்பது முதனூற்கதை.

௫௮. விந்தசயிலம் - விந்தமலை. ஏலநெட்டடவி - ஏலச்செடியாலாகிய பெருங்காடு. மலைச்சாரலினாதலில் ஏலவடவியென்றார். ஏலநெட்டடவி வெளியாகமுறியமோதினைக்கூட்டுக. எழுகலிங்கம் - எழுவிதகலிங்கதேசமென்க. கால்-காற்று.

௫௯. நாடுகடல்-நாடப்படுங்கடல். மலயம்-பொதியமலை. குடக்கிலுள்ள கொங்கநாடென்க. உமாதேவியார் கன்னியாம்பருவத்தரசுசெய்திருத்தலாற் பாண்டி நாட்டிற்குக் கன்னிநாடென்று பெயராயிற்றென்க. சங்கமருவிய செந்தமிழ்வழங்கு நிலமாதலாற் செந்தமிழ்க் கன்னிநாடென்றார். தன்றமையன் விவாகஞ்செய்யப்பட்ட நாடாதலால் உறவுடன்புகுந்தென்றார். அங்குபசரித்துக் கொடுக்கக்கொண்டான் என்பார் பொருது என்னாது கைக்கொளாவென்று கூறினார். அங்குள்ள பொருள்களின் மிகச்சிறந்தது முத்தாதலான் மணிநித்திலமெனஅதனைமாத்திரங்கூறினார். "பூழியர்கோன்றென்னாடு முத்துடைத்து" என்பதனாற் காண்க.

௬௰. தனியாழி - ஏகசக்கரமென்னுமாஞ்ஞை. பௌவம்-கடல். நவ்-தோணி. மீளவும் வடக்கிருத்தும்வகையுன்னினானென்றதனால் அகத்திய முனிவர் பூமிசமமாகுநிமித்தம் வடக்கிருந்து விடுப்பத் தெற்குவந்திருந்தாரென்பது பெறப்படும்; அக்கதை கந்தபுராணமுதலியவற்றிற் காண்க.

௬௧. கன்னிலம்-கற்பாறையென்க. கொல்-அசை. இளையதாதை என்றது சகாதேவனை. சழக்கு-ஈண்டுத்தளர்ச்சி. உழக்கல்-கலக்கல்.

௬௨. யாரையோ -என்றதில் ஐ-சாரியை, ஓ-அசை. யாரை என்றதில் ஐ சாரியை; அழகெனினுமாம். விபீடணனுமரக்கர்குலமாதலின் ஆதரவுவகைவுற்றானென்க. ஆதரவு-அன்பு. இலக்கணக்கொத்து "வேறில்லையுண்டியார்" என்னுஞ் சூத்திரவிதிப்படி யார் என்னும் வினா முன்னிலையில் வந்ததென்க. முன்னர் நிசாசராதிபன் என்னலாற் பின் அரக்கர் பெருமான் என்றது சுட்டின்பொருளாய்நின்றது.

௬௪. அறன் - தருமனாகிய யயன். கற்பனை-நியமம். கால்-வாயு. வெற்பு-ஈண்டுமேருசிகரம். வெற்பனை வெற்பனுக்கு உருபுமயக்கம். கால்விழுத்தவெற்பின் கதைமுன்வந்தது.

சுரு. பத்மராகம் என்னும்வடமொழி பற்பராகமெனவந்தது. மணியை இச்செயுளிற் கூறியதனுன் முற்கவியிற் பொற்பனேயுடன் கொடுத்தமை பெறப்பட்டது. இச்சகாதேவன் பின்வருவனவற்றை முன்னற்குறிக்குமறிவாற்றலுடையனுதலாற் றேவரை யுவமை கூறிப்பெருஞான பண்டிதன் என விசேஷித்தார். பழம்பொருந்து சருக்கம், துருவாசமுனிச்சருக்கம், கிருட்டிணன் றூதுச்சருக்கமுதலியவற்றில் இவன்ஞானத்தை நன்குணர்க.

சுசு. ஆல்வருப் புரவி என்றது நாட்டியக் குதிரையென்க. ஆலல்-ஆடுதல். கோல்வரும்படி-செங்கோல்செல்லும்படி.

சுஎ. அரணிய-அரணேயுடைய. அரண்-மதில். இலங்கை-நீர்க்கு நடுவேயுள்ளவூர். மூர்த்தி-சரீரி; மூர்த்தியெனவே முன் அருபியாயிருந்தோனென்பது விளங்கியது.

சுஅ. வான்-மேன்மை. உலூகன்-ஓர் முனி.

எக. கரகதக்களிறு - கதம் என்னும் வடசொல் அடைந்த என்னும் பொருடரலால் துதிக்கையையடைந்தகளிறு என்க. ஒடுந்தூரகதமென்க. கனிட்டரிருவர் வணங்கினர் என்றதனுல் தருமன் எதிர்சென்றுபசரித்தன் மாத்திரஞ்செய்தமை விளங்கிற்று. அங்ஙனஞ்செய்தற்குக்காரணங் கிருட்டிணனுக்கு மூத்திருத்தலாலென்பர். வெள்ளேத்திருநிறத்தவனென்றது பலராமனே.

எஉ. புடைமருங்கு-ஒருபொருட்பன்மொழி. மாதரெல்லாம் என்றதனுல், பேதைமார் முதலெழுவகைப்பருவமாதருமென்க.

எங. அஞ்சனம்-மை. திருத்தக என்பதற்குத்திருமகட்கொப்பஎன்றுரைப்பினுமாம்.

எச. சங்கு - வளேயல். கலாபம்-இருபத்தொருகோவைமணியென்பர் நச்சினர்க்கினியர்.

எரு. குழை-காதணி. இழை-நூல். தனமாகியகுடம், கண்டமாகிய கமுகு, தொடையாகிய கதலியென்க. தோள்-கை. பூரித்தல் இச்சையுறலாலென்க. மலர்-கூந்தன்மலரென்க.

எசு. ஆவணமறுகு-மீமிசை; வீதி.

எஎ. எழுவகைப்பருவமாதர் - பேதைமுதலாயினர்; சூடாமணி நிகண்டிற் காண்க. மெய்வழி-உண்மைநெறி. போகமேகம்-போகத்தைத்தருமழைமேகமென்க.

எஅ. மாடம் - மாளிகை. ஆடம்பரம்-டம்பம். ஆபாதசூடம்-பாதமுதன் முடிவரையும்.

எகூ. திருவிக்கிரமாவதாரத்தின் மேலுலகளந்ததாள் அண்டத்தைத் துளேத்தவழி கங்கைவரலாற் கங்கைதருபொற்கழலானென்ருர. இது அளகநந்தை என்னும் பெயருடையதாய் மேருவில்விழுந்து கீழ்கடலிற் சேர்ந்தது. இச்சரிதம் வாமன கூர்மபுராணங்களிற் காண்க. பகிரதன்பொருட்டு வந்த கங்கை வாராககற்பத்தில் பிரமலோகத்தினின்றும் வந்ததென்க. முகுளம்-அரும்பு.

அய. கண்டனேய-கண்டாலொத்த. பவளம் ஆகுபெயராக அதரத்தைக்குறித்தது.

அக. சகடாசுரன் கதை, கஞ்சன்கதைபாகவதத்திற்காண்க. சுருங்கச்சொல்லலாய் அஞ்சம்பெனக்கூறினும் ஐந்தாமம்புகொல்லுந்தன்மையுடையதனுலதனேயொழித்து நான்கம்பேயெய்யப்பட்டன வென்க. அங-ஆங்கவியிறைிக. புலன் ஈண்டாகுபெயராக்கிப்பொறியென்க.

அங. மன்றல் - மணம், நயனமாகிநின்ருரெனச்சினேவினே முதல்வினேயோடு முடிந்தது. ஆகியென்பதை ஆகவெனத்திரித்துரைப்பினுமாம்.

அரு. குந்திதேவியாலிருவரு முற்பவித்தமையாலும், உரிமையாலும் ஐவர்தம்மைப் பெற்றவளென்ருரென்க.

அசு. உரை-புகழ்.

அஎ. மாகதேசன் - மகததேசத்தவனுகிய சகதேவனென்க. இவனேயிரவியெனக்கூறலால் ஏனேநரபதிகளே மதிநாண்மீனுகக்கொள்க.

அஅ. பனேக்கொடியோன்-வீடுமன். இரும்பினேயுமென்னுமும்மை விகாரத்தாற்றொக்கது. இரும்பினேக்குழைக்குநெஞ்சரெனவே மறத்தொழிலிற் சிறந்த வன்னெஞ்சரென்பது கருத்தாயிற்று.

அகூ. அந்தரம்-பேதம். தோற்றம்-காட்சி. அம்மா-வியப்பிடைச்சொல்.

கூய. தூரியம்-வாத்தியம். ஆரணம்-வேதம். பாரணம் - உண்ணுதல். வேதிகை-ஈண்டு ஓமகுண்டம்.

கூக. அனற்கலுழனுக- அக்கினிகுண்டத்தைக் கருடவடிவாக. சுருதி-வேதவிதியென்க. கோட்டி-செய்து. எறு-இடபம். உபகுண்டம் நான்கும் இடபவடிவமாகச் செய்தாரென்க.

கூஉ. நாபியம்பெருமன் என்றது பிரமனே. வாழ்வு-தொழிலாகுபெயராய்ச் சத்திய

லோகத்தையுணர்த்தியது. முனிவர் கூட்டம் வசித்தலாற் பிரமலோகத்தை யுவமை கூறினாரென்க.

௯௪. திதி-நிலை. செவியிற்செப்பினானென்றதனாற் பிறரறியாவண்ணஞ் செப்பினானென்க.

௯௫. சங்கரன்விதி திரௌபதிமாலையிட்ட சருக்கத்திற் காண்க. கடையடிக்கு-விவாகத்தைப் பூமியிலுற்பவித்த முறையாற்செய்தீரென்க. இவ்வாறன்றி விவாகத்தைப் பூமியைவேற்றுமையின்றி யரசாளுமுறைபோலச்செய்தீரென்றுங்கூறுவர். புவிமகள்-பூமி.

௯௭. தந்தையுந் தாயுமெனக்கூறிப் பின் குந்தியும் பாண்டுவுமென்பது கூறியதுகூறலன்றோவெனின், பாண்டு உற்பவகாரணனிலனாகவும் உரிமையாலவனைத் தந்தையெனக்கொள்ளுதலால் அவ்வாற்றாற் றருமனைப் பாண்டுவெனவும், நகுல சகாதேவரிருவருங் குந்தியையுரிமையாற் றாயெனக்கொள்ளுதலால் அவ்வாற்றாற் றிரௌபதியைக் குந்தியெனவுங் கொள்ளல்வேண்டுமென்பது விளக்கி நின்றமையின் அன்றென்க.

௯௯. கடுக்கைக்காடு-(சிவபிரானது) கொன்றைமாலையையணிந்தசடாடவி. வேள்விக்கேற்பன என்றது அதற்குரிய ஆடையணிகளை.

௱௧. சாந்து-சந்தனம். இலையெனவே இனம்பற்றிப்பாக்குமுதலியனவுங்கொள்க. பளிதம்-கர்ப்பூரம்.

௱௩. சுத்தமுடைமையால் அக்கினியையுவமைகூறினார்; அக்கினிக்குச் சுசியென்னும்பெயருண்மையறிக. புரை-ஒப்பு.

௱௪. கலையுறுப்புத்தோல் - கருமானினுடைய கால்வால்முதலிய அங்கங்கள்தோன்றவுரிக்கப்பட்டதோலென்க. கலை-கருமான்.

௱௫. அரிணத்தொக்கு-மான்றோல். அருணமேனி-செம்மேனி.

௱௬. புரிவு-விருப்பம். புல் - ஈண்டுத்தருப்பைப்புல். சுருவை-நெய்த்துடுப்பு. சுருதி-வேதமந்திரமென்க. * முத்தீ-வசந்தகாலச்சருக்கம் ௩௮-ஆஞ் செய்யுளுரையிற்காண்க.

௱௮. குருமுகமாக உதாத்தமுதலிய சுரவமைதியோடோதிப் பொருளுணரப்படுதலால் எழுதொணா நான்மறையென்றார். அரும்பெறல்-சொன்னிலைமாறுதல். சுவாகை-அக்கினியின் மனைவி.

௱௯. ஊழி - முறையுடையது. முகிலுமின்னுந் தருமனுக்குந் திரௌபதிக்குமுவமானம். யாகமுடிவினீராடுதற்கு அபபிருதஸ்நானமென்றுபெயர் கூறுப.

௱௰. உபசாரம் பதினாறுவன—ஆசனமளித்தன்முதலியன. மயர்வு-மயக்கம்.

௱௰௧. புனிதனென்றது வியாதமுனியை.

௱௰௨. அக்கிரபூசனை-முதற்பூசை. கதித்தான்-சொன்னான்.

௱௰௩. வேத்து-விகாரம். சேதிப்பதி-சேதிதேயத்தார்க்கரசன்.

௱௰௪. கொச்சை - ஆடு, கீழ்மையுமாம். உம்மை - இழிவுசிறப்பு. சச்சை - ஆராய்ச்சி. செச்சை-சிவப்பு. சர்ச்சா என்னும் வடசொல் சச்சை எனவந்தது.

௱௰௫. புறங்கான் - முல்லைவனம். கபாலி-சிவபிரான். எழ்தீபு-நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், கமுகு, தெங்கு, புட்கரம் என்பனவாம். தீபாலுமென்னுமுற்றும்மை விகாரத்தாற்றொக்கது. உலகிற்றீபுகளேழாகப்பகுத்தலின் உலகினடங்காதுமிகுந்தபுகழென்க.

௱௰௬. சூரன்-சூரியன். குபேரன்-சந்திரன். பாவகன்-அக்கினி. வாகுசாரம்-புயவலியென்க. பூரம்-நிறைவு; பூர் என விகாரமாயிற்று. பொதுவர் - இடையர். கொல்-அசை. ஓ-வினா.

௱௰௭. மதலை-அண்மைவிளி. ஆம்படியே-ஆகும்விதமே. ஆம்படியே பகர்ந்தனையென்பது உண்மைகூறிலையென்பதுணர நின்ற குறிப்புரையென்க. தோற்றம்-புகழ். சூரன்மகன்-வசுதேவனென்க.

௱௰௮. சூதிகை- பிரசவவீடு. தாய்-தேவகி. பிதா-வசுதேவன்; இவனப்போதிருந்தது வடமதுரை. கன்னியங்கிருப்ப -மாயைவடிவான பெண்குழவி தேவகியிடத்திருப்பவென்க. காளிந்தி-யமுனாநதி. அண்டர்க்கரசன்-இடையருக்கரசனாகிய நந்தகோபன்; இவன் மனைவி அசோதை ; இவனூர் கோகுலம். இது யமுனாநதி தீரத்திலுள்ளது. தெய்வத்தன்மையுணர்ந்துவணங்கினாரென்க. பேசலாவுரை - பிறரறிந்துரைக்கமுடியாதவுரையென்க; அதுதான் பூபாரந்தீர்க்கவுற்பவித்த கிருட்டிணன் தன்னைக்காளிந்தி நதியைக்கடந்து அசோதையிடமும், அசோதைபெற்றபெண்குழவியைத் தேவகியிடமுஞ்சேர்ப்பிக்கவுங் கூறுதன்முதலாயின. இதுமுதலாக வொன்பது செய்யுளில்வருங்கதைகளைப்பாகவதத்திற்காண்க. ஈண்டுரைப்பிற்பல்குமென்க.

* முறையே வில்வடிவம், சதுக்கம், முக்கோணமாயுள்ளனவென்க.

௱௰௯. பூதனை-கஞ்சனால்விடுத்த பேயெ ன்க. சான்ற-பெரிய.

௱௨௰. மறுகு-வீதி. கன்றாகவும், விளாம ரமாகவும் வந்த அசுரர்மாயும்படி கன்றைவி ளாவிற்சாடினானென்க. அரவு - காளியனெ ன்னும் பாம்பு. புள்-அசுரனாகிய கொக்குப்ப றவையென்க. தாலு-நா. அலகு-மூக்கு.

௱௨௧. ஓரை - மகளிர் விளையாடுமிடம். மூரி-வலி. அந்நியனல்லன் - அறியப்படாத பிறனல்லன். சிசுபாலனுக்கு மைத்துனனா தல்பற்றி அந்நியனல்லனென்றானெனினு மாம்.

௱௨௨. ஏறு-இடபம். படுத்தல்-கொல்ல ல். ஓரசுரனிடபமாக வந்தானென்க. ஆகண் டலன்-இந்திரன்; சத்துருக்களைக் கண்டிக் கிறவன் என்பது பொருள்.

௱௨௪. இது சராசந்தனுக்கஞ்சி யொளி த்திருந்தானென்றிகழ்ந்தானென்க. முரண றுத்து-பகைகெடுத்து.

௱௨௫. காளை - காளைப்பருவத்திலென்க. தானேமிஞ்சி-தான்மாத்திரமே மேம்பட்டு. உரியமேதினி-தனக்குஞ் சகோதரர்க்குமுரி ய பூமியென்க. புரந்தான்-காலவழுவமைதி.

௱௨௬. முன்னோர் - தமையன்மார். முரு க்கல்-கொல்லல். பின்னொருதமையன் என் றது பலராமனை. தாயிருவர் என்றது தேவ கி உரோகிணியை.

௱௨௭. அறிந்தோர்க் குயர்ச்சியும், அறி யாதோர்க்குத் தாழ்வுமென்க.

௱௨௮. எண்ணியது அவனிகழும் பிழை நூறு பொறுக்கவேண்டுமாதலினத்தொகை யறிதற்பொருட்டென்க: அங்ஙனம் பொறு த்தல் சிசுபாலன்றாய்க்குதவிய வாக்கினாலெ ன்றறிக.

௱௨௯. கன்னாட்டுதல் - சிறப்புப்பாயிரம் ௨௰-ஆஞ் செய்யுளிற்காண்க. அடுக்கு- வெகு ளிபற்றிவந்தது.

௱௩௧. ஆதி - நேரோட்டம்; பிங்கலநிக ண்டிற்காண்க.

௱௩௨. தானையாறு - அறுவகைப்படை; அவை மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்ப டை, காட்டுப்படை, துணைப்படை, பகைப் படை என்பனவாம். அணிவகுப்புச்சருக்க ம் ௰௨-ஆஞ் செய்யுளிற்காண்க.

௱௩௩. நான்குவிதரதம்-அதிரதம், மகா ரதம், சமாரதம், அர்த்தரதம்.

௱௩௫. கம்பு-சங்கு. கன்னம்-காது. திரு- ஈண்டு வீரலக்குமி.

௱௩௬. புடை-பக்கம். பூதுரந்தார்-பூபார ந்தாங்குமரசர். தொடை-பாணம். மறைப்ப சுப்பாலன்-வேதங்களையும் பசுக்களையும் பரி பாலித்தவன்.

௱௩௭. நுண்ணியார்-நுணுகியறியுமறிவு டையாரென்க.

௱௩௮. பூரித்துஎன்றதன்பின், பொரு து என்னுஞ் சொல்வருவித்துரைக்க. எஞ்சி னர்-இறந்தோர்.

௱௩௯. வீரரைத் துறக்கமேறவிட்டிடுமி ரவியைப்போல்-பொருதிறந்தவீரரை வீரசு வர்க்கஞ்செல்ல விட்டிடுகின்ற சூரியமண்ட லம்போல. கோளகை-அண்டமுகடு. அச்சு தன்-அழியாவியல்பினன்.

௱௪௨. விதி-சிசுபாலன் திருமாலைப்பகை த்துக் கதியுறுநியதியென்க.

௱௪௩. ஐவகைவடிவு - பஞ்சபேதமூர்த் தம். துவாரபாலகர் - வாயிற்காவலர்; இவர் பெயர் ஜெயன், விஜயன்.

௱௪௪. மிக்ககோபமுடைமையால் வெஞ் சினமுனியென்றார். துருவாசமுனிச்சருக்கம் முதற்செய்யுளிற்காண்க.

௱௪௮. சிந்துவிடை- கடலினடுவிடமாகி ய இலங்கையிலென்க.

௱௪௯. சித்தெனவே பதியும் பசுவும், அ சித்தெனவே பாசமுங்கொள்க.

௱௫௰. விரகு-கபடம்.

௱௫௧. முப்பொழுதினிகழ்செய்தியை மு ப்பொழுதென்றதாகுபெயர்.

௱௫௪. முன்குலத்தவர்-பார்ப்பார். முனி குலத்தவர்-முனிவர். வான்குலத்தவர்-தேவ ர். செய்யுளாதலின் முறைபிறழக்கூறினரெ ன்க. புகழ்மிகவளர்தலாலொளிசிறந்தானெ ன்க. கதிர்போற்றேய்ந்து என்பது பாடமா யிற் பொருளெல்லாநல்குதலாற் சுருங்கியுமெ ன்க. தேய்தல் ஈண்டுச் சுருங்கல்.

சூதுபோர்ச் சருக்கம்.

௧. முதலடிக்கு-(பக்குவர்களுக்கு) ஞான மாகிய மிகமேலானவமுதமாகிப் (பக்குவமு ண்டாதற்குப்புல்னழுந்திநுகர்தற்பொருட்டு மயக்குதலாகிய) குற்றமற்ற திரோபவமாகி

என்க. பேரின்பத்தை அமிழ்தமென்றார். தானமாமறைமுறைமையில் - தானங்களைக் கூறும் பெரிய வேதத்திற்கூறிய முறையினால்.

ந. கிணே-மருதப்பறை.

ரு. நிறம்-மார்பு.புறஞ்சுவர்-சொன்னிலை மாறுதல். புறஞ்சுவர் கோலஞ்செய்வான் எனவே அகக்குற்றமாகிய பொறாமை முதலியவற்றை நீக்கிச் சுத்தஞ்செய்யாதவன் என்பதுகருத்தாயிற்று; இது ஒட்டென்னுமணி.

எ. விதரணவிநோதன் - கொடையைப் பொழுதுபோக்கும்விளையாட்டாகக்கொண்டவன். பின்னிரண்டடியில், ஆயுதங்களையுடைய நீ பாண்டவரைக் கீழ்ப்படுத்தாதொடுங்கியிருப்பையாயினவர்களுன்னின் மேம்படுவார்களென்பது கருத்தாயிற்று ; இதுவுமேலையணி.

அ. தம்பி-ஈண்டுத்துச்சாதனன். வில்லிடைநின்று-வில்லளவு தூரத்தினின்று. பின்னிரண்டடியில் தருமன் ஏனையரசர்க்குமுன் மேம்பாட்டிருப்பினுந் துரியோதனனுக்குமுன் மேம்பட்டுவிளங்கானென்பது கருத்தாயிற்று ; இதுவுமேலையணி. எல்-பகல்.

கூ. கமை - பொறுமை. பூசுரனுதலினிமையவனென்றான்.

மக. துனே - வேகம். வேலை- வேலமரத்தை. வயிர்த்த - வயிரங்கொண்ட. பின்னிரண்டடியில், தருமன்முதலோர் இவ்வளவிலேசான வலியராயிருக்கும்போதே அவரையடர்க்கவேண்டும், காலந்தாழ்க்கின் அவர்மிக்கவலியடைவர், நம்படையும் வலியழியும், நாமும் வலியழிவோமென்பது கருத்தாயிற்று. இதுவுமேலையணி. இக்கருத்தை "இளைதாக முண்மரங்கொல்க" என்னுந்திருக்குறளிற்காண்க. நவியமும் என்னுமும்மையெச்சத்தோடு சிறப்பு. நவியம்-கோடாலி.

மங. கருமம்-காரியம். கோமான் என்றது துரியோதனனை. நென்னல்-நேற்று. அங்கு - இராயசூயயாகஞ்செய்த அவ்விடத்தில். பளிங்காற்செய்தவோரிடத்தை நீர்வாவியென்று கருதி யுடையைத்தூக்கிக்கொண்டு துரியோதனன் சென்றதுகண்டு வீமனுந் திரௌபதியு நகைத்தாரென்க. உாமரு-ஆஞ் செய்யுளிலுங்காண்க.

மச. கொத்தனே-ஓர்சாதிமீன். கோமான் என்றது தருமனை. நந்தமுத்தன் - (பெற்றவனைவிடுத்து) நந்தன்மேற் பிரியங்கொண்டவனாகிய கிருட்டிணன் என்க. முத்தம்-பிரியம்; சூடாமணி நிகண்டிற்காண்க. இங்ஙனமிவன் பழிப்புரையாகக்கூறினும், அந்த முத்தன் எனச் சொற்பிரிந்துயர்வுதோன்ற நின்றவாறு காண்க.

மஎ. எல்-ஒளி. யதுகுலமன்னன் என்றது கிருட்டிணனை. சல்லியம் - கலகம். சென்றான்-(இப்பொழுது) போயினான் ; ஆதலால் ஐவர்க்குதவியாக வரமாட்டானென்பது கருத்தாகக்கொள்க.

உஉ. உத்தரஞ்சொல்லலாமோ என்றது சொல்லிற் பயனின்றென்பதையும், அவருக்குணர்வின்றென்பதையுங் குறித்துநின்றது. ஓ-எதிர்மறை. உத்தரம்-மறுமொழி.

உரு. துப்பு-பவளம். முனி-பார்ப்பானென்க. நாம் யாவருமென்க.

உச. சூது-சூதாடலைக்குறித்தது. சதிப்பது-அழிப்பது. கருமம்-காரியம்.

உசு. காமரு-அழகு ; உகரஞ்சாரியை.

உஅ. புண்டரம் - நுதற்குறியாகிய திரிபுண்டரமென்க. ஊர்த்துவபுண்டரமெனவுங்கூறுவர்.

உகூ. ஐயென -விரைவாக ; மணிமேகலை சிறைவிடுகாதை யுரையிற்காண்க ; நல்லதென எனவுங்கூறுவர். செகுத்திடுவென்-கெடுப்பேன்.

நக. வல்-சூதாடுகருவி ; ஈண்டுச்சூதாடுதலையுணர்த்தியது.

நஉ. வேண்டா-எதிர்மறைவியங்கோள்.

நரு. தந்தை யென்றது திருதராட்டிரனை. கடையடிக்கு அப்புன்மையாகிய செய்கையினாலே (தந்தைக்கெய்துவது) வசையேயன்றிப் புகழோசொல்லப்படுவது என்க. ஏ-முன்னது அசை, பின்னது தேற்றம். ஓ-இரண்டுமெதிர்மறை. கொல், அம்மா-அசை.

நஎ. யானுமத்தந்தையன்றோஎன்றதனால், எனக்கும் புதல்வரிலொரு சாரன்பில்லை என்பது பெறப்பட்டது ; எனவே நின்றீய நினைவைமாற்றக்கூறிய நீதியை நீயிகழ்ந்தாைத்தது தகாதெனவிளக்கியவாறாமென்க. என்றாய்என்றதில் யகரவொற்றுக்கெட்டது.

நகூ. அம்மா- அசை.கஞ்சப்புரவலனொழிவு-சூரியனத்தமித்தல்.

சக. குரவர் - ஈண்டுத்தந்தையர். வனைந்துகண்டாய்-வரைசெய்தறிந்தாய்.முறுவல்-நகை ; ஈண்டு எள்ளல்பற்றிவந்ததென்க.

சரு. புரிவு முன்னது தப்புதல்; புறப்பொருள் வெண்பாமாலையுரையிற்காண்க. பின்னது செய்கை. விதூரன்-விகாரம். விரிவி

லாமனம் - புண்ணியபாவவியல்பை ஆராய்ச்சிசெய்யாத மனமென்க.

௪௫. சங்கை-எண். கற்றை - தொகுதி. வேய்தல்-அலங்கரித்தல். உத்திரத்தின்மேற் பரப்பினை ஈண்டுக்கூறுவது சுருக்கினரென்க.

௪௬. ஓவியம் - சித்திரம். வருணித்துப் பாடுமறிவினராதலாற் காவியமாக்களைக்கூறினரென்க. சமைந்தது - மேற்கூறிய மண்டபஞ் சமைக்கப்பட்டதென்க.

௪௯. விரகு - உபாயம். அகம்-வருத்தம்.

௫௧. காணத்தகுஞ் சிறப்புடைமைதோன்றப் பேரழகு என்றும், மண்டபத்தழகு காண வாராதொழியினுந் தன்னைக்காண்பதற்காயினும் வரல்வேண்டுமென்பது விளங்க எமையுமெய்தியென்றும், தாழாதுவரல்வேண்டுமென்பதற்கு விரைவினென்றும், தாழாது செல்லவேண்டுமென்பதற்கு இன்னே என்றும், இங்ஙனஞ்செல்லுதற்கு விருப்பின்றென்பது விளங்க ஏவலினென்றுங்கூறினமையுணர்க.

௫௫. பருகெலாம் புனனதியெலாம் -நதியெல்லாம் உண்ணுதற்குவிளக்கமாகும் புனல். எல்-விளக்கம்.

௫௫. ஆனகம்-வாத்தியம். ஞானகஞ்சுகன்-ஞானச்சட்டையணிந்தவனாகிய தருமன்; ஞானவடிவன் என்பது கருத்து.

௫௭. சிறந்தவில்லினன் ஆதலிற் சிலைவிதுரனென்றார். அம்புலி-சந்திரன். சந்திரனுதையமாகும்போது கடல் மிகப்பொங்குதலின் அதனையுவமைகூறினார்.

௬௧. ஒட்பம்-அறிவு. "கல்லாதானொட்பம்" என்னுந்திருக்குறளிற்காண்க. ஒட்பத்தாலென மூன்றாவது விரிக்க. துர்மதி துன்மதியெனத்திரிந்து வந்தது. அவை-ஈண்டிடத்தையுணர்த்தியது.

௬௪. இளையவன் என்றது விதுரனை. தோன்ற-புறத்துவிளங்க. கோவை-ஒழுங்கு. மற்று-அசை. ஓ-எதிர்மறை.

௬௫. அடி - சந்ததி ; குருகுலச் சருக்கம் ௨௫-ஆஞ் செய்யுளிற்காண்க. படி-பூமி.

௬௬. குழகு-இளமை. குறிப்பு-ஆய்ந்தறிதல். பழகுவார்-சூதாடுதலைப்பழகுவரென்க.

௬௭. கழகம் - சூது. பலபட-பலவாறாக. தீதகப்படு-தீமைவசப்படுகின்ற. தோதகம்-வஞ்சகம். என்னைபோ என்றதில் ஓகாரம் சூதாடல் பாவமென்றறிந்திருக்கின்ற என்னையா எனப்பொருடரலால் ஒழியிசை.

௭௨. ஆறலாதன-முறையல்லாத காரியங்களென்க. தேறலார்தமைத் தேறன்முதலிய நான்கினையும், "தேரான்றெளிவும்", எனக்கூறுந்திருக்குறண்முதலியவற்றிற்காண்க. கூறலாதன-" வன்படைகொடுமோதிக்களைதன்" முதலியனவென்க.

௭௪. முதலிரண்டடிக்கு-நீதிமிகுந்தவரிய பெரிய கீர்த்தியல்லது உயிர்நிலைபெறுவோர் யாவர்; சம்பவிக்கற்பாலது நாமங்கே போகாதிருக்கினும் நினையாமலேவந்து சம்பவித்துவிடும் என்க.

௭௫. காவலர்-ஊர்காவலர். ; கிருட்டிணன் றூதுச்சருக்கம் ௬௬-ஆங்கவியிற் காண்க. வேளையேறிய வரும்படைத்தலைவர்-நாட்பட்டவரிய சேனாதிபதிகள்.

௭௭. வேள்வி ஐந்து-தெய்வயாகம், பிரமயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம். வாசம் ஐந்து-ஏலம், தக்கோலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம்.

௭௮. விழி - அத்திரிமுனிகண். நெஞ்சு-மாதவனிதயம். நெருப்பு - அக்கினிமுகமென்க. உததி-பாற்கடல். விதிபடைப்பு-பிரமசிருட்டி.

௭௯. மைத்திறம் - மேகவருக்கம். மெய்-வடிவம். எழுதிறம் - எழுவகையாயவுறுப்பு ; அவை:-கபோலமிரண்டு, கண்ணிரண்டு, கைத்துவாரமிரண்டு, கோசமொன்றென்க. தாழ்ந்தவுறுப்பேழாவன-கால், வால், கை, கோசம் என்க. முத்திறத்தனவெண்ணலப்பிறப்பின-மூவகையான மதிக்கின்ற நல்ல பிறப்புடையன ; அவை:-வனத்திற்பிறத்தல்,மலையிற்பிறத்தல், நதியிற்பிறத்தல் என்க. இப்பிறப்பினையுடையனவற்றை வனசரம், கிரிசரம், நதிசரமென்பர்.

௮௰. எண்கோ - எண்ணத்தகுமலைகள். மறைந்தது, முற்றெச்சமாக்குக. சேதுபந்தனம்-அணைக்கட்டு.

௮௧. ஐங்கதி-மல்லகதி, மயூரகதி, வானரகதி, வியாக்கிரகதி, இடபகதி என்க. சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகவுரையில், " விக்கிதம் வற்கிதம் வெல்லுமுபகண்டமத்திமஞ்சாரியோடைந்து" என்றார்.

௮௨. முதலிரண்டடிக்கு- பாகர்மனத்தாற் குறிப்பிடுவதையும், வார்த்தையாற்குறிப்பிடுவதையும், செவ்வியகையாற் குறிப்பிடுவதையும், ஆசனத்தாற்குறிப்பிடுவதையும், காலாற்குறிப்பிடுவதையும், குற்றமில்லாத மகிழ்ச்சிபொருந்த அறிந்துகொள்வனவும், இன்னுமேலான விலக்கணங்களினுங் குறை

பாடில்லனவுமாகிஎன்க. ஆள் - ஈண்டுப்பாகர். ஆசனம்-இருப்பு. இயக்கு-கதி.

அ௩. முனிவரன்என்றது பிரமதேவனை. படைத்ததிங்கிவற்றினுக்கவயவங்குறையாமல்-இக்குதிரைகளுக்கு மாத்திரம் அங்கவீனமின்றி (அடி)யைச் சிருட்டித்ததே (அன்றிப்படிமிசைச் சஞ்சரிக்கக் கருதியன்றென்க).

அ௪. ஆல்-அசை. வரையில்லென - அந்நான்கென்னும் வரையறையில்லையென்னும்படி.

அரு. பிதிர்முழக்கு - சிதறினசிற்றொலி.

அசு. நெருங்கி-செறிதலால். கீழ்ப்படுத்த வானமேவானமா-கீழாக்கிய வெளியே ஆகாயமாக. மீதுறப்பகிரண்டமறைந்தது-மேலாகப்புறத்தாகாயமறைவுற்றது. அடுத்த பூநதி - பூமியையடுத்தநதி. குளிர்த்தனகுளிர் தோயம் - (அக்கொடிகள்) குளிர்ந்தஆகாய நதியிலமிழ்ந்தின.

அஎ மேலெழுந்ததூளிகள் செல்லுகின்றதுபோன்ம் என்க; போலும்என்றதுபோன்ம் எனவந்தது. நிலனுற-அப்பூமிதேவி பூமியில்வர.

அகூ. சாயை-சூரியன் மனைவி.

கூ௰. ஏவின - செல்லாதுமீள்வாயென்று ஏவினவென்க. குக்கில்-செம்போத்து. வரதநூல்-மேலான சகுனநூல். ஓவினர்-(பின்னுமுணர்த்துதலை)யொழிந்தாரென்க.

கூக. உத்தமசாதிமடந்தையரளகத்து லியற்கைமணமுண்மையான்முன்னித்தொடர்ந்தனவென்க.

கூ௨. வச்சிரம்-வயிரரத்நம். மணிகளிற்சிறந்தமையால் அதனையுவமைகூறினரென்க.

கூ௩. தடா-மிடா. அடா-அடுத்து. படாமுதல்-படாதவேர். கடாமலை-யானை.

கூ௪. இதழி - கொன்றை. கருவிளமலர்-காக்கணமலர். கொண்டு கொடு என விகாரமாயிற்று.

கூ௫. தழலெழுகானகம் - பாலைவனமென்க.

கூசு. புறவிபச்சுவடு- வேற்றியானைபுறங்காட்டியோடிய அடிச்சுவடென்க. தொடர்ந்துசெல்லுதல் வீரமன்றெனச்சென்றிலவென்க.

ா. மீளியர்வேல்- அத்தூளிகளான்மறைக்கப்பட்டுநின்ற வீரர்வேலென்க.

ா௨. புரைநிலங்கடந்து-நிலத்திற் குற்றநீங்கி. உரைநிலங்கடந்தசீருரை - வார்த்தையிலு நிலத்திலுமடங்காத புகழுரை.

ா௩. களி-களிப்பு. கண்டல் - தாழை. புளினம்-மணற்குன்று. கானல் - கடற்கரைச்சோலை.

ா௪. உம்மை இறந்ததுதழீஇயவெச்சம். இயல்பிலார்த்தலை அங்ஙனங்கருதியதாகக் கூறலாலிது தற்குறிப்பேற்றவணி.

ாஅ. மொட்டின- குமிழ்வடிவினவாகிய. மட்டு-கள். கட்டின-கட்டப்பட்டனவென்க. கழை-மூங்கிற் குத்துக்கோல்.

ாகூ. சரித்தன-அச்சுமைகளைக் கொட்டினவென்க. படங்குவீடுகள்-கூடாரமனைகள்.

ா௰க. ஊர்-அத்தினபுரி. புனிதன் பாசறை நிறத்திருந்தது-தருமன் சேனை தங்கிய படங்குமாளிகை விளங்கியிருந்ததென்க.

ா௰௨. மாண்டவர் - மாட்சிமையுடைய பெரியோர்.

ா௰எ. யேனியினுமிழ் அமிழ்துவிந்து எனக்கூட்டுக. விந்து-துளி.

ா௰அ. விளங்கின என்பதனை எழு வெள்பதோடுங்கூட்டுக. வெள்ளம்-ஈண்டு மிகுதி.

ா௨௰. தருக்கனென்றது தொகுதியொருமையாதலின் அதன்கோடென வொருமையாற்கூறினர்.

ா௨க. முடுகுவேட்டமாய்-வேகத்தில் விருப்பமாய். வாளிபோதல் - மண்டிலமாயோடல்.

ா௨௪. எழுந்து -எழவெனத்திரித்துரைக்க. படுத்து-இருக்கவைத்தென்க.

ா௨சு. முந்தை-முன்றந்தையாகிய திருதராட்டிரனென்க.

ா௨கூ. கடையடிக்கு-எளிதாக இராச்சியநடைபெறுமென்க.

ா௩௩. யாய்என்றது குந்தியை; காந்தாரியுமாம். எந்தை என்றது வீடுமனை. போய் யாயைஎன்பதில்நிலைமொழியீற்று யகரவொற்றுக்கெட்டது.

ா௩அ. வெங்கருவி - கொடுமைத்தொகுதிகள்; கொடியகாரணமெனினுமாம்.

ா௩கூ. நம்-வணக்கமென்னும் பொருளில்வந்த வடசொல்.

ா௪க. மெய்யுற-உண்மையாக. தமதில்-தமதுமனையில்.

ா௪௨. சூரியனைக்கமண்டலமாகவும், செவ்வானத்தைக் காஷாயவஸ்திரமாகவுங்கொள்க. வந்தனை-சந்தியாவந்தனம். எறிதல்-அலையெறிதல். வேலை-கடல். புனிதர்-ஈண்டுத்தூயோராய துறவினர் என்க. புன்கண்மாலை-வருத்தந்தருமாலைப்போது.

௱௪௪. ஈது என்-வஞ்சகஞ்செய்யுமிது எத்தன்மையதென்க. கொல்-அசை.

௱௪௫. ஏ-அசை. இருள் - களங்கம். வெறுக்கவோ - வெறுக்கலாமா. ஓ-எதிர்மறை. கரியன்-களங்கன்.

௱௪௬. துரியோதனன்கொடுமைக்கஞ்சியுலகினரெல்லாஞ் சரீரம் வெளுத்தனர். அத்துரியோதனன் முதல்வனாகிய சந்திரனிலாவினாலனைத்தும் வெளுத்தனவென்க.

௱௪௭. முந்தை - முதன்மை. தெரிவை-ஈண்டுத் திரௌபதி.

௱௫௪. பிராதிகாமி-துரியோதனன் சாரதி. சற்பம்-கற்பகதரு. ஐந்தருவிற்குங் கற்பகமென வழங்குதலுமுண்டென்க. ஐவருக்குங் கற்பகத்தை யுவமைகூறினானென்க.

௱௫௬. சிறுபான்மை இகரமுதலாகாது ராயசூயமெனநின்றதென்க.

௱௫௮. தேவரூர் மண்டபம் - சுதன்மை. இனிமை-ஈண்டுச்சிறப்பு.

௱௫௯. மனு - மனுநூல். வணங்கி-வணங்கப்படுவோரை வணங்கி. இருப்பு-ஆசனம் தவிசு-ஆசனம்.

௱௬௰. புரை - குற்றம். வாழ்தி-இனிவாழ்வாயென்க. நாகர்வாழ்வினுள்ளதும் - (இப்போது) தேவருலகத்துள்ளதாகிய வின்பத்தையுமென்க.

௱௬௧. விலாசயயர்விர் - விளையாட்டைச் செய்வீர் என்றான் றுரியோதனன்; என இசையெச்சமாக வருவித்துரைக்க. ஓ - அசை.

௱௬௨. சூள்-சபதம். தீதெடுத்த - தீங்ககற்றிய. இது ஒப்புமைக்கூட்டவணி.

௱௬௩. சூதாடக்கூறியது துரியோதனனாதலாலவனைநோக்கித் தாமமார்பவென்றும் அதனையாடி வாழ்வைக் கவரக்கருதியது சகுனியுமாதலாலவனையுமுளப்படுத்தி நீர்எனவுங் கூறினானென்க. தாமம்-மாலை.

௱௬௪. இரண்டாமடிக்கு - தவறில்லாத கவறானதுருண்ட தாயமானதிருபக்கத்துஞ் சமமாகக்கொள்ளப்படும். வைப்பிலாண்மையன்றி - அவ்வச்சமயத்தில்வைக்கின்றதிலே திறமையல்லாது. உண்டென - வஞ்சமுண்டென்று. இது சகுனிசபையாரைநோக்கிக் கூறினானென்க. கவறு-ஈண்டுச்சூதாடுகருவி. தாயம்-ஈண்டு விருத்தம்.

௱௬௫. வேணுமாகில் வேணும்-தருமன் சூதாடுதலை விரும்புமாயின்எனக்கும்விருப்பமாமென்க. விரகு-வஞ்சம். விடுதி-தங்குமிடம். பூணுமாகில்-சூதாடுதலிலிசைவானாயின்.

௱௬௬. ஒட்டுகின்ற-பந்தயம்வைக்கின்ற.

௱௬௭. இசைவு-ஈண்டுப் பந்தயப்பொருள். தேனெறிந்து-வண்டுகண்மோதி.

௱௭௧. ஏதிலாரின் - அயலாரைப்போல். காதில் - பொருதுகொல்வேனாயின். உருத்து-கோபித்து.

௱௭௨. ஒட்டம்-பந்தயப்பொருள்.

௱௭௩. மீளி-பெருமை, வலியுமாம். ஒன்றிட-ஒன்ற. நவிர்-குற்றம். புறம்-ஏழனுருபு. நவிரம் நவிர்என நின்றதென்க.

௱௭௪. முதலடிக்கு - யானையினுடைய கோட்டாற்செய்த யாளிக்கால்வகுத் தமைக்கப்பட்டபலகையிலென்க. யாளிகால் சந்தநோக்கிமிகாதுநின்றது. யானைக்கொம்பாற் செய்யப்பட்டமையிற்றவளமான கவறென்றார். தவளம்-வெண்மை. கவளமான்-யானை. பணை-கொம்பு; என்பதை இரண்டாம்போர்ச்சருக்கம் ௰௬-ஆங்கவியிற்காண்க.

௱௭௫. மணிச்சாரம்-மணிசிரேட்டம்.

௱௭௯. கிராதவனம்-வேடர் சஞ்சரிக்கும் வனமாகிய காண்டவமென்க. அங்கு-கங்கைக்கரையில். இரா-இராவில். விஞ்சையன்-சித்திராங்கதனென்க. இவன் கதை திரௌபதி மாலையிட்ட சருக்கம் ௮-ஆஞ் செய்யுளிற் காண்க. பொங்கிராமனஞ் சிறந்த அளகநீள்போகமாதரெனக்கூட்டுக. இரா - இருந்து. நரேசன் என்றது தருமராசனை.

௱௮௰. வெற்றியெய்தவென்றமேன்மையானெனக்கூட்டுக. வீவு-அழிவு. அடுக்கு-தனித்தனிவெல்லுதலைக்குறித்தலாற் பன்மையில்வந்தது.

௱௮௧. குறிப்புறாது -(தருமன் ஐவரையுங் குறித்தாடுதறீங்கென்று) குறிக்காமல்.

௱௮௨. வெல்லுமாறு-(வஞ்சமின்றி) வெல்லத்தக்க வழியால். அடிமையின்னர் என்றதில் னகரவொற்றுவிரித்தலாயிற்று. ஒட்டி-பந்தயமாக்கி. நீயடிமையானபின்னவனைப் பந்தயங்குறித்தாடல் கூடாதாயினு நான் சம்மதிக்கின்றேனென்பது விளங்க இன்னமெறிகவென்றானென்க.

௱௮௩. விதுரான் - நடுக்குறில் நீண்டது. அந்தனைப்புகன்று - குருடனாகிய திருதராட்டிரனைக்குறித்து. அபோதம்-அறிவிலாமை. ஓகாரம்-எதிர்மறை.

௱௮௪. செய்தகால் இதிற்ககரவொற்றுத் தொகுத்தலாயிற்று.

௱௮௬. கருமம்-காரியம். தஞ்சம்-ஈண்டுப் பற்றுக்கோடாகிய நீதியென்க.

௱௮௭. வெதிரனுங்கொல் - செவிடனுமோ. கொல்-ஐயம். சதுர்புரிந்த-சமர்த்தை விரும்பிய. இரக்கமில்லாத பாவியென்பார் அருளிலானென்றார்.

௱௮௮. கள்வன் என்றது சகுனியை. நிகர்பிடித்ததென்ன-அக்கள்வனுக்கு நிகராக (வஞ்சகத்தைப்) பற்றியதென்னும்படி. மாயம்-வஞ்சனை. தாயம் - ஈண்டுரிமை. இடங்கொடாது-தருமன் வெல்லற்கிடங்கொடாமல். சதித்தது-வஞ்சித்தது.

௱௮௯. தாயம்-ஈண்டு விருத்தம். மன்னன்-ஈண்டுத் தருமன்.

௱௯௪. எண்ணி என்பது நால்வருடைய வினையாயினும் அவருள்ளே தலைமையோன் வினையாகிய சொல்வானென்பதனோடு முடிந்தது.

௱௯௫. ஐவருக்கு முரியளாயிருத்தலாற் பொதுமகளென இழித்துக்கூறினன்.

௱௯௯. தவம்- ஈண்டுப்பிரமசரியவிரதம். நகா-நகைத்து. புகாது-கொள்ளாமல். வெகுளிகூரப் புரிந்தனன்-வெகுளியை மிகச்செய்தான்.

௱௯௯. முதலடியில், வேசையென்பதும், யாகஞ்செய்தற்குரிய பத்தினியல்லள் என்பதும் விளங்கக்கூறினனென்க.

௨௱. துரியோதனன் முகங்கொடுத்துக் கேட்குமாறு ஆணைச் சிறப்பித்துக்கூறும் நம்பியென்னும் பெயராற்கூறினனென்க.

௨௱௧. திருத்தக-உனக்குச் செல்வமிகும்படி. கண்டாய்-முன்னிலையசை.

௨௱௩. இவனுக்குக் கேடுசம்பவிக்குமேயென்றிரங்கினனாதலின் அன்பினையுமனங்கசிதலையுங்கூறினர்.

௨௱௪. உம்மை-முற்பிறப்பில். இம்மை-இப்பிறப்பில். இம்பர்-இவ்வுலகில் தான் என்றது பூமியை. அவராகம்-அந்தச் செந்நிறம். தேவருக்கும் அசுரருக்கும் போர்நேர்ந்தபோது தேவர் தோல்வியுற்றுத் திருமாலைத் தியானித்து அவர் காட்சிதர பணிந்து சகாயம்பெற்று மீண்டும் அசுரருடன் போர்செய்ய அதுகண்ட அசுரர் இதற்குக் காரணனாயிருந்த திருமாலை முதலிற் கொல்லவேண்டுமென்றுவந்து போர்செய்யத் திருமால் சக்கரத்தையேவி அசுரர்களைக்கொன்றார். பின் அவ்வசுரர் பூமியில் அரசர்முதலான மனிதராய்ப்பிறந்ததையறிந்த பூமிதேவி அவர்பாரஞ் சுமக்கமுடியாமற் பிரமனுக்குத் தெரிவித்து அவனுடன்றிருமாலைக்கண்டு பணிந்து தன் வருத்தத்தை நீக்கியருளுமாறு வேண்டத் திருமால்வ்வாறே செய்வோமென்றருளி அதற்காகக் கிருட்டிணனாக அவதரித்தனர்; என்னுங்கதையை இக்கவிமுதல் ௨௱௭-ஆங்கவிவரை சுருக்கிக் கூறினமையுணர்க.

௨௱௬. மின்னிடை - இலக்குமியுமாம். முன்னிடை கடையொன்றின்றி - முன்னுநடுவும் பின்னுமாகிய சந்ததிகளிலொன்றுமின்றி.

௨௱௮. சற்றும் பரிவிலீர்-சிறிதுமன்பற்றவராய் என முற்றெச்சமாக்குக.

௨௱௰௧. முன்னை - தன்னைத்தோற்பதற்குமுன்பு. பின்னை- தன்னைத்தோற்றபின்பு.

௨௱௰௨. அல்லற்பான்மை - துயரின்றன்மை.

௨௱௰௪. வீமன்முதலானல்வரைத் தோற்றபின் றருமன் றன்னைத்தோற்றானென்று வியாசபாரதத்திற் கூறலாலீண்டுச் செய்யுட்டொடைநோக்கியானேயென்றும், எனமுன்வைத்துக்கூறினாரென்க. ௨௱௪௨-ஆங் கவியிலுங்காண்க. மற்றொருவருடனிருந்தேவாமற்றானே சூதுபொருது என்பது கருத்தாகலின் ஏகாரமுன்னது பிரிநிலை. ஏனையன அசை. தலைவன் என்றது துரியோதனனை. இசைவு-பந்தயப்பொருள்.

௨௱௰௫. கோயில் - இராசசூயயாகச் சபாமண்டபத்தில். புனல்வாவியிலென்று-நீர்வாவியில்லையென்று. மன்னை - துரியோதனனை; சிரித்த கதையை இச்சருக்கம் ௰௩-ஆங்கவியுரையிலறிக. சளம்-நடுக்கம்.

௨௱௰௬. சூழ்ச்சிமுடித்தான்- துராலோசனையைமுடித்தவனாகிய துச்சாதனனென்க.

௨௱௰௭. சிலைவாயணங்கை என்பதுபாடமாயின், வில்லிலக்கெய்தலால் மணம்வாய்ந்த திரௌபதியென்க.

௨௱௰௯. கொடியாள் - கொடிபோன்றவளாகிய திரௌபதி.

௨௱௨௰. உரும் - இடி. உற்பாதம் விரவிற்று - ஈண்டுக்கேட்டுக்கறிகுறிசம்பவித்தது. வெரூஉ-அச்சம்.

௨௱௨௧. ஓகாரம்-முன்னது சிறப்பு. இரண்டாவது நான்காவது ஐந்தாவது எதிர்மறை. மூன்றாவது அசை.

௨௱௨௨. பனிச்சை - குழல். சுயம்வரத்திலுங் காண்டவவனமெரித்தபோதுங் காட்டப்பட்டதாதலிற் காட்டுந்திறல் வெஞ்சிலை விசயனென்றார்.

௨௱௨௩. மாமனென்றது திருதராட்டிரனை. பெரும்போரரசர் என்றது துரியோதனுதியரை. பெண் என்றது துச்சளையை.

௨௱௨௫. பறைதல்-ஒலித்தல்.

௨௱௨௬. கொடும்புனல் எனக் கூட்டுக. பின்றுரியோதனுதியரை கோறற்கேதுவாதலாற் கொடும்புனலென்றார்.

௨௱௨௮. உற்பாதம்போதியாவும் புரிந்தன-இவ்வாறு கெடுகுறிகள்பகற்காலமெல்லா நிகழ்ந்தன. நால்வர்-துரியோதனன், சகுனி, கன்னன், துச்சாதனன்.

௨௱௩௰. வேம்போது- கான்வேகும்பொழுது. வாழ்வ - வாழ்வனவாகிய வுயிர்களெல்லாம். கான்-வனம். முதலிரண்டடியினும் நாமெல்லாம் வருந்தும்போது துரியோதனுதியர்களித்திருக்கின்றார், துன்பமனுபவிக்கின்றகாலத்து என்னைச்சேர்ந்த நீங்களுந் துன்பமுறுகின்றீர் என்பதை விளக்கலால் இது ஒட்டணியென்க. முன்னம் பொறுத்தலாவது, ஆற்றிற்கழுநட்டியும், விடமருத்தியும், கங்கையில் வீழ்த்தியும், மாளிகையிற்றீயிடுவித்துங் கொலைசூழ்ந்தபோது பொறுத்திருத்தலையென்க.

௨௱௩௧. மெய்யும் என்னுமும்மை தொக்குநின்றது. மனங்கொதிக்க அதனாற் சரீரமுங்கொதிக்குமாதலின் மெய்சுடவென்றார்.

௨௱௩௩. மாமனென்றது விதுரனை.

௨௱௩௪. வாய்மை மொழியோனென்றது வீடுமனை.

௨௱௩௫. மன்னென்றது தருமனை. வழக்காற்கொண்மின்-முறையாலே யென்னையுங் கவர்ந்துகொள்ளுங்கள். முன் - தன்னைத்தோற்றற்குமுன். இசைந்து - பந்தயங்குறித்து. கரி - சான்று. தன்னை முன்றோற்றுப்பிறருக் கடிமையானவரசனுக்கு மண், பெண், பொன்முதலாயினவற்றினுரிமையில்லையென்னுங்கருத்தாலிவ்வாறு கூறினனென்க.

௨௱௩௬. ஆகார்-உடன்படாதவராய்என எச்சமாக்குக. கொடும்பாவியாதலிற்றுரியோதனனுக்கு வேறுபெயர்கூறாது ஈண்டுவெய்யோனென்றார். ஐ-சாரியை.

௨௱௩௭. மெய்பேசுந் தெய்வத்தன்மையனுதலின் வாய்மைக்கடவுளென்றார். பொல்லாநெறியிற் புகுந்தீராயின் நரகெய்துவீரென்பான் அதிற்போகாவண்ணமென்றான்.

௨௱௩௮. இராயசூயயாக முடித்துச் சம்ராட்டுஎன்னும்பெயர்பெற்றிருத்தலால், அவனிதலமுழுதுமுடையானென்றார். நிறை-தகைமை. அழிந்து-மனம்வருந்தி. நினைவற்றிருந்தீர்-அறிந்துகொண்டு பேசாதிருக்கின்றீர். நினைவற்றோ-அறிவழிந்தோ. இருந்தால்-அறிவிருந்தால், சபையிலிருந்தால் என்றுங்கூறுவர்.

௨௱௩௯. முடிவுற்றான்-சூதாடுதலை முடித்தலுற்றான். திரௌபதியைப் பந்தயம்வைத்தாடினது சகுனி கூற்றானன்றித் தான் வைத்தாடவில்லையென்னுங் கருத்துவிளங்க முடிவுற்றானென்றான். இக்கவியிறுதியில் இங்ஙனம்பந்தயம்வைத்தாடுதற்குரிமையில்லையாதலாலப்பந்தயமும் வெற்றியுற்றோனெய்தற்குரிமையில்லையென்பது கருத்தாகக் கூறுக. உரைக்கு - உரைப்பேன்; தன்மையொருமை வினைமுற்று.

௨௱௪௰. நஞ்சின்வடிவன்னனிளிவல்- விடத்தின்வடிவையொத்தவனுகிய துரியோதனனுக்குத் தம்பியாகிய விகருணன்.

௨௱௪௧. இன்னறிவெனப்பிரித்துரைக்க. குரு-கனம்.

௨௱௪௨. தான் என்றது தருமனை. தருமன்றன்னைத்தோற்றபின் திரௌபதியைப் பந்தயமாக வைத்தாடுதற்குரிமையில்லையாயினுமாகுக, தருமன்றன்னைத் தோற்குமுன்னுடிய சூதிற்குறித்த பந்தயப்பொருள்களிலே திரௌபதியுமடங்கினுளெனவொருபோலி நியாயங்கூறினனென்க. தனம்-பொருள். மனையாளுக்கு இல் என்றபெயர் நான் புதிதாகவுண்டாக்கவில்லை. முன்னோர் நூல்களிற்கூறப்பட்டதேயென்பான் யான்படைத்தமொழியன்றேயென்றான். நிகண்டு, திருக்குறள், கந்தபுராணம், இராமாயணமுதலிய நூல்களிற்காண்க.

௨௱௪௩. வரிசை - சிறப்பு. அம்மா-இவ்வியப்பிடைச்சொல் இழித்தற்குறிப் புணரநின்றதென்க.

௨௱௪௫. இளையோருருப்ப - நகுலசகாதேவர் கோபிக்க. மடக்கினன்-அந்நால்வருடைய கோபத்தையுமடங்கச் செய்தானென்க.

௨௪௬. தகைய - அத்துகில்குலையாவண்ணந் தடுத்துப்பிடிக்கவென்க.

௨௱௪௭. கோவிந்தன்-உலகத்தைக்காப்பவன் என்பது பொருள். அந்நாமத்தைக்கூறலால் நாவிலமிழ்தூறலு முடல்புளகித்தலு மனமுருகலுநிகழ்ந்தனவென்க.

௨௱௫௨. இரண்டாமடிக்கு-எங்களுக்குத் தோற்றேடும் உங்களோடு போர்செய்யாதி

ருக்கின்றேம், அஃதெதுபோலுமெனின் இருளையோட்டுகின்ற சூரியவடிவம் அவ்விருளினுலொளித்திருப்பது போலாமென்க. ஆல்- அசை.

உாருச. கோவிந்தனருளாற் கூறைமாளாத தெய்விகமுடைய கற்பினளென்பதுதெரியப்பட்டமையாற் றெய்வமன்னுளென்ருர்.

உாருரு. செய்யுளாதலிற் றுகிறீண்டியவளகந்தீண்டியென முறைபிறழக்கூறினர். தகாதனவிளம்புவோர்-துரியோதனன், துச்சாதனன், கன்னன் என்பவர்.

உாருகூ. பழுதுரைத்தோன்- துரியோதனன். மேழி-ஈண்டு ஆகுபெயராய்க்கலப்பையையுணர்த்திநின்றது. சாலி-நெல். சாலின்வேம்நறுநெய்யென்க. சால் - கடாரம். இதுவும் வருங்கவியும் வீமன்கூற்று.

உாருஅ. சௌபலன்-சகுனி. நகுல சகாதேவரிருவருமொற்றுமையுண்மையாற் சகுனியைக் கொல்லுஞ்சபதத்தைக் கூறினரென்க. ஓ எதிர்மறை.

உாருகூ. விண் - ஆகாயத்தில். வழங்காமல்-சஞ்சரியாமல். ஊர்கோள்-பரிவேடம். உடனே பொய்கைவாடி-மலர்ந்தவுடனே வாவிமலர்கள் வாடி. பொய்கை - ஆகுபெயர் ; இவ்வாறன்றிப் பொய்கைநீர்வறந்து என்றுரைப்பினுமாம். இருந்த-இவ்வாறவசகுனங்கணிகழ்ந்தன என்க. அவிதா-யாதேனுமோராபத்தை யடைந்தவர் அதினின்று நீக்குதற்கு உதவிபெறும்பொருட்டு முறையிட்டுக் கூறுமோர் சொல்.

உாகூஉ. மெய்-உண்மையாக. வற்போர்-சூதுபோர் ; உகரச்சாரியை பெருதுவந்தது.

உாகூங. எம்பி என்றது பாண்டுவை. துரியோதனுதியர் செய்த சூழ்ச்சியிலேதான் சம்பந்தப்படாதவன்போலக் கூறினனென்க.

உாகூச. சம்பு-நாவல். சம்புநாடு என்றது நாவலந்தீவை. இப்பரதகண்டத்திற்கு நாவலந்திவு என்று பெயர்கூறுப.

உாகூரு. இதுமுதன்மூன்றுமொருதொடர். குருகுலத்தே குலங்கொடுத்தானைவருக்கும்-அடிமையான பாண்டவரைவருக்குங் குருவம்மிசத்திற் சேர்ந்தவரென்று குலமுங்கொடுத்தான். தலைகொடுத்தான்-அடிமையாகிய தலையைவிடுவித்தான். தலை, அம்ம-அசை. திருதராட்டிரனைக்குறித்துக்கூறிப்பின் அவனையுமுளப்படுத்தித் துரியோதனுதியரைநோக்கிவிடுகின்றீரெனக்கூறினனென்க. வயப்புலியை வாலுருவி விடுகின்றீர் என்றது அகப்பட்ட வீரரை யுபசரித்துவிடுகின்றீர் இனியுங்களைமோசஞ்செய்வார் என்னும்பொருள்பயத்தலால் இதுவொட்டணி.

உாகூகூ. முதலிரண்டடியில்-"எண்ணித் துணிககருமம்" என்னுந்திருக்குறளின் கருத்துணர்க. அற்றன்று-அத்தன்மையுடையதன்று. பேதுறவடர்த்தும்-மயங்கவருத்தியும். உருகி-மனமுருகிவிடுத்தலால் என்க.

உாகூஎ. முதலிரண்டடியில்-"தீயினுற்சுட்டபுண்ணுள்ளாறும்" என்னுந்திருக்குறளின்கருத்துணர்க. புடையுண்ணல்-அடிபடல். பேயினுற் புடையுண்டாரோ என்றதனுற் பாண்டவர் சுபாபவந்திரிந்து மயங்கினரில்லை; இனியுங்கட்குத்தீங்கிழைப்பாரென்பது கருத்தாயிற்று. மறப்பரோ பெரியோர் என்றதனுற் சிறியோர் பெரும்பிழை செய்தனராயிற் பெரியோரப்பிழை பொறுத்துவிடுவரோ என்பது கருத்தாயிற்று.

உாகூஅ. துகிலினையுரிந்தவன்கைச் சூரன் என்றது புகழ்வதுபோற் பழித்தலென்க.

உாகூகூ. போகமாதென்பான் சூதமென் கொடியென்ருன். விரதம்-விரதவொழுக்கம். கடையடியில் - உனது சருமத்திற்கு விரதவொழுக்கமெய்யாயிற்றேற்றனவகளை மீளக்கொள்வாயல்லை என்ற கருத்தாகக் கூறினனென்க.

உாஎஉ. நாட என்றது திருதராட்டிரனை.

உாஎங. தன்மனை - தன்மனுக்கு. தழைக்க-வாட்டமிக.

உாஎச. உன்னுணர்வுனக்கேயுள்ளது - ஆய்ந்தறியத்தக்கவுணர்ச்சி யுனக்கேயுண்டு. ஏகாரம்-பிரிநிலை. நீ தோற்றபொருள்களுனச்குரிமையாகமாட்டா ; வென்றவர் மீளக்கொடாமை குற்றமன்று, என்பவற்றை நீயறியவல்லாய் என்பது கருத்தாக வுரைத்தானென்க. ஒல்லார் - இசையார். முன்னுளோர் என்றது அரசரை. நீ வனவாசஞ் செய்யென்றல் கொடுங்கூற்ருதலின், முறைமையே முன்னுக என இதவசனமாகக் கூறினன் ; அதனைத்துரோணமுனி வருங்கவிகளால் விளக்கிக் கூறினமையறிக.

உஎரு. கதையாவது தம்பிக்குஅரசுகொடுத்துப்போய் பதினன்கு வருடம் வனவாசஞ்செய்து பின்புவந்து அவ்வரசுபெற்றது:

உாஎகூ. பதின்மூவாண்டுநெடுங்காலமல்லவென்பதற்குச் சூர்தினமென்ருனென்க.

உாஎஎ. மறைந்துறைதல்-அஞ்ஞாதவாசம் என்க. அரணியம்-வனம்.

உ௱எஅ. குறித்தகாலங் கழித்துவரினும் அடிமையின்செல்வமடிமைகொண்டவர்க்கே யெனக்கூறவுங்கூடுமாதலி னதனைநீக்குதற்கு உரிமையின்றெய்தவென்றுளென்க. உரிமை-சுதந்திரம்.

உ௱எகூ. கையறுதொண்டராகி- (சுதந்திரச்) செயலிழந்த அடிமையராகி.

உ௱அ௰. பன்னிரு நாமம் - கேசவன்முதலாயின.

உ௱அக. ஐவரும் புதல்வருந் திரௌபதியுமாகிய பதினொருவருடைய அடிமைநீக்கத்தைக்குறித்து யாவும் என்றதென்க; அன்றிப் பந்தயங்குறித்த புண்ணியமுங்கூட்டிப்பன்மைகூறியதெனினுமாம்.

உ௱அங. ஒழிவுசெய் கருணை நால்வர்- தயையில்லாதவராகிய துரியோதனன் முதலிய நால்வர். மாழ்கி-மயங்கி.

உ௱அச. கூடு-ஈண்டு உடம்பு. துய்த்து- அனுபவித்து. மாறி-அங்கிலைமாறி. வீடு - முத்தி. மெய்மகிழ்விபுதர் - உண்மை மகிழ்ச்சியுறுகின்ற மகா ஞானியர். உவமைகூறுதற்கேது நித்தியாநித்தியவுணர்ச்சியென்க.

சபாபருவம் முற்றிற்று.

மூன்றாவது ஆரணியபருவம்.

அருச்சுனன்றவநிலைச்சருக்கம்.

க. பேணலார்-பகைவராகிய துரியோதனாதியர். சாரல்-மலைப்பக்கம். காமியவனம் - இது சரசுவதிநதிதீரத்திலுள்ளதென்பர்.

ங. அங்கி-ஈண்டுக்காட்டக்கினி. சிங்கமும்யானையுஞ்சேர்ந்து திரிதற்குக் காரணம்நீதிமன்னராகிய பாண்டவர் வசித்தலாலென்க.

ச. துருபன், இதில் தகரந் தொகுத்தலாயிற்று. இவன் பாஞ்சாலதேசத்தரசன். சோமகநிருபர், பாஞ்சாலவரசனைச் சேர்ந்த அரசர். விராடன்-மச்சதேசத்தரசன்.

சு. ஆதபம்-வெயில்.

அ. எற்றுதும்-கொல்வோம்.

௰. சுபலன் மைந்தன் - சகுனி. சமம் - யுத்தம்.

௰ங. இருந்து அம்மகிபர்க்கு, எனப்பிரித்துரைக்க.

௰எ. தனையர் - தன்னையர் என விரித்தலாயிற்று. தனையர்-புத்திரர்.

௰அ. அச்சம்-அச்சு என நின்றது. ஆர்வம்-ஆசை. ஏ-தேற்றம்.

உ௰. செவ்வனம்-செவ்வை. சேயவன்-தன் புத்திரனாகிய பாண்டு. இனைவு-வருத்தம்.

உஉ. ஊற்றங்கோல் - ஊன்றுகோல். இதில் அம் சாரியை. குறிந்தனம்-அறிந்தோம். நகரவொற்று மெலித்தல் விகாரம். தாயம்- உரிமை. ஈண்டு ஆகுபெயராய்த் தாயத்தாரையுணர்த்தியது. அவதி-எல்லை.

உங. துன்றினர் - அடைந்தோர். துன்னலர்-பகைவர். இறுதியடியில், தனபெருமை தான் அறியாதவனென்பது கருத்தாயிற்று.

உரு. சுருதிகளை நான்காகக்கோத்தலைச் சிறப்புப்பாயிரம் உ௰ங-ஆங் கவியுரையிற்காண்க. ஆர்த்தல்-கட்டல்.

உசு. கிரீசன் என்றது எதுகைநோக்கிக் கிரிசன் எனக் குறுக்கலாயிற்று. பாசுபதாஸ்திரம் பெறுமாறு விசயனை நோக்கிக்கூறியது ஏனையருள்ளுஞ் சிலைவல்லோனாதலினென்க. புறம்-பக்கம்.

உஎ. வதி-வழி.

உஅ. சலம் - மாறுபாடு; மதுரைக்காஞ்சியுரையிற்காண்க. நவை-குற்றம்.

ங௰. பொறை-மலை. உத்தரம்-வடதிசை.

ஙங. கிரியினின் முழக்கம்- மலையிலுண்டாகும் எதிரொலி. கிராதர்-வேடர்.

ஙச. கட்செவி-பாம்பு. உரிவை-தோல். கட்செவி-கண்ணிந்திரியத்தில் செவியிந்திரியமுடைமையால் கட்செவி என்பர். ஞானாமிர்தவுரையில் கண்ணாற்காணுந் தூரம் கேட்கவற்றான செவிஎன்பர். கச்சு-இடைக்கட்டு. விம்மல்-கலக்கம்.

ஙஎ. ஆசு இல் - குற்றமில்லாத. மிகுதிபற்றியெண்ணில் கோடி என்றார்.

ஙஅ. ஊரு - தொடை. தாரை - கண்மணி. தாமரைப்போதென்ன இருதாரைநெடுங்கணிமையாது, ஓராயிரங் கதிரும் நோக்கி எனக்கூட்டுக. நிருதாதியர்-அரக்கர்முதலோர். மனு-மனுக்களாகிய நரர்.

௩௬. நரன் - அருச்சுனன். நாரம் - நீர். மேற்கவியிலும் இக்கவியிலும் பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவஞ்செய்ததாகக் கூறினர். பஞ்சாக்கினியாவன - மேலே சூரியனும் நாற்றிசையிலும் நான்கு அக்கினியும். விற்குன்று-மலைவில்.

௪௰. குறிப்பு-கருத்து. புலப்பாடு புறம்பொசிய-தன்னறிவிற்றோன்றியது புறத்து விளங்கித் தோன்ற. பாரித்தல்-மிகுதல்.

௪௧. துறுகல்-பொற்றைக்கல்; புறநானூற்றுரையிற்காண்க.

௪௩. பண்ணுக்குவாம்பரி - இசையின்றாளத்துக் கிசையத்தாவும் பரி. புவனம் என்பது உயிர்களை ; ஆகுபெயர். எல்லாவுயிர்களுக்குஞ் சூரியனின்றிக் கண்ணொளி விளங்காவாகையால் கண்ணுவானிவனென்றார். ஈற்றடியில், "கண்ணிற்கணிகலங் கண்ணோட்டம்" என்னுந்திருக்குறளையெடுத்துக் கூறினமைகாண்க.

௪௪. அங்கிமுன்னது மூலாதாரத்துள்ள அக்கினி பின்னது உதராக்கினி, வெம்மை அம்மூலாதாரத்தக்கினியின் வெப்பம், வாயு பிராணவாயு, சிரந்தங்கியவமுது சிரசிலுள்ள சந்திரமண்டலத்தினமுது என்பர். யோக நூல்களிலுணர்க.

௪௭. குரு-வியாழன். விரகு-உணர்வு.

௫௰. வேலை-ஈண்டு பாற்கடல். இன். ஐந்தனுருபு.

௫௨. மதுரம் - இனிமை. மதுரசாபமென்றதனாற் கருப்புவில்லென்க. சேனையென்றது உருப்பசிமுதலோரை.

௫௩. தேர் - தென்றலாகிய தேர். ஆதபத்திரம்-குடை. சிந்து-கடல். செவ்விகூற-அழகுமிக.

௫௪. மந்தாகினி-கங்கை. மந்தமாருதம்-தென்றற்காற்று. குறுமுனி செந்தமிழுரைத்தலைச் சிறப்புப்பாயிரம் உ-ஆங் கவியிற்காண்க. வம்பு-வாசனை. பல்லவம்-தளிர்.

௫௫. மகரந்தம்-பூந்தாது. அஞ்சல் என்றதனால் நான் உனக்குத் துணைசெய்வேனென்பது கருத்தாயிற்று. அஞ்சல்-அஞ்சற்க ; வியங்கோள் எதிர்மறை.

௫௬. புலத்துடன்பூதமைந்தினையுமொடுக்கி எனக்கூட்டுக. புலத்தையொடுக்குதலாவது ஐம்பொறிகளுந் தத்தம் விடயங்களிற்செல்லாது அடக்குதல். பூதமைந்தினையுமொடுக்குதலாவது - பிருதிவி அப்புவிலும், அப்புவைத் தேயுவிலும், தேயுவை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலுமொடுக்குதல். வான்மணி-சூரியன். பணை-கொம்பு. பாதபம்-மரம்.

௫௭. அசலத்துயர்தலைமுழை- அருச்சுனனைச்குறிக்கும்போது அசைவில்லாத உயர்ந்த சிரத்தின்கண்ணுள்ளபிரமரந்திரம் என்க. அமுதம்-சந்திரமண்டலத்தினின்றொழுகும் அமுதம் என்க. புள் அன்னமும், கருடனுமாம். இருவர்-பிரமன், அரி.

௫௮. இருள்-மயக்கம். மாதவன்-ஈண்டு அருச்சுனன். அறை-பாறை. பொறை-துறுகல்.

௬௧. கிஞ்சுகமலர்ந்து - முருக்கம்பூவாகிய வாய்களைத்திறந்து என்க. கலாபம்-இருபத்தொரு மணிவடம். விடர்-குகை.

௬௩. எழால் - யாழ். குழல்குறிப்பார்-குழலூதுவார் என்க. குறித்தல் ஈண்டு ஊதுதலென்பது காண்டவதகனச்சருக்கம் ௪௧-ஆங் கவியிற்காண்க.

௬௪. காவில் அசோகமும் மாவும், புறவில் முல்லையும், கயத்தில் தாமரையும் நீலமும் உண்டாதல் கொள்க.

௬௫. இடக்கண் சந்திரனும், வலக்கண் சூரியனும், நெற்றிக்கண் அக்கினியுமாதலால் நிலாவெயிலனலுமிழ் விழியென்றார். அறல்-நீர். ஐ-சாரியை. இக்கவியில் சிவபிரானைத் தியானிப்போாக்கடையாளங் கூறியவாறுகாண்க.

௬௭. கிரீடை-ஈண்டுப்புணர்ச்சிக்குரியலீலை. இமிர்தர-ஒலிக்க.

௬௮. இந்திரநீலம் - தேவலோகம். நீலம்-நீட்டல்விகாரமாயினது.

௬௬. மருத்துவான் - இந்திரன் சிவபிரானைத் தியானித்திருக்கின்ற சிந்தையாதலாற் றிருத்தகு சிந்தையென்றார்.

௭௫. விடத்தின்கொடுமையை யடக்கி அமுதமாக்கினமையால் ஆலமுண்டமுதம் பொழிதருநெடுங்கண் என்றார் ; இதனைக் காஞ்சிப்புராணம் மணிகண்டீசப் படலத்திலுங்காண்க.

௮௩. பலகறை-சோகி. குழைமுன்னது காது. பின்னது காதணி. பிணையல்-பின்னல். சேலை-வஸ்திரம். அதள்-தோல்.

௮௪. கொடுவரித் தோலாவநாழிகை-புலித்தோலாற்செய்த அம்பறாத்தூணி.

௮௬. வேடமாதர் தழையுடுக்கைபுனைதலியல்பென்பதனைக் கோவைகளினுங் காண்க.

௮௭. ஏனம் என்றது திருமாலாகிய பன்றி; அது சிவபெருமானடியைத் தேடியது காஞ்சிப்புராணமுதலியவற்றிற் காண்க. ஏனல்-தினை. கிரிக்குத்தேவதையாங் குழவி-சுப்பிரமணியர்.

௮௯. பாகசாதனி-இந்திரன் புதல்வனாகிய விசயன். பாக்கியம்-பாக்கியத்தைத்தரும் புண்ணியத்தை; பாக்கியமென்றது ஆகுபெயர்; இராமாயணம்; அயோத்தியாகாண்டம் மந்தரைசூழ்ச்சிப்படலத்திற் "பாக்கியம் புரிந்திலாப்பரதன் றன்னை" எனக்கூறுமாறுகாண்க.

௯௰. அபராங்கம்-பின்னுறுப்பாகிய குதமென்க.

௯௨. முச்சிகரத்தின்மேலிராதவாறு- திரிகோண மலைமேல் அங்கிசாசரர் தங்காதவாமென்க. இம்மலை யிலங்கையிலுள்ளது. இம்மலையின் வரலாற்றை அருச்சுனன்றீர்த்தயாத்திரைச் சருக்கம் ௬௬-ஆங் கவியிற்காண்க.

௯௪. குறும்பொறை - குறிஞ்சிநிலத்தூர், சிறுமலைகளுமாம்.

௯௫. மோகரம்-உக்கிரம். புரிவு-அன்பு.

௯௭. ஒரு வேடனென்றது ஏகலைவனை. ஒரு முனியென்றது வேடராலே தன்னிரையிழந்த ஓர் வைதிக முனி.

௱௩. மூலிவடிவம் - செகத்காரணமாயுள்ளதாகியவடிவமென்க.

௱௭. ௱௮. இவ்விரண்டு செய்யுளாலுஞ் சிவபிரான் சர்வாந்தரியாமியாய் நிறைந்திருத்தலுணரக் கூறியவாறுகாண்க.

௱௯. மிருகாதிபதிகாரி - மிருகங்களுக்கு அதிபதியாகிய ஐயனார். மிருகங்களென்றது குதிரை யானை முதலியனவென்க. மறவோன்-வீரனாகிய விசயன். அபிராமம்-பேரழகு.

௱௰௪. இறைவர்தண்மலரென்றது சிவபிரானுக்குரிய பிரணவவடிவாகிய கொன்றைமலரென்க.

௱௨௰. சக்கரம்-வட்டம். கயல்உருவகமாகக் கண்ணைக்குறித்தது. வாழியவென்னும் வியங்கோண்முற்றீறுகெட்டு வாழியென நின்றது.

௱௨௯. முட்டி - ஆயுதம்பிடித்தல். நிலை-சாம்விடுநிலை.

௱௩௫. புரம்-நகரம். பாயிரம்-வரலாறு.

௱௩௬. புண்ணியன் என்றது ஈண்டுச்சிவபிரானை. உள்-இடம், உள்ளம். பெயர்-நாமம், பெருமை.

௱௩௭. மாவலியைச் சிறையில்வைத்த கதையினை இராமாயணம்பாலகாண்டம்வேள்விப்படலத்திற்காண்க.

௱௪௩. அருச்சுனனை மானிடனெனக்கருதாது இந்திரன்போலக் கொண்டுபசரித்தாளென்பது விளங்க இந்திரனிதயம்போன்றுளாள் என்றார்.

௱௪௭. அட்டவசுக்களிற் பிரபாசன் வீடுமனாகப் பிறந்திருப்பதனாலவனைநீக்கி யேழ்வசுக்களென்றாரென்க.

௱௫௰. செருந்து-பூவிதழ், எட்டாம்போர்ச்சருக்கம் ௰௫- ஆங்கவியிற்காண்க.

௱௫௪. நிகரம்-விழுங்குதல்.

௱௫௮. அரிசந்தனம் - ஓர்வகைச் சந்தனம். நீலிதவுடை - நீலநிறமாகச்செய்யப்பட்டவுடை.

௱௫௯. வான்மணி-சூரியன். வார்-நீர்.

௱௬௰. ஆயுவின்றந்தை புரூரவா; குருகுலச்சருக்கம் ௰௩-ஆஞ் செய்யுளிற்காண்க.

௱௬௩. மரபு-முறைமை. காமவின்பமெய்தற்குரியதாதலிற்பொன்போலிரவென்றான்.

௱௬௪. பேடி-அலி. நலம்-அழகு. அந்தோ-ஐயோ; இரக்கக்குறிப்புணர்த்துஞ்சொல்.

௱௬௬. செக்காவி - வலித்தல்விகாரமாயிற்று. வரிவண்டு சிலேடைமொழியாகக் கொள்க. செங்காவி நீளமானபாணத்தோடொத்துவிளங்கவென்றும், அரவிந்தம்இசைப்பாட்டையுடைய வண்டுகளோடுவிளங்கவென்றும்பொருள்கொண்டு முறையேகுவிதலும் விரிதலுஞ்செய்ய என்பது கருத்தாகக்கொள்க. தொக்கான் - கூடினான். சூரன்-சூரியன்.

௱௭௧. தையலென்றது அகலிகையை. பெயரென்றது ஆயிரங்கண்ணன்என்பதனை.

௱௭௪. நீ அவ்வருச்சுனனுக்குத் தாயாயினும் அவனரசனாயினும் ஆசையால் வருந்துன்பத்தைத்தீர்ப்பதுலகில்யார்க்குமுறைமை (ஆதலாலதனை நோக்காது) பெரும்பிழைசெய்தான் என்று தேவர்கள் அவட்குத் தக்கவாறிதஞ்சொல்லியென்க. அரோ-அசை.

நிவாதகவசர்காலகேயர்வதைச்சருக்கம்.

௩. திவ்வியம்-தெய்வத்தன்மை. வண்டினைக்குறித்தவீயென்பது வி எனக்குறுக்கலாயிற்று.

௰௨. இந்திரன் அருச்சுனனுக்கு ஆயுதங்களைக்கொடுத்து மந்திரவுபதேசஞ் செய்தாலாற் றன்னைக்குருவென்றானென்க.

ம்ச. அழுவம்-பரப்பு. ஆழியான்-திருமால். ஊழியினாதன்-உருத்திரமூர்த்தி.

ம்ரு. நிவாதகவசத்தர்-சஸ்திரங்களினாலே பேதிக்கக்கூடாத கவசத்தையுடையவர் என்பர்.

உஉ. தோயம்-நீர்.

உரு. வார்-நீட்சி. கோலம்-நீர். கோலபுரமென்றது தோயமாபுரத்தை.

ஙம். சிந்து-கடல். சூழல்-இடம். குரகதம்-குதிரை. மரகதக்கொண்டல் என்றது அருச்சுனனை. விரகு-அறிவு.

சஎ. முதலிரண்டடியினும் ஒட்டென்னுமலங்காரங்காண்க.

சகூ. செயும்-செய்யுங்கள்; இது உம்மீறுய் வரும்பன்மையேவல்.

ருஅ. தொக்கு - கூடி. உடற்றும் - பொருகின்ற. கோடிய-வளைந்த. முருக்குவன்-அழிப்பேன்.

ருகூ. வெரீஇ-அஞ்சி. பொன் - இரும்பு.

கூச. கையற-செயலற. நிருதேசரைவென்றவன்-இராமன்.

எம். பாகு-பாகன். பவனம்-காற்று. துவனித்து-முழங்கி.

எஉ. குடித்து என்பதைக்குடிக்க எனப்பொருள்கொள்க. எற்றன்-சிவபிரான்.

எச. குருகு-பறவை. மாமிசமுண்ணவந்திருத்தலாற் குருகோடியையுமென்றார்.

எகூ. சங்கு-வளையல். விடுத்தனசுரும்பின்சாலம்-தம்மைச்சேரும்படி தூதாகவிடுத்தனவாகிய வண்டுக்கூட்டமென்க. கொங்கு-வாசனை.

எஅ. வீத்த - கெடுத்த. பண்- அமைவு. படுத்தது-கொலைசெய்தது.

அம். மகேந்திரக்கணை - இந்திராஸ்திரம். வீக்க-அழிக்க. எழிலியின்படை-மேகாஸ்திரம்.

அக. வரைப்பகழி-ஈண்டு மேருவாஸ்திரமென்க.

அஉ. மாயவாளி - மயக்கஞ்செய்யும் பாணம்.

அச. அமோகபாணம் - மயக்கமின்மையைச் செய்யும்பாணம்.

அகூ. விட்டேறு - ஈட்டி. எழு - தம்பம். திகிரிவாளம்-ஒருபொருட்பன்மொழி.

அகூ. பரிபவம் - அவமானம். கடாமலையானையென்க.

கூச. அநுப்படச்சமைந்தது - பின்னுகைப்போர் செயச்சமைந்தது அநு-பின். பின்னுகைப் போர்செய்யுந்தன்மை யிவனுக்குண்டென்பதனைப் பதினேழாம்போர்ச்சருக்கத்தில் உஎஉ-கூ-ஆங் கவியிற்காண்க.

கூரு. சமூகம்-கூட்டம். ஆவலங்கொட்டல்-வாய்கையாற்கொட்டல்.

கூஅ. திவசம்-நாள். இவறு-ஆசையுற்று.

ளக. தெவ்-பகை. தீர்ந்திலவாகிய கோபமுஞ் சிவப்பும் எங்கப் பாய அன்றேதீர்ந்தனக்கூட்டுக. அன்றே-அப்பொழுதே.

ளகூ. தனுசர்-அசுரர். கன்னங்கரிய-மிகக்கரிய.

ளஅ. அதிதிமக்கள்-தேவர்கள். இவர்நகரம் இரணியபுரம். ஆடகம் - பொன். மும்மை-மூன்று.

ளம. கைவாரி - ஈண்டுக்கையாற்றருப்பணஞ்செய்யுநீரென்க. உருமு-இடி.

ளமஎ. கூளி - பேய். வாளி-மண்டிலமாயோடல். வாசி-குதிரை. ஒளி-ஒழுங்கு.

ளஉஉ. உழுவை-புலி. உழை-மான். முழை-குகை. மொய்-வலி. சந்தனம்-தேர். புழுவிலொன்றுமொன்று - புழுச் சாதிகளிற் பொருந்தியவொன்று.

ளஉச. ஆலகாலம்-நஞ்சு. அயில்-கூர்மை. பாலம்-மழு. செம்புனீர்-இரத்தம்.

ளஙச. ரகுவென்னுமரசன் குலத்திற்பிறந்திருத்தலாலிராமனை ரகுபதிபுதல்வனென்றார்.

ளசம. பொதுளல்-நெருங்கல். ககபடலம்-பறவைக்கூட்டம். கஞலல்-நிறைதல்.

ளசஉ. ஓதனம் - உணவு. ஆதபனருணனில்-சூரியன்றேர்ப்பாகனாகிய அருணனைப்போல.

ளசரு. வாகை-வெற்றி. நாணுயர்தனுவின்வாங்கி-நாணையுயர்ந்த வில்லினின்றுங்கழற்றிக்கொண்டு. பறம்பு-மலை.

ளசகூ. இது புகழாப்புகழ்ச்சியென்னுமணி.

ளசஅ. கோடித்து-அலங்கரித்து.

ளசகூ. கின்னரம்-கின்னரப்புள். மிதுனம்-இரட்டை. இப்புள் ஆணும்பெண்ணுமாய்க் கூடியிருத்தலிற் கின்னரமிதுனமென்றார்.

ளருஉ. புன்மை - ஈண்டுப்பூபாரம். இதனைச் சூதுபோர்ச் சருக்கம் உளச, உளரு, உளகூ-ஆஞ் செய்யுளிற்காண்க. திருமாலே நாரணனும் நரனுமாகிப் பின்கிருட்டிணனும் அருச்சுனனுமாயிருத்தலால், மாயன் அருச்சுனன் உருவங்கொண்டானென்றான்.

௱௫௩. இகழல்-இகழற்க. இது அல்ஈற்று எதிர்மறை வியங்கோள்வினைமுற்று.

௱௬௰. மறை-மந்திரம். புரோசனப்பகைவன்-அருச்சுனன். புரோசனன், திரிதராட்டிரன் மந்திரிகளிலொருவன். சலித்தல்-ஈண்டு நீங்குதல்.

புட்பயாத்திரைச்சருக்கம்.

௧. புரை-குற்றம். கற்கொண்ட-கல்லுருவங்கொண்ட. துவக்கு-கட்டு.

௭. புரை-குற்றம். நாமம்-புகழ்.

௰. எமையாளுடையான் என்றது சிவபிரானை. ஆலயம்-தங்குமிடம்.

௰௨. கந்தவகன்-காற்று.

௰௫. இயக்கர் பதி-அளகாபுரி. துயக்கம்-சோர்வு. சுரபி-வாசனை. கரடம்-மதம்பாய் சுவடு. தறுகண்-அஞ்சாமை.சதாகதி-காற்று.

௰௬. செய்க்காற்றும் - வயலினிடத்துச் சொரிகின்ற.

௨௧. மாருதி-அனுமன்.

௨௨. சிற்பவாலதி-சிறியவால்.

௨௮. தூதனாகிய தம்முன் என்க. தம்முன்-தமையன்.

௩௨. தாம மாருதி-ஒழுங்குடைய அனுமான். நரன்-அருச்சுனன்.

௩௩. கன்னபாகம்-காது.

௩௫. கான்முளை-புதல்வன். புந்தி-புத்தி. சீகரச்சிந்து-திவலையையுடைய கடல்.

௩௯. சீயம்-சிங்கம். சிம்புளேறு - ஆண் சரபப்பக்ஷி. தாயத்தாரால் அரசிழந்திருத்தல் வினைவசத்தாலென்பார் சீயத்தாலரசிழந்திடுஞ் சிம்புளேறனையான் என்றார்.

௪௰. தகைந்த - விரிந்த; தகைதல் விரிதல் என்பதனை ஐங்குறுநூற்றிற்காண்க. அகைந்த-எழுந்த. துணை-ஒப்பு.

௪௭. பாண்டவன்-பாண்டு புத்திரனாகிய வீமன்.

௪௮. பெரியோரை அடிகளெனக்கூறுதன்மரபென்க.

௪௯. மோட்டுரு-பெரிய வடிவம்; என்றது விஸ்வரூபத்தையென்க.

௫௰. மன்றுளதார்-வாசனையுள்ள மாலை; மன்றம் மன்று எனவிகாரமாயிற்று.

௫௫. மேலளவாதது என்றதற்கு ஆழ்ந்தளவிட்டு என்க. நுண்ணறிவோர்போல் என்றதற்குத் திருவடிக்காக்ஷியன்றி ஏனையவற்றைக்காணாத நுண்ணிய அறிவுடையோரைப்போலவென்க.

௫௭. இரண்டாமடிக்கு, செந்தமிழ்ப்பிரபந்தத்தைச்செய்து தொகுத்தோராகிய மெய்யன்பர் தம் பெருமையைத் தாம் வெளிப்படுத்தாது ஒடுக்கியிருத்தல்போல என்க. தமிழ்-ஆகுபெயர்.

௫௮. இந்திரசாலம் - அற்புதங்களைக்காட்டு மாயவித்தை. மைந்து-வலி. புந்தி-புத்தி.

௫௯. திருவடி-அனுமானுக்கொருபெயர்.

௬௰. மின் என்றது திரௌபதியை. ஏதம்-குற்றம்.

௬௩. பொழில்-முன்னது சோலை, பின்னது புவி. திறை-கப்பம். துப்பு-வலி.

௬௪. மல்லல்-வளம். மலர்தருவோடு - வனசமலரைக் கற்பகதருவோடு.

௬௭. ஆசு-விரைவு. இடை-இடம்.

௬௮. கவான் - மலைப்பக்கம். குகரம் - குகை.

௬௯. கொடி-நீளம்.

௭௨. இரண்டாமடிக்குப்புண்டரீகன் என்னுந் தன் பெயரை நாடுகளிலெழுதிவைத்தோனென்க.

௮௨. பாறு-கழுகு; புறப்பொருள் வெண்பாமாலையுரையிற்காண்க. இதுவனா இவ்வரக்கனையுண்ணமுடியாமல் வருந்துகின்றனதலால் வருந்துகின்ற கூற்றென்றார்.

௮௬. துவக்கு-தோல். நலியுமீட்டார் - வருத்துதல்செய்யும் வலியுடையார். வாழி-அசை.

௮௮. பூழை-துவாரம்.

௮௯. வைத்தாரை - கூர்மை; இது மீமிசைச் சொல். தாரைபட-ஒழுங்குபட.

௱௨. பவர்-நெருங்குதல். பனகம் - பலமலைகளென்க. தவர்-வில்.

௱௬. செப்படிப்பவரின் - செப்படி வித்தைசெய்பவரைப்போல. அரக்கர்சேனையைத் துணித்தல் சிறிதும் வருத்தமின்றி வினோதமாகக்கொண்டிருந்தானென்பார் செப்படிப்பவரினின்று சிரித்தனன் என்றார்.

௱௮. எழுமதம்-சூதுபோர்ச்சருக்கம் ௭௯-ஆம் பாட்டுரையிற்காண்க.

௱௰. சங்கோடணன் குபேரன் சேனைத்தலைவன். துவக்கி-கட்டி.

௱௰௯. உருத்திரசேனன்-இவன் குபேரன்மகன். அருத்தி-ஆசை.

௱௨௨. மைந்தர் என்பது மருதமரவடிவமாயிருந்த நளகூபரன், மணிக்கிரீவன்என்க.

௱௨௪. உயர்வுடையபொற்றருவைக்கொடுத்துபசரித்தானெனவே வனசமலரையுங்கொடுத்தானென்பது கூறுதேயமைந்ததென்க.

௱௩௰. உயவாமல்-ஆராயாமல்.

௱௩௮. முனி-உரோமசமுனி. சேய்தழற்பாவையென்பது பாடமாயின், சேய்-சிவப்பென்க.

சடாசுரன்வதைச்சருக்கம்.

௫. சுரும்பு-மலை.

௬. சழக்கன்-வழக்குக்கு மாறுபாடுடையவன்; சழக்கு-வழக்குக்கு மாறுபாடு; பெரியபுராணம் திருவாரூர்ச்சிறப்பு ௩௫-ஆங் கவியிற்காண்க.

௮. நபம்-ஆகாயம்.

௰௩. பணை-முன்னது கொம்பு, பின்னது பருமை.

௰௬. கஞ்சன் குஞ்சரமெனை - கஞ்சனுற் கிருட்டிணன்மேலேவப்பட்ட குவலயாபீடமென்னும் யானையைப்போல.

௰௮. முட்டி-ஈண்டுக் கைக்குத்து. மட்டி-மட்டித்தல்; அது மண்டலித்தல்.

௰௯. மொய்ம்பு-வலி. கழல்-காலணிமணிவடம்; சிவஞானபோதச் சிற்றுரையிற்காண்க. குரக்கு நாயகன்-சுக்கிரீவன். குன்றென்பது ஈண்டுத் துந்துபி எலும்பின் குவையை; இக்கதையை இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் துந்துபிப்படலத்துப் பழையவேட்டுப்பிரதிகளிற்காண்க. இராகவன்றம்பியென்பது பாடமன்று.

மணிமான்வதைச்சருக்கம்.

௪. முன்பு-வலி.

௫. மைந்து-வலி.

௮. அரிமணி-சந்திரகாந்தக்கல், சூரியகாந்தக்கல். எரிமணி-எரிநிறமுள்ள செம்மணி. தருணம்-புதுமை. சதனம்-வீடு.

௰. வழை-சுரபுன்னை.

௰௪. தாரை-நட்சத்திரங்கள். வார்-நீட்சி.

௰௯. சிவனண்பன்-குபேரன்.

௨௰. பணை-முரசு. நம்பி என்றது ஆடவரிற் சிறந்தோனாகிய குபேரனை.

௨௨. தாமம்-ஒழுங்கு. தூமம்-புகை. சேமம்-காவல்.

௨௪. காழ் - வயிரம். காணூர்முனை-பகைவர் யுத்தம். வீழ்-விரும்புதல்.

௩௫. தண்டதரன் - தண்டத்தைத் தரித்தவனாகிய வீமன்.

௩௯. மருத்துதவுகூற்று-வாயுபெற்ற யமனாகிய வீமன்.

௪௰. பிறங்கல்-மலை. கன்னம்-காது. கற்கி-குதிரை.

௪௧. உலைத்து-ஒலித்து. புலைத்த-உயர்ந்த.

௪௨. தாரணி-தரணியின் புத்திரனாகிய யமன்; தரணி-சூரியன்.

௪௪. முருக்குதல்-அழித்தல். மொய்ம்பு-வலி. தாள்-முயற்சி. பூளை-பூளைப்பூ.

௪௭. இஞ்சிமதில்-ஒருபொருட்பன்மொழி. அரணம்-காவலிடம்.

௪௯. ஆனிலன்-அனிலன் புத்திரனாகிய வீமன். அனிலன்-காற்று.

௫௧. என்று - சூரியன். மூசி-மொய்த்து.

௫௨. பாசதரன்-யமன். வேகியா-வேகமுற்று. ஆசை-திசை.

௫௩. தாயம்-ஈண்டுச் சமயவாய்ப்பு.

௫௭. இரண்டாமடிக்கு-திரிபுரத்தைச் சுட்ட மேகம்போலு நிறத்தையுடைய பாணமாகிய திருமான்முன்பு என்க. சோரி-இரத்தம். வை-கூர்மை. வாளியுதவும் பகழியெனக்கூட்டுக.

௬௩. முதலடிக்கு - கேடுடையவனாகிய மணிமான் (உயிர்நீத்து)ச் சுவர்க்கஞ்செல்லப்பின்பு என்க. தந்திரம்-சேனை.

௬௭. துனி-துன்பம்.

௬௯. துனைவரு - வேகத்துடன்சுழன்று

வருகின்ற. ஓ-முன்னது வினு, பின்னது-இரக்கம். நனே-சுள்.

எசு. சதித்தனே-கொண்டது சாதித்தாய். சதிசெய்தாய்-வஞ்சனைசெய்தாய்.

கூஉ. விபுதர்-தேவர். பணை-ஈண்டு வாத்தியப்பொதுவென்க

கூஅ. சலம்-கோபம். முரண்-பகை. புலத்திய முனி மகன் விச்சிரவா ; விச்சிரவாவின் மகன் குபேரன்.

ஙாஉ. நித்தன் - அழியாதவனுகிய சிவபிரான்.

ஙாரு. தாமம்-மாலே. புரிசை-மதில். ஞாயில்-மதிலுறுப்பு.

ஙாசு. பதினறுவகைப்பூசை-அவை பெரியோர்க்குச்செய்யுமுபசாரம் ஆசனமளித்தல் முதலியன. காசு-குற்றம். ஆசி-வாழ்த்து.

ஙாகூ. அராபதம்-வண்டு. அங்கராகம்-பூசும் பரிமளம்.

ஙாய. பதம்-வரிசை.

ஙாயக. துணங்கை-பேயின் கூத்து; அது "பழுப்புடையிருகை முடக்கியடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்முர் திருமுருகாற்றுப் படையுரையில். பழு - விலா.

துருவாசமுனிச்சருக்கம்.

க. எனை முனிவர்க்குச் சாபத்தாற் றவங்குறையும், இம்முனிவற்கு அதனுற்றவம் வளருமாதலிற் சாபமொழி தன்ஞல்வளருந் தவம் என்முர.

உ. அம்மா - வியப்பிடைச்சொல். செம்மாந்து-மிகக்களித்து.

ரு. மேவார்-பகைவராகிய துரியோதனுதியர். ஆஆ-இரக்கச்சொல். கோ-துரியோதனன். ஆனவன் என்பது எழுவாயின் சொல்லுருபு.

ம. அருக்கனுதவும் பாண்டம் - சூரியன் கொடுத்த அட்சயபாத்திரம்; தருமன் ஆரணியத்திற்குவந்தவுடன் சௌனகமுனிவர் உபதேசித்த மந்திரத்தை யுச்சரித்துத் தவஞ்செய்ய சூரியன் பிராமணவடிவாய்வந்து வேண்டுமளவு குறையாமல் உணவளிக்கும்பாத்திரம் ஒன்று கொடுத்தான் என்னுங்கதையினைச் சுருக்கிக்கூறிஞரென்க.

யக. ஒருகாலத்திற் பிரமனுக்குத் திருமால் அன்னமாயிருந்து வேதங்களைக்கூறிஞரென்க.

யஉ. இதரம்-தீங்கு.

யச. நென்னல் - நேற்று. புயங்ககேதனன் -துரியோதனன். நிலயம்-இடம்.

யரு. உம்மிற் செல்வமுடையவன்போலுரைத்தான் என்றதற்கு (எல்லாச்செல்வமுமெய்தற்குரிய திருமாலினருட்செல்வமுடைய) உங்களைப்பார்க்கினும் பெருஞ்செல்வமுடையவன்போல் அறியாமையாலுரைத்தானெனவுரைக்க.

யசு. பரம்-மெய்மை. உரம்-அறிவு. திரம்-உறுதி.

பழம்பொருந்துசருக்கம்.

க. கயிரவம்-ஆம்பல்.

உ. மைக்கனிக்களவு-கரியகளாக்கனியென்க. முக்கனி-வாழை, பலா, மா இவற்றின் கனி.

ங. சோமகர்-பாஞ்சாலதேசத்தார். ஆமலகம்-நெல்லிக்கனியென்க. ஏ-பாணம். இறுத்தல்-ஈண்டுவீழ்த்தல்

எ. மேலிடாவைம்புலத்தினன் - ஐம்புலனடங்கியவன். துலே என்பது துலைநாவையுணர்த்தியது ; துலையோடொப்பான் என்பதற்குச் சமனிலையுடைமையாற் றுலைநாவோடொப்பானுகிய தருமனென்க.

யக. அவன் என்றது கிருட்டிணனே.

யஉ. மண்- ஆகுபெயராயுலகரையுணர்த்தியது. ஓ-எதிர்மறை.

யரு. பட்டாங்கு-உண்மை. கோடு-மரக்கொம்பு. ஒன்றுதல்-பொருந்துதல்.

யசு. அலகையாமன்னே-பூதனையென்னும் பேயாகிய தாய்.

யஎ. எட்டி-ஆகுபெயராய்க் காஞ்சிரங்காயை யுணர்த்தியது. மல்-மல்யுத்தம்.

யகூ. தாரை-நேரோடல்; குதிரைநடை.

உய. உற்பவகாரணன்-தந்தை.

உக. ஆடவரிலாமையினல்லால்-புருடரு

ண்மையினால்.நம்புதற்குளதோ-அப்பெண்களைப் பதிவிரதைகள் என்று நம்புதற்கில்லை. ஓ-எதிர்மறை.ஆடவருண்மையினாற்கண்டவுடன் பெண்களின் மனம்விரும்புமென்றபடி. இதுவேற்றுப்பொருள்வைப்பணி. நினைத்தாற்றோஷமில்லையென்பது துவாபரயுகதருமமாக ஸ்மிருதியிற்கூறப்படலால், வேறொருவனைம்பெருங்கொழுநனாவதற்கு குருகுமென்றாள்; ஆதலால் வசிட்டனல்லறமனைவியேயனையாளென்றார்.

௨௨. மறு-ஸ்ரீவத்ஸம் என்னுமறு. ஓதனம்-ஈண்டுணவென்க.

நச்சுப்பொய்கைச்சருக்கம்.

௨. சேர்ந்து-சேரவெனத்திரித்துரைக்க. கழி-மிகுதி ; விபினம்-காடு. சிந்தனை-ஈண்டு மனக்கவலை.

௩. மூவர் என்றது துச்சாதனன், கன்னன், சகுனியை. விரகு-உபாயம். கோலி-வளைத்து. கோறும்-கொல்லுதும்.

௬. கொல், ஆம்-அசை. கலாமனம் - கல்லாகிய நெஞ்சம் ; அருளிலாயனமாதலிற் கல் ஆமனமென்றார். இவ்வாறன்றி கல்லாதமூடத்தன்மையுள்ள மனமென்பர்.

௭. கொடை.யாலினிய புகழை வளர்ப்பவனாயிருக்கவும், கொலைக்குடன் பட்டமையாற் கன்னனைக் கொடியபாவியென்றார்.

௮. கன்னம்-காது. எழாகவெழும்பிறப்பென்க ; அவை தாபரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, விலங்கு, மனிதர், தேவர் என்பன. திருக்குறள் புதல்வரைப்பெறுதலுரையிற்காண்க.

௯. கண்ணல்-கருதல். வீதல்-இறத்தல்.

௰௨. பாரிடம்-பூதகணம். துன்றி-நெருக்கப்பட்டு எனப்பிறவினையாக்குக. வெயிலாலென மூன்றாவது விரிக்க. கழை-மூங்கில்.

௰௩. கொடுந்தருக்கள்-வேம்புமுதலியனவென்க.

௰௪. யாமளவேதத்திற் கதிதேவதைகாளியென்க.

௰௬. முப்பாலினுக்கு முதற்பாலாய்- அறம்பொருளின்பமென்னும் மூன்று பகுப்பினுக்கும் முதற்பகுதியாகிய அறத்தின்வடிவாய். மும்மைப்புவனம் - பூமியந்தரசுவர்க்கம் ; பூலோக சுவர்க்கலோக பாதாளலோகமென்பாருமுளர். அறக்கடவுள் - யமதருமன். எண்ணம்-துரியோதனன் எண்ணம்.

௰௭. அசினம்-ஈண்டு மான்றோல். ஆகாயத்தினின்றும் வாயுத்தோன்றியதனால் வாயுவை வான்மைந்தனென்றார். தொன்மை-பழமை. உழை-மான்.

௰௮. வானிடையில்-தூரமானவிடத்தில். பொறை-மலை. அபயம்-ஆபத்துற்றோர் அதனை நீக்கற்குரைப்பது. நறை-தேன்.

௰௯. ஆசுகம்-பாணம். வெளிக்கு - வெளியில். எ-அசை. முகப்பட்டிடும்-முன்பட்டிடும். தகைபட்டு-தடுத்தல்செய்து.

௨௧. தலை-அசை இடமுமாம். பானீயம்-நீர். தொன்மரம்-ஆலமரம். எல்லாமானோன்-எல்லாப்பொருளிலு மந்தரியாமியாயிருக்குமிறைவனென்க.

௨௩. தாலு-நா. மரு-வாசனை. எக்கண் என்பது வலித்தல்விகாரமாயிற்று. என்று-சூரியன்.

௨௬. ஈமம்-மயானம். ஆம்-நீர்.

௨௭. வளர்ந்து - அத்தாகம் வளர்ந்து. என்னவன்பட்டான்-அவன் என்ன வருத்தப்பட்டான். முன்சொன்னவன் - இச்சரித்திரத்தைக் கூறிய வியாசமுனி. தொகுக்கமாட்டான்-அளவுபடுத்துச் சொல்லமாட்டான்.

௨௮. குசை-கடிவாளம்.

௩௰. தோயம்-நீர்.

௩௧. அருப்பம்-அருப்பு என நின்றது. அருப்பம்-அருமை. அறல்-நீர். ஆலம் - விடம். உருப்பு-வெம்மை.

௩௨. அமுதம்-அமிழ்தினுக்கும் நீரினுக்குங்கொள்க.

௩௩. யோனி - ஈண்டுப்பிறந்தவுயிரென்க. வெட்புலம்-வெற்றிடம். உயங்கல்-வருந்தல். நட்புலந்தவர்-நட்பற்றவராகிய துரியோதனாதியர்.

௩௪. ஆங்கு-அசை.

௩௫. துன்றிடா-துன்றி. சூழல்- இடம். சென்றிடா-சென்று. கொன்றிடா-கொன்று.

௩௬. இலக்கு-இலட்சியம்.

௩௭. மோட்டுரு - பெருவடிவம். சூறை-சூறாவளி.

௩௮. அறன்-யமன். மற்று-அசை.

௩௯. துப்பு - உணர்வு ; ஈண்டுப்பானம்.

௪௰. போலும் என்பது ஐயப்பொருளில் வந்தது. எ-அசை. நிட்டூரம்-கொடுமை.

௪௨. இல்லாநயனி- நயனமில்லாதவனாகிய திருதராட்டிரன்.

௪௪. சிரிப்பு-ஈண்டு வீரநகையென்க.

௪௬. உயங்கிய-வருந்திய. மகீருகம்-தாபரம்.

௪௭. அடிக்கடி-பலமுறை.

௪௯. ஊறு - புண். உடற்றினர் - பொருதோர். மாறு-பகை.

௫௰. கோளகை-வட்டம். ஆதபத்திரம்-குடை. பதினெண்டேசமாவன- நன்னூல், பெயரியலுரைக்குறிப்பிற் சிங்களஞ் சோனகமென்னுங் கவியிற்காண்க.

௫௧. சமம் - போர். அருளில் வஞ்சகன் என்றது துரியோதனனை. கயம்-தடாகம்.

௫௪. அறக்கடவுள் - யமன். பொருவு-ஒப்பு.

௫௫. எண்-ஆலோசனை.

௫௭. சிற்பம்-நுட்பம்.

௫௮. வயின் - இடம். பொலஞ்சிலம்பு - பொன்மலை. வெவ்வயிற்புரிவிரகு - வெய்ய வனத்திடத்திற்செய்த மாரண வேள்வியாகியவுபாயம் என்க.

௫௯. மறம்-வீரம்.

௬௰. மறை-மந்திரம்.

௬௩. குத்திரம் - வஞ்சம். புரிந்து- விரும்பி. வல்லவர் - சித்திரம்வரையவல்லோர்.

௬௮. இரண்டாமடியிற்றந்தையென்றது இயமனை. வம்பு-வாசனை. அம்பகம்-கண்.

௬௯. பேது - மயக்கம். பிணை - மான். கடையடியில் ழகரவொற்றிடைவந்த ஆசெதுகைகாண்க.

ஆரணியபருவம் முற்றிற்று.

நான்காவது விராடபருவம்.

நாடுகரந்துறைசருக்கம்.

—: 0 :—

௧. தத்துவம் . உண்மைப்பொருள். அறல்-நீர். காளியன்-ஓர் பாம்பு.

௭. கல்கெழுகுறும்பு - கற்கள்பொங்கிய மலை. முல்லையம்புறவு - முல்லைக்கொடிபடர்ந்த அழகிய வனம்.

௯. எழுவகைத்தாயர் என்றது சத்தமாதரை ; அவர் இந்திராணிமுதலியவர் ; நிகண்டிற்காண்க. சாமளம்-பச்சை. கோமளம் -அழகு. பாதவம்-மரம்.

௰. கோடரம்-பொந்து. விரகு - உபாயம். முத்தலைவேல்-சூலம். வடி-கூர்மை.

௰௧. தாபதர்-முனிவர்.

௰௨. பாங்கு-பக்கம்.

௰௪. பவனம்-காற்று. மடையன்-மடைத்தொழிற்குரியவன்.

௰௬. ஐம்பெருஞ்சுற்றம் - நட்பாளர், அந்தணர், மடைத்தொழிலர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவரென்க.

௰௭. உருப்பசி சாபவரலாறு அருச்சுனன்றவநிலைச்சருக்கத்திற் காண்க.

௰௮. முனி - கங்கமுனி. சாய்த்து -வணக்கி.

௨௧. கம்பி-இரும்புக்கம்பியாலாகிய கடிவாளமென்க. மத்திகை-குதிரைச்சம்மட்டி. உன்னயம் - அசுவசாத்திரங்களினுென்றென்பர் ; பதின்மூன்றும் போர்ச்சருக்கம் ௩௫-ஆங் கவியிலுங்காண்க.

௨௩. மந்துரை-குதிரைப்பந்தி.

௨௬. நந்தகோபன்மைந்தன் - கிருட்டிணன். குழை-முன்னது காது, பின்னது தளிர். தொடி - வளைவு. வேத்தவை - இராசசபை.

௨௭. கோபாலன்- பசுவைக்காப்பவன்.

௨௮. நிரை-பசுக்கள். செம்மல்-தலைவன்.

௨௯. வண்ணமகள்- அலங்காரஞ்செய்யும் பெண்.

௩௰. நொதுமலினள்-அயலாள்.

௩௨. விரதமாயைபுரி - வஞ்சகமே விரதமாகச்செய்கின்ற. மான்விரதநோக்கியர்-மானின் பார்வையை நிந்தைசெய்கின்ற நோக்கத்தையுடைய மாதர். மான்-ஆகுபெயர். விரதசாரணி-விரதநெறியிற்சரிப்பவள்.

௩௩. எலுவை-தோழி.

௩௫. முற்கவியிற் கந்தருவர் காவல்புரி கற்புடையளென்றதனுல் தெய்வமகளோவெனவெரீஇயினளென்க. வெரீஇயினள்-அச்சமுற்றாள்.

மற்போர்ச்சருக்கம்.

——: o :——

௨. தந்தியெட்டாவன-ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்பன.

௯. பாரரை-அடி. சோதிநேமி-சூரியமண்டலம். விம்பம்-வட்டம். தரணி-நீர்ப்பெருக்கு. உரவு-வலி.

௰௨. காயம்-இலக்கு. ஊதை-வாயு. ஊரு-தொடை. மருங்கு-இடை. மிடறு-கண்டம்.

கீசகன்வதைச்சருக்கம்.

——: o :——

௧. வருதினி-சேனை. கன்னல் - கரும்பு.

௨. நூபுரம்-சதங்கை. அந்தப்புரம்-மன்னன்றேவியில்லம். பணைத்த-பருத்த.

௩. மயற்கையால்-மயக்கத்தின் சிறுமையால். இணைக்கயல் இராசசின்னங்களிலொன்றென்றும், இரண்டுமச்சரேகையென்றுங் கூறுவர்.

௰. சூதமாடுமகளிர்-புணர்ச்சிசெய்யுமகளிர். சரதம்-உண்மை.

௰௩. காவியங்கண்ணவள் என்றது விரதசாரணியை. ஆதரம்-ஆசை.

௰௪. பாசகாரிகள்-பாசத்தைச்செய்பவைகள். பாசம்-ஈண்டு ஆசை. பரிவுகூர - இன்பமிக, மதனவேதத்தின்மார்க்கமாவது ஈண்டுத்தன்னை விரும்பாத மகளிரைத் தான்விரும்பல் கூடாதென்பது.

௰௫. ஆகுலம்-வருத்தம். கோகுலம்-இராசகுலம்.

௰௬. மெய்ந்நலமாதரித்து-மெய்யின் சுகத்தை விரும்பி. நலம்-சுகம்; பிங்கலநிகண்டிற்காண்க. விரகின்-உபாயத்தால்.

௰௮. முதுக்குறைவு-பேரறிவு. ஆரமாகிய நீர்த்துளியென்க. ஆரம்-முத்து.

௰௯. ௰-ஆவது கவியில் ஆருயிர்தப்புமெனக் கூறலால் ஈண்டு விதியென்றது கீசகன் ஊழினையுமென்க; அது வினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதியென்க.

௨௰. சூரியன்றேர்ப்பாகனாகிய அருணனுக்குக் காலின்மையாற் பாதமில்பாகனென்றார்.

௨௧. சாயல்-அழகு.

௨௨. துரங்கம்-குதிரை. சப்தாஸ்வா என்னும் பெயருண்மையாலே துரங்கமேழென்றார்.

௨௩. என்றூ-சூரியன். மன்றல்- முன்னது புணர்ச்சி, பின்னது மணம்.

௨௪. காமருகுளிரி-அழகியகல்லாரமலர்; உகரஞ்சாரியையென்க. அடை-இலை. அமளி மெத்தை. ஈமம்-விறகு.

௨௬. பாக்கியம்-புண்ணியம்.

௩௨. உருளை-சக்கரம். கிங்கரன் - ஏவல்செய்பவன். மாருதம் - காற்று. ௨௨ - ஆங்கவியிற் சூரியனைவணங்கி வேண்டிக்கொண்டாளாதலின் அவன் கிங்கரனிவ்வாறுசெய்தானென்க.

௩௩. வாய்மை-வசனம்.

௩௪. விடவி-மரம்.

௩௫. கொளுந்திடாது-பற்றிடாது. இந்தனம் - விறகு. பின்னிரண்டடியும் வீமன் வெகுளியைத் தணித்திருத்தற்குக் கூறிய குறிப்புரையென்க.

௪௧. எதிலர்-அயலார்.

௪௨. ஆர்வம்-ஆசை. பூரியர்-கீழோர். ஒ-எதிர்மறை.

௪௩. ஆசைநோய் மன்பதையனைத்தினுக்குமுண்டு ஆயினுங் கீசகன் கேடுசெய்தனன் என முதலிரண்டடியையுமியைத்துரைத்துக்கொள்க. ஆசைநோயைத் தீர்க்குநெறியை விடுத்துப் பிறர்தாரத்தைப் பற்றவந்ததனால், ஆயினுங் கீசகன் கேடுசெய்தனனென்றான். மன்பதை - மக்கட்கூட்டம். ஏசு-குற்றம்.

௪௬. பன்னிருவரினும்-பன்னுகின்ற சூரிய சந்திரரிருவருள்ளும். பன்னல் - சொல்லல்.

௪௮. பானாள்-பாதிநாள். கனை-ஒலி.

௪௯. ஏ-தேற்றம். அமளி-மெத்தை.

௫௰. சௌபலன்-சகுனி. இன்றுமம் முறைமை மொழிந்ததை, ௩௫-ஆவது கவியிற்காண்க. புரசை-கழுத்திடு கயிறு.

௫௧. மருச்சகன் - அக்கினி. அருத்தி-ஈண்டு அன்பு.

௫௩. ஐயென - விரைய. அழலனையகற்

பு-அக்கினியொத்த பரிசுத்தமுள்ள கற்பு.

ருரு. காந்தக்கல்- ஈண்டுச்சந்திரகாந்தக்கல். தலைமகனல்லான்-கீழோன்.

ருகூ. விடுத்தல்-தங்குதல். புளகம் புளகு என நின்றது. புளகம்-மயிர்சிலிர்ப்பு. கொக்கு-மாமரம்.

சுய. வம்மின் - வாரீர். உருள்-சக்கரம். தேரோய் வம்மின் என ஒருமையிற் பன்மை வந்தவழுவமைதியென்க. ஒருப்பட்டான்-சம்மதித்தான்.

சுக. சமீரணன்-வாயு. செறிவு-அடக்கம்.

சுஉ. எல்லையின்றலைவன் - பகலின்றலைவன். எல்லை பகல் என்பதைப் புறநானூற்றுரையிற்காண்க.

சுங. அடுதொழில்- முறையே கெடுத்தலுஞ் சமைத்தலுங்கொள்க. உடுமுகத்தின்மை-நட்சத்திரங்கள் தன்னிடத்தில்லாமையால்.

சுச. பொங்கர்-சோலை. இங்கிதம்- எண்ணக்குறிப்பு.

சுசு. சாந்து - ஈண்டுச் சுண்ணச்சாந்து. கூர்ந்த-மிகுந்த.

சுஅ. அளை- அளைந்து; வரிப்புனைபந்து என்பதுபோல முதனிலை வினையெச்சமாயினதென்க.

சுகூ. கிஞ்சுகம் - முருக்கம்பூவாகிய இதழென்க. கிள்ளை-கிளிமொழியையுணர்த்தலாலாகுபெயர். வாய்மை-வாக்கு. எஞ்சுதல்-குறைதல்.

எய. கழி-மிகுதி. முகம்புகுதல்-நோக்கிற் கெதிர்சென்றுபுகுதல்; ஐங்குறுநூற்றுரையிற்காண்க.

எஉ. பெற்றம்-வாயு. பொறி-தீப்பொறி. எண்-வலி. எண் என்பது வலியாதலின் எண் எனக்குறுகி நின்றதெனினுமாம்.

எரு. உருமு-இடி. நெக்கன - நெகிழ்ந்து விண்டன. உகிர்த்தலை-நகநுனி.

எசு. கேள்-சுற்றம். வேளொடுவருநலம்-வேளால்வருஞ்சுகம். விஞ்ச-மிக.

எஎ. காழ்-வயிரம்; காளை என்றது வீமனை. சூறை-சூறைக்காற்று. மிடல்-வலி.

எஅ. பகைவன் என்றது கீசகனை.

எகூ. விடைத்தல்-விடுத்தல். பூதி-புழுதி.

அய. நிசை-இரா.

அரு. நீங்கியவாய்மைகள்-கழிந்த வாக்குகள்.

அஅ. முட்டி-ஈண்டுக் கைக்குத்து.

அகூ. தொய்யில்-எழுதுங்குழம்பு.

கூங. நள்ளிருள் - செறிந்த விருட்டு; மணிமேகலையுரையிற்காண்க. அகரு-அகில்.

கூசு. எண்ணிலாமனம்-வலிநிலாவுகின்ற மனம். விண்ணுளார் என்றது கந்தருவரை.

கூஅ. மெய்காக்குங் கடவுள் என்றது முன்னர்க்கூறிய கந்தருவரை.

கூகூ. துடைப்பரும்பவனம்-கெடுதற்கரிய மாளிகையில். தொடைப்பெரும் பவனம் எனப்பாடமோதித் தொடையின் பெருங்காற்று எனப் பொருள்கூறுவாருமுளர்.

௱க. வானவன்-பெரியோனாகிய வீமன். ஒக்க-ஒருமிக்க. ஆனைமானவன் என்பது பாடமாயின் யானையைப்போலும் வலியுடையவனென்க.

௱உ. துவன்றுகற்பு- நிறைந்தகற்பு. கவன்றது-வருந்தியது. கடி-காவல்.

௱ங. கிற்குமைந்து-செய்யும் வலி. கிற்றல்-செய்தல். தன்று - செருக்கு; இது தற்கு என விகாரமாயிற்று.

௱ச. பொருநன் - அரசன், வீரனுமாம். புறநானூற்றுரையிற்காண்க.

௱ரு. கனை-மிகுதி. இருள்வலி-சூரியன்.

நிரைமீட்சிச்சருக்கம்.

—:o:—

உ. நிரை-பசுக்கள். கோள் - கொள்கை.

ங. ஒற்றர்-பகை, நொதுமல், நட்பென்னு மூன்றுதிறத்தார் மாட்டுநிகழ்ந்தனவறிந்துகூறுவாரென்க.

ச. என்று-எண்ணிடைச்சொல். கடையடியில் என்று-சூரியன். நின்பாதம் (ஆணையாக) வருவித்துரைக்க.

ரு. ஒற்றையிருசங்கம் - ஒற்றையோடிரட்டைவலம்புரிச்சங்கமென்க; இந்திரப்பிரத்தச்சருக்கம் கூ-ஆவது கவியிலும், பதினாறாம் போர்ச்சருக்கம் ருக-வது கவியிலுங்காண்க; ஒற்றை ஒரு துளைக்கருவியென்க.

எ. தொறு-நிரை. சூழல்-இடம்.

அ. வெட்சி - வெச்சிப்பூமாலை; இது பகைவர்நிரைகவரச்செல்லும் வீரர்சூடும் பூமாலையென்க. திரிகத்தர்கோன் - திரிகத்ததேசத்தார்க்கரசன்; இத்தேசம் இமயத்திற்கும் விந்தியத்திற்கு மத்தியிலுள்ளதாகிய

ஆரியாவர்த்தமென்னும் தேசத்தின் வடமேற்றிசையிலுள்ளதென்பர். அக்குரோணி-படை-உககூஅஎ0 யானை, கூ0நுகூ0 குதிரை, உககூஅஎ0 தேர், லட்சத்து கூகூநு0 காலாள்கொண்டது; இவ்வாறு நல்லா பிள்ளை பாரதம் சிறப்புப்பாயிரச்சருக்கம் உரு-ஆங்கவியிற்காண்க. வியாச பாரதத்திலுங்காண்க. ஆன்-பசு.

௰. செரு-போர். சதி-வஞ்சனை. நிருமித்தல்-நியமித்தல். பண் - அலங்காரம். உரும்-இடி.

௰க. தூசி-படைமுன்னணி. சிந்தி-சிந்த.

௰உ. கொட்பு-வளைவு. பெட்பு - விருப்பம்.

௰ங. கரந்தை-கரந்தைப்பூமாலை; பகைவர்கொண்ட நிரையை மீட்போர் அணிவது.

௰ச. தாமச்சரம்-ஒழுங்காகிய பாணம்.

௰ரு. துனை-விரைவு. தொடை-பாணம். பாகு-பாகன்.

௰எ. ஈறு-முடிவு. ஊதை-காற்று. நருக்குதல்-நொருக்குதல்.

௰அ. வடம்-கயிறு. துவக்கி-கட்டி. மூரி-வலிமை.

௰கூ. வெருமுகத்தில்- அஞ்சுகின்ற இடத்தில். வீடு-விடுதல். கைம்மாறு - பிரதியுபகாரம்.

உ0. சேவலான் - குமரக்கடவுள். மாவலான்-நகுலனாகிய தாமக்கிரந்தி என்க. கோவலான்-சகாதேவனாகிய தந்திரிபாலனென்க.

உக. பாவித்தாங்கு-பாவித்தாற்போல; ஆங்கு உவமையுருபு. ஐங்குறு நூற்றுரையிற் காண்க.

உஉ. சூரியகுலத் தரசனாதலின் விராடனை அயோத்திமன் என்றார்.

உங. யாரினும் பெரியோன்- எல்லாவரசரினு மேலான துரியோதனனென்க. ஈர்தல்-அரிதல்.

உரு. உத்தரன்-விராடன் மகன்.

உஅ. துணை-அளவு. எயில்-மதில்.

உகூ. ஆரம்-முன்னது சந்தனம், பின்னது முத்து.

ஙக. ஒப்பனைக்குரியாள்- திரௌபதியாகிய வண்ணமகள். வித்தரம் - விஸ்தாரம். தரம்-தகுதி. பேடி-விசயனாகிய பேடி.

ஙஉ. நிரைவளை - சுதேட்டிணை. வெய்தீண்டும்-விரைந்தணுகுவன்.

ஙச. உத்தரம்-வடக்கு.

ஙஅ. நிலை - சரம்விடுநிலை. முட்டி - கைப்பிடி. சிலீமுகம்-பாணம். மலையிலக்கென-எய்வதற்கு மலையையிலக்காக்குவதுபோல.

ஙகூ. இகல் வீரன் என்பது - பழிப்பது போலப் புகழ்தல்.

சஉ. பொதும்பர்-மரப்பொந்து.

சங. எரிப்புறத்தரு- மயானத்திலிருக்கின்றவன்னிமரமெனக்கொள்க. இரண்டாமடிக்கு, மலைகளைத் தன்னிடத்துடைய பெருங்காட்டினுறைகின்ற அருச்சுனனுடையன வென்று கூற என்க.

சச. அரிடம் - அதிஷ்டவீனம். அரிட்டம், அரிடமெனநின்றதெனக்கொண்டுசென்மதோஷமென்பதனை பிங்கலநிகண்டிற்காண்க.

சரு. கடிகை-நாழிகை.

சசு. உத்தரன் விசயனுக்குச் சாரதியாகுஞ் சிறப்பைப்பெற்றதனால் மால்பெருஞ் சிறப்பைப்பெற்றெனன்றார்.

சஅ. தொடி-வளையல். தொடை-தொடுத்தல். வீடு-விடுதல். அஞ்சிடா-வினையெச்சம் ஈறுகெட்டது.

ரு0. அருச்சுனன், பெற்று, வென்று, நுகர்ந்து வேய்ந்தான் (ஆதலால்) அன்று போலலன் எனமுடித்துக் கவிகூறியதாகக் கொள்க. போனகம்-உணவு; ஈண்ட முதுணவென்க.

ருச. தண்டு-படை. மிண்டுதல் - அடர்தல்.

ருசு. பொதுவர்-இடையர். மச்சர் கோமகன்-உத்தரன்.

சுக. செருச்செய்வான்- யுத்தஞ்செய்யும் பொருட்டு. பருச்சிலம்பு-பெரியமலை; இது வலித்தல் விகாரம் ஏற்றது. உகைதால் - எழுதல். உண்மைக்கு - வீமன் வேண்டிக்கூறிய மெய்மொழியின்பொருட்டு; அது புட்பயாத்திரைச்சருக்கம் சஅ, சகூ-ஆங்கவிகளிற் காண்க. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

சுஉ. செருமி-நெருக்கி. கோள்-வலி.

சுங. பொறித்த-எழுதிய. பொறி- அறிவு. மறித்தும் என்பதில் உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. முன்னம் வீழ்ந்ததை நகூ-ஆங்கவியிற்காண்க.

சுரு. உளவுகோல் - குதிரைச்சம்மட்டி. அருணன்-சூரியன்றேர்ப்பாகன். சுவேதம்-வெண்மை.

சுசு. உரவு-வலி. நின்றதை என்றது

ஆதிசேடனை. அவனிபன் என்றது துரியோதனனை.

௬௭. மண்டலநிலை- சாம்விடுநிலைநான்கினொன்று.

௬௮. புரவிபாகவற்றினை-புரவியும் பாகுமாகிய அவைகளை. பாகு-பாகன்; ஈண்டுச் சொல்லாலஃறிணையாகக்கூறினர். கவறு-சூதாடுகருவி. கவற்றிய-வருத்திய.

௬௯. மாகு-வலையிற்கோத்த மணி; அது ஆகுபெயராய் வலையையுணர்த்தியதென்பர். வரிநிறமா-புலி. தகைந்து - தடுத்து. கோகு-புயம்.

௭௧. ஆகவென்னும் செயவெனெச்சம் ஈறுகெட்டு ஆ என நின்றது.

௭௫. மறைத்துவசன்-ஈண்டுத்துரோணாசாரியன்.

௭௭. கரக்கவுண்மதம் - கரத்தின் மதம், கவுண்மதமென்க. கொடுவரி-புலி. நிரத்தல்-கலத்தல்.

௮௰. முற்று என்னும் முதனிலை முற்றியென வினையெச்சமாயிற்று. கோல்-பாணம். ஒருவுதல்-நீங்குதல்.

௮௨. முனிவன்மாமகன் - ஈண்டு அசுவத்தாமன். தெம்முறைமை - பகைமுறைமை.

௮௫. முந்தை-பாட்டனாகிய வீடுமன்.

௮௬. மீளிமை-வீரத்தன்மை.

௯௰. தெம்முனை-பகைவர் போர்.

௯௨. அதிரதம் - நால்வகை ரதங்களின் முதல் ரதம். அணிவிரன்முடக்கவொட்டா முதிர்சிலை முனி என்றதன் கருத்தை இராசசூயச்சருக்கம், ௰௩ - ஆங்கவியுரையிற்காண்க. பின் பதினேழாம்போர்ச் சருக்கம் ௩௧-ஆங் கவியிலுங்காண்க.

௯௪. தாறு-செலவுமுடுக்குங்கோல். பொருநராற்றுப்படையுரையிற்காண்க.

௯௫. சாபலம்-நடுக்கம்.

௯௬. ஈடு-வலி. சாயகம்-பாணம்.

௯௯. பவுரி-மண்டலமிடுதல்.

௱. மதி-குபேரன்.

௱௧. கோகனநாகம் - கண்ணைக்காதாகவுடைய நாகம். மோகனம்-மயக்கம்.

௱௨. மத்தர்-மதத்தையுடையவர். தூசு-வஸ்திரம். உத்தரை - விராடன்மகள். வண்டற்பாவை-விளையாட்டுப்பாவை. அத்தர்-சிவனுர். மவுலி-முடி. வண்டல் விளையாட்டு என்பதைப் பெரும்பாணுற்றுப்படையுரையிற்காண்க.

௱௪. பாகை-வக்கபாகையென்னுமூர்.

௱௫. வல்-சூதாடுகருவி.

௱௬. இந்துவினியக்கம்- சாந்திராயணம். நென்னல்-நேற்று.

௱௭. மாழ்கி-மயங்கி. கடையடியால், நகரிற் பகலிற்செல்வதற்கு நாணமுற்றனென்பது கருத்து.

௱௰௨. கண்படை - நித்திரை. பூசல்-போர்.

௱௰௭. சோரர்தங்கரு-சோர நாயகருடைய பிள்ளையென்க.

௱௰௮. தோரணம்-தோரண கம்பம். கோடித்தார்-அலங்கரித்தர்.

௱௨௧. அரிகள்-பகைவர்கள்.

௱௨௬. நாயகர் மனக்கவலையுடன் மறைந்திருத்தலாற் குறைந்தவழகுடையவளாயினளென்பார் வற்றியவோடையன்னவனப்பினளென்ருர். வற்றியவோடை - சுருங்கிய நீர் நிலை.

௱௨௭. அஃகிய - தங்கிய. அடுக்கு-அவலம்பற்றிவந்தது.

௱௨௮. அடுக்கு-அச்சம்பற்றிவந்தது.

௱௨௯. ஆயிடை-அவ்விடம்; சுட்டு நீண்டு வந்தது. வீ-மலர்.

௱௩௧. நீராசனம்-ஆலாத்தி; இது கண்ணூறு கழித்தற்குச்செய்வது. குன்றெறிந்தவன்-குமரக்கடவுள்.

௱௩௨. தழுவிய சனகன் என்பது பாடமாயிற் சனகன் பிதாவென்க.

௱௩௬. உத்தரிக்க-சாதிக்க. உத்தரீயம்-மேற்போர்வை. குழமகன் என்பது இளம் பிள்ளைவடிவமைந்த பாவையென்க; ௱௨-ஆங்கவியில் வண்டற்பாவைக்குடுத்துதற்கென்று கொய்தான் என்றதனுற்கொள்க.

௱௩௮. பதங்கம்-விட்டில்.

௱௪௰. "யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" என நாலடியிற்கூறலால் ஆனையேயடுங்களிறென்ருர். வரன் - நாயகன்.

௱௪௧. பரகாயசரிதர் - தம்முடலைவிட்டு அந்நிய சரீரத்திற் புகுந்து சஞ்சரிக்கும்யோகிகள்.

வெளிப்பாட்டுச்சருக்கம்.

௧. விதி நான்கும் முறையே வேதமுறை, சிருட்டித்தொழில், பிரமன், உண்டாக்குதல் என்க. செக்கமலம் - வலித்தலாயிற்று.

௨. அருணம்-சிவப்பு. குருக்குலம்-விகாரமாயிற்று.

௬. இது விரோதவணியின்பாற்படும்.

௰. இறை-சிறிதும். கொண்டருளல்-உபசாரமாய்க்கொள்ளற்கஎன்பது கருத்தாகக்கொள்க. தன்னையுந் தன்புதல்வனையுமுளப்படுத்தி நற்குணமிலாதவர் என்றான்; இது தன்மையில் வந்த படர்க்கை வழுவமைதி. ஓ-எதிர்மறை.

௰௧. செந்நெல்வயல் என்பது பாடமாயிற் செந்நெல் தேன்கெண்டையென்க.

௰௩. மனம் - மனன்எனப் போலியாயிற்று.

௰௪. மூன்றுமடியில் அறுவகைப்படையென்க; அணிவகுப்புச்சருக்கம் ௰௨-ஆங்கவியிற்காண்க.

௰௭. துணைவர்-சாத்தகி பலராமரென்க. சிவேதன்-விராடன் மூத்தமகன்.

௰௮. எண்-எண்ணம்.

௰௯. இவன்றன் பகைசெற்றதும்-இச்சிவேதன்றன் பகைவரைக்கொன்றதும்; சிவேதனையழைத்துக்கொண்டுவந்து அவனுற்கிருட்டிணன்றன் பகைவரைவென்று செயங்கொண்ட கதை முதனூலிற்காண்க.

௨௰. சிங்கசாபம்-சிங்கக்குட்டி. மைந்து-வலி. வேறற்கு-வெல்லுதற்கு.

௨௰௧. வாஞ்சா-வாஞ்சை; வடசொல் ஆவீறு ஐயாகாது நின்றது.

௨௰௨. கந்து-கட்டுத்தறி. நுதி-நுனி.

௨௰௪. பண்ணுக்குருகிப் பறையாலகப்பட்ட மான்-ஒருவன் வாசித்த யாழின் பண்ணுக்கு மனமுருகிப் பின்பறையோசையால் மயங்கி வீழ்ந்து அவனுக்கு அகப்பட்ட மானென்க. பண்-இசைப்பாட்டு. மான்-விலங்கு; ஈண்டு அசுணமாவென்னுமிசையறிவதோர் விலங்கென்க; இதன் கருத்தை (மறையிற்றன் யாழ்கேட்ட மானையருளாது) என்னுநெய்தற்கலியுரையிற்காண்க. மண்ணுக்கிறைவன் என்றது திருதராட்டிரனை. சலாகண்கள்-ஆதாரங்கள்.

௨௰௫. அவையின்கணவை - துரியோதனன் சபையின்கண்ணடத்திய குற்றங்கள். விரை-மணம். விளைந்தவெல்லாம் - துரியோதனனாலுண்டாகிய யாவுமென்க; அவைதான்வரும்வழியில் படைத்துணையாகவேண்டுமென்னுங் கருத்துடன்றனக்குச் செய்த விருந்து முதலிய வுபசாரங்களெல்லாமென்க. பாசுற்று - தருமன் முதலோர்க்குச்சொல்லி. பிழைகொன்ற பகடு-குற்றநீக்கிய யானை.

௨௰௬. கரடம் - மதம்பாய்சுவடு. கவனம்-கதி. துரகம்-குதிரை. விரகு-உபாயம். நெறி-வரும்வழி.

௨௰௭. வேலான்-என்றது தருமனை.

௨௰௮. தூமம்-புகை. காமன்றிருமைத்துனன்-அபிமன். மன்றல்-விவாகம்.

௩௰. விழவு-ஈண்டு விவாகம். உபலாவியமென்றதை உபலாவி எனக்குறைத்துக்கூறினார். இந்த நகரம் அபிமன் மனைவியாகிய உத்தரைக்கு வரிசையாக விராடனாற்கொடுக்கப்பட்டதென்றறிக. ஆயோதனம்-போர்.

விராடபருவம் முற்றிற்று.

ஐந்தாவது உத்தியோகபருவம்.

உலூகன்றூதுச்சருக்கம்.

—: 0 :—

௩. காமபாலன்-கிருட்டிணன்றமையனாகிய பலராமன்.

௪. சாத்தகி-கிருட்டிணன்றம்பி. மிகக்கரிது என்பதற்கு மிகவுஞ்ஞானமுள்ளதுஎன்பதும்,வெள்ளையாகியதுஎன்பதற்கு வெற்றரையாகியது என்பதுங் கருத்தாகக்கொள்க.

௫. உலூகம்-ஒரு வகைப்பரி. பேருலூகமென்றதனால் உயர்ந்த சாதிப்பரி யென்க. பிணை - அப்பரியின் பெட்டை. இவ்வாறன்றி உலூகம்-கோட்டான்; கோட்டான் முட்டையிற் குதிரை பிறக்குமென்பதைத்

திருவாதவூரடிகள் புராணங் குதிரையிட்ட சருக்கத்தில் "மிக்கசெழுமறைநாவிற்கமல நாதன்விழிப்புனலில் விண்ணோர்களெண்மர் தம்பான், மைக்கடன்மே லமிர்தத்திலங்கிமீதின்மல்கு கருப்பையிலுலூகவண்டந்தன்னிற், றொக்கவெழுபேதமெனுமிவற்றிற்றோன்றாய்" எனக்கூறுதலாற்காண்க. உலூகவண்டம் என்பதற்கு இலக்குமி சாபத்தாற் கோட்டான் வடிவுற்ற பிரமனிட்டமுட்டையென்றுரைகூறினார். பிணை-குதிரைமுதலியபெண்விலங்கு; ஈண்டுப்பிணையென்றது எழிடத்திலொன்றாகிய கருப்பையுளடங்குமென்பர்.

௬. அந்தன் - குருடனாகிய திருதராட்டிரன்.

௮. புரோகிதன் - எந்தக் கருமங்களுக்கு முன்னே வைத்துக்கொள்ளப்படுபவன். மானம்-பெருமை.

௰௧. சூதுபோரை என இரண்டாவது விரிக்க. இலஞ்சி-வாவி. அன்னங்களுடன் வேற்றுச்சாதியாகிய மயில்களும் விளையாடு நாட்டூர் என்றதனால் ஒருசாதியான ஞாதியர் நீவிர் பகைத்தல் கூடாதென்பது கருத்தாயிற்று.

௰௨. விடுவீரெனக் கூறவேண்டுவதைத் தெளிவினால் விடுகின்றனிர் என நிகழ்காலத்தினாற் கூறினாரென்க.

௰௩. பூசை-பூனை. பூசல்-போர்.

௰௪. விதூரன் நீட்டல் விகாரமாயிற்று. புல்-புன்மை. விதூடகர்-இகழ்வோர். செல்விதூரியளாய்விடும் - செல்வத்தையுடையவளாகிய இலக்குமி தூரத்தவளாவாள்.

௰௫. பரத்துவாசன்புத்திரனாகிய துரோணமுனியை பரத்துவாசன் என்றாரென்க. ஓகாரம்-வினா.

௰௬. கழிந்தன்று - கழிந்தது. கோடுதல்-வளைதல்.

௰௭. உகிர்-நகம். முரண்-வலி. முனிமைந்தனென்றது ஈண்டுச் சமதக்கினிமுனிவன் புத்திரனாகிய பரசுராமனை; இப்பரசுராமன் வலியழிந்ததை இராமாயணம் பாலகாண்டம் பரசுராமப்படலத்திற் காண்க. சேவகம்-வீரம்.

௰௮. எடுத்தனை-முற்றெச்சமாக்குக. நரன்-ஈண்டு அருச்சுனன். நிருபன்-ஈண்டுத்துரியோதனன். அந்தர சரிதர்-அந்தரத்திற் சஞ்சரிப்பவராகிய சித்திரசேனன் முதலிய கந்தருவரென்க. கொண்டு-(கட்டிக்) கொண்டு. பாண்டவர் வனவாசஞ்செய்கையில் வந்த துரியோதனனை இந்திரனேவலாற் சித்திரசேனன் முதலோர் துரியோதனனைக் கட்டித் தூக்கிக்கொண்டுபோக, கன்னன் முதலோர் போர்செய்து தோற்றுவிடத், தருமன் கட்டளையால் வீமன்றுரியோதனனை மீட்டான் என்னுங்கதையைச் சுருக்கிக்கூறினாரென்க.

௰௯. நெருநல்-முன்னை நாள். வெருநர்-அஞ்சுதலுடையார்.

௨௰. யாதவனென்பது கிருட்டிணனை. தனதெண்ணத்தைநிறைவேற்றலாமென்று மகிழ்வுற்றதென்க.

வாசுதேவனைப்படைத்துணையழைத்தசருக்கம்

௧. குரா-குரவம்பூ.

௨. விரோசனசுதன்-சூரியன் புத்திரனாகிய கன்னன். சரோருகசதனம்-பிரமசபை.

௪. சூடிகாமகுடம் - ஒருபொருட் பன்மொழி. இக்கவிமுதனான்குகவியுந் தற்குறிப்பேற்றவணி.

௫. அடல்-வலி. பொறி-மதிலிற்செய்து வைத்த இயந்திரம்.

௭. பதி-ஈண்டு வைகுண்டம். சித்து-அறிவுடைப்பொருள். அசித்து - அறிவிலாப்பொருள்.

௮. அந்தன்-குருடனாகிய திருதராட்டிரன். மூன்றாமடிக்கு-சந்திரகலையாகிய இடகலை வாயு அடங்கிநிற்கச் சூரியகலையாகிய பிங்கலைவாயுச் சஞ்சரிக்குமாறு எனவுரைக்க.

௯. சர்ப்பம்-சற்பமெனமரீஇயிற்றென்க. உற்பலம்-நீலோற்பலம்.

௰. தேரோன்-ஈண்டு விசயன்.

௰௩. இன்சொலாலுவகைசெய்தானென்றதனால் மனத்திலுவகைகொண்டிலன் என்பது கருத்தாயிற்று.

௰௫. துமித்தல்-அறுத்தல்.

௰௭. தாலகேது-பனைக்கொடியையுடையவனாகிய பலராமன். மும்மை-ஈண்டுத்திரிகாலம் என்க.

௰௮. கிருதவன்மா - இவன் வசுதேவனுக்குச் சிறிய பாட்டன். வசுதேவன் தந்தை சூரன். சூரன் தந்தை தேவமீடன். தேவமீடன் தம்பி கிருதவன்மாவென்றறிக.

௰௯. சங்கவண்ணன்-பலராமன்.

உ௰. மூன்றுமடிக்குக்கிருட்டிணனும் அருச்சுனனும் என்க. ஆறிருநாமம்-கேசவன் நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடிகேசன், பதுமநாபன், தாமோதரன் என்பன.

சஞ்சயன்றூதுச்சருக்கம்.

——:o:——

க. பொதுவர்-இடையர்.

உ. உயவி-உசாவி; உயாவி என்பது உயவி என நின்றது. சஞ்சயன்-ஒரு முனி. இவன் பாரதயுத்தம்நடக்கும்போது நாடோறும் நிகழ்வதையறிந்துவந்து உள்ளவாறு திருதராட்டிரனுக்குரைத்தவன்.

ச. பாடிவீடு-பாசறை; இது பகைமேற் சென்றோருறைவிடம்.

சு. புடவி-பூமி. அடவி-கானம். மடவியார்-அறிவிலாதவர். விடவி-மரம்.

அ. திகந்தம்-திசையினந்தம். அகந்தை-அகங்காரம். தாயம்-ஈண்டுச்சுற்றம்.

கூ. நிறுக்கிலர்-நிலைபெற ஆராய்கலரென்க. துராசர் - துராசையுடையவர். சுகன்-சுகமுனி. நிராசர்-உனனிடத்தில் விருப்பமில்லாதவராகிய துரியோதனாதியர் என்க.

௰. தூர்-மூலம்; ஈண்டு முதலென்பது கருத்து.

௰க. மும்மை-ஈண்டு மூன்றுகாலம். இம்மை-இப்பிறப்பு. புகல்-புகுக என வியங்கோளாக்கியுரைக்க. எழ்நரகு-கூடசாலம், இரௌரவம், கும்பிபாகம், பூதி, அள்ளல், செந்து, மாபூதி என்க.

௰உ. பின் அறமென்றது துறவறத்தை.

௰ங. தனிதம்-ஒலி. மாருதி துணைவன-அநுமன்றம்பியாகிய வீமன்.

௰ச. ஒருழை-ஒரு பக்கம். வினை-போர்.

௰ரு. பிடர்க்கணைமதி-பின்புத்தியென்க.

௰சு. மாழ்குதல் - மயங்குதல். கவந்தம்-தலையில்லாதஉடற்குறையாகிய பிணங்கள்.

௰எ. போரதாகிய பூமிசாலை - யுத்தகளமாகிய வேள்விச்சாலை எனக. பசு-ஈண்டு ஆடு; யாகத்திற்குரிய ஆட்டை பசுவெனக்கூறுவது (சாகபசுநியாய) மெனக்கூறலாற்சொல்க. படுத்து-கொன்று. வீரமாமுனி என்றது தருமனை. களவேள்வி என்பது புறப்பொருளில் வாகைத்திணையில் ஒரு துறை; இதிலவி கொள்ளுந் தெய்வம் பேய்.

௰அ. நேமியான்-கிருட்டிணன். காமியாத-இச்சைகொள்ளாத.

கிருட்டிணன்றூதுச்சருக்கம்.

க. மும்மைப்பிறவி - நர நாராயணரும், இராம லக்குமணரும், கிருஷ்ணார்ச்சுனருமாக வந்த பிறவியென்க; வீட்டும பருவம் முதற்போர்ச்சருக்கத்தில் சு, எ-ஆங்கவியிற் காண்க. தெய்வத்தோற்றமாகலின் நெடும் பிறவியென்றார். பிறவாழி-பிறவிக்கடல்.

உ. சாமபேத தான தண்டம் இவை அரசர்செய்யும் உபாயங்கள். முறையே சமாதானத்தொடாயினும், பிரித்தாயினும், பொருள்கொடுத்தாயினும், படைகொண்டாயினுங் காரியங்கொள்ளலாம். ஏனல் - தினைப்புனம்.

ங. புரோகிதன்-ஈண்டு உலூகமுனி. எஞ்சுதல்-குறைதல்.

ச. வாணசுரனுக்குப் புயங்களாயிரமாதலின் அவற்றின்மிகுதி விளங்க புயப்போர் வாணனென்றார்.

ரு. செய்-வயிலில் என எழுவது விரிக்-ைபை-பாடம்.

சு. வரை-மூங்கில். கயிரவம்-ஆம்பல். ந்து-தூது. ஓரிடத்திற்றோன்றிய இருவகையாகிய ஆம்பலுந் தாமரையுங்கலந்து கமழ்கின்ற குருநாடெனக்கூறலால் அவ்வாறு தோன்றிய இருவகையினராகிய பாங்களுங் கலந்து வாழவேண்டுமென்பது கருத்தாயிற்று.

அ. கரவு-வஞ்சகம். பலமூலசாகம்-பழம் கிழங்கு இலை.

௰. தாது- மகரந்தம். முரலுதல்-ஒலித்தல். தாயம்-உரிமை. காலன்றூதர்செய்யுங் கொலைத்தொழிலை அவர்க்குச்சிரமமின்றித் தான்செய்வதினால் மகிழ்வார் என்று கருதி அவர்மனங்களிக்கவென்றான்.

௰க. சிந்துரம் - ஈண்டுக் (கஞ்சன்விடுத்த

குவலயாபீடமென்னும்) யானை. ஒசித்தல்-முறித்தல்.

ய௨. நா-நாவில். தோபில்-குற்றமில்லாத. பூத்தல் - உண்டாக்குதல். ஊனமிலான் என்பது கேடில்லாதவனாகிய தருமன்.

ய௩. கண்டாய்-செய்தாய்.

ய௫. நீர் முடித்தான் இரவொழித்த கதை - காஞ்சிப்புராணம் வயிரவீச்சரப்படல முதலியவற்றிற்காண்க. சிலர்வேறு கூறுவர்.

ய௬. அணிந்து-அணிவகுத்து. பட்டபாடு - இவன்பட்ட சிரமம் இவ்வாறு முடிந்ததென வருவித்துரைத்துக்கொள்க.

ய௭. இதில் ஔவையார் "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை" என்றதனையெடுத்துக்கூறினமைகாண்க.

ய௮. பரிபவம்-அவமானம். பிறராற்பட்டால் - அந்நியரால் பழிக்கப்பட்டால் என வருவித்துரைக்க. அரசர்க்குரிய உபாயம் நான்கனுள் தண்டங்கடையானதால் பொருதொழிலுங் கடைநிலத்திற்கிடந்ததே என்றானென்க.

ய௯. வேண்டாவென்பது எண்டெதிர்மறை வியங்கோள்வினைமுற்று. கோடுகின்ற-மாறுபடுகின்ற.

உ௧. மூவர்திருமாலின் வியூகர்களாகிய சங்கரிடணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்பவர். இவர்கட்கு படைப்புமுதலிய வற்றில் அதிகாரப்பொதுமையால் பிரமன் முதலிய பெயரெய்துமென்று வாயுசங்கிதையிற் கூறப்பட்டுள்ளதென்பர். மீ-மேல். உகளல்-பாய்தல்.

உ௫. பொறைவேந்தன் -தருமன். கெடுமதி கண்டோன்றுது-"கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது" என்னும் பழமொழியை யீண்டுக்கூறினானென்க. என்முளைவித்திடினும் - என்னமுளையையுடைய வித்தையிட்டாலும். அன்று, ஏ-அசை.

உ௬. கோத்தருமம்-இராசதருமம்.

உ௭. நாவலம் பூதலம் என்றது சம்புத்தீவை; இது மேருவின் தெற்குள்ளது.

உ௮. அரம்பை-தெய்வப்பெண்; ஈண்டு ஊருவசி. சிறைமீட்டான் புரூரவாவென்க.

௩௨. கலைஞானமிகுதியால் தெய்வத்தன்மையால் தெய்வமன்னனென்றார்.

௩௩. பை-அழகு. பிங்கல நிகண்டிற்காண்க.

௩௪. புரிதல்-விரும்பல். பாரதம்-பாரதப்போர் என்க. கொல்-அசை.

௩௬. உன்னைநீதானுமுணராதாய் என்பதற்குத் தன்பெருமை தானுமறியாதவன் என்பது கருத்தாகக்கொள்க.

௪௰. ஓம் - இது உடன்பாட்டையுணர்த்து மிடைச்சொல்.

௪௩. கனகன் - இரணியன். மைந்தன்-பிரகலாதன். தூணிடைவந்தாய் - தூணில் நரசிங்கவடிவமாயுதித்தாய்.

௪௫. திறல்வீரர் என்றதனால் ஐந்தூர் பெறுவதடாதென்பது கருத்தாயிற்று.

௫௧. கடையடியிற் பஞ்சபூத வடிவாயினேன் என்றது அவைகளினந்தரியாமியாயிருத்தலாமென்க.

௫௨. முறைமை-நீதி. மந்திரம்-ஆலோசனை.

௫௪. சல்லரி-ஒருவகை வாத்தியம். தாரை-சிறுசின்னம்.

௫௫. நல்வரையு நீர்நாடு - வறுமையை நீக்கு நீர்நாடென்க. நல்-வறுமை; நல்குரவு என்பது நல் எனக்குறைந்து வருமென்றார் புறநானூற்றுரையில். வரைதல்-ஈண்டு நீக்கல். இவ்வாறனறி, நன்மையைக்கொள்ளு நீர் நாடெனினுமாம்.

௫௬. பழத்தைத்துகிர் என்றும், காயை மரகதமென்றுங் கூறினார். கமுகினியல்பாக முத்துக்களுண்டென்க. காவணங்களில்-பந்தர்களைப்போல. துகிர் - பவளம். மரகதம்-பச்சை. கோவை-ஒழுங்கு. தாளம்-முத்து.

௫௭. வருக்கை-பலா. மாகந்தம்-மாமரம். தமாலம்-பச்சிலைமரம்.

௫௮. நீராசனம்-ஆலாத்தி. புணரி-கடல். பொய்கை செந்தாமரை மலருடன் சிறந்த எனக்கூட்டுக. சிறந்த - அஃறிணைப்பன்மை வினைமுற்று.

௫௯. கோலம்-பன்றி. கிடங்கு-அகழ்.

௬௰. உடுபதம்-நட்சத்திரமண்டலம். சக்கரப்பொருப்பு-சக்கரவாளகிரி. புரிசை-மதில்

௬௧. கால்-காற்று. மந்தாகினித் தரங்கம்-கங்கையினலை.

௬௨. புயங்கபூமி-பாதாலமென்க. முழை-குகை. உயிர்த்தல் விடுதல்.

௬௪. உவமைவேறுளதோ என்றதனால் இவ்வாவணநீர்மைக்கு இதுவே வுவமையாமென்பது கருத்தாயிற்று. ஆவணம்-கடைவீதி.

௬௭. சிலம்பு - மாதர்காலணிசிலம்பென்க. மும்முரசு - காண்டவதகனச்சருக்கம் ௫௮-ஆங் கவியுரையிற்காண்க.

எ௰. தூதுகொண்டிலங்கை தீவிளைத்தவன் இன்று தூதுவந்திறத்தனனென்றதனுவினுமவ்வாறே சேடுவிளைப்பனென்பது சருதக்கிடந்தது காண்க. இறுத்தல்-தங்கல். தூதுவண்டு-மாதர்கள் தூதாகவிடுத்த வண்டென்க.

எக. யோசனை-குரோசம் நான்குகொண்டது; கைமுழநான்குகொண்டது வில், வில் இரண்டுகொண்டது தண்டம், தண்டம் இரண்டாயிரங்கொண்டது குரோசமென்க. ஒப்பனை-அலங்காரம்.

எஎ. துவந்தனை - பந்தம். மருந்து-அமுது. பிரித்தானாகிய மாயோனெனக்கூட்டுக.

எஅ. கோடு - சங்கம். கோகனதம்-ஈண்டுச் செந்தாமரை.

எகூ. தத்துவம்-உண்மை. அளி-அன்பு.

அ௰. நால்வகைச்சுருதியாவன-தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் என்பனவாம். இனி இவற்றை வேதவியாசர்வரையறைப்படுத்திய காலத்து இருக்குமுதலிய வாகப் பேர்பெறற நான்குமாமென்பர்.

அக. அம்ம-அதிசயக்குறிப்புச்சொல்.

அஉ. வரூதினி - ஈண்டுக்காலாட்படை. கந்து-கட்டுத்தறி.

அங. உமைக்கு நாயகன் இரவொழித்த கதை ௰ரு-ஆங் கவியிற்காண்க. இமைப்பிலார்-தேவர்.

அச. பூசறுத்தல்-சுத்திபண்ணல். கேசரித்தவிசு-சிங்காசனம்.

அரு. ஞானகஞ்சுகம் - ஞானமாகிய சட்டை.

அசு. அம்பு-நீர்க்குமாதலால் நீராகிய அம்பென்க. பகைவர் -மந்தேகர் என்பவராகிய அசுரரென்க. குருதி-இரத்தம்.

அஎ. துரங்கமேழு-சப்தாஸ்வா.

அஅ. இரவினும் பகல் புண்ணியகாலமாதலின் நீதியிற்புகல் பகலென்றூர். ஆதபத்திரம்-குடை. அடவி-காடு.

கூ௰. உரகபுங்கவன் - ஆதிசேடன். அரி-சிங்கம்.

கூக. பொதுவர்-இடையர். பாடி-ஆயரூர். கங்கைகாலில்வந்த கதை இராயசூயச் சருக்கம் எகூ-ஆங்கவியுரையிற்காண்க.

கூங. தழக்கின்-முழக்கத்தோடு. உழக்குதல்-கலக்குதல்.

கூச. முதலிரண்டடியில், பாண்டவ வீரர்போர்க்கெழுவாராயிற் துரியோதனன் புறந்தருவானென்பது உள்ளுரையாய்க்கிடந்தமை காண்க. உகண்டு-பாய்ந்து.

கூஎ. தளவம்-முல்லை. சதம்-நூறு. அளி-வண்டு, அன்பு. கணிகையர்-விலைமாதர். அளவு-பொருள்கொடுக்குமளவென்க. இது சிலேடையுவமை

கூஅ. பீறல் - கிழித்தல். வடவாமுகாக்கினி-பெண்குதிரை முகத்திலுள்ள அக்கினி; அதுகடலினடுவுள்ளதென்க. இது தற்குறிப்பேற்றவுவமை.

௱. அரசியல் ஆறினையும் நீதியாறுவகையென்றூர்; அவை, அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம் என்பன. படைகுடி கூழமைச்சு நட்பரண் எனினுமாம்.

௱க. ஆலவட்டம்-விசிறி. சொட்டை - ஓராயுதம். பரிசை-கேடகம். துகில்-கோசிகமுதலாகப் பலவகைப்படும்; அவை சிலப்பதிகாரவுரையிற்காண்க, களாசி-படிக்கம்.

௱உ. பற்பராகம்- ஒருவகை மாணிக்கம். துலாம்-மேற்பரப்புங் கட்டை. கோமளம்-அழகு.

௱ங. முட்ட-நிறைய.

௱ச. ஓவல்-(உபசரியாது) ஒழிதல்.

௱ரு. தந்தவண்ணன் என்றது பலராமனை.

௱எ. நகம்-மலை. நென்னல்-நேற்று. பன்னகம்-பாம்பு.

௱அ. இல்-மனை. உன்னில்-ஆராயில். அடிசில்-சோறு.

௱௰க. எதிலார்-அயலார்.

௱௰உ. சொல்-புகழ். செழுமி-பொருந்தி. வாய்மை-மெய்மை.

௱௰சு. காடளிக்க - நான்காடுகொடுக்க. உறை-இருப்பிடம். கரந்து-மறைந்து. ஒகாரங்கள்-எதிர்மறை.

௱௰எ. தந்தையென்றது-சந்தனுவை. இளையதாயென்றது-பரிமளகந்தியை. தம்பியரென்றது- சித்திராங்கதனையும், விசித்திரவீரியனையும். கொடுத்தவனென்றது-வீடுமனை.

௱௰அ. நன்றென்பது ஈண்டுக் குறிப்புமொழி நன்றாகவில்லை என்பது விளங்குகின்றது.

௱௰கூ. "ஸமெராஜாஷ்திவி॥" என்னும் பழமொழியின் கருத்துவிளங்கப் பார்வீரரானவாதல்லவோவென்றுனென்க.

௱உ௰. குருநிலம் - குருக்ஷேத்திரம். கை

வழங்குதல் - ஈண்டுக் கையடித்தலென்க; ௱௨௨-ஆவது கவியிற்காண்க. இது உறுதி கூறியதற்கறிகுறியாக இன்றும் நிகழுகின்றது.

௱௨௧. புறவு- முல்லை நிலம். கோவியர்- இடைமாதர்.

௱௨௨. ஏ-பாணம். கோவிலங்கு - மிருகராசனாகிய சிங்கம். கரடம்-மதம்பாய் சுவடு. கொண்டகால் எனச் சந்தநோக்கி மிகாது நின்றது. மலைத்தல்-போர்செய்தல். நாவிலங்கும்-நாவிலகும்; சொல்வேறுபடும் என்பது கருத்து. நா-ஆகுபெயர்.

௱௩௰. தூமென விசைப்பவன் நம்மைமயிர்த்தவனல்லன் என்பது விளங்க உலகமெங்கணுநீண்டவனென்றான். மாண்டவர்-மாட்சிமையுடைய தவத்தோர்.

௱௩௧. வில்லிரண்டு - அருச்சுனன் வில் விதுரன் வில். ௱௪௨-ஆங்கவியில் இருசிலை என்பதற்குங்கொள்க. மல்லிரண்டினையுமிருவராகி-கஞ்சனாலேவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் என்னுமிரண்டு மல்லர்களையுந் தானும் பலராமனுமாகிய இருவராகி.

௱௩௩. பிதாமகன் - பாட்டனாகிய வீடுமன்.

௱௩௪. மதாணி-பதக்கம். விதாரமொய்ம்பன் என்பது பாடமாயின் போர்வலியனென்க. பரணி-போர்முகத் தாயிரங்களிற்றைக்கொன்ற வீரனைத் தலைமகனாகக்கொண்டு பாடுவது.

௱௩௫. வேய்-மூங்கிற்குழல்.

௱௩௭. தளம்-படை.

௱௩௮. நிசி-இருள். கொல்-அசை. ஓ-எதிர்மறை.

௱௪௬. இந்தனம் - விறகு. தென்புலம்-தென்றிசை; யமதிசையென்க.

௱௪௭. புரை - குற்றம். கேள்வி - கல்வி. கேள்விப்பயனுகர் மனத்தாயென்றது பொறுப்பதற்கேதுக் கூறியவாறாயிற்றென்க.

௱௫௰. தென்புலவேந்தன் வெஃக - யமன் விரும்ப. அவன்செய்யுந்தொழில் அவனுக்குச் சிரமமின்றிப்போரிலாவதினால்வெஃகவென்க.

௱௫௩. மிதவையம்பேழை - மிதத்தலையுடைய வழகிய பேடகம். தெப்பம்போன்ற அழகியபேடகமெனினுமாம்.

௱௫௪. சூதன் - தேர்ப்பாகன். சுதன்-பிள்ளை.

௱௫௮. கானம் - காண்டவவனம். அரவு-தக்ககன் என்னும் பாம்பின் மகனாகிய அச்சுவசேனன் என்னும் பாம்பென்க. ஆசுகம்-பாணம்.

௱௬௧. தேக்குந்தி - தேக்குமரங்களைத்தள்ளி. மீக்குந்தி-மேலே குதித்து. வாக்குந்திமலரோன்-வாயு முந்தியுந் தாமரைமலர்போன்றவனாகிய கிருட்டிணன்.

௱௬௨. பை-படம். உய்வு-பிழைத்தல்.

௱௬௩. செந்திலகம்-சிந்தூரப் பொட்டென்க.

௱௬௪. ஆதி-சூரியன். மேற்றிசைக்கடவுள்-வருணன். வெயில்-ஒளி.

௱௬௫. முண்டகக்குலத்து மாதர் - தாமரையாகிய குலமகளிர். கயிரவக் கணிகைமாதர்-ஆம்பல் மலர்களாகிய விலைமகளிர்.

௱௬௭. தூ-பரிசுத்தம். துணைவர்-நாயகர். மேவிய-நாயகருடன் கூடிய. பரவை-கடல். உழை-மான். நாயகரைப்பிரிந்த மாதர்கண்கள் இராக்காலத்தில் உறக்கமின்றி விழித்திருத்தலால் அக்காலத்தில் மலர்ந்திருக்குங் காவி முதலிய மலர்களைப்போன்றன என்றும், இரவில் நாயகரைக்கூடிய மகளிர்கண்கள் கிளர்ச்சியுற்று மகிழ்ந்திருத்தலால் அவ்விராக்காலத்தில் கிளர்ச்சியுடையனவான கடன் முதலியவற்றைப்போன்றனவெனவுங்கூறினார் என்க.

௱௬௯. மந்திரம்-ஆலோசனை.

௱௭௰. பாதபம்-மரம். யாதவன்-ஈண்டுக் கிருட்டிணன். வந்தான் - இங்கு வந்தால்; ஆன் மூன்றனுருபு.

௱௭௧. கரும்பொழுது- இராப்பொழுது.

௱௭௫. மந்தணம்-இரகசியம். இம்பர்-இவிடம். மற்று-பிறிது.

௱௭௮. மதிப்பதென்வேறு - வேறெண்ணுவதியாது. கோலி-வளைந்து. சதிப்பது-அழிப்பது.

௱௭௯. எல்-பகல். இகல்-வலி.

௱௮௰. நீதியினிருந்து -நீதியினின்று நீங்கியிருந்து. ஆதி-முதலில்.

௱௮௧. பப்பரவர் - ஒருதேயத்தவர். கடிகை-நாழிகை.

௱௮௨. வேய்-மூங்கில். தொழில்-சித்திரத்தொழில்.

௱௮௩. மனத்தின்கங்குல்-அஞ்ஞானமென்க.

௱௮௪. சுடிகை-உச்சி. நிரந்தரம்-எப்பொழுதும். அருக்கன்றீபம்போன்றானென்க.

௱௮௫. தாமரையைக் குறிக்கும்போது

உதயராகத்தோடு - வெண்ணிறமுஞ் செந்நிறமுந் தோன்றுதலையுடைய விதழ். (உதையம்-தோன்றுதல். இராகம் - நிறம்). அரி-வண்டு. கயல்-மீன் என்றும், முகத்தைக்குறிக்கும்போது ராகம் - இச்சை, நிறமுமாம். தோடு-காதணி. அரி-செவ்வரி கருவரி. கயல்-கண்ணாகிய கயல் என்றும் பொருள்கொள்க. இது சிலேடையணி.

௱௮௬. துயிலிலாத கண்ணான்-என்றது துரியோதனனை. அனந்தபோசப் பேரணை. ஆதிசேடனுடம்பாகிய பெரிய மெத்தை

௱௮௮. தந்திரம்-படை.

௱௮௯. வீமலர்-மீமிசை. வேத்திரத்தவர்-பிரம்பினைவைத்திருப்பவராகிய வாயில்காவலர். ஏ-பிரிநிலை.

௱௯௧. நெறுநெறு - உபயவோசைக்குறிப்பு. மறலி-யமன்.

௱௯௨. நன்று என்பது கொடுமையையுணர்த்தலாற் குறிப்புமொழி.

௱௯௩. பப்பரர்- ஒரு தேசத்தார்; துற்றல்-நெருங்கல். கல்-ஒலிக்குறிப்பு. உடலில் எழாவது விரிக்க. உட்கல்-மடிதல்.

௱௯௪. பவனன்-வாயு. குவடு-சிகரம். முடங்கிய-மடங்கிய.

௱௯௫. காமர்-அழகு.

௱௯௬. பை-படம் அமளி-மெத்தை. விபுதர்-தேவர். உரம்-மார்பு. கடவுளர் பகை-என்றது சூரனை. முருக்கல்-அழித்தல். வரை என்றது கிரௌஞ்சகிரியை.

௱௯௭. புயகம்-பாம்பு. வெரு-அச்சம். ககனம்-ஆகாயம். கவிக்கிறை என்றது சுக்கிரீவனை. மொய்ம்பு-வலி. என்புமலை- துந்துபியின் எலும்பாகிய மலை.

௱௯௮. மைந்து-வலி. அந்தணன் என்றது அகத்திய முனியை. உதைத்து-உதைக்க. புடைத்தல்-அடித்தல். விந்தம்-ஒருமலை.

௱௯௯. குந்தி-குதித்து. அடுக்கு-ஒருதொழில் பலகானிகழ்தல்பற்றிவந்தது. மந்தரம்-ஒரு மலை குந்தம்-கைவேல்.

உ௱. முட்டி-கைப்பிடி. நித்தர்-ஈண்டுத் தேவர். மட்டு-அளவு. கவி-குரங்குகள்.

உ௱க. உட்கினர்-அஞ்சினர். மல் - வலி. வர்க்கமலர்க்கழல் என்பது பாடமாயின், வர்க்கம்-கூட்டம்.

உ௱உ. சண்டம் - வேகம். பவனக்கிளை-வாயுவின் வர்க்கம். சிரிப்பு-ஈண்டு வீராட்டகாசமென்க.

உ௱ங. முகத்தல் - வாருதல். சிந்துரம்-யானை. திரிப்பன - சுழற்றுவன. எண்டிசையானை - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்க. எண்குன்றம் - மாலியவான், கந்தமாதனம், நிசதம், ஏமகூடம், இமம், நீலம், சுவேதம் சிருங்கம் என்பனவாம். கந்தபுராணம் அண்ட கோசப்படலத்திற்காண்க.

உ௱ச. துகிர்-பவளம். அரி-ஒளி. உதணம்-மொட்டம்பு.

உ௱ரு. கணையம்-வளைதடி. குந்தம் - கைவேல். சுரிகை-வாள்.

உ௱௬. வான்புடை - ஆகாயத்தில். தோல்-கேடகம். சோரி - இரத்தம். தோமரம்-பெருஞ்சவளம்.

உ௱அ. அண்டர் - தேவர். பாயிரம் - வரலாறு.

உ௱ய. நீதவன்-நீதியுள்ளவன்.

உ௱யரு. நூறுவன்-அழிப்பேன்.

உ௱யஎ. பணி - பாம்பு. திரியோதனன் கொடுமைவிளங்கப் பணிசேர் கொடியோனென்றார்.

உஉய. அந்தணன் - ஈண்டுத் துருவாசமுனி. மந்திரமைந்தினில் எனப்பாடமோதுவாருமுளர்; சம்பவச்சருக்கம் உகூ-ஆங்கவியினும், இச்சருக்கம் உ௱சகூ-ஆங்கவியினுங் கூறியவதனாலதுபாடமன்றென்க. மைந்து-வலியெனப்பொருள்கொண்டு இப்பாடபேதத்தைக்கொண்டாலென்னையெனில்? இப்பாடபேதம் பலபிரதிகளிலுங் காணப்படாமையானும், ஐந்தோமைந்தோவென ஐயநிகழ்கின்றமையானும் அதுபாடமன்றென்க.

உஉக. கழை-ஈண்டு வேய்ங்குழலென்க. மூன்றுமடியில் ஆல்- அசை.

உஉச. கரி-காட்சி.

உஉரு. ஆறு- அளவில்லாத.

உஉ௬. ஆயோதனம்-போர். ஆழி - மோதிரம். சேயோன்-முருகனாகிய அசுவத்தாமன். ஊர்கோள்-பரிவேடம்.

உஉஎ. கிரித்தாழ் கவிகை - மலையாகிய தங்கியகுடை. சூள்-ஆணை.

உஉஅ. எங்ஙனம் என்றது எங்ஙன்என நின்றதென்க. துனி-கோபம்.

உஙக. தந்தம் - யானைக் கொம்பு. அரி-சிங்கம்.

உஙஉ. களம் - போர்க்களம். அரவு- அச்சுவசேனனாகிய பாம்பு அரி - சூரியன்.

௨௩௪. திவசம் - நாள். பொரினும்-போர்செய்தாலும். ஓ-எதிர்மறை. படும் - இறப்பன். இன்னே-இப்பொழுதே ; புறநானூற்றுரையிற்காண்க. கவசம், குண்டலம் இரண்டும் கன்னனுடன் றோன்றினவென்க.

௨௩௫. வல்லார் - கலைகளில் வன்மையில்லார். இல்லாதவர்-பொருளில்லார். சொல்லாதவர் - புகழாதவர்.

௨௩௬. தாருகரன்-கொடைக்குறைவிடமாயுள்ளவனாகிய கன்னன். அளிப்ப-வென்றதன்பின் அளிப்பான் என வருவித்து முடித்துக்கொள்க.

௨௩௯. பரிசில் - (சம்பாவனை) வெகுமானம். இரவலர் - எற்போர். முற்பகல் - பகலின் முற்கூறு.

௨௪௧. அருத்தி - ஆசை; ஈண்டு ஆகுபெயராய்ஆசையுற்றபொருளைக்குறித்தது. சுரர் தரு -தேவதருவாகிய ஐந்தரு. மற்று- அசை. ஓ-வினா. கறுத்தவர்- பகைவர். பதம்-பதவி.

௨௪௭. தேசவன் - சூரியன். பாசவன் பாசம் - அன்பாகிய வலியகயிறு. வலித்தல்- இழுத்தல்.

௨௪௮. சிந்து-முன்னது சிந்துதல், பின்னது கடல்.

௨௫௧. படாம்- வஸ்திரம். எடா-எடுத்து.

௨௫௨. பொன்முடிமோயினள் - அழகிய உச்சிமோந்தாள். உயிராப்பரிந்து - உயிராக அன்புற்று. உயிரா என்பதற்கு உயிர்த்து எனினுமாம். பாக்கியம் - ஈண்டுப்புண்ணியமென்க.

௨௫௩. கடை-வாயில். கடன்-முறைமை.

௨௫௪. தோற்றம் - காட்சி.

௨௫௫. மடந்தை-என்றது பானுமதியை. மேகலைமணியுக - மேகலாபரணத்தின் மணிகள் சிதற. ஏகாந்தம்-தனிமை. உகப்புரிந்து எனக்கூட்டுக. துரியோதனன் மனைவியாகிய பானுமதியுங் கன்னனுந் தனியிடத்திற் சூது விளையாடிக்கொண்டிருக்கும் போது துரியோதனன் வரவைப்பானுமதிமாத்திரங்கண்டெழுந்திருக்க அப்போது கன்னன் விளையாட்டை முடித்தெழவேண்டுமென்று மேகலாபரணத்தைப்பற்றியிழுத்ததனால் அதன் மணிகளற்றுதிர்ந்தன. அப்போது கன்னன் தன் பிழைநோக்கிச் சோர்ந்திருந்தான். துரியோதனன் விசனமுறாது இம்மணிகளை நான் எடுக்கவா கோக்கவா என்று கூறினன் என்னுங்கதையினைச் சுருக்கி இக்கவியிற்கூறியவாறு காண்க.

௨௫௮. பாந்தள்-பாம்பு. கோறல் மலையல் என்பனவற்றிற்கொல்லற்க, மலையற்க என அல்விகுதி வியங்கோள்எதிர்மறையில் வந்ததென்க.

௨௬௧. கடைப்பிடி-மறவாதிருப்பாய், உறுதியுமாம். கருமம்-காரியம்.

படையெழுச்சிச்சருக்கம்.

௨. புறம்-இடம். அம்மா-அசை.

௩. யாகசேனன்-துருபதன். திட்டத்துய்மன், திட்டகேது, சிகண்டி, உத்தமோசா, உதாமன் இவ்வைவருந் துருபதன்பிள்ளைகள். திட்டகேதுவைத் திட்டத்துய்மன் பிள்ளையென்பாரும் உத்தமோசா உதாமன் என்பவரைத்துருபதன் உறவினரென்பாருமுளர். பாஞ்சாலர்-பாஞ்சால தேசத்தரசர்.

௪. விராடபூபன்-விராட தேசமாகிய மச்சதேசாதிபதி. சதானிகன், சியேதன், வராகமேகது, உத்தரகுமரன் இந்நால்வரும் விராடன் பிள்ளைகள். குரா-ஒருமரம். கேகயம்-ஒருதேயம். குந்திபோசர்-யாதவவரசர்கள் பலரென்பர்.

௫. இடையடியிரண்டிற் கூறிய ஐவரும் உபபாண்டவர் என்பர். இவ்வைவருக்கும் வெவ்வேறு பெயரும் கூறுப. திரௌபதர்-திரௌபதியின் புத்திரர். அருச்சுனன்றீர்த்தயாத்திரைச்சருக்கம் அஎ-ஆங்கவியுரையிற் காண்க. புண்டலனும், செபசனனும் என உம்மை விரித்துரைக்க.

௬. ஒட்டர் ஆதியாய் ஆன வெம்படை நடப்பனதானை ஐயிரண்டெண்பூமி மன்னர் எனக்கொண்டு கூட்டியுரைக்க.

௭. பாங்கு-உரிமை -தந்திரிகள்-சேனைத்தலைவர்கள்-பதாகினி-சேனை.

௮. அக்குரோணிகளேழும் என்க. அக்குரோணி-நிரைமீட்சிச் சருக்கம். அ-ஆங்கவியுரையிற்காண்க.

௰. தோண்மை- புயவலியென்க.வாகை-வெற்றிமாலை.

௰௧. தாரை-நட்சத்திரம். தருமராசனை மதியாகக் கொள்க.

௰௨. செற்றுவார்-நெருங்கியுயர்ந்த. அர

வமின் மகன்-நாககன்னியின் மகனாகிய இராவான்.

௰௩. பார்த்திபர்-அரசர். உழி-இடம். செரு-போர்.

௰௪. சாதுரங்கம்-நால் வகைத்தானை.

௰௫. மித்திரம்-சிநேகம். சத்திரம்-குடை. மத்திரபதி-மத்திரதேசாதிபதியாகிய சல்லியன். மருகர் என்றது நகுலசகாதேவரை.

௰௬. நெறி-வழி. மடைப்படுவிதி-மடைத்தொழிற்குண்டாகிய நூல்விதி. படை-ஆயுதம்.

௰௭. மாகதர்பதி-மகததேசத்தார்க்கரசன்; இவன் சராசந்தன் மகனாகிய சகதேவன்; தன்றந்தையை வீமன் கொன்றதனாற் பாண்டவர்க்குத் துணையாகாமற் றுரியோதனனுக்குத் துணையாகினானென்பர். விந்தரன், விந்தன் இவ்விருவரும் அவந்திதேசத்தரசரென்பர்.

௰௮. ௰௯, ௨௰, ஆங்கவிகளிற் சிலவரசர் பாண்டவர்க்குந் துணையாகவந்தாரெனக் கூறியிருத்தலால் அவ்வரசர் ஞாதியர் பலரெனவறிக.

௨௰. இரண்டாமடியிற்கூறியவர் கிருஷ்ணனுக்குக் கோவியரிடம்பிறந்த பதினாறாயிரவரெனக. இவர்க்கு நாராயண கோபாலரென்னும் பெயருமுண்டு. பூரி-சோமதத்தன் முதன் மகன். கௌரிமா-ஓரரசன்.

௨௧. அம்பரம்-ஆகாயம். மூந்நீரம்பரம்-மூன்றுதன்மையாகிய கடல்.

௨௨. விகத்தசேனன்-ஓரரசன். பகதத்தன்-நரகாசுரன் புத்திரன். இவன் யானைப்படைமிகவுடையவன். கோடு-சிகரம். மேருமலையைச்சூழ்ந்தகிரியேழாவன. இமவான், நிஷதம், விந்தம், மாலியவான், பாரியாத்திரம், கந்தமாதனம், ஏமகூடம் என்பனவாம்; அமரம், சைலவர்க்கத்திற்காண்க. இவ்வாறன்றி, இராசசூயச்சருக்கம், ௬௭- ஆங்கவியிற்கூறிய மலைகளேழையுங் கொள்வாருமுளர். துரியோதனன் மேருவொப்பாயிருந்தானென்க. உள்ளோராகிய தலைவரென்க.

௨௩. சிந்து-கடல். இராசமண்டலம்-இராசகூட்டம். சதமகன்-இந்திரன்.

முகூர்த்தங்கேள்விச்சருக்கம்.

௧. கயம்-கீழ்மை. வயம்-வெற்றி. சூழ்ச்சி-ஆலோசனை.

௨. தளப்பு-ஈண்டுச் சோர்வு.

௩. இராவான் கூறியது படையெழுச்சிச்சருக்கம் ௧௨-ஆங் கவியிலறிக.

௪. இயந்திரவெகினம்-சூத்திர அன்னப்பறவை. சிலையில்வெங்கதிரைத்திங்களொன்றியபகலிராவில்-தனுலக்கினத்திற் (பிரவேசித்த) வெய்ய சூரியனைச் சந்திரன்கூடிய நாளிரவில்; மார்கழி அமாவாசைத் தினமிரவிலென்க.

௫. பை-படம். தாதை-பிதா வென்னுமுறையையுடைய துரியோதனனென்க. இராவான் தேகமநித்தியமாதலால் நானாவரையித்தேகமிருக்குமாகில் என்னைப் பலியூட்டுக என்றான் என்பது முதநூற்கதை.

களப்பலியூட்டுசருக்கம்.

௧. அன்று-மிதிலையிற் சனகன் வேள்வி செய்த அக்காலத்து. வில்விழவு-வடமதுரையிற் கஞ்சன்செய்த விற்சிறப்பை. எடுத்திறுத்து-அக்கஞ்சன் விழவுசெய்துவைத்திருந்த வில்லையெடுத்து ஒடித்து.

௨. திதிபன்னான்கு-சதுர்த்தசி. உவா-அமாவாசை. ஆக என்னும் வியங்கோளீறு தொக்கதென்க. சுடர்கள் என்றது சூரிய சந்திரரை. இதுவென்னையென்ன-சதுர்த்தசியிற் பூலோகத்தார் பிதிர் தருப்பணஞ் செய்கின்றார்கள் இதற்குக் காரணம் யாது என்று ஒருவரையொருவர் வினவ. அன்றது வாயது-இருவருங்கூடிய தினமே அமாவாசையாதலால் அன்று அமாவாசையாயினது.

௫. (களப்பலிக்குச்சௌரியசத்திய சௌந்தரமுள்ளவராய் எதிருரோமமுள்ளவராயிருப்பவர் வேண்டும், இங்கே அவ்வாறிருப்பவர் நாமிருவருமேயாதலால்) நம்மிலொருவரே வேண்டுமென்றான். எனச்சதையை விரித்துரைத்துக்கொள்க.

எ. இராவான் போர்க்களத்தினின்று போர் செய்ய வரமுங் கொடுத்தாரென்பர். சென்மதேயம் - குருக்ஷேத்திர பூமி. கொய்வருநிலையாவது முப்பத்திரண்டவயவங்களிலுஞ் சிறிது சிறிது கொய்யும்போது தான் கண்ணீர்விடாமலிருத்தலென்க.

அ. கன்னி-காளி. யாமளம்-யாமளசாஸ்திரம். பகடு-யானை. ஆதியாக என்றதனாற் குதிரை, எருமை, ஒட்டகம், பன்றி, ஆடு, கோழி முதலியனவென்க.

அணிவகுப்புச்சருக்கம்.

க. செற்றல் - நெருங்கல். வஞ்சி - வஞ்சிப்பூமாலை; இது பகைவர் பூமியைக்கொள்ளக்கருதி அமர்மேற் செல்வோர் சூடுவது.

உ. உத்தமபானு - உத்தமோசா, இவன் துருபதன் பிள்ளைகளிலொருவன்.

ச. ஐம்புலன்களையுந் தன்வழிப்படுத்து நெஞ்சம்போல ஐவரையுந் தன்வழிப்படுத்து மாலுக்கு நெஞ்சை யுவமை கூறினரென்க. சமம்-போர். இராமன்-ஈண்டுப் பலராமனென்க.

ரு. கடி-ஈண்டு அடித்தல். கடிப்பு-குறுந்தடி; இஃதுகடியென விகாரமாயிற்றென்பர். பணை-பறைப்பொது. கறை-உரல். கரிநிகரம்- யானைக்கூட்டம்.

எ. திகிரி-சக்கரம். இவுளி-குதிரை. குரம்-குளம்பு. துகள்-தூள். சாதம்-உண்மை.

அ. பவனம்-வாயு. பரவை-கடல். வெளியிலுய்த்தலின்-துகளாக ஆகாயத்திற்செலுத்துதலினால். உதவியாய்-பூபாரங்குறைதலினால் உபகாரமாய். சக்கரகிரி-சக்கரவாளகிரி. சுற்றடியென-சுற்றடியெல்லையென்ன. எழுமுகில்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்பன. இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ இவைகளைப்பொழிவன. காண்டவ தகனச் சருக்கம் ருச-ஆங்கவியினும், நிவாத கவச காலகேயர் வதைச்சருக்கம் ககச-ஆங்கவியினுங் கொள்க.

கூ. துகிர்-பவளம். பார்வையையழித்திமைத்தால் அதுவீரர்க்குப்புறங்கொடுத்தலாம் ஆதலின் இமைப்பறு விழியென்றார்; விழித்தகண் என்னுமுதற் குறிப்புடைய குறளிற்காண்க. விருதர்-படைவீரர்.

ய. இபம்-யானை. அயம்-குதிரை.

யக. உகள்-பாய்கின்ற. உடு-நட்சத்திரம். ககனம்-ஆகாயம். துவசம்-கொடி.

யஉ. அறுவகைப்படை- இராசசூயச்சருக்கம். ரு௩உ-ஆங் கவியுரையிற்காண்க.

யரு. சதி-தாளவொத்து. சதம்-நூறு, இடியுமாம். நளினவெம்பதி-சூரியன்.

யௌ. வளை-சங்கு. கிடுகு-ஒரு பறை. வயிர்-ஊதுகொம்பு. மருடி-ஒருகுழற்கருவி. கிணை-மருதப்பறை. துளை-ஆகுபெயராய்த் துளைக்கருவிகளையுணர்த்தியது. துடி-உடுக்கு; குறிஞ்சி பாலையிவற்றின் பறையுமாம். இமிழ்த்தல், உரற்றல், இசைத்தல், அரற்றல் இவற்றிற்கு ஒலித்தலென்க.

யஅ. அஞ்சுபு-அஞ்சி. அனீகினி-சேனை. மதுகை-வலி.

யகூ. பூரிசிரவா-இவன் சோமதத்தனிரண்டாம் புத்திரன்; இவனுக்குப் பூரிசிரவன் என்றும்பெயர் கூறுவர். சோமவரதத்தன்-சோமதத்தன்; இவன் சந்தனு சகோதரனாகிய பாகிலிகன் புத்திரன். பகதத்தன்-நரகாசுரன் புத்திரன். துன்மருடணன்-துரியோதனன் றம்பியரிலொருவன். கிருதபன்மன்-யதுகுலத்தவனாகிய ஹிருதிகன் மகன், தேவமீடனுக்குத் தம்பி. அரசன் என்றது துரியோதனனை.

உய. விருடசேனன்-கன்னன் புத்திரன்; இவனுக்கு விடசேனன் என்றும் பின்னர்க் கூறுவர். நிசாரி-சூரியன்.

உக. எதி-வாள்.

உஉ. பணை-பருமை. மகரிகை-தந்தப்பூண்.

உ௩. மிசை-மேற்றலம். உடுநிகரம்-நட்சத்திரக்கூட்டம். கொடுமுடி-சிகரம். இவுளி-குதிரை. குரைபவனம் - ஒலிக்கின்ற காற்று. எழு-எழுகின்ற.

உச. யவனசவனம்-யவனதேயத்திலுண்டான வனம். சம்வனம் சவனமெனநின்றது. கதம் - செல்கை, வலியுமாம். புறப்புணரி-பெரும்புறக்கடல்.

உரு. எழு- தம்பம். அனிலம்-காற்று.

உசு. திகிரி-பரிதி.

உஎ. கடி-ஈண்டு அடித்தல். கருவி-வாத்தியம். பணை-பறை. மணி-எறிமணி. நரப்பு-நரம்பு. உழை-ஒருபண். உழை-இடம்.

உஅ. மைத்துனமை - மைத்துனமுறைமை. விறல்-வெற்றி. கரியவன் - கண்ணன். உருமுத்துவசன்மதலை- விசயன். இறுதி-நாசம். வளி-சாற்று. வெருவு-அச்சம். புறக்கிடுவது-புறங்கொடுப்பது.

உகூ. வியனதி-ஈண்டு ஆகாயகங்கை.

நடு. எனப்படம்- என்கின்ற அப்படம். உரகன்-என்றது ஆதிசேடனை. வரு-வளர்கின்ற. உததி-கடல்.

நந. பிதாமகன் - பாட்டன். அணிந்தநிலை-அணிவகுத்த நிலைமை. விபுதர்பதி-இந்திரன்.

நச. கொள்பவன்-அத்தரணிகொள்பவன் என்க.

உத்தியோகபருவம் முற்றிற்று.

ஆறுவது வீட்டுமபருவம்.

முதற்போர்ச்சருக்கம்.

உ. அறிவன்-என்றது பரமான்வாகிய ஈசுவரனை. நேயம்-அன்பு.

ந. ஐம்பொருள்-ஈண்டுச்சத்த பரிசரூப ரசகந்தங்களை. அயின்று-உண்டு. முக்குணம்- சாத்துவிதம், இராசதம், தாமதம். அறுவகைப்படை - காமக்குரோத லோப மோக மத மாற்சரியமென்னு மறுவகைப் படையென்க. துயின்றபோது - லயமாகும் போது. ஒளித்துநின்ற தோன்றல்-மறைந்து நின்ற பரமான்வாகிய ஈசுவரன்.

ச. தந்தை-பிரமன். பாலினெய் போலுயிர்க்குயிராகிவாழும் - பாலின்கணெய்போலப் பேதம் அபேதம் பேதாபேதம் என்னும் மூன்றியல்பாக உயிர்க்குயிராகி வசிப்பானென்க. "விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போன்-மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்" எனத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தினுங் காண்க. இவ்வாறன்றிப் பாலினெய் விளங்காது மறைந்திருத்தல்போல உயிர்க்குயிராகி வசிப்பானென்றுங் கூறுவர்.

ரு. ஒன்றை-ஏகமாகிய ஈசுவரனை. பூதமைந்தாவன - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். நம்பன் - அறிஞர்விரும்புதலுள்ளவனாகிய ஈசுவரன்.

சு. மேனாள்என்றது கிருதயுககாலத்தை.

எ. தத்துவம் - உண்மை. இவ்வாறு செய்யுளும் பகவற்கீதையின் சங்கிரகமென்க.

அ. முற்றி-அடைந்து. பாங்கு-உரிமை.

ய. அம்பை சிகண்டியாயின் கதை குருகுல்ச்சருக்கத்திற்காண்க.

யக. குமரன்-என்றது சிகண்டியை.

யந. வையந்தாயவர்-உலகத்தையளத்தற்குத் தாவியவராகிய திருமால்.

யச. வேந்தன் - என்றது தருமராசனை. சூரன்றன்மகன் மகன்-சூரன் மகன் வசுதேவன், வசுதேவன் மகன் கிருட்டிணன்.

யசு. பனிவனம்-குளிர்ச்சியையுடையநீர்.

யஎ. அசலவியூகம்-பருவதவடிவாயமைக்கப்பட்டவியூகம். இதனை வச்சிரயூகமென்பர். வியூகம்-படைவகுப்பு. விந்தை-வீரலக்குமி. தூசி-படைமுன்னணி.

யஅ. புரசை-யானைக்கழுத்திடு கயிறு. அரசன்-ஈண்டுத்தருமராசன். குரை-ஒலி. குப்பை-கூட்டம். சாலம்-கூட்டம். சால-மிக.

யகூ. பற்பவனம்-தாமரைக்காடு. இடம்புரி ஆயிரஞ் சூழ்ந்தது வலம்புரி, வலம்புரி ஆயிரஞ்சூழ்ந்தது சலஞ் சலம் என்க. சங்குஎன்றது-ஈண்டு இடம் புரியை. திருமாலேந்தின சங்கு பாஞ்ச சந்நியமென்னும் வலம்புரிச் சங்கென்க.

உந. தந்திரம்-படை.

உச. சண்டம்-வேகம். சாமந்தர்-தானைத்தலைவர்.

உரு. இடி-அடித்தல். அமுதங்கடைந்தெடுத்தகாலத்திலே திருமால் மோகினிவடிவெடுத்து அவ்வமுதத்தைப்படைக்கும்போது அதனையருந்தவிருந்த தேவருடன் மறைந்திருந்த இராகு அம்மோகினியால் உடல் வேறுதலைவேறாயினனென்றறிக. தொடி-வீரவளை, புறநானூற்றுரையிற்காண்க. சூரியன்றேர்ப் பாகனுக்குக் காலில்லையென வறிக.

உசு. நீபம்-நீபவிருக்ஷம். நீபம்-ஈண்டுச் செங்கடம்பு.

உஎ. மெய்யில்வாளி- உடலிற்றைத்திருக்கின்ற பாணம். வாங்கினார் - வளைத்தார். மை-குற்றம்.

உஅ. எயிற்றுக்கணை-பல்லம்பு. இலக்கம்-எண். இலச்கு-குறி.

உகூ. முதலடியில் இல்பொருளுவமைகாண்க.

௩௨. புங்கம்-பாணம். கங்கம் - பருந்து. காவணம்-பந்தல். அலகை-பேய்.

௩௩. ஒளி-ஒழுங்கு. தாளிலான் என்றது அருணனை. மீளி என்றது வலியோனாகிய சூரியனை.

௩௬. மேலை, கீழை என்பனவற்றில் ஐ சாரியை யென்க.

௩௭. உகவை-மகிழ்ச்சி. மகீபன் - என்றது துரியோதனனை. அரசன்-என்றது தருமனை. விந்தரன்-பூதிவிந்தனென்னு மோரரசன் என்பர்.

௩௮. சதாகதி-வாயு.

௩௯. தன்பிதாவின் பிதாமகன்-தன்றந்தையாகிய அருச்சுனனுடைய பாட்டனாகிய வீடுமனென்க.

௪௨. தாமன்-ஒளியுடையோனாகிய சூரியன். தமம்-இருள்.

௪௩. செண்டு - ஓராயுதம். வசுகிரி-பொன்மலையாகிய மேரு. செழியன்-பாண்டியன். செண்டுதல்-கிண்டுதல்.

௪௬. பரித்த-தாங்கிய. பரிதிபோல்-பரிவேடத்தைப்போல. மைத்துனர் - துரியோதனன் மனைவியாகிய பானுமதி சகோதர முறையினர்.

௪௭. விண்ணிடைச் செய்து பெற்றன தேர் - விண்ணுலகத்திற்செய்யப்பட்டுத் தான் பெற்றாற்போன்ற தன்றேர்.

௪௮. சாகரத்தெழுதழல் - கடலிலெழுகின்ற வடவாமுகாக்கினி.

௫௰. சொல்லி என்பதனைச் சொல்லஎனத்திரித்துரைக்க.

௫௨. இரணம்-போர். நறை-தேன்.

௫௪. பூளை - ஒரு செடி ; ஆகுபெயராய தன் பூவையுணர்த்தியது. அனிலம்-காற்று.

௫௫. கெட்டநிலே-மறைந்தோடினநிலை.

௫௯. இளந்தலே-எளிமை.

௬௧. குகுரம்-ஒரு தேயம்.

௬௪. ஏறு-ஆண்டு ஆண்சிங்கம்.

௬௮. நடுத்தகை- நடுநிலைமையாகியகுணம்.

௬௯. உகளித்து-குதித்து. ஆழி-கடல்.

௭௰. குருதிப்புனலாறுறுங் கிடக் கின்ற தேருருள்கள் போரிலிறந்தவீரர் வீர சுவர்க்கஞ்செல்லுங்காற் சூரியமண்டலத்தைக்கிழித்துச் செல்லுதல் மரபாதலால் அங்ஙனஞ் சென்ற அம்மண்டலத்தினிழலை யொக்கு மென்றுரைக்க.

௭௧. அலங்கல் முன்னது மாலே; பின்னது ஒளி செய்தல். சததளம்-நூறிதழ். முகுளசாலம்-அரும்புக்கூட்டம்.

௭௨. கண்ணிழந்த பறை என்றது ஒட்டையாகிய பறையை. இடை-அக்குருதிநதி நடுவில். கால்வாய்-வாய்க்கால். கண்-ஈண்டுத் துவாரம். பலநிறமணி யென்றும், பலநிறமீனின மென்றும் வருவித்துரைக்க.

௭௩. படங்கியல் பாடிவீடு - பாசறையிலியன்ற படங்காகியவீடு. படங்கு-கூடாரம். படங்குபெருங்கொடி யெனப்பொருள் கொண்டு பெருங்கொடிகள் பொருந்திய பாசறையிலுள்ள வீடு எனவுங் கூறுவர். இதுதற் குறிப்பேற் றவணி. இனிப் போர்முடிவளவுங்கதிரின் மறைவுதோற்றத்திற் பெரும்பாலுமிவ்வணி வருதல் காண்க.

௭௭. முடி-தலே. முடிசாய்த்து-சயனித்து என்பது கருத்து. வல்-விரைவு. மை-இருள். வரூதினி-படை.

இரண்டாம்போர்ச்சருக்கம்.

௨. சோனே-விடாமழை. வானே என்றதில் ஐ சாரியை.

௩. பௌவம்-கடல். கௌவை-ஒலி.

௪. பராகம்-தூளி. சம்பராரி-மதன். உரும்-இடி.

௫. இளவல் என்றது சகாதேவனை. பளகம்-மலே. வளவர்-சோழர்.

௬. மிடல்-வலி. நாயகன்என்றது தருமராசனை. கடகநாதன்-ஈண்டுச் சேனை நாதனாகிய திட்டத்துய்மன். அணிந்து-அணிவகுத்து.

௭. மாடு - பக்கம். பீடு- பெருமை. பேரணி-கூழை, பின்னணி. பிங்கல நிகண்டிற் காண்க. நடுச்சேனையுமாம். தூசி - முன்னணி. மகீபன் என்றது துரியோதனனை.

௮. கொண்டல்-கீழ்காற்று. கோடை-மேல்காற்று. ஆசுகம்-பாணம்.

௯. கோல் - பாணம். உற்கை-விண் வீழ்கொள்ளி.

௰. சாபம் முன்னதுவில், பின்னது சபித்தல்.

௰உ. வக்கிரம்-ஈண்டுவளைவு. சக்கிரதேவன்-இவன் கலிங்க தேசத்தரசனாகிய சுருதாயுவின் இரண்டாம் புத்திரன்.

௰ச. இபம்-யானை. தாமமாருதி- ஒழுங்கையுடைய அனுமான். எறி-கடலிலெறிந்த.

௰ரு. தும்பி-யானை. பவனன்-காற்று. அம்பி-மரக்கலம்.

௰சா. களிறு-யானை. பணை-கொம்பு. ஏனம்-திருமாலாகிய பன்றியென்க.

௰எ. கழல்-கால். பொலம்-பொன். இந்திரன் சிறகுகளையரிவதற்கு முன்னிருந்தமலையென்பார் பழைய கல்லென்றார்.

௰அ. முகபடமுகில்-யானை.

உ௰. தளம்-படை.

உஉ. ஓச்சினான்-எறிந்தான். தோமரம்-கைவேல்.

உங. ஈடு-வலி.

உச. மோகரம்-உக்கிரம். ஆகவம்-ஈண்டுப்போர்க்களம். ஆரவம்-அரவம். அற-மிக.

உசா. மேகநிகர்மெய்க்கணை என்றது திருமாலாகிய பாணத்தை. நகை-வீரவெகுளி நகையென்க.

உஎ. மேவலர்-பகைவர். உட்கல்-அஞ்சுதல். பரவை-கடல். கூவல்-கிணறு. ஒத்ததொரு கோபம்-ஒத்ததாகிய வொரு கோபமென்க.

உஅ. வருவோன் என்றது விசயனை. மீனவன்-மீனக்கொடியையுடைய மதன். காளை என்றது அபிமனை.

ங௰. ஆலம்-விடம். இவன் என்றது விசயனை. உததி-கடல்.

ங௧. மாதிரம்-திசை. முட்ட-நிறைய. எதிலிருள் - அயலாகியவிருள். கடையின்-யுகமுடிவில்.

ஙஉ. கூளி - பேய். கோமகன் என்றது துரியோதனனை. உற்ற என்னும் பெயரெச்சவீறு தொக்கது.

மூன்றாம்போர்ச்சருக்கம்.

உ. காருடவியூகம்-கருடனது வடிவம்போல வகுக்கப்படும் படைவகுப்பு.
அர்த்தசந்திரவியூகம்-பாதிச்சந்திரனது வடிவம்போல வகுக்கப்படும் படைவகுப்பு.

ங. ஏ-அசை. கார்கோள்-கடல்; திருமுருகாற்றுப் படையுரையிற் காண்க. கால்-காற்று. கலி-ஒலி. காகளம்-காளம்.

ச. எல் - ஒளி. எல்-இயலுகின்ற. சிறுவன் என்றது அபிமனை. மல் முன்னது மல்யுத்தம், பின்னது மல்லர்.

ரு. காந்தாரன்என்றது சகுனியை. சிங்கத்துவசன்-வீமன்.

சா. மறை-மந்திரம்.

அ. மாகம்-ஆகாயம். மைந்தன் என்றது அபிமனை. மருமம்-மார்பு.

௯. சாயகம்-பாணம். மந்தாகினிமைந்தன்-கங்கை புத்திரனாகிய வீடுமன்.

௰ங. தரங்கம்-அலை. வடவானலம்-வடவாமுகாக்கினி.

௰ரு. தாழி-ஈண்டுத் தயிர்த்தாழி; ஆயர்பாடியில் ததிபாண்டனுடைய வேண்டுகோளால் அவனுடைய தயிர்த்தாழிக்கும் அவனைச் சேர்ந்த இருபத்தெட்டு வீட்டாருக்கு முத்தி கொடுத்த கதையையீண்டுச் சுருக்கிக்கூறினாரென்க. மாயன்-கருநிறமுடையோன் என்றார் பரிபாடலுரையில். வாழி - அசை

௰எ. ஆரணகற்பித-வேதத்தை விதித்தவனே. மாதவ-இலக்குமி நாயகனே. அச்சுத-அழியாதவனே. சிற்குணம்-ஞானமாகிய குணம். வாரணம்-யானை.

௰அ. ஆடகன்-இரணியன். சிறுமாணுருவம் என்றது குறள்வடிவத்தை. மாண்-மாட்சிமை. ஏ-பாணம். அரக்கன் என்றது இராவணனை.

உ௧. நிலவைப்படைய- நிலத்தினிடமெல்லாம். வை-கூர்மை.

உங. மத்திரநாடன்-சல்லியன்.

உச. மூன்றாமடியில், வீடுமனுந் துரோணாசாரியனும் அசுவத்தாமனுமென்க.

உரு. பஞ்சரம்-கழுகு; இது மாமிசம்புசித்தற்கு யானையுடன்றிரிவதனாற் பஞ்சரத்தோடுந்திரியும் யானையென்றார். சிலபாணங்கட்கு இறகுண்மையாற் சரத்தின்மேற் சிறகரென்றார்.

உசா. கோலம்-தலைக்கோலம் என்னுமோரணி. முதலிரண்டடியிலே தும்பைத்திணையிற் பேய்க்குறவையென்னுந் துறையின் கருத்தமையக் கூறினாரென்க.

உஎ. பமரமும்மதம்-வண்டுண்ணுகின்ற மும்மதம். வேலின்வாய்-வேலாயுதந்தைத்த

துவாரத்தில். அனலம் - அக்கினி. குன்றம் என்றது கிரௌஞ்சகிரியை. கிரௌஞ்சகிரியை வேல் துளைத்தபோது துவாரத்தின்வழி அக்கினிவந்தது என்பதைக் கந்தபுராணத்திற்காண்க. ஞாளி-நாய். மானுடத்தலைவிலங்கு-புருஷமிருகம். நிணம்-ஈண்டு இரத்தம், அன்றி இரத்தங்கலந்து வருங்கொழுப்பென்பர்.

௨௯. கண்படாமல் - நித்திரைசெய்யாமல். தருமன் சேனைக்கு வெற்றியால்வருமகிழ்ச்சியைப் பாராட்டலால் நித்திரையில்லையென்க. முன்னிரண்டடியும் பேராண்முல்லையின்றுறைக்கருத்தும், பின்னிரண்டடியுங் கையறுநிலையின்றுறைக் கருத்துமாகக் கொள்க.

௩௰. நென்னல்-நேற்று; மூன்றுநாளாகிய நேற்றென்க. கையிற்கொண்டது-(அருச்சுனன் வாளாநின்ற நிலைகண்டு வீடுமனைக்கொல்லக்) கையினிடத்துச் சக்கரமாகக் கொண்டது எனவருவித்துரைக்க. விபாகரன்-சூரியன்.

நான்காம்போர்ச்சருக்கம்.

௨. பொற்பகலுற-பொலிவகல. முற்பகல் வியூகம்-அர்த்தசந்திர வியூகமென்க.

௩. காணலார் - பகைவர். எமம்-களிப்பு. இதில் ரகரவொற்றிடைவந்த ஆசெதுகை காண்க.

௪. எழிருபுவனம்-பதினாலுலகு; அவை மேலேழுலகம், கீழேழுலகம், பிங்கலநிகண்டு முதலாவது நான்கவதிற்காண்க. பாழி-பெருமை, வலியுமாம்.

௫. ஆலாலம்-விடம், வடசொல். கதுவல்-பற்றுதல். எலா-எற்று. தோலினம் - யானைக்கூட்டம்.

௬. மால்வாரணம்-பெரிய யானைகள். நால்வாய்-தொங்கிய வாயையுடையது எனயானைக்குப்பெயராகக்கொள்க. நாலுதல்-தொங்குதல்.

௭. சிந்துரம்-யானை. வல்லுரம்- வலியமார்பு. சிந்துரமாகி - சிந்துரப்பொடியாக. இவ்வாறன்றி வல்லுரம்-மிக்கவலி. சிந்துரமாகி-சிந்துகின்ற வலியாக என்றுமாம்.

௮. மிடல்-வலி. அத்தி-யானை, எலும்பு.

௯. கந்தாவகன்-காற்று. கந்து-தூண். தந்தாவளம்-யானை, தம்முடைய இருப்பிடம்.

௰. தோல்-யானை. வாலதி-வால். வாரணமாகியது-கடலையொத்திருந்தது. கைமுதலியன கரந்து கருநிறமேமிகுந்து தோன்றுதலால் வாரணமாகியதென்றார்.

௰௧. தம்பித்தல்-அசையாதிருத்தல். கும்பித்தல்-அடங்கல். தும்பி-யானை. தும்பிக்குலமாயின-வண்டுக்கூட்டம்போலிருந்தன.

௰௨. முருக்குதல்-அழித்தல். நாகம்-யானை, மலை. ஆகவம்-ஈண்டுப்போர்க்களம்.

௰௩. குதிகொண்டு-(கொம்புங்கையு நீங்கியவாயினின்றுங்) குதித்து என்க. கயம்-குளம், யானை.

௰௪. மூசுதல் - மொய்த்தல். களபக்குலம்-யானைக்கூட்டம். மொய்ம்பன் - வலியோனாகிய வீமன். களபக்களி - கலவைக்குழம்பு.

௰௫. கிட்டின-கிட்டினவாகிய யானைகள் என்க. புன்பொரி-அற்பமாகியநெற்பொரி. அவர்தங்கரியேகரி - அப்பகைவருடைய யானைகளே சாட்சி.

௰௬. வாரணவேலை-யானைக்கடல்.

௰௮. நாமம்-அச்சம்.

௰௯. அற்று-(அரவத்துவசம்) அற எனத்திரித்துரைக்க.

௨௰. உற்று-உற. கடகம்-கங்கணம்.

௨௧. மைத்துனர்-திரௌபதிக்குச் சகோதரமுறையினர்.

௨௩. உடையாவல்ல வகிலாண்டம்-எல்லாவண்டமுமுடைந்தன.

௨௪. மொட்டு-தேரின் கூம்பு. கொடிஞ்சி-தாமரைப்பூவடிவமாகப் பண்ணித்தேர்த்தட்டின் முன்னே நடுவது; மதுரைக்காஞ்சியுரையிற்காண்க.

௨௬. ஓரினவெதுகை காண்க.

௨௯. உத்தமபானு - உத்தமோசா; இவன் துருபதன் பிள்ளைகளிலொருவன்.

௩௰. பகதத்தன் நகர் பிராக்சோதிஷம் என்பர். பஞ்சகதி-சூதுபோர்ச்சருக்கம் ௮௧-ஆஞ் செய்யுளுரையிற்காண்க.

௩௨. ஓடை - நெற்றிப்பட்டம். பகதத்தன் யானையின் பெயர் சுப்பிரதீகம்.

௩௭. போயினது என்பது இன் இடைநிலை முதற்குறைந்து ஈறுதொக்குப்போன எனநின்றதென்க.

௩௯. கண்ணீர் சோர்தர எனக்கூட்டுக. தூண்பாலாகி - தூணின்றன்மையாகி; எனவே அசைவற்றிருந்து என்பது கருத்தாயிற்று.

௪௰. கொன்-வீண். முன்னம்-எண்ணம். அடுக்கு-அவலம்பற்றிவந்தது.

௪௧. கண்ணறை-கண்ணற்றவனாகிய திருதராட்டிரன்.

௪௨. காலைச்சுடரென்றதனால் அத்திசை வானோன் என்றது இந்திரனை. சூளாமணி-முடிமணி.

ஐந்தாம்போர்ச்சருக்கம்.

—:o:—

௨. விம்ம-ஒலிக்க. மூன்றாமடிக்கு-கரையைச்சிந்துகின்ற திரையானது சிந்துகின்ற நுரை சிந்தப்பெற்றவேகத்தையுடைய கடற்கூட்டம்போலவென்க. சிந்துதல்-சிதறல். அரசன்-ஈண்டுத் தருமராசன்.

௩. விருது-கொடி. அரக்கன் என்றது இராவணனை. இறைவன்என்றது இராமனை.

௪. கொடித்தேர்என்றதில் தகரவொற்று விரித்தலாயிற்று. புரக்கைக்கு நின்றோன்-கிருட்டிணன். இது தற்குறிப்பேற்றவணி.

௫. குறித்தல் ஈண்டு ஊதுதல்.

௭. செம்மல்-சிறந்தோனாகிய வீடுமனென்க. விடை-விடுத்தல்.

௮. பவர்-கொடி. ஈண்டுப்பவளக்கொடியென்க; நெருங்குதலெனினுமாம். தவர்-வில்.

௯. உச்சாசனம்-மேலான ஆக்கினை.

௰௧. ஆரவம் ஆராவம் என விகாரமாயிற்று. ஆரவம்-ஒலி. ஆர் ஆவம் எனப்பிரித்து ஆவம் அம்பறாத்தூணியென்பாருமுளர்.

௰௨. ஈமம்-சுடுகாடு; அது சருவசங்காரமாக்கிய சுடுகாடு என்க

௰௩. பூரிசவா - அணிவகுப்புச் சருக்கம் ௰௯-ஆஞ் செய்யுளுரையிற் காண்க.

௰௪. நளினபதியிளவல்என்றது சாத்தகியை. நளினபதி இலச்குமிநாயகனாகிய கிருட்டிணன். தவம்-தவனெனப்போலியாயிற்று.

௰௫. எண்-வலிவு. கடையடிக்கு - மாறுபாடில்லனவாகிய ஒழுங்குகளை யெடுத்துச்சொல்லும்பொருட்டு ஒரு குறையுமில்லாமற் போயினது அவ்விருவருக்கும் என்க.

௰௬. ஒரு கேடகவுரை தேறினருளமே யென-ஒற்றுமையான சிநேகம் பொருந்தவுரைத்தவுரையைத் தெளிந்தோராகிய சிநேகரிருவருள்ளத்தைப்போலவென்க. சேடகநடவும்-கேட்டை அவ்விடத்திற்செலுத்தும். கேட்டைத் தன்னிடத்தினின்றும் ஓட்டுகின்றவெனினுமாம். முருகு-வாசனை. ஏடு-இதழ். கேடகம்-பரிசை.

௰௭. படி-பூமி. தொடி - வீரவளை. தோல்-கேடகம். வடி-கூர்மை.

௰௯. வாளை-வாளைமீன். குறை என்றது கவந்தங்களை. அலகை-பேய்.

௨௩. வானவர்தமதாலயம் என்றது மேருமலையை.

௨௪. படை-ஆயுதம். செம்புனல்வழி-இரத்தமொழுகுகின்ற வழி. உயிர்காய்வார்-பகைவருயிரைக் கொல்லுவார். “படை செம்புனல் கடலுண்டது கால்வார்” என்பது பாடமாயின் ஆயுதங்களாற் கடல்கொள்வதாகிய இரத்தத்தை யொழுகச்செய்வாரென்க.

௨௫. முதலடிக்கு-இராவென்ற கருநிறம் பொருந்திய நஞ்சினையும், இளம்பிறையாகிய பல்லினையுமுடைய ஒரு பாம்பென்க. என்ற என்னும் பெயரெச்ச வீறுதொக்கது. உரம்-வலி. உம்-அசை. குடதிசை-மேற்றிசை. உரவுக்குடதிசையென்பது சந்தநோக்கி மெலித்தலாயிற்று எனினுமாம்.

ஆறாம்போர்ச்சருக்கம்.

—:o:—

௧. பாக்கியம் செய்ததென் - செய்யப்பட்டதாகிய புண்ணியம் யாது; அதனைக்கூறுவாயாயின்யானுமவ்வாறுசெய்துய்வேனென்பது குறிப்பெச்சமாக வருவித்துரைக்க.

ங. மகரவியூகம்- சுறாமீன் வடிவமாக வகுக்கப்படும் படைவகுப்பு.

ச. போகம்-இன்பம். புனிதன்-சுத்தனாகிய வீடுமனென்க.

ரு. சனம்-கூட்டம். கிரிஞ்சவியூகம்-அன்றிற்பறவை வடிவமாக வகுக்கப்படும் படைவகுப்பு. கிரௌஞ்சம் - கிரிஞ்சம் எனத்திரிந்து நின்றதென்பர்.

சு. அரவு என்றது ஆதிசேடனை. ஒட்டினார்-உடன்பட்டார்.

அ. சிலைவரம்-மேலான வில்வித்தையென்க. உதையினான்-செலுத்தினான்.

கூ. சூழி-முகபடாம். துளைத்த என்னும் பெயரெச்சவீறு தொக்கதென்க.

ம. தொல்லைவெங்கரியென-முன் நான்காம்போரிலெடுத்தெறிந்த வெவ்வியயானைகளைப்போலவென்க. மடுத்து-ஈண்டு எற்றியென்க. அம்புவியெல்லை எனமாற்றுக. எற்றினான்-அடித்தான்.

மக. பாந்தள்-பாம்பு. அல்லி-அகவிதழ். தெரியல்-மாலை. அங்கையினெல்லியங்கனியினிநேரலாருயிரென - இனிப்பகைவருயிர் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத்(தப்பாது கைவசமாகு) மென்று; புறப்பொருள்வெண்பாமாலை, கரந்தைப்படலம், மஙு-ஆஞ்செய்யுளில் உள்ளங்கை நெல்லிக்கனியையெடுத்துக் கூறுதல்காண்க.

மங. எதிரூன்றினான் - போர்க்கு எதிர்த்து நின்றான். மைத்துனர் என்றது பாஞ்சாலரை.

மச. கொக்கரித்தல்-கர்ச்சித்தல்.

மசு. சிரம் - நெடுங்காலம். வில்லுதையினான்-வில்லினின்றுஞ் செலுத்தினான்.

மகூ. விகன்னன் - துரியோதனனற்றம்பியரிலொருவன்.

உம. சித்திரசேனன் - துரியோதனனற்றம்பியரிலொருவன்.

உக. மைத்துனன் - ஈண்டுச் சயத்திரதன். செற்றல்-நெருங்கல். பொருகிற்றினார்-பொருதார்.

உங. இன்னர்-இத்தன்மையுடையார்.

உச. விஞ்சுதல் - மிகுதல். இந்துவரவெழுசிந்துவென - சந்திரன்றோன்றப்பொங்கியெழுகின்ற கடலைப்போல.

உரு. கோடு - கொம்பு. முதலொடு-அடியோடு. கஞ்சன்வரவிடுகளிறு - குவலயாபீடமென்னும் யானை. ஓடைமா-நெற்றிப்பட்டத்தையுடைய யானை. முதலைவாயின் வலியழிந்த யானை கஜேந்திரன். நீலகிரி என்றது உருவகம். வலிபடல்-இழுக்கப்படுதலுமாம்.

உசு. மாலுமதகடசாலும் - மயக்கஞ்செய்யும் மதநீரையுடைய கடமாகிய சாலும். கடம்-யானைக்கதுப்பு. சால் - நீர்வைக்குமொருவகைப்பாத்திரம். கடசால் என்றது உருவகம். தும்பிமா - யானை, ஒருபொருட்பன்மொழி. போர்வை புரியதள்-போர்த்தல்செய்யப்பட்ட (யானைத்) தோல்.

உஎ. அற்று விழுவனவாகிய இபமுகத்தையென்க. இபம்-யானை. படைகொடு-ஆயுதத்தைக் கைக்கொண்டு. பூசல்-போர். சோனை-விடாமழை. மழை - குளிர்ச்சி. வாகம்-வாகனம். முதல்வன்-ஈண்டு விநாயகர்.

உஅ. அமர் அமையுமென முதல் இமயமனுகினனெனக்கூட்டுக. அணிதல்-அணிவகுத்தல். சிமையம்-மலை, ஈண்டு உதயகிரியென்க.

ஏழாம்போர்ச்சருக்கம்.

—:o:—

க. ஆடுதல்-விளையாடுதல்.

உ. மாசுணவியூகம் - சர்ப்பத்தின்வடிவமாக வகுக்கப்பட்ட படைவகுப்பு. சகடவியூகம்-வண்டிச்சக்கரவடிவமாக வகுக்கப்பட்டபடைவகுப்பு. வடநூலில் வீடுமன் மண்டலவியூகம் வகுத்ததாகக் கூறியிருக்கின்றது.

ங. அந்தணன் என்றது துரோணாசாரியனை. புறம்என்பதனைக் கண்டு என்பதனோடும், இடான் என்பதனோடுங் கூட்டி மத்திமதீபமாகக்கொள்க.

ச. பின்பிறந்தவன் - சாத்தகி. நின்றிலன்-ஓடினான். சுதாயு-இவன் வருணன் புத்திரன்; மசு-ஆம் போர்ச்சருக்கம் ஙரு - ஆஞ்செய்யுளிற்காண்க.

ரு. செயந்தன்-இந்திரன் மகன்; அவன் துணைவன் அருச்சுனனென்க. மீளி - ஈண்டு வலியோனாகிய சிவபிரான்.

சு. கரியின்வந்த தாரகன் - யானைபோல வந்த தாரகாசுரன்; இவன் சூரபன்மனுக்கும் சிங்கமுகனுக்கும் இளையவன்; யானைமுகமுள்ளவனென்றறிக. வலன் - வலாசுரன். இந்திரனும் வலாசுரனும் போர்செய்த கதை

திருவிளையாடற்புராணம் மாணிக்கம் விற்ற படலத்திற்காண்க.

எ. நரன் என்றது அருச்சுனனை. வசு என்றது அஷ்டவசுக்களிலொருவசுவாகிய வீடுமனை. எ-பாணம்.

௰. போரினுல் என மூன்றுவது விரிக்க. இங்கு என்றது மேருவின்றென்பாகத்தை. அப்புறம் என்றது மேருவின் வடபாகத்தை.

எட்டாம்போர்ச்சருக்கம்.

—: o :—

க. பல்பூதமுஞ்சேர்த்த - பலவகையுயிர்களையுஞ் சிருட்டிக்குட்படுத்திய. எப்பான்மையென்னும் வினுவுக்குப் பூபாரந்தீர்த்தற்காகிய கருணைப்பான்மையால் எனவிடைகூறுக.

ௗ. விலோதனப்பணி - சர்ப்பக்கொடி என்க. வடநூலில் ஊர்மியூகமென்முர். ஊர்மி-அலை. ஆதலால், தூசி அலையெனக. சகடயூகம் - எ-ஆம்போர்ச் சருக்கம் இரண்டாங் கவியிற்காண்க.

௩. சூறை-சூருவளி. திளை[illegible]ல்-நெருங்கல். விலங்கலுக்கரசு-மேருமலை.

ரு. வேந்தனுக்கு விண்டலத்திலிடம் பிடிக்கவென்று சரம் ஏவினுனென்றுகூட்டுக.

௬. வினைத்தலை-போரினிடத்தில். வீவு-இறத்தல். ஓவியத்தின்-சித்திரத்தைப்போல. நித்திலம்-முத்து.

௰. உய்ந்தனர்-பிழைத்தனராகி எனவெச்சமாக்குக.

௰௩. கால்-காற்று. கவனம்-கதி. கன்னபாகம்-காதுகளில். மால்வருகலுழி - மிகுதியாகவருகின்ற கலங்கல் நீராகியமதமென்க.

௰ரு. செருந்து-இதழ்.

௰எ. சோனையம்புயலில்- விடாமழையைச் சொரிகின்ற அழகிய மேகத்தைப்போல.

௰௬. பை-படம். பகல்-ஒளி. பைப்பகன் மகுடமைந்தனென்றது இராவானை. அன்று-வேத்திரகீயத்திற் பாண்டவர்தங்கியிருந்த அக்காலத்தில். பகனிளவல் - பகனென்னு மரக்கன் றம்பியாகிய அலம்புதன், அலம்பசன் என்றுஞ்சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

உஉ. கலுழன் - கருடன். எஞ்சுதல்-சுருங்குதல்.

உச. பூஞ்சாயகன் - புட்பபாணத்தையுடையமதன். சாபம்-வில்லாகிய கரும்பு. பொசிந்து-கசிந்து. கண்-கணு.

உ௬. தந்தம் - கொம்பு. தந்தி-யானை. கடையடிக்குச் செயமடையப்படுதலைவிளங்க எழுதப்படுந் தன் கொடிச்சிங்கத்தையொத்தவனென்க; சிதம்-செயமடையப்படுதல் அது சிந்தம் என விரித்தலாயிற்று.

உஅ. திளைத்தல்-நெருங்கல். திகிரிக்கிரி-சக்கரவாளகிரி. உளைத்தல்-ஒலித்தல். கிளைத்தல்-ஈண்டுக்கங்கொள்ளுதல்.

௩௰. கருடத்துசனை தோன்றல் என்பதனை நீக்கி, கனகத்துசனை தோன்றல், எனப்பாடங்கூறுவாருமுளர்.

௩உ. மறம்-வீரம். சீயம்-சிங்கம். மாசுணத்தோன்-அரவக்கொடியோன்.

௩௩. சந்து-தூண். ஏ-அசை. மந்தேகர்-இவர் சூரியன் பகைவராகிய அசுரரென்க.

௩ச. தளவொத்தமூரற்றலமான் - முல்லையரும்பினையொத்த பற்களையுடையபூமிதேவி.

௩ரு. வாட்டம் - வாட்டென நின்றது; வாடுதல். வேட்டல்-விவாகஞ்செய்தல். வேந்து-ஈண்டுத் தருமராசன். சூட்டு-நுதலணி. அற்று-அத்தன்மைத்து.

௩௬. நீலவாடை - சமுத்திரமாகிய கரிய வஸ்திரமென்க. மன்றல்-விவாகம்.

௩எ. பாடி - பாசறை. பாடு - பெருமை. தென்பாடி-தென்றிசை நகரமாகிய யமபுரமென்க.

௩௬. தாமம்-ஒளி.

ஒன்பதாம்போர்ச்சருக்கம்.

—: o :—

க. பிறவித்தூர்-பிறவிக்கு மூலமாகிய கன்மம். சுமடீர்-அறிவிலீர். சுமடர் என்பதன் விளியென்க. ஆறுபேதசமயம்-இங்கே கபிலமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், கணு

தமதம், ஜைமினிமதம், வியாசமதம் என வேதாந்தமதம் ஆறென்பர்; வேறுங்கூறுவர். இவற்றுள்ளே முன்னிரண்டும் யோகமும், இடையிரண்டுந் தருக்கநியாயமும், ஐந்தாவது தருமஞானங்களையும், ஆறுவது அத்துவிதத்தையும்விளக்குமென்பர். அக்ஷபாதமுனிக்குக் கௌதமமுனியெனப்பெயருமுண்டு. ஜைமினிமுனிசெய்த நூல்மீமாஞ்சையென்பர். ஈருறுநாமம் - கேசவன்முதலாயின வென்க. வாசுதேவனைப்படைத்துணையழைத்த சருக்கம் ௨ம்-ஆங்கவியுரையிற் காண்க.

௨. பகலிற்பிற்பாதியிற் கொடாமையினாற் கன்னனைப் பின்போதில் வண்மையொழிவான் என்றான்.

௩. என்னிளையோர்கள் எனப்பிரித்துரைக்க. கந்தவகன்-காற்று. புகல்கிற்பது-சொல்வது. அனிக்கோ-ஈண்டு வீடுமன். நினையார் பகைவர்.

௪. வெய்து-விரைவு. உந்தை தந்தை-உன் பிதாவின்றந்தையாகிய வீடுமன். அவர் என்றது பாண்டவரை.

௫. புற்கவ்வுமாகில் - வீடுமன் புல்லைக் கவ்வுவனாஞல். கவ்வை-பழிச்சொல். சிற்கவ்வை-சிலதுன்பம்.

௬. எச்சாபம்- எவ்வகைவிற்களுமென்க. யூகமான விரதம்-படைவகுப்பாகிய இரதம் எனவுருவகமாக்குக. அச்சாணி-அச்சினுனியின்கணிடுகின்ற ஆணி. "உருவுகண்டெள்ளு" முதற்குறிப்புடைய திருக்குறளுரையிற்காண்க.

௭. குறித்தல் - ஈண்டு வரைதல். பூகம்பமாக-பூமி நடுங்க. சருப்பதோபத்திர யூகம்-நாற்றிசையினும் எங்குநின்று பார்க்கினும் ஒரேவிதமாகக் காணும்படி வகுக்கப்படும் படைவகுப்பு. சருப்பதோபத்திரம் என்னுஞ் சித்திரகவியின் வடிவைத் தண்டியலங்காரத்திற்காண்க.

௰௧. நிருதன் என்றது அலம்புதனை. மதலை என்றதிராவானை. எண்மர் எழுவோர் என்றது துரியோதனன்றம்பியரை.

௰௨. முற்றுள்ள-முன்சென்றுதுள்ள. பூழி-புழுதி. செற்று-கோபித்து.

௰௩. பற்பராகமுடி - மாணிக்கமணிமுடி. மதாணி-மார்பிற்பதக்கம். தொங்கல்-ஆரம். பைம்பற்பராகமலர்வல்லி-அழகிய செந்தாமரைமலரிலிருக்குங்கொடியாகிய இலக்குமி. இதில் ராகம் சிவப்பு. வெம்பற்பராகவரையூகம்-விருப்பமுள்ள மாணிக்கங்களையுடைய பருவதவடிவமாக வகுக்கப்பட்டபடைவகுப்பு. அது அசலவியூகமென்க. இவ்வாறன்றி, (வீரர்) இச்சைகொள்ளத்தக்க பத்மவடிவமாய் வகுக்கப்பட்ட வெய்யயூகமென்பாருமுளர்; இப்பொருட்கு வரைதல்கொள்ளுதலாம். அம்பற்பராகபதி - அழகிய தாமரைக்கிச்சையுள்ள நாயகனாகியசூரியன்.

௰௬. மீளிமை - வீரத்தன்மை; திருவானைக்காப்புராணம்நகரச்சிறப்பு ௩௫-ஆஞ்செய்யுளிற்காண்க.

௰௭. உற்றுழியும்- துன்பமுற்றவிடத்தும். உளனாகி - கையையுடையவனாகியென்க.

௰௯. பேது-மயக்கம். புணை என்றதற்குப் போர்க்கடலைக் கடக்குந் தெப்பம் எனவுரைக்க. உம்-அசை.

௨௨. அந்தரம்-இடம்; சூடாமணிநிகண்டு பதினொராவதிற்காண்க. அந்தரநெறி - ஆகாயமார்க்கம். கந்தரம்-குகை.

௨௩. பொறி-அறிவு. பகழி-பாணம்.

௨௪. (வீமன்) விட்டானென்க.

௨௬. முதலடிக்கு அறுநூறாயிரமரக்கரென்க. படிதல்-அமைதல்.

௨௭ சொற்பகலிலான்-சொல்வேறுபடுதலில்லாதவனாகிய தருமராசன். அற்பகலிலாவுலகு-இரவும்பகலுமில்லாத தேவவுலகம்.

௩௧. கலி-ஒலி, செருக்குமாம். புறநானூறு ௩௬-ஆங்கவியுரையிற்காண்க. மதுகை-வலி. கால்-காற்று.

௩௪. தவனன் - சூரியன். பவனனைதயத்தேர்-காற்றைப்போல (வேகத்தோடு) வந்து தோற்றஞ்செய்யுந்தேரென்க.

௩௭. பண்ணுதல்-அலங்கரித்தல். மன்-நிலை.

௩௮. தேரோன் என்றது சூரியனை. நாடோறுந்தேரேறிச் செல்லுதலாற்றேரோனென்றார். புணரி-கடல். அந்தோ-இரக்கச்சொல்.

௩௯. திலம்-எள். மச்சத்தவனிபர்- மச்சநாட்டரசர். இவன் என்றது வீடுமனை.

௪௧. உணர்த்துதல்-நீக்குதல்.

பத்தாம்போர்ச்சருக்கம்.

—:o:—

௧. தந்தை என்றது இரணியனை. நலிவு-வருத்தம். நாலிரண்டெழுத்து - ஓம் நமோநாராயணாய. கலியன் என்றது திருமங்கையாழ்வாரை. மங்கை-திருமங்கை நகர்.

௩. ஆகவத்துளணிய-யுத்தகளத்திலணி வகுக்க.

௫. முனைந்து-பொருது. முடித்தும் - முடிப்போம் ; தன்மைப் பன்மை.

௭. வானுலாம்யானம் என்றது தேவவிமானத்தை.

௮. ஆன் நான்கும் மூன்றுமுருபு. வாரிதம்-மேகம். இது எதுவுவமை.

௰. பொருள் என்றது பகவற்கீதையிற் கூறிய அத்துவிதப்பொருளை.

௰௧. தேவவிரதன்-வீடுமன்.

௰௨. பனித்து - நடுங்கி. மாழ்கி-மயங்கி. அம்புசாதம்-தாமரை.

௰௩. நிமித்தம் - குறி. மித்திரர்-சிநேகர்.

௰௬. மருத்து-காற்று. பூழி-புழுதி. உருத்து-கோபித்து. உருமின்-இடியால். உட்குதல்-அஞ்சல்.

௰௭. முனைவாய்-யுத்தஞ்செய்யுமிடம். அம்புதம்-மேகம். அனிலம்-காற்று. செம்பியன்-சோழன். மாமன் என்றது சகுனியை. சயிந்தர் என்றது சயித்திரதனையொழிந்த சிந்துதேசத்தரசரை.

௨௰. பணை-கொம்பு. வஞ்சினம்-சபதம்.

௨௩. பருமம்-பருமை, முதுகணியுமாம்.

௨௪. எழுவரென்றது வசுக்களெழுவரை. எண்ணுதல்-கருதுதல்.

௨௭. சோமகர் என்றது துருபதனையொழிந்த பாஞ்சாலதேசமன்னரை. மச்சர்-விராடதேசத்தார். சிஞ்சியர்-ஒருதேசத்தவர். மருகணை-எய்யுந்தொழில் மருவுகின்ற பாணம். அப்பொருட்டாதல் புறநானூற்றுரையிற் காண்க.

௨௮-முரண்-போர். சந்தனம்-தேர். கோலினன்-வளைத்தான்.

௨௯. ஓதம்-கடல். மாதிரம்-திசை. பொதுளி-நெருங்கி. அருணம் - சிவப்பு. சமம்-போர்.

௩௰. தூரியம்-வாத்தியம். மண்டலம்-ஈண்டுக்கூட்டம். தலையாக - முதன்மையாக. அன்றுமின்றுகொலெனா - அக்காலமுமிப்போதுதானோவென்று சொல்ல.

௩௧. எதிர் என்றது சிகண்டியை.

௩௨. தேர்வாகம் - தேராகிய வாகனம்.

௩௩. கூனல்-வளைவு. கோலி-வளைத்து. வேனிலம்பு-மதனம்பென்க. மேனி - வீடுமன் மேனி.

௩௪. சாளரம்-பலகணி. இந்துமுகசாயகம்-பிறைவாயம்பு. மைந்தனன்று-புருடனன்று. சிகண்டி-அலி.

௩௫. பொன்றல்-பொன்றற்க. கோமடங்கல்-இராசசிங்கமாகிய துரியோதனன்.

௩௬. கோடு-சங்கு. பவளநாதம். இருட்டினனது பவளமாகிய வாயொலியென்க. முன்புநின்றநிலை-யோகநிலையென்க.

௩௭. எஞ்சினன்-குறைந்தான். துனைந்து-விரைந்து. அம்பு-நீர்.

௩௮. மாகம்-ஆகாயம். வடபாலெய்தல்-உத்தராயணமாகுதல். நாகம்-விண்ணுலகு.

௪௨. என்பவம்-யானெடுத்த பிறப்பு.

௪௩. பஞ்சசயனம்-மயிர், இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத்தூவி இவற்றாலாகிய மெத்தை. பிங்கலநிகண்டிற் சிலவேறுபடக்கூறுவர். வரம் - சந்தனுராசன் கொடுத்தவரமென்க.

௪௫. நோயிலயர்வு- பிணியில்லாத தளர்ச்சி. வீயின்-(தெக்ஷிணயனத்தி)லிறந்தாலென்க. சேயின்-குமரக்கடவுளைப்போன்ற.

௪௬. வருணன் சந்தனுராசனாகப்பிறத்தலால் வருணனை வீடுமனுக்குத் தந்தையென்றார். மன்ற-தெளிவாக ; புறநானூற்றுரையிற் காண்க.

௫௩. பாடு- இறப்பு. தருணம் - இளமை. விசயம்-வெற்றி.

வீட்டுமபருவம் முற்றிற்று.

எழாவது துரோணபருவம்.

பதினொராம்போர்ச்சருக்கம்.

—:o:—

௧. மாயம்-மாயை.

௨. சேதனம்-அறிவு.

௩. கேது-கொடி.

௰௪. சல்லிய குமாரன் என்றது சல்லியனை.

௰௫. மோகரித்து-கர்ச்சித்து.

௰அ. சோமதத்தன்-சந்தனு சகோதரனாகிய பாகிலிகன் மகன்.

உக. வில்லுக்கு விசயன் எனப்பெயர்பெற்றிருத்தலால் விசயனை வில்லியென்றாரென்க. ஐ நன் சிலை-அழகிய நல்ல வில்லென்க. துணிய-துண்டமாக.

உரு. வீ-ஈண்டுப் புட்பபாணம். குழல்-சிகை.

உச. தகைய-தடுக்க.

உஅ. சித்திரபானு-அக்கினி. மித்திரர்-சிநேகர்.

ருஉ. உய-பிழைக்க. கிருதவன்மா-ஹிருதிகன் புத்திரன். ஹிருதிகன் யதுகுலத்தவனாகிய போசன் மகன். வாசுதேவனைப்படைத்துணையழைத்த சருக்கம் ௰அ-ஆங்கவியுரையிலும், அணிவகுப்புச் சருக்கம் ௰கூ-ஆங் கவியுரையிலுங் காண்க.

ருரு. புண்ணியன் -தருமராசன்.

ருஎ. செனு-உற்பத்தி ; ஈண்டுப் பிறப்பிடமென்க. இதற்கு-இலக்கணகுமரனை யகப்படுத்தினதற்கு. அனு - ஒப்பு. செற்றம் - சினம்.

சം௰. திகத்தராசன் - திரிகர்த்தமென்னுந்தேசாதிபதி, சுசர்மாவென்க. சஞ்சத்தகர்-இவர் திரிகர்த்ததேசத்திலிருக்கும் ஒரு பெருங்கூட்டத்தவராகிய வீரரென்க ; இவர் போர்புரிவதன்முன் சபதமிட்டு அவ்வாறே முடிப்பவர்; இவர் அறுபதினாயிரவர். மகத்திற்சனி-மகநக்ஷத்திரத்திற் புக்க சனி மிகத் துன்பஞ்செய்வானென்க ; சுந்தரமூர்த்திநாயனாரும் "மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய்" என்றார். தஞ்சைவாணன் கோவையில், 'அடையார்தமக்கு மகத்திற்சனியன னசந்திரவாணன்" என்றார்.

சக. தகைதல்-தடுத்தல். வெஃகுதல்-விரும்புதல்.

சச. விபுதர்-தேவர்.

சரு. பாளையம்-சேனை.

பன்னிரண்டாம்போர்ச்சருக்கம்.

———:o:———

க. முனி - விசுவாமித்திர முனியென்க. ஆவம்-அபராத்துணி. சாபம்-முன்னது அகலிகைக்குக் கௌதமமுனிவனிடுசாபம், பின்னது மிதிலையிற் சனகன்வைத்திருந்த வில்லென்க.

உ அல்-இரவு. மற்று-அசை. சொற்று-சொல்லி. அராபதம்-வண்டு.

௩. பேரணி-நடுச்சேனை.

௪. நாரணகோபாலர்- நாராயணகோபாலர் பதினாயிரவர் ; இவர் கிருட்டிணனுக்குக்கோவியரிடம் பிறந்தவர். துரியோதனனுக்குத் துணைசெயவந்தவர். அறைகூவல்-பொரவழைத்தல்.

அ. கூளி-பேய்.

கூ. தடி-தசை. தலை-முதன்மை. சவுபலன்-சகுனி. குண்டலன்-ஓரரசன். தடி-வில்லுமாம்.

௰. வயப்பணை-வீரமுரசு.

௰உ. துன்முகன், துன்மருடன்-இவ்விருவரும் துரியோதனன்றம்பியர். கவுசலர்-கோசலநாட்டரசர். நிடதர் - நிடதநாட்டரசர்.

௰ரு. துருபதன் என்றது திட்டத்துய்மனை.

௰ச. சத்தியகேது - காசிராச வம்மிசத்தவன் விபுவின்றந்தை. உத்தமபானு-உத்தமோசா. ஓசம்-ஒளி.

௰கூ. நடுத்தகைவின் வானவர் - நியாயகுணத்தையுடைய தேவர்.

௰எ. சாலம்-கூட்டம். காகளம்-காளம்.

௰அ. மதங்களேழு- சூதுபோர்ச்சருக்கம் எகூ-ஆங் கவியுரையிலறிக.

உக. உளைத்தல்-ஒலித்தல்.

உரு. பதாகை - கொடி. மா-குதிரை. சதாவியிட-பழுதுபட.

உகூ. திட்டத்துய்மனதி மால்பின்னெனதியாக எஃபது பாடமாயின், மால்பின்னன் சாத்தகியென்க.

ருஉ. துரங்கம் - குதிரை. தாரை - ஒழுங்கு.

ருரு. முடியிழந்தகுறையுடம்பு என்றது றைற் கவந்தமென்க.

ருஅ. பெருமன் என்றது கன்னனை. துணிந்து-விற்கள் துணிந்து ; என இசையெச்சமாக வருவித்துரைக்க.

ருகூ. பதிட்டிதம்-நிறுத்தப்பட்டது.

சரு. நொய்து-விரைவு. கழற்றினன்-விலகினன் ; தன்வினை பிறவினையாக நின்றதென்க.

சச. முனிதல்-கோபித்தல். சலதம்-மே

கம். சதமகன் சகாயன்-இந்திரனுக்குச் சகாயனாகிய பகதத்தன்; இவன் ராசதானி பிராக்சோதிஷம் என்பர்.

௩௫. தவளம்-வெள்ளை. வாரணம்-பகதத்தனுடைய சுப்பிரதீகம் என்னும் பெயரையுடைய யானை; ௫௨-ஆங் கவியிற் காண்க. மதனம்-கடைதல். விருது-வெற்றி. ஆழிமிசைச் சுத்தமாகவருமதகளிறு எனக்கூட்டுக; அது ஐராவதமென்க.

௪அ. பொலிவொடு-பொலிவால்.

௪௯. ஒசிதர-துவள.

௫௰. மீள-மீண்டு. நிரை-வரிசை. உதைய-செலுத்த. கதையாற்புடைத்து என மூன்றுவது விரிக்க.

௫௨. மகரிகை-தந்தப்பூண்; ௬௨-ஆங்கவியிற்காண்க. அல-அல்ல, இது பாலிடமெங்கு மியலுமென்க. மருப்புநாலுமுளவெனில்-நான்கு கொம்புமில்லாத குறையொன்றிருக்கின்றது அவையுள வெனில் எனஎடுத்துரைத்துக்கொள்க. இபமெட்டாவன - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீகம் என்பன; இவை முறையே குணதிசைமுதலான வெண்டிசையிலுள்ளன.

௫௫. முனைமடக்க-போர்மழுங்க.

௫௬. முதலடியில் எண்பதினாயிரம் வீரரென்க; சஞ்சத்தகரிற் சிலரும் ஏனைவீரருமாக எண்பதினாயிரவரென்க. முரணற்றதிவண்-இவ்விடத்திற் போர்முடிந்தது.

௫எ. அரி-காற்று. விக்கிரமன்-ஈண்டுப்பராக்கிரமனாகிய பகதத்தன் என்க.

௫௯. மற்கடம்-குரங்கு நுழையூ - நுழைந்து. சிவம்-நன்மை. சவனம்-வேகம். கணைகள்வெட்டி, முடுகி, கொத்தி, நுழையூ, உறுவிக்கவென்க. விசயனென்னும் எழுவாய்க்குப் பயனிலைவருங்கவியிற்காண்க.

௬௰. மாசரம்விட்டு - பெரியபாணங்களை நீக்கி. அயில்-வேல். தமரம்-முழக்கம்.

௬௨. முழை-குகை. விசிறுதல்-வீசுதல். மகரிகைப்பணி- தந்தப்பூணாகிய ஆபரணம். பணை-கொம்பு. படுவித்த-இறத்தலைச் செய்தன.

௬௩. சக்கரதரன்-திருமால். உதவினன் அயர்வுற்றவுணர்வினலமெனமனக்கவர்ச்சியில் வந்துற்ற அறிவினலத்தைப்போலவுதவிசெய்தானென்க. அயர்வு - மனக்கவர்ச்சியென்பதனைப் புறநானூற்றுரையிற்காண்க.

௬௪. பருமித்தல் - அலங்கரித்தல். மருமம்-மார்பு. நிருமித்தல்-நியமித்தல். உயிர்கள் செய்வினைக்குத்தக்க பயன்றருமுதல்வனென்பார் கருமத்தின் முதலென்றார்.

௬௬. ரசதகிரி - வெள்ளிமலை. கரிதத்த-அப்பகதத்தன் வெள்ளையானை தாவிவிழ என்க.

௬அ. விருது-வெற்றி; விருது எடுத்துக்கூறுவாரை விருதென்றது ஆகுபெயர்.

எ௰. சஞ்சத்தகர் - பதினோராம்போர்ச்சருக்கம் ௪௰-ஆஞ்செய்யுளுரையிற்காண்க. விஞ்சைக்கடவுள் சிகரம்-வித்தியாதரருடைய வெள்ளிமலையென்க; இவர்மலை வெள்ளிமலையென்பதனை வேத்திரகீயச்சருக்கம் ௬௨-ஆங்கவியிற்காண்க.

எக. புங்கம்-பாணம். மதுகை-வலி.

எ௨. பின்னிட்டவர்க்குமுன்னிட்டான்-புறங்காட்டியோடினவர்களுக்குத் தான்முந்தியோடினனென்க.

எ௫. சரபம்-எண்காற்புள்; இது சிங்கத்தை வெல்வது. சக்கரபாணி-திருமால். பாறின-நீங்கின. ஒ-எதிர்மறை.

எஎ. ஆயோதனம்-போர்.

எஅ. விதித்தான்-பிரமன்.

எ௯. கோலாகலம்-பேரொலி.

அ௰. மலைந்து-பொருது. திளைத்தல்-அசைத்தல்; புறப்பொருள் வெண்பாமாலையுரையிற்காண்க.

அக. பரிபவம்-அவமானம்.

அ௨. அஞ்சிப்புறந்தந்து எனமாற்றிக்கூட்டுக. அஞ்சி என்பதற்கு தன்றூரகமுமிவ்வாறுமோ என்றஞ்சி எனவுரைக்க. துரகம்-குதிரை.

அ௩. இரங்கா, அழா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

அ௪. ஏ-வினா. நிலையானது என்பது நிலையாகவில்லை என்பதுணர நின்ற குறிப்புரையென்க.

அ௬. ஓரஞ்சொல்லுவது- ஒருபக்ஷமாகப் பேசுவது.

அஎ. எனைப்போல வில்லாண்மையாவர்க்குமின்றுஎன்று வஞ்சினஞ் சொல்லாமல் எனக்கூட்டுக. வம்மின்கள்-வாருங்கள்.

அ௯. சாதித்தல்- தொடங்கியதைச்சோர்வின்றி நிறைவேற்றல். சாதித்ததும் எவ்வாறிருந்தது எனவருவித்துரைத்துக்கொள்க.

௯௰. விந்தைகிரிகன்னி -கிரி-மலை. விந்தைகன்னி என்பன துர்க்கைக்குப் பெயர்கள்; விந்தியமலையிருத்தல் பற்றித் துர்க்கை

க்கு விந்தியவாஸினியென்றும் ஒருபெயருண்டு என்றார்; மணிமேகலையுரையிற்காண்க. சாி-சாக்ஷி. தன்மைக்குநிலையான - குணத்திற்கிடமாகிய.

கூக. வாய்மை-சொல்.

கூ௨. மகதத்தர்-மகததேசத்தார். காந்தாரபதி மைந்தர் சுகூ-ஆங்கவியிற்காண்க. தனுவேதி-வில்லாயுதத்தையுடையவனாகிய விசயனென்க. சுகதத்தமுற-தந்தமக்குச்சுகமுற சுகம் என்பது சுகஎனவும், தம்தம் என்பது தத்தம் எனவும் விகாரமாயின. பகதத்தனுந்துள்ளி எனத்திருத்தியுரைக்க.

கூ௩. தேவராய்-(போரிலிறந்து வீரசுவர்க்கம் புகுகின்ற) தேவராகி. ஏக-அப்பாற்செல்ல. ஆடி-கண்ணாடி. மாணிக்கவணியாழிபோல் என்பது பாடமாயின் ஆழிசக்கரமென்க.

பதின்மூன்றாம்போர்ச்சருக்கம்.

—:o:—

க. சங்கை-எண். யமபடர் - யமனேவல் செய்பவராகிய தூதர்.

௨. வியாளம்-பாம்பு. விஞ்ச-மிக. அவர் என்றது தருமன் முதலோரை.

௩. செயத்திரதன்சிரமா இலக்கணமைந்தன் முதலான காவலர் பற்பலரும் பேரணிநின்றன எனக்கூட்டுக. சிரமா-தலைமையாக. ஆச என்பது ஆவெனக்குறைந்துநின்றது. பேரணி-நடுச்சேனை.

௪. அக்கரம்-அழியாப்பொருள், இவ்வாறன்றி பஞ்சாக்கரம், அஷ்டாக்கரம் முதலியமந்திர அக்ஷரங்களென்பாருமுளர். ஆசுரர்-அசுரரென்க. எயில்-மதில். சக்கரயூகம்-சக்கரவடிவமாக வகுக்கப்படும் படை வகுப்பு. ௰௬-ஆம் போரில் நேமியூகமென்பது மிதுவே.

௫. துப்பு-வலி.

௬. ஒரிருநாலுடையையிருபூமி-பதினெண்பூமி; அவை - நச்சுப்பொய்கைச்சருக்கம் ௰-ஆங் கவியுரையிற்காண்க. மானவரூதினி-மானத்தையுடைய சேனை.

௯. மல்லிகல்- இருசொல்லும் வலியைக்குறித்தது. கால்-காற்று. தாரை-வழி. கை-செயல்.

௰௧. உற்பலவாளி - நீலோற்பலத்தைப்போன்ற பாணம்; மதன் பாணமாகிய உற்பலம்போன்ற வடிவமும், தப்பாதுகொல்லுந் தொழிலுமுடைமையால் உற்பலவாளியென்றுரென்பர்.

௰௨. உந்திகள்-தேருருள்கள்.

௰௩. கோலொடு-கோலால். ஒடுகருவிப்பொருட்டு. கால்-தேருருள்.

௰௪. மன்குலவாதி-இராசகுலத்தின் முதன்மையுற்றவராகிய விசுவாமித்திரமுனி. அந்தணனும் பெருமுனி-பரசுராம முனியென்க. ஒருமுனி என்றது அகத்தியமுனியை.

௰௬. முகமன்-உபசாரம்.

௨௧. கழல்-வீரகண்டை; அதுவீரத்திற்கும் வெற்றிக்குங் கட்டப்படுவது என்றார் புறநானூற்றுரையில். கழலின்மீது-(வலக்)காலின்மேலென்க.

௨௨. கனம் - மேகம். தூரியம்-வாத்தியம். கைவர - பக்கத்தில்வர. தினஞ்செய்நாதன்-சூரியன்.

௨௩. கோதை-கைத்தோற்கட்டி.

௨௪. மாதுலன்-மாமன். வச்சிரத்தவனுமைசெய் - ஆதியிற்சக்கரயூகம் வகுத்தவன் இந்திரனென்பர்; ஆதலால் வச்சிரத்தவனுமைசெய் சக்கரமாறிலாவணியென்றார்போலும். பாற-நீங்க.

௨௬. சகுனி திருமகன்-சகுனி புத்திரர்களில் மூத்தவனாகிய உலூகன் என்க.

௩௰. துன்முகன்- துரியோதனன்றம்பியரிலொருவன்.

௩௭. நேமி-சக்கரயூகமென்க. வலீமுகங்கள் என்பதுபாடமாயின், வலிமுகம் - குரங்கு, விகாரமாயிற்று. தன்முகம் இயல்பாயிருந்ததேனும் நரர்முகச் செவ்விக்குமாறுபட்டிருத்தலால் வலிமுகமெனப் பெயராயிற்றென்றார் நன்னூல் விருத்தியுரையில்.

௩௮. விண்டு-மலை. கண்ணினன் என்றது துரியோதனனை.

௩௯. நபம்-ஆகாயம். உபரி-மேல். அடைய-எல்லாம். விபினம் - காடு.

௪௰. விந்து-விந்துராசனென்னும் ஓரரசனென்பர். பூரி-சோமதத்தன் மகன்.

௪௫. அபரிமிதம்-அளவின்மை.

௫௰. முடிதும்-நாமுமிறப்போம்.

௫௧. பரிசன குமாரன்-வீமன்.

௫௩. விரகு-சண்டிக்கபடம்.

௫௭. தன்மகன் என்றது இலக்கணகும

ரனை. கொன்றெழிய-கொன்றொழிய.

௬௨. மொய்-திரட்சி. மெய்சனைய-சரீர னைய.

௬௯. உற்கை-தீக்கொள்ளி.

௭௨. வன்மிகம்-புற்று. முடி-கிரீடம்.

௭௩. உருமித்திரன் - இவன் சல்லியன் முதற்புத்திரன்.

௭௭. மாவிரதர்-மகாரதவீரர்.

௭௮. கெட்டவர்கள்-காணாதுபோனவர்களென்க.

௭௯. முன்பு-வலி. வெறி-மணம். கற்சக்கரமாக நடுவூர்-சக்கரவாளகிரிக்குள் ஆகாயநடுவிலூர்கின்ற.

௮௰. சடாதுங்கமௌலி - உயர்ச்சியையுடைய சடாமுடியென்க. புரசூதனன்-திரிபுரத்தையழித்தவன்.

௮௩. பின் என்றது முதுகை.

௮௪. பணைமுழவுறழ்திணிபுயன் - பருத்தமுழவையொத்த திணிந்தபுயத்தையுடையவன்.

௮௫. முத்திருக்குமிடத்திற்குக்கண்ணென்னும்பெயருண்மையாலீண்டு விழியென்றார். வெளிமுகடு-ஆகாயத்தின்மேலாகிய வண்டமுகடு. வீராட்டகாசமாதலின் முகடுடைப்பதோர் நகையென்றார். உளை-பிடர்மயிர்.

௮௬. மொகுமொகுத்தல்-ஒலிக்குறிப்பு ; உபயவோசை.

௮௭. ஞெலிமரம்-தீக்கடைகோல்.

௮௮. பவனன்-காற்று. வடவையின்-வடவாமுகாக்கினியோடு. பவனம்-இடம்.

௮௯. அரணி-தீக்கடைகோல்.

௯௰. முகுடம்-மகுடம்.

௯௪. வகைகளாறு - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன ; இவையுட்பகைகளென்க.

௯௫. உடற்றினார்-பிரயோகித்தார். பொருதாரெனினுமாம்.

௯௭. மனுகுலத்தரசன் என்றது கோசலநாட்டரசனை. கேகயன் - கேகயதேசத்தரசன். மாகதக்குரிசில்-மகததேசத்தரசன்.

௯௮. துலை-ஒப்பு.

௯௯. இனைவரும் - வருந்தலில்லாத என்க. அவன் என்றது சகுனியை. பாலன் முனைவெரீஇ-அபிமனது போர்க்கஞ்சி.

௱௨. தூறினான்-சிதறினான்.

௱௫. உன்னயப்புரவி என்பது பாடமாயின் உன்னயம் நாடுகரந்துறை சருக்கம் ௨௯-ஆங்கவியிற்காண்க. மூரி-பெருமை.

௱௬. பரிசை-கேடகம்.

௱௯. யோதனம்-போர் ; ௰௬-ஆம் போர்ச்சருக்கம் ௬௩-ஆங் கவியிற்காண்க. புரி-முன்னது செய்தல், பின்னது கட்டுதல். வரி-கட்டுதல். ஒல்-ஒலி.

௱௰௩. பேணார்-பகைவர். பெட்ப - மிக. கோள்-வலி, கொலையுமாம். புகர்வாளம்-அழகுடையவாள். புகர் அழகுஎன்பதனைச் சிலப்பதிகாரவுரையிற் காண்க. நாகர்-தேவர்.

௱௰௪. பின்னிரண்டடியில், குபேரன் புத்திரர் மருதமரமாயினகதையை யுணர்க.

௱௰௫ எல்-ஒளி.

௱௰௬. கையற-படைவகுப்பொழிய.

௱௰௮. பசுபதி-உயிர்கட்கு நாயகனாகிய சிவபிரான். உருகெழும் - அச்சம்பொருந்துகின்ற.

௱௰௯. கரகம்-துளி.

௱௨௨. தொடைப்புடைமிடைநடை- துடைகள்மோதுகின்ற நெருங்கிய நடை. பிதிர்-பொடி.

௱௨௪. சரபம்-யானைக்குட்டி.

௱௨௫. சித்திரம்-புலி ; பலவிதவர்ணங்களுடைமையாற் புலிகளுச்சித்திரமெனப் பெயர்கூறுப. கதுவி-பற்றி.

௱௨௭. கழுதினம் - பேய்க்கணம். காணம்-கூத்து. பவுரி-கூத்தின்விகற்பம். எஞ்சியிட்டன-குறைந்தன.

௱௨௮. தெறுதல் - ஈண்டு வருத்துதல். பொறையழிந்துகெட்டு-பொறுக்குஞ் சத்திகெட்டு. அழிந்துகெட்டு என்பது ஒருபொருளிருசொல்லென்க. வெருவு-அச்சம்.

௱௩௰. தரி-தங்கல் ; முதனிலைத் தொழிற்பெயர்.

௱௩௧. செயற்கை-வினை. வேறுவேறு என்பது வெவ்வேறுஎனவந்தது. விரகு-உபாயம். ஆம் என்பன அசைகளென்க ; " பணியுமாமென்றும் பெருமை" என்னுந் திருக்குறளிற்காண்க ; அன்றி முன்னைய நான்கும் ஈற்றயல்கெட்டு நின்ற செய்யுமென்முற்றாகவும், பின்னையவிரண்டில் முன்னது பெயரெச்சமாகவும், பின்னது அசையாகவுங் கூறலுமாம்.

௱௩௨. அந்தோ-இரக்கத்தினையுணர்த்துமொரு குறிப்புச்சொல். கூடகம்-மாயம்.

௱௩௬. ஈரிரண்டுபேர்-துஷ்ட சதுட்டகராகிய துரியோதனன், துச்சாதனன், கன்னன், சகுனியென்க.

ாநஎ. தாள்-முயற்சி.

ாசய. திகிரி என்றது சக்கரயூகத்தை.

ாசஉ. சங்கரார்-பகைவர்.

ாசங. என்னுனை-என்னுடையவனை.

ாசரு. தளம் - சேனை. என்று-சூரியன். அபிமனடுதலைக்குன்றை - அபிமனுலடைப்பட்ட தலைகளாகிய மலையை.

ாசஎ. நிகழ்வது யாவருமுணர்தலால் அதனையொழித்துப் போனது வருவதெல்லாமென்றார்.

ாசஅ. விதித்தலைப்பட்ட-ஊழ்வினைவசத்திலிறந்த. சுதன்-மகன். விளிவேன்-இறப்பேன்.

ாருய. வாளா-சும்மா ; இது பயனின்மையை யுணர்த்துமோரிடைச்சொல்.

ாருஉ. அம்ம-கேள் என்னும்பொருளில் வந்த இடைச்சொல்.

ாருங. ஐயென, ஒய்யென-விரைய ; இவை இடைச்சொற்கள். வேலை-கடல்.

ாருரு. ஆர்த்து - அடித்து. கோடம்-ஆரவாரம். நித்திலம்-முத்து ; ஆகுபெயராய்க் கண்ணீரையுணர்த்தியது.

ாருஎ. உணராதது என்றது உணராது எனநின்றது.

ாருகூ. பாகலம் - யானைநோய் ; இது பத்துவகைப்படும் அவற்றுட் கூடபாகலம் வெளிக்குத்தோன்றாது மறைந்துநின்று விரைவிற்கொல்வது என வடமொழி யானைவைத்தியநூலிலுள்ளதென்பர். கோடிகூட என்று பாடங்கூறிக் கோடியென்பது நீட்டல் விகாரமெனக்கொண்டு வல்லியாலமைந்த மருந்துபொருந்த என்றுரைப்பர். கயம் - யானை.

ாசாக. துக்கரம்-இவ்வடசொற்குச்செய்யவொண்ணாத தெய்வத்தன்மையென்க.

ாசாஅ. கலுழி-கலங்கனீர்.

ாசாகூ. கையற-இறக்க. பந்தனை-பந்தம்.

ாஎக. பரியாமல் - அன்புசெய்யாமல். புந்தி-புத்தி.

ாஎஉ. உம்மை-முற்பிறப்பு. அம்மை-வருபிறப்பு. இம்மை-இப்பிறப்பு. இரங்கல்-இரங்கற்க ; எதிர்மறைவியங்கோள்.

ாஎச. மகப்பரிவு-புத்திரசோகம் ; அன்றே-அப்பொழுதே. வல்-விரைவு.

ாஎரு. ஊடு - எழனுருபென்க. மித்திரர்-சிநேகர். இது வேற்றுப்பொருள்வைப்பணி. சித்திரபானு என அக்கினிக்குப் பெயருண்மையாற் சித்திரவில் என்றாரெனினுமாம். பாநு, வில்-ஒளி. இப்பொருட்கு ஒடு உருபிற்கிடப்பொருள் கூறுக.

ாஎஎ. சுரம்-பாலைநிலம். முளிபாதவம்-காய்ந்தமரம்.

எஎகூ. உடற்று-போர்செய்து.

ாஅக. அபிமனை மாயப்போர் செய்து கொன்றமையாற் செயத்திரதனைப் பாதகனென்றான்.

ாஅச. வினை - வஞ்சம். தினை - சிறுமைக்குக் காட்டுமோரளவென்க. " மனைவியுயிர் வீய நன்மகன் மனைவிகையாற் றினை யளவுமோர்பொழுது சீவித்தவனுவேன்" எனயாழ்ப்பாணத்துப் பிரதியொன்றிற் காணப்பட்டது ; இப்பாடத்திற்கு, மனைவி இறக்கப்பெற்ற ஒருவன் வேறு விவாகஞ்செய்யவேண்டும் ; அன்றேல் வானப்பிரஸ்தஞ் சந்நியாசங்களிலொன்றிற்சேர்தல் வேண்டும் ; இவ்விரண்டுமின்றி மருமகளாலுபசரிக்கச் சீவித்திருத்தல் பாவமென்று தருமசாஸ்திரங்கூறலால், அக்கருத்துப்பற்றிப் பொருள்கூறவேண்டுமென்பர் ; அங்ஙனமாயினும் ; இப்பாடம் சந்தப்போலிவின்றென்க.

ாஅஎ. கடிகை-நாழிகை. துப்பு-வலி. அணிந்திடில்-அணிவகுத்திருந்தால்.

ாஅஅ. எஞ்சில் - (அருச்சுனன் சபதம்) அழிந்தாலென்க.

ாஅகூ. மகுடம் ஈண்டுச் சிரத்தினைக்குறித்தது.

ாகூக. போகி-(ஆதிசேடனாகிய) பாம்பு. உயக்கம்-வாட்டம்.

ாகூங. கன்னல்-சக்கரை.

ாகூரு. இருவருமொருவரேயென்றதனால் அரியுஞ் சிவனுமொன்றென்னும் அபேதசித்தாந்தங் கூறியதென்பர் ; அவ்வாறன்றிக் கிருட்டிணன் உபமன்னியுமகா முனிவர்பாற் சிவதீக்ஷைபெற்றுச் சிவோகம்பாவனையுற்றிருத்தலால் இருவருமொருவரேயெனக்கூறியதென்பர் ; இக்கருத்துக்கியைபப்பின் சிவாகமவுரையிற்சாத்திரனென்றும், மாதவன் சிவனுருவமென்றுணர்ந்தென்றுங் கூறினமைகாண்க என்பர்.

உாங. வயினதேயன்-விநதையின்புத்திரனாகிய கருடன். வச்சிரன்-இந்திரன்.

உாரு. ஆரதர்-அரியவழி.

உாஅ. நந்தி - இவர் சிவகணத்தலைவராயுந் திருவாயில் காப்பவராயுஞ் சனற்குமாரர் முதலோர்க்குச் சகலவேதாகமபுராணமுதலியவற்றை யருளினவருமாயுள்ளவர்.

௨௧௧. இரண்டென - துவிதமென. இருவருந் தம்முளத்துவிதமாய்க் கலந்திருக்கின்றனர் என்றபடியாம்.

௨௧௨. அங்கராகம்-மெய்ப்பூச்சு.

௨௧௬. கூறு-அமிசம். கொள்ளூமே-கொள்ளான் என்க.

௨௧௭. வீரன் என்றது கிருட்டிணனை. பறையறைந்து-செயபேரிகையடித்து என்க.

௨௧௯. கூறை-வஸ்திரம்.

௨௨௰. சகதண்டம்-வடநூன்முடிபு. சகமாகிய அண்டமென்க. நித்தவிபூதி-நித்தியமாகிய செல்வம்.

௨௨௧. மாணுரு-மாட்சிமைதங்கிய வடிவம்; அது தெய்வத்தன்மையென்க. பிரமசாரியை யுணர்த்தும் மாணியென்னுஞ்சொல் மாண்எனா விகாரமாயினதென்பர்.

௨௨௩. பதம்-வைகுண்டமென்க.

௨௨௭. மறம்-பாவம். வயிர்த்தவர் என்றது-விரோதிகளை. வஞ்சனையோவிரகோ-வஞ்சனையாகுமன்றி அறிவாகாது. ஓ-முன்னது அசை பின்னது எதிர்மறை. மறநெறியன்று வயிர்த்தவர்சொல்வது என்பதுபாடமாயின், மறம் வீரமென்க. விறல்-வெற்றி.

௨௩௰. செம்மொழியற்றவன்- நல்வசனமிலனாகியதுரியோதனன். கேண்ம் - கேளும்; இது மகரக்குறுக்கம் வந்தசொல். புத்திரசோகத்தால் நோதகு நெஞ்சினனென்க.

௨௩௪. மகரமோதுங்கயம் என்றது கடலை. மகரம்-சுறுமீன். கயம்-நீர்நிலை. கையறுதல்-இறத்தல்.

௨௩௭. அரசன் என்றது துரியோதனனை. இது புகழ்வதுபோலப் பழித்தலென்க.

௨௩௯. ஈடுபடுத்துவேன்-வலியழிப்பேன்.

௨௪௰. நிசா என்னும் வடசொல் நிசையென வந்ததென்க; இரா.

௨௪௧. அறைகூவி-பொரவழைத்து.

௨௪௩. பதின்மூவாண்டு கழித்துவந்தால் நாடுதருவேனென்றது தவறினதை உரைதப்பினதென்றான்.

௨௪௪. உயர்ந்தோரை அடிகளெனக்கூறுதன் மரபென்க; வாரணாவதச்சருக்கம் ௬௯-ஆங்கவியுரையிற்காண்க.

௨௪௮. ஆளையுமடுகளிறு என்ற விசேடணத்தால் உதவிசெய்தாரையுங் கொலைபுரிவான் என்பது கருத்தாயிற்று. யானை ஆளைக்கொல்லுதலை “யானையறிந்தறிந்தும் பாகனையேகொல்லும்” என நாலடியாரிற்கூறலாற் காண்க. வேளைபுக்கவர்-ஆபத்துற்றவேளையிற் சரண்புகுந்தவர்.

௨௪௯. ஆமளவும் - என்னலாகுமட்டும். முற்றுவ-அடையும் வகைகள்.

௨௫௰. “சொன்னசொற்படி வெல்லலாமென்பது விதிக்குங்கூடுமோ” என்பது நிரைமீட்சிச்சருக்கம் ௮௩-ஆங் கவியிலுங்காண்க.

௨௫௨. கோ-அரசர். கூறல்-கூறற்க. தாவலி. முதனிலைத் தொழிற்பெயருமாம்.

௨௫௩. தென்-குறுக்கல் விகாரமாயிற்று; வண்டு.

௨௫௪. சாற்புயல்-சாற்காலத்திற் பெய்யுமேகம்; சாற்காலமாவது கூதிர்காலமாகிய ஐப்பசி, கார்த்திகை மாசங்கள். தனிதம்-ஈண்டு இடிமுழக்கமென்க. இது மறுபொருளுவமை.

௨௫௭. தூதன்-கடோற்கசன். சேதனர்-அறிவோர்.

பதினான்காம்போர்ச்சருக்கம்.

—:0:—

௧. உரை-புகழ். மகோததியில்-(சிவபிரானாகிய) பெருங்கடலில். மேகத்தைச்குறிக்குங்காற் சிலை-மணிக்கற்கள். அம்பு-நீர். திருமாலைக்குறிக்குங்காற் சிலை-வில். அம்பு - பாணம் என்க. பற்குனப்பொருப்பு-அருச்சுனனாகிய மலை. இது சிலேடையுருவகம்.

௨. சாலை - யாகசாலை. வேலை - கடல். பணை-வாத்தியம்.

௩. ஆடகம்-பொன். பொருப்பு-(மந்தர) மலை. சந்தனம்-தேர். குடைந்து-ஈண்டு நெருங்கியென்க. கைவர-ஒழுங்காகவர. கை ஒழுங்கு எனபதனை மதுரைக்காஞ்சியுரையிற் காண்க.

௪. இராசமண்டலம் - இராச கூட்டம். பேரணியாக-பெரிய அலங்காரமாக.

௬. தூசி-படைமுன்னணி. பேரணி-நடுச்சேனை.

௭. அணிகளைந்தைந்தால் - ஐந்நைந்துவ

குப்பாக வகுக்கப்பட்ட அணிவகுப்பால். ஐவகை வியூகமாகிய-ஐந்துவகை வியூகமாகவகுக்கப்பட்ட. ஐவகையாவன-சூசிகாயூகம், சக்கரயூகம், பத்மயூகம், வியாக்கிரதுண்ட யூகம், சகடயூகம் என்பர்; சூசிகா யூகம்-ஊசிபோல்வது. வியாக்கிரதுண்டயூகம்-புலிமுகம்போல்வது. இவ்வாறன்றிச்சகடம், பதுமம், கர்ப்பம், சூசி, கூடம் என்பர். பார்க்கவன்-சுக்கிராசாரியன். சகடதுண்டத்து-சகடவியூகமுகத்தில். சகடவியூகமாவது-மேற்கூறிய ஐவகையூகத்தில் ஏனைநான்கையுந்தன்னுள்ளடக்கி முதன்மையாயுள்ளதென்க; அச்சகடவியூகம் சதுரங்கசேனைகளை வண்டிச்சக்கரம்போலத் தோன்ற வகுத்து நிறுத்துவதென்பர்.

அ. மந்தணம்-ஈண்டு ஆலோசனை. அணிந்தவிரகு-அணிவகுத்தவுபாயம். உரோடம்-கோபம்.

யு. சாதுரங்கம்-சதுரங்கம். குரம்பு-கரை. உழி-இடம்.

யக. ஈடு-வலி. உடன்று-பொருது.

யரு. பொழுதுசென்றது என்றது குறிப்புரையாக இங்குச்செய்யும் போரைநீக்குக எனக்கூறியாதகக்கொள்க.

யஅ. ஈசன் - சகல ஐசுவரியமுடையவனுகிய சிவபிரான். காம்போசன்-காம்போசதேசத்தரசன்; இவன்பெயர் ஜலசந்தன் என்பர். பாசநாம வணி-முற்கூறிய ஐந்துனுளொன்ருகிய சூசிகாயூகம்; அது சேனையை ஊசிபோலொழுங்காக நிறுத்துவதென்பர். பாசம்-ஊசித்துளை என நிகண்டிற் கூறலால் ஈண்டாகுபெயராய் ஊசியையுணர்த்தியதென்க.

உய. கருதி என்பதனை மேற்கவியில் உரைசெய்தான் என்பதனேடு முடிக்க. விலங்கி-குறுக்கிட்டு. விடதன்-ஓரரசன். சுதக்கணன்-காம்போசராசன் மகனென்பர். அவந்தி-ஒருதேசம்.

உங. இலக்கம்-எண். உலக்கவிட்டு-அழியச்செய்திட்டு. அளக்கர்-கடல். உலம்ப- ஒலிக்க. கலம்-மரக்கலம்.

உச. விதி-தநுர்வேதவிதி. சமம்-போர்.

உரு. விடங்கு - அழகு. விடங்கொள்வாளி - நஞ்சூட்டப்பெற்ற பாணம். மடங்கல் போலிடிக்க எனக்கூட்டுக; மடங்கல் - இடி. இடிக்க-ஒலிக்க.

உசு. புதைந்து-புதைய எனத் திரித்துரைக்க. மண்டலம்புகாமனேர் - மிகுதலுற்ற (புட்ப) பாணங்களையுடைய மன்மதனுக்கொப்பாக.

உஅ. வருணன் மகன் சுதாயு என்க.

உகூ. செறுவில்வித்த-வயலில் விதைத்த.

ஙஉ. மொகரித்து - உக்கிரங்கொண்டு. தூரகாரியாதலால் - (கிருட்டிணன்) மேல்வருங்காரியமறிந்து செய்பவனுதலாலென்க. மாகம்-ஆகாயம்.

ஙங. அடுக்கு உவகைபற்றி வந்ததென்க.

ஙசு. யோனிகள் - பிராணிகள். முதல்-மூலம். செறிந்தவர்- அடைந்தோர்.

ஙஎ. கெதாயு - அழிந்துபோன ஆயுளுடையவன். இது வேற்றுப்பொருள் வைப்பணி.

ஙஅ. ஆயிரம்புயத் தருச்சுனன்-கார்த்தவீரியார்ச்சுனன். ஆழி-(திருமால்) சக்கரம். ஆயிரம்புயத்தவன் என்றது வாணுசுரனை. ஆடல்-வெற்றி. ஆயிரவாகு-ஓரரக்கனென்பர்.

ஙகூ. ஆயிரங்கணன் மைந்தன்-அருச்சுனன். மறை-மந்திரம்.

சய. நின்றது, நின்ற என இறுதி விகாரமாயிற்று. ஒரு தனு-அருச்சுனன் ஒருவில்.

சக. அலி-அலாயுதனுகிய பலராமனென்க. முகம்-முன். அங்குலி-கைவிரல். கால்பொர-நுனிவளைந்து பொருந்த. சிலீமுகம் சிலிமுகம் என நின்றது; பாணம்.

சங. அருச்சுனம் மூன்ருமடியில் சுத்தமென்றும், நான்காமடியில் மருதமரம் என்றுங்கொள்க.

சச. பணிக்குலம் என்றது ஆதிசேடனையும், அஷ்டநாகங்களையும்.

சரு. பரிதி-முன்னது பரிவேடம், பின்னது சூரியன். அருச்சுனனுக்குச் சூரியனையும் வளைந்த வில்லுக்குப் பரிவேடத்தையுமுவமையாக்குக.

சசு. காவணம்-பந்தல்.

சஎ. நவகதி-குரங்கு, வேங்கை, யானை, நாய், ஆடு, சிங்கம், நரி, சரபம், முயல் என்பன; திருவிளையாடற் புராணம் நரிபரியாக்கியபடலம் கூய-ஆங்கவியிற்காண்க. உறையிடுதலாவது உலகிற் பொருள்களை அளவிடுங்கால் ஞாபகத்திற்காக ஒவ்வோர் பெருந்தொகைக்கு ஒன்ருகவைத்திடுமோரிலக்கக்குறிப்பென்க. ஓ-எதிர்மறை. அநேகநாள் என்றது பதின்மூன்றுநாளை.

சஅ. சிலைமணி - வில்லிற்கட்டியிருக்கின்ற ஒலிமணியென்க.

௪௯. அரவுடையான் என்பதற்கு அரவெழுதிய கொடியணுகிய துரியோதனனென்க. ஆயோதனம் - போர்; இது ஆகுபெயராய்ப் போர்க்களத்தையுணர்த்தியது.

௫௰. முருகார் - தேனையுண்கின்ற. பின்னிரண்டடிக்கு - பிராமணர்வேதத்திற்கூறியகாயத்திரி மந்திரத்தைக்கொண்டு காலைமாலையாகிய இரண்டுகாலமும் மும்முறைசையால் விடப்பெறும் அர்க்கியநீரை ஒருமுறை விடப்பெறுந் தானத்தைச் சூரியனடைந்தானென்க. அத்தானம்-உச்சியென்க. இருக்கு-ஆகுபெயர்.

௫௧. நுகம்-நுகத்தடி. உரவாவிடில்-வலிகொள்ளாவிட்டால். மறை வருணச்சரவாய்வர-மந்திரத்தை வருணாஸ்திரத்திற்பொருந்த.

௫௨. கின்னரப்பறவை ஆணும் பெண்ணுமாகக் கூடியேயிருப்பதனாற் கின்னரமிதுனமென்றா; திருவிளையாடற்புராணந் திருமணப்படலத்திற் "கின்னரமிதுனமெனச் செல்வார்" எனக்கூறுமாறுகாண்க.

௫௩. போதா-பெருநாரை. நேமி-சக்கரவாகப்புள். புளினம்-மணற்குன்று.

௫௪. உலம்-திரண்டகல். மாமணி-நீலமணி. வள்-வலி, வளம். விசி-கட்டு.

௫௭. எரியோடியபுரி வெளித்தோற்றத்திற்கு புரியாகக் காணப்பட்டு உள்ளீடின்றியிருக்குமென்க. புரி-ஈண்டு வைக்கோற்புரி.

௫௮. அதிரேகம்-அதிசயம், மிகுதி. துச்சளை-திருதராட்டிரன் மகளென்க. பிதிரேறுதல்-பொடியாயெழுதலென்க.

௬௪. தமர் - தம்மவராகியவுறவினர். என-என்று (விதுரன் நீதி) கூற.

௬௬. அங்கரா-தேவகுருவான வியாழன் றந்தை; அங்கிரஸ் என்பது அங்கரா எனத் திரிவுற்றுவந்ததென்பர். இதிற்கூறிய கவசத்தின் வரலாற்றின் விரிவை முதனூலிற் காண்க.

௭௪. பவுரிவருதல்-ஈண்டு மண்டலமிட்டுவருதலென்க. நிரைமீட்சிச்சருக்கம் ௯௮-ஆங்கவியிற்காண்க.

௭௬. எண்ணிலம் - வலிமையுடைய போர்க்களமென்க.

௭௭. சூறியிட்டனன் - வளைந்திட்டான். சுழல்காற்றுக்குச் சூறையென்னும் பெயருண்மையால் சூறுதல்-வளைதல் என்க.

௮௧. ஆதபத்திரம்-குடை.

௮௨. இராசசூயச் சருக்கம் ௫௮-ஆங்கவியிற் கலிங்கமெழுவிதமெனக் கூறலால் கலிங்கதேசத்தரசர் பலரெனக்கொண்டு ஈண்டுக் கலிங்கர் பலரென்றார். கிருதவன்மனைக் கிருதனென்றார். சேதிதேசத்தரசனை-சேதிவித்தகனென்றும், பூரிசிரவாவைப் பூரியென்றும் கூறினாரென்க.

௮௩. கனபந்தி-மேகவரிசை. ௯௧-ஆங்கவியில் எழுதட்டிரதமெனக் கூறலாற் கனபந்திநிகர்தேரென்றார் என்க. தரணிமண்டலதுரந்தரன்-பூமண்டலமாகிய பாரத்தைத்தாங்குபவனென்பது பொருளாகக் கொள்க.

௮௭. கோமணிக்குரல்-பசுக்களின் கழுத்திற்கட்டிய மணியோசை. 'வலம்புரிவலம்புரியே' என்னும்பாடத்திற்கு வெற்றியைச் செய்கின்ற வலம்புரிச்சங்கென்க.

௮௯. நரகன்-நரகாசுரன்.

௯௰. நூறுபட்ட மகவின்றலைவன் என்றது துரியோதனனை.

௯௧. பெரும்பகழி-ஆறு பத்து, இருபது ஐம்பது ஆகவிட்டென்க. பை-படம்.

௯௩. அம்பரம்-கடல்.

௯௭. கூய்-கூவி; இது செய்தெனெச்சம்.

௱௧. ஆதிக்கேழல்-திருமாலாகிய வராகம்.

௱௨. பரித்தேரன்மிக -சாத்தகிபோரின் மிகுந்துவரலால். நூறு - பகையை அழிக்கின்ற. பன்மகார் ஆயிரவர்-பிள்ளைகள் பல்லாயிரவரும். நூறாயிரவர்-லட்ச யாதவவீரரும். அழிந்தார் - கேடுற்றார். உரிமைபற்றித் தமையன் பிள்ளைகளைச் சாத்தகி பிள்ளைகளாகக்கூறினார். மகார் மகர் என நின்றதென்க; துரியோதனனுக் குதவியாகக் கிருட்டிணன் தனக்குப் பதினாயிரங் கோவியரிடம் பிறந்த பிள்ளைகளாகிய நாராயணகோபாலரையும், பலயாதவவீரரையும், இவர்களுக்குத் தலைவனாகக் கிருதவன்மாவையும் விடுத்தமையால் மேற்கவியிற் கிருதவன்மாவையும், இவ்விரண்டடியில் அவரிருவகையினரையுங் கூறினாரென்க. மன்-மிகுதி. வீரன் - அச்சாத்தகி. மிசை - மேலிருந்து எனவருவித்துரைக்க.

௱௪. ஈட்டம்-கூட்டம். வேட்டம்போன-வேட்டைக்குச்சென்ற.

௱௰௨. பொம்ம-பொலிவாக.

௱௰௪. விலங்கினார்-குறுக்கிட்டவர்.

௱௰௬. முல்லை முதலிய ஐவகையரும்பின் வடிவமாயுள்ள பாணமென்க. பல்லம்-பாணம்.

௱௰௭. இதிற்கூறிய இருவரும், வருங்க

வியிற்கூறிய மூவரும், அதன் பிற்கவியிற்கூறிய முப்பதின்மருந் துரியோதனன்றம்பியரென்க.

௬௰௬. சூரன் மெய்த்துணையாகிய முப்பது குமரர்களெனக் கூட்டுக. சூரன் என்றது துரியோதனனை.

௬௨௰. சடக்கெனவிரைய.

௬௨௪. நாகவிந்தம் - விந்தியமலை. பார்-தேர்ப்பலகை. உருள்-தேர்ச்சக்கரங்கள்.

௬௨௫. அந்தகன்-பிராணிகளுக் கழிவைச்செய்பவனாகிய யமன். கடலூழியும்-கடலுங் கற்பகாலமும்.

௬௨௭. மாசுணம் என்றது ஆதிசேடன் முதலிய பாம்புகளை.

௬௨௮. விஞ்சை-வித்தை. தாரை-ஈண்டுக் கதியென்க. நீபம்-கடம்பு. செந்நீர்-இரத்தம். பூரம்-அவ்விரத்தப்பிரவாகமென்க.

௬௩௰. விடசேனன்-இவன் கன்னன் மகன். அவன் என்றது வீமனை.

௬௩௨. மதுகயிடவரிருவர்-இவ்வசுரர் ஆதியிற்றிருமாலை யெதிர்த்துப் போர்புரிந்திறந்தவர்கள்.

௬௩௫. இரண்டாமடியில், ஒத்தன-பொருந்தின. குருநாடன் என்றது வீமனை. வலியினாற் குருநாடன் காற்றையொத்தனன் என்றும், சினத்தினாற் கதிரவன்றிருமைந்தன் கூற்றையொத்தனன் என்றும், கூட்டுக. பிறப்பிலேதுவக்குளோர் குணங்களுங் கொள்ளாரோ - பிறப்பிலே சம்பந்தமுள்ளவர்கள் (அச்சம்பந்தமுடையார்க்குரிய) குணங்களையுங் கொள்ளமாட்டாரோ கொள்ளுவர் என்க. ஓ-எதிர்மறை. காற்றின் மகன் வீமனாதலாலவன் வலிகொண்டவன் போலானானென்றும், யமன்றம்பி கன்னனாதலாலவன் கோபத்தைக்கொண்டவன் போலானானென்றும்பின்னிரண்டடியின் கருத்து விளங்கியவாறு காண்க. இது வேற்றுப்பொருள்வைப்பணி.

௬௩௬. ஆறல் வெஞ்சமம்-நீதிவழியல்லாத கொடும்போர்.

௬௩௬. தினமுந் தேரிலேறி வருதலுண்மையாற் சூரியனைத் தேரவன் என்றார்; அன்றித் தேர்ப்பாகனென்பாருமுளர். தேர்வாசி பாகன் அங்கமாதலால் அவற்றின்வினையை அங்கியாகிய கன்னன்மேலேற்றி ஒடலுற்றனன் என்பதனோடு முடித்தார்.

௬௪௧. தோமரம்-கைவேல். இசை-உவமவுருபு. கோள்-வலி.

௬௪௪. கொடுவுரைக்கணை-கொடியசாபச் சொற்போன்ற பாணம்.

௬௪௫. என்றான்-என்று கூறினான் வீமனென்க. இதுவேற்றுப்பொருள்வைப்பணி.

௬௪௮. மூரி-வலி. என்ப-அசை.

௬௫௰. சகலம்-துண்டு.

௬௫௧. அன்னை-காந்தாரி. மகுடம் ஆகுபெயராய்த் தலையையுணர்த்தியது. தடிந்தது-அறுத்தது.

௬௫௨. கன்னமறை - மிகுதியாக மோதுகின்ற; கனம் கன்னம்என விகாரமாயிற்று. வென்று-வெற்றிகொண்டு. இகல்மேவு நகமென்க. இகல்-வலி. ஆவி அறவென்க. துரியோதனன்றீச்செயற் குடன்பட்டிருத்தலாற் கன்னனைப் பாவியென்றார்.

௬௫௩. சாதம்-பூதம்.

௬௬௩. பச்சைமுடை-பசியதயிர் நாற்றம். பசுமை ஈண்டுக்குளிர்ச்சியென்க. பாடி-ஆயரூர்.

௬௬௫. அயம்-இரும்பு. இரதம் - இரசகுளிகை. சிவஞானசித்தியார் பதினொராஞ் சூத்திரம் பத்தாங்கவியிற்காண்க. நாள்செய்வான்-சூரியன்.

௬௬௬. சமந்த பஞ்சகம்-இது திரேதாத்துவாபரயுகசந்தியிலே கர்வங்கொண்டிருந்த க்ஷத்திரியரையெல்லாம்பரசுராமமுனி கொன்று அவர் குருதியை ஐந்துதடாகங்களினிறைத்து அதனாற் பிதிர்தர்ப்பணஞ்செய்தது. அதனாற் சமந்தபஞ்சகமடு எனப்பெயராயிற்றென்க; பின்னர் அவ்விடங் குருக்ஷேத்திரமெனப்பெயராயிற்று. உடற்றல்-பொருதல். செயத்திரதன் பிதா விருத்த க்ஷத்திரன்.

௬௭௰. கன்னசவுபலர் - உம்மைத்தொகை. பனைத்தனைப்போழ்து-பனையளவு தூரமான இடமுள்ளபொழுது.

௬௭௧. பேதித்தல் - மாறுபடுதல். பெரியோர் என்றது கிருட்டிணன் முதலாகிய பெரியோர். பேதித்தல் துரியோதனன் கொடுமைக்கு மாறுபடுதலென்க.

௬௭௬. இருடிகேசன்- திருமால்; இந்திரியங்கட்குத் தலைவன் என்பர். அரிநாதம்-சிங்கநாதம்.

௬௭௮. இடிம்பன் மருமகன்-கடோற்கசன். திருமகன் என்றது அக்கடோற்கசன் மகனாகிய அஞ்சனபன்மனை.

௬௮௰. வேகித்து-விரைந்து.

௬௮௧. உரு-அழகு.

௱௮௪. வாள்-ஒளி.

௱௮௫. இராகம்-செம்மை. தகல்-தகுதி.

௱௮௬. அரவெழுந்து - ஆயிரமுடிகளின் மணியொளியுடன் ஆதிசேடனாகிய பாம்பு மேலெழுந்தெதன வருவித்துரைக்க. தீபகாளம்-தீபகலங்கள். தாரை-ஒருவகையூதுகருவி.

௱௮௮. சதானிகன்-இவன் விராடன் மகன். வல்லியம்-புலி. புனை-ஒத்த.

௱௯௧. வாளம்-வட்டம். கோளம்-வட்டம். முருக்கி-அழித்து. தூளம்-துகள்.

௱௯௪. அலாயுதன்-இவன் ஓரரக்கர்பதி; கலப்பையாயுதமாகவுள்ளவன்; என்றுபொருளாம். இருள்கங்குல்-வினைத்தொகை.

௱௯௬. பணைத்து-பூரித்து. வயம் - வலி.

௱௯௭. நிசாச்சரர்-இதிற் சகரவொற்று விரித்தல் விகாரம்.

௱௯௮. அருக்கனை மறைத்தவர் என்றது கிருட்டிணனை. மைத்துனர் - திட்டத்துய்மன் முதலோர். குமரர்-கடோற்கசன்முதலோர். தூர்த்தன் என்பதனைத் துருத்தனென்றார்.

௨௱ ஒச்சல் - எறிதல். இலக்கம் - எண். கோத்திரம்-மலை.

௨௱௧. முதலடி அசுவத்தாமனைக் குறித்தது. கோத்திரி-குலமுடையவன். பரி-அசுவம். சுடர்-பிரகாசம்; தாமமெனினுஞ் சுடரெனினுமொக்கும். பரத்துவாசமுனி மகன் துரோணமுனி, துரோணமுனி மகன் அசுவத்தாமன் என்றறிக. பரத்துவாசன் என்பது பரத்துவசனென விகாரமாயினது. எரித்தலை-எரியைப்போன்ற செம்மயிர் என்க. தலை-ஆகுபெயர்.

௨௱௨. சிலோச்சயம்-மலை. கடகம்-அண்டமுகடு. விபத்து - ஆபத்து. வெருவுதாக்கின-அச்சமிகப்பெற்றன. அமரராகிய ஆத்தியர் என்க; ஆதித்தியர் என்பதனைச் சந்தநோக்கி ஆத்தியரென விகாரமாக்கினர் ஆதித்தியர்-அதிதிமைந்தர்.

௨௱௩. அணுவின் - அணுவைப்போல. மதன்-செருக்கு; னகரம் போலி. ககனம்-ஆகாயம். புடவி-பூமி. துணி - துண்டம். துவக்கு-தோல். பழு-விலாவெலும்பென்க.

௨௱௫. சிலமனித்தர் என்றது இராமலக்குவரை. ஆய்த்திலன்-ஆயினனிலன்; இதில் துச்சாரியை யென்க. இருவருடனெதிர்த்து வென்று சீதையைக்கவராது மாரீசனை விடுத்து வஞ்சித்துக்கவர்ந்தமையால் இவ்வாறுகூறினரென்க. எனைப்பலர் - எத்தன்மையான பலவரக்கரென்க.

௨௱௯. புள்-வண்டு.

௨௧௩. தெறும்-கொல்லும். உந்த-இந்த. உலப்பு-முடிவு. ஒச்சுதல்-எறிதல்.

௨௧௫. இது வேற்றுப்பொருள்வைப்பணி.

௨௧௯. பூத்து - பொலிவுற்று. அகிக்குலம்-ஆதிசேடன் முதலிய நாகங்கள். அகிலமும்-உலகமுழுவதும். அகி முதலியன பாரங்குறைய இளைப்பாறுதலாற் புகழ அகிலமுந் தாங்குகிறவன் எனச்சிறப்பித்து கூறினரென்க. இரண்டாமடியில், உம்மை முன்னது முற்று, பின்னது உயர்வு சிறப்பு. சேத்து-செந்நிறம்; பிங்கலநிகண்டிற்காண்க.

௨௨௰. துனை-விரைவு. விறலோர் என்றது பாண்டவர்முதலோரை. தூரக்க-தூரத்துதலால். ஆசறை - முடிவில். ஆசறு-பகுதி. ஐ தொழிற் பெயர்விகுதி.

௨௨௧. அல்-இரா. நாகராலயம்-மேருகிரி. பிறங்கல்-மலை. இது தற்குறிப்பேற்றவணி. சூரியன் இரவிற்றன் கிரணங்களை அக்கினியில்விடுத்துப் பின்னுதிக்கும்போது வாங்கிக்கொள்கின்றான் என்பது நூல்வழக்கிற்காண்க.

பதினைந்தாம்போர்ச்சருக்கம்.

——: o :——

௧. சித்து-அறிவுடையதாகிய பசு. அசித்து-அறிவிலாததாகிய பாசம். ஈசன் - பதி. தத்துவம் - உண்மைப்பொருள். புரோகிதன் - எந்தக்கருமங்கட்குமுன்வைக்கப்படுபவன். குருகையாதி-திருக்குருகூரிலுதித்த முதல்வராகிய சடகோபர்.

௩. சாபநிலைநாலும் வல்ல எனக்கூட்டுக; வில்விற்சரம் விடுதற்குரிய நிலைநான்குந் தேர்ந்த என்க. நாலுபாகம்-சதுரங்கவகை. சிரங்களா-தலைமையாக. நாலுகூறுசெய்து-தங்கள் சேனையை நான்குபங்கு செய்து.

௪. வாலவீமன்-ஓரரசன்; சூலபாசபாணி என்றது யமனை. ஆலகாலம்-வடசொற்றிரிபு; விடம்.

௬. விஞ்சை - வித்தை. பதினன்கு வித்தை-வாரணாவதச்சருக்கம் ௩௩-ஆங்கவியுரையிற்காண்க.

௮. தன்மருகனென்றது நகுலனை. மாளவன் - மாளவதேசத்தரசனுகிய இந்திரவன்மா. அநந்தசாயியிளவல்-ஆதிசேஷ சயனத்தனுகிய கிருட்டிணனது தம்பி யாகிய சாத்தகி.

௰. அவ்வருதினி என்றது துரியோதனன் சேனையை.

௰௨. உம்பர் - உயர்ச்சி. துருவன்-சுவாயம்பு மனுவின் புத்திரன்; இவன்றவம்புரிந்து சகலகிரகநக்ஷத்திரங்களையுஞ் செலுத்தும்படியாகிய பதவியையடைந்திருப்பவன்.

௰௩. மகம் - யாகம். அத்திரி, குச்சன், வசிட்டன், பிருகு, கௌதமன், காசிபன், அங்கிரா என எழு முனிவர் என்ருர். காஞ்சிப்புராணஞ் சத்ததானப்படலத்தில் ஈண்டு அத்திரியை நீக்கி மரீசியாதியென்ருர்; இவ்வாறன்றி வேறுங்கூறுவர்.

௰௬. தூ-பரிசுத்தம். சோமியம்-ஸௌமியம் என்னும் வடசொல்லின்றிரிபு. சோதிச்சோமியம் - சோதிவடிவாகிய கடவுளையடைதற்குரிய மனவொடுக்கமென்பது கருத்தாகக் கொள்க. யானம்-வாகனம்.

௰௭. நின்றேனென்பது துரோண முனியை. முன்னர் - முதற்போர் தொடங்கும் அக்காலத்தில். வார்த்தை - தன்னைக்கொல்லுமுபாயவசனம். மாடை-பொன். சொற்றவதி-அம்முனிவன் சொன்னசமயம்.

௰௮. கடல்வடிம்பலம்பநின்ற கைதவன்-கடலானது தன்கால்விளிம்பலம்பும்படியாக நின்ற பாண்டியன்; திருவிளையாடற் புராணங் கடல்சுவற வேல்விட்ட படலம் ௰௪-ஆங்கவியில் உக்கிரகுமார பாண்டியன் கடலிலே வேலைவிடுத்தகாலத்தில் அக்கடல் வற்றி அவன் கணைக்காலின் மட்டதானது எனக்கூறுதல் காண்க. வடிம்பு என்றது கால்விளிம்பென்க. புறநானூறு ௯-ஆங்கவியுரையில் "நெடியோன்" என்றதற்கு முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்ருன் என்பது கருத்தாகவுரையிட்டார். மதுரைக் காஞ்சியுரையில் "நெடியோன்" என்றதற்கு வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ருர். நளவெண்பாவில் "ஆழிவடிம்பலம்ப நின்ருனும்" என்ருர். இங்ஙனங் கடல் தன்கால் விளிம்பலம்ப நின்றநிலையினையே பலருங்கூறியிருத்தலாற் கடல் தன் வேலினுனியைக் கழுவநின்றவன் எனப்பொருள்கூறுதல் பொருத்தமின்மையறிக. அரசருள் முன் ஒருவன் பெற்றிருந்தசிறப்பை உரிமைபற்றி அவன் குலத்துண் மற்றொருவனுக்குமேற்றிக்கூறுதல் நூல்களின் மரபென்க. திட்டத்துய்மன் றூரத்திலிருந்தமையாலவன்பாற் சொல்லுமாறு பாண்டியனிடத்திலோதியென்க. அவன்மேலேவி - துரோணமுனிமேற் போர்புரியவேவி. வடு-குற்றம்; பிங்கல நிகண்டிற்காண்க. ஓதி-ஞானமெனினுமாம்.

௰௯. மாளவக்கோனுகிய இந்திரவன்மாவென்க, இவன் யானையின் பெயர் அசுவத்தாமாவென்க.

௨௰. வையினுல்-கூர்மையோடு. சையறல்-சாதல்.

௨௩. வெள்ளில்-விளா. என்ப மாது ஓ-அசைகள்.

௨௪. உம்மை-முற்பிறப்பு. இம்மை-இப்பிறப்பு. இயற்கை - தன்மை. விபத்து-ஆபத்து.

௨௬. போதம் - ஈண்டுத் தத்துவஞான மென்க. நிற்பானுகிய துரோணமுனியென்க. வாய்மை-நேர்மைமிக. அசுவத்தாமா இறந்தமை சிலேடையாகப் பொருள்படக்கூறலாற் பிழையறப் பேசுவாயென்ருர்.

௨௭. அத்தனே - குருவே. விரகு-உபாயம்.

௨௮. போதிலான் - ஆயுட்காலமில்லாதவன். போலும்-அசை. இனைதல்-வருந்துதல். அவாவற்றமையால் இனைதலின்றி நின்ருனென்ருர். ஏதிலான்-அயலான்.

௨௯. நாளம்-தண்டு. முனி என்றது பிரமனை. பினுகபாணியாகிய கிரீசனென்க. பினுகம்-சிவபிரான் வில்லின் பேர். வீரனுகிய திட்டத்துய்மன் என்க. பிரமன் நடுத்தலையைச் சிவபிரான் கிள்ளினற்போல துரோணமுனிவரைத் திட்டத்துய்மன் றுணித்தலால் அவனுக்குச் சிவபிரானை யுவமைகூறினுர் என்க. பிரமன்றலையைக் கிள்ளியகதையைக் காஞ்சிப்புராண முதலியவற்றிற் காண்க.

௩௰. வாசபதி-வடசொற்றிரிபு; வாக்குக்குத் தலைவனுகிய வியாழன். கெட்டது-ஓடிப்போனதென்க. கட்டு-உறுதி.

௩௫. சொல்வளையா-சொல்வழுவாத.

௩௬. தெய்வப்பாகனுகிய மேகமேனியன் என்க. பகடு - யானை. மாருதிமைந்தன்-வீமனுகிய வலியோன்.

௩எ. கார்கோள்-கடல். எற்றரி-ஆண்சிங்கம். குவிந்த கையைக் காமுகுளமென்ருர். முகுளம்-அரும்பு.

௪௰. மூச்சு-வீமன் சுவாசக்காற்றென்க. அப்பெருமன்வாளியென்றது நாராயணுஸ்திரத்தை. படாததுண்டோ-துன்பப்படாதது இல்லை. ஓ-எதிர்மறை.

௪௧. தாள்-முயற்சி. விதி-வினைப்பயன் செய்தவனையேசென்று அடைதற்கேதுவாகிய நீதி. சுராரி-தேவர்கட்குப் பகைவனுகிய வாணுசுரன்; இராவணனுமாம்.

௪௨. மிதியடி-பாதுகை.

௪௪. வரத்தினுல்-(யாகசேனன் பெற்ற) வரத்தினுல்.

௪௫. மன்ற - நிச்சயமாக; தெளிவுபொருடருவதோரிடைச்சொல். செற்றல் - அழித்தல். என்று-சூரியன். இது தற்குறிப்பேற்றவணி.

௪௬. அந்தன்-குருடனுகிய திருதராட்டிரன். யாவும் வினைசெய்து-முன் போர்த்தொழில் யாவுஞ்செய்து. மந்தணம்-ஆலோசனை. புரை-குற்றம்.

௫௰. அரவு என்றது ஆதிசேடனை. முன்னிரண்டடியிலே தற்குறிப்பேற்ற வணிகாண்க.

துரோணபருவம் முற்றிற்று.

எட்டாவது கன்னபருவம்.

பதினாரும்போர்ச்சருக்கம்.

———:o:———

௨. கையற்ருர்-இறந்தார்.

௪. கற்கி-குதிரை.

௫. வேறும்-வெல்வோம். அம்ம-வியப்பிடைச்சொல், அசையுமாம்.

எ. ஆழி-யானைக்கைந்நுனி. புகர்-புள்ளி. மகரிகை-பூண்.

அ. ஓடை-பட்டம். ஆலவட்டம்-விசிறி. தொழில்-சித்திரத்தொழில். உலகினைமேல்கொளுமவனதென-மேலுலகினைக் கொள்ளுபவனுகிய இந்திரனது யானையாகிய அயிராவதத்தைப்போல. அங்குலமொத்து-உத்தமயானைக்குக்கூறிய அங்குலமமைந்து. மத்தகம்-தலை.

௯. வாலதி-வால்.

௰. பாகு-பாகன். பரிக்கோல் - அங்குசமென்க. நடமுதலிய நாலு-நடனம், துரிதகதி, மந்தகதி, ஓட்டமென்க. சேணுயர் - ஒருபொருட் பன்மொழி. போதர-மிக.

௰௧. காசிராசன் பெயர் கேமதூர்த்தி.

௰௨. வெங்கதி - துரிதகதி. நடை-மந்தகதி. அங்கசாரி-போர்க்கங்கமாகிய இடசாரி வலசாரி.

௰௩. ஒன்பதுறுப்பாவன-கால்கள், துதிக்கை, தந்தங்கள், வால், சரீரம். இவ்வாறு பிங்கலநிகண்டிற் கூறுவர். சரீரத்தை நீக்கித்தலையைக்கூறுவாருமுளர். சேடனையும் அமார்கோனையும் கூறவே பூமியிலுள்ளார் வெறுக்கொண்டார் என்பது கூருதேயமைந்ததென்க.

௰௫. கேமதூர்த்தியைக் கேமன் எனக்குறைத்துக் கூறினுரென்க.

௰௬. புரிவிலார்-(போரன்றி வேறொன்றில்) விருப்பமில்லாதவராகியென்க.

௰எ. காயம்-இலக்கு.

௨௰. கணகண-ஒலிக்குறிப்பு. ககனம்-ஆகாயம். விததி-விஸ்தாரம்.

௨௧. சவரம்-சாமரை. அடவி-காடு. முடுகுமிடம் - நெருங்கிய இடம். முழை-குகைபோன்ற மறைவிடம் என்க. இசை-ஒலி.

௨௨. அடல்-பொருதல். உயிர்-சுவாசம். ஒருபடி-ஒருவிதம். இக்கவியிற்கூறிய தொழில்களைக் காற்றிற்குங்கொள்க.

௨௩. அறல்-நீர். உடலாலென மூன்ருவது விரிக்க. பவனசகுலம்-பாம்பின்கூட்டம். பவநாசம் பவநசம் என விகாரமாயிற்று; பவநாசம் வாயுவைப் புசிப்பது. மிடலணி-வலியவரிசைகள். விரிவின்-பரப்பினுல். சலநிதி-சமுத்திரம். விருதர்-ஈண்டுக் காலாள்வீரர்.

௨௪. படு-ஒலிக்கின்ற. கருவி-வாத்தியம். கொடுவெயிர்-வளைந்த ஊதுகொம்பு. அரவவிருது - ஒலியையுடைய வெற்றிச்சின்னம். வளி-காற்று. கனுலி-நெருங்கி.

௨௫. நவகதி - பதினுன்காம்போர்ச் சரு

க்கம் சஎ - ஆங்கவியுரையிற்காண்க. நடலை-நடுக்கம்.

உசு. இரவிதன் மதலையரிருவர் மதலை-சூரிய குமாரராகிய அசுவினி தேவரென்னும் இரட்டையர் குமாரனான நகுலன். வலமிட நிகழ்புரிவு என்றது வலசாரியிடசாரியை.

உஎ. சசை - குதிரைச்சம்மட்டி. குசை-கடிவாளம். தொடைமுதலிய நான்கினுலும் (மேற்கொண்டவர்) உளநினைவறியு முணர்வினவென்க. வளமை-அழகு. விபுதர்குலபதி-தேவேந்திரன்; அவன் பரியின் பெயர் உச்சையிச்சிரவமென்க. பத்துத்திசை - கீழ்த்திசைமுத லெட்டும் மேல்கீழிரண்டுமென்க.

உஅ. எலுவல் - தோழன்; கொடுந்தமிழ்நாட்டினொன்ருகிய சீதநாட்டுச்சொல். எழுமடி-ஏழுமடங்கு.

உகூ. விதரணம்-கொடை. குரம் - குளம்பு. (இரத்தத்தால்) ஒளிதிகழ எனவருவித்துரைக்க.

௩௰. உபரிசரரென - மேலே சஞ்சரிக்கின்ற தேவரைப்போல.

௩க. எயிறு-பல். அயில்-கூர்மை. நனையினர்-நனைந்தவராகி.

௩௨. அல்லி-அகவிதழ். நா-ஆகுபெயராய் வாக்கையுணர்த்தியது; அது விசயனையன்றி மற்றயரைக்கொல்லேனெனக் குந்திபாற்கூறியதென்க. அழியாவில்லின் நாணழியா-கெடாதவில்லின் நாணைக்கெடுத்து.

௩௩. விடதரன்-ஓரரசன்.

௩எ. இருகண்ணர் என்றது கருநிறமுள்ள கிருட்டிணன் அருச்சுனனிருவரை. திருக்கோவையாருரையிற் கண்ணன் என்பது கரியோன் என்னும் பொருளது பாகதச்சிதைவு என்ருர். விடா-விட்டு. விடா என்றதன்பின், அப்பகழியொன்றுஞ் செய்யாமைகண்டு இனிநம்மால் வெல்லமுடியாதெனக்கருதி எம்பதை இசையெச்சமாக வருவித்துரைக்க. பிறிந்திலர்-வேறுபட்டிலர்.

௩அ. காளை என்றது ஸ்ரீராமனை. முதனுட்போரிற்ருேற்ற இராவணனை நாளைவாவெனக்கூறி விடுத்தலால் அவ்விராமனையுவமைகூறினுரென்க. இக்கவி புறப்பொருள் வெண்பாமாலையிற்கூறியவாறு தழிஞ்சிஎன்னுந் துறைப்பாற் பட்டமைகாண்க.

௩கூ. அநுசன் என்றது சாத்தகியை. பணைப்பகடு-கொம்பையுடைய யானை.

ச௰. தீரன் என்றது சாலுவனை. ஆழி-தேருருள். சூரன்-சூரியன். சேரன்-பாண்டவர்சகாயனென்க.

சக. மும்மைத்தமிழ்-இயலிசை நாடகம். தெளிஞர்-தெளிதலுடையாராகிய சங்கத்தார். தமிழ் என்பது இனிமை; அதனையுடைய மொழிக்காகி அம்மொழிகளாலாகிய நூல்கட்காயிற்று. மும்மை-ஈண்டெண்ணினையுணர்த்தியது. பலகையின்வரலாறு திருவிளையாடற்புராணத்திற்காண்க. முனிவரன்புகன்றதைச் சிறப்புப்பாயிரமுதற்கவியுரையிற்காண்க.

சஉ. அனந்தரமான - பின்புதோன்றிய.

ச௫. வாளமொப்பெனமூரிவில்வளையாவெனக்கூட்டுக. மூரி-வலி. வாளம்-சக்கரவாளகிரி. தூளம்-தூளி.

சசு. கைகயன்-கேகயதேசத்தரசன். சுருதகீர்த்தி-இவன் அருச்சுனனுக்குத் திரௌபதியிடத்திற் பிறந்தவன். கெட்டனன்-வலியழிந்தவனுகியென்க.

சஎ. சேனையின் பதியாகிய அங்கிவாய் வருவோனென்க. ஆசிரியனுகிய கிருபன் என்க.

சகூ. காவணம்-பந்தல். உரைபெருகாவணம் - சொல்லுக்கடங்காதபடி என்பது கருத்து. சாமரம் - கவரிகள். அழிந்து - அழிய. சாமரம்-சமரம்; முதனீண்டது.

௫௰. ஓடை-பட்டம். எயினவோடைகள்-நீர்நிலைகளிசைந்தன. முன்புடைவாலதி - வலியுடைய வால். செற்றது-ஈண்டுத்துணித்ததென்க. முகமுழுகுஞ்சரம் வாலைச்செற்றதென்க. மறிந்தன - வீழ்ந்து மடங்கினவென்க.

௫க. விழுதும்பிகள் பட்டன-வீழ்கின்ற வண்டுகளொலித்தன. படுதல் - ஒலித்தல்; மதுரைக் காஞ்சியுரையிற்காண்க. தோட்டி என்பது தொட்டியெனக் குறுகியதென்க. தொட்டி-அம்பாரியென்பாருமுளர். குமண்டைய-(நிறையவுண்ணலால்) தெவிட்டுதலுடைய. உகளித்தன - மகிழ்ச்சியால் குதித்தன.

௫உ. புலாலினவம்பின - மாமிசத்திலுள்ள வாசனையையுடையன; இன்சாரியை. தடிவன-அறுப்பன. மீளவும் - தலைதடிந்தபின்னுமென்க. ஆவனசக்கரம்-ஆச்சரியத்தையுடைய தாமரைப்பூவையொத்த கைகள்.

௫௩. வாளிகள் எண்ணில என்க. உழை-பக்கம். மழைவீழ்வன - மழையையொப்பனவாகிய. வெயில்-ஒளி. சூழெயில்-சூழ்தலாகிய

மதில். சூழ்ந்திருத்தலேயே மதிலென்றுமெ ன்க. எவ்வெயில்-எந்தமதில்.

ருச. மனோவனசம்புகமேயின - இருதய கமலம்புகமூடின. சம்புகமேயின-(அங்குப்) பொருந்தின நரிகள். யாமளவாரணம்-யாம ளவேதம், யாமளை-காளி. சம்புகம்-நரிஎன்ப தை வேத்திரகீயச்சருக்கம் ருங-ஆங்கவியிற் காண்க.

ருரு. பாரிடம்-பூமியிடம், பூதம். பாறு-பருந்தினொருபேதம். அந்தரம் - ஆகாயம். எயிறு-பல். கந்தரம்-கழுத்து.

ருசு. உம்பல் - ஆண்யானை. செம்புனல்-இரத்தம். வீழ்குறைசெய்தனகோடுகள்-வீழ் ந்துகிடக்கின்ற உடற்குறைகள் கரைசெய் தன.

ருஎ. உடல்சாயகம் - உடம்புகள்சாய்ந்து கிடக்கின்ற இடங்கள். இருந்துகள் - பெரிய தூளிகள். மிக்கவிருநதுகள்-(அவ்விடத்தில்) உயர்ந்த விருந்துகள்; விருந்து புதுமை, இது ஆகுபெயராகிவிருந்தினரை யுணர்த்திய தென்க.

ருஅ. சிவந்த கவந்தம் - செந்நீராகிய இர த்தம். கவந்தம்-நீர். கவந்தமலேந்தன-தலையி ல்லாதவுடம்புகள் போர்செய்தன. ஐவகைக் கதி முன்வந்தனவறிக. இவை-இச்சிறப்பாகி ய இவைகளெல்லாம். கோல்-பாணம். கை வாசிகள்-கையின்மிருதிகளேயாமென்க.

ருகூ. தாரை-சிறுசின்னம். ஒற்றை-ஒரு குழற்கருவி. வயிர்-ஊதுகொம்பு. துரங்கமச ங்கமுழக்கின - குதிரைக்கூட்டங்கள் கலக்கி ன. உயிர்ப்பு-உயிர். மெய்ம்முகமேவின-மெ ய்யிடத்தைச் சேர்ந்தன.

சூ௰. போதவிரைந்தன - மிகவொலித்த ன, வருதற்குவிரைவுற்றன. சுரிகை-வாள். துனியில்ரும்புகை-பேருடலில் அதனைத்தீர் க்குமாறு குவிகின்ற கைகள்.

சூக. நகரத்தனவாகிய கடகரி-அம்பொ டு போனகரத்தனவாகி எனமோடொத்த னவென்க. நகரத்தன - நகங்களையுடையன. ரகரம் விரித்தலாயிற்று. எனம்-பன்றி. வாய சம்-காக்கைகள். ஆயசம்-ஈண்டாயுதம். ஆய சம் இரும்பாலாக்கப்பட்டது. அயஸ்-இரு ம்பு.

சூ௨. தேனையென இரண்டாவது விரி க்க. விளைத்தன-உண்டாக்கின. இளைத்தன-தளர்ந்தன. ஆர்பன-உண்பன.

சூங. ஆவம் - அம்பறாத்தூணி. நெஞ்சுக ளாகிய போதகம்-இருதயமாகியகமலப்போ திணிடங்கள். போதகம்-யானைகள். தலையோ தனம் - தலைகளாகியவுணவுகள். நனந்தலை யோதனம்-அகன்றவிடத்தையுடைய போர் க்களச்சிறப்பு. நனந்தலை-அகன்றவிடம் என் பதனை மதுரைக்காஞ்சி புறநானூற்றுரைக ளிற்காண்க. யோதனம்-போர்; அது போர் க்களத்திற்காகிப்பின் போர்க்களச் சிறப்பிற் காதலால் இருமடியாகுபெயர்.

சூச. சேனாபதி-ஈண்டுத் திட்டத்துய்ம ன். சஞ்சத்தகர் - பதினொரம்போர்ச்சருக்க ம் சய - ஆங்கவியுரையிற்காண்க. நாராயண கோபாலர்-இவர் கிருட்டிணனுக்கு கோவிய ரிடம் பிறந்தவர்கள். இவ்விருவகையினரு முன்போர்களிலிறந்தவரொழிய மிஞ்சியவ ரென்க; சூஅ-ஆங்கவியினுங்காண்க.

சூரு. சட்கோணம்-ஆறுகோணம். சத்தி யசேனன்-இவன் கன்னன் புத்திரன். புட் கோ-கருடன். துட்கு-அச்சம். தோமரம்-த ண்டாயுதம்; பதிற்றுப்பத்துரையிற்காண்க முட்கோல் - இருப்புமுட்டைத் திருக்கின்ற கோல். வடம் - குதிரைகளைக்கட்டியிருக்கிற கயிறு. முரண்-வலி.

சூஎ. சித்திரசேனன் - கன்னன் மகன்; இவனுக்கு மந்திரபாலனென்னும் பெயருமு ண்டாதலால் சித்திரசேனனாகிய மந்திரபா லன் என்க.

சூகூ. குறை-கவந்தம். கூடார்-பகைவர்

எக. குருமித்து - ஆரவாரமிட்டு. நிருமி த்து-(தன் சேனையையிவ்வாறிருத்தல்வேண் டுமென்று) நியமித்து.

எ௨. துனை-வேகம். கபோலம்-கன்னம். விகடம்-உன்மத்தம். தனிதம்-ஒலி. தமரம்-ஒலி.

எங. சுலாவி - சுற்றி. சண்டம் - வேகம். சூரன்-சூரியன். முகில்பஞ்சபூதவடிவுபெற-வானங்காற்றுத் தீ நீர் என்னுநான்கின் சம் பந்தமுடைய மேகம் இப்புழுதியடைந்தத னாற் பஞ்சபூத வடிவைப்பெற எனவிரித்து ரைத்துக்கொள்க. வியனதிவண்டலாக-மே லுள்ள ஆகாயகங்கை சேறாக. கழிய-மிக.

எச. பொதுள-நெருங்க.

எரு. நேமி - சக்கரம். விரிதந்த-விரிந்த. முரிதந்த-வளைந்த.

எஎ. சுளிவு-கோபம்.

எஅ. மருமம் - மார்பு. அருமந்ததேர் எ ன்பது அருமருந்தன்ன தேர் என்பதன் மரூ உவென்க. கிடைத்தற்கரிய தேர் என்பார் அருமந்ததேரென்றார். நாணி-வில்லிணண்.

அ௰. பிழைகொண்ட-தன்குறி தப்புதலைக்கொண்ட. தருமராசன் செந்நிறத்தனுதலாலும் பவளமலையையுவமைகூறினரென்க.

அக. ஆசும்-சிறிதும். அமையுமமையும்-போதும்போதும்; இவ்வடுக்கு இகழ்ச்சிகுறித்துநின்றது.

அஉ. அரசாசனி-பகையரசர்க்கு இடியாகியவன். பொடி-புழுதி.

அஎ. நேமி-ஆக்கினையாகிய சக்கரமென்க. தா-வலி.

கூ௰. நா-நாக்கு. வாகை-வெற்றிமாலை. மாகதக்கொங்கர்கோமான்-(சிறிது) மகததேசசம்பந்தமுடைய கொங்குதேசத்தவர்கட்குத்தலைவனென்க. பாகை-வக்கபாகையென்னுமூர். எவ்வளவெடுத்துக்கூறினும் வெறுப்பைத் தாராதினிமையைத் தருவதென்பார் கையாப்புகழென்றார். தெவ்வரோடடக்கண்ணுட்டியமர்பொருதமைவிளங்க வாகையாற்பொலிதிண்டோளானென்றார். பெருங்கொடைக்கையென்பார் செங்கையென்றார்.

பதினேழாம்போர்ச்சருக்கம்.

——:o:——

க. உபநயனத்துக்குமுன் சூத்திரத்துவமும் பின் பிராமணத்துவமுமெய்தலால் ஈரொருபிறப்பென்றார்.

உ. ஒற்றை-ஒரு குழற்கருவி.

ங. கனல-நெருங்க. அண்ணல்-பெருமை. அரசு-என்றது துரியோதனனை.

ரு. காசினித்தேர்-பூமியாகிய ரதம். காணுமாறு என்பதில் இறுதிவிகாரமாயிற்று.

சு. முத்தரும்ப-கண்முத்துப்போலநீர்த்துளியரும்பவென்றும், இதயமுருகவென்றுங்கொள்க.

கூ. நுங்குதல்-விழுங்குதல். நுங்கழல்-எல்லாவற்றையும் விழுங்குகின்ற வக்கினி.

௰. கடவுள்-ஈண்டுத்தெய்வத்தன்மை. முனிவன் என்றது துருவாச முனியை.

௰க. வழங்கிடும்படி-இராவான் கொடுக்கும்படி.

௰உ. குறித்தல்-ஈண்டுேதுதல். மூதாதை-பாட்டனாகிய வீடுமன்.

உ௰. நஞ்சோற்றம்பெற-நஞ்சின் ஆரவாரமடங்க என்க. ஒல்-ஒலி; ௰ங-ஆம்போர்ச்சருக்கம் ௱கூ-ஆங்கவியிற்காண்க. தம்மிடல்-அடங்குதல்.

உஅ. படி-பூமி.

ஙஉ. பார்க்கவன்-சுக்கிரன். வானமணி-சூரியன்.

ஙங. கோவல்-திருக்கோவல் வீரட்டம் என்னுமொரு தலம்; இது பெண்ணைநதிக்கரையிலுள்ளது. பாகை-வக்கபாகையென்க. உலகிலுவமானமாகக் கூறப்பட்டகன்னன்கையை இங்கே உவமேயமாக்கிக் கூறுதலால் இது விபரீதவுவமையணியென்க.

ஙரு. வெயிலவன்-சூரியன். இயமதங்கியாகிய முனி-சமதக்கினிமுனி.

சஉ. உருவுரும்-அச்சந்தருமிடி. காயம்-இலக்கு.

சசு. இராமன்-பலராமன் என்க.

சஅ. கரிமுகக் கடவுள்-விநாயகர்.

சகூ. சாமளம்-பச்சை. சேய்-குமரக்கடவுள். தோயல்-கலப்பு. சூரன்-சூரியன்.

ரு௰. மித்திரர்-நண்பர். குத்திரன்-வஞ்சகன். மறை-மந்திரம்.

ருங. முகம்புகுந்து-நோக்கிற்கெதிர்புகுந்து.

ருஎ. துரோணசூதனன்-துரோணாசாரியனைக் கொன்றவனாகிய திட்டத்துய்மன். கை-இடைச்சொல், வரிசையுமாம்.

சு௰. செல்-மேகம். ஒளி-ஒழுங்கு. வலக்கண் என்றது சூரியனை.

சுக. கலம்-முகத்தலளவையிலொன்று.

சுஉ. எம்பி-என்றம்பியாகிய விசயன். வஞ்சினம்-சபதம்.

சுங. விடசேனன்-கன்னன் மகன். இளையான்-என்றது சாத்தகியை.

சுச. சிஞ்சிதம்-பாணங்களாலெழுமொலி.

சுரு. குடகாவிரி-மேற்றிசையினின்றும் வருகின்ற காவிரி.

சுசு. வேய்-மூங்கிற்குத்துக்கோல். நிகளம்-சங்கிலி.

சுஎ. வஞ்சி-கருவூர். மதுரை-ஒருநகர். புகார்-காவிரிப்பூம் படடினம். நேரியன்-நேரிவெற்பன். எரிகால்-அக்கினியைக்கக்குகின்ற. நம்பர்சிலைமலை-சிவபிரான் வில்லாகிய மேரு.

சுஅ. முதலடிக்கு-இந்திரனாகிய இடபவாகனத்தையுடையான், மாற்றரசர்களுடைய அழகியபொன்முடிக்கணுள்ளமலர்கமழு

ங்காலையுடையான் என்க. ஒருகாலத்தில், அசுரரைச் செயிக்குமாறு இந்திரன் அயோத்திமன்னனைவேண்டி அவனுக்கு இடபவாகனமாயினன்; அதன்கழுத்திலிருந்து அவ்வயோத்தி மன்னன் அசுரர்களைச் செயித்தான்; அதனாலம்மன்னனுக்குக் காகுத்தன் எனப்பெயராயிற்று. ககுத்து-எருத்தின்பிடர். அக்காகுத்தன் குலத்தினனாதலாற் சோழனை அண்டர் குலபதியாம் விடைவாகனன் என்றார். ஈஉஅ-ஆங்கவியிலுமிவ்வாறு அக்குலத்தவனெனக்கூறுதல் காண்க. தாதகி-ஆத்தி.

சுகூ. மகதர்கோமானாகிய சாதேவன் என்க.

எந. பெகுலம் - அதிகம். அகிலம்-எல்லாம்.

எச. மலையின்-போர்செய்தால். பட்டுப்படாத-போரிலாயுதந் தைக்கப்பட்டிறவாத என்க.

எரு. மாய்ந்தார் என்றது மாஞ்சார் என மருவிநின்றது.

எசு. போய்-போக எனத் திரித்துரைக்க.

எஎ. இனையோர்-இத்தன்மையார்.

எஅ. பொன்-அழகு. மல்-வலி.

அய. தாழம்-தாழுதல். ஈண்டுச் சாந்தமென்க. தரங்கம்-அலை. அம்புராசி-கடல்.

அந. இக்கவியில், சாதேவன்முதலாகத் தண்டநாதனிறுதியாகக்கூறிய வெழுவரும் (ஒருபக்கத்தில் வீமனால்) தேருந்தகர்ந்து வில்லுமற்றார் என்க. இவ்வறுவருக்கு மூத்தவன் தண்டநாதன்ஆதலால் தம்பியரோடு தண்டநாதன் என்றார். இவ்வெழுவருந் துரியோதனன்றம்பியரென்க.

அச. சேனைநாதன் என்றது கன்னனை. தன் சேனைநாதன் என்றது திட்டத்துய்மனை. தருமன் நடக்கலுற்றானென்க.

அரு. நிரை - வரிசை. முரசுடைக்கொடிகொளிரதமெனக்கூட்டுக. முகிலை இரதத்திற்குவமானமாக்குக.

அசு. மொட்டு-கூம்பு; குமிழ்வடிவாயிருப்பதென்பர்.

அகூ. மதுபம்-வண்டு.

கூய. குணம்-நாண். உற்றன-உற்றனவாகிய பாணங்கள். தண்டு-கொடிகட்டியிருக்குந் தண்டு.

கூக. நவநடை-நவகதி. உபநிடதவித்து-கிருட்டிணன்.

கூந. கரை-அளவு. நிலை-வீரநிலையென்க. அணிநிற்றி-இவ்வணிவகுப்பிலே நிற்பாய்.

கூச. வயிரவச்சு-வயிரச்சு என விகாரமாயிற்று.

கூரு. விதலை-நடுக்கம்.

கூஅ. திமிர்ந்து-நிராகரித்து.

ஈஉ. வேய்ந்த-மூடின.

ஈஎ. உரிமைபற்றி இந்திரன் முடிமேல் வளையெறிந்ததைச் சித்திரவாகனுக்கேற்றிக் கூறினாரென்க. சென்னி-ஆகுபெயராய் முடியையுணர்த்தியதென்க. வளையால் என மூன்றுவது விரிக்க.

ஈகூ. செஞ்சொலேடு-செந்தமிழ்ச்சொல்லாலாகிய தேவாரப்பதிகம் வரைந்த வேடென்க.

ஈயச. துகைத்து-உழக்கி. காலிற்றுகைத்தல்; கடல்வடிவம்பலம்ப நிற்றலைக்குறித்ததென்க; பதினைந்தாம்போர்ச் சருக்கம் கஅ-ஆங்கவியிற்காண்க. விலோதம்-கொடி.

ஈயரு. இமத்தாரை-குளிர்ச்சியுள்ள மததாரையென்க. சாதிமை - குலத்தன்மை. ஓதிமபதாகை-அன்னக்கொடி.

ஈயகூ. கெட்டனர்- ஈண்டுக்காணுமலோடினாரென்க.

ஈஉய. உற்கை-தாரகை. கொற்கை-பாண்டியரூர்; இது பொருநைத்துறையிலுள்ளது. கோழி-உறையூர்.

ஈஉகூ. ஈந்தனவாகிய அம்புமம்புமென்க.

ஈஉஅ. சிபி என்னும் பெயரையுடைய அயோத்திமன்னனொருவன் தன்பாலடைக்கலம் புகுந்த ஒரு புறாவின் பொருட்டுத் தன் சதையையரிந்து அப்புறாவினெடை நிறுத்துக்கொடுத்தான், அவன் குலத்தவனாதலாலக்கதையினை உரிமைபற்றியிச்சோழனுக்கேற்றிக் கூறினாரென்க; சுஅ-ஆங்கவியினுமிவ்வாறு கூறுதல்காண்க.

ஈநஉ. துன்மருடணன், துன்முகன் இவ்விருவருந் துரியோதனன்றம்பியர். துன்மருடணன் மகன் சுவாகு. துன்முகன்மகன் சுவாது. கன்னன் மகன் சங்கன் என்க. விபாகரன்-சூரியன்.

ஈநஎ. அம்ம - ஈண்டிழித்தற் கண்வந்ததென்க.

ஈசஉ. ஒன்பதின்மர் - விசித்திர வீரன், விசித்திரவாகு, விசித்திரன், விநோதன், அகண்டதரன், விஷயன், அகண்டிதன், சுசிநாதன், சுகிரதன் என்பர். பாவனன்-வாயுகுமாரன்.

௬௪௩. மேன்மேல் என்னுமடுக்கு முத ல் குறுகியதென்க.

௬௪௮. கொக்கரித்தல்-கெர்ச்சித்தல். உ கவை-மகிழ்ச்சி.

௬௫௧. மொய்ம்பு-வலி. உத்தரிக்க-சாதி க்க.

௬௫௫. அயிர்-நுண்மணல். துகைத்தல்-உ ழக்கல். அவுணக்குலத்திறை-மாவலியென்க.

௬௫௬. சொட்டை-ஓராயுதம். துகிர்-பவ ளம். பவர்-கொடி.

௬௫௯. வெண்ணீர்மை - வெண்மைக்கு ணம். காத்தற் ரெழிலாலும் நிறத்தாலு மொத்திருத்தலால் எத்திறத்தும் என்ருர். நீருண்டமேகமென்பார் வெண்ணீர்மையில் லாத மேகமென்ருர்.

௬௬௨. அகங்கரித்தான்-செருக்குற்ருன்.

௬௬௩. எதிரூன்றல் - பொருதற்கெதிர் த்துநிற்றல்.

௬௬௬. யாமினி - இரா. நாமம் - அச்சம். தாமம்-ஒழுங்கு, ஒளியுமாம். முதலடியிற்சூ ரியனென்க.

௬௭௨. கச்சைக்கொடியோன்- கன்னன்.

௬௭௪. ஊண்டிரைமதியா-உணவுக்குரிய பாற்கடற்றிரையை மதித்து.

௬௮௪. பேரவை மூன்று - மிகுதி, ஒப்பு, தாழ்வுஎன மூன்றென்க; திருக்குறளிற்கா ண்க.

௬௯௨. கிரீசன்-என்பதைக் கிரிசன் என் ருர்.

௬௯௩. திகிரிக்கல்-சக்கரவாளகிரி.

௬௯௭. ஆசு-விரைவு, குற்றமுமாம்.

௬௯௯. நிமலர் என்றது திருமாலையும் ருத்திரமூர்த்தியையும். அலை-கடல்.

௭௦௰. தேவதத்தம்-அருச்சுனனுக்கு மய ன்கொடுத்த சங்கம். ஆவம்-அம்பருத்தூணி. மெத்துதல்-நிறைத்தல். மூவர் தத்தம்வடி வாமுதல்வன் என்றது சூரியனை. மூவர்- திரிமூர்த்திகள்; இவர்கள் சூரியமண்டலத் துள்ளாரென்பது நூற்கொள்கை.

௭௧௧. பராபரம்- சூரியன் கன்னனுக்குக் கொடுத்த சங்கம்.

௭௧௩. சாயாபதி-சூரியன்.

௭௧௪. அறனுர் குமரன்-தருமராசன்.

௭௧௭. குரவோர் என்றது அரசன், உ பாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோ ன் ஆகிய ஐவரை.

௭௧௯. துனி-கோபம்.

௭௨௰. தாமங்களின்வைப்பு - என்றது சூரியனை. தாமம்-ஒளி. நுதற்கண்-சிவபிரா னக்கினிக்கண்.

௭௨௩. கன்னன் அரவக்கணையென்க. கங்கு-கரை.

௭௨௪. இயமனுங் கன்னனுஞ் சூரியன் புத்திரராதலாற் கன்னனை இயமன்றுணைவ னென்ருர். பணை-வாத்தியம்.

௭௨௫. அம்புதம்-மேகம். புரை-ஒத்த.

௭௨௬. வான்மணி - சூரியன். உரகேச ன்-நாகேந்திரன். கணையொன்று-ஒரு நாகா ஸ்திரம். தெரிந்தனன் - தெரிந்து விடுத்தா னென்க. பின்னிரண்டிக்கு - கன்னனது அ ந்த நாகாஸ்திரமானது விசயன்மேல் நீலோ ற்பலக்கணையை பிரயோகித்துப் பொருமு ன்பு அவ்வாயுவாஸ்திரத்தை விழுங்கியதெ ன்க. ஆயுப்புறமிட்டு விடப்பொருவோன்- கன்னனென்க. மலைந்திடுவோன்-விசயனெ ன்க. மாமுனை - மிக்க கூர்மை. வெம்மை- கொடுமை.

௭௩௧. வனம்-காண்டவவனமென்க. உசு வி-ஆய்ந்து.

௭௩௬. பிறகு-பின். துணி-துண்டம். தி ரியவும்-மறுபடியும்.

௭௩௭. புகல்-அடைக்கலம். ஒருபடி - ஒ ருதரம். தொடை-தொடுப்பு.

௭௩௮. சேகு - வயிரம். ஏகாதசம் - பதி ஞெராமிடம்.

௭௩௯. மறை-மறுத்தல். அம்ம - அசை.

௭௪௧. தேன் தென் எனக்குறுகிநின்றது.

௭௪௨. ஆழிநிலனுற்ற-சக்கரம் பூமியிற் பதிந்த. மழுவாளி-பரசுராமன். சாபமாவது- கன்னன்றன்னைச் சத்திரியன் எனக்கூருது கற்ருன்; அதனையறிந்தபின்பு கோபமுற்று க்கன்னனைநோக்கி உனக்கு கற்றவித்தை கா லத்திற்குதவாது எனக்கூறியது; இதன்விரி வை மகாபாரதத்திற்காண்க. அதவா-அல்ல து; இது வடசொல்.

௭௪௩. கைவந்திலா-தன் கைவசம்வரப் பெருத.

௭௪௪. கடையடிக்கு-கன்னன் வன்மை குறைகின்றதைச் சொன்னுர் என்பது கரு த்து.

௭௪௫. மகவன்-மகவான். தினகாரி - தி னஞ்செய்வோனுகிய சூரியன். உயிர்க்காலவி ப்பான்-உயிராகிய காற்றையவிக்கும்பொரு ட்டு.

௭௪௭. அத்தவெற்பு-அஸ்தமனகிரி. செ ரு-போர்.

௨௩௮. வேண்டிய-விரும்பியவற்றை இது வினையாலணையும்பெயர்.

௨௪௧. கடையடியால் மறைந்து நின்று நிக்கிரகம்போலநுக்கிரகஞ் செய்யுமியல்புவிளக்கினமை காண்க.

௨௪௪. பஞ்சவாயுதம்-நேமி, தண்டு, வாள், சங்கு, வில் என்பன.

௨௪௫. அமரர்-ஈண்டு முப்பத்துமூவராகிய நால்வகைத்தேவர். மணிமேகலையில் "நால்வேறுதேவ" ரெனக்கூறுதல் காண்க; அவர் வசுக்களெண்மர், திவாகரர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், மருத்துவரிருவர். அமரயோனிகள் என்றது, இவரை யொழிந்த கந்தருவர்முதலோரை.

௨௪௬. அனிலயோகம்-வாயுவையடக்கிச் செய்யும் யோகம்.

௨௪௯. நதிவாலாறு முன்னுரைத்தமை காண்க. "எங்கண்மாதவனிசயமாமலர்வருமுதையத்திங்க" ளெனக்கூறலால் மதிபெற்ற திருவுளமென்பதை யுணர்க.

௨௫௧. சதியாமல் - அழிவுசெய்யாமல்.

௨௫௨. அஞ்சரீகம் - அருச்சுனனுடைய பாணத்துக்கு ஒருபெயர். தகவுடையார்-தகுதியுடைய பெரியோர்.

௨௫௪. கோ - இரக்கக்குறிப்புச்சொல்.

௨௫௫. மண்கவர்தரு மன்மதலை என்றது துரியோதனனை.

௨௫௬. இங்கிதம்-எண்ணக்குறிப்பு. பதம்-பதவி.

௨௫௭. எஞ்ச-இறக்க. கபிலை-பசு.

௨௫௮. தானம்-சுவர்க்கம்.

௨௫௯. சண்டமருத்து-ஈண்டு வீமன். மருத்துவான்-இந்திரன். கரியசுடர்-ஈண்டு விசயன்.

௨௬௦. புணை-தெப்பம்.

௨௬௧. துவக்கு-சம்பந்தம். வாழ்வு-செல்வம்.

௨௬௪. அரியமா-சூரியன்.

௨௬௬. சஞ்சரீகம்-வண்டு.

௨௬௭. யாயுரைத்ததும், எமருரைத்ததும், தேவின் வாயுரைத்ததும் எனவும்மைவிரித்துரைத்துக்கொள்க. எம்முன் - எந்தமையன். நேர்செய்தாய் - பொருதல்செய்தாய்.

௨௬௮. ஆடகன்-இரணியன். ஈடு - வலி.

கன்னபருவம் முற்றிற்று.

ஒன்பதாவது சல்லியபருவம்.

——: o :——

பதினெட்டாம்போர்ச்சருக்கம்.

——: o :——

க. கோலம்-வராகம். வடிவாய்-(கிருஷ்ணவதார) வடிவமாய். பரியாளாக-குதிரைமுகத்தையுடைய மனிதவடிவமாக. நாராயணாயநம-ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்கு நமஸ்காரம். இக்கவியில் தசாவதாரமுங்கூறினமைகாண்க.

௨. மறித்து-மீண்டுவந்து. அவுணர் - மந்தேகரென்னுமசுரர். பற்பராககிரி - மாணிக்கமலை.

௩. சாதி-பிச்சிப்பூ. ஞிமிறு, வண்டு, சுரும்பு இவைகள் வண்டின் விசேடம். வண்டுகள் இரவில் செடி தருக்கண்முதலிய மலர்களின்றேனையுண்டு சுகித்துக் காலையிற்பொலிவழிதலால் அவைகளைவிட்டுத் தாமரைத் தடத்துவருதல் இயல்பென்க, சாதி-சிறுசண்பகமெனில், வண்டுபடா மலராதலிலது பொருந்தாதென்க.

௬. பட்டம்-ஈண்டுப் பொற்பட்டம். இபராசன் என்றது அரசுவாவை. ஓடை - நெற்றிப்பட்டம். கண்முத்தம்-ஈண்டு ஆநந்தக் கண்ணீரென்க.

௯. தாமன்-அசுவத்தாமன் என்க. அணிய-அணிவகுக்க. மாமன்என்றது சகுனியை. மூவர் என்றது சித்திரசேனன், சூரியவன்மன், சித்திரகீர்த்தி; ௩௪-ஆங் கவியிற்காண்க. சாமந்தன்-ஈண்டுத் தானைத்தலைவனுகிய சல்லியன். தரணிபதிபின்னணிய - துரியோதனன் பின்னே யணிவகுத்து நிற்க.

௰௧. இரவு-இரப்பு. வீ என்றது வி எனக் குறுக்கலாயிற்று. வீ-புள், ஈண்டு வண்டினைக்குறித்தது.

௰௨. முதலிரண்டடியின் கருத்து - அருச்சுனன் உறவுமுறையறியாதவனுய்க் கன்னனை உயிர் கவர்ந்தானென்று அவனைச் சாயா

தேவி வெறுப்புற்றாள், அவளைப்பார்க்கினு ம் பூமிதேவிமிக வெறுப்புற்றாளென்பது. சாயை-சூரியன் மனைவி. இவள் வெறுத்தற்குக் காரணம் புத்திரனைக்கொன்றானென்பதும், பூமிதேவி வெறுத்தற்குக்காரணம் தன்னையாளுதற்குரியவனாயிருந்தவனைக் கொன்றானென்றுங்கொள்க. விசயன் மாயோனையுந் தாயையும் வெறுத்தற்குக் காரணம் அவ்விருவரும் முன்னமே அறிந்திருந்துந் தனக்குக்கூறாமையாலென்க. விதியை வெறுத்தற்குக்காரணம் இவற்றிற்கெல்லாங்காரணமாயிருத்தலாலென்க.

௰௪. அணிவகுப்பு இன்னதெனக் கூற வில்லை.

௰௫. அத்திரயூகம்-அஸ்திரவடிவாக வகுக்கப்பட்ட படைவகுப்பு. குத்திரம்-வஞ்சம்.

௰௬. கழி-உப்பங்கழி.

௰௯. மூத்தவன் மைந்தர்-தமையனான கன்னன் புத்திரர்.

௨௰. சலநிதி-கடல். விதி-பிரமன்.

௨௨. மூதிர - அதிகமாக. முனைபிதிர்படும்படிஎனக்கூட்டுக. பிதிர்-பொடி. கொள்கார் விசும்பு - கருநிறங்கொண்டவாகாயமெனெ்க. கொண்டு கொடு என விகாரமாயிற்று.

௨௩. கொடிஞ்சி-முன்னுமைத்தாம். எழினி-திரைச்சீலை.

௨௫. செல்-மேகம். கல்-மலை. மணிக்கழுத்துடையவனென்றது சுக்கிரீவனை. வாலி சுக்கிரீவர் மலைந்தகதை இராமாயணங் கிஷ்கிந்தாகாண்டத்திலறிக.

௨௬. எஃகு-கூர்மை. கைதவம் - வஞ்சம். புரை-குற்றம்.

௨௮. அழுக்காறு - பொறாமை. போற்றலன் என்றது சல்லியனை. பஞ்சானனம்-விரிந்தமுகத்தையுடையதாகிய சிங்கம்.

௨௯. வேறு - வேறுபாடு. வினதைகாளை என்றது கருடனை. வினதை-காசிபர்மனைவியரிலொருத்தியாகியுங் கருடனுக்குத் தாயாகியுமுள்ளவள்.

௩௧. பத்திரம்-சிறந்தசாதியானை. பருஉ-பருமை. பகடு-யானை. வீமனினுஞ் சல்லியன் மிக்கவலியன் என்பது விளங்க வீமனுக்கு யானையையும், சல்லியனுக்கு சிங்கவேற்றையு முவமைகூறினனென்க.

௩௨. புடைத்தல்-அடித்தல். தோமரம்-ஈண்டுத்தண்டாயுதம். எற்றுதல்-அடித்தல்.

௩௩. ஏமரு-பாணமருவிய.

௩௪. தேரவன்-சூரியன். ஒளியும் பகையிருளொழித்தலுமுடைமையான் முச்சுடரா யுவமைகூறினனென்க.

௩௫. இருவர் உலூகன், சைந்தவன் என்பர். நிசை-இரா.

௩௬. கேதுதரன்-ஓரரசன்.

௩௮. சுமித்திரன்-ஓரரசன்.

௩௯. வாளச்சிலம்பு - சக்கரவாளகிரி.

௪௰. மாயனிளவல்என்றது சாத்தகியை.

௪௧. ஒன்றெனை-ஒன்றுபோல. கோறும்-கொல்வோம். கொல் என்னும் பகுதிமுதனீண்டது.

௪௨. சதம்-நூறு.

௪௩. பொற்றை-மலை.

௪௬. பாசன் என்றது கிருட்டிணனை. தேரோன் என்றது விசயனை.

௪௭. அவுணரூர் நீறுசெய்வீரன் என்றது சிவபிரானை;

௪௯. கழிந்தநீர்க்கணை சோலிவந்தெதிர்ந்து - கடந்துசென்ற வெள்ளநீரைத் தடுப்பதற்கு அணைவளைப்பவனைப்போல்வந்து அருச்சுனனையெதிர்த்து என்க. முன் பதினான்காம்போர்ச்சருக்கம் ௩௩-ஆங்கவியினு மிதனையெடுத்துக்கூறினமைகாண்க.

௫௰. செருப்புலக்கையா முல்லை - யுத்தகளத்தில் படைவகுப்பாகிய உலக்கை-படைவகுப்பு. பொருப்புலக்கையுற்றலையா-மலைகள் மேட்டையடைந்து கலங்க.

௫௧. அலக்கைவித்தகனிளவல் என்றது கிருட்டிணனை. அலய-கலப்பையாயுதம்.

௫௫. ஆளியேறனையான் என்றது சல்லியனை. அரசு என்றது துரியோதனனை,

௫௯. படைத்த என்னும் பெயரெச்சவீறுதொக்கது.

௬௰. சம்பரன்-ஓரசுரன்.

௬௨. நீண்முதற்றீபம்-அடிநீண்ட தீபவிருக்ஷம்; அது சோதிவிருக்ஷமென்க. முதற்போர்ச்சருக்கம் ௨௬-ஆங்கவியினு மிவ்வாறு கூறுதல் காண்க.

௬௩. ஒன்பதுபடி-ஒன்பது விதம். உடற்றினன்-போர்செய்தான். வீமன் தோன்றுவெழுவாய்.

௬௪. இரணம்-போர். முரண்-வலி.

௬௫. கிருதவன்மனைக் கிருதபற்பன் என்றார்.

௬௬. வேளின் இதில் இன் ஐந்தாவது ஒப்புப்பொருட்டு. ஏமகூடம்-குலபருவதங்களிலொன்று; பொற்சிகரமுடையதென்பர்.

பிறத்தவன் என்றது சாத்தகியை என்க. நேமி-கடல்.

௬௭. ஆழி-சக்கரம். பவனம்-காற்று. வேகத்தாற் காற்றையுவமைகூறினரென்க. அரி-சிங்கம். உததி-கடல். தமரம்-ஒலி. கோடு கோடுகள் குறித்த-வளைந்த சங்குகளூதப்பட்டன. பவனம் என்பதற்குப் பூமியெனப் பொருள்கொண்டு தட்டின் பரப்பாற்பூமியையொத்த ரதத்திரளென்பர்.

௬௮. தானவர் வானவர் என்றது தானவானவர் என விகாரமாய்நின்றது; குரங்கு கோட்டில்வாழ்விலங்காதலாற் சாகைமாமிருகம் என்றார்.

௬௯. சோமகேசபதி மெய்ப்புதல்வன் எனறது துருபதன் புதல்வனாகிய திட்டத்துய்மனை.

௭௰. மாரசாயகம் குறித்த இலக்குத்தப்பாமன் மறைந்து பாய்தலாலதனையுவமானமாகவுரைத்தார். சூரன்-சூரியன்.

௭௭. நிறமுஞ்சலியாதுநிற்றலுமுண்மையால் ஆனிலற்கு இமயத்தையுவமைகூறினர். என்செய்தானென்னும் வினவுக்கு மிக மகிழ்வுற்றானெனவருவித் துரைத்துக்கொள்க.

௮௰. சத்திரம்-கைவிடாப் பலவகையாயுதங்கள்.

௮௧. எறு-புண், நன்னூல் விருத்தியுரை சொல்லதிகாரம் பேரியல் ௰௨-ஆஞ்சூத்திரவுரையிற் காண்க.

௮௨. வை-கூர்மை. மற்றுமற்று என்பது அடுக்காகி வேறுவேறெனப பொருள்கொள்ளநின்றது. மூண்டு மூண்டு என்பது ஒரு தொழில் பலகாலிகழிதற்பன்மையில்வந்தது. பிறங்கல்-மலை.

௮௪. கறங்கு-காற்றாடி.

௮௫. கேசரிசாபம்-சிங்கக்குட்டி- இறுதியிற்கூறிய வீழஎன்பதற்கு விரும்பஎன்க.

௮௬. கனக்குடில்-(வீரசுவர்க்கத்தில்) பொன்மயமான குடிலுசயிலென்க.

௮௭. வாழி - வாழ்வாயாக என்றுசீர்வதித்தானென்க.

௮௮. ஆமாறுபாரிலானன் எனக்கூட்டுக. ஆமாறு-(விரைவிற் பகைவரை யழிக்ககருதி) அதற்கிசையுமாறென வருவித்துரைக்க.

௯௰. வாகு-புயம். கதாபாணியரணியாக-வீமன்றீக்கடைகோலாக. எனலடவி-தினைப்புனம்-அரணி உரசுதலால் எனலடவியழியுமென்க. அரணி அக்கினியென்பாருமுளர்.

௯௩. உதவியாக- சகுனிக்குதவியாகவென்க. அதலபூமி என்றது பாதாளலோகத்தை.

௯௪. பூமியமரனனதாமா-பூசுரனை அசுவத்தாமாவென்க. ஈசானகுமரன் என்றது அசுவத்தாமாவை. குடைதும் - அம்புகளாற்றுளைப்போம். வீரன் என்றது சோழனை வருங்கவியாலறிக.

௯௫. மனுகுலேசன்-மனுவின் குலத்தலவனாகிய சோழன்; பதினேழாம்போர்ச் சருக்கம் ௱௨௰-ஆங்கவியில் மனுகுலத்தோன்றல் எனக்கூறியது காண்க.

௯௬. மருகன்வீழ - அசுவத்தாமா வீழ. சாபமறைவலான் என்றது அவன் மாமனாகிய கிருபாசாரியனை. ஆர்-ஆத்தி.

௯௭. சபதம்-சூதுபோர்ச்சருக்கத்தில் காண்க. மகிபனேவுவேல்போல-துரியோதனன்முன்பு தன்மேலேவு வேல்போலவென்க. இளவல் என்றது சாதேவனை.

௯௮. ஒவியது-ஒழிந்தது.

௯௯. அம்பி-மரக்கலம்.

௱௧. கயமுனி-வியாழ குருவின் புத்திரனென்றறிக. இமையோர் குரு-வியாழனென்க. முனிவர் என்றது பூமியிலுள்ள பலமுனிவர்களை. மறை-இறந்தவருயிர்பெற்றெழச் செய்யும் சஞ்சீவிமந்திரமென்பர். பூருவத்திற்றேவாசுரர்க்குப்போர்நடந்தபோது தேவராலிறந்தவசுரரைப் பிழைப்பிக்க அயனிடம் அசுரகுருப்பெற்றதென்க; பின் அவன்பாற்கயமுனி முதலானவர்பெற்ற விவரமுதனூலிற்காண்க.

௱௨. அமர்-போர். அத்து-சாரியை.

௱௩. கங்கையென-கங்கா நதியைப்போல. பாயதடம்-பாவிய ஒருவாவி. சேவடிமுன்பினதாவேகி - சிவந்தவடிச்சுவடு முன்பினாகமாற (வைத்து) ச்சென்று; இக்கருத்தை "எறியபாதம்போல விறங்கியபாத" மெனப்பிற்கூறல்காண்க, இவ்வாறு சென்றது பகைவரறியாவண்ணமென்க. சேயவன - சிவந்த ஒளியனாகிய சூரியனென்க.

௱௪. கம்பித்து - (விஷயங்களாற்) கலங்கி. புலன்-ஐம்பொறி. கலக்கமாற - இப்போது அக்கலக்கம் நீங்க. வெம்பித்தடங்கி-(பிரபஞ்சத்திலுண்டாகிய) வெய்ய மயக்க மொழிய. மனஞ்சித்தொடுமேவல்கூற-மனமானது அறிவின்வசமாகப்பொருந்த. தம்பித்ததோயத்திடை-தான் மந்திரத்தாற் றம்பிக்கப்பட்ட நீரில். வாயுத்தசமுமொக்கக்கும்

பித்து-தசவிதவாயுமொக்க வடக்கிக்கொண்டு; இங்ஙனங்கூறினும் உச்சுவாச நிச்சுவாசமிரண்டையுமடக்கிச் சுழுமுனைமார்க்கத்திற் பிராணவாயுவை நிறுத்தி என்பது கருத்தாகக்கொள்க. அடங்கி அடங்க எனத்திரித்துரைக்க. மந்திரத்தாற் சலத்தம்பனஞ்செய்து நீரின் மூழ்கியிருந்தமையாலதனைவிளக்கத் தம் பித்ததோயத்திடையென்றார்; இக்கருத்தைப்பின் ௱௰௫-ஆங்கவியிலறிக. தசவாயுவாவன-பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன.

௱௫. தன்னாகமுற்றுமெலிவின்றித் தயங்குமாறு நன்னாளமூலநளினத்தைமலர்த்தி-தனது தேகத்தினுள் முற்றிலும் வாட்டமின்றி விளங்கும் ஆறுவகையான நல்ல நாளத்தையுடைய மூலாதாரமுதலான வாதாரநளினங்களை மலரச்செய்து; இனி ஆறாதாரமலர்களை மலர்த்தியெனவே அவற்றினரும்பொருளையுணர்ந்து மேற்சென்று பிரமரந்தரத்திற் சகஸ்தரதளதாமரையை மலரப்பண்ணி அதிலிருக்கிற சந்திரமண்டலத்தினமிர்தத்தை மூலாக்கினியாலிளகப்பண்ணி அதனைச்சர்வநாடிவழியாகவுடலிலே நிரப்பி அதனாலாகிய சுகோதையத்தாற் பூரணசோதியைப்பாவித்து எனப்பொருள்கொள்ளுமாறு அங்ஙனஞ் சுருக்கிக் கூறினரென்க. நாளம்-உட்டுளையுடைய தண்டு. நாவாலுன்னாமல்-நாவினால் (ஒலிவெளிக்) கிளராமல். உன்னுதல்-கிளர்தல். உன்னுமுறைமந்திரம்-உள்ளே கருதுமுறைமையுடைய (சஞ்சீவி) மந்திரத்தை. முற்கவியினுமிக்கவியினுங்கூறிய கருத்தின் விரிவைச் சிவஞான சித்தியாரிற் சகமார்க்கமென்னு முதற்குறிப்புடைய கவிக்குச் சிவாக்கிரயோகியருரைத்தவுரையிற் காண்க.

௱௭. பரபாவகம் - பரம்பொருளின் பாவனை. ஒருபாலிறைகொண்டொழிசேனை - (போரிற்றப்பி) ஒருபக்கத்துத்தங்குதல்கொண்டு இறவாதொழிந்திருந்தசேனை.

௱௯. வலத்தேபுரிபூந்தண்மாலை என்றது வலம்புரிமாலையாகிய நந்தியாவர்த்த மாலையை. கோண்-வளைவு. வாள்-ஒளி.

௱௰௩. பின்னைக்குவாய்த்தோன் - நப்பின்னைப்பிராட்டிக்கு வாய்த்தவனாகிய கிருட்டிணன்; நப்பின்னை ஒரிடையன் மகளென்க. பின்னை இலக்குமியுமாம். தன்னைக்கு-தன்னரசனாகிய துரியோதனனுக்கு.

௱௰௪. மற்று அ-சாரியை. வாய்மை-ஈண்டுக் குருமொழியென்க. ஞானவூதியம்-ஞானமாகிய இலாபம்.

௱௰௬. சாறு-ஈண்டுக் கருப்பஞ்சாறென்க. மாறியல் வேந்தர் - மாறுபடுதலையறிந்துகொண்ட அரசர். மாறுபாடாவது முதலடியால் உள்ளிருந்து புறம்போயினனென்பதும், இரண்டாமடியாற் புறத்துப்போகவில்லையென்பதுமாம்.

௱௰௭. இம்பர் - இவ்வுலகத்திலென்க. மிகுதிபற்றிப்பொன்றின என அஃறிணைமுடிபாகவுரைத்தாரென்க. அன்று ஓ - அசை.

௱௰௯. வல்லிய என்பது விரித்தல் விகாரமேற்றது.

௱௨௰. மோகரம்-உக்கிரம். ஒன்றில்-ஒருபக்கத்தில். யாதுமோதெளிதி - (இவ்விருதிறத்தில்) யாதாயினும் ஒன்றை நிச்சயித்து அறிந்து தெளிவாய். ஓ-அசை.

௱௨௨. கூறு-அம்சம். வருணன் கூறும் என்றதில் உம்மை திருமாலம்சமேயன்றி வருணனம்சமும் எனக்கொள்ளநிற்றலில் இறந்ததுதழீஇய வெச்சமாம். அரசர்திருமாலம்சமென்பதைத் திருக்குறளில் இறைமாட்சி என்பதனுரையிற்காண்க.

௱௨௬. துவம் - சலியாநிலைமை; சூடாமணி நிகண்டு எட்டாவது தொகுதி ௰௯-ஆங் கவியிற்காண்க.

௱௩௨. சுருதி-ஈண்டு மந்திரம்.

௱௩௩. மாறியொழிய- நீங்கினலொழிய. விடேன்-யானுன்னை விடமாட்டேன்.

௱௩௪. ஓதம்-அலை. பாதம்-கால் என்றும் நீர் என்றுமிருபொருள்கொள்க. காதம்-காததூரம். கலங்கல் - (நிலவுலகாட்சியொழியுமென்று) கலங்கற்க என்பது கருத்தாகவருவித்துரைக்க.

௱௩௭. வாளியெரி என்றது அக்கினியாஸ்திரத்தை. புவனம்-நீர்.

௱௩௮. சீவனம்-உயிர்வாழ்க்கை என்றும், நீர் என்றுமிருபொருள்கொள்க. இருக்குமோ-அச்சீவனத்திற்றங்குவானோவென்க.

௱௩௯. பரவை - பரப்பு. வாளம்-வளைவு. நாளம்-பூந்தண்டு.

௱௪௫. தனகரன் - பொருளையுண்டுபண்ணுபவனாகிய குபேரனென்க.

௱௪௯. பொய்-ஈண்டுக் கபடமென்க. விடையேழடர்த்தல் நப்பின்னையை மணத்தற்கென்க; வேய்ங்குழலூதல் ஆனிரையை மகிழ்வித்தற்குஞ் சேர்த்தற்குமென்க.

௱௫௧. தாலகேதனன்-பனைக்கொடியன்.

நரகாந்தகன் என்பது நராந்தகன் எனவிகார மாய்வந்ததென்க. நரகாந்தகன்- நரகாசுரனுக் கழிவுசெய்தவன். கடலிற் பள்ளிகொண்டிருத்தலைவிடுத்துக்கிருட்டிணனாகவவதரித்தமைவிளங்கத்திரைநீர்மறந்தோனென்றார்.

௬௩௨. உயாவுகின்றோம் -. ஆராய்கின்றோம்.

௬௩௪. வழிந்து-வழிய எனத்திரித்துரைக்க. சமந்தபஞ்சகம்-மன்னவர் சோரியை ஐந்து தடாகங்களினிறைத்துப் பரசுராமமுனி பிதிர்தர்ப்பணஞ்செய்தமையால் அவ்விடஞ் சமந்தபஞ்சகம் எனப்பெயராயிற்றென்க.

௬௩௫. மூவகைவாகனம் - ரதகசதுரகம்.

௬௩௬. துரியோதனன் எவரையுமடக்குமூழ்வினையையுமச்சுறுத்துங் கொடுஞ் செய்கையன் என்பது விளங்க விதிதனக்கும் விதிபோல்வானென்றார்.

௬௩௯. கண்-கண்ணோட்டம். அன்றி அசைநிலையுமாம்; புறநானூறு ௬௯-ஆஞ்செய்யுளிற்காண்க.

௬௬௨. கலம்-மரக்கலம். காளிந்தி - யமுனாநதி. வாளவிலங்கல் - சக்கரவாளகிரி.

௬௬௩. பூங்கவனத்துட் புகுந்தெனப்பாடமோதிப் பூங்காவனம் என்பது விகாரமாயிற்றென்பர்.

௬௬௪. கந்தருவர் துரியோதனனை கட்டியகதை ஆரணியபருவத்தினிகழ்ந்ததென்க; உலூகன்றூதுச்சருக்கம் ௰௮- ஆங்கவியிற்காண்க.

௬௬௫. இக்கவியிறுதியில் என்றான்என்பது வருவித்துரைக்க.

௬௬௬. இக்கவியில், துரியோதனன் என்பதனை வருவித்துரைக்க.

௬௬௭. நடை-சஞ்சரித்தல். பிரதாபம்-வீரம்.

௬௬௮. பொறி-தீப்பொறி. நாகர்களிறைகொள-தேவர்கள் சிதற. தமனியாசலத்தை வீமனுக்குவமானமாக்குக. சந்தநோக்கி இகரம் நீண்டுவந்தது.

௬௭௰. பரிதிகள்-பரிவேடங்கள். விருத்தம்-வட்டம். பவுரி-ஈண்டுச்சுழலுதல். வீசுங்கதையின் வட்டத்துக்குப் பரிவேடத்தையுவமானமாகக்கொள்க.

௬௭௧. ஊரு-தொடை. மனோரதகர்ப்பம்- மனத்திற்கு விருப்பத்தைத் தருங்கமலமென்க. அனல்-கீழவாய்; கல்லாடம் அ-ஆங்கவியிற்காண்க. புரூரம் என்றது சந்தநோக்கிப்புரூர்என விகாரமாயிற்று. புரூரம்-புருவம்.

௬௭௨. பணை-வாத்தியம். திதி-நிலையாக. செற்ற-நெருங்கிய.

௬௭௪. இருவினைகூறு-மாறுபாடானசெய்கை கூறுத. விதாதா - பிரமன். அரி - காற்று. உரும்-இடி. உழற்றினன்-வருந்திச்சுழன்றான்.

௬௭௬. சிரமாகிய முடியென்க. இரிதர-கெட.

௬௭௮. ஓமவுண்டி - ஓமம்பண்ணப்படுகின்ற அவியாகியவுணவு.

௬௭௯. கதாரவம் - தண்டாயுதவோசை. மோழை-மோட்டை. கோளம்-அண்டகோளம்.

௬௮௧. வினையாதிகன்- வஞ்சனையின் மிகுந்தவன்; நாளியம்பல் தகாது என்றதனால் இருவர் போர்செய்யுங்காலத்து நடுவாகநின்றோர் ஒன்றைக்கூறுதல் நியாயமன்று என்பது கருத்தாயிற்று.

௬௮௩. ஏதம் முன்னது துன்பம்; பின்னது குற்றம். புரிதாள்-செய்யுமுயற்சி. அரி, காலை என்றது விசயனை.

௬௮௪. மோனவண்குறி-வாயாற்கூறாது கையாற்காட்டிய நல்ல குறியை. மானகஞ்சுகன் - மானத்தைக்கவசமாகத் தரித்தவனாகிய துரியோதனன். மாறிநின்றிட - கால்கள் மாறிப் பின்வாங்கி நிற்க. பிழைபோதலின்-வீமன்கதையான் மோதியது தப்புதலாகப் போதலால் என்க.

௬௮௫. மாறடும்வீறு-பகையையழிக்குமேன்மை.

௬௮௬. உருப்பு-கோபம். உடற்றல்-பொருதல். சிவத்து என்றது - வலித்தலாயிற்று.

௬௮௭. கதுப்பு - கன்னம். இருத்துதல்-ஈண்டழுத்துதல். விதிர்த்து-நடுங்கி.

௬௮௮. உயிர்என்றது உயிர்த்தானத்தையென்க. மறம் - வீரம். அவித்தை-அஞ்ஞானம். ஆயர்-இடையர். அளப்பரோ-அளவிட்டறிவாரோ.

௬௮௯. இவை-இவ்வக்கிரமங்கள். சலம்-வைரம். வினை-வஞ்சம். அவர் என்றது பாண்டவரை.

௬௯௰. மிழற்றி - சொல்லி. எனக்கொலாம்-என்னும். கொல்-அசை. என்னையெனும் வினா ஈண்டு என்என நின்றதன்மேல் அகரச்சாரியையெய்தியபின்ககரவொற்றுமிக்கது.

௬௯௧. அரி-பாம்பு. பகைவரைக்கொல்லுங் கொடுமைவிளங்க நஞ்சுபோலு நரேசர் என்றதென்க.

௱௯௨. கடிதடம்-ஈண்டு அரை. வழக்கு ஈண்டு யுத்தநியாயமென்க. முசலம் - உலக்கையாயுதம்.

௱௯௪. சிலையின்குரு - வில்வித்தைக்குக் குருவாகிய மைத்ரேய முனிவர்; இவர் சாபமாவது பாண்டவர் காமிய வனம்புக்கிருந்தபோது மைத்ரேய முனிவர் அவர்களிடத்திருந்துவந்து துரியோதனனுக்கு நீதிமுறைகூற அவன்பரிகரித்தமையாலவர் வெகுண்டு நீ வீமன்கதையாற் றொடையிலடிபட்டிறப்பாயென்றது. சிலையின்குருவென்றதற்குத் துரோணாசாரியனென்பாருமுளர்.

௱௯௬. மற்றையநுசன் என்றது சாத்தகியை.

௱௯௮. மிடல்-வலி. மேவலர் - பகைவர். வான்-ஈண்டு வீரசுவர்க்கமென்க. வினை-போர். முனிமாமகன் என்றது அசுவத்தாமனை அவண்-அப்பாசறையில்.

௱௯௯. தாயம்-உரிமை. உழறினன்-கலக்கினன். சரிதம்-ஒழுக்கம்.

௨௱௧. சராசனம் - வில். யாதவனென்றது கிருட்டிணனை.

௨௱௨. வழக்கழிவறவழாமாற்றம் - நீதியழிவு நீங்கவழுவாதவுரை. அழுக்கறல்-பொறாமைசெய்தல். எனபிதா-என்னுடைய தந்தை. மீ-மேல்.

௨௱௩. தனதுடையமுடிமிசைச்சிகாமணியென்க. மீள-அவ்வசுவத்தாமன்றிரும்பிவர.

௨௱௪. இரியல்போன - (போரிலேதோற்று) ஓடுதலுற்றுப்போன. பத்தா-கணவன். சந்தநோக்கிக் கிருதபத்மாவென்றார். ௨௱௬-ஆங்கவியில் மோனைநோக்கிக் கிருதபன்மனென்றார்.

சல்லியபருவம் முற்றிற்று.

பத்தாவது சௌப்திகபருவம்.

—:o:—

௨௱௫. அலமர-சுழல. பகலிற்கண்டெரியாதிருக்கின்ற கூகையை அக்காலநோக்கி அதனிடத்திற்சென்று அதனைக் காகம் வெல்லுதலும், இரவிற்கண்டெரியாதிருக்கின்ற காக்கையை அக்காலநோக்கி அதனிடத்திற்சென்று அதனைக்கூகை வெல்லுதலுமியல்பென்க; இக்கருத்தைத்திருக்குறளிற் "பகல் வெல்லுங் கூகையை" யென்னுமுதற்குறிப்புடைய குறளிற்காண்க. ஸுப்தி - தூக்கம். அதினிகழுஞ்செயல் சௌப்திகம் ஆதலால் இப்பருவத்திற்குச் சௌப்திகபருவமெனப் பெயராயிற்றென்க.

௨௱௬. புரம்-நகர், ஈண்டு பாடிநகரென்க. துவாரம்-வாயில். பாரத்துவாசமுனி குலத்திற்பிறந்த அசுவத்தாமாவை யீண்டுப் பாரத்துவாசனென்றார் பேரனைப் பாட்டன்பெயராற் கூறுமுலகவழக்குப்பற்றிப்போலும். பூதம் கிருட்டிணனால் நியமிக்கப்பட்டிருந்ததென்க.

௨௱௮. துரோணசாதன்-துரோணகும்பத்திற் பிறந்தவன்; துரோணாசாரியன்.

௨௱௯. எஞ்சின-வலிகுறைந்த என்க.

௨௱௰. படிவம்-வடிவம். படிவமும் என்னுமும்மை தொக்குநின்றதென்க.

௨௱௰௧. விதலை - நடுக்கம். மாறு-பகை. எதி-வாள். முற்கவியில் ஆகமம் என்றும் இக்கவியில் மறையென்றுங்கூறியதென்னையெனிற் பொதுவாகிய வேதவிதியுஞ் சிறப்பாயகி ஆகமவிதியுங்கொண்டு பூசித்தான் என்பது விளக்கற்கென்க.

௨௱௰௩. பருவரல்-துன்பம். இருவர் என்றது கிருபன், கிருதவன்மன் என்பவரை.

௨௱௰௪. கயில் - பூணின்கடைப்புணர்வு. பாளையம்-சேனை, ஈண்டு அதுதங்கும் பாசறையென்க. பயில்புரி-பழகுதல்புரிந்த.

௨௱௰௭. உபபாண்டவர்களைவரும் பாண்டவரைப்போல வடிவுடையாரென்பது விளங்கச் சுடரிற்கொளுத்திய சுடரனையாரென்றார். தேறல்-கள்.

௨௱௰௮. அவன்-அவ்வசுவத்தாமன். பின்னிட-புறங்கொடுக்க; இவன் முன் புறங்கொடுத்ததை ௰௭-ஆம்போர்ச்சருக்கம் ௱௩௪-ஆங்கவியினும், இச்சருக்கம் ௯௬-ஆங்கவியினுங் காண்க.

௨௨௰. பதினெண்பூமி முன்னுரைத்தாம். பகல்-பகற்பொழுதில். படுத்தான்-அழித்தான். தகலருங்கேள்வி - தகுதியையுடைய அரியகல்வி. தாமம்-கொன்றைமலர்.

௨௨௪. வயா-வருத்தம்.

௨௨௭. உண்டு-(சந்ததி) உண்டு. வருகுலம் என்றது அசுவத்தாமன்வந்த பாரத்துவாசகுலம் என்க.

௨௨௮. கன்றினேன்-சினமுற்றேன்.

௨௨௯. இணை தரல்-சேர்தல். சொல்-புகழ்.

௨௩௧. முதல்டிக்கு-கொடிய வில்வீரனாகிய அசுவத்தாமனும் அவன் மாமனாகிய கிருபாசாரியனும் என்க. மாழ்குற-மயங்க. கிருபாசாரியன் போயினான் என்றதனால் அவனுடன் பிரியாதிருக்கின்ற நண்பனாகிய கிருதவன்மனும் போயினான் என்பது உபலக்கணத்தாற் கொள்க. சஞ்சய ஆரியன் என்பது சஞ்சயாரியன் என நின்றது.

௨௩௫. வயிரம் என்றதனை வாய்மைக்குங்கூட்டுக. வாய்மை-வாக்கு. துரியோதனன் அசத்தியனாதலால் வாய்மை என்றதற்குமெய்ம்மைஎனக்கொள்ளற்க. அயிர் - கருமணல்.

௨௩௬. மொகுமொகு - ஒலிக்குறிப்பு. ஆமோதம்-வாசனை.

௨௩௭. கனன்மூன்றும் பரிசுத்தமும் ஒளியுமுடைமையாலதனை யுவமை கூறினார். மூவகை அக்கினி இராசசூயச்சருக்கம் ௱௬-ஆங்கவியுரையிற்காண்க.

௨௩௯. நள்ளென்கங்குல் - நள்ளென்னு மொலியினையுடைய இரவில், நடுவிரவு என்னுமாம்; ஐங்குறுநூற்றுரையிற்காண்க. விலோசனம்-கண்.

௨௪௰. ஆனமல்-அமையாமல். பானாள்-பாதிநாளிரவில். சேனாவிந்துமுதலேவரை நான்காம்போர்ச்சருக்கம் ௨௮-ஆங் கவியிலறிக. நா-வலி. மதுரைக் காஞ்சியுரையிற்காண்க.

௨௪௨. பானு என்றது கிரணத்தை. துப்பு-பவளம்.

௨௪௩. சிந்து-கடல். ஆகுலித்து - வருந்தி. அரற்றல்-அழுதல்.

௨௪௫. பாரிடம்-பூதம். முனை-முன்.

௨௪௬. முருகிதழிச்சுடர்- வாசனையுடைய கொன்றைமாலையைப் புனைந்த சோதிவடிவாகிய சிவபிரானென்க. குருகுகிரி என்றது கிரௌஞ்சகிரியை. குருகு-பறவை.

௨௪௭. அபாண்டவியம் - பாண்டவரைக் கருவறுப்பது ; இதனைப் பிரமசிரோஸ்திரமென்பர். வீமனும் அருச்சுனனுங் கோபமுற்று அசுவத்தாமனுடன் பொருது அவன் முடிமணியைக் கவர்ந்தாரென்றும், அசுவத்தாமன் அபாண்டவாஸ்திரத்தைப் பாண்டவரையும் அபிமன் மனைவி உத்தரையின் கருவையுமழிக்கவிட்டானென்றும், அது கிருட்டிணனருளால் வலியிழந்ததென்றும் முதனூல் விரிவாகக்கூறும். அடைவில்-முறையால். விடுமின்-(அசுவத்தாமன்மேற்கொண்ட கோபத்தை) விடுங்கள்.

௨௪௮. கொந்து-பூங்கொத்து ஆகுபெயராய் மலரென்க ; அன்றிக்கண்வாய் முதலியன மலர்போன்றிருத்தலாற் பூங்கொத்துப் போலலருமவர்முகமெனினுமாம். உலூகன்-உலூகமுனி.

௨௪௯. வித்தகன்-சதுரனாகிய திருதராட்டிரனென்க. ஆசி - வாழ்த்து. அத்தனாகிய கிருட்டிணனென்க. அத்தன்-உயர்ந்தோன். தூண்என்றது இரும்புத்தூணை. திருதராட்டிரன் பதினாயிரம்யானைப்பலமுடையவனாதலால் நெரித்தானென்க.

௨௫௰. மீள்வல் - செல்வேன் ; தன்மையொருமைவினைமுற்று. திரும்பிவருவேன் எனினுமாம். சாத்தகியு மலாயுதனுமேகினரென ௱௯௯-ஆங்கவியிற் கூறியதனாற் பின்பு தருமராசன் பேரரசாகுங்காலத்தில்வந்து கிருட்டிணனுடன் சென்றாரென்க. சீர்த்தி-மிகுபுகழுடனென்க. அங்கரில்வாழ்ந்த செயல்கழறுவாமே என்னும் பாடஞ் சிறப்புப் பாயிரத்திறுதியிற்காணப்படுங் கவிக்கியைபுடைமையறிக.

சௌப்திகபருவம் முற்றிற்று.

தற்சிறப்புப்பாயிரம்-௮-ஆங்கவியில், உமாதவன் சரிதமும் எனப்பொருள்கூறுவோர் அவ்வுமாதவன் சரிதங்குறித்த கவியின்றொகையிவை ; குருகுலச்சருக்கம்-௨, வாரணாவதச்சருக்கம்-௱௰௫, திரௌபதி மாலையிட்ட சருக்கம்-௮௰-ஆங்கவிமுதலாக ௮௫-ஆங்கவிவரை, இந்திரப்பிரத்தச்சருக்கம்-௪௨, அருச்சுனன்றீர்த்தயாத்திரைச் சருக்கம்-௰௩, ௰௫, ௰௭, ௰௮, ௨௰, ௭௨, இராசசூயச்சருக்கம்-௰௧, அருச்சுனன்றவநிலைச்சருக்கம் - ௩௩, ௩௭, ௪௰, ௭௩-ஆங்கவிமுதலாக ௱௩௰-ஆங்கவிவரை, புட்பயாத்திரைச் சருக்கம்-௱௩௯, மணிமான்வதைச்சருக்கம்-௮௫, நிரைமீட்சிச்சருக்கம்-௫௰, வெளிப்பாட்டுச்சருக்கம் ௰௯, பதின்மூன்றாம்போர்ச் சருக்கம்-௪௭, ௪௮, ௪௯, ௱௯௪, ௱௯௫, ௱௯௬, ௨௱௮-முதலாக ௨௱௨௩ வரை, பதினான்காம்போர்ச் சருக்கம்-௬௨, பதினைந்தாம்போர்ச் சருக்கம்-௪௪, பதினெட்டாம்போர்ச்சருக்கம்-௱௰௯, ௨௱௰, ௨௱௰௧, ௨௩௮, ௨௪௬ ஆங்கவிகளிற்காண்க. சங்கிரகமாகக் கூறிய நூலாதலாலிங்ஙனங்கூறினார். இந்நூலிற்கூறாத ஏனைய பருவங்களினிடையிடை அவ்வுமாதவன் சரிதங்கூறப்பட்டுள்ளதென்றுங்கூறுவர்.

இன்னுமவர்தாம் இந்நூலாசிரியர் சிவபத்தியுமுடையாரென்பதற்கு எடுத்துக்காட்டுங்கவியின்றொகையிவை ;

வாரணாவதச்சருக்கம் - ௫௫, இந்திரப்பிரத்தச்சருக்கம்-௪௨, அருச்சுனன்றீர்த்தயாத்திரைச்சருக்கம்-௰௮, ௭௨, ௯௰, இராயசூயச்சருக்கம்-௰௧, ௱௪௧, சூதுபோர்ச் சருக்கம்-௩௪, அருச்சுனன்றவநிலைச்சருக்கம் - ௩௪, ௩௩, ௫௫, ௫௭, ௬௬, ௮௭, ௱௭, ௱௮, ௱௰, ௱௰௨, ௱௰௩, நிவாதகவசர் காலகேயர்வதைச்சருக்கம்-௰௪, புட்பயாத்திரைச் சருக்கம்-௰, மணிமான்வதைச் சருக்கம்-௫௭, இக்கவிபோல இரண்டாம்போர்ச் சருக்கம்-௨௬-ஆங்கவியினுங் காண்க, ஆறும்போர்ச்சருக்கம்-௨௬, பதினொராம்போர்ச்சருக்கம் - ௨௩, பதின்மூன்றாம்போர்ச் சருக்கம்-௱௰௮, ௱௯௪, ௱௯௫, ௱௯௬, ௨௱௰௧, பதினைந்தாம்போர்ச்சருக்கம்-௨௯. ௪௩, பதினேழாம்போர்ச்சருக்கம்-௨௮, ௬௨, ௨௱௯, பதினெட்டாம்போர்ச்சருக்கம்-௨௱௰, ௨௩௮-ஆங்கவிகளிற்காண்க.

<u>மகாபாரத அரும்பதவுரை முற்றுப்பெற்றது.</u>

இங்ஙனம்,

சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்.

விஷயசூசிகை.

விஷயம்.	பக்கம்	கவி
அக்கினிக்கு எழுநாவுண்டென்பது,	௪௯௧	௧௫௩
அகத்தியமுனி யேழுகடலையுங் கையிலடக்கியது,	௩௭௪	௧௪
அகத்தியமுனி விந்தமலையைக் கீழேயழுத்தினது,	௨௯௬	௧௯௮
அகலிகை சாபந்தீர்த்தல், உலகளத்தல், சகடுதைத்தல், பாம்பின்மேலாடுதல் இவை திருமாலினவதாரங்களிலெவ்வொருவிளையாட்டென்பன,	௩௨௯	௧
அடைக்கலம்புகுந்தவர்க்கிடர்நினைப்போன் நரகடைவானென்பது,	௩௯௧	௪௮௩
அணைகட்டுவதற்குக் குரங்குகள் மலைகளைக் கடலிலிட்டனவென்பது,	௨௯௬	௨௦௦
அத்தினபுரியின் மதில்வட்டமெழுநூறுயோசனை தூரமுள்ளதென்பது,	௨௮௨	௭௧
அநேகவாயிரம் பேர்படவொரு கவந்தமாடுமென்பது,	௪௦௬	௪௮
அமுதங்கடைந்தபோது ஐராவதந் தோன்றியதென்பது,	௩௬௭	௪௫
அமுதங் கடைந்தபோது விடமெழத்தேவர்களோடினரென்பது,	௩௨௫	௩௦
அரக்கர்குலமாளச் சீதைபிறந்தது,	௪௫	௯௧
அரசன் வேட்டையாடுதல்,	௮	௩௪
அரிபிரமர் சிவபிரானடி முடி தேடியது,	௭௮	௧௮
அனுமான் சூரியனைக் கனியெனத் தாவிப்பற்றியது,	௨௭௩	௧௩
அனுமான் விஸ்வரூபத்தைக்காட்டியது	௧௮௯	௫௦
ஆசிரியனைக் கடவுளாகக் கொள்ளல்வேண்டுமென்பது,	௨௦	௧௩௯
ஆடவர்க்கிடந் துடித்த லவசகுனமென்பது,	௩௮	௧௫௬
ஆடவர்க்கு வலப்புயந்துடித்தல் நற்குறியென்பது,	௭	௧௯
இந்திரன் மலைகளின் சிறகரிந்தது,	௬	௧௦
இந்திரனும், வலாசுரனும் போர்செய்தாரென்பது,	௩௪௦	௬
இரணியன், இரணியாக்கன், இராவணன், கும்பகன்னன், கஞ்சன் இவர்களைத் திருமால் கொன்றாரென்பது,	௧௦௨	௬௭
இரதகுளிகையாலிரும்பு பொன்னாகுமென்பது,	௪௨௦	௧௬௫
இரவலர், இளையவர், நாவலர், தூதுவர், விருத்தர், வேதியர், அரிவையர், சமர்க்கஞ்சுவோர், குரவர் இவர்களைக் கோறல் பாவமென்பது,	௨௫௪	௭௪
இராமபாணங் கடலிற்சென்றது,	௪௮௨	௭௪
இராவணன் கைலையையெடுத்தது,	௬௪	௫௩
இராமாவதாரத்தில் கரன்முதலோரையும், வாலியையும், மராமரத்தையும், கடலையுமூடுருவிச் செல்லச் சரந்தொடுத்தது,	௮௧	௪௫
இராமாவதாரத்தில் தம்பிக்கரசாட்சிகொடுத்து வனவாசமுற்றுப் பின்புவந்து அரசாட்சிபெற்றது,	௧௪௩	௨௭௫
இராமாவதாரத்தில் தாடகையைக்கொன்றது,	௩௬௨	௧
இராமாவதாரத்தில் துந்துபியெனும்பைக்கானகத்தாற்றள்ளியது,	௨௯௬	௧௯௭
இராமாவதாரத்தில் மிதிலையில் வில்லொடித்தது,	௩௦௭	௧
உமாதேவி காஞ்சியின் முப்பத்திரண்டறம் வளர்த்தது,	௭௭	௧௩
உருப்பசி திருமாலின்றொடையிற் பிறந்தது,	௬	௧௩
உள்ளங்கை நெல்லிக்கனியோருபமானமாகக் கூறப்படுமென்பது,	௩௩௮	௧௧
உறுதிகூறியதற் கறிகுறியாகக் கையறைதன்மரபென்பது,	௨௮௭	௧௨௦
உறையிடுவதோர் குறிப்புத்தொகையுண்டென்பது,	௪௦௬	௪௭

விஷயம்.	பக்கம்	கவி
கஜேந்திரனென்னும் யானை முதலைவாயிலகப்பட்டது,	௩௩௯	௨௫
கடலைக்கடைவதற்கு மந்தர மலை மத்தாயிருந்ததென்பது,	௨௯௬	௧௯௯
கதைகொண்டு போர்செய்வோர் கடிதடத்துக்குமேலடிக்கவேண்டுமென்பது,	௪௯௬	௧௯௨
கந்தருவமணம்,	௭	௧௯
கவந்தமநேகமாயிரமாடச் சிலையிற்கட்டியமணி யொருகுரலார்க்குமென்பது,	௪௦௬	௪௮
களப்பலிகொடுத்தற் குறியவன்றனாகவே முப்பத்திரண்டவயவங்களினுந் தசையைக்கொய்துகொடுக்கவேண்டுமென்பது,	௩௦௮	௭
கன்னன் பிற்பகலிற் கொடானென்பது,	௩௪௫	௨
காவிரிநதியிற் புதுநீர்வருதற்கு வரிமணல் குறிகாட்டுமென்பது,	௪௫௦	௬௫
கிருட்டிணன் கஞ்சன்விட்டயானையின் கொம்பைப் பிடுங்கினது,	௩௩௯	௨௫
கிருட்டிணன் கற்பகத்தையந்தப்புரத்திற் கொண்டுவந்து வைத்தது,	௬௨	௪௧
கிருட்டிணன் கன்றால் விளவெறிந்தது,	௬௫	௬௨
கிருட்டிணன் சராசந்தனுக்குத் தோற்றோடினது,	௯௭	௨௧
கிருட்டிணன் சிவபிரானுக்குத் திருவிழாச் செய்தது,	௮௪	௭௨
கிருட்டிணன் தயிர்த்தாழிக்கும் வீடுசொடுத்தது,	௩௨௭	௧௫
கிருட்டிணன் பேய்முலையுண்டுயிர்குடித்தது,	௨௧	௧
கிருட்டிணன் மருதமரங்களிடைத் தவழ்ந்தது,	௮௫	௮௯
கிருட்டிணன் மல்லரிருவரைச் செயித்தது,	௨௮௯	௧௩௧
கிருட்டிணன் மழையைத்தடுத்து ஆனிரைபுரந்தது,	௮௯	௬
கிருட்டிணன் மாமனாகிய கஞ்சனைக்கொன்றது,	௬௨	௪௧
கிருட்டிணன் வடமதுரையில் வில்லொடித்தது,	௩௦௭	௧
கிருட்டிணன் வாணாசுரனைவென்றது,	௨௭௪	௪
கிருட்டிணன் விடையேழடர்த்தது,	௪௯௦	௧௪௬
கிருட்டிணன் வேய்ங்குழலூதியது,	௪௯௦	௧௪௬
கிரௌஞ்சகிரியை வேல்துளைத்த துவாரத்தின்வழி யக்கினிவந்ததென்பது,	௩௨௮	௨௭
குக்கிலிடந் தாவுதலுங் கலையெதிர்தாவுதலு மவசகுனமாமென்பது,	௧௨௨	௯௦
குதிரை ஆளின் மனமுதலியவற்றையறியுமென்பது,	௧௨௧	௮௨
குதிரை சுற்று நீளமுமுயரமு நிகராயிருக்க வேண்டுமென்பது,	௧௨௧	௮௧
குதிரைமுரசு சங்கமிவற்றினொலிபோலொலிக்குமென்பது,	௧௨௧	௮௧
குதிரையைங்கதியுடைத்தென்பது,	௧௨௧	௮௧
குதிரையொன்பது கதியுடைத்தென்பது,	௪௦௬	௪௭
குபேரன் விமானம் புட்பகமென்பது,	௨௧௨	௯௧
குரவரைவைவது கொலையிற்கொடியதென்பது,	௪௬௬	௨௦௭
குறமாதர் குன்றிமணிவடமும், புலிப்பற்றாலியும், அகிற்சாந்தும், தழையுடுக்கையும் புனைவாரென்பது,	௧௫௪	௮௬
கூகையிராக்காலத்திற் காக்கையைவெல்லுமென்பது,	௪௯௮	௨௦௫
கோபஞ்செய்தல், பிறர்குற்றங் கூறல், சிநேகித்தபின்னையுறல், சூதாடுதல், சபதந்தவறுதல் இவை தீயனவென்பன,	௧௩௦	௧௬௨
சந்திரகாந்தக்கல் சந்திரனைக்கண்டாலுருகுமென்பது,	௨௪௦	௫௫
சந்திரன் அக்கினியிற்பிறந்தது,	௫	௫
சந்திரன் அத்திரிமுனிவர் கண்ணிற்பிறந்தது,	௫	௫
சந்திரன் அமுதுடன் பிறந்தது,	௫	௪
சந்திரன் சிவபிரான் சடைமுடிமேலிருந்தது,	௫	௨
சந்திரன் திருமாலிதயத்திற்றோன்றியது,	௫	௧
சந்திரன் பதினாறுகலையுள்ளவனென்பது,	௫	௫
சந்திரன் பிறப்பிடமைந்தென்பது,	௧௨௧	௭௮

விஷயம்.	பக்கம்	கவி
சபையிலொருபக்ஷம் வழக்குரைத்தோர் நரகம்புகுவாரென்பது,	௩௯0	௧௮0
சராசந்தன் கிருட்டிணனைவென்றது,	௬௨	௪௩
சிவபிரான் சுந்தரமூர்த்திநாயனாரையடிமைகொள்ள ஆவணமெழுதியது,	௭௭	௧௭
சிவபிரான் திரிபுரமெரித்தது,	௧௫௪	௮0
சிவபிரான் திரிபுரதகனஞ்செய்யும்போதுய்ந்தவர் மூவரென்பது,	௪௯	௧௩௧
சிவபிரான் திரிபுரதகனஞ்செய்தபொழுது மேருவில், வாசுகிநாண், அரியத்திரமாகக் கொண்டாரென்பது,	௩௨௪	௨௬
சிவபிரான் நெற்றிக்கண்ணான் மதன்வெந்தநங்கனானென்பது,	௮௬	௯0
சிவபிரான் பிரம விட்டுணுக்களிருவருங் காணமுடியாதவரென்பது,	௧௫௧	௫௭
சிவபிரான் பிரமன்றலையைக்கிள்ளியது.	௪௨௯	௨௯
சிவபிரான் மேருமலையை வில்லாகவெடுத்தது,	௬௪	௫௫
சிவபிரான் யானைத்தோலைப் போர்த்தியது,	௩௩௯	௨௬
சிவபிரான் வடிவஞ் சங்கீதவடிவமுமாமென்பது,	௪௯௮	௨௧0
சிவபிரான் விடத்தையுண்டு கண்டத்தில்வைத்தது,	௪௪௫	௨0
சிவபிரான் வில் பினாகமென்பது,	௪௨௯	௨௯
சிவபிரானுக்கு நெற்றிக்கண்ணக்கினியென்பது,	௪௫	௯௧
சிவபிரானுக்குரிய மந்திரம் பஞ்சாக்கரமென்பது,	௧௪௯	௩௭
சிவபிரானுக்கு வலக்கண் சூரியனென்பது,	௪௪௯	௬0
சிவபிரானைத் தியானிக்குமடையாளங்களிவையென்றல்,	௧௫௨	௬௫
சிவபிரானை மதனெய்தது,	௬௬	௭௬
சிவபூசைசெய்யுமுன் புசிக்கலாகாதென்பது,	௩௯௨	௧௯௪
சிறியவர்செய்த தீமை பொறுப்பது பெருமையென்பது	௨௬௧	௧௩௪
சூரியன் பகைவர் மந்தேகரெனனுமசுரர்களென்பது,	௩௪௪	௩௩
சூரியன்றேர்ப்பாகனுக்குக் காலில்லையென்பது,	௨௩௬	௨0
செய்ந்நன்றிகோறன் மாபாதகமென்பது,	௩௬௧	௪௩
சொன்னவாறுசெய்தல் பிரமனுக்கு முடியாதென்பது,	௪00	௨௫0
தந்தையுடன்றகாதவுரை கூறுவோன் நரகடைவானென்பது,	௩௯௧	௪௮௧
தாய்பசித்திருக்கக்கண்டுந் தன் பசிதணிப்போன் நரகடைவானென்பது,	௩௯௪	௪௮௨
தாரகனு முருகவேளும் போர் செய்தாரென்பது,	௩௪0	௬
திரிமூர்த்திக்கும் வடிவாயுள்ளவன் சூரியனென்பது,	௪௬௫	௨00
திருமால் அன்பருக்குக் காக்ஷி தருந்திருக்கோலம்,	௪௭௧	௨௪௭
திருமால் அன்னவடிவமாயிருந்து வேதங்களையுரைத்தது,	௨௧௬	௧௧
திருமால் வயிரவரிரப்பொழித்தது,	௨௭௫	௧௫
திருமால் நரசிங்கமாகியிரணியனைக்கொன்றது,	௫௨	௧௫
திருமால் மாவலியைச் சிறையில் வைத்தது,	௧௬0	௧௩௭
திருமால் முதலையாற் பிடிக்கப்பட்ட யானையைக்காத்தது,	௪௧	௫௨
திருமால் மேலுலகளந்த திருவடியாற் கங்கையைத்தந்தது,	௧0௪	௭௯
திருமால் வராகவதாரமாகிச் சிவபிரானைத்தேடியது,	௧௫௪	௮௭
திருமால் வராகாவதாரமாகி நரகாசுரனைக் கொன்றது,	௫௪	௩௧
திருமால் வராகாவதாரமாகிப் பூமியிடந்தது,	௩௨௩	௧௬
திருமாலாலிராகு தலைவேறுடல்வேறானது,	௩௧௫	௨௫
திருமாலுக்காயிரநாமமுண்டென்பது,	௧௪0	௨௪௮
திருமாலுக்குப் பன்னிருநாமமுண்டென்பது,	௧௪௪	௨௮0
துரியோதனனிரதம் எழுதட்டுடையதென்பது,	௪௧௧	௯௧
துரியோதனனுக்குரிய வரசர் லக்ஷத்துப் பதினோராயிரவரென்பது,	௨௮௫	௧00
தேவாரப்பதிகமெழுதப்பட்டவேடு வையையாற்றினெதிர் சென்றதென்பது,	௭௮	௨0

விஷயம்.	பக்கம்	கவி
நகுடனென்னுமரசன் பெரும்பாம்பானது,	சு	கரு
நளமகாராசன் சூதாடித்தோற்றது,	கசஎ	உச
நீதிமுறையழியக் குடிகள்வருந்தப் பொருள்வெஃகுமரசர் நரகம்புகுவாரென்பது,	ஙசுக	சக
நீரிற்றுரியோதனன் மறைந்துழிச்செய்த யோகநிலை,	சஅசு	(க௦ச, க௦ரு.)
பகீரதன் கங்கையைக்கருதித் தவஞ்செய்தது,	கசகூ	சஉ
பஞ்சாக்கினி மத்தியிற்றவஞ்செய்தல்,	கசகூ	(ஙஅ, ஙகூ.)
பட்டமரங்களுமிசையாற்றளிர்க்குமென்பது,	ஙகூச	உ௦ரு
பரசுராமனாற் சூரியகுலவரசர் மடிந்தகாலத்து, அவ்வரச மங்கையர் முனிவர்களைச்சேர்ந்து பிள்ளைகளைப் பெற்றாரென்பது,	உஉ	ரு
பரசுராமனிருபத்தொரு தலைமுறையரசரையழித்து நரமேதவேள்விசெய்தது,	சகூக	கருங
பரணிபாடுதல்,	உஅகூ	கஙச
பராசரமுனி மச்சகந்தியைக்கூடியது,	உஉ	சு
பலராமன் யமுனாநதியைக் கலப்பையாயுதத்தாற் பிளந்தது,	சுஉ	ச௦
பாண்டியன் கடல்வடிம்பலம்பநின்றானென்பது, அருச்சுனன்றீர்த்தயாத்திரைச் சருக்கம் ஙசு-ஆங்கவியினுங்காண்க,	சஉஅ	கஅ
பாண்டியன் சங்கப்பலகையுடையானென்பது,	சஙஎ	சக
பாண்டியன்மலையாகிய பொதியத்திலகத்தியமுனியிருந்தது,	சருசு	ககங
பாண்டியன் முத்தமிழுடையானென்பது,	சருரு	கக௦
பாண்டியன் மேருமலையைச் செண்டாலடித்தது,	ஙகஎ	சங
பாண்டியனொருநகர் கொற்கையென்பது,	சருசு	கஉ௦
பிரமாண்டமொன்றழிந்தா லுரோமசமுனிக்கு முன்கைமயிரொன்றுதிருமென்பது,	கஅங	கசு௦
பிறன்மனையாளை விரும்புவோன் நரகடைவானென்பது,	ஙசுக	சஉ
பூமி சமமாகும்படி யகத்தியமுனிவர் தெற்கிருந்தாரென்பது,	க௦க	சு௦
பெண்கட்கிடத்தோள் துடித்தல் நற்குறியென்பது,	உரு	ஙசு
பெண்களான் மலரும் மரங்கள் பத்தென்பது,	அசு	சு
போரிலிறந்தவீரர் சூரியமண்டிலத்தைப்பேதித்து வீரசுவர்க்கஞ்செல்லுவாரென்பது,	ஙஉ௦	எ௦
மகத்தில்வந்தசனி கொடுந்துன்பஞ்செய்வானென்பது,	ஙசுக	ச௦
மதனும், சம்பரனும் மலைந்தாரென்பது,	சஅக	எ௦
மனைவி அயலாரைச் சேர்தல் கண்டும் அவள்கையாலிட்டவுணவுண்போன் பாவியென்பது,	ஙசுக,	கஅச
மார்க்கண்டமுனி சிவபிரானை வழிபட்டது,	ருரு	சஎ
மானுடத்தலை விலங்குண்டென்பது,	ஙஉஅ	உஎ
முருகவேள் கிரௌஞ்சகிரியை வேலினாற்றுளைத்தது,	உகூசு	ககூசு
முனிவருந் தாயரைவணங்குவாரென்பது,	உஉ	க௦
மேகங்களிற் புட்கலாவர்த்தஞ் சிறந்ததென்பது,	அ	உஅ
மேகங் குருதிபொழிதல், நட்சத்திரம் பகலில் விளங்குதல், பூகம்பமாதல் இவை பின்வருந்தீங்கை யறிவிக்குங் குறிகளென்பது,	கஙஅ	உஉஅ
மேருமலை தேவர்கட்காலயமென்பது,	ஙஙசு	உங
மேருவின் மூன்று சிகரங்களை வாயு பெயர்த்தெறிந்தது,	கூஅ	உரு
மைந்நாகமலை கடலிலொளித்தது,	ஙசு	கங
யந்திரத்தாலாகிய அன்னப்பறவையின்மேலேறிச்செல்லுதலக்காலத்திலுண்டென்பது,	ங௦எ	ச
யானைக்கு நடமுதலிய நான்கு தொழிலுண்டென்பது,	சஙங	க௦
யானைக்குப் பாகலமென்னுநோய் வருமென்பது,	ஙஅகூ	௱ருகூ
யானைக்குறுப்பேழுந்தாழ்ந்திருக்கவேண்டுமென்பது,	கஉக	எகூ
யானைமுகாசுரனுடன் விநாயகர் போர்செய்தது,	ஙஙகூ	உஎ
யானை மூவகையிடத்திற் பிறக்குமென்பது,	கஉக	எகூ

விஷயம்.	பக்கம்	கவி
யானையுரத்தின் முச்சுழியுண்டென்பது,	௪௩௩	௯
யானையேழுறுப்பினின்று மதமொழுகுமென்பது,	௧௨௧	௭௯
யானையொன்பதுறுப்பினாற் கொல்லுமென்பது,	௪௩௩	௧௩
யோகத்தினாலுயிரைநீங்காமனிறுதிக்கொள்ளலாமென்பது,	௩௫௪	௩௮
வாயுவுக்குக் கலைமான் வாகனமென்பது,	௧௧	௫௭
வாலியுஞ் சுக்கிரீவனு மலைந்தாரென்பது,	௪௭௬	௨௫
விநாயகர் மேருமலையிற் பாரதகதையை யெழுதியது,	௪	௧
வீரர் புறக்கவ்வினாற்றோற்றாரென்பதற்கறிகுறியென்பது,	௩௪௬	௫
வேதத்திலும், ஆகமத்திலும், பஞ்சாக்கரமும் விபூதியுங்கூறப்பட்டுள்ளனவென்பன,	௧௪௯	௩௭
வைகுண்டத்திற்றுவார பாலகரிருவரும்,இரணியன்இரணியாக்கனாகவும், இராவணன் கும்பகன்னனாகவும், கஞ்சன் சிசுபாலனாகவும் மூன்று பிறப்பெடுத்துத் திருமாலைப் பகைத்து முத்தியடைந்தாரென்பது,	௧௧௧	(௱௪௬-முதல் ௪௯-வரை).

உ

அபிதான அகராதி.

	பக்கம்	கவி
அங்கரா	௪௦௮	௬௬
அங்கிவேசமுனி	௩௯	௩௮
அச்சுவசேனன்	௯௨	௪௧
அசோதை	௨௧௬	௯
அஞ்சனபன்மன்	௪௨௧	௧௭௮
அஞ்சனை	௩௦	௭௬
அட்டகோணமுனி	௨.௦௨	௨௫
அத்தி	௮	௨௮
அத்திரிமுனி	௫	௫
அதிதி	௨௫	௩௫
அபிமன்	௮௫	௮௬
அம்பாலிகை	௧௯	௧௨௮
அம்பிகை	௧௯	௧௨௮
அம்பை	௧௯	௧௨௭
அமித்திரமுனி	௨௧௭	௧
அலம்புதன்	௩௪௩	௨௧
அலாயுதன்	௪௨௩	௧௯௪
அனுமன்-இராமதூதன்.	௩௦	௭௬
ஆட்கொண்டான்- இந்நூலையாக்குவித்தோன்; காண்டவதகனச்சருக்கம்-௫௦, நிரைமீட்சிச்சருக்கம்-௧௦௪, பதினாறாம் போர்ச்சருக்கம்-௯௦, பதினேழாம்போர்ச்சருக்கம், ௩௩- ஆங்கவிகளிற்காண்க.		
ஆயிரவாகு	௪௦௫	௩௮
ஆயு	௬	௧௩
இடிம்பன்	௫௧	௪
இடிம்பை	௫௧	௯
இந்திரசித்து	௨௦௯	௫௯
இந்திரவன்மா	௪௨௮	௧௯
இயக்கி	௨௧	௧௪௫
இரணியன்	௧௦௨	௬௭
இரணியாக்கன்	௪௦௨	௬௭
இரவிமைந்தரிருவர்- தேவமருத்துவராகிய தத்திரன், நாதத்தியன் என்பார்.	௩௧	௮௫
இராகு	௩௧௫	௨௫
இராம ராவணர்	௩௪௦	௬
இராவான்	௭௭	௯
இலக்கணகுமரன் - துரியோதனன் மகன்.	௩௫௯	௨௦
இளா	௫	௭
உத்தமன்முதலொன்பதின்மர் துரியோதனன்றம்பியர்	௪௮௩	௮௪
உத்தமோசா-உத்தமபானு.	௩௦௪	௩
உத்தரன்	௨௪௯	௨௫
உத்தரை	௨௩௦	௨௦
உதாசனன்	௮௮	௪
உதாமன்	௩௦௪	௩
உதிட்டிரன்-தருமன்.	௨௯	௬௮
உபயாசமுனி	௪௪	௮௫
உருத்திரசேனன்	௧௯௭	௧௧௯
உருப்பசி	௬	௧௦

	பக்கம்	கவி
உருமித்திரன்	௩௭௯	௭௩
உரோகிணி	௨௪	௨௪
உரோமசமுனி	௧௮௩	௧௬௦
உலூகமுனி	௧௦௨	௬௮
உலூபி	௭௬	௮
உழை	௨௫	௩௪
ஏகலைவன்	௪௦	௫௦
கங்கை	௮	௩௪
கஞ்சன்	௩௩௯	௨௫
கடோற்கசன்	௫௪	௩௦
கயமுனி	௪௮௫	௧௦௧
கரன்	௧௯௫	௧௦௪
கன்னன்	௨௬	௪௨
காசிபமுனி	௩௩	௧௦௭
காம்போசன்	௪௦௩	௧௮
காமபாலன்	௨௬௭	௩
கார்த்தவீரியன்	௨௦	௧௪௦
காலகேயர்-காலகையின் புத்திரர்.	௧௭௭	௧௦௯
காலகை	௧௭௭	௧௦௬
காளமுனி	௨௨௦	௪
காளி-பரிமளகந்திக்கொரு பெயர். ஆதியிற் சத்தியவதியென்றுபெயராம்.	௧௬	௧௦௦
காளிந்தி	௧௫	௯௦
காளியன்	௨௨௮	௧
கிந்தமமுனி	௨௭	௫௧
கிரிகை	௧௬	௧௦௪
கிருதவன்மன்	௨௭௧	௧௮
கிருபமுனி	௩௮	௨௯
கீசகன்	௨௩௫	௧௪
குண்டலன்	௩௬௩	௯
குண்டலபோசன் முதலெழுவர் துரியோதனன்றம்பியர்	௩௪௪	௩௦
குண்டலபோசிமுதன் மூவர்கள் துரியோதனன்றம்பியர்கள்	௪௧௪	௧௧௮
குந்திபோசர்	௨௪	௨௫
குந்திபோசன்-குந்தியை வளர்த்த பிதா; இவன்மைந்தரிருவர் மைந்தன், சுமந்தன் என்பவர்.	௪௨௨	௧௮௩
குரு	௮	௩௧
குறுமுனி	௬	௧௫
கேதுதரன்	௪௭௮	௩௬
கேமதூர்த்தி	௪௩௪	௧௪
கைகயன்	௪௩௭	௪௬
கோதமமுனி	௩௮	௨௯
கௌரிமா	௩௦௬	௨௦
சக்கிரதேவன்	௩௨௩	௧௨
சகுனி	௬௨	௩௭
சங்கன்	௪௫௮	௧௩௨
சங்கோடணன்	௧௯௬	௧௧௦
சஞ்சத்தகர்	௩௬௧	௪௦
சஞ்சயமுனி	௨௭௨	௨
சடாசுரன்	௨௦௦	௬
சண்டகௌசிகமுனி	௯௮	௩௩
சத்தியகேது	௩௬௩	௧௪
சத்தியசேனன்	௪௩௯	௬௫
சதசிருங்கமுனி	௩௩	௧௦௭
சதாயு	௪௦௫	௩௭
சதானிகன்	௩௦௪	௪
சந்தனு	௮	௩௩
சம்பரன்	௪௮௧	௬௦
சம்புமாலி	௧௬௮	௨௭
சம்புவன்	௧௬௮	௨௭
சயத்திரதன்	௩௫௨	௧௭
சராசந்தன்	௬௨	௪௩
சரை	௯௯	௩௫
சல்லியன்	௬௩	௪௫
சன்மிட்டை	௭	௨௦
சாத்தகி	௬௨	௪௨
சாதேவன்	௩௧	௮௭
சாதேவன்முதலெழுவர் துரியோதனன்றம்பியர்	௪௫௨	௮௩
சாயை	௨௫	௩௪
சாலிகோத்திரமுனி	௫௩	௨௬
சாலுவன்-சாளுவதேசவரசன்.	௧௯	௧௨௭
சாலேந்திரன்-குபேரன் படைத்தலைவரிலொருவன்.	௨௦௪	௨௧
சிகண்டி	௨௧	௧௪௬
சிங்கசேனன் - பாஞ்சாலர்களிலொருவன்.	௪௫௪	௧௦௦
சிசுபாலன்	௬௨	௪௨
சித்திரசேனன்- தேவர்வகுப்பிலொருவன்.	௧௬௭	௨௨
சித்திரசேனன்	௩௩௯	௨௦
சித்திரசேனன்	௪௩௯	௬௭
சித்திரவாகனன்	௭௮	௨௬
சித்திரவாகுமுதலைவர் துரியோதனன்றம்பியர்	௪௮௩	௮௦
சித்திராங்கதன்	௧௭	௧௧௨
சித்திராங்கதை	௭௮	௨௬
சிவேதன்	௨௬௪	௧௭
சுகமுனி	௪	௫
சுதக்கணன்	௪௦௩	௨௦
சுதாயு	௩௪௦	௪
சுதேட்டிணை	௨௩௪	௧
சுந்தரன்முதலெண்மர் துரியோதனன்றம்பியர்	௩௪௧	௬
சுந்தோபசுந்தர்	௭௫	௪௩
சுபத்திரை	௮௨	௫௪

	பக்கம்	கவி
சுபலன்	௨௯	௭௧
சுமித்திரன்	௪௭௮	௩௮
சுயோதனன்-துரியோதனன்.	௩௦	௭௮
சுருதகீர்த்தி	௪௩௭	௪௬
சுவாகு	௪௫௮	௧௩௨
சுவாது	௪௫௮	௧௩௨
சுவாகை	௧௦௭	௧௦௮
சூசி-துரியோதனன்றம்பி.	௪௨௧	௧௭௭
சூரன்-தேவமீடன் மகன்; வசுதேவன்றந்தை.	௨௪	௨௫
செயகந்தன்முதலெழுவர் துரியோதனன்றம்பியர்	௪௮௩	௭௮
செயன்	௩௬௯	௬௯
சேடன்	௭௬	௭
சேரன்	௬௩.	௪௫
சேனவிந்துமுதலைவர் துரியோதனன்றம்பியர்	௩௩௨	௨௮
சோமகர்	௪௩	௭௮
சோமகேசன்	௬௮	௮௮
சோமவரதத்தன்	௩௧௦	௧௯
தக்ககன்	௮௮	௫
தசாங்கமுனி	௧௮௪	௮
தாடகை-இராவணன் பாட்டி.	௩௬௨	௧
தாரகன்	௩௪௦	௬
திங்கள்-சந்திரன்.	௫	௧
திட்டகேது	௩௦௪	௩
திட்டத்துய்மன்-யாகசேனன் மகன்.	௬௧	௩௦
திதி	௧௭௩	௭௭
திரிகர்த்தராசன்	௨௪௭	௮
திருதராட்டிரன்	௧௧௯	௬௩
திலோத்தமை	௭௫	௪௩
துச்சளை	௩௦	௮௦
துச்சனி	௩௮௩	௧௦௮
துச்சாதனன்	௬௨	௩௬
தும்புரு	௯௬	௯
துருபதன்	௫௮	௧
துருவன்	௪௨௭	௧௨
துருவாசமுனி	௨௪	௨௬
துரோணமுனி; இம்முனி பிள்ளை அசுவத்தாமமுனி.	௩௮	௩௨
துன்மருடணன்-துன்மருடன் என்றும்பெயருண்டு, பன்னிரண்டாம்போர்ச் சருக்கம் - ௰௨-ஆங்கவியிற்காண்க.	௩௧௦	௧௯
துன்முகன்	௩௬௩	௧௨
தென்புலத்தவர்	௨௨	௨
தேவவிரதன்-வீடுமன்.	௧௪	௮௭
தௌமியமுனி	௫௯	௯
நகுடன்	௬	௧௪
நகுலன்	௩௧	௮௭
நந்தி-திருநந்திதேவர்; ௧௩-ஆம் போர்ச்சருக்கம், ௨௦௮-ஆங் கவியுரையிற்காண்க.	௧௫௪	௮௬
நந்திசேனமுனி	௨௧௪	௧௧௭
நரகாசுரன்	௫௪	௩௧
நரன்-விசயன்.	௧௫௩	௭௫
நளன்	௧௪௭	௨௪
நாரணமுனி	௨௦௨	௨௩.
நாரதமுனி	௭௫	௪௧
நாராயணகோபாலர்	௩௬௨	௬
நாளாயனி	௬௬	௭௩.
நான்முகன்	௧௧	௫௬
நிருபதமுனி	௪௪௪	௧௩
நிவாதகவசர்	௧௬௬	௧௫
நீலன்	௬௩	௪௫
பகன்	௫௫	௩௯
பகதத்தன்	௬௨	௪௪
பகீரதன்	௧௪௯	௪௨
பங்குனன்-விசயன்.	௩௧	௮௩
பரதன்	௮	௨௬
பரத்துவாசமுனி	௩௮	௩௨
பராசரமுனி	௨௨	௬
பலராமன்	௬௨	௪௦
பன்னவாதை	௪௦௫	௩௫
பாண்டு	௨௩	௧௭
பார்த்தன்முதலிய பத்துப்பெயர்	௮௦	௪௧
பானு-சூரியன்.	௨௫	௩௧
பிரதை-சூரன் மகள்; குந்திபோசன் அபிமானபுத்திரி.	௨௪	௨௫
பிராதிகாமி - துரியோதனன்றேர்ப்பாகன்.	௧௩௬	௨௧௦
பிருதன்-துரியோதனன்றம்பி.	௪௨௧	௧௭௭
புகரவன்	௭	௧௭
புண்டரீகன்	௧௯௧	௭௨
புதன்	௫	௬
புருகூதன்	௪	௨
புரூரவா	௬	௯
புரோசனன்	௪௭	௧௦௭
புலத்தியமுனி	௨௧௩	௯௮
புலோமசை	௬	௧௫
புலோமை	௧௭௭	௧௦௬
பூரி	௩௦௬	௨௦
பூரிசிரவா	௩௧௦	௧௯
பூரு	௭	௨௦
மணிமான்	௨௦௪	௧௮
மதனன்	௬	௯
மதுகைடவர்	௪௧௬	௧௩௨.
மந்தேகர்	௨௮௪	௮௭

	பக்கம்	கவி
மநு-வைவசுவத மநுவென்னு மரசனென்பர்.	௫	௭
மயன்	௯௪	௫௬
மரீசிமுதலெழுமுனிவர்	௪௨௭	௧௩
மருத்து	௧௧	௫௮
மாத்திரி-மத்திரன் புத்திரி.	௩௨	௯௫
மாதலி-இந்திரன் சாரதி.	௧௬௦	௧௩௪
மாதவன்	௫	௧
மாவலி	௩௨௭	௧௮
முருகன்	௬	௯
மூகன்	௧௫௪	௭௯
மேனகை	௧௫௦	௫௦
மேனை	௧௫௩	௭௪
மௌற்கல்லியன்	௬௬	௭௩
யமதங்கிமுனி	௨௦	௧௩௪
யமன்	௧௬	௧௦௫
யமுனை	௧௬	௧௦௫
யாகசேனன்	௩௯	௩௭
யாசமுனி	௪௪	௮௫
யயாதி	௭	௧௭
வசு	௧௬	௧௦௪
வதிட்டமுனி - வசிட்டமுனி; ௰௨ - ஆம்போர்ச் சருக்கம் ௩௯-ஆங்கவியினுங்காண்க.	௨௯	௬௮
வயினதேயன்	௩௯௩	௨௦௩
வராககேது	௩௦௪	௪
வருணன்	௧௧	௫௯
வலன்	௩௪௦	௬
வழுதி-பாண்டியன்.	௬௩	௪௫
வளவன்-சோழன்.	௬௩	௪௫
வாணாசுரன்	௨௭௪	௪
வாசுகி - அட்டநாகங்களிலொன்று.	௩௬	௧௫
வாலசேனன்	௧௯௪	௯௬
வாலவீமன்	௪௨௬	௪
விகத்தசேனன்	௩௦௬	௨௨
விகருணன்	௧௩௯	௨௩௭
விசால்யமுனி	௧௮௪	௧௦
விசித்திரவீரியன்	௧௭	௧௧௨
விசுவகன்மா	௭௧	௯
விடசெயன்	௩௬௯	௬௯
விடதன்; இவனுக்கு விடதரன் என்றும்பெயருண்டு.	௪௦௩	௨௦
விடபருவன்	௯௫	௪
விண்டுசிந்தமுனி	௨௨௦	௨
விதுரன்	௨௪	௨௦
விந்தன்முதலைவர்-உபபாண்டவர்,	௩௦௪	௫
விந்தன், விந்தானிருவர் துரியோதனன்றம்பியர்.	௪௧௪	௧௧௭
விந்தரன்	௩௧௭	௩௭
விந்தரன், விந்தனிருவர்.	௩௦௫	௧௭
விந்து-விந்துராசன், என்று கூறுவதன்றி துரியோதனன்றம்பியெனினுமாம். இதனைப் பதினெட்டாம்போர்ச் சருக்கம், ௭௮-ஆங்கவியிற்காண்க.	௩௭௭	௪௦
விந்தை	௮	௩௦
வியாசமுனி - இம்முனிவரவினை, இந்நூலுள் சம்பவச்சருக்கம்-௭, ௯, ௧௮, ௫௮, ௭௧, வேத்திரகீயச் - ௨௫, திரௌபதி மாலையிட்ட ச-௫, ௭௧, இராயசூயச்-௯௪, அருச்சுனன்றவநிலைச்-௨௦, பதின்மூன்றாம்போர்ச்-௧௬௮, பதினைந்தாம்போர்ச்-௪௨, பதினெட்டாம்போர்ச்-௨௩௭ ஆங் கவிகளினுங்காண்க.	௪	௬
விராடன்-மச்சதேசாதிபதி.	௧௧௨	௧௫௩
விருடசேனன்	௩௧௦	௨௦
வீமன்	௩௦	௭௬
வேழமுகாசுரன்	௬௯	௧௦௨

—:o:—

தொகையகராதி.

	பக்கம்	கவி.
அட்டகசம் - மற்போர்ச்சருக்கம் உ-ஆங்கவியுரையிற்காண்க.	௧௯௫	௧௦௩
அட்டதிசை-கிழக்குமுதலியன பிங்கல நிகண்டிற்காண்க.	௮	௨௯
அட்டவசுக்கள்	௧௨	௬௩
அறுவகைத்தானை	௧௧௦	௧௩௨
அறுவகையுட்பகை	௨௭	௫௪
ஆறுசமயம்	௩௪௫	௧
ஆறுபருவம்	௭௫	௪௬
இருபிறப்பாளர் - பதினேழாம் போர்ச்சருக்கம் க-ஆங்கவியுரையிற்காண்க.	௫௪	௩௬
இருபொழுது-இராப்பகல்.	௭௨	௧௪
இருவர் மருத்துவர்	௩௧	௮௫
எழுதீவு	௧௦௮	௧௪௫
எழுவகைப் பருவமாதர்	௧௦௩	௭௭
எழுவகைப்பிறப்பு	௨௨௦	௮
எழ்கடல்-பாயிரம் ௰௪-ஆங்கவியுரையிற்காண்க.	௪	௪
எழுநரகம்	௨௭௩	௧௧
எழுமதம்	௪௨௧	௭௯
எழுமேகம்-சம்வர்த்தமுதலியன.	௭௪	௩௩
எழுலகு	௩௮	௩௩
ஐங்கதி	௧௨௧	௮௧
ஐந்தரு	௭௯	௩௪
ஐம்புலன்	௯௫	௨
ஐம்பூதம்-பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்.	௮௫	௮௭
ஐம்பூதகுணமைந்து	௮௫	௮௭
ஐம்பொறி-பஞ்சேந்திரியம்.	௩௧௩	௩
ஐவகைச்சுற்றம்	௨௩௦	௧௬
ஐவகை வாத்தியம்	௯௯	௪௦
ஐவகைவேள்வி	௧௨௧	௭௭
சகஸ்திரநாமம்	௧௪௦	௨௪௮
சத்தகுலாசலம்	௧௦௦	௪௭
சத்தமாதர்	௨௨௯	௯
சத்தமுனிவர்	௪௨௭	௧௩
சதுரங்கம்	௪௩	௭௫
சோடசோபசாரம்	௧௦௭	௧௧௦
தசவாயு	௪௮௬	௧௦௪
திரிபுவனம்-பூமியந்தரசொர்க்கம்.	௧௬௬	௧௦
திரிமூர்த்திகள்-பிரம விட்டுணு ருத்திரர்.	௧௮௮	௪௬
துவாதசநாமம்	௨௭௧	௨௦
நவகதி	௪௦௬	௪௭
நவமணி	௭௧	௧௨
நால்வகைமகீருகம்	௮௮	௫
நால்வகையிரதம்	௧௧௦	௧௩௩
நால்வகையிலக்கு	௪௧	௫௬
நால்வகையுபாயம்	௨௭௪	௨
நான்குவேதம் - பாயிரம் உங-ஆங்கவியுரையிற்காண்க.	௪	௧
பஞ்சசயனம்	௭௯	௩௧
பஞ்சபாணம்-சூடாமணி நிகண்டு பன்னிரண்டாந்தொகுதியிற்காண்க.	௮௦	௩௬
பஞ்சவாசம்	௧௨௧	௭௭
பஞ்சாக்கினி-ஙகூ-ஆங்கவியுரையிற்காண்க.	௧௫௧	௫௯
பத்தவதாரம் - இராசசூயச்சருக்கம் சக-ஆங்கவியுரையிற்காண்க.	௮௨	௫௫
பத்துத்திசை	௪௩௫	௨௭
பதினாலுலகம்-சூடாமணிநிகண்டு கஉ-ஆந்தொகுதியிற்காண்க.	௩௮	௨௫
பதினாறுகலைகள்	௫	௫
பதினான்குவித்தை	௩௮	௩௩
பதினெண்டேசம்-நச்சுப்பொய்கைச்சருக்கம் ருய-ஆங்கவியுரையிற்காண்க.	௬௩	௪௬
பதினொருருத்திரதேவகணத்தார்	௯௩	௪௭
பன்னிருசூரியர்	௯௩	௪௬
முக்கனி	௨௧௭	௨
முக்குணம்	௩௧௩	௩
முக்குலம்	௮	௨௮
முக்கோல்-திரிதண்டம்.	௮௨	௫௫
முச்சுடர்-சோமசூரியாக்கினி	௧௯௯	௧
முத்தமிழ் - பதினாறாம்போர்ச்சருக்கம் சக-ஆங்கவியுரையிற்காண்க.	௭௯	௨௮
முத்தீ	௮௬	௩
முப்பத்திரண்டறம்	௭௭	௧௩
முப்பத்துமுக்கோடிதேவர்	௪	௨
முப்பத்துமுக்கோடிதேவர்க்குத்தலைவர் முப்பத்துமூவர்	௯௩	௪௫
முப்பால்	௨௨௧	௧௬
முப்புரம்-காஞ்சிப்புராணம் கைலாயப்படலத்திற் காண்க.	௧௫௪	௮௦
முப்பொழுது	௧௧௨	௧௫௧
மும்மதம்	௯௯	௪௨
மும்முரசு	௯௪	௫௮
மூவகையானை	௧௨௧	௭௯
மூன்றவை	௪௬௩	௧௮௪

சூசிபத்திரம்.

சருக்கம்.	பக்கம்.	சருக்கம்.	பக்கம்.
சிறப்புப்பாயிரம்	க	வெளிப்பாட்டுச்சருக்கம்	உசுஉ
தற்சிறப்புப்பாயிரம்	ச	**ரு—உத்தியோகபருவம்.**	
மகாபாரதம்		உலூகன்றூதுச்சருக்கம்	உசுஎ
க—ஆதிபருவம்		வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம்	உசுகூ
குருகுலச்சருக்கம்	ரு	சஞ்சயன்றூதுச் சருக்கம்	உஎஉ
சம்பவச்சருக்கம்	உக	கிருட்டிணன்றூதுச் சருக்கம்	உஎச
வாரணாவதச்சருக்கம்	௩ரு	படையெழுச்சிச் சருக்கம்	௩௦ச
வேத்திரகீயச்சருக்கம்	ரு௦	மூகூர்த்தங்கேள்விச்சருக்கம்	௩௦சு
திரௌபதிமாலையிட்டசருக்கம்	ருஅ	களப்பலியூட்டு சருக்கம்	௩௦எ
இந்திரப்பிரத்தச்சருக்கம்	எ௦	அணிவகுப்புச்சருக்கம்	௩௦அ
அருச்சுனன் றீர்த்தயாத்திரைச்சருக்கம்	எசு	**சு—வீட்டுமபருவம்.**	
வசந்தகாலச்சருக்கம்	அசு	முதற்போர்ச்சருக்கம்	௩க௩
காண்டவதகனச்சருக்கம்	அஅ	இரண்டாம்போர்ச்சருக்கம்	௩உக
உ—சபாபருவம்		மூன்றாம்போர்ச்சருக்கம்	௩உரு
இராசசூயச்சருக்கம்	கூரு	நான்காம்போர்ச்சருக்கம்	௩உகூ
சூதுபோர்ச்சருக்கம்	கககூ	ஐந்தாம்போர்ச்சருக்கம்	௩௩௩
௩—ஆரணியபருவம்.		ஆறாம்போர்ச்சருக்கம்	௩௩சு
அருச்சுனன்றவநிலைச்சருக்கம்	கசரு	ஏழாம்போர்ச்சருக்கம்	௩ச௦
நிவாதகவசர்காலகேயர்வதைச் சருக்கம்	கசுரு	எட்டாம்போர்ச்சருக்கம்	௩சக
புட்பயாத்திரைச்சருக்கம்	கஅ௩	ஒன்பதாம்போர்ச்சருக்கம்	௩சரு
சடாசுரன்வதைச்சருக்கம்	ககூகூ	பத்தாம் போர்ச்சருக்கம்	௩ரு௦
மணிமான்வதைச்சருக்கம்	உ௦உ	**எ—துரோணபருவம்.**	
துருவாசமுனிச்சருக்கம்	உகரு	பதினொராம்போர்ச்சருக்கம்	௩ருசு
பழம்பொருந்துசருக்கம்	உஎக	பன்னிரண்டாம்போர்ச்சருக்கம்	௩சுஉ
நச்சுப்பொய்கைச்சருக்கம்	உஉ௦	பதின்மூன்றாம்போர்ச் சருக்கம்	௩எஉ
ச—விராடபருவம்.		பதினான்காம்போர்ச் சருக்கம்	ச௦க
நாடுகரந்துறைச்சருக்கம்	உஉஅ	பதினைந்தாம்போர்ச் சருக்கம்	சஉசு
மற்போர்ச்சருக்கம்	உ௩உ	**அ—கன்னபருவம்.**	
கீசகன்வதைச்சருக்கம்	உ௩ச	பதினாறாம்போர்ச் சருக்கம்	ச௩உ
நிரைமீட்சிச்சருக்கம்	உசசு	பதினேழாம்போர்ச்சருக்கம்	சசஉ
		கூ—சல்லியபருவம்.	
		பதினெட்டாம்போர்ச் சருக்கம்	சஎச
		க௦—சௌப்திகபருவம்.	

உ

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	பிழை.	திருத்தம்.
௧	௧	பாடம்பதத்தில், மாமெதன்	மாதின்
,,	௫	* ரார்ப பெழ	ரார்ப்பெழ
௫	௨	வானுரை	வானுறை
௭	௨௫	பரபி	மரபி
௰௧	௫௬	நானமுகன்	நான்முகன்
௧௬	௧௦௧	கோமனு	கோமகனு
,,	௧௦௪	பாடபேதத்தில், கரீடை	கிரீடை
௧௭	௧௧௧	* மெனன	மென்ன
௨௩	௧௩	வலிக்காய	வலிகாய
௨௬	௩௯	* சன்னி	கன்னி
௨௭	௪௬	இமையம்	இமயம், இங்ஙனம் வருமிடந்தோறுங்கொ[ள்க.
௨௮	௫௫	கிளிக்கு	கிழிக்கு
௪௧	௫௭	யென	யெனை
௪௮	௧௨௦	பூவும்	பூவு
௫௮	௮	கொடுமபோர்	கொடும்போர்
௬௦	௨௧	* போர்த்துக	போர்த்துக்
,,	௨௬	செர்த்திப்	சேர்த்திப்
௬௪	௫௮	* கைதத	கைத்த
௬௭	௮௦	ஞோக்கி	நோக்கி
௭௮	௨௨	* கேட்பக	கேட்பக்
௭௯	௩௫	தென்றலூர	தென்றலூர
௮௩	௬௫	நெடுநணுள்	நெடுங்கணுள்
௮௬	௨	முருக்கு	முறுக்கு
,,	௭	பொன்ற	போன்ற
௮௭	௧௦	வீசீய	வீசிய
௮௮	௧௮	தாழிநறு	தாழினறு
௯௫	௪	தரியலறைரத்திை	தரியலாைத்திறை
௧௦௫	௯௧	* நோக்கிற	நோக்கிற்
௧௦௯	௧௨௩	மெயும்	மேயும்
௧௧௬	௩௪	யாதிஞன்	யாதிநான்
௧௨௪	௧௦௯	* விரிதத	விரித்த
௧௩௦	௧௫௯	* முன	முன்
௧௪௦	௨௫௦	புரிவு	பரிவு
௧௪௨	௨௬௬	* கடனன	கடனன்
௧௪௭	௨௩	முன்ள	முள்ள
௧௭௫	௯௦	கண்ணு	கண்ணு
௧௮௦	௧௩௩	கவனபொ	கவனமொ
௧௮௫	௰௪	வானுகி	வானுலகி
௨௦௧	௰௯	வன்றம்பி	வன்முன்னந்
௨௦௨	௨	புதுமை	பதும
௨௧௮	௭	விசையன்	விசயன், இங்ஙனம்,வருமிடந்தோறுங்கொ[ள்க
,,	௰௩	கோரட்டம்	கோட்டம்
௨௧௯	௰௭	மைந்தான்	மைந்தன்
௨௨௦	௬	தாமா	தமா
௨௨௬	௫௬	கிழங்கு	கிளங்கு
௨௫௧	௪௩	கீரிடி	கிரீடி

பக்கம்.	பாட்டு.	பிழை.	திருத்தம்.
௨௫௬	௯௩	விரலு	விறலு
௨௭௩	௯	யோனு	யோதனு
௨௭௬	௰௯	வேண்டாம்	வேண்டா
௩௧௮	௪௯	வென்னிட	வெந்நிட, இங்ஙனம் வென் வருமிடந்தோ
௩௨௪	௨௫	திருவங்	திருவருங் [றும் வென் எனத்திருத்திக்
௩௨௮	௨௪	* வலாா	வலார் [கொள்க.
,,	௨௭	லற்ல	லற்ற
௩௪௩	௨௨	ராய	மாய
௩௪௭	௰௭	போற்	போர்
௩௫௦	௫	தேறி	தேரி
௩௫௧	௰	தனயரா	தனயராக
,,	௰௨	* புவர	புலர
௩௫௨	௰௬	வளைத்தா	வளைத்த
,,	௰௭	துரோணனோடு	துரோணனொடு
,,	௨௩	பாலர்	பால
௩௫௩	௨௪	களிகூற	களிகூர
,,	௨௭	றென்னரின்	றென்னரிற்
,,	௨௮	னடங்கடவே	னங்கடவவே
,,	௨௯	ஓதம்	ஓதம்
௩௫௪	௩௩	தின்	திண்
,,	௩௮	தொடே	தோடே
௩௭௧	௮௧	பெற்றோர்	பொற்றோர்
௩௭௩	௫	ஒப்பறு	ஒப்பறு
,,	,,	வாகநீள்	வாகவநீள்
௩௭௫	௨௮	மோரு	மொரு
௩௭௭	௪௰	பொலு	போலு
,,	௪௨	வேயர்	வெயர்
,,	,,	யின்னி	யினனி
௩௭௮	௫௫	மானு	மனு
௩௮௦	௭௯	சக்கிர	சக்கர
௩௮௪	௧௨௧	புருதலி	புரிதலி
௪௦௧	௨௫௯	கடோற்சன்	கடோற்கசன்
௪௦௪	௨௯	செங்ங	செங்நெ
௪௨௨	௧௮௬	மோடும்	மொடும்
௪௪௬	௩௩	நாடான்	நாடன்
௪௫௦	௬௮	தாளின்	தாளின
,,	,,	• மாலையன	மாலையன்
௪௫௨	௮௫	னோடு	னொடு
௪௫௩	௯௧	வரிரிவிற்	வரிவிற்
,,	௯௩	யணிற்றி	யணிநிற்றி
௪௬௨	௧௭௪	லன்றாண்	வன்றாண்
௪௮௭	௧௨௦	ரணிபர்க	ரணிபர்க்
௪௯௩	௧௭௦	* விரைவ	விரைவுட
௪௯௬	௧௯௨	கைத்தட	கைத்தல
,,	௧௯௬	மறிற்சு	மரிற்சு

• இவ்வடையாளமிட்ட பிழைகள் சில பிரதிகளிற் காணப்படா.

பக்கம்.	பாட்டு.	பிழை. [அனுபந்தம்].	திருத்தம்.
௭௭	௯	மரா	மிரா
௧௨௮	௧௧௬	மழுங்கு	மழுங்கி
௧௨௯	௧௪௮	பண்ட	மண்ட
௧௪௭	௨௦	முனைவ	முனிவ
௧௭௪	௮௭	தார்	தாற்
௧௮௩	௩	விரல்	விறல்
௧௮௯	௫௦	தாள்	தார்
௨௯௩	௧௬௮	யெய்தி	யெய்த
௩௧௦	௧௧	சரவா, பன்மவ	சிரவா, பன்மன
௩௭௨	௯௨	தனைத்துன்னி	தனுந்துள்ளி
௪௧௮	௧௫௨	கன்னனறை	கன்னமறை
௪௩௭	௪௬	சுருதி	சுருத
௪௪௪	௧௫	வேலினால்	வாளியால்
௪௮௫	௪௦௨	யளி, மிகழ்	யழி, மிகல்
௪௯௫	௧௮௮	மையினையற்பராயரறிகிற்பரோ	மையையவித்தையாயருமளப்பரோ
௪௯௬	௧௯௩	வோதினான்	வோதினன்

* இப்பிழை திருத்தத்தில் உ-ஆம் பக்கம் ச-ஆம் வரியில், வென் என என்பதை வெந்என எனத்திருத்திக்கொள்க.

அரும்பதவுரைப் பிழைதிருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௬	௰௫	௨	பூலோமா	புலோமா
௮	௩௮	௧	புண்ணியயபனே	புண்ணியப்பயனே
௯	௬௩	௪	ஆபச்சைவன்	ஆபன்
,,	௭௨	௨	திஞெ	திவஞெ
௰௧	௱௬	௨	* உமமீ	உம்மீ
௨௧	௧	௫	பெருண்	பொருண்
௨௩	௩௨	௩	சிக்கிக்குரி	சிக்குரி
௨௪	௬௬	௨	கோதமன்	கௌதமன்
௩௨	௪௪	௩	சமுத்திர நடுவிலுள்ள மாகிஷ்மதி	பிராக்சோதிஷம்
,,	௪௫	௩	மாகிஷபுரி	மாகிஷ்மதிபுரி
௪௨	௰௮	௧	தாழ்-தாழ்வு. இல்-இல்லாத	† தாழி-சாடி.
௪௮	௩௩	௮	தந்த	தத்த
௫௧	௭௯	௧	திரு	திரி
௫௪	௰௩	௭	நகைத்தர	நகைத்தா
௬௯	௭	௧	பொந்திய	பொருந்திய
௭௰	௯	௧	மண்லம்	மண்டலம்
௭௧	௱௨	௨	வருதிங்யது	வருந்தியது
௭௬	௫	௧	வயிலில்	வயலில்
,,	௬	௨	ந்து	சந்து
௮௰	௱௯௭	௨	சுக்கீரி	சுக்கிரீ
௮௪	௨௯	௧	வியனநதி	வியனதி
,,	௨	௧	பரமான்வா	பரமான்மாவா
,,	௩	௮	,,	,,
௮௯	௩	௪	தீபாமக	தீபமாக
௯௩	௰௮	௧	சொ	சோ
,,	௧	௨	துணி	தூணி
௯௪	௯௰	௩	மலேயிருத்தல்	மலேயிலிருத்தல்
௯௭	௧௫௯	௬	யென்து	யென்பது
,,	௧௮௪	௰௪	போலி	பொலி
௯௯	௰௮	௪	ஐந்துனு	ஐந்தனு
௱௯	௱௮௪	௨	குாளிற்	குறளிற்
௱௰௨	௮௨	௪	கழி	கழ்
௱௰௫	௨௱௬	௧	ஈண்டு	ஈண்டுப்

* இவ்வாறு புள்ளியில்லாப்பிழைகள் சிலபிரதிகளிற் காணப்படா.

† சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதையிற்காண்க.

விஷயசூசிகை ௨-ஆம் பக்கம் ௰௨-ஆம் வரியில், குறி என்பதைக் குரி எனத் திருத்திக்கொள்க.

மகாபாரதம்.

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ.	
அக்கங்குலி	கசூங
அக்கணத்தி	சகூ
அக்கணத்தினிற்	உஉஉ
அக்கணமது	உக௦
அக்கணமா	ககக
அக்கணேவிசை	க அ௦
அக்கதலிவ	க அரு
அக்கரமயா	ங எங
அக்கார்முக	கஎக
அக்காலேயில்விச	கசூச
அக்காலேயில்விற	உ௦ரு
அக்கிரியின்பு	க அச
அக்கிரியினி	உ௦ச
அக்கொடி	உச௦
அகத்தியன்	க
அகப்பட்டது	உஉஉ
அகப்பொழிற்	உசரு
அகமலர்ந்து	ருஎ
அங்கசரீரி	ககூஉ
அங்கண்மா	எக
அங்கண்மாநி	கஉஉ
அங்கர்குல	சரு௦
அங்கர்பதி	ங எகூ
அங்கர்பெரு	ங க௦
அங்கவன்மல	உ௦உ
அங்கவன்ற	ச அ
அங்கவனம்	ககூ௦
அங்கிக்கதிர்	சசூஎ
அங்கிதன்	சக அ
அங்கியாலங்	கரு௦
அங்கியிற்	உசக
அங்கிருந்து	ங கூகூ
அங்கிவர்பு	கசரு
அங்கிவாமர்	உ௦உ
அங்குசம்	சஙங
அங்குயிர்போ	எகூ
அங்குலிக	ச௦
அங்குள்ளதபோ	க அச
அங்குளவிட	ஙகூச
அங்கையார்	ங அ அ
அங்கையினே	உஉ அ
அச்சுதப்பெய	ஙஎரு
அச்சுதனுரை	கசஎ
அசையணிக்கொ	உ௦கூ
அசைவிலாம	உஉக
அஞ்சலஞ்ச	உரு௦
அஞ்சலேயுர	உக௦
அஞ்சன்மினு	கஉ
அஞ்சனமேக	ககூக
அஞ்சாதொழி	எசூ
அஞ்சினநின்	உகூ அ
அஞ்சினமஞ்	உகூரு
அஞ்சியந்த	க௦க
அஞ்சியோவன்	சசச
அஞ்சினன்போ	ஙசங
அஞ்சேலமரி	அரு
அடர்சிலேவி	உஎக
அடலில்வலி	சஙச
அடாதுசெய்ச	உ௦உ
அடாதுசெயத	ங௦உ
அடிக்கைகன	சஙங
அடிசடிருவு	அஉ
அடிநிலத்திலே	உ அக
அடிமாறிநீரி	ச அகூ
அடியவர்மன	உகூச
அடியனேனி	ங௦ அ
அடியனேனு	சகூ
அடியுமாண்	கககூ
அடுக்குறநில	எச
அடுத்தபல்	சூரு
அடுத்ததானமு	ங௦க
அடுதொழிற்ப	உங அ
அடுப்பனுமள	உகக
அடைந்தவரி	ச௦க
அடையவன்று	சருங
அண்ணலந்து	ங௦சூ
அண்ணற்றருப்	ககூஎ
அண்ணறேரின்	கஎகூ
அண்ணியகிளே	சஉ அ
அண்டகோள	உஉரு
அண்டமாமுக	உஙஉ
அண்டர்க்கெ	க௦ அ
அண்டர்குலபதி	சரு௦
அண்டர்தயக	அக
அண்டர்தான	க அசூ
அண்டர்பெரு	சசூஉ
அண்டர்யாவ	உஉக
அண்டர்யாவருமல	ங௦க
அணங்கனசா	உசக
அணிகளேந்தை	ச௦உ
அணிகெட்டுமத	ஙசூகூ
அணிகொளத்	உ அ௦
அணிதொடை	சஙகூ
அணிந்துவரு	உஎசூ
அணுகிமைந்	கசூச
அணேயார்தம்	சஎஉ
அத்தபதிதன்	கூசூ
அத்தலத்தி	சகூக
அத்தவெற்பி	சசூகூ
அத்தனேயடு	சஉகூ
அத்திகைக்கணி	க௦௦
அத்திசை	கச அ
அத்திசைக்கண	க௦க
அத்தியின்பல	எக
அத்திரயூக	சஎரு
அத்தினத்தவ	ருங
அத்தினபுரி	உகச
அத்தினபுரிதனக்கரு	கஉச
அத்தினபுரியி	எ௦
அத்திநபுரியத	ரு௦ங
அதிகம்ப	ச௦ அ
அதிசயித்திவ்	ககக
அதிதவளம	ஙசூஎ
அதிர்த்தனச	ஙசூச
அதிர்ந்துவரு	கருரு
அதிர்முரசுய	ககரு
அதிர்முழக்	கஉஉ
அதிர்வார்க	ஙஎஉ
அதிரதர்தம்	உருசூ
அதிரதர்முத	உகூச
அதிரதன்றிரு	உசூ
அதிரப்பொரும்	க௦கூ

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அதிராதிபர்	௩௦௮	அந்தவோதை	௧௮௬	அரவமல்கிய	௨௮௬
அதிருகின்றவெ	௪௨	அந்தியாரண	௫	அரவமாநதி	௧௮
அதிரோகவிற	௪௦௭	அந்தியாரழ	௨௬	அரவவெங்கொ	௨௨௮
அந்தக்கணத்தி	௩௦௦	அந்நிலத்தின	௭௮	அரவியலல்கு	௨௯௩
அந்தகன்பொ	௧௭௮	அந்நிலமேயி	௪௯௧	அரவின்விட	௩௧௧
அந்தகனுமிக	௫௫	அந்நிலையுண	௨௦௭	அரவினிற்பி	௩௫
அந்தச்சிலைம	௧௬௩	அந்நெடுமாம	௪௮௫	அரவிணையுய	௨௫௮
அந்தணர்பரி	௪௪௬	அந்நெடுவனத்	௨௧௭	அரவின்வெஞ்	௭௩
அந்தணர்வ	௨௦௦	அப்படைத்தொ	௧௯௫	அரவுயர்த்தவ	௩௮௦
அந்தணரைவ	௫௪	அப்பாலிவ	௪௦௭	அரவுயர்த்தோ	௨௭௫
அந்தணன்சொ	௨௨௪	அப்புனலிலா	௨௦௨	அரன்முடிய	௩௭௮
அந்தணன்மு	௨௯௮	அப்பொழில்	௧௯௦	அரனின்றன	௩௩௪
அந்தணனேவை	௪௫௫	அப்பொழுதம	௧௧௨	அராவணைது	௨௬௯
அந்தத்தமர	௨௦௪	அப்பொழுதர	௩௦௮	அராவவெங்	௧௧௨
அந்தத்திரு	௨	அப்பொழுதி	௨௦௯	அரிக்கொடிய	௩௫௮
அந்தநல்லறி	௩௧௩	அப்பொழுது	௨௧௫	அரிதிற்பயந்த	௮௫
அந்தநன்மரபி	௮	அபயமென்	௨௦௦	அரிப்பதாக	௪௯௫
அந்தநாகமழ	௬௯	அம்பரத்தவர்	௩௧௮	அரிபிறந்த	௪௨
அந்தநின்மை	௨௯௧	அம்பரத்தவரு	௨௮௯	அரிமணிச்சிலை	௭௩
அந்தநெடுந்	௮௧	அம்பிகைக்கும	௧௯	அரிமுகக்கண	௧௮௨
அந்தமற்றொழி	௨௩௩	அம்பிகைக்கொ	௨௪	அரியகங்குலி	௨௧
அந்தமன்னவ	௭	அம்புவியர	௧௬	அரியதண்கலை	௪௦௧
அந்தமாதிள	௨௪	அம்மாதர்தந்	௧௭௭	அரியவிலைய	௪௩௫
அந்தமாநக	௧௦௧	அம்மாதுலனு	௮௫	அரியும்வெங்க	௧௪௮
அந்தமாநகரி	௧௯௩	அம்முனிதன்னே	௨௫௬	அரியெனும்பெ	௯௦
அந்தமுடிம	௩௧௯	அம்முனிவந்த	௨௧௮	அரியொத்தப	௩௬௮
அந்தமுமாதி	௧௯௦	அம்முனிவன்மொ	௧௮௪	அரிவயமா	௪௯௩
அந்தமுனைத	௪௨௨	அம்மொழித	௪௨௧	அரிவிரசுந்	௯௭
அந்தரத்தமர	௧௫௧	அம்மொழித்	௩௯௮	அரிவையோட	௧௪௩
அந்தரதுந்து	௬௪	அமர்செய்ப	௩௬௮	அருக்கனடி	௨௬௨
அந்தரதுந்துபிய	௧௬௧	அமரரானவ	௪௭௦	அருக்கனின்	௧௯௦
அந்தரமெங்	௧௮௯	அமரரைமு	௯௪	அருக்கனுந்த	௪௪௨
அந்தரணந்த	௨௦௯	அமைத்தவாச	௨௮௩	அருக்கனைம	௪௨௩
அந்தவஞ்ச	௨௦௯	அயத்திரத	௪௨௦	அருக்கனோர்க	௪௧௯
அந்தவஞ்சர்	௧௭௯	அயர்ந்தனன்	௩௮௯	அருகுநின்றகொ	௩௮௪
அந்தவந்தண	௪௩௨	அயனார்புரி	௭௭	அருகுநின்றம	௨௩௪
அந்தவந்தவ	௧௦௦	அயனிடையசு	௪௮௫	அருகுசாயை	௪௮௪
அந்தவயப்ப	௧௯௫	அரக்கர்க்கு	௩௩௪	அருகுவிடாது	௨௬௧
அந்தவன்றி	௧௩௫	அரக்கர்தங்	௧௧௧	அருகெலாமணி	௧௧௮
அந்தவன்னஞ்	௨௧௬	அரக்கனப்பே	௩௯௯	அருஞ்சமர	௨௭௪
அந்தவார்சி	௧௮௭	அரக்கிதந்த	௩௦௪	அருணவெங்க	௯௩
அந்தவிண்ணு	௨௧௪	அரசர்க்கடை	௨௬௫	அருணவெங்கதி	௪௩௬
அந்தவியக்க	௧௯௬	அரசர்போ	௨௬௭	அருத்தியீதல்	௩௦௧
அந்தவில்வி	௧௫௯	அரசவைக்	௧௦௪	அருத்தியேதெ	௨௧௨
அந்தவில்விளை	௨௮௯	அரசவைப்பு	௨௩௯	அருந்தபோ	௨௩
அந்தவிடத்தெ	௨௯௬	அரசவையிலெ	௧௪௧	அருந்தவமுனி	௧௯௯
அந்தவுயர்கி	௧௮௪	அரசன்மற்று	௧௪௩	அருந்தழன்மா	௪௭௦
அந்தவுரைமீ	௩௯௧	அரசனுமுண	௧௧	அருந்தளிர்	௩௨
அந்தவோசை	௧௭௦	அரவநெடுங்	௬௪	அருநிதிக்கு	௧௮௮

செய்யுள்.	பக்கம்.
அருமறைசொ	௧௪௦
அருமறைமு	௧௦
அருமறைமுத	௩௫
அருமறைமுறையா	௧௧௨
அருமாதவப்	௨௧௫
அருமார்பில	௪௬௯
அருமுனியாதி	௩௭௪
அரும்பகைவ	௧௫௦
அரும்பனைக்கொ	௧௦௫
அரும்பியவி	௩௨
அரும்பெறலா	௪௯௦
அரும்பெறலைய	௧௧௮
அருவரையோ	௪௭௬
அருளாருந்த	௧௪௦
அருளிலாவர	௧௯௪
அருளிலிதய	௫௫
அருளுடையற	௭௪
அருளேவடி	௩௬௧
அல்லதுநீ	௧௯௦
அல்லார்கூ	௧௩௯
அல்லிநாண்	௪௩௬
அல்லியம்புய	௪௩௬
அல்லினுக்கி	௨௩௨
அலகில்வே	௪௮௪
அலத்தான்	௬௨
அலப்படை	௪௨௫
அலிமுகந்தொ	௪௦௬
அலைகால்வே	௩௩௨
அலைத்தடங்	௪௫௧
அவ்வாந்த	௧௬௫
அவ்வரமவ	௩௦௮
அவ்வனத்தி	௫௧
அவ்வனத்தை	௧௮௫
அவ்வனந்த	௧௪௭
அவ்விராம	௨௧
அவ்வுரைகே	௧௬௫
அவ்வுரைவீ	௨௧௭
அவ்வேலையி	௨௦௪
அவ்வைபாட	௨
அவர்விடுத்த	௧௭௯
அவர்வெகு	௧௯௫
அவரவரெ	௩௭௯
அவரளவோ	௪௮௨
அவன்மொழி	௨௮௯
அவன்வந்தி	௨௦௪
அவன்விட்ட	௧௭௩
அவன்விட்டசு	௩௬௮
அவன்விடும்	௧௮௦
அவனின்றெ	௪௪௫

செய்யுள்.	பக்கம்.
அவனுமம்பி	௩௩௮
அவனுரைம	௧௬௬
அவனைத்தொட	௬௭
அவனையிடுப	௫௫
அவனொடுமீ	௪௫௮
அழிந்தகீச	௨௪௪
அழிந்துகன்	௪௧௬
அழுகுரல்வி	௩௩
அழுங்கினன்	௨௧௧
அழுதமைந்த	௩௫௫
அழுதழுது	௧௪௦
அழுதறல்கு	௨௧௧
அழுதுவாண்	௧௯௯
அழுந்தமே	௧௨௨
அழைத்தடல்	௯௪
அழைத்தமா	௨௩
அளப்பிலா	௩௦௭
அளவிலாத	௧௦௧
அளவின்மன்	௩௨௨
அளித்துமெ	௮௮
அளிதங்குமா	௪௪௧
அளிவருங்கு	௨௮௮
அளைந்தவா	௨௮௫
அற்பனைத்து	௧௦௨
அற்புதபங்க	௨௯௬
அற்போலச்	௧௫௬
அற்றகந்தர	௩௪௧
அற்றதிரடோ	௩௪௭
அற்றராபதி	௩௬௨
அற்றவிற்று	௩௫௯
அற்றனகுறை	௧௭௫
அற்றனடுயர	௨௯
அற்றைநாண்	௮௨
அற்றைநாளி	௨௪௦
அற்றையிரா	௪௭௫
அற்றைவெஞ்ச	௪௪௩
அறத்தின்மக	௩௬௪
அறத்தின்மைந்த	௪௭
அறத்தின்மைந்தன	௪௮௦
அறத்தின்மைந்தனு	௨௭௨
அறந்தந்தமை	௩௭௧
அறந்தந்தவா	௩௪௪
அறந்தருமை	௧௩௪
அறப்பெருங்	௨௨௬
அறமிக்கசொ	௩௪௪
அறன்மகன்வா	௨௫௯
அறன்மகன்பெ	௪௬௪
அறன்மைந்தன்	௪௪௦
அறன்றருகா	௪௯௧

செய்யுள்.	பக்கம்.
அறனின்மை	௪௫௩
அறிந்துதாள்	௨௫௧
அறிவும்வா	௧௮௮
அறிவுருவ	௮௪
அறுதியாக	௪௭௯
அறுவருமிவ்	௨௧௯
அறைகழல்	௪௭௮
அறைமுரசு	௨௬௩
அறையோத	௭௬
அன்பனெறி	௬௬
அன்பாலின்	௨௭௮
அன்புடைத்	௨௩௮
அன்புடைமு	௧௨
அன்புறுதரு	௧௫௮
அன்பொடுது	௩௯௦
அன்பொடொ	௨௦௨
அன்மருளிர	௪௦௦
அன்றரனிரு	௧௫௨
அன்றருச்சு	௪௦௬
அன்றவன்ம	௪௯௮
அன்றியேய	௨௬௮
அன்றிலக்கெ	௬௫
அன்றுகங்கு	௪௨௪
அன்றுசாதத்	௪௧௮
அன்றுதாழ்	௧௨௦
அன்றுதூது	௨௮௨
அன்றுதொட்டி	௧௩
அன்றுபோய்	௨௩௩
அன்றுபோர்	௪௩௬
அன்றுபோல	௨௫௧
அன்றுமுதல	௫௫
அன்றுமுதலே	௪௯௧
அன்றுரைத்த	௮௦
அன்றுவெஞ்ச	௩௨௮
அன்றெனக்கு	௪௪
அன்றேகள	௩௪௫
அன்றையம	௩௩௯
அன்னகாலை	௭
அன்னதுநி	௧௬௫
அன்னநடை	௨௭௭
அன்னநாணே	௧௯௫
அன்னநாளனி	௩௦
அன்னநாளில	௧௭
அன்னநாளினி	௨௩௪
அன்னநிலைக	௨௦௭
அன்னபோதில	௧௩௩
அன்னபோதினி	௪௨௩
அன்னமெ	௧௬௪
அன்னவாச	௧௮௭

செய்யுள்.	பக்கம்.
அன்னோர்நக	௧௭௬
அன்னைநீய	௧௬௪
அன்னைமடியி	௪௭௨
அன்னையான	௨௮௮
அன்னையுந்த	௫௩
அன்னையுந்தா	௧௦௯
அன்னையெ	௨௩௨
அன்னையைச்	௧௪௭
அன்னையைமி	௧௬௧
அன்னைவந்த	௩௦௨
அன்னைவாயொ	௯௨
அன்னோன்மொ	௨௧௭
அன்னோனக	௬௭
அனகனேய	௨௧௩
அனந்தரம்பொ	௪௨
அனந்தவே	௧௫௫
அனலுமுது	௨௬௩
அனிலத்தின்	௩௬௮
அனிலன்கு	௪௪௧
அனிலன்மை	௪௬௦
அனுசரிருப	௩௪
அனையபோதி	௯௦
அனைவருமொ	௪௨௬
ஆ.	
ஆக்குமாறய	௪
ஆகமெங்குந்	௩௫௪
ஆகவத்தில்	௪௦௫
ஆகவந்தன்	௩௮௨
ஆகன்னமுற	௮௧
ஆகுலத்தொடு	௨௩௬
ஆங்கணற்ற	௬௦
ஆங்கதுகேட்	௧௬௬
ஆங்கதுநிகழ்ந்	௫௮
ஆங்கவர்க்கி	௨௬௯
ஆங்கவரம்மு	௩௫
ஆங்கவன்றெ	௩௧௪
ஆங்கவனகரி	௨௨௮
ஆங்கவனிவ்வா	௨௩௧
ஆங்கொராச	௩௯௪
ஆங்கொர்கங்	௪௯
ஆசாரியனுந்	௩௭௦
ஆசிலருந்தி	௪௩௩
ஆசிலாமறை	௨௮௧
ஆசினன்மறை	௯௪௯
ஆசுகன்குமு	௪௩௪
ஆசுகன்றனே	௯௦
ஆசுபோமிவுளி	௪௬௫
ஆசைகொளர	௫௩
ஆடகனைப்புத	௪௭௩
ஆடம்பரமன்	௭௬
ஆடன்மரவும்	௪௮௧
ஆடித்திருமு	௧௬௩
ஆடியானனன்	௧௫௩
ஆடினவறுகு	௧௮௦
ஆடினன்களி	௧௫௮
ஆடுவர்சிலர்	௧௨௬
ஆடையுங்கல	௧௬௫
ஆண்டகைகன்	௩௦௮
ஆண்டலன்புக	௧௮௯
ஆண்டிருந்த	௨௭௮
ஆண்டுபன்னி	௨௬௮
ஆண்டுமற்ற	௨௨௦
ஆண்டுமன்றல்	௬௯
ஆண்டுமாமக	௩௦௩
ஆண்டுவர்த்து	௨௩௬
ஆண்டெரிப்பி	௬௦
ஆதபனொளித்	௩.௨௫
ஆதலாலித்தே	௧௬௮
ஆதலாலிவண்	௧௮௮
ஆதலாலுறுநி	௧௧௭
ஆதலான்மனி	௧௮௨
ஆதவன்வந்து	௮௨
ஆதிநாயகன்	௧௮௨
ஆதியந்தண	௪௧௫
ஆதியிற்குந்தி	௬௦
ஆதியேயண்ட	௧௫௮
ஆதிவருகதி	௧௧௦
ஆய்ந்தநூல	௧௭௫
ஆயதுநிகழ்ந்த	௧௮௨
ஆயபின்றரும	௩௦௭
ஆயபொழுதள	௨௦௮
ஆயபோதிலா	௩௩௨
ஆயபோதினிற்	௪௭௬
ஆயிடைக்குறு	௧௯௩
ஆயிடைநின்ற	௩௯௭
ஆயிடையத்த	௨௬௦
ஆயிரங்கதி	௧௬௫
ஆயிரங்கரத்	௨௫
ஆயிரப்பத்து	௧௬௭
ஆயிரம்பதின்மடங்கா	௧௬௧
ஆயிரம்பதின்மடங்கு	௪௦௫
ஆயிரம்பொலங்	௧௬௦
ஆயிரமல்லர்	௨௩௩
ஆயுதமநேக	௪௧
ஆயுவற்றவர்	௪௧௫
ஆயோதனத்	௨௯௯
ஆர்கொலோ	௧௦௭
ஆர்கொனீயெ	௨௩௧
ஆர்த்தாரகல்	௧௭௨
ஆர்த்தாரணி	௧௭௬
ஆரக்குழம்பி	௨௮
ஆரணகற்பித	௩௨௭
ஆரணனேயர	௨௯௭
ஆரணுதிபரா	௪௭
ஆரமணங்க	௯௬
ஆரமரக்கண்	௪௧௦
ஆரமார்புடை	௪௮
ஆரமுமகிலுநா	௧௪௫
ஆரமுமாரச்	௩௨
ஆரவாரமுற	௪௮௨
ஆரழிந்தன	௩௧௮
ஆரியன்றிரும	௪௬௩
ஆரியனப்பொ	௩௨௭
ஆருயிர்பொன்	௨௨௩
ஆரொன்றறிய	௨௯௯
ஆல்வரும்புர	௧௦௨
ஆலமுண்டமுத	௧௫௩
ஆலாலமெனக்	௩௨௯
ஆலையிற்கரு	௭௨
ஆவதுகருதா	௨௯௦
ஆவமொடொத்த	௪௩௯
ஆவியழித்த	௩௨௭
ஆவியன்னவ	௪௮
ஆவியார்நிலை	௧௨௦
ஆவியோநிலை	௪௭௦
ஆழ்தருபா	௯௨
ஆழம்புணரி	௪௦௭
ஆழிநீரழுவ	௧௬௬
ஆழிமன்ன	௭
ஆழியெடுத்த	௩௨௭
ஆழிவாயொரு	௮௯
ஆளாய்மாய்ந்	௩௩௩
ஆளிமொய்ம்ப	௪௩
ஆளினெஞ்சமு	௧௨௧
ஆளையாணிலை	௩௯௮
ஆளையேயடுங்	௨௬௨
ஆற்றியமெய்ச்	௩
ஆற்றியுமதா	௩௯௦
ஆற்றின்வழு	௪௧
ஆற்றினீர்வி	௫௦௦
ஆற்றினைதுய	௩௯௬
ஆற்றையொத்	௪௧௬
ஆறம்பினில	௩௩௧
ஆறுகியிருந்த	௧௪௦
ஆறியடாசுந்த	௨௫௮

செய்யுள்.	பக்கம்.
ஆறிருகாதம	௧௯௧
ஆறுபடிநூறு	௩௪௮
ஆறுபத்திரு	௪௧௧
ஆறுமுகனைப்	௪௪
ஆன்றமைந்த	௨௬௧
ஆனகம்பல	௧௧௮
ஆனகமலமல	௪௯௭
ஆனகாலையெ	௪௩
ஆனதன்மன	௨௨௫
ஆனதானதா	௩௩௩
ஆனதிக்கிரு	௨௪
ஆனதெனவீடு	௩௧௦
ஆனபொழுதந்	௩௨௦
ஆனபோதாசா	௪௨௮
ஆனபோதிருத	௪௮௧
ஆனவாகுல	௮௯
ஆனுவுனதாண்	௨௯௯
ஆனைக்குழாநூ	௧௯௮
ஆனைதேர்பரி	௧௭௧

இ.

செய்யுள்.	பக்கம்.
இக்கனி	௨௧௭
இகல்செய்	௪௦௩
இகலிடம்	௪௨௧
இகலிவெங்	௪௬௦
இகலும்வா	௨௮௫
இகலெறிந்	௧௨௭
இகன்மிகு	௪௬
இங்கிதத்	௧௦௫
இங்கிப்படி	௩௭௦
இங்கிவர்மூ	௩௯௭
இங்கிவர்வ	௩௧௦
இங்கிவரிவ்	௫௮
இங்கிவனி	௨௫௮
இங்குந்தரு	௩௫௪
இங்குநீயே	௧௨௦
இச்சைப்படி.	௭௭
இச்சொற்ப	௬௧
இசையினும்	௪௨௨
இஞ்சிமதில்	௨௦௭
இட்டதவிழ	௨௧௫
இட்டதார்மு	௩௧௫
இட்டபொற்	௪௦௯
இடக்கைம	௧௫௪
இடக்கஞைகவல	௨௭௩
இடத்தோளி	௬௮
இடம்புரிங்	௪௬௫
இடறியதிண்	௪௬௮
இடிக்குரலெ	௪௨௪
இடிப்பதுமி	௪௯௨
இடிபடப்ப	௩௦௯
இடிபடுத்தெ	௫௧
இடிம்பனைப்	௧௧௫
இடிம்பைத	௫௧
இடியிடித்	௪௯௭
இடியுமாறு	௭
இடைப்படுநெ	௩௦௫
இடையில்வங்	௪௧௩
இணையின்றி	௪௬௭
இத்தகவா	௩௭௩
இத்தகவின்	௧௪௦
இத்தரையிட	௨௫௭
இத்தலைவய	௨௦௯
இத்தோழி	௪௫௯
இத்தினமிர	௪௪௩
இதயஞ்சிறி	௪௮௬
இதயமும்வ	௪௪௮
இதுநிற்கய	௩௬௯
இந்தக்குரி	௯௨
இந்தத்தனி	௧௬௩
இந்தப்பிறப்	௬௭
இந்தநல்லு	௧௧௨
இந்தநாரத	௭௫
இந்தநீள்வ	௧௯௯
இந்தப்புரத்	௧௭௭
இந்தமண்ட	௧௩௦
இந்தமதுமா	௩௭௮
இந்தமலரி	௨௦௩
இந்தமலரு	௧௮௪
இந்தவண்ண	௨௮௬
இந்தவந்த	௨௬௭
இந்தவயப்	௪௧௨
இந்தவேல்க	௪௨௫
இந்தவோதை	௧௭௭
இந்திரபுரிக்	௧௦௫
இந்திரசா	௧௯௦
இந்திரர்க்குத்	௮௧
இந்திரன்கா	௩௯௨
இந்திரன்சு	௧௫௨
இந்திரன்ம	௪௪௭
இந்திரன்மா	௩௭௪
இந்திரன்முதலா-சி	௧௧௩
இந்திரன்முதலா-தா	௧௯௪
இந்திரன்முதலி	௩௩௭
இந்திரன்ன்	௨௩௪
இந்திரனல்	௨௧௧
இந்திரனுஞ்	௮௦
இந்திரனுமே	௩௪௭
இந்திராணி	௮௪
இந்நகரிலெ	௨௬௩
இந்நாடக	௧௬௨
இந்நிலத்த	௩௮௭
இப்பஃலிர	௫௮
இப்பகன்மு	௩௪௩
இப்படியெ	௧௯௫
இப்படைக	௧௮௦
இப்பால்வெ	௧௮௩
இப்பாலிவ்	௨௨௧
இப்பான்மற்றிவ	௩௬௨
இப்பான்மற்றிவரி	௫௦௨
இப்பிறப்பொ	௧௧௫
இப்புதல்வன்	௪௩௦
இப்புதல்வனு	௧௩
இப்புரத்தி	௧௬௮
இப்பேரெழு	௩௪௪
இம்பர்வா	௪௨௪
இம்மலருக்	௧௮௫
இம்மாது	௬௭
இம்மானவ	௨௦௪
இம்முறையி	௧௦௭
இம்முறைவ	௨௫௫
இம்மென்ற	௭௭
இம்மொழிகூ	௪௭
இமைத்தக	௨௪
இமையமணு	௩௩௯
இமையவர்ப	௭௨
இயக்கர்பதி	௧௮௫
இயற்கைப்பெ	௪௬௯
இயற்கையா	௨௩௪
இயைந்துரை	௧௪௬
இரக்கமின்	௫௧
இரங்கனீசி	௩௪௨
இரங்கிநி	௧௩௪
இரண்டுமெவ	௩௦௦
இரணவித்	௪௮௧
இரணியனிரணி-ற	௧௦௨
இரணியனிரணி-று	௧௧௧
இரசமுபிர	௨௫௫
இரவலரிளை	௨௫௪
இரவிக்குரி	௨௯௯
இரவிதன்ம	௪௫௪
இரவிமகனே	௩௭௯
இரமிமதலையு	௪௩௫
இரவிமைந்த	௨௯௦
இரவென்றிரு	௩௩௬
இராவணன்	௪௨௫

செய்யுள்.	பக்கம்.
இரிந்துமெ	௯
இருக்கா	௩
இருக்கின்ற	௧௩௯
இருகுலத்தி	௫௦௦
இருங்கலையி	௧௧
இருட்கிரியெ	௪௨௩
இருண்டதும	௧௭௩
இருதளத்து	௩௬௬
இருதோள்க	௩௮௪
இருந்ததாயீ	௩௦௨
இருந்தபோ	௨௭௪
இருந்தமன்	௧௮
இருந்தமை	௧௨௭
இருந்தனம்ப	௩௪௨
இருந்தாரிவ	௧௬௨
இருந்திளைப்	௩௭
இருந்துயிலு	௨௯௫
இருந்துவங்	௨௮௩
இருபடையர	௪௪௨
இருபதுபதிற்	௩௬௭
இருபுடைம	௧௦௩
இருபுறஞ்சா	௨௫௪
இருபெருஞ்சே	௪௭௮
இரும்போநெ	௧௩௭
இருமருங்கி	௧௨௬
இருவர்செங்	௪௫௭
இருவர்சே	௩௪௦
இருவர்பரிக	௪௩௬
இருவர்பெரு	௩௬௩
இருவருங்க	௧௩௨
இருவருந்த	௪௧௩
இருவரும்பு	௪௫௯
இருவருமுனை	௪௧௯
இருவருமெதி	௨௫௫
இருவருமே	௧௫௫
இருவரெதிரு	௩௭௭
இருவரெதிரொ	௩௯௯
இருவரொரு	௨௦௭
இருவிரும்வ	௨௭௧
இருவினைகூ	௪௯௩
இருள்பரங்	௪௩௧
இல்லெடுத்	௧௩௧
இல்வாழ்ப	௨௮
இலக்கணகு	௩௮௧
இலக்கணமை	௩௭௩
இலக்கமற்	௪௧௬
இலங்காபுரி	௭௮
இலங்கைநக	௧௮௫
இவ்வகைகு	௧௦௩
இவ்வகைப்பல	௨௨௬
இவ்வகைமு	௧௮௯
இவ்வகைமொ	௨௦௬
இவ்வகையசு	௧௮௧
இவ்வகையே	௪௭௩
இவ்வணஞ்சா	௨௭௭
இவ்வாறமை	௪௫
இவ்வாறரி	௨௮
இவ்வாறவுண	௧௭௬
இவ்வாறிமை	௪௬௮
இவ்வாறிவ	௧௬௨
இவ்வாறிவன்	௧௯௭
இவ்வாறிவன	௧௬௩
இவ்வாறும	௬௮
இவ்வாறுமு	௩௩௬
இவ்வாறுரை	௩௬௧
இவ்வாறுவெ	௩௩௦
இவ்வெயிலெ	௨௫௮
இவ்வோர்வி	௪௮௬
இவர்கொண்	௩௩௪
இவர்தமக்	௧௩௪
இவர்பெருந்	௨௫௭
இவரிற்றன	௬௩
இவருயிர்க	௧௭௯
இவன்சல்லி	௬௩
இவன்மயங்	௩௮௫
இவன்மிசை	௨௧௦
இவன்மொழி	௧௬
இவன்மொழிந்	௩௯௯
இவனுண்மை	௩௩௫
இவனுமப்பொ	௩௮௧
இவனுமவனை	௪௫௩
இவனைப்பய	௯௮
இவனையந்ந	௩௭
இவனேவில	௩௪௯
இழிதந்துமீ	௪௪௧
இழிந்துமீளவு	௪௭௯
இழியுமளவை	௪௩௫
இளம்பருவ	௪௯௦
இளைஞருந்த	௫௨
இளைஞரும்பெரு	௪௬௪
இளைத்தடை	௩௭௧
இளைத்துவே	௪௧௩
இளையசாத்	௨௬௭
இளையவன்ற	௩௭௬
இளையனுத	௨௩௬
இற்றகைகா	௪௩௭
இறந்தமைந்	௨௨
இறந்ததுணைவ	௩௩
இறைஞ்சிய	௧௧௩
இறைவனுமகி	௩௧
இறைவனெ	௨௯௫
இன்சிலைமத	௩௫௯
இன்சொலா	௨௦
இன்றமரி	௩௭௮
இன்றமரில்	௩௯௧
இன்றல்லநா	௩௭௧
இன்றுரமரி	௯௮
இன்றிராவி	௪௨௩
இன்றுபட்டன	௩௧௭
இன்றுண்மை	௩௫௫
இன்றேமுடி	௪௫௧
இன்றேவுன்	௪௫௮
இன்னணம்	௩௪
இன்னணமி	௩௯௧
இன்னதாய	௧௩௩
இன்னதேகரு	௧௧௬
இன்னம்பல	௭௮
இன்னமொன்	௩௪௨
இன்னவாறி	௨௮௮
இன்னவாறு	௪௦௯
இன்னற்படு	௧௩௮
இன்னனதர	௧௩௪
இனஞ்செய்	௩௭௫
இனத்திடை	௪௮௯
இனத்திறனு	௭௩
இனிமையிற்	௩௫
இனியபான்	௮௮
இனியவன்சி	௧௧௩
இனியூழிவா	௫௦௩
இனிவிடுமே	௪௯௩
இணைவருஞ்ச	௩௮௨

ஈ

செய்யுள்.	பக்கம்.
ஈங்கிவரு	௨௨௩
ஈங்குவந்	௮௨
ஈசனப்பொ	௪௧௦
ஈசனல்வ	௪௦௩
ஈட்டியம	௭௪
ஈண்டவர்க்	௨௮௮
ஈண்டினியெ	௪௬
ஈண்டுச்ச	௪௮௭
ஈண்டுதன்	௧௫௦
ஈண்டுதேவ	௨௨
ஈண்டுநீவ	௨௭௦
ஈண்டுறுநி	௩௦
ஈதொருபு	௧௧௧

செய்யுள்.	பக்கம்.
ஈந்தவான	௮௯
ஈமந்தொறுஞ்	௩௩௫
ஈரடிகளி	௧௦௩
ஈரம்வைத்	௧௩௨
ஈராறுமொன்	௨௪௬
ஈரிரண்டு	௪௨௭
ஈரிருதேரி	௩௭௩
ஈரேழ்விஞ்	௩௮
ஈரொருபிறப்	௪௪௨
ஈறிலாத	௪௦௪
ஈறிலாவிக	௧௮௮
ஈன்றதாய்	௧௦௮
உ	
உக்கிரமாக	௩௨௩
உகத்தின்	௩௬௪
உகத்தினீ	௨௪௮
உகவைதன்	௩௧௭
உகவைமுத்	௮௩
உகிரெனும்	௪௬௦
உகுநிணச்	௩௫௭
உங்கள்சே	௩௬௬
உங்களின	௧௧௭
உட்பேடியாய்	௨௪௭
உடலிற்றசை	௩௨௯
உடனேவங்	௩௭௦
உடுத்தது	௧௪௦
உடைகின்ற	௩௩௦
உடைந்ததட	௩௨௦
உடைந்துடை	௩௨௩
உண்டியற்	௫௭
உண்டிலைய	௩௯௨
உண்டோமுண்	௨௧௬
உண்ணிலாவு	௧௨௮
உண்மையாக	௩௦௧
உணங்கிஞ	௨௧௩
உணர்வறத்	௪௯
உணவிஞ	௫௧
உத்தமமாங்	௧௪௧
உத்தமோசா	௪௯௯
உத்தரன்பு	௨௪௯
உதரங்கு	௨௧௬
உதிக்குஞ்	௨௦௫
உதிட்டிரன்	௨௯
உதைத்தனர்	௨௩௩
உதையமால்	௭௧
உதையன்பு	௪௫௧
உந்தவுந்	௧௪௬
உந்திரதத்	௪௨௦
உந்துதேர்	௨௫௬
உம்பதமி	௧௨
உம்பருமு	௩௪௩
உம்பலநே	௪௩௮
உம்மாலின்	௯௫
உம்மையின்	௪௨௯
உம்மையினு	௩௯௦
உமையவள்	௩௯௬
உய்வருதி	௩௦௩
உயர்ந்தமே	௩௪௦
உயர்முறை	௩௧௧
உயிர்க்கா	௪௫௯
உரகதுவச	௪௯௭
உரகபுங்க	௨௮௪
உரகவெங்கொ	௩௮௪
உரங்கவெங்	௪௧௪
உரங்களு	௧௭௫
உரங்குடி	௭௩
உரங்கொள்வீ	௧௮௬
உரங்கொளா	௪௦௫
உரத்தினின்	௪௩௩
உரத்துவா	௪௯௮
உரமந்தர	௪௬௭
உரமிக்க	௩௬௮
உரம்பட்ட	௧௭௫
உரம்பட	௧௯௫
உரலும்வே	௩௪௦
உரவிஞல்	௨௫௩
உரஞலழ	௮௬
உரஞல்வரு	௪௦௮
உரிமையுடன்	௨௭௬
உரியகதா	௪௯௪
உரியசிந்து	௩௮௪
உரியதேரி	௨௫௨
உரியவம்	௨௬௭
உருகியவெள்	௧௪௯
உருகுங்க	௭௭
உருக்கொள்	௨௫
உருட்டிய	௧௪௪
உருண்மணி	௩௦௯
உருத்தது	௧௭௬
உருத்திரசேன	௨௧௨
உருத்திரன்	௪௫௭
உருத்தின்ற	௪௫௮
உருத்துமு	௧௯௧
உருப்பசி	௨௬௧
உருவஞ்சி	௨௬
உருவுருமென்	௪௪௭
உரைத்தபொ	௨௬௨
உரைத்தவன்	௨௪௯
உரைத்தன	௪௮௮
உரையுடையை	௪௫௩
உலக்கையெட்	௪௭௯
உலாவருந்	௫௭
உலைவந்த	௬௨
உலைவிறண்	௩௮௫
உவகையிஞ	௪௯௩
உவந்துநீ	௨௭௩
உழுந்துரு	௧௫௭
உழுவைகண்	௧௭௮
உள்ளடங்	௮௨
உள்ளடிவி	௧௫௭
உள்ளியபடி	௫௦௦
உள்ளிருந்	௬௫
உள்ளிஞனு	௨௮௩
உள்ளுறக்	௧௫௧
உறவின்மிக்	௩௦௯
உறுதியுடன்	௪௫௩
உறுதியுமொ	௧௯௧
உற்பாதம்	௧௪௧
உற்றசங்கு	௮௪
உற்றதும	௩௩
உற்றபடி	௨௦௨
உற்றமரு	௨௭௧
உற்றயோனி	௨௭௨
உற்றிருபு	௪௭௯
உற்றுச்ச	௩௪௯
உற்றுப்பு	௨௭
உற்றுறையெங்	௧௨
உன்பதம்	௪௬
உன்பெருந்	௨௫௪
உன்னருகே	௧௯௦
உன்னிக்க	௩௪௫
உன்னுணர்	௧௪௩
உன்னுமவ்	௨௩௭
உன்னுயிர்	௩௨௧
உன்னையான்	௨௨௫
உன்னையுங்	௧௩௨
உனக்குத	௩௮௭
உனையளித்	௨௫
ஊ	
ஊடெலாந	௧௧௮
ஊதையில்பூ	௩௭
ஊதையின்ம	௧௨௬
ஊர்கின்ற	௩௩௪

செய்யுள்.	பக்கம்.
ஊழ்வந்து	௨௦௫
ஊற்றிருந்	௪௭௩
ஊறிலாமை	௨௨௫
ஊன்றொடுத்	௪௭௩
ஊனமேயான	௨௧௯
எ	
எக்கடல்க	௯௨
எக்கடலுமெ	௨௬௨
எங்கண்மா	௫
எங்கணுமமி	௧௭
எங்கலைக்கா	௨௫௪
எங்கிளைஞரெ	௪௯௨
எங்குநன்னி	௩௯
எங்குமிவணி	௩
எங்கெங்கே	௧௭௩
எஞ்சின்மற்	௩௯௨
எஞ்சினரிரு	௪௯௮
எட்டானைத்த	௩௮௬
எடுத்திக்	௩௦௪
எடுத்ததீப	௪௨௬
எடுத்தநீள்	௧௨௨
எடுத்தபடைய	௩௮௭
எடுத்தபோதி	௪௦௫
எடுத்தமலர்	௨௦௨
எடுத்தவடி	௩௨௦
எடுத்தவேல்	௪௬௪
எடுத்தானெ	௩௪௪
எண்சிறந்த	௪௨௦
எண்டருகவ	௫௨
எண்டயங்கு	௧௭௮
எண்டிசாமு	௧௨௭
எண்டிசைய	௧௯௩
எண்டிசையு	௧௯௧
எண்ணறுபர	௩௧௧
எண்ணியகரு	௪௯௮
எண்ணியகாரி	௩௯௭
எண்ணியவ	௯௩
எண்ணிருதின	௪௪௩
எண்ணிலாம	௨௪௪
எண்ணிழந்த	௩௨௧
எண்ணுகின்ற	௨௩௬
எண்ணுஞ்சே	௯௯
எண்ணுமாகட	௨
எண்ணுற்ற	௨௭
எண்ணுறக்கா	௭௫
எண்வகைப்பெ	௨௨௧
எத்தரையுநீ	௨௬௩

செய்யுள்.	பக்கம்.
எத்தலங்க	௪௬௯
எத்தனைதர	௧௧௪
எத்தனைமுடி	௩௫௩
எதிர்த்ததே	௪௦௩
எதிர்ந்ததார்	௩௩௧
எதிர்மலைந்	௪௬௦
எதிரிதேர்	௪௭௯
எதிரிலாததோ	௪௮௪
எதிரெதிர்	௩௯௮
எந்தவெந்த	௩௨௧
எந்தவெந்தம	௪௨௭
எந்தவெந்தவெ	௪௭௭
எந்தைகேளி	௨௧௨
எந்தைப்பெ	௧௬௩
எந்தைமனையி	௨௩௨
எந்தையாக	௩௫௧
எந்நாட்டி	௧௦௯
எப்புவிநிற்	௨௯௬
எப்புறத்தி	௯௦
எப்பெருஞ்சே	௪௪௨
எப்போதும	௩௩௬
எம்பிக்கொரி	௧௯௮
எம்பிரான்ற	௧௮௬
எம்பிரானுதி	௩௪
எம்பிரானை	௪௯௫
எம்பெருமா	௧௯௫
எம்போலவரி	௩௭௨
எம்மிற்றுய்த்	௨௧௬
எம்முனன்றி	௪௮
எம்முனைவ	௫௧
எம்முனோர்	௪௧௮
எம்மையே	௨௭௧
எமக்குநீபி	௨௭௩
எய்தகணைதி	௧௫௬
எய்தவப்பக	௪௫௫
எய்தவம்பு	௪௭௭
எய்தியந்த	௨௧௪
எய்துமைத்	௩௧௮
எயிலொருமூ	௧௪௯
எயினலம்பு	௩௫
எரிப்புறத்த	௨௫௧
எரியமுதருந்	௨௯௨
எரியிடைவெ	௪௬௮
எல்லவன்வீ	௪௮௭
எல்லியல்ப	௧௧௪
எல்லையிலா	௧௯௨
எல்லையெண்டி	௨௪௧
எவ்விடைவீ	௪௯௦
எழிலணித	௩௬௭

செய்யுள்.	பக்கம்.
எற்றருந்த	௪௨௨
எற்றவெண்பா	௧௧௩
எற்றியகவ	௨௬௦
எறிகுற்றவ	௩௬௯
எறிதொடைய	௩௭௮
எறிந்ததண்	௪௩௪
எறிந்ததுமீ	௨௨௫
எறிந்தவாள	௨௦௧
எறிந்தவெ	௪௦௫
எறிந்தவே	௪௨௫
எறியுமளவி	௩௪௮
எறியுமுரச	௪௩௫
என்பதன்மு	௯௫
என்பதியமு	௭௨
என்பலவுமி	௩௮௫
என்பிறபுகல்	௯௪
என்பெருஞ்சா	௩௧௪
என்பெருந்த	௨௪௧
என்பொடுகொ	௪௫௭
என்போலவி	௨௭
என்மகன்றலை	௪௬௪
என்முன்னவ	௧௭௨
என்முனென்	௪௨௭
என்மைந்த	௧௪௨
என்மொழிமரு	௪௪௮
என்றகாலையி	௮௩
என்றடல்வீம	௧௮௯
என்றபொழுத	௧௪௧
என்றபொழுதி	௧௫௪
என்றபோதந்த	௧௦௭
என்றபோதவ	௨௩௦
என்றபோதவன்	௨௪௯
என்றபோதவன்றே	௨௫௧
என்றபோதி	௮௯
என்றபோதிலப்	௨௪௯
என்றபோதுவ	௩௫௧
என்றமொழி	௧௫௫
என்றரியிய	௩௯௩
என்றலுங்கட	௪௬௬
என்றலுங்கு	௨௯௧
என்றலுந்த	௧௪௩
என்றலுந்தன்	௪௮௮
என்றலும்வி	௩௮௮
என்றலுமத்தி	௪௪௭
என்றலுமது	௩௦௩
என்றலுமரச	௪௨௫
என்றலுமவனு	௩௦௭
என்றலுமிந்த	௧௯௦
என்றலுமீச	௩௯௬

செய்யுள்.	பக்கம்.
என்றலுமுனி	௧௧௧
என்றலுமை	௪௬
என்றவர்வா	௧௯௫
என்றவன்மொழி	௨௫௯
என்றவனுரைத்	௧௬௮
என்றவனுரைப்பக்	௧௯௬
என்றவனுரைப்பத்	௧௩௫
என்றவாசக	௧௮௭
என்றறன்மை	௪௧௨
என்றிசைக்கு	௨௮௨
என்றிதழிமா	௩௭௮
என்றிந்தவு	௧௯௯
என்றியாவ	௪௦௫
என்றிவ்வா	௨௦௦
என்றிவைதிரு	௨௧௨
என்றிவைபோ	௪௮௮
என்றினையவா	௨௦௩
என்றுகால	௧௭௮
என்றுகூறவி	௨௮௯
என்றுகூறியி	௧௭௦
என்றுகூறிவி	௧௭
என்றுகூறின	௨௫௨
என்றுகேசவ	௨௮௭
என்றுகொண்	௯௪
என்றுகொண்ட	௪௭௦
என்றுகொண்டிந்	௧௫௦
என்றுகொண்டினை	௧௬௦
என்றுகொண்டிம்	௧௫௯
என்றுகொண்டின	௪௨௯
என்றுகொண்டுண்	௯௭
என்றுகொண்டுய	௧௮௨
என்றுகொண்டெண்	௧௦௯
என்றுகொண்டென்	௨௩௬
என்றுசின்மொ	௪௫௭
என்றுசீறி	௫௨
என்றுசேனை	௪௦௧
என்றுனைவரு	௪௯௨
என்றுதஞ்சி	௪௩
என்றுதன	௨௦௮
என்றுதன்றந்	௨௨௭
என்றுதன்றி	௧௮௭
என்றுதூத	௧௭௦
என்றுநல்ல	௪௩
என்றுபற்பல	௧௧
என்றுபற்பலவு	௩௯௫
என்றுபன்மொ	௫௦௧
என்றுபாரின்	௨௮௫
என்றுபினு	௫௦௨
என்றுபூசா	௨௬௮
என்றுமகிழ்	௪௭௧
என்றுமாநக	௨௪௫
என்றுமாம	௧௩௧
என்றுரைத்த	௧௫௩
என்றுரையா	௨௯௮
என்றுவயமா	௨௦௫
என்றுவானவ	௧௬௫
என்றெதிர்சி	௩௨௦
என்றெறன்றிறை	௨௭௮
என்றென்று	௩௮௭
என்றென்றே	௪௭௨
என்றேயெழி	௪௬௯
என்றேயென்	௪௭௨
என்னக்கழு	௨௮௦
என்னகர்நி	௨௪௩
என்னம்புதன	௪௬௭
என்னமகவா	௩௯௦
என்னமன்ன	௪௪௯
என்னமாத	௩௦௧
என்னமுன்மொ	௪௭௦
என்னமுன்ன	௧௭௨
என்னமுன்னி	௧௫
என்னலுமுரிய	௧௧௪
என்னவப்பு	௨௩௧
என்னவம்மு	௫௦௧
என்னவாங்	௪௮
என்னவுமிட	௨௬௦
என்னவெகு	௧௪௦
என்னுமன்ன	௧௩௯
என்னுலுமரி	௪௬௯
என்னுவசு	௧௭௨
என்னுவவனு	௨௦௫
என்னுவுரை	௪௬௬
என்னினின்னி	௨௮௬
என்னினும்பா	௩௯௮
என்னினைந்	௬௫
என்னுஞ்சொ	௩௪௬
என்னுடன்பி	௩௪௩
என்னுமுன்ம	௪௫௪
என்னுமொழி	௪௨௦
என்னேகுடி	௧௩௭
என்னேயென்	௨௧௬
என்னேயொ	௧௭௨
என்னேவலா	௧௯௮
என்னைத்திரு	௪௮௭
என்னைத்தோ	௧௩௬
என்னைநீபு	௩௧௩
என்னையிங்	௧௨
என்னைவளைத்த	௩௭௪
எனக்கருந்த	௧௫௫
எனக்குநீவி	௩௭௬
எனக்குமைந்த	௨௨
எனக்கெதிர்வி	௪௪௭
எனக்கொண்	௪௭௨
எனச்சில்வா	௪௯௫
எனத்தமப	௫௩
எனத்தருமன்ம	௯௬
எனத்தருமன்வா	௪௯௨
எனதுயிராசு	௧௦
எனமகிபன்	௪௮௪
எனமன்னனை	௧௬௩
எனமுரசுய	௨௬௩
எனவிடை	௧௪௮
எனவியந்து	௧௩௦
எனவிவள்பு	௨௩௮
எனவிவன்மொ	௩௭௮
எனவிவனி	௨௧௩
எனவுயர்பு	௩௭௭

ஏ

செய்யுள்.	பக்கம்.
ஏகலேகலெ	௪௧௩
ஏகலைவனெ	௪௦
ஏகசக்கர	௫௭
ஏகியநெறி	௩௯௨
ஏகியபின்ன	௧௬௦
ஏகுகின்றது	௪௧௫
ஏசிலாதய	௩௧௭
ஏணற்றுயர்	௩௩௫
ஏணில்வரை	௨௦௨
ஏதமறவுற	௫௫
ஏதிசூலமெ	௧௬௯
ஏதிலாரினெ	௧௩௧
ஏயவரிசிலை	௩௩௮
ஏயுநெடுங்கோ	௨௯௮
ஏலாவமரி	௩௨௫
ஏவகவிருத்	௯௧
ஏவருஞ்சா	௪௪௪
ஏவியதிகிரி	௧௧௦
ஏவிலங்குசி	௨௮௮
ஏவினபல்	௧௨௨
ஏவினுலிவ்	௪௧௮
ஏழ்பெருங்கட	௪
ஏழ்பெருங்கடல்	௪௯௪
ஏழிருபுவ	௩௨௯
ஏழுநாளிவ்	௧௦௭
ஏற்றத்தோ	௧௯௨
ஏற்றிடைவெ	௪௮௩

செய்யுள்.	பக்கம்.
எற்றியநறு	௨௯௦
எற்றிஞுனை	௯௬
எறனையவி	௩௨௦
எறித்தன்வ	௪௬௯
எறியகளிலு	௯௧
எறியபாதம்	௪௮௭
எறியிட்டவ	௪௪௦
எறிவருதே	௩௫௨
எறுதேர்மு	௨௫௬
எறுதோழிந்து	௩௬௭
எறுதோழிந்தி	௪௪௯
எனைவேந்த	௧௯
ஐ	
ஐந்தருவி	௭௯
ஐந்தானனத்	௬௭
ஐந்துபாவு	௨
ஐந்துபூதமே	௧௨௧
ஐந்துபெரு	௫௦௨
ஐம்புலன்க	௨௧௯
ஐம்பெரும்	௨௨௪
ஐயநின்னை	௨௧௪
ஐயநின்ஞெ	௪௦௩
ஐயமுற்றிவ	௪௮
ஐயனுமம்	௧௫௯
ஐயானன	௭௭
ஐயெனத்தொ	௩௮௮
ஐயெனவிவ	௨௪௦
ஐவகைவடி	௧௧௧
ஐவர்சேனை	௩௨௨
ஐவர்பதாகி	௪௪௪
ஐவரிலிளை	௩௦௭
ஐவரினுமிப்	௪௯௦
ஒ	
ஒக்குமென்	௪௦௩
ஒண்டுளிவா	௨௪௭
ஒத்தவலியோ	௪௧
ஒப்பறுபோரி	௩௭௩
ஒப்பிலாத	௧௩௦
ஒருக்காலழி	௩௮௩
ஒருகணைதொ	௩௫௭
ஒருகுலத்திடை	௨௭௨
ஒருகுலத்தினில்	௧௭௦
ஒருகுலத்தினிலி	௨௮௭
ஒருகேடகவு	௩௩௫
ஒருகையிஞெ	௪௯௩
ஒருகையினி	௩௮௪
ஒருகொடுங்	௪௮௦
ஒருங்களப்ப	௪௪௩
ஒருதமனியா	௪௯௩
ஒருதன்வா	௪௨௨
ஒருதனுவி	௪௧
ஒருதாளின்	௧௪௯
ஒருதிறத்தவ	௧௩௫
ஒருதிறலின்ன	௪௭
ஒருதினத்தமு	௫௪
ஒருதேர்கொ	௧௭௨
ஒருநன்மா	௨௬௯
ஒருநாளுநீவி	௩௪௬
ஒருபகல்விச	௪௪௪
ஒருபகலில்	௩௧௨
ஒருபகனில	௩௫
ஒருபத்தொடு	௩௬௮
ஒருபால்வ	௪௦௭
ஒருபால்வீ	௩௩௨
ஒருபுடையிவ	௩௪௩
ஒருபெருமாத	௧௬௦
ஒருமதிவெண்	௪௮௫
ஒருமுனிக்கு	௨௨௦
ஒருமுனிமுனி	௧௬
ஒருமொழிய	௨௧௯
ஒருவருமிவ	௩௧௮
ஒருவருமெண	௪௭௫
ஒருவரெய்த	௩௪௦
ஒருவரையொருத்	௩௬௭
ஒருவரையொருவ	௪௪௭
ஒருவனம்ப	௩௮௪
ஒருவனுமா	௨௧௧
ஒருவனிருவ	௯௯
ஒருவியிட்டோ	௨௫௫
ஒழிவுசெய்க	௧௪௪
ஒளிநலந்தி	௧௨௪
ஒற்றுளிலொ	௨௪௭
ஒற்றைநெடு	௪௨௧
ஒற்றையோ	௭௧
ஒன்றநம்ப	௩௦௭
ஒன்றவைம்பு	௪௩௧
ஒன்றினுமா	௧௯௨
ஒன்றுதவிசெ	௨௬௨
ஒன்றுபட	௫௫
ஒன்றுபாடக்க	௨௯௭
ஒன்றுமுதலா	௩௭௦
ஒன்றொடொன்	௪௬௫
ஓ	
ஓகைநிகழ்	௩௨௦
ஓடிமீளம	௨௧
ஓடிமுட்டலி	௩௧௬
ஓடியமடக்	௨௩௭
ஓடியுத்தர	௨௬௧
ஓடிஞனுமித்தே	௨௫௧
ஓடுங்கயல்	௭௬
ஓடுமிரதத்தி	௩௨௪
ஓடுவாருயந்	௧௭௮
ஓதப்பைங்க	௪௮௯
ஓதம்வந்தெ	௩௫௩
ஓதவான்க	௩௬
ஓதாதுணர்ந்	௬௮
ஓதும்வேந்து	௫௦௦
ஓதைகொண்	௩௭௫
ஓமஞ்செய்தீ	௨௬௫
ஓமமகவார	௨௩௧
ஓமவுண்டி	௪௯௪
ஓரஞ்சுபே	௪௭௨
ஓரம்பினுளை	௩௩௫
ஓராயிரமக	௧௬௩
ஓரிரண்டுவ	௧௧௦
ஓரிரண்டுவய	௩௮௬
ஓரூருமொ	௪௪௫
ஓரேணந்த	௧௫௪
ஓரொருகுத்	௨௪௨
ஓரொருடம்	௩௭௪
ஓரொருதலை	௧௦௫
ஓவியஞ்சிற	௧௧௭
க	
கங்கனென்	௨௪௮
கங்குற்சிலை	௩௬௧
கங்குற்ப	௬௮
கங்கைதரு	௧௦௪
கங்கைதன்	௪௪௮
கங்கைநதி	௪௫௦
கங்கைமகன்	௧௪௦
கங்கைமகன்க	௨௯௭
கங்கைமகன்சி	௪௩௨
கங்கைமகன்ம	௩௨௭
கங்கைமகன்மு	௪௮௯
கங்கைமாம	௨௬௯
கங்கைமை	௧௯
கங்கையாளி	௧௫
கங்கையின்	௯
கங்கையின்க	௧௭
சங்கையென்	௧௦

செய்யுள்.	பக்கம்.
கச்சிற்கட	௬௬
கஞ்சவாவி	௧௮
கஞ்சனெனு	௧௦௯
கட்செவியெ	௪௨௫
கட்டார்முது	௧௭௩
கட்புலனைக	௨௨௩
கடக்கலுழி	௨௦௩
கடகரியுரி	௧௦௬
கடகரியேன	௪௩௯
கடல்வடிம்ப	௪௨௮
கடவுமிரத	௪௩௫
கடிகைநால	௨௫௨
கடிகைமுப்	௪௦௬
கடித்தனபன்	௩௬
கடுஞ்சிலை	௧௭௪
கடைகாவ	௭௬
கண்டபோது	௪௦௯
கண்டவம்	௨௧௭
கண்டவர்த	௪௯௯
கண்டவுட	௫௦௨
கண்டனிர	௨௦௦
கண்டனிருங்	௨௩௮
கண்டார்மி	௪௮௬
கண்டான்ம	௨௬௪
கண்டான்வீ	௪௨௯
கண்டிருக	௨௧௮
கண்டிலளுதி	௩௭
கண்டுகண்டுத	௧௨௯
கண்டுஞ்சவி	௪௭௪
கண்டுதுன்மு	௪௧௭
கண்டுநின்றற	௨௨௬
கண்டுமருத்	௧௯௭
கண்டுளம்வெ	௧௦
கண்டெதிர்	௧௪௭
கண்ணபொறு	௨௯௮
கண்ணன்	௩௯௬
கண்ணன்மே	௧௯௫
கண்ணனங்	௨௭௧
கண்ணனுங்கு	௩௦௩
கண்ணனுங்க	௪௪௪
கண்ணிமைத்	௯
கண்ணிலா	௨௯௩
கண்ணினீர்	௨௬௦
கண்ணுந்து	௩௪௬
கண்ணுநரி	௪௧௨
கண்ணுறுபொ	௭௪
கண்ணொருப்	௨௩௯
கண்படைக்	௩௫
கண்பாப்பி	௧௬௪
கண்போல	௬௧
கணைகள்போ	௪௨
கணைகளவை	௩௪௭
கணைவரும்வ	௧௧௩
கதவாசிந	௪௬௯
கதாயுத	௪௦௫
கதிக்கடுங்	௩௨௩
கதிகொண்	௪௪௦
கதியொடுபி	௧௦௬
கதிரவனரு	௨௯௧
கதிரவனுதி	௩௮௯
கதிருதித்த	௧௬௪
கதுப்பும்	௪௯௫
கதுவிமண்	௪௫௩
கதைகதை	௪௯௩
கதைகொடு	௩௬௭
கதையுடை	௨௩௩
கதையெடு	௪௯௬
கந்தடர்க	௩௨௪
கந்தடுகளி	௨௯௫
கந்தநறும	௪௯௨
கந்தமகவை	௩௯
கந்தருவரு	௨௪௦
கந்தவாகன்	௩௩௦
கந்தணையளி	௧௫௧
கந்தேயனை	௩௪௪
கம்பலைக்	௨
கம்பித்துவ	௪௮௬
கயம்படும	௩௦௬
கயற்றடஞ்	௭௩
கயில்புரிக	௪௯௯
கயிலைபுக்க	௪௦௧
கரக்கவண்	௨௫௪
கரக்கழுங்	௧௯௪
கரக்கும்ப	௧௯௮
கரகதக்களி	௧௦௩
கரங்கரத்	௫௭
கரங்களா	௫௨
கரங்களாயி	௧௯௩
கரடக்கட	௨௬௫
கரணமறு	௪௫
கரமிழுந்து	௩௮௫
கரிகள்கோ	௧௦௦
கரிகளையே	௩௬௮
கரிந்துமாலை	௨௮௮
கரிமுகக்கட	௪௪௮
கரியகங்கு	௨௪௫
கரியணிக்கு	௩௪௦
கரியமர்க்	௪௩௪
கரியமேனி	௮௮
கருங்களவி	௩௬௨
கருடனதுதி	௪௭௧
கருத்தினிமு	௨௪௦
கருத்தொடு	௧௯௬
கருதலனைழை	௨௨௭
கருதற்கரி	௯௯
கருதியணிநி	௪௫௩
கருதியந்த	௨௮௪
கருதியாயி	௮௯
கருதிவாகை	௪௨௨
கருதிவாய்த்	௪௩௭
கருந்துறு	௧௪௯
கரும்புங்க	௨
கருமத்தின்	௧௯௮
கருமநீதி	௧௨௭
கருமாமுகி	௩௩௩
கருமுகிலனை	௪௮௮
கருவுறுதா	௩௦
கரைகாண	௨௪௭
கல்கெழு	௨௨௯
கல்லாமழ	௨௮
கல்வரையு	௨௮௦
கல்விதூய	௨௬௮
கலக்கமுற்	௪௦௪
கலக்கமுற	௮௬
கலங்கள்ப	௪௯௨
கலந்தும	௨௮௪
கலிங்கர்கோ	௩௦௬
கலிங்கர்சோ	௩௭௬
கலிங்கர்மா	௪௧௪
கலியுகவி	௩
கலைமதிக	௨௪௦
கலைவருத்த	௬௪
கவசங்கன	௩௦௦
கவளமான	௧௩௨
கவுரியர்கோ	௭௯
கழங்குக	௨௪
கழல்ணி	௩௨௩
கழுகுபந்த	௩௮௫
களத்திடை	௩௨௪
களந்தனி	௪௮௯
களப்பலிநா	௪௪௪
களம்புகு	௨௦
களிந்தவெ	௫௬
கற்கியும்வ	௪௩௨
கற்கும்யா	௨௪௫
கற்கொண்டு	௪௩௦
கற்பகமல	௩௧

செய்யுள்.	பக்கம்.
கற்றவர்க்	௪௨.
கற்றவர்கலை	௧௬௬
கற்றனகா	௨௩௪
கற்றைக்கு	௨௭௯
கன்மழை	௧௭௪
கன்றால்வி—கு	௨௯௯
கன்றால்வி—தி	௩௬௧
கன்றியவெ	௮௧
கன்றிவரு	௧௫௬
கன்றுசிங்	௪௦௯
கன்னசவு	௪௨௦
கன்னபாக	௪
கன்னல்வே	௧௭௮
கன்னற்ப	௨௬
கன்னன்வா	௨௨௦
கன்னன்வி	௩.௦௦
கன்னனாதி	௩௬௫
கன்னனிவை	௪௪௫
கன்னனும்ப	௪௩௬
கன்னனும	௩௭௯
கன்னனை	௩௭௫
கன்னனைக்க	௪௧௬
கன்னனையு	௩௮௬
கன்னிகன்	௨௫
கன்னியிவள்	௫௫
கன்னியிள	௪௭௩
கன்னியே	௯
கன்னிலங்	௧௦௨
கனல்வரு	௧௦௬
கனைகடற்	௨௪௯
கனையுநீடி	௨௩
கா	
காசித்தலை	௯௯
காசிபன்மு	௩௩
காசிமன்ன	௧௮
காசியர்க	௩௪௮
காசிராச	௨௦
காட்டினான்	௨௧௩
காட்டுந்தி	௧௩௭
காட்டுறுகோ	௨௨௪
காடுமன்னு	௨௬௮
காடுறைவா	௨௧௭
காடென்று	௨௪௬
காண்டகு	௨௪௬
காண்டலும	௭௫
காண்டற்	௨௭
காணலும்	௨௩
காணாதவி	௪௦௮
காணாமெய்	௭௬
காதலன	௧௪
காதனின்	௨௯௧
காதியதி	௫௪
காதிவெங்	௩௫௩
காதிற்கல	௬௬
காந்துகன	௪௮௩
காந்துந்த	௩௬௯
காப்புடை	௪௨௨
காம்பென	௩.௦
காமமிக்	௧௬௫
காமர்பிறை	௩௯௧
காமருகு	௨௩௭
காமற்பய	௮௪
காமனே	௪௫௪
காமனைச்	௪௮௧
காமனைநி	௧௫௧
காய்ந்தமெ	௧௨௮
காயமும்பு	௩௫௬
காயமுற்று	௧௩௩
காயிருங்க	௩௪௩
கார்க்கட	௨௭௦
கார்க்கோ	௧௬௮
கார்தவ	௧௨௩
கார்ப்பாக	௪௪௪
கார்முகக்	௧௭௩
கார்முகங்கை	௨௫௪
கார்முகில்	௩௨௯
கார்வழங்	௨௮௭
காரணிபோ	௩௬௨
காரனைத்து	௨௮௯
காரிலைந்து	௪௧௫
காரிற்கரி	௪௫௯
காரிற்குளி	௩௭௧
காரெனக்	௧௧௮
கால்வரு	௩௪௨
காலசேய	௧௭௯
காலங்க	௨௨௪
காலமுகி	௧௦௪
காலினால்—லி	௪௧௭
காலினால்—ளை	௪௪௯
காலினாற்று	௪௪௫
காலையாத	௪௦௧
காலைவாய	௯௨
காவலரு	௩௮௨
காவலன்வா	௨௨௪
காவன்மன்	௨௮௬
காவும்வண்	௧௫௨
காழுடைப்	௯௦
காளப்புய	௧௭௨
காளமாமுகி	௨௯௨
காளிவந்து	௧௭
காற்றாய்மி	௧௭௩
காற்றின்மக	௨௬௨
காற்றின்மத	௪௩௦
காற்றும்வெ	௧௭௪
காற்றென	௧௬௭
கான்பட்டக	௨௯௨
கானகத்தினி	௪௧௦
கானகம்போ	௨௭௭
கானகமரு	௪௩௩
கானத்தி	௨௭
கானாளவு	௨௭௫
கானிடை	௧௨௫
கானீதிவ	௨௨௨
கானெறிது	௩௨௭
கானெல்லை	௧௯௮
கானெலா	௨௯௨
கி	
கிஞ்சுகம	௨௪௨
கிடந்தவனெ	௨௩௭
கிடந்தவுட	௫௦௧
கிரிசன்மை	௪௬௪
கிரித்தட	௪௭௭
கிரியின்சி	௩.௦௦
கிரியேயெ	௩௩௦
கிரீடியெ	௨௫௧
கிருதநாம	௪௮௪
கிருதவன்மா	௨௭௧
கிருபமாமு	௩௭௫
கிருபனும்	௨௫௭
கிருபனெண்	௪௫௨
கிருபாரிய	௪௭௫
கிருபையா	௪௭௬
கிளர்மகுட	௬௪
கிளரிசை	௧௬௧
கிளைத்திடு	௨௩
கிளைபடுபு	௨௩௧
கின்னரமி	௧௮௧
கின்னரர்	௨௦௩
கீ	
கீசகனாயி	௨௩௯
கீசகனிம்	௨௪௨

செய்யுள்.	பக்கம்.
கு	
குகைத்தடங்	௧௮௬
குகையுடை	௨௨௩
குஞ்சரத்திளங்	௨௬
குடதிசைமக	௨௫௭
குடநிறைப்பன	௨௪௯
குடியாமலக்	௪௬௧
குடைநிலவெறி	௩௧௧
குத்திரமிலா	௨௨௭
குத்திறனிவ	௫௨
குத்துவர்திரிப்ப	௩௪௭
குத்துவார்ப்படை	௩௬௫
குதிகொண்ட	௪௪௦
குந்திகாண்முளை	௧௮௭
குந்திதன்புதல்வ	௨௩௯
குந்திபோசன்	௩௪
குந்திமைந்தரொ	௨௧௪
குந்தியைமகி	௩௮
குந்தியையிர	௫௩
குந்திலயின்	௨௬௩
குயிலொடுகூவி	௧௫௨
குயின்றவைம்	௩௧௩
குரக்குநாயக	௧௮௭
குரவர்சொற்	௪௩௭
குரவரையுங்	௨௭௫
குரவோர்களை	௪௬௬
குருக்களவனு	௨௩௨
குருகுலத்தர	௨௭௨
குருகுலாதிபன்	௧௨௮
குருகோடியை	௧௭௩
குருட்டியன்	௨௪௧
குருத்தலந்தனிற்	௧௮
குருமரபுடைய	௧௩௩
குருமித்துநடக்	௪௪௦
குருவுடன்விர	௧௫௦
குருவுமக்குருகு	௪௨௭
குருவுமக்குருவை	௨௫௬
குருவொடுற்ற	௪௨௭
குலமாநிருப	௩௪௫
குலமிகவுடைய	௨௧௯
குவளைப்பரி	௪௦௭
குழகராயி	௧௨௦
குழைப்புறங்	௬௦
குளிர்வரை	௧௯௧
குளிருமாமதி	௨௮௫
குறிக்கும்பணி	௬௮
குறித்தசங்	௨௫௩
குறியவன்ற	௨௪௧
குறைந்தசங்	௧௫௪
குறையற்ற	௪௬௯
குன்றமுங்	௫௯
குன்றமொரி	௨௦௩
குன்றவில்	௩௮௧
குன்றுன்மெய்	௬௫
குன்றிசைத்த	௧௦௧
குன்றிலரு	௪௫௦
குன்றிலிள	௭௮
குன்றுநதியு	௬௬
குன்றுரைசட	௪௨௩
குன்றெடுத்	௩௦௭
குன்றெடுகுன்	௧௯௨
குனித்தசா	௪௧௬
குனிநாணுடை	௪௦௮
கூ	
கூடியிருவரு	௭௯
கூந்தன்யாமு	௧௫௨
கூரார்முனை	௧௬௬
கூருநல்லுரை	௧௬௯
கூரும்படையு	௪௭௬
கூளிகள்செரு	௩௨௫
கூளிகோடியு	௪௭௮
கூற்றனசு	௩௭
கூற்றிசைக்கு	௧௦௧
கூற்றினையுதை	௧௫௨
கூற்றுவனி	௨௧௦
கூற்றெனக்	௪௫௬
கூற்றொருப்பன	௪௭௨
கூறியசொற்	௪௫௬
கூறியவேசநா	௨௭௪
கூறுகின்றயொ	௨௩௫
கெ	
கெட்டவர்களி	௩௭௯
கெட்டவெம்ப	௨௪௯
கெடுமோகரு	௩௭௦
கே	
கேகயங்களோ	௨௩௫
கேசவன்புரி	௩௯௫
கேசவன்முத	௭௪
கேட்டசொல்	௧௩௫
கேட்டருளி	௪௯௧
கேட்டவக்க	௧௫
கேட்டவரச	௪௦
கேட்டிநீசெ	௧௫௪
கேட்டிநீமுர	௧௪௬
கேண்மதியோ	௮௦
கேண்மையா	௩௦௫
கேமனக்கரி	௪௩௪
கேவலந்தீர்	௨௭௭
கேள்விக்கொ	௬௮
கேள்வியுடை	௫௦௧
கேளொடுகெ	௨௪௨
கை	
கைக்காற்று	௪௮௫
கைத்தலவண்	௪௫௪
கைதவன்கு	௪௦௯
கைந்நடுங்க	௨௫௦
கைம்மலையுரி	௧௪௮
கையில்வாளி	௩௪௬
கையின்மாலை	௭௯
கையுடைச்சயி	௧௮௧
கையுறுசிலையு	௩௯௬
கைவருசிலையி	௬௬
கைவருதண்டு	௪௨௪
கைவிலுடனே	௧௫௮
கொ	
கொங்கர்போ	௩௪௭
கொச்சையிடை	௧௦௭
கொஞ்சுகிளிய	௩௩
கொட்பனர்சுட	௫௦
கொடிஞ்சியா	௪௭௬
கொடித்தடந்த	௨௫௦
கொடிநெடுஞ்	௪௦௦
கொடிநெருக்	௩௦௯
கொடிமதிற்	௨௫௭
கொடுத்தன	௩௦௭
கொடுத்துமா	௨௨௦
கொடுவிலாண்	௨௬௦
கொண்டகோநி	௨௫௨
கொண்டதவ	௧௫௭
கொண்டமென்	௨௯௨
கொண்டல்வா	௮
கொண்டலெழு	௮௬
கொண்டன்மு	௨௯௬
கொண்டனிகர்	௪௯௦
கொண்டுதந்தை	௧௧௯
கொண்டுபோத	௬
கொத்தொத்த	௩௭௨
கொதிகொள்சி	௩௧௦

செய்யுள்.	பக்கம்.
கொதித்தான	௩௭௦
கொந்தளக	௧௬௧
கொல்லவென்	௯௮
கொல்லுவதி	௨௯௪
கொலேயம்பு	௪௫௧
கொழுதுமம்	௨௫௫
கொழுநீர்ம	௨
கொவ்வையித	௫௫
கொற்றமன்	௩௨௮
கொற்றவர்	௩௧௫
கொற்றவரை	௧௦௪
கொற்றவாளி	௩௬௫
கொன்னேகுக்	௩௩௩
கோ	
கோகனாக	௨௫௭
கோடகப்பட	௨௬
கோடியின்கோ	௨௫௯
கோடுகைமுத	௪௩௩
கோடுகொண்ட	௨௮௩
கோடுங்கா	௩௩௦
கோடுமுதலொ	௩௩௯
கோடையால்வ	௪௨௮
கோடைவெயில்	௮௮
கோண்பிறைநு	௬௦
கோத்திரங்	௯௦
கோதமன்மக	௩௮
கோதிலாவிர	௧௭௪
கோதிலாளிங்	௨௭௫
கோதிலியக்க	௪௯௭
கோப்பலருட	௪௦௦
கோபம்விஞ்	௪௧௫
கோமகக்குரி	௪௧௦
கோமகனெஞ்	௧௧௫
கோமடந்தை	௮௦
கோமணிக்கு	௪௧௧
கோமன்றில	௧௪௨
கோயிலாளுடை	௩௩௬
கோயிறுமன்	௩௫௫
கோல்கொண்ட	௩௩௬
கோவல்சூழ்	௪௪௬
கோவிகன்ன	௪௧௮
கோள்களினி	௩௦
கோனிடநினே	௧௧
ச	
சக்கரஞ்சூல	௧௯௫
சக்கரம்பிள	௩௮௯
சகுனிசொன்	௧௬௨
சகுனியாவி	௪௮௫
சகுனியுடன்	௩௭௭
சகுனியுந்தி	௩௭௬
சங்கச்சங்க	௪௫
சங்கமூத்த	௩௩௨
சங்கரன்ம	௩௯௪
சங்கரனரு	௪௫௫
சங்கலாரி	௩௮௭
சங்கினங்கண்	௩௧௮
சங்கும்பேரி	௧௭௧
சங்குமணி	௨௮௦
சங்கையில்சி	௧௧௭
சங்கையிலா	௩௭௨
சங்கையுண்	௪௮
சசிகுலநகு	௩௧
சஞ்சத்தகர்க	௪௪௦
சஞ்சத்தகர்வி	௩௭௦
சஞ்சலமான	௨௯
சட்கோணநெ	௪௩௯
சண்டமாருத	௪௨௪
சண்டமுகிலு	௨௭௯
சத்தியகே	௩௬௩
சத்தியவிர	௧௪௪
சதகோடித	௯௬
சதமகன்ம	௪௪௮
சதித்தனே	௨௧௧
சதியெனேப்ப	௩௦௯
சதுர்விதத்	௪௪௬
சதுரமாமறை	௧௨௮
சதையமீன்	௧௩
சந்தச்சிக	௯௮
சந்தனவள	௨௫௯
சந்தனுவின்	௪௬
சந்திராத	௭௨
சம்பகம்பா	௧௨௨
சம்புவன்ச	௧௬௮
சமர்முகப்	௭௪
சமரவேழ	௬௮
சமரில்வீம	௪௮௪
சமரின்முங்	௧௯
சரத்தின்ச	௩௫௫
சரதமென்று	௧௪௨
சரந்தொடு	௪௦௩
சரமழைகா	௪௩௮
சராருத்தா	௩௮௬
சரிந்தவர்	௩௯௨
சல்லியன்பெ	௪௨௨
சல்லியன்ற	௩௩௮
சல்லியன்று	௩௦௫
சல்லியனெ	௩௧௮
சா	
சாககின்ற	௩௫௩
சாத்தகிதா	௪௧௯
சாத்தகிநி	௨௭௧
சாத்தகிப்பெ	௪௮௦
சாத்திரம	௫௪
சாத்தினன்	௩௯௩
சாதேவன்ற	௪௫௨
சாந்திஞன்	௨௪௧
சாந்தொடுத	௨௩௭
சாபத்தாலு	௨௧௫
சாய்ந்தனன்	௪௬௩
சாயலாற்சி	௪௪௮
சாயையொத்	௩௭௬
சாயைவெழு	௪௭௫
சாரணரியக்	௧௪௮
சாரதந்திர	௫௮
சாருமன்பி	௭
சாலக்கனக	௨௭௯
சாலும்வஞ்ச	௬௯
சி	
சிங்கக்கொ	௩௩௧
சிங்கமொன்	௧௧௦
சிங்கவேற	௪௫௬
சித்தசித்	௪௨௬
சித்திரசே	௧௮௧
சித்திரபா	௩௫௯
சித்திரவா	௪௮௩
சித்திரவில்	௩௭௯
சித்திராங்க	௧௭
சித்திரைவ	௩௩
சிதையத்த	௪௭௪
சிந்தித்தப	௨௭௭
சிந்திவாளி	௩௬௬
சிந்துபதியா	௩௯௧
சிந்துரமணி	௨௦௭
சிந்தையன்புட	௪௨
சிந்தையன்புற	௧௨௬
சிரந்தருசுடி	௨௯௪
சிரித்ததே	௧௫௩
சிரித்தன	௪௨௪
சிலசிலகை	௨௯௭
சிலேக்குரு	௪௧

செய்யுள்.	பக்கம்.
சிலைப்படை	௪௨௬
சிலைபதாகை	௩௫௧
சிலையழிந்த	௩௮௨
சிலையாசிரி	௩௫௬
சிலையிதுசி	௬௧
சிலைவரம்பெ	௩௩௭
சிலைவாயங்	௧௩௬
சிவமுறமுகூ	௨௯
சிவன்றன்னை	௨௬௪
சிவனேதிசை	௨௦௫
சிற்பநூலிற்	௪௭
சிற்பவல்ல	௭௨
சிற்பொருட்ப	௧௮
சிறந்தமெய்	௨௨௪
சினத்துமுனை	௩௬௪
சினத்தோடு	௩௪௪
சினவுசிங்க	௩௮௪
சீ.	
சீதநாண்மலர்க்	௫௦
சீதநாண்மலர்ம	௨௮௬
சீதவெண்கு	௧௪௬
சீதளவமுத	௨௫௯
சீர்த்தாரை	௨௦௪
சீர்வலம்புரி	௨௮௨
சீரியகங்க	௨௩௮
சீறியக்குரி	௯௮
சீனர்சாவ	௩௦௪
சு	
சுகனிகர்து	௩௭௯
சுடுமனற்க	௧௦௫
சுடுவுரைக்க	௪௧௭
சுதைநிலா	௨௪௪
சுரசமுக	௮
சுரருலகெ	௪௫௭
சுரருலோ	௪௩௭
சுரிகுழல்கு	௧௪௩
சுரிமுகங்க	௪௬௪
சுருதிக்கட	௨௧௫
சுருதிப்படியே	௯௯
சுற்றருதவி	௩௫௧
சுற்றுநீளமு	௧௨௧
சுற்றுமன்ன	௩௦௫
சூ.	
சூட்டியதொ	௬௦
சூடுகின்ற	௨௭௬
சூதன்மை	௪௨
சூதினில்யா	௧௫௯
சூதினிலா	௨௮௬
சூரர்க்கெ	௩௨௬
சூரன்குல	௧௦௮
சூரன்மா	௨௬
சூலநேமி	௧௭௧
சூலமுந்த	௨௦௯
சூலுடைய	௨௦௩
சூழ்ந்தது	௪௪௧
சூழ்வேலை	௪௭௨
சூழிருட்பி	௧௯௩
சூழிவெங்க	௩௩௭
சூழுங்கனை	௪௩௭
செ.	
செகத்தியங்	௧௦௧
செங்கண்மாலுயி	௩௧௦
செங்கண்மாலுரை	௪௪௩
செங்கணரவ	௩௫௬
செங்கணை	௧௭௦
செங்கதிரெ	௨௯௪
செங்காவிசெ	௮௬
செங்கைகாலு	௨௪௩
செங்கோலம	௪௪௬
செஞ்சொன்மு	௨௭௪
செண்டினுல்	௩௧௭
செந்தமிழ்வ	௧௫௧
செந்திருமட	௩௯௪
செந்திருவை	௭௯
செந்நெலைக	௨௫௮
செப்புரத்தி	௧௬௯
செம்பற்ப	௩௪௭
செம்பொற்பு	௧௭௬
செம்பொனுடை	௨௫
செம்மணிவெ	௪௬௧
செம்மையல்	௨௭௩
செய்கடலா	௪௩௮
செய்த்தலை	௪௦௨
செய்தவமுனி	௩௧
செய்தவனி	௨௧௮
செய்வாரவி	௨௭௪
செயகந்த	௪௮௩
செயிரத்தவ	௩௩
செயிருடையா	௪௩௮
செருச்செய்வா	௨௫௩
செருத்துப்பு	௩௩௪
செருப்புகைக்	௪௭௯
செருமலியா	௨௭௧
செருமிக்க	௨௪௭
செருவில்வெ	௩௪௭
செருவிளங்கா	௧௨௩
செருவென்ற	௧௬௭
செல்லுங்க	௩௩௪
செல்வணக்கி	௪௪௯
செல்வப்பா	௧௩௬
செல்வம்வ	௨௯௦
செவ்வாய்வை	௩௬௧
செவ்விரவி	௪௭௫
செழுந்தழல்	௩௯௯
செழுந்திருவி	௧௧௭
செழும்புனலு	௨௨௨
செழுமுரசுய	௭௦
செறிந்தவர்	௧௪௭
செறுத்தவர்	௪௪௫
செறுப்பது	௨௬௧
சென்றசென்	௪௦௯
சென்றசேனை	௬௯
சென்றதேர்	௩௫௯
சென்றநிரு	௩௬௦
சென்றபரி	௩௫௦
சென்றவம்பை	௬௯
சென்றவம்மு	௨௭௨
சென்றவன்சே	௪௫௪
சென்றவன்ற	௨௩௦
சென்றவிற்ற	௪௦௨
சென்றவீர	௪௪௯
சென்றனன்	௩௫௭
சென்றுடமர்	௪௩௯
சென்றியாக	௧௨௯
சென்றிருக்க	௪௭
சென்றுதன்	௨௫௩
சென்றுதாதை	௭
சென்றுதேர்	௩௪௫
சென்றுபோர்	௪௭௯
சென்றுமீள	௪௧௬
சென்றுவெஞ்சி	௪௭௮
சென்றுழியெ	௪௧௩
சென்றெதிரு	௪௫௫
சென்றொருநொ	௨௧௧
சென்னிநாடு	௬௦௧
சென்னியாவெ	௨௨
சென்னியின்ம	௪௪௩
சே.	
சேடன்முடி	௩௮௬

செய்யுள்.	பக்கம்.
சேணிருந்து	௧௨௭
சேணிலத்தி	௧௪௦
சேதிகுலங	௧௦௯
சேதிமன்ன	௧௧௧
சேந்தநெடு	௩௫௦
சேயபங்க	௨௨௦
சேயனைய	௩௯௬
சேயோன்	௨௬௬
சேரமுப்பது	௪௧௪
சேலாம்பி	௮௫
சேவலானெ	௨௪௮
சேனாபதிக்கு	௪௭௪
சேனாபதியா	௪௬௨
சேனாவிந்துசு	௩௩௨
சேனாவிந்துவை	௫௦௨
சேனையுமு	௪௫௪
சை.	
சையமொ	௩௫௮
சொ.	
சொரியுங்க	௩௫௫
சொரியுங்கணை	௩௮௩
சொல்லலா	௨௫௫
சொல்லவா	௨௮௬
சொல்லார்	௩௨௫
சொல்லிடை	௧௧௩
சொல்லியே	௫௭
சொல்லிர	௨௮௯
சொல்லுநூ	௨௨௬
சொல்லுமா	௨௪௫
சொற்கையா	௩௨௨
சொற்றவரு	௪௩௨
சொற்றவா	௧௦௮
சொன்மழை	௯௩
சொன்னசி	௫௦௦
சொன்னநா	௭௫
சொன்னவா	௧௬௪
சொன்னவார்	௪௧௪
சொன்னவாறு	௩௬௬
சோ.	
சோதிவான	௨௮௫
சோமகர்க்க	௨௧௭
சோமகர்க்கு	௪௩
சோமகரி	௩௫௩
சோமகேச	௪௪௯
சோரத்துட	௩௭௦
சோரர்தங்	௨௫௯
சோனாமேக	௪௫௮
சோனைமா	௧௪௭
சோனைமே	௩௨௨
சோனையம்	௪௦௧
ஞா.	
ஞாலத்தெரி	௮௫
ஞாலமுற்று	௨௨௮
ஞானசஞ்சு	௨௮௩
ஞானபண்டி	௪௯௫
ஞானமன்பொ	௨௭௪
ஞானமாகிய	௧௧௨
ஞெ.	
ஞெலிமாத்தி	௩௮௧
த	
தக்ககன்றன்ம	௪௭௧
தக்கசன்றனை	௯௨
தக்கோர்த	௨௪௭
தகபபடுஞ்ச	௪௪
தகலருந்தி	௪௧௪
தகாமொழி	௧௩௪
தகைந்தபோ	௮௩
தகையுளவக	௧௬௧
தங்கண்மலை	௭௯
தங்கண்மன்	௩௬௫
தங்கள்குல	௧௦௪
தங்கையவ	௩௩
தசசரிற்பெ	௪௯
தசும்புறு	௭௪
தசைகுருதி	௩௯௯
தசையும்வெ	௧௭௪
தசையுறவ	௪௭௮
தடங்கான	௨௨௨
தடம்பதிய	௨௫௮
தடாநிறை	௧௨௩
தடித்தலைவே	௩௬௩
தண்டரளம	௫௬
தண்டரளமா	௨௦௩
தண்டார்வி	௧௩௭
தண்டிருந்த	௨௭௯
தண்டின்மு	௪௧
தண்டினால்வர்	௧௯௪
தண்டினுக்கொ	௨௨௯
தண்டினொடு	௨௦௬
தண்டுதாளெ	௩௦௦
தண்டுழாய்மு	௪௮௦
தண்டேகொ	௩௬௦
தண்டொடுத	௪௩௪
தண்ணந்து	௬௨
தண்ணந்துள	௩௦௦
தண்ணியதரு	௯௩௪
தண்ணீர்நிக	௪௬௧
தண்பரிமள	௩௦
தண்பிறையே	௨௯
தண்மதிக்கு	௬௯
தத்தம்படை	௨௨௯
தத்திக்குரு	௧௭௬
தத்தியுந்தோ	௨௩௩
த்தையும்வ	௨௫
தந்தமுறி	௩௨௫
தந்திரமியா	௩௮௯
தந்தைதகா	௨௮௭
தந்தைசொன்	௧௬௬
தந்தைதன்	௧௧௬
தந்தைதன்ன	௧௪௨
தந்தைபோ	௨௫௬
தந்தைமொழி	௯௬
தந்தையர்க்கு	௧௬
தந்தையின்	௩௫௫
தந்தையுந்த	௨௯௩
தந்தையுந்தா	௨௬௧
தந்தையுரை	௧௯௭
தந்தையெ	௪௪
தந்தைவெந்	௩௭௫
தப்பருஞ்ச	௪௬௩
தப்பாதென்	௪௯௨
தப்போதாம	௨௧௬
தம்பிதனகா	௩௩௦
தம்பிபடுந்	௪௬௨
தம்பிமாரை	௧௪௬
தம்பிமாரொ	௧௧௯
தம்பிமைந்த	௧௨௬
தம்பியப்பெ	௨௩௪
தம்பியர்கணா	௯௬
தம்பியர்கள்	௪௯௧
தம்பியர்கி	௨௨௨
தம்பியர்தளர்	௪௭௮
தம்பியர்தா	௨௧௮
தம்பியர்வ	௨௨௯
தம்பியர்வி	௧௪௮
தம்பியரனை-த	௨௨௭
தம்பியரனை-து	௩௦௬
தம்பியருந்	௪௧௨

செய்யுள்.	பக்கம்.
தம்பியரைந்	௨௯௧
தம்பியைத்து	௪௮௮
தம்மக்களா	௧௭௭
தம்மூன்றள	௩௩௧
தம்மூனுகிய	௪௮௬
தம்முனொடு	௩௫௮
தம்மையொப்	௨௫
தமதின்மெய்	௧௨௮
தமரினுமி	௯௬
தமையனுந்த	௧௧௩
தயங்குவெ	௪௮௦
தரங்கவா	௨௮௪
தரணிதாழு	௪௮௪
தரணிபதித	௩௧௮
தரணிபரெய்	௩௮௨
தராதலமு	௨௨௯
தரித்தனர்வீ	௧௨௪
தருக்கியகா	௨௩௬
தருக்குங்க	௧௬௨
தருகதுகிலெ	௧௪௦
தருமபூபதி	௪௩௭
தருமமன்ன	௩௭
தருமராசன்	௩௫௦
தருமன்பவ	௬௭
தருமன்மக	௪௭௧
தருமன்மாபெ	௩௨௮
தருமன்மாம-சொ	௬௬
தருமன்மாம-ய	௧௦௭
தருமன்மூத	௩௫௨
தருமன்மைந்தன்	௪௫௨
தருமன்மைந்தனு	௩௬௫
தருமனுக்கு	௨௭௯
தருமனுந்த-சா	௩௦௭
தருமனுந்த-தா	௨௨௨
தருமனுமரு	௪௨௫
தருமனென்	௨௧௨
தருவதுமுயி	௩௯௫
தரையில்வீ	௩௬௦
தலக்கணேச	௩௬௦
தலத்துக்கியை	௧௩௬
தலமாமக	௪௦௭
தலைதுணிந்து	௩௮௫
தலைவனுமுனி	௪௦௯
தவமுறக்கு	௧௩
தவரோடவ	௪௦௮
தவனன்மைந்	௬௩
தவாதபோர்	௧௬௬
தவாமறைவா	௧௯௧
தழல்வந்த	௧௭௧

செய்யுள்.	பக்கம்.
தழல்வளரோ	௧௦௬
தழலோவெ	௧௩௭
தழுவியவர	௨௬௧
தழுவினன்பெ	௧௫௯
தழைத்தபே	௯௦
தள்ளினர்த	௧௮௧
தளர்ந்தநி	௩௧௯
தளர்ந்தவ	௪௫௫
தளவொத்த	௩௪௪
தளைத்தபாத	௯௦
தன்காத்தி	௪௮௩
தன்கருத்தி	௧௨௦
தன்படைத்த	௪௮௦
தன்பதிவந்தோ	௩௪
தன்பாடிபு	௩௪௫
தன்பிதாம	௩௪௨
தன்புயவலி	௧௧௪
தன்பெருஞ்	௨௯௫
தன்பெருந்த	௪௭௬
தன்பெருமா	௧௧௫
தன்மசவுட்	௩௮௮
தன்மகளையு	௩௭௮
தன்மாதுல	௩௮௪
தன்மேலுா	௪௫௯
தன்மைந்த	௨௨௧
தன்மைநா	௨௯௧
தன்றமைய	௪௮௩
தன்றனிச்	௨௨௧
தன்றிருமை	௩௯௮
தன்றுணைநி-ச	௧௯௬
தன்றுணைநி-சா	௪௧௨
தன்றேர்வ	௧௭௭
தன்றோளு	௪௫௨
தன்னருகே	௧௮௪
தன்னொலான்	௯௯
தன்னிலத்தி	௨௫௨
தன்னிலுயர்	௨௯௮
தன்னெதிர்	௩௭௪
தன்னேரில்	௧௩௯
தன்னைநிக	௨௬௨
தன்னையத்த	௩௮௩
தனக்கிளை	௪௮௪
தனக்குநிக	௪௮௩
தனக்குவின்	௨௦
தனக்கெதிர்	௪[illegible]௮
தனஞ்சயன்கை	௧௦௪
தனஞ்சயன்ற	௪௩௧
தனத்திலாசை	௩௯
தனதுகண்ணெ	௪௧௬

செய்யுள்.	பக்கம்.
தனதுதிண்	௪௭௭
தனதுபாச	௪௩௧
தனித்தனிய	௩௮௧
தனித்துமலை	௩௬௪
தனிதமேகம்	௧௯௪
தனிதமேகம	௧௭௯
தனிவந்தக	௨௯௯
தனிவந்துதோ	௪௮௬
தனிவனமி	௫௩
தனுசர்தா	௧௭௦
தனுவின்வே	௪௮௫
தனுவெடுத்	௬௩
தனுவேதத்	௩௬௦
தனைத்தேர	௨௪௮
தனைப்பயந்த	௨௨௫

தா

செய்யுள்.	பக்கம்.
தாக்கியகா	௨௩௭
தாக்கினன்	௧௯௪
தாஞ்சாரற்	௬௪
தாண்டியத	௪௭௦
தாண்டியவெ	௩௬௩
தாண்மூத	௪௮௧
தாதவிழ்கு	௧௧௩
தாதியர்மரு	௩௧
தாதிறற்பொ	௭௦
தாதைகூறி	௨௨௬
தாதைதாதை	௧௨௮
தாதைதாளி	௧௯
தாதையை	௪௫௭
தாமங்களி	௪௬௭
தாமத்தெரி	௩௩௧
தாமப்புரி	௨௦௫
தாமமாருதி	௪௮௭
தாமரைய	௧௧௨
தாமன்மே	௩௪௭
தாமன்றரா	௪௭௫
தாயத்தாரு	௧௮௮
தாயரொடு	௩௯௦
தார்ச்சல	௪௧௩
தார்வண்டி	௬௨
தார்வலம்	௪௯௪
தாரகாய	௩
தாராசன்	௩௯௮
தாராரோடை	௩௩௨
தாரைகளொ	௪௩௯
தாவியவெம்	௪௮௫
தாவெழுமாம	௪௯௧
தாழ்ந்தவா	௨௫௩

செய்யுள்.	பக்கம்.
தாழ்வரைத்	௨௪௨
தாழங்குறி	௪௫௨
தாழிநறுங்	௮௮
தாள்வலியாட	௪௩௮
தாள்வலியாலெ	௪௩௪
தாள்விசய	௩௮௬
தாளிணையிறை	௨௫௫
தாளிரண்டி	௨௧
தாளிரண்டு	௩௧௬
தாளினேடிய	௪௧௭
தான்படைத்	௧௩௯
தான்வணங்	௩௦௫
தான்வரித்	௫௮
தான்விடுங்	௩௩௮
தான்விரத	௨௩௧
தானமுந்தி	௧௦௬
தானவர்சம	௩௨௪
தானவர்சமூ	௧௭௫
தானவர்தச்	௪௦௨
தானவர்ப்பொ	௩௯௫
தானவர்ப்பொ	௩௯௬
தானவர்பு	௯௧
தானவராகி	௧௩௫
தானுதிகனே	௩௫௬
தானிருந்த	௪௩
தானுமம்	௪௫
தானுமாமனு	௪௨௯
தானுமுன்ன	௩௫௧
தானுமைந்த	௧௧௯
தானேசூது	௧௩௬
தானேயுவங்	௨௬
தானைகாவல	௪௨௩

தி

செய்யுள்.	பக்கம்.
திக்கோடிய	௧௭௧
திகத்தரா	௩௬௧
திகந்தமெட்	௧௮௮
திகந்தவெ	௨௭௨
திகழ்கின்ற	௧௬௨
திகழ்ந்த	௨௬௧
திங்களொத்த	௪௩௭
திசையனைத்	௨௮௯
திண்சிலையி	௪௫௦
திண்டிறற்சி	௨௪௮
திண்ணியநெ	௧௦௯
திண்மையா	௨௧௮
திரண்டுபல்	௩௫௦
திரத்துவா	௨௬௮
திரிபுவன	௪௮௯
திருக்கண்க	௨௧௬
திருகுசினத்	௫௦௨
திருகுநெஞ்	௧௩௩
திருத்தகமொ	௧௩௫
திருத்தகுநக	௨௧௩
திருத்தகும	௧௧
திருதராட்	௪௧௯
திருந்தமெய்	௧௦௫
திருந்தார்ம	௬௧
திருந்துநல்	௨௨௫
திருநெடுமா	௩௨௧
திருவடிதன்	௧௯௦
திருவுளத்து	௩௮௮
திரைகொழித்	௧௬௮
திலகநுத	௮௭
திலகமுமோ	௪௩௩
திலத்திற்சி	௩௪௯
திளைத்தாரா	௩௪௪
திறனறியா	௩௯௭
தினகரன்க	௧௨௮
தினகரன்சு	௨௫

தீ

செய்யுள்.	பக்கம்.
தீண்டாதகற்	௨௭௬
தீண்டுதறகா	௨௩௮
தீதறக்கா	௨௨௭
தீதறுமதி	௨௯௩
தீதிலாத்தி	௧௬௯
தீதிலானு	௪௨௯
தீதினல்வ	௧௧௬
தீயினற்சு	௧௪௨
தீரயால்	௯௩

து

செய்யுள்.	பக்கம்.
துகிரிதழ்வை	௨௯௭
துச்சாதனன்ம	௩௮௩
துச்சாதனன்ற	௩௩௪
துச்சாதனனே	௪௫௮
துச்சாதனவி	௩௪௬
துதியினலு	௪௦௪
துதையளிமு	௭௪
துப்புறழமு	௧௧௫
தும்பிக்குல	௨௦௪
தும்பிமாபரி	௪௬௩
தும்பிமேன்	௩௪௧
தும்பியில்வா	௪௮௫
தும்பைசூடி	௭௦
தும்பைவகை	௧௫௮
துயிலுணர்ந்	௧௨௬
துரகதத்தட	௩௪௮
துரகதத்துட	௩௮௧
துரங்கமோ	௨௩௬
துரியோதனன்	௩௮௩
துரியோதனன்ற	௪௫௧
துரியோதனனவ	௪௦௭
துருபதயாக	௩௫௮
துருபதேய	௩௫௧
துருபதன்ம	௪௨௫
துருபதன்மு	௪௭௯
துருபதன்மை	௪௯௯
துருபதனுஞ்	௪௨௧
துருபனுந்தி	௧௪௫
துவசத்தொடு	௧௭௬
துவசம்பிள	௩௨௬
துவமிகு	௪௮௮
துவன்றுக	௨௪௫
துளவணிமு	௪௫௭
துளியார்ம	௨௯௯
துற்றபல்க	௫௬
துன்பம்பய	௭௬
துன்பமுறு	௪௬௧
துன்மதியா	௪௬
துன்மருடண	௪௫௮
துன்முகனும	௩௭௯
துன்முகனை	௩௬௩
துன்றினரி	௧௪௭
துன்றுபிணி	௨௮௦
துன்றுவெங்	௩௫௮
துன்னலன்	௨௪௮
துன்னிமித்	௩௫௧
துனனியிரு	௮௨
துன்னுகங்கை	௨௮௬
துன்னுபார	௫௦௦
துன்னும்வெ	௧௮௬
துனைவருக	௨௧௦
துனைவெங்	௪௪௦

தூ

செய்யுள்.	பக்கம்.
தூசியின்மு	௪௦௨
தூண்டகுதோ	௧௬௫
தூண்டினன்	௩௮௨
தூண்டுமா	௨௫௦
தூணும்வில	௪௩௩
தூதுபோயா	௩௦௩
தூநகைமொ	௧௨

செய்யுள்.	பக்கம்.
தூநகையுருப்	௧௫௦
தூமமுமெம	௯௧
தூமவெங்க	௨௬௯
தூயநலந்த	௪௮௫
தூரியங்க	௩௫௩
தூவாநின்ற	௬௫௯
தூவியனிலவு	௨௯௩
தூவிவாசங்	௨௪௪
தூளியேய	௩௬௨
தூறுகொண்டு	௪௪

தெ

செய்யுள்.	பக்கம்.
தெண்டிரைகை	௮௦
தெம்மைந்த	௨௬௪
தெருமந்த	௩௭௧
தெழித்தசொ	௧௬௮
தெழித்துரப்பி	௧௭௮
தெறுகணை	௩௦௩
தென்னர்சேரலர்	௨
தென்னாட்டில்	௩

தே

செய்யுள்.	பக்கம்.
தேக்குந்தி	௨௯௨
தேசறையிடங்	௧௨௫
தேடியவகலி	௩௨௯
தேடிஞரியாவ	௧
தேம்போதனை	௪௩௮
தேயமெங்கெங்	௨௭௦
தேயுவாளி	௬௨௭
தேர்கொடுத்த	௪௩௨
தேர்த்திரள்	௩௫௮
தேர்போனது	௩௮௩
தேர்மிசைவந்த	௨௩௬
தேர்முகமிழந்து	௩௭௯
தேரணியும்	௨௦௭
தேரவன்மைந்தன்	௪௭௭
தேரவன்றிரு	௬௧௭
தேராழிந்தெ	௩௮௯
தேராரவார	௧௭௭
தேரிரண்டு	௬௦௩
தேரின்மேனின்	௬௫௬
தேரிஞர்ப்பொலி	௧௬௯
தேரினின்றவர்	௬௦௯
தேருதயபா	௩௫௨
தேரும்விசை	௩௪௯
தேருமங்கொரு	௨௫௨
தேருமொன்றொரு	௨௫௫
தேரோடருக்	௪௫
தேவர்காக்	௧௮௮
தேவர்தம்	௧௬௬
தேவர்பால்	௧௮௨
தேவதத்தமு	௬௬[illegible]
தேவராயினுங்	௨௭௬
தேவருக்கர	௪௧௦
தேவருங்கோடி	௯௩
தேவரும்பரவு	௬௧௮
தேவரும்வாச	௨௯௮
தேவியருந்	௮௬
தேவினுந்தேவ	௭௧
தேற்றினுமகப்	௩௯௦
தேறல்வண்டி	௪௧௬
தேறலார்தமை	௧௨௦
தேறினன்	௩௮௨
தேனமர்கமல	௧௮௧
தேனிடறிப்	௩௯௯
தேனிடறுவாச	௨௦௫
தேனிருக்கு	௩௮௬
தேனிற்குளித்த	௨௬௫
தேனினஞ்செறி	௧௨௩

தை

செய்யுள்.	பக்கம்.
தையலங்கு	௧௪௪
தைவருநவ	௩௫

தொ

செய்யுள்.	பக்கம்.
தொக்கவெண்	௨௮௫
தொட்டகொடு	௧௯௨
தொட்டசரங்	௧௯௬
தொட்டவரி	௪௮௨
தொடங்கிநா	௮௪
தொடங்கியா	௨௨௧
தொடங்கியு	௬௦
தொடங்குபோ	௬௦௪
தொடர்ந்தொ	௨௯௫
தொடிக்கர	௨௦௬
தொடுகணைவி	௬௨௮
தொடுத்தச	௨௦௬
தொடுத்தசி	௩௭௯
தொடுத்தநா	௧
தொடுத்தவ	௪௭௯
தொடுத்தார்	௬௫௯
தொடைகொடுத்	௨௧௬
தொய்யிலாதி	௨௬௬
தொல்பகீரதி	௨௮௨
தொல்லவை	௨௯௮
தொல்லரக்	௨௨௮
தொல்லாண்மைப்	௨௭௯
தொல்லாண்மையெ	௪௭௪
தொல்லைநாய	௨௮௨
தொல்லைமாந	௧௩௪
தொலைவிலங்	௩௪௧
தொழுதகுவி	௯௨
தொழுதுதாளி	௨௪
தொழுதுநெற்	௨௨
தொழுதுபொற்	௬௬
தொழுந்தகை	௨௩௭
தொழுவார்த	௨௪௬
தொறுக்கொண்	௭௬

தோ

செய்யுள்.	பக்கம்.
தோட்டுமென்	௨௬௪
தோட்டுவந்	௨௮௪
தோத்திரமா	௧௬௭
தோமரந்தன்	௪௭௭
தோயமாபுர	௧௬௭
தோரணமஞ்	௭௨
தோரணவீதி	௧௦௫
தோலநேகம	௩௭௬
தோலாதடலொ	௩௩௫
தோழன்மாம	௯௩
தோள்கரம்	௫௦
தோளிரண்டினுந	௩௮௦
தோளிரண்டினுநா	௨௦௦
தோளுநெஞ்ச	௩௫௬
தோற்றவன்	௫௯
தோற்றியதெம்	௧௬௯
தோன்றரித்	௩௩௮
தோன்றிநெடுங்	௪௯௦

ந.

செய்யுள்.	பக்கம்.
நகரியெங்கு	௨௬௪
நகுலன்விடு	௬௩௫
நகுலனிவை	௨௭௭
நங்கையங்கோ	௮௭
நச்சிளையர	௬௧௯
நச்சுநீர்கு	௨௨௬
நஞ்சநாகமு	௨௭௨
நஞ்சவியாள	௩௭௩
நஞ்சோடுசா	௨௬௫
நஞ்சோற்றம்	௪௪௫
நடந்தநாய	௨௮௧
நடுங்குமெய்	௨௩௫

செய்யுள்.	பக்கம்.
நடுநிலமுரை	௩கக
நடையொழியா	சகூ௩
நண்ணுமர்த்த	௩0அ
நதியழித்த	உச
நதியெனேப்ப	௩0சா
நந்தகோமக	ககச
நபமுகின்முழ	௩எஎ
நரநாரணர்	சசாசா
நல்லிலக்க	அ௩
நற்பகலிடை	௩உகூ
நற்றவத்து	க௫0
நற்றுணைச்சி	உஉ௩
நறைகமழ்த	அஎ
நன்கலாவித	உஉ0
நன்பெருவன	உஉஎ
நன்மனைவாழ்	௫ச
நன்றுநன்றுன்வாய்	௩கூ
நன்றூண்டிக	சசாஉ
நன்னெடுந்து	கஉச
நனியாடலன	அசா
நனைமலர்சி	க௫ச
நா.	
நாகங்குறி	௩சசா
நாகந்துவச	௩உசா
நாகர்பொற்ற	சகக
நாகவிந்தம்	சக௫
நாகாதிபன்	எஎ
நாகாயுதங்	சசாஅ
நாகையாப்பு	சசஉ
நாட்டமிலா	சக௩
நாட்டிடையெ	கசச
நாட்டிலுள்ள	உசகூ
நாடியசொற்	௫0உ
நாடியொளித்த	௩உஅ
நாடிவாசியி	உ௫0
நாணிரைத்த	க
நாணினளாமெ	கூ
நாணேமுதலா	க௩அ
நாதமுமியலு	உ௩0
நாதெறித்த	சக0
நாநலம்புன	கஉச
நாபுரப்பத	எ௩
நாமக்கலவி	உஅ
நாமமிரண்டொ	ச௩௩
நாமவெங்கொ	௩௫ச
நாமவேலரச	உகூ௫
நாரிக்கொருகூ	உஎ

செய்யுள்.	பக்கம்.
நாலிருவசுக்	௩க
நாலுசாபநிலை	சஉசா
நாவியின்மத	க0சா
நாளையேகுது	கஉக
நாளையோர்ப	ச00
நாற்றிசையுல	உகூஉ
நான்முகன்ரு	க௩௫
நானங்கமழு	கூக
நி.	
நிசிசரனெடுத்	௩சாஎ
நித்தனேநிம	௩கூ௫
நிரந்தரம்பு	௩0க
நிரந்தரமநே	க௫0
நிருதகன்னி	௩சாசா
நிருதனைத்து	௩கூஎ
நிருபர்தொழு	சஉக
நிருபனதுனை	ச௫
நிருபனுடனி	சஉக
நிரைகதிர்க்க	உஅ௫
நிலத்திடைகு	சஉ௩
நிலத்தியறண்	உக௩
நிலையானவய	௩எஉ
நிலையிரண்டி	சசா௫
நிலையுமுட்டி	உ௫0
நிற்குநிலைநி	௩எகூ
நிற்பதேதுகொ	உஉசா
நிறக்கவல்லி	எ௩
நிறத்தநீல	சகூ௫
நிறந்தருங்கு	சா
நிறந்திகழி	௫ச
நிறனின்மிகு	ச௩ச
நிறுத்தறம்வ	ககஎ
நிறுத்துகம	கக
நிறைமதிநிக	௩கூச
நிறையுடைத்த	௫ச
நின்கிளையா	சஅஎ
நின்புதல்வ	உசா௩
நின்பெரும்பு	உகூக
நின்போன்மர	கசா௩
நின்றசாபமு	சா௩க
நின்றசேனை	௩சா௫
நின்றமர்தொ	௩கஉ
நின்றமாநகு	ச௩சா
நின்றவக்க	சசஅ
நின்றவக்கும	கசாக
நின்றவக்குரி	சச௩
நின்றவன்ற	௩ச௩

செய்யுள்.	பக்கம்.
நின்றவனிரு	உஎ0
நின்றனையரு	௩கச
நின்றனையே	௩அசா
நின்றூர்நின்றபடிக	௩௩௩
நின்றூர்நின்றபடிகொ	௩எக
நின்றுனமர்க்க	௩சசா
நின்றிடாதிமை	உஉ௩
நின்றிருசே	௩௩அ
நின்றுபட்ட	ச0சா
நின்னளகா	ககூஎ
நின்னறத்தி	உஎ௩
நின்னுடனம	க௫கூ
நின்னைவெல்	க௩க
நினக்கிதுதொ	க௩சா
நினகரத்தி	சகூ0
நினைக்கவுந்தொ	உகூ0
நினைவற்றசா	உஎ
நினைவுற்றபொ	௩சாஅ
நீ	
நீகாரமழை	அஅ
நீங்களுமவரு	சகசா
நீட்டுமவ்வர	சஅகூ
நீடாழியுலக	ச
நீடியசிலை	உ௩0
நீடியிங்குநா	௫க
நீடுகின்றதரு	ச௩க
நீடுங்கடகரி	௩௩சா
நீடுதலில்லை	௫கூ
நீடுமால்வரை	சஉஉ
நீடுறுதருக்க	கஉசா
நீதியிலாநெ	சசா
நீதியிற்புகல்	உஅச
நீதியும்விளை	உஉஅ
நீதூதுநடந்த	உஎ௫
நீதேவனென்	உஎஅ
நீநயந்தனை	சகூச
நீபாரதவம	உஎஅ
நீபுரிதவப்ப	கசா0
நீபுரிந்தநல்	ககக
நீயிதற்கி	உஉச
நீயிருக்க	உஅகூ
நீயிலங்கை	க0உ
நீயுங்ககன	௩சகூ
நீயெனிலாண்	கூஎ
நீயேயெனக்கு	சஎச
நீராறுதருக்	௩கூச
நீலநெடுங்கி	சஎக

செய்யுள்.	பக்கம்.
நீலமணித்தி	௧௫௪
நீலமால்வரை	௧௭௧
நீலமுற்றிய	௩௯௩
நீலனிட்டதி	௧௦௧
நீவிரும்விதி	௭௫
நீவிரேயல்	௧௬௭
நீவினைத்தலை	௩௬௨
நீவெறுக்கிலெ	௨௮௭
நீளகல்வான	௧௮௯
நீளமுறப்ப	௬௯௦
நீறுபட்டில	௧௫௧
நீறுபடுத்தி	௩௨௭
நு	
நுண்ணிதினு	௭௧
நுந்தையேவ	௪௮
நூ	
நூலொடுசா	௩௭௪
நூற்றுவரை	௩௪
நூறுயிரதே	௧௭௩
நெ	
நெஞ்சறியநீ	௪௮௯
நெஞ்சிலீரமு	௯௦
நெஞ்சின்மேலி	௮௯
நெஞ்சுறமண	௩௦
நெடியகானக	௧௮௯
நெடியவரிசி	௩௩௯
நெடும்பணைப்	௨௦௦
நெடுமாநகரி	௧௩௭
நெடுவேனில்	௮௭
நெரிந்தனர	௨௦௭
நெருங்குவெம்	௩௦௮
நெருநலிந்தி	௨௧௪
நெருநலிபபெ	௩௪௧
நெளிந்தாடர	௭௭
நெறியிடையிவ	௩௮௭
நெறியிருபுற	௧௪௮
நென்னலங்கை	௩௨௮
நென்னற்புய	௨௧௬
நென்னனீரபி	௬௧௯
நே	
நேமியானிவை	௨௭௪
நேயமுண்டுபோ	௧௨௭
நேர்செலுத்து	௪௪௫
நேரிலாதகிரு	௪௮௧
நொ	
நொந்தாங்வ	௩௩௧
நோ	
நோக்கியசண்	௮௦
நோக்கியவ	௧௧
நோன்றுள்வெ	௧௩௬
ப	
பக்சமும்பி	௫௬
பகடுதேர்	௩௫௭
பசதத்தனும்	௩௬௯
பசருநால்	௬௧௭
பகலவன்றன்—யு	௪௬௧
பகலவன்றன்—யை	௬௭௧
பகலிராவ	௪௨௨
பகலினுங்க	௨௮௧
பகன்மறைத்	௩௦௯
பகன்விற	௨௦௦
பகிரதனே	௧௪௯
பகிரதிமைந்	௩௫௭
பகுத்தபல்	௩௩௭
பகைவனே	௪௭௭
பங்கையாச	௪௦௮
பங்களங்	௩௦௬
பங்குனன்பெ	௮௩
பச்சிளங்க	௧௨௩
பச்சென்ற	௭௮
பச்செனும்	௨௨௪
பச்சைவாசி	௯௩
பசுக்கவர்	௧௨
பசுபதியரு	௪௮௦
பஞ்சவர்வா	௧௨௯
பஞ்சவரி	௮௦
பஞ்சின்மெ	௩௨
பட்டக்களி	௩௬௮
பட்டநுத	௩௨௧
பட்டமணி	௬௩௮
பட்டவர்த்	௫௭
பட்டவரெ	௩௭௩
பட்டனவொ	௩௧௯
பட்டனன்மு	௪௫௬
பட்டனன்வா	௪௨௯
பட்டான்று	௩௪௩
படர்ந்துகா	௩௦௪
படாதொழி	௧௭௫
படியினதெல்	௧௮௯
படிவாயுடு	௩௩௫
படுங்குறும்ப	௨௫௩
படைசொடு	௧௪௨
படையுடையி	௩௫௭
பண்டுதான	௧௪
பண்ணகவிசை	௬௫௮
பண்ணார்படை	௨௦௪
பண்ணியவி	௨௬௩
பண்ணுக்குரு	௨௬௫
பண்ணுக்குவா	௧௫௦
பண்ணுடையெ	௧௫௨
பண்ணும்பரி	௩௬௯
பண்புடனிக்	௧௯௬
பண்புடைக்கு	௨௯௧
பணிநிறுத்தி	௪௬௬
பணைத்திரு	௬௨௩
பணைநெடுங்	௫௦௦
பணையினம்	௭௪
பத்திக்குவர	௭௭
பத்திகொணவ	௧௬௧
பத்திரட்டி	௫
பதயுகங்சள	௬௬௦
பதயுகங்களொ	௩௮௫
பதிப்பெயர்	௨௯௪
பம்பிப்பரங்	௧௦௯
பமாமும்மத	௩௨௮
பயத்திரவி	௩௯௮
பயிலும்வெம்	௩௩௭
பரங்கொண்டு	௨௧௭
பரசுடையி	௩௦௬
பரத்துவாச	௪௨௪
பரதநாதவே	௩௮
பரந்துவெ	௨௬௦
பரந்தெழுகு	௩௨
பரந்தெழுபு	௯௧
பரபாவக	௬௮௬
பரவினல்வி	௩௩௭
பராசரன்கு	௨௭௩
பராசரமு	௧௦௮
பராசரன்ற	௨௩
பரிசனகுமா	௩௭௮
பரித்ததே	௩௧௮
பரிதத்தவ	௩௬௯
பரிதிதந்த	௨௨

செய்யுள்.	பக்கம்.
பரிதியன்பொ	௪௬௫
பரிதியால்வ	௪௦௬
பரிதியுமதி	௧௦௭
பரிமளச	௪௬௮
பரிமளமது	௭௩
பரிமளவடி	௪௬
பரியகனக	௧௨௫
பரியில்வீ	௪௬௪
பரியுடன்ப	௪௬௪
பரியெடுத்து	௪௨௧
பரிவுடன்ம	௨௭௬
பரிவுடன்மு	௧௪௮
பரிவுடனி	௩௮
பருகுநீர்து	௧௫௩
பருமணிவெ	௧௬௦
பருமித்தக	௩௬௯
பருவரலக	௪௧௯
பல்கியகிளை	௨௬௦
பல்லியமுழ	௩௫௮
பலருமுடன	௬௩
பலருமெய்த	௩௫௧
பலவகைப்ப	௩௦௯
பல்வம்புன	௪௬௭
பழியுடைத்த	௧௩௪
பழியுடைப்ப	௨௯௩
பழுதறவீழ்	௪௩௮
பழுதுடைப்பெ	௨௪௪
பற்பலரும	௩௭௯
பற்பலவுரை	௨௫௪
பற்றிநின்று	௩௪௬
பற்றினன்ப	௨௪௨
பற்றுமென	௨௦௬
பறந்துபோய்	௩௬௬
பறிந்தனகொ	௩௯௩
பறைவன்க	௧௩௭
பன்மகர்நூ	௪௧௩
பன்மங்கல	௬௮
பன்னகவர	௩௮௯
பன்னவாதை	௪௦௫
பன்னுளிவரி	௮௫
பன்னுளிவெ	௮௦
பன்னுளும்யோ	௪௮௬
பன்னியபு	௨௯௦
பன்னிருவரி	௨௩௯
பன்னுசீரி	௩௧௪
பனைக்கைப்பி	௬௨
பா	
பாகசாதன	௪௩௦
பாகனையர	௧௫
பாகும்வாசி	௨௫௪
பாங்கிநல்லு	௮௩
பாங்கினல்வ	௩௦௪
பாசகாரிக	௨௩௫
பாசறைமுழு	௧௫
பாசறையணு	௩௮௮
பாஞ்சாலர்போ	௨௬௪
பாஞ்சாலரிற்	௪௫௪
பாஞ்சாலிக்க	௧௪௧
பாடியுங்கள	௪௮௮
பாடினன்மறு	௧௦௮
பாடுஞ்சுருதி	௬௮
பாண்டவச	௩௯௩
பாண்டவர்க	௪௬௧
பாண்டவர்கள்	௯௫
பாண்டவர்மு	௪௮௮
பாண்டவரில்	௪௮௩
பாண்டியன்கை	௪௫௬
பாண்டுமதலை	௮௭
பாண்டுமன்ன	௩௫௫
பாண்டுவின்றி	௩௦௫
பாதிவெய்நில	௪௯௯
பாந்தளோறுயர்	௧௩௪
பாந்தளோடு	௪௯
பாப்புவெம்ப	௪௦௨
பாய்ந்தவப்	௪௫௪
பாயன்மன்	௧௨௯
பாயும்வெஞ்சி	௨௪௦
பார்கொண்ட	௧௮௧
பார்த்தன்க	௩௪௯
பார்த்தன்வெஞ்	௩௦௩
பார்த்தனம்பி	௩௨௮
பார்த்தனருச்	௮௦
பார்த்தனிவை	௨௭௭
பார்த்தனெய	௧௭௯
பார்த்தனே	௪௭௬
பார்ப்பான்வ	௬௪
பாரதப்பெயர்	௧௦௦
பாரவாளமு	௩௧௫
பாரவாளினு	௩௪௦
பாரறிந்தப	௪௧௭
பாரனைத்தி	௬௫
பாராமனைகை	௮௬
பாராளக்கன்	௨௭௮
பாராழியவல	௪௯௧
பாரிடமொன்	௫௦௨
பாரிலாசை	௨௭௩
பாரிழுந்தவிப்	௧௪௫
பாரினுநமக்	௧௧
பாருருவித்	௪௩௦
பாலருந்த	௮௪
பாலெடுத்த	௨௫௨
பாவருந்த	௨
பாவனனி	௪௮௯
பாவிதன்ம	௨௩௫
பாவைதன்செ	௧௨௬
பாழியம்பு	௩௮
பான்மொழிக்	௩௯
பானுளளவு	௩௬௦
பானிறப்பு	௪௧௧
பானுவின்மை	௪௩௩
பி.	
பிடர்வலிக்க	௩௧௦
பிடித்தனன்	௧௯௪
பிணித்ததே	௨௫௧
பிதாமகன்	௨௮௯
பிரைதன்னை	௨௫
பிரமன்வெஞ்	௨௦௯
பிரமனேமு	௧௬௬
பிரிந்தநா	௧௪
பிருகந்நளை	௨௫௯
பிளந்தெறி	௯௮
பிளவுண்டுவே	௪௪௧
பிறகுபுரிந்	௪௬௮
பிறங்கிடவு	௪௮௩
பிறந்ததின	௩௮௬
பிறந்துய்ய	௩
பிறர்மனைய	௨௧௯
பிறைமுடிச்	௪௫௭
பிறையனைய	௮௭
பின்பிறந்த	௧௩௩
பின்னருங்கொ	௪௧௪
பின்னருஞ்சி	௨௩௦
பின்னரும்விச	௪௪௯
பின்னரும்விரை	௪௭௮
பின்னருமொ	௩௬
பின்னவர்மூ	௨௨௩
பின்னியகுஞ்சி	௧௦௮
பின்னியபுத	௩௦
பின்னிறுத்தி	௩௬௨
பின்னுங்கட	௪௫
பின்னும்பல	௨௯
பின்னும்வா	௧௮௭
பின்னையிர	௩௯
பின்னையும	௩௧௯
பின்னையும்ப	௩௦௨
பின்னையெண்	௨௦

செய்யுள்.	பக்கம்.
பின்ஞெருதி	௧௬
பின்ஞெருபி	௩௧௩
பீ.	
பீலிமுடியோ	௧௫௬
பு	
புசலரும்	௪௯௯
புகலருமறை	௪௫௭
புகலுறுகலி	௩௨௩
புகன்றகேள்	௪௭
புகன்றபடி	௪௰
புகன்றபோத	௪௨௫
புகுந்தியான்	௮௯
புகைபடப்பட	௯௧
புகையொடு	௨௰௮
புங்கமெய்	௩௧௬
புடவியாளு	௨௭௨
புடவியெங்	௮௨
புடைத்தனனி	௨௪௩
புடைபடக்கிளை	௧௧௰
புடையுண்டு	௪௩௯
புத்திரர்வே	௭௮
புத்திரன்பே	௫௮
புதல்வனை	௪௩௨
புதனுமந்த	௬
புந்திகூர்து	௪௨௭
புந்திசெய்த	௨௧௰
புந்தியாலருங்	௨௪
புந்தியிலண்	௩௩
புயங்கபூமி	௨௮௧
புயங்கம்	௪௪
புயங்கவெம்	௪௭௮
புயந்துணி	௪௧௯
புரசையானை	௩௧௫
புரத்தினை	௪௨௬
புரந்தரன்ப	௬
புரநகையா	௩௯௪
புரவிமுப்பதி	௪௰௨
புராதனகம	௧௫௫
புரிசெம்பொ	௪௪௰
புரிசையிற்	௭௨
புரிதவத்	௫௰௧
புரிந்ததீ	௫௰
புரிந்தமக	௪௪
புரிந்தறம்	௩௪௨
புரியிலறி	௪௧
புரியுமொண்	௧௧௮
புரிவிலாமொழி	௪௧௭
புருவவில்	௧௭௯
புருவவிற்	௩௰௯
புரைகொள்	௪௩௰
புரோகிதன்	௨௬௯
புல்லியசொன்	௪௪௫
புல்லுகவென்	௩௭௪
புலர்ந்தன	௫௯
புலவுகால்	௨௰௧
புலிதனக்கிடு	௫௬
புலியினும்	௨௪௬
புழைநெடுந்	௧௨௩
புள்ளலங்க	௧௨௮
புள்ளியலர	௪௮௭
புறமிட்ட	௪௫௰
புன்பிறப்பு	௨௮௭
புன்னைவையான	௨௬௰
பூ.	
பூகதனுகிய	௬௩
பூங்கவசத்து	௪௯௨
பூங்கொடிய	௨௪௩
பூசுரர்பெ	௪௯௭
பூசுவனசு	௨௩௧
பூசையொன்று	௧௭௰
பூஞ்சாயக	௩௪௩
பூட்டற்றவி	௩௪௫
பூண்டவெம்	௩௧௪
பூண்டவெள்	௨௨௪
பூண்பாய்மா	௩௩௩
பூணுரமார்	௪௮௬
பூத்தகிக்கு	௪௨௬
பூத்தநாபி	௩௪௧
பூத்தபைங்கொ	௪௮௰
பூதமைந்தி	௪௫௧
பூதலநடுங்க	௯௭
பூதலமாண்	௨௩௮
பூதலமுழுது	௪௯௯
பூதனைமுலை	௪௰௪
பூதிநலந்தி	௪௫
பூந்தண்மா	௪௨௧
பூந்தண்மாலை	௩௩௩
பூந்தராதல	௪௪௬
பூந்தார்வி	௨௮
பூபர்தங்க	௩௧௬
பூபாலரவை	௧௰௮
பூருவின்மர	௧௫
பூவார்குழ	௧௩௭
பூவியலமளி	௩௨
பூவெலாஞ்சு	௫௯
பூழிகளடக்	௨௫௯
பூழிபடநில	௩௨௰
பெ	
பெண்ணீர்மை	௨௮௰
பெண்ணுடையுரு	௨௪௨
பெண்மைக்கிரதி	௬௨
பெண்மொழி	௨௪௮
பெய்கணையட	௩௭௯
பெயர்பெற்ற	௩௬௯
பெயர்பெறுமுனி	௧௰௭
பெருங்கடமலைக்	௧௨௪
பெருஞ்சுழி	௫௧
பெருந்தகையன்	௨௩௮
பெருந்தகையேவலோ	௧௩௬
பெருந்தகையேவன்	௪௧௭
பெருந்திறனி	௫௨
பெருநலம்பெறு	௨௨௬
பெரும்பிலவறையை	௨௯௪
பெரும்பேரறத்தின்	௩௭௧
பெருமிதவலியும்	௪௪௫
பெருவரமிரண்டும்	௩௰௩
பெற்றதந்தை	௧௧௯
பெற்றநீர்மக	௩௰௨
பெற்றனன்	௧௫௯
பெற்றாள்சக	௭௭
பெற்றிழந்த	௪௪௬
பெற்றோன்றனி	௩௬௧
பே	
பேசாதொடுங்கும்	௬௨
பேடிதேர்	௨௫௮
பேடியன்றுதன்	௨௫௧
பேணுருயிர்	௩௮௩
பேதையிப்படி	௨௩௫
பேய்செய்த	௩௨௪
பேர்படைத்த	௨௭௪
பேரணிகலனு	௪௩௪
பேரராவணை	௨௮௭
பேரறத்தின்	௪௭௨
பேரன்புகன்ற	௩௪௬
பேராண்மைசெய்	௪௩௯
பேராதநிலை	௩௩௫
பேராறமூழ்கி	௩௪௫
பேருலூகடும்	௨௬௭

செய்யுள்.	பக்கம்.
பை	
பைங்குலைக்	௨௪௧
பைதிகழ்மணிப்	௪௦௧
பைந்தடந்தா	௩௨
பைம்பொன்மாமே	௨௩௩
பைம்பொன்மால்	௫
பையராவணி	௧௫௮
பைவருந்தலை	௨௯௨
பொ	
பொங்கராவ	௨௮௪
பொங்கராவெயின்	௩௯௪
பொங்கராவெயின்	௩௯௬
பொங்கழற்சி	௪௪௩
பொங்கியமதர்	௯
பொங்கியாடர	௪௨௨
பொங்குறுமோ	௧௦௬
பொய்த்தானவ	௧௭௨
பொய்யாததவ	௩௬௨
பொய்வளர்ந்த	௨௮௭
பொருகடலொத்	௪௩௯
பொருசிலைமுறி	௨௯௦
பொருதபற்ப	௩௭௬
பொருதுபுறகி	௩௬௭
பொருதொழில்	௪௦௦
பொருந்தவானு	௫
பொருப்பிலே	௧
பொருப்பினும்	௨௨௩
பொருப்பினைச்	௬
பொருபடைகொ	௩௧௧
பொருபெரும்	௮
பொரும்படை	௨௯௩
பொரும்பொரு	௩௬௦
பொருமுகத்தி	௨௪௮
பொருவரும்பு	௮௪
பொருவில்லெ	௧௨௫
பொல்லாவசை	௧௩௮
பொல்லாவவு	௩௭௦
பொலிவுறுமங்	௧௬௦
பொழியுமுகில்	௩௧௦
பொற்பாவைகே	௨௮
பொற்புடைப்பு	௨௭௦
பொற்பூசலெ	௪௫௧
பொற்பெருடிக்க	௬௫
பொற்பெருடிமொ	௨௧௧
பொறுத்திடுமே	௨௧௮
பொறையெனப்	௨௩௯

செய்யுள்.	பக்கம்.
பொன்கானு	௧௭௭
பொன்னகரனு	௫௪
பொன்னனங்கழ	௨௭
பொன்னலங்	௫௦
பொன்னுர்மு	௪௬௨
பொன்னுருங்	௨௭௭
பொன்னினன்	௪௯௯
பொன்னைச்சி	௧௩௬
போ	
போகமாய்வி	௧௫௩
போகமுந்தரு	௩௩௭
போதுபட்டிரு	௫௦
போதுபோகுமா	௧௩௦
போதுறவிரை	௧௧௪
போயதூதனு	௧௭௦
போயருநெறி	௩௯௩
போயவட்பு	௭௧
போயவர்குரு	௩௧௪
போயிருந்தென்	௧௩
போயேகானம்	௨௯௯
போர்க்குமுங்	௪௧௪
போர்முகத்தட	௪௦௨
போர்முடித்தா	௨௭௫
போரணிப்படை	௨௪௮
போரதாகிய	௨௭௫
போரறமலை	௪௨௯
போரில்வெவ்வி	௪௦௬
போரிலெஞ்சின	௩௫௪
போரினண்டர்	௩௫௧
போரினிற்று	௩௮௯
போரேதொடங்	௩௨௫
போரொருமுக	௩௮௧
போற்றியகன்	௪௭௦
போற்றியகுரி	௯
போனதிண்சி	௩௫௪
போனதூவருவ	௩௮௭
போனதூதுவ	௨௦
போனநான்ம	௨௬௮
போனபோனதி	௨௪௫
போனமாமுனி	௨௨௧
போனவப்புர	௪௫௫
போனவெம்ப	௩௦௯
ம	
மகத்தியன்ம	௪௨௭
மகதத்தரிற்	௩௭௨
மகப்பெறு	௧௪
மகபதிதன்	௪௪௬

செய்யுள்.	பக்கம்.
மகபதிமைந்	௪௬௮
மகபதியரி	௪௮௦
மகரிகைமரு	௩௬௮
மகரிகையுமி	௪௩௪
மகவானருள்	௪௬௭
மகன்பட்ட	௪௨௧
மகன்மொழி	௪௧௮
மகன்வருமள	௨௫௯
மகனிவைமற்	௨௬௨
மகனும்புக	௧௬௨
மகிதலமேல்	௪௯௪
மங்கலந்தி	௨௮௧
மங்கலமுழ	௬௦
மங்குல்சூற்	௧௨௯
மங்குல்சூழ்	௪௨
மங்குலின்ம	௬௧
மங்கையங்கொ	௮௩
மங்கையர்ப	௧௦௪
மங்கையர்வா	௧௬௭
மச்சநாடன்	௨௫௩
மட்டவிழ்	௨௧௨
மட்டவிழ	௨௦௬
மட்டுப்படா	௪௫௧
மடங்கலைவ	௩௫௯
மடங்கன்மே	௪௩௬
மடந்தைபொ	௩௦௨
மடந்தையர	௧௨௨
மடைப்பெரு	௨௪௫
மடைபட்ட	௮௫
மண்டபங்கா	௧௧௫
மண்டபத்தி	௧௨௯
மண்டலங்கொ	௫௬
மண்டலம்படு	௪௦௪
மண்டலம்பயி	௫
மண்டலம்வீ	௨௩௦
மண்டலமதி	௨௯௦
மண்டலீகர்	௩௧௫
மண்டிமீதெ	௯௨
மண்டிமேலெ	௧௭௪
மண்டியெங்	௧௯௩
மண்டியெதிர்	௨௦௮
மண்டுகொண்	௩௭௭
மண்டுதிறல்	௨௦௬
மண்ணிலார	௪
மண்ணுநீரு	௧௬௮
மண்ணெலாமி	௨௧௨
மண்மிசைநா	௯௬
மண்மேல்வி	௩௫௫
மண்மேலொரு	௪௫

செய்யுள்.	பக்கம்.
மண்வளர்பெ	கஉரு
மணிமதிலா	ச00
மணிமுடிக்கு	உக
மணிமுடிசிர	ஙஎஎ
மணிமுரசுய	உஉங
மணியின்கிர	சுஉ
மத்தவாரண	ச0கூ
மத்திரப்பெ	சஎஎ
மத்திரனைவி	ஙககூ
மத்திரைம	ஙகூ0
மதம்படுவே	சஎஅ
மதலைபேரொ	சஉஅ
மதலையைப்ப	க0
மதனலீலையி	அஉ
மதாசமைகு	ஙருஅ
மதிகண்டபெ	சஅஉ
மதித்தலும	ஙஅஎ
மதித்துமத	ஙசுச
மதிநெடுங்கு	கஎ
மதியிரவியோ	சகூசு
மதியிலாவிசு	ஙருஎ
மதிவெண்குடை	ஙஉகூ
மதுமலரின்	உஙக
மதுரைநகர்	சகூக
மந்தணமிரு	ச0உ
மந்தரமனையதோ	உருஎ
மந்தரமனையபொ	சஉஅ
மந்தரமும	ஙசஅ
மந்திரச்சு	கூஎ
மந்திரத்த	ஙகரு
மயிரைவன்க	சசு0
மரகதங்கோ	எக
மரகதமணி	உ0ங
மரபின்வல்	கசசு
மரவுரியுடை	கசஅ
மருகன்வீழ	சஅரு
மருச்சுதன்	சஉங
மருண்மிகு	கஉரு
மருத்தின்ம	ரு0உ
மருத்தின்மா	உச0
மருத்துதவ	சஎஉ
மருத்துவர்மை	ஙருஎ
மருத்தெறிந்	ஙருஉ
மருமங்கள்	சசக
மருமங்களி	ஙஉசு
மருமாலைவ	உகூ
மருமிகுந்தொ	உருங
மருவநின்ற	சஉ
மருவயிற்ச	கூஉ
மருவருகான	ஙகூங
மருவருங்குழல்	கூ
மருவருங்குழலி	ஙக
மருவருங்குழற்	உச
மருவருஞ்சு	சசுரு
மருவிளங்கொ	எ
மருவீசுபொ	உ0ரு
மருவுறச்சி	க0
மல்லமர்தொ	கருஎ
மல்லர்பப்ப	உகூச
மல்லராக்க	உகூரு
மல்லலந்தொ	சஎ0
மல்லலம்பு	ஙஎரு
மல்லினின்வெ	சககூ
மல்லிஞன்ம	ச00
மல்லுக்கும்	கருசு
மல்வலியழி	ஙசஎ
மல்வளைத்த	சசுச
மலர்ந்தபற்	ஙகரு
மலரடிதா	சகூங
மலருங்கொடை	ஙஙச
மலைகண்ட	உஎசு
மலைகலங்கி	சசுங
மலைத்தபோ	சகூரு
மலையினிற்பி	சருசு
மலையினையும்	ஙசஎ
மலையொத்த	ஙஉசு
மழுவுறுசெ	சசுஅ
மழுவெனும்ப	உஉ
மழைமுகிற்கு	ஙஅக
மற்கொண்டு	கஅங
மற்புயக்கு	ஙஅகூ
மற்புயாச	கசுகூ
மற்றதுகூ	ககஉ
மற்றவர்மீ	சஅஅ
மற்றவரி	ககக
மற்றவரெ	கசுஎ
மற்றவன்பு	சஎகூ
மற்றவன்மு	ஙகூஎ
மற்றவன்வி	கருச
மற்றவன்றரு	ஙகச
மற்றவன்றன	உங0
மற்றவன்றனை	சஅ0
மற்றவன்றிருத்	கசுச
மற்றவன்றிருமை	சு
மற்றவனெரு	கஅஉ
மற்றவனவ்வு	ககூஎ
மற்றவனிப்பு	ங
மற்றிவன்ச	ஙஅ
மற்றிவன்வெ	உ0சு
மற்றுமற்றுமகி	கசரு
மற்றுமற்றுமு	ஙஎசு
மற்றுள்ள	ஙசசு
மற்றுளவரை	உகஉ
மற்றைநாள்	ங0அ
மற்றையிளை	ஙஙகூ
மற்றொருதே	சசுஉ
மற்றொருதொ	உருரு
மறத்திரு	கஉரு
மறத்துடன்	கககூ
மறத்தொடுவ	ககூங
மறமும்வா	ஙருச
மறமுமொத்த	சசுரு
மறலிதண்டெ	ஙஅச
மறனிற்சி	ஙசுக
மறனுடையை	ஙஎஎ
மறுகியழுவ	ருரு
மறுகிற்பணி	சச
மறுத்திவன்பு	உ0
மறுத்துரைப்	ருங
மறைகெழுநூ	சஉஅ
மறைந்துறை	கசங
மறையவர்	உ00
மறையவன்செ	சருசு
மறையவனே	கருசு
மறையுமுரு	ருச
மறைவாய்ச்	உஉஉ
மறைவாய்வெ	ஙசுங
மன்குலத்து	கஉஅ
மன்பட்ட	சஎச
மன்மகன்ற	ஙகச
மன்மரபிற்	சுச
மன்முரிகுவ	ஙஅஉ
மன்முனிமொ	உஉகூ
மன்மைந்த	ஙகூஅ
மன்வந்திரு	கஙஅ
மன்றலந்தெ	உகூஉ
மன்றலில்கு	உக0
மன்றனின்ப	ஙச0
மன்றிலழை	உஎக
மன்றேற்ற	கஙஅ
மன்னநின்	ககரு
மன்னர்க்கு	ஙஎக
மன்னர்மணி	ஙஙகூ
மன்னர்மன்	சகஎ
மன்னர்வே	உஅக
மன்னரைவ	சஅ
மன்னவர்க	உஙச

செய்யுள்.	பக்கம்.
மன்னவர்தொ	௧௩
மன்னவர்மை	௩௮௧
மன்னவன்மை	௨௪௩
மன்னவன்மொ	௨௧௦
மன்னவன்வா	௨௪௦
மன்னளகா	௧௯௬
மன்னற்கி	௪௬௦
மன்னன்யா	௪௦
மன்னன்றரு	௪௫௧
மன்னன்றனை	௩௨௬
மன்னனைவ	௨௩௩
மன்னாகவ	௪௦௮
மன்னிருந்த	௧௩௦
மன்னுகுரு	௧௯௬
மன்னுஞ்சே	௩௪௯
மன்னுந்த	௧௭௭
மன்னொடுகூ	௨௫௬
மனக்கடுங்	௬௧
மனஞ்செய்வ	௩௫௨
மனத்தாலு	௯௫
மனைவியைக்	௧௫
மா	
மாக்குரல	௫௯
மாங்கனிவா	௩௯௨
மாசறுமதி	௧௫௩
மாசிலாதமு	௨௧௪
மாசுணத்த	௯௪
மாசுணந்த	௪௧௫
மாடநீள்வி	௨௭௦
மாடம்பயி	௧௦௩
மாடளிக்குல	௨௮௭
மாடிரண்டு	௩௨௨
மாதர்கெள	௧௦௩
மாதவத்தி	௧௪௫
மாதவமிகு	௧௮௧
மாதவள்கீ	௨௩௬
மாதவன்விதி	௪௯௮
மாதவனிரு	௨௯௫
மாதவனேமு	௨௯௭
மாதனத்தள	௩௫௭
மாதுரங்க	௪௨௧
மாதுலனாகி	௪௩௨
மாதுலனுரை	௨௯௪
மாநகர்வல	௭௧
மாமச்சவு	௨௪௭
மாமனைமகு	௪௨௬
மாமுனிதன்	௧௮௪

செய்யுள்.	பக்கம்.
மாய்ந்தவன்	௫௩
மாயமொன்று	௧௩௦
மாயவல்லி	௧௭௪
மாயவன்ற	௯௪
மாயவனற்பு	௧௯௭
மாயவனுமன்	௨௭௮
மாயவனுரை	௪௮௯
மாயனாந்திரு	௩௮௫
மாயனார்விர	௩௦௨
மாயனுமகி	௨௯௦
மாயனாருவி	௬
மாயாசரகூ	௪௬௬
மாயிருஞால	௨௯௭
மாயையென்	௩௧௩
மார்பினும	௩௧
மாரகாக	௬
மாரசரயக	௨௩௫
மாரதர்வீ	௪௧௨
மாரவசந்த	௮௭
மாரன்கரு	௬௯
மாரனுக்கி	௪௩௬
மாருதம்வி	௧௮௦
மாருதன்பு	௪௧௬
மால்விடுதேர்	௩௭௩
மாலுமதக	௩௩௯
மாலைகடவா	௩௭௮
மாலைமுன்வ	௧௦௬
மாவலிசிறை	௧௬௦
மாவிந்தம	௧௯௪
மாவில்லெடு	௩௪௫
மாவின்பாலே	௪௦
மாளவத்தி	௧௦௦
மாற்றம்பி	௬௧
மாற்றரிய	௪௩௦
மாற்றாதப	௮௬
மாற்றினால்	௩௯௩
மாற்றினான	௨௪௩
மாறிநின்ற	௪௯௫
மாறுகொண்ட	௪௯௪
மாறுபட்டி	௪௧௧
மாறுபட்டு	௯௩
மான்மதங்க	௫௩
மானமாமுடி	௨௫௨
மானவபிம	௩௩௯
மானவரக்க	௧௯௬
மானவர்பதி	௧௬
மானேதருவி	௧௯௨
மி	
மிக்கமந்தி	௨௨௧

செய்யுள்.	பக்கம்.
மிகநகைத்	௪௧௮
மிகைத்தமுனி	௬௫
மிகைத்தனர்	௩௬௪
மிடல்கொள்	௩௨௨
மிடன்மிஞ்சு	௪௯௬
மிடைந்தநால்	௮௮
மித்திரான	௩௦௫
மித்திரரென்	௪௪௮
மின்சுடிகைப்	௨௯௬
மின்புயல்	௪௩௮
மின்புரைம	௧௯௯
மின்பொழி	௩௨௩
மின்போனு	௧௭௬
மின்றாரை	௧௯௮
மின்னாகமணிப்	௩௩௦
மின்னாமலி	௩௮௭
மின்னிடை	௧௩௫
மின்னுடன்	௨௫௪
மின்னுமாமு	௨௮௨
மின்னேயுனக்	௬௬
மின்னையொத்	௪௪௮
மீ	
மீண்டவர்	௧௨௫
மீண்டவனும்	௪௬௨
மீதங்கிகிப்	௯௫
மீதலந்தனக்	௪௦௬
மீதெடுத்த	௧௩௦
மீளமற்றொரு	௪௩௭
மீளவந்திளை	௧௦௨
மீளவுந்தலைப்	௨௩
மீளவும்வ	௩௨௪
மீளமிரு	௯௮
மீளிமகவான்	௪௧
மீளியொருதண்	௨௦௭
மீனமாகிய	௮
மீனமாகியு	௨௬௭
மீனாமைகோல	௪௭௪
மு	
முக்கணுநி	௧௫௮
முக்குலத்த	௧௩
முக்குலத்தி	௮
முக்கோலுங்	௮௨
முகங்கலங்	௪௦௪
முகத்தினின்	௪௦௪
முகினிறங்	௩௪௦

செய்யுள்.	பக்கம்.
முகில்வண்	௪௬௬
முகிலின்சி	௪௫௧
முகுடமும்	௬
முகுந்தன்	௩௦௪
முகுரவான	௩௪
முகுரானன	௪௯௬
முச்சிரமு	௧௮௦
முட்டநித்	௨௮௫
முட்டவந்து	௪௪௯
முட்டியதொ	௨௯௬
முட்டியால்	௨௦௧
முட்டியானு	௪௦௨
முடிக்குல	௪௯௨
முடிதுணிந்	௩௫௨
முடியிழந்	௩௧௫
முடியுடைத்	௪௯
முடியுமொரு	௪௩௫
முடைகமழ்	௨௭௧
முடையெடுத்	௪௨௦
முத்தநகை	௬௩
முத்திமுனி	௬௧
முதல்வன்	௪௫௪
முதல்விழை	௨௮௮
முதிர்குந்	௪௪௧
முதுகிட்ட	௪௪௦
முந்தரவு	௩௦௫
முந்தவந்த	௩௬௬
முந்தவந்து	௧௨௭
முந்தவன்	௩௪௧
முந்தவான்	௨௫௨
முந்திமுந்	௩௬௫
முந்தியெதிர்	௪௭௧
முந்திவார்	௯௧
முந்துகோப	௧௭௧
முந்துபடை	௩௫௨
முந்துபோரின்	௭௦
முந்துவடிவா	௩௭௮
முந்துவாள	௩௫௯
முந்துறப்	௧௯
முந்தூர்வெம்	௨௭௫
முந்நீர்த	௩௩௬
முப்பதுகடி-மு	௩௯௨
முப்பதுகடி-மொ	௪௦௦
முப்புரங்	௯௧
முப்புரநீ	௩௯௭
முப்பொழுது	௩௨௧
மும்மையாகி	௨௮௩
முயலிலாம	௨௧
முரசினையு	௧௩௩
முரசுகரடி	௪௩௫
முரண்டெதி	௩௧௯
முரணிறைந்	௨௨
முராரியைமு	௭௫
முருக்கிவெ	௨௦௧
முருக்கினா	௨௦௦
முருகவிழ்க்	௨௭௭
முருகவிழ்ப	௧௬௧
முருகார்	௪
முருகாரிரு	௪௦௭
முருத்துவா	௬௪
முல்லைமல்	௪௧௪
முழக்கினா	௨௮௪
முழவுமுத	௩௧௧
முழுகியவா	௪௩௮
முழுதுணர்ந்	௪௩௭
முழுதுணர்வ	௧௦௭
முள்ளியனா	௪௨௯
முளைத்தெழு	௨௧௯
முளையிலையு	௧௨௦
முற்சக்க	௩௮௦
முற்பகலின்	௩௪௮
முற்படுகொ	௩௬
முற்படுதி	௪௪௧
முற்பொழுதொ	௪௨௬
முற்றேன்றி	௪௫
முறுவல்கொண்	௪௪
முறைமைதவ	௩௧௧
முறைமையின்	௩௮௫
முறையினாலன்	௧௯
முறையோவென்	௧௩௯
முன்குலத்	௧௧௨
முன்சாதக	௪௨௩
முன்செய்வெவ்	௨௧௦
முன்சேனையோ	௪௫௨
முன்சொலாகி	௪
முன்பட்டா	௪௨௦
முன்புகுவி	௪௯௮
முன்புபெறு	௨௦௮
முன்புமுன்	௨௦௩
முன்புவிட்	௧௫௫
முன்போர்தொ	௧௭௧
முன்போர்வி	௮௫
முன்போருடை	௩௪௫
முன்முன்பு	௩௮௦
முன்றிலின்	௨௮௨
முன்னகங்	௨௮௬
முன்னநீகூ	௨௭௮
முன்னம்யா	௮௪
முன்னம்வா	௨௦௧
முன்னமமரி	௪௬௧
முன்னமும்	௨௬௮
முன்னமே	௨௬௯
முன்னமேது	௨௮௩
முன்னர்மா	௧௨௨
முன்னர்முன்	௪௦௩
முன்னரமே	௧௦௪
முன்னவன்	௧௮௮
முன்னாண்மு	௪௪௦
முன்னாளம	௩௩௧
முன்னிச்ச	௨௬௬
முன்னிடச்	௬௯
முன்னியசி	௪௫௮
முன்னின்ற	௬௭
முன்னுஞ்சு	௩௮௩
முன்னுமாம	௪
முன்னுருவந்	௭௯
முன்னுருவா	௩௯௭
முன்னுறமு	௨௩௯
முன்னொற்றை	௨௪௬
முனிகுலந்	௨௨௬
முனிநீயையா	௪௦
முனிமகன்	௪௬௩
முனியுந்த	௪௦௮
முனியுநகரி	௩௫௫
முனியுமப்	௨௭௩
முனியுமேனை	௩௬௭
முனிவரர்க்	௧௨௯
முனிவராயுள்	௨௨௮
முனிவன்மை	௪௨௭
முனிவனைக்	௨௨௭
முனிவனைவி	௩௧௪
முனைத்தலை	௪௯௭

மூ

செய்யுள்.	பக்கம்.
மூகதானவ	௧௫௫
மூகனென்று	௧௫௯
மூச்சறப்	௨௨௫
மூச்சினாலடி	௪௩௧
மூசிவண்டு	௩௯
மூண்டவெங்	௯௨
மூத்ததாதைதன்னை	௩௭௫
மூத்ததாதைதன்னோ	௧௧௯
மூத்தவரிளை	௨௯௩
மூத்தோன்கு	௨௧௫
மூத்தோன்மற்	௨௭௫
மூதாரழற்	௨௪௬

செய்யுள்.	பக்கம்.
மூளமூளவெம்	௮௯
மூளாரழலுற்	௬௬
மூளும்வெஞ்	௪௪௭
மூன்றுகோடி	௧௬௯
மெ	
மெய்க்கொண்ட	௨௪௭
மெய்கொண்ட	௮௭
மெய்தருவிதி	௧௦
மெய்தானம்வ	௨௮
மெய்ம்மகிழ்	௧௬
மெய்யிற்றெ	௨௭
மெய்வருந்தி	௧௩௨
மெழுகினை	௪௮
மென்பாலக	௨௮
மே	
மேகங்கள்வ	௧௪௧
மேகங்குரு	௧௩௮
மேகசாலங்க	௯௩
மேகவாகன	௪௪௭
மேதகத்தெ	௧௨௦
மேல்கொண்டு	௪௬௧
மேல்வந்த	௩௮௦
மேல்வருகரு	௧௪௩
மேல்வலியு	௨௯௬
மேல்வாய்த	௩௨௯
மேலளவாது	௧௮௯
மேலெழுந்து	௩௫௩
மேலெழுபூங்க	௨௯௭
மேலைத்திசை	௧௬௨
மேவருஞானு	௩௧௩
மேவலர்வி	௩௨௪
மேவாருரைக்க	௨௧௫
மேவிப்பெரு	௧௯௯
மேவுசிங்க	௪௯௪
மேவுசெந்து	௨௮௦
மேனுளிவ்வுல	௯௫
மேனுளொரும	௨௦௪
மேனைமுன்பெ	௧௫௩
மை	
மைக்காலமு	௨௭௬
மைக்காளமு	௧௯௮
மைக்குழலாய்	௨௭௯
மைக்கோதில்	௧௩௯
மைத்திறத்	௧௨௧
மைத்துனனு-மா	௩௮௮
மைத்துனனு-வா	௪௭௦
மைந்தகேட்	௨௨
மைந்தர்நீர்	௧௦௬
மைந்தர்போர்	௪௪௯
மைந்தருடன்	௪௬
மைந்தருயிர்	௫௦௩
மைந்தற்கு	௩௦௦
மைந்தன்களத்	௩௪௪
மைந்தனங்-த்	௧௧௬
மைந்தனங்-னு	௧௮௨
மைந்தனிம்	௧௫௩
மைந்தனொரு	௩௭௯
மைந்தினுற்	௪௯௬
மைந்துபடைத்	௨௯௬
மைபோலார்த்	௩௩௨
மையறுசுப	௨௯
மையோடரிக்	௧௩௯
மைவருதடங்	௨௩௨
மைவரையுங்	௧௪௨
மொ	
மொட்டினப	௧௨௪
மொய்கணேடபி	௩௫௯
மொய்திறற்	௧௬௭
மொய்ம்புடை	௧௯௧
மொழியலாத	௨௩௬
மோ	
மோகரித்தொன்	௩௫௮
மோகித்து	௪௨௧
மோதமரினெ	௩௯௧
மோதிமத்தா	௪௫௬
மோதியாயிர	௩௧௮
மோதுபோர்	௧௬௭
மோதுமோகர	௪௮௭
ய	
யதியாகிய	௮௧
யதியுரைத்	௮௩
யயாதியென்	௭
யவனசவ	௩௧௧
யா	
யாங்கருதி	௮௧
யாண்டுசென்	௨௫௧
யாதவகுல	௧௦௫
யாதுமொன்ற	௨௫௬
யாதேயாகவி	௨௧௬
யாதேவலென்	௪௫௦
யாதொருகரு	௧௪௨
யாதொருபோது	௩௯௭
யாமளமறை	௨௨௯
யாமினியிலெவ்	௪௬௨
யாய்மொழித	௭௫
யாயுரைத்த	௪௭௩
யாயொடெங்	௫௦௧
யாரும்போரி	௪௧௩
யாருமில்லொ	௨௩௯
யாரையாநீ	௨௨௯
யாரையோவு	௧௦௨
யாவருமொழிந்	௧௧௫
யாவைங்கொ	௧௩௨
யாழின்மென்	௮௩
யாளிகளிர	௪௮௧
யாளியெனநி	௩௭௮
யாளியோரிரண்	௩௪௭
யாளிவெம்ப	௯௭
யான்புரிந்	௯௬
யான்விதிகு	௯௭
யானும்வந்த	௫௧
யானுமவனு	௩௯
யானுமெம்பி	௫௦௧
யானுறைகா	௧௯௨
யானுறையில்	௨௯௧
யானைதேர்பரி	௩௦௪
யானைதேர்பரிவீ	௪௧௩
யானைமிசைதே	௩௧௦
யானைமேல்வ	௧௧௦
யானையொடுதேர்	௩௧௨
யானெறிந்த	௧௩௧
யோ	
யோதனத்தி	௪௧௦
ர	
ரகுகுலத்	௩௮௦
ரா	
ராயசூயபன்	௧௩௦
வ	
வசையறும்பு	௩௮௫
வஞ்சகச்சு	௧௪௬
வஞ்சம்ப	௧௦௪
வஞ்சவாள	௧௭௪

செய்யுள்.	பக்கம்.
வஞ்சனைகொ	௧௧௪
வஞ்சனைபு	௨௦௮
வஞ்சனையா	௩௯௮
வஞ்சனையி	௩௯௧
வஞ்சிமது	௪௫௦
வட்டமாக	௨௫௩
வடமதுரை	௯௪
வடாதுசெ	௧௦௦
வடாதுந்தெ	௩௮௦
வடிசரங்கொ	௪௫௨
வடிசுடர்வா	௩௮௨
வடிவுடைச்சி	௧௨௧
வடுத்தருவெ	௩௬௩
வடுவறத்தெ	௨௪௧
வண்டறாதம	௨௪௪
வணடார்வி	௨௪௭
வண்டாரல	௩௨௬
வண்டாரவா	௪௬௧
வண்டாருங்	௧௪௧
வண்டாணந்	௭௯
வண்டுசிந்தி	௨௨௦
வண்டுதான்	௨௫௬
வண்டுமலர்	௧௦௪
வண்டுறைம	௫௯
வண்ணநூன்	௬௫
வண்ணமகள்	௨௩௨
வண்மையினா	௨௯௮
வணங்கலும்	௫௮
வணங்கிய	௨௧௫
வணங்குமு	௧௬௪
வந்தகாலை	௨௩
வந்தகுருக்	௩௬௩
வந்தகொற்ற	௨௮௩
வந்தபிமனோ	௩௭௯
வந்தபெருங்	௧௮௩
வந்தமுனி	௩௯௦
வந்தமைய	௨௭௦
வந்தவந்தணன்க	௩௦௧
வந்தவந்தணன்வ	௮௮
வந்தவமைச்	௪௭
வந்தவர்வங்	௩௫௯
வந்தவளி	௩௩௧
வந்தவன்மு	௧௫௯
வந்தனர்கு	௬௧
வந்தனர்மு	௯௭
வந்தனளெ	௨௩௭
வந்தனன்சி	௧௧௯
வந்தனேனை	௫௦௦
வந்தான்வ	௯௩
வந்தித்த	௨௯
வந்திலன்வி	௨௭௦
வந்துகுந்தி	௩௦௨
வந்துதன்	௨௨௯
வந்தெதிர்	௩௭௪
வந்தோகை	௨௬௫
வந்துபிறவா	௩௯௦
வந்துவந்தி	௨௮௨
வம்பறாமது	௧௫௧
வம்பறாமல	௧
வம்புலாம	௨௮௦
வம்மினாதி	௪௩
வயக்கதிர்க்க	௪௬௬
வயவிசய	௩௭௮
வயிர்த்திரு	௪௪௭
வயிரஞ்செறி	௫௦௧
வயிரமெனு	௨௭௪
வரசங்கமு	௩௩௪
வரத்தான்ம	௩௨௬
வரத்தின்மு	௩௩௮
வரத்தினின்	௪௨௦
வரத்தினால	௧௮௭
வரத்தினாலு	௪௩௧
வரத்தினாற்	௫௮
வரதன்வீ	௨௦
வரமிகுக	௭௫
வரவரவந்த	௧௦௩
வரிசிலைவிச	௧௮௩
வரிசிலைவிற	௧௮௦
வரிசையாலு	௨௦
வரித்தமன்	௧௮
வரிந்தபைங்	௩௯௩
வரிவெஞ்சி	௩௪௯
வருகநீய	௨௩௭
வருகணைவி	௩௭௯
வருகவென்ம	௩௦௨
வருகளிறொரு	௩௨௩
வருகளையா	௪௯௪
வருகுலத்தவ	௮
வருணன்மா	௪௪௪
வருணன்மை	௩௫௬
வருபடைதன்	௩௭௩
வருமமிஞ்ச	௧௩௩
வருமுப்பொ	௧௭௭
வரைக்குல	௩௬௪
வரைக்குவ	௩௯௯
வரைகலங்க	௧௮௫
வரைத்தடங்	௮௯
வரைத்தாம	௨௯௯
வரைநிலங்	௧௨௪
வரையரச	௧௫௪
வரையுளா	௧௭௦
வரையெலா	௧௮௧
வரையெலாம்ப	௨௮௧
வரோதயமா	௧௮௩
வல்லவரனங்	௪௨௯
வல்லார்வ	௩௦௦
வல்லியம்போ	௬௩
வல்லினால	௨௬௭
வல்லினில	௨௫௮
வல்லைவெஞ்	௩௩௭
வலக்கணானை	௪௪௯
வலக்கையற்	௩௧௬
வலத்துயர்த	௧௨
வலப்பாகஞ்	௧௪௯
வலம்புரித்	௩௪௩
வலவன்வீ	௪௭௭
வலவனெனு	௪௬௮
வலியிலன்று	௩௫௦
வலியுடைத்	௪௪௭
வலையம்பிற	௪௪
வழிப்படவழ	௩௯௧
வழிபடுதெ	௨௪௨
வழுதிதிரும	௭௯
வழுவறுகுரு	௧௦
வள்ளல்குறி	௪௧௨
வளர்ந்ததி	௫௨
வளவன்பதி	௭௮
வளைத்தசே	௪௩
வளைத்தவி	௩௮௯
வளைத்துவ	௨௦௭
வளைநெடுஞ்	௫
வளைமுழக்	௩௧௦
வளையணா	௨௪௯
வளையமுத்	௩௮௦
வளையிலாத	௪௬௩
வன்கட்டிண்	௪௧௨
வன்கணணி	௩௮௮
வன்பரிபாகு	௪௮௧
வன்பனைக்	௩௧௭
வன்பாதல	௬௭
வன்பின்மி	௪௩௦
வன்பினால	௨௮௮
வன்பினாலு	௫௬
வன்புடனபி	௩௬௦
வன்போர்பு	௪௬௬
வன்மைக்கு	௩௭௨
வன்றபோத	௧௨௧

செய்யுள்.	பக்கம்.
வன்றி▪வெ	௮௧
வன்றிறலி	௫௨
வனநெறிக	௧௨௩
வனைகழற்கி	௪௪௮
வனைந்தில	௩௫௦

வா

செய்யுள்.	பக்கம்.
வாகைநெட்ட	௪௧௧
வாசநீரும்வ	௨௮௩
வாசமாமணி	௫௭
வாசமென்கு	௨௪௩
வாசவன்மு	௩௨௭
வாசவன்ற	௩௦௧
வாசவனளி	௧௬
வாசுகிதனக்	௩௬
வாடியதரு	௧௪
வாணகைத	௧௮௧
வாதுகொண்டு	௧௩௦
வாயுக்கணை	௪௬௭
வாயுவடிக்	௩௨௭
வாயுவின்ம	௨௩௦
வார்குழைப்	௧௦௩
வார்சிலையொ	௨௦௬
வார்சிலையை	௩௨௪
வாரடாவு	௫௨
வாரணமா	௫௯
வாரியினதி	௩௦
வாருங்கண்	௧௩௮
வாலவீமனெ	௪௨௬
வாவருங்க	௩௩௮
வாவிமேல்	௩௧௭
வாவியும்பு	௭௩
வாவுமாம	௪௪௫
வாழிவாழி	௪௦௫
வாள்விசய	௧௮௪
வாளமாக	௪௨௨
வாளரவ	௨௦௧
வாளிப்பரித்	௧௯௮
வாளியாயிர	௩௧௬
வாளியின்வ	௧௨௩
வாளிரவியை	௩௬
வாளினெதிர்	௩௨௦
வாளைவாவி	௨௮௪
வாளொடு	௩௮௩
வான்பெற்ற	௪௭௧
வான்மருச்	௯௯
வான்முகம	௧௧
வானகமறை	௧௯௪
வானரகிற்	௩௨௭
வானவர்பெ	௧௫௨
வானிடத்தரூ	௧௭௫
வானிலவு	௨௦௮
வானின்றும	௧௯௭
வானோர்பகை	௯௮

வி

செய்யுள்.	பக்கம்.
விகனன்விட்	௪௧௮
விசயன்மக	௩௭௭
விசயன்வெ	௩௧௭
விசயனெரு	௨௬௪
விசயனும்வெ	௪௫௫
விசையவெம்	௧௦௦
விசையனி	௧௨௦
விஞ்சயனுரை	௧௮௨
விட்டகுன்றி	௨௦௧
விட்டவடி	௩௪௮
விட்டவிட்	௩௬௬
விட்டவிரத	௩௭௯
விட்டவெம்பக	௪௩௧
விட்டவெம்படை	௧௭௪
விடத்திலே	௩௬
விடவிவன்	௪௯
விடுகநீகவ	௩௪௨
விடுகவிந்த	௧௬௬
விடுங்குழை	௨௪௩
விடைகொண்	௪௬௬
விடையெண	௧௬௭
விண்கொளா	௨௫௦
விண்சுழன்று	௧௭௯
விண்டலம்பு	௬௦
விண்டலமுற	௨௧௩
விண்ணவர்த	௧௫௭
விண்ணவர்மு	௧௬௦
விண்ணவரி	௩௫௩
விண்ணுடரு	௩௩௨
விண்ணிடத்	௧௭௩
விண்ணிடை	௩௯௫
விண்ணிடை	௩௯௬
விண்ணிலங்	௧௩௫
விண்ணிலிய	௧௯௬
விண்ணிலுறை	௧௫௭
விண்ணின்மீ	௧௬௯
விண்வருசெ	௧௨
வித்தகனென	௨௩௦
விதாணவி	௧௧௩
விதிமறைமு	௭௨
விதியினுலொ	௩௮
விதியினுமு	௧௦௫
விதுநலம்	௩௨
விதுரனும்வா	௪௭
விதுரனும்வெ	௩௪௬
விதுரனைந்து	௧௩௩
விந்தமன்ன	௨௬௮
விந்தமால்	௧௦௦
விந்தன்விந்த	௪௧௪
விந்தைபூம	௭
விந்தைவா	௧௨௯
விம்முபெரு	௪௭௫
வியந்திடவ	௧௪
வியப்போடு	௬௮
வியனதிமக	௩௪
வியனும்பர்	௯௫
விரகருத	௬௮௪
விரகுட்ட	௩௭௮
விரதசார	௨௩௫
விரதமிஞ்சி	௭
விரதமுற்றி	௧௬
விரதமேல்	௯௧
விரல்கனை	௪௬௦
விரவார்மு	௪௦௭
விரவுகான்	௨௮௧
விரற்புனை	௪௦௦
விராடபூப	௩௦௪
விராடனை	௨௬௩
விரிகின்ற	௪௪௧
விரிகுழற்பை	௨௭௫
விரிதிரையு	௨௦௯
விரிதுகில்	௧௦௩
விரிந்தனவு	௩௫௩
விரியோத	௪௨௦
விருத்தமா	௧௫௨
விருதாயிர	௩௩௪
விருதுஞ்ச	௩௬௯
விருதொடு	௪௧௨
விருந்தரா	௫௦
விருந்துறு	௧௨௫
விரைந்துபா	௨௮௫
விரைவினி	௧௦௨
விரோசனக்	௬௯
வில்லபிம	௩௪௮
வில்லாண்மை	௬௩
வில்லாண்மையா	௩௭௧
வில்லாய்நீ	௪௩௦
வில்லாலும்	௪௯௦
வில்லியரி	௪௭௬

செய்யுள்.	பக்கம்.
வில்லினனு	௧௧௬
வில்லெடுத்த	௪௭௬
வில்லோன்	௩௪௯
வில்வளைத்	௧௭௮
வில்விசய	௨௬௪
விலங்கன்	௨௫௦
விலங்கிரம்	௪௦௩
விலங்கிய	௧௧௧
விழிகளுஞ்சி	௪௬௦
விழிமலர்சி	௩௭௭
விழியிலாவெ	௧௧௮
விழியினெஞ்	௧௨௧
விழுந்தரு	௧௫௮
விழுந்தவர்	௨௫௭
விழுந்தவன்	௨௪௨
விழுந்தவா	௨௦௧
விழுந்தவாளி	௪௦௪
விழுந்தான்வே	௩௨௬
விளிந்துமயி	௮௭
விளைத்தனர்	௩௬௪
விளைதவமு	௨௧௮
விற்கவ்வு	௩௬௬
விற்குனித்தி	௩௮௦
விற்கையாரி	௪௫௬
விறல்புனைவீ	௨௦௯
விறல்விசய	௧௮௩
விறலபிம	௩௭௮
வின்மகனு	௧௪௩
வின்முகங்கெ	௩௭௬
வின்மேல்வி	௩௩௨
வின்மைந்து	௩௮௦
வின்னுணும்	௪௬௩
வினைமுற்றிய	௯௧
வினையிலென்	௩௯௧
வீ	
வீசுகொண்ட	௩௨௨
வீசுந்தம	௩௩௦
வீசுபகழித்	௩௨௫
வீசுபடையொ	௨௦௮
வீடினனுமெ	௩௭
வீடுமற்கும்	௭௦
வீடுமன்கி	௩௦௬
வீடுமன்வி	௧௧௨
வீடுமன்னெ	௩௫௦
வீடுமனுமீ	௩௧௯
வீடுமனைச்	௪௭௫
வீதலும்பி	௩௮௮
வீமசேனனு	௪௮௧
வீமசேனனெ	௪௮௨
வீமற்கெதி	௩௩௧
வீமன்கதை	௧௩௮
வீமன்கருத்	௪௫௯
வீமன்முதற்	௪௮௨
வீமனங்க	௨௨௨
வீமனிப்ப	௪௧௭
வீமனுக்கும்	௪௯௧
வீமனுந்த	௩௨௪
வீமனைப்பி	௨௪௨
வீயினல்வென்	௩௫௯
வீரசாபமு	௩௨௨
வீரசாபமொ	௪௮௨
வீரமும்வ	௨௪௩
வீரவார்கழல்	௩௭௫
வீரன்சா	௧௭௨
வீரன்விட்ட	௪௧௧
வீரனுமுவ	௧௯௮
வீரனென்று	௪௧௫
வீரியந்தனக்	௨௪௮
வீரியம்வி	௪௮௭
வீழ்தலு	௪௫௪
வீழ்ந்தவ	௩௬
வீழ்ந்தான்வி	௪௬௩
வீழவிங்கு	௪௧௫
வீருர்கற்பி	௩௩௩
வீறுசால	௪௮௨
வெ	
வெகுளிகொண்டு	௪௫௯
வெங்கண்மாமு	௩௦௫
வெங்கணையத்தி	௨௧௭
வெங்கதிர்போய்	௮௧
வெங்கராவின்	௨௧௪
வெங்கலங்கற்	௩௨௧
வெங்கழற்படை	௬௪
வெங்களந்த	௩௪௧
வெங்கனல்	௩௭
வெங்கிராதவன	௧௩௨
வெங்கோதை	௪௬௭
வெஞ்சமஞ்செய	௨௨௫
வெஞ்சமரிறந்	௪௮௮
வெஞ்சாத்தினல்	௩௨௮
வெஞ்சராசன	௫௦௪
வெஞ்சலமனத்	௧௪௮
வெஞ்சிலைகுனித்	௪௧௪
வெஞ்சிலையினு	௪௦
வெஞ்சிலைவிதுரன்	௪௯௬
வெஞ்சினமுடுக	௧௧௦
வெட்டினர்படை	௩௧௬
வெண்ணிறமதிய	௩௪
வெண்ணையேசமழு	௧
வெந்திடுகட	௩௨௩
வெந்திடும	௨௫௭
வெம்பாகம்	௩௨௨
வெம்பியேல்வரு	௩௨௩
வெம்புவலியான்	௨௯௩
வெம்புயவீமன்	௩௩௮
வெம்புயவீமனும்	௨௭௬
வெம்புயவிசால	௩௫௨
வெம்பரவித்	௪௬௨
வெம்பையாட	௨௧
வெய்தின்மகபதி	௭௮
வெய்யகணநாதர்	௪௫௮
வெய்யவெம்படை	௧௭௫
வெயர்த்தமேனி	௨௫௦
வெயில்விடுமை	௨௯௬
வெயில்லெழுவதன்	௩௯௨
வெருவருங்கருங்	௨௪௫
வெருவரும்படி	௧௧௦
வெருவுடன்று	௨௧
வெல்லுகவறமு	௨௧௯
வெலற்கருந்திறல்	௩௦௧
வெவ்வனமெரிக்	௩௫௨
வெவ்வனலநேர்	௩௧௯
வெவ்வாசிநெடுந்	௪௦௬
வெவ்வாயுதங்க	௬௭
வெவ்வாயுவின்	௩௩௦
வெளிநின்றமாற்ற	௨௬௪
வெற்பிரண்டினி	௧௮௬
வெற்பின்வலிய	௩௯
வெற்றிபுனை	௪௯௬
வெற்றெலும்பி	௫௬
வெறிபடுமுளரி	௫௯
வெறுப்பதோவிளை	௨௧௩
வென்றகோச்சித்	௨௧௧
வென்றயரில்	௩௭௯
வென்றிகொள்வீ	௧௭௫
வென்றித்துவரை	௮௪
வென்றியரக்கன்	௪௯௨
வென்றுதன்னிளை	௧௪௪
வென்றுபோன	௩௪௧
வென்றுமீள்குமா	௨௬௦
வென்றேயவனி	௪௫௮

செய்யுள்.	பக்கம்.
வே.	
வேகமிகுஞ்	௬௯௧
வேகமுடனி	௩௨௬
வேகவற்றி	௨௫௩
வேட்டவெங்	௬௪௨
வேடமோமா	௨௧௨
வேண்டுவெதன்கொ	௩௯௯
வேண்டுவெதன்னெ	௩௯௫
வேணிமுடி	௧௫௭
வேணுமாகில்	௧௩௧
வேதஞ்சிறக்	௮௫
வேதபுங்க	௨௩
வேதமடியுண்	௧௫௭
வேதமாகி	௪௫௦
வேதமும்	௭௦
வேதமுனி	௩௯
வேதியர்கு	௩௮
வேதியரோட	௭௮
வேதியன்வா	௬௮௭
வேதியன்வி	௩௭௬
வேந்தகேளி	௧௬
வேந்தர்யா	௨௮௨
வேந்தழைத்	௪௨௭
வேந்தனம்	௨௧௮
வேந்தனனை	௬௯௧
வேந்தனுமொ	௧௧௬
வேந்தனைமு	௨௫௮
வேயைவென்ற	௧௨௭
வேர்த்தெதிர்	௪௧௧
வேரியம்பு	௬௩௭
வேல்வித்த்	௩௯௫
வேலமர்த	௪௯௮
வேலினுல்வடி	௧௧௦
வேலையமுதுக்	௩௨௫
வேறுபோரினிப்	௩௪௦
வேறுருத்	௬௯
வேறுருதேர்	௬௫௫
வேறுருபகற்	௩௯
வேறோர்வரி	௪௫௨
வேனிலானி	௮
வேனிலின்வி	௩௨
வை.	
வைத்தசென்	௫௦௦
வைத்தவார	௧௩௨
வைத்தாரை	௧௯௩
வையகமடந்தை	௯
வையமுமாகும்	௧௧௯
வையமுழுது	௫௯
வையாரயில்	௩௩௯
வையினுல்வி	௪௨௮

செய்யுளகராதி முற்றிற்று.